Koviloor Digital Library

A. No. 16815
Q: 23 2/2

வெளியீடு எண்: 991


திருநாவுக்கரசர் தேவாரம்

ஐந்தாம் திருமுறை

ஞானசம்பந்தம் பதிப்பகம்
தருமை ஆதீனம்
மயிலாடுதுறை 609 001

Koviloor Digital Library

திருமுறைகள் ஓதாய் தினமும் என அறிவித்த
தருமை ஆதீன ஸ்தாபகராம் முதற்குரவர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

உ

குருபாதம்

தருமை ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி
குருபூஜை வெள்ளிவிழா


நினைவு வெளியீடு

சிதம்பரம்
அருள்மிகு நடராஜப் பெருமான்
சந்நிதியில் வைத்துப் பூசித்து,
ஆயிரங்கால் மண்டபம் என வழங்கும் இராஜ சபையில்
உரை அரங்கேற்றம் செய்து,
வெளியிடப் பெற்றது.

1997

Koviloor Digital Library

திருமுறைகள் உரையோடு வெளிவருமாறு அருள் சுரந்து,
ஒன்று முதல் ஒன்பதாம் திருமுறைகள் வெளியிட்ட,



தருமை ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 16815

வெளியீடு எண்: 991

உ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

ஐந்தாம் திருமுறை

பொழிப்புரை,
விளக்கக் குறிப்புரைகளுடன்.

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவருள் ஆணையின் வண்ணம்
சிதம்பரம் திரு. எஸ். திருநாவுக்கரசுப் பிள்ளை,
திருமதி. சிவகாமி அம்மையார்
ஆகியோர் அறக்கொடையாக

ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
வெளியிடப்பெற்றது.
1997

Koviloor Digital Library

உரிமை பதிவு] 1997 [தருமை ஆதீனம்

பதிப்புரிமை : ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம்,
மயிலாடுதுறை - 609 001. தமிழ்நாடு, இந்தியா.

முதற் பதிப்பு : 1961
இரண்டாம் பதிப்பு : 1997

பதிப்பாசிரியர்:

ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், எம். ஏ., எம். பில்.,
காறுபாறு, ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள்.

விளக்கக் குறிப்புரை:

தருமை ஆதீனப் புலவர், சித்தாந்தக் கலைச்செல்வர்,
க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி.,
தலைமை ஆசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

தருமை ஆதீனப் புலவர்,
வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,
பேராசிரியர், அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம், மயிலாடுதுறை.

பொழிப்புரை:

தருமை ஆதீனப் புலவர், செஞ்சொற்கொண்டல்,
முனைவர் சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.,
பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை.

அச்சிடல்-தயாரிப்பு:

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

காந்தளகம்
(யாழ்ப்பாணம் - சென்னை),
834. அண்ணா சாலை, சென்னை - 600 002.

Koviloor Digital Library

212

உ



திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம்
ஐந்தாம் திருமுறை



சிதம்பரம்,
திரு. எஸ். திருநாவுக்கரசுப் பிள்ளை
திருமதி. சிவகாமி அம்மையார்
ஆகியோரின் அறக்கொடை

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த புதுவிளாகம் என்னும் சிற்றூரில், கார்காத்த வேளாண் மரபில், காளிங்கராய கோத்திரத்தில், திரு. சி. சுப்பிரமணியப் பிள்ளை, திருமதி சேது அம்மாள் ஆகியோரின் புதல்வராய்த் தோன்றியவர் திரு. எஸ் திருநாவுக்கரசுப் பிள்ளை. அவர்தம் அருமைத் துணைவியார் திருமதி சிவகாம சுந்தரி அம்மையார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல் முதலான இல்லறப் பணிகளை இனிதே இயற்றி வரும் இத்தம்பதியர் தில்லையில் நடராஜப் பெருமானை நாள்தோறும் தரிசித்து வருவதோடு, திருவாமூரில் அப்பர் குருபூசை விழாவை முன்னின்று நடத்திய பெருமைக்குரியவர்கள். சமயப் பணிகளுக்கு உதவிவரும் இயல்புடையவர்கள்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் திருப்பணிக்குப் பெருநிதி உதவிய சிவபுண்ணியம் உடையவர்கள். வாரந்தோறும் வியாழக்கிழமை, மாலை வேளைகளில் தக்க புலவர்களைக் கொண்டு திருமுறை விளக்கவுரை வழங்கச் செய்தும், சமயத் தமிழ்நீதி இலக்கியங்களை விரிவுரை ஆற்றச் செய்தும் மக்கள் கேட்டுப் பயனடையச் செய்து வருபவர்கள்.

இத் தம்பதியினரின் மூத்த புதல்வர் இலண்டன் மாநகரில் பணி செய்து வரும், டாக்டர். தி. பாலசந்திரன் அவர்கள் தன் தாய், தந்தையரின் அறவுரைப்படி அளித்த நன்கொடையால் இத்திருமுறை வெளிவருகின்றது.

குறிப்பு: இத்திருமுறைப் பதிப்பின் விற்பனைத் தொகை மீண்டும் இத்திருமுறையைத் தொடர்ந்து வெளியிடப் பயன்படுத்தப்பெறும்.

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

நூல் அளவுகள்

பக்கங்கள்:	900
படிகள்:	1,000
அளவு:	215மிமீ. X 135 மிமீ. (1/8 டிமை)
அச்சுக்கோப்பு:	கணிப்பொறி- லேசர்ஒளி அச்சுக் கோப்பு
எழுத்தளவு:	10 மற்றும் 12 புள்ளி
அச்சுமுறை:	எதிரம், அச்சுத்தட்டு, மறுதோன்றி
தாள்:	மீவெண் மாப்லித்தோ 70ஜிஎஸ்எம். (18.6கிகி.)
கட்டு:	அட்டை, ரெக்சின்போர்வை, உருள்முதுகு

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

தருமை ஆதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

- ஸ்ரீ சம்பந்தசரணாலயர்.

ஞானக்குழந்தை:

தமிழகத்தில் - தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் மரபில் சுப்பிரமணிய பிள்ள்ள மீனாட்சியம்மை என்ற நல்லறப் பெரியோர்கட்கு அருந்தவ மகவாகப் பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்தவர், தருமை ஆதீன முதற் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவருக்குப் பெற்றோர்கள், திருஞானசம்பந்தரைப்போல் தமது குழந்தையும் சிவஞானம் பெற்றுச் சைவம் வளர்க்கும் ஞானாசிரியனாகத் திகழ வேண்டும் என்று எண்ணி 'ஞானசம்பந்தன்' என்ற நற்பெயரைச் சூட்டி வளர்த்து வருகையில், தமது குலதெய்வமாகிய சொக்கநாதரையும் மீனாட்சியம்மையையும் தரிசிப்பதற்கு ஞானசம்பந்தருடன் மதுரை சென்று பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி வழிபட்டனர். பெற்றோர்கள் ஊருக்குப் புறப்படுங்கால் ஞானசம்பந்தர் தன்னைத் தொடர்ந்து நின்ற தாயும் தந்தையுமாகிய சொக்கநாதரைப் பிரிய மனமின்றி, உடலுக்குத் தாய் தந்தையர்களாகிய பெற்றோர்களுக்கு விடை கொடுத்தனுப்பிச் சொக்கநாதர் வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டவரானார்.

கண்ணுக்கினிய பொருள்:

நாள்தோறும் பொற்றாமரைக் கரையில் அடியார்கள் சிவபூசை புரிவதைக் கண்டார் ஞானசம்பந்தர். தாமும் அவ்வாறு சிவபூசை புரிய

Koviloor Digital Library

எண்ணினார். சொக்கநாதரை வேண்டினார். கருத்தறிந்து முடிக்கும் கண்ணுதற் கடவுளும் அன்றிரவு அவர் கனவில் தோன்றி, 'நாம் பொற்றாமரைத் தடாகத்தின் ஈசான்ய பாகத்தில் கங்கைக்குள் இருக்கிறோம். நம்மை எடுத்துப் பூசிப்பாயாக' என அருளினார். அவ்வண்ணமே மறுநாள் காலையில் பெருமானின் கருணையை வியந்து போற்றிப் பொற்றாமரைத் தடாகத்தில் மூழ்கினார். ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் கண்ணுக்கினிய பொருளாகத் தமது கரத்தில் வரப்பெற்றார். 'ஆசாரியன் மூலமாகத் தீக்ஷை பெற்றுத்தானே சிவபூசை புரிதல் வேண்டும்; ஆசாரியன் வேண்டுமே; சிவஞான உபதேசம் பெறவேண்டுமே; எப்படிப் பூசையைப் புரிவேன்! என்ற எண்ணம் தோன்றவே, அது பற்றி இறைவனிடமே முறையிட்டார்.

ஞானாசாரியனை அடைதல்:

வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதுந் தருவோனாகிய சொக்கநாதப் பெருமான் மறுநாள் கனவில் எழுந்தருளி 'திருக்கயிலாய பரம்பரை - திருநந்தி மரபு மெய்கண்ட சந்தான வழியில் திருவாரூரில் விளங்கும் கமலை ஞானப்பிரகாசர் என்ற ஆசாரியரிடத்தில், வருகிற சோமவாரத்தில் ஞானோபதேசம் பெற்று நம்மைப் பூசிப்பாயாக' என அருளினார். அன்றிரவே கமலை ஞானப்பிரகாசர் கனவிலும் எழுந்தருளி, 'ஞானசம்பந்தன் வருகிற சோமவாரத்தன்று வருவான்; அவனுக்கு ஞானோபதேசம் செய்து சிவபூசையும் எழுந்தருளுவிப்பாயாக' என்று அருளினான். ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சென்று, பூங்கோயிலில் உள்ள சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்திருந்த கமலை ஞானப் பிரகாசரைக் கண்டார். காந்தம் கண்ட இரும்புபோல ஆசாரியரால் ஈர்க்கப்பட்டார். சமய விசேட நிர்வாண தீக்ஷைகளால் பாச ஞானம் பசுஞானங்கள் நீங்கிப் பதிஞானம் கைவரப் பெற்றார். சொக்கநாதப் பெருமானை ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாகப் பூசிக்கப்பெறும் பேற்றையும், ஞான அநுபூதியையும் அடைந்தார்.

கைவிளக்குப் பணிவிடை:

பன்னாளும் ஆசாரியப் பணிவிடை செய்து தங்கி இருக்கும் நாள்களில் ஒருநாள் தியாகராசப் பெருமானின் அர்த்தயாம பூசையைத் தரிசித்து ஆசாரியர் தமது மாளிகைக்கு எழுந்தருளினார். அப்பொழுது கைவிளக்குப் பணியாளன் உறங்கிவிட ஞானசம்பந்தர் தமக்கு ஞான ஒளியேற்றி நல்வழிகாட்டிய ஞானாசாரியருக்கு ஒளிவிளக்கு ஏந்தி முன்சென்றார். திருமாளிகையின் வாயில் முன்னர்ச் சென்றவுடன்,

Koviloor Digital Library

சிவானுபூதியிலேயே திளைத்திருந்த ஞானப்பிரகாசர், அருள்நிலை கைவரும் பக்குவத்திலிருந்த ஞானசம்பந்தரை 'நிற்க' எனக் கட்டளை யிட்டு உட்சென்றார். ஆசாரியர் பெற்ற சிவானுபூதியை ஞான சம்பந்தரும் கைவரப் பெற்றவராய் மாளிகை வாயிலில் கைவிளக்கு ஏந்தியவராகவே நின்றார். ஞானசம்பந்தரின் பெருமையை ஞாலம் அறியச்செய்து அதன்மூலம் சைவப் பயிர் தழைக்க இறைவன் திரு வுளம் பற்றினான் போலும். அன்றிரவு பெருமழை பெய்தது. சிவானு பூதியில் திளைத்திருந்த ஞானசம்பந்தர் மீது ஒருதுளி மழை கூடப்பட வில்லை. விளக்கோ அணையாது சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருந்தது.

குருஞானசம்பந்தராயினார்:

வைகறைப் பொழுதில் ஞானப்பிரகாசரின் பத்தினியார் சாணம் தெளிக்க வருங்கால், ஞானசம்பந்தர் அநுபூதி நிலையில் நிற்பதையும், விளக்குச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதையும் கண்டு உட் சென்று பதியிடம் வியப்புடன் அதனை வெளியிட்டார்.

ஞானப் பிரகாசர் விரைந்து வந்து பார்த்து, ஞானசம்பந்தரிடம் திருவருள் பெருகுகின்ற நிலையைக் கண்டு மகிழ்ந்து ''ஞானசம்பந்தா! நீ ஆசாரியனாக இருந்து, பக்குவம் உடையவர்களுக்கு ஞானோப தேசம் செய்து ஆசாரியனாக விளங்குவாயாக'' என்று அருளினார். அப்பொழுது ஞானசம்பந்தர்,

''கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சை யோஇணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்
றுனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே''

என்ற பாடலைப்பாடி ''எங்குச்சென்று எவ்வாறு இருப்பேன்'' என்று விண்ணப்பிக்க, ஞானப்பிரகாசர், ''மாயூரத்தின் ஈசான்ய பாகத்தில் வில்வாரணியமாய் உள்ளதும், திருக்கடவூரில் நிக்கிரகம் பெற்ற எமதருமனுக்கு அநுக்கிரகம் செய்ததும் ஆன தருமபுரத்தில் இருந்து கொண்டு, அன்பு மிக உண்டாய், அதிலே விவேகமுண்டாய், துன்ப வினையைத் துடைப்ப துண்டாய், இன்பம் தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி வருங்காரணர்க்கு உண்மையை உபதேசித்துக் குருவாக விளங்குவாயாக'' என்று கட்டளையிட்டருளினார். ஞான சம்பந்தர், ''குருஞானசம்பந்தர்'' ஆயினார்.

Koviloor Digital Library

தருமபுரத்தில் ஆதீனம் கண்டார்:

ஆசிரியர் ஆணையை மறுத்தற்கு அஞ்சியவராய்க் கன்றைப் பிரிந்த பசுப்போல வருந்தும் குருஞானசம்பந்தரை நோக்கிக் ''குருவாரந்தோறும் வந்து நம்மைத் தரிசிப்பாய்'' என்று தேறுதல் கூறினார் ஞானப்பிரகாசர்.

குருஞானசம்பந்தர் தம் குரு ஆணையைச் சிரமேற்கொண்டு தமது ஆன்மார்த்த மூர்த்தியுடன் தருமபுரத்திற்கு எழுந்தருளி, தருமபுர ஆதீன மடாலயத்தை நிறுவியருளினார். ஞானாநுபூதியில் திளைத்துப் பல பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞானோபதேசம் செய்து அநுபூதிச் செல்வராய்த் திகழ்ந்தார். அவர் அநுபூதியில் பொங்கித் ததும்பிப் பூரணமாய் எழுந்த சிவஞானப் பேரருவியே *சிவபோக சாரம், சொக்க நாத வெண்பா, முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாத ஷட்கம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப் பிரகாசமாலை, நவமணிமாலை* ஆகிய எட்டு நூல்கள் ஆகும். பாடல்கள் எளிமையும், இனிமையும் பயப்பனவாய், பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையைத் தெளிய விளக்குவனவாய் உள்ளன.

ஆனந்த பரவசருக்கு உபதேசம்:

குருஞானசம்பந்தர் தம்மை அடைந்த பக்குவமுடையவர் களுக்கு உபதேசித்து அநுபூதிமானாக விளங்கும்போது, உபதேச பரம்பரையை வளர்த்துவர அதி தீவிர பக்குவ நிலையிலிருந்த ஆனந்த பரவசருக்கு உபதேசித்துத் தாம் ஜீவசமாதி கூடியருளினார்கள். அதிதீவிர நிலையில் இருந்த ஆனந்தபரவசர் தமது குருநாதர் உபதேசித்த ஞானநிலை விரைவில் கூடியவராய், தம் ஞானாசாரியர் ஜீவசமாதி கூடிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலய விமான ஸ்தூபியைத் தரிசித்தவாறு நிட்டை நிலை கூடினார்கள்.

மீண்டும் எழுந்தருளினார்:

அதுகண்ட ஏனைய சீடர்கள் குருமரபு விளங்க வேண்டுவதை ஆசாரியர் திருமுன் சென்று விண்ணப்பிக்க, பரமாசாரிய மூர்த்திகள் ஜீவசமாதியினின்றும் எழுந்து வந்து ஸ்ரீ சச்சிதானந்த தேசிகருக்கு உபதேசம் செய்து அநுபூதிநிலை வருவித்து ஞானபீடத்து இருத்தி வைகாசி மாதம் கிருஷ்ணபக்ஷ சப்தமி திதியில் தாம் முன்போல் ஜீவ சமாதியில் எழுந்தருளினார்கள்.

Koviloor Digital Library

தருமை ஆதீனப் பணி:

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்ற இத்திருத்தருமை ஆதீனம் அதுமுதல் வழி வழியாக விளங்கி, மொழித் தொண்டும், சமயத் தொண்டும், சமூகத் தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றி வருகிறது. இப்பொழுது ஞானபீடத்தில் இருபத்தாறாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளியிருந்து அருளறப் பணிகள் பல இயற்றி அருளாட்சி புரிந்து வருகிறார்கள்.

வாழ்க தருமை ஆதீனம்! வளர்க குருபரம்பரை!

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை
ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி
கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன்
றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த்
தொண்டர்களே.

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

- ஸ்ரீ குருஞான சம்பந்தர்.

Koviloor Digital Library

தருமை ஆதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தின்

பன்னிரு திருமுறைத் தொகுதி

(16 பகுதிகள்)

பகுதி

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரம்:

1. முதல் திருமுறை 1
2. இரண்டாம் திருமுறை 2
3. மூன்றாம் திருமுறை 3

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம்:

4. நான்காம் திருமுறை 4
5. ஐந்தாம் திருமுறை 5
6. ஆறாம் திருமுறை 6

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம்:

7. ஏழாம் திருமுறை 7

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியவை

8. 1. எட்டாம் திருமுறை - திருவாசகம் 8
 2. எட்டாம் திருமுறை - திருக்கோவையார் 9

திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளியவை:

9. ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 10

திருமூல நாயனார் அருளிய திருமந்திரம்

10. 1. பத்தாம் திருமுறை - 1 - 3 தந்திரங்கள் 11
 2. பத்தாம் திருமுறை - 4 - 6 தந்திரங்கள் 12
 3. பத்தாம் திருமுறை - 7 - 9 தந்திரங்கள் 13

திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் அருளியவை:

11. பதினொன்றாம் திருமுறை 14

சேக்கிழார் சுவாமிகள் அருளிய திருத்தொண்டர் புராணம்:

12. பன்னிரண்டாம் திருமுறை - முதற்காண்டம் 15
 பன்னிரண்டாம் திருமுறை - இரண்டாம் காண்டம் 16

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு.	
2.	ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசியுரை.	
3.	பதிப்புரை.	39
4.	முதல் பதிப்பின் மதிப்புரை.	44
5.	முதல் பதிப்பின் முகவுரை.	46
6.	ஐந்தாம் திருமுறையின் உரைச்சிறப்பு.	49
7.	தல அட்டவணை.	62
8.	தலங்களின் வரலாற்றுக் குறிப்புக்கள்.	71
9.	அற்புதப் பதிகங்களும், சிறப்புக்களும்.	243
10.	சிறப்புக் குறிப்புடைய திருப்பதிகங்கள்.	245
11.	தேவாரத் திருப்பதிகங்கள்.	249
12.	பாட்டு முதற்குறிப்பு அகராதி.	829
13.	அருஞ்சொல் அகராதி.	845
14.	தருமை ஆதீனம் இயற்றிவரும் பணிகள்.	897

Koviloor Digital Library

உ

குருபாதம்


பன்னிரு திருமுறை ஆசிரியர்கள்

[1]திருஞான சம்பந்தர் [2]வாகீசர் [3]சுந்தரர்
[4]திருவாத வூரர் மற்றைத்
[5]திருமா ளிகைத்தேவர் [6]சேந்தனார் [7]கருவூரர்
தெள்ளு[8]பூந் துருத்தி நம்பி
வருஞான [9]கண்டரா தித்தர்[10]வே ணாட்டடிகள்
வாய்ந்த[11]திரு வாலி யமுதர்
மருவு[12]புரு டோத்தமர் [13]சேதிராயர் [14]மூலர்
மன்னு திரு [15]ஆல வாயார்
ஒரு [16]காரைக் காலம்மை [17]ஐயடிகள் [18]சேரமான்
ஒளிர் [19]கீரர் [20]கல்லாடனார்
ஒண் [21]கபிலர் [22]பரணர்மெய் உண [23]ரிளம்பெருமானொடு
ஓங்கும் [24]அதி ராவடிகளார்
திருமேவு [25]பட்டினத் தடிகளொடு
[26]நம்பியாண்டார் நம்பி [27]சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத் தன்மையோரே.

– புலவர். திரு. வை. தருமலிங்கம் பிள்ளை.
தமிழாசிரியர், தருமை ஆதீனத் தேவாரப் பாடசாலை,
தருமபுரம்.

Koviloor Digital Library

மறைமொழி பத்தாம் திருமுறை முதலா,
Koviloor Digital Library
பன்னிரு திருமுறை உரை வெளியிட்டு அருளிய,



தருமை ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி வாயஎன்று
எண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னார்அவர் பாலைத் துறையரே.

-அப்பர் (தி.5 ப.51 பா.6)

அப்பர் ஒரு புரட்சியாளர்:

புரட்சி என்பது சீர்கெட்டுப் போனதை - மீண்டும் சீர்மைபெறச் செய்வதேயாகும். சுதந்திரமாக வாழ்ந்த இந்தியர்களை ஆங்கிலேயர் 150 ஆண்டுகட்கு மேலாக அடிமைப்படுத்தி ஆண்டு வந்தனர். சீர்கெட்டு நின்ற பாரத தேசந்தன்னை மீண்டும் சுதந்திரமாக வாழ்வதற்கு மகாத்மா காந்தியடிகள் போன்ற தலைவர்கள் பெரும் புரட்சி செய்தனர். மீண்டும் சுதந்திரப்பாதையில் இந்தியர்களை நடையிடச் செய்தனர். இதுவே புரட்சி. சீர்கெட்ட தனிமனிதரை அல்லது சமுதாயத்தை, அல்லது நாட்டை, செப்பஞ்செய்ய எடுக்கும் நடவடிக்கைக்கே புரட்சி என்ற பெயர் பொருந்தும். மக்களிடையே குழப்பம் விளைவிப்பதெல்லாம் புரட்சியாகாது.

இக்காலத்தில், புரட்சி செய்து தேசத்தைச் செம்மை செய்த மகாத்மா காந்தியடிகளைப் போல், அன்று கடமை செய்யத் தவறியோரைக் கடமை வழிச் செலுத்தி, செம்மை செய்த புரட்சியாளர் அப்பர் அடிகள்.

பகவத் கீதையில் கண்ணபிரான் அருச்சுனற்குக் கடமையை உணர்த்தினார்.

''கர்மண்யேவ அதிகாரஸ்த்தே மாபலேஷு கதாசன''

Koviloor Digital Library

என்பது கீதாசாரியன் வாக்கு. 'அர்ச்சுனா, கர்மத்தைச் செய்வதற்குத்தான் உனக்கு அதிகாரம். அஃதாவது உரிமை உண்டே தவிர பலனைப் பற்றிக் கேட்க உனக்கு அதிகாரமில்லை. அஃதாவது உரிமை இல்லை' என்பது இதன்பொருள்.

இது துவாபர யுகத்தில் நடந்தது. இப்போது நடப்பதோ கலியுகம். இதற்கு ஏற்ப அதே தர்மத்தைச் சொல்லவேண்டும். எப்படிச் சொல்வது? அப்பர் அதே உரிமையைக் கடமை என்ற சொல்லால் புரட்சிகரமாகச் சொல்கிறார். அப்பாடல் காண்க.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. -தி.5 ப.19 பா.9

'கடமையைச் செய்யத்தான் உனக்கு அதிகாரம். பலனைப் பற்றிக் கேட்க உனக்கு அதிகாரம் இல்லை. என்கின்றது *கீதை*.

ஆனால் கடமையைச் செய்பவனுக்கு அதற்குரிய பலனைப் பகவான் கொடுத்தே தீர்கிறார். அணு அளவுகூடக் குறைக்கமாட்டார். அக்கருத்து அர்ச்சுனற்குத் தெரியும்; உயர்ந்தோரானதால்; யுகமும் துவாபரயுகமானதால். இக்கருத்தைக் கலியுகத்தில் அப்பர் சுவாமிகள் புரட்சிகரமாகத் திருக்கடம்பூர்த் தேவாரத்தில் தெளிவாக விளக்குகிறார். *கீதையில்* கண்ணன் கர்மத்தைச் செய்யத்தான் அதிகாரம் என்று சொன்னார். அப்பர், உரிமை என்ற சொல்லையும் புரட்சிகரமாக மாற்றி, கடமை என்ற சொல்லாலேயே கடவுளின் கடமையையும், மக்களின் கடமையையும் குறிப்பிட்டுள்ளார். கடவுளின் கடமை மக்கட்கு உரிமையாய் விடுகிறது. மக்களின் கடமை கடவுளுக்கு உரிமையாகி விடுகிறது. உரிமைப் போராட்டத்திற்கே இடமில்லாமல் கட்மை என்ற சொல்லாலேயே அவரவர்க்கு உள்ள உரிமையைக் கிடைக்கச் செய்துவிடுகிறார்.

இதை எல்லோரிடத்தும் வைத்துத் தெளிவு பெறலாம். முதலாளி செய்யும் கடமை தொழிலாளிக்கு உரிமை. தொழிலாளி செய்யும் கடமை முதலாளிக்கு உரிமை. கணவன் செய்யும் கடமை மனைவிக்கு உரிமை. மனைவி செய்யும் கடமை கணவனுக்கு உரிமை. பெற்றோர் செய்யும் கடமை மக்களுக்கு உரிமை. மக்கள் செய்யும் கடமை பெற்றோர்க்கு உரிமை. ஆசிரியர் செய்யும் கடமை மாணாக்கர்கட்கு உரிமை. மாணாக்கர் செய்யும் கடமை ஆசிரியர்கட்கு உரிமை. அரசு செய்யும் கடமை மக்கட்கு உரிமை. மக்கள் செய்யும் கடமை அரசுக்கு உரிமை. இறைவன் செய்யும் கடமை உயிர்கட்கெல்லாம் உரிமை. உயிர்கள் செய்யும் கடமை இறைவனுக்கு உரிமை. கடவுள் கடமையைச் சரியாகச் செய்துவிடுவார். சூரியன், சந்திரன்,

Koviloor Digital Library

நட்சத்திரங்கள் காலத்தில் உதிப்பது கடவுளின் கடமை தவறாமையைக் காட்டுகிறது.

குறுந்தொகை யாப்பமைப்பு:

அப்பர் அருளிய ஐந்தாம் திருமுறைப் பதிகங்கள் நூறு. இந் நூறும் திருக்குறுந்தொகை எனப் போற்றப் பெறுவது. குறுந்தொகை என்பது யாப்பமைப்பால் பெற்ற பெயர். குறைந்த எழுத்துக்களைப் பெற்று அமைதலின் இப்பெயர் பெற்றது. இது நாற்சீர் நாலடியாய் வருவது.

சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று *குறுந்தொகை* எனப்பெயர் பெற்று விளங்குகிறது. இந்நூலில் நாலடிக்கு மேலும் பாக்கள் இருப்பினும் மற்ற சங்க நூல்களை நோக்கக் குறைந்த அடிகளைக் கொண்ட பாடல்களை இந்நூல் உடையதாகலின் அப்பெயர் பெற்றது. *குறுந்தொகைப்*பாடல்களின் முதற்சீர் தேமா, அல்லது புளிமா என்று அமையும். தேமா என்று தொடங்கும் அடி ஒற்று நீக்கிப் பதினொரு எழுத்துக்கள் கொண்டிருக்கும். புளிமா என்று தொடங்கும் அடி ஒற்று நீக்கிப் பன்னிரண்டு எழுத்துக்கள் கொண்டிருக்கும். எனவே குறுகிய எண்ணிக்கையுள்ள எழுத்துக் களைக் கொண்டுள்ள அடிகளையும், குறைந்த அடிகளைக்கொண்ட பாடல்களையும் கொண்ட நூல் *குறுந்தொகை* என்று அழைக்கப்பெற்று வருகிறது.

திருநாவுக்கரசர் இவ்வியாப்பமைப்பை ஏன் தேர்ந்தெடுத்தார் என்று சிந்திக்கும் பொழுது, ஒரு தலத்திலிருந்து பிறிதொரு தலத்திற்கு நடந்து செல்லும்பொழுதும், உழவாரத் திருத்தொண்டு செய்யும் பொழுதும் இவ்வியாப்பமைப்பு எளிமையாகப் பாட ஏற்றது எனக்கருதி அமைத்துக் கொண்டார் எனத் தோன்றுகிறது.

தில்லை பற்றிய முதல் பதிகம்:

ஐந்தாம் திருமுறையில் முதல் திருப்பதிகமாகத் திகழ்வது ''அன்னம் பாலிக்கும் தில்லை'' எனத் தொடங்குவதாகும். இப்பாடலில், 'அன்னம்' என்று குறிப்பது சோற்றையும் வீடுபேற்றையும் குறிப்பதாகும். ''பாதகமே சோறு பற்றியவா தோள் நோக்கம்'' என்று திருவாசகம் வீட்டைச் சோறு எனக் குறிப்பிட்டிருத்தல்'இக்கருத்துக்குச் சான்றாகத் திகழ்கிறது.

தரிசித்தால் முத்திதரும் தலம் தில்லை என்பதும் ஈண்டு கருதத்தக்கதாம். வீடுபேற்றைத் தரவல்ல நடராசப் பெருமான் எழுந்தருளியுள்ள தலம் தில்லைச் சிற்றம்பலம் என்பதை முதற்கண் கூறி, அடுத்துப் படிப்படியாகக் கீழிறங்கி வருகின்றார். அது பொன்னுலகமாகிய தேவலோகத்தையும் அளிக்கும்; மேலும்

Koviloor Digital Library

இப்பூவுலகில் என்னுடைய அன்பு விரிந்து பரவுதற்குரிய ஈர்ப்பு நிலை கொண்ட இச்சந்நிதானத்தில் வழிபடுவதற்கு ஏதுவாக இப்பிறவியை அளிக்குமோ? இல்லை வீடுபேற்றைத் தந்தருளுமோ? என்று வினா வடிவில் கேட்டுள்ளார். அம்மை, மறுமை, இம்மை என்ற மும்மைப் பேறும் அளிக்கவல்லது தில்லை என்பதையே இப்பாடல் குறிக்கின்றது, என்று கொள்ளலாம்.

நினைப்பவர் மனமே கோயில்:

தில்லைப் பெருமானைத் தொழுது உழவாரத்தொண்டு செய்திருந்த திருநாவுக்கரசர் திருவேட்களத்து ஈசரையும், திருக்கழிப்பாலை மணவாள நம்பியையும் வணங்கிப் போற்றிப் பாமாலை சூட்டித் தில்லை மீள்கிறார். மீளும் வழியில் வழிநடைப் பயணத்தில் ''பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்'' என்னும் பதிகம் பாடினார். இப்பாடலில் நினைப்பவர் மனத்தையே இறைவன் தாம் உறையும் கோயிலாகக் கொண்டுள்ளான் என்ற தத்துவத்தை விளக்கியுள்ளார். ''உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்'' என்ற திருமூலர் வாக்கும் நினைக்கத் தக்கதாகும். இறைவனது மாட்சிமைப்பட்ட திருவடிகளை அன்பால் இடையறாது நினைப்பவரது உள்ளத்தாமரையில் இறைவன் விரைந்து சேர்பவன் என்று *திருவள்ளுவர்* கூறுகிறார்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் *-குறள் 3*

என்பதே அக்குறள். இக்குறளுக்கு உரை எழுதிய *பரிமேலழகர்*, அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின்'' ஏகினான் என இறந்த காலத்தாற் கூறினார் என்கிறார். இதனையே, ''நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்'' என்கிறார் அப்பர். அப்பாடல் காண்க.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந்து உய்வனோ -தி.5 ப.2 பா.1

இமைப்பொழுதும் நம் நெஞ்சைவிட்டு நீங்காதிருக்கும் பரமனை (தி.5 ப.2. பா. 1-10) நாம் இமைப்பொழுதும் அவனை விட்டு நீங்காது நினைதல் வேண்டும் என்பதையே இத்திருப்பதிகம் நமக்கு நினைவூட்டுகிறது. நீதியை, ஆதியை, ஐயனை, அமுதை, அத்தனை, பித்தனை, கூத்தனை என்றும் மறவாது நினைந்து போற்றுவோம். என்றும் மகிழ்வோடு வாழ்வோம்.

Koviloor Digital Library

தொழத்தக்கவன்:

''*சிவ ஏகோத்தியேயகா*'' என்பது உபநிடத வாக்கியம். சிவபெருமான் ஒருவனே தியானிக்கத் தக்கவன் என்பது இதன்பொருள். தியானிக்கத் தக்கவன் சிவனே என்றால் தொழத் தக்கவனும் அவனே என்பது சொல்லாமலே விளங்கும். அக்கருத்தையே அப்பர், திருநெல்வாயிலரத்துறைத் திருக்குறுந் தொகைப் பதிகத்தின் (தி.5 ப.3 பா.1-10) ஒவ்வொரு பாடலிறுதியிலும் ''அரத் துறைமேவிய, சுடருளானைக் கண்டீர் நாம் தொழுவதே. சுரும்பு ஒப்பானை, கரும்பு ஒப்பானை, சுரப்பு ஒப்பானை, கை ஒப்பானை, கதி ஒப்பானை, கனல் ஒப்பானை, தன் ஒப்பானை, ஊழியானை, நிலை ஒப்பானைக் கண்டீர் நாம் தொழுவதே'' என்று நாம் தொழுவது சிவபரம்பொருளையே. அவனையே தொழுது உய்மின்கள் என்று மன்பதைகளுக்கு அறிவுறுத்துகிறார்.

நினைத்தால் முத்தி தரும் தலம்:

நினைத்தால் முத்தி தரும் தலம் திருஅண்ணாமலை, ''நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர் உறைகோயில்'' திருவண்ணாமலை என்கிறார் ஞானசம்பந்தர்.

அப்பர் தில்லைப் பெருமானை மறந்து உய்வனோ என்று பாடியவாறே அண்ணாமலைப் பெருமானையும் ''இகழ்ந்தார் புரம் மூன்றையும் அட்டனை, ஆனனை, அத்தனை, ஆற்றனை, அன்னனை, ஆரனை, அருவனை, அருத்தனை, என் உடல் உறுநோய்களைத் துரக்கனைத் தொண்டனேன் மறந்து உய்வனோ என்கிறார். மறந்தார்க்குக் கதியில்லை. மறவாதே நினைந்தார்க்குத் தீங்குறும் விதியில்லை. எனவே அண்ணாமலையானை நினைவோம். கண்ணாரக் கண்டு தொழுவோம்.

எந்த மாதவம் செய்தனை:

திருவாரூர்ப் பெருமானைத் தொழுத திருநாவுக்கரசர், நெஞ்சைப் பார்த்துக் கேட்கிறார். பிறவி எடுத்துழலும் பெத்த காலத்தும், பிறவியற்ற முத்திக் காலத்தும் நம்முடனே மறைந்திருந்தே நலம் செய்பவன் ஆரூர் அரநெறிப் பெருமான். அவன் விளக்கமாக நம் சிந்தையுள்ளும், சிரத்துள்ளும் தங்குதற்கு நாம் எந்த அளவு தவம் செய்திருக்கிறோம் என்று ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். பெருமான் நமது சிந்தையுள்ளும் சிரத்துள்ளும் தங்கியிருப்பதைச் சிறப்பாக உணர்ந்தவர்கள் தவம் செய்தவர்கள். அங்ஙனம் தவம் செய்யாதவர்களும் இப்பாடலை எண்ணிப் பார்க்கலாம். என்ன தவம் செய்தாய், செய்தால் அல்லவா இறைவன் நம் உள்ளத்தும் சிரத்தும்

Koviloor Digital Library

எழுந்தருள்வான்? என்று வினாவாகவும் அமைகிறது. இப்பாடல். அது வருமாறு.

எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபரன்
அந்தம் இல்புகழ் ஆரூர் அரநெறி
சிந்தை யுள்ளும் சிரத்துளும் தங்கவே -தி.5 ப.7 பா.2

இதே கருத்துள்ள, அப்பரின் திருச்சேறைத் திருக்குறுந்தொகைப் பாடலைக் கண்டு மகிழ்வோமாக.

என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயல் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே -தி.5 ப.77 பா.2

அம்மையாரைத் தந்தார்:

எம்மையராகிய தாய் தந்தையார் (இரு முது குரவர்) இலராயினர். யானும் வழி அறியாதவனாயினேன். இந்த நேரத்தில் எனக்கு அன்னை(எம்மையராக)யாக உறுதுணையாய் நின்றவர் உடன்பிறந்த திலகவதியம்மையார். அம்மையார் நமக்கு யார் என்று நைந்து அரற்றி நிற்பேனுக்குத் திலகவதியார்ாகிய அம்மையாரைப் பெருமான் எனக்குத் தந்தருளினார். இளமையில் அவரது சொல்லைக் கேளாது போயினும், தாயுள்ளம் படைத்த தமக்கையாரின் தவம்தான் என்னைக் கரையேற்றியது என்று நன்றியுணர்வோடு பாடுகிறார். அப்பாடல் காண்க.

எம்மை யாரிலை யானும் உளேனலேன்
எம்மை யாரும் இதுசெய வல்லரே
அம்மை யார்?எனக்கு என்றென் றரற்றினேற்கு
அம்மை யாரைத்தந் தார்ஆரூர் ஐயரே -தி.5 ப.7 பா.6

இட்டமாக இருக்கும் இடம்:

திருமறைக்காட்டை விரும்பி உறையும் இடமாகக் கொண்டுள்ளார் சிவபெருமான். இங்குள்ள பெருமான் அஷ்ட புஷ்பம் என்னும் எண்மலர்களை வட்டமாகச் சுற்றிய சடைமிசைச் சூடியுள்ளார் என்கிறார். எண் மலர்களாவன: புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோத்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்பனவாம். இவ்வெட்டு மலர்களும் புறப்பூசையில் வழிபடற்கு உரியன. அகப்பூசைக்கு உரிய எண் மலரையும் நாம் தெரிந்து வழிபடல் நன்மை தருவதாம். அவையாவன: கொல்லாமை, அருள், பொறிஅடக்கல், பொறை,

Koviloor Digital Library

தவம், வாய்மை, அன்பு, அறிவு என்பனவாம். அகப்பூசை செய்தே புறப்பூசை செய்தல் வேண்டும். புறப்பூசை மட்டும் பூசையாகாது.

பண்ணின் நேர் மொழியாள்:

திருமறைக் காட்டீசர் சந்நிதிக் கதவு மறைகளால் பூசிக்கப்பட்டு திருக்காப்பிடப்பட்டமையால், அன்று முதல் மக்கள் பக்கத்தில் ஓர் வழி வகுத்துப் பூசை புரிந்து வழிபட்டு வந்தனர். ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் எழுந்தருளியபோது இந்நிலை அறிந்த ஞானசம்பந்தர் நேரே கும்பிடத் திருவருளால் எண்ணினார். அப்பரைத் திறக்கப்பாடுக என்றார். அப்பர், ''பண்ணின் நேர்மொழியாள்'' என்ற திருப்பதிகம் பாடினார். பத்துப்பாடல்கள் பாடியும் கதவம் திறக்கவில்லை. கடைசிப் பாடலில் இரக்கம் ஒன்றிலீர் என்றபோது கதவம் திறந்தது. இதில் இவ்வூர் அம்மையின் பெயர் தூய தமிழில் ''பண்ணின்நேர் மொழியாள்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. யாழைப்பழித்த மொழியம்மை என்று தமிழிலும் ''வீணாகானவிதூ ஷினி'' என்று வடமொழியிலும் வழங்கி வருகின்றனர். அகச்சான்றாக உள்ள அப்பாடல் காண்க.

பண்ணின் நேர்மொழி யாள்உமை பங்கரோ
மண்ணி னார்வலம் செய்மறைக் காடரோ
கண்ணி னால்உமை காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே -தி.5 ப. 10 பா.1

இளங்கோயில்:

பெருமான் எழுந்தருளியுள்ள கருவறை பழுதுற்றிருக்கு மானால் அப்பகுதியைச் செப்பம் செய்யவேண்டும். செப்பம் செய்யத் தொடங்குமுன், அத்திருமேனியில் எழுந்தருளியுள்ள பெருமான் திருவுருவை, பாலுள்ள பலா மா முதலிய பலகைகளில் எழுதி அல்லது அம் மரத்தாலாகிய திருவுருவத்தில் மூல லிங்கத்தை ஆவாகனம் செய்து திருப்பணி பூர்த்தியாகும் வரை புதிய திருவுருவத்தையே வழிபட்டு வரலாம். இப்படி ஆவாகனம் செய்வதே சிறு கும்பாபி ஷேகம் போலத்தான் ஆகும். எனவே இதனை இளங்கோயில் என்பர். இதனையே வடமொழியில் பால ஆலயம் என்பர். அப்பர் தூய தமிழில் இளங்கோயிலே என்று திருமீயச்சூர்ப் பெருமானைப் பாடுகின்றார். அப்பர் இத்தலத்திற்குச் சென்றபொழுது பெருமான் இளங்கோயிலில் எழுந்தருளி இருந்தமையால் அதையே பாடினார். பெருமான் இளங்கோயிலில் எழுந்தருளிய காலத்தும், கும்பாபிஷேகத்திற்காக வேள்விச் சாலைக்கு எழுந்தருளும் காலத்தும், ஒரு கலை மூலஸ்தானத்தில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. மூலஸ்தானத்திலும் வழிபாடு செய்தலே முறையாகும். இளங்கோயில்

Koviloor Digital Library

பாடல் வருமாறு:

தோற்றும் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையரற்கு
ஏற்றம் கோயில்கண் டீர்இளங் கோயிலே -தி.5 ப.11. பா.1

இது இளங்கோயில் என்றதனால், மூலத்தானம் பழமையாகிய முதுகோயில் என்பது தெளிவாகப் புரியும்.

கை தொழுவார், வைதெழுவார்:

மனம் கசிந்துருகித் தொழுவாரையும் விரும்பி அருள் செய்வான். கடவுள் இல்லை என்று நீக்கி வைதெழுவாரையும் துன்பம் செய்யான். வைபவரும் தம்மக்களே ஆகலின் இறைவன் அவர்களையும் காலப்போக்கில் திருந்துமாறு அருள்செய்து ஆட்கொள்வான். இதே கருத்தை ஞானசம்பந்தரும் இரண்டாம் திருமுறையில் திருவாழ்கொளிபுத்தூர்ப் பதிகப் (தி.2 ப.94 பா.5) பாடலில்,

''பரவுவாரையும் உடையார் பழித்திகழ்வாரையும் உடையார்
................
வரமும் ஆயிரம் உடையார் வாழ்கொளிபுத்தூருளாரே''

எனக் குறிப்பிட்டுள்ளமை ஒப்புநோக்கி இன்புறற்பாலது.

இப்பாடலில் குறளின் சொற்பொருட்சாயல் வந்துள்ளமை கண்டு மகிழலாம்.

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல் *-குறள் 196*

என்ற *குற*ளுக்குப் பரிமேலழகர் உரை கூறும்போது, மகன் எனல் என்ற சொல்லுக்கு பயனில் சொல் பாராட்டுவானை மகனென்று சொல்லற்க எனவும், மக்கட் பதடி எனல் என்ற சொல்லுக்கு மக்களில் பதர் என்று சொல்லுக எனவும் கூறுகிறார். எனல் என்ற சொல் சொல்லற்க என்றும் சொல்லுக என்றும் பொருள் தருதலைக் காண்கிறோம்.

இக் கருத்தை ஓரளவு இப்பாடலில் வரும் காதலன், வாடலன் என்ற சொல்லிலும் கண்டு மகிழலாம். காதலன் - விருப்புடையன், வாடலன் - வாட்டம் செய்யான்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை *-குறள் 155*

என்ற *குறட்*கருத்தையும் இப்பாடலில் காணநேர்கிறது. தொழு தெழுதல் மனைவியின் செயல், வைதெழுதல் புறச்சமயத்தார் செயல்.

Koviloor Digital Library

சொற்பொருள் கருத்து ஒற்றுமை கண்டு மகிழ்க. அப்பாடல் காண்போம்.

கரைந்து கைதொழு வாரையும் காதலன்
வரைந்து வைதெழு வாரையும் வாடலன்
நிரந்த பாரிடத் தோடவர் நித்தலும்
விரைந்து போவது வீழி மிழலைக்கே. -தி.5 ப.12 பா.1

இனியன் தன்னடைந்தார்க்கு:

தன்னை அடைந்தவர்கட்கெல்லாம் இடைமருதீசர் இனியனாக இலங்குகிறார். இதனைக் ''கனியினும் கட்டிபட்ட கரும்பினும்'' என்ற பாடலால் விளக்குகிறார். குழந்தைப்பருவத்தில் கனியிலே விருப்பம், கொஞ்சம் முதிர்ந்தால் வெல்லக்கட்டியிலும், கற்கண்டிலும் விருப்பம் மிகுகிறது. காளைப் பருவத்தில் பாவையரிடத்து விருப்பம் உண்டாகிறது. அதை அடுத்து அரசியலில் இன்பம் காண்கிறது. இவற்றையெல்லாம் விட இடைமருதீசன் கழல் நீங்காத இனிமை பயப்பது என்று அதைவிட அதைவிட என்று உறழ்ச்சிப் பொருள் காணலாம். மேலும் நாம் ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் வைத்தும் பொருள் காணுதல் மிகவும் இனிமை பயக்குமாறுள்ளது. கனியின்கண் சுவையாயிருப்பவனும், கட்டிபட்ட கரும்பின்கண் சுவையாயிருப்பவனும், பனிமலர்க்குழல் பாவை நல்லாரிடத்து இன்பமாயிருப்பவனும், தனிமுடி கவித்து ஆளும் அரசிடத்து இன்பமாயிருப்பவனும் இடைமருதூர்ப் பெருமானே என்று இனிமையாக இயம்பியுள்ளார். எல்லா இடத்தும் எல்லாப் பொருள்களிலும் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களிலும் அவன் உடனாயிருந்து நுகரச் செய்கிறான் என்ற கருத்தையே இப்பாடல் எளிமையாக உணர்த்துகிறது.

ஆகமம் சொல்லும் பாங்கிக்கு:

ஊழிக் காலத்தில் அஃதாவது யுக முடிவில் இறைவனும் இறைவியும் மட்டுமே உள்ளனர். அப்போது இருவரும் தனிமை கழிய பெருமான் பெருமாட்டிக்கு வருகிற யுகத்தில் எப்படியெல்லாம் மக்களை மன்னுயிர்களை ஈடேற்றம் செய்வது என்று திட்டமிடும் ஆகமங்களை பணித்தெழுந்த மருதமரத்தடியில் உமாதேவியாருக்கு உபதேசித்தார். அப்பாடல் காண்க.

துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோடு
அணைய லாவது எமக்கரி தேஎனா
இணையி லாஇடை மாமரு தில்எழு
பணையில் ஆகமம் சொல்லும்தன் பாங்கிக்கே.-தி.5ப.15பா.4

பாங்கி பக்கத்திருப்பவர் உமையம்மை.

Koviloor Digital Library

திருவெண்ணி:

திருவெண்ணி என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க பழைய ஊர். சங்க காலத்தில் இவ்வூரில் தோன்றிய பெரும்புலவர் வெண்ணிக் குயத்தியார் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் கரிகாற்சோழனின் வெண்ணிப் போரைப்பற்றிக் கூறுகிறது. கரிகாலன் வெற்றி பெற்ற ஊர் வென்றி என்றாகி பிறகு வெண்ணி என ஆயிற்று என்பர்.

''கலிகொள்பாணர் வெண்ணிப்பறந்தலை'' *- புறம் 66.*

''ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்'' *-அகம் 55,246*

''இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய -
வெண்ணித் தாக்கிய கரிகால் வளவன்'' *-பொருநர் - 147-8*

இருபெருவேந்தர் - சேர, பாண்டியர்கள். மேலும் பதினொரு வேளிரையும் வென்றமை குறிக்கப்படுகிறது.

இத்தலம் மிகத் தொன்மையானது என்பதையும் இங்குள்ள பெருமானை நினைத்திருந்த நாவுக்கரசருக்கு இனிமை பயந்து அமுதூறிற்று என்பதையும் அவரே ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

வெண்ணித் தொல்நகர் மேய வெண்திங்களார்
கண்ணித் தொத்த சடையர் கபாலியார்
எண்ணித் தம்மை நினைந்திருந் தேனுக்கு
அண்ணித் திட்டமு தூறும்என் நாவுக்கே -தி.5 ப.17 பா.2

எனக்கு இனியர்:

ஒருவன் தனக்கு இனியர் யார்? என்று எண்ணிப்பார்த்தால் தமக்குத் தாமே இனியவராகத் தோன்றுவர். இது சரியன்று. நமக்கு நாமே நன்மை செய்ததாக எண்ணிச் செய்யும் செயலெல்லாம் நமக்கு நல்லனவாக முடியாததைக் காண்கிறோம். நாம் செய்யும் செயல் நமக்குத் தீமையையும் செய்துவிடுகிறது. நமக்கு நன்மை செய்பவன் நம்மினும் இனியவன் ஒருவன் இருக்கின்றான். அவன் நம்முள் உயிர்க்காற்றாய் புறத்தும் அகத்தும் புகுந்து நம் உள்ளத்தே நிற்கின்றான். அவனே திரு இன்னம்பரில் எழுந்தருளியிருக்கின்றான். அவனைத் தொழுது உய்மின்கள் என்கிறார் அப்பர். மேலும், அவ்வின்னம்பர் ஈசன் நாம் செய்வனவற்றையெல்லாம் ஒரு சிறிதும் விடாது குறித்துக்கொண்டு இருக்கிறார் என்கிறார் அப்பர். அவ்விரு பாடல்களையும் சிந்திப்போமாக.

என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யானொரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. -தி.5 ப.21 பா.1

Koviloor Digital Library

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே. -தி.5 ப.21 பா.8

பற்றினாரைப் பற்றா வினை:

பற்றும் பாசமும் விடவேண்டுமானால் பற்றற்ற பரம்பொருளை நாம் பற்றவேண்டும். அப்படிப் பற்றினால் நாளடைவில் நமது பற்று அற்றுப்போகும். பற்றுள்ளாரைப்பற்றாகப் பற்றினால் நாளும் பற்று மிகுமே தவிரக் குறையாது. இதனையே ஞானசம்பந்தரும் ''கற்றாங்கு எரியோம்பி'' என்ற பாடலில் ''முதல்வன் பாதமே பற்றா நின்றாரைப் பற்றா பாவமே'' என்கின்றார். அதே கருத்தை இங்கு அப்பர் கூறும் அரிய பாடலில் காண்போம்.

புற்றி னாரர வம்புலித் தோல்மிசைச்
சுற்றி னார்சுண்ணப் போர்வைகொண் டார்சுடர்
நெற்றிக் கண்உடை யார்அமர் நின்றியூர்
பற்றி னாரைப்பற் றாவினை பாவமே. -தி.5 ப.23 பா.3

நெஞ்சம் வாழி:

நெஞ்சை வாழ்த்துவது பெரியோர் இயல்பு. வாழ்க எம் மனமும் மணி நாவும்மே'' என்பார் குமரகுருபரர். நெஞ்சம் நல்லதே நினைத்தால் அது நம்மை நன்னெறியில் செலுத்தும். இறைவனை நினையும் நெஞ்சம் நல்ல நெஞ்சம். எனவேதான் அப்பர்பெருமான் திருநின்றியூர்த் திருக்குறுந்தொகையில் ''நெஞ்சமே நீ அஞ்சி வழிபட்டாலும் சரி அன்புடனே வழிபட்டாலும் சரி அது அந்நெஞ்சுடையானை உய்விக்கும் ஆற்றல் உள்ளது. எனவே பெருமானை அச்சத்துடனோ அன்புடனோ வழிபட்டாலும் நீ வாழ்க'' என வாழ்த்துகிறார் அப்பர் அறியாப்பருவத்தினர் அச்சம் காரணமாகவும், அறிந்தமெய்யுணர்வினர் அன்பு காரணமாகவும் வழிபடுவர் என்பது அறியத்தக்கது.

அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ
இஞ்சி மாமதில் எய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. -தி.5 ப.23 பா.9

அந்திக்கோன்:

இச்சொல் அரிய பிரயோகமாய் வந்துள்ளது. அந்தி - மாலைப்பொழுது. இரவு-இரவில் தண்ணளியுடன் குளிர்ச்சியாக ஆட்சிபுரிபவன் சந்திரன். இதனை, ''அந்திக் கோன்தனக் கேஅருள்

Koviloor Digital Library

செய்தவன்'' என்னும் பாடல் பகுதியால் அறிவிக்கிறார்.

இப்பதிகத்தின் இறுதிப்பாடலில் இறைவன் மகத்துக்கு மகத்தாகவும் அணுவிற்கு அணுவாகவும் இருப்பதைக் குறிப்பிடுகிறார். ''பரியர் நுண்ணியர் பாசூர் அடிகளே'' என்பது அப்பாடல் பகுதியாகும்.

பாதிப்பெண் ஒரு பாகத்தன்:

''அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்'' என்பது சாத்திரம். ''ஒருமை பெண்மை உடையன்'' என்கிறார் ஞானசம்பந்தர்.

''பாதி ஓர் பெண்ணை வைத்தாய்'' என்பது சுந்தரர் வாக்கு.

''சக்தி இன்றிச் சிவம் இல்லை, சிவம் இன்றிச் சக்தி இல்லை.'' இரண்டும் இரு தன்மை கொண்ட ஒரே பொருள் என்பதை யாரும் மறத்தற்கியலாது.

இக்கருத்தைத் திருவாவடுதுறை அகத்துறைப்பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல் வருமாறு;

பாதிப் பெண்ஒரு பாகத்தன் பன்மறை
ஓதி என்னுளம் கொண்டவன் ஒண்பொருள்
ஆதி ஆவடு தண்துறை மேவிய
சோதி யேசுட ரேஎன்று சொல்லுமே -தி.5 ப.29 பா.3

வஞ்சமின்றி வணங்குமின்:

கரவாடும் வன்நெஞ்சர்க்கரியவன் என்பார் காஞ்சிப்பதிகத்தில். ஆனைக்காவிலும் நாளும் வஞ்சமின்றி வணங்குமின் வைகலும் என்கிறார். மேலும் வெஞ்சொல் இன்றி விலகுமின் வீடுஉற என்கிறார். நெஞ்சில் வஞ்சமின்றியும் நாவில் வெஞ்சொல் இன்றியும் நினைந்தும் வாழ்த்தியும் வழிபடுவாருக்கு ஆனைக்கா அண்ணல் அஞ்சல் என்று அருள்செய்திடும் என்பவர் மேலும் ஒரு பாடலில் திருகுசிந்தையைத் தீர்த்து, உருகி நைபவர்க்கு அருகில் நின்று அருள்செய்பவன் ஆனைக்கா அண்ணல் என்கிறார். மேலும் ஒரு பாடலில் துன்பம் இன்றித் துயர் இன்றி என்றும் நீர் இன்பம் வேண்டுவீர் ஆனால் இராப்பகல் ஏத்துமின், அப்படி என்பொான் ஈசன் இறைவன் என்று உருகுவார்க்கு ஆனைக்கா அண்ணல் அன்பனாய் அருள்புரிவன் என்கிறார்.

மேலும், ''நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே, படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள், தடை ஒன்று இன்றியே
12 தன்னடைந்தார்க்கெலாம், அடைய நின்றிடும் ஆணைக்கா அண்ணலே'' என்று அறம் கூறுகிறார். மேலும் மடநெஞ்சமே நேசமாகி நினை என்று அறிவுறுத்துகிறது ஒரு பாடல். இவற்றையெலாம் சிந்தித்துச் சிறப்புறுவோமாக.

Koviloor Digital Library

அடிகள் சேவடிக் கீழ் நாம் இருப்பது:

திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்து அங்கேயே நிலையாகத் தங்கிவிடுவது என்ற குறிப்பில் அப்பர் திருப்பூந்துருத்தியில் எழுந்தருளினார். அங்குத் தங்கி இருப்பதை இறைவன் சேவடிக்கீழ்த் தங்கியிருப்பதாகவே கொண்டார். அவ்வெண்ணங்கள் பாடல் வடிவு கொண்டன.

''அடிகள் சேவடிக்கீழ் நாம் இருப்பதே''

''தீர்த்தன் சேவடிக்கீழ் நாம் இருப்பதே''

''ஆதி சேவடிக்கீழ் நாம் இருப்பதே'' -தி.5 ப.32.பா.1-10

என்று பத்துப்பாடல்களிலும் பாடியுள்ளார்.

பூணியாய்ப் பணி செய்க:

திருச்சோற்றுத்துறைப் பதிகமாகிய ''கொல்லை ஏற்றினர்'' என்ற பதிகம் முழுவதும், திருவடிக்கீழ் நாம் இருந்தாலும் பணி செய்வதில் குறை ஏற்படக்கூடாது என்பதில் கருத்தாய் இருக்கிறார் அப்பர். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்,

''சோற்றுத் துறையர்க்கே வல்லையாய்ப் பணி செய் மடநெஞ்சமே''

''பக்தியாய்ப் பணி செய்மடநெஞ்சமே''

''பட்டியாய்ப் பணிசெய் மடநெஞ்சமே''
(பட்டி - மீளா அடிமை.)

''வாதியாய்ப் பணிசெய் மடநெஞ்சமே''
(வாதியாய் - பரமன் புகழ்களையே பேசுபவனாய் பணி செய்வது.)

''பூணியாய்ப்பணி செய் மடநெஞ்சமே''
(பூணி-அன்பு.)

இப்படி இப்பதிகம் முழுதுமே பாடியுள்ளமை கண்டு நாமும் பணிசெய்து உய்வோம். (தி.5 ப.33 பா.1-10)

ஒருவர் தாம் பலபேர் உளர்:

இறைவன் ஒருவரா, பலரா என்பது பலரது உள்ளத்தே எழும் ஐயம். இவ் ஐயத்திற்கு நம் சமயாசாரிய மூர்த்திகள் பல இடங்களிலும் பல்வேறு விதமாகவும் இறைவன் ஒருவனே என்பதைத் தெளிவு படுத்தியுள்ளனர்.

அவற்றுள் இது ஒரு இடம். திருச்செம்பொன்பள்ளி திருக் குறுந்தொகையில் ''செம்பொன் பள்ளியார் ஒருவர்தாம் பலபேர் உளர் காண்மினே'' என்றருளிச் செய்துள்ளார். கடவுள் ஒருவர்தான்.

Koviloor Digital Library

பேர்கள் தான் பலவாக உள்ளன என்று இங்கு தெரிவித்துள்ளார். அப்பாடல் வருமாறு.

அருவ ராததோர் வெண்டலை யேந்திவந்து
இருவ ராயிடு வார்கடை தேடுவார்
தெருவெ லாமுழல் வார்செம்பொன் பள்ளியார்
ஒருவர் தாம்பல பேருளர் காண்மினே. -தி.5 ப.36 பா.4

ஒருவர் தாம் பல பேருளர் என்பதற்கு உலகியலிலும் சில உதாரணங்கள் கண்டு தெளியலாம். காவிரி ஒன்றுதான்; பலவாகப் பிரிந்து பலபேர் தரித்து பலருக்கும் பயன் தருகிறது. இந்தியா ஒன்றுதான்; பல மாநிலங்களாகப் பேர் பெற்று பலவாகப் பிரிந்து பலருக்கும் பயன் தந்து நிற்கிறது. இதுபோல் இன்னும் பல உதாரணங்களும் காணலாம்.

பாவமும் பிழையும் தீர்ப்பர்:

கடலூர் மயானப்பெருமானை ஞானசம்பந்தர் ''வரிய மறையார்'' என்னும் பதிகத்துள் ஒவ்வொரு பாடல் இறுதியிலும் ''பெரிய பெருமான் அடிகளே'' என்றும் ''எம்பெருமான் அடிகளே'' என்றும் குறிப்பிட்டுள்ளமை காணலாம். இங்கு நாவுக்கரசர் ''குழைகொள் காதினர்'' என்று தொடங்கும் பதிகத்துள் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ''பெருமான் அடிகள்'' என்று குறிப்பிட்டிருப்பதும் சிந்தித்தற்குரியது. பழைய அடியார்கள் செய்த பாவத்தையும் பிழையையும் தீர்ப்பர் என்றும், பரவுவார் இடர் தீர்த்துப் பணி கொள்வார் என்றும் இப்பதிகத்துள் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல் பகுதிகளைக் காண்க.

''பழையதம் அடியார் செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமான் அடிகளே'' -தி.5 ப.38 பா.1

''பரவுவார் இடர் தீர்ப்பர் பணிகொள்வர்
பிரமன் மாற்கும் பெருமான் அடிகளே''-தி.5 ப.38 பா.8

மயிலாடுதுறைப் பதிகம்:

''கொள்ளும் காதன்மை'' எனத்தொடங்கும் திருப்பதிகம் அகத்துறைப்பாடல்கள் பதினொன்றைக் கொண்டது. முதற்பாடலில் பெருமான் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி பெருமானைக் கண்டபோதெல்லாம் உள்ளம் உருகுவதால் உடல் மெலிகிறாள். கையில் பெய்யும் வளையல்கள் கழல்கின்றன. பெருமான் பெயராகிய வள்ளலையே உரைத்தவண்ணம் உருகுகின்றாள், என்கிறார். இங்குள்ள பெருமான் வள்ளலாய் வீற்றிருக்கின்றார். நாற்றிசையிலும் நான்கு விதமாக வண்மை வழங்கும் பெருமான் இங்கு நடுநாயகமாக

Koviloor Digital Library

எல்லாவற்றுக்கும் மூலமான வள்ளலாகத் திகழ்கிறார். வடக்கே கைகாட்டும் வள்ளல் வள்ளலார் கோயில், கிழக்கே துறைகாட்டும் வள்ளல் - விளநகர், தெற்கே மொழிகாட்டும் வள்ளல்-பெருஞ்சேரி, மேற்கே வழிகாட்டும் வள்ளல் மூவலூர். வேறு ஒருவராலும் வழங்கமுடியாத வீடுபேற்றை, மோட்சத்தை வழங்குபவர் எவரோ அவரே வள்ளல் எனப்படுவார். மற்றவர்க்குச் சொல்வதெல்லாம் உபசாரமே. சிவபெருமான் ஒருவரே வீடு அளிப்பவர் ஆதலின் இவர்க்கு வள்ளல் என்ற பெயர் வந்தது. அப்பாடல் காண்க.

கொள்ளும் காதன்மை பெய்துறும் கோல்வளை
உள்ளம் உள்கி உரைக்கும் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடுது றைஉறை
வெள்ளம் தாங்கு சடையனை வேண்டியே. -தி.5 ப.39 பா.1

அஞ்சொலாள்:

இத்தலக் குறுந்தொகை நான்காம் பாடலில் கொடிய கோபமுடைய காலன் நம்மிடம் வரமாட்டான். அஞ்சத்தக்க இறப்பும் பிறப்பும் அறுக்கலாம், எப்பொழுது? அஞ்சொலாள் உமை பங்கன் அருளினுல் காலனைக் கடக்கலாம், பிறப்பினையும் இறப்பினையும் அறுக்கலாம் என்று அருளியுள்ளார். அஞ்சொலாள்-அழகிய இனிய சொல்லை உடையவள் அம்மை. இதனைப் பின்னர் வந்தோர் அஞ்சலாள் எனக்கொண்டு இவ்வூர் அம்மை பெயரை ''அபயாம்பிகை'' என மொழி பெயர்த்தனர். எப்பெயரும் இறைவிக்கு ஏற்றதே. எனினும் உண்மை காண்டல் உலகினுக்கு இனியதே என்க.

நிலைமை சொல்லு:

கயிலாய நன்மலையன் மாமயிலாடுதுறையன் நம் தலையின் மேலும் மனத்துளும் தங்க நெஞ்சே தவம் என் செய்தாய்? நிலைமை சொல்லு என்று வினவுகிருர். அந்தப் பாடல் வருமாறு.

நிலைமை சொல்லுநெஞ் சேதவம் என்செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே -தி.5 ப.39 பா.6

குழலின் நேர்மொழி:

நான்காம் திருமுறையில் திருவாரூர்த் திருநேரிசையில் ''குழல் வலம் கொண்ட சொல்லாள்'' என்ற அரிய பிரயோகம் உள்ள பாடலை முன்பு கண்டோம். இங்கு ஐந்தாம் திருமுறையிலும் திருக்கழிப்பாலை ''வண்ணமும் வடிவும்'' என்ற பதிகத்தின் மூன்றாம் பாடலில் இரண்டாம் அடியில் ''குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ''

Koviloor Digital Library

என்று குழலுக்கு ஒப்புமையாக அம்மையின் இனிய மொழியைக் குறிப்பிட்டுள்ளமை கண்டு மகிழலாம்.

என்றும் இன்பம் தழைக்க:

தில்லையின் கீழ் எல்லையில் உள்ள திருவேட்களம் சென்றார் அப்பர். அர்ச்சுனற்குப் பாசுபதம் அருளிய பெருமானைப் பணிந்தார். உள்ளத்தெழுந்த உயர்பெரும் கருத்துக்களை ''நன்று நாள்தோறும்'' என்ற பதிகத்துள் பொதிந்து கொடுத்துள்ளார். மனிதர்கள் நாள்தோறும் சென்று திருவேட்களத்துள் உறைகின்ற பொற்சடைப் பெருமானைத் தொழுவீர்களாக. நாள்தோறும் நல்லனவே உமது வாழ்வில் நடைபெறும். நாம் செய்த தீவினைகள் போய் அறும். என்றும் இன்பம் தழைக்க இனிதே வாழலாம் என்கிறார். அப்பாடல் காண்க.

நன்று நாள்தொறும் நம்வினை போய்அறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. -தி.5 ப.42 பா.1

மேலும் ''வேட்களம் கைதொழுது இருப்பனாகில் எனக்கிடர் இல்லையே'' என்றும், ''பூக்கள் கொண்டு அவன் பொன்னடி போற்றினால், காப்பர் நம்மைக் கறைமிடற்று அண்ணலே'' என்றும், ''துன்பம் இல்லை துயரில்லையாம் இனி'' என்றும் தம் அனுபவத்தை அகமகிழ்ந்து கூறியுள்ளமை கண்டு இன்புறுக.

நாவரசர் காணும் நல்லத்தான்:

திருநல்லம் என்பது இன்று கோனேரிராஜபுரம் என வழங்குகிறது. இங்கு, பெரிய நடராஜப் பெருமானின் செப்புப்படிமம் வியத்தகு நிலையில் உள்ளது. இங்கு எழுந்தருளிய அப்பர் நல்லத்தானைக் கைதொழுது வணங்கினார். தம் உள்ளத்தெழுந்த அருளுணர்வைத் திருக்குறுந்தொகைப் பதிகமாக வெளிப் படுத்தினார். நம்மைக் கொல்லத்தான் நமனார் வந்தக்கால் அறிவிலும் வலியிலும் பலவகையிலும் ஏழையாக இருக்கின்ற நாம் என் செயவல்லம். ஒன்றுமில்லை. எனவே நல்லத்தான் கழலைச் சொல்ல வல்லீரேல் நம் துயர் தீரும் என்கிறார்.

''பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புலையனேன்'' என்றார் மணிவாசகர். அஃது அவருக்குப் பொருந்தாது. நம்மனோர்க்கே மிக மிகப் பொருந்தும். அதனையே அப்பர் நமக்கு இங்கு உபதேசிக்கிறார். பொய்யாக வார்த்தைகளைப் பேசிப் பொழுதினைப் போக்காதே. துக்கம் தீரவகைசொல்லுவன் கேளுங்கள், தக்கன் வேள்வியைத் தகர்த்த தழல்வண்ணன் நம்பெருமான். மேலும் திகம்பரன் - திக்கையே ஆடையாக

Koviloor Digital Library

உடுத்தவன் - நிர்வாண கோலத்தன், அவனை அடைதலே நமக்கு நன்மை எல்லாம் பயக்கும் என்கிறார்.

மேலும் ''நமக்கு நல்லது நல்லம் அடைவதே'' என்றும் ''பரவுமின் பணிமின், பணிவார் அவரோடே விரவுமின் விரவாரை விடுமினே'' என்றும் ''வல்லவாறு சிவாய நமவென்று தொழ, வெல்ல வந்த வினைப்பகை வீடுமே'' என்றும் ''நல்லம் நல்லம் எனும் பெயர் நாவினால் சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே'' என்றும் குறித்துள்ளமை கண்டு நாமும் தொழுவோம். தூநெறி - வீட்டு நெறி.

வஞ்ச ஆறுகள் வற்றின:

பஞ்ச பூதங்களும் மாயா காரியங்கள். இதனையே பஞ்சபூத வலை என்கிறார். இவ் வலையில் படாமல் தப்பவேண்டுமானால் பேரொளிப் பொருளாக பேரறிவுப் பொருளாக, பேரின்பப் பொருளாக உள்ள ஆமாத்தூர் அழகனை நெஞ்சினால் நினைதல் வேண்டும். நினைத்தால் வஞ்சனையாக உள்ள ஆறுகள் வற்றி விடும். அப்பர் நினைந்தார், வஞ்ச ஆறுகள் வற்றின. அவர் அனுபவப் பாடலைக் காண்போம்.

பஞ்ச பூத வலையிற் படுவதற்
கஞ்சி நானு மாமாத்தூ ரழகனை
நெஞ்சி னால்நினைந் தேன்நினை வெய்தலும்
வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே -தி.5 ப.44 பா.4

வஞ்சனையால் வரும் தீய வழிகள் பல. அவ்வழிகளெல்லாம் வற்றிப் போயின. ஆறு - வழி. மேலும் இத்தலப் பதிகத்தின் ஐந்தாம் பாடலில் ''இராமனும் வழிபாடு செய் ஈசனை, நிரா மயன்தனை நாளும் நினைமினே'' என்கிறார். நிராமயன் - நோய் இல்லாதவன். பசுத்துவம் இல்லாதவன். பிறவி அற்றவன். இராமன் வழிபட்ட இத்தல புராணக் குறிப்பை இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். ஆமாத்தூர் இடமதாகக்கொண்ட ஈசனுக்கு என் உளம், இடமதாக்கொண்டு இன்புற்றிருப்பனே என்கிறார். ஆமாத்தூரில் குடிகொண்டுள்ள ஈசனை என் உள்ளத்தில் ஏற்றிப் பூசிப்பேன். போற்றுவேன் எனப் புளகாங்கிதம் கொள்கிறார்.

கண்ணில் உண்மணி:

பண்ணில் ஓசையாகவும், பழத்தில் சுவையாகவும் இருப்பவன் இறைவன். பண் - இராகம். ஓசை - சுரம். பண்வேறு. ஓசை வேறு. என்றில்லாமல் உடல் உயிர் போல ஒன்றாய் இருப்பவன் என்பதை முதல் அடி உணர்த்துகிறது எனலாம். ''பெண்ணோடு ஆணென்று பேசற்கரியவன் வண்ணமில்லி வடிவுவேறாயவன்'' என்பது கண்ணொளியும் சூரிய ஒளியும் போல வேறாயிருந்து உதவும்

Koviloor Digital Library

தன்மையைக் காட்டுகின்றது எனலாம். ''கண்ணில் உண்மணி கச்சிஏகம்பனே'' என்பதில் கண் காண்பதற்கு உயிர் உடனாய் இருந்து காண்பதுபோல சிவன் உயிர்க்கு உயிராய் உடனிருந்து உணர்த்துவதைக் கடைசி அடி காட்டுகிறது. இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் இருந்து உதவுவதைக் குறிப்பிடுகிறது இப்பாடல்.

பொய்யர் உளத்தணுகான்:

சிவன் பொய்யர் உள்ளத்திலும், வஞ்சகர் நெஞ்சத்திலும் உறையான். ''பொய்யர் உள்ளத்து அணுகானே'' என்பது அருணகிரியார் திருப்புகழ். பொய் அஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க்கே அருள் செய்வான் அரன் என்பது அப்பர் வாக்கு. பொய் மொழியா மறையோர்களும், மெய்மொழி நான்மறையோர்களும் துதித்துப் போற்றப்படுபவனே காழியிலும் வீழியிலும் வீற்றிருக்கும் பெருமான் என்கிறார் ஞானசம்பந்தர். நாவரசர் திருஏகம்பத்து இறைவனைத் தொழுது எழுந்தார். அப்போது ஏகம்பன் உணர்த்திய நல்லுணர்வை சொல்மாலையாக்கி ஏகம்பவாணர்க்கே சூட்டி மகிழ்கிறார். நாமும் அவ்வாக்கை உணர்ந்து உயர்வோம்.

பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு ஏந்திய
கைய னைக்கச்சி ஏகம்பம் மேவிய
ஐய னைத்தொழு வார்க்கில்லை அல்லலே -தி.5 ப.48 பா.9

செந்தமிழ் உறைப்பு:

அப்பர் திருமறைக்காட்டில் பத்துப் பாடல்கள் பாடியும் திருக்கதவு திறக்கவில்லை. பதினொராம் பாடலில் ''இரக்கம் ஒன்றிலீர்'' என்றதுமே கதவு திறந்தது.

ஆனல் ஞானசம்பந்தரோ ''சதுரம் மறைதான் துதி செய்து வணங்கும்'' என்று ஒரு பாடல் பாடியமாத்திரத்தே திருக்கதவம் அடைத்துக் கொண்டது.

அப்பர், இதில் நாம் ஏதோ பிழை செய்துவிட்டோம், என்று பிழையை எண்ணி எண்ணி நைந்தபோது, ''திருவாய்மூருக்கு நம்பால் வருக'' என அசரீரி தோன்ற, அப்பர் நள்ளிரவில் அங்குச் சென்றார். ஞானசம்பந்தர் அப்பர் வாய்மூர் செல்கிறார் என்பதை உணர்ந்து அவரும் அப்பரைப் பின் தொடர்ந்தார். இருவரும் திருவாய்மூர் சேர்ந்தனர். காட்சி ஒன்றும் கிடைக்கவில்லை. அப்போதுதான் அப்பர் ''எங்கே யென்னை'' என்ற திருக்குறுந் தொகைப் பதிகம் பாடினார். அதில் எட்டாம் பாடலில் திறக்கப்பாடிய என்னிலும் செந்தமிழ் உறைப்புப் பாடி அடைப்பித்தாராகிய ஞானசம்பந்தர் உந்நின்றார் என்றார். அணிமையிலும் இல்லாமல்,

Koviloor Digital Library

சேய்மையிலும் இல்லாமல் நடுநின்றவரை உந்நின்றார் என்ற சுட்டினால் அறிவிக்கிறார். உடனே வாய்மூர் இறைவன் ஞானசம்பந்தருக்குக் காட்சியருள அவர் அக்காட்சியை அப்பருக்குக் காட்ட அப்பர் கண்டார். எனவே பெருமான் காட்சியைக் காட்டியருள ஞானசம்பந்தர் கண்டு காட்டியதால், நாவுக்கரசருக்கு ஒருவகையில் குருவுமானார்.

தன்னைப்பெற்ற தவமுடைய சிவபாத இருதயருக்கு தோடுடைய செவியன் விடைஏறி முதலிய அடையாளங்களால் சுட்டிக்காட்டியும், அதைக்காணும் நிலை சிவபாத இருதயருக்குக் கிட்டவில்லை. ஞானசம்பந்தரால் தந்தை என்ற முறையில் அப்பரே என்று அழைத்த அப்பருக்கு அக்காட்சி கிடைத்தது. இவ்வரலாற்று நிகழ்ச்சியை அறிவிக்கும் பாடலைக் காண்போம்.

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்
பிறைக்கொள் செஞ்சடை யார்இவர் பித்தரே -தி.5 ப.50 பா.8

அதிசூக்கும பஞ்சாக்கரம்:

வேதம் நான்கினுள்ளும் மெய்ப்பொருளாய் இருப்பது நாதன் நாமமாகிய நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்தேயாம். வேதம் நான்கு எனினும் *அதர்வ வேதத்தை* நீக்கி வேதம் மூன்று என்றே கொள்வர் மேலோர். அதுபற்றியே 'வேதத்திரயி' எனவும் வழங்கலாயிற்று. *இருக்கு, யசுர், சாமம்* என்னும் மூன்று வேதங்களுள் நடுநின்ற *யசுர்* வேதத்தின் நடுவில் ''நமசிவாயச சிவதராயச'' என்னும் அதிசூக்கும பஞ்சாக்கரம் அமைந்துள்ளது. வடமொழி வேதத்தைப்போலவே தமிழ் வேதமாகிய மூவர் தேவாரத்துள் நடுநிற்பதாகிய அப்பர் தேவாரத்துள்ளும் நடுநின்ற இவ் ஐந்தாம் திருமுறையின் நடுவில் உள்ள 51ஆம் பதிகமாகிய திருப்பாலைத்துறைப் பதிகத்துள் அமைந்த 11பாடல்களுள் நடுநிற்கும் 6ஆம் பாடலில் இவ் அதிசூக்கும பஞ்சாக்கரம் பேசப்படுகிறது.

தூலபஞ்சாக்கரம் நமசிவய என்பது. சூக்கும பஞ்சாட்சரம் சிவயநம என்பது. அதிசூக்கும பஞ்சாட்சரம் சிவயவசி என்பது. இதனைச் சிவய சிவ என்றும் சிவய வசி என்றும் உபதேசக் கிரமப்படி ஓதிக்கணித்து வருகின்றனர். ''வானிடத்தவரும் மண்மேல்வந்து அரன்தனை அர்ச்சிப்பர்'' என்ற அருணந்தி சிவத்தின் வாக்குப்படி விண்ணவர்கள் மண்ணகத்தே வந்து வழிபடுவதைக்கண்ட மண்ணவர்கள் வியப்பு எய்துகின்றனர். மறவாமல் ''சிவாய'' என்னும் அதிசூக்கும பஞ்சாக்கரத்தை ஓதிக் கணிக்கின்றனர். அங்ஙனம் எண்ணினார்க்கு எழில்மிக்க வானகத்தை உறைவிடமாகப்

Koviloor Digital Library

பண்ணிக் கொடுத்தார் பாலைத்துறைப் பரமனார் என்கிறது இப்பாடல். அப்பாடலைச் சிந்திப்போம்.

விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி வாயஎன்று
எண்ணி னார்க்குஇட மாஎழில் வானகம்
பண்ணி னார்அவர் பாலைத் துறையரே -தி.5 ப.51 பா.6

நாவலந்தீவு:

இமய மலையின் தென்பாலுள்ள இந்தியப்பெருநாட்டிற்கு நாவலந்தீவு என்று பெயர். நாடும் ஊரும் தோன்றுதற்கு முன்னர் இத்தீவு நாவல்மரக்காடாக இருந்தது. காடு திருத்தி நாடாக்கிய முயற்சியால் நாடும், நகரமும் நற்றிருக்கோயிலுமாக நாவலந்தீவு திகழ்கிறது. இதனை ஜம்புத்தீவு என்றும் வழங்குவர். ஜம்பு - நாவல். கும்பகோணத்திற்கு அண்மையில் உள்ள திருநாகேச்சுரத் திறைவனை, நாவலந்தீவில் வாழ்பவர்கள் எல்லோரும் 'வினையொடு பாவமாயின பற்றறுவித்திடலால்' இங்கு வந்து வணங்கி வழிபடுகின்றனர் என்கிறார் அப்பர்.

இராகு பூசித்து அருள்பெற்ற தலம் இது. இதனால் இராகுதோஷம் உடையவர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை இராகு காலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வழிபட்டு நலமுறுகின்றனர். இப்பாடல் காண்போம்.

நாவ லம்பெருந் தீவினில் வாழ்பவர்
மேவி வந்து வணங்கி வினையொடு
பாவ மாயின பற்றறு வித்திடும்
தேவர் போல்திரு நாகேச் சரவரே. -தி.5 ப.52 பா.2

எட்டு நாண்மலர்:

எட்டு நாண்மலரை அட்டபுட்பம் என்பர் வடமொழியாளர். புன்னை, வெள்ளெருக்கு சண்பகம், நந்தியாவர்த்தம், பாதிரி, குவளை, அலரி, செந்தாமரை என்பன அவ் எண் மலர்களாம். அகப்பூசைக்குரிய எண்மலர்களாவன. கொல்லாமை, அருள், பொறியடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு என்பனவாம். இதனை நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டும் என்பார் அப்பர்.

எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ
ரட்ட னார்அடி சேரும் அவருக்கே -தி.5 ப.54 பா.1

என்னும் இத்திருப்பதிகம் திருவதிகை வீரட்டானத்திறைவரைப்

Koviloor Digital Library

பற்றியது. இப்பதிகத்துப் பல பாடல்களிலும் அஷ்டபுஷ்பம் சார்த்தலையும் அதன் பலன்களையும் குறிப்பிடுகின்றார்.

வையம் ஆளவும் வைப்பர்:

அப்பர் காஞ்சியை அடுத்துள்ள திருமாற் பேறு செல்கிறார், ''ஏதும் ஒன்றும்'' எனத் தொடங்கும் பதிகம் பாடுகிறார். அதில் ஏதும் ஒன்றும் அறிவிலராயினும் அஞ்செழுத்தை உபதேச வாயிலாகப் பெற்று ஓதி உருவேற்றினால் அவரவர் உள்ளத்தில் அம்மையப்பராகிய சிவம் விளங்கி மகிழ்விப்பார் என்கிறார். விடமுண்ட கண்டா என ஓதின் வைத்த மாநிதியாகப் பயன் தருவார் என்று வழிப்படுத்துகின்றார். சாத்திரம் பல பேசி அதன்வழி நடவாதாரைச் சாடுகின்றார். கோத்திரம், குலம், எல்லாம் நமக்குத் தேவைதான். அதுவே நம்மை ஈடேற்றிவிடும் என்று எண்ணாதே. பாத்திரம் சிவம் என்பதை மறவாதீர், என்று அறிவுறுத்துகின்றார். அவ்வாறு உணர்ந்தால் ஒரு நொடிப் பொழுதில் உனக்கு அருள் செய்வார். மேலும் செவ்விய இரு பாதங்களையும் வணங்கினால் வையம் ஆளவும் வைப்பர் என்று அறிவிக்கிறார். அப்பாடல் காண்க.

ஐய னேஅர னேஎன் றரற்றினால்
உய்ய லாம்உல கத்தவர் பேணுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர்மாற் பேறரே. -தி.5 ப.60 பா.7

கோழம்பம் மேயஎன் உயிர்:

கோழம்பம் என்பது திருவாவடுதுறை, குத்தாலம் முதலிய தலங்களுடன் புராணத் தொடர்புடைய தலம். தேவாரம் பாடுவோர் விநாயகரை அடுத்து முருகனைப் பற்றிப் பாடுவதற்கு இவ்வூர் அப்பர் தேவாரமாகிய ''சமர சூரபன்மாவைத் தடிந்த வேல் குமரன்'' என்ற பாடலையே ஓதுவர். மேலும் இங்குள்ள இறைவனை அப்பர் பெருமான் தன் உயிராகப் போற்றியுள்ளார். ''என் உயிரினை நினைந்து உள்ளம் உருகுமே'' என்பது அத்தொடராகும். எல்லாத் தலங்கட்கும் முதலாவது கயிலாயம்தான் என்பதையும் இப்பாடலில் குறிப்பிடுகின்றார். குயில் பயிலும் சோலை சூழ்ந்த கோழம்பம் என்று ஊரின் செழிப்பைப் புலப்படுத்துகின்றார். உள்ளம் உருகில் உடன் ஆவார் என்பது சாத்திரம். எனவே உள்ளம் உருகி வழிபட்டு உய்வோமாக. இத்திருத்தலம் உடனடியாகத் திருப்பணி செய்யவேண்டிய தலமாகும். வளமார்ந்த கருத்தமைந்த பாடல் பெற்ற இத்தலம் வளங்குன்றிய நிலையில் உள்ளது. விரைவில் திருப்பணி செய்து சிறப்படைவோம். அப்பாடல் வருமாறு.

கயிலை நன்மலை ஆளும் கபாலியை
மயிலி யல்மலை மாதின் மணாளனைக்

Koviloor Digital Library

குயில்ப யில்பொழில் கோழம்பம் மேயஎன்
உயிரி னைநினைந்து உள்ளம் உருகுமே. -தி.5 ப.64 பா.2

கோடி அர்ச்சனை:

இறைவன் இறைவியரது கோடி நாமங்களைச் சொல்லி, மலர்தூவி, குங்குமமிட்டு வழிபடுவதைக் கோடி அர்ச்சனை என்பர். இக்குறிப்பை பூவனூர் தேவாரத்தில் அப்பர் குறிப்பிடுகிறார்.

பூவ னூர்புனி தன்திரு நாமம்தான்
நாவில் நூறுநூறு ஆயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினும் செல்வர்க ளாவரே -தி.5 ப.65 பா.1

நூறாயிரம் ஒரு இலட்சம். நூறு நூறு ஆயிரம் ஒரு கோடி ஆகிறது. கோடி நாமங்களைச் சொல்லி வழிபட்டால் நம் பாவம் பறைவதோடு தேவர் கோவாகிய இந்திரனை விட மேலான செல்வத்தைப் பெறலாம்.

மனிதரில் தலையாய மனிதர்:

அனுசயம் - பகை. ஒருவருடனும் பகை பாராட்டாது, நட்புப் பாராட்டி கனிந்த மனத்துடன் கண்ணீர் மல்கிப் புனிதனாகிய பூவனூர் இறைவனைப்போற்றி வழிபட்டால், அப்படி வழிபட்டவர் மனிதர்களிலெல்லாம் தலையாயவராகத் திகழ்வர் என்கிறார் அப்பர். அப்பாடல் :

அனுச யப்பட்டு அதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே. -தி.5 ப.65 பா.6

வலங்கொள்வர் அடி என் தலை மேலவே:

சைவசமய ஆசாரியர்கள் நால்வரும் அடியவர்களைப் போற்றியவர்கள். சிவபெருமானையும், சிவன்கோயில்களையும், அடியார்களையும் போற்றியவர்களின் பாதங்கள் என் தலைமேலன என்கிறார்கள். நம் ஆசாரியப் பெருமக்கள். அப்பர் திருவலஞ்சுழி சென்று வழிபடுகிறார். அங்கு இலங்கை வேந்தன் இராவணன் நினைவிற்கு வருகிறான். அவனது இருபது தோளும் இற்றுப்போம்படியாக ஒருவிரல் ஊன்றினான் என்கிறார். அவ்விரலும் நலங்கொள் பாதத்து ஒருவிரல் என்கிறார். ஆண்டவன் செய்வன எல்லாம் நல்லனவே. அவன் ஒருவன்தான் நன்றுடையான், தீயதில்லான். எனவே அவன் பாதம் நலம்கொள் பாதம் ஆயிற்று. ஒருவிரல் இராவணனை அழிக்கவில்லை. அடர்த்துத் திருத்தியது.

Koviloor Digital Library

எனவேதான் நலங்கொள் பாதத்து ஒருவிரல் என்கிறார் நாவரசர். அவ்வலஞ்சுழி நீர்வளம் சூழ்ந்தது. நீரில் மீன்வளம் மிக்கது. அம்மீனோ மலங்கு மீன் வகையைச் சேர்ந்தது. அப்படிப்பட்ட வளம் சூழ்ந்த வலஞ்சுழித் தலத்தை வலங்கொள்வார் திருவடிகள் என் தலைமேலன என்கிறார் நம் ஆசாரியமூர்த்தியாகிய அப்பர். இவ்வழியை நாமும் பின்பற்றி உய்யலாமே. அப்பாடல்

இலங்கை வேந்தன் இருபது தோள்இற
நலங்கொள் பாதத் தொருவிரல் ஊன்றினான்
மலங்கு பாய்வயல் சூழ்ந்த வலஞ்சுழி
வலங்கொள் வார்அடி என்தலை மேலவே -தி.5 ப.66 பா.10

இதே கருத்தமைந்த ஞானசம்பந்தரின் கச்சியேகம்பப் பாடலும் காண்க.

தூயானைத் தூயவா யம்மறை ஓதிய
வாயானை வாளரக் கன்வலி வாட்டிய
தீயானைத் தீதில்கச் சித்திரு ஏகம்பம்
மேயானை மேவுவார் என்தலை மேலாரே. -தி.2 ப.12 பா.8

பறப்பையும் பசுவும் படுத்து:

பறப்பை என்பதற்கு பறவை வடிவம் பொறித்த வேள்வித்தூண் என்பர். பசு-வேள்விப்பசு. படுத்து என்பதற்கு சிறந்த பொருளாகக் கொள்ளுதல் என்பர். வேள்வித்தீயின்கண் நெய்யைச் சொரிந்தும் வேள்விச்சாலையின்கண் பசுவிற்கு வாயுறை கொடுத்தும் ஆராதனை செய்து வேள்வியை நடத்தும் அந்தணர்வாழும் ஊர் திருவாஞ்சியம் என்கிறார் அப்பர். இக்கருத்துள்ள பாடல் காண்போம்.

பறப்பை யும்பசு வும்படுத் துப்பல
திறத்த வும்உடை யோர்திக ழும்பதி
கறைப்பி றைச்சடைக் கண்ணுதல் சேர் தரு
சிறப்பு டைத்திரு வாஞ்சியம் சேர்மினே -தி.5 ப.67 பா.2

கறை பொருந்திய பிறை அணிந்தவர் என்ற குறிப்பு அரிய பிரயோகமாகக் காணப்படுகிறது. கண்ணுதற் பெருமான் எழுந்தருளியிருப்பதால் சிறப்புடையதாயிற்று திருவாஞ்சியம் என்னும் இத்தலம்.

நஞ்ச நெஞ்சர்க்கு அருளும் நள்ளாறர்.

திருநள்ளாற்று இறைவர் கொல்லும் தன்மை வாய்ந்த நஞ்சினைத்தன் கழுத்தில் கொண்டவர், வியத்தகு செயல்களினால் விளங்கும் ஞானச் செல்வியாகிய சிற்சக்திக்குக் கணவராய் உள்ளவர். இவர் வஞ்ச நெஞ்சத்தார்க்கு அருள் வழங்கமாட்டார். மனம் நைந்த

Koviloor Digital Library

நெஞ்சர்க்கே அருள்செய்வர். இவர் இருக்கும் இடம் திருநள்ளாறு என்கிறார். அப்பாடல் காண்க. நஞ்ச -நைந்த.

வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற கண்டத்தர்
விஞ்சை யின்செல்வப் பாவைக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க்கு அருளும்நள் ளாறரே. -தி.5 ப.68 பா.7

இடர், துன்பம், துயர்:

வெப்புநோயும் பிறவிநோயும் வறுமைநோயும் கொண்டீச்சுரவனை இடைவிடாது வழிபடுவார்க்கு இல்லை என்கிறது திருக்கொண்டீச்சுவரம் பாடல். மேலும் துன்பமும், துயரும், அவற்றிற்கு ஏதுவாகிய வினையும இல்லை என்கிறார். துன்பம், துயரம், இடர் என்பன துன்பமே ஆயினும், ஒன்றிற்கொன்று வேறுபாடுண்டு, துன்பம் என்பது உடலைப் பற்றியது, துயரம் என்பது மனத்தைப்பற்றியது. இடர் என்பது பிறவித்துன்பத்தைக் குறிப்பது என்பர். இவையெல்லாம் கொண்டீச்சுரவனைப் போற்றுவார்க் கில்லையாம்.

வெம்பு நோயும் இடரும் வெறுமையும்
துன்பமும் துயரும் எனும் சூழ்வினை
கொம்பனார் பயில் கொண்டீச் சுரவனை
'எம்பி ரான்'என வல்லவர்க்கு இல்லையே -தி.5 ப.70 பா.6

திருவிசயமங்கை:

திருவிசயமங்கை என்பது காவிரியின் வடகரைத்தலங்கள் 63இல் ஒன்று. இது கொள்ளிடத்தின் தென்கரையில் திருவைகா வூருக்கு அண்மையில் சிறு கோயிலாக உள்ளது. இதுவே பாடல்பெற்ற விசயமங்கை என்பர். இதனை விசமூங்கி என மருவி அழைக் கின்றனர். கொள்ளிடத்தின் வடகரையில் ஜெயங் கொண்ட சோழபுரத்தின் தென்மேற்கே உள்ளதுதான் பாடல்பெற்றது என்று அங்குள்ளோர் கூறுகின்றனர். இரண்டில் கொள்ளிடத்தின் வடகரையில் உள்ளதே பாடல்பெற்றது என்பதில் ஐயமில்லை. இவ்வூரைப்பற்றி அப்பர் திருக்குறுந்தொகையில், ''கொள்ளிடக்கரை கோவந்தபுத்தூர்'' என்று குறிப்பிட்டுள்ளமையும், பசு பூசித்த வரலாற்று உண்மையுமே இதனை வலியுறுத்துகின்றன. இன்று கோவிந்தபுத்தூர் என மருவி வழங்குகிறது.

பிரம்மாவும் சிவபிரானைப் போல ஐந்து தலை உள்ளவனாக ஒருகாலத்திருந்தான். அவன், தானும் சிவபெருமானும் ஒன்றே என்று கூறிச் செருக்குற்றான். அப்போது பெருமான், பைரவரை அனுப்பி, பிரம்மனின் நடுத்தலை - உச்சித்தலையைக் கிள்ளி எடுக்கச் செய்தான்

Koviloor Digital Library

என்பது வரலாறு. அது இப்பாடலில் குறிக்கப்படுகிறது. கோவிற்கும், விசயனுக்கும் அருள் செய்த வரலாறு குறிக்கப்படுவதால் இதுவே கோவந்தபுத்தூராகிய விசயமங்கை எனப்பெறுகிறது. மேலும் பாண்டுவின் மகனாகிய அர்ச்சுனன் பணி செய்து, வேண்டிய வரங்களைப் பெற்றான் என்பதும், இப்பதிகத்தின் எட்டாவது பாடலில் காணப்படுகிறது. விசயனாகிய அர்ச்சுனன் பூசித்துப் பேறு பெற்றமையால் இப்பேர் பெற்றது. அப்பாடல் காண்க.

பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டும் நல்வரம் கொள்விச யமங்கை
ஆண்டவன் அடியே நினைந்து ஆசையால்
காண்ட லேகருத் தாகி யிருப்பனே -தி.5 ப.71 பா.8

வந்து கேண்மின்:

மக்களைப் பல கோணங்களில் அழைத்து அறம் உரைக்கும் திறன் அப்பர் வாழ்வில் அளப்பிலவாம். ''மனிதர்காள் இங்கே வம் ஒன்று சொல்லுகேன்'' ''நம்புவீர் இது கேண்மின்கள்'' ''பாருளீர் இது கேண்மின்'' போன்றன சில எடுத்துக்காட்டுக்கள்.

இந்த அமைப்பில் விசயமங்கையிலும் ஓர் அழைப்பு விடுக்கிறார். வந்து கேண்மின், மயல் தீர் மனிதர்காள் என்று அழைக்கிறார். விசயமங்கையில் உள்ள நம் எளிய தலைவன், நமது சிந்தையில் நினைவார்களைச் சிக்கெனப் பிடித்து, தன் பந்துவாக்கி, உய்யக்கொள்வான் என்கிறார். அப்பாடல்:

வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து ஆக்கி உயக்கொளும் காண்மினே -தி.5 ப.71பா.9

உள்ளங்கை - நெல்லிக்கனி:

உள்ளங்கை நெல்லிக்கனி என்பது தமிழ்நாட்டுப் *பழமொழி*களுள் ஒன்று. தப்பாமல் கிடைத்தே தீரும் என்பதற்கு இப்பழமொழி கூறப்படுகிறது. *புறநானூறு*ம் ''கையகத்தது அது பொய் ஆகாதே'' எனக்கூறுகிறது. ''சிற்றம்பலத்தனைத் தலையால் வணங்குவார் தலையானார்களே'' (தி.1 ப.80 பா.7) என்பதும் இக்கருத்தே பற்றியது.

''தலையால் வணங்குவார் தலையாவார்களே'' என்று எதிர்காலத்தால் கூறவேண்டும். உறுதிபற்றி இறந்த காலத்தாற் கூறினார் ஞானசம்பந்தர். அதைப்போல் மையலுற்று மறந்துவிடாமல் நினைப்பவர்க்கெல்லாம் நிச்சயமாக கையில் ஆமலகக்கனி ஒக்குமே

Koviloor Digital Library

என்று அருளியுள்ளார் அப்பர். ஆமலகக்கனி - அருநெல்லிக்கனி. அப் பாடலைக் காண்போம்.

செய்ய மேனியன், தேனொடு பால்தயிர்
நெய்அது ஆடிய நீலக் குடிஅரன்
மையல் ஆய்மற வாமனத் தார்க்குளலாம்
கையில் ஆமல கக்கனி ஒக்குமே. -தி.5 ப.72 பா.2

மையல் -அன்பு.

கல்லினோடு – எனைப் – பூட்டி:

கல்துணைப்பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் என்பது எதிர்காலத்தின் குறிப்பு. எனவே கல்லுடன் இணைத்துக் கடலில் இடவில்லை என்பர் சிலர். அக்கூற்றை அடியோடு அகற்றுதற்கு இதோ ஓர் அகச்சான்று கூறுகிறார் அப்பர் தம் பாடலில்.

கல்லி னோடுஎனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்களன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேன்அன்றே. -தி.5 ப.72 பா.7

திருமங்கலக்குடி:

இத்தலம, ஒரு சுமங்கலியின் மங்கல நாண் காத்து மங்கலம் வழங்கியமையால் திருமங்கலக்குடி எனப்பெயர் பெற்றது. சூரியனார் கோயிலில் உள்ள நவக்கிரகங்கட்கு அருள் செய்த பெருமான் இத்தல்த்து இறைவனே. இவரை வணங்கிய பின்னரே சூரியனார் கோயிலை வணங்குதல் முறையாகும். அதுவே பலன்பெறும் வழியுமாகும். இத்தலம் செழுமையானது. செல்வவளம் நிறைந்தது. சிவவேதியர்கள் சிவ நியமத்துடன் வழிபாடு நிகழ்த்துபவர்கள். அவர்களை செல்வமல்கு செழுமறையோர் என்கிறார் அப்பர். மறையோர் தொழுமாறு சிவபெருமான் தேவியோடும் விளங்கும் கோயில் என்கிறார். அப்பாடல் காண்க.

செல்வம் மல்கு திருமங் கலக்குடி
செல்வம் மல்கு சிவநிய மத்தராய்
செல்வம் மல்கு செழுமறை யோர்தொழச்
செல்வன் தேவியொ டும்திகழ் கோயிலே. -தி.5 ப.73 பா.5

ஊர்தொறும் எறும்பியூர் ஈசன்:

பல ஊர்களிலும் பல கோயில்கள் உள்ளன. அங்குள்ள திருவுருவங்களில் இருந்து அருள் செய்பவன் ஒருவனே. அவ்வீசன் எறும்பியூரில் இருப்பவனே என்கிறார் அப்பர். இது கடவுள் ஒருவரே

Koviloor Digital Library

என்ற தத்துவத்தை இனிதாக விளக்குகிறது. மேலும், பல தலத்தும் கயிலாய நாதனையே காணலாமே என்பது அப்பர் அருள்மொழி. பேரும், ஊரும், உருவமும் பலவாயினும் அதனுள் இருந்து அருள்புரியும் இறைவன் ஒருவனே என்ற தத்துவ உண்மையை இப்பாடல்கள் வலியுறுத்துகின்றன.

''வான் உறும் பொன்மால்வரைப் பேதையொடு ஊர்தொறும்
எறும்பியூர் மலையான், எங்கள் ஈசனே'' -தி.5 ப.74 பா.5

என்பது அப்பர் கூறும் எடுத்துக்காட்டு.

மேலும் இன்பமும் பிறப்பும், துன்பமும் இறப்பும் உடனே வைத்த சோதி வடிவினன் எறும்பியூர் இறைவன் என்றவர், அன்பனே அரனே என்று அரற்றுவார்க்கு இன்பனாவன் என்கிறார். இறை உணர்வுடன் இறைவன் நாமத்தைச் சொன்னால் துன்பம் தோன்றாது இன்பமே தோன்றும் என்று அனுபவம் கூறுகிறார். அப்பாடலைக் காண்போம்.

இன்ப மும்பிறப் பும்,இறப் பி(ன்)னொடு,
துன்ப மும்உட னேவைத்த சோதியான்
அன்ப னேஅர னேஎன்று அரற்றுவார்க்கு
இன்பன் ஆகும் எறும்பியூர் ஈசனே -தி.5 ப.74 பா.8

மேலும் இப்பாடற் கருத்து துன்பத்தைக் கண்டு துவளக்கூடாது. துன்பம் தான் நம்மிடம் உள்ள அழுக்கைப் போக்கித் தூய்மை செய்வது. நாம் தூய்மை அடைய அடைய இன்பமே எந்நாளும் பெறலாம்.

அப்பனார் உளர் அஞ்சுவது ஏன்:

ஒழுங்காகச் சிவநெறி பற்றி நின்றால் எந்த இடர்ப்பாடும் நம்மை ஒன்றும் செய்யாது. பிராரத்த வினை வழிப் பல இன்னல்கள் வந்தாலும் அவை உடல் ஊழாய்க் கழியுமே தவிர உயிரைப் பாதிக்காது. மலையே வந்து விழினும் மனிதர்களே அஞ்சாதீர். கொலைசெய் யானையாயினும் அடியவரை ஒன்றும் செய்யாது என்பதையும் தம் அனுபவ வாயிலாக அறிவிக்கின்றார். வானம் மழை பொழியாது பஞ்சம் ஏற்படினும், பூகம்பம் ஏற்படினும் பெருவேந்தர்கள் பலர் சேர்ந்து சீறினாலும் சேறைச் செந்நெறி அப்பனாரை உறுதியாகப் பற்றிவிட்டால் அவர் நம்மைக் காப்பார். அஞ்சவேண்டாம் என அபயம் தருகிறார். அப்பாடல் காண்க

தப்பி வானம், தரணிகம் பிக்கில்என்?
ஒப்புஇல் வேந்தர் ஒருங்குஉடன் சீறில்என்?
செப்பம் ஆம்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னார்உளர்; அஞ்சுவது என்னுக்கே? -தி.5 ப.77 பா.6

Koviloor Digital Library

புள்ளிருக்கு வேளூர் அரன்:

இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமான் பவரோக வைத்திய நாதன். பவம் - பிறப்பு பிறவி நோயைத் தீர்ப்பவர். எனவே உடல்நோய்களையும் தீர்ப்பவர் என்பதைச் சொல்ல வேண்டிய தில்லை. இப்பெருமானை நினையாதவர் நரகு எய்துவர் என்கிறார். கூற்றுவனின் சீற்றம் தேய்த்து அருளும் வேளூர்ப் பெருமானை நினைந்து உருகுவோர் உள்ளம் குளிரும். பிறவித் துன்பம் இல்லை. இன்பம் பெருகும். பாவம் பறையும். பெருமானை மெல்ல உள்க வினை கெடும். எல்லாவிதத் துன்பங்களையும் போக்கி, எல்லாவற்றிற்கும் மேலான மோட்சத்தை இவனன்றி யாரும் வழங்க இயலாது என்பதாலேயே வள்ளல் என்ற பெயர் இவரையே சாரும். வள்ளல் பாதம் வணங்கித் தொழுதால் இகத்தில் எல்லா நலன்களும் பெற்று பரத்தில் வீடு பேறு அடையலாம் எனக் குறிப்பிடுகிறார். அப்பாடல்:

உள்ளம் உள்கி உகந்து, சிவன்என்று
மெள்ள உள்க வினைகெடும்; மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே! -தி.5 ப.79 பா.8

வானோர் வலம் கொள்வர்:

அன்பில் ஆலந்துறையில் எழுந்தருளியிருக்கும் பெருமானை வலம் வந்து வழிபடுவோரை வானோர் வலம் செய்து வழிபடுவர் என்கிறார் அப்பர். உண்மைத் தொண்டர்களை உலகம் போற்றுகிறது. அதுபோல் நல்ல உள்ளத்துடன் ஆர்வத்தை உள்ளே வைத்து வழிபடுவோரைத் தேவரும் வழிபடுவது இறையருளால் நிகழ்வது. அப்பர் நாலாந் திருமுறையிலும் இக்கருத்தை ''தன்னைத், தொழப் படும் தேவர் தம்மால் தொழுவிக்கும் தன் தொண்டரையே'' என்று குறிப்பிட்டுள்ளமையை ஒப்புநோக்கி மகிழலாம்.

இலங்கை வேந்தன் இருபது தோள்இற்று
மலங்க மாமலை மேல்விரல் வைத்தவன்
அலங்கல் எம்பிரான், அன்பில் ஆலந்துறை
வலம்கொள் வாரைவா னோர்வலம் கொள்வரே. -தி.5 ப.80 பா.10

கைகண்ட யோகம்:

நன்று நகு நாண்மலரால் நல் இருக்கு மந்திரம் கொண்டு ஒன்றி வழிபாடு செய்வாரை உயர்கதிக்கு ஏற்றுபவன் சிவன். இது ஞான சம்பந்தர் வாக்கு. அப்பரும் அதே கருத்தைப் பாண்டிக்கொடுமுடித் திருக்குறுந்தொகைப் பாடலில் குறிப்பிடுகிறார். வானவர்கள் எல்லாம் நெருங்கி வந்து பாண்டிக்கொடுமுடி ஈசனை இருக்கு வேத மந்திரம்

Koviloor Digital Library

கொண்டு வழிபடுகின்றனர். அப்பெருமானை ஏழை அடியார்கள் திருக்கொடுமுடி என்று சொன்னவுடனேயே தீய வினைகளும் பிறவிக்கு ஏதுவாகிய கருவும் கெடும் என்கிறார். தீவினை கெடும் எனவே நல்வினையும் கெடும் என்பது பெற்றாம். இருவினையும் பிறவிக்கு வித்தாம். இருவினை அற்றால் பிறவிக்கு ஏதுவாகிய கருக்கெடும் என்று அருளியுள்ளார். இது கைகண்ட யோகம் என்றும் வலியுறுத்திக் கூறுகிறார்.

நெருக்கி அம்முடி நின்றுஇசை வானவர்
இருக்கொ டும்பணிந்து ஏத்த இருந்தவன்
திருக்கொ டுமுடி என்றலும் தீவினைக்
கருக்கெ டும்இது கைகண்ட யோகமே. - தி.5 ப.81 பா.5.

வான்மியூர் ஈசன் வண்மை:

வான்மியூர் ஈசன் அடிதொழுவார் செய்த பாவம் பறைந்திடும். ஆதியே என்று தொழுவாரது மருளை அறுத்திடும்: எந்தை ஈசன் என்று ஏத்துவார் முன் வந்து நிற்பன் வான்மியூர் ஈசன், ஆனால் உள்ளம் உள்கலந்து ஏத்துவார்க்கே இப்படி அருள்செய்வான். கள்ளம் உள்ளவர்க்குக் கசிவான் அல்லன். எல்லா நலன்களும் அருளும் வள்ளலாய் இருந்தும் வஞ்சகருக்கு அருள்செய்யான் என்றும் குறிப்பிடுகின்றார். தொழுதெழுவார் வினை மடங்க நின்றிடும். ''அஞ்சி நாண்மலர் தூவி அழுவாரானால் நம் உள்ளத்தில் பெருமானை நினைக்க வொட்டாமல் தடை செய்கின்ற வஞ்சனையையே தீர்த்து அருள் செய்பவர். பாதிப்பெண்ணுருவாய பரமனே என்று ஓதி உள்குழைந்து ஏத்த வல்லவர்களின் வாதைகளைத் தீர்த்திடுவார் வான்மியூர் ஈசன். வாட்டம் தீர்த்திடுவார். கயிலை மலையை எடுத்த இராவணனே ஆர்வமாக அழைத்துத் துதித்தலும் பெருமான் வாரமாய் வரம் அருளினன் என்கிறார். அப்பதிகத்தின் ஒரு பாடல் காண்போம்.

உள்ளம் உள்கலந்து ஏத்தவல் லார்க்குஅலால்
கள்ளம் உள்ளவ ழிக்கசி வான்அலன்
வெள்ள மும்அர வும்விர வும்சடை
வள்ளல் ஆகிய வான்மியூர் ஈசனே. -தி.5 ப.82 பா.4

வாழ்த்தலே வாழ்வாம்:

எல்லா நலங்களையும் வழங்குபவன் ஈசன் ஒருவனே. மற்றையோர் ஒவ்வொன்றையே கொடுக்க இயலும். அதனால்தான் சிவபெருமானை வள்ளல் என்று நமது சமயாசாரியர்கள் கூறிப்போந்தனர். இங்கும் அப்பர் திருமணஞ்சேரி வள்ளலை வாழ்த்துவதே வாழ்வாவது என்று அருளுகிறார். நமது வாழ்விற்கே

Koviloor Digital Library

முதலாக இருப்பவர் அவராதலின் அவரை வாழ்த்தாத வாழ்வு வாழ்வாகாது. அதனால்தான் மணிவாசகரும் திருப்பள்ளியெழுச்சி முதல் பாடலில் ''போற்றி என்வாழ்முதலாகிய பொருளே'' என்று போற்றினார். அதனையே வேறு ஒருவகையில் அப்பர் போற்றுகிறார்.

துள்ளு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்கரந் தார்சடை மேல்அவர்
அள்ளல் ஆர்வயல் சூழ் மணஞ் சேரிஎம்
வள்ள லார்கழல் வாழ்த்தல்வாழ்வு ஆவதே. -தி.5 ப.87 பா.5

மேலும் ஞானசம்பந்தர் அருளிய ''தோடுடைய செவியன்'' என்ற பதிகத்தில் மூன்றாம் பாடலின் (தி.1 ப.1 பா.3) சொற்றொடர் அமைந்த பாடல் ஒன்றும் இப்பதிகத்தில் காணலாம்.

நீர் பரந்த நிமிர்புன் சடையின்மேல்
ஊர் பரந்த உரகம் அணிபவர்
சீர் பரந்த திருமணஞ் சேரியார்
ஏர் பரந்துஅங்கு இலங்கு சூலத்தரே. -தி.5 ப.87 பா.6

ஈசன் இணையடி:

மாசில் வீணை காதிற்கு இன்பம். மாலை மதியம் கண்ணிற்கின்பம். வீசு தென்றல் மூக்கிற்கு நறுமணம் சேர்த்து இன்பம் நல்கும். வண்டு அறை பொய்கை நாவிற்கு இன்பம். (நீரினால்) இளவேனில் மெய் உடலுக்கு இன்பம். இவ்வாறு ஐம்பொறிகளாகிய மெய்,வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளின் வாயிலாக சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புல இன்பம் நுகர்தல் உலகியல். இதேபோன்று பொறி புலன் இன்றி உயிர் நேரே அனுபவிக்கும் இன்பமே இறையின்பம். சிற்றின்பம் சிறுகாலை இன்பம். பேரின்பம் - என்றும் மாறுபாடு இல்லாது நிலைத்திருப்பது. அதற்கு உலகியல் சிற்றின்பங்களைக் காட்டித்தான் சாதாரண மக்கட்கு இறை இன்பத்தை உணர்த்த இயலும். அந்தமுறையில் அப்பர் நீற்றறையில் தாம் அனுபவித்த இறையின்பத்தை உலகியலோடு இணைத்துச் சுவைபட அருளியுள்ளமை அறிந்து இன்புறத்தக்கது. அப்பாடல் வருமாறு.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. -தி.5 ப.90 பா.1

நமச்சிவாயவே:

மாசில் வீணை என்ற பதிகத்தின் இரண்டாம் பாடலில்

Koviloor Digital Library

நமச்சிவாய என்னும் தூல பஞ்சாட்சரத்தின் பெருமை பேசுகின்றார். நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்தை முறையாக ஓதினால் அதுவே அவனை நன்னெறிக்கண் கொண்டு செலுத்தும் என்கிறார். ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும் இப்பஞ்சாக்கரத்தை ஓதினால் அதுவே கல்வியைத் தரும். அதன்வாயிலாகக் கலைஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் தரும். மந்திர சாத்திர வித்தையும் கைவரும். எல்லாம் ஐந்தெழுத்தை இடைவிடாது ஓதுவதால் கிடைக்கும். நல்ல நெறியும், அதனால் வீடுபேறும் கிடைக்கும் என்கிறார்.

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நான்அறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. -தி.5 ப.90 பா.2

விறகில் தீயினன்:

இறைவன் எங்கு இருக்கிறான்? எப்படிக் காண்பது?என்று வினவுவார்க்கு அப்பர் எளிமையாக ஒரு வழி காட்டுகிறார். விறகில் தீ இருப்பது போலவும், பாலில் நெய் இருப்பது போலவும், மணியில் ஒளி இருப்பது போலவும் இறைவன் மறைந்திருக்கிறான். ஆனால் சோதி வடிவாய் இருக்கிறான். அதிலும் மணிச்சோதியாய் மாமணிச்சோதியாய் உள்ளான்.

அப்படியிருந்தும் நம்கண்ணுக்குத் தெரியவில்லையே என்பார் சிலர். குருட்டுக் கண்ணுக்கு உலகியல் பொருள் தெரியாது அதுபோல அறியாமை நிரம்பிய நம்மனோருக்கு அச்சோதி புலப்படாது. நமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவாகிய கோலை நட்டு, உணர்வாகிய கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன்னின்றருளுவான் என்கிறார். அப்பர். முறுகக் கடைய விறகில் தீ தோன்றும். வாங்கிக் கடைய பாலில் நெய் தோன்றும். கடைய மணியில் ஒளி தோன்றும். எனவே பக்தியுடன் உறவுடன் முறுக வாங்கிக் கடைந்து இறைவனைக்கண்டு இன்புறுவோமாக. அப்பாடல்:

விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. -தி.5 ப.90 பா.10

புழுவுக்கும் குணம் நான்கு:

புழுவுக்குக் குணம் நான்காவன. உணவின் பொருட்டு முயலுதல், உண்டல், உறங்கல், இன்பத் துன்ப நுகர்வு. இந்நான்கும் எனக்கும் உள்ளன. இங்கு எனக்குள்ள பொல்லாங்கு புழுவுக்கு இல்லை. எனவே புழுவிலும் கடைப்பட்டவனாகிய நான் தூயனாகிய

Koviloor Digital Library

பெருமானது அடியார்களுடன்கூடிவாழ எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று வினவுகிறார்.

என்னை ஏதும் அறிந்திலன்:

காரிட்ட ஆணவக் கருவறையில் கண்ணிலாக் குழவியைப் போல் இருந்த உயிர்களை இறைவன் தயா என்னும் மூல தர்மத்தின் வழியே பிறவிக்குக் கொண்டுவந்த பிறகே ஒவ்வொன்றையும் உணர்கிறோம். இப்படி வாராத வழியில் நாம் ஒன்றையும் உணரும் வாய்ப்பில்லை.

பெருமான் பிறவியைக் கொடுத்துப் பிறவியை அறுக்கிறார். அவ்விறைவன் நமக்குப் பிறவி கருணையினால் கொடாதபோது அவனை நாம் எப்படி அறிவோம். இதனைத்தான் அப்பர், ''என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான், அந்நிலையில் அவனையும் நான் அறிந்திலன்'' எனகிறார். எனக்கு உடல் முதலிய கருவி கரணங்களைக் கொடுத்து அறியச் செய்தபொழுது அவனை நான் அறியமுடிகிறது என்றார். இதனையே பின் இரண்டடிகளில் ''இறைவன் என்னைத்தன் அடியான்'' என்று அறிதலும் அவனை நானும் பிரான் - தலைவன் எனக்குப் பிரியமானவன் என்று அறிந்தேன் என்கிறார். அப்பாடல்:

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்அடி யான்என்று அறிதலும்
தன்னை நானும் பிரான்என்று அறிந்தெனே. -தி.5 ப.91 பா.8.

கால பாசத் திருக்குறுந்தொகை:

சிவனடியார்களிடத்து இயமனோ அவன் தூதுவர்களோ தொடரக்கூடாது என்பது இறைவன் ஆணை. அவ்வாணையைச் செருக்கினால் கடந்தான் இயமன். அதனால் இறைவன் காலினால் காலனைக் காய்ந்தான் மார்க்கண்டேயறகாக. இதனை எல்லோரும் நன்கு உணருமாறு அப்பர் பெருமான் ''காலபாசத் திருக்குறுந்தொகை'' என்று ஒரு பதிகமே அருளிச் செய்துள்ளார்.

கொடுகொட்டி தாளம் கைக்கொண்ட இறைத்தொண்டர்களை நெருங்காதீர் என்றும், இடுக்கண் செய்யப்பெறீர் என்றும், சிவன் என்று அரற்றுவாரை நீங்கள் சாரப்பெறீர் என்றும், நிறைய நீறணிவார் எதிர் செல்லலே என்றும், சாந்தமும் ஏமமும் புனைவார் எதிர்செல்லலே என்றும், ஐந்தெழுத்தில் ஒரு எழுத்தைச் சொல்வாரிடத்தும் சாராதே என்றும், சாராததோடு அடியார்களைப் போற்றிச் செல்மின்கள் என்றும் நமன் தூதுவர்க்கு அறக் கட்டளையிடுகின்றார் அப்பர். அப்பாடல்களில் ஒன்று காண்போம்.

Koviloor Digital Library

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நமது ஈசன் அடியரை
விடைகொள் ஊர்தியி னான்அடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே. -தி.5 ப.92 பா.7

ஈசன் என்னை அறிந்தது:

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்,
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலன்,
என்னைத் தன்அடி யான்என்று அறிதலும்,
தன்னை நானும் பிரான்என்று அறிந்தெனே. -தி.5 ப.9 பா.8

என்ற பாடற்கருத்தை ஒட்டிய பாடல் ஒன்று மறக்கிற்பனே என்னும் மகுடம் உடைய திருப்பதிகத்தில் வருவது சிந்திக்கத்தக்கது. அப்பாடல் காண்க.

ஈசன் என்னை அறிந்தது அறிந்தனன்
ஈசன் சேவடி ஏற்றப் பெறுதலால்
ஈசன் சேவடி ஏத்தப்பெற் றேன்இனி
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே. -தி.5 ப.93 பா.3

இங்குற்றேன்:

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை, திருமாலும் பிரமனும் தாமே தலைவர் என்ற செருக்கித் தருக்கியபோது சிவபெருமான் சோதிப்பிழம்பாய்த் தோன்றினான். அத்தோற்றமே சிவலிங்க வடிவம். அப்பெருமானைப் பொய்யும் பொக்கமும்(வஞ்சகம்) போக்கிப் புகழ்ந்திலர். எருக்கங்கண்ணி கொண்ட இண்டை புனைந்திலர். இவர்கள் எப்படி இறைவனைக் காண்பர். காணகில்லார். இந்த வரலாற்றை இப்பதிக இறுதிப்பாடலில் தெளிய விளக்கியருள்கிறார் அப்பர்.

செங்க ணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேன்என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே. -தி.5 ப.95 பா.11

சித்தத் திருக்குறுந்தொகை:

இப்பதிகம் முப்பது பாடல்களைக் கொண்டுள்ளது. சித்தத்துள்ளே சிவபெருமானைச் சிந்திக்கும் திறம் கூறுவது. இப்பதிகம் சிந்திப்பார் மனத்தால் என்று தொடங்குவதால் இப்பெயர் பெற்றது.

இதனுள் அகரம் முதல் ஔகாரம் வரை 12 உயிரெழுத்துக் களும் 2ஆம் பாடல் முதல், பாடலின் முதல் எழுத்தாகத் தொடங்கு கிறது. பிறகு ககரம் முதலிய 14 மெய்யெழுத்துக்களையும்

Koviloor Digital Library

முதலெழுத்தாக வைத்து இத்திருப்பதிகத்தைப் பாடி உள்ளார்.

இதில் ஒரு பாடல் பரஞ்சுடர் பாதிப்பெண்ணுருவானவன் என்பதை அறிவிக்கிறது. *கந்தபுராணத்துள் அசுரகாண்டத்* தொடக்கத்தில் உள்ள கடவுள் வணக்கப் பாடல் ''ஊரிலான்'' எனத் தொடங்குகிறது. அதைப் போலவே இங்கு அப்பர் ஒரு பாடல் பாடியுள்ளார்.

ஊர்இ லாய்ஒன்று ஒன்றாக உரைப்பதுஓர்
பேரி லாய்பிறை சூடிய பிஞ்ஞகா
கார்உ லாம்கண்ட னேஉன் கழலடி
சேர்வு இலார்கட்குத் தீயவை தீயவே. -தி.5 ப.97 பா.7

இப்பாடலுக்கு ஒப்பான *கந்தபுராணப்*பாடலும் காண்க.

ஊரி லான்குணம் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரி லான்ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரி லான்உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.

-கந்தபுராணம் அசுர. பா.1

குரங்காடுதுறை:

திருவையாற்றிற்குக் கிழக்கே பத்து கிலோ மீட்டர் தூரத்தில் காவிரியின் வடகரையில் இருப்பது வடகுரங்காடுதுறை. இது வாலியால் பூசிக்கப்பெற்ற பாடல்பெற்ற தலம். கும்பகோணத்திற்குக் கிழக்கே ஏழு கிலோ மீட்டர் தொலைவில் காவிரியின் தென்கரையில் இருப்பது சுக்ரீவனால் பூசிக்கப்பட்ட தென்குரங்காடுதுறை. இத்தலத்து எழுந்தருளியுள்ள இறைவன் மணவனாக, கணவனாக, எண் குணவனாக, அன்புடை அடியார்கட்கு அணவனாக உள்ளமையை இத்தலப் பதிகப்பாடல் ஒன்றில் அப்பர் குறிப்பிடுகிறார்.

கணவன்:

சிவம் என்ற சொல்லிற்கு மங்கலம் என்பது பொருள். இறவாமல் பிறவாமல் அமங்கலம் இன்றி என்றும் ஒரே பெற்றியனாய் இருப்பவன் சிவபெருமான் ஒருவனே. மனித்த வாழ்வில் மங்கலம், அமங்கலம் இரண்டும் கலந்தே வரும். '' குறைவில் மங்கலக் குணத்தனாகலின் சிவம் என்றனர்'' பெரியோர்.

நமக்குரிய மணவன் என்பதெல்லாம் உபசாரமே. உண்மை இல்லை. உண்மை மணவன் மகேச்சுவரனேயாவான். மணவன் என்ற சொல்லும் திருமுறையிலும், மற்ற இலக்கியங்களிலும் அரிய பிரயோகமாகும். நம்பெருமான் என்றும் மணவனாயிருக்கிறான். மலைமகளின் நெடுமங்கலக் கணவனாயிருக்கிறான். நெடுமங்கலம்

Koviloor Digital Library

என்பது என்றும் அம்மையப்பர் மங்கலமாகவே இருக்கின்றனர் என்பதைக் காட்டுகிறது.

கலைஞானிகள் காதலுடன் - விருப்பத்துடன் ஒன்றாயிருக்கிற பெருமானை எட்டாகப் பிரித்துப் பெரும்பயன் காண்கின்றனர். எண்குணவன் என்கிறார் அப்பர். திருவள்ளுவரும் கலைஞானி யல்லவா?. அவர் இறைவனை எண்குணத்தான் என்கிறார்.

எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேராற்றல் உடைமை, பேரின்பம் உடைமை, பேரருள் உடைமை என்பன. எண் குணத்தானை வணங்காத் தலை பயனற்றது என்கிறார் வள்ளுவர். சிலருக்குக் கண் இருந்தும் குருடாய், காதிருந்தும் செவிடாய்ப் பயன்படாதவாறுபோல தலையிருந்தும் எண்குணத்திறைவனை வணங்கவில்லையானால் அத்தலை பயனற்றது என்கிறார். இங்ஙனம் மணவனாய், கணவனாய், குணவனாய் இருக்கும் இறைவன் குரங்காடுதுறையில் அன்புடை அடியவர்கட்கு அணியனாய் அருள்புரிகிறான் என்று பாடியுள்ளார். அப்பாடல் காண்க.

மணவன் காண்மலை யாள்நெடு மங்கலக்
கணவன் காண்கலை ஞானிகள் காதல்எண்
குணவன் காண்குரங் காடு துறைதனில்
அணவன் காண்அன்பு செய்யும் அடியர்க்கே. -தி.5 ப.63 பா.4

கண் - அவன். கணவன். மனைவிக்குக் கண்ணாக இருப்பவன் என்ற பொருளில் கணவன் என்ற சொல் வழங்கி வருகிறது. உடல் உறுப்புக்களுள்ளே கண்தான் மிகச் சிறந்த உறுப்பு. கருவிலும் முதலில் தோன்றும் உறுப்பு கண்ணே என்று மருத்துவர்களும் குறிக்கின்றனர். கண்ணைக் கொண்டே ஒருவரின் தகுதியைக் கண்டுபிடிக்கலாம். இதுபற்றியே *கோவை* நூலும், கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே.. என்று கூறுகிறது. அப்பரோ, மற்றோரிடத்திலும் கணவன் என்ற சொல்லைக் காட்டியுள்ளார். திருச்சத்திமுற்றத் திருவிருத்தத்தில். ''வில்நேர் புருவத்து உமையாள் கணவா விடிற்கெடுவேன்'' என்பது அவர் திருவாக்கு.

ஙகரவெல் கொடியான்:

ஙகர இனப் பதின்மூன்றெழுத்துள் ங என்னும் உயிர்மெய் யெழுத்தும், ங் என்ற மெய்யெழுத்தும் மட்டுமே மொழியில் பயின்று வருவன. ங இனத்தில் மற்ற ஙா, ஙி முதலிய எழுத்துக்கள் மொழியில் வருவதில்லை. இருப்பினும் ங என்ற எழுத்துடன் மற்ற 11 எழுத்துக்களும் சுவடியில் வாழ்ந்து வருகின்றன. அதைப் போல்

Koviloor Digital Library

மக்களும் சுற்றத்தாரைத் தழுவி வாழவேண்டும் என்பதற்கு ஔவையார் இந்த ஙகரத்தை உதாரணமாகக் காட்டுகிறார். ''ஙப் போல்வளை'' என்பது ஔவையின் ஆத்திசூடி. ஙகரம் எப்படி அதனுடன் உள்ள மற்ற 11 எழுத்துக்களும் மொழி வளர்ச்சிக்குப் பயன்படாவிட்டாலும் அவற்றை உடன் வைத்துப் போற்றுகிறதோ அதைப் போலவே திறன் உடைய ஒருவன் திறன் இல்லாத சுற்றத்தாரையும் உடன் வைத்துப் போற்ற வேண்டும் என்பதற்கு இவ்வுதாரணத்தைக் காட்டியுள்ளார்.

இச் சித்தத்திருக்குறுந்தொகையில் ஙகரத்தை முதலாக வைத்துத் தொடங்கும் பாடலில் ''ஙகர வெல்கொடியான்'' என்று தொடங்குகிறார். இடபம் காலை மடக்கிப் படுத்திருக்கும் போது ங போன்று இருப்பதை உணர்ந்து நமக்கும் அறிவிக்கின்றார். மேலும் அற உருவாகிய இடபம் இல்லாதார்க்கு உதவும் குறிப்பினது என்பதையும் உணர்த்துகிறார். 'நல்ல நெஞ்சமே நீ ஙகரம் போன்ற இடபத்தைக் கொடியாகக் கொண்ட சிவபெருமானை உய்வதற்குரியவனாகக் கொள்வாயானால் அதுவே உனக்குச் சிறந்த புகலிடமாகும். அச்சிவன் மகரவெல்கொடியானாகிய மன்மதனைக் காய்ந்தவன். காய்ந்தவனைப் புகலாகக் கொள்வதே உன் உய்விற்கும் உயர்விற்கும் சிறந்தவழி' என்கின்றார். அப்பாடல் காண்க.

ஙகரவெல்கொடியானொடு நன்னெஞ்சே
நுகர நீ உனைக் கொண்டுயப் போக்குறில்
மகர வெல்கொடி மைந்தனைக் காய்ந்தவன்
புகரில் சேவடி யேபுக லாகுமே. -தி.5 ப.97 பா.16

பாவமும் பழியும்:

பெரும்பாலான மக்கள் பாவம் செய்வதற்கு அஞ்சுவதில்லை, அதனால் வரும் பழிக்குத்தான் அஞ்சுகின்றனர். பாவநாசத் திருக்குறுந்தொகைப் பதிகத்து முதல் பாடலில் பாவமும், பழியும் பற்றற வேண்டுமானால் நம் காவலனாக உள்ள பெருமானை நினைமின்கள், நினையின் அருள்புரிவான் என்கிறார். மற்றப் பாடல்களில் இறையுணர்வில்லாது சடங்காகச் செய்யும் தீர்த்தமாடல், வழிபாடு செய்தல், வேதம் ஓதல், குருக்களாய் உபதேசித்தல் முதலியன பயன்தராது என்கிறார். அவற்றுள் ஒருபாடல் காண்போம்.

கோடி தீர்த்தம் கலந்து குளித்துஅவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஒடு நீரினை ஒட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே. -தி.5 ப.99 பா.9

Koviloor Digital Library

எரி பெருக்குவர்:

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களும், சூரியன், சந்திரன், உயிர், என்பனவுமாகிய எட்டுப்பொருள்களும் இறைவனுக்கு உருவங்களாகும். இவ்வெட்டையும் அட்டமூர்த்தம் என்பர். அட்டமூர்த்தங்கள். இறைவனின் உடல்போல்வன. அவற்றுள் மூர்த்திமானாக விளங்குபவர் இறைவன். இதனைச் சரியாகப் புரிந்து கொள்ளாமலே எரிஓம்புகின்றனர் சிலர். அவர்கட்கு ஒரு நரியின் வரலாற்றை உதாரணமாகக் காட்டுகிறார் நாவுக்கரசர்.

ஒரு யானை காட்டில் இறந்து கிடந்தது. அதனைக் கொல்வதற்காக எய்த அம்பு அதன் பக்கத்தே கிடந்தது. இவற்றைப் பார்த்த நரி பெரும் பயனாகிய யானையை உணவாக உடனே கொள்ளாமல் அருகிலிருந்த அம்பிலும் வில்லிலும் ஒட்டியிருந்த தசையை முதலில் உணவாகக் கொள்ளக் கருதி வில்நரம்பைக் கடித்தது. நரம்பு அறுபட்ட நிலையில் வில் விசிறி அடித்தது, அதனால் நரியின் வாய் கிழிந்து இறந்துபட்டது.

இதைப்போல் பெரும்பயனாகிய இறைநெறி உணர்ந்து இன்புறாது அக்கினியைப் பார்க்கிறார்களே தவிர அதனுள் இருக்கும் இறையை உணர்கிலர் எரிபெருக்கும் மாந்தர் என்று இரங்குகிறார். அப்பாடல்:

எரிபெ ருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவ ருக்கம தாவது உணர்கிலார்
அரிஅ யற்குஅரி யானை அயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே. -தி.5 ப.100 பா.7

கல்மனவர்:

இதைப் போன்றே சூரியனை வணங்குவோரும், சூரியனும் இறைவனது எட்டு உருவங்களுள் ஒன்று என்று உணர்ந்திலர். மேலும் சூரியன் உள்ளே உள்ள பேரொளிப் பொருளாகிய பெருமானை உணர்ந்திலர், மேம்போக்காக சூரியன் உருவத்தையே வணங்கி உட்பொருளை உணராமல் வீணாகின்றனர். அவர்கள் ஓதும் இருக்கு முதலிய வேதங்கள் எல்லாம் ஈசனையே தொழுகின்றன. இக்கருத்தை நினைந்து உய்திபெறாதவர் கல்மனவர் என்கிறார். அப்பாடல்:

அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரன் உருஅல்லனோ
இருக்கு நான்மறை ஈசனையே தொழும்
கருத்தி னைநினை யார்கல் மனவரே. -தி.5 ப.100 பா.8

Koviloor Digital Library

கயவக்கணம்:

கயவர் - கீழ்மக்கள். இவர்களைப் பற்றித் திருவள்ளுவர் இரண்டு *குறள்*களில் குறிப்பிடுகிறார். கயவர்கள் என்றால் அவர்கட்கென்று அடையாளங்கள் ஏதும் இல்லை. இருப்பதாக எண்ணி ஏமாந்துவிடாதீர்கள். அக்கயவர்களும் மக்களே போன்றிருப்பர் என்பதனை ''மக்களே போல்வர் கயவர்'' என்றும், மேலும், மக்களிலும் உயர்ந்த தேவர்களைப் போன்றும் இருப்பர், இதனைத்தான் ''தேவர் அனையர் கயவர்'' என்றும் கூறியுள்ளார்.

இவர்கள் இறைவனின் பெருந்தன்மையை உணரார்கள் என்று அறிவித்து இத்திருமுறையை அப்பர் நிறைவு செய்கிறார். இத்திரு முறைத் தொடக்கத்தில் அன்னம்பாலிக்கும் என்று முத்திப் பேற்றை விரும்பும் பெரியோர்களைப் பற்றி அறிவித்தார். இறுதியில் என்ன தான், பேரின்பம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குது அதை அனுபவிக்கச் சேரவாரும் ஜெகத்தீரே என்று அழைப்பு விடுத்தாலும், கயவர் என்றுமே வாரார். அதுகொண்டு பெருமான் அருள் இல்லை என்று மயங்காதீர் என்று அறிவுறுத்தி நிறைவ செய்கிறார். கயமை அகற்றி நயனைப் பற்றி நலமுடன் வாழ அருள்மிகு செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

கல் மனம் அகற்றி, நல் மனம் பெறுவோம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

பதிப்புரை

திருநாவுக கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன்.

- சேக்கிழார்

மலர்தலை உலகின்கண் மன்னிய இருளை அகற்றி, இலகொளி பரப்பி யாவையும் விளக்கும் பன்னிரு பகலவர்களைப்போல, மக்கள் அக இருள் போக்கும் அருமணிச் சுடர்களாய் இலங்குவன, பன்னிரு திருமுறைகள். அவற்றுள் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப் பெயர் பெறும். இவற்றை அருளிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் மூவர் முதலிகள் எனப் பெறுவர்.

பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் ஞானசம்பந்தர் அருளியன. நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் நாவுக்கரசர் அருளியன. ஏழாம் திருமுறை சுந்தரர் அருளியது.

தமிழ் மொழியில் அமைந்த வேதங்களாக இவை போற்றப்பெறும். வேதங்களில் நான்காவதாகிய அதர்வண வேதம் ஏனைய மூன்றனுள் அடங்கியிருத்தலால், வேதம் மூன்றே என *ஸ்மிருதிகள்* கூறும். அம்மூன்றனுள் நடுவில் உள்ளது *யசுர் வேதம்*. இவ்வேதத்தின் நடுவில் சதருத்ரீயத்தின் நடு நாயகமாகத் திருவைந்தெழுத்து விளங்குகின்றது.

மூவர் அருளிய தமிழ் வேதமாகிய தேவாரமும் மூன்று வேதங்களாக விளங்குவன. அப்பர் அருளிய திருமுறை மூன்றனுள், நடுவணதாகிய, *யசுர் வேதம்* போல விளங்கும் ஐந்தாம் திருமுறை, நூறு பதிகங்களைக் கொண்டது. அதன் நடுவே விளங்கும் திருப்பாலைத்துறைத் திருப்பதிகம் பதினொரு பாடல்களை உடையது. இத்திருப்பதிகத்தின் ஆறாவது திருப்பாடலில் முத்தி பஞ்சாக்ஷரம் போற்றப் பெற்றிருக்கின்றது எனப் பலரும் எடுத்துக்காட்டி, தேவாரத்

Koviloor Digital Library

திருமுறையைத் தமிழ் வேதம் என மொழியக் காணலாம்.

அத்திருப்பாடல்,

விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி வாயஎன்
றெண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே -தி.5 ப.51 பா.6

என்பதாகும்.

இனிமையும், எளிமையும் கருத்தாழமும் உடைய இத் திருமுறைப் பாடல்கள் பலராலும் பயிலப் பெறுபவை.

இத்திருமுறையில் 1015 பாடல்களைக் கொண்ட 100 பதிகங்கள் அடங்கியுள்ளன. 88 பதிகங்கள் தலங்களைப் பற்றியவை. 12 பதிகங்கள் பொதுவானவை.

அவை தனிக்குறுந்தொகை -3, காலபாசத் திருக்குறுந் தொகை-1, மறக்கிற்பனே என்னும் திருக்குறுந்தொகை-1, தொழற் பாலதே என்னும் திருக்குறுந்தொகை-1, இலிங்கபுராணத் திருக்குறுந் தொகை-1, மனத்தொகை-1, உள்ளத்தொகை-1, சித்தத்தொகை-1, பாவநாசத் திருக்குறுந்தொகை-1, ஆதிபுராணத் திருக்குறுந்தொகை-1 என்ற பெயர்களால் வழங்கப்பெறும்.

குறுந்தொகை என்பது யாப்பிற்குரிய பெயராகும். குறுகிய பாவினமாகிய கலிவிருத்த யாப்பில் இவை அமைந்துள்ளன.

இத்திருமுறையில் அற்புதத் திருப்பதிகங்களாக உள்ளவை:
-திருமறைக்காட்டில் மறைக்கதவம் திறக்கப் பாடியது,
-நீற்றறை குளிரப் பாடியது,
-வாய்மூருக்கு வரப்பணித்த இறைவரைப் பாடியது,
-பழை யாறை வடதளியில் சமணரால் மறைக்கப்பட்ட சிவலிங்கக் காட்சியைக் காணப் பாடியது,
ஆகியனவாம்.

இத்திருமுறையில் விளங்கும் காலபாசத் திருக்குறுந்தொகை மகா மிருத்யுஞ்சய மந்திரமாக விளங்குவது.

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை திருமால், பிரமர் அடி முடி தேடி அயர்த்துத் தொழுதபோது பெருமான் சிவலிங்கமாக

Koviloor Digital Library

வெளிப்பட்ட நிலையைத் தெரிவிப்பது.

தனித்திருக் குறுந்தொகையுள் 89ஆவது திருப்பதிகம் ஒன்று முதல் பத்து எண்கள் தொடர்ந்து வர இறைவன் புகழை எடுத்தியம்புகிறது. சித்தத்தொகை என்னும் 97ஆவது திருப்பதிகம், ஆத்திசூடிபோல, தமிழ் எழுத்தின் வரிசையமைப்பைப் பாடிய முப்பது பாடல்களைக் கொண்டுள்ளது.

இனிய எளிய சொற்களால் உயர் நெறிகளை மக்கட்கு உபதேசிக்கும் இத்திருமுறையை எல்லோரும் விரும்பிப் பயிலக் காணலாம்.

ஐய னேஅர னேயென் றரற்றினால்
உய்ய லாம்உல கத்தவர் பேணுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர்மாற் பேறரே. -தி.5 ப.60 பா.7

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே. -தி.5 ப.91 பா.6

நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. -தி.5 ப.42 பா.1

ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும்
ஓதி அஞ்செழுத் தும்உணர் வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர்மாற் பேறரே. -தி.5 ப.60 பா.1

பூவ னூர்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினும் செல்வர்கள் ஆவரே. -தி.5 ப.91 பா.6

உள்ளம் உள்கி உகந்து சிவனென்று
மெள்ள உள்க வினைகெடும் மெய்மையே

Koviloor Digital Library

புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே. -தி.5 ப.79 பா.8

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. -தி.5 ப.90 பா.7

என்பன போன்ற பாடல்கள் பலராலும் பலகாலும் ஓதப்பெறுபவை.

அடங்கன்முறையிலும், அப்பர் தேவாரப் பதிப்புக்களிலும் காணப் பெறாததும், நூலாசிரியர் உரையாசிரியர்களால் மேற்கோளாகக் கூறப்பெறுவதுமாகிய திருக்குறுந்தொகைப் பாடல் ஒன்று ஆய்வறிஞர்களால் கண்டு உணர்த்தப் பெற்றுள்ளது.

தாயுமானவர்,

''உன்னில்உன்னும் என்ற உறுமொழியால் என்இதயந்
தன்னில்உன்னிநன் னெறியைச் சாரும்நாள் எந்நாளோ''

எனக் கூறியுள்ளதையும், அருணந்தி சிவம் *இருபா இருபதில்*

''கோதில் அமுதக் குணப்பெருங் குன்ற
என்னில் ஆர்தலும் அகறலும் என்னைகொல்
உன்னில் உன்னி உனாவிடில் பெயர்குவம்
என்னும் அதுவே நின்னியல் பெனினே''

என்று கூறியதையும் நோக்க, பின்வரும் பாடல் திருக்குறுந்தொகையில் இடம் பெற்றிருந்ததை உணரலாம்.

இருபா இருபதில் மேற்கூறிய பாடல் வரிகளுக்கு அரிய உரை எழுதிய திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீமத் நமச்சிவாயத் தம்பிரான் சுவாமிகள் தாம் கூறிய உரைக்குப் பிரமாணமாக,

பன்னி லூறும் பழத்தினும் இன்சுவை
என்னி லூறி எனக்கே களிதரும்
உன்னி லுன்னுமுன் னாவிடில் விட்டிடும்
என்னில் ஈசன் இருந்த இயற்கையே.

என்ற 'தேவார'த்தில் கண்டுகொள்க என்று எழுதியுள்ளார்கள்.

Koviloor Digital Library

இப்பாட்டின் அமைப்பாலும் சிறப்பாலும் அப்பர் அருளிய குறுந் தொகைப் பாடல்களில் ஒன்றாக இப்பாடல் இருத்தல் வேண்டும் என ஆய்வு அறிஞர்கள் உணர்த்தியுள்ளனர்.

இத்தகைய பாடல்களின் தொகுப்பாய் இலங்கும் ஐந்தாம் திருமுறை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருளாணை வழியே தருமை ஆதீனப் புலவர் திரு. க. வச்சிரவேலு முதலியார் மேற் பார்வையில் ஆதீனப் புலவர்களாகிய டாக்டர். திரு. சொ. சிங்கார வேலன், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோர் எழுதிய பொழிப்புரை, குறிப்புரைகளோடு கூடியதாய் 1961 ஆவது ஆண்டு வெளியிடப்பெற்றது.

இதுபோது இவ்வைந்தாம் திருமுறை, சிதம்பரம் திரு. திருநாவுக்கரசுப் பிள்ளை, திருமதி சிவகாம சுந்தரி ஆகியோர் நன்கொடையால் ஒளியச்சில் வெளிவருகின்றது.

இத்திருமுறைப் பதிப்புக்களைச் செம்மையான முறையில் அச்சிட்டு வழங்கும் பொறுப்பைச் சென்னை-யாழ்ப்பாணம் காந்தளகம் உரிமையாளர், மறவன்புலவு திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் ஆர்வத்தோடும் பக்தி உணர்வோடும் ஏற்று நன்முறையில் நிறைவேற்றியுள்ளார்.

அன்பர்கள் ஓதி உணர்ந்து பயன் எய்துவார்களாக.

தருமை ஆதீனம்
10. 12. 1996

இங்ஙனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின்
உத்தரவுப்படி,
குமாரசாமித் தம்பிரான்
(காறுபாறு, ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்)

Koviloor Digital Library

உ

சிவமயம்

முதல் பதிப்பின் மதிப்புரை

எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ., பி. எல்.
ஆணையர். இந்து சமய அறநிலைய (ஆட்சித்) துறை சென்னை.

''சொற்குறுதி அப்பர் எனச் சொல்'' என்பது முதியோர் வாக்கு. அப்பரது அருள் மொழிகள் அனுபவம் வாய்ந்தவை. உலகத்தின் உண்மை உணர்வுகளைக்கண்டு அல்லலுற்று உய்ந்த பெருமான் இவர். எண்பத்தோராண்டு இவ்வுலகில் வாழ்ந்தார்.

சைவ சமயத்திற்கு இவர் ஆற்றிய தொண்டின் சிறப்பு அளவிடற்கரியது. இப்பெரியாரும் திருஞானசம்பந்தரும் வாழ்ந்து வந்த காலத்தில் சைவ சமய உண்மைகளை வெளிப்படச் சொல்லும் மடங்கள் அல்லது நூல்கள் இருந்தனவாகத் தெரியவில்லை. ஓரளவு பெயரளவில் வழிபாடும் நம்பிக்கையும் மட்டும் மக்களிடையே நிலவி இருத்தல் கூடும் என்று ஊகிக்கலாம். அவை பேரறிவு படைத்த அப்பர் பெருமானுக்கு ஆராய்ச்சி செய்தற்குத் தக்க துணையாக அமைய வில்லை.

எனவேதான் அவர் தம் அறிவினால் சமய உண்மைகளை ஆராயத்தொடங்கி, சமண சமய மடங்களுக்குச் சென்று அச்சமய நூல்களை ஆராய்ந்து, தாம்கண்ட உண்மைகளைப் பிறருக்கு எடுத்துச் சொல்லி, சமணசமயத்தை வளர்க்கலானார். ஆகவே தருமசேனர் எனப் பட்டமும் பெற்றார்.

இந்நிலையில் அவரது தமக்கையார் திலகவதி அம்மையார் இறைவனிடத்தில் முறையிட, திருவதிகைப் பெருமான் சூலை நோயைத் திருநாவுக்கரசர்பால் ஏவி, தேவாரமாகிய தமிழ் மந்திரத்தால் அது நீக்கப்பெற்றது. அன்றே தாம் பெற்ற அநுபவத்தின் பயனாக இப் பெரியார் மீண்டும் சைவ சமயமே உயர்வுடையது என்று கண்டு அதுமுதல் சைவசித்தாந்தத்தின் உண்மைகள் பொதியப்பெற்ற

Koviloor Digital Library

தேவாரப் பாசுரங்களினால் சமண சமயத்தின் குறைகளை வெளிப்படுத்தி, சைவ சமயத்தைத் தழைத்தோங்கும்படி செய்தார்.

இப்பெரியாரது தேவாரப்பாசுரங்கள் 4, 5, 6 திருமுறைகளாக வகுக்கப்பெற்று இருக்கின்றன. அவற்றுள் தருமை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 4ஆவது திருமுறையை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறார்கள். இப்பொழுது 5ஆவது திருமுறையை நல்லமுறையில் வெளியிடுகிறார்கள்.

5ஆவது திருமுறையில் அப்பர் சுவாமிகள் வரலாற்றில் நிகழ்ந்த சில அற்புத நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. திருவாய்மூர்ப் பதிகத்தில் இறைவன் தம்மை 'வா' என்று அழைத்ததும், திருமறைக் காட்டுத் திருப்பதிகத்தில் இப் பெரியார் திருமறைக்காட்டுக் கதவு திறக்கப்பாடிய வரலாறும், திருநீலக்குடித் திருப்பதிகத்தில் இவர் கல்மேல் மிதந்த வரலாறும், திருப்பழையாறை வடதளித் திருப்பதிகத்தில் சமணர் அழிவெய்திய வரலாறும், திருக்கோளிலித் திருப்பதிகத்தில் சமணர் மறைத்த இலிங்கம் வெளிப்பட்டமையும், திருவாய்மூர்த் திருப்பதிகத்தில் படிக்காசு பெற்றமையும் காணப் பெறுகின்றன.

இத்தகைய பேரதிசயங்கள் உண்டாகக்கூடிய செயல்களினால் இறைவனது திருவருளை வெளிப்படுத்தித் தீவினைகளை இறைவனது திருவருளால் நசிப்பிக்கச்செய்ய இயலும் என்பதை மக்கள் உய்யும்படி எடுத்துக்காட்டி மாமறைநூல், திருநீறு, ஐந்தெழுத்து ஆகிய இவை சிறக்கும்படி காலத்தால் சைவ சமயத்திற்குச் செய்த பேருதவி, என்றென்றும் சைவ மக்களின் உள்ளத்தே நிலவி இருக்குமென்பதில் ஐயமில்லை.

நல்ல காகிதத்தில் சிறந்த முறையில் தக்க குறிப்புரைகளோடு மக்கள் பயிலுதற்கு ஏற்றமுறையில் 5ஆவது திருமுறையாகிய இந்நூலை வெளியிட்டுள்ள, கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குச் சைவஉலகம் என்றென்றும் கடப்பாடுடையது.

''வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன்நாமமே
சூழ்க வையகமும் துயர்தீர்கவே.''

Koviloor Digital Library

உ
குருபாதம்

முதல் பதிப்பின் முகவுரை

இறை, உயிர், உலகம் என்னும் முப்பகுதியாய் நிற்கும் பொருள்கள் என்றும் உள்ளவை. அவை அநாதி என்பது சாத்திரம். இம் முப்பொருளையும் பதி, பசு, பாசம் என்ற அழகுறுஞ் சொற்களாற் சாத்திரம் தெரிவிக்கும். உயிர்கள் பாசம் நீங்கிப் பதியினைக் கூடி யின்புறுதற்கு இடைக்கால நிலையே இவ்வுலக 'வாழ்வு' எனலாம்.

வாழ்வில் தன் குறிக்கோளை உணர்ந்து மன, மொழி, மெய் களால் தூயனாய் வழிபாடியற்றும் மனிதனுக்கு உலகப் புறத்தோற்றக் கவர்ச்சிகள் தடையாய்நின்று மெய்ஞ்ஞானத்தை அடைய வொட்டாமல் தடுக்கின்றன. சான்றோர்களது அருள் வாக்குகளை -திருவருள் மொழிகளைக் கற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவதால் இத்தடைகள் நீங்கும் என்பது அநுபவம்.

தவச்சிறப்பும், ஞானநலமும் வாய்ந்த சான்றோர்களாகிய அருளாளர்கள் வாழ்ந்து அருள் நலம் பெருக்கிவரும் ஞானப் பண்ணைகளே ஆதீனங்களாகிய சைவமடங்கள்.

மடாலயங்கள் நம் நாட்டில் தொன்றுதொட்டு அறிவு விளக்கம் புரிந்து வரும் அற நிலையங்களாக உள்ளன. தென்னாட்டிலும் வட நாட்டிலுமாக இம்மடங்களின் பணிகள் எண்ணிறந்த பல.

சைவ இலக்கியப் பேரறிஞராகிய டாக்டர். மா.இராச மாணிக்கனாரவர்கள் இம்மடங்களது தொன்மையைப் பற்றித் தம் நூல்களில் தெளிவுபடுத்தியுள்ளார். கி.மு.249 இல் அசோகன் தன்மகள் சாருமதியுடன் நேபாளம் சென்றதாகவும், அங்கே ஒரு மடம் பசுபதிநாதமடம் என்ற பெயரில் இருந்ததாகவும், அது காட்மண்டு நகரத்திற்கு 3. கி.மீ. வடக்கே அமைந்திருந்ததாகவும், சாருமதி அம்மடத்திற் சேர்ந்ததாகவும், அதனால் அந்த முற்காலத்திலேயே நேபாளத்தில் சைவசமய வளர்ச்சியை அறியலாம் என்றும் தம் நூலில் எழுதியுள்ளார்.[1]

[1] Monograph on the Religious Sects in India among the Hindus -D. A.Pai. pp.62

Koviloor Digital Library

நம் சமயாசாரியர்கள் காலத்திற்கு முன் வாழ்ந்த திருமூலர் காலத்திலே சன்மார்க்க நெறியை உபதேசித்த ஏழு மடங்கள் இருந்தன எனவும், மூலர், காலங்கர், அசோகர், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் ஆகிய அவர்களுள் மூலரது சீடர்கள் மூலன் பரம்பரையினர் எனப்பட்டனர் எனவும் அறிகின்றோம். இதனால் கி.பி. 4,5,6 ஆம் நூற்றாண்டுகளிலேயே மடங்களின் தொன்னிலை, தொண்டுநிலை பற்றி நன்கு தெளியலாம்.

மடங்களில் வாழ்ந்து மோனத்தவம் பெருக்கி வையகம் வாழத் தொண்டு புரியும் ஞானச் சான்றோர்களது அருள் மொழிகள் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் உயர்மொழிகளாக உள்ளன. சமயாசாரியப் பெருமக்களது திருவருள் மொழிகளாகிய திருமுறைகளைப் பொருள் உணர்ந்து சொல்லுதல் வாழ்வைத் திருத்திப் பண்படுத்தும் என்பது ஆன்றோர் அநுபவம்.

இத்தருமை ஆதீன ஆதிபரமாசாரிய சுவாமிகளும், ''சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்'' என்று பணித்தருளினார்கள். இத்திரு முறைகள் காட்டும் செம்பொருளை உணர்ந்தாலன்றி இந்நெறி நிற்றல் இனிது கூடாமையின், நல்ல உரை விளக்கத்தோடு திருமுறைகளை உலகிற்கு வழங்குதலும் தேவையாயிற்று.

இதனைத் திருவுளத் தடைத்தருளிய தருமை ஆதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கருணைப் பெருக்கால் இதுகாறும் முதல் நான்கு திருமுறைகளும் குறிப்புரை, தலக்கல்வெட்டு, பதிக வரலாறுகளுடன் தமிழ் உலகு பெற வெளிவந்தன.

இந்த ஐந்தாம் திருமுறை திருநாவுக்கரசு சுவாமிகளது திருக் குறுந்தொகைப் பாடல்களை உட்கொண்டொளிர்வது. கோயில் முதலாக ஆதிபுராணத் திருக்குறுந்தொகையீறாக நூறு பதிகங்களை உடையது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாணையைச் சென்னியிற்றாங்கி, இப்பதிகங்கட்குக் குறிப்புரை, சொல் - அரும் பொருள் அகராதிகள் எழுதியவர், தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கும் தேவார இசைமணி, வித்துவான், திரு. வி.சா. குருசாமி தேசிகர்.

பொழிப்புரை எழுதியவர், தருமை ஆதீனப் பல்கலைக்

Koviloor Digital Library

கல்லூரி முதல்வராக இலங்கும் செஞ்சொற் கொண்டல், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ.,

அவ்வாறே பதிக வரலாறு தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசனாலும், தல வரலாற்றுக் குறிப்புக்கள், கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையாராலும் எழுதப் பெற்றுள்ளன.

இவ்வுரைப் பகுதியினைத் தம் அறிவு நலத்தால் ஆய்ந்து உரைச்சிறப்பு எழுதியுள்ளவர் தருமை ஆதீனப் புலவர் சித்தாந்தக் கலைமணி வித்துவான், திரு.சி. அருணைவடிவேலு முதலியார் ஆவர்.

ஐந்தாம் திருமுறை உரை முதலியவற்றை மீளநோக்கி ஆராயும் வாய்ப்பு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளாணையால் அடியேனுக்கு எய்திற்று. உரைப் பகுதிகள் அனைத்தையும் கண்டு செப்பமுறத் தொகுத்து நோக்கும் திருவருள் வாய்ப்பு அடியேனுக்கு வாய்த்தது குருவருள் விளக்கத்தாலே ஆதலின், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவடிகளில் மன மொழி மெய்களாலாகிய என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஏனைய திருமுறைகளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்கள் திருவுளப்படி விரைவில் உரையுடன் வெளிவர இருக்கின்றன. எல்லாம் குருவருள் வளம்.

திருநாவுக்கரசர் திருவடி வாழ்க!

தருமை ஆதீனம்
25. 05. 1962.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின்
அருளாணைப்படி,
க. வச்சிரவேல் முதலியார்,
தலைமை ஆசிரியர்,
பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி,
காஞ்சிபுரம்.

Koviloor Digital Library

உ
குருபாதம்

உரைச் சிறப்பு

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக்கலைமணி, வித்துவான்.
சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்
காஞ்சிபுரம்.

தோற்றுவாய்:

பண்டை நூல்களுக்கு உனர் காணுதல் என்பது எளிதான ஒரு செயலன்று; அவற்றுள்ளும் திருமுறைகட்கு உரை காணுதல் இயலாத தொன்றென்றே பலரும் கூறுவர். தவறான உரையைத் திருமுறைகட்கு உரைத்தல் மற்றைய நூல்கட்கு உரைத்தலைவிடக் கூடாததொன் றென்னுங் கருத்தால், 'திருமுறைகட்கு உரை எழுதுதல் கூடாது' என்று சொல்லிவரும் ஒரு வழக்கமும் உண்டாயிற்று. ஆயினும், ''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்'' என்று எடுத்து, அவர்களே பெரும்பயன் பெறுவாராகத் திருமுறையுள்ளே சொல்லப்படுவதால், இயன்ற அளவில் திருமுறைகட்கு உரை காணுதலும் இன்றியமையாத தேயாம்.

இதனைத் திருவுளங்கொண்டு, தருமை ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் பல புலவர்களைக் கொண்டு, திருமுறைகட்குக் குறிப்புரை, பொழிப்புரை, திருப்பதிக வரலாறு, முதலியன எழுதுவித்து முறையாக அவைகளை வெளிவரச் செய்து வருகின்றார்கள். அம்முறையில் இதுகாறும் நான்கு திருமுறைகள் மிகச் சிறப்பான முறையில் வெளிவந்துள்ளன. ஐந்தாந் திருமுறை இதுபோது அங்ஙனம் வெளிவருகின்றது.

உரையாசிரியர்கள்:

இதற்குக் குறிப்புரை வரைந்தவர்கள், தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், திருநெறிச்செம்மல், வித்துவான். திரு.வி.சா. குருசாமிதேசிகர் அவர்கள்.

பொழிப்புரை உரைத்தவர்கள், தருமை ஆதீனப் பல்கலைக்

Koviloor Digital Library

கல்லூரி முதல்வர், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு.சொ. சிங்காரவேலனார், எம். ஏ., அவர்கள்.

திருப்பதிகவரலாறு கூறியவர்கள், அக் கல்லூரிப் பேராசிரியர், சிரோமணி. வித்துவான் திரு.வி. சபேசனார் அவர்கள்.

இம்மூவரது அறிவுத் திறனும், ஆராய்ச்சித் திறனும், பேருழைப்பும் இவ்வுரையில் நன்கு தெளிவாகின்றன. இவர்கட்கு அவ்வப்பொழுது பல அரிய கருத்துக்களையும் விளக்கங்களையும் தந்தும் சில செப்பங்களைச் செய்தும் உதவியவர்கள், காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் சித்தாந்த சிகாமணி உயர்திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களாவார்கள். அவர்களது உதவியால் இவ்வுரை மேலும் மிக்க சிறப்புற்றுத் திகழ்கின்றது.

இதன் சிறப்பினை ஆய்ந்து எடுத்துரைக்கும் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அடியேனுக்கு அருளாணை யளித்துள்ளார்கள். அவர்களது பெருங்கருணைத்திறத்திற்கு அவர் களது திருவடித்தாமரைகட்கு அடியேனது மன மொழி மெய்களா லாகிய பெருவணக்கத்தினைச், செலுத்தி இவ்வுரைச் சிறப்புக்களில் சிலவற்றை எடுத்துக்காட்ட முயல்கின்றேன்.

செயலின் அருமை:

திருமுறைகளுள்ளும் தேவாரங்கட்குப் பொருள் காணுதல் அரிது. சிலர் தேவாரங்கள் எளிதில் பொருள் விளங்கக் கூடிய வெள்ளைப் பாடல்கள் எனக் கருதுவர். அவர்கள் தேவாரங்களை முற்றிலும் உள் நுழைந்து நோக்காமையாலே அங்ஙனங் கருதுவர். தேவாரங்களுள்ளும் திருநாவுக்கரசரது தேவாரத்தின் பொருளை உணர்தல் மிகமிக அரிது.

திருநாவுக்கரசரை. 'அலகில் கலைத்துறை தழைப்ப வந்தார்' என்கின்றார் சேக்கிழார். 'அலகில் கலை' என்றது எல்லையற்று விளங்குவதாகிய மெய்க்கலை (ஞானக்கலை)யையேயாம். எனவே, மெய்க்கலையின் அளவற்ற நுண்பொருள்கள் அப்பர் தேவாரத்துள் ஆங்காங்கு நிரம்பிக்கிடப்பனவாம். அவைகளையெல்லாம் உணர்ந்து வெளிப்படுத்துதல் என்பது பெரியதோர் அருஞ் செயலாகும்.

அச்செயலை மேற்கொண்டு முடித்த இப்புலவர் பெருமக்கள்

Koviloor Digital Library

மூவர்க்கும் தமிழுலகமும், சைவ உலகமும் எஞ்ஞான்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடு உடையவாம்.

அருந்தொடர்கள்:

''திருநாவுக்கரசரது தேவாரம் புலவர்களால் எளிதிற்பொருள் காண இயலாதது'' என்பதற்குக் காட்டாக ஒன்று இரண்டை இவ் ஐந்தாந் திருமுறையினின்று எடுத்துக் கூறலாம்.

முதற் றிருப்பதிகத்துள் முதற் றிருப்பாடலிற்றானே, ''என்னம் பாலிக்கு மாறுகண்டின்புற'' என ஒரு தொடர்வந்துள்ளது. அதில் 'என்னம் பாலிக்குமாறு' என்னுந்தொடர் எளிதில் பொருள் விளங்குவது அன்று.

அதன் இரண்டாவது திருப்பாடலில், ''அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டு'', ''கரும்பற்றச்சிலைக் காமன்'' என்னுந் தொடர்கள் காணப்படுகின்றன. அவற்றுள்ளும் 'அரும்பற்றப்பட', 'கரும்பற்றச் சிலை' என்னும் பகுதிகள் அத்தன்மையன.

அருஞ்சொற்கள்:

இன்னும் மூன்றாவது திருப்பதிகத்துள் மூன்றாவது திருப்பாடல்,

''பரப்பொப் பானைப் பகலிருள் நன்னிலா
இரப்பொப் பானை இளமதி சூடிய
அரப்பொப் பானை அரத்துறை மேவிய
சுரப்பொப் பானைக்கண் டீர்நாம் தொழுவதே''

என்பது. இதனுள். 'இரப்பு, அரப்பு, சுரப்பு, என்னும் சொற்களின் பொருள் இன்ன என ஒருதலையாகத் துணிதல் எத்துணை உழைப்பைத் தருவது, இவற்றிற்கெல்லாம் பொருத்தமான பொருள்கள் இவ்வுரையுட் கண்டு கூறப்பட்டுள்ளன.

மற்றும் இத்திருமுறையுட் காணப்படும் அருஞ்சொற்கள் சில; அவை 'கறும்பி, சரக்க, சீரம், சுபத்தர், சுவண்டர், தவனி, தனகு, பாழிமை, மொண்ணை, முதலியன. இவை பிறவிடங்களிற் காண்டற்கரியன. இவற்றிற்கு முறையே, 'துன்புறுத்தி, விரைவாக, சீரணம், நலஞ்சான்ற சிந்தையர், திருவெண்ணீறணிந்தவர், தபிக்கப்பட்டவள், உள்ளக்களிப்பு, உறைப்பு, முரண்டல்' எனப்

Koviloor Digital Library

பொருள் கூறப்பட்டுள்ளன. (தி.5. ப.74. பா.6.) (ப.10. பா.11) (ப.82. பா.10) (ப.7. பா.4) (ப.10. பா.3) (ப.7. பா.8) (ப.92. பா.1) (ப.18. பா.2) (ப.15. பா.5)

''இராவ ணஞ்செய மாமதி பற்றவை
யிராவ ணம்முடை யான்றனை யுள்குறின்
இராவ ணன்றனை ஊன்றி யருள்செய்த
இராவ ணன்திரு வெண்கா டடைமினே'' (தி.5. ப.49. பா.11)

என்னும் திருப்பாடல் 'மடக்கு' அல்லது 'யமகம்' என்னும் முறையில் அமைந்து, பொருள் விளங்குதல் அரிதாய் இருத்தல் தெளிவு. இதன் நான்கு அடிகளிலும் முதற்கண் வந்துள்ள மடக்குச் சொற்களுக்கு முறையே, 'இல்லாதபடி, ஐராவணம், இராவணன், கரிய நிறமுடையவன் (அகோரமுகத்தினன்)' எனப் பொருளுரைத்துத் தெளிவுபடுத்தியிருத்தல் அறிந்து இன்புறத்தக்கது.

பொருள்கோள் திறன்:

பொருள் முடிவு காணுதல் அரியனவாய் உள்ள பல இடங்களுக்கு அறிஞர்கள் வியக்கும்படி பொருள் கண்டிருத்தல் உரையாசிரியரது பொருள்கொள்ளுந் திறனை நன்கு புலப்படுத்துவதாகும். எடுத்துக்காட்டாக,

''கட்டி யொக்கும் கரும்பி னிடைத்துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனார்''

என்பதன் உரையில் (தி.5. ப.5. பா.6) 'துணி வெட்டி - வீணையை மீட்டும்போது ஓசையைத் துணித்தும் நரம்பை வெட்டியும்' என உரைத்திருத்தல்,

''கோணிக் கொண்டையர் வேடமுன் கொண்டவர்'' என்பதில், (தி.5. ப.5. பா.7) 'கோணிக்கொண்டை - சேர்த்துக்கட்டிய சடைக்கொண்டை' எனக் குறித்திருத்தல்,

''குறைக்காட்டான்'' (இராவணன்) என்பதற்கு, (தி.5. ப.9. பா.9) 'குறைக்கு ஆள்தான்' எனப் பிரித்து, 'குற்றங்களுக்கு' ஆளாய் இருப்பவன் எனினும் அமையும் என்று எழுதியிருத்தல்.

''மலையின் நீடிருக்கும்மறைக் காடரோ'' என்பதில், (தி.5.

Koviloor Digital Library

ப.10. பா.5) 'மலையின் நீடு இருக்கும் மறைக்காடு - திருக்கயிலை ஊழிகளில் அழியாதுநிற்றல்போலத் தானும் அழியாது நீடுதலாக இருக்கும் மறைக்காடு' எனப் பொருள் விரித்திருத்தல்.

மாடத்தாடு மனத்துடன் வைத்தவர் - (மாடத்தும்) விண்ணிழி விமானமாகிய புறத்தும், (ஆடும் மனத்தும்) நிலையாது திரியும் மனத்தும் (அகத்தும்) வழிபட்ட திருமால், கோடத்தார் - வேதகோஷம் செய்யும் பிரமன், பாடத்தார் - மூலபாடம் பேணும் 'அந்தணர்' என உரைகண்டிருத்தல், (தி.5. ப.12. பா.4-கு-ரை)

''மங்கை காணக் கொடார்மண மாலையை''

என்னும் திருப்பாடலுள் (தி.5. ப.15. பா.6) ''எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே'' என்பதில் 'இதழி' என்பதற்குக் கொன்றை என்னாது, 'கொன்றை போலும் பசலை' என்று உரைத்திருத்தல்,

''கொடுங்கண் வெண்டலை கொண்டு குறைவிலைப்
படுங்க ணொன்றில ராய்ப்பல பத்தர்கள்''

என்பதில் (தி.5. ப.23. பா.1) 'குறைவிலைப் படுங்கண் ஒன்றிலராய் - குறைந்த விலைக்கு விற்றுக்கொள்வதோர் இடமும் இல்லாதவராய்' என்றுரைத்து, 'விற்றூணொன்றில்லாத நல்கூர்ந்தான்காண்' என மேற்கோள் காட்டியிருத்தல்,

எட்டு மலர்கள் (அட்ட புட்பங்கள்) இட்டு வழிபடுதலையே கூறிவரும் திருப்பதிகத்துள், ''ஏழித் தொன்மலர் கொண்டு பணிந்தவர்'' என்பதில், (தி.5. ப.54. பா.6) 'ஏழி' என்பதற்கு, 'ஏழை முன்னாக உடையது; எட்டு' என்று கூறியிருத்தல்,

''நஞ்ச நெஞ்சர்க் கருளும்நள் ளாறரே'' என்பதில் 'நஞ்ச - நைந்த; நைஞ்ச என்றாய், நஞ்சஎன மருவியது' எனக் குறிப்புத் தந்திருத்தல்,

''ஙகர வெல்கொடியான்'' என்பதற்கு, (தி.5. ப.97. பா.16) 'இடபம் ங போன்றிருத்தலின், ஙகரவெல்கொடியான் என்றார்' எனக் கூறியிருத்தல்,

இன்னோரன்ன பல இடங்கள் வியப்பிற்கும், பாராட்டிற்கும் உரியனவாய் விளங்குகின்றன.

Koviloor Digital Library

நய உரைகள்:

சில இடங்களில் உண்மைப் பொருள்களோடு, நய உரைகள் கூறப்பட்டிருத்தல் அறிவிற்கு விருந்தாய், சுவை பயப்பனவாகும். ஒன்று - இரண்டு - வருமாறு:

''கங்கை செஞ்சடை வைப்பது மன்றியே
அங்கை யில்லன லேந்த லழகிதே''

என்பதற்கு (தி.5. ப.9. பா.8) 'இயற்கையின் மாறுபட்ட ஆற்றல்களைத் தன் பேராற்றலுள் அகப்படக்கொண்டு இணைத்து வேண்டியவாறு தொழிற்படுத்துவன் என்பது கருத்து' என்று உண்மையை உணர்த் தியபின்னர், 'உமையம்மைக்குத் தெரியாதபடி கங்கையை மறைத்து வைத்ததே தவறு; மேலும், இல்லை என்று உறுதி உரைப்பார் போலக்கையில் அனல் ஏற்றல் அழகாகுமா என்பது நயம்' எனக் காட்டியிருத்தல் கண்டு இன்புறுதற்கு உரியது.

''கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே''

என்னும் திருப்பாடலின் குறிப்பில், (தி.5. ப.14. பா.10) 'இப்பாடலில் கூறும் நான்கு பொருள்களும் குழந்தை, இளைஞர், குமரர், முதியர் என்பார்க்கு, இனிமை பயப்பன' எனக் காட்டியிருத்தல் சுவை பயப்பதொன்றாகும்.

''நினைவார்க் கெலாம் - ஊற்றுத் தண்டொப்பர் போல் ஒற்றி யூரரே'' என்பதற்கு, (தி.5. ப.24. பா.3) 'ஊற்றுத் தண்டு - கரும்பு. ஊன்றுகோல். இரட்டுற மொழிந்து கொள்க. வழுக்குழி உதவி, அமைந்துழிப் பேரின்பம் பயப்பர்' என்னும் குறிப்பு பயன் தரத்தக்கதொரு சிறந்த குறிப்பாகும்.

''இம்மை அம்மை யெனவிரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாது விளம்புவர்''

என்பதற்கு, (தி.5. ப.26. பா.5) ஏகான்மவாதிகள் இம்மையை இல்லை என்றும், உலோகாயதா மறுமையை இல்லை என்றும் பேசுவர் என்று

Koviloor Digital Library

பொருள் கொண்டமை நயனொடு நன்றி பயக்கும் பயனுடைய உரையாகும்.

''ஒத்தொவ்வாத உற்றார்கள்'' என்பதற்கு, (தி.5. ப.77. பா.7) 'செல்வம் உள்ளபோது ஒத்தும், செல்வம் இல்லாதபோது ஒவ்வாதும், புறத்தால் கலந்து, அகத்தால் கலவாத உறவினர்' எனக் கூறியுள்ள பொருள், உலகியலை உள்ளவாறு உணர்த்தும் இனிய உரையாம்.

மற்றும் இன்னோரன்னவாக இதன்கண் பொதிந்துள்ள பல நயம் வாய்ந்த உரைகள் உணர்வோர் உள்ளத்தை உவகையில் திளைக்கச்செய்வனவாம்.

விழுப்பொருள்கள்:

பல தொடர்களுக்குப் பொதுப்பொருள்கள் கூறியொழியாது, சிறந்த விழுப்பொருள் கண்டு எழுதியிருத்தல் இவ்வுரைக்கென்று அமைந்ததோர் தனிச்சிறப்பாகும். அவைகளுள்ளும் சிலவற்றைக் குறிப்பிடுதல் பயன் தருவதாகும்.

''கருவினைக்கடல் வாய்விட முண்டவெம் - திருவினை'' என்பதில் 'கரு' என்பதற்கு, (தி.5. ப.4. பா.8) 'கருவாய் இருப்பவன்' என்றொழியாது, 'உயிர்கள் தோன்றுங்கால் அவ்வக் கருவின்கண் அவ்வவ்வுயிர்களை அவ்வவற்றின் வினைக்கீடாக விழச்செய்து, அவற்றின் உடம்புகளையும், கரணங்களையும், ஆண்டைக்குப் பொருந்தும் நுகர்ச்சிகளையும் தந்து வளர்ப்போன்' என்று உரைத்து, மேலும் 'இனி உலக முதற்காரணமாகிய மாயைக்குத் தான் தாரகமாய் நின்று தனது சத்தி சங்கற்பத்தால் உலகைத் தோற்றுவித்தல்பற்றி முதல்வனைக் கரு என்றார் எனினும் அமையும். உலகுக்கெல்லாம் வித்தவன்காண் எனச் சுவாமிகள் பின் அருளிச்செய்தல் காண்க, என்று உரைத்து, 'தத் ஆத்மாநம் அகுருத' (அது தன்னைத்தானே ஆக்கியது) என்னும் *தைத்திரீய* உரைக்கும் இதுவே கருத்து என்க' என விளக்கியிருத்தல் மிகச் சிறந்ததோர் உரையாகும்.

''எம்மை யாரிலை யானுமு ளேனலேன்'' என்னும் திருப்பாடற்கு, (தி.5. ப.7. பா.6) சுவாமிகளது வரலாறே பொருளாக அகச்சான்றுபடப் பொருள் விரித்திருத்தல் பெரிதும் அரியதோர் உரையாகும்.

''பஞ்ச மந்திரம் ஓதும் பரமனார்'' என்பதில் 'பஞ்ச மந்திரம்'

Koviloor Digital Library

என்பதற்கு, (தி.5. ப.11. பா.3) ''ஓம் ஹொம் ஈசான மூர்த்தாய நம; என்பது முதலிய ஐந்து மந்திரங்கள்' எனச் சிவாகமங்களுள் இன்றியமையாதனவாக எடுத்தோதப்பட்ட வழிநிலை மந்திரங்களை மட்டும் குறித்துப் போகாது, 'ஈசானஸ் ஸர்வ வித்யாநாம் எனத் தொடங்கும் ஐந்து மந்திரங்கள்' என வேத மந்திரங்களாகிய மூல மந்திரங்களையே குறித்தது பெரிதும் போற்றியுணர்தற்குரியது. இது வேதத்தின் தெளிவே சிவாகமம் என்பது உணராது சிவாகமங்களை விலக்கியொழுகுவார்க்குச் சிறந்ததோர் அறிவுரையாகற்பாலதாம்.

''அரிய நான்மறை ஆறங்க மாய்ஐந்து புரியன்'' என்பதில், 'ஐந்து புரியன்' என்பதற்கு, (தி.5. ப.18. பா.7) ஐந்து பூதத் தலத்தில் உள்ளவன், ஐந்து தொழில் புரிபவன் என்றாற்போலப் பொருள் கூறாது, 'அன்னம், பிராணன், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் என்னும் ஐங்கோசங்களாக எண்ணப்படுபவன்; இவை உயிர்க்கு இடமாகலின் புரி எனப்பட்டன' எனச் சிறந்த பொருள் உரைக்கப்பட்டிருப்பது பெரும்பயன் தருவதாகும்.

இத்தகைய விழுப்பொருள் காண்டல் பேரறிஞர்க்கே கூடுவதாதல் அறியத்தக்கது.

விளக்கங்கள்:

பருப்பொருள் உடையனபோலத் தோன்றும் சொற்களுக்கு நுண்பொருள் விளக்கங்களும், தொகைப்பொருளான சொற்களுக்கு விரிப்பொருளான விளக்கங்களும் போன்ற பலவகை விளக்கங்கள் இவ்வுரைக்கண் அமைந்து விளங்குகின்றன. அன்ன சில வருமாறு:

''அம்பலத் துள்நி றைந்துநின் றாடும் ஒருவனே'' என்பதில் 'ஒருவன்' என்பதற்குப் (தி.5. ப.1. பா.8) பின்வரும் சிறந்த நுண்பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. 'சிவபிரானை ஒருவன் என்றல்' உபநிடத வழக்கு. முழுமுதல் என்னும் கருத்துடையது.

''அட்ட மாமலர் சூடி'' (தி.5. ப.9. பா.4) என்பதற்கு 'அட்ட மாமலர் - சிவபூசைக்குரிய புஷ்ப விதியில் கூறிய எட்டு மலர். புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்னும் எட்டும் புலரிக்காலத்திற்கு உரியவை, 'கொல்லாமை, அருள், பொறியடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு என்னும் எட்டும் ஞானபூசைக்குரிய எண்மலர்கள்'

Koviloor Digital Library

என்னும் விளக்கம் இன்றியமையாத தொன்றாகும்.

''குறிக ளும் அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்''

என்பதில் (தி.5. ப.90. பா.6) 'குறிகள் - கடவுளின் திருவுருவங்கள். அடையாளம் - விடை, கொடி முதலிய சின்னங்கள். நெறிகள் - சமய நெறிகள் அல்லது சரியை கிரியை யோக ஞான நெறிகள். அவர் நின்றதோர் நேர்மை - அப்பெருமான் இவற்றை நாம் உய்யும் நெறி களாகக் காட்டி நின்றதொரு நடுவுநிலை. 'நேர்மை நுண்மை எனலுமாம்'. என்பது உண்மை விளக்கமாய் விளங்குகின்றது.

''புழுவுக் கும்குணம் நான்கு எனக் கும்அதே
புழுவுக் கிங்கெனக் குள்ளபொல் லாங்கில்லை''

என்பதில் புழுவுக்கு உள்ள குணம் நான்கு எவை? என்பதற்கு, (தி.5. ப.91. பா.4) 'உணவின் பொருட்டு முயலல், உண்டல், உறங்கல், இன்ப துன்ப நுகர்ச்சி' என்ற விளக்கம் மிகப் பொருந்துவதேயாம்.

''விறகிற்றீயினன்'' என்னும் திருப்பாடலில் ''உறவு கோல்நட்டு உணர்வு க்யிற்றினால் - முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே'' என்பதில் 'உறவு - அறிவு; உணர்வு - அன்பு' என்னும் விளக்கம் சிறந்த தொரு விளக்கமாகும் (தி.5. ப.90. பா.10) ''நரிவிருத்தம தாகுவர் நாடரே'' என்பதற்கு, 'நரியின் வரலாறு' எனப் பொருள் கூறி நகை விளைக்கும் அக்கதை நன்கு குறிக்கப்பட்டமை சிறந்ததொரு விளக்கமாம் (தி.5. ப.100. பா.7). இப்பெற்றியவான விளக்கங்கள் பல்வகைப் பொருளைப் பலருக்கும் இனிது புலப்படுத்துவனவாகும்.

உண்மைப் பொருள்கள்:

இறைவனது அடையாளங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வோர் உண்மையை உணர்த்துவது என்பதே மெய்யுணர்ந்தோர் கண்ட உண்மை. அவ்வுண்மை இவ்வுரையுள் நன்கு விளக்கப்பட்டுள்ளது. சில இடங்களைக் குறிப்பிடுதல் பொருந்தும்.

''பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பது மைந்தலை நாகமே'' (தி.5. ப.9. பா.6)

என்பதில், ஐந்தலை நாகம் என்பது குண்டலினி எனப்படும். சுத்த

Koviloor Digital Library

மாயை எனவும், அதன் தலை ஐந்தும் சுத்தமாயையின் காரியமாகிய 'சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை' என்னும் சுத்த தத்துவங்கள் எனவும் உண்மைப் பொருள் புலப்படுத்தப் பட்டுள்ளது.

''மறையும் ஓதுவர் மான்மறிக் கையினர்
கறைகொள் கண்ட முடைய கபாலியார்
துறையும் போகுவர் தூயவெண் ணீற்றினர்
பிறையுஞ் சூடுவர் பேரெயி லாளரே'' (தி.5. ப.6. பா.1)

என்னும் திருப்பாடல் முழுவதற்கும் சிறந்த உண்மைப் பொருள்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் சுருக்கம், 'மறை ஓதுதல், உலகிற்கு ஒழுக்கநெறி வகுத்தல்; மான்மறி ஏந்துதல், வேதத்திற்கு முதல்வன் தானே என்பதை விளக்கல்; கறைக்கண்டம் கொள்ளுதல், பேரருள் தன்வயம் என்னும் குணங்களைக் காட்டல்; கபாலம் ஏந்தல், உயிர்களின் செருக்கை அறுத்து இன்பம் தருதல்; துறைபோதல், எக்கலைக்கும் முதல்வனாதல்; பிறை சூடுதல்; உயிர்களின் அக இருளைப் படிமுறையாற் போக்கும் நல்லுணர்வுடைமையும், இளைத்துச் சார்ந்தார்க்குச் சார்பாய் நின்றருளுதலும்.' என்பது. மற்றும் இன்னன பல இதனுட் காணலாகும்.

சித்தாந்தக் கருத்துக்கள்:

'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' எனப்பாராட்டப் படும் சித்தாந்தப் பொருள்கட்கெல்லாம் மூலமாய் உள்ளவை திருமுறைகளாம். அதனால், சித்தாந்த நுண்பொருள்களைத் திருமுறைகளில் நுனித்துணர்தலே திருமுறை உணர்வை நிரப்புவதாகும். அஃது எல்லோர்க்கும் கூடாது, சித்தாந்த உணர்வினர்க்கே கூடுவதாகலின், அந்நுண்பொருளகளை இவ்வுரையுள் இனிது விளங்க ஆங்காங்கு விளக்கியிருத்தல் உரையாசிரியர்களது சித்தாந்தப் பேருணர்வை விளக்குவதுடன், பலரும் அந்நுண்பொருளை உணர்ந்து பயன்பெறச் செய்வதாம்.

அந்நுண்பொருள்களில் ஒன்று இரண்டு வருமாறு: ''கரும் பொப் பானைக் கரும்பினிற் கட்டியை - அரும்பொப் பானை'' என்ப வற்றிற்கு, (தி.5. ப.3. பா.2) இறைவன் சாதகர்க்கு அவர் சாதித்த வழித் தோன்றுதலையும், சீவன் முத்தர்க்கு யாண்டும் வெளிப்பட்டு நின்றே அருளுதலையும், சரியை முதலிய மூன்றில் நிற்பார்க்கு அவர் உள்ளத்தே தோன்றி விரிந்துவருதலையும் பொருளாகக் குறித்தமை, ''உருவினை'', ''அருவினை'' எனப் போந்தவற்றிற்கு, (தி.5. ப.4. பா.8.கு-ரை) 'அருவம்' அருவுருவம், உருவம் என்னும் நிலைகளைக் கடந்த

Koviloor Digital Library

முதல்வன், உயிர்கள் தன்னை உணர்ந்து உய்யக்கருதி அத்திருமேனி களைக் கொண்டான்' எனவும், 'உரு - மகேச்சுரத் திருவுருவங்கள்; அரு - யோகியர் பிரணவம், பிராசாதம் முதலிய மந்திரங்களின் துணையால் அகத்தே காணும் ஒளியுரு' எனவும் எழுதினமை, ''கருத்தன்'' (தி.5. ப.4. பா.9. கு-ரை) என்றதற்கு, 'தலைவன்; தன்வயமுடையவன்'. 'சுட்டுணர்வாகிய பிரபஞ்சம், சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்' என விளக்கினமை,

''துணையி லாமையின் தூங்கிருட் பேய்களோ
டணைய லாவ தெமக்கரி தேயெனா
இணையி லாஇடை மாமரு தில்லெழு
பணையி லாகமம் சொல்லுந்தன் பாங்கிக்கே''

என்பதில், (தி.5. ப.15. பா.4) 'தூங்கிருள்' என்பதற்கு 'ஊழி' என்றும், 'பாங்கி' என்பதற்கு, 'பக்கத்தில் உள்ள உமையம்மை' என்றும் பொருள் கூறி, 'ஊழியில் இறைவனும், அம்மையும், பேய்களும் அன்றிப் பிறர் இரார்' என்றும், 'ஆகமம் அம்மைக்கே முதற்கண் விளக்கப்படுவது' என்றும் உரைத்தமை,

''அடிகள் சேவடிக் கீழ்நாம் இருப்பதே'' (தி.5. ப.32. பா.1) எனத் திருப்பூந்துருத்தித் திருப்பதிகத்துள் எல்லாப் பாடல்களிலும் குறிக்கப்பட்ட இறைவன் திருவடிக்கீழ் இருத்தலை, 'இன்புறுநிலை' என்றும், ''ஓங்குணர்வி னுள்ளடங்கி உள்ளத்துள் இன்பொடுங்கத் - தூங்குவர்மற்றேதுண்டு சொல்'' என்றாற் போல நிட்டையின் இயல்பு கூறுவனவற்றிற்கெல்லாம் இது போலும் திருமுறைகளே மூலம் என்றும் தெளிவித்தமை,

'உள்ளா றாததோர் புண்டரி கத்திரள்'' (தி.5. ப.68. பா.1) எனக் குறிக்கப்பட்ட அகத்தாமரையின் இயல்பை விளக்குமிடத்து, 'ஏனைத் தாமரைபோல் நீர்க்கீழ்த் தோன்றாத பீசம் முதலாகத் தோன்றி முளைத்த ஒப்பற்ற வெண்டாமரை' எனச் சிறப்பித்துரைத்தமை முதலியவை அரிய பல சித்தாந்த நுட்பங்களைத் திருமுறையில் வைத்து உணர்தற்குத் துணைசெய்வனவாம்.

இலக்கணக் குறிப்புக்கள்:

மொழித்திறத்தின் முட்டறுத்து முதல்நூற் பொருளை உள்ள வாறுணர்தல், இலக்கணம் வல்லார்க்கே இயல்வதாகும் என்பர். அத்தகைய இலக்கணக் குறிப்புக்களும் பல இவ்வுரையுட்

Koviloor Digital Library

காணப்படும். எடுத்துக்காட்டாக;

''அருத்தனைஅரவைந்தலை நாகத்தை'' (தி.5.ப.4. பா.9) என்பதில், 'அரவைந்தலை நாகம்' என்பதற்கு, 'முன் பின்னாகத் தொக்க இருபெயரொட்டு. ஐந்தலை நாகமாகிய அரவு என்க' என்றும்,

''இடைமாமரு தில்லெழு - பணையி லாகமம் சொல்லுந்தன் பாங்கிக்கே'' (தி.5. ப.15. பா.4) என்பதில், 'பணை' என்பதற்குத் திருவிடைமருதூர்த் தலவிருட்சமாகிய மருதமரம் எனப் பொருள்கொண்டு, 'பணை - மருதநிலம்; அஃது அந்நிலத்துக்குரிய மரத்துக்கு ஆயிற்று '(இடவாகு பெயர்) என்றும் குறிப்பெழுதியிருத்தல் முதலியவற்றைக் காண்க.

இங்ஙனம் இலக்கணம், இலக்கியநயம், தத்துவக் கருத்துக்கள், வேத ஆகம சித்தாந்த நுண்பொருள்கள் பலவும் விளங்குமாறு அமைந்த இவ்வைந்தாந் திருமுறையுரை இதனை அன்புடன் ஓதி உணர்வார்க்குப் பல்லாற்றானும் சாலவும் பயன் தருவதாகும்.

பொழிப்புரையாசிரியர், தமிழில் புலவர் பட்டத்துடன், ஆங்கிலத்தில் எம். ஏ., பட்டம் பெற்ற சிறப்புடையவர்; குறிப்புரை ஆசிரியர், தமிழ்ப் புலமையோடு திருமுறைகளை ஆழ்ந்து பயின்று, 'திருநெறிச் செம்மல்' புலவர் பட்டமேயன்றி வடமொழியிற் சிரோ மணி என்னும் சீரியதொரு பட்டத்தைப் பெற்ற பெருமையுடையவர்; திருப்பதிகவரலாற்று ஆசிரியர், தமிழ்மொழியிற் புலவர் பட்டமும், அதுமட்டுமன்றி, வடமொழியிற் சிரோன்மணிப் பட்டமும் பெற்ற சீர்த்தி யுடையவர். இம் முப்பெரும் பேராசிரியர்களும் ஒருங்கிருந்து ஆய்ந்து அமைத்துள்ளது இவ்வுரை எனின், இது பல்லாற்றானும் சிறந்து விளங்குதல் சொல்ல வேண்டாவன்றோ!

இத்தகைய புலவர் பெருமக்களைக்கொண்டு இவ்வுரையினை ஆக்குவித்தும், சிறந்த முறையில் அச்சிடுவித்தும் உலகிற்கு உபகார மாம் வண்ணம் வெளியிட்டருளிய, தருமை ஆதீனம் 25-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது பெருங்கருணைத்திறத்திற்குச் சைவ உலகமும், தமிழ் உலகமும் பெரிதுங் கடப்பாடுடையனவாகும். இவ்வுரையின் சிறப்பினைக் கண்டு கூறும் வாய்ப்பினை அடியேற்கு அளித்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது திருவடித் தாமரைகட்கு எளியேனது மனமொழி மெய்களாலாகிய வணக்கத்தைச் செலுத்திக்கொள்ளுகின்றேன்.

Koviloor Digital Library

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுறைகளை மிகவும் ஆர்வத்தோடும் .அருளோடும் சிறந்த பல விளக்கங்களுடன் வெளிவரச் செய்துவருகின்றார்கள். அவ் வெளியீடுகள் அனைத்தும் செந்தமிழ்ச் சொக்கன் தண்ணருள் வளத்தால் அவர்கள் திருவுளப் பாங்கின்படியே இனிது வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஐந்தாந் திருமுறைக்குப் பின் ஏனைய திருமுறைகளும் இனிது வெளிவர அப்பெருமானது பேரருள் முன்னிற்பதாக. வாழ்க கயிலைக் குருமணியவர்கள்! வளர்க திருநெறிப் பணிகள்!.

திருத்தொண்டர் புராண சாரம்

போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்
பொருவில்கொறுக் கையதிபர் புகழ னார்பால்
மாற்றருமன் பினில்திலக வதியாம் மாது
வந்துதித்த பின்புமருள் நீக்கி யாரும்
தோற்றியமண் சமயம்உறு துயரம் நீங்கத்
துணைவரருள் தரவந்த சூலை நோயால்
பாற்றருநீள் இடரெய்திப் பாடலிபுத் திரத்தில்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்.

வந்துதமக் கையர்அருளால் நீறு சாத்தி
வண்தமிழால் நோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலம் கொடியிடபம் விளங்கச் சாத்தி
அந்தமில்அப் பூதிமகன் அரவு மாற்றி
அருட்காசு பெற்றுமறை அடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றில் கயிலை கண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தி னாரே.

-உமாபதி சிவம்.

Koviloor Digital Library

உ

ஐந்தாம் திருமுறை

தல அட்டவணை

தலமும் பதிகமும் வரலாறும்

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
1.	அண்ணாமலை		1	71
	வட்டனைம்மதி	4		
	பட்டிஏறுகந்	5		
2.	அதிகைவீரட்டம்		2	75
	கோணன்மாமதி	53		
	எட்டுநாண்மலர்	54		
3.	அரிசிற்கரைப்புத்தூர்		3	76
	முத்தூரும்புனல்	61		
4.	அன்பிலாலந்துறை		4	77
	வானஞ்சேர்மதி	80		
5.	அன்னியூர்		5	78
	பாறலைத்த	8		
6.	ஆமாத்தூர்		6	78
	மாமாத்தாகிய	44		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
7.	ஆரூர்		7	81
	எப்போதும் இறையும்	6		
	கொக்கரை குழல்	7		
8.	ஆவடுதுறை		8	89
	நிறைக்கவாலியன்	29		
9.	ஆனைக்கா		9	101
	கோனைக்காவி	31		
10.	இடைமருதூர்		10	105
	பாசமொன்றிலராய்	14		
	பறையினோசையும்	15		
11.	இன்னம்பர்		11	111
	என்னிலாரும்	21		
12.	எறும்பியூர்		12	112
	விரும்பியூறு	74		
13.	ஐயாறு		13	113
	சிந்தைவாய்த	27		
	சிந்தைவண்ணத்	28		
14.	ஒற்றியூர்		14	123
	ஒற்றியூரும்	24		
15.	கச்சிஏகம்பம்		15	130
	பண்டுசெய்த	47		
	பூமேலானும்	48		
16.	கடம்பந்துறை		16	131
	முற்றிலாமுலை	18		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
17.	கடம்பூர்		17	132
	தளருங்கோளரவத்	19		
	ஒருவராயிருமூவரும்	20		
18.	கடவூர்மயானம்		18	133
	குழைகொள்	38		
19.	கடவூர்		19	134
	மலைக்கொளானை	37		
20.	கடுவாய்க்கரைப்புத்தூர்		20	139
	ஒருத்தனை	62		
21.	கருவிலிக்கொட்டிட்டை		21	139
	மட்டிட்ட குழல்	69		
22.	கழிப்பாலை		22	140
	வண்ணமும்	40		
23.	காட்டுப்பள்ளி		23	141
	மாட்டுப்பள்ளி	84		
24.	கானூர்		24	143
	திருவின்நாதனும்	76		
25.	குடமூக்கு		25	143
	பூவணத்தவன்	22		
26.	குரக்குக்கா		26	144
	மரக்கொக்காமென	75		
27.	கொண்டீச்சுரம்		27	145
	கண்டபேச்சினில்	70		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
28.	**கோடிகா**		28	146
	சங்குலாமுன்கை	78		
29.	**கோயில்**		29	149
	அன்னம்பாலிக்கும்	1		
	பனைக்கைமும்மத	2		
30.	**கோழம்பம்**		30	171
	வேழம்பத்தைவர்	64		
31.	**கோளிலி**		31	172
	மைக்கொள்	56		
	முன்னமேநினை	57		
32.	**சிராப்பள்ளி**		32	173
	மட்டுவார்குழல்	85		
33.	**செம்பொன்பள்ளி**		33	177
	கானறாத	36		
34.	**சேறை**		34	178
	பூரியாவரும்	77		
35.	**சோற்றுத்துறை**		35	179
	கொல்லையேற்றினர்	33		
36.	**தென்குரங்காடுதுறை**		36	180
	இரங்காவன்	63		
37.	**தோணிபுரம் (சீகாழி)**		37	182
	மாதியன்று	45		
38.	**நல்லம்**		38	185
	கொல்லத்தான்	43		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
39.	நள்ளாறு		39	186
	உள்ளாறாத	68		
40.	நாகேச்சுரம்		40	188
	நல்லர்நல்லதோர்	52		
41.	நாகைக்காரோணம்		41	189
	பாணத்தான்மதில்	83		
42.	நாரையூர்		42	192
	வீறுதானுடை	55		
43.	நின்றியூர்		43	193
	கொடுங்கண்வெண்டலை	23		
44.	நீலக்குடி		44	194
	வைத்தமாடும்	72		
45.	நெய்த்தானம்		45	195
	கொல்லியான்குளிர்	34		
46.	நெல்வாயில்		46	196
	கடவுளைக்கடலுள்	3		
47.	பராய்த்துறை		47	197
	கரப்பர்காலம்	30		
48.	பழனம்		48	198
	அருவனாய்	35		
49.	பழையாறைவடதளி		49	199
	தலையெலாம்பறிக்	58		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
50.	பாசூர்		50	200
	முந்திமூவெயில்	25		
51.	பாண்டிக்கொடுமுடி		51	201
	சிட்டனை	81		
52.	பாலைத்துறை		52	202
	நீலமாமணி	51		
53.	புகலூர்		53	203
	துன்னக்கோவண	46		
54.	புள்ளிருக்குவேளூர்		54	206
	வெள்ளெருக்கரவம்	79		
55.	பூந்துருத்தி		55	208
	கொடிகொள்செல்வ	32		
56.	பூவனூர்		56	209
	பூவனூர்ப்புனிதன்	65		
57.	பேரெயில்		57	209
	மறையும் ஓதுவர்	16		
58.	பைஞ்ஞீலி		58	210
	உடையர்கோவண	41		
59.	மங்கலக்குடி		59	212
	தங்கலப்பிய	73		
60.	மணஞ்சேரி		60	214
	பட்டநெற்றியர்	87		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
61.	மயிலாடுதுறை		61	215
	கொள்ளுங்காதன்	39		
62.	மருகல்		62	216
	பெருகலாம்தவம்	88		
63.	மறைக்காடு		63	218
	ஓதமால்கடல்	9		
	பண்ணின்நேர்மொழி	10		
64.	மாற்பேறு		64	220
	பொருமாற்றின்	59		
	ஏதும் ஒன்றும்	60		
65.	மீயச்சூர்		65	222
	தோற்றும் கோயிலும்	11		
66.	வலஞ்சுழி		66	223
	ஓதமார்கடலின்	66		
67.	வன்னியூர்		67	227
	காடுகொண்டரங்கா	26		
68.	வாஞ்சியம்		68	228
	படையும் பூதமும்	67		
69.	வாட்போக்கி		69	229
	காலபாசம்	86		
70.	வாய்மூர்		70	231
	எங்கேயென்னை	50		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
71.	**வான்மியூர்**		71	232
	விண்டமாமலர்	82		
72.	**விசயமங்கை**		72	233
	குசையுமங்கையிற்	71		
73.	**வீழிமிழலை**		73	236
	கரைந்துகைதொழு	12		
	என்பொனேஇமையோர்	13		
74.	**வெண்காடு**		74	239
	பண்காட்டி	49		
75.	**வெண்ணியூர்**		75	241
	முத்தினைப்பவளத்தை	17		
76.	**வேட்களம்**		76	242
	நன்றுநாடொறும்	42		
77.	**பொது**			
	தனித்திருக்குறுந்தொகை			
	ஒன்றுவெண்பிறை	89		
	தனித்திருக்குறுந்தொகை			
	மாசில்வீணையும்	90		
	தனித்திருக்குறுந்தொகை			
	ஏயிலானை	91		
	காலபாசத் திருக்குறுந்தொகை			
	கண்டுகொள்	92		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
	மறக்கிற்பனேயென்னும் திருக்குறுந்தொகை காசனைக்கனலை	93		
	தொழற்பாலதேயென்னும் திருக்குறுந்தொகை அண்டத்தானை	94		
	இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை புக்கணைந்து	95		
	மனத்தொகைத் திருக்குறுந்தொகை பொன்னுள்ளத்திரள்	96		
	சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை சிந்திப்பார்மனத்	97		
	உள்ளத்திருக்குறுந்தொகை நீறலைத்ததோர்	98		
	பாவநாசத் திருக்குறுந்தொகை பாவமும்பழி	99		
	ஆதிபுராணத் திருக்குறுந்தொகை வேதநாயகன்	100		
	ஆக தலங்கள் 76, பதிகங்கள் 100, பாடல்கள் 1015.			

Koviloor Digital Library

உ

ஐந்தாம் திருமுறையில் உள்ள

தலங்களின் வரலாற்றுக் குறிப்புக்கள்

1. திருவண்ணாமலை

தலம்:

நடுநாட்டுத் தலம். புகழ்பெற்ற தமிழக நகரங்களில் ஒன்று. விழுப்புரம் - காட்பாடி வழியில் தொடர் வண்டி நிலையம். அனைத்து நகரங்களிலிருந்தும் பேருந்துகள் உள்ளன. நினைக்க முத்திகிடைக்கும் தலம். இது திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தின் தலை நகரம். சூரியன், பிரதத்தராஜன், அஷ்டவசுக்கள், பிரமதேவன், சந்திரன், திருமால், புளகாதிபன் முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற தலம். வித்தியாதரர்களாகிய இருவர் ஒரு ரிஷியின் சாபத்தால் பூனையாகவும் குதிரையாகவும் இருந்த நிலை இத்தலத்தை வலம் வந்தமையின் மாறின.

இறைவன்பெயர் அண்ணாமலைநாதர்; அருணாசலேசுவரர் என்றும் கூறுவர். இறைவிபெயர் உண்ணாமுலையம்மை; அபீதகுஜாம் பாள் 'என்றும் கூறுவர். விநாயகர் பெயர் ஸ்ரீ சம்பந்தவிநாயகர்; முக்குறுணி விநாயகர் என்றுங் கூறுவர். தலவிருட்சம் மகிழமரம்.

தீர்த்தம்:

கோயிலுக்கு உள்ளும் வெளியிலும் மலைப்பகுதியிலுமாக 360 தீர்த்தங்கள் உள்ளன. சிறந்தவை சிவகங்கையும், பிரம தீர்த்தமும், மலைப்பகுதியிலுள்ள அக்னிதீர்த்தமும், இந்திர தீர்த்தமும் ஆகும். இந்திர தீர்த்தத்தில் தெப்ப உற்சவம் நடைபெறும்.

குறிப்பு: இத் தல வரலாற்றுக் குறிப்புக்கள், கோயம்புத்தூர், திரு. சி. எம். இராமச்சந்திர செட்டியார் அவர்களாலும், சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் புலவர் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களாலும், தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் அவர்களாலும் எழுதியுதவப் பெற்றன.

Koviloor Digital Library

இத்தலத்தில் நடைபெறும் பெரியவிழா கார்த்திகைத் திரு விழாவாகும். இது கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளைத் தீர்த்த நாளாகக் கொண்டு நடைபெறும். சித்திரைமாதத்தில் சித்திரைநட் சத்திரத்தைத் தீர்த்த நாளாகக் கொண்டு பிரமோற்சவமும், பங்குனி உத்திரத்தில் திருக்கல்யாணமும் ஆறுநாள் விழாவும், மாசிமகத்தில் வல்லாளன் திருவிழாவும், தைமாதம் திருவூடல் விழாவும், ஆனி விழாவும், ஆடியில் அம்பிகைவிழாவும், பவித்ரோற்சவம், நவ ராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை உற்சவம், திருவாதிரை முதலிய னவும் சிறப்பாகக்கொண்டாடப் பெறுகின்றன.

அயனும் மாலும் அகந்தைகொண்டு, அடிமுடிதேட அன்னமும் வராகமுமாக மாறித் தேடி அயர்சி அடைந்தாராக, அக்கினி வடிவாய் நின்று அருள்செய்தவர் அண்ணாமலைநாதர். முருகன் தாருகனை வதஞ்செய்து வணங்கிச்சென்ற தலம் பலவற்றுள் இதுவும் ஒன்று. சம்பந்தர், அப்பர், மணிவாசகர் இம் மூவராலும் பாடல் பெற்றது. சுந்தரர் பாடியதாகப் பாடல் இல்லையாயினும் சேக்கிழார் வரலாற்றால் ஊகிக்கவேண்டியுள்ளது. நக்கீரர், பரணர், கபிலர், பட்டினத்தார் ஆகிய இந்நால்வரும் அண்ணாமலையைப் பற்றிப்பாடிய பாக்கள் பதினொராந்திருமுறையில் உள்ளன. வச்சிராங்கதன் என்னும் பாண்டியன் தினமும் வலம்வந்து திருப்பணி பல செய்துள்ளான். வல்லாளமகாராஜன் அண்ணாமலையை ஆண்டுவந்தான். அருணகிரி நாதர் கோபுரத்திலிருந்து இறக்க எண்ணி வீழ்ந்தபோது முருகன் தோன்றி அருள்செய்தான். குகைநமச்சிவாயர், குருநமச்சிவாயர் முதலானவர்கள் சித்தி பல செய்தனர்.

கோயிலின் வடகிழக்குமூலையில் ஆயிரங்கால் மண்டபம் உள்ளது. கிழக்குப்பக்கத்தில் நுழையும்போதுள்ள உட்கோபுரம் வல்லாளமகாராஜன் கோபுரம் என்று வழங்கப்படுகிறது. வல்லாள கோபுரத்தின் வடகிழக்கு மூலையில் சக்திவிலாஸமும் உள்ளது. மேற்கு நோக்கி உட்சென்றால் கிளிக்கோபுரம் காணலாம். தலவிருட்சத்திற்கு மேற்கே கல்யாணமண்டபம் உள்ளது.

கல்வெட்டு:

பதிவுசெய்யப்பெற்ற மொத்தக் கல்வெட்டுக்கள் 119. இவை களில் பெரும்பாலன சோழர்காலத்தன. திருவிளக்கேற்றல், திருமஞ்சனம், திருநந்தனவனம், திருவமுது, திருவெழுச்சி, அடியார்க்கு அமுத ளித்தல் முதலிய பல அறங்களுக்காக நிலம், பொன், கால்நடை முதலியனவற்றை அளித்தமையை அறிவிக்கின்றன. பாண்டியர்,

Koviloor Digital Library

பல்லவர், ஹொய்சளமன்னரான வீரவல்லாளதேவர், விஜயநகரத்து ராயர், தஞ்சாவூர் நாயக்கர் மற்றும் வணிகர், வேளாளர் முதலியவர்கள் கல்வெட்டுக்களும் காணக்கிடக்கின்றன.

முதல் இராஜேந்திரனுடைய காலத்தில் (கி.பி. 1038.) திருவண்ணாமலை, மதுராந்தகவளநாட்டுப் பெண்ணை வடகரைத் திருவண்ணாமலை என்றும், மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1179.) காலத்தில் இராஜராஜ வளநாட்டு வாணகோப்பாடி பெண்ணை வடகரை அண்ணாநாட்டுத்திருவண்ணாமலை என்றும், மேற்படிசோழ னுடைய 27-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1204) வாணகோப்பாடிப் பெண்ணை வடகரை அண்ணா நாட்டுத் திருவண்ணாமலை என்றும், விஜயநகர இராயர்கள் காலத்தில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்குன்றக் கோட்டத்துப் பெண்ணைவடகரை வாணகோப்பாடி அண்ணாநாட்டுத் தனியூர் திருவண்ணாமலை என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. இதனால் திருவண்ணாமலையின் உள்ளடங்கிய வள நாட்டுப் பெயர் முதலில் மதுராந்தகவளநாடு என்றிருந்து, பிறகு இராஜ ராஜ வளநாடு என்று மாறி, இறுதியில் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் ஆயிற்றென்றும், இம்மண்டலத்தின் உட்பிரிவாகிய செங் குன்றக் கோட்டத்தினுள் அண்ணாநாட்டுத் தனியூராகக் குறிக்கப் பட்ட தென்றும் அறியக்கிடக்கும்.

பல்லவர் காலத்திற்கு முந்திய கல்வெட்டொன்றும் இல்லாமை யால், கோயில் செங்கற்சுதை மாடமாக இருந்ததென்றும், மலையின் மேல் அண்ணாமலையார் கோயில்கொண் டிருந்திருக்க வேண்டுமென் றும் யூகிக்க வேண்டியுள்ளது. முதற்பிராகாரத்துச் சுவரில் கங்கை கொண்ட இராஜேந்திரன் கல்வெட்டு (கி.பி.1028) காணப்பெறுவதால், இதற்கு முன்பே கருங்கல் திருப்பணி நடந்திருக்க வேண்டும், முதற் பிராகாரத்து விளங்கும் ஏகாம்பரநாதர் கோயில், சிதம்பரேசர் கோயில் ஆகிய இரண்டின் சுவர்களிலும் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுச் சாஸனங்கள் காணப்படுகின்றன. கிளிக்கோபுரத்து 33 கல்வெட்டில் பழைமையுடைய வீரராஜேந்திர சோழனது இரண்டாவது ஆட்சி யாண்டின் (கி.பி,1063) முன்பே கருங்கல் திருப்பணியாயிருக்க வேண்டும். திருக்காமக்கோட்டமுடைய உண்ணாமுலைநாச்சியார் கோட்டம் தனியாக கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்றது. கல்வெட்டுகளில் திருக்காமக் கோட்டம் எனக் குறிக்கப்பெறும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுந்த கல் வெட்டுக்களில் வீரராகவன் திருமதில், வாணாதிராயன் திருமதில், திருவேகம்பமுடையான் திருமதில் முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

அம்மையப்பன் சந்நிதிக்கு இடையில் மேற்பக்கத்தில் நங்கையாழ் வீசுவரம் என்னுங் கோயில் பல்லவகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு அரசியால் (கி.பி.1269) எடுப்பிக்கப் பதினாலடிக் கோலால் பதின்மூன்றரைகுழி விற்றுப் பதினாயிரம் பொற்காசு பெற்றுக் கட்டியபகுதி இன்று இல்லை. கிருஷ்ணதேவராயர் (கி.பி.1516) ஆயிரங்கால் மண்டபத்தையும், எதிரிலுள்ள திருக்குளத்தையும், பதினொரு நிலையிலுள்ள கோபுரத்தையும், வேறுபல திருப்பணி களையும் அமைத்தமை அறியப்படுகிறது.

பல்லவமன்னனான கோப்பெருஞ்சிங்கனும், அவன் மகன் வேணாவுடையானும் செய்த திருப்பணிகள் மிகப்பல. பூஜைக்கும் திருப்பணிக்குமாக ''அண்ணா மலைநாதர் தேவதானப்பற்றுக்களும், அண்ணாநாட்டு நாற்பாக் கெல்லைக் குட்பட்ட நன்செய் புன்செய் ஆக உள்ள நிலத்திற்கு ஆயம் பாடி காவலால் வந்த நெல்லும் காசாயமும் மற்றும் எப்பேர்ப்பட்ட பல்லாயங்களும்'' இவன் தானமாக ஈந்தான்.

கல்வெட்டுக்களில் காணப்பெறும் கோயில் அதிகாரிகள் ஸ்ரீருத்திரர், ஸ்ரீமாகேசுரர், ஸ்ரீமாகேசுரக் கண்காணி செய்வார், தானத்தார், தானபதி மாகேசுரர், தேவகன்மிகள், கோயிற்கணக்கர், ஸ்ரீகாரியஞ்செய்வார் எனப் பலராவர். இவரில் ஸ்ரீமாகேசுரர், தர்மசாசனங்கள் ஒழுங்காக நடைபெறக் காரியம் பார்ப்பவராவர்.

அண்ணாமலைநாதருக்கும் உண்ணாமுலை அம்மைக்கும் பிச்சதேவர் முதலிய மூர்த்திகட்கும் திருப்பள்ளி எழுச்சி, சிறுகாலை சந்தி, உச்சிப்போது, இரவை, அர்த்தசாமம் முதலியகாலங்களில் அமுது முதலியவற்றிற்கு நிலம் அளித்தமை அறியலாம்.

சில சாஸனங்களில் பிரமநாயனார் பெரியமடத்து முதலியார், வையந் தொழுவார் பெரியமடத்து முதலியார், ஊருக்குப் பெரிய மடத்து முதலியார், திருவண்ணாமலை உடையார் திருமுற்றத்தே இராஜேந்திரசோழன் சாலை, காங்கேயன்மடம், அம்மைமடம் முதலியன அறியப்படும் செய்திகள்.

நெய், மிளகு, உப்பு, தயிர், அடைக்காய், வெற்றிலை, சீரகம், வாழைப்பழம், வாழையிலை முதலியன நெல்லளந்து பெறப்பட் டவை. மங்கையர்க்கரசி என்னும் நங்கை தன்னாபரணங்களை விற்ற பொருள்கொண்டும், நெல்லைக்கொண்டும் ஏரிபுதுக்கி உதவினாள் என்ற செய்தி கல்வெட்டால் அறியப்படுகிறது.

Koviloor Digital Library

2. திருவதிகை வீரட்டம்

நடுநாட்டுத்தலம். கடலூர் - சென்னை இருப்புப் பாதையில் பண்ணுருட்டி தொடர்வண்டி நிலையத்துக்கு அருகில் உள்ளது. சென்னை, கடலூர், விருத்தாசலம், சிதம்பரம் நகர்களிலிருந்து பேருந்துகளில் பண்ணுருட்டி வரலாம். அப்பர் அருள் பெற்ற தலம்.

இது அட்ட வீரட்டங்களுள் ஒன்று. முப்புரங்களை எரித்த தலம். கருடன், பிரமன், விஷ்ணு, பஞ்சபாண்டவர்கள் பூசித்துப் பேறுபெற்றனர். பல்லவ அரசன் திருநாவுக்கரசரை நீற்றறையில் இட்ட தலமும் இதுவே. இது இப்போது ஓடையாக இருக்கிறது. சக்கரதீர்த்தம் என வழங்குகிறது. குணதரேச்சுரம் என்ற ஒரு கோயிலும் உண்டு. அது குணதரப் பல்லவனால் பாடலிபுரத்துக்கோயிலை அழித்துக் கட்டப் பெற்றதென்பது வரலாறு. திருஞானசம்பந்த சுவாமிகளுக்குத் திருநடங் காட்டியருளிய தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சித்தவடமடத்தில் திருவடி தீட்சை அளித்த இடமும் இதுவே. மெய்கண்டதேவர் மாணாக்கராகிய மனவாசகங்கடந்தார் உண்மை விளக்கம் செய்து அருளிய தலமும் இதுவே. இறைவன் பெயர் திருவதிகை வீரட்டானேசுவரர். திரிபுராந்தகேசுவரர். அம்மை திரிபுரசுந்தரி. தீர்த்தம் கெடிலம், சூலகங்கை, சக்கரதீர்த்தம் என்பன. தலவிருட்சம் சரக்கொன்றை.

கல்வெட்டு:

இத்தலத்தில் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் 34. இவற்றில் ஏழு கல்வெட்டுக்கள் சாரநாராயணக் கோயிலைப் பற்றியவை. ஏனையவை திருவதிகை வீரட்டானமுடையார் கோயிலில் உள்ளவை. அவற்றுள், தெள்ளாற்றுப்போர் எறிந்த நந்திபோத்தரையன் விளக்குக் காக வைத்த நிபந்தம்[1], கோப்பெருஞ்சிங்கன் விளக்கிற்காகப் பசுவுங்காளையும் அளித்தமை [2], பரமேசுவரப் போத்தரையன் பொன்னளித்தமை ஆகிய பல்லவ பர்ம்பரை நிகழ்ச்சிகள் அறிவிக்கப் பெறுகின்றன. அவ்வாறே சோழர்களில் குலோத்துங்கன் I,II,III, இராஜேந்திர சோழன், பராந்தகன் இராஜாதிராஜன் II முதலிய சோழ அரசர்களும், விக்கிரமபாண்டியன், வீரபாண்டியன் முதலிய பாண்டிய மன்னர்களும் காளிங்கராயன், காடவராயன், கங்கபல்லவன் முதலியோர்களும் உணவிற்காகவும், நிவேதனத்திற்காகவும், விழா விற்காகவும் நிலம் அளித்தமையைக் காட்டும் கல்வெட்டுகள் பல.

[1] 36 of 1903, [2] 47 of 1903,

Koviloor Digital Library

சகம் 1235-ல் சேர அரசனான இரவிவர்ம வீரராஜ குலசேகர தேவனால் கோயில் முழுவதும் தூய்மைப்படுத்தப்பெற்ற செய்தி தெரிகிறது [1]. வாகீசமடம் என்ற பெயருடன் ஒன்று இத்தலத்தில் இருந்திருக்க வேண்டும். இதற்குக் குலோத்துங்கன் I தன் ஆட்சிக் காலத்தில் நிலம் அளித்துள்ளான் [2].

3. திருஅரிசிற்கரைப்புத்தூர்

இத்தலம் சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். கும்பகோணம் - நாச்சியார் கோயில் பேருந்தில் சென்றால் இவ்வூரை அடையலாம்.

இத்தலம் அழகாபுத்தூர் என வழங்குகிறது. சுவாமி: படிக்காசு வைத்தபரமர். தேவி: சிவாம்பிகை, சௌந்தர நாயகி அழகம்மை.

இந்தவூர் அழகார் புத்தூர் திருப்புத்தூர் என்றும் வழங்கு கின்றது. அரிசில் நதி ஓடுகிறது. கோச் செங்கட்சோழன் திருப்பணி.

சொர்ணபுரீவர சுவாமி மேற்குப் பார்த்த சந்நிதி, சந்நிதித் தெரு, அழகானது. தென்னை மரங்களின் வரிசைகொண்டது.

கல்வெட்டு:

ஏழு கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. அவை எல்லாம் சோழர் காலத்தவை.

1. இராஜராஜன் 7-ஆம் ஆண்டில் திருப்புத்தூர் உடையார் பரமசுவாமிக்கு 1300 குழி நிலம் வழிபாட்டிற்காக விட்டான். அப்போது மூலகிருகம் கல்லால் படைக்கப்பெற்றது. ஊர்ப்பெயர் திருநாரையூர் நாட்டுப் பரமதேயமான பரதாயகுடி என்று கண்டிருக்கிறது.

2. அதே அரசனால் தனது 22ஆம் ஆண்டில் ஒரு விளக்குக் காக 3 மா. நிலம் கொடுக்கப்பட்டது.

3. அதே அரசனால் தனது 28ஆம் ஆண்டில் விளக்குத் தானம் செய்யப்பட்டது.

[1] 34 of 1903, [2] 49 of 1903.

Koviloor Digital Library

4. இராஜராஜன் காலத்தில் மேல்வேம்பாநாட்டு நல்லார் குடியினன் ஒருவன் சூரியதேவன் கோயில் கட்டினான் என்றும், அதற்கு வழிபாடு நடத்த முப்பது காசு தந்து அதற்கு 6 மா. நிலமும் விடப்பெற்றது என்றும் தெரிவிக்கிறது.

5. முதற்குலோத்துங்கன் காலத்தில் வழிபாட்டிற்காக நிலம் தரப்பட்டது.

6. விக்கிரமசோழன் (கி.பி.1125) காலத்தில் திருப்புத்தூர் அழகிய தேவருக்கு ஒருவிளக்குக்காகப் பணம் தரப்பெற்றது.

7. கோச்செங்கட்சோழன்: ஒருகல்வெட்டில் குலோத்துங்கச் சோழவளநாட்டு அழகார் திருப்புத்தூர் என்று ஊர்ப்பெயர் குறிக்கப் பெற்றுள்ளது.

4. திருஅன்பிலாலந்துறை

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். திருச்சிராப்பள்ளிக்கு அருகே லால்குடிக்குக் கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் கொள்ளிடத்தின் வடகரையில் உள்ளது. திருச்சிராப்பள்ளி, லால்குடி ஆகிய ஊர்களி லிருந்து பேருந்துகள் உள்ளன.

அன்பில் என்பது தலப்பெயர். ஆலந்துறை என்பது கோயில் பெயர். பிரமதேவர், வாகீச முனிவர் முதலியோர் பூசித்த தலம். இது கொள்ளிடக்கரையில் உள்ளது திருஞானசம்பந்தப் பெருமான் இத்தலத்தெழுந்தருளியிருந்தபோது, கொள்ளிடம் நீர்ப்பெருக்காய் இருந்ததாகவும், இக்கரையில் இருந்தே பாடியதாகவும், இறைவன் ஆணையின்வண்ணம் விநாயகர் காதைச் சாய்த்துக் கேட்டதாகவும் ஒரு கர்ணபரம்பரைச் செய்தியுண்டு. அதற்கேற்ப தலவிநாயகர் திருவுருவம் முடிசாய்த்துச் செவி சாய்த்துக் கேட்கின்ற பாவனையில் அமைந்திருக்கிறது.

இறைவன்பெயர் சத்யவாகீசர்; இறைவியின்பெயர் சௌந்தர நாயகி. சத்தியலோகவாசியாகிய பிரமனும், வாகீசரும் பூசித்தமையால் சத்தியவாகீசர் என்ற பெயர் போலும். தீர்த்தம் கொள்ளிடநதி.

Koviloor Digital Library

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றியனவாக 1902 - இல் படியெடுக்கப் பட்டவை பதின்மூன்று கல்வெட்டுக்களும், 1938 - இல் எடுக்கப் பட்டவை ஆறும் உள்ளன. அவற்றில் ஏழு கல்வெட்டுக்கள் திருமால் கோயிலில் உள்ளவை. ஏனையவை சத்தியவாகீசரைப் பற்றியன. கல்வெட்டுகளில் இறைவன்பெயர் பிரமபுரீசுவரர் என வழங்கப் பெறுகிறது. மாறவர்மன் குலசேகரபாண்டியன், மூன்றாம் இராஜேந்திர சோழன், ஹொய்சள வீரராமநாததேவர், மதுரைகொண்ட பரகேசரி வர்மன், இராஜராஜதேவன் முதலியவர்கள் காலத்தனவாகக் காணப்படுகின்றன. இவையெல்லாம் பெரும்பாலும் நிபந்தம் அளிக்கப்பெற்றமையை அறிவிக்கின்றன.[1]

5. திருஅன்னியூர்

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். பொன்னூர் எனவழங்கும். மயிலாடுதுறை-மணல்மேடு பேருந்துகளில் செல்ல லாம். வருணன் பூசித்துப் பேறுபெற்றதலம்.

சுவாமி பெயர் ஆபத்சகாயேசுரர். அம்மையின் பெயர் பெரிய நாயகியம்மை. தீர்த்தம் வருணதீர்த்தம்.

6. திருஆமாத்தூர்

பசுக்களுக்குத் தாயாக இறைவன் இருந்து அருளும் தலம். இங்கே, பசு என்றது உயிர்த்தொகுதியை.

விழுப்புரம் தொடர்வண்டி நிலையத்திற்கு வடமேற்கில் 6 கி.மீ. தூரத்தில் பம்பையாற்றின் வடகரையிலுள்ளது. விழுப்புரம் பேருந்து நிலையத்திலிருந்து சூரப்பட்டு நகரப் பேருந்தில் திருவாமாத்தூர் செல்லலாம். இது நடுநாட்டுத் தலங்களுள் ஒன்று.

இறைவரின் திருப்பெயர் அழகிய நாதர். இத்திருப்பெயரைத் திருக்குறுந்தொகையில் அப்பர்பெருமான் எடுத்து ஆண்டிருப்பது மகிழ்தற்கு உரியதாகும்.

[1]-595 to 601 of 1902.

Koviloor Digital Library

இறைவியாரின் திருப்பெயர் முத்தாம்பிகை, முத்தைவென்ற முறுவலாள். முத்தார்நகை அழகுடையார் என்பர் அருணகிரிநாதர்.

தீர்த்தம் பம்பை ஆறு.

தலவிருட்சம் வன்னிமரம்.

பிருங்கி முனிவர் சிவபெருமானையே வழிபடுபவர். அம்மையாரை வழிபடாதவர். அம்மையார் ஒருபாகத்தைப் பெற்ற போதும் வண்டு உரு எடுத்துத் துளைத்துச் சிவனையே வழிபட்டார். அதனால் அவரை அம்மையார வன்னிமரம் ஆகுமாறு சபித்தார். பின்னர் முனிவர் அம்மையாரை வழிபட்டு அவர் அருளால் சாபநீக்கம் பெற்றனர். மூவராலும் பாடப்பெற்றது.

திருக்கோயில் பாதைக்கு இரு புறமாகக் கட்டப்பெற்றுள்ளது. மேல்புறம் சுவாமி, கீழ்புறம் அம்மன் சந்நிதிகள் அமைந்திருக்கின்றன. ஒன்றை ஒன்று எதிர்நோக்கி இருக்கின்றன. சுவாமியின் முன்கோபுரம் பூர்த்தியாகவில்லை. சுவாமி கோயிலுக்கு நேர் வழியில்லை. தெற்குவாயில் வழியே சென்று பிறகு மேற்கே திரும்பவேண்டும். எதிரில் இராமர்கோயில் இருக்கின்றது. இராமன் வழிபட்டதனால் அபிராமேசர் என்று பெயர்வந்தது.

அர்த்தமண்டபத்தில் நிலவறை உண்டு. அச்சுதராயர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அவர் திருப்பணிசெய்தாராம். அம்மன் கோயில் உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதற்குத்தான் பிராகாரமும் கோபுரமும் உண்டு.

இரட்டைப் புலவர்கள் இவ்வூர் இறைவன் மீது கலம்பகம் பாடியுள்ளனர். புலவர் புராணம் பாடிய தண்டபாணி சுவாமிகள் இவ்வூரினர். அவருடைய சமாதி ஊரின்புறத்தே இருக்கின்றது.

இவ்வூருக்கு, சம்பந்தர் பதிகங்கள் இரண்டு. அப்பர் பதிகங்கள் இரண்டு. சுந்தரர் பதிகம் ஒன்று ஆக ஐந்து பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில் கோப்பரகேசரிவர்மன் (முதல் பராந்தகன்) முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திர சோழன் (கங்கைகொண்ட சோழன்) வீர ராஜேந்திரன், முதற் குலோத்துங்கன்.

Koviloor Digital Library

''பூமேவு வளர்திருப் பொன்மார்வு புணர
நாமேவு கலைமகள் நலம்பெரிது சிறப்ப''

என்னும் தொடக்கமுள்ள மெய்க்கீர்த்தியை உடைய இராஜகேசரி திருபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் முதலானோர் காலங்களின் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இறைவர், திருவாமாத்தூர் உடைய பெருமானடிகள், திருவாமாத்தூர் ஆள்வார், திருவாமாத்தூர் ஆளுடையார் அழகியதேவர், திரு வாமாத்தூர் உடைய பரமசுவாமி என்னும் பெயர்களால் குறிக்கப் படுகின்றார்[1].

இத்திருக்கோயில், கோப்பரகேசரி வர்மனது ஆட்சியாண்டில் கற்றளியாகக் கட்டப்பட்டது. இத்தளியைச் செய்தவன் அருகூர்த் தச்சன் நாராயணன் வேற்கந்தனாகிய திருவாமாத்தூர் ஆசாரியன் ஆவன், திருச்சுற்று மண்டபத்தைக் கட்டியவன் செம்பியன் காத்திமானடிகள் ஆவன். கோப்பரகேசரி வர்மன் கல்வெட்டில் இவ்வூர், அருவாநாட்டு மீய்வழி வாவலூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் எனவும், கோப்பரகேசரி வன்மரான இராஜேந்திர சோழதேவன் அல்லது கங்கைகொண்ட சோழன் கல்வெட்டில், ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பனையூர்நாட்டு, வாவலூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் எனவும், முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் கங்கைகொண்ட சோழவளநாட்டுப் பனையூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் எனவும், ''பூமேவுவளர் திருப்பொன் மார்வுபுணர'' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியை யுடைய இராசகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவர் காலத்தில் இராஜராஜ வளநாட்டுப் பனையூர்நாட்டு வாவலூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் எனவும், வழங்கப்பட்டிருந்தது.

இக்கல்வெட்டுக்களினால் திருநுந்தாவிளக்கு எரிப்பதற்குத் துலைநிறை செம்பொன், ஆடுகள் இவைகளையும் திருச்சந்திக்குத் திருச்சந்தனம், சீதாரி இவைகளுக்குப் பொன்னும், திருப்பதிகம் பாடுவதற்கு நிலநிவந்தமும் அளிக்கப்பெற்ற செய்திகள் புலப் படுகின்றன.

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1903, No. 402-435; year 1922, No. 1-71.

See also the South Indian Inscriptions, Volume VIII, No. 718-751. (South Arcot District, Vilupuram Taluk)

Koviloor Digital Library

இத்திருக்கோயிலில், மூன்று சந்திகளிலும், திருப்பதிகம் பாடி வருவதற்குக் குருடர்கள் பதினாறுபேர்களும், அவர்களுக்குக் கண் காட்டுவார் இருவரும் ஆகப் பதினெண்மர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். அவர்களுக்குத் தலைக்கு நெல் பதக்காக நாளொன்றுக்கு முக்கலமாக நாள் 360-க்கு நெல் ஆயிரத்து எண்பதின் கலமும், புடைவை முதலுக்குப் பேரால் காசு ஒன்றாக காசு பதி னெட்டுக்கு, காசு ஒன்றுக்கு நெல் இருபதின் கலமாகவும் வந்த நெல் 1440 கலத்துக்கு, வேலி ஒன்றுக்கு நெல் நூற்று இருபது கலமாக ஆமாத்தூர் இறைவர் தேவதானம் கடுவனூரில் ப்ன்னிரண்டுவேலி நிலம் காணியாகக் கொடுக்கப்பட்டு வந்தது, இந்நிலையில், ''பூமேவு வளர் திருப்பொன் மார்வுபுணர'' என்னும் தொடக்கமுள்ள மெய்க் கீர்த்தியை உடைய இராசகேசரி திருபுவனச் சக்கரவர்த்தி, குலோத்துங்க சோழன், தன் ஆட்சியின் இரண்டாம் ஆண்டில், தன் தேவாரத்துத் திருப்பதியம்பாடிய பொய்யாதசேவடி தேவகண நாதனான இராஜராஜப் பிச்சனையும் அவன் வர்க்கத்தாரையும் இத்திருக்கோயிலில் திருப்பதியம் பாடுவித்துக்கொண்டு, முன்பில் ஆண்டுகள் குருடர்களுக்கு விட்டுவரும் நிவந்தப்படி இவர்களுக்கும் கொடுக்குமாறு கட்டளையிட்டுள்ளான்.

இக்கல்வெட்டு[1], குருடர்களைக் கவலையின்றிக் கடவுள் பக்தியில் செலுத்துவதற்கு ஒரு வழிகாட்டியாகும்.

7. திருஆரூர்

மயிலாடுதுறை - திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் - திருத்துறைப்பூண்டி தொடர்வண்டிப் பாதையில் உள்ள தொடர்வண்டி நிலையம். மயிலாடுதுறை, தஞ்சை, காரைக்கால் முதலிய பல நகரங்களிலும்மிருந்து பேருந்துகள் உள்ளன. இது சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் எண்பத்தேழாவது ஆகும்.

இவ்வூர் மிகப் பழமை வாய்ந்தது. இச்செய்தியை ''திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே'' என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரப் பகுதியால் அறியலாம்.

[1] குறிப்பு: தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதி 8, எண் 749, A. R. No. 433 of 1903

Koviloor Digital Library

இவ்வூரில் பூங்கோயில், அரநெறி, பரவையுண்மண்டளி என்னும் மூன்று பாடல் பெற்ற கோயில்கள் இருக்கின்றன. இவற்றுள் புற்றிடங்கொண்டார் (வன்மீகநாதர்) எழுந்தருளியிருக்கும் திருக் கோயிலே பூங்கோயில் எனப் பெயர்பெறும். இதுவே திரு மூலட்டானம் எனவும் வழங்கப்பெறும். இதற்கு முப்பத்துநான்கு பதிகங்கள் இருக்கின்றன.

அரநெறி, நமிநந்தி அடிகள் நாயனார் தண்ணீரால் திருவிளக் கேற்றி வைத்து வழிபட்ட திருக்கோயிலாகும். இச்செய்தியைத் திருநாவுக்கரசு பெருந்தகையார் இவ்வூர்த் திருவிருத்தத்தில் ''நம்பி நந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீணாடறியுமன்றே'' எனச்சிறப் பித்துள்ளனர். இது, கோயில் திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழதேவரது மனைவியாராகிய செம்பியன் மாதேவியாரால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது. இதற்கு அப்பர் அருளிய பதிகங்கள் இரண்டு உள்ளன. இக்கோயில் இரண்டாம் பிராகாரத்தில் மேற்குமுகமாக இருக்கின்றது.

பரவையுள் மண்டளி, பரவைநாச்சியார் தமது மாளிகையின் ஒரு பகுதியில் மண்ணால் சிறுகோயில் கட்டி, அதில் இறைவனை எழுந்தருளுவித்து நாளும் வழிபட்ட கோயிலாகும். இது சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்ற சிறப்புடையது. இது தெற்குக் கோபுரத் திற்கு அண்மையில் இருக்கின்றது. (ஒருகாலத்து வருணன் இந்நகர்மீது அனுப்பிய கடலை உண்டமைபற்றி இத்தலத்துக்குப் பரவையுண் மண்டளி என்னும் பெயரெய்தியது என்றும் கூறுவர்).

ஆக, இத்தலத்திற்கு முப்பத்தேழுபதிகங்களும், வேறு திரு முறைகளில் பல பாடல்களும் இருக்கின்றன. இத்தலத்தின் தேரும், திருவிழாவும், திருக்கோயிலும், திருக்குளமும் இவ்வூர்த் தேவாரங் களில் வைத்துப் பாடப்பெற்றுள்ளன. திருக்குளமும் திருக்கோயிலும், செங்கழுநீர் ஓடையும் தனித்தனி ஐந்துவேலிகள் பரப்புடையன. பிறக்க முத்திதருவது, தியாகேசர் எழுந்தருளிய ஏழுவிடங்கத் தலங்களுள் முதன்மைபெற்றது. பஞ்ச பூதத் தலங்களில் பிருதிவித் தலமாயுள்ளது. திருமகளால் பூசிக்கப் பெற்றது. இங்குள்ள தேவாசிரிய மண்டபத்திலிருந்த அடியவர்களைக் கண்டுதான் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையை அருளினார். அவர் விருத்தாசலத்தில் மணிமுத்தாநதியில் இட்ட பொன்னை மிகப்பெரிய கமலாலயம் என்னும் திருக்குளத்திலிருந்து எடுத்துப் பரவையார்க்குக் கொடுத்த பழம்பதி இதுவேயாகும். அவர் பொருட்டுப் பரவை நாச்சியாரிடம் சிவபெருமான் இருமுறை நள்ளிரவில் தூது நடந்து

Koviloor Digital Library

சென்ற திருவீதியை உடையது. இச்செய்தியை ''அடியேற்கு எளிவந்த தூதனை''என்னும் அவரது தேவாரப் பகுதி உறுதிப்படுத்தும். காஞ்சிபுரத்தில் ஒருகண் பெற்ற அவர் ''மீளா அடிமை'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி மற்றொரு கண்பார்வையும் பெற்றது, இத்தலத்தில்தான். நமிநந்தி அடிகள், செருத்துணை நாயனார், தண்டியடிகள் நாயனார், கழற்சிங்க நாயனார், விறன்மிண்ட நாயனார் இவர்கள் முத்திபெற்றதும் இப்பதியிலேதான். இத்தலம் சோழமன்னர்கள் முடிசூட்டிக்கொள்ளும் தலங்கள் ஐந்தனுள் ஒன்றாகும். ஒருகுலத்துக்கு ஒருமகன் உள்ளான் என்பதையும் ஓராது ஓரான்கன்றுக்காகத் தன் மகனது உயிரைப் போக்கிய மனுநீதிச் சோழன் ஆண்டதும் இப்பதியேதான். ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந் தருளியிருப்பதால் இப்பதியின் பெருமையை அளவிடுவார் யார்? இதை விரிப்பின் அகலும். தொகுப்பின் எஞ்சும். பெரியபுராணத்தி லுள்ள திருவாரூர்ச் சிறப்பு என்னும் பகுதி படித்து இன்புறுதற் குரியதாகும்.

திருவாதிரைத் திருவிழா: பழங்காலத்தில் இவ்விழா பெருஞ் சிறப்புடன் கொண்டாடப்பட்டுவந்தது. அவ்விழாவை அப்பர் சுவாமிகள் கண்டு களித்து, அதன் சிறப்பை ''முத்து விதானம்'' என்று தொடங்கும் ஒரு தனித் திருப்பதிகத்தினால் ஞானசம்பந்தப் பெருந் தகையார்க்குக் கூறியருளியிருக்கிறார்கள்.

பங்குனி உத்திரத் திருவிழா: இது மாசிமாதம் அத்த நட்சத்திரத்தில் கொடியேறி, பங்குனி உத்திர நட்சத்திரத்தில் தீர்த்தம் நடைபெறும், திருவிழாவாகும். இவ்விழா நினைவிற்கு வரவே ஒற்றியூரிலிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் சூளுறவையும் மறந்து, திருவாரூர்க்குப் புறப்பட்டார் என்று பெரியபுராணம் செப்புகின்றது. அதனால் இவ்விருவிழாக்களும் பழங்காலமுதல் நடந்துவரும் சிறப் புடையன வாதலை நன்கறியலாம்.

பூங்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருப் பெயர்கள் வன்மீகநாதர், புற்றிடங்கொண்டார், திருமூலட்டான நாதர். இறைவியாரின் திருப்பெயர் அல்லியம்பூங்கோதை அம்மை. யோக நிலையில் தனிக்கோயிலில் கமலாம்பிகையாக எழுந்தருளி யுள்ளார்.

இக்கோயிலில் விளங்கும் கட்டளைகளுள், இராஜன் கட்டளை தருமை ஆதீன அருளாட்சியில் உள்ளது.

Koviloor Digital Library

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் தியாகராசர் முதலில் திருமாலால் திருப்பாற்கடலில் வழிபடப்பெற்றவர். பிறகு அவரால் இந்திரனுக்கும், பிறகு இந்திரனால் முசுகுந்த சக்கரவர்த்திக்கும் அளிக்கப்பெற்று, அந்த முசுகுந்த சக்கரவர்த்தியால் இவ்வூரில் பிரதிட்டை செய்யப்பெற்றவர். மார்கழித் திருவாதிரையும் பங்குனி உத்திரமும் இவரை வழிபடற்குரிய சிறந்த நாள்கள் என்று அறிஞர்கள் உரைத்துள்ளனர். இவர் எழுந்தருளியிருக்கும் இடம் தேவசபை என்றும், இவருக்குத் தென்றல்காற்றுவரும் கல்சன்னல் திருச்சாலகம் என்றும், இவருக்குரிய கொடி தியாகக்கொடி என்றும், இவருடைய தேருக்கு ஆழித்தேர் என்றும், இவரை எழுந்தருளப்பண்ணும் பிள்ளைத் தண்டுகள் திருவாடுதண்டு, மாணிக்கத்தண்டு என்றும் பெயர் பெற்றுள்ளன. இவர் சந்நிதியில் நந்திதேவர் நின்ற திருக்கோலத்தில் உள்ளார். இத்தலத்து வழிபாட்டுக் காலங்களுள் திருவந்திக்காப்பு மிக்க விசேடமுடையது. இவருடைய நடனம் அஜபாநடனம், புயங்க நடனம் எனப் பாராட்டப்படும். ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச சுவாமிகள் தருமை ஆதீனத்தை நிறுவிய ஸ்ரீ குருஞான சம்பந்தருக்கு உபதேசம் செய்த அருள்மிகு சித்தீச்சுரம் திருக்கோயில், ஆலயத்தின் வடபால் உள்ளது.

தலவிநாயகர் வாதாபிவிநாயகர்.

1. திருவாரூர் மும்மணிக்கோவை:- இது அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பெற்றது. பதினோராந் திருமுறையில் உள்ள நூல்களுள் ஒன்றாய் விளங்கும் சிறப்புடையது.

2. *கமலாலயச் சிறப்பு*:- இது சிதம்பரம் மறைஞான சம்பந்தரால் இயற்றப்பெற்றது.

3. *திருவாரூர்ப் புராணம்*:- நிரம்ப அழகியதேசிகருடைய மாணாக்கராகிய அளகைச் சம்பந்தர் என்பவரால் செய்யப்பெற்றது.

4. *திருவாரூர் உலா*:- அந்தகக்கவி வீரராகவ முதலியாரால் இயற்றப்பெற்றது.

5. *தியாகராச லீலை*:- திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. இது முற்றுப்பெறாத நிலையில் உள்ளது.

Koviloor Digital Library

6. *திருவாரூர் நான்மணிமாலை*:- இதை அருளியவர் குமரகுருபர சுவாமிகள்.

7. *தியாகராசப் பள்ளு*:- இதை ஆக்கியோர் பதினாறாம் நூற்றாண்டில் விளங்கியிருந்த கமலைஞானப்பிரகாசர் ஆவர்.

8. *திருவாரூர்ப் பன்மணிமாலை*:- இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாததேசிகரால் ஆக்கப்பெற்றது.

9. *திருவாரூர் ஒரு துறைக்கோவை*:- இது வெறிவிலக்கு என்னும் ஒரு துறையை வைத்துக்கொண்டு நானூறு பாடல்களால் ஆக்கப்பெற்றதொரு நூல். இதன் ஆசிரியர் கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர் என்பர்.

10. *திருவாரூர்க் கோவை*:- இது எல்லப்ப நயினார் என்னும் புலவரால் பாடப்பெற்ற சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய நூல்.

11. *கமலாம்பிகை பிள்ளைத்தமிழ்*:- தருமை ஆதீனத்து அடியார் கூட்டங்களில் ஒருவராய் விளங்கியிருந்த சிதம்பர முனிவரால் இயற்றப்பெற்றது.

இவைகளன்றித் *திருவாரூர் மாலை, கமலாம்பிகை மாலை*, முதலான நூல்களும், காளமேகப்புலவர் முதலானோரின் தனிப் பாடல்களும் இருக்கின்றன.

கமலாலயத்தின் வடகிழக்கு மூலையில் மாற்றுரைத்த பிள்ளையாரின் திருக்கோயில் இருக்கின்றது.

''திருவாரூர்த் தேரழகு'' என்னும் உலக வழக்கு இவ்வூர்த் தேரின் சிறப்பைத் தெரிவிப்பதாகும்.தலப்பெருமையை விளக்கும் புராணப்பாடல் ஒன்று பின் வருமாறு:-

திருமகள் தவஞ்செய் செல்வத் திருவாரூர் பணிவ னென்னா
ஒருவனே ழடிந டந்து மீண்டிடின் ஒப்பில் காசி
விரிபுனற் கங்கை யாடி மீண்டவ னாவனென்றால்
இருடிகாள் ஆரூர் மேன்மை பிரமற்கு மியம்ப வற்றோ.

-திருவாரூர்ப் புராணம் தலமகிமைச் சுருக்கம்.

Koviloor Digital Library

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில், பிற்காலச் சோழ மன்னர்களுள், முதலாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் (அ) கங்கைகொண்ட சோழன், முதலாம் இராஜாதிராஜன் முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் இராஜேந்திரன், இவர்கள் காலங்களிலும், பிற்காலப் பாண்டியர்களுள் மாறவர்மன் குலசேகரதேவன், மாறவர்மன் ஸ்ரீவல்லபன் இவர்கள் காலங்களிலும், விஜயநகர வேந்தர்களுள் கேசவப்பநாயக்கர் மகனார். அச்சுதப்பநாயக்கர் முதலானோர் காலங்களிலும் பொறிக்கப் பெற்ற அறுபத்தைந்து கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இக்கல்வெட்டுக்களுள் வன்மீகநாதரின் பெயர் புற்றிடங் கொண்டார் என்றும், தியாகராசரின் பெயர் வீதிவிடங்கர், திருவாரூர் உடையார் வீதிவிடங்க மாதேவர் எனவும், அம்மையார் திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் என்றும், அரநெறிக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் இறைவர், திரு அரநெறி உடையார் என்றும், பரவையுண் மண்டளியில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருமண்டளியுடைய மகாதேவர் என்றும் குறிக்கப்பட்டனர்.

அரநெறிக்கோயில்: இக்கோயிலைக் கற்றளியால் கட்டியவர், கோயில் திருவிசைப்பா (பதிகம்) பாடிய கண்டராதித்த சோழதேவரது மனைவியாராகிய செம்பியன் மாதேவியார் ஆவர். இத்திருக்கோயில் அரநெறி உடையார்க்குத் திருநொந்தா விளக்கு இரண்டினுக்குக் குரு காலன் திருமூலட்டானத் தொண்டர் மேன்மங்கலத்தில் மூன்றுவேலி நிலத்தை முதல் இராஜராஜ தேவரின் ஆட்சியாண்டு இருபது, நாள் இருநூற்று ஏழில் கொடுத்துள்ளார். முதலாம் இராஜாதிராஜரின் இருபத்தேழாம் ஆண்டில் அரநெறி உடையார்க்கு அணுக்கியார் பரவை நங்கையார் தீபங்குடி மேல்மங்கலம் கிராமத்தில் வழி பாட்டிற்காக நிலம் கொடுத்திருந்தனர்.

ஏனைய கோயில் கல்வெட்டுக்களில் கண்ட செய்திகள்:-

கோனேரின்மைகொண்டான் திருவாரூர் மூலத்தான முடையார்க்குத் திருப்போனகத்திற்கும் தான் பிறந்த நாளில் விழா எடுப்பதற்கும் நிலம் விட்டிருந்தான். கங்கைகொண்ட சோழனது மகனாகிய முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் பூண்டிக்கூத்தன்

Koviloor Digital Library

செம்பியன் மூவேந்தவேளான், வீதிவிடங்க தேவர்க்கு அணிகலன்கள் அளித்திருந்தான். அவன்மீது நான்கு பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. வீதிவிடங்கப் பெருமானின் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் இவைகளைப் பொன்வேயுமாறு, கங்கைகொண்ட சோழனது இரண்டாவது மகனாகிய விஜயராஜேந்திரன், வேளாக்கூத்தனாகிய செம்பியன் மூவேந்த வேளானுக்குக் கட்டளையிட்டிருந்தனன். தன்மகன் வீரசோழ அணுக்கன்மீது வீர அணுக்கவிஜயம் என்னும் நூலை எழுதிய பூங்கோயில் நம்பிக்கு, இவ்வேந்தன் நிலம் அளித்திருந்தான். இவ்வேந்தன் காலத்தில் உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டுப் புறக்குடி உடையான் சுற்றி ஆதித்தனான சோழ விச்சாதர விழுப்பரையன் இசைபாடுவோர்க்கும், கோயிலுக்கு எண்ணெய்க்கும் ஆகப் பொன் கொடுத்திருந்தான்.

குலோத்துங்கன் கல்வெட்டு ஊர்ச்சபையார் தேவாசிரயன் மண்டபத்தில் கூடிக் கோயில் காரியங்களைக் கவனித்துவந்ததைக் குறிப்பிட்டுள்ளது.

மூன்றாங் குலோத்துங்கனுடைய கல்வெட்டு, புதுநீர்வரு வழியிலுள்ள விநாயகர் ஆலயத்தைத் திருப்பணி செய்வித்து, நாள் வழிபாட்டிற்கு நிலம் அளித்திருந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளது. மூன்றாம் இராஜேந்திரன் திருக்கோயிலுக்கு முன்புள்ள திருமாளிகை விநாயகப் பிள்ளையார் கோயிலை எடுப்பித்தான். இங்ஙனம் சோழ மன்னர்களே யன்றிப் பிற்காலப் பாண்டியர்கள் முதலானோர்களும் நிலம் முதலியவற்றை உதவியுள்ளனர்.

இசைஞானியார்:- சிவநெறிக்குரவர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனாரின் அரும்பெறல் தாயார் இசைஞானியார் என்பதையும், அவ்வம்மையார் கௌதம கோத்திரத்தைச் சேர்ந்த ஞான சிவாசாரியாருடைய மகளார் என்பதையும் அவர் திருவாரூர்ப் பதியினர் என்பதையும் ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.

இச்செய்தி சேக்கிழார் பெரியபுராணத்தில் இசைஞானியார் புராணத்தில் காணப் பெறாததாகும்.

மனுநீதிச்சோழன்:- விக்கிரம சோழதேவரின் ஐந்தாம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு பெரியபுராணத்தில் கூறப் பெற்றுள்ள மனுநீதிச்சோழனின் செயலை உறுதிப் படுத்துவதோடு, அம்மனுநீதிச் சோழனின் மந்திரியாயிருந்தவன் உபயகுலாமலன் என்பதையும், அவன் சோழமண்டலத்தில் இங்கணாட்டுப் பாலையூரினன்

Koviloor Digital Library

என்பதையும் அம்மந்திரியின் வழியில்வந்த பாலையூர் உடையான் சந்திரசேகரனாதி வீதி விடங்கனான குலோத்துங்கசோழ மாபலிவாணராயன் என்பவன் விக்கிரமசோழன் காலத்தவன் என்பதையும், அவன் வேண்டுகோளின்படி, அவன் வம்சாதியாக வருகிற மாளிகை மனையில், நாள்தோறும் அடியார்க்கு அமுது இடப் பெற வேண்டுமென்று மந்திரியாகிய குலோத்துங்க சோழ மாவலிவாணராயன் அரசனிடம் விண்ணப்பித்துக்கொள்ள, அரசனும் (விக்கிரம சோழனும்) அதற்கு இசைந்தருளியதை உணர்த்துவதாகும்.

நம் ஏவலால் பூலோக ராஜ்யம் செய்கிற சூரியபுத்திரன் மநு, தன் புத்திரன் ஏறிவருகிற தேரில் பசுவின்கன்றகப்பட்டு, வருத்தமுற, அதன் மாதாவான சுரபி கண்டு துக்கித்து மநுவின் வாசலின் மணியை எறிய, அதுகேட்டு மநு தன் மந்திரி இங்கணாட்டுப் பாலையூருடை யான் உபயகுலாமலனைப் பார்த்து நீசென்று இதனை அறிந்து.... வாயிற்புறத்து ஒரு பசு மணி எறியாநின்றது என்று சொல்ல அதுகேட்டு மநு புறப்பட்டுப் பசுவையும் பட்டுக்கிடந்த.....படி வினவித் தன் புத்திரன் பிரியவிருத்தனைத் தேரிலே ஊர்ந்து குறுக்கவென்று உபய குலாமலனுக்குச் சொல்ல அவன் சந்தாயத்தோடும் புறப்பட்டுத் தன் செவிகளைத் தரையிலே குடைந்துகொண்டு துக்கித்தானாய், மநுதானே புறப்பட்டுத் தன் புத்திரனைத் தானே தேரிலே ஊர்ந்து குறுக்க, அப்போதே நாம் அவனை அநுக்கிரகித்து, கன்றுக்கும் மந்திரிக்கும், மநு புத்திரனுக்கும் ஜீவன்கொடுக்க, அதுகண்டு மநு சந்தோஷித்துக் கன்றினை எடுத்துக்கொண்டு பசுவுக்குக் காட்டி, குடு..... அபிஷேகம் பண்ணி'' எனத் தொடர்கின்றது.

திருவாரூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு:- முதல் இராஜராஜன் காலத்தில் இவ்வூர் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் எனவும், முதலாம் இராஜாதிராஜன் காலத்தில், அதிராஜேந்திர வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் எனவும், முதற் குலோத்துங்கசோழன் காலத்தில் செயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் எனவும் வழங்கப்பட்டு வந்தது.

வீதிகளுக்குப் பெயர்கள்:- [1]இவ்வூர் வீதிகளுக்கு

[1] See the South Indian Inscriptions Volume IV, No. 397, page 119. See also the Annual Reports on South Indian Epigraphy for the year 1890, No. 73-74; year 1894 No. 164; year 1901 No. 269; year 1904 No. 533-579; year 1918 No. 553; year 1919 No. 669-681.

Koviloor Digital Library

ஆன்றோர்களால் இடப்பெற்றிருந்த பெயர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளன.

அவைகளாவன:- திருவடிப்போது நாறிய திருவீதி, ராஜராஜன் திருவீதி, குலோத்துங்கன் திருவீதி என்பனவாகும்.

8. திருஆவடுதுறை

திருக்கயிலாயத்தில் இறைவி இறைவனோடு சொக்கட்டான் ஆடிக்களித்தமையால் பசு வடிவம் எய்தினர். அவர் அப் பசு வடிவத் தோடு இங்கு வந்து வழிபட்டு அவ் வடிவம் நீங்கப்பெற்றனர் என்னும் காரணம் பற்றி இப்பெயர் பெற்றது என்பர்.

இது நரசிங்கன்பேட்டை தொடர்வண்டி நிலையத்திற்குத் தென் கிழக்கே 1.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் முப்பத்தாறாவது தலம். இத்தலம் மயிலாடுதுறை - கும்பகோணம் பேருந்து வழியில் திருவாலங்காட்டை அடுத்துள்ளது.

பிள்ளையார் 1. துணைவந்தபிள்ளையார். 2. அழகிய பிள்ளையார். இறைவரின் திருப்பெயர் மாசிலாமணியீசுரர். இவரே கர்ப்பஇல்லில் எழுந்தருளியிருப்பவர். அணைத்தெழுந்தநாயகர்; இவர் உமாதேவியை அணைத்தெழுந்த கோலமாக இருப்பவர். திருவிழாவின் முடிவில் கோமுத்தி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தரு ளுபவர் இவரே. செம்பொன் தியாகர்: முசுகுந்தச்சக்கரவர்த்திக்கு இறைவர் திருவாரூர்த் தியாகராசராகக் காட்சி காட்டியருளியமையால் இவர்க்கு இங்கே தனிச் சந்நிதி இருக்கிறது. இவர் வீரசிங்காதனம் உடையவர். இவரது நடனம் சுந்தர நடனம். திருவிழாக்காலத்தில் திருத்தேரில் எழுந்தருள்பவர் இவரேயாவர்.

இறைவியின் திருப்பெயர் ஒப்பிலாமுலையம்மை. இத்திருப்பெயர் சுந்தர மூர்த்திநாயனாரால் 'ஒப்பிலா முலையாள் ஒரு பாகா'' என்று இவ்வூர்ப் பதிகத்தில் எடுத்து ஆளப்பெற்றுள்ளது. தீர்த்தங்கள் கோமுத்தி தீர்த்தம், பத்மதீர்த்தம், கைவல்யதீர்த்தம் என்பன. இவை முறையே திருக்கோயிலுக்கு எதிரிலும், கொங்க ணேசுவரர் கோயிலின் பக்கத்திலும், திருக்காவிரியிலும் இருக்கின்றன.

மரம் அரசு. இது படர்ந்து விளங்குதலால் படர் அரசு என்றும் வழங்கப்பெறும். சபை போதி அம்பலம். தேவர்களும் முனிவர்களும்

Koviloor Digital Library

செய்த வேண்டுகோளுக்கு இரங்கி இவ் வரசமரத்தின் நிழலில் அமர்ந்த அம்பலத்தில் இறைவர் தாண்டவம் புரிந்தமையால் இப்பெயர் பெற்றது. (போதி - அரசமரம்.) நந்தி தருமநந்திதேவர். தலத்திற்கு வழங்கும் வேறுபெயர்கள்:- கோமுத்தி, கோகழி, நவகோடிசித்தபுரம் முதலியன.

முசுகுந்தமன்னனுக்கு மகப்பேறு அளித்தது; தரும தேவதையை இடபவாகனமாகக் கொண்டதன்றிச் சந்நிதியில் அரசமரத்தின் நிழலில் கோயில்கொண்டு இருக்கும்படி அருளியது; திருஞானசம்பந்த சுவாமிகளுக்குப் பொற்கிழியளித்தது; திருமூலநாயனாரைத் தடுத்தாட்கொண்டு ஆகமசாரமாகிய திருமந்திரத்தை வெளிப்படுத்தத் திருவருள் புரிந்தது; போகர் முதலிய சித்தர்களுக்கு அட்டமாசித்தியை அருளியது முதலியவை இப்பதியில் இறைவர் நிகழ்த்தியருளிய விசேடங்களாகும். இவைகளுள் ஞானசம்பந்தப் பெருந்தகையார்க்கு இறைவர் ஆயிரம் பொன் அளித்தருளியதை ஆண்ட அரசர் (திருநாவுக்கரசர்) இவ்வூர்ப் பதிகத்தில் ''கழுமலவூரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே' எனக் கூறியிருப்பது அறிதற்குரியதாகும். மூவர்களுடைய திருப்பதிகங்கள் எட்டையும், திருமூலர் திருமந்திரம் மூவாயிரம் பாடல்களையும், சேந்தனார் திருவிசைப்பாப் பதிகம் ஒன்றையும் பெற்ற பெருமை யுடைய பதி இது.

திருக்கயிலாய பரம்பரையில் சிவஞானதேசிகராய் எழுந் தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளால் நிறுவப்பெற்றதும், சைவ சித்தாந்தத்திற்கும் தமிழுக்கும் நல்ல ஆக்கத்தை அளித்து வருவதும் ஆகிய பழமையும் பெருமையும் வாய்ந்த திருமடாலயம் ஒன்று திகழும் பதி இது.

இவ்வூர்த் திருக்கோயிலில் பிற்காலச் சோழமன்னர்களுள், முதலாம் பராந்தகன் முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், இவனது மகனாகிய விஜயராஜேந்திரன், முதற்குலோத்துங்கன், விக்கிரமசோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜதேவன் முதலானோர் காலத்தவையும், பாண்டியர்களுள் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்ததுமான கல்வெட்டுக்கள் உள.

திருக்கோயில் கட்டப்பெற்ற காலம்:

இத்திருக்கோயிலில் தில்லைச்சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்த முதற்பராந்தக சோழன் காலத்து ஒன்பது கல்வெட்டுக்கள்

Koviloor Digital Library

பொறிக்கப்பெற்று இருக்கின்றன. இப்பராந்தகன் கி. பி. 907 முதல் கி.பி. 948 வரை சோழமண்டலத்தை ஆட்சி புரிந்தான். இம்மன்னன் தன் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் (907 + 38 = கி. பி. 945) 500 கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். அப்பொன்னைக்கொண்டு இக்கோயில் குடப்படை பீடத்துக்குமேல் திருப்பணி செய்யப்பெற்றது. அத்திருப்பணி முடிவு பெற்று கும்பாபிடேகஞ் செய்யக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது சென்றிருக்கவேண்டும். பராந்தகன் ஆட்சியின் இறுதிக்காலத்தில் (கி. பி. 947) அதாவது, இன்றைக்கு 1040 ஆண்டுகளுக்கு முன்பே இக்கோயில் கற்றளியால் ஆக்கப் பெற்றதாகும்.[1]

கற்றளியைக் கட்டியவர்:

பராந்தகன் காலத்தில் இக்கற்றளியைக் (கருங்கல்கோயிலை) கட்டியவர் கற்றளிப்பிச்சர் ஆவர். இவருடைய பிரதிமை கர்ப்ப இல்லின் தென்புறத்தே அதாவது தட்சிணாமூர்த்தி சந்நிதிக்குக் கீழ்ப்புறத்தில் கைகளை மார்பிற்கு நேரே குவித்துத் திருவாவடுதுறை உடையாரை வழிபடும் நிலையில் இருக்கின்றது. கற்றளிப் பிச்சன் என்று அவரது பெயர் செதுக்கப்பட்டுள்ளது. பிச்சன் என்றால் அன்புடையவன் என்று பொருள் ''நின்கோயில் வாயில் பெரிய பிச்சனாக்கினாய்'' என்பது திருவாசகம்.

இக்கற்றளிப்பிச்சர் பிரதிமைக்குக் கிழக்குப் புறத்தே கைகளைத் தலைமேல் குவித்து வழிபடும் பிரதிமை ஒன்று இருக்கின்றது. இவர் கற்றளிப்பிச்சனார்இளவல் திருநாவுக்கரைய தொண்டராவர்.

கற்றளிப்பிச்சனார் இக்கோயிலைக் கட்டினார் என்பதற்கு ஆதாரம்:

''ஸ்வஸ்திஸ்ரீ மதுரைகொண்ட கோப்பரகேஸரி வன்மற்கு யாண்டு இருபத்தைந்தாவது தென்கரைத் திருவழுந்தூர் நாட்டு பிர்ம தேயம் சிற்றானைச்சூர்ஸபையோம். இவ்வூர் கவிசங்கரன் மாறனிடைத்திரைமூர் நாட்டு பிர்மதேயம் சாத்தனூர் திருவாவடுதுறை கற்றளி எடுத்தபித்தன் மஹாதேவர்க்கு உவச்சப்புறமாக விலை கொண்ட நிலம் பதினொருமாச் செய்யும்'' என்னும் கல்வெட்டுப்பகுதி விளக்குகின்றது. (இக்கல்வெட்டு அகத்தியர் பிரதிமைக்கு மேற்குப்

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the years 1925 - 1926. Numbers 101 - 162, 59 - 72.

Koviloor Digital Library

பக்கத்தில் இருக்கிறது. உவச்சர் என்பார் சங்கு, காளம், இவைகளை ஊதுபவர். புறம் = நிவந்தம். உவச்சப்புறம் - என்பது சங்கு, காளம் இவைகளை ஊதுபவர்களுக்கு நிவந்தமாக அளிக்கப்பெற்றது எனப்பொருள்படும்.)

கோயிலின் சிற்சில பகுதிகளைச் செய்வித்தவர்:

அர்த்த மண்டபத்தின் வடபால், துர்க்காதேவிக்குக் கீழண்டைப் பக்கத்தில் திருவாவடுதுறை உடையாரைத் தொழுவாராக ஒரு ஆடவரின் பிரதிமையும் அவருக்குப் பக்கத்தில் ஒரு அம்மையாரின் பிரதிமையும் இருக்கின்றன. அவர்கள் இக்கோயிலில் ஒருபடை செய்வித்தவர் ஆவர். அப்பிரதிமைகளுக்கு அருகில் ''இக்கோயிலில் ஒருபடை செய்விச்சு இநின்றான் வாமபூசலுடையான் எழுவன் சத்திரசேகரன் இவன் பின்பே நின்றாள் பெரிய வேளத்து வானல்லடிகள் நக்கன்'' என்று தீட்டடப்பட்டிருக்கின்றன. அர்த்த மண்டபத்தின் தென்பாகத்தில் பிள்ளையார் திருமேனிக்குக் கிழக்குப் பக்கத்தில் ''கல்கட்டுவித்தார் பல்லவமகாதேவியார் சிவகாமு'' என்று செதுக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வம்மையாரும் இப்பகுதியைக் கட்டுவதற்கு உதவி செய்தவர் ஆவர். கர்ப்ப இல்லின் தென்புறத்தில் தட்சிணாமூர்த்தி திருமேனிக்கு மேற்குப் பக்கத்தில் கைகளைத் தலைமேல் குவித்து வணங்கும் ஒரு பிரதிமை இருக்கிறது. அதன்கீழ் ''ஸ்ரீ திருவாவடுதுறை உடையார் அடியான் அம்பலவன் திருவிசலூரான் திருநாவுக்கரையன்'' என்று செதுக்கப்பட்டுள்ளது. இவனும் இத்திருப்பணிக்கு உதவி செய்தவன் ஆவன். இத்தட்சிணா மூர்த்திக்கு மேற்குப் பக்கத்தில் இருக்கும் பிரதிமை மிறைக்கூற்றத்து வீரமாங்குடி உடையானது ஆகும். அர்த்த மண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரில் வாசலுக்கு வடபால், மார்பில் கைகளைக் குவித்துக்கொண்டு இறைவனை வழிபடும் நிலையில் செதுக்கப்பட்டிருக்கும் பிரதிமை திருநறையூர் நாட்டுச்சிற்றாடியான் தாமன் அம்பலவனான நமசிவாய னுடையதாகும்.

இறைவரின் திருப்பெயர்:

இத்திருக்கோயிலில் எழுந்தருளும் இறைவர், திருவாவடு துறைத் தேவர், திருவாவடுதுறை ஆழ்வார், திருவாவடுதுறை உடையார், திருவாவடுதுறைப்பெருமான் அடிகள் என்னும் திருப்பெயர்களால் இக்கோயில் கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ள னர். மிகப் பிற்காலத்துக் கல்வெட்டு ஒன்று இறைவர் திருப்பெயரைக் கோமுத்தீஸ்வரர் என்று குறிப்பிடுகிறது.

Koviloor Digital Library

இறைவியாரின் திருப்பெயர்:

மிகப் பிற்காலத்துக் கல்வெட்டு இறைவியாரின் திருப்பெயரை அதுல குச நாயகி எனக் கூறுகின்றது.

இத்திருக்கோயிலில் மிகப் பழங்காலத்தில் எழுந்தருளுவிக்கப் பெற்ற திருமேனிகளும் பிரதிமைகளும்:

சிற்றம்பலத்திருமேனி முதல் ஆடி அருளும் உடையாரும், ஆட்டத்திற்கு வாசிக்கும் பூதமமைத்த பீடமும் பிரபையும் (திருவாசி) உட்பட முழ உயரத்து ஒருவர். இவர் நம்பிராட்டியார் பீடமும் பிரபையுமுள்பட இருந்த ஒருமுழமும் ஆறுவிரல் உயரத்து ஒருவர்: சந்திரசேகர தேவர் பீடமும் பிரபையும் உட்பட இருமுழ உயரத்து ஒருவர். இவர் நம்பிராட்டியார் பத்மத்தோடும் ஒருமுழ உயரத்து ஒருவர்; திரிபுவன சுந்தரர் பீடமும் பிரபையும் உட்பட மும்முழ உயரத்து ஒருவர். கணபதியார் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழ உயரத்து ஒருவர்; சந்திரசேகர தேவர் பீடமும் பிரபையும் ஒருசாணும் ஒருவிரல் உயரத்து ஒருவர்: க்ஷேத்திர பால தேவர் பீடமும் பிரபையும் உட்பட ஒரு முழ உயரத்து ஒருவர். மேற்படி தேவர் பீடம் உட்பட ஒருசாணே நால்விரல் உயரத்து ஒருவர். இடபவாகன தேவரும் பிராட்டியாரும், இடபமும் பீடமும் பிரபையுமுட்பட மும்முழ உயரத்து ஒருவர். பிச்சதேவர் மானும் பூதமும் பீடமும் பிரபையும் உட்பட இருமுழ மூவிரல் உயரத்து ஒருவர். அர்த்த நாரி தேவர் பத்மத்தொடு ஒரு முழம் ஓட்டை உயரத்து ஒருவர். தட்சிணாமூர்த்தி ஒரு முழ உயரத்து ஒருவர். பள்ளிக்கட்டில் நம்பிராட்டியார் பீடமுட்பட இருமுழ உயரத்து ஒருவர். அஸ்திரதேவர் நடுவுமாகத் தண்டொடும் ஒருவர். இடபதேவர் பீடமுட்படத் திருக்காம்பு அளவும் ஈரொட்டை உயரத்து ஒருவர். சண்டேசுவர தேவர் பீடமுட்பட இருந்த ஒருமுழ உயரத்து ஒருவர். திருநாவுக்கரைய தேவர் ஒருமுழமும் நான்கு விரல் உயரத்து ஒருவர். சிவஞானசம்பந்த அடிகள் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழம் ஆறுவிரல் உயரத்து ஒருவர். நம்பி ஆரூரனார் பத்மத்தோடு ஒரு முழமும் ஆறுவிரல் உயரத்து ஒருவர். திருக்காளத்திப்பிச்சர் தம்மையாக வார்த்த ஒருமுழ உயரத்து ஒருவர்.

வெண்கலம், பித்தளை, செம்பு, தரா இவைகளினால் செய்யப் பெற்ற பாத்திரங்களும் குத்துவிளக்கு வகைகளும்:

வெண்கலம் முதல் உரு ஐம்பத்துமுன்றினால் வெள்ளிக்

Koviloor Digital Library

கோலால் நிறை ஆயிரத்து நானூற்று இருபத்து முப்பலவரை. பித்தளை முதல் உரு மாண்டினால் மேற்படி கோலால் நிறை நூற்றேழுபலம். செப்பு முதல் உரு எழுபதினால் மேற்படி கோலால் நிறை தொள்ளா யிரத்து இருபத்தைம்பலனே கஃசு. தராமுதலுரு நாற்பத்துநாலினால் மேற்படி கோலால் நிறை இரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தைம் பலவரை. தராகுத்துவிளக்கு-கருவும் உட்பட விளக்கு முப்பது. இவ்வூர்க் கவுணியன் இந்நிலத்தானாக வார்த்த விளக்கு ஒன்று ஆக விளக்கு முப்பத்தொன்று.

அணிகலன்களும் பரிகலன்களும்:

உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழதேவர் நம்பிராட்டியார் திரைலோக்கியமாதேவியாரின் தாயாரான இராமன் அபிமான தொங்கியார், திருவாவடுதுறை உடையார்க்கு அமுது செய்தருள வெள்ளித் தளிகை ஒன்று குடிஞைக் கல்லால் எழுபதின் கழஞ்சு நிறை உள்ளதும், உடையார்க்குப் பொற்கொள்கை ஒன்று குடிஞைக் கல்லால் செம்பொன் நாநூற்று ஒருபத்து முக்கழஞ்சரை நிறையுள்ளதும் ஆகிய இவ்விரண்டையும் கொடுத்திருந்தனர். உடையார் இராஜாதிராஜ தேவர், பெரியவேளத்து அலோயன் அணுக்கி, மேற்படி வேளத்து மற்றொரு அம்மையார் இவர்கள் கொடுத்த பொன்னால் பொற்பூ இருபத்தேழு, செங்கழுநீர்ப்பூ முப்பத்தாறு, மாந்தளிர் ஒன்று, பிட்ச தேவர் கண்டக் காறை ஒன்று, பொற்கை ஈச்சோப்பி ஒன்று. இவைகள் செய்யப்பெற்று அணிவிக்கப்பெற்றுவந்தன.

திருவிழா:

இத் திருக்கோயிலில் புரட்டாசி மாதத்தில் ஏழு நாள்களில் திருவிழா நடைபெற்றுவந்தது. அக்காலம் மூலநட்சத்திரத்தன்று கொடியேறி பூரட்டாதி நட்சத்திரத்தன்று தீர்த்தமாடுவது வழக்கம். இச்செய்தி, 'திருமா எடுத்த நாள் மூல முதல் அடக்கடவ அரிசி அரிய சிவயோகிகளுக்கும் பத்தர்களுக்கும், மாகேசுவரர்களுக்கும் அரிசி தூணியும், பூராடத்தினன்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி தூணிப்பதக்கும், பன்மாகேசுவரர்க்கு அடும் அரிசி கலமும், உத் திராடத்தினன்று சிவயோகிகளுக்கு அரிசி கலமும் பன்மாகேசுவரர்க்கு அடும் அரிசி முக்கலமும் திருவோணத்தினன்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி இருகலமும், பன்மாகேசுவரர்களுக்கு அடும் அரிசி ஆறுகலமும், அவிட்டத்தினன்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி முக்கலமும், பன்மாகேசுவரர்க்கு அடும் அரிசி ஏழுகலமும், சதயத் தன்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி நாற்கலமும், பன்மா

Koviloor Digital Library

கேசுவரர்க்கு அடும் அரிசி எண்கலமும், தீர்த்தமாடும் பூரட்டாதி ஞான்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி ஐங்கலமும் பன்மா கேசுவரர்க்கு அடும் அரிசி பன்னிருகலமும் ஆக இவ் ஏழு நாளும் அடக்கடவ அரிசி ஐம்பத்திருகலமும்' என்னும் மிறைக்கூற்றத்து, வீரமாங்குடி உடையான் தாயங்காடன் என்பவன், மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மரின் முப்பத்தாறாம் ஆண்டில் இவ் விழாவிற்கு வரும் சிவயோகிகளுக்கும், பன்மாகேசுவரர்களுக்கும் ஊட்டுட்டின் பொருட்டு சிறுபுலியூரிலும், சிற்றானைச்சூரிலும் நில நிவந்தம் அளித்துள்ள கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

இவ்விழா முடிவுநாளாகிய புரட்டாசிப் பூரட்டாதிநாளில் திருமூல நாயனாரது நாடகமும் ஆரியக்கூத்து ஏழு அங்கமும் நடத்தப்பெற்று வந்தன. இச்செய்தி இக்கோயில் கர்ப்ப இல்லின் மேற்குப்புறச் சுவரில் உள்ள, முதலாம் இராஜராஜசோழதேவரது ஒன்பதாம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டினால் புலப்படுகின்றது.

மகாமண்டபத்தைக் கட்டியவன்:

இம் மகாமண்டபத்தைக் கட்டியவன் இளங்காரிகுடையான் சங்கரதேவன் ஆவன். இத் திருப்பணிக்குத் திருவெண்காடு உடையான் அனங்கனும் உதவி செய்துள்ளான். இவைகளை இம் மண்டபத்தின் உள்பக்கத்தில் இருக்கும் தூண் ஒன்றில் ''ஸ்வதிஸ்ரீ இத் திருமண்டபம் இளங்காரிமுடையான் சங்கர தேவன்'' என்னும் கல்வெட்டாலும்; இம் மகாமண்டபத்தின் தென்பக்கமுள்ள ஒரு தூணின் போதியக்கட்டை யில் உள்ள, ''இக்கல் திருவெண்காடு உடையான் அனங்கன் திருப்பணி'' என்னும் கல்வெட்டாலும் அறியலாம்.

திருமடங்கள்:

இவ்வூரில் முதற்குலோத்துங்கசோழன் காலத்தில் திருநீல விடங்கன் மடம், திருவீதி மடம், நாற்பத்தெண்ணாயிரவர் மடம் என்னும் பெயருள்ள திருமடங்கள் இருந்தன.

அறச்சாலைகள்:

இவ்வூரில் விக்கிரமசோழன் காலத்தில் பெருந்திருவாட்டி அறச்சாலை, சங்கரதேவன் அறச்சாலை, முந்நூற்று அறுபத்து நால்வன் அறச்சாலை என்னும் அறச்சாலைகள் இருந்தன. இவற்றுள் பெருந்

Koviloor Digital Library

இவைபோன்று அளிக்கப்பெற்ற நில நிவந்தங்கள் பலவாகும். (ஸ்நபனம் - திருமஞ்சனம்).

வைத்தியத்திற்கு அளிக்கப்பெற்ற நிவந்தம்:

உய்யக் கொண்டார் வளநாட்டு சோழேந்திரசிங்கமலத்து சவர்னன் அரையன் சங்கரனான உத்தமசோழ அசலரையனுக்கும் அவன் வம்சத்தார்க்கும் திருவாவடுதுறையில் வைத்யஞ் செய்து கொண்டு உண்ணும் பொருட்டு, ஆழ்வார் ஸ்ரீ பராந்தக ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார் இராஜேந்திரசிம்ம வளநாட்டு இன்னம்பர்நாட்டுப் பழையவானவன் மாதேவி சதுர்வேதி மங்கலத்துச் சபையாரிடத்தில் நூற்று இருபது காசு கொடுத்து நிலம் எட்டுமாக்காணி முந்திரிகைக்கீழ் அரையும் குழி ஒன்றும் மனை இரண்டும் வாங்கி அளித்துள்ளனர். இந்நிகழ்ச்சி முதலாம் இராஜேந்திரசோழனது நான்காம் ஆண்டில் நிகழ்ந்ததாகும்.

திருவாவடுதுறை என்பது ஊரின் பெயரா? அல்லது கோயிலின் பெயரா?

திருவாவடுதுறைக் கல்வெட்டுக்களில் ''சாத்தனூர் பிர்ம தேயம் ஸ்ரீய் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீ திருவாவடுதுறை உடையார் கோயில் தென்கரை திரைமூர்நாட்டு பிர்மதேயம் சாத்தனூர் திருவாவடுதுறை உடைய ஆழ்வார்க்கு'', எனக் குறிக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் பின்னதைப்பற்றிக் கல்வெட்டுத் துறையாளர் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டபொழுது, "Thiruvavaduthurai at Sattanur" என எழுதியுள்ளனர். இவ் ஆங்கில மொழி பெயர்ப்பைக் கொண்டு ஊரின் பெயர் சாத்தனூர். அங்குள்ள கோயிலின் பெயர் திருவாவடுதுறை எனக் கூறுவாருமுளர். அது பொருந்துவது அன்று. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஐயன்பேட்டை என்னும் பெயருடைய ஊர்கள் மூன்று இருக்கின்றன. அவைகளை மக்கள் குறிப்பிடும்பொழுது வழுத்தூர்ஐயன்பேட்டை, மனைக்கால் ஐயன்பேட்டை, காட்டூர் ஐயன்பேட்டை எனக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு கூறுவதால் வழுத்தூருக்கு அருகில் உள்ள ஐயன் பேட்டை மனைக்காலுக்கு அருகிலுள்ள ஐயன்பேட்டை என்று பொருள் படுமேயொழிய, வழுத்தூரில் ஐயன்பேட்டை இருக்கிறது என்று பொருள்படாது. அஃதேபோன்று சாத்தனூர் திருவாவடுதுறை என்றால் சாத்தனூருக்கு அருகில் உள்ள திருவாவடுதுறை என்று பொருள்படுமே ஒழிய ஊரின் பெயர் சாத்தனூர் என்றும் அங்குள்ள கோயிலின் பெயர் திருவாவடுதுறை என்றும் பொருள்படாது. சிறப்புள்ள ஊரைச்சொல்லி

Koviloor Digital Library

அதற்கு அண்மையில் உள்ளது என்று கூறுவது மரபாகும்.

திருவாவடுதுறைக் கோயிலிலுள்ள 'ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மைகொண்டான்' எனத் தொடங்கும் விக்கிரம பாண்டியன் கல்வெட்டில் காணப்பெறும், துறைசையார் அகரமான இராஜேந்திரசோழச் சதுர்ப்பேதிமங்கலத்துப் பிடாகை கூத்தனூர் கொடியாலத்து விட்ட நிலம் பதிற்றுவேலியும் என்னும் கல்வெட்டுப் பகுதியால் கூத்தனூர் கொடியாலத்தில் நிலம் அளித்த செய்தி பெறப்படுகின்றது. கூத்தனூர் கொடியாலம் இவை இரண்டும் திருவாவடுதுறைக்கு வடக்கே சுமார் 4.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றன. இந்த இரண்டு ஊர்களுக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கிறது. கூத்தனூர் கொடியாலம் என்றால் கூத்தனூருக்கு அருகில் உள்ள கொடியாலம் என்ற பொருளில்தான் இங்கும் அமைந்துள்ளது. [1]

திருமுதுகுன்றம் கல்வெட்டில் நெற்குப்பைத் திருமுதுகுன்றம் உடையார்க்கு எனக் குறிக்கப்பெற்றுள்ளது. ஊரின் பெயர் நெற்குப்பை. கோயிலின் பெயர் திருமுதுகுன்றம் என்று பொருள் படுமா? அங்ஙனமாயின் சைவசமய குரவர்கள் ''துன்னார் கடந்தையுள் தூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே'' ''கொள்ளிடக்கரை கோவந்த புத்தூரில் வெள்விடைக்கருள்செய் விசயமங்கை உள்ளிடத்து உறை நின்ற உருத்திரன்'' என ஊரையும் கோயிலையும் குறிப்பிட்டுள்ளனரே. ஊரின் பெயர்கள் சாத்தனூர் நெற்குப்பை அங்குள்ள கோயிலின் பெயர்கள் திருவாவடுதுறை திருமுதுகுன்றம் எனக் குறிப்பிடாமைக்குக் காரணம் என்னை? வரலாற்றுப் பேராசிரியராகிய சேக்கிழார் பெருந்தகையராவது குறிப்பிட்டிருக்க வேண்டும்! அங்ஙனம் குறிப்பிடாமையால் ஊரின் பெயர் சாத்தனூர் என்பதும், அங்குள்ள கோயிலின் பெயர் திருவாவடுதுறை என்பதும் பொருத்த முடையது ஆகாது. சாத்தனூர் திருவாவடுதுறைக்குத் தெற்கே இரண்டு மைலுக்கு மேற்பட்ட தூரத்தில் இன்றும் தனியூராக விளங்கி வருகின்றது.

திருவாவடுதுறையைத் தன்னகத்துக்கொண்ட வளநாடு:-

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்ட வளநாடு உய்யக் கொண்டார் வளநாடாகும். இந்நாடு காவிரிக்கும் அரிசிலாற்றுக்கும்

[1] See the South Indian Inscriptions, Volume II. Part V.

Koviloor Digital Library

இடைப்பட்ட நிலப்பரப்பை உடையது. இது ஆக்கூர்நாடு, அம்பர்நாடு, குறும்பூர்நாடு, மருகல்நாடு, பாம்பூர்நாடு, தென்கரைத் திரைமூர்நாடு, திருநறையூர்நாடு, திருவழுந்தூர்நாடு, வெண்ணாடு, விளநாடு, பேராவூர்நாடு என்னும் பிரிவுகளை உடையதாய் இருந்தது.

திருவாவடுதுறையைத் தன்னகத்துக்கொண்ட நாடு:

திருஆவடுதுறை உய்யக்கொண்டார் வளநாட்டின் பிரிவுகளில் ஒன்றாய தென்கரைத் திரைமூர்நாட்டிற்கு உட்பட்டதாகும். நெற்குப்பை, சாத்தனூர், நடார், நல்லுச்சேரி, திருக்குரங்காடுதுறை, மகேந்திரமங்கலம் என்னும் ஊர்கள் இந்நாட்டிற்கு உட்பட்ட சில ஊர்கள் எனக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

பிற செய்திகள்:

அர்த்தமண்டபத்தின் வடபுறச் சுவரில் அதாவது துர்க்கா பரமேசுவரியின் திருமேனிக்குக் கிழக்குப் பக்கமாக உள்ளதும், சில பகுதிகளை சுவரில் வைத்துக் கட்டப்பெற்றதும் ஆகிய கல்வெட்டில், கோப்பரகேசரிபன்மரான உடையார் காவேரிகரைகண்ட கரிகால சோழ தேவர் என்று ஒரு சோழ அரசர் குறிக்கப்பெற்றுள்ளனர். இக்கல்வெட்டின் தொடக்கத்தில் ''தேவற்குயாண்டு நாலாவது தென்கரை திருவழுந்தூர் நாட்டு 'வாய் தலைப்படி குலையரையரோம்' உடையார் திருவாவடுதுறை உடையார்க்கு நாங்கள் கைதீட்டு இட்டுக் கொடுத்த பரிசாவது'' எனக் குறிக்கப்பெற்றுள்ளது. இதில் 'வாய் தலைப்படி குலையரையர்' என்பவர் ஒரு சபையினர் என்பது உறுதி, அவர்கள் எவ்வேலையைக் கண்காணித்துவந்தனர் என்பது புலப்பட வில்லை. இக்கோயிலிலுள்ள பொன் ஆபரணங்கள் குடிஞைக் கல்லாலும், வெண்கல உருக்கள் வெள்ளிக் கோலாலும், பித்தளை உருக்கள் மாண்டினாலும் நிறுக்கபெற்று வந்தன. ''வெள்ளிக் கோலால் நிறை ஆயிரத்து நாநூற்று இருபத்து முப்பலவரை, மேற்படி கோலால் நிறை தொளாயிரத்திருபத்தைம்பலநே கைசு (கஃசு)'' என்னும் தொடர்களால் அக்காலத்தில் பலம் தான் உயர்ந்த நிறுத்தல் அளவை என்பதும் கஃசுதான் மிகச் சிறியது என்பதும் பெறப்படுகின்றன.

குறிப்பு: திருவாவடுதுறை ஆதீனத்தில் இருபத்தொன்றாம் பட்டத்தில் இனிது எழுந்தருளி அருளாட்சி நடத்திய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளின் கட்டளைப்படி இக்கோயில் கல்வெட்டுக்களைப் படி எடுத்து எழுதி, அங்குக் குருபூசை விழாவில் ஆற்றிய சொற்பெருக்கின் சுருக்கமே இங்குக் கொடுக்கப் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

கோயில்காரியங்களின் பொருட்டு ஊர்ச்சபையார், திருவாவடுதுறை உடையார் கோயில் வட பக்கத்து உலகளந்தான் என்று பேர் கூவப்பட்ட மாடத்தில் கூட்டங் குறைவறக் கூடியிருந்தும், சங்கர தேவன் மண்டபத்தே கூட்டங் குறைவறக் கூடியிருந்தும் கவனித்து வந்தனர்.

சாத்தனூர்க்கு ஸ்ரீ சதுர்வேதிமங்கலம் என்ற பெயர் வழங்கி வந்ததாக முதலாம் இராஜேந்திர சோழதேவரின் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது. இந்த ஸ்ரீ சதுர்வேதிமங்கலத்துக்கு வடக்கில் சிற்றானைச் சூர் என்னும் ஊர் இருந்தது.

9. திருஆனைக்கா

யானை பூசித்துப் பேறு எய்தியதால் இப்பெயர் பெற்றது.

திருவானைக்கா திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரி வட கரையில் விளங்கும் தலம். திருச்சிராப்பள்ளியிலிருந்து நகரப் பேருந்துகள் பல உள்ளன.

இறைவரின் திருப்பெயர்: நீர்த்திரள்நாதர். இத்திருப்பெயரை இவ்வூர்த் திருத்தாண்டகத்தில் அப்பர்பெருந்தகையார் ''செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே'' என எடுத்து ஆண்டுள்ளார். இதுவன்றி ஜம்புகேசுவரர் என்று வேறு திருப்பெயரும் உண்டு. வெண்ணாவல் மரத்தின் அருகில் எழுந்தருளியிருப்பதால் இப்பெயர் பெற்றார். (ஜம்பு -நாவல்) இறைவியாரின் திருப்பெயர்: அகிலாண்டநாயகி.

தலவிருட்சம் வெண்ணாவல்.

தீர்த்தங்கள் காவிரி, இந்திரதீர்த்தம், சந்திரதீர்த்தம் என்பன.

கோயில் ஐந்துபிராகாரம் கொண்ட பெரியகோயில், ஆயிரங் கால் மண்டபம் உண்டு. முதல் மண்டபம் மிகச் சிறந்தது. சுவாமி சந்நிதி மேற்கு, அம்மன் சந்நிதி கிழக்கு. சுவாமி பிராகார மண்டபத்தில் கிழக்கு நோக்கியபடி நிஷ்டாதேவி உருவம் இருக்கிறது. இதனை, சனீஸ்வரர் என்று தவறாக எழுதி இருந்தார்கள். நான்காவது மதில் (திருநீற்றுமதில்) மிகப்பெரியது. இது பஞ்சபூதத் தலங்களுள் அப்புத்தலம் ஆகும். (அப்பு- தண்ணீர்) சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தில் நீர் ஊறி வருவது இன்றும் காணத்தக்கது. முற்பிறப்பில் சிலந்தியாயிருந்து

Koviloor Digital Library

சிவபெருமானை வழிபட்ட புண்ணியத்தின் பயனாய் அரசனாய்ப் பிறந்த கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது. வெளிப்புறத்து மதிலுக்குத் திருநீறு இட்டான் திருமதில் என்று பெயர்.

இறைவர் சித்தராய் எழுந்தருளித் திருநீற்றைக் கூலியாகக் கொடுத்து எடுப்பித்த காரணத்தால் அம்மதில் அப்பெயர் பெற்றது. திருக்கயிலையிலிருந்து எழுந்தருளி இறைவி இங்குத் தவஞ்செய்து ஞானோபதேசம் பெற்ற காரணத்தால் ஞானஸ்தலம் எனவும் இது வழங்கப்படும்.

உறையூர்ச்சோழர் மணியாரம் தரித்துக்கொண்டு காவிரியில் நீராடினார். அது ஆற்றில் விழுந்துவிட்டது. உடனே அவர் ''சிவபெருமானே கொண்டருளும்'' என வேண்டினார். அந்த மணியாரம் திருமஞ்சனக்குடத்தில் புக, அதனை இறைவருக்கு அபிடேகிக்கும் போது அவர் அதனை ஆரமாக ஏற்றுக்கொண்டு சோழனுக்கு அருள் புரிந்ததும் இப்பதியேயாகும்.

இச்செய்தியை, சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வூர்ப்பதிகத்தில்,

''தாரமாகிய பொன்னித் தண்டுறையாடி விழுத்து
நீரினின்றடி போற்றி நின்மலாக் கொள்ளென வாங்கே
ஆரங்கொண்ட வெம்மானைக் காவுடையாதியைநாளும்''

எனவும் , திருஞானசம்பந்தப்பெருமான்,

''ஆரம் நீரோ டேந்தினா னானைக்காவு சேர்மினே''

எனவும் சேக்கிழார்பெருமான், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணத்தில்,

''வளவர் பெருமான் திருவாரஞ் சாத்திக் கொண்டு வரும் பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற
அளவில் திருமஞ் சனக்குடத்தி லதுபுக்காட்ட வணிந்தருளி
தளரு மவனுக் கருள்புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார்''

எனவும், போற்றுவாராயினர்.

தலத்தைப் பற்றிய நூல்கள்:கச்சியப்பமுனிவர் இத்தல புராணத்தையும் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை *அகிலாண்ட*

Koviloor Digital Library

நாயகி மாலையையும் பாடியுள்ளனர். இவைகள் இரண்டும் அச்சேறி வெளிவந்துள்ளன.

தலத்தின் பெருமையை உணர்த்தும் புராணப்பாடல் ஒன்று பின்வருமாறு:-

''மேதகைய பயன்விழைவோர் ஞானதலத்
துறைகுவது மேவாதாயின்
ஓதுக அத்தலப்பெயரை யாங்கதுவு முற்றாதே
லுரைப்பக்கேட்க
காதலொடு கேட்டவரு மூவகைய பாதகமுங்
கடந்துமேலாம்
போதமுணர்ந் தெமதடியிற் புக்கிருப்ப ரிஃதுண்மை
பொலங்கொம்பன்னாய்.''

-திருவானைக்காப் புராணம் - தலவிசேடப் படலம்.

கல்வெட்டு:

இக்கோயிலில் பிற்காலத்துச் சோழ மன்னர்கள், பாண்டியர்கள், ஹொய்சலர்கள், விஜயநகர அரசர்கள், மதுரை நாயக்கர்கள் இவர்கள் காலங்களில் பொறிக்கப்பெற்ற நூற்று ஐம்பத்து நான்கு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் சரித்திர சம்பந்தமான உயரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

இக்கோயில் சிவபெருமான் திருவானைக்கா உடையார், திருவானைக்கா உடைய நாயனார், மகாதேவபட்டர் என்னும் திருப்பெயர்களாலும், அம்பிகை அகிலாண்டநாயகி என்னும் பெயரா லும் குறிக்கப்பெற்றுள்ளனர். இக்கோயில் முதற் பிராகாரத்துத் துவார பாலகர் இருவரையும் எழுந்தருளுவித்தவர் இருங்கொளப்பாடி வளநாட்டுக் கருப்பூரில் இருந்த இளைய நயினார் மகனார் தெய்வங்கள் பெருமாள் ஆவர். இச்செய்தி அத்துவார பாலகர்களின் அடிப்பீடங்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

நான்காம் பிராகாரத்தில் அகிலாண்டநாயகி அம்மன் கோயிலின் முன் உள்ள பசுபதீஸ்வரம் உடையாரை எழுந்தருளு வித்தவர் நீலகண்ட நாயக்கராவர். இச்செய்தி ஹொய்சால வம்சத்தைச் சேர்ந்த வீர ராமநாததேவரின் பதினான்காவதாண்டுக் கல்வெட்டால் தெரியவருகின்றது. இக்கோயிலின் உற்சவ மண்டபத்தைக் கட்டியவர்

Koviloor Digital Library

சதாசிவ வரஜப்பைய யாஜி தீட்சிதராயர் ஆவர். இவரே அமாவாசை, பொங்கல் புதுநாள் இவைகளின் சிறப்புப் பூசனைக்கு நிவந்தமும் அளித்துள்ளார். முதற் பிராகாரத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள எடுத் தருளிய ஸ்ரீபாதீஸ்வரம் உடைய நாயனார் கோயிலைக் கட்டியவர், திருஞானசம்பந்தர் என்னும் பெயரினர் ஆவர். நான்காவது பிராகாரத்திலுள்ள மேலக்கோபுரம் ஆதித்யதேவனது மகனான சந்தபேந்திரனால் சகம் 1357 அதாவது கி.பி. 1435-இல் கட்டப் பெற்றதாகும். வலம்புரி விநாயகரையும், சுப்பிரமணியரையும் மும்முடி திம்மரசர் என்பார் எழுந்தருளுவித்துள்ளார். விபூதி பிராகாரத்து மதிற்சுவரைத் திருநீற்றுச் சுந்தரபாண்டியன் கட்டியுள்ளான்.

ஹொய்சல அரசனான வீரசோமீசுவரன் (சோழநாட்டில்) திருவரங்கத்துக்கு வடக்கே 8 கி. மீ. தூரத்தில் உள்ள கண்ணனூர்க் கொப்பத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். இவன் சிறந்த சிவபக்தன் ஆவான். ஆதலின், திருவானைக்கா கோவிலின் கிழக்குக் கோபுரமான எழுநிலைக் கோபுரத்தைக் கட்டுவித்தான். வீரசோமீசு வரன் திருநாள் என்று தன் பெயரால் இத்திருக்கோயிலில் ஒரு விழா நடத்திவந்தான். வட திருவானைக்காவில் தன் பாட்டனாகிய பாலாலன் II என்பவன் பெயரால் வாலால ஈசுவரத்தையும், தன் பாட்டியாராகிய பத்மலா தேவியின் பெயரால் பதுமலீசுவரத்தையும் எடுப்பித்துள்ளான். இந்த வீர சோமீசுவரனது தாயார் கல்லலா தேவியார் ஆவார். இவரது மேன்மையின் பொருட்டுக் கண்ணனூரி லுள்ள பாலீஸ்வரம் உடையார்க்கு இந்த அரசன் நிபந்தம் அளித் துள்ளான். இக்கோயிலும் இவனால் எடுப்பிக்கப் பெற்றதாகும். இந்த வீர சோமீசுவரனது இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில் திருவானைக்கா கோயில் மூன்றாவது பிராகாரத்தின் வடபக்கத்தில் கல்வாக்கூர் தியாகப்பெருமாள், தியாகவிநோதீசுவரம் என்னும் கோயிலைக் கட்டியுள்ளனர். இவைபோன்று ஹொய்சல அரசர்களின் வரலாறுகள் பலவற்றை அறிதற்கு இக்கோயில் ஒரு சிறந்த பொக்கிஷமாக விளங்குகின்றது.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் பிறந்த நாள் ஆவணி மாதத்து அவிட்டமாகும். ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் I பிறந்தநாள் சித்திரை மாதத்து மூலநட்சத்திரமாகும். இச்செய்திகளை இவர்கள் இத்திருவானைக்கா கோயிலுக்கு அளித்துள்ள நிபந்தங்கள் அறிவுறுத்துகின்றன.

சோழமன்னர்கள் இக்கோயிலைப் பெரிதும் போற்றி வந்தனர்.

Koviloor Digital Library

திருபுவனச் சக்கரவர்த்தி இராஜேந்திர சோழதேவன் (இவனே இக்கல் வெட்டில் கோனேரின்மை கொண்டான்) என்பவன் நித்த விநோத வளநாட்டு வில்லவநல்லூரில் இருபத்தைந்து வேலி நிலத்தைத் தன் அத்தையாகிய திருப்பெரிய தேவியார் பேரால் திருவானைக்கா வுடைய சிவபெருமானுக்குத் திருநாமத்துக்காணியாக இறையிலி செய்து கொடுத்துள்ளான். திருபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவரின் இருபதாம் ஆண்டுக் கல்வெட்டினால் இக்கோவிலுக்கு இருபது காவலாளிகள் இருந்தனர் என அறிகின்றோம். இக்கல் வெட்டில் பிணைத்தீட்டு (ஜாமீன்) என்ற பெயர் உளது.

மகாதேவ தீட்சிதர் மகன் சதாசிவ மகின் (தீட்சிதர்) காவை நூல்கள் எனப் பல எழுதினார். திருவானைக்காவிலுள்ள நஞ்சை நிலங்களை அளந்தகோல் சிவநாமத்திரேயம் என்னும் பெயர் பூண்டதாய் நான்கு அடி நீளமுள்ளதாய் இருந்தது. அகிலாண்ட ஈஸ்வரி கோயில், ஜம்புநாதர் கோயில் இவைகளின் தளவரிசைகளைச் செய்தவர் பாஸ்கரராயபாரதி தீட்சிதர் ஆவர். தோப்பு ஒன்றிற்குச் சிலந்தியைச் சோழனாக்கினான் என்னும் பெயரும் பட்டன் ஒருவனுக்கு என்னானைக் கன்று என்ற பெயரும் வைக்கப் பெற்றிருந்தன. என்னானைக் கன்று என்னும் பெயர் இவ்வூர்த் திருத் தாண்டகத்திலும் கூறப் பெற்றுள்ளது.

விஜயரங்க சொக்கநாத நாயகருடைய நாடகசாலை ஆசிரியர் வைத்தியப்ப ஐயா, ஜம்புதீர்த்த மண்டபத்திற்குப் படித்துறைகள் கட்டியுள்ளார்.

சங்கரமகா தேவர்க்கு இவ்வூரில் மடம் இருந்தது. நாற்பத் தெண்ணாயிரவர் என்னும் பெயருள்ள மற்றொரு மடமும் இருந்தது. அதில் துறவிகட்கு அன்னம் அளிக்கப்பட்டுவந்தது. [1]

10. திருஇடைமருதூர்

மருதமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட பாடல்பெற்ற பதிகள் மூன்றாகும். அவை வடநாட்டிலுள்ள மல்லிகார்ச்சுனம் என்ற சீபர்ப்பதம், பாண்டிநாட்டில் உள்ள திருப்புடைமருதூர், சோழ நாட்டிலுள்ள திருவிடைமருதூர்; ஆகும்.

[1] *திருவானைக்கா*, திருவாவடுதுறை ஆதீன வெளியீடு.

Koviloor Digital Library

இவற்றுள் சீபர்ப்பதத்துக்கும் திருப்புடைமருதூர்க்கும் இடையில் மருத மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டிருப்பதால் இது திரு இடைமருதூர் என்னும் பெயர்பெற்றது.

மயிலாடுதுறை கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், திருவிடைமருதூர் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் இருக்கின்றது. மயிலாடுதுறை - கும்பகோணம் நெடுஞ்சாலையில் ஆடுதுறையை அடுத்துள்ளது இவ்வூர். பேருந்து வசதி மிகுதியும் உண்டு. இது காவிரிக்குத் தென்கரையிலுள்ள 30 ஆவது தலமாகும்.

இறைவரின் திருப்பெயர்: மருதவாணர், மகாலிங்கேசுவரர் இப்பதியைச்சுற்றி இருக்கும் சிவதலங்களின் அமைப்பை ஒட்டி நடேசர் சந்நிதி - தில்லையாகவும், தட்சிணாமூர்த்தி சந்நிதி - ஆலங் குடியாகவும், நவக்கிரகக் கோயில் - சூரியனார் கோயிலாகவும் விநாயகர் சந்நிதி - திருவலஞ்சுழியாகவும், முருகர் சந்நிதி - சுவாமி மலை ஆகவும், வைரவர் சந்நிதி - சீகாழியாகவும், சண்டேசுவரர் சந்நிதி - திருச் சேய்ஞலூராகவும் விளங்குகின்றன. ஆதலால், இது மகாலிங்கத் தலம் என்றும் இறைவர்க்கு மகாலிங்கேசுவரர் என்றும் திருப்பெயர்கள் ஏற்பட்டன. இறைவியாரின் திருப்பெயர்: நன்முலைநாயகி.

தீர்த்தம்: காவிரி அயிராவணத்துறை. பூசநாளில் இத்துறையில் இறைவர் தீர்த்தம் கொடுத்தருளுவர். இப்பூசநாளில் நீராடலைப்பற்றி அப்பர் பெருந்தகையார், இத்தலத்துத் திருக்குறுந்தொகையில்,

''ஈச னெம்பெரு மான்இடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே''

எனவும், திருஞானசம்பந்தப் பெருந்தகையார்.

''பூசம் புகுந்தாடிப் பொலிந்தழகாய
ஈச னுறைகின்ற விடைமருதீதோ''

எனவும் சிறப்பித்து அருளினர்.

உமாதேவியார், உருத்திரர், மூத்தபிள்ளையார், முருகர், பிரமன், விஷ்ணு முதலியோர் பூசித்துப் பேறுபெற்றனர்.

பெரிய அன்பினையுடைய வரகுணபாண்டியதேவரின் கொலைப்பழியைப் போக்கியருளிய தலம் இதுவாகும். பத்திரகிரியார்,

Koviloor Digital Library

பட்டினத்துப் பிள்ளையார் இவர்கள் இப்பதியில் பலநாட்கள் தங்கித் தவம்புரிந்து அருள் பெற்றனர். இவர்களுள் பட்டினத்தடிகளார் பிரதிமை கீழைக் கோபுர வாசலிலும், பத்திரகிரியார் பிரதிமை மேலைக்கோபுர வாசலிலும் இருக்கின்றன. வரகுணதேவரைப் பிடித்து நீங்கிய பிரம கத்தியின் உருவம் கீழைக்கோபுர வாசலில் உள்ளது.

''பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆரும் துறக்கை அரிது அரிது'' என்று தாயுமானவரால் பெரிதும் பாராட்டப்பெற்ற பட்டினத்துஅடிகளார் இத்தலத்திற்கு மும்மணிக் கோவை ஒன்றை இயற்றியுள்ளார். அது பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளது.

கோடீச்சுரக்கோவையைப் பாடிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இத்தலத்திற்குப் புராணம் பாடியுள்ளார். மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை உலாவைப் பாடியுள்ளார். இவைகள் அச்சிடப்பெற்றுள்ளன. இவைகளேயன்றி, மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் இத்தலமான் மியத்தை உரைநடையில் எழுதியிருக்கிறார்கள்.

''திருவிடைமருதூர்த் தெருவழகு'' என்னும் உலகவழக்கு இவ்வூர்த் திருவீதிகளின் சிறப்பைப் புலப்படுத்துவதாகும். இப் பதிக்குத் திருஞானசம்பந்தரது பதிகங்கள் ஆறும், திருநாவுக்கரசரது பதிகங்கள் ஐந்தும், சுந்தரமூர்த்தி நாயனாரது பதிகம் ஒன்றும் ஆகப் பன்னிரண்டு பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு: [1]

மதுரை கொண்ட கோப்பரகேசரி பன்மராகிய முதற்பராந்தக சோழன் (கி.பி. 907-948) இரண்டாம்பராந்தக சோழனது மகனாகிய ஆதித்த கரிகாலன், முதலாம் இராஜராஜ சோழன் இவர்கள் காலங்களில் இக்கோயிலில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இவ்வூரைத் திருவிடைமருதில், திருவிடைமருது எனக் குறிப்பிடு

[1] இக்குறிப்புக்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சிப் புலவர் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் எழுதி உதவியது.

See the Annual Reports on South Indian Epigraphy for the years 1895-1907, No. 130-159 and 193-313;

See also South Indian Inscriptions, Volumes.

Koviloor Digital Library

கின்றன. முதலாம் இராஜராஜன் காலத்தில் இது ஒரு நகரமாக விளங்கியிருந்தது.

இச்செய்தி அம்மன்னனது ஆறாம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற ''திரு இடைமருதுடையார் ஸ்ரீ காரியம் ஆராய்கின்ற சிற்றாயிலுடையாரும், தேவகன்மிகளும், சபையும், திருவிடைமருதில் நகரமும் இருந்து நம் பிராட்டியார் ஸ்ரீ பஞ்சவன் மாதேவியார் ஆழ்வாரைத் திருவடி தொழ வந்தருளினார்'' என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. முதற் குலோத்துங்க சோழன் காலத்தும், அவனுக்குப் பிற்பட்டார் காலத்தும் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுக்கள் இவ்வூரைத் திருவிடைமருதூர் என்னும் பெயரால் குறிப்பிடுகின்றன. எனவே மிகப் பழங்காலத்தே இது ஒரு நகரமாக விளங்கியிருந்த செய்தி புலப்படுகின்றது.

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் ஸ்ரீமூலஸ்தானத்துப் பெருமான் அடிகள் மூலஸ்தானத்து மகாதேவர், திருவிடைமருதுடையார், திருவிடைமருதில் ஆள்வார், திருவிடை மருதூருடைய தம்பிரானார் என்னும் திருப்பெயர்களாலும், நடராசப் பெருமான் மாணிக்கக்கூத்தர் என்னும் பெயராலும் வழங்கப் பெற்றுள்ளனர்.

இத்திருக்கோயிலின் முதல் பிராகாரத்து மேலைத் திருமாளி கையில் மூப்பிமாரில் இராஜராஜேச்சரத்துப் பதியிலாரில் அரிய பிராட்டியார், பெருமாள் பெரியதேவர் திருபுவன வீரதேவரின் (மூன்றாங்குலோத்துங்க சோழதேவரின்) முப்பத்தேழாம் ஆட்சி சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளது. தைப்பூசத் திருநாளில் தீர்த்தம் ஆடின பிற்றை நாள் தொடங்கி மூன்று நாளும், வைகாசித் திருவாதிரையின் பிற்றைநாள் தொடங்கி மூன்று நாளும் ஆக ஏழு அங்கங்களுடன் கூடிய இவ் ஆரியக்கூத்து ஆடப் பெற்றுவந்தது. இக்கோயிலில் நாடக சாலை ஒன்றும் இருந்தது. இச்செய்தியைத் ''திரைமூர்நாடு உடையாரும், திருவிடைமருதில் நகரத்தாரும், தேவகன்மிகளும் நாடக சாலையிலே இருந்து'' என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம். திருவிடைமருதுடையார் திருவோலக்கத்து வீற்றிருக்குங்காலத்து அவருக்கு மூன்று சந்தியும் உடுக்கை வாசிக்கப்பெற்றுவந்தது. பெருமான் எழுந்தருளுங்கால் தேவர் அடியார் கவரி வீசிவந்தார்கள். அவர்கள் கவரிப்பிணாக்கள் என்னும் பெயரால் அழைக்கப் பெற்றுள்ளனர்.

இக்கோயிலில் தேவரடியாரைப் பாடச் செய்வதற்கும் ஏற்பாடு

Koviloor Digital Library

செய்யப்பெற்றிருந்தது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆளுடைய பிள்ளையார் ஆளுடைய நம்பி இவர்களுக்கு உய்யக்கொண்டார் வளநாட்டு இருமாறன் பூண்டிப்பெருமாள் சதுர்வேதி மங்கலத்தில் திருபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் 21 ஆம் ஆண்டில் நிலம் விடப்பெற்றிருந்தது. ஒரு கல் வெட்டு நான்காம் பிராகாரத்தில் எழுந்தருளியிருக்கும் பிடாரி போகிருந்த பரமேசுவரியைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

இத் திருக்கோயிலுக்கு உரியதாக திருக்கலசக்கோரோணியின் தென்கரையில் ஒரு நந்தவனம் இருந்தது. அதற்குச் செம்பியன் மாதேவியான பெருஞ்சண்பக நந்தவனம் என்னும் பெயர் இடப்பெற்றிருந்தது. முதலாம் இராஜராஜ மன்னரது தேவியாராகிய பஞ்சவன் மாதேவியார் இறைவனை வழிபட வந்தபொழுது இந்த நந்தவனத்திற்கு எழுந்தருளிப் பார்வையிட்டதை ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. மல்லிகைப் பூக்களைச் சாத்துவதற்காக மல்லிகை நந்தவனம் என்னும் தோட்டமும் இருந்தது.

இக்கோயில் திருமடைவிளாகத்தில் பெருந் திருவாட்டி என்னும் பெயர் பூண்ட மடம் ஒன்று இருந்தது. இது இளங் காரிகுடை யான் சங்கரதேவன் சிவலோக நாயகனான கங்கை கொண்டசோழ அனந்த பாலனால் செய்வித்ததாகும்.

இங்கா நாட்டுப் பல்லவரையன் இத்திருக்கோயிலில் ஆடல் விடங்கதேவரைஎழுந்தருளுவித்திருந்தான். இத்திருக்கோயிலின் வாசல் ஒன்றுக்கு ஏகநாயகன் திருவாசல் என்னும் பெயரை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ஒரு பிள்ளையாருக்குப் புராண கணபதி என்னும் பெயர் உண்மையை ஒரு கல்வெட்டு புலப்படுத்துகின்றது.

முதற் பராந்தகன் காலத்துக் கல்வெட்டுக்கள் இவ்வூரைத் தென்கரை, திரைமூர் நாட்டுத் திருவிடைமருதில் எனவும், முதற் குலோத்துங்கசோழன் காலத்துக் கல்வெட்டுக்கள் உலகுய்யக் கொண்ட சோழவளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவிடைமருதூர் எனவும் குறிப்பிடுகின்றன.

முதற் பராந்தகசோழன் காலத்தில் அளிக்கப்பட்டவை:- திருவிடைமருதில் ஸ்ரீ மூலஸ்தானத்துப் பெருமானடிகளுக்கு மார்கழித் திருவாதிரை தோறும் நெய்யாடி அருளுதற்குத் தொண்டை நாட்டு, செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு இடும்பேட்டைப் பண்டாரிகிழான் கொட்டி என்பான் பதின்கழஞ்சு பொன்

Koviloor Digital Library

கொடுத்திருந்தான். மூலஸ்தானத்து மகாதேவர்க்கு ஒரு நொந்தா விளக்கினுக்குப் புலியூர்க் கோட்டத்து மயிலாப்பில் வியாபாரி விளத்தூர் கிழவன் அரையன் அரிவலன் இருபத்தைந்து கழஞ்சு பொன்னை உதவியிருந்தான். இருமடிச் சோழப் பல்லவரையர் திருவிடைமருதுடையார்க்குத் திருமெய்ப் பூச்சுச் சந்தனத்திற்கும். சீதாரிக்கும், மாகேஸ்வரர்க்கும், பிராமணர்க்கும். திருநொந்தாவிளக்கு எட்டினுக்கும் ஆகப் பதினான்கு வேலி நிலத்தைத் திருவிடைமருதில் நகரத்தாரிடையும், திரைமூர்ச்சபையாரிடையும் முதற் பராந்தக சோழனது முப்பத்தைந்தாம் ஆண்டில் அதாவது கி.பி. 942இல் விலைக்கு வாங்கி அளித்துள்ளான்.

கிழக்கெல்லை வண்ணக்குடியார் பிணம்போகும் வழிக்கு மேற்கு, தென் எல்லை பெருவழிக்கும் வண்ணக்குடி வாய்க்காலுக்கும் வடக்கு, மேற்கெல்லை பழங்காவிரிக்குக் கிழக்கு, வட வெல்லை பழங்காவிரிக்கும் குடந்தையார் நிலத்திற்கும் தெற்கு ஆக இசைந்த பெருநான்கெல்லையுள் அகப்பட்டதாகும்.

செம்பியன் தமிழவேளான் மூலத்தான மகாதேவர்க்கு நொந்தா விளக்கு ஒன்றை வைத்துள்ளான்.

வெண்ணாட்டு வரம்பூசலுடையான் சந்திராதித்தன் சத்துரு கண்டன் 'திருவிடைமருதுடையார் சாலை' உண்ணும் பிராமணர்க்குத் தாலம் பதினெட்டு, சட்டுவம் ஒன்று இவைகளை இட்டுள்ளான். இவை முறையே நூற்றைம்பத்திரண்டு பலங்களும், ஐந்து பலங்களும் நிறையுள்ளன.

பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி பன்மர் காலத்தில் விடப்பட்ட நிவந்தங்கள்:- தைப்பூசத் திருநாளில் தீர்த்தம் ஆடின பிற்றை நாள் தொடங்கி மூன்றுநாள் கூத்து ஆடுவதற்கும், வைகாசித் திருவாதிரையின் பிற்றைநாள் தொடங்கி மூன்றுநாள் கூத்து ஆடுவதற்கும் ஏழு அங்கங்களைக் கொண்டுள்ள இந்தப் பழைய ஆரியக் கூத்தில் வல்லவனாகிய கீர்த்திமறைக்காடன் ஆன திருவெள்ளறை சாக்கனுக்கு விளங்குடிநிலத்தில் பறைச்சேரி பத்து உள்பட வேலி நிலத்தை திரைமூர்நாடு உடையாரும், திருவிடைமருதில் நகரத்தாரும், கோயில் ஸ்ரீ காரியம் ஆராய்கின்றவரும் கொடுத்துள்ளனர்.

கோராசகேசரிபன்மர் காலத்தில் அளிக்கப்பெற்றுள்ள நிவந்தம்:- ஆனைமேல் துஞ்சின உடையாரின் தாயாருடைய பரி வாரத்துப் பெண்டாட்டி பொதுவன் சிற்றடி திருவிடைமருதில் ஆள்

Koviloor Digital Library

வார்க்குத் திருவிளக்கினுக்கு ஈழக்காசு இருபதினால் பொன் பதின் கழஞ்சையும், திருவிடைமருதுடையார் அமுது செய தண்ணீர் அமுது வட்டில் ஒன்று இருபத்துநான்கு கழஞ்சு நிறை உள்ளதையும் அளித்துள்ளனர்.

கவரிப்பிணாக்களுக்குத் திவசம்முந்நாழி நெல்பெறுவதற்கு தேவதானம் விளங்குடி பாட்டத்தில் அறுபது நீக்கி நின்ற நிலத்தில் வந்த நெல்லுப்பெறுமாறு கோயிலார் ஏற்பாடு செய்து அதைக் கல்லில் வெட்டுவித்துள்ளனர். அக் கவரிப்பிணாக்களில் ஒருவர் பெயர் மழுபாடி மருதி என்பதாகும்.

விக்கிரமசோழன் காலத்தில் அளிக்கப்பெற்ற நிவந்தம்:- திருவிடைமருதூர் திருக்கற்றளியில் மாணிக்கக் கூத்தற்கு அமாவாசை தோறும் திருவமுது உள்ளிட்டு வேண்டுவனவற்றிற்கும் கட்டுச் சோற்றுக்கும் அமாவாசை ஒன்றுக்கு நெல் ஐங்குறுணி இருநாழியாக ஓராண்டுக்கு வேண்டும் நெல் ஐங்கலனேமுக்குறுணியும், தேவர் கடமைக்கு ஐங்கலனேமுக்குறுணியும் ஆக நெல் பதின்கலனே தூணிப் பதக்குக்குத் திருவிடைமருதூரில் சதாசிவன் மகிக்கல் என்னும் பெயருள்ள நூற்று எழுபத்தைந்துகுழி நிலத்தை அரிகுலராஜமாராயன் வாங்கிக் கொடுத்துள்ளான்.

விட்டலதேவ மகாராயர் அளித்த நிவந்தம்:- வீரப்பிரதாப ஸ்ரீமான் மகாமண்டலேசுவர இராமராச விட்டலதேவ மகாராசர் புத்தாற்றுக்கு வடக்கு ஆவணம், சிற்றாடி என்னும் இரு ஊர்களைத் திருவிடைமருதூர்ச் சிவபெருமானுக்குத் தருமசிலாசாசனம் செய்து கொடுத்துள்ளார்.

இவைபோன்று இக்கோயிலுக்கு அளிக்கப்பெற்ற நிவந்தங்கள் பலவாகும்.

11. திருஇன்னம்பர்

இது, கும்பகோணத்திலிருந்து சுவாமிமலைக்குச் செல்லும் பெருவழியில் இருக்கும் புளியஞ்சேரி என்னும் ஊருக்கு வடக்கே திருப்புறம்பயம் போகும் வழியில் 3 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. காவிரியின் வடகரைத் தலங்களுள் 45 ஆவது தலம்.

இறைவரின் திருப்பெயர்:- (1) தான்தோன்றியீசர் (2)

Koviloor Digital Library

எழுத்தறிந்த நாதர். இப்பெயர், அப்பர்பெருமானால் இவ்வூர்ப் பதிகத்தில் எடுத்து ஆளப் பெற்றுள்ளது. இறைவியின் திருப்பெயர் - கொந்தார் பூங்குழல் அம்மை. தீர்த்தம் - ஐராவத தீர்த்தம். ஞாயிறு, அகத்தியர், ஐராவதம் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். இப்பதிக்குத் திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகம் நான்கு என ஐந்து பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில் சோழ மன்னரில் இராஜகேசரி வர்மரின் நான்காம் ஆண்டிலும், விஜயநகர வேந்தரில் வீர கம்பண்ண உடையார் காலத்திலும் பொறிக்கப்பெற்ற இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றுள் சோழமன்னரின் கல் வெட்டு, அரிஞ்சிகை விண்ணகரம் என்னும் திருமால்கோயில் இன்னம்பரில் இருந்த தென்னவன் விழுப்பரையனுடைய மனைவி அரிஞ்சிகையால் ஐந்து அந்தணர் களுக்கு அன்னமளிக்க நிபந்தம் அளித்ததைக் கூறுகின்றன. வீரகம் பண்ண உடையார் கல்வெட்டு, துருக்கர் படையெடுப்பால் நாற்பது ஆண்டுகள் இக்கோயில் பூசையின்றிக் கிடந்ததையும் குறிப்பிடு கின்றது. மேற்குறித்த சோழர் கல்வெட்டு இவ்வூரை வடகரை இன்னம்பர் நாட்டு இன்னம்பர் என்று குறிப்பிடுகின்றது.

12. திருஎறும்பியூர்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவெறும்பியூர் (திருவரம்பூர்) தொடர்வண்டி நிலையத்துக்கு வடமேற்கே 1கி.மீ தொலைவில் உள்ளது.

தேவர்கள் எறும்பு உருவம் எடுத்துப் பூசித்த காரணத்தால் எறும்பியூர் என்னும் பெயர் ஏற்பட்டது.

இறைவர் : எறும்பீசர்.

இறைவி : நறுங்குழல் நாயகி.

நைமிச முனிவர், பிரமதேவர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

கோயில் மலைமேல் உள்ளது. இலிங்கமூர்த்தி வடபுறம் சாய்ந்திருக்கிறார்.

Koviloor Digital Library

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில் முதலாம் ஆதித்த சோழன் கண்டாராதித்தன், சுந்தரசோழன், முதலாம் இராஜராஜன் முதலானோர் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளில் இறைவர், திருவெறும்பியூர் ஆழ்வார், திருமலை மேல் மகாதேவர் என்னும் திருப்பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர்.

கல்வெட்டுத் துறையாளரால் முதலாம் ஆதித்தன் கல்வெட்டு என்று கருதப்படும். கோவிராஜகேசரிபன்மற்கு யாண்டு நாலாவது என்று தொடங்கும் கல்வெட்டில் இறைவர் ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலத்து தென் கயிலாயத்து மகாதேவர் என்று குறிக்கப் பெற்றுள்ளனர்[1].

திருவெறும்பியூர் ஆழ்வார்க்கு ஸ்ரீ விமானம் எடுப்பித்தவன் சிறுதவூருடையான் வேளான் வீரநாராயணனான செம்பியன் வெய்தி வேளான் ஆவன். இவன் இக்கோயிலில் மூன்று சந்தியும் உடுக்கையும் தாளமுங் கொண்டு நால்வர் அடிகள்மார் திருப்பதிகம் பாடுவதற்கு நில நிவந்தம் அளித்திருந்தான்.

தென்கயிலாயத்து மகாதேவர்க்குத் திருவரங்க தேவரடியாள் சேந்தன் செய்யவாய் மணி சந்திவிளக்கு ஒன்றுக்கும், ஆற்றுத் தண்ணீரமுது தூணி கொள்ளிக்குடத்தால் நிசதி ஒரு குடத்துக்கும் ஆகப் பதின் கழஞ்சு பொன்னைவைத்து அதன் வட்டியால் அவைகளைச் செய்து வருமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

மேற்குறித்த செம்பியன் வெய்திவேளான் திருவெறும்பியூர் ஆழ்வார் மலைமேல் சந்திராதித் தவல் பிராமணர் பதினைந்துபேர் உண்பதற்கு நில நிவந்தம் அளித்திருந்தான்.

13. திருஐயாறு

கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டின் இடைப்

[1] See the Annual Reports on the South Indian Epigraphy for the year 1892, No. 96-142.

See also the South Indian Inscriptions, Vol. XII.

See also The Cholas, No. 50, 51, 88, 110-114, 138-140, 162-166, 283, 286 and 287

Koviloor Digital Library

பகுதி முடியத் திருவையாற்றிலிருந்து கண்டியூர் வரை பரவியிருந்தது. கண்டியூர், திருச்சோற்றுத்துறை இவைகளைப் பாடிய தேவார ஆசிரியர்கள் இவ்விரு பதிகளையும் காவிரிக்கரையிலுள்ள பதி களாகவே குறிப்பிட்டுள்ளனர்.

திருவையாற்றுக்கும் கண்டியூர்க்கும் இடையிலுள்ள குடமுருட்டியாறு அக்காலத்தில் இல்லை. அது காவிரியிலிருந்து கும்பகோணத்திற்குக் கிழக்கே பிரிந்துசென்றது. கடுவாய் என்பது குடமுருட்டியாறாகும். இக்கடுவாய்க்கரையிலுள்ள புத்தூரை, கடுவாய்க்கரைப்புத்தூர் என்று சிவநெறிகாட்டியருளிய குரவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல, அக்காலத்தில் குடமுருட்டியாகிய கடுவாயாறு கண்டியூர்ப்பக்கமாக ஓடியிருக்குமானால் அதைக் கடுவாய்க்கரைக் கண்டியூர் என்றே கூறியிருக்கவேண்டுமே! அங்ஙனம் குறிப்பிடாததன் காரணத்தையும் உணரவேண்டும். இதற்குப் பிற்காலத்தேதான், திருக்காட்டுப்பள்ளியைத் தலைப்பாகக் கொண்டு, குடமுருட்டியாற்றை வெட்டி, கும்பகோணததிற்குக் கிழக்கிலிருந்து செல்லும் கடுவாயாற்றோடு சேர்த்து, காவிரியாற்றைக் குறுக்கி, மக்கள் வாழ்வுக்கும் சாகுபடிக்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும். இதனால் ஒரே நதியெனல்பொருந்தும் என்பர் சிலர். தஞ்சாவூர் முதல் திருவையாறு முடிய இருக்கும் வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்னும் ஐந்து ஆறுகளை உடையது ஆகையால், ஐயாறு என்று பெயர்பெற்றது என்பர் சிற்சிலர். சூரியபுட்கரணி, சந்திரபுட்கரணி, கங்கை, பாலாறு, (நந்திவாய்நுரை), நந்திதீர்த்தம் என்னும் ஐந்து தெய்வீக நதிகள் தம்முள் கலப்பதால் ஐயாறு என்று பெயர் பெற்றது என்பர் சிற்சிலர். பஞ்சநதம் என்பது, ஐயாறு என்னுந் தமிழுக்கு ஒத்த வடசொல். இக் கோயில் தருமபுர ஆதீன அருளாட்சியில் விளங்குவதாகும்.

தஞ்சாவூருக்கு வடக்கே 10.கி.மீ. தூரத்தில் இருக்கிறது. தஞ்சை, கும்பகோணம் திருக்காட்டுப்பள்ளி முதலிய நகர்களிலிருந்து பேருந்துகள் உள்ளன. இறைவரின் திருப்பெயர் ஐயாறப்பர்; வட மொழியில் பஞ்சநதீசுவரர்; பிரணதார்த்திஹரர் என்பர். இறைவி யாரின் திருப்பெயர் அறம்வளர்த்தநாயகி; வடமொழியில் தர்ம சம்வர்த்தினி என்பர்.

தீர்த்தம் காவிரி, சூரியபுட்கரிணி என்பன.

இது சமயகுரவர்கள் நால்வராலும் பாடப்பெற்றது. ''நந்தி அருள்பெற்ற நன்னகர்'' என்று சேக்கிழார் இப்பதியைச் சிறப்

Koviloor Digital Library

பித்துள்ளார். சிலாதமுனிவர்க்குத் திருமகனாய் அவதரித்த திருநந்தி தேவர், சுயசாதேவியை மணந்து, ஐயாறப்பரைப் பூசித்துச் சிவசாரூபம் பெற்றமையை உட்கொண்டு சேக்கிழார் இவ்வாறு கூறலானார். கடலரசன் இங்குவந்து ஐயாறப்பரைப் பூசித்துப் பேறுபெற்றான். ''ஆழிவலவனின்றேத்தும்'' என்னும் இவ்வூர்த் தேவாரப்பகுதி இதற்குச் சான்றாகும். இலக்குமியால் பூசிக்கப்பெற்றது. இலக்குமிக்கு இரண்டாம் பிராகாரத்தில் தனிக்கோயில் இருக்கின்றது. வெள்ளிக் கிழமைதோறும் இலக்குமி புறப்பாடு இத்தலத்தில் நடைபெற்று வருகின்றது. வடகயிலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக் கோலத்தை அப்பர் பெருமானுக்குக் காட்டியருளிய காட்சியை உணர்த்தும் அழகிய வேலைப்பாடுடன் கூடிய கற்கோயில், பெரியபுறத் திருச்சுற்றாலையின் தென்பால் (மூன்றாம் தெற்குப் பிராகாரத்தில்) இருக்கின்றது. அங்கு இறைவர் மணவாளக் கோலத் தோடு,சக்தியும் சிவமுமாக வீற்றிருந்து அருளுகின்றார். அப்பர் பெருமானின் அழகு திகழும் பிரதிமையும் அங்கு இருக்கின்றது.

சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான்பெருமாள் நாயனாரும் கண்டியூரை வணங்கியபோது எதிரே தோன்றிய திருவையாற்றையும் வணங்க விரும்பினர். அப்பொழுது காவிரியில் வெள்ளப்பெருக்கு மிகுதியாக இருந்தமையால் அக்கரையிலிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் ''ஐயாறுடைய அடிகளோ'' என்று திருப்பதிகம் பாடிய அளவில், வந்து மீளுமளவும் காவிரியை வழிவிடச்செய்த பெருமையையுடையது இத்தலம். தம்மை வழிபட்டு வந்த ஒரு அந்தணச் சிறுவனைத் தொடர்ந்து வந்த யமனைத் தண்டித்து, அச்சிறுவனைச் சோதி வடிவமாக ஆட்கொண்ட காரணம்பற்றி ஆட்கொண்டார் என்னும் பெயருடையாரது திருமேனி தெற்குக்கோபுரவாயிலின் மேல்பால் இருக்கின்றது. அவருக்கு அருகில் தென்மேற்கு மூலையில் இருப்பவர் ஓலம் இட்ட பிள்ளையார் ஆவர். ஆட்கொண்டார்க்கு எதிரில் குங்கிலியக்குழி ஒன்று இருக்கிறது. அதில் மக்கள் குங்கிலியத்தை இட்டு வழிபடுகின்றனர். இத்தலத்தே இந்திரன், வாலி முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றார்கள். இச்செய்தியை ''எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபட'' எனச் சம்பந்தரும், ''வாலியார் வணங்கி ஏத்தும் திருவையாறு அமர்ந்த தேன்'' என அப்பர்பெருந்தகையும் அருளிச் செய்துள்ளதை இத்தலத்துத் தேவாரப்பகுதிகளால் அறியலாம்.

இறைவரைப் பூசித்த சைவர் ஒருவர் காசிக்குச் சென்று, குறிப் பிட்ட காலத்தில் வாராமையால் பூசைமுறை தவறியது. அதுபொழுது இறைவர் அச்சைவருடைய வடிவோடு இருந்து தம்மைத்தாமே பூசித்த சிறப்புடையது. இதைத்தான் ''ஐயாறதனில் சைவனாகியும்'' என்பார்

Koviloor Digital Library

திருவாசகத்தில். இப்பதிக்குப் பதினெட்டுத் தேவாரப்பதிகங்கள் இருக்கின்றன. திருவடிப் பெருமைகளை அப்பர்பெருமான் இருபது திருப்பாடல்களால் இத்தலத்தில் உணர்த்தியதுபோல் வேறு எப்பதியிலும் உணர்த்தாத அவ்வளவு பெருமையை உடையது.

இத்தலத்தில் நிகழும் விழாக்களுள் நந்திதேவர் திருமணத் திருவிழா. 'சித்திரைப்பெருந்திருவிழா' என்பவை மிகச் சிறந்தனவாகும். இவைகளுள் நந்திதேவர் திருமணத்திருவிழா, பங்குனி மாதத்தில் நிகழ்வதாகும். அதுபொழுது அம்மையப்பர் ஒரு தனி வெட்டிவேர் பல்லக்கிலும், நந்திதேவர் வேறு ஒரு வெட்டிவேர் பல்லக்கிலும் எழுந்தருளி, திருமழபாடிக்குச் செல்வர். அங்கே நந்தி தேவர்க்குத் திருமணத்தை முடித்துக்கொண்டு அன்று இரவே ஐயாற்றுக்கு எழுந்தருளும் விழா இதுவாகும்.

சித்திரைப்பெருந் திருவிழா: இது சித்திரைமாதத்தில் நிகழ்வது. இதைப் பிரமோற்சவம் என்றும் வழங்குவர். இதில் ஐந்தாம் நாள் விழா தன்னைத்தான் பூசிப்பதாகும். இவ்விழாவின் முடிவில் ஐயாறப்பர் அறம்வளர்த்தநாயகியாருடன் நன்கு அலங்கரிக்கப்பெற்ற கண்ணாடிப் பல்லக்கிலும், நந்திதேவர் தனியொரு வெட்டிவேர்ப் பல்லக்கிலும் எழுந்தருளித் திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் எனும் தலங்களுக்கு எழுந்தருள, அந்தந்த ஊர்களின் இறைவரும் தனித்தனி வெட்டிவேர்ப்பல்லக்குகளில் எதிர்கொண்டு அழைத்து உடன்தொடர மறுநாட்காலை ஐயாற்றுக்கு எழுந்தருளுவார். இதை ஏழூர் விழா அல்லது சப்தஸ்தானத் திருவிழா என்பர். தென்னாட்டில் இதைப் போன்றதொரு விழாவைக் காணமுடியாது. இவ்விழாவில் பல லட்சக்கணக்கான மக்கள் குழுமி ஏழ் ஊர்களையும் சுற்றிவரும் காட்சி போற்றத்தக்கதாகும்.

இத்திருக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்து அருளாட்சியில் உள்ளது. இப்பொழுது ஆதீனத்தில் இருபத்தாறாவது பட்டத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், பழங்காலத்துச் சோழமன்னர்களுடைய ஆட்சிக்காலங்களில் நடைபெற்ற சிறப்புக்களைப் போலவே இத்திருக் கோயிலின் நித்தியநைமித்தியங்கள் எல்லாவற்றையும் மிக்க சிறப்புறச் செய்வித் தருளுகின்றார்கள்.

இத்திருக்கோயிலின் மூன்றாம் பிராகாரம் பெரியபுறத் திருச்சுற்றாலை என்று கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ளது.

Koviloor Digital Library

இப்பிராகாரத்தின் வடபால் ஒலோகமாதேவீச்சரம் என்னும் பெயருள்ள ஒருகற்கோயில் இருக்கின்றது. அது முதலாம் இராஜராஜ சோழனுடைய மனைவியாராகிய ஒலோகமாதேவியால் கட்டப்பெற்றதாகும்.

அம்மன்கோயில் புதிய திருப்பணியை உடையது. புலவர்கள் செய்யுளை அலங்கரிப்பதுபோல், தேவகோட்டை உ. ராம. மெசுப. சேவு. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் அழகுறத் திருப்பணி செய்திருக்கின்றனர்.

ஆடி அமாவாசை நாள் அப்பருக்குக் காட்சிகொடுத்த நாளாகும். அன்றும் திரளான மக்கள் வந்து கூடுவர்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் ஒரு வெண்பாவால் திருவையாற்றைப் பாடியுள்ளார்கள். அது சேத்திரத் திருவெண்பாவில் சேர்க்கப்பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு:-

''குந்தி நடந்து குனிந்தொருகைக் கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி-வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.''

இத்தல புராணம் ஞானக்கூத்தரால் இயற்றப்பெற்றது. தருமை ஆதீனம் அச்சிட்டுள்ளனர்.

இத்திருக்கோயிலுள் அமைந்த ஐயாறப்பர்கோயில், தென் கயிலைக் கோயில், ஒலோகமாதேவீச்சரம் ஆகிய மூன்று கோயில் களில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளின் சுருக்கங்களே இங்கே கொடுக்கப் பட்டுள்ளன.

கல்வெட்டு:

பிற்காலத்துச் சோழமன்னர்களில் முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், இரண்டாம் ஆதித்த கரிகாலன், முதலாம் இராஜராஜன், விக்கிரமசோழன், மூன்றாங் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுக்களும், பிற்காலத்துப் பாண்டிய மன்னர்களுள் கோச்சடையபன்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவர் காலத்துக் கல்வெட்டும், வீரமுக்கண் உடையார் மகனார் வீரசரவண உடையார் காலத்துக் கல்வெட்டும், தஞ்சாவூரையாண்ட

Koviloor Digital Library

அச்சுதப்பநாயக்கர் காலத்துக் கல்வெட்டுக்களும் இருக்கின்றன. இவைகளெல்லாம் ஐயாறுடைய அடிகளுக்குத் திருநந்தா விளக்குக் களுக்கும், நித்திய நைமித்தியங்களுக்கும் நிவந்தங்கள் அளிக்கப் பெற்ற செய்திகளை உணர்த்துபவையே. எனினும் எல்லாக் கல் வெட்டுக்களுமே பல அரிய வரலாற்று உண்மைகளை அறிவிப்பவை யாயும் இருக்கின்றன.

ஐயாறப்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் பல்லவ மன்னர் ஒருவரால் செய்விக்கப்பெற்ற கற்றளியை உடையதாகும். மூன்றாம் (பிராகாரத்தின்) திருச்சுற்றாலையின் கிழக்குக் கோபுரம் விக்கிரமசோழனால் கட்டப்பெற்றதாகும். இச்செய்தி ''ஸ்வஸ்திஸ்ரீ இத் திருக்கோபுரம் விக்கிரமசோழனது'' என்னும் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. மேலக் கோபுரவாயிலிலுள்ள அச்சுதப்ப நாயக்கர் காலத்துக் கல்வெட்டு, ஐயாறப்பர் கோயிலின் மேலக் கோபுரமும், முதல் பிராகாரமும், திருநடமாளிகைப் பத்தியும், ஐந்தாம் பிராகாரத்தின் தெற்குவாசலில் உள்ள சூரியபுட்கரிணியெனும் திருக்குளமும், மூன்றாம் பிராகாரத்தில் தெற்குக்கோபுரமும் ஆனையப்பபிள்ளை, அவர் தம்பி வைத்தியநாதர் என்போரால் எடுப்பிக்கப்பெற்றவை என்கிறது.

இத்திருப்பணிகளைப் புரிந்த ஆனையப்பப்பிள்ளையும் அவர் தம்பியும் மருதூர் என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். தஞ்சாவூர் ஐயன்வாசல் அருகில் இருந்தவர்கள். இவர்கள் உருவங்களோடு இவர்களுடைய பெற்றோர்களின் உருவங்களும் முதல் பிராகாரத்து மேற்குத் திருச்சுற்று மாளிகையில் இருந்துள்ளன. ஆனால் அவைகள் முற்றிலும் சிதைக்கப்பட்டு விட்டன. அந்தந்த உருவங்களின் மேலே பொறிக்கப்பெற்ற பெயர்கள் இன்றும் உள்ளன. மேலக்கோபுரக் கல்வெட்டில் குறிப்பிடப்பெற்ற செய்தியை இம்முதல் பிராகாரத்தின் மேற்குத் திருச்சுற்று மாளிகையின் உள்சுவரில் பொறிக்கப் பெற்றிருக்கும் ''ஈசுவர஖ு ஆவணிமீ இந்தப் பிராகாரம் மருதுடையகத்தீச நயினார் புத்திரர் ஆனையப்பபிள்ளை, வயித்தியநாத அண்ணன்கள் புண்ணியம்'' என்னும் கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது.

அச்சுதப்ப நாயக்கர் திருவரங்கம் பெரியகோயிலுக்குப் பல நிவந்தங்கள் அளித்துள்ளனர். இரண்யகர்ப்பம் புகுந்தனர். உடைப் பெடுத்துச் சென்ற காவிரிக்கு அணைகட்டுவித்தனர். திருவையாற்றில் பூசப்படித்துறைக்குப் படிகள் அமைத்து அதற்குக் கல்யாணஸிந்து என்று பெயரிட்டுள்ளனர் என்னும் செய்திகள் பூசப்படித்துறை

Koviloor Digital Library

மண்டபத்துக் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றன.

இறைவன் திருவையாறுடைய மகாதேவர், இறைவியார் உலகுடைய நாச்சியார் என்னும் பெயர்களுடன் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளனர். (திருக்காமக்கோட்டத்தை இடித்துப் புதிதாகத் தேவகோட்டைத் திருப்பணிச்செல்வர் உயர்திரு. மெய்யப்பச் செட்டியாரால் கட்டப்பெறுவதற்கு முன் இருந்த கல்வெட்டை அரசியலார் ஆண்டு அறிக்கையில் வெளியிட்டிருக்கின்றனர். அதில் இறைவியாரின் திருப்பெயர் உலகுடைய நாச்சியார் என்றே குறிக்கப் பெற்றுள்ளது. இப்பெயர் மறைந்துபோய், இக்காலம் அறம்வளர்த்த நாயகி என்னும் பெயர் வழங்கி வருகின்றது.)

அச்சுதப்பநாயக்கர், அவர் மனைவியார் உருவங்கள் மேலக்கோபுரவாசலில் முற்றிலும் சிதைந்த நிலையில் உள்ளன. எனினும் அவர்களின் திருவுருவங்கள் முதல் பிராகாரத்தின் மேற்குத் திருச்சுற்று மாளிகையின் உள்பக்கத்தில் நல்ல கல்லிற் செதுக்கப்பட்டு நல்ல நிலையில் இருக்கின்றன. பச்சையப்ப முதலியார், அவருடைய இருமனைவியர் இவர்களின் உருவங்கள் பச்சையப்பன் மண்டபத் தூண்களில் செதுக்கப்பட்டு நல்ல நிலையில் இருக்கின்றன.

சோமாஸ்கந்தர் திருக்கோயில் சோழமன்னருடைய திருப் பணியை உடையது. இக்கோயில் கொடுங்கைவேலைகள் போற்றற் குரியன.

வீரசரவண உடையார் காலத்தில் (சகாப்தம் 1303 - கி.பி. 1381) பாண்டிகுலாசனி வளநாட்டுச் செந்தலை - கருப்பூர் கச்சிவீரப் பெருமான் மகன், நேர் குலைந்து இற்றுப் போன இத்திருக் கோயில் திருமண்டப மதிலைக் கட்டியுள்ளான்.

திருபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மைகொண்டான் நூற்றெட்டு வேலி நிலத்தைக் கொடுத்துள்ளான். கோச்சடைய பன்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியதேவர் காலத்தில் திருவையாறுடைய நாயனார்க்குச் சுத்தமல்லி வளநாட்டுப் பாம்புணிக்கூற்றத்துப் பாம்புணிகிழான் மல்லாண்டனான சேரகோன் ஆறேமாக்காணிசொச்சம் நிலத்தைத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்துள்ளான்.

இவ்வூர் முதலாம் இராஜராஜன் காலத்தில் இராஜேந்திரசிங்க வளநாட்டுப்பொய்கைநாட்டுத் திருவையாறு என்றும் மூன்றாங்

Koviloor Digital Library

குலோத்துங்க சோழன் காலத்தில் திருபுவனமுழுதுடைய வளநாட்டுப் பொய்கைநாட்டுத் திருவையாறு என்றும், சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டில், இராஜராஜ வளநாட்டுப் பொய்கைநாட்டுத் திருவையாறு என்றும் வழங்கப்பெற்று வந்துள்ளது.

பொய்கைநாடு என்பது திருவையாற்றிலிருந்து கீழப்பழு ஆருக்குப் போகும் பெருவழிக்கு மேற்கும் காவிரிக்கு வடக்குமாகிய பிரதேசமாகும். இப்பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்தவேளானே ஸ்ரீராஜராஜேச்சரம் உடையார்க்கு ஸ்ரீகாரியம் செய்தவன் ஆவன். அக்கோயிலில் நம்பி ஆரூரனார், நங்கை பரவையார் முதலானோர்ப் பிரதிமங்களை எழுந் தருளுவித்தவனும் இவனேயாவன். பொய்கை நாட்டுத் தலைநகராகிய பொய்கை எது என்று அறிந்து கோடற்கு இல்லை. இப்பொய்கை ஒரு வைப்புத்தலம் என்பதை, திருநாவுக்கரசர் பெருமானுடைய க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தின் இறுதிப் பாட்டுப் புலப்படுத்துகின்றது. திருப்பழனம் சிவன் கோயிலில் உள்ள ''ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு எ ஆவது ராஜராஜவளநாட்டுப் பொய்கைநாட்டுத் திருவாமியூர் உடையார் திருப்புகலீசுவரமுடையார்க்கு'' எனத் தொடங்கும் கல்வெட்டுப் பகுதியால் இப்பொய்கைநாடு தென்பொய்கைநாடு வடபொய்கைநாடு என்னும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்றும், திருவாமியூர் - திருப்புகலீஸ்வரம் இப்பொய்கைநாட்டிற்குட்பட்டவை என்றும் பெறப்படுகின்றன.

தென்கயிலைக்கோயில்: இத்திருக்கோயிலில் உள்ள ஏழு கல்வெட்டுக்களுள் ஒன்று கிருஷ்ணராஜ உடையாரைப்பற்றியது. ஏனையவைகளெல்லாம் சோழநாட்டை ஆண்ட பிற்காலத்துச் சோழ மன்னர்கள் காலத்தனவாகும். இந்தச் சோழ மன்னர்கள் கல்வெட்டுக் களிலும், கருப்பஇல்லின் கிழக்குப்புறச் சுவரில் உள்ள ''திருமன்னி வளர இருநிலமடந்தையும்'' எனத் தொடங்கப்பெறும் கோப்பரகேசரி இராஜேந்திரசோழதேவரின் (கங்கைகொண்டசோழன்) முப்பத் தொன்றாம் ஆண்டில் பொறிக்கப்பெற்றதே பழமையான தாகும். அக்கல்வெட்டிலுள்ள ''வடகரை ராஜேந்திரசிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்று நம்பிராட்டியார் பஞ்சவன் மாதேவி......யாற்று எடுப்பித்தருளுகின்ற திருக்கற்றளி தென் கயிலாயமுடையார் கோயில்'' என்னும் பகுதியால், முதலாம் இராஜேந்திரசோழதேவரின் மனைவியாராகிய பஞ்சவன் மாதேவி யாரால் இக்கோயில் கட்டப்பெற்ற தென்று தெரிகின்றது. அம் முதல் இராஜேந்திர சோழதேவர் கி.பி. 1014 முதல் 1042 வரை ஆண்டவரா

Koviloor Digital Library

வார். அவரது ஆட்சியாண்டு முப்பத்தொன்றில் இக் கோயில் கட்டப் பெற்ற தென்று பெறப்படுகின்றமையால் இக்கற்றளி எடுப்பிக்கப் பெற்று இற்றைக்கு 952 ஆண்டுகள் ஆகின்றன.

இறைவர் திருப்பெயர் பஞ்சநதிவாணன் என்றும் இறைவி திருப்பெயர் அஞ்சலை என்றும் பெறப்படுகின்றன. இச்செய்தியை அர்த்தமண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரிலுள்ள ஒரு கல்வெட்டுப் பாடல் அறிவிக்கின்றது.

முதலாம் இராஜேந்திர சோழதேவரின் இரண்டாம் மகனாகிய விஜயராஜேந்திரன் கல்வெட்டால், அம்மன்னனது மனைவியாரின் திருப்பெயர் திரைலோக்கியமுடையார் என்பதும், இக்கோயிலில் ஆடவல்லார் இவர்தம் பிராட்டியார் இவர்களுடைய திருமேனிகள் இருந்தன என்பதும், ஆடவல்லார்க்குத் திருக்கழுத்து, திருக்கை, திருவடி இவைகளுக்குச் சாத்தியருளப்பெற்ற அணிகலன்கள் முறையே சண்பங்காறை, திருக்கைக்காறை, திருவடிக்காறை என்ற பெயர்களுடன் வழங்கிவந்தன என்பதும், இவர்தம் பிராட்டியார்க்கு இக்காலம்போல் அல்லாமல் ஒற்றைத்தாலியே சாத்தியருளப்பெற்று வந்ததென்பதும், அவர் தம் திருக்காதணியின் பெயர் காறைகண்டி என்பதும், அக்காலம் பொன், மாணிக்கம், வயிரம் இவைகள் குடிஞைக்கல் என்னும் அளவையால் நிறுக்கப்பெற்று வந்தன என்பதும் வெளியாகின்றன.

மகாமண்டபத்தின் மேற்குப்புறச்சுவரில் மிகவும் சிதைந்த நிலையில் உள்ள திருபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜதேவர், திருபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கசோழதேவர் இவர்களின் கல்வெட்டுக்கள் கோயிலில் நுந்தாவிளக்குக்களும் சந்திவிளக்குக் களும் வைப்பதற்குக் கொடுக்கப்பட்ட நிபந்தங்களைத் தெரிவிக் கின்றன.

இத்திருக்கோயிலின் திருச்சுற்றுமாளிகை கிருஷ்ணராஜ உடையாரால் எடுப்பிக்கப்பெற்றதாகும். இச்செய்தி கீழைத்திருச்சுற்று மாளிகையில் தென்பாலுள்ள கடைசித் தூணுக்கு அடுத்த வடபாலுள்ள தூணில் செதுக்கப்பட்டுள்ள ''ஸ்வஸ்திஸ்ரீ இத்தன்மம் கிருஷ்ணராஜ உடையார்'' என்னும் கல்வெட்டால் புலப்படுகின்றது.

ஒலோகமாதேவீச்சரம்:இத் திருக்கோயிலைக் கட்டியவர் இஞ்சிசூழ்தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு சோழமண்டலத்தைக் கி.பி. 985 முதல் கி.பி. 1014 வரை ஆண்ட முதல் இராஜராஜ

Koviloor Digital Library

மன்னனுடைய முதல் மனைவியாராகிய ஒலோகமா தேவியாராவர். இவ்வம்மையாரால் கட்டப்பெற்றமையின் இது ஒலோகமாதேவீச்சரம் என்று பெயர்பெற்றது. இச்செய்தி ''ஸ்ரீராசராசதேவர் நம்பிராட்டியார் தந்திசத்திவிடங்கியாரான ஒலோகமாதேவியார் வடகரை ராசேந்திரஸிம்ஹ வளநாட்டுத் தேவதான திருவையாற்றுப்பால் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவீச்சரமுடையார்க்கு'' என்னும் இக்கோயிற் கல்வெட்டுப்பகுதியால் அறியக்கிடக்கின்றது.

இக்கோயிலில் முதல் இராஜராஜன், அவன் மகனாகிய முதல் இராஜேந்திரன், அவன் மகனாகிய முதல் இராஜாதிராஜன் என்னும் மூன்று சோழமன்னர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றுள் முதலாம் இராஜராஜன் அரியணையேறிய இருபத்தொன்றாம் ஆண்டுக் கல்வெட்டே பழமையானது. அதிலேதான் ஒலோகமாதேவியார் இத்திருக்கோயிலைக் கட்டிய செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. அந்த முதலாம் இராஜராஜசோழன் கி.பி. 985 இல் பட்டம் எய்தியவன் ஆவன். அவன் ஆட்சி ஆண்டாகிய கி.பி. 985 உடன் இருபத்தொன்றைக் கூட்ட கி.பி. 1006 ஆகும். எனவே இற்றைக்கு (1954 - 1006) 948 ஆண்டுகளுக்குமுன் இத்திருக்கோயில் கட்டப்பெற்றதாகும்.

இத்திருக்கோயிலில் இவ்வம்மையார் ஒலோகமாதேவீச்சரமுடையார், ஒலோகவிடங்கதேவர், அவர்தம் பிராட்டியார், பிள்ளையார், முருகர், ஆடவல்லார், சண்டேசுவரர் இவர்களின் திருமேனிகளை எழுந்தருளுவித்துள்ளார். இவர்களுள் ஒலோகமாதேவீச்சரமுடையார் என்பது கருப்ப இல்லில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயராகும். ஒலோகவிடங்கதேவர், ஆடவல்லார் என்பன முறையே தியாகராசப்பெருமான், நடராசப் பெருமான் இவர்களுடைய திருப்பெயர்களாகும்.

இக்கோயிற் சிவபெருமானுக்கு நான்குகால பூசைகள் நடைபெற்று வந்தன. நெய்கொண்டு நொந்தாவிளக்குக்களும் சந்தி விளக்குகளும் பல ஏற்றப்பட்டு வந்தன. பருப்பமுது, கறியமுது, போனகம், பொறிகறியமுது, தயிரமுது, சர்க்கரையமுது, அப்பமுது இவைகள்கொண்டு திருவமுது செய்விக்கப்பட்டன. இவ்வம்மையார் தம் கணவன் பிறந்த நாளாகிய சதயத் திருவிழாப் பன்னிரண்டும், சித்திரைப்பெருந்திருவிழா ஒன்றும் ஆகப் பதின்மூன்று திருவிழாக் களையும் இத்தலத்து நடத்துவித்தார்.

இவ்வம்மையாரும் இவர் குடும்பத்தார்களும் கொடுத்துள்ள

Koviloor Digital Library

பொன்னாற்செய்து மணிகள் பதித்த அணிகலன்களுக்கும் வெள்ளி யாற்செய்த பரிகலங்களுக்கும் அளவில்லை. அணிகலன்களையும் பரிகலங்களையும் எவரும் மாற்றிவிடா வண்ணம் நிறையெடுத்தும், அவற்றில் மணிகள் சேர்க்கப்பெற்றிருப்பின் அவை இத்துணை என்று உரைத்திருப்பதும் மகிழ்தற்குரியதாகும்.

இக்காலத்தில் வழக்கத்தில் இல்லாத பல அணிகலன்களின் பெயர்கள் இக்கல்வெட்டுக்களால் தெரியவருகின்றன. அவைகள் கோளகை, தாழ்கூட்டுக்கம்பி, திருச்சன்னவடம், முத்தின்காரை, இடுக்குவளையல் முதலியன.

இக்கோயிலில் வழிபாடு நடக்குங்கால் உடுக்கை, உவச்சன் தலைப்பறை, கண்டை, திமிலை, மத்தளம், வீணை, கரடிகை முதலியவைகள் ஒலிக்கப்பெற்றுவந்தன.

[1]இக்கோயிலில் ஆடல் பாடல் முதலிய பணிகளைச் செய் வதற்குப் பதியிலார் முப்பத்திருவர் இருந்தனர். அவர்கள் தலைக் கோற்பட்டம் பெற்றவர்கள். தலைக்கோல் என்பது ஆடல்பாடல்களில் சிறந்த பதியிலார்களுக்கு அரசனால் கொடுக்கப்பெற்ற பட்டமாகும்.

இக்கோயிலுக்கு ஒலோகமாதேவியார் இராஜேந்திரசிங்க வள நாட்டு, மிறைக்கூற்றத்துக் கலவாய்த்தலை என்ற ஊரில் வீரநாராயண சதுர்வேதிமங்கலத்தார்க்கு நீர்போகும் குஞ்சரமல்லி வாய்க்காலுக்கு வடபால் சற்றேறக்குறைய நூற்றிரண்டு வேலி நிலத்தை நிவந்தமாக விட்டிருந்தார். இவைபோன்ற பல அரிய செய்திகள் இக்கல் வெட்டுக்களால் விளங்குகின்றன.

14. திருஒற்றியூர்

ஒரு காலத்தில் தலங்கள் உள்பட எல்லா ஊர்களுக்கும் இறை விதித்து அரசன் சுற்றோலை அனுப்பியபொழுது அவனுக்கும் ஓலை நாயகத்திற்கும் தெரியாதபடி வரி பிளந்து ''இவ்வாணை ஒற்றியூர்

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the years 1894 No. 213-256, No. 135-157, year 1924 No. 48.

Also see the South Indian Inscriptions, Vol. V, No. 512-555.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, ஞானசம்பந்தம் ஆறாவது ஆண்டு மலர்.

Koviloor Digital Library

நீங்கலாகக் கொள்க'' என்று அவ்வோலையில் எழுதப்பட்டிருந்ததை வியந்து அவ்வூர்க்கு ஒற்றியூர் (விலக்கு அளிக்கப்பட்ட ஊர்) என்றும், பெருமானுக்கு எழுத்தறியும் பெருமான் என்றும் பெயர் ஆயிற்று. ''ஏட்டுவரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும் நாட்ட மலரும் திருநுதலார்'' என்னும் பெரியபுராணச் செய்யுளும் காண்க.

இது திருவொற்றியூர் தொடர் வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 1. கி.மீ. தூரத்தில் இருக்கிறது. சென்னை மாநகரின் வடபகுதியாக விளங்குவது. பேருந்து வசதி உளது. இது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

இறைவரின் திருப்பெயர் - (1) படம்பக்கநாதர். உபமன்யு முனிவரிடத்துச் சிவதீட்சை பெற்றுத் தம்மை வழிபட்ட வாசுகியைத் இறைவர் தம் திருமேனியில் ஐக்யம் செய்து கொண்டமையால் இப்பெயர் பெற்றார். அப்பாம்பின் வடிவத்தை இறைவர் திருமேனி யில் இன்றும் காணலாம்.

(2) தியாகேசர்:- அரசனுக்குக் கொடுக்கும் பொருட்டுத் தம்மிடம் நிறைந்த அன்புடைய ஏலேலே சிங்கருக்கு மாணிக்கம் கொடுத்தருளினமையால் இப்பெயர் ஏற்பட்டது.

இவைகளன்றி, (3) ஆதிபுரீசுவரர், (4) புற்றிடங்கொண்டார், (5) எழுத்தறியும் பெருமான் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவற்றுள் எழுத்தறியும் பெருமான் என்பதற்குக் காரணம் முன் கூறப்பட்டது.

இறைவியின் திருப்பெயர் - வடிவுடையம்மை. மரம் - மகிழ மரம். தீர்த்தம் - பிரம தீர்த்தம். துர்க்கையாரின் பெயர் - வட்டப் பாறையம்மை. மக்கள் இவரைச் சிறப்பாக வழிபட்டு வருகின்றனர். நந்திதேவர், திருமால், பிரமதேவர், வான்மீகி முனிவர், சந்திரன் முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்கு எழுந்தருளி ஞாயிறுகிழாரின் மகளாய்த் தோன்றிய சங்கிலியாரை மகிழ மரத்தடியில் சத்தியஞ் செய்து கொடுத்து மணந்த வரலாற்றை முன்னிட்டு இக்கோயிலில் ஆண்டு தோறும் மாசி மாதத்தில் மகிழடித் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. தைலவினைத்தொழில் மரபினராகிய கலிய நாயனார் அவதரித்து, கோயிலின் உள்ளும் புறம்பும் திருவிளக்கு எரித்து வரும் திருத்தொண்டை வறுமைக் காலத்தும் விடாது நடத்தி

Koviloor Digital Library

வந்தும், ஒருநாள் முட்டுப்பட அது காரணமாகத் தம் கழுத்தை அரிந்து கொள்ளத் தொடங்கிய பொழுது இறைவன் தடுத்து அருள்செய்ததும் இப்பதியாகும். ''பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறக்கை அரிது அரிது' என்று தாயுமானாரால் பாடப்பெற்ற பட்டினத்துப் பிள்ளையார் பேறு பெற்றதும் இப் பதியிலேதான். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று; திருநாவுக்கரசர் பதிகங்கள் ஐந்து, சுந்தரர் பதிகம் இரண்டு ஆக எட்டுப் பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இவ்வூர்க்கோயிலில் சோழ மன்னர்களுள் மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மன், உத்தமசோழதேவன், முதலாம் இராஜராஜ சோழன், முதலாம் இராஜேந்திரசோழன், முதலாம் இராஜாதிராஜ சோழன், முதற் குலோத்துங்கசோழன், முதலானோர் காலங்களிலும், கங்க பல்லவமன்னர்களில் விஜய அபராஜித போத்தரையர், கோவிஜய நிருபதுங்கவர்மர், கோவிஜயகம்பவர்மர், முதலானோர் காலங்களிலும் பாண்டியர்களில் ஜடாவர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன் காலத்தும், இராஷ்டிரகூட மன்னர்களில் காஞ்சி, தஞ்சை இவைகளைக்கொண்ட கன்னர தேவர் காலத்தும், விஜயநகர வேந்தர்களில், சாயண்ண உடையார், தேவராய மகாராஜா குமாரர் புக்கண்ண உடையார், வீரப்பிரதாப தேவராய மகாராயர் முதலானோர் காலங்களிலும், சம்புவராய மன்னர்களில் சகல புவன சக்கரவர்த்தி ராஜ நாராயண சம்புவராயர் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள்[1] இருக்கின்றன.

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1892, Numbers 104 - 110, year 1896, Numbers 399 - 405. year 1911 Numbers 366 - 372, year 1912 Numbers 98 - 246, year 1938 Numbers 162 -167, year 1892 Numbers 104.

See also Epigraphica Indica Vol. VII, page 148, year 1892 Number 105, Vol. V page 106, year 1892 Number 110.

See also South Indian Inscriptions, Vol. IV 553 year 1892 Number 106, Vol. III No. 64 year 1892 Number 107 - 8, Vol. IV Numbers 555 - 556 year 1892, Number 109, Vol. IV Number 558 year 1896 Numbers 399 - 405, Vol. V Numbers 1354 - 1360 year 1912 Number 160, Vol. III Number 108 year 1912 Number 164, Vol. III Number 105, year 1912 Number 166, Vol. III Number 143 year 1912 Number 245 Vol. III Number 145, year 1912 Number 246 Vol. III Number 115.

Koviloor Digital Library

இறைவரின் திருப்பெயர்:- இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் மகாதேவபட்டாரர், திருவொற்றியூர் மகாதேவர், ஒற்றியூர் ஆழ்வார், திருவொற்றியூருடைய நாயனார், படம்பக்க நாயகதேவர், என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளனர்.

இவற்றுள் படம்பக்க நாயக தேவர் என்னும் பெயர், திரி புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதி ராஜ தேவரின் ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டிலும், மகாதேவ பட்டாரர் என்னும் பெயர் தெள்ளாறெறிந்த நந்திபோத்தரையர் கல்வெட்டிலும் காணப்படுகின்றன.

திருவிழா:

இத்திருக்கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழாவும், ஆனித் திருவிழாவும், மாசி மகவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்று வந்தன. பங்குனி உத்திரத்திருவிழாவின் ஆறாம் நாளில் படம்பக்க நாயக தேவரைத் திருமகிழ மரத்தின்கீழ் திருவோலக்கஞ் செய்தருளுவித்து ஆளுடைய நம்பியின் ஸ்ரீபுராணத்தைக் கேட்டருளச்செய்வது வழக்கம்.

ஆனித்திருவிழாவின் ஆறாம் நாளில் மூன்றாங் குலோத்துங்க சோழன் இக்கோயிலிலுள்ள இராஜராஜன் திருமண்டபத்தில் திருவோலக்கஞ் செய்தருளி விநோதம் கொண்டருளினான் என்று அம் மன்னனது 19 -ஆம் ஆண்டுக் கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது. மாசி மகவிழாவின் பொருட்டு சிறுவப்பேடாகிய மும்முடிச் சோழ நல்லூர்ப் புறவுவரித்திணைக் களத்துக் கணக்காளன் நிவந்தம் அளித்திருந்தான். இந்நிவந்தம் அளிக்கப்பெற்ற காலம் மூன்றாங் குலோத்துங்க சோழ தேவரின் முப்பத்தொன்றாவது ஆண்டாகும்.

மண்டபங்கள்:

இக்கோயிலில் இராஜராஜ மண்டபம் என்னும் பெயருடைய மண்டபம் ஒன்று இருந்தது. அம்மண்டபத்தில் இருந்து கோயில் கருமங் களை ஆராய்ந்து வந்தனர்.

குலோத்துங்கசோழன் மண்டபம்:

இதுவும் கோயிலுக்குள் இருந்த ஒரு மண்டபமாகும். இதில் நாடோறும் ஐம்பது அடியார்களுக்கு அன்னமளிக்கப்பெற்று வந்தது. இதன் பொருட்டுப் பையூர்க் கோட்டத்து அரசூருக்கு அருகில் உள்ள

Koviloor Digital Library

ஊராகிய பவனம்பாக்கத்திற்கு எழுத்தறிவார் நல்லூர் என்னும் பெயரை இட்டு அதில் ஒரு பகுதியை அன்னம் அளிப்பதற்கு நிவந்தமாக முதற்குலோத்துங்க சோழன் அளித்திருந்தான். இந்த ஏற்பாட்டை முதற்குலோத்துங்க சோழன் தன் தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து செய்தருளினான்.

வியாகரணதான வியாக்கியான மண்டபம்:

இதுவும் கோயிலுக்குள் இருந்த மண்டபமாகும். இது சித்தரசன் பொருட்டு துர்க்கையாண்டி நாயக்கனால் கட்டப் பெற்றதாகும். இம்மண்டபத்திற்கும் மற்றுமுள்ள திருப்பணிகளுக்கும் உடலாக ஒற்றியூர் வடகரை, தென்கரையில் பொன்வரி வகுப்பால் உள்ள மாடையைப் புழல்கோட்டத்து நாட்டவர் அளித்துள்ளனர்.

மண்ணை கொண்ட சோழன்:

இப்பெயருள்ள மண்டபம் ஒன்று இக்கோயிலில் இருந்தது. வளவன் மூவேந்தவேளார், விக்கிரமசிங்க மூவேந்த வேளார் என்னும் இரண்டு அதிகாரிகள் இம்மண்டபத்திலிருந்து கோயில் சம்பந்தமான ஒரு வழக்கை விசாரித்ததாக முதலாம் இராஜாதிராஜதேவரின் 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

திருமடங்கள்:

இவ்வூரில் சதுரானன பண்டிதற்குத் திருமடம் ஒன்று இருந்தது. அதற்குத் திருமயானமடம் என்று பெயர் வைக்கப்பெற்றிருந்தது. இச்செய்தி முதலாம் இராஜேந்திர சோழதேவரின் 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

குலோத்துங்கசோழன் மடம்:

இது கோயிலுக்குள் இருந்தது. இச்செய்தி முதற்குலோத்துங்க சோழன் கல்வெட்டில் கூறப்பெற்றுள்ளது.

இராஜேந்திரசோழன் மடம்:

ஆரிய தேசத்து மேகலாபுரத்து பிராமணி நாகலவ்வைச் சாநியான ஆரிய அம்மையாரால் கட்டப்பெற்றது. இம்மடத்திற்கு மடப்புறமாக இவ்வம்மையார் நிலம் வாங்கி விட்டிருந்தனர்.

Koviloor Digital Library

வெளிப்பிராகாரத்தைக் கட்டியவர்:

இக்கோயிலின் வெளிப்பிராகாரத்துத் திருமதிலைக் கட்டிய வர் ஆதிமங்கலத்து ஆட்கொண்ட நாயகனான சேதிராய தேவராவர். இது கட்டிமுடிந்தது மூன்றாங் குலோத்துங்க சோழதேவர் காலத்தில் ஆகும்.

விசயநகர பரம்பரையைச் சேர்ந்த ஹரிஹரர் II - காலத்துக் கல்வெட்டு, அங்கராயன் மடம் ஒன்றைக் குறிப்பிடுகிறது.

அளவுகருவி:

கோயிலுக்கு நெய்கொண்டு வந்து அளந்தவர்கள் அருமொழித்தேவன் நாழியால் அளந்து வந்தனர். எனவே இக்கோயிலில் வழங்கி வந்த அளவு கருவி அருமொழித்தேவன் நாழி என்னும் பெயர் பெற்றிருந்தது.

இறைவர் திருப்பெயரை இட்டு வழங்கல்:

படம்பக்க நாயகர் என்னும் இறைவரது திருப்பெயரை, கோயில் நாயகம் செய்துவந்த ஒருவனுக்கு படம்பக்க நாயக பட்டன் எனவும், திரிபுவன சுந்தரத்தெரு மன்றாடிகளில் ஒருவனுக்குப் படம்பக்கன் எனவும் இட்டு அழைக்கப்பெற்றிருந்தனர். எழுத்தறிவார் என்னும் திருப்பெயரை, பையூர்க் கோட்டத்தில் உள்ள அரசூர்க்கு அருகில் இருக்கும் பவனம் பாக்கத்திற்கு எழுத்தறிவார் நல்லூர் என்று வைக்கப்பெற்றிருந்தது. விசயநகர வேந்தனாகிய வீரப்பிரதாப தேவராயர் காலத்தில் அதாவது சகம் 1346 - இல் புழல்நாட்டு மணலி என்னும் ஊரினர் ஒற்றியூருடைய நாயனார்க்கு உப்புத்தட்டு ஒன்றைக் கொடுத்திருந்தனர். அதற்குப் படம்பக்க நாயகப் பேரளம் என்னும் பெயர் வைக்கப்பெற்றிருந்தது.

அரசர்களின் சிறப்புப்பெயர்கள்:

கோப்பரகேசரி வர்மராகிய உத்தமசோழதேவர், சென்னி எறிபடைச்சோழன், உத்தமசோழன் எனவும் முதற்குலோத்துங்க சோழன் ஜெயதரன் எனவும், மூன்றாங்குலோத்துங்க சோழதேவர், வீரராஜேந்திர சோழதேவர், உலகுய்யவந்த பெருமாள், கோனேரின்மை கொண்டான் எனவும் இக்கோயில் கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளனர்.

Koviloor Digital Library

ஒற்றியூரைத் தன்னகத்துக்கொண்டுள்ள நாடு:

இவ்வூர், கங்கைகொண்ட சோழன் காலம் முதல், முதற் குலோத்துங்க சோழன் காலம் வரையில் சயங்கொண்ட சோழ மண்டலத்துப் புழற்கோட்டத்துப் புழல் நாட்டில் உள்ள ஊர்களில் ஒன்றாய் இருந்தது. முதற்குலோத்துங்கன் காலத்தில் சயங்கொண்ட சோழமண்டலத்து, இராஜேந்திர சோழவள நாட்டுப் புழல்நாட்டு ஊர்களில் ஒன்றாய் விளங்கிற்று.

பிறசெய்திகள்:

முதலாம் இராஜேந்திரனின் பிறந்த நட்சத்திரம் மார்கழித் திருவாதிரையாகும். இச்செய்தி அம்மன்னனது 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் காணப்பெறும். ''திருவொற்றியூருடைய மகா தேவர்க்கு ராஜேந்திரசோழர் திருநாள் மார்கழித் திருவாதிரை நாளன்று நெய்யாடியருளவேண்டு மிடத்து திருவொற்றியூர் திருமயான மடமுடைய சதுரானன பண்டிதன் தேவர் பண்டாரத்து வைத்தகாசு நூற்றைம்பது'' கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

இக்கோயிலில் வீரராஜேந்திரன் திருப்பள்ளியெழுச்சி, திரிபுவன வீரதேவன் சந்தி இவைகளுக்கு நிவந்தங்கள் அளிக்கப் பெற்றிருந்தன. இவற்றுள் திரிபுவன வீரதேவன் என்பது மூன்றாங் குலோத்துங்க சோழனுக்குரிய சிறப்புப் பெயராகும். அவன் பேரால் ஏற்படுத்தப்பெற்ற இச்சந்திக்கு குலோத்துங்க சோழவள நாடான புலியூர்க் கோட்டத்தில் சிவபாத சேகரநல்லூராகிய குளப்பாக்கத்தில் நூறுவேலி நிலம் விடப்பெற்றிருந்தது. இவ்வூரில் சாலியர்கள் வசித்து வந்த தெருக்கள், ஜெயசிங்ககுல காலப்பெருந்தெரு என்றும், இராஜராஜப்பெருந்தெரு என்றும், மன்றாடிகள் வசித்துவந்த தெருக்கள் திரிபுவனச் சுந்தரச்சேரி, திரிபுவனநகரத்தெரு என்னும் பெயர்களைப் பெற்றிருந்தன. மன்றாடிகள் என்பார் திருவிளக்குக் குடிகளாவார். இவர்கள் நுந்தா விளக்கினுக்கு விடப்பெறும் சாவாமூவாப் பசுக்களையோ அல்லது ஆடுகளையோபெற்று, உரிய திட்டப்படி, தவறாது நெய் அளப்போராவர். இக்கோயிலில் உத்தம சோழதேவர் காலத்தில் கவரிப்பிணாக்கள் இருபத்து நால்வரும், காளம் ஊதுபவர் எண்மரும் இருந்தனர்.

இக்கோயிலிலுள்ள கிரந்தக் கல்வெட்டுக்கள், ஒற்றியூரை ஆதிபுரி என்றும், இறைவரை, ஆதிபுரீஸ்வரர் என்றும் கூறுகின்றன. கங்க பல்லவவம்சத்து விஜயகம்பவர்மனின் 19ஆம் ஆண்டுக்

Koviloor Digital Library

கல்வெட்டு, ஒற்றியூரில் நிரஞ்சனீஸ்வரத்து மகாதேவருக்கு நிரஞ்சன குரவரால் கோயில் கட்டப்பெற்ற செய்தியை உணர்த்துகின்றது. சோழ நாட்டுத் தென்கரை நாட்டு, பொய்யில் கூற்றத்து சிறுகுளத்தூருடை யான் மாறன் செம்பியன் சோழியவரையன், சீட்புலியை யெறிந்து நெல்லூரை அழித்துத் திரும்பியவன் திரு ஒற்றியூர் மகாதேவர்க்குத் திருநுந்தா விளக்கு எரிப்பதன் பொருட்டு 96 சாவாமூவாப் பேராடு களை அளித்தான் என்பதை மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்ம னின் முப்பத்து நான்காவது ஆண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

15. திருக்கச்சிஏகம்பம்

தொண்டைநாட்டுத் தலங்களில் முதலாவதாக விளங்கும் பெருநகர். சென்னை செங்கற்பட்டு முதலிய பல நகரங்களிலிருந்தும் பேருந்துகளிலும் வரலாம். தொடர் வண்டிகளிலும் வரலாம்.

கயிலாயத்தினின்றும் இங்கு எழுந்தருளிய இறைவி, இறை வனை எய்துதற்பொருட்டுத் தவஞ்செய்தனர். எண்ணான்கு அறங் களையும் வழுவாதியற்றினர். கம்பையாற்றில் ஒற்றை மாமரத் தடியில் மணலால் சிவலிங்கம்செய்து வழிபட்டனர். இறைவன் அருளால் நீர் கடுகிவரக் கம்பித்து, இறைவனைத் தழுவினர். வளைத்தழும்பும் முலைத் தழும்பும் இறைவன் தன் மேனியில் ஏற்றனர் என்பது புராண வரலாறு.

கம்பம் - நடுக்கம். ஏகாம்பரம் - ஒற்றை மாமரம். பஞ்சபூத தலங்களுள் பிருதிவித்தலம். 'முத்திதரும் நகரேழனுள் முக்கியமாம் முதற்காஞ்சி' என்றதற்கேற்ப முத்திதரும் நகருள் முதன்மைபெற்றது. இத்தலத்து அமைந்துள்ள சிவ, விஷ்ணு, தேவி, கணபதி, முருகன் ஆலயங்கள் அளவிடற்கரிய புகழுடையன. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் ஆட்சிசெய்த தலம். சுந்தரர் இடக்கண்பெற்ற தலம். திருக் குறிப்புத் தொண்ட நாயனார் சாக்கியநாயனார் ஆகிய இவர்கள் முத்தி பெற்ற தலம்.

இறைவன் ஏகாம்பரநாதர், பெரிய கம்பர். இறைவி காமாட்சி யம்மை, ஏலவார்குழலி, விநாயகர் விகடசக்கர விநாயகர், முருகன் மாவடிக்கந்தர், விருட்சம் மாமரம். தீர்த்தம் சிவகங்கை, கம்பாநதி, ஸர்வதீர்த்தம்.

இடம், காஞ்சிபுரம் தொடர் வண்டி நிலையத்திலிருந்து மேற்கே

Koviloor Digital Library

2 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கல்வெட்டு:

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் பலவாயினும் ஏகாம்பரநாதர் கோயிலைப்பற்றியன சிலவே. இங்குள்ள கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளவர்கள் முறையே திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜ ராஜன், கோப்பரகேசரி இராஜராஜன், திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்கன் III, இராஜகேசரி குலோத்துங்கன், கோராஜகேசரி குலோத்துங்கன், பரகேசரி உத்தமசோழன் ஆகிய இவர்களும், புவனேகவீரனும், விஜயநகர சதாசிவதேவன், வீரமல்லிகார்ச்சுனன், புக்கராயன் ஆகிய இவர்களும் காகதீய அரசன் கணபதியும், சண்ட கோபாலனுமாகிய இவர்களும் ஆவார்கள்.

இராஜராஜதேவன் I, 27ஆம் ஆண்டில் ஒருமாறன் தேவடி களால் 5 கழஞ்சு பொன் படையலுக்காகக் கோயில் பொக்கிஷத்தில் சேர்க்கப்பட்டது[1]. புவநேகவீரன் என்ற சமரலோகன். சகம் 1391-ல் பாண்டிய நாட்டிலுள்ள இரண்டு கிராமங்களை ஏகாம்பரநாதர் கோயிலுக்கும் காமாட்சியம்மன் கோயிலுக்கும் கொடுத்தமை குறிக்கப் பட்டுள்ளது.[2] காகதீய அரசன் கணபதி காலத்து (சகம் 1172) மந்திரி யாக ஆண்ட சாமந்தகபோஜனால் ஒரு கிராமம் கொடுக்கப்பட்டது.[3]

16. திருக்கடம்பந்துறை

கடம்பர்கோயில் என இக்காலம் வழங்கப் பெறும் இத்தலம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலைத் தொடர்வண்டி நிலையத்திற்கு வடமேற்கே 2. கி. மீ. தொலைவில் உள்ளது.

இறைவர்: கடம்பவனேச்சுரர்.

இறைவி: முற்றிலாமுலையார்.

தலத்துக்குரிய மரம்:- கடம்பு.

தீர்த்தம்:- காவிரி.

[1] 54 of 1893, [2] 25 of 1890. [3] 26 of 1890.

Koviloor Digital Library

கண்ணுவமுனிவர்க்கும் தேவர்களுக்கும் இறைவர் கடம்பவனத்தில் தோன்றி, காட்சியருளிய இடம் இதுவாம்.

பதிகம் ஒன்று.

17. திருக்கடம்பூர்

சிதம்பரம் வட்டம் காட்டுமன்னார் கோயிலுக்கு 5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது காவிரி வடகரைத் தலங்களுள் முப்பத்துநான்காவது ஆகும். சிதம்பரத்திலிருந்து காட்டு மன்னார்குடி வழியாக எய்யலூர் செல்லும் பேருந்தில் கடம்பூர் செல்லலாம். தேவாரப்பாடல் பெற்ற கோயில் மேலக்கடம்பூரில் உள்ளது.

ஊரின்பெயர் கடம்பூர் ஆயினும் இங்குள்ள கோயிலுக்குக் கரக்கோயில் என்று பெயர். இது ''தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்' என்னும் இவ்வூர்த் தேவாரப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

இதன் உண்மைக்காரணத்தை ஆராய்ச்சியாளர் இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள். புலப்படவில்லை. ''இத்தலத்தை வணங்கிய இந்திரன் இதனைத் தன் உலகத்திற்குக் கொண்டுபோக நினைத்துப் பாதாளம்வரை தோண்டியும் அஃது அப்பாலும் ஊடுருவிப்போனது கண்டு அஞ்சி, முன்போல அமைத்துப் பூசித்து அமிர்தம் உண்டாகும்படி வரம்பெற்றனன் என்ற வரலாறுகருதிக் கரக் கோயில் எனப்படும் என்பர் என்று திது சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தாம் அருமையாக எழுதிய பெரியபுராண உரையில் குறித்திருக்கின்றார்கள். (தி.12 திருத்தொண்டர் புராணம் நான்காம் பகுதி. பக்கம் 287.)

இறைவர்: அமிர்தகடேசர்.

இறைவி: சோதிமின்னம்மை.

தேவேந்திரன் பூசித்துப் பேறுபெற்றான். இத்தலத்திற்கு திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகம் இரண்டு ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

கோயில் கர்ப்ப இல்லின் அடிப்பாகம் இரதவடிவில் குதிரைகள்

Koviloor Digital Library

பூட்டிய நிலையில் இருக்கின்றது. இக்கடம்பூர்க்கும் கிழக்கே 1.1/2 கி.மீ. தூரத்தில் கடம்பூர் இளங் கோயில் இருக்கிறது. இது முற்றிலும் இடிந்துபோய் உள்ளது.

18. திருக்கடவூர்மயானம்

சிவபெருமான் ஒரு கல்பத்தில் பிரமதேவரை எரித்து, நீறாக்கி அவரை மீளவும் உயிர்ப்பித்துப் படைப்புத்தொழிலை அருளிய தலமாதலின் மயானம் என்னும் பெயர் எய்திற்று என்பர். இதை இக்காலம் மெய்ஞ்ஞானம் என்று மக்கள் வழங்குகின்றனர். இது திருக்கடவூர்க்குக் கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் நாற்பத்தெட்டாவது ஆகும்.

எமவாதனையைக் கடத்தற்குரிய ஊர் ஆதலின் இப்பெயர் பெற்றது என்பர். (இவ்வூரில் திருக்கடவூர்-வீரட்டானம், திருக் கடவூர்-மயானம் என்னும் இரு (தேவாரம் பெற்ற) தலங்கள் இருக்கின்றன. அவற்றுள் திருக்கடவூர்-மயானம் என்பது பற்றியது ஈண்டுத் தரப்பட்டுள்ளது)

இறைவரது திருப்பெயர் பெரியபெருமான் அடிகள்; பிரமபுரீசர். இறைவியாரது திருப்பெயர் மலர்க்குழல் மின்னம்மை.

காசித்தீர்த்தம். இதிலிருந்துதான் திருக்கடவூர் வீரட்டானேசு வரருக்கு நாடோறும் திருமஞ்சனம் கொண்டுவரப் படுகிறது. பங்குனி மாதம் சுக்கிலபட்சம் அசுவதி நட்சத்திரத்திலே இத்தீர்த்தத்தில் மக்கள் மிகுதியாக வந்து நீராடுகின்றனர்.

பிர்மதேவர் பூசித்தது. இது மூவர்களாலும் பாடப்பெற்றது. இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர் பதிகம் ஒன்று, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இவ்வூரில் பதினாறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. பதினைந்து, சோழர்களுடையனவும், ஒன்று, பாண்டிய னுடையதுமாம். சோழர்கள் பிற்காலச் சோழர்களே. (கி.பி.12.13 நூற்றாண்டினர்). வீணை வாசிக்க. வேதம் ஒத, ஸ்ரீ ருத்திரம் சொல்லத் திட்டம் செய்யப்பட்டது. சுங்கம் தவிர்த்த குலோத்துங்கன் பதினாறாம் நூற்றாண்டில் நிலம் அளக்கப்பட்டது. தீர்வை விதிக்கப்பட்டது.

Koviloor Digital Library

நந்தவனம் வைப்பதற்குத் தோட்டத்திற்கு ஆள் நியமனம் செய்யப் பட்டது.

ஊர்: ஜெயங்கொண்ட சோழவளநாடு, ஆக்கூர்நாடு, திருக்கடவூர் என்று குறிக்கப்பட்டது. இந்நாட்டில் திருத்தொண்டத் தொகை மங்கலம், சிவபாதசேகர மங்கலம், திருநீற்றுச்சோழமங்கலம் என்ற ஊர்கள் கூறப்பட்டுள்ளன. சுவாமிபெயர் திருமயானமுடைய பெருமான் என்று கூறப்பட்டுள்ளது.

19. திருக்கடவூர்

திருமால் முதலிய தேவர்கள் தூயதோர் இடத்தில் உண்ண வேண்டுமென்று அமுதகடத்தை இங்குக் கொண்டுவந்து வைத்தமை யால் இத்தலம் கடபுரி அல்லது கடவூர் என்று ஆயிற்று என்பர். இயமவாதனையைக் கடத்தற்கு உதவும் ஊர் என்றும் கூறுவர்.

இது காவிரித் தென்கரைத் தலங்களுள் 47 ஆவது ஆகும். மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதி உளது. இத்தலம் தருமை ஆதீன அருளாட்சியில் உள்ளது. 26.03.1997இல் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது.

இறைவர் அமிர்தகடேசர். திருமால் முதலிய தேவர்கள் தூய்மையான இடத்தில் உண்ணும் பொருட்டு இங்குக் கொண்டுவந்து வைத்த அமுதகடம் அமுதலிங்கமாகத் திருவுருவம் பெற்றமையால் இப்பெயர் ஏற்பட்டது. இறைவி அபிராமி அம்மை. தலப்பிள்ளையார் - கள்ளவாரணப்பிள்ளையார். மரம் - வில்வ மரமும், சாதிமுல்லைக் கொடியும்.

தீர்த்தம் - அமிர்தபுட்கரணி, காலதீர்த்தம் முதலியன.

மூலம் + ஸ்தானம் = மூலஸ்தானம்; அது மூலட்டானம் என வருவதுபோல, வீரம் + ஸ்தானம் = வீரட்டானம் எனவரும். இத்தகைய தலங்கள் எட்டு உள்ளன. அவை.

''பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம் அதிகை,
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாவழுவூர்,
காமன் குறுக்கை யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களுஞ் சூடிதன் சேவகமே.''

Koviloor Digital Library

என்னும் பாடலால் அறியத்தக்கன.

திருக்கண்டியூர் - பிரமன் தலைகளில் ஒன்றை அறுத்தது. திருக்கோவலூர் - அந்தகாசுரனைக் கொன்றது. திருவதிகை - திரி புரத்தை எரித்தது, திருப்பறியலூர் - தக்கன் தலையைக் கொய்தது. திருவிற்குடி - சலந்தராசுரனைக் கொன்றது. வழுவூர் - யானையை உரித்தது. திருக்குறுக்கை - காமனை எரித்தது. திருக்கடவூர் - இயமனை உதைத்தருளியது. இது மார்க்கண்டரைக் காக்கும் பொருட்டுக் கூற்றுவனை உதைத்தருளிய வீரம் நிகழ்ந்த தலமாதல் பற்றி வீரட்டானம் எனப்பெயர்பெற்றது. இச்செய்தியைக் ''கரிதரு காலனைச் சாடினானும்'', ''மார்க்கண்டர்க்காக அன்று காலனை உதைப்பர்போலும் கடவூர் வீரட்டனாரே'', ''கொன்றாய் காலன் உயிர் கொடுத்தாய் மறையோனுக்கு'' என முறையே காணப்பெறும், சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்களின் தேவார அடிகளால் அறியலாம். அதற்கு ஏற்பக் கால சம்ஹாரமூர்த்தி தனியே எழுந்தருளியிருக் கின்றார். அவர் சந்நிதிக்கு எதிரில் அருள் பெற்ற இயமனது உருவமும் இருக்கின்றது.

பரஞ்சோதியார் *திருவிளையாடற் புராணத்திலும்* (அருச் சனைப்படலம்.),

''கறுவிவீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலம் சாத்திச்
சிறுவனுக் காயு ளீந்த சேவகப் பெருமான் மேய
அறைபுனற் பழனமன்ன மூதூர்''

எனக் கூறப்பெற்றுள்ளது.

ஏழுகன்னிகள், துர்க்கை முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றதலம். இப்பதியில் அவதரித்த குங்கிலியக் கலயநாயனார் வறுமையுற்ற காலத்தும், தம் மனைவியாரின் தாலியை விற்றுக் குங்கிலியத் தொண்டைச் செய்தும், காரி நாயனார் அவதரித்து அரசனிடம் சென்று பொருள் பெற்றுப் பல திருப்பணிகள் புரிந்தும் வீடுபேறு அடைந்த பதி இதுவே.

சைவப்பெருமக்களாகிய அப்பரும், சம்பந்தரும் இவ்வூர்க்கு ஒருசேர எழுந்தருளி, கூற்று அடர்த்த பொன்னடிகளைத் தொழு தேத்திக் குங்கிலியக் கலைய நாயனார் திருமடத்தில் தங்கியிருந்த பெருமையும் இப்பதிக்குரிய பெருஞ்சிறப்பாகும்.

Koviloor Digital Library

இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர் பதிகங்கள் மூன்று, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக ஐந்து பதிகங்கள் இருக்கின்றன.

இத்திருக்கோயில் சோழமன்னர்களில் முதலாம் இராஜராஜ சோழன், முதலாம் இராஜேந்திரசோழன், முதற்குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் இராஜாதிராஜதேவன், மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் இவர்கள் காலங்களிலும்; பாண்டியமன்னர்களில் மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி, எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரதேவன், கோனேரின்மை கொண்டான், பெருமாள் சுந்தரபாண்டியன் என்போர் காலங்களிலும்; விஜயநகரவேந்தர்களில் கிருஷ்ணதேவமகாராயர், வீரவிருப்பண்ண உடையார் என்போர் காலங்களிலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக் கல்வெட்டுக்களில் இறைவர் திருவீரட்டானத்துப் பெருமானடிகள், திருவீரட்டானமுடையபரமசுவாமி, காலகாலதேவர் என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளனர்.

திருவிழா:

இக்கோயிலில் சித்திரைமாதத்தில் பெருந்திருவிழா எட்டு நாள் நடந்துவந்தது. இதன்பொருட்டுச் செலவினங்கட்கு முதலாம் இராஜேந்திரசோழதேவரின் பதினெட்டாம் ஆண்டில் இராஜராஜ மூவேந்தவேளான் நிலம் அளித்திருந்தனன்.

திருமடம்:

இவ்வூரில் முதல் குலோத்துங்கசோழன் காலத்தில் (கி.பி. 1070 - 1120) மார்க்கண்டேயர் மடம் ஒன்று இருந்தது. அம்மடத்தில் வேதம் வல்ல சிவயோகிகள் பதின்மருக்கு உணவு அளிக்கும் பொருட்டு மடப்புறமாக ஒன்றேமுக்கால்வேலி நிலம் அளிக்கப் பெற்றிருந்தது.

மண்டபங்கள்:

இக் கோயிலில் திருச்சிற்றம்பலவேலைக்காரன் திருமண்டபம் ஒன்று இருந்தது. திருக்கடவூர் சபையார் இம்மண்டபத்தில் கூட்டங் கூடுவது வழக்கம். இதுவன்றிக் குலோத்துங்கசோழன் திருவெடுத்துக் கட்டி என்னும் மண்டபமும் இருந்தது. இதிலும் சபையார் கூட்டங் கூடுவது உண்டு.

Koviloor Digital Library

எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனிகள்:

அரையர் இராஜராஜ தேவராகிய வாணதரையர் இக்கோயிலில் இராஜராஜ ஈசுவரரை எழுந்தருளுவித்திருந்த செய்தியை மூன்றாம் குலோத்துங்கசோழனுடைய கல்வெட்டு உணர்த்துகின்றது. சடாவர்மன் திரிபுவனச்சக்கிரவர்த்தியாகிய வீரபாண்டிய தேவரின் பதினான்காம் ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலின் விக்கிரம சோழீச்சரமுடையாரைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.

அறச்சாலை:

இக்கோயிலில் இராஜாதிராஜன் அறச்சாலை ஒன்று இருந்தது. அதில் பதினேழுபேர்கள் உண்பதற்கு கோமக்குடி விஜயராஜேந்திர மூவேந்தவேளானாகிய பிச்சன் ஆதித்தன் சாலாபோகமாக நிலம் அளித்திருந்தான்.

அளிக்கப்பெற்ற நில நிவந்தம்:

திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மைகொண்டான் தான் பிறந்த ஆனி மூலத்தில் காலகால தேவர்க்கு குலசேகரன் சந்தி என்னும் பெயரால் விசேட வழிபாட்டிற்கும் திருக்கோயிலுக்கு நாடோறும் வழிபாட்டிற்குமாக இராஜேந்திரசோழ மங்கலமான ஆக்கூரினின்று வேறு பிரிந்த குலோத்துங்கசோழன் கருப்பூரில் முப்பத்தொருவேலி நிலத்தை அளித்திருந்தான். விஜயநகரவேந்தனாகிய கிருட்டிணதேவ மகாராயர் எட்டுவேலி நிலத்தை அளித்திருந்தார். வீரவிருப்பண்ண உடையார் நூறுவேலி நிலத்திற்குரிய வரிகள் அனைத்தையும் இக் கோயிலுக்குக் கொடுத்திருந்தனர். இவ்வூருக்கு அருகிலுள்ள எருக்காட்டுச்சேரியே இக்கோயிலுக்குச் சொந்தம் என்று கல் வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இக்கோயிலுக்கு அளிக்கப்பெற்ற நுந்தாவிளக்குக்களைப்போல் வேறு எங்கும் அளிக்கப்பெறவில்லை. இந்த நுந்தாவிளக்குப்புறங்கள் பெரும்பான்மையும் இவ் வெருக்கட்டாஞ்சேரி மணற்குன்றுகளைத் திருத்தி நிலமாக அளிக்கப் பெற்றனவாகும். ''விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக் கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே'' என்னும் அப்பர்பெருமான் திருவாக்கை எண்ணியே மிக ஏராளமான நுந்தா விளக்குக்களுக்கு நில நிவந்தங்கள் அளித்திருத்தல் வேண்டும்.

Koviloor Digital Library

பிற செய்திகள்:

இராஜநாராயணவளநாட்டுக் கரம்பூர்நாட்டுத் தில்லையாளி நல்லூரில் தில்லையாளி ஈசுவரமுடையார் கோயிலில் எழுந்தருளுவித் திருந்த திருக்கடவூர் நாயகருக்கு அர்ச்சனாபோகமாக மூன்று வேலி நிலத்தைத் திருக்கடவூர் சபையார் விக்கிரமசோழதேவரின் நான்காம் ஆண்டில் விட்டிருந்தனர். தில்லையாளிநல்லூரே இக்காலம் தில்லை யாடி என்று வழங்கப்பெறுகின்றது. அக்கோயில் கல்வெட்டு அதைத் தில்லையாளிநல்லூர் என்றே குறிப்பிடுகிறது. இங்ஙனம் மூன்று வேலி நிலம் அளித்திருந்த செய்தியைத் திருவாவடுதுறைக் கோயிலின் மூன்றாம் பிராகாரத்து வடபுறச் சுவரிலுள்ள கல்வெட்டும் உணர்த்து கிறது. இச்செய்தியைப்பற்றி உணர்த்தும் கல்வெட்டு திருவாவடு துறைக் கோயிலில் இருப்பதன் காரணம் புலப்படவில்லை. விஜய நகரவேந்தராகிய கிருட்டிணராயர் காலத்துக் [1]கல்வெட்டுப் பாடல் திருக்கடவூரில் வசித்து வந்தவனும், ரெய்ச்சூர் சண்டையில் ஈடுபட்டு வந்தவனும் ஆகிய ஆபத்சகாயன் என்னும் பிராமணன் இக் கோயிலைப் பழுதுபார்த்ததைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.

பாணடிய நாட்டார் ஒருவர் பள்ளியறைக்குச் சிம்மாசனம் கொடுத்துள்ளனர். மூன்றாங் குலோத்துங்கசோழன் காலத்தில் வீராந்தப்பல்லவரையர் என்னும் புலவர் பெருமகனார் இருந்தனர். அவரிடத்தில் சோழ மன்னன் நல்லமதிப்பு வைத்திருந்தான். இப் புலவரின் விருப்பப்படி இக்கோயில் நட்டுவநிலை பாரசிவன் பொன்ன னாகிய கால விநோத நிருத்தப் பெரியானுக்கு அரசனால் கொடுக்கப் பெற்றது.

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்டுள்ள நாடு:

இவ்வூர் முதலாம் இராஜேந்திரசோழன் காலத்தில் உய்யக் கொண்டார் வளநாட்டு அம்பர்நாட்டுக் கடவூர் என்றும்; முதற் குலோத்துங்கசோழன் காலத்தில் இராஜநாராயணவளநாட்டு அம்பர் நாட்டுக் கடவூர் என்றும்; மூன்றாங் குலோத்துங்கசோழன் காலத்தில் சயங்கொண்ட சோழவளநாட்டு அம்பர் நாட்டுக் கடவூர் என்றும் இக்கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளன.

[1] See the Annual Reports on South Indian Epigraphy of the year 1906 Numbers 15 - 52. 1925 Numbers 241 - 258.

Koviloor Digital Library

20. திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

கடுவாய் என்னும் ஆற்றின் கரையில் இருக்கின்றமையால் கடுவாய்க்கரைப்புத்தூர் என்னும் பெயர் எய்திற்று.

கடுவாய் என்பது குடமுருட்டி ஆறு ஆகும்.

ஆண்டாங்கோயில் என இக்காலத்தில் வழங்கப்பெறும் இவ்வூர், தஞ்சை மாவட்டத்தில் திருக்குடவாசலுக்கு மேற்கே ஆறரை கி.மீ. தொலைவில் உள்ளது.

இறைவர்: சொர்ணபுரீசுவ்ரர்.

இறைவி: சொர்ணபுரீசுவரி.

இத்தலம் காசிபர் பூசித்த இடம் ஆகும்.

21. திருக்கருவிலிக்கொட்டிட்டை

கருவிலி என்னும் ஊரிலுள்ள கொட்டிட்டை என்னும் கோயில் என்று பொருள்படும். தஞ்சை மாவட்டத்தில் நாச்சியார் கோயிலுக்குக் கிழக்கே ஒன்பது கி. மீ. தொலைவில் உள்ளது.

இறைவர்: சற்குணநாயகர்.

இறைவி: சர்வாங்க நாயகி.

சற்குணன் என்னும் அரசன் பூசித்துப் பிறவிக்கடலைக் கடந்த இடம். இந்திரனும் தேவர்களும் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

பதிகம் ஒன்று.

கல்வெட்டு:

இரண்டாம் இராஜாதிராஜன் காலத்து நான்காம் ஆண்டுக் கல்வெட்டு, இவ்வூரை உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் குலோத்துங்கசோழ நல்லூராகிய கருவிலிக் கொட்டிட்டை என்று குறிப்பிட்டுள்ளது.

Koviloor Digital Library

22. திருக்கழிப்பாலை

சிவபுரி என வழங்கப்பெறுகிறது. இது முன்பு கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் காரைமேடு என்னும் இடத்தில் இருந்தது. அங்கு இருந்த பொழுது கொள்ளிடத்தின் வெள்ளப்பெருக்கு, திருக் கோயிலை முற்றிலும் பாழ்படுத்திவிட்டது.

படுகைமுதலியார் குடும்பத்தில் திரு. பழநியப்ப முதலியார் என்பவர் சிவபுரிக்குத் தெற்கில் கோயில்கட்டி அதில் கழிப்பாலை இறைவரையும், இறைவியாரையும், ஏனைய பரிவார தேவதைகளை யும் எழுந்தருளுவித்துள்ளார்.

இது சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே சுமார் 10 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது சோழநாட்டு வடகரைத் தலங்களுள் நான்காவது. சிதம்பரத்திலிருந்து பேருந்துகள் உள்ளன.

வான்மீகி முனிவர் பூசித்துப் பேறு எய்தினர். இத்தலத்திற்கு ஞானசம்பந்தரது பதிகங்கள் இரண்டு, திருநாவுக்கரசரது பதிகங்கள் ஐந்து, சுந்தரரது பதிகம் ஒன்று ஆக எட்டுத் திருப்பதிகங்கள் இருக்கின்றன. இவற்றுள் திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்துள்ள ''வனபவள வாய்திறந்து'' என்று தொடங்கும் அகப்பொருள்துறைகள் அமைந்த பாடல்கள் படித்து இன்புறத்தக்கன.

சுவாமியின்பெயர் பால்வண்ணநாதர். தேவியின்பெயர் வேதநாயகி.

கல்வெட்டு:

[1]இக்கோயிலில் நான்குசோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் படி எடுக்கப் பட்டுள்ளன. முதலாம் இராஜராஜன் ஒரு நுந்தா விளக்கு எரிக்க, திருக்கழிப்பாலை மகாதேவனுக்குப் பத்துக் காசுகள் தானம் செய்தான். கங்கைகொண்டசோழன் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரத்துப் பணிப்பெண் ஒருத்தி இக்கோயிலுக்குப் பொன் அளித்துள்ளாள்.

[1] இதுகாறும் ஆண்டு அறிக்கை, கல்வெட்டுத் தொகுதி இவைகளில் இக்கோயில் கல்வெட்டுக்கள் வெளிவந்தில. நேரில் படித்து எழுதியுதவின.

Koviloor Digital Library

முதலாம் இராஜராஜசோழனது கல்வெட்டின் ஒருபகுதியில் பகல் பூசைக்குத் திட்டம்செய்ததைப் பற்றியும், மற்றொரு பகுதியில் மாதேவிப்பேரங்காடி வியாபாரி ஒருவன் கூத்தன் அழகன் என்பானின் பெயர் எழுதப்பட்டுள்ளது. கோயிலுக்கு நாள் ஒன்றுக்கு ஒருநாழி தும்பை மலர் அளிக்க வடுகன்நல்லூரடிகள் என்ற விக்கிரம சோழ பிரமமாராயன் ஐந்து காசுகள் கொடுத்தான்.

இத்திருக்கோயில் கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் இருந்து, அவ்வாற்று வெள்ளத்தால் இடிந்துபோய்விட்டது. சைவப் பெரியார்கள் இக்கோயில் கற்களைக் கொண்டுவந்து, சிவபுரிக்குத் தென்பால் கோயில்கட்டி அதில் இறைவரை எழுந்தருளுவித்து உள்ளனர். அங்ஙனம் கட்டியபோது கல்வெட்டுக்களைத் தொடர்ச்சி யின்றி வெவ்வேறு இடங்களில் வைத்துக் கட்டியுள்ளனர். அவைகளை ஒருவாறு படித்து இக்குறிப்பு எழுதப்பெற்றது.

இத்திருக்கோயிலில் முதலாம் இராஜராஜசோழன், இவனது மகனாகிய முதல் இராஜேந்திரசோழன் இவர்கள் காலங்களில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றுள் முதலாம் இராஜராஜன் கல்வெட்டு, திருக்கழிப்பாலை உடைய மகாதேவருக்கு ஒரு திருநுந்தா விளக்கு எரிப்பதற்கு இத்தேவர் பண்டாரத்தில் காசுகளை வைத்து அதன் வட்டியைக் கொண்டு நாடோறும் உழக்கு நெய் கொண்டு ஒரு விளக்கு எரிய நிவந்தம் அளித்ததைக் குறிப்பிட்டுள்ளது. முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டால் உச்சியம் போதைக்குத் திரு வமுதுக்கு நிலம் அளித்த செய்தி புலனாகின்றது. மேலும் சில துண்டுக் கல்வெட்டுக்கள் தரா விளக்கு, தண்ணீர் அமுதுக்கு வெள்ளிவட்டில், இவைகள் கொடுக்கப்பட்ட செய்திகளை உணர்த்துகின்றன.

23. (மேலைத்) திருக்காட்டுப்பள்ளி

பூதலூர்த் தொடர்வண்டி நிலையத்துக்கு வடக்கே 8 கி. மீ. தொலைவில் உள்ளது.

இறைவர்: தீயாடியப்பர்.

இறைவி: வார் கொண்டமுலையாள்.

சோழராசன் மனைவிக்கு அருள் செய்த தலம்.

Koviloor Digital Library

பதிகம் இரண்டு.

இக்காலம் குடமுருட்டி ஆறு, காவிரியினின்று இத் திருக் காட்டுப்பள்ளியில் பிரிகின்றது.

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில் சோழமன்னரில் முதலாம் இராஜராஜசோழன் காலத்தது ஒன்றும், பாண்டியரில் சோணாடு வழங்கிய சுந்தரபாண்டிய தேவர் காலத்தது ஒன்றும், சாளுவரில் மகா மண்டலீச்சுவரன் மேதினி மீச்சுரகண்ட கட்டாரி சாளுவ, சாளுவத் திரு மலை தேவமகாராயர் காலத்தது ஒன்றும், கோனேரின்மை கொண்டான் காலத்தது ஒன்றும் ஆக நான்கு கல்வெட்டுக்கள் இருக்கின்றன[1].

இக்கல்வெட்டுக்களில் இறைவர் திருக்காட்டுப்பள்ளி உடைய நாயனார் என்றும், இறைவியார் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் அழகமர் மங்கையார் என்றும் கூறப்பெற்று உள்ளனர்.

அம்மன் கோயிலைப்பற்றிய செய்திகள்: இறைவியார்க்குக் கற்றளி சாத்தி அதில் அவரை எழுந்தருளுவித்து, அவர்க்குத் திரு வமுது முதலியனவற்றிற்கு மாறனேரியான தீனசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலத்திலும் முல்லைக்கொடியிலும், நிலம் வாங்கி அளித்தவன் வடகரை விருதராசப் பயங்கர வளநாட்டு மண்ணி நாட்டுப் பிரமதேசம் கோட்டூர்மத்யஸ்தன் கோட்டூர் உடையான் உதயஞ் செய்தான் விக்கினவினாயனான செம்பியன் பல்லவரையன். காங்கேயராயன், சேதிராயன் இவர்கள் விருப்பத்திற்கிணங்க, அரசன் கோனேரின்மை கொண்டான். இறைவிக்கு வேண்டும் நிவந்தங்களுக்கு மாறனேரியான தீனசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலத்தில் திருநாமத்துக் காணியாக நிலம் மூவேலி உட்பட ஒன்பதிற்று வேலியும் முல்லைக் கொடியில் திருநாமத்துக்காணியாக நிலம் வேலியும் கொடுத்துள்ளான்.

இறைவருக்கு அளிக்கப்பெற்ற நிவந்தம்: சாளுவத் திரு மலைதேவ மகாராயர் கல்வெட்டு இறைவருக்கு மகாபூசை, திருப்பணி இவைகளைக் குறைவற நடத்துவதற்குச் சூலவரி, கொத்திலக்கை,

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1897, No. 52-55
See also the South Indian Inscriptions, Vol. VI No. 1-4

Koviloor Digital Library

நாட்டுக்காணிக்கை, பிரதானிசோடி, அதிகாரிசோடி, கல்லணை, காடுவெட்டு மற்றும் எப்பேர்ப்பட்ட பல உபாதிகளையும் சர்வமானி யமாகக் கழித்துவிட்ட செய்தியை உணர்த்துகின்றது,

24. திருக்கானூர்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். இது பூதலூர் தொடர் வண்டி நிலையத்திலிருந்து வடக்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்தில் வருவோர் திருக்காட்டுப்பள்ளியை அடைந்து அங்கிருந்து செல்ல வேண்டும்.

உமாதேவியார் சிவயோகத்து எழுந்தருளியிருந்தபோது இறைவன் செந்தீவண்ணராகத் திருவுருக்காட்டிய தலம். இதனை அப்பர்சுவாமிகள் 'கானூரில் பரமனாய பரஞ்சுடர்' என்பார்கள். சுவாமி செம்மேனிநாதர். அம்மை சிவயோகநாயகி.

தீர்த்தம் கொள்ளிட நதி.

கல்வெட்டு:

இத்தலம் வடகரை இராஜராஜவளநாட்டுப் பொய்கையூர் நாட்டுப் பணிபதிமங்கலமாகிய கரிகாலசோழ சதுர்வேதி மங்கலத்துத் திருக்கானூர் என்று குறிக்கப்படுகிறது. சுவாமி பெயர் இட்சுபுரீசுவரர் என்று கல்வெட்டுக் குறிப்பாளர் எழுதுகிறார். கி.பி.1268-1308 ஆண்ட மாறவர்மன் குலசேகரதேவன் ஏதோ நிவந்தம் அளித்திருக் கிறான். பெரிய நப்பனான உத்தம சோழ நாடாள்வான் கிராமக் காவலனாக இருந்தான். இராஜாதி ராஜதேவனுடைய நான்காம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் கரிகாற் சோழீசுரமுடைய மகாதேவர் கோயில் ஒன்று குறிக்கப்படுகிறது. இங்கே திருமேற்கோயில் என்னும் விஷ்ணு கோயில் இருந்ததையும் அது குறிப்பிடுகிறது[1].

25. திருகுடமூக்கு

இது கும்பகோணம் என்று வழங்கப்பெறுகின்றது. ஒரு பிரளய காலத்தில் எல்லா உயிர்களையும் ஒருசேரவைத்த குடத்தின் மூக்கு

[1] 164 of 1911.

Koviloor Digital Library

இருந்த இடமாதலின் இப்பெயர் பெற்றது என்பர்.

கும்பகோணம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே 1.5.கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இறைவர் திருப்பெயர் - கும்பேசர். இறைவி திருப்பெயர் - மங்களாம்பிகை. தீர்த்தம் - மகாமகத்தீர்த்தம். தம்மிடத்து மூழ்கினோருடைய பாவங்களை எல்லாம் போக்கவல்ல கங்கை முதலிய ஏழு பெருந்தீர்த்த மாதாக்களும் தங்கள் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு இதில் வந்து நீராடும் பெருஞ்சிறப் புடையது. இது பற்றி, ''பூமருவு கங்கை முதல் புனிதமாம் பெருந் தீர்த்தம் மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடுங்கோயில்'' எனச் சேக்கிழார் கூறியிருத்தலுங் காண்க. திருமால் பூசித்துச் சார்ங்கமும் சக்கரமும் பெற்றனர். கும்பேசுவரர்க்குச் சித்திரை மாதத்தில் ஏழூர்ப் பெருந்திரு விழா நடைபெறுகின்றது.

ஏழூர்களாவன:- கும்பகோணம், கலயநல்லூர், வலஞ்சுழி, தாராசுரம், சுவாமிமலை, கொட்டையூர்க் கோடீச்சுரம், மேலைக்காவிரி என்பன.

இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகம் ஒன்று ஆக இரண்டு பதிகங்கள் இருக்கின்றன. திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இத்தலத்திற்குப் *தல புராண*மும், மங்களாம்பிகைமீது *பிள்ளைத்தமிழு*ம் பாடியுள்ளனர். அவைகள் அச்சில் வெளிவந்துள்ளன.

சகம் 1476இல் (கி. பி. 1554) மகா மண்டலேஸ்வரன் குருராஜருத்திர தேவசோழ மகாராஜா, ஆதி கும்பேஸ்வரருக்குத் திருவமுதுக்கும், பிராமணர்களுக்கு அன்னம் அளிக்கவும், வயலூர் இளங்கட்டளைக் கிராமம் என்னும் இரு ஊர்களைக் கொடுத்துள்ளான். தஞ்சை நாயக்க மன்னரில் சேவப்ப நாயக்க ஐயன் காலத்தில், திருமலைராசபுரத்துப் பிராமணர்கள், தாங்கள் வாய்க்கால் ஒன்றை வெட்டிக்கொள்வதின் பொருட்டு, திருவாலந்துறை புத்தர் கோயிலுக்கு உரிய நிலத்தைப் பயன்படுத்திக் கொண்டதற்கு, அப்புத்தர் கோயிலுக்கு வேறு நிலம் விட்டதை உணர்த்துகின்றது.

26. திருக்குரக்குக்கா

தஞ்சை மாவட்டத்தில் தலைஞாயிறு என்று வழங்கப்பெறும் திருக்கருப்பறியலூருக்கு வடக்கே சுமார் 1.5 கி.மீ. தொலைவில்

Koviloor Digital Library

உள்ளது.

அநுமார் பூசித்த தலமாதலால் திருக்குரக்குக்கா எனப் பெயர் பெற்றது.

இறைவர்: குந்தளேசுவரர்.

இறைவி: குந்தள நாயகி.

இக்கோயில் செங்கல் திருப்பணியை உடையது.

27. திருக்கொண்டீச்சரம்

இத் தலம் நாகை மாவட்டம் நன்னிலம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே 2. கி.மீ. தொலைவில் உள்ளது.

இது வில்வாரணியம் எனவும் வழங்கப்பெறும்.

இது காமதேனு பூசித்து வழிபட்ட தலமாகும். உமை யம்மையார் பசு உருவாய் இறைவனைத் தேடிக்கொண்டுவந்து கொம்பினால் பூமியைக் கிளறிக்கொண்டு வருகையில் இறைவன் தலையில் கொம்பு பட்டு இரத்தம் வரத் தன் பாலையே இட்டுக் காயத்தை ஆற்றியபின் வழிபட்டதாக வரலாறு. இலிங்கத் திருவுருவின் தலையில் இன்றும் கோட்டின் வடு காணப்பெறும். இத் தலத்திற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் இரண்டு உள்ளன.

இறைவர்: பசுபதி நாதர்.

இறைவி: சாந்தநாயகி.

தீர்த்தங்கள்: க்ஷீரபுஷ்கரிணி தீர்த்தம். இத் தீர்த்தம் கோயிலைச் சுற்றி அகழிபோல் அமைந்துள்ளது.

கல்வெட்டு:

இக் கோயிலில் சகம் 1439 இல் ஏற்பட்ட விஜயநகர வேந்த ராகிய வீரகிருஷ்ணதேவ மகாராயர் கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. அது கிருஷ்ணதேவராயர் உதயகிரிகோட்டையைக் கைப்பற்றியதை யும் அக் கோட்டையில் இருந்த திருமலைராகுத்தராயரைச் சிறைப்

Koviloor Digital Library

பிடித்ததையும் குறிக்கின்றது[1].

28. திருக்கோடிகா

பெயர்க்காரணம் புலப்படவில்லை. ''இது திரிகோடி அதாவது மூன்றுகோடி ரிஷிகள் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது என்பர்'' அது பொருந்துமாறு இல்லை.

மயிலாடுதுறை கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில் நரசிங்கன்பேட்டை தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே 1.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது காவிரி வடகரைத் தலங்களுள் முப்பத்தேழாவது ஆகும். காவிரி வடகரை வழியாக மயிலாடுதுறை - கும்பகோணம் பேருந்து வழியில் இத்தலம் உள்ளது.

இறைவரது திருப்பெயர் கோடிகாஈசுவரர். இறைவியாரது திருப்பெயர் வடிவம்மை.

தீர்த்தம் சிருங்கதீர்த்தம். இது கோயிலுக்கு வடபால் உள்ளது.

இவ்வூர்க்குச், சம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர்பதிகம் மூன்று மாக நான்கு பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில் முற்காலத்துப் பல்லவர்களில் நந்தி போத்தரையன் விஜய நிருபதுங்க விக்கிரமவர்மன் என்பவர் களுடைய கல்வெட்டுக்களும், பிற்காலப் பல்லவரில் கோப்பெருஞ் சிங்க தேவர் காலத்துக் கல்வெட்டும், முத்தரையர்களில் இளங் கோமுத்தரையர் காலத்துக் கல்வெட்டும், பாண்டியர்களில் மாறன் சடையன் காலத்துக் கல்வெட்டும், சோழ மன்னர்களில் மதுரை கொண்ட கோப்பர கேசரிவர்மன் முதலாம் இராஜராஜசோழன் முதற் குலோத்துங்கன் விக்கிரம சோழன் மூன்றாம் குலோத்துங்கன் என்பவர்களுடைய கல்வெட்டுக்களும் ஆக ஐம்பது கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1911, No. 80.

Koviloor Digital Library

இத்திருக்கோயில், கோயில் திருவிசைப்பாப்பதிகம் பாடிய கண்டராதித்த சோழதேவரது மனைவியாராகிய செம்பியன் மாதேவியாரால் கற்றளியாக ஆக்கப்பெற்ற பெருஞ்சிறப்புடையது. இவ்வம்மையார் இக்கோயிலைக் கட்டுவதற்கு முன்பு இங்கிருந்த இருபத்தாறு கல்வெட்டுக்களைப் பெரிதும் பாதுகாத்து அவைகளை யெல்லாம் தாம் கட்டிய கோயிலில் செதுக்கி வைக்கச் செய்தனர். கல்வெட்டில் இவ்வம்மையார் வைத்திருந்த பற்று பாராட்டற்குரியது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருக்கோடி காவல் பெருமான். திருக்கோடிகாவில் மகாதேவர். திருக்கோடிகா வுடையார் என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளனர். இக்கோயில் திருச்சுற்றுமாளிகை விக்கிரம சோழதேவரால் கட்டப்பெற்றதாகும். அதில் விக்கிரமசோழன் திருமாளிகை என எழுதப்பெற்றுள்ளது. சண்டேசுவரநாயனார் கோயில் உத்தரத்தில் தியாக சமுத்திரம் என்று செதுக்கப்பெற்றுள்ளது. அதனால் அக்கோயில் தியாக சமுத்திரம் என்னும் சிறப்புப் பெயருடைய சோழமன்னனால் கட்டப்பெற்றது என்று அறியக்கிடக்கின்றது. இத்திருக்கோயில் திருப்பெருந்துறை ஆளுடையாரைக் கோப்பெருஞ்சிங்க தேவரை எழுந்தருளுவித்தவர் கங்கைகொண்டசோழபுரத்து மணவூருடையார் வரந்தரும் கூத்தப் பெருமாள் ஆவார்.

இவ்வூர் முதலாம் இராஜராஜன் காலத்தில் (ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு) வடகரை நல்லாற்றூர் நாட்டுத் திருக்கோடிகாவல் எனவும், கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் விருதராசபயங்கர வளநாட்டு நல்லாற்றூர்நாட்டுத் திருக்கோடிகா எனவும் கூறப்பெற்றுள்ளது.

நந்திபோத்தரையர் என்னும் முற்காலப் பல்லவர் கல்வெட்டினால் இக்கோயிலினுள் சிறுநங்கை ஈச்சரம் என்னும் பெயருள்ள கோயில் ஒன்று கூறப்பெற்றுள்ளது. திருக்கோடிகாவிற்குக் கண்ணமங்கலம் என்னும் வேறுபெயருண்மையை 'திருக்கோடிகா வாகிய கண்ணமங்கலத்து' என்னும் கல்வெட்டுப் பகுதி அறிவிக்கின்றது.

சிறுநங்கை ஈஸ்வரகாரத்து மகாதேவர்க்குத் திருவிளக்கினுக்கு ஆழிசிறியன் என்பவன் நூறுகலம் நெல்கொடுத்து அதன் வட்டி கொண்டு நாள்வாய் (நாள்தோறும்) உழக்கு நெய்யால் அவ்விளக்கை எரிப்பதற்கு நிவந்தம் அளித்துள்ளான். இது நந்தி போத்தரையன் 19 ஆம் ஆண்டுக் கல்வெட்டால் புலப்படுகின்றது. விஜய நிருபதுங்க விக்கிரமவர்மனின் இருபத்துநான்காம் ஆண்டில், கொண்டநாடுடைய வெட்டுவதி அரையனான மல்லன் வேங்கடவன், பதினைந்துகழஞ்சு

Koviloor Digital Library

பொன்னை அளித்து, அதன் வட்டிகொண்டு நொந்தாவிளக்கு ஒன்றைத் திருக்கோடிகா மகாதேவர் கோயிலில் எரிப்பதற்காக நாணக்கச்சதுர்வேதிமங்கலத்துச் சபையாரிடம் ஏற்பாடு செய்திருந்தான். நிருபதுங்க மகாராஜர் தேவியார், வீரமகாதேவியார் இரணியகர்ப்பமும் துலா பாரமும் புகுந்த பொன்னில் திருக்கோடிகா மகாதேவர்க்கு ஐம்பதின் கழஞ்சுப் பொன்னை அளித்து அவற்றில் இருபத்தைந்து கழஞ்சு பொன்னுக்கு வரும் வட்டி கொண்டு நாடோறும் இருநாழி அரிசியும் ஒருபிடி நெய்யும் திருவமுதுக்கும், நாடோறும் உழக்கு நெய் கொண்டு ஒரு நுந்தா விளக்கு எரிப்பதற்கும் ஏற்பாடு செய்திருந்தார். மெழுக்குப் புறத்துக்கு நிலம் விடப்பட்டிருந்தது.

வடகரை நல்லாற்றூர் நாட்டு, ஆரூர் உடையான் அருளாக்கி சேந்தன் இந்நாட்டுக் கண்ண மங்கலத்துப் புதுவாய்க்காலின் வடக்கே மூன்றுமாவும், வடகரை அரை மாவும் ஆக மும்மாவரை நிலத்தை, பெண்ணடியார்கள் உண்பதற்கும், ஒருகூறு ஆணடியார்கள் உண்பதற்கும் ஆக ஏற்பாடுசெய்திருந்தான். மல்லிநாட்டுக் கிழந்தி பெரும் பிடுகுவிஞ்சவயனான நக்கன் நந்தவனத்துக்கும், நந்தவனம் இறைப்பார்க்கும் ஆக இரண்டுமா நிலத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்துள்ளான். நந்தவனம் திருக்கோவிலுக்கு வடபாலுள்ள இடமாகும்.

பழையாற்று நந்திபுரத்து வியாபாரி குமரன் கணபதி என்பான் திருக்கோடி மகாதேவர்க்குத் திருவிளக்கினுக்கும், திருவமிர்தினுக்கும் ஆக எழுபதின் கழஞ்சு பொன் கொடுத்துள்ளான்.

மார்கழித் திருவாதிரைச் சிறப்புக்குக் கூத்தாடும் நாயனார்க்கு உதையஞ்சடையன் உடையான் தில்லையம்பல விழுப்பரையன் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில் நிவந்தம் அளித்துள்ளான்.

பரகேசி விக்கிரமசோழன் காலத்தில் தென்கரை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர்நாட்டுத் திருவாவடுதுறைக் கோயிலில் பத்து தபசிகள் உண்பதற்கு ஒருவேலியும், வைத்திய விருத்திக்காக அரை வேலியும் திருக்கோடிகாவில் கொடுக்கப் பெற்றிருந்தது.

அமாவாசையில் இறைவரை எழுந்தருளச் செய்வதற்கு விக்கிரமசோழதேவரின் நான்காம் ஆண்டில் நிவந்தம் கொடுக்கப் பெற்றுள்ளது. வரகுணமகாராஜபாண்டியன் சரஸ்வதி, கணபதி இவர்கள் கோயில்களில் விளக்கு எரிக்க நிபந்தம் அளித்துள்ளான்.

Koviloor Digital Library

கோபுரத்தின்வாசல் இடதுபக்கத்தில் புதுவைபுரிபிள்ளைப் பெருமாள் மகனார் சடையரைப்பற்றிய பாடல்கள் இருக்கின்றன[1].

29. கோயில் (சிதம்பரம்)

கோயில் என்பது எல்லா ஆலயத்திற்கும் பொதுப்பெயர். அதுவே சிறப்புப் பெயராகக் குறிப்பிட்ட ஒரு தலத்தைக் குறிக்கு மானால் அது அதனுடைய மிக்க உயர்வைக்குறிக்கும். அங்ஙனம் உயர்வுபற்றிய காரணத்தால் இத்தலம் கோயில் என்னும் பெயர் பெற்றது.

இத்தலத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள்:- (1) பெரும்பற்றப் புலியூர் - பெரும்பற்றினால் புலிப்பாதன் பூசித்த ஊராதலால் இப்பெயர் பெற்றது. இது மரூஉ மொழி. மலையமான்நாடு மலாடு என்பதுபோல.

(2) சிதம்பரம் - (சித் + அம்பரம்) சித் = அறிவு, அம்பரம் = வெட்டவெளி. ஞானகாசம் ஆதலால் இப்பெயர்பெற்றது.

(3) தில்லைவனம்:- தில்லை என்னும் மரமடர்ந்த காடாயிருந்ததால் இப்பெயர் பெற்றது. இவைகளன்றி, வியாக்கிரபுரம், புண்டரீகபுரம், பூலோக கைலாசம் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

கடலூரிலிருந்து, மயிலாடுதுறை செல்லும் இருப்புப் பாதையில் இருக்கும் சிதம்பரமென்னும் தொடர்வண்டி நிலையத்தில் இறங்கி வடமேற்கே 1.5 கி.மீ. சென்றால் இக்கோயிலை அடையலாம். இது காவிரியாற்றின் வடகரையிலுள்ள தலங்களுள் முதன்மை பெற்றது.

திருமூலட்டானக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருப்பெயர் - அருள்மிகு மூலநாதர். இறைவியின் திருப்பெயர் - உமையம்மை. சிற்றலம்பலத்தில் ஆனந்தத்தாண்டவம்புரியும் இறைவரின் திருப்பெயர் - நடராசர், கூத்தப்பெருமான்.

[1] See the Annual Report on South Indian Epigraphy for the year 1931. Inscription numbers 9-58.

Also see the South Indian Inscriptions, Vol. 13, Inscription general numbers 55, 74, 78, 136, 222.

Koviloor Digital Library

இங்கு நடராசப்பெருமானை சகளம் என்றும், ரகசிய தானத்தை நிஷ்களம் என்றும், ஸ்படிகலிங்கத்தை சகளநிகளன் எனவும் கூறுவர்.

இறைவியின் திருப்பெயர் சிவகாமசுந்தரியார். இவ்வம்மையார்க்குத் தனிக்கோயில் உண்டு. அது மூன்றாம் பிராகாரத்தில் நூற்றுக்கால் மண்டபத்திற்கு வடக்கில் இருக்கிறது.

மரம் - ஆல். தீர்த்தம் - சிவகங்கை. இது மூன்றாம் பிராகாரத்தில் சிவகாமசுந்தரி அம்மன் கோயிலுக்கு எதிரில் இருக்கிறது. இது சிவவடிவம் உடையது. இதில் நீராடி சந்தியாவந்தனம் முதலியன முடிப்பது பெரும் புண்ணியம். வருடப்பிறப்பு, மார்கழித் திருவாதிரை, மாசித்திருமகம், சிவராத்திரி இவைகளில் இதில் நீராடுவது பெரும் விசேடமாகும். சிதம்பரத்திலிருந்து வேற்றூர்க்குச் செல்வோர் இதில் நீராடிச்சென்றால், தாம் தாம் நினைத்த காரியங்களில் வெற்றி எய்துவர். பூதம், பேய் முதலியவைகளினால் துன்பம் அடையார்.

பரமானந்த கூபம்:

இது சிற்றம்பலத்திற்குக் கீழ்ப்பால் இருக்கிறது. இது சத்தி வடிவம் பொருந்தியது.

குய்யதீர்த்தம்:

இது சிதம்பரத்திற்கு வடகிழக்கேயுள்ள கிள்ளைக்கு அருகில் கடலில் பாசம் அறுத்த துறையையுடையது. இருளில் வந்த குருவைப் பகைவன் என்று எண்ணி, வருணன் அவர்மீது பாசத்தைவிட, அதனால் அவர் இறந்தார். வருணனை, அக்கொலைப் பாவத்திற்காக ஒரு பிசாசு அவனுடைய கால்களையும் கைகளையும் கழுத்தோடு சேர்த்துக் கட்டி கடலுள் இட்டது. வருணனும் நீண்டகாலம் அங்கு கிடந்தான். அங்ஙனம் கிடந்த வருணனுக்குச் சிவபெருமான் மாசி மாதத்தில் வெளிப்பட்டு அப்பாசக்கட்டு அற்றுப்போகும்படி அருள் புரிந்தார். ஆதலின் அத்துறை பாசமறுத்தான்துறை என்னும் பெயர் எய்திற்று.

புலிமடு:

இது சிதம்பரத்திற்குத் தென்பால் ஒன்றரைக் கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

Koviloor Digital Library

வியாக்கிரபாத தீர்த்தம்:

இது நடராசப்பெருமான் திருக்கோயிலுக்கு மேற்கே இருக்கும் இளமையாக்கினார் கோயிலுக்கு எதிரில் இருக்கும் குளம் ஆகும்.

அனந்த தீர்த்தம்:

இது நடராசப்பெருமான் திருக்கோயிலுக்கு மேற்கே திருவனந்தேச்சுரத்துக்கு முன்பு இருக்கும் திருக்குளமாகும்.

நாகச்சேரி:

இது அனந்தேச்சுரத்துக்கு மேல்பால் இருக்கும் திருக்குள மாகும்.

பிரமதீர்த்தம்:

இது நடராசப்பெருமான் திருக்கோயிலுக்கு வட மேற்கே இருக்கும் திருக்களாஞ்சேரியில் உள்ள திருக்குளமாகும்.

சிவப்பிரியை:

இது நடராசப்பெருமான் திருக்கோயிலுக்கு வடக்கேயுள்ள பிரமசாமுண்டி கோயிலுக்கு முன்புள்ள திருக்குளமாகும்.

திருப்பாற்கடல்:

இது சிவப்பிரியைக்குத் தென்கிழக்கில் இருக்கிறது.

காணமுத்தி தரும் தலம். அர்த்தயாமத்தில் எல்லாத் தலங் களிலுமுள்ள மூர்த்திகளின் கலைகள் வந்து ஒடுங்கப்பெறுவது. வியாக்கிரபாதர், பதஞ்சலி, உபமன்யு, வியாசர், சூதர் முதலான முனிவர்களும், திருநீலகண்டர், திருநாளைப் போவார், கூற்றுவர், கணம் புல்லர், கோச்செங்கட் சோழர், மாணிக்கவாசகர், சேக்கிழார் என்னும் நாயன்மார்களும், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்னும் சந்தான குரவர்களும், இரணியவர்மர், சேந்தனார், பெற்றான் சாம்பானார், என்னும் அடியார்களும் வழிபட்டு, முத்திபெற்ற தலம். மாணிக்கவாசகப்பெருந்தகையார் புத்தரை வாதில் வென்று ஊமைப்பெண்ணைப் பேசுவித்து, சைவ

Koviloor Digital Library

சமயமே மெய்ச்சமயம் என்பதை நிலை நாட்டியது; நம்பியாண்டார் நம்பி கனகசபையின் மேல்பால் உள்ள அறை ஒன்றில் தேவாரங் களைக் கண்டருளியது; தெய்வப்பாக்கிழாராகிய சேக்கிழார் திருத் தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தை எழுதி அரங்கேற்றியது; உமாபதிசிவம் பெற்றான் சாம்பானார்க்கும், முள்ளிச் செடிக்கும் முத்திகொடுத்தருளியது; திருஞானசம்பந்தப் பெருந்தகை தில்லை வாழ் அந்தணர்களைச் சிவகணங்களாய்க் கண்டது; சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூர்ப்பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே கண்டு வணங்கியது; என்பனவும் பிறவும் இத்தலத்தில் நிகழ்ந்த அரிய விசேடங்களாகும். ஈசர்க்கேற்ற பரிசினால், அவரை அருச்சித்து அருள, பூசைக்கமர்ந்த பெருங் கூத்தர், தம்முடைய பொற்பார் சிலம்பின் ஒலியை எந்நாளும் அளிக்க, கேட்டு உவக்கும் பேறுற்ற சேரமான் பெருமாள் நாயனாருக்குச் சிலம்பொலி கேட்கத் தாழ்ப்பித்து, பொன்வண்ணத்து அந்தாதியைப் பெற்றதும் ஆகிய அருட் செயல்களுடன், ஆடகப்பொதுவில் நாடகம் இயற்றும் ஏடவிழ் கூந்தல் இறைவி பாகனது பெருமையை யாவரால் எடுத்து இயம்ப இயலும்?

தேவாரப் பதிகம் பதினொன்றும், திருவாசகப் பதிகம் இருபத்தைந்தும், திருக்கோவையாரும், திருவிசைப்பாப் பதிகம் பதினைந்தும், திருப்பல்லாண்டும், பத்தாம் திருமுறையில் சிலதிருமந்திரங்களும், பதினொன்றாம் திருமுறையில் கோயில் நான் மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தங்களும் பெரிய புராணமும் ஆகப் பல அருட்பனுவல்கள் இத்தலத்திற்கு உள்ளன. இவைகளன்றிக் *கோயிற்புராணம், சிதம்பர புராணம், சபா நடேச புராணம்* என்னும் புராணங்கள் தமிழிலும், *சூதசம்கிதை, சிதம்பர மான்மியம், புண்டரீகபுர மான்மியம், வியாக்கிரபுர மான்மியம்* முதலான நூல்கள் வடமொழியிலும் இருக்கின்றன. இவைகளேயன்றி, குமரகுருபர அடிகளால் ஆக்கப்பெற்ற *சிதம்பரம் மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை;* இரட்டைப் புலவர்களால் பாடப்பெற்ற *தில்லைக்கலம்பகம்* என்னும் நூல்களும் இத்தலத்திற்கு உரியனவாகும்.

கோயிலிலுள்ள ஐந்து சபைகள்:

பேரம்பலம் - இது இக்கோயிலிலுள்ள ஐந்து சபைகளுள் ஒன்று. இதனைத் தேவசபை என்பர். தேவாரம் முதல் திருமுறையில்,

Koviloor Digital Library

''நிறைவெண் கொடிமாடம் நெற்றிநேர் தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம்பலம்''

என்று சம்பந்த சுவாமிகளாற் (தி.1 ப.80 பா.4) கூறப்படுகிறது.

சிற்றம்பலம்:

நடராசப்பெருமான் நடம் புரிந்தருளும் இடம். இது ''தூயசெம்பொன்னினால் எழுதி மேய்ந்த சிற்றம்பலம்'' (தி.5 ப.2 பா.8) என்றும் ''தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்' என்றும் அப்பர் சுவாமிகளால் விளக்கப்படுகிறது.

கனகசபை:

பெருமான் அபிடேகங்கொண்டருளுமிடம். சிற்றம்பலத்திற்கு முன்னுள்ளது.

நிருத்தசபை:

பெருமான் ஊர்த்துவ தாண்டவம் புரிந்தருளுவது. கொடி மரத்தின் தென்பாலுள்ளது.

இராஜசபை:

இது ஆயிரங்கால் மண்டபம் ஆகும்.

கல்வெட்டு:

இக்கோயிலில் பிற்காலச் சோழமன்னர்களில் முதலாம் இராஜராஜசோழன், முதலாம் இராஜேந்திரசோழன், முதற் குலோத் துங்க சோழன், விக்கிரமசோழன், இரண்டாம் இராஜாதிராஜ தேவன், மூன்றாம் குலோத்துங்கசோழதேவன், மூன்றாம் இராஜராஜ சோழன் இவர்கள் காலங்களிலும்; பாண்டியமன்னர்களில் திரிபுவனச்சக்கர வர்த்தி வீரபாண்டியதேவன், சடாவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி சுந்தரபாண்டியதேவன், மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி வீரகேரளனாகிய குலசேகரதேவன் இவர்கள் காலங்களிலும், பல்லவரில் அவனி ஆளப்பிறந்தான் கோப்பெருஞ்சிங்கதேவன் காலங்களிலும், விஜய நகர வேந்தர்களில் வீரப்பிரதாபகிருட்டிண தேவமகாராயர், வீரப்பிரதாப வேங்கடதேவமகாராயர், ஸ்ரீரெங்க

Koviloor Digital Library

தேவமகாராயர், அச்சுத தேவமகாராயர், வீரபூபதிராயர் இவர்கள் காலங்களிலும்: கொச்சி பரம்பரையில் சேரமான் பெருமாள் நாயனாரின் வழித் தோன்றிய இராமவர்ம மகாராசா காலத்திலும்; சாளுவ பரம்பரையில் வீரப் பிரதாபதம்முராயர் I காலத்திலும் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளையன்றி இக்கோயிலைப் பற்றி வேற்றூர்களில் கல்வெட்டுக்களும் செப்பேடு களும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் தழுவிய வரலாறே ஈண்டுக் கொடுக்கப்பெற்றுள்ளது.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு:

இவ்வூர் முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் இராஜேந்திர சிங்கவளநாட்டுத் தனியூர் பெரும்பற்றப்புலியூர் என்றும், முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் இராஜாதிராஜவளநாட்டுத் தனியூர்ப் பெரும்பற்றப்புலியூர் என்றும் கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ளது.

மூர்த்திகளின் பெயர்கள்:

இப் பெரும்பற்றப்புலியூரில் மூலத்தானத்தில் எழுந்தருளி யிருக்கும் இறைவர் திருமூலத்தானமுடையார் என்றும், பேரம்பலத்தில் எழுந்தருளியிருப்பவர் ஆளுடையார் என்றும், சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருப்பவர் திருச்சிற்றம்பலமுடையார், தில்லை நாயகத் தம்பிரானார், ஆநந்தத்தாண்டவப்பெருமாள், பொன்னம்பலக்கூத்தர், சிதம்பரேசுவரர் என்றும், அம்மன் சிவகாமசுந்தரியார் என்றும், அம்மனுக்குரிய திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவர் திருக்காமக் கோட்டமுடைய பெரியநாய்ச்சியார் என்றும் கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ளனர்.

திருமாளிகைகள்:

திருச்சிற்றம்பலத்தைச் சூழ்ந்த முதல் திருமாளிகைக்குக் 'குலோத்துங்கசோழன் திருமாளிகை'' என்றும், இரண்டாம் பிராகாரத்தைச் சூழ்ந்துள்ள திருமாளிகைக்கு விக்கிரமசோழன் திருமாளிகை என்றும், மூன்றாம் பிராகாரத்தைச் சூழ்ந்துள்ள திருமாளிகைக்கு இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை என்றும் பெயர்கள் வைக்கப்பெற்றிருந்தன.

விக்கிரமசோழன் திருமாளிகை என்பது முதற்குலோத்துங்க சோழனது மகனாகிய விக்கிரமசோழன் பெயரால் கட்டப்பெற்றதாகும்.

Koviloor Digital Library

இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை மூன்றாங்குலோத்துங்கசோழன் திருப்பெயரால் அமைக்கப்பெற்றதாகும். இராசாக்கள் தம்பிரான் என்பது மூன்றாங் குலோத்துங்க சோழனுக்கு வழங்கிவந்த சிறப்புப் பெயர்களில் ஒன்று [1].

திருவிழாக்கள்:

இத்திருக்கோயிலில் ஆனித்திருநாள், மார்கழித் திருநாள், மாசித்திருநாள் இவைகள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வந்தன. மாசித்திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பஞ் செய்யப் பெற்றுவந்தது. இவைகளின் பொருட்டு முதலாம் இராஜேந்திர சோழ தேவரின் (கி. பி. 1012 - 1044) அணுக்கிநக்கன் பரவை (பாவை என்றும் படிக்கலாம்) என்னும் அம்மையார் நாற்பத்து நான்குவேலி நிலங்களை இராஜேந்திரசோழதேவர் வழங்கி அருளின பொன்னைக் கொண்டு வாங்கி அளித்திருந்தனர். மாசித் திருநாளில் இறைவர் கடலாடி வீற்றிருக்க, சிதம்பரந்தாலூகாவைச் சேர்ந்த கிள்ளை என்னும் கிராமத்தில் சயங்கொண்ட சோழமண்டலத்து மணவிற்கோட்டத்து மணவில் என்ற ஊரின் தலைவனாகிய கூத்தனால் மண்டபம் ஒன்று கட்டப்பெற்றுள்ளது. மாசிக்கடலாட இறைவர் எழுந்தருளுவதற்கு ஒரு பெருவழியையும் அக்கூத்தன் அமைத்தான். அதற்கு விக்கிரமசோழன் தெற்குத்திருவீதி என்று பெயர் வைக்கப்பெற்றிருந்தது.

தைப்பூசத் திருநாளும் இத்திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றுவந்தது. அப்பூசத் திருநாளில் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கன் காலத்தில் கயிலாயதேவன் என்பவன் தன் பெயரால் கயிலாயதேவன் திருப் பாவாடைப்புறம் ஒன்றை ஏற்படுத்தி அன்று அமுதுபடிக்குப் பத்துகலம் போனகப் பழவரிசி, இருகலம் மணிப்பருப்பு, நான்குநிறை சர்க்கரை, நூறு தேங்காய், இருநூறு வழுதிலைக்காய் இவைகளைக் கொண்டு வந்து, இக் கோயிலிலுள்ள குலோத்துங்கசோழன் திருமடைப்பள்ளியில் சேர்ப்பதற்கு மூல

[1]இத்திருமாளிகை முதற் குலோத்துங்கசோழன் காலத்தில், மிழலைநாட்டு வேள் கண்டன்மாதவனால் கட்டப்பெற்றதாகும். இச் செய்தியைத் தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறைக் கோட்டத்தில், பாடல்பெற்ற நீடூர் திருக்கோயிலில் பொறிக்கப்பெற்ற ''தில்லையம்பலத்து வடக்கின் பால் புராணநூல் விரிக்கும் புரிசை மாளிகையும், வரிசையால் விளங்கப் பொற்பினால் விருப்புறச் செய்தான்'' என்னு ம் கல்வெட்டுப்பகுதி அறிவிக்கின்றது. (Epigraphica Indica Volume XVIII Page 6.)

Koviloor Digital Library

தனமாக பெரும்பற்றப்புலியூர் கீழ்ப்பிடாகை கிடாரங்கொண்ட சோழப்பேரிளமைநாட்டு எருக்காட்டுச்சேரியான சோழநல்லூர்ப்பால் சோழபாண்டியன் என்ற பெயருள்ள நிலத்தையும், அங்குள்ள கொல்லைக் குளத்தில் செம்பாதி நிலத்தையும் அளித்திருந்தான். திருக்காமக்கோட்டமுடைய பெரியநாய்ச்சியார்க்கு 'ஐப்பசிப் பூர விழா' நடைபெற்றுவந்தது. அதன் செலவினங்களுக்குப் 'பூரப் பேட்டை' என்னும் ஊர் கொடுக்கப்பெற்றிருந்தது.

சில சிறப்பு நாள்கள்:

நாயகர் குலோத்துங்கசோழன் திருத்தோப்புக்கு எழுந்தருளி திருமஞ்சனம்பண்ணி அருளுதலும், திவசங்களுக்குப் பிள்ளையார் சிவபாதசேகரன் சித்தத்துணைப்பெருமாள் எதிரிலிசோழன் திருநந்த வனத்திற்குத் திருப்பாலிகை வலஞ்செய்ய எழுந்தருளுதலும் உண்டு. (திவசம் - சிரார்த்தம்)

திருமூலத்தானத்தானமுடையாரையும், அங்குத் தென்பால் எழுந்தருளியிருக்கும் தட்சிணாமூர்த்தியையும் பற்றிய கல்வெட்டுக் குறிப்பு:

திருமூலத்தானமுடையார்க்கு மூன்று சந்திகளிலும் முறையே வெண்போனகம், பருப்புப்போனகம், அப்பம் இவைகள் அமுது செய்விக்கப்பெற்றுவந்தன. இம் முறையே தட்சிணாமூர்த்திக்கும் அமுது செய்விக்கப்பெற்றுவந்தது. இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் தட்சிணாமூர்த்திக்கு முன் அமுது செய்தருளிவந்த சந்தி மூன்றும், நீக்கி, ஏற்றமாகப் பால்போனகம், அப்பம், வெச்சமுதுப் பயிறு, இளநீர், பால் இவைகள் அமுதுசெய்விக்கப்பெற்றுவந்தன. இவற்றின் பொருட்டு இராஜாதிராஜவளநாட்டுத் திருவிந்தளூர்நாட்டு வடசேமங்கலத்தில் நில நிவந்தம் விடப்பட்டிருந்தது.

இரண்டாம் பிராகாரத்திலிருந்து மூன்றாம் பிராகாரத்திற்குப் போகும் மேற்குத் திருவாயிலின் பெயர்:

இம்மேற்குத் திருவாயிலுக்கு அகளங்கன் திருவாசல் என்று பெயர். ''இப்படிக்கு அகளங்க திருவாசலில் பகுவாயில் புறவாயில் கல்வெட்டவும் பண்ணுவதே. இப்படி செய்யப்பண்ணுவதே. இவை பாண்டி மண்டலத்து.....'' என, இவ்வாசலின் தென்பால் உள்ள கல்வெட்டுத் தொடர்களால் இச்செய்தி அறியக்கிடக்கின்றது. இதை உணர்த்தும் கல்வெட்டு அனைத்துலகும் கொண்ட சுந்தரபாண்டிய

Koviloor Digital Library

தேவர் காலத்தது ஆகும்.

இத்திருவாயிலின் அருகாலில் ''ஸ்வஸ்தி ஸ்ரீ அவனி ஆளப்பிறந்தான் கோப்பெருஞ்சிங்கற்காக இத்திருநிலைக்கல் செய்வித்தான் இவர் முதலிகளில் பெருமாள் பிள்ளையான சோழகோனார்'' எனச் செதுக்கப் பெற்றிருப்பதால், இத்திருநிலைக் கல்லைச்செய்துவைத்தவர் கோப்பெருஞ்சிங்க தேவர் என்று தோன்று கின்றது.

மூன்றாம் பிராகாரத்திலுள்ள மண்டபம், கோயில் இவைகளைப்பற்றிய குறிப்புக்கள்:

இம்மூன்றாம் பிராகாரத்தில் இருக்கும் நூற்றுக்கால் மண்டபத்தில் உள்ள பல தூண்களில் ''விக்கிரமசோழன்'' என்றும், மற்றொரு தூணில் 'விக்கிரமசோழன் திருமண்டபம்' என்றும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபம் மணவில் கூத்தனான காலிங்கராயனால் இவ்வரசன் பெயரால் கட்டப்பெற்றதாகும்.

இம்மண்டபத்தின் தென்முகப்பு மண்டபத்திற்கு 'வீர பாண்டியன் திருமண்டபம்' என்று பெயர். இச்செய்தி அங்குப் பொறிக்கப் பெற்றுள்ள 'வீரபாண்டியன் திருமண்டபம்' என்னும் கல்வெட்டுப்பகுதியால் அறியக்கிடக்கின்றது.

திருக்காமக்கோட்டமுடைய பெரியநாய்ச்சியார் கோயில்:

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெரியநாய்ச்சியார், கல்வெட்டுப் பாடல்களில் 'நடங்கவின்கொள் அம்பலத்து நாயகச் செந்தேனின் இடம் கவின்கொள்பச்சை இளந்தேன்' எனவும், ''எவ்வுலகும் எவ்வுயிரும் ஈன்றும் எழிலழியாச்செவ்வியாள்' எனவும் பாராட்டப்பெற்றுள்ளனர். இக்கோயிலின் திருச்சுற்றையும், திருச்சுற்று மாளிகையையும் அமைத்தவன் மணவிற்கோட்டத்து மணவில் என்ற ஊரின் தலைவனாகிய கூத்தன் ஆவன்.

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்துக் கோபுரத்தின் கிழக்கு வாசல் நிலைக்கல், கோப்பெருஞ்சிங்கனால் அமைக்கப் பெற்றதாகும். இதை அவ்வருகாலில் உள்ள கல்வெட்டு உணர்த்து கின்றது. இக்கோபுர வாசலுக்கு அந்தப்புரப்பெருமாள் திருவாசல் என்று பெயர். இத்திருவாசலுக்கு எதிரிலுள்ள மண்டபம் திருவண்ணாமலை ஆதீனம், மயிலாடுதுறை வைத்தியலிங்கத் தம்பிரானால் சாலிவாகன

Koviloor Digital Library

சகாப்தம் 1716 செல்லாநின்ற ஆனந்த வருஷம் ஆனிமாதம் 16 உ கட்டப்பெற்றதை அங்குள்ள தூண் ஒன்றின் அடிப்பாகத்தில் உள்ள கல்வெட்டு உணர்த்துகிறது. அம்மண்டபம் கட்டப்பெற்று இற்றைக்கு 161 ஆண்டுகள் ஆகின்றன.

அண்டாபரணத் தேவரைப்பற்றிய செய்தி:

அந்தப்புரப் பெருமாள் திருவாசலுக்கு வடபால் உள்ள கோயிலில் எழுந்தருளியிருந்தவர் அண்டாபரணத்தேவர் ஆவர். இதை அக்கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது. அவர் திருமேனி இது பொழுது அங்கு இல்லை. அங்குக் கொற்றவை அல்லது மகுடசூர சம்ஹாரியின் திருமேனிதான் இருக்கிறது. இந்த அண்டாபரணத் தேவர்க்குத் திருப்பண்ணி காரப்புறத்திற்கும், சிறப்பாகத் தோள்மாலை செய்து சாத்தத் திருநந்தவனத்திற்கும், திருநந்தவனஞ்செய்து திருப்பூமண்டபத்தில் திருப்பள்ளித்தாமம் அளிப்பார்க்கு ஜீவனத் திற்கும், பெரும்பற்றப்புலியூர் பிடாகை நல்லாலியான விக்கிரமசோழ நல்லூரில் ஏழுமா நிலமும், அங்கே நீருரிமைகொண்ட குழி நாநூற்றுஐம்பத்திரண்டும், கோயில் பூண்டியான க்ஷத்திரிய சிகாமணி நல்லூரில் நூறுகுழியும், ஜயங்கொண்டசோழப் பட்டினத்துப் பிடாகை அளக்குடியில் விளை நிலமும், கொல்லையும் ஆகக்குழி எழு நூற்றைம்பதும் குமாரமங்கலமான அழகியநல்லூரில் வடவனாறு என்று பேர் கூவப்பட்ட நிலம் நான்குமாக் காணியும், நாற்றங்கால் நிலம் காணியும் ஆக நான்மாவரை நிலங்களும், நிவந்தங்களாக விடப்பெற்றிருந்தன.

திருத்தொண்டத்தொகை ஈச்சரம்:

இப்பெயருள்ள திருக்கோயில் சிங்காரத்தோப்பு என்று இக்காலம் வழக்கப்பெறும். திருக்களாஞ்செடி உடையார் திருக் கோயிலின் வட புறச்சுவரில் உள்ள மூன்றாங் குலோத்துங்கசோழன் காலத்துக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.அது திருத்தொண்டத் தொகையீஸ்வரமுடையார் ஸ்ரீகோயிலும், திரு முற்றமும், திருமடை வளாகமும் திருக்குளமும் உடையதாய் இருந்ததை அக்கல்வெட்டு உணர்த்துகின்றது. அது இத்தில்லைச் சிற்றம்பலக் கோயில் மூன்றாம் பிராகாரத்தில் இல்லை என்பது உறுதி.

கோபுரங்கள்:

தெற்குக்கோபுரம், பாண்டியனால் கட்டப்பெற்றதாகும்.

Koviloor Digital Library

கோபுரவாசல் மேல்தளத்திலும், இரு அருகால்களிலும் இரட்டைக் கயல் மீன்கள் பொறிக்கப்பெற்று அவைகளின் நடுவில் செண்டும் செதுக்கப்பெற்றுள்ளன. இங்ஙனம் இரண்டுகயல் மீன்கள் செதுக்கப் பட்டிருக்குமானால் அத்திருப்பணி பாண்டியனுடைய காலத்திலேயே முற்றுப்பெற்றதைக் குறிக்கும். முற்றுப்பெறாதாயின் ஒரே கயல் மீன்தான் செதுக்கப்பட்டிருக்கும். எனவே இத்தெற்குக் கோபுரம் பாண்டியர் ஒருவரால் முதல் முதலில் கட்டப்பெற்றது என்பது உறுதியாகும். ஆனால் செங்கற்பட்டுத் தாலு கா முக்தீஸ்வரர் கோயிலில் வட மேற்குப்புறச் சுவரில் செதுக்கப்பட்டிருக்கும் கல்வெட்டு, இத்தெற்குக் கோபுரம், முதலாம் கோப்பெருஞ்சிங்கதேவரால் கட்டப்பெற்றதாகக் கூறுகின்றது. அது ''கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு ஐந்தாவது தனியூர் பெரும்பற்றப்புலியூர் உடையார் திருச்சிற்றம்பல முடையார்க்கு அழகிய சீயன் அவனி ஆளப்பிறந்தான் காடவன் கோப்பெருஞ்சிங்கனேன். இந்நாயனார்கோயில் தெற்குத் திருவாசலில் சொக்கச்சீயன் திருநிலை எழு கோபுரமாகச் செய்த திருப்பணிக்கு உடலாக'' எனத்தொடங்குகிறது. மேலும் கர்நூல் மாவட்டம், மார்க்காப்பூர் வட்டம் திருப்புராந்தகத்தில் உள்ள நாகரியிலும், தெலுங்கிலும் வெட்டப்பட்ட கல்வெட்டு இத்தெற்குக் கோபுரம் முதலாம் கோப்பெருஞ்சிங்கனால் கட்டப்பெற்றதையும் குறிப்பிடுகின்றது. எனவே முதல் முதலில் பாண்டியர் ஒருவரால் கட்டப் பெற்றிருந்த இக்கோபுரத்தில், கோபுரவாசலின் மேல்தளம் வரை வைத்துக்கொண்டு எஞ்சிய பகுதிகளை எல்லாம் இடித்துவிட்டு, முதலாம் கோப்பெருஞ்சிங்கன் கட்டினான் என்று கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். இங்ஙனம் இவனால் கட்டப்பெற்ற இக்கோயில் திருப்பணிக்கு உடலாக ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துஆற்றூர் நாட்டு, ஆற்றூரான இராஜராஜ நல்லூரில் 301 3/4 வேலி நிலம் இப்பல்லவ மன்னனால் கொடுக்கப் பெற்றிருந்தது. இச்செய்தி திரு ஏகம்பம் உடையார் கோயிலிலும் செதுக்கப்பட்டுள்ளது. இத்தெற்குக் கோபுரம் சொக்கச்சீயன் திருநிலை எழுகோபுரம் என்றுபெயர்.

மேற்குக் கோபுரம், வடக்குக் கோபுரம்:

மேற்குக் கோபுரம் முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டிய னாலும் வடக்குக் கோபுரம் கிருஷ்ண தேவராயராலும் கட்டப்பெற்றன. இச்செய்திகளை மேற்குறித்த கர்நூல் மாவட்டம் மார்க்கர்ப்பூர் வட்டம் திருப்புராந்தகத்திலுள்ள கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. வடக்குக் கோபுத்தில் கிருஷ்ணதேவராயருடைய பிரதிமை இருக்கிறது. ''இக்கோபுரத்தில் ஸிம்ஹாத்திரை பொருட்டுப் பொத்தனூர்க்கு

Koviloor Digital Library

எழுந்தருளி ஜயஸ்தம்பம் நாட்டி, திரும்பி பொன்னம்பலத்திற்கு எழுந்தருளி பொன்னம்பல நாதனையும் சேவித்துக் கட்டுவித்த ஸேவை'' என்ற கல்வெட்டும் இருக்கின்றது. இவற்றால் இவ்வடக்குக் கோபுரத்தைக் கட்டுவித்தவர் வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மகாராயர் என்பது உறுதியெய்துகின்றது.

கிழக்குக் கோபுரம்:

இது இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனால் கட்டப்பெற்றது. பல பேரறங்களைச்செய்து குன்றாப்புகழ்பெற்ற திருபச்சையப்ப முதலியாரின் மனைவியராகிய ஐயாளம்மாளின் தாயாராகிய சுப்பம்மாளால் இக்கோபுரம் பழுதுபார்க்கப்பெற்றது. இவ்வம்மை யாருடையவும், பச்சையப்ப முதலியாருடையவும் பிரதிமங்கள் இக் கோபுரத்தில் இருக்கின்றன.

வடக்குக் கோபுரத்தில் இருக்கும் சில பிரதிமைகள்:

இக் கோபுரத்தில் இருக்கும் வீரப்பிரதாபகிருஷ்ணதேவ மகாராயரின் பிரதிமைபற்றி முன்னர்க் கூறப்பெற்றது. அத்துடன், அவர் பிரதிமைக்குக் கீழ்ப்பால், இருக்கும் சில பிரதிமைகளின்கீழ், விருத்தகிரியில் செவகப்பெருமாள், அவனுடைய மகன் விஸ்வமுத்து, திருப்புறைக் கொடை ஆசாரி திருமருங்கன் அவனுடைய தம்பி காரணாச்சாரி எனச் செதுக்கப்பெற்றுள்ளன. இவ்வெழுத்துக்கள் பதினாறாம் நூற்றாண்டு எழுத்துக்களாகப் புலப்படுகின்றன. இவர்கள் இக்கோபுரத்தைக்கட்டிய சிற்பிகளாதல் வேண்டும்.

மேற்குக்கோபுரத்தில் இருக்கும் திருமேனிகள்:

காமதேவன். அகத்தியர், ஸ்ரீதேவி, தேவேந்திரன், துர்க்கா தேவி இத்திருமேனிகள் கோபுரவாசலுக்குத் தென்பால் கிழக்குப்புறச் சுவரில் இருக்கின்றன. இவைகளின் தலைப்பில் மேற் குறித்த பெயர்கள் செதுக்கப்பெற்றுள்ளன, உருத்திரதேவர், இராகு கேதுக்கள், நாரதர், அளகேஸ்வரன், சந்திரன், கிரியாசத்தி, சனி பகவான், வாயுபகவான் இவர்களின் திருமேனிகள் இக்கோபுர வாசலுக்கு வடபால் கிழக்குப் புறச்சுவரில் இருக்கின்றன. இவைகளின் தலைப்பில் மேற்குறித்த பெயர்கள் தீட்டப்பெற்றுள்ளன. க்ஷேத்திர பாலப்பிள்ளையார், கங்காதேவி, தனவந்தரி, திரிபுரசுந்தரிதேவி, சுக்கிரன், வைஜாயன், நாகன், யமுனை, பத்திரகாளி, ஆதிசண்டேஸ்வரர் இவைகளின் திருமேனிகள் இக்கோபுரவாசலுக்கு வடபால், மேற்குப் புறச்சுவரில்

Koviloor Digital Library

இருக்கின்றன. இவைகளின் தலைப்பிலும் மேற்குறித்த பெயர்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் க்ஷேத்திர பாலப்பிள்ளையாரின் முன்பக்கம் சிறுமண்டபமும் கட்டப் பெற்றுள்ளது. க்ஷேத்திர பாலப் பிள்ளையார் என்பவர் வயிரவர் ஆவர். நிருதி, புதன், ஞானசக்தி, அக்நிதேவன் இவர்களின் திருமேனிகளும் இக்கோபுர வாசலின் தென்பால் மேற்குப்புறச்சுவரில் இருக்கின்றன.

மேற்குக் கோபுரத்துக்கு அருகில் இருக்கும் பிள்ளையார்:

இக்காலம் இப்பிள்ளையார்க்கு வழங்கும் திருப்பெயர் கற்பகப் பிள்ளையார் ஆயினும், ''கோமாற பன்மரான திரிபுவனச்சக்கர வர்த்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு'' எனத்தொடங்கும் மேலக்கோபுர வாசலின் தென்பால் உள்ள கல்வெட்டில், இப்பிள்ளையார் குலோத்துங்கசோழ விநாயகப் பிள்ளையார் என்னும் திருப்பெயரால் அழைக்கப்பெற்றுள்ளனர். அக்கல்வெட்டுப் பகுதி பின்வருமாறு:- ''இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை மேலைத் திருமாளிகையில் நிலையெழு கோபுரத்திருவாசல் புறவாசல் தென்பக்கத்து எழுந்தருளி யிருந்து பூசைகொள்ளுகிற குலோத்துங்கசோழ விநாயகப் பிள்ளை யார்க்குச் சிறுகாலை சந்திக்கும், சுந்தரபாண்டியன் சந்திக்குப் பின்பாக அமுது செய்ய'' என்பதாகும்.

தெற்குக் கோபுரத்தின் வடபால் நந்தி மண்டபத்தின் அடிப்பாகத்தில் இருக்கும் கல்வெட்டு:

இதில் ஆறு பாடல்கள் இருக்கின்றன. இவைகள் பனசையூர்த் 'தலைவனாகிய மணியன் வல்லையன் ஆதித்தன் பாண்டியர்களின் சார்பில் சோழர்களோடு சிதம்பரத்தில் புரிந்த போரைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. இப்பாடல்களை ஆக்கியோர் புவனேக வீரத் தொண்டைமானாகிய தாய்நல்ல பெருமாள் முனையதரையர் என்னும் தமிழ்ப்புலவர் ஆவர்.

கிழக்குக் கோபுரத்தின் மேல்பாலுள்ள நந்தி மண்டபத்தின் அடிப்பாகத்தில் உள்ள கல்வெட்டு:

இம்மண்டபத்தைக் கட்டியவர் செகதீசுவரன் இராசசூரிய தொண்டைமான் என்பதை இக் கல்வெட்டு உணர்த்துகிறது.

Koviloor Digital Library

கிழக்குக் கோபுரத்திற்குத் தென்பால் இருந்த மண்டபம்:

இராசாக்கள் தம்பிரான் திருமாளிகையில் கிழக்கு எழுநிலைக் கோபுரத்திற்குத் தென்பால் ஒரு மண்டபம் இருந்தது. அதற்கு 'யானை ஏற்றுக் கூடம்' என்று பெயர். இச்செய்தி மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரமபாண்டியனின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

திருநோக்கழகியான் திருமடம்:

இது சுந்தரபாண்டியன் திருநிலையெழுகோபுரச் சந்நிதியில் சொக்கச்சீயன் குறளில் கீழ்ப்பக்கத்தில் இருந்தது. இதற்கு மடப்புறமாக நிலம் அளிக்கப்பெற்றிருந்தது.

திருஞானசம்பந்தர் திருக்கோயில்:

திருஞானசம்பந்தர்க்குச் சிதம்பரம் கோயிலில் ஒரு தனி ஆலயம் இருந்ததை மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி வீர பாண்டியதேவரின் கல்வெட்டுப் புலப்படுத்துகின்றது.

பெரிய திருச்சுற்று மாளிகை:

இக்கோயிலுக்குரிய பெரிய திருச்சுற்றுமாளிகையை அமைத்தவன் மணவில் கூத்தனான காலிங்கராயன் ஆவன். இது அவன் தில்லைக்குச் செய்த திருப்பணியைப்பற்றிக் கூறும் பாடல் ஒன்றில் குறிக்கப்பெற்றுள்ளது.

திருநாவுக்கரசு தென் திருமடம்:

இது அம்பலநாயகப்பெருந் தெருவில் இருந்தது. இத்திரு மடத்துக்கு அருகில் அழகிய திருவையாறுடையார் கோயிலும் இருந்தது. இக்கோயிலின் கீழ்ப்பக்கத்து முகக் கட்டணத்தில் எழுந் தருளியிருந்த பிள்ளையாரின் பெயரும் குலோத்துங்க சோழ விநாயகப் பிள்ளையாராகும். நாயகர் இராசாக்கள் தம்பிரான் திருவீதியில் எழுந்தருளும்போது இப்பிள்ளையாரைத் திருக்கண் சாத்தி அருளுதல் உண்டு.

Koviloor Digital Library

கீழக் கோபுரப் பாடல்களின் குறிப்புக்கள்:

சுந்தரபாண்டியன் துலாபாரம் புக்க கதையும், வாணர் தலைவனைக் காட்டிற்குத் துரத்தியதையும், தெலுங்கர் சேனையைத் துகளாக்கியதையும், வெள்ளாற்றில் நடைபெற்ற போரில் புவனேக வீரன் வெற்றி பெற்றதையும் இங்குள்ள கல்வெட்டுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

மேற்குக் கோபுரத்தில் உள்ள கல்வெட்டுப் பாடல்:

விக்கிரம பாண்டியன் வேணாடு (திருவாங்கூர்) கொங்கு தேசம் இவைகளை வென்றதையும் கண்ட கோபாலனைக் கொன்றதையும் குறிப்பிடுகின்றது.

தெற்குக் கோபுரத்தை ஒட்டித் தென்பால் நிறுத்தப்பெற்றிருக்கும் கல்லில் உள்ள கல்வெட்டு:

வையப்ப கிருட்டிணப்பநாய்க்கர் மகன் முத்துகிருட்டிணப்ப நாய்க்கரால் கொள்ளிடப் பேராற்றங்கரையில் சகம் 1520 இல் (கி. பி. 1598) ஒரு மண்டபம் கட்டியதை உணர்த்துகிறது.

வீதிகள்:

இக்கோயில் கல்வெட்டுக்களில் திருநிலை எழுகோபுரப் பெருந்தெரு, முடித்தலைகொண்டபெருமாள் திருவீதி, சுந்தர பாண்டியன் தெங்குத் திருவீதி, விக்கிரமசோழன்தெங்குத் திருவீதி, அம்பலநாயகப் பெருந்தெரு, இராசாக்கள் தம்பிரான் திருவீதி என்னும் பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன. இவைகளுள் முடித்தலைகொண்ட பெருமாள் திருவீதி என்பது மேற்குவீதியின் பெயராகும். விக்கிரம சோழன்தெங்குத் திருவீதி என்பது மாசிக்கடலாட நாயகர் எழுந் தருளும் வீதியாகும். இச்செய்தி ''நாயகர் திருக்கடலுக்கு எழுந்தருளும் தெங்குத் திருவீதி தென்பக்கத்து எழுந்தருளுவித்த பிடாரி திருச் சிற்றம்பல மாகாளி ஸ்ரீகோயிலும், திருமுற்றமும், திருமடை விளாகத்திலும் அகப்பட்ட'' என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

Koviloor Digital Library

அறச்சாலைகள்:

சிங்களாந்தகன் அறச்சாலை:-

இது இவ்வூரில் முதலாம் இராஜேந்திரசோழர் அணுக்கிநக்கன் பரவையாரால் ஏற்படுத்தப்பெற்ற சாலையாகும். இதில் நாடோறும் இருபத்தைந்து பிராமணர்கள் உண்ணுவதற்கு நிவந்தமாக இப்பெரும்பற்றப்புலியூர்க்கு அருகில் பரவை நங்கை நல்லூரில் பதினைந்தரைவேலி நிலத்தை வாங்கி இச்சாலைக்கு இவ்வம்மையார் விட்டிருந்தனர். இந்நிலத்தில் ஐந்தரைவேலி நிலம் பயிர் செய்யத் தகுதியற்றதாய் இருந்தது. அது நீக்கி எஞ்சிய பதிற்றுவேலி நிலத்தால் வந்த நெல்லைக் கொண்டு இவ்வறச்சாலை நடத்தப்பெற்றுவந்தது. இச்சாலையில் சமையல் செய்து வந்தவன் 'சாலைமடையன்' என்னும் பேரால் குறிக்கப் பெற்றுள்ளான். அவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் அறுநாழியும், ஆண்டு ஒன்றுக்குப் புடவைக்கு எண்கலமும் கொடுக்கப் பட்டுவந்தன. இச்சாலை செவ்விதில் நடைபெறுகின்றதா என்றதைப் பார்த்து வந்தவன் 'அறதேயன்' என்னும் பெயரால் குறிக்கப் பெற்றுள்ளான்.

அறப்பெருஞ்செல்வி சாலை:

மேலைவீதியாகிய முடித்தலைக்கொண்ட பெருமாள் திருவீதியில் இருந்தது. இச்செய்தியைத் திரிபுவனச்சக்கரவர்த்தி இராஜராஜதேவரின் 17 ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு உணர்த்துகின்றது.

சுந்தரபாண்டியன் சாலை:

இது சுந்தரபாண்டியனுடைய ஏழாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. இதில் உணவு அளிப்பதற்கு அம்மன்னனால் நிவந்தம் அளிக்கப்பெற்றுள்ளது.

திருத்தோப்பு:

இவ்வூரில் குலோத்துங்க சோழன் திருத்தோப்பு, சுந்தர பாண்டியன் திருத்தோப்பு, எதிரிலிசோழன் திருத்தோப்பு என்னும் பெயருடைய தோப்புகள் இருந்தன. இவற்றுள் குலோத்துங்க சோழன் திருத்தோப்புக்கு நாயகர் ஏறியருளுதல் உண்டு. அங்ஙனம் ஏறி அருளி னால் சுவஸ்திசொல்லி சேவிக்கவும், இத்திருத்தோப்பில் திருமஞ்சனம்

Koviloor Digital Library

பண்ணி அருளும்போது அத்தியயனம் பண்ணுவதற்கும் பிறவற்றிற்கு மாகப் பத்துவேலி நிலங்கள் நிவந்தமாக அளிக்கப் பெற்றிருந்தன.

சுந்தரபாண்டியன் திருத்தோப்பு:

''சுந்தரபாண்டியன் திருத்தோப்புச்செய்து ஏறி அருள வேண்டுவனவுக்கும், விருதராஜ பயங்கர வளநாட்டு ஆற்றூரான இராஜநாராயண சதுர்ப்பேதி மங்கலத்து'' என்னும் சுந்தரபாண்டிய தேவரின் கல்வெட்டுப்பகுதி, இவ்வூரில் இப்பெயருடைய தோப்பு ஒன்று இருந்ததைப் புலப்படுத்துகின்றது.

எதிரிலிசோழன் திருத்தோப்பு:

இத் திருப்பெயருடைய தோப்பு ஒன்று திரிபுவனச்சக்கர வர்த்தி இராஜராஜதேவரின் இருபத்தாறாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. இத்தோப்புக்குச் செல்லும் தெருவில் ஒரு மடம் ஒன்றையும் அக்கல்வெட்டுக் கூறுகின்றது.

வழியடிமைகொண்டான் தோப்பு:

இத் தோப்பு இருபதுமா பரப்புடையது. இது விக்கிரமபுரத்தில் உள்ளது. இத்தோப்பு ஆளுடைய நாயனாற்காகக் கோப்பெருசிங்க தேவரின் 19-ஆம் ஆண்டில் விடப்பெற்றது.

பெரும்பற்றப்புலியூரைச் சூழ்ந்துள்ள ஊர்கள்:

தில்லைநாயக நல்லூர்:

இது கடவாய்ச்சேரி என்னும் வேறுபெயரை உடையது. இது பெரும்பற்றப்புலியூரின் தென்பிடாகை ஆகும். (பிடாகை = சிற்றூர்) இவ்வூரில் குலோத்துங்க சோழன் தெற்குத் திருவீதி, கோப்பெருஞ் சிங்கன் திருவீதி, ராஜாக்கள் தம்பிரான் திருவீதி, எனத் தெருக் களுக்குப் பெயர்கள் இடப்பெற்றிருந்தன. இவ்வூரில் சாலியர்கள் குடியிருப்பதற்குத் திருவம்பலப்பெருமாள்புரம் என்னும் சிவநாமத் தால் தெரு ஒன்று ஏற்படுத்தப் பெற்றிருந்தது. அத்தெருவில் வசித்து வந்த சாலியர்கள், கோயிலுக்கும், திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார்க்கும் சாத்தும் பரிவட்டத்திற்கும் வழக்கத்திற்கு 25 இட்டு வந்தனர்.

Koviloor Digital Library

இளநாங்கூர்:

இது பெரும்பற்றம்புலியூரின் மேல்பிடாகை ஆகும். இவ்வூர்க்கல்வெட்டில் கங்கைகொண்ட சோழப்பேரிளமை நாட்டு இளநாங்கூரான சுந்தரசோழ பாண்டியநல்லூர் எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

எருக்காட்டுச்சேரி:

இது பெரும்பற்றப்புலியூரின் கீழ்ப்பிடாகை ஆகும். இவ்வூர் கிடாரங்கொண்ட சோழப்பேரிளமைநாட்டு எருக்காட்டுச்சேரியான ஜயங்கொண்ட சோழநல்லூர் எனக் குறிக்கப்பெற்றுள்ளது.

குமாரமங்கலம்:

இதுவும் பெரும்பற்றப் புலியூரின் கீழ்ப்பிடாகை ஆகும். இது கிடாரங்கொண்ட சோழப் பேரிளமைநாட்டுக் குமாரமங்கலமான தில்லை அழக நல்லூர் எனக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

கொற்றங்குடி:

இது பெரும்பற்றப்புலியூரின் கீழ்ப்பிடாகை ஆகும். இது கொற்றங்குடி ஆனபவித்திரமாணிக்கநல்லூர் என்று கல்வெட்டில் கூறப்பெற்றுள்ளது.

நல்லாலி:

இது பெரும்பற்றப்புலியூரின் பிடாகை ஆகும். இதற்கு விக்கிரம சோழநல்லூர் என்ற வேறு பெயரும் உண்டு.

கோயில்பூண்டி:

இக்காலம் கோயிலாம்பூண்டி என்று வழங்கப் பெற்று வருகின்றது. இதற்கு க்ஷத்திரிய சிகாமணிநல்லூர் என்ற வேறு பெயரும் உண்டு.

மிதுனக்குடி:

இது பெரும்பற்றப்புலியூரின் பிடாகையைச் சேர்ந்ததாகும்.

Koviloor Digital Library

இதற்குத் தானவிநோதநல்லூர் என்ற வேறு பெயரும் உண்டு.

பார்வதிநல்லூர், சண்டிகேசுவரநல்லூர், மகிபால குலகால நல்லூர், முதலான ஊர்களும் இப்பெரும்பற்றப்புலியூரைச் சூழ்ந்து இருந்தன. இங்ஙனம் ஊர்களுக்கு இறைவன், இறைவி இவர்களுடைய பெயர்களும், அரசர்களுடைய பெயர்களும் வைக்கப் பெற்றிருந்தன.

திருநந்தவனங்கள்:

இக்கோயிலுக்கு அளிக்கப்பெற்ற நிவந்தங்களில் திருநந்த வனப்புறங்கள்தான் மிகுதியாகும். கோப்பெருஞ்சிங்க தேவரின் பன்னிரண்டாவது ஆட்சி ஆண்டில் நடுநிலைநாடான இராஜராஜ வள நாட்டில் வெள்ளாற்றிற்கு வடகரையில் ஆலம்பாடியான குலோத்துங்க சோழநல்லூர்ப் பிடாகை வீரநாராயணநல்லூரில் ''தொடர்ந்து அடிமை கொண்டான்'' என்ற திருநாமத்தால் திருநந்தவனம் செய்து திருப்பள்ளித் தாமம் ஆக்க பத்துமா நிலம் விடப்பட்டிருந்தது. பாண்டிமண்டலத்தில் தென்வளத்திருக்கை என்னும் ஊரில் வசித்து வந்த ஆட்கொண்டானாகிய நாராயணதேவன் பல்லவரையன் பெரும்பற்றப்புலியூர்ப்பிடாகை எருக்காட்டுச்சேரியில் நந்த வனத்திற்கு நிலம் வாங்கி அளித்திருந்தனன். இது வீரபாண்டியதேவன் கல்வெட்டால் புலப்படுகின்றது. மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி வீரகேரளனாகிய குலசேகரதேவரின் நான்காமாண்டுக் கல்வெட்டி னால் மலையமண்டலத்துப் பள்ளிக்கோடு என்ற ஊரில் இருந்து வந்த ஒருவர் இங்கே நந்தவனத்திற்கு நிலம் அளித்திருந்த செய்தியைக் கூறுகின்றன. தெற்கு இராதாதேசத்தில் இருந்த உடையார் ஈசுவரசிவர் திருப்பள்ளித்தாமம் ஆக்க நிவந்தம் அளித்திருந்தனர். ''இராதா தேசம்'' என்பது வங்காள மாகாணத்தில் உள்ளதாகும். மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்தில் சயங்கொண்டசோழமண்டலத்துப் புலியூர்க்கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர் வெண்குளப் பாக்கிழான் அரையன் தில்லைநாயகன் தன் பெயரால் தில்லைநாயகன் திருநந்தவனம் செய்யவும், செய்யும் நால்வர்க்கு நிலமும் வாங்கி விட்டிருந்தான். இங்ஙனம் வேற்று நாட்டார்களும் நந்தவனங்களுக்கு நிவந்தங்களை ஏற்படுத்தியிருந்தனர்.

திருப்பாவாடைப்புறம்:

திருப்பாவாடை என்பது கடவுள் திருமுன் ஆடையில் படைக்கும் அன்னம். புறம் என்பது நிவந்தம். இதன் பொருட்டுப் புவலோகமாணிக்கவளநாட்டுப் பார்வதி நல்லூரில் நிலம் அளிக்கப்

Koviloor Digital Library

பெற்றிருந்தது. இதுபோன்று அளிக்கப்பெற்ற நிவந்தங்கள் பல.

திருச்சிற்றம்பலமாகாளி:

இத் திருச்சிற்றம்பலமாகாளி பிடாரி திருச்சிற்றம்பலமாகாளி என்றும் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளனர். இவருடைய கோயில் திருமுற்றமும் திருமடைவிளாகமும் உடையதாய்த் திகழ்ந்தது. இக்காலம் திருமடைவிளாகம் காணப்படவில்லை.

இவரது கோயில் நாயகர் திருக்கடலுக்கு எழுந்தருளும் விக்கிரமசோழன் தெற்குத் திருவீதித் தென்பக்கத்து பள்ளிப்படையான விக்கிரமசோழநல்லூரில் அமைந்திருந்தது. பள்ளிப்படையானது இறந்த அரச குடும்பத்தாரைப் புதைக்கும் இடமாகும். சடாவர்மன் சுந்தரபாண்டியனுடைய பதினான்காம் ஆண்டுக் கல்வெட்டில் இது அக்கன் பள்ளிப்படை எனக் குறிக்கப்பெற்றுள்ளது.

விக்கிரம சோழனின் தமக்கையார் இறந்தபின் இங்குப் புதைக்கப்பெற்ற காரணம்பற்றி இப்பெயர் பெற்றதாதல் வேண்டும். இத் திருச்சிற்றம்பலமாகாளி கோயிலிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

திருச்சிற்றம்பலம் பொன்வேய்ந்த வரலாறு:

திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் செய்தருளும் நடராஜப்பெருமான் சோழ மன்னர்களின் குலதெய்வமாவர். இச்செய்தி ''தன்குல நாயகம் தாண்டவம் பயிலும் செம்பொன் அம்பலஞ்சூழ் திருமாளிகையும்'' என்னும் திருமழபாடிச் சிவன்கோயிலில் பொறிக்கப்பெற்றுள்ள விக்கிரமசோழனின் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. மேலும் இச் சிதம்பரம் சோழமன்னர்களின் முடி சூட்டு நகரங்களிலும் ஒன்றாகும். இது ''இராச கேசரிபன்மரான திரி புவனச் சக்கரவர்த்திகள் 'தில்லைத் திருநகர் சிறப்புடைத்தாகத் திருமுடி சூடிய' ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு எட்டாவது'' எனத் தொடங்கும் திருமாணிகுழிக் கல்வெட்டுப் பகுதியால் விளங்கும்.

இங்ஙனம் சோழமன்னர்களுக்குச் சிறப்புடையதாய் உள்ள திருச்சிற்றம்பலத்திற்கு அம் மன்னர்கள் பொன்வேய்ந்து பொலிவு செய்தனர். அங்ஙனம் முதன் முதல் பொன்வேய்ந்தவர் முதலாம் ஆதித்தசோழனின் மகனாகிய முதல் பராந்தக சோழர் ஆவர். இதற்குக் கல்வெட்டு ஆதாரம் இல்லை. ஆனால் இருபத்தொன்று இதழ்கள்

Koviloor Digital Library

அடங்கிய 'செப்புப் பட்டயம்' ஒன்று உண்டு. அதில் முதல் ஐந்து இதழ்கள் வட மொழியிலும், ஏனைய பதினாறு இதழ்கள் தமிழிலும் இருக்கின்றன. இதில் வடமொழியில் உள்ள பகுதி மிக முக்கியமானது. ஏனெனில் பிற்காலச் சோழமன்னர்களின் வம்சாவளியை அது குறிப்பிடுகின்றது. [1]இந்தச் செப்புப்பட்டயம் முதலாம் இராஜேந்திர சோழன் (அ) கங்கைகொண்டசோழனின் இருபத்து மூன்றாம் ஆண்டில் ஏற்பட்டதாகும். அச்செப்பேடு நாகபட்டினத்தில் கடாரத் தரசனால் கட்டப்பெற்ற புத்தவிகாரத்திற்கு ஆனைமங்கலம் என்ற ஊரைப் பள்ளிச்சந்தமாகக் கொடுக்கப்பட்டதை உணர்த்துகின்றது[2]. பள்ளிச்சந்தம் என்பது சமண புத்த கோயில்களுக்கு அளிக்கப்பெற்ற நிவந்தமாகும். இந்தச் செப்பேடு இதுபொழுது ஹாலண்டு தேசத்திலுள்ள லெய்டன் பல்கலைக் கழகத்து மியூசியத்தில் இருக்கின்றது. இச் செப்பேட்டில் ஆதித்தசோழன் மகனாகிய முதல் பராந்தகசோழன் வியாக்கிர அக்கிரகாரத்திலுள்ள கோயிலைப் பொன்வேய்ந்தான் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இதன்பிறகு முதற் குலோத்துங்க சோழனின் (கி. பி. 1070 - 1120) திருத்தங்கையார் இராஜராஜன் குந்தவை, ஆழ்வார் தில்லைநாயகர்தம் கோயில் எல்லாம் செம்பொன் வேய்ந்தாள், இச்செய்தியை,

''நானிலத்தை முழுதாண்ட ஜயதரற்கு
நாற்பத்து நாலாண்டில்
மீனநிகழ் நாயற்று வெள்ளிபெற்ற
உரோகணிநாள் இடபப்போதால்
தேனிலவு பொழிற்றில்லை நாயகர்தங்
கோயிலெல்லாம் செம்பொன் மேய்ந்தா
ளேனவரும் தொழுதேத்தும் ராசராசன்
குந்தவைப் பூவிந்தையாளே.''

என்னும் முதற் பிராகாரத்து வடபுறச் சுவரில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுப் பாடலால் அறியலாம். அதன்பின் திருமழபாடியில் உள்ள விக்கிரமசோழனின் மெய்க்கீர்த்தி கல்வெட்டுப் பகுதி அவன் சிற்றம்பலத்தைச் சூழ்ந்த திருமாளிகை, கோபுரவாசல், கூடசாலைகள், பலிபீடம் இவைகளுக்குப் பொன் வேய்ந்ததைக் குறிப்பிடுகின்றது.

[1] The large Leiden Grant என்ற செப்புப்பட்டயம்

[2] "He (Paranthaka) the beacon of the Solar race decked the temple of the moon crested at the Vyaghra Agrahara village with pure gold brought from all regions conquered by the valour of his own arm' ' என்பது ஆங்கில மொழி பெயர்ப்பு. [Epigraphica Indica]

Koviloor Digital Library

பேரம்பலத்திற்குச் செப்பு வேய்ந்தது:

பேரம்பலம் என்பது எதிரம்பலம் ஆகும். இது பேரம்பலம் என்றும், எதிரம்பலம் என்றும் இக்கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளது. ''எதிரம்பலத்துக்கு நடுபொன் செய்யுமிடத்து'' என்னும் கல்வெட்டுப் பகுதி இதற்குச் சான்றாகும். ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மணவிற் கூற்றத்து மணவில் என்ற ஊரின் தலைவன் இதற்குச் செப்பு வேய்ந்தான் என்று அவன்மீது பொறிக்கப்பெற்ற கல்வெட்டுப் பாடல் தெரிவிக்கின்றது.

மணவில் கூத்தனான காலிங்கராயன்:

இவன் ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவில் கூற்றத்து மணவில் என்ற ஊரின் தலைவன். இவன் முதற் குலோத் துங்கசோழனது படைத் தலைவன். விக்கிரமசோழன் காலத்திலும் இருந்தான். இவன் 'அரும்பையர்கோன்' என்று இக்கல்வெட்டுக்களில் பாராட்டப்படுகின்றான். 'அரும்பைத் தொள்ளாயிரம்' என்ற நூல் இவன்மீது பாடப்பெற்றதாதல் வேண்டும். இவனது அரசியல் தொண்டைப் பாராட்டி அரசனால் இவனுக்குக் காலிங்கராயன் என்னும் பட்டம் அளிக்கப்பெற்றது. இவன் தில்லையில் அளப்பரிய தொண்டுகள் புரிந்துள்ளான். மூவர் பதிகங்களையும் செப்பேட்டில் எழுதிச் சேர்த்து வைத்தது, சம்பந்தர் பதிகம் ஓத மண்டபம் கட்டியது, தில்லைச் சுடலை அமர்ந்தார் கோயிலைக் கல்லால் கட்டியது, தில்லைப் பேரேரிக்குக் கல்லினால் மதகு அமைத்தது முதலியவைகளாம். இவன் தொண்டுகளைப் பற்றிப் பல அழகான வெண்பாக்கள் இக்கோயிலில் தீட்டப்பெற்றுள்ளன[1]. இவ் வெண்பாக்களுள் ஒன்றை அறிந்து இன்புற ஈண்டுக் குறிக்கப் பெற்றுள்ளது.

''நடங்கவின்கொ ளம்பலத்து நாயகச்செந் தேனின்
இடங்கவின்கொள் பச்சையிளந் தேனுக் - கடங்கார்
பருமா ளிகைமேற் பகடுதைத்த கூத்தன்
திருமா ளிகையமைத்தான் சென்று''

பண்டாரங்கள்:

திருப்பாவாடைப்புறத்திற்கு முதலாகப் போனகப் பழநெல் 'தில்லைநாயகன் பெரும் பண்டாரத்தில்' அளக்கப்பெற்று வந்தது. திரு

[1] See the South Indian Inscriptions, Volume IV.

Koviloor Digital Library

நாமத்துக்காணியாகத்தந்த பிரமாணமும், மூலப்பிரமாணங்களும், திரு நந்தவனக் குடிமைகொண்ட தீட்டும், திருக்கை ஒட்டிப் பண்டாரத்தில் ஒடுக்கப்பட்டன[1].

கோயில் காரியங்களைப் பார்த்து வந்தவர்கள்:

கோயில் காரியங்களைப் பார்ப்பதற்கு ஸ்ரீ மாகேசுவர கண்காணி செய்வார்களும், கோயில்நாயகஞ் செய்வார்களும், திருமாளிகைக்கூறு செய்வார்களும், சமுதாயஞ் செய்வார்களும் ஆகப் பலர் இருந்தனர்.

30. திருக்கோழம்பம்

இது மயிலாடுதுறை - கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், நரசிங்கன் பேட்டை தொடர்வண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருவாவடுதுறையிலிருந்தும் செல்லலாம். அங்கிருந்து தெற்கே சுமார் 2.5 கி.மீ.தூரத்தில் இருக்கின்றது.

இது காவிரித் தென்கரைத் தலங்களுள் முப்பத்தைந்தாவது தலம் ஆகும்.

இறைவரது திருப்பெயர்:- கோகிலேசுவரர், இறைவியாரது திருப்பெயர்:- சௌந்தரநாயகி.

இந்திரனால் குயிலுருவமாகுமாறு சபிக்கப்பெற்ற சந்தன் என்னும் வித்தியாதரன் இங்குவந்து இறைவனை வழிபட்டுப் பழைய

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1888 Numbers 115 - 124, year 1892 No. 170 - 184, year 1902 No.455 - 468, year 1903, No. 390 - 401, year 1913 No. 260 - 376, year 1915 No.1, year 1918 No. 545 - 551, year 1930 No.610 - 616, year 1935 No.103 - 109, year 1936 No.1 - 48.

See also the South Indian Inscriptions, Volume I No. 155; Volume III No. 86 - 87; Volume IV No.220 - 229; 618 - 632; Volume VIII No. 43 - 47; 706 - 717.

See also the Epigraphica Indica Volume V pages 103 and 105; See also and The Pallavas Volume XIII.

Koviloor Digital Library

உருவம் எய்தினன். இது திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற பெருமை வாய்ந்தது. இதற்கு இரண்டு பதிகங்கள் இருக்கின்றன.

31. திருக்கோளிலி

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். திருவாரூரிலிருந்து பேருந்துகளில் செல்லலாம். திருக்குவளை என வழங்கப் பெறுகிறது. ஆதியில் பிரமன் சிருட்டித் தொழிலைப் பெறவேண்டிப் பூசித்தான். அதனால் பிரமதபோவனம் என வழங்கப்பெறும். இது சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. இங்கே எழுந்தருளியுள்ள தியாகர் அவனி விடங்கர். நவகோள்கள் பூசித்துப் பேறு பெற்றமையால் கோளிலி என வழங்கப்பெறுகிறது.

இறைவர் பிரமபுரீசுவரர். அம்மைவண்டமர்பூங்குழலாள். தியாகர் ஊழிப்பரன், அவனிவிடங்கத்தியாகர். விநாயகர் தியாக விநாயகர். முருகன் சுந்தரவடிவேலன். சுந்தரமூர்த்திகளுக்குக் குண்டையூர்கிழார் தந்த நெல்மலையைப் பூதங்களைக் கொண்டு திருவாரூரில் சேர்ப்பித்த அற்புதத்தலம்.

தீர்த்தம் முத்திநதியாகிய சந்திரநதி, மணிகர்ணிகை, இந்திர தீர்த்தம், அகத்தியதீர்த்தம், விநாயகதீர்த்தம், சக்தி தீர்த்தம் என்பன. விருட்சம் தேற்றாமரம்.

வழிபட்டவர்கள்:

பிரமதேவர், திருமால், இந்திரன், அகத்தியன்,முசுகுந்தன், பஞ்சபாண்டவர்கள், நவகோள்கள், ஓமகாந்தன் முதலியோர்.

விழாக்கள்:

மாசிமகத்தில் நெல்திருவிழா, மார்கழிமாதத்தில் ஆருத்ரா தரிசனம். கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் தீர்த்தம். தருமை ஆதீன அருளாட்சியிலுள்ளது.

கல்வெட்டு:

இங்குள்ள கல்வெட்டுக்கள் 19. இத்தலம் இராஜேந்திர சோழவளநாட்டு இடையளநாட்டு வெண்டாழை வேளூர்க்கூற்றத்

Koviloor Digital Library

திற்கு உட்பட்டதாயிருந்தது. வடவல்லத்து இருள்குடியான் இந்திரா பதிநல்லூர் உய்யவந்தான் சிய்யாழிப் பிள்ளையான ஜெயதுங்க வன்மன் மகாமண்டபந் தொடங்கிக் கீழைவாசல்வரையில் திருப்பணி செய்தான். இத்திருப்பணி ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்த தாகும். இந்தக்கோயிலில் சிவன்படரில் (செம்படவர்) ஒருவனான ஆலன் என்பான் அதிபத்தநாயனார் படிவத்தை எழுந்தருளுவித்தான்.

32. திருச்சிராப்பள்ளி

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம் தமிழகத்தின் பெரிய நகரங்களில் ஒன்று. தொடர் வண்டி, பேருந்து, விமான வசதிகள் உள்ளன. தமிழகத்தின் அனைத்திடங்களிலிருந்தும் செல்லலாம். இத்தலம் மிக விளக்கமானது. மலைக்காட்சியின் முதலிடமாக உள்ளது. கலாசாலைகளும், கல்லூரிகளும் நிறைந்தது. எல்லா விதமான அறிவுத்துறைகளிலும் வளர்ச்சிக்குரிய இடமாக இருக்கிறது.

சரித்திர காலத்திலும், கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முன்பும் இருந்தே விளங்கிவருவது. சோழர் தலைநகரங்களில் ஒன்றாகிய உறையூரைத் தன்னகத்துக்கொண்டு விளங்குவது.

பெயர்க்காரணம்:

திரிசிராப்பள்ளி என்பதற்கு, திரிசிரன் என்னும் அரக்கன் பூசித்துப் பேறுபெற்றதனால், இப்பெயர்பெற்றது என்று புராணங் கூறும். இம்மலைக்கே மூன்று சிகரங்கள் உள்ளன. அதனால் திரிசிராப் பள்ளியெனப் பெற்றது என்று செவிவழிச் செய்தி நிலவுகிறது. இந்தப் பொருள்களில் வழங்கிய திரிசிரப்பள்ளி திரிசிராப்பள்ளி ஆதற்கு என்ன விதியுண்டு என்பதை அறிஞர்கள் ஆய்ந்து முடிவுகாண்பார் களாக.

நமது சமயாசாரியப் பெருந்தகையார்கள் 'சிராப்பள்ளிக் குன்றுடையானை', 'சிராப்பள்ளிச் செல்வன்' 'சிரகிரி' எனவே வழங்குகின்றார்கள். திரிசிரா என்பதில் திரி என்பது மூன்று என்ற பொருள் குறித்த சொல்லாயின் அதனை விடுத்துச் சிராப்பள்ளி என்று வழங்கியிரார்கள். ஆதலால் அவர்கள் காலத்தில் திரு என்பதை அடைமொழியாகக் கொண்டதே சிராப்பள்ளி என்பதற்கு வேறு பொருள் இருந்திருக்கவேண்டும் என்பதனைக் கருத இடந்தருகின்றது.

''சிராப்பள்ளி'' என்றதன் பெயர்க்காரணத்தைப் பற்றி நமது

Koviloor Digital Library

சரித்திரப் பேரறிஞர் தி.வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் செந்தமிழில் எழுதிய சுருக்கக் கருத்து இங்கே தரப்பெறுகின்றது:-

சிராப்பள்ளிக் கோயில் கட்டியவன் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் நமது அப்பரடிகளை வருத்திச் சைவனான முதல் மகேந்திரவர்மனே. அவன் இத்தலத்து எட்டு சுலோகங்கள் அடங்கிய கல்வெட்டு ஒன்று அமைத்திருக்கிறான். அதில் தான் சைவனானதையும்[1] திருவதிகையில் அமண் பள்ளிகளையிடித்துக் குணபரேச்சுரம் கட்டியதையும் குறிப்பிடுகின்றான். குணபரன் என்பது மகேந்திரவர்மனையே குறிக்கும் பட்டப் பெயர். இதனைச் சிராப்பள்ளியிலும், செங்கற்பட்டு வல்லத்திலும் உள்ள குகைக் கோயிற்கல்வெட்டுக்கள் வலியுறுத்தும். அதைப் போலவே சிராப்பள்ளியாகிய இவ்விடத்தும் அமணப்பள்ளி ஒன்று பெரியதாக இருந்தது. அதனை இடித்தே இந்தக் கோயிலைச் சைவனான மகேந்திரவர்மன் கட்டினான்[2].

உச்சிப்பிள்ளையார் கோயிலின் பின்பாகத்தில் இன்றும் சமண முனிவர்களுடைய கற்படுக்கைகளைக் காணலாம். அவற்றில் அந்தந்தப் படுக்கையிலிருந்த சமணமுனிவர் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. அவைகள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் நிகழ்ச்சிகள். அவர்களில் ஒருவர் சிரா என்னும் பெயருடையவர் என்று ஒரு கற்படுக்கை அறிவிக்கிறது. ஆதலால் பள்ளி கோயிலானாலும், பெயர் போகாமல் சிராப்பள்ளி எனவே வழங்குகிறது.

ஊர்ப்பெயரும்-கோயிற் பெயரும்:

ஊர்ப்பெயர் சிற்றம்பர். கோயிற்பெயர் சிராப்பள்ளி. இதனை நன்கு விளக்குவது, இராஜராஜன் I ஆட்சியாண்டு 16 இல் வெட்டப் பெற்ற விக்கிரமசிங்க மூவேந்த வேளான் விளத்தூர் நாட்டில் நிலம் வாங்கி அதனைஉறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரிலுள்ள சிராப்பள்ளிக் கோயிலுக்கு அளித்தான் என்ற கல்வெட்டுப் பகுதியாகும். வரகுண பாண்டியன் II ஆம் ஆண்டுக் கல்வெட்டும் இதனையே குறிக்கிறது. இன்னும் சில பகுதிகளிலும் சிற்றம்பர், சிற்றம்பர்நகர், சிற்றம்பர் பதியென இத்தலம் வழங்கப்படுகின்றது. ஆதலால் ஊர் சிற்றம்பர் எனவும், கோயில் சிராப்பள்ளி எனவும் வழங்கிவந்தமை தெளிவு.

[1] S.I.I. Vol. I No. 33, 34.

[2] See South Indian Inscriptions, Vol. I No. 33.

Koviloor Digital Library

மூர்த்தி:

இறைவர் பெயர் தாயுமானவர் திருமலைக்கொழுந்தர், செவ்வந்திநாதர் எனவும், அம்மையின் பெயர் மட்டுவார்குழலம்மை எனவும் வழங்கும். வடமொழிவாணர் மாதுருபூதேசுவரர், சுகந்தகுந்த ளாம்பிகையெனக் கூறுவர். கல்வெட்டுக்களில் இறைவன் திருமலைப் பெருமான் அடிகள் என்ற பெயரால் குறிக்கப்பெறுகின்றனர். உச்சிப் பிள்ளையார், மாணிக்கவிநாயகர் ஆலயங்களும், மௌனமடம் முருகன் கோயிலும் மிகச்சிறப்புடையன.

தீர்த்தங்கள்:

காவிரி, சிவகங்கை, நன்றுடையான், தீயதில்லான், பிரமதீர்த் தம் முதலியன உள்ளன. அவற்றுள் 'நன்றுடையான்' 'தீயதில்லான்' என்ற தீர்த்தங்கள் ஞானசம்பந்தர் தெய்வவாக்கிலும் திகழ்வன. இவையன்றித் தெப்பக்குளம் ஒன்றுண்டு. அது 16 ஆம் நூற்றாண்டில் அரசாண்ட விசுவநாத நாயகர் வெட்டுவித்தது.

இது மேருவின் சிகரங்களில் ஒன்று. ஆதிசேடனுக்கும், வாயுதேவனுக்கும் நடந்த சொற்போட்டியால் பிரிந்த சிகரங்களில், ஒன்று திருக்காளத்தி, மற்றொன்று திரிகோணமலை, மற்றொன்று திரிசிராமலை என்று புராணம் கூறும். கருவுயிர்க்க வருந்திய இரத்தினா வதியின் நிறைந்த அன்பிற்கிரங்கிப் பெருமானே தாயாக எழுந்தருளிப் பணிபல புரிந்து பாதுகாத்தார். ஆதலால் தாயுமானார் ஆயினார்.

செவ்வந்திப்பூவைத் திருடிய சிவத்திரவியாபகாரியான பூவாணிகனைக் கண்டிக்காத பராந்தகனது அரச அநீதியைக் கண்டு, சாரமாமுனிவர் வேண்டுகோட்படி பெருமான் மேற்குப் பக்கமாக உறையூரைப் பார்க்கத் திரும்பினார். மண் மாரியால் நகர் அழிந்தது. மன்னன் அழிந்தான். மன்னன் மனைவி கருவுற்றிருந்தாள். காவிரியில் வீழ்ந்தாள். அந்தணன் ஒருவன் பாதுகாத்தான். கரிகாலன் பிறந்தான். கருவுற்ற ஆதித்தசோழன் மனைவியாகிய காந்திமதிக்கு இறைவன் தானே தோன்றிக் காட்சி கொடுத்து, தான்றோன்றீசர் என்ற திருநாமம் பெற்ற வரலாறுகளும் புராணங்களில் பேசப்படுகின்றன.

கல்வெட்டு:

இங்குக் குகைகள் உள்ளன. இவை மகேந்திரன் காலத்தனவே என்பது குறிப்பிடப்பட்டது. ஒன்று மலைமேலுள்ளது. மற்றொன்று அடி

Koviloor Digital Library

வாரத்திலுள்ளது. மலைமேலுள்ள கோயில்களிலேயே கல்வெட்டுக் கள் மிகுதியாக உள்ளன. வடமொழியிலமைந்த எட்டு சுலோகங்கள் மகேந்திரவர்மனது மதமாற்றத்தையும் அதனால் அவன் செய்த சிவப்பணிகளையும் தெரிவிக்கின்றன. அவற்றில் கல்தச்சராலே இந்த அரசனுடைய புகழ் விரிந்து நீடித்திருக்க வேண்டும் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது ஒரு சுலோகம். இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் நிரம்ப உள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் எழுந்த பிராமி எழுத்தால் எழுதப்பட்ட கல்வெட்டாகும் [1].

தொடர்ச்சியாகப் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை பல்லவ கிரந்தத்தாலும், தமிழாலும் ஆக்கப்பெற்றன.

இராஜகேசரிவர்மன்:

இவன் ஆட்சி பதினாறாம் ஆண்டில் சாகுபடிக்குக் கொண்டு வரப்படாத நிலங்களைக் குறைந்தவிலையாக ஐந்து கழஞ்சுக்கு விற்று, நிலம் விளைச்சலுக்கு வந்த பிறகு. நிலம் வாங்கியவர்கள் திருவிழாக் காலங்களில் சித்திரைத் திருநாளில் ஒன்பது நாட்களுக்குப் பன்மா கேசுவரர்களுக்கும் உணவு இடும்படி உத்தரவிட்டான்.[2]

பாண்டியன் மாறன் சடையன்:

இவன் ஆட்சி 4-ஆம் ஆண்டில் நிலமளித்திருக்கிறான். இதில் இறைவன் திருமலைப் பெருமான் என்றழைக்கப்படுகிறான்.[3] வேங்கட தேவமகாராயர் சகம் 1351 வீரப்ப நாயக்கருடைய மேன்மைக்காக நிலமளித்தார். மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கருடைய காலத் தில் நரசபந்துலு என்னும் தன்வந்திரி வைத்தியருக்கு இறையிலியாக நிலமளிக்கப்பட்டது. [4]

அவ்வாறே திருமலைஅப்பராயத் தொண்டைமான் மகனும், திருமலைராயத் தொண்டைமான் பேரனுமான இராஜா விஜயரகுநாதத் தொண்டைமான் சகம் 1772-இல் கி.பி. 1805-இல் ஒராண்டிக்கோடி கிராமத்தைத் தேனாம்பட்டணம் இருளப்ப முதலியாரிடம் அளித்து, திருச்சிராப்பள்ளியில் அறச்சாலைநடத்த ஏற்பாடுசெய்தான் நல்லப்ப

[1]139 of 1938, [2]985 of 1013, [3] 413,414 of 1904.
[4] E.P.R. 1911 page 90.

Koviloor Digital Library

காலாட்க தோழராலும், ரங்கப்ப காலாட்க தோழராலும் அளிக்கப்பட்ட தேவதானங்களை அறிவிக்கும் செப்புப்பட்டயங்கள் உள. கல் வெட்டுக்களில் சிறப்பாகக் குகைக்கோயில் பின்சுவரில் திரிசிராமலை அந்தாதியொன்று எழுதப் பெற்றுள்ளது. அது 103 பாடல்களை உடையது. அதில் 104ஆம் பாடலாக ''மாட மதுரை மணலூர் மதில் வேம்பை, யோடமர் சேய்ஞலூர் குண்டூரின் - நீடிய , நற்பதிக்கோன் நாரா யணன்சி ராமலைமேல், கற்பதித்தான் சொன்ன கவி'' என்றதால் நாராயணன் என்பவன் கல்வெட்டுவித்தான் என்று குறிப்பிடப் படுகிறது.

33. திருச்செம்பொன்பள்ளி

சோழநாட்டுக் காவிரித்தென்கரைத்தலம். மயிலாடுதுறையி லிருந்து பேருந்து வசதி உள்ளது.

இத்தலம் செம்பொனார்கோயில் என இக்காலத்து வழங்கப் பெறுகின்றது. இந்திரன் விருத்திராசுரனைக் கொல்வதன் பொருட்டுப் பூசித்து வழிபட்டான். அதனால் இந்திரபுரி எனவும் வழங்கப்பெறும். முருகப்பெருமான் தாரகாசுரவதத்தின் பொருட்டுப் பூசித்தமையின் ஸ்கந்தபுரி எனவும் வழங்கும். அகஸ்தியர் வழிபட்டுப் புருஷார்த்தங் களைப் பெற்றார். பிரமன் பூசித்துப் படைப்புத்தொழில் கைவரப் பெற்றான். இரதி பூசித்துத் தன் பதியாகிய காமனையடைந்தாள். நாககன்னியர்கள் வழிபட்டு நல்ல கணவரை அடைந்தனர். இந்திரன், தக்ஷன்யாகத்தில் கலந்துகொண்ட குற்றத்திற்குப் பரிகாரந்தந்தருளிய தலமும் இதுவே. வசிட்டர், திக்பாலகர்கள், காவிரி, சமுத்திரம் முதலிய வர்களும் பூசித்துப் பேறு பெற்றனர். வீரபத்திரர் தக்ஷயாகத்திற்காக அவதரித்த தலமும் இதுதான். இத்தலத்திற்கு அருகாமையில் ஓடும் காவிரியில் இட்ட எலும்புகள் பூமரங்களாய் இறைவனுக்குச் சாத்தப் பயன்பெறும்.

சுவாமிபெயர் சுவர்ணபுரீசுவரர். அம்மைபெயர் சுகந்தவன நாயகி; மருவார்குழலி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் இந்திர தீர்த்தம், காவிரி முதலியன. கிழக்குப்பார்த்த சந்நிதி. அம்மை தென்பக்கத்தில் மேற்குமுகமாக எழுந்தருளியிருக்கின்றார்.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றியனவாக 6 கல்வெட்டுக்கள் உள்ளன.

Koviloor Digital Library

அவை 1925 இல் படியெடுக்கப்பெற்றுள்ளன. இராஜாதிராஜன் ஆட்சி ஐந்தாமாண்டில் திருவாலங்காடுடையார்க்கு விளநகரான நித்த விநோத சதுர்வேதிமங்கலத்து விளநாட்டுச்சபையார் நிலம் விட்ட செய்தியை அறிவிப்பது. அதேயாண்டில் இராஜாதிராஜவளநாட்டு திருஇந்தளூர் நாட்டு மணற்குடியான உத்தமசோழ சதுர்வேதிமங் கலத்துச் சபையார், ஜெயங்கொண்டசோழ மண்டலத்து ஆக்கூர்நாட்டு ஆக்கூரான இராஜேந்திரசிம்ம சதுர்வேதிமங்கலத்து மேல்பாதி அபிமானமநல்லூரில் அரசற்கு நன்றாக, வழிபடவருவோர்க்கு உணவிற்காக நிலம் வழங்கப்பெற்றுள்ளது . மூன்றாங்குலோத்துங்கன் காலத்து இராஜேந்திர சிம்ம நாடாகிய ஆக்கூரில் தூண்டா விளக்கெரிக்க நாற்பது பொற்காசுக்கு[1] நிலம் வாங்கி உழவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 6 ஆம் ஆண்டில் அரசியலில் சிறந்த செய்தி ஒன்று அறிவிக்கப்படுகிறது. சிங்களவர்களைத் துணைக்கொண்டு பாண்டியர் கள் படையெடுத்துவந்த படையேறு கலகத்தில் செம்பொன்னார் கோயிலிலுள்ள தேவடியாரும் கோயில் நியாயத்தாருமாகச் சேர்ந்து எல்லாத் திருவுருவங்களையும் திருவிடைக்கழி இளையபிள்ளையார் கோயிலில் கொண்டுபோய் வைத்துப் பாதுகாத்தனர். மேலும் அவ்வாண்டில் பெரிய புயற்காற்றடித்திருக்கின்றது. அதனால் தப்பாத வேதியன் திருவாசல் வடக்குச்சுவரும் தேரடி இரண்டும் வீழ்ந்தன [2] இன்னார் என்று அறியப்படாத இராஜகேசரி வர்மன் ஆறாம் ஆண்டில் பூசைக்கும் பணிக்குமாகத் தலைச்செங்காட்டுச் சபையார் ஒருவனி டமிருந்து நிலம் வாங்கி அரசற்கு நன்றாக அளித்தனர். இதில் இராஜ சுந்தரன்வீதி என்ற ஒரு தெருப்பெயர் குறிப்பிடப்படுகின்றது [3]. சரபோஜிராஜா கலி 4821-ல் செம்பொன்னாதர் கோயிலுக்குத் தலைச் சங்காடு சபையார் கிராமங்களின் நன்மைக்காக ஆண்டுக்கு ஒருமுறை வரியோடுகூட தறிகளின் உற்பத்தியளவையொட்டி ஆயம் வசூலித்துக் கொள்ளவும் காவேரிப்பட்டினம் அய்யாவையனும் தாண்டவராய முதலியாரும் வசூலிப்பாளராயிருக்கவும் ஆணை தரப்பட்டுள்ளது [4].

34. திருச்சேறை

இது உடையார் கோயில் என்று வழங்கப்பெறுகின்றது. இது கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 15 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. பேருந்து வசதி உள்ளது.

[1]-172, 173 of 1925, [2]-170, 171 of 1925, [3]-174 of 1925.
[4] 175 of 1925

Koviloor Digital Library

இறைவரின் திருப்பெயர் - செந்நெறியப்பர். இறைவியின் திருப்பெயர் - ஞானவல்லி. தௌமிய ரிஷி பூசித்துப் பேறுபெற்றதலம்.

இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு திருப்பதிகங்கள் இருக்கின்றன.

இவ்வூர்க் கோயிலில் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவரின் ஐந்தாமாண்டிலும் 27ஆம் ஆண்டிலும் பொறிக்கப் பெற்ற இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இறைவரின் திருப்பெயர் திருச்செந்நெறியுடையார் என்று குறிக்கப் பெற்றுள்ளது. இறைவர் சித்திரை மாதத்துச் சுவாதி நட்சத்திரத்தில் இராசநாராயணப் பேராற்றுக்குத் தீர்த்தங்கொடுத்தற் பொருட்டு எழுந்தருளுவது உண்டு, இராசசுந்தரச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் நிலநிவந்தம் அளித்திருந்தனர். அச்சபையாரே இக் கோயிலில் உள்ள உமாமகேஸ்வர தேவர்க்கும் இறையிலியாக நிலநிவந்தம் அளித்திருந்தனர். [1]

35. திருச்சோற்றுத்துறை

சோழநாட்டுக் காவிரித்தென்கரைத்தலம். தஞ்சாவூர் - கண்டியூரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

அருளாளர் என்னும் அந்தண அன்பருக்கு அட்சயபாத்திரம் அளித்துப் பஞ்சகாலத்தில் அடியார்களுக்கு அன்னமிட்டுக் காத்த தலம். கௌதம முனிவர் தவஞ்செய்து முத்திபெற்றமையால் கௌதமாஸ்ரமம் என்று வழங்கப்படும். இந்திரன், சூரியன் முதலியோர்கள் வழிபட்டு உய்ந்தனர். சூரியன் வழிபட்ட செய்தியை ''செங்கதிரோன் வணங்கும் திருச்சோற்றுத்துறைநாதன்'' என்னும் நேரிசையால் அறியலாம். திருவையாற்று சப்தஸ்தானஸ்தலங்களில் ஒன்று.

இறைவன் பெயர் தொலையாச் செல்வர். இறைவியின் பெயர் ஒப்பிலாம்பிகை. வட மொழியில் முறையே ஓதவனேசுவரர், அன்னபூரணி எனவும் வழங்கப் பெறும்.

தீர்த்தம் காவிரி.

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1931-32, No. 141-142.

Koviloor Digital Library

கல்வெட்டு:

இத்தலத்தைப் பற்றியதாக அரசியலார் படி எடுத்த கல் வெட்டுக்கள் 12 ; எம்.எஸ்.எஸ். எடுத்தன 27 ; வி. ரங்காச்சாரியா எம்.ஏ. அவர்கள் எடுத்தது 25 ஆக 64 கல்வெட்டுக்கள் உள்ளன.

இவை பராந்தகன், இராஜராஜன் I, இன்னான் என்று கணித் தறியமுடியாத கோராஜகேசரி, பரகேசரி, கோநேரின்மை கொண்டான். குலோத்துங்கன் காலத்தன. இவை பெரும்பாலும் சிதைவுற்றிருத்தலின் நிகழ்ச்சிகளை நன்கு அறிந்து கொள்ளக்கூட வில்லை. ஆயினும் விளக்குக்களுக்காகவும், நிவேதனத்துக்காகவும், விழாவிற்காகவும் நிலமும் பொன்னும் அளித்த செய்திகள் குறிக்கப்பெறுகின்றன.

ஒரு கல்வெட்டு நடனமாதிற்குச் சர்வமான்யம் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. நலமல்லூர் தேவர் என்பவர் தொலையாச் செல்வருக்கு விளக்குத்தண்டு செய்ய நிலமளித்த செய்தி தெரிகிறது. கடவுள் தொலையாச்செல்வர் என்றும் திருச்சோற்றுத்துறை நாயனார் என்றுங் குறிப்பிடப்பெறுகிறார்.

36. திருத்தென்குரங்காடுதுறை (ஆடுதுறை)

மயிலாடுதுறை - கும்பகோணம் தொடர் வண்டிப் பாதையில், ஆடுதுறை தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே 3/4 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. மயிலாடுதுறை - கும்பகோணம் பேருந்து வழியி லுள்ளது. கும்பகோணம், மயிலாடுதுறை ஆகிய நகரங்களிலிருந்து பேருந்துகள் செல்கின்றன.

இது காவிரித் தென்கரைத் தலங்களில் முப்பத்தோராவது.

இறைவரது திருப்பெயர் ஆபத்சகாயர், (ஆபத்சகாயேசர்) இறைவியாரது திருப்பெயர் (பவளக்கொடியம்மை) வண்டார் கருமென்குழல்மங்கை. இப்பெயரை இவ்வூர்ப் பதிகத்தின் இரண்டாம் திருப்பாட்டில் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் எடுத்துரைக் கின்றார்கள்.

வாலி அநுமான் இவர்களால் பூசிக்கப்பெற்றது.

திருவையாற்றிற்குக் கிழக்கே 9 கி.மீ. தூரத்தில் காவிரியின்

Koviloor Digital Library

வடகரையில் குரங்காடுதுறை என்னும் ஊர் ஒன்று இருக்கிறது. அது வடகுரங்காடுதுறையாகும். இது காவிரிக்குத் தென்கரையில் இருப்பதால் தென் குரங்காடுதுறை என்னும் பெயர்பெற்றது. இவ்வூரை மக்கள் ஆடுதுறை என்றே அழைக்கின்றனர். இது உத்தமசோழ தேவரது தாயாராகிய செம்பியன் மாதேவியாரால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது.

கல்வெட்டு:

15 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு பாண்டியருடையன. பிற சோழர்களது எழுத்துக்கள். பாண்டியர்களில் மாறன் சடையன் 6-ஆம் 8-ஆம் ஆண்டுகள் கொண்டவை. இக்கல்வெட்டுக்கள் அழிந்திருக்கின்றன. இவன் 8-ஆம் நூற்றாண்டில் (கி.பி.770) ஆனை மலைக்கல்வெட்டைச் செதுக்கிய சடாவர்மனாக இருக்கலாம். (வேள்விக்குடிச் சாசனம் காண்க) சோழர் கல்வெட்டுக்களில் உத்தமசோழன் (கி.பி.970-86) இராஜராஜன் I (கி.பி. 985-1013) குலோத்துங்கன் I வீரராஜேந்திரன், இராஜராஜன் II காலத்துக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல் வெட்டுக்களின்படி சில செய்திகள் கிடைக்கின்றன. கண்டராதித்திய தேவியார் செம்பியன் மாதேவியார் இக்கோயிலைக் கற்றளியாக்கினார் (கி.பி. 986), பிறகு கோயிலுக்கு(கி.பி. 994) 8 மா நிலம் தந்தார்.

குலோத்துங்கன் I, நாளில் விளக்குக்காகத் தானம் செய்யப் பட்டது. சுங்கம் தவிர்த்தசோழப் பேராறு என்று அரசன் பெயரில் ஓர் ஆற்றுக்குப் பேர் இடப்பட்டது.

நாடு:- பூபாலகுலவல்லி வளநாடு, திரைமூர்நாடு திருக்குரங்காடுதுறை என்று பெயர்கள் இருக்கின்றன.

இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் பரகேசரி வர்மனாகிய உத்தமசோழர், இராஜராஜகேசரி வர்மர், திரிபுவனச் சக்கரவர்த்தி, குலோத்துங்கசோழ தேவர், திரிபுவனச் சக்கரவர்த்தி, இராஜ ராஜதேவர், திரிபுவனச் சக்கரவர்த்தி வீரராஜேந்திரதேவர் இவர்கள் காலங்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களும், பாண்டியன் மாறன் சடையன் காலத்து கல்வெட்டும் இருக்கின்றன.

இத்திருக்கோயிலைக் கற்றளியால் கட்டியவர், உத்தமசோழ தேவரைத் திருவயிறு வாய்த்த, உடைய பிராட்டியார் பராந்தகன்

Koviloor Digital Library

மாதேவடிகளான செம்பியன் மாதேவியார் ஆவர். இறைவர் திருக் குரங்காடுதுறை மகாதேவர் என்னும் பெயரால் அழைக்கப்பட்டுள்ள னர். இவ்வூர், முதலாம் இராஜராஜன் காலத்தில் தென்கரைத் திரை மூர்நாட்டுத் திருக்குரங்காடுதுறை என்றும், திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் காலத்தில் பூபாலகுலவல்லி வளநாட்டு திரைமூர்நாட்டுத் திருக்குரங்காடுதுறை என்றும் கூறப் பெற்றுள்ளது.

இக்கல்வெட்டுக்களில்[1] சுங்கந்தவிர்த்த சோழப்பேராறு குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வூர்க்கு அண்மையிலுள்ள மருத்துவக்குடி என்னும் ஊரின் பெயரும் காணப்படுகிறது. இம்மருத்துவக்குடியே திரு இடைக்குளம் என்னும் வைப்புத்தலமாகும். இச்செய்தி அம்மருத் துவக்குடிக் கோயிலில் செதுக்கப்பெற்றுள்ள திரிபுவன சக்கிரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் 21ஆம் ஆண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

37. தோணிபுரம் (சீகாழி)

சோழவள நாட்டில் காவிரி வடகரையில் அமைந்துள்ள 14 ஆவது தலம். நாகை மாவட்டத்தில் சீகாழி கோட்டத்தின் தலைநகர்.

மயிலாடுதுறை - சிதம்பரம் இருப்புப்பாதையில் தொடர் வண்டி நிலையம், பேருந்து வசதிகள் உள்ள பெரிய ஊர்.

பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், புறவம், சண்பை, காளிபுரம், கொச்சைவயம், கழுமலம், சிரபுரம் என்ற பன்னிரண்டு திருநாமங்களையுடையது. இவற்றின் பெயர்க்காரணங்களைப் பதிகம் அறுபத்து மூன்றில் திருஞானசம்பந்த சுவாமிகளே எடுத்து விளக்கியுள்ளார்கள். அது ‘பல்பெயர்ப்பத்து’ என அமைக்கப்பெற்றுள்ளது.

திருக்கழுமல மும்மணிக்கோவையுள் ‘வசையில் காட்சி’ என்னும் செய்யுளில் இப்பன்னிரண்டு பெயர்களும் பன்னிருயுகத்தில் வழங்கினவாகப் பட்டினத்தடிகளால் உணர்த்தப் பெறுகின்றது.

இவையன்றி, சங்கநிதிபுரம் முதலாகப் பதினான்கு பெயர்களும்

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year ending 1907 N0. 356-370

Koviloor Digital Library

உள்ளனவாகத் தலபுராணம் சொல்லும்.

விசேடங்கள்:

புறவாழிக் கடல் பொங்கி எழுந்த பேரூழிக்காலத்தில் இறைவன் அறுபத்துநான்கு கலைகளையும் ஆடையாக உடுத்துப் பிரணவத் தோணியில் அம்மையப்பனாக எழுந்தருளி வரும்போது ஊழியிலும் அழியாத இத்தலத்தைக்கண்டு இதுவே மூலமென்றெண்ணித் தங்கினர்.

இங்கே ஒரு மலை உண்டு. இது இறைவன் ரோமச முனிவருக்காகத் திருக்கயிலைச் சிகரமொன்றைத் தென்திசையில் தோற்றுவித்து, தானும் அம்மையுமாக இருந்து காட்சி வழங்கும் இடம். இதனை 'இருபது பறவைகள் ஏந்திக்கொண்டிருக்கின்றன'. இங்கே குரு, லிங்க, சங்கமமாகிய மூன்று திருமேனியையும் வழிபடலாம். குருமூர்த்தம் தோணியப்பர்; இலிங்க மூர்த்தம் பிரமபுரீசர்; சங்கமமூர்த்தம் சட்டைநாதர். இதுவே திருஞானசம்பந்தப்பெருமான் அவதாரஸ்தலம்.

சுவாமிகளின் பெயர்கள்:

சுவாமி பிரமபுரீசுவரர்; அம்மை திருநிலைநாயகி. சுவாமி அம்மன் கோயில்களுக்கிடையில் ஞானசம்பந்தர் ஆலயம் இருப்பது சோமாஸ்கந்தர் நிலையை நினைவூட்டுவது. திருத்தோணிச் சிகரத்துள்ள இறைவர் பெரியநாயகர்; தோணியப்பர் எனவும் வழங்கப் பெறுவர். இறைவி பெரியநாயகி; திருஞானசம்பந்தப் பெருமானுக்குச் சிவஞானப்பால் அளித்தவர் இவரே.

தீர்த்தங்கள்:

பிரமதீர்த்தம், காளிதீர்த்தம், கழுமலநதி, விநாயகநதி, புறவநதி முதலிய இருபத்திரண்டு தீர்த்தங்கள் உள்ளன.

வழிபட்டோர்:

முருகன், காளி, பிரமன், இந்திரன் முதலியோர். ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்து அடிகள், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார், அருணகிரிநாதர் முதலியோர் போற்றியுள்ளனர். கணநாதநாயனார் அவதரித்த தலம். திருக்கயிலாய பரம்பரையில் வந்தருளிய அருள்நமச்சிவாயர், கங்கைமெய்கண்டார் சிற்றம்பலநாடிகள் முதலியோர் வாழ்ந்த தலம்.

Koviloor Digital Library

விழாக்கள்:

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அர்த்தயாமத்தில் ஸ்ரீ சட்டைநாதருக்கு விசேஷ வழிபாடு நடைபெறும். சித்திரைமாதம் இறைவன் இறைவியர்க்குப் பெருவிழா நடைபெறும். அதில் இரண்டாந்திருநாள் திருஞானசம்பந்தருக்கு உமையம்மை அளித்தருளிய திருமுலைப்பால் திருவிழா. இவ்விழாக்களிற் பெரும்பாலன திருஞானசம்பந்தர் ஐதீகத்தை ஒட்டியனவேயாம்.

கல்வெட்டு:

இத்தலத்துக்கு நாற்பத்தேழு கல்வெட்டுகள் உள்ளன. இரண்டாங் குலோத்துங்கன் கல்வெட்டுமுதல் வேங்கட தேவராயர் கல்வெட்டுவரையில் பதின்மூன்றுக்கு மேற்பட்ட அரசர் பெருமக்களுடையனவாகக் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டுக்களால், இத்தலம் இராஜராஜவளநாட்டுத் திருக்கழுமலநாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் என்று பிரிவும் பெயரும் குறிக்கப்பெறுகின்றது. பிரமபுரீசுவரர் திருக்கழுமலமுடையார், திருக்கழுமலமுடைய நாயனார் என்றும், தோணியப்பரும் அம்மையும் திருத்தோணிபுரமுடையார், பெரிய நாச்சியார் என்றும், சம்பந்தப் பெருமான் ஆளுடையபிள்ளையார் என்றும் குறிக்கப்பெறுகின்றார்கள்.

ஆளுடையபிள்ளையார் கோயிலில் ஆளுடையபிள்ளையார் வடிவத்தை எழுந்தருளச்செய்தவள் மூன்றாங்குலோத்துங்கனுடைய அடுக்களைப் பெண்டுகளிலே மூத்தவள் இராஜவிச்சாதரி என்பாள் என்பது குறிக்கப்பெற்றுள்ளது. இரண்டாம் இராஜராஜனது கல்வெட்டு, கங்கைகொண்டசோழ புரத்தானொருவன் ஆளுடையபிள்ளையார் திருக்கோயில் முதற் பிராகாரம் திருமதில் எடுக்கப் பொன் கொடுத்தான் என்கின்றது. கல்வெட்டொன்றில் திருநட்டப்பெருமான் ஆளுடைய பிள்ளையார் என வருவது சுட்டுவிரல் நீட்டிக் கூத்தாடுகின்ற குழந்தையாகிய ஞானசம்பந்தரைக் குறிப்பதாகலாம். பொத்தப்பிச் சோழன் என்பவன் வீரபாண்டியனை வென்று வெற்றிப்பரிசாக, அங்கிருந்து நடராஜப்பெருமானைக் கொண்டுவந்து சீகாழியில் கொடுத்தான் எனத் தெரிகிறது. இங்கு, பொன்கொடுத்தும், நிலம்விட்டும் போற்றிய அரசர்கள் வீரராஜேந்திரன், குலோத்துங்கன் II, இராஜராஜன் II, இராஜாதிராஜன் II, குலோத்துங்கன் III, இராஜராஜன் III, கோப்பெருஞ்சிங்கன் III, வீரவிருப்பணமுடையான், வேங்கட

Koviloor Digital Library

தேவராயர், இராமப்ப நாயக்கன், ஆறனூர் இணைச்சியப்ப அகரவல்லவன், விட்டலதேவன் முதலியோராவர்.

இத்தலம் தருமை ஆதீனத்தின் அருளாட்சியில உள்ள திருக்கோயில்களில் ஒன்றாகும்.

38. திருநல்லம்

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். கும்பகோணம் வடமட்டம் பேருந்துகளில் செல்லலாம். இத்தலம் கோநேரிஇராஜபுரம் என வழங்கும். இத்தலத்தில் நடராசருடைய விக்ரகம் மிகப் பெரியதாகவும், அழகாகவும் இருக்கிறது.

சுவாமி உமாமகேசுவரர்; அம்மை மங்களநாயகி; தீர்த்தம் சக்திதீர்த்தம்.

கல்வெட்டு:

இக்கோயிலை மதுராந்தகதேவனான உத்தமசோழன் தாயும் கண்டராதித்தன் மனைவியுமான செம்பியன்மாதேவியார் கருங்கற் பணியாகக் கட்டினாள் [1]. இறைவன் திருநல்லமுடையார், திருநல்லமுடையமகாதேவர் என [2]வழங்கப்பெறுவர்[3], இராஜகேசரிவர்மனான இராஜராஜன் காலத்தில் கோயிலில் திருப்பதிகம் ஓத இருவரால் பூங்குடி கிராமத்தில் நிலம் விடப்பெற்றது[4]. உடையபிராட்டியார் உத்தரவின் படி சாத்தன் குணபட்டனான அரசாணசேகரனால் கோயில் கட்டப் பெற்றது[5]. இராஜராஜன் காலத்தில் தெரிஞ்ச கைக்கோளர்களில் ஒருவனான நக்கன் நள்ளாற்றடிகளால் கடவுளின் வெள்ளி விக்ரகம் ஒன்றும், சண்டேசுவரர் செப்புவிக்ரகமும் செய்விக்கப்பெற்றன. இன்னாரது என்று அறியப்பெறாத கல்வெட்டு ஒன்று செம்பியன்மா தேவி கண்டராதித்தன் பெயரால் இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்தான் என்கின்றது[6]. இங்கே கைலாசமுடையமகாதேவர்[7]. ஆதித்தேசுவரமுடைய மகாதேவர், கோயில்களும் தனித்து இருந்தனவாக அறியப்படுகின்றன[8]. உத்தமசோழ விண்ணகரம் என்ற

[1] 644 of 1909, [2] 655 of 1909, [3] 662 of 1909.
[4] 658 of 1909 [5] 450 of 1908, [6] 628 of 1909,
[7] 450 , 624 of 1908, [8] 624 of 1909,

Koviloor Digital Library

விஷ்ணு ஆலயமும் குறிக்கப்பெறுகின்றது[1].

இவையன்றித் திருநல்லமுடையார்கோயில் தெற்குப் பக்கத்துப் பிராகாரத்தில் புகழாபரண மண்டபம் என்ற ஒன்று இருந்ததாகவும், அதில் பிள்ளையாரைப் பிரதிட்டைசெய்யக் குலோத்துங்கன் IIIகாலத்தில் நிலம் அளிக்கப்பெற்றது என்றும் வரலாறு விளக்கு கின்றது[2]. திட்டைவிழுமியான்பிள்ளையடியாரால் சண்டேசுவரர் கோயில் திருப்பணி செய்விக்கப் பெற்றது[3]. ஆதனூர் விஜயநட்டரைய னான அருமொழித் தேவனால் திருநடைமாளிகை கட்டப்பெற்றது.

ஏனைய கல்வெட்டுக்கள் திருமஞ்சனத்திற்கும், பூமாலைக்கும், நந்தவனத்திற்கும், அமுதுக்கும், விளக்கிற்கும் செய்த பணிகளை அறிவிப்பன. இத்தலத்தால் தெரியும் அரசர்களும், தண்டத் தலைவர் களும், அரசகாரியம் பார்ப்பாரும், வெற்றிக் குறிப்புக்களும் பல.

39. திருநள்ளாறு

இது நளன் பூசித்த காரணத்தால் இப்பெயர்பெற்றது என்பர்.

பேரளம் - காரைக்கால் தொடர்வண்டிப் பாதையில் திருநள்ளாறு தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் இருக்கின்றது. இது காவிரிக்குத் தென்கரையில் உள்ள ஐம்பத்திரண்டாவது திருத் தலமாகும். காரைக்கால், நாகை, மயிலாடுதுறை, திருவாரூர் நகரங் களிலிருந்து பேருந்துகள் உள்ளன.

இறைவரின் திருப்பெயர் தர்ப்பாரண்யேசுரர். தேவாரத்தில் நம் பெருமான் எனக் கூறப்பட்டுள்ளது. இறைவியாரின் திருப்பெயர் போகமார்த்த பூண்முலையாள். இத் திருப்பெயரை இவ்வூர்ப் பதிகத்தில் ஞானசம்பந்தர் எடுத்து ஆண்டுள்ளார்.

தீர்த்தம் நளதீர்த்தம்; சிவகங்கை முதலியன.

தலவிருக்ஷம்: தர்ப்பை.

நளன் பூசித்துக் கலி நீங்கப்பெற்றான். இத்தலத்தே திருமால், பிரமதேவர், திக்குப்பாலகர், வசுக்கள், அகத்தியர், அர்ச்சுனன்,

[1] 655 of 1909, [2] 662 of 1909. [3] 658 of 1909

Koviloor Digital Library

போசன் முதலியோரும் வழிபட்டனர். முசுகுந்தச் சோழர் எழுந்தருளு வித்த விடங்கர் தலங்கள் ஏழனுள் இது ஒன்று. திருஞானசம்பந்தர், மதுரையில் சமணர்களோடு அனல்வாதம் நடத்தியபோது, அனலில் இடுவதற்குத் தாம் பாடிய பதிகங்களில் கயிறு சாத்தியபோது. 'போக மார்த்த பூண்முலையாள்' என்று தொடங்கும் இப்பதிக்குரிய பதிகம் கிடைத்தது. அதை அனலில் இட அது வேகாது இருந்து சைவ சமயத் தின் பெருமையை நிலைநாட்டியது. இதைப் பச்சைத் திருப்பதிகம் என்றும் கூறுவர். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகங்கள் நான்கு, அப்பர் பதிகம் இரண்டு, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக ஏழு பதிகங்கள் இருக்கின்றன.

நளன் பூசித்து வழிபட்ட செய்தி,

''வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே''

என்னும் ஞானசம்பந்தர் தேவாரப் பகுதியால் உறுதி எய்துகின்றது. இத்தலத்தில் சனிபகவான் சந்நிதி மிகவும் சிறப்புப் பெற்றது. சனிப்பெயர்ச்சி விழாக்களில் பல்லாயிர மக்கள் நளதீர்த்தத்தில் எண்ணெய் முழுக்காடி எள்முடிச்சுக் கட்டி எண்ணெய் விளக்கேற்றி சனிபகவானை வழிபடுவர். தங்கக் காக வாகன விழா நடைபெறும்.

இவ்வூருக்குக் கிழக்கே ஒருமைல் தூரத்தில் தக்களூர் என்னும் வைப்புத்தலம் இருக்கிறது. இதற்குத் தலபுராணம் ஒன்று இருக்கிறது. இது சுப்பிரமணியக் கவிராயரால் எழுதப்பெற்றதாகும். அச்சில் வெளி வந்துள்ளது. இத்திருக்கோயிலின் உள்துறைக் கட்டளை தருமை ஆதீன அருளாட்சியில் உளது.

கல்வெட்டு:

இக்கோயிலில் இரண்டு கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டன. (394, 395/02) 12-ஆம் நூற்றாண்டு பிற்பகுதி இராஜாதி ராஜன் 13 (கி.பி. 15-8-1173) ல் திருக்கோயில் 30 வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்கள் 17 பேர் உடைய நம்பியான தொண்டைமானிடம் உபயம்கொண்டு பணிசெய்ய நம்பிக் கொண்டார்கள். (முழுதுமில்லை) இதில் சிவப்பிராமணர்களின் பெயர்கள் உண்மைசொன்னான். நாற்பத்தெண்ணாயிரவர் சான்றருளிச் செய்தவற்றுள் கற்றளிப்பிள்ளை முதலிய பெயர்களின் அமைப்பை அறிக. குலோத்துங்கன் III 17 (2-1-1195) கல்வெட்டில் சந்தியா

Koviloor Digital Library

விளக்கிற்கு நெய் அளக்க ஆடு பத்து விடப்பட்டது. இவ்விரண்டு கல்வெட்டுக்களின்படி நாடு உய்யக் கொண்டார் வளநாட்டு முழையூர் நாடு என்றும் ஊர் நள்ளாறு என்றும் இறைவன் நள்ளாறுடையார் என்றும் அறியக்கிடக்கிறது.

இராஜாதிராஜர் கல்வெட்டு ''கடல்சூழ்ந்த பார்மாதரும் கலைமாதரும் அடல்சூழ்ந்த போர்மாதரும் சீர்மாதரும் அமர்ந்து வாழ'' என்ற தொடக்கம் கொண்டது.

40. திருநாகேச்சுரம்

ஐந்தலை அரவால் பூசிக்கப்பெற்ற கோயிலை உடையது ஆதலின் இப்பெயர்பெற்றது. இச்செய்தி, இக்கோயிலுக்குரிய நாவுக்கரசரது திருக்குறுந்தொகையிலுள்ள (திருப்பாட்டு 4)

''ஐந்தலை யரவின் பணி கொண்டருள்
மைந்தர் போன்மணி நாகேச் சுவரரே''

என்ற தேவாரப் பகுதியால் அறியலாகும்.

மயிலாடுதுறை - கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், திருநாகேசுவரம் தொடர்வண்டி நிலையத்திலிருந்து தெற்கே சுமார் 2 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரிக்குத் தென்கரையிலுள்ள இருபத்தொன்பதாவது தலமாகும். கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

இறைவர் திருப்பெயர் சண்பகாரணியர். இறைவி திருப்பெயர் குன்றமுலைநாயகி.

தீர்த்தம் சூர்யபுஷ்கரிணி.

ஐந்தலை நாகமன்றி, சந்திர சூரியர்களால் பூசிக்கப்பெற்றது. தெய்வப் பாக்கிழாராகிய சேக்கிழார் பெருமானுக்கு மிக்க விருப்பமுள்ள தலம். சேக்கிழார் தமது ஊராகிய குன்றத்தூரில் ஒருகோயில் எடுப்பித்து அதற்குத் திருநாகேச்சுரம் என்று பெயர் வைத்துள்ளமை இதை நன்கு புலப்படுத்தும்.

திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, திருநாவுக்கரசு நாயனாரது

Koviloor Digital Library

பதிகம் மூன்று, சுந்தரமூர்த்தி நாயனாரது பதிகம் ஒன்று ஆக ஆறு பதிகங்களைப் பெற்ற பெருமையுடையது. நாளும் வணங்குவார் பிணி தீர்க்கும் பெற்றியுடையது.

''நாளு நாதனமர் கின்ற நாகேச்சுர நண்ணுவார்
கோளு நாளுந் தீயவேனு நன்காங் குறிக்கொண்மினே''

என்னும், இக்கோயில் சம்பந்தர் தேவாரப்பகுதி சிந்திக்கற்பாலது.

கல்வெட்டு:

16 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டன. கண்டராதித்தியர், இராஜராஜன், இராஜேந்திரன் காலத்தவை ஆதலின் பழைய கல்வெட்டுக்களேயாகும். கி. பி. 10, 11 நூற்றாண்டில் ஊர் உய்யக் கொண்டான் வளநாடு திரைமூர்நாடு திருவிண்ணகர் திருநாகேச்சுரம் என்று கண்டிருக்கிறது. அரசருடைய சேனையில் இளங்குஞ்சர மல்லரில் ஒருவனான அடிகள் அச்சான்தந்த நிலத்தின் வருமானத்தி லிருந்து இறைவனுக்கு மணியும் முத்தும் கொண்ட ஒரு திருவாபரணம் செய்யப் பெற்றது.

தன்மகளின் நலத்திற்காகத் தீரன் சத்திவிடங்கி என்ற அரண்மனைப் பெண்டாட்டி ஒரு விளக்கிற்காக 48 ஆடுகள் தானம் செய்தாள். ஒருகல்வெட்டில் கோயில் பொன், வெள்ளி, நகைகள், முதலியன கூறப்பட்டுள்ளன. மற்றொன்றின்படி விக்கிரமசிங்க பல்லவராயன் 100 காசுதந்து காவேரி வெள்ளத்தினால் அழிந்த கால் வாய்களைச் செம்மைப்படுத்தினான். வட்டியில் மீதியானது கோயில் வழிபாட்டிற்கும், சிவதருமம் கூறுவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

அர்த்தநாரீசர் திருவுருவம் இங்குத் தாபிக்கப்பட்டது. கண்டராதித்தியர் இக் கோயில் திருப்பணி செய்திருக்கிறார். வேறொரு கல்வெட்டின்படி மிலாடுடையார் பள்ளியில் குமாரமார்த்தாண்டன் என்ற திருச்சுற்றாலை கட்டப்பட்டதாம். இதைப்பற்றிப் பல ஆராய்ச்சிக் கருத்துக்கள் வெளிவருகின்றன.

41. திருநாகைக்காரோணம்

நாகராசனாகிய ஆதிசேடனால் பூசிக்கப்பெற்றமையின் நாகை என்னும் பெயர்பெற்றது. புண்டரீக முனிவரைக் காயத்தோடு

Koviloor Digital Library

ஆரோகணம் செய்துகொண்டமையால் காயாரோகணம் என்னும் பெயர் எய்திற்று. அதுவே காரோணம் என்று மருவிற்று.

இது நாகப்பட்டினம் தொடர்வண்டி நிலையத்திற்கு வடமேற்கே சுமார் 2 கி. மீ. தூரத்திலிருக்கிறது. இது காவிரிக்குத் தென்கரையிலுள்ள எண்பத்திரண்டாவது தலம். சென்னை, கும்பகோணம், தஞ்சை, திருச்சி, திருவாரூர், மயிலாடுதுறை முதலிய பல நகரங்களிலிருந்து பேருந்துகள் உள்ளன. நாகை மாவட்டத் தலைநகர்.

இறைவரின் திருப்பெயர் காயாரோகணேசுவரர். இறைவியாரின் திருப்பெயர் நீலாயதாட்சி.

தீர்த்தம் தேவதீர்த்தம். புண்டரீக தீர்த்தம், இவை முறையே கோயிலுக்குத் தெற்கிலும் வடக்கிலும் இருக்கின்றன.

அதிபத்தநாயனார் திருவவதாரஞ் செய்த திருப்பதி. சுந்தரமூர்த்தி நாயனார் காற்றனைய வேகத்தையுடைய குதிரை, ஒளியுள்ள முத்துமாலை, சிறந்தபட்டு, முதலானவைகளை வேண்டிப் பெற்றார். விடங்கர் தலங்கள் ஏழனுள் ஒன்று.

திருக்கோயிலில் முதலில் இருக்கும் விநாயகருக்கு நாகாபரண விநாயகர் என்று பெயர். உள்ளேயிருக்கும் பிள்ளையாருக்கு மாவடிப் பிள்ளையார் எனப்பெயர். இத்தலத்து அம்மன் மிகச்சிறப்புடையவர். இத்தலத்தைப்பற்றி ''காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி'' என்னும் பழமொழி வழங்குகின்றது.

இக்கோயிலுக்குத் திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, திருநாவுக்கரசு நாயனார் பதிகம் நான்கு, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக ஏழு பதிகங்களிருக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் பதிகத்தின் இறுதிப் பாட்டை வெள்ளிப்பாடல் என்பர். வெள்ளிப்பாடல் என்பது பின்னால் யாரோ ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பெற்றதாகும்.

அவர்கள் அங்ஙனங் கூறுதற்குக் காரணம் ஐந்தாம் திருப் பாடலில் ''சுந்தரனே கந்தமுதலாடை யாபரணம் பண்டாரத்தே யெனக்குப் பணித்தருள வேண்டும்'' என்றிருப்பதாலும், 11-ஆம் திருப்பாட்டில் ''ஒளிமுத்தம் பூணாரமொண்பட்டும் பூவுங் கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்'' என்றிருப்பதாலும், முதலில் கூறியவற்றுள் சில இரண்டாவது கூறியவற்றுள் காணப்படுதலால்

Koviloor Digital Library

கூறியது கூறல் என்னும் குற்றத்தின் பாற்படுத்தி, இதை வெள்ளிப் பாட்டு என்பர்.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தலபுராணம் எழுதியுள்ளார்கள். அது அச்சில் வெளிவந்துள்ளது. அது புலவர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப்படும் பெருஞ்சிறப்பு வாய்ந்தது.

''கற்றோர் பயில் கடல் நாகைக் காரோணம்'' என்று ஞான சம்பந்தர் கூறியிருத்தலாலும், பாக்கு விளையாடிக்கொண்டிருந்த பாலகர்களை நோக்கிப் பசியினால் காளமேகப்புலவர் 'சோறு எங்கு விக்கும்' என்று கேட்டதற்கு, அப்பாலகர்கள் தொண்டையில் விக்கும் என்று பதில் கூறினார்கள். (விற்கும் - என்பதைப் பேச்சுவழக்கில் விக்கும் எனக் கூறுதலுண்டு). உடனே புலவர் கோபித்து அவர்கள் மீது வசைபாடும் பொருட்டு ''பாக்குத் தறித்து விளையாடும் பாலகர்க்கு'' என்பது வரை சுவரில் எழுதி விட்டு, பசி தீர்ந்தபிறகு எஞ்சிய பகுதியைப் பாடி முடிவு செய்வதாக வைத்துவிட்டுப் பசியாற்றிக் கொண்டு அவ்விடம் வந்தபொழுது, அவர் எழுதியதற்குமேல் ''நாக்குத் தமிழுரைக்கும் நன்னாகை'' என்று அவ்விளஞ்சிறார் எழுதி யதைப் பார்த்து மதிமயங்கிச் சென்றதாகத் தனிப்பாடல் ஒன்று இருக் கின்றது. இவைகளால் இவ்வூர் மக்களின் கல்வித்திறம் புலப்படும். இவ்வூரில் இருந்த காத்தான் சத்திரத்தைப் பற்றிய காளமேகப் புலவர் பாடலொன்றும் உண்டு.

இந்த ஊர் ஒரு துறைமுகம், வாணிகத்தலம். கீழைத் தஞ்சையின் தலைநகரம். இவ்வூரில் மங்களாசாசனம் பெற்ற திருமால் கோயில் சௌந்தரராஜப்பெருமாள் என்ற பெயரால் விளங்குகிறது. மேலும் மேலைக்கயா என்ற சட்டநாதர் கோயில் ஒன்று இருக்கிறது. மற்றும் காவல் தெய்வமாகிய கோதண்ட ஐயனார் கோயில், அமர்ந்தீசர் கோயில், மலைச்சுரம் கோயில் (கயிலாயநாதர்) (இது ஒரு கட்டு மலை,) குமரர் கோயில், நடுவண் நாதர் கோயில், அழகியநாதர் கோயில் முதலிய பல கோயில்கள் இருக்கின்றன.

திருக்கோயில் 180 மீ. - 75 மீ. கொண்டது. இராஜகோபுரம் முற்றுப்பெறவில்லை. உட்கோபுரம் 3 அடுக்குக் கொண்ட சோழன் கோபுரம். மடைப்பள்ளிக்கெதிரில் அதிபத்தர் திருவுருவம் உள்ளது.. மாமரம் தலமரம். அதனடியில் மாவடிப்பிள்ளையார் இருக்கிறார். இராசதானி மண்டபத்தில் தியாகராசர் இருக்கிறார். சுந்தரவிடங்கர் சுவாமி பெயர் காரோணர் என்பது காயாரோகணர் என்பதன் மரூஉ.

Koviloor Digital Library

புண்டரீகரிஷியை சரீரத்தோடு ஏற்றுக்கொண்டதனால் காயா ரோகணர் என்று வந்ததாகப் புராணம் கூறும். நீலாயதாட்சி என்ற வடமொழிப்பெயர் கருந்தடங் கண்ணி எனத் தமிழில் வழங்கும். இது சக்தி பீடங்கள் அறுபத்து நான்கில் ஒன்று. மாடங்களில் சிற்பவேலை அழகாக இருக்கிறது. இவ்வூர்த்தேர் கண்ணாடி ரதம் அல்லது பீங்கான் ரதம் என வழங்கும்.

கல்வெட்டு:

ஏழு கல்வெட்டுக்கள் வெளியிடப்பெற்றுள்ளன. கயிலாச நாதர் கோயில் சுவரில் கி.பி. 1777 - ல் ஒரு கனவான் இறந்ததாக ஒல்லாந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது.

சீனா கோபுரத்தில் கிடைத்த ஒரு வெண்கலச்சிலையில் 12ஆம் நூற்றாண்டு எழுத்து இருந்தது. ஒரு சிறு கோயிலில் கி.பி.1777-ல் கவர்னர் ரெய்னர்வான் விலிசிங்கன் அதனைக் கட்டினதாக எழுதப்பட்டுள்ளது. ஒரு பெரிய முரசின் பேரில் ஒரு சிறு எழுத்து உண்டு. ஒரு வெள்ளி ஏட்டில் தஞ்சை அரசன் விஜயராகவன் நாகப்பட்டினத்தை ஒல்லாந்தருக்குக் கொடுத்ததாக எழுதியிருக்கிறது தெலுங்கு வரிவடிவத்தில்.

மற்றொரு வெள்ளி ஏட்டில் தமிழில் அதனையே மராட்டியர் கோறி கி.பி. 1676இல் உறுதிப்படுத்தி எழுதினர். கி.பி. 1774இல் ஒல்லாந்த தேவாலயம் கட்டப்பெற்றது.

42. திருநாரையூர்

நாரை பூசித்துப் பேறுபெற்றதால் இப்பெயர் பெற்றது. சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார் கோயிலுக்குப் போகும் பேருந்து வழியில் 5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. சிதம்பரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.

காவிரிக்கு வடகரையிலுள்ள 33ஆவது தலமாகும்.

இறைவர் பெயர் சௌந்தரேசுவரர். இறைவி பெயர் திரிபுர சுந்தரி.

திருத்தொண்டர் திருவந்தாதியைப்பாடிய நம்பியாண்டார்

Koviloor Digital Library

நம்பிகள் அவதரித்த திருப்பதி இது. தேவாரத் திருமுறைகள் கனக சபையின் மேல்பாலுள்ள ஒரு அறையில் இருந்ததை நம்பியாண்டார் நம்பி மூலமாய் வெளிப்படுத்திய பொல்லாப் பிள்ளையார் எழுந் தருளியிருக்கும் தலமும் இதுவேயாகும்.

பொள்ளா என்பது பொல்லா என்று வந்துள்ளது. பொள்ளாதது என்பது உளி முதலியவற்றால் செய்யப்படாதது. எனவே சுயம்பு மூர்த்தியாகும். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் மூன்று, அப்பர் பதிகம் இரண்டு, ஆக ஐந்து பதிகங்கள் இருக்கின்றன.

பொல்லாப்பிள்ளையார்தனிமண்டபம் , மகாமண்டபத்தில் ஆறுமுகருடைய உருவம் கல்லில் செதுக்கப்பட்டது. அருகில் சித்தல புரம் இருக்கிறது. நம்பியாண்டார்நம்பி இராஜராஜசோழன் உருவங்கள் மகாமண்டபத்தில் இருக்கின்றன. கோயில் விமானம் அர்த்தசந்திர விமானம், விமானத்தின் உச்சியில் இரண்டு கலசங்கள் உண்டு. பிரகாரம் 65 மீ-120 மீ. மதில் உயரம் 3 மீ. அம்பிகை தெற்குமுகம் அப்பயகுல இராஜராஜர் திருமுறை வகுக்கும்படி சொன்ன இடம். நம்பியாண்டார்நம்பி வகுத்தது. இருவர் விக்கிரகங்களும் உண்டு. திருமுறை கண்டபுராணம் காண்க.

கல்வெட்டு:

கல்வெட்டுக்கள் 4-கிடைத்தன. கி.பி.11ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை. திருநாரையூர் - தனியூரான் வீர நாராயண சலம் சேர்ந்த ஒருபிடாகை. தனியூர் ஆய ஆட்சி குலோத்துங்கசோழன் சந்தி விளக்குக்காக ஊர் ஒன்று தந்தான். கைலாசமுடையார்க்கு நித்திய நிவந்தத்திற்காகப் பொருள் இல்லாமையினால் ஆண்டு ஒன்றுக்கு 540 கலம் நெல் தரக்கூடிய நிலதானம் விக்கிரம சோழனால் தரப்பட்டது. குற்றம் தீர்த்த தீர்ப்புகள் கூறப்பட்டுள்ளன. பசு திருடியதைச் சபையோர் விசாரித்து அவனிடமிருந்து பசுவும் கன்றுகளும் மீட்கப்பெற்றன. கோப்பெருஞ்சிங்கன் கி.பி. 1250இல் 60மா, நிலம் விற்கப்பெற்றது.

43. திருநின்றியூர்

சோழநாட்டு காவிரி வடகரைத்தலம். நாகைமாவட்டம் மயிலாடு துறை, வைத்தீஸ்வரன்கோயில் பேருந்துவழியில் உள்ளது.

திருமகள் வழிபட்டு நிலைபேறு எய்திய தலம். சோழன் ஒருவன்

Koviloor Digital Library

திருவிளக்கிட்டுத் தினந்தோறும் வழிபட்டுவந்தான். அவன் கொண்டுவந்த திரி ஒருநாள் நின்றுவிடவே, சிவலிங்கத்தினின்றும் ஒரு சோதி தோன்றி, அவன் வழிபாட்டிற்கு இடையூறுண்டாகாமல் உதவியது. அதனால் திரிநின்றவூர் ஆயிற்று. அது இப்போது திருநின்றவூர் என வழங்குகின்றது என்பது செவிவழிச்செய்தி.

பரசுராமன் நின்றியூரை இறைவற்கும், பக்கத்திலுள்ள 360 வேலி நிலத்தை வேதியர்கட்கும் அளித்து வழிபட்டான் என்பது புராண வரலாறு. இதனையே சுந்தரர் தேவாரம் தக்கேசி மூன்றாம்பாடல் குறிப்பிடுகிறது. அடுத்த பாடலில், பசு பால்சொரிந்து அபிஷேகித்து வந்ததாகவும் ஒரு வரலாறு குறிக்கப் பெற்றுள்ளது.

சுவாமிபெயர் லக்ஷ்மிபுரீசுவரர்; மகாலட்சுமிநாதர். அம்மை பெயர் உலகநாயகி. தீர்த்தம் நீலதீர்த்தம். (இது *அபிதான சிந்தாமணி* கூற்று) மகாலக்ஷ்மி தீர்த்தம் எனவும் வழங்கும்.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டு ஒன்றே உள்ளது. 1921ம் ஆண்டில் படியெடுக்கப்பெற்றுள்ளது. திரிபுவன சக்ரவர்த்தி இராஜராஜதேவர்க்கு ஆண்டு 15வது கும்பரவி அட்டமி ஞாயிறு மூல நக்ஷத்திரம் என்று தொடங்குகிறது [1]. தருமை ஆதீன அருளாட்சியில் உள்ள கோயில்களில் ஒன்று.

44. திருநீலக்குடி

தென்னலக்குடி என இக்காலம் வழங்கும் இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில், ஆடுதுறைத் தொடர்வண்டி நிலையத்துக்குத் தெற்கே 3 கி. மீ. தொலைவில் உள்ளது.

இறைவர் : நீலக்குடியீசர்.

இறைவி: அழகம்மை.

வருணனும், தேவகன்னிகைகளும் பூசித்துப் பேறுபெற்றனர். இங்கு அம்பிகை சந்நிதிகள் இரண்டுள்ளன.

[1]-538 of 1921. மீனரவி என்றும் பாடம் உண்டு.

Koviloor Digital Library

அப்பர் பெருமானைச் சமணர்கள் கல்லில் கட்டி கடலில் தள்ளியபொழுது, அவர் இறைவன் திருநாமத்தைச் சொல்லி உயர்ந்ததை இவ்வூர்ப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். அது ''கல்லினோடெனைப் பூட்டி'' என்று தொடங்கும் பாசுரமாகும்.

கல்வெட்டு:

கோயிலுக்குள் நெற்கூடு கட்டுதல் கூடாது என்பதை ஒரு கல்வெட்டும், மற்றொரு கல்வெட்டு அவ்வூரிலுள்ள மத்தியார்ச்சுனம் என்னும் திருக்குளத்தைப்பற்றியும் தெரிவிக்கின்றன. மேலும் பிந்திய கல்வெட்டு சப்தஸ்தானங்களுக்குரிய ஊர்களின் பெயர்களையும் குறிக்கின்றது[1].

45. திருநெய்த்தானம்

சோழநாட்டுத்தலம். தஞ்சையை அடுத்துள்ள திருவையாற்றிற்கு மேற்கே 1.5. கி. மீ. தூரத்தில் உள்ளது. திருவையாற்று சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் ஏழாவது தலம். இங்கே கலைமகள் வழிபட்டுப் பேறுபெற்றாள்.

சுவாமிபெயர் நெய்யாடியப்பர். அம்மைபெயர் பாலாம்பிகை. 'இளமங்கையம்மை' எனத் தேவாரம் குறிப்பிடுகின்றது.

தீர்த்தம் - காவிரி. கிழக்குப்பார்த்த சந்நிதி. இப்போது தில்லைஸ்தானம் என வழங்குகின்றது. வடமொழியில் கிருதஸ்தானமாயிற்று. இறைவற்குப் பசுநெய் அபிஷேகிப்பது வழக்கம்.

கல்வெட்டு:

இத்தலத்தில் அரசியலார் படிஎடுத்தவண்ணம் 51 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் இத்தலம் இராஜாதிராஜன் காலத்தில் இராஜராஜ வளநாட்டுப் பைங்காநாட்டுத் திருநெய்த்தானம் எனக் குறிக்கப்பெறுகின்றது. இத்தலத்து பராந்தகன் I முதலாக ஐந்து சோழ அரசர்களின் தானங்களைக் குறிக்கும் நிகழ்ச்சிகளும், நந்திவர்மன் தான நிகழ்ச்சிகளும் குறிக்கப்பெறுகின்றன. செம்பியன் ஈக்காட்டு வேளானான பரிசைகிழான் மறவன்நக்கன் என்பவன் 13 கழஞ்சு

[1] 276 of 1911

Koviloor Digital Library

பொன்னைக் கோயில் விளக்கிற்காகக் கொடுத்தான்[1]. கூத்தன் அருள்மொழியான வானவன் பேரரையன் நிலத்தை 25 கழஞ்சு பொன்னுக்கு நங்கை வரகுணபெருமானார் வாங்கி விளக்கிற்காக வைத்தாள் [1]. சாமர கேசரி தெரிஞ்ச கைக்கோளர், விக்ரமசிங்க தெரிஞ்ச கைக்கோளர், இருவராலும் பைங்காநாட்டுக் கீழப்பிலாறு கிராமத்தில் நிலம் அளிக்கப் பெற்றது. முற்கூறிய சாமரகேசரி தெரிஞ்ச கைக்கோளருள் ஒருவனான மல்லன் ஆரியனால் நிவந்தம் விடப் பெற்றது. கோயில் காரியத் தலைவனான காமக்கோடநல்லூர் ஆய னால் இரு பொன்பட்டங்கள் கடவுளுக்குக் கொடுக்கப்பெற்றன [2]. சோழப் பெருமானடிகளுடைய காமக் கிழத்தியான நங்கை கூத்தப் பெருமானார் 30 கழஞ்சு பொன்னை விளக்குக்காக வைத்தார். அதனைத் திருநெய்த்தானச் சபையார் சுவாமிக்கு ஸ்நபன மண்டபங் கட்டப் பயன்படுத்தி விட்டனர். அதற்குப் பதிலாகக் கோயில் நிலங்கள் சிலவற்றை ஏற்பாடு செய்தனர். வளவர்கோன் பேரரையன் என்பவ னும், செம்பியன் தமிழவேளான் விக்கணன் மனைவி கடம்பமா தேவியும், தென்னவன் பிரதிமாராசனான கட்டி ஒற்றியூரான் பராந்தகனும், இளங்கோவேண்மான் மனைவியான வரகுணப் பெருமானாரும் விளக்கிற்காகப் பொன்னும், நிலமும் அளித்தனர். முண்டங்குடி உடையானான கண்ணங்குடி நாராயணன் நைவேத்யத் திற்கு நெல்லளித்தான். இது அளித்தகாலம் பராந்தகன் I காலம். மேளக்காரன், தேவதாசி, வாணிகன் இவர்கள் தருமமும் விளங்கின என்பதை மூன்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன [3]. கோப்பர கேசரியான பராந்தகன் I க்கு மாமியார் முள்ளூர் நங்கையென்று தெரிகிறது. [4]

46. திருநெல்வாயில்

இவ்வூர் தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரம் தொடர்வண்டிநிலையத்திலிருந்து தென்கிழக்கே 13.5.கி. மீ. தூரத்தில், அண்ணாமலை நகருக்குத் தெற்கே 1.5.கி.மீ. தூரத்தில் உள்ளது. தற்பொழுது சிவபுரி என்று வழங்கப்பெறுகிறது. புதுப்பிக்கப் பெற்ற தலமாகும். *சிவபுரி மான்மியம்* என்ற தல வரலாறும் இதற்கு உண்டு.

சுவாமியின் பெயர் உச்சிநாதேசுவரர். தேவியின்பெயர் கனகாம்பிகை. உச்சியார் என்பது தேவாரப் பெயர்.

[1]-277 of 1911, [2]-283 of 1911 [3]-22, 33, 36 of 1895, [4]-45 of 1895..

Koviloor Digital Library

கல்வெட்டு:

இந்தக்கோயிலில் மூன்று கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பட்டிருக்கின்றன. முத்துவேங்கடப்ப நாயக்கன் சகம் 1564 இல் (கி.பி. 1642) தூபாஷ் கிருஷ்ணப்ப நாயக்கன் நலத்திற்காகச் சிதம்பரம் அபிஷேகபுரம் அக்கிரகாரத்திற்கு முத்து வேங்கடப்ப நாயக்கன் காரியத்தர் கோனேரி செட்டியார் இருபத்தைந்துமா நிலம் தந்தார்.

47. திருப்பராய்த்துறை

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். திருச்சிராப்பள்ளி யிலிருந்து குளித்தலை செல்லும் பேருந்து வழியில் உள்ளது. இத்தலம் இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் இவர்களால் பூசிக்கப்பெற்றது. அகண்ட காவிரித்துறையில் உள்ளது. இதனை அப்பர் சுவாமிகள் 'பரக்குநீர்ப் பொன்னி மன்னுபராய்த் துறை' என்று அருளுவார்கள். இறைவன் பெயர் பராய்த்துறை நாதர். தேவியார் பெயர் மயிலம்மை யார், தீர்த்தம் காவிரி. விருட்சம் பராய். விருட் சத்தால் இத்தலத்திற்குப் பெயராயிற்று. திருச்சி - ஈரோடு இருப்புப் பாதையில் தொடர் வண்டி நிலையம் உள்ளது.

கல்வெட்டு:

மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மரான முதற்பராந்தகன் காலத்திய கல்வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. இன்னாரது என் றறியமுடியாத இராஜகேசரிவர்மன் காலத்திய கல்வெட்டுக்களும் சில உள்ளன. அவையன்றிச் சுந்தரபாண்டியத்தேவர், கோநேரின்மை கொண்டான். கிருஷ்ணதேவ மகாராயர் கல்வெட்டுக்களும் இன்னா ரென்று அறியமுடியாத சில கல்வெட்டுக்களும் உள்ளன. எல்லாமாக அரசியலார் படியெடுத்த கல்வெட்டுக்கள் 83. அவற்றால் அறியப்படும் கோயிலைப்பற்றிய உண்மைகள், கோயிலுக்கு விளக்கு எரிக்க ஆடும் பொன்னும், நிலமும் அளித்த செய்திகளாகும்.

சுந்தரபாண்டியத் தேவன் தன்னுடைய ஆட்சி ஒன்பதாம் ஆண்டில் தங்க ஆபரணங்கள் அளித்தான்[1]. குலோத்துங்கன் கருப்பக் கிருகத்துக்குப் பொன்வேய்ந்தான்[2]. சோமாஸ்கந்தர் கோயில் முன் மண்டபம், சிறைமீட்டான் திரிவிக்ரம உதயனால் கட்டப்பெற்றது[3].

[1] 267 of 1903, [2] 268 of 1903, [3] 280 of 1903,

Koviloor Digital Library

தலவிநாயகருக்கு ஏகாம்பர உதயன் ஆட்சியில் நிலம் வழங்கப் பெற்றது [1]. இறைவன் திருப்பராய்த்துறை மகாதேவர், பராய்த்துறை பரமேசுவரன் [2]. என்று வழங்கப்பெறுகிறார். இத்தலம் உத்தமசீலிச் சதுர்வேதி மங்கலத்துத் திருப்பராய்த்துறை என்று குறிக்கப்படுகிறது. இங்கே தக்ஷிணாயன புண்ணிய காலத்திலும் சங்கராந்தியிலும் நீராட்டு விழா நடைபெற்றதாகத் தெரிகின்றது.

48. திருப்பழனம்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். கும்பகோணம் - திருவையாறு பேருந்துச்சாலையில் திருவையாற்றுக்கு அருகில் உள்ளது.

இது திருவையாற்று ஸப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. அப்பூதி அடிகளுடைய அவதாரத் தலமாய திங்களூர் இதற்கு அண்மையில் இருப்பதால் இங்கு வழிபட வந்த அப்பர் அடிகள் இத்தலப் பதிகத்து அப்பூதிநாயனார் திருப்பெயரை அமைத்து அருளிச்செய்தார்கள்.

விடந்தீர்த்த பதிகமாகிய ''ஒன்று கொலாம்'' என்ற பதிக நிகழ்ச்சிக்கு இடமானதலம் இது. இறைவன் பெயர் ஆபத்சகாயர். அம்மையின் பெயர் பெரிய நாயகி. தீர்த்தம் - காவிரி.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 29 உள்ளன. இவை களும் முதற்பராந்தகன் காலமுதற்கொண்டே தொடங்குகின்றன. இவற்றால் அரசர்களும் அரசியர்களும், அவர்களது தோழிமார்களும், தண்டத் தலைவர்களும் விளக்கிற்காக நிலமும் நெய்யும், பொன்னும் வழங்கியமை அறியலாம். திரிபுவன வீரதேவனான மூன்றாம் குலோத்துங்கன் சிந்திநல்லூரில் உள்ள நிலங்களை 15500 காசுகளுக்கு விற்று, அதைக் கோயிலுக்குக் கொடுத்தான். இராஜராஜன் மூன்று காணி ஒரு முந்திரி நிலம் அளித்தான் என்பதால் அரசர்களின் அன்பின் நுணுக்கம் அறியப்பெறுகிறது. கோஇராஜகேசரிவர்மன் காலத்தில் ஒரு வேளாளன் கல்மண்டபம் ஒன்றை எழுப்பித் தந்தான்.

[1] 282 of 1903, [2] 570 of 1903, 566 of 1903.

Koviloor Digital Library

49. திருப்பழையாறைவடதளி

பழையாறை என இன்று வழங்கும் இவ்வூர், சோழமன்னர்கள் முடிசூட்டிக்கொள்ளும் நகரங்களில் ஒன்று. இது பழசை என்று மரூஉ மொழியாகத் தேவார காலத்திலேயே வழங்கப்பட்டிருக்கின்றது. திருப்பட்டீச்சரம், பழையாறைமேற்றளி, பழையாறைவடதளி என்னும் தலங்கள் இப்பழையாறை நகருக்குள் அடங்கியிருந்தன.

பழையாறைவடதளி:- பழையாறை நகரத்தில் உள்ள வடதளி என்று பொருள்படும். (தளி - கோயில்). கோயில் மாடக்கோயில் அமைப்புடையது.

தஞ்சை மாவட்டத்தில் திருப்பட்டீச்சரத்துக்கு அண்மையில் உள்ளது.

இறைவர்: தர்மபுரீசர்.

இறைவி : விமலநாயகி

அப்பர்பெருமான் இத்தலத்தை அடைந்தபொழுது இக்கோயில் சமணர்களால் மறைக்கப் பெற்றிருந்தது. அவர் அதைக்கண்டு சமணர்களின் செயலைக் கெடுத்து இறைவனைக் கண்டு வழிபாடாற்றாமல் போவதில்லை என்று உறுதியுடன் இருந்தார். அதுபொழுது இறைவர் சோழ மன்னனின் கனவில் தோன்றி அறிவிக்க அம்மன்னன் இறைவனை வெளிப்படுத்தி அப்பமூர்த்திகளை வழிபடச்செய்தருளிய தலம்.

சமணர்கள் மறைத்ததைப்பற்றி அப்பர் பெருமான் ''தலையெலாம் பறிக்குஞ் சமண்கையருள், நிலையினான் மறைத்தான் மறைக் கொண்ணுமோ'' என இவ்வடதளிப் பதிகத்தில் குறிப்பிட் டிருப்பது நோக்கத்தக்கது.

கல்வெட்டு:

[1]இத்திருக்கோயிலின் மகாமண்டபமும், படிக்கட்டுகளும் பொருவனூர் வாணாதராயன் நரசிங்கதேவனால் சகம் 1375 அதாவது

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1927 No. 221 and 222.

Koviloor Digital Library

கி.பி. 1453இல் கட்டப்பெற்றனவாகும். ஒரு தூண் ஒன்றில் அது நரசிங்கதேவரின் நன்கொடை என்றும் செதுக்கப்பட்டுள்ளது.

50. திருப்பாசூர்

பசுமை + ஊர் = பாசூர். நீர்வளத்தால் நிலம் பசுமையாய் விளங்குவதால் இப்பெயர் பெற்றதாதல் வேண்டும். தலமரம் மூங்கில் ஆதலாலும், இறைவர் மூங்கிலடியில் முளைத்தவர் ஆதலாலும் இப்பெயர்பெற்றனர் என்பர். (பாசு = மூங்கில்).

இது திருவள்ளூருக்கு வடக்கில் 5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருவள்ளூர் - பேரம்பாக்கம் நகரப் பேருந்திலோ காஞ்சி புரத்திலிருந்து கடம்பத்தூர் வழியாகத் திருவள்ளூர் செல்லும் பேருந்திலோ பாசூர் செல்லலாம்.

இறைவர் திருப்பெயர் பாசூர்நாதர். இறைவி திருப்பெயர் பசுபதிநாயகி.

குறும்பர் அரசனுக்குச் சார்பாகச் சமணர்கள் கரிகால் சோழன் மீது ஏவிய பாம்பைச் சிவபெருமான் எழுந்தருளித் தடுத்து ஆட்டினார் என்பது தலமான்மியம். இச்செய்தி, ''படவரவொன்றது ஆட்டிப் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே'' என்னும் இத்தலத்துக்குரிய திருத்தாண்டகப் பகுதியாலும் இது உறுதி எய்து கின்றது. சந்திரன் பூசித்துப் பேறு பெற்றான்.

இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, நாவுக்கரசர் பதிகங்கள் இரண்டு ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன. இது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

கல்வெட்டு:

இங்குள்ள கோயிலில் பதினாறு கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. தொண்டைமண்டலம், ஈக்காடு கோட்டம், காக்கலூர் நாட்டுத் திருப்பாசூர் என்று கண்டிருக்கின்றது.

இராஜராஜன் நாளில் பூசைக்காகப் பட்டமாருக்கு நாற்பத் தேழுகாசு தரப்பட்டது. அதேகாலத்தில் விளக்கிற்காக முப்பத்திரண்டு பசுவும், முரசிற்காக ஒரு இடபமும் தரப்பட்டன. குலோத்துங்கன்

Koviloor Digital Library

நாளில் நாற்பத்தெண்ணாயிரனது மகள் ஒரு திருவாபரணத்திற்காக முப்பதுகாசும், நாள் ஒன்றிற்கு இரண்டுபடி அரிசியும் தந்தாள். ஒரு காளிங்கராயன் பத்து விளக்குகளுக்காக எழுபத்தெட்டுக்காசு கொடுத்துள்ளான். வீரகம்பணன் நாளில் ஒருவன் ஒரு தோட்டத்தைக் கொடுத்துள்ளான்.

51. திருப்பாண்டிக்கொடுமுடி

திருச்சிராப்பள்ளி - ஈரோடு இருப்புப் பாதையில், கொடுமுடி தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே 1 கி. மீ. தூரத்தில் இக்கோயில் இருக்கின்றது. இது கொங்குநாட்டுத் தலங்களுள் ஒன்றாகும். திருச்சிராப்பள்ளி - கரூர் - கொடுமுடி என்ற பேருந்து வழியில் பேருந்தின் மூலம் இத்தலத்தை அடையலாம்.

இறைவர் திருப்பெயர் கொடுமுடிநாதர். இறைவி திருப்பெயர் பண்மொழிநாயகி.

தலவிருட்சம் வன்னி.

தீர்த்தம் காவிரி.

மூவர்களாலும் பாடப்பெற்ற பெருமை வாய்ந்தது. இத்தலத்திற்கு மூன்று பதிகங்கள் இருக்கின்றன, இத்தலத்துச் சுந்தர மூர்த்தி நாயனாரது திருப்பதிகம் நெஞ்சை உருக்கும் தன்மை வாய்ந்தது.

கோயமுத்தூர் வித்துவான், கந்தசாமி முதலியாராலும், வேங்கடரமண தாசர் என்பவராலும் இயற்றப்பெற்ற தலபுராணம் அச்சில் வெளிவந்துள்ளது.

கல்வெட்டு:

இவ்வூர்க்கோயிலில் எட்டுக் கல்வெட்டுக்கள் முன்னமே படி எடுக்கப்பட்டிருந்தன. அவைகளின் சாரம் பின்வருமாறு:

திருப்பாண்டிக் கொடுமுடியுடையாருக்கும், பெரிய திருவடி நாயனாருக்கும் மாசி மகத்து விழா, வழிபாடு, கோயில் திருப்பணி முதலியவற்றிற்காக விதரி என்ற திருச்சிற்றம்பல நல்லூர், எழுநூற்றுவர் சதுர்வேதி மங்கலம், திருவூஞ்சலூர், வள்ளிபுரம், வடிவுடைய மங்கை

Koviloor Digital Library

ஐயகரம், திருக்காட்டுத்துறை என்ற ஊர்கள் இறையிலியாகக் கொடுக்கப்பட்டன. காலம் முதலிய விவரங்கள் தெரியவில்லை.

அம்மன் கோயில் அர்த்தமண்டபத்தில் உள்ள கல்வெட்டின் படி கோனேரின்மை கொண்டான் மூன்றாம் ஆண்டில் பாண்டி மண்டலத்து மயிலூர் உடையான் என்னும் போதமுதியான் என்பவன் பாண்டிக் கொடுமுடி ஆளுடையார் கோயிலில் இளைய பிள்ளையாரையும், பள்ளிகொண்ட பெருமாள் கோயிலில் கருடாழ்வாரையும் எழுந்தருளுவித்து அரசன் நன்மையின்பொருட்டு இருகூறாக ஐந்து பொன் தந்தான்.

அம்மன் கருவறைச்சுவரில் உள்ளதன்படி விதரி என்ற திருச்சிற்றம்பல நல்லூரில் இருபதுமா நிலத்தை இறையிலியாக மேல்கரை அறையூர்நாட்டார்க்கு விட்ட நான்குமா போக மற்றவைகள் திருப்பாண்டிக் கொடுமுடியுடையார்க்கும், விதரி திருச்சிற்றம் பலமுடையாருக்கும் கொடுக்கப்பட்டன.

வீர நாராயணன் ரவிவர்மன் இருபத்தேழாம் ஆண்டில் திருக்கொடுமுடி மகாதேவர்க்கு வழிபாட்டிற்காகவும், மாசி மகத்திற் காகவும் மேல்கரை, அறையூர்நாட்டு ஊஞ்சலூரை இறையிலியாகக் கொடுத்துள்ளான்.

சுந்தரபாண்டிய தேவர் இரண்டாவது ஆண்டில் பூந்துறை நாட்டார்கள் திருப்பாண்டிக் கொடுமுடி நாயனாருக்கு வேம்புரியான கண்டியதேவ நல்லூரைத் தேவதானமாகக் கொடுத்துள்ளார்கள்[1].

52. திருப்பாலைத்துறை

தஞ்சை மாவட்டத்தில், பாபநாசம் தொடர்வண்டி நிலையத் துக்கு வடகிழக்கே 1.5 கி. மீ. தொலைவில் உளது. கும்பகோணம் - பாபநாசம் பேருந்து வழித்தடத்தில் இக்கோயில் உளது.

இறைவர் பெயர்: பாலைவனநாதர். இறைவி பெயர்: தவள வெண்ணகையாள். இத்திருப்பெயரை, அப்பர் பெருமான் இவ்வூர்க்

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year ending 1902, No. 115-135.

See also the South Indian Inscriptions, Vol. VII, No. 739-759.

Koviloor Digital Library

குறுந்தொகைப் பதிகத்தில் ''தவள வெண்ணகை மங்கையோர் பங்கினர்'' என்று எடுத்தாண்டிருப்பது மகிழ்தற்குரியதாகும்.

தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய புலியின் தோலைச் சிவபெருமான் உரித்து அதை அணிந்துகொண்ட தலம். பதிகம் ஒன்று.

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில் முதற்குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன் இவர்களின் காலங்களிற் செதுக்கப்பட்ட கல் வெட்டுக்கள் இருக்கின்றன. [1]இக்கல்வெட்டுக்களில் இறைவர் திருப் பாலைத்துறை மகாதேவர் என்னும் பெயரால் குறிக்கப் பெற்றுள்ளனர்.

இக்கோயிலின் கிழக்குத் தாழ்வாரத்தில் நீலகங்கரையனால் எழுந்தருளுவிக்கப்பெற்ற திருஞானசம்பந்த ஈஸ்வரமுடையார்க்குத் திருச்சிற்றம்பல நல்லூரிலும் இராஜகம்பீர நல்லூரிலும் மூன்றாம் இராஜராஜ சோழனின் 28ஆம் ஆட்சி ஆண்டில் நிலம் அளிக்கப் பெற்றிருந்தது.

இக்கோயிலில் உள்ள இரண்டாம் இராஜராஜசோழன் கல்வெட்டு, முதற் குலோத்துங்க சோழனின் 45ஆவது ஆண்டில் நில அளவு செய்யப் பெற்றதைக் குறிப்பிடுகின்றது. நாள் வழிபாட்டிற்கும் திருநந்தவனத்துக்கும் நில நிவந்தங்கள் அளிக்கப்பெற்றிருந்தன.

இத்திருப்பாலைத்துறை நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டிற்கு உட்பட்ட ஊராய்த் திகழ்ந்தது.

53. திருப்புகலூர்

சோழவள நாட்டில் காவிரித்தென்கரையில் அமைந்துள்ள 75 ஆவது தலம். நாகை மாவட்டத்தில் நன்னிலம் கோட்டத்தைச் சேர்ந்தது. நன்னிலம், சன்னாநல்லூர், நாகையிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. மயிலாடுதுறை - திருவாரூர் இருப்புப் பாதையில் நன்னிலம் தொடர் வண்டி நிலையத்துக்குக் கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1912 No. 433-442

Koviloor Digital Library

புன்னாகவனம், சரண்யபுரம், ரத்தனாரண்யம் என்பன புராணங்களில் வழங்கும் மறுபெயர்கள். இத்தலத்தின் திருக்கோயில் நாற்புறமும் அகழிசூழ நடுவில் இருக்கிறது. அக்னி பகவான் பூசித்துப் பேறுபெற்ற தலம். திருநாவுக்கரசர் முத்தி பெற்ற தலம். முருக நாய னாருடைய அவதார ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் செங் கல்லைப் பொன்னாக்கிய திருத்தலம். மேகங்கள் பூசித்த தலம்.

பெயர்கள்:

இறைவன் பெயர் அக்னிபுரீஸ்வரர்; இறைவி கருந்தாழ் குழலியம்மை. இறைவன் திருநாமம் தேவாரங்களில் 'கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே' 'கருந்தாழ் குழலியும் தாமும் கலந்து' என்பன அம்மையப்பர், திருநாமங்களை அறிவிக்கும் அகச்சான்றுகள்.

தீர்த்தம்:

அக்னிதீர்த்தம். இதற்குப் பாணதீர்த்தம் என்றும் ஒரு பெய ருண்டு. முடிகொண்டான்ஆறு, கோயிலுக்குத் தென்பக்கத்தில் ஓடு கிறது.

தல விருட்சம்:

புன்னை. 'புன்னைப் பொழிற்புகலூர்', 'புன்நாகம் மணங் கமழும் பூம்புகலூர்' என்ற திருமுறைகள் இதற்கு மேற்கோள்.

விழா:

சித்திரைச் சதயத்தைப் பத்தாம் நாளாகக்கொண்டு விழா நடைபெறுகிறது. பத்துநாளிலும் அப்பர் சுவாமிகள் வரலாற்றை ஒட்டிய ஐதீகமே நினைவூட்டப்பெறுகின்றது. வைகாசி மாதம் பருவ இறுதியாகப் பிரமோற்சவம் நடைபெறுகிறது. சந்திரசேகரர் விசேஷ மான மூர்த்தி.

வேளாக்குறிச்சி ஆதீனத்தின் அருளாட்சியில் உள்ளது. வர்த்த மானீச்சரம் இக்கோயிலுக்குள் உள்ளது.

கல்வெட்டு:

அரசாங்கத்தினர் படி எடுத்த கல்வெட்டுக்கள் 67. அவை

Koviloor Digital Library

இராஜராஜன் I (கி.பி.985-1014) காலத்திலிருந்து காணப்படுகின்றன. இரண்டாம் பிராகாரம் இராஜராஜன் I இராஜஇராஜேந்திரன் I இவர்கள் காலத்திற்குப் பிந்தியதாகும்.

இக்கோயில் அர்த்தமண்டபத்தைக் கட்டியவன் இறையூர் உடையான் அரையன் கங்கைகொண்டானான சோழ விச்சாதரப் பல்லவரையன். முதல் பிராகாரத்துத் தென்னந் திருவாயிலுக்கு இராஜராஜன் திருவாசல் என்று பெயர்.

கர்ப்பக் கிருகத்தைச் சுற்றியுள்ள நீராழிப்பத்தி மண்டபத்தைத் திருப்பணி செய்தவன் ஆர்க்காடு கிழான் சேதுராயன் என்பவன். இத் தலத்து 'நரலோக வீரன் திருமண்டபம்' என்ற ஒன்று இருந்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. சிதம்பரம் கோயில் கல்வெட்டில் நரலோகன் என்று கூறப்பட்டவன் கோப்பெருஞ்சிங்கன். அக்காலத்து நூற்றுக்கால் மண்டபம் அவனால் கட்டப்பெற்றது.

அதுபோல இத்தலத்தும் நூற்றுக்கால் மண்டபத்தை அவன் கட்டியிருக்கக்கூடும். திருமதில் திருப்பணி வேளாக்குறிச்சி மகாதேவ பண்டாரத்தின் சிஷ்யரான அருணாசலத் தம்பிரானால் செய்யப் பெற்றது. மூன்றாங் குலோத்துங்கன் காலத்திலும் இக்கோயில் அகழால் சூழப்பட்டிருந்தமை அறியலாம்.

இவ்வூர், முதல் இராஜராஜன் காலத்தில் க்ஷத்திரியசிகாமணி வளநாடு என்றும், மும்முடிச்சோழ வளநாடு என்றும் முதற்குலோத் துங்கன் காலத்திலும் அதற்குப்பின்பும், குலோத்துங்க சோழவள நாட்டைச் சார்ந்ததெனவும் கூறப்பெறுகிறது. இது பனையூர்நாட்டுப் பிரமதேயமான திருப்புகலூர் என வழங்கப்பெறுகிறது. இறைவன் கோணப்பெருமான் என்று குறிப்பிடப்பெறுகிறார். இங்குள்ள அம்பிகை நம்பிராட்டியார் என வழங்கப்பெறுகிறார்.

இராஜராஜன் காலத்தில் அம்மைக்கு நிவந்தங்கள் அளிக்கப் பெற்றன. திருநாவுக்கரசு நாயனார் குளிச்செழுந்த நாயனார் எனக் குறிக்கப்பெறுகிறார். இவருக்கு இராஜராஜன் காலத்தில் நித்திய பூசைக்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது.

முருகநாயனார் திருமடம் நம்பிநாயனார் திருமடம் என்றும், திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தருமபுரத்து நாயனார், யாழ்மூரி நாயனார் என்றும், திருநீலநக்க நாயனாரை நக்கநாயனார் என்றும் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

Koviloor Digital Library

54. திருப்புள்ளிருக்குவேளூர்

சம்பாதி, சடாயு, என்ற கழுகரசர் இருவர்களும், வேதங் களும், முருகக்கடவுளும்,சூரியனும் பூசித்துப் பேறுகளைப் பெற்ற தலமாதலால் இப்பெயர் பெற்றது. இது வைத்தீசுவரன்கோயில் என்று வழங்கப் பெறுகின்றது.

இது மயிலாடுதுறை - சிதம்பரம் தொடர்வண்டிப் பாதையில், வைத்தீசுவரன் கோயில் தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 1கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. மயிலாடுதுறையிலிருந்து சீகாழி செல்லும் பேருந்துகளில் வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் இத் தலத்தை அடையலாம். இது காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று.

இறைவரின் திருப்பெயர் வைத்தியநாதர். இறைவியாரின் திருப்பெயர் தையல்நாயகி. முருகன் - செல்வமுத்துக் குமாரர்.

தீர்த்தம் சித்தாமிர்தத் தீர்த்தம். இது திருக்கோயிலின் உள்ளே இருக்கின்றது. இது மிகப்பெருமை வாய்ந்தது. இதில் நீராடியவர்நோய் நீங்கப்பெறுவர்.

சூரியன், செவ்வாய், இராமலக்குமணர், அநுமார் முதலானோர் வழிபட்டுப் பேறு எய்தினர். இங்கு எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள் முத்துக்குமாரசுவாமி என்னும் திருப்பெயருடன் விளங்கி, அன்பர்களுக்கு வேண்டும் வரங்களை அளித்து வருகிறார். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று. நாவுக்கரசர் பதிகம் இரண்டு ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

வடுகநாத தேசிகர் எழுதிய தலபுராணமும், குமரகுருபரர் அருளிய *முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழும்* அச்சில் வெளி வந்துள்ளன. இவைகளன்றி *மூவர் அம்மானை* முதலான பல நூல்களில் இத்தலத்துச் சிவபெருமானைப்பற்றிய புகழ்ப் பாக்கள் இருக்கின்றன.

சடாயு, சம்பாதி இவர்கள் வழிபட்ட செய்தி.

''தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே''
-தி.2 ப.43 பா.1

Koviloor Digital Library

என்னும் ஞானசம்பந்தரின் தேவாரப்பகுதியால் அறியக்கிடக்கின்றது.

சம்பாதி, புள்ளிருக்கு வேளூர் இறைவனை வழிபடற்குக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நாளும் பூக்கொண்டுவந்த செய்தி,

''யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளுமொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே''
-தி.2 ப.43 பா.3

என்னும் அவரது தேவாரப்பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது. இச்சம்பாதி வனம் மணிமேகலையுள்ளும் கூறப்பட்டுள்ளது.

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனோடு பொருது, சடாயு உயிரிழந்த செய்தி,

''மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே''
-தி.2 ப.43 பா.2

என்னும் அவரது தேவாரப் பகுதியிலும் சொல்லப்பட்டு உள்ளது. ''மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்'' என்னும் அப்பர்பெருமானின் தேவாரப் பகுதி, இறைவன் வைத்திய நாதர் என்னும் பெயர் பூண்ட காரணத்தைப் புலப்படுத்துவதாகும், இங்ஙனம், இவ்வூர்த் தேவாரப்பகுதிகளில் பல சரித்திர சம்பந்தமான உயர்ந்த செய்திகள் காணப்படுகின்றன.

இக்கோயில், திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமை ஆதீன அருளாட்சிக்குட்பட்டது. இதுபொழுது இருபத்தாறாம் பட்டத்தில், தருமை ஆதீனத்தில் அருளாட்சி நடத்தி வரும் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஒவ்வொரு வாரத்தில் செவ்வாய்க் கிழமையிலும், ஒவ்வொரு மாதத்தில் கிருத்திகை நாளிலும் வைத்தீசுவரன் கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு செய்தருளுகின்றார்கள். இக்காலங் களிலன்றி, நிர்வாகத்துறையில் திடீரென்று எழுந்தருளி நித்திய நைமித்திகங்கள் உரிய காலங்களில் நன்கு நடைபெறுகின்றனவா எனவும் கவனித்தருளுகின்றார்கள்.

Koviloor Digital Library

கல்வெட்டு:

சகம் 1814 (கி.பி.1892) நகரத்தாரால் திருப்பணியும் குடமுழுக்கும் செய்யப்பட்டன. சகம் 1689 (கி.பி. 1767) ராஜாமகாராசர் காலத்தில் முத்துக்குமாரசாமித் தம்பிரானால் திருப்பணி செய்யப்பட்டது. சகம் 1682 (கி.பி.1770) துளஜாமகாராசர் காலத்தில் கருங்கல் திருப்பணி செய்யப்பட்டது. சகம் 1802 (கி.பி. 1880) கொடிக்கம்பம் தங்கமயம் ஆக்கப்பட்டது.

55. திருப்பூந்துருத்தி

இத் தலம் தஞ்சை மாவட்டத்தில் திருக்கண்டியூருக்கு மேற்கே 3. கி.மீ.தொலைவிலுள்ளது. சோழ மன்னன் துருத்தியை வைத்துப் பூசிக்கச் செய்ததனால் திருப்பூந்துருத்தி என்று பெயர் வந்ததென்று கூறுவர். ஆற்றிடைக் குறையில் உள்ள பகுதியைத் துருத்தி என வழங்குவது உண்டு. இது திருவையாறு சப்தஸ்தானத் தலங்களில் ஒன்று.

இறைவர்: புஷ்பவனநாதர்.

இறைவி: அழகார்ந்தநாயகி; சுந்தரநாயகி.

இங்குத் திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனை வழிபடுவான் வேண்டி இவ்வாலய நந்திகள் விலகியனவாகக் கூறுவர். இத் தலம் தேவேந்திரன், காசிப முனிவர், சோழன் முதலானோர் பூசித்த பெருமையுடையதாகும்.

இது திருநாவுக்கரசு பெருந்தகையார் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்துக்கொண்டு எழுந்தருளியிருந்து பல்வகைத் தாண்டகங்களையும் திருவங்கமாலையுள்ளிட்ட பல பதிகங்களையும் அருளிய பெருந் தலமாகும்.

இத் தலத்தில் இவ்வாறு அப்பர் பெருமான் இருந்தபோது பாண்டிநாட்டிற்குச் சென்று வல்லமணரை வாதில் வென்று தென்னவன் கூன் நிமிர்த்தருளித் திருநீற்றின் ஒளி பரப்பித் திரும்பி வந்து திருப்பூந்துருத்தியை அடைந்தார். அதுபோது அவருடைய முத்துச் சிவிகையினை ஒருவரும் அறியாது தாங்குவாருடன் தாங்கிவந்து சம்பந்தர், 'எங்குற்றார் அப்ப'ரெனக் கேட்டபோது, 'அடியேன்

Koviloor Digital Library

உம்மடிகள் தாங்கி வரும் பேறு பெற்றிங்குற்றேன்' என்று அப்பர் பெருமான் கூறியதும் ஞானசம்பந்தர் சிவிகையினின்றும் இறங்கி இருவரும் வணங்கி அளவளாவிச் சில காலம் தங்கியிருந்த திருத் தலமாகும். இதற்குத் திருப்பதிகங்கள் மூன்று உள்ளன.

56. திருப்பூவனூர்

தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலம் தொடர்வண்டி நிலையத் துக்குத் தெற்கே 3 கி. மீ. தொலைவில் உள்ளது.

இறைவர்: புஷ்பவனநாதர்.

இறைவி: கற்பக வல்லி.

தலத்துக்குரிய மரம்: பலா.

சுகமுனி முதலானோர் புஷ்ப வனம் வைத்துப் பூசித்து முத்திபெற்ற தலம்.

அப்பர் அருளிய பதிகம் ஒன்று மட்டும் உளது.

57. திருப்பேரெயில்

தஞ்சைமாவட்டத்தில் திருநாட்டியத்தான்குடி தொடர்வண்டி நிலையத்துக்குத் தென்மேற்கே சுமார் 5 கி. மீ. தொலைவில் இருக்கிறது.

வங்காரம் பேரையூர் என்றும், ஓகைப்பேரையூர் என்றும் இக்காலம் வழங்கப் பெற்று வருகிறது.

இறைவர்: ஜகதீஸ்வரர்.

இறைவி: பெண்ணமிர்த நாயகி.

தீர்த்தம்: அக்கினி தீர்த்தம். இது திருக்கோயிலுக்கு எதிரில் இருக்கிறது.

அப்பர் அருளிய பதிகம் ஒன்று மட்டும் உளது.

Koviloor Digital Library

58. திருப்பைஞ்ஞீலி

பசுமையான வாழையைத் தலமரமாக உடைமையால் இப்பெயர் பெற்றது. விழுப்புரம் - திருச்சிராப்பள்ளி இருப்புப் பாதையில், பிட்சாண்டார் கோயில் தொடர் வண்டி நிலையத்தில் இறங்கி இவ்வூர்க்குச் செல்லவேண்டும்.

இறைவரின் திருப்பெயர் - நீலகண்டர். இறைவியின் திருப்பெயர் - விசாலாட்சி (அ) நீள்நெடுங்கண்ணி.

அப்பர் பெருமான் நீர்வேட்கையோடும், பசியோடும் இத்தலத்திற்கு வந்து அணைந்திட, இறைவன் திருநீற்று அந்தணராய், பொதிசோறும் தண்ணீரும் கொடுத்த தலம், இத்தலத்திற்கு அப்பர் பதிகம் ஒன்றும், சுந்தரர் திருப்பதிகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் இருக்கின்றன. இத்தலத்திற்கு மதுரை மெய்ப்பாத புராணிகர், *தலபுராணம்* இயற்றியுள்ளனர்.

கல்வெட்டு:

இவ்வூர்க் கோயிலில் ''திருமன்னிவளர இருநில மடந்தையும்'' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய முதலாம் இராஜேந்திர சோழதேவன், 'திங்களேர்தருதன் தொங்கல்' மெய்க் கீர்த்தியையுடைய முதலாம் இராஜாதி ராஜன், ''சீர்மன்னி இரு நான்கு திசையும்''எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய கோப்பர கேசரிவர்மனான திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜதேவர், திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான், இவர்கள் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இறைவர் திருப்பைஞ்ஞீலி மகாதேவர், திருப்பைஞ்ஞீலி உடையார், திருப்பைஞ்ஞீலி உடைய நாயனார் என்னும் பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர்.

முதலாம் இராஜேந்திர சோழன் கல்வெட்டு இவ்வூரை, இராஜேந்திர சிங்கவளநாட்டுத் தனியூர், திருவெள்ளறை திருப் பைஞ்ஞீலி எனவும், முதலாம் இராஜாதிராஜன் கல்வெட்டு இராஜாதிராஜ வளநாட்டு வடவழி நாட்டுத் திருப்பைஞ்ஞீலி எனவும், திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவரின் கல்வெட்டு இராஜராஜ வளநாட்டு வடவழி நாட்டுத் திருப்பைஞ்ஞீலி எனவும் கூறுகின்றன. இக்கோயிலுக்குக் கொடுக்கப்பெற்ற நிவந்தங்கள், இவ்வூர் மேலைச்

Koviloor Digital Library

சேரியில் இருந்த சபையாராகிய 'மூலவருடையர்' இடத்தில் கொடுக்கப் பெற்றுவந்தன. அவர்கள் தங்கள் ஊரில் இருந்த மணியம் பலத்தில், கூட்டம் குறைவறக் கூடியிருந்தும், சிலகாலங்களில் தங்கள் ஊரில் மலைமேல் கொல்லத்து இளங்கோனார் மண்டபத்தே கூடியிருந்தும், அவைகளைப் பெற்று அறங்களை நடத்தி வந்தனர்.

இராஜராஜ வளநாட்டுப்பாச்சில் உடையார் திருமேற்றளி உடைய நாயனாரது திருக்கோயிலின் அர்த்தமண்டபம், திருமண்டபம் இவைகள் சீரணித்து இருந்தன, இவைகளைத் தட்டோடு திருப்பணி செய்தற்கும், திருமலையில் திருமஞ்சனம் பண்ணவேண்டுகைக்குமாக இவ்வூர் ஆதிசண்டேசுவர தேவகன்மிகள் இவ்வூர்ச் சிவ பெருமானுக்கு உரிய வெங்காந்தம் நிலம் நானூற்று ஒருபத்தைந்தே முக்காலே மாகாணி அரைக்கீழ் எட்டுமா நிலத்தைத் திருப்பைஞ்ஞீலி உடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளுக்கு பதினா யிரம் நற்காசுக்குக் குடிக்காணியாக விற்றுக் கொடுத்த செய்தியை, விசாலாட்சி அம்மன் கோயிலிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜ ராஜ தேவரின் கல்வெட்டு உணர்த்துகிறது. எனவே திருப்பைஞ்ஞீலி மேற்றளி உடையார் கோயிலின் அர்த்த மண்டபம் திருமண்டபம் இவைகளின் திருப்பணி இந்தத் திரிபுவனச்சக்கரவர்த்தி இராஜராஜ தேவர்காலத்தில் மீளவும் கட்டத் தொடங்கி இருக்கவேண்டும், அல்லது கட்டி முடிவு பெற்றிருக்க வேண்டும் என்று கொள்ளலாம்[1].

திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டார், திருப் பைஞ்ஞீலி உடையார் கோயில் திருநிலை எழுகோபுரத் திருப் பணிக்கும், பல திருப்பணிக்கும் உடலாக வள்ளுவப்பாடி நாட்டில் ஆதனூரில் நான்கு எல்லைக்கு உட்பட்ட நன்செய், புன்செய் நிலங்களைக் கொடுத்துள்ளார், அக்கோபுரத் திருப்பணி முற்றுப் பெறாமல் இருக்கின்றமையால், இக்கோபுரம் இம்மன்னன் காலத்தில் கட்டத் தொடங்கப்பெற்றது என்பது உறுதி.

புகழேந்திப் புலவரை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியின் நாடு:

புகழேந்திப் புலவரை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியின் நாடு மள்ளுவநாடு என்பதும், அவனது நகரம் முரணை என்பதும், *நளவெண்பா*, கலிநீங்கு காண்டம் 50ஆம் பாடலாலும், சுயம்வர

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1892 No. 90-92.

See also the South Indian Inscriptions, Volume IV N0. 537-541.

Koviloor Digital Library

காண்டம் 17ஆம் செய்யுளாலும் முறையே அறியலாம், இந்நள வெண்பாவிற்கு உரை எழுதிய கோமளபுரம் மகாவித்துவான் இராசகோபாலப் பிள்ளையவர்கள், சுயம்வர காண்டம் 17ஆம் பாடலின் உரையில் (1923இல் சென்னை, ரிப்பன் அச்சியந்திர சாலையில் பதிப்பித்த *நளவெண்பா* சுயம்வரகாண்டம், பக்கம் 28) ''உறையூரைச் சார்ந்த மள்ளுவ நாட்டிலுள்ள முரணை நகரத்தரச னாகிய சந்திரன் சுவர்க்கி என்பவன் ஆசிரியரை ஆதரித்தும், இந்நூலைச் செய்வித்ததுமாகிய நன்றியைப் பற்றி மாவிந்தநகரம் முரணை நகரெனக் கூறினர்'' என முதற்கண் மள்ளுவநாடு இருக்கும் இடத்தைத் தெரிவித்த பெருமை அவர்க்கே உரியதாகும். அம்மள்ளுவ நாடு, முற்காலத்தில் வள்ளுவப்பாடி நாடு என்னும் பெயருடன் திகழ்ந்து அதுவே மள்ளுவநாடு எனத் திரிந்திருக்க வேண்டும்.

'வண்டார் வளவயல்சூழ் வள்ளுவநாட் டெங்கோமான்' எனத் தொடர் இருப்பதே சிறந்ததாகும். இங்ஙனம், இப்பைஞ்ஞீலியில் உள்ள கோனேரின்மை கொண்டான் கல்வெட்டு இதைத் தெரிவிப்பது மகிழ்தற்குரியதாகும்.

59. திருமங்கலக்குடி

இது மயிலாடுதுறை கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், ஆடுதுறைத் தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே சுமார் 4.5 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஆடுதுறையிலிருந்து - திருப்பனந்தாள் செல்லும் பேருந்துகளில் இவ்வூரை அடையலாம். காவிரி வடகரைத் தலங்களுள் ஒன்று.

இறைவரது திருப்பெயர் புராணேசுவரர். இத்திருப்பெயர், இவ்வூர்ப் பதிகம் முதல் திருப்பாட்டில்,

''நீரின் மாமுனி வன்னெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித்தாட்டி யர்ச்சிக்க விருந்த புராணனே'' -தி.2 ப.10 பா.1

என ஞானசம்பந்தரால் எடுத்தாளப்பட்டுள்ளது. இதிலுள்ள வரலாறு குறிப்புரையில் உணர்த்தப்பட்டது.

இறைவியாரது திருப்பெயர் மங்களநாயகி.

தீர்த்தம் காவிரி.

Koviloor Digital Library

காளி, சூரியன், திருமால், பிரமன், அகத்தியர் இவர்களால் அர்ச்சிக்கப்பெற்றது. இச்செய்தி,

''மங்க லக்குடி யீசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வன் விண்ணொடு மண்ணுநேர்
சங்கு சக்கர தாரி சதுமுகன்
அங்க கத்திய னும்மர்ச்சித் தாரன்றே'' -தி.5 ப.73 பா.3

என்னும் இவ்வூர்க்கு உரிய அப்பர் பெருமானின் குறுந்தொகைப் பாடலால் தெரிகின்றது. இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று அப்பர் பதிகம் ஒன்று ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன.

கல்வெட்டு:

இக்கோயிலில் 6 கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பட்டுள்ளன. அவையாவன சோழர் 1, பல்லவர் 1, விஜய நகரத்தரசன் 1, மற்றையவற்றிற்குப் பெயரில்லை.

சோழர்களில் இராஜராஜன் 24ஆம் ஆண்டுக் கல்வெட்டில் முந்திய ஆண்டில் பஞ்சம் ஏற்பட்டதால் கோயில் சொத்தைச் சூறை யாடிய சிலரை நீதிபதிகள் பரிகாரங் கேட்டதை அறிகிறோம்.

பல்லவன் கோப்பெருஞ்சிங்கன் 25ஆம் ஆண்டில் இக் கோயிலுக்கு, பெருங்கலம் தொண்டைமான் நிலம் வாங்கித் தருமம் செய்தான். கிருஷ்ணதேவராயர் 1439 சகம் ஆண்டில் கோயில்களுக்கு வரி தள்ளுபடி செய்தார். சுங்கந்தவிர்த்த குலோத்துங்கன் தனது 16ஆம் ஆண்டில் கோயிலுக்குச் சில வரிகள் விதித்து அவைகளை அளித்தான்.

இத்திருக்கோயிலில் சோழர்களுள் திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜதேவர், திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான், இவர்கள் காலங்களிலும், பிற்காலப் பல்லவர்களில் சகல புவனச் சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் காலத்திலும், விஜய நகர அரசர்களில் வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மகாராயர் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இவற்றுள் இராஜராஜதேவரின் கல்வெட்டு, அவ்வரசனின் 23ஆம் ஆட்சியாண்டில் பஞ்சம் ஏற்பட்டதையும், கோனேரின்மை கொண்டானின் கல்வெட்டு முதற் குலோத்துங்க சோழனின் 16ஆம் ஆட்சியாண்டில் வருவாய்க் கணிப்புக்காக நிலங்கள் அளக்கப்

Koviloor Digital Library

பெற்றதையும் கோப்பெருஞ் சிங்கதேவர் கல்வெட்டு, இத்திருக்கோயில் முதற்பிராகாரத்தில் நாயகர் திருமண்டபத்தில் புராணலிங்க தேவரை எழுந்தருளுவித்து நிவந்தம் அளித்தவன், பாண்டி குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பெருமங்கலத்து உதயஞ் சடையனான தொண்டைமான் என்பதையும் குறிப்பிடுகின்றன. தட்சிணாமூர்த்தி, கோயிலில் நின்ற கோலத்தில் கைகுவித்துக் கடவுளை வணங்கும் முறையில் இருக்கும் உருவம் முல்லைக்குடையான் தியாகப் பெருமாளாகிய வானவன் பல்லவரையன் உருவமே. இரண்டாம் கோபுரத்தில் இருக்கும் உருவம் வரகுணப் பெருமாள் உருவம் ஆகும். இவ்வூர் விருதராச பயங்கர வளநாட்டு வேம்பற்றூராகிய எதிரிலி சோழசதுர்வேதிமங்கலத்து மங்கலக்குடி எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

60. திருமணஞ்சேரி

மயிலாடுதுறை கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், குத்தாலம் தொடர் வண்டி நிலையத்திற்கு வடகிழக்கே சுமார் 5.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மயிலாடுதுறையிலிருந்து இத்தலத்துக்கு நகரப் பேருந்துகள் உள்ளன. இது காவிரியின் வடகரைத்தலங்களுள் ஒன்று.

இறைவர் பெயர் அருள்வள்ளல்நாதர். இறைவி பெயர் யாழினும் மென்மொழியம்மை.

மன்மதன் பூசித்துப் பேறுபெற்றான். ஆமை பூசித்து மனித உருப்பெற்றது. இதற்கு ஞானசம்பந்தர் அருளிய பதிகம் ஒன்று. அப்பர் அருளிய பதிகம் ஒன்று ஆக இரு பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இவ்வூரில் 28 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டிருக்கின்றன. அனைத்தும் சோழர்களுடைய கல்வெட்டுக்களே. (கி.பி.11-12ஆம் நூற்றாண்டு) நாடு - விருதராசபயங்கரநாடு, குறுக்கை நாடு, ஊர் திருமணஞ்சேரி, சுவாமிபெயர் திருக்கற்றளிமாதேவர் பரமசுவாமி என்பன. மற்ற ஊர்கள் கங்கைகொண்ட சோழ சதுர்வேதி மங்கலம், விடேல் விடுகுதேவிமங்கலம், கரிகாலசோழ சதுர்வேதி மங்கலம், திருஎதிர்கொள்பாடி என்பன.

விளக்குக்காகப் பணதானம் 1000, சில யோகிகள் தவசிகள்

Koviloor Digital Library

ஆண்டுக்கொருமுறை பங்குனி மாதத்தில் உணவுக்காக நிலதானம், கோயிலுக்கு நிலதானம் (4-5-1045) சபையார் நிலதானம், (7-2-1123) திருமந்திர ஓலை சொற்படி நிலதானம், விளக்குக்காக 96 ஆடு தானம், கோயிலுக்குப் பொன்கிரீடம், உடைய பிராட்டியார் சொற்படி சந்தனம், துணி, எண்ணெய், திருவிளக்குக்காக 16 கழஞ்சு பொன் தானம், கோயிலில் தினப்படி பூசைக்குத் திட்டம், விளக்குக்கும் அதன் பீடத்திற்கும், எண்ணெய்க்குமாக 96 ஆடு தானம், விளக்குப் பீடம் இவைகளுக்கு 45 காசு தானம், முழவு, விளக்கு, மணி, மூர்த்தி இவைகள் தானம், கல்தானம், இரவு விளக்குத் தானம், குகைகட்டப் பணமும் நிலமும் தானம் முதலியன.

இங்கிருந்த திருமாலைக் கரிகால்சோழ விண்ணகராழ்வான் என்பர். கோயில் பெயர் மணவாளப்பெருமாள். அதன் அதிகாரியின் பெயர் கந்தாடை நம்பி திருமணஞ்சேரி பிச்சன் என்பான் திருப்பணி செய்தான். கல்வெட்ட ஒரு கல்லும் கொடுக்கப்பட்டது. கோயிலில் குடமுழா வாசிப்பவர் பெயர் கூறப்பட்டுள்ளது.

உடைய பிராட்டி செம்பியன் மாதேவியார் கோயில் செலவு திட்டங்களை ஏற்படுத்தினார். நல்லமநாயக்கர் கோபுரம் கட்டினார். ஒரு கல்வெட்டில் அக்கினி புராண சுலோகங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆதித்ததேவன் நாச்சியம்மன் கோயில் கட்டுவதற்கும் ஆலாலசுந்தரம் குகை கட்டுவதற்கும் பணமும் நிலமும் கொடுத்தார்.

61. திருமயிலாடுதுறை

மயூரம் (மயில்) சம்பந்தம் உடையது ஆதலின் இது மாயூரம் என்று வழங்கப்பட்டு, பின் மயிலாடுதுறை என்ற பழம் பெயரையே மீண்டும் பெற்றுள்ளது. இறைவி மயில் வடிவங்கொண்டு இறைவரை வழிபட்டுப் பேறுபெற்ற தலமாதலால் மயிலாடுதுறை என்னும் பெயர் பெற்றது. மயிலாடுதுறை இருப்புப்பாதைச் சந்திப்பிலிருந்து 3. கி.மீ. தூரத்திலிருக்கிறது. இது காவிரித் தென்கரைத் தலம்.

இறைவரின் திருப்பெயர் மாயூரநாதர். இறைவியின் திருப்பெயர் 1. அபயாம்பிகை. 2. அஞ்சொலாள். இப்பெயரை ''அஞ்சொலாள் உமைபங்கன் அருளிலே'' என அப்பர்பெருமான் இவ்வூர்ப் பதிகத்தில் எடுத்து ஆளுகின்றார். தலப்பிள்ளையார் முக்குறுணிப்பிள்ளையார். தீர்த்தம் காவிரி. காவிரியில் இருக்கும் தீர்த்தத்துறைக்கு இடப தீர்த்தம் என்று பெயர். ஐப்பசிமாதம்

Koviloor Digital Library

அமாவாசைநாளில் தட்சிணாமூர்த்தி இத் தீர்த்தத்துறைக்கு எழுந்தருளிக் கங்கையைக் காவிரியில் கலக்குமாறு அருள்புரிகின்றார், ஐப்பசிமாதத்தில் காவிரியில் உள்ள இத்துறையில் நீராடுவது மிக விசேடம் என்பர். இம்மாதத்தில் இங்கு நீராடுவதை, துலாஸ்நாநம் என்பர். ஐப்பசி மாதம் முப்பதாம் நாள் மாயூரநாதருடன் ஐயாறப்பர், விசுவநாதர், வதான்யேசுரர் தீர்த்தம் கொடுக்கும் கடைமுக விழா சிறப்புற நிகழ்கிறது.இக்கோயில் பெரிய பிராகாரத்தினுள் வடபால் பழைய கோயில் என்று கூறப்பெறும் பிரமபுரீசுவரர் கோயில் இருக்கிறது. மயிலாடுதுறைக்கு, சம்பந்தர் பதிகம் இரண்டு, அப்பர் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன. இத்தலத்தைப் பற்றி,

''மதிநுதல் இமயச்செல்வி மஞ்ஞையாய் வழிபட்டேத்து
மிதுதுலாப் பொன்னித் தானம்.''

எனப் பரஞ்சோதியார் *திருவிளையாடற் புராணம்* அர்ச்சனைப் படல அடிகளால் அறிவிப்பர். இத்தலத்திற்குத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை *தலபுராணம்* எழுதியுள்ளார். அது அச்சில் வெளிவந்துள்ளது.

இக்கோயில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ளது. இக்கோயிலின் உள் பிராகாரத்தின் மேல்பால் எழுந்தருளியிருக்கும் குமரகோட்டம் (முருகப்பெருமான் கோயில்) தருமை ஆதீன அருளாட்சியில் உள்ளது.

கல்வெட்டு:

இவ்வூர்க் கோயிலில் திரிபுவனச்சக்கரவர்த்தி இராஜராஜ தேவரின் பதினான்காம் ஆண்டிலும், இருபத்தாறாம் ஆண்டிலும் செதுக்கப்பெற்ற இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றுள் இறைவர் திருமயிலாடுதுறை உடையார் என்னும் பெயரால் குறிக்கப் பெற்றுள்ளனர். இராஜராஜதேவரின் பதினான்காம் ஆண்டுக் கல் வெட்டு, திருப்பள்ளியறைநாச்சியார்க்கு நில நிவந்தம் அளித்ததைக் குறிப்பிடுகின்றது.

62. திருமருகல்

இது மருகல் என்னும் ஒருவகை வாழையைத் தலமரமாகக்

Koviloor Digital Library

கொண்டுள்ளமையால் இப்பெயர் பெற்றது.

மயிலாடுதுறை - பேரளம் தொடர்வண்டிப் பாதையில், நன்னிலம் தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 10.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருவாரூரிலிருந்து திருமருகல் செல்ல நகரப் பேருந்துகள் உள்ளன.

இறைவரின் திருப்பெயர் மாணிக்கவண்ணர். இறைவியாரின் திருப்பெயர் வண்டுவார்குழலி.

தலவிருட்சம் வாழை.

திருமருகலுக்கு அருகிலுள்ள வைப்பூர் என்னும் ஊரில் தாமன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஏழு பெண்கள் . ஆனால் மூத்த மகளை அவ்வணிகன் தன் மருமகனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தான். பணம்பெற்று வேறு ஒருவனுக்குக் கொடுத்து விட்டான். இங்ஙனமே ஏனைய ஆறு பெண்களையும் மணஞ்செய்து கொடுத்துவிட்டான். ஏழாவது பெண் உளம் தளர்ந்து தாய் தந்தையருக்குத் தெரியாமல் மருமகனோடு உடன் வந்து விட்டாள். வந்தவர்கள் மருகல் பெருமான் கோயிலின் பக்கத்தில் ஒரு மடத்தில் தூங்கினார்கள்.

அதுபொழுது அம்மருமகன் அரவு தீண்டப்பெற்று ஆவி நீங்கும் தன்மையைக் கண்ட அப்பெண் அயர்ந்து சிவனருளையே சிந்தித்துப் புலம்பினாள். அப்புலம்பலைக் கேட்டு அங்கு முன்னரே எழுந்தருளியிருந்த ஞானசம்பந்தப் பெருந்தகையார் செய்தியை அறிந்து ''சடையா யெனுமால்'' என்று தொடங்கும் பதிகம் பாடி அம் மருமகனை உயிர்ப்பித்து அவ்விருவர்க்கும் மணத்தை முடித்து வைத்தருளினார்.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, திருநாவுக்கரசு நாயனார் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் உள்ளன. இப்பதிக்குரிய ஞானசம்பந்தர் பதிகங்கள் இரண்டனுள் ''அங்கமும் வேதமும்'' என்று தொடங்கும் பதிகம் திருமருகலையும் திருச்செங்காட்டங்குடியையும் சேர்த்துப் பாடியதாகும்.

கல்வெட்டு:

இக்கோயிலின் கீழைக்கோபுரம் 5 நிலைகளும் 20 மீ. உயரமும்

Koviloor Digital Library

உள்ளது. இக்கோயில் 75 மீ. X 55 மீ. அளவுள்ள அறையினைக் கொண்டது. முன்னிலையில் 55 மீ. X 48 மீ. அளவுள்ள தெப்பக்குளம் ஒன்றுள்ளது. இக்கோயிலின் கீழைக்கோபுரத்தில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. அது புதியது. சகம் 1617 தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தில் வினைதீர்த்த முதலியார் சபையில் அபிஷேகக் கட்டளையும், அகோர சிவபண்டார சுவாமிக்கு இரண்டு வகையில் 400 பொன் வழங்கியதாகக் கண்டிருக்கிறது.

63. திருமறைக்காடு

மறைகள் பூசித்த காரணம்பற்றி இப்பெயர்பெற்றது. இச் செய்தி ''சதுரம் மறைதான் துதி செய்து வணங்கு மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டுறைமைந்தா'' என்னும் திருஞானசம்பந்தரது இத்தலத் தேவாரப்பகுதியால் (பண் - இந்தளம். திருப்பாட்டு 1) விளங்கு கின்றது.

திருத்துறைப்பூண்டி, வேதாரணியம் தொடர்வண்டிப் பாதை யில் வேதாரணியம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே 3/4 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருத்துறைப்பூண்டி, நாகை ஆகிய ஊர் களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

இறைவரின் திருப்பெயர் மறைக்காட்டுமணாளர். இத் திருப் பெயர், இவ்வூர்க்குரிய அப்பர் பெருமானின் ''மறைக் காட்டுறையும் மணாளன் றானே'' என்னும் திருத்தாண்டகத்தால் அறியக் கிடக்கிறது. வேதாரண்யேசுவரர் என்னும் பெயரும் உண்டு. இறைவியாரின் திருப்பெயர் யாழைப்பழித்தமொழியம்மை. இத்திருப்பெயரைச் சுந்தரமூர்த்திநாயனார், இவ்வூர்ப் பதிகத்தில் முதலாம் திருப்பாட்டில் ''யாழைப்பழித்தன்ன மொழிமங்கை யொரு பங்கன்'' என எடுத்தாண்டுள்ளார்.

தீர்த்தம்: வேததீர்த்தம், கடல்துறை, மணிகர்ணிகை, தேவபூடணம் என்பன.

தலவிருட்சம் வன்னி.

பார்வதிதேவியாரின் திருமணத்தின் பொருட்டுத் தேவரும் பிறரும் கூடிய கூட்டத்தின் காரணமாக வடதிசை உயர்ந்து, தென்திசை தாழ்ந்தது. அதைச் சமன்செய்யச் சிவபெருமான் அகத்தியரைத் தென்

Koviloor Digital Library

திசைக்கு அனுப்பினார். பெருமானது மணக் கோலத்தைக்காண முடியாது போவது பற்றிஅகத்தியர் வருந்தினார். அப்பொழுது சிவபெருமான் மணக்கோலத்தைத் திருமறைக்காட்டில் காட்டியருள் வதாகத் திருவாய் மலர்ந்து அதன்படி அக்கோலத்தைக் காட்டி யருளினார். மணவாளக்கோலம் மூலத்தானத்தில் சிவலிங்கப் பெருமானுக்குப் பின்பக்கத்தில் இருக்கின்றது. இராமர் இராவணனைக் கொன்ற பழி நீங்கப் பூசித்த தலமாதல் பற்றி இது கோடிக்கரை என்றும் பேசப்படும். இங்குள்ள மணிகர்ணிகைத் தீர்த்தத்தில் மூழ்கி, கங்கை புனிதமாயினாள். இங்கு உள்ள தேவபூடணத்தீர்த்தத்தில் மூழ்கி, காவிரி பரிசுத்தத்தன்மை எய்தினள். பிரமதேவர் பூசித்துப் பேறு பெற்றனர்.வேதங்களால் பூசிக்கப்பெற்றுத் திருக்காப்பிடப்பட்டிருந்த திருக்கதவை, திருஞானசம்பந்தர் கட்டளைப்படி திருநாவுக்கரசர் ''பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ'' என்று தொடங்கிப் பத்துப்பாடல்களைப் பாடிக் கதவைத் திறப்பித்தார்.ஞானசம்பந்தர் தேவாரம் பாடி அதை அடைப்பித்தார்.

முசுகுந்தச்சக்கரவர்த்தி தியாகேசப்பெருமானை எழுந்தருளு வித்த ஏழுவிடங்கத் தலங்களுள் ஒன்று. தியாகர்புவனவிடங்கர். நடனம் ஹம்ச நடனம்.

சுந்தரமூர்த்தி நாயனாருடன், சேரமான் பெருமாள் நாயனாரும் இங்கே வழிபட்டனர். இதற்குத் திருஞான சம்பந்தர் பதிகம் நான்கு, திருநாவுக்கரசர் பதிகம் ஐந்து, சுந்தரர் பதிகம் ஒன்று ஆகப் பத்துப் பதிகங்கள் இருக்கின்றன.

இத்திருக்கோயிலில் எரியும் விளக்கில் இருந்த நெய்யை உண்ணுதற்கு வந்த எலி, அணையும் நிலையில் இருந்த திரியைத் தூண்டி, அதன் விளைவாய் மறு பிறப்பில் மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. இச்செய்தியை அப்பர் சுவாமிகள் திருக்குறுக்கைத் திருநேரிசையில் எட்டாம் திருப்பாட்டில் (தி.4 ப.49 பா.8),

''நிறைமறைக் காடு தன்னி னீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவானுலகமெல்லாங்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கை வீரட்டனாரே''

என அருளியுள்ளார்கள்.

தலபுராணம், இவ்வூரில் தோன்றியருளியவரும் *திருவிளை*

Koviloor Digital Library

யாடற் புராணம் எழுதியவருமாகிய பரஞ்சோதி முனிவரால் எழுதப் பெற்றது. அச்சில் வெளிவந்துள்ளது.

மறைசையந்தாதி: இது யாழ்ப்பாணம் சின்னத்தம்பிப் புலவரால் எழுதப்பெற்றது. புலவர் பெருமக்கள் பெரிதும் பாராட்டும் நூல்கள் இவை.

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில்[1] சோழமன்னர்களில் மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மன், முதலாம் இராஜராஜ மன்னன், மூன்றாங் குலோத்துங்கசோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜேந்திர சோழ தேவன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜதேவன், இவர்களின் காலங்களிலும், விஜயநகர அரசர்களில் வீரப்பிரதாப மகாராயர், தேவராய மகாராயர் இவர்கள் காலங்களிலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவ்வூர் (மறைக்காடு) உம்பள நாட்டுக் குன்றூர் நாட்டைச் சேர்ந்தது என்று கல்வெட்டுக்கள் உணர்த்து கின்றன. இராஜகேசரி வர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கசோழன் கல்வெட்டு, திருப்பதியம் பாடுவதற்கு நிவந்தம் அளிக்கப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கின்றது. இராஜேந்திரசோழன் கல்வெட்டு, விக்கிரமன் சந்தியையும் ஏனைய கல்வெட்டுக்கள், விளக்கினுக்கு, ஆடு, ஈழக்காசு இவைகள் கொடுக்கப்பட்டதையும் புலப்படுத்துகின்றன. மராத்திமொழியில் உள்ள கல்வெட்டு பிரதாபசிங் மகாராசர், துளஜாமகாராசர் என்போரைப்பற்றிக் கூறுகின்றன.

64. திருமாற்பேறு

தொண்டை நாட்டுத்தலம். காஞ்சிபுரம் - அரக்கோணம் இருப்புப்பாதையில் தொடர்வண்டி நிலையம். காஞ்சிபுரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. இதுவே எளிதானது.

இத்தலம் ஹரிசக்ரபுரம் எனவும் வழங்கும். திருமால் ததீசி முனிவருடன் போர்செய்ய அவர் சக்கரம் வாய்மடிந்து போயிற்று. சலந்தரனைக் கொன்ற சக்கரம் சங்கரனிடத்திருப்பதையறிந்த திருமால்

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1924, No. 415-503

Koviloor Digital Library

இத்தலத்திற்குவந்து இறைவனை ஆயிரந்தாமரைகொண்டு அர்ச்சிக்க, இறைவன் ஒரு நாள் ஒரு மலரை மறைத்துவிட்டார். திருமால் அதற்குப்பதிலாகத் தம் கண்ணையிடந்து அர்ச்சிக்க, சுதரிசனம் என்னும் சக்கரத்தை ஈந்தார். கண் இடந்து அர்ச்சித்தமைக்காகப் பதுமாக்ஷன் என்னும் பெயரையும் கொடுத்தார். சோமனும் பூசித்துப் பேறுபெற்ற தலம். இச்செய்தி 'மன்னி மாலொடு சோமன் பணிசெயும் மன்னுமாற் பேற்றடிகளை' என்னும் தேவாரத்தானும், 'பெருமாற்றின் படைவேண்டி நற்பூம்புனல் வருமாற்றின் மலர் கொண்டு வழிபடும் கருமாற்கின்னருள் செய்தவன்' என்னும் திருக்குறுந்தொகை யானும் அறியப்படும். இறைவன்பெயர் மால்வணங்கீசர், மணிகண்டேசர். இறைவி கருணைநாயகி, அஞ்சனாக்ஷியம்மை, தீர்த்தம் பாலாறு.

கல்வெட்டு:

ஜயங்கொண்ட சோழமண்டலத்திலுள்ள காமக்கோட்டத்தின் பகுதியான வல்ல நாட்டிலுள்ள திருமாற்பேறு [1] என்று இராஜகேசரி வர்மன் திரிபுவனச்சக்ரவர்த்தி குலோத்துங்க சோழன்காலத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் பெயர் கல்வெட்டுக்களில் திருமாற் பேறுடையார், ஆளுடையார், உத்தம சோழீசுவரமுடையார், அவி மூக்தீசுவரமுடையார் என்று வழங்கப்படுகின்றன. இத்தலத்தில் அக்கினீசுவரர் கோயில் ஒன்று தனியே இருந்திருக்கவேண்டும். இக்கோயிலுக்குக் கண்டராதித்தனால் ஐம்பெருங்குழு ஏற்படுத்தி நிலங்களைக் கவனிக்கவும், படையலுக்கு நெல்கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன [2]. இங்குள்ள விஷ்ணு கோயிலிலுள்ள இறைவன் பெயர் கோவிந்தபதியில் நின்றருளிய பெருமானடிகள் என்பது [3]. இது தண்டகநாட்டின் மாவட்டமான தர்மக்கோட்டத்தின் பிரிவான வல்ல நாட்டில் கோவிந்தபதியிலுள்ள கோயிலிலுள்ள நின்றருளிய பெருமான் ஆகும் [4]. மாற்பேறுடையார் கோயிலைக் கட்டவும், சுற்று மண்டபத்தை முற்றுப்பெறச் செய்யவும் விராட அரசன் அனையமான் என்கிற மண்டலாதித்யனால் தானம் கொடுக்கப்பட்டது [5]. உத்தம சோழீசுவரமுடையார் உருவம் தயார்செய்ய சேதிராயன் என்பவனால் நிலம் தானம் செய்யப்பட்டது [6], உமாபத்தராகியார் (அதிசுந்தர தேவதேவியார்) உருவம் தயார்செய்ய சோழன் இராஜகேசரிவர்மனால் நிலம் தானம்செய்யப்பட்டது [7]. மணவாளப்பெருமாள் உருவம் செய்யவும், ஆபரணம் தயார்செய்யவும் பரகேசரிவர்மன் இராஜேந்திர

[1] 271 of 1906, [2] 283 of 1906, [3] 303 of 1906, [4] 314 of 1906, [5] 267 of 1906, [6] 277 of 1906, [7] 284 of 1906,

Koviloor Digital Library

சோழன் ஆட்சியில் ஆவனசெய்ததைத் தெரிவிக்கின்றது [1]. கோயிலில் அனையமான் பரமண்டலாதித்தன் ஒரு மண்டபம் கட்டியுள்ளான் [2]. நம்மாழ்வார் திருவாய்மொழியின் வரிகள் கருப்பக்கிருகத்தின் மேற்குச் சுவரில் காணப்படுகின்றன [3]. மணவில் கோட்டத்தின் பகுதியான மேல்பழுங்கூர்நாட்டில் சிறியரூரில் கோவிந்தபதி ஆழ்வார் கோயில் ஒன்று உள்ளது [4]. தோழனார் தந்தையால் கோவிந்தபதி ஆழ்வார்மீது ஒரு திருப்பதியம் பாடப்பட்டுள்ளது [5].

சோழன் இராஜகேசரிவர்மன் காலத்தில் வைஷ்ணவர்களில் 18 நாடு குறிக்கப்படுகின்றது. மேலும் வண்டல்படிந்த நிலங்களைப் பற்றியும் பாலாற்றில் வெள்ளம் வந்ததைப்பற்றியும், இதற்குச் செப்பனிட 1000 கூலிகள் நியமிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் 12 கோல் நிலம் கொடுக்கப்பட்டது பற்றியும் அறிவிக்கப்பெறுகின்றன [6]. மற்றைய கல்வெட்டுக்கள் விளக்கிற்கு, பிராமண உணவிற்கு, அபிடேகத்திற்குப் பொன், நிலம், பசுக்கள், குடங்கள் முதலியன கொடுக்கப் பட்டதைத் தெரிவிக்கின்றன.

65. திருமீயச்சூர்

இது மயிலாடுதுறை பேரளம் தொடர்வண்டிப் பாதையில், பேரளம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே 2.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. மயிலாடுதுறையிலிருந்து பேரளம் செல்லப் பல பேருந்துகள் உள்ளன. இது காவிரித் தென்கரையிலுள்ள ஐம்பத்து மூன்றாவது தலம்.

இறைவர் திருப்பெயர் முயற்சிநாதர். இறைவி திருப்பெயர் சுந்தரநாயகி.

தலவிருட்சம் வில்வம்

தீர்த்தம் சூரியபுட்கரணி.

சூரியன் வழிபட்டுப் பேறு எய்திய தலம்.

இதற்கு ஞான சம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது.

[1] 321 of 1906, [2] 323 of 1906, [3] 326 of 1906, [4] 326 of 1906,
[5] 333 of 1906. [6] 322 of 1906

Koviloor Digital Library

இத் திருமீயச்சூர் கோயில் மூலவிமானம் கஜப்பிரஷ்ட விமானமாகும்.

இக் கோயிலிலே மீயச்சூர் இளங்கோயில் என்னும் வேறு கோயில் ஒன்று வடக்குப் பிரகாரத்தில் இருக்கிறது. இங்குள்ள இறைவர் சகல புவனேச்சுவரர். இறைவியார் மின்னுமேகலாம்பாள். இது காளியால் பூசிக்கப்பட்டது. இதற்குத் திருநாவுக்கரசர் பாடிய பதிகம் ஒன்று இருக்கிறது.

கல்வெட்டு:

இக் கோயிலில் ஏழு கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. பரகேசரி, இராசகேசரி, சோழர்களில் நான்கும், பாண்டியர்களில் மூன்றும் ஆக ஏழு ஆகும், அவை கோயிலுக்கு நிலதானம் விளக்குகளுக்கு நிலதானம் இவைகளைக் குறித்தவைகளாக இருக்கின்றன. பதின்மூன்றாம் ஆண்டுத் தொடக்கத்திலேயே பாண்டியராட்சி இங்கே வந்துவிட்டது. இடைக்காலச் சோழர்களின் கல் வெட்டுக்கள் தெரியவில்லை.

66. திருவலஞ்சுழி

இது கும்பகோணம் - தஞ்சாவூர் இருப்புப்பாதையில், சுவாமி மலை தொடர் வண்டி நிலையத்திற்கு வடக்கே 1 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.

காவிரித் தென்கரைத் தலங்களுள் 25 ஆவது ஆகும். பிள்ளையார் - வெள்ளைப்பிள்ளையார்.

இறைவரின் திருப்பெயர் - கபர்த்தீசர். இறைவியின் திருப் பெயர் - வண்டுவாழ்குழல் மங்கை. இப்பெயர் ஞானசம்பந்தரால் இவ்வூர்ப் பதிகத்தில் ''வண்டுவாழ்குழல் மங்கைபங்கனை'' என ஆளப்பெற்றுள்ளது.

தீர்த்தம் - காவிரி.

ஆதிசேடன் சிவராத்திரிநாளில் ஒரு பிலத்தின் வழியாய் வந்து வலஞ்சுழி இறைவனை வணங்கினான், காவிரி இங்குப் பிலத்தின் வழியாக உள்ளே இறங்கிவிட்டது. அதுகண்ட சோழமன்னன் பெரிதும் வருந்தினான். இறைவர் ஒருசடைத்தலையாயினும் முடித்தலை

Koviloor Digital Library

யாயினும் பலியிட்டால் காவிரி வெளிப்படுமென்று அசரீரியாகக் கூறினார். அது பொழுது கொட்டையூரில் தவஞ்செய்து கொண்டிருந்த ஏரண்ட முனிவர் அப்பிலத்தில் இறங்கிக் காவிரியை வெளிக் கொணர்ந்தார். காவிரியும் வலம்சுழித்து மேலே கிளம்பிய காரணத் தால் வலஞ்சுழி என்னும் பெயர் எய்திற்று.

தேவர்கள் பாற்கடலைக் கடைந்த காலத்தில் அமுதம் திரளும்படி வழிபட்ட வெள்ளைப்பிள்ளையாரை இந்திரன் இங்குக் கொண்டுவந்து எழுந்தருளுவித்துள்ளான். இப்பிள்ளையார் வீற்றிருக்கும் மண்டபம் மிக்க வேலைப்பாடு உடையது. இப்பிள்ளை யாருக்குத்தான் இங்கு பிரமோற்சவம் நடைபெறுகின்றது.

ஏரண்ட முனிவரின் பிரதிமை இக்கோயிலில் இருக்கிறது. இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் மூன்றும், அப்பர் பெருமான் பதிகம் இரண்டும் ஆக ஐந்து பதிகங்கள் இருக்கின்றன. இறைவனை வழிபடப் பூர்வ புண்ணியம் வேண்டும் என்னும் பொருளுள்ள ''என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே'' எனத் தொடங்கும் பாசுரம் சைவ நன்மக்களால் அடிக்கடி எடுத்து ஓதப்பெறும் பாடல்களில் தலை சிறந்து விளங்கும் ஒன்றாகும்.

கல்வெட்டு:

இவ்வூர்க் கோயிலில், சோழமன்னர்களில் மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மன், முதலாம் இராஜராஜ சோழன், இரண்டாம் இராஜேந்திர சோழன், முதற்குலோத்துங்க சோழன், விக்கிரமசோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவன், மூன்றாங் குலோத்துங்க சோழன் இவர்கள் காலங்களிலும்; பல்லவ மன்னர்களில், சகலபுவன சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்க தேவன் காலத்திலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இறைவர், இறைவியாரின் பெயர்கள்:

இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் திருவலஞ்சுழி உடையார், திருவலஞ்சுழி மகாதேவர், திருவலஞ்சுழி ஆழ்வார் என்னும் பெயர்களாலும், இறைவியார் வண்டுவாழ் குழலி நாச்சியார் என்னும் பெயர்களாலும் குறிக்கப்பெற்றுள்ளனர்.

திருப்பணிகள்:

இக்கோயிலின் மகாமண்டபத்திற்குத் தீராவினை தீர்த்தான்

Koviloor Digital Library

திருமண்டபம் என்று பெயர். அதைக் கட்டியவன் ஆராவமுது தித்தன் பெருமாள் ஆவன். அவன் அம்மண்டபத்தை வீரமாராசன் ஐயன் வெற்றிக்காகக் கட்டினான். இச்செய்தி இம்மண்டபத்தின் வடபாலுள்ள தூண் ஒன்றில் செதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பிராகாரத்துக் கிழக்குச்சுவர் மகாப்பிரதான திப்பரசர் மகனார் தேவராய உடையாரால் கட்டப்பெற்றது. மூன்றாம் பிராகாரத்துச் சுவர் நெருப்புப்பற்றிக்கொண்டதின் விளைவாக கீழே விழுந்துவிட்டது. அது ஆர்க்காட்டுத் தலைவனும், செல்வப்பிள்ளை என்பவனும் ஆகிய சேதிராயனால் மீளவும் கட்டப்பட்டது. இத்திருக்கோயிலில் திருப்பரிகலமண்டபத்தைக் கட்டுவித்தவன் ஆதமங்கலமுடையான் ஒற்றியூரன் பூபாலன் கருணாகரன் ஆவன். இது நிகழ்ந்த காலம் முதற் குலோத்துங்கசோழனின் நாற்பத்திமூன்றாம் ஆண்டாகும்.

இத்திருவலஞ்சுழி உடையார் கோயில் கீழைச்சோபான பீடத்து இருக்கும் மண்டபம் உற்சவமண்டபமாகும். இது கட்டத் தொடங்கப் பெற்ற காலம் வீரராஜேந்திரசோழதேவரின் எட்டாம் ஆண்டாகும்.

க்ஷேத்திரபாலரின் திருக்கோயில்:

க்ஷேத்திரபாலர் என்பவர் வயிரவர் ஆவர். அவர் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயில் வெளிப்பிராகாரத்தில் இராஜகோபுரத் திலிருந்து இரண்டாம் கோபுர வாசலுக்குப் போகும் வழியில் தெற்குப் பக்கத்தில் இடிந்தநிலையில் கல்வெட்டுக்களுடன் கூடிய ஒரு சிறு கோயிலாக இருக்கிறது. இக்கோயில் முற்றிலும் இடிந்துவிடுவதற்கு முன் இதில் முளைத்துள்ள மரங்களைக் களைந்து கோயிலைப் புதுப்பிப்பது சைவநன்மக்களின் தனிப்பெருங்கடமையாகும். இக் கோயிலைக் கட்டியவர் முதலாம் இராஜராஜசோழரின் முதற்பெருந் தேவியார் தந்திசத்திவிடங்கியாரான 'ஸ்ரீ ஒலோகமாதேவியார்' ஆவர். இவ்வம்மையார் இக்கோயிலைக் கட்டியது முதலாம் இராஜராஜசோழனின் ஆட்சி யாண்டு இருபத்தைந்து. அதாவது இற்றைக்கு 946 ஆண்டுகளுக்கு முன்னதாகும். இச்செய்தி ''இராஜ ராஜதேவர் மகாதேவியார் தந்திசத்திவிடங்கியாரான ஸ்ரீ ஒலோக மாதேவியார் உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர்நாட்டுத் திருக்குடமூக்கில்பால் திருவலஞ்சுழியில் நாம் எடுப்பித்த திருக்கற்றளிப்பிள்ளையார் க்ஷேத்திரபாலதேவர்க்கு''[1] என்னும்

[1] South Indian Inscriptions, Volume VIII Number 234.

Koviloor Digital Library

கல்வெட்டுப் பகுதியால் விளங்கும்.

எழுந்தருளுவித்த பிரதிமைகள்:

''பூமருவிய திருமாதும் புவிமாதும் நாமருவிய கலைமாதும் புகழ்மாதும்'' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய கோப்பர கேசரிபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் இராஜராஜ தேவரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் திருவலஞ்சுழி உடையார் திருமடை வளாகத்தில் இருந்த தேவரடியார் ஆட்கொண்டாள் தேவும் திருவும் உடையாளும், கீழ்க்கடைநின்றாளும் ஆகிய இருவரும் இக்கோயிலில் திருநாவுக்கரையதேவர், திருவாதவூராளி, திருக்கண்ணப்பதேவர் இவர்களை எழுந்தருளுவித்து இவர்களின் வழிபாட்டிற்கு நில நிவந்தம் செய்துள்ளனர்.

சிறப்பு நாள்கள்:

இக்கோயிலில் திருவாதிரைநாளுக்கும் தைப்பூசத் திரு நாளுக்கும் வேண்டும் செலவினங்களுக்கு இரண்டாம் இராஜேந்திர சோழன் நிலம் அளித்திருந்தான். அந்நிவந்தத்தை அம்மன்னன் கங்கைகொண்டசோழன் திருமாளிகையில் திருமஞ்சன சாலையில் பள்ளிப்பீடம் காலிங்கராசனில் எழுந்தருளியிருந்து விட்டதாக அவனுடைய கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

பள்ளியறைநாச்சியாரைப் பற்றிய குறிப்பு:

பள்ளியறையில் எழுந்தருளியிருக்கும் இறைவியார் திருப் பள்ளியறை பெரியநாச்சியார் என்னும் பெயரால் குறிக்கப் பெற்றுள்ளனர். இவர் திருமுன்பு எரிவதற்கு ஐந்துநிலைத் தராகுத்து விளக்குக்கள் இரண்டினை, திரிபுவனச்சக்கரவர்த்தி இராஜாதிராஜ தேவர் காலத்தில் ஜயங்கொண்டசோழமண்டலத்து ஆமூர்க் கோட்டத்துச் சிறுகுன்றைநாட்டுக் காரிகைக் குளத்துளான் பெருமான் நம்பி ஆளுடையானான செயதரப்பல்லவரையன் கொடுத்துள்ளான்.

திருவலஞ்சுழியுடையார் தேவதானங்கள்:

கோப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு பன்னிரண்டாவதில் இன்னம்பர்நாட்டுத் தத்தங்குடி; ஒதியநத்தங்குடிப்பால்,அழகத்துவப் பேறு இவ்விடங்களில் மூவேலியும், இராஜராஜதேவரின் இருபத் தொராம் ஆண்டில் இன்னம்பர்நாட்டு நாவற் குடிப்பால் நங்கையார்

Koviloor Digital Library

நிலம் மூவேலி ஆக ஆறு வேலி நிலங்கள் தேவதானமாக விடப் பட்டிருந்தன.

வெள்ளைப் பிள்ளையார்:

திருவலஞ்சுழியின் சனத்தொகை குறைந்துகொண்டேவந்தது. ஆகையால் ஊரின் நலங்கருதி வெள்ளைப் பிள்ளையார்க்கு திரிபுவனச்சக்கரவர்த்தி இராஜராஜதேவரின் பதினான்காம் ஆண்டில் நிலம் விடப்பட்டது. மற்றும் இப்பிள்ளையார்க்கு அளிக்கப்பெற்ற நிவந்தம் பலவாகும்.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்ட நாடு:

''உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர்நாட்டுத் திருக்குட மூக்கின்பால் திருவலஞ்சுழி'' எனக் குறிக்கப்பெற்றிருப்பதால் இவ்வூர் உய்யக்கொண்டார்வளநாட்டுப் பாம்பூர்நாட்டுக்கு உட்பட்டிருந்தது என்பதை அறியலாம்.

பிற செய்திகள்:

முதலாம் இராஜராஜசோழன் 'சிவபாதசேகரன்' என்னும் பட்டம் பெற்றிருந்ததை இக்கோயிலிலுள்ள அவனுடைய இருபத் தொராம் ஆண்டுக் கல்வெட்டு உணர்த்துகிறது. முதலாம் இராஜராஜ தேவர் திருமகளார் விமலாதித்ததேவர் மகாதேவியார் ஸ்ரீ குந்தவை நங்கையார், நடுவில் பெண்பிள்ளைநங்கையார் மாதேவடிகளார் இவர்கள் இருவர்களின் பெயர்களும் இவ்வூர்க் கல்வெட்டில் காணக்கிடக்கின்றன. [1]

67. திருவன்னியூர்

அன்னூர் என்று இக்காலம் வழங்கப் பெறும் இத்தலம், தஞ்சை மாவட்டத்தில் திருவீழிமிழலைக்கு வடமேற்கே மூன்று கி. மீ. தொலைவில் உள்ளது.

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the years 1902, 1928 Numbers 618 - 634, 192 - 213.

See also the South Indian Inscriptions, Volume VIII Numbers 215 - 238.

Koviloor Digital Library

இறைவர் பெயர்: அக்கினீச்சுவரர்.
இறைவி பெயர்: பார்வதியார்.

தீர்த்தம்: அக்கினி தீர்த்தம்.

அக்கினி பூசித்த தலம்.

அப்பர் அருளிய பதிகம் ஒன்று மட்டும் உளது.

68. திருவாஞ்சியம்

இலக்குமியை வாஞ்சித்து (விரும்பி)த் திருமால் பூசித்த தலமாதலின் இப்பெயர் பெற்றது.

மயிலாடுதுறை - பேரளம் தொடர்வண்டிப் பாதையில், நன்னிலம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே 9 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. காவிரித்தென்கரைத் தலங்களுள் 70-ஆவது ஆகும். நன்னிலத்திலிருந்து பேருந்துகளில் செல்லலாம்.

இறைவர் திருப்பெயர் வாஞ்சியநாதர். இறைவியார் திருப் பெயர் வாழவந்தநாயகி.

தீர்த்தம் குப்த கங்கை. இது கோயிலுக்கு வடபால் இருக்கிறது. கார்த்திகை ஞாயிறு நாள்களில் மக்கள் விசேடமாக நீராடுகின்றனர்.

தலவிருட்சம் சந்தனமரம். இது பிராகாரத்தில் இருக்கின்றது.

இயமன் பூசித்துப் பேறுபெற்றான். இத்தலத்தில் இறப்பவர் களுக்கு இயமவாதனை இல்லை. இயமனுக்குத் தனிக் கோயிலும் இருக்கின்றது. இது முத்தியளிக்கும் தலங்களுள் ஒன்றாகும். இது மூவராலும் பாடப்பெற்றது. மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இக்கோயிலில் இருபத்தேழு கல்வெட்டுக்கள் படி எடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் ஏழு பிற்காலச் சோழர்களது. ஏழு பாண்டியர்களுடையனவும், ஒன்று நாயக்கரதுமாம். திருவாஞ்சியம் குலோத்துங்க சோழவளநாட்டில் பனையூர் நாட்டில் திருவாஞ்சியம் எனக் கூறப்பட்டது. இவ்வூருக்கு இராஜகம்பீர சதுர்வேதி மங்கலம்

Koviloor Digital Library

என்ற மறுபெயர் உண்டு. நிலவிற்பனை, நிலதானம் வரி தள்ளுபடி இவைகளைப் பற்றிக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இரண்டாம் இராஜராஜதேவன் கல்வெட்டு ஒன்று கோயிலில் சேர்ந்த நிலங்களின் வரிசையைக் கூறுகிறது. இவ்வரசன் காலத்தில் அம்மனுக்கு ஒரு கோயில் கட்டப்பட்டு, பிரதிஷ்டையும் செய்யப்பட்டது. அப்போது நிலமும் வீடும் தானம் செய்யப்பட்டன.

குலோத்துங்கன் காலத்தில் திருப்பள்ளியறை நாச்சியாருக்குக் கோமாங் குடியான் ஒருவன் நிலதானம் செய்தான். மங்களாம்பாள் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டின்படி, இராஜராஜதேவன் II காலத்தில் (கி.பி.18) திருவாஞ்சியமுடையார் கோயிலில் அம்மனுக்கு ஒரு கோயில்கட்டிப் பிரதிட்டை செய்யப்பட்டது. அப்போது நிலம் வீடுகள் தானம் செய்யப்பட்டன. ஒரு நிலத்தில் இருந்த கல்வெட்டின் படி, சிதம்பரத்துப் பிச்சை மடத்து அகோர சிவாசாரியார் சீடர் அச்சுற்ற மங்கலத்துப் பெருமாநாயனார் பண்டாரம் அம்மடத்திற்கு முண்டு வான்சேரியில் ஒரு வேலி நிலம் வாங்கியதாகக் கூறப் பெற்றுள்ளது.

69. திருவாட்போக்கி

இரத்தினகிரி என இக்காலம் வழங்கும் இவ்வூர், திருச்சி மாவட்டத்தில் குளித்தலை தொடர்வண்டி நிலையத்திலிருந்து 10 கி. மீ. தொலைவில் உள்ளது.

மாணிக்கம் வேண்டிவந்த வடநாட்டு வேந்தன் ஒருவனுக்கு இறைவன் நீர்த்தொட்டி ஒன்றைக் காட்டி அதைக் காவிரி நீரால் நிரப்பும்படிக் கட்டளையிட, வேந்தன் முயன்றும் முடியாதது கண்டு, இறைவன்மீது தன் வாளை ஓச்ச, இறைவர் அவ்வாளைப்போக்கி இரத்தினம் கொடுத்த காரணத்தால் வாட்போக்கி என்னும் பெயர் பெற்றதென்பர்.

இறைவர் பெயர்: இரத்தினகிரிநாதர். இறைவி பெயர்: சுரும்பார்குழலியம்மை.

தீர்த்தம்:- காவிரி.

அகத்தியர், இந்திரன் முதலியோர் பூசித்துப் பேறெய்திய தலம். இங்கு அகத்தியர் உச்சிக்கால வழிபாடு (மத்தியான தரிசனம்) பெற்றபடியால், இங்கே உச்சிக்கால வழிபாடு சிறந்தது என்பர். சுவாமிக்கு மத்தியான சுந்தரர் என்ற பெயரும் உண்டு. இத்தலத்தை

Koviloor Digital Library

வழிபட வந்தவர் இங்கு இந்திரனால் உண்டாக்கப்பட்ட வேப்பமரத்தையும், இறைவரையும் வழிபட்டுத் திரும்பும்பொழுது வயிரவீரப்பெருமாள் என்னும் வீரவாகுவையும் வணங்கவேண்டும் என்று ஆன்றோர் கூறுவர்.

அப்பர் அருளிய பதிகம் ஒன்று மட்டும் உண்டு.

கல்வெட்டு:

[1] இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் பரகேசரிவர்மரான உடையார் இராஜேந்திரதேவர் (கி.பி.1053-1063), முதற் குலோத்துங்க சோழதேவர், விக்கிரமசோழர், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாங்குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் இவர்கள் காலங்களிலும்; பாண்டியமன்னரில் எம்மண்டலமும் கொண்டருளிய ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் I காலத்திலும்; விஜயநகரவேந்தர்களில் அரியண்ண உடையார் மகனாகிய விருப்பண்ண உடையார் II வீரநரசிம்மபூபால மகாராயர், சதாசிவதேவ மகாராயர் காலங்களிலும்; ஹொய்சல அரசர்களில் வீரசோமேஸ்வரன், வீரராமநாதன் காலங்களிலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இக்கல்வெட்டுக்களில் இறைவர் மாணிக்கமலை மகாதேவர், மாணிக்கமலை உடைய நாயனார், திருமாணிக்கமலை உடைய தம்பிரானார் என்னும் பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர். இறைவியார் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் என்னும் பெயரால் அழைக்கப்பெறுகின்றனர்.

இவரை எழுந்தருளுவித்தவன் சிவபாதசேகரபுரத்து வணிகனாகிய திருஞானசம்பந்த நம்பி ஆவன்.

வடகொங்கில் இராஜராஜபுரத்தில் இருந்த புகலூர் தாமோதரனான பிள்ளைக்கடியார் இக்கோயிலில் உள்ள திருப்பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளுவித்துள்ளார்.

கோயிலில் தட்சிணாமூர்த்தி தேவரை எழுந்தருளுவித்து, சோபானங்களை (படிக்கட்டுகளை)க் கட்டியவர் சிவ பாதசேகரத்து

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1914 No. 144-191

Koviloor Digital Library

வணிகனாகிய சிற்றம்பருடையான் காளி நல்லிசை யாளன் ஆவர்.

இக்கோயில் ஆடவிடங்கப்பிச்சனால் கருங்கல்லால் கட்டப் பட்டுள்ளது என்பதை இக்கோயில் கல்வெட்டுப்பாடல் தெரிவிக் கின்றது.

இக்கோயில் மண்டபம் சிவபாதசேகரபுரத்து நகரத்தாரால் கட்டப்பட்டது.

சாத்தன் சேதிராயனின் அகம்படி முதலிகளில் ஒருவனாகிய கொங்கரைக்கொண்ட பல்லவரையன் இக்கோயில் மண்டபத்துக்குக் கதவுகளை இட்டதோடு வாசல்படிக் கட்டுகளையும் கட்டியுள்ளான். இவனே மலையின் அடிவாரத்தில் திருமடைவிளாகத்தையும் ஏற்படுத்தியுள்ளான்.

இக்கோயிலில் வைகாசித் திருநாளுக்கும், மார்கழித் திருவாதிரைச் சிறப்புக்கும், சிவராத்திரி நாட்செலவுக்கும் நிவந்தங்கள் அளிக்கப்பெற்றிருந்தன. இறைவர்க்குத் திருமஞ்சனத்தின் பொருட்டு காவிரியிலிருந்து நீர் கொண்டு வருவதற்கு நிவந்தம் அளிக்கப்பெற்றது. விழாக்காலங்களில் இறைவரை மண்டபத்துக்கு எழுந்தருளப் பண்ணுங்கால் அவர்க்குத் திருவமுதுக்குச் சிவபாதசேகரநல்லூரில் இருந்த நாலூர் உடையான் நிலநிவந்தம் அளித்திருந்தான். தட்சிணாமூர்த்தி தேவாலயத்துக்கு சிவபாத சேகரபுரத்து வணிகனால் திருவமுதுக்கு இரண்டுமா நிலம் விடப்பட்டிருந்தது.

முதற் குலோத்துங்க சோழனின் 40 ஆவது ஆட்சியாண்டில் சிவபாத சேகரபுரத்துத் தென்மேற்கு வாசலில் இருந்த எழுநூற்றுவன் திருமடத்தில் தேவரடியார், சிவயோகி, தபசி இவர்கள் உண்பதற்கு வட கொங்கில் உள்ள இராஜராஜபுரத்தில் இருந்த புகலூர் தாமோதரனான பிள்ளைக்கடியார் நிவந்தம் அளித்திருந்தனர். முதற்குலோத்துங்க சோழனின் 47ஆவது ஆண்டில் அபூர்விகளை அமுது செய்விப் பதற்கும் நிவந்தம் விடப்பட்டிருந்தது.

70. திருவாய்மூர்

இது திருக்குவளை என்று இக்காலம் வழங்குகின்றது. திருக் கோளிலிக்குத் தென்கிழக்கே 3 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் ஒன்றாகும். திருவாரூரிலிருந்து

Koviloor Digital Library

திருக்குவளை வழியாக வேதாரணியம் செல்லும் பேருந்துகளில் செல்லலாம்.

இறைவர் திருப்பெயர் வாய்மூர்நாதர். இறைவியார் திருப்பெயர் பாலினுநன்மொழியாள்.

தீர்த்தம் சூரியதீர்த்தம். இது கோயிலுக்கு எதிரில் இருக்கிறது.

தலவிருட்சம் பலா.

விடங்கர் எழுந்தருளியிருக்கும் தலங்கள் ஏழனுள் ஒன்று. இவர் நீலவிடங்கர், நடனம் கமலநடனம். சூரியன் பூசித்துப் பேறு பெற்றான்.

சைவப் பெருமக்களாகிய அப்பரும், சம்பந்தரும் திருமறைக் காட்டில் எழுந்தருளியிருந்தபொழுது வாய்மூர் இறைவர் அப்பர் கனவில் தோன்றி ''நாம் வாய்மூரில் இருப்போம் வா''என்றனர். உடனே அப்பர் விரைவில் எழுந்து இறைவரைத் தொடர்ந்து சென்றார். திருக்கோயிலுக்கு அருகில் சென்றதும் இறைவர் மறைந்துவிட்டனர்.

இதற்குள் ஞானசம்பந்தரும் அங்கு எழுந்தருள, அப்பர், ''கதவைத் திறக்கப்பாடிய என்னினும், செந்தமிழ் உறைப்புப் பாடி அதை அடைத்த ஞானசம்பந்தப் பெருந்தகையாரும் எழுந்தருளி யுள்ளார். அவர்க்குக் காட்சியை அளிக்கவாவது வெளிப்பட்டருள வேண்டும்'' என்றுபாட அவ்வாறே வாய்மூர் இறைவர் காட்சி தந்தருளினார்.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும் அப்பர் பதிகங்கள் இரண்டும், ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன. சுந்தரரும் ''வாய்மூர் மணாளனை'' என்கின்றார்.

71. திருவான்மியூர்

வான்மீகி முனிவர் வழிபட்டுப் பேறுபெற்ற தலமாதலால் வான்மியூர் என்னும் பெயர் எய்திற்று. வான்மீகி முனிவரின் செப்புப் பிரதிமை பிராகாரத்தில் இருக்கிறது. ஊருக்கு வடமேற்கே அவருக்குத் தனிக்கோயிலும் உண்டு. சென்னை மயிலாப்பூருக்குத் தெற்கே 5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இறைவரின் திருப்பெயர் 1. மருந்தீசர், 2. பால்வண்ணநாதர். இறைவியின் பெயர் சொக்கநாயகி. இலிங்கத்தின்

Koviloor Digital Library

திருமேனி வடபால் சற்று சாய்ந்திருப்பதோடு பால்நிறமாயும் இருக்கின்றது.

இதற்கு அப்பர் பதிகம் ஒன்றும் சம்பந்தர்பதிகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இவ்வூரில் திரிபுரசுந்தரி அம்மன் கோயிலில் முதலாம் இராஜராஜசோழன், முதலாம் இராஜேந்திரசோழன் முதலாம் இராஜாதிராஜதேவன் இவர்கள் காலங்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்கள், இவ்வூர், சயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க்கோட்டத்து, கோட்டூர் நாட்டுக்கு உட்பட்டு இருந்தமையையும் திருப்பள்ளித் தாமம் முதலியவைகளுக்கு நிவந்தங்கள் அளிக்கப் பெற்றமையையும் உணர்த்துகின்றன[1].

72. திருவிசயமங்கை

பாண்டுவின்மகன் பார்த்தன் (அர்ச்சுனன்) வழிபட்டுப் பேறுபெற்ற தலமாதலால் விசயமங்கை என்னும் பெயர் பெற்றது. இது ''பாண்டுவின் மகன் பார்த்தன் பணிசெய்து வேண்டு நல்வரங்கொள் விசயமங்கை'' என்னும் திருநாவுக்கரசரது திருக்குறுந்தொகை (பாசுரம் 8) ஆல் அறியக் கிடக்கின்றது. விசயமங்கை என்பது கோயிலின் பெயராகும். ஊரின் பெயர் கோவந்தபுத்தூர். ஒரு பசு இலிங்கத் திருமேனியின்மீது தன் மடியிலுள்ள பாலைச் சொரிந்து வழிபட்ட காரணத்தால் இப்பெயர் எய்திற்று. இது ''கோதனம் வழிபடக் குலவு நான்மறை வேதியர் தொழுதெழு விசயமங்கையே'' எனவரும் இத்தலத்துக்குரிய திருஞானசம்பந்தரது பதிகத்தின் இரண்டாம் பாசுர அடிகளால் விளங்கும்.

கோ வழிபட்ட ஐதீகத்தை உணர்த்தும் சுதைப்படிவம் இக்கோயில் மேற்குப்பிரகாரத்தில் வைத்துப் போற்றப்பட்டு வருகின்றது. இக்கோவந்தபுத்தூரை இப்பக்கத்துள்ள மக்கள் கோகறந்தபுத்தூர் என வழங்குகின்றனர். ஊரின் பெயர் கோவந்தபுத்தூர் என்பதையும், கோயிலின் பெயர் விசயமங்கை என்பதையும்,

[1] See the Annual Reports on South Indian Epigraphy for the year 1909. Numbers 77 - 83.

Koviloor Digital Library

''கொள்ளிடக்கரைக் கோவந்தபுத்தூரில்
வெள்ளிடைக் கருள் செய்விசயமங்கை,
உள்ளிடத்து உறைகின்ற உருத்திரன்
கிள்ளிடத் தலையற்றது அயனுக்கே'' -தி.5 ப.71 பா.3

என்னும் இப்பதிக்குரிய திருநாவுக்கரசரது பதிகப்பாடலால் அறியலாம்.

இறைவரின் திருப்பெயர் விசயநாதர். இறைவியின் பெயர் மங்கைநாயகி. தீர்த்தம் அர்ச்சுனதீர்த்தம். இது கோயிலுக்கு எதிரில் இருக்கின்றது.

இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் உள்ள திரு வைகா வூர்க்கு வடக்கே கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் இருக்கின்றது. சுவாமி மலைக்கு மேற்கிலுள்ள அண்டக்குடி என்னும் ஊரிலிருந்தும் இவ்வூரையடையலாம். இவ்வூர்க்கு அப்பர் பதிகம் ஒன்றும் சம்பந்தர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டுபதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு:

இத்திருக்கோயிலில் மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மன், பரகேசரி உத்தமசோழன், முதலாம் இராஜராஜ சோழன், முதலாம் இராஜேந்திரசோழன், முதற்குலோத்துங்க சோழன் மூன்றாங் குலோத்துங்க சோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவன் இவர்கள் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இறைவர் விஜயமங்கலமுடைய மகாதேவர், விஜயமங்கலத்து மகாதேவர், விஜயமங்கலமுடைய பரமசாமி என்னும் பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர்.

இக்கோயில் விமானத்தைக் கல்லால் கட்டியவன்:

விசயமங்கலமுடைய பரமசாமிக்கு ஸ்ரீ விமானத்தைக் கல்லால் எழுந்தருளுவித்தவன் உடையார் மும்முடிச்சோழதேவர் பெருந்தரத்து குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கனான விக்கிரமசோழ மகாராஜன் ஆவன்.[1] இச்செய்தி முதலாம் இராஜராஜ சோழனின்

[1] See the South Indian Inscriptions, Volume XIII The Cholas, Number 76. பெருந்தரம் a nobleman.

Koviloor Digital Library

மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

வழிபாடுகள்:

இக்கோயிலில் அர்த்தயாமம் உள்பட நான்கு போதுகளில் வழிபாடுகள் நடைபெற்று வந்தன. இவ்வழிபாட்டுக் காலங்களில் திருவமுதுக்கு அரிசிக்கும், பொரிக்கறியமுது, புழுக்கறியமுது ஆக கறியமுது இரண்டுக்கும் நெய்யமுது, தயிரமுது, இவைகளுக்கும், அடைக்காய் அமுது வெறுங்காய் இவைகளுக்கும், சந்தனம், சந்தனக்குழம்பு, கற்பூரம் இவைகளுக்கும், ஆடி அருளப்பாலுக்கும், ஆடைக்கும், நுந்தாவிளக்குக்கள் ஐந்தினுக்கும், சிறுகாலை எட்டு, உச்சியம்போது எட்டு, இரவுக்குப் பதினான்கு சந்திவிளக்குக்களுக்கும் பிறவற்றிற்குமாக வடபிடாகை நெடுவாயிலிலும் இந்நெடுவாயிலைச் சுற்றிய பிடாகைகளிலும் உள்ள நிலங்களை நிவந்தங்களாக அம்பல வன் பழுவூர் நக்கனாகிய இராஜராஜப் பல்லவரையன் அளித்திருந்தான்.

எழுந்தருளுவித்த திருமேனிகள்:

முதலாம் இராஜராஜசோழனின் ஏழாம் ஆண்டில் அம்பலவன் பழுவூர் நக்கனாகிய இராஜராஜப்பல்லவரையன் இத்திருக்கோயிலில் கூத்தப்பெருமாளையும், உமாபட்டாலகியையும் எழுந்தருளுவித்து, அவர்களுக்கு அணிகலன்களைக் கொடுத்துள்ளான்.

திருமடம்:

இவ்வூரில் திருத்தொண்டத் தொகையன் திருமடம் ஒன்று இருந்ததை திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவரின் 32 ஆம் ஆண்டுக் கல்வெட்டு உணர்த்துகின்றது. இவ்வூர் முதலாம் இராஜேந்திர சோழன் கல்வெட்டில், வடகரை இராஜேந்திர சிங்கவளநாட்டுப் பெரியவானவன் மாதேவி சதுர்வேதிமங்கலத்து விசயமங்கை என்றும், திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றாங் குலோத்துங்கசோழன் கல்வெட்டில் விக்கிரமசோழவள நாட்டு இன்னம்பர் நாட்டு விசய மங்கை எனவும் குறிக்கப்பெற்றுள்ளது.

பிறசெய்திகள்:

பெரியவானவன்மாதேவி சதுர்வேதிமங்கலத்தில் சபை ஒன்று

Koviloor Digital Library

இருந்தது. அச்சபையார்க்குப் பெருங்குறிப் பெருமக்கள் என்று பெயர். அவர்கள் கூட்டம் கூடுவதற்குமுன் தட்டழிகொட்டிக் காளம் ஊதச் செய்து, நடுவில் ஸ்ரீ கோயிலான வினையாபரண விண்ணகரப் பெருமானடிகள் கோயிலின் முன்பில் கூட்டம் குறைவறக் கூடியிருந்து கோயில்காரியங்களைக் கவனித்துவந்தனர். இங்குள்ள கல்வெட்டு ஒன்று ''வாழ்க அந்தணர்'' என்று தொடங்கும் தேவாரப்பாடலுடன் தொடங்குகின்றது. இது பாராட்டற்குரியதாகும். இப்பாடலுக்கும் அச்சில் புத்தகத்தில் வெளிவந்த பாடலுக்கும் வேறுபாடு இல்லை.

இக்கோயிலில் உள்ள முதலாம் இராஜராஜ சோழனின் மூன்றாமாண்டுக் கல்வெட்டில் ''இவ்வொட்டோலைப்படியே கல்லில் வெட்டவும் சாசனம் செய்வித்துக் கொள்ளவும் பெறுவார் ஆக ஒட்டி இறைகாவல் ஒட்டோலை இட்டுக் குடுத்தோம்'' என்னும் தொடர்கள் காணப்படுகின்றன[1].

குறிப்பு:

கொள்ளிடப்பேராற்றின் தென்கரையில் திருவைகாவூருக்குக் கிழக்கில் விசயமங்கை என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கு ஒரு சிவன் கோயிலும் உண்டு. இதை விஜயமங்கை என்று கொண்டாரும் உண்டு. அது தவறாகும். இந்த விஜயமங்கையை சாதாரண மக்கள் விஷமூங்கி என்று அழைக்கின்றனர்.

73. திருவீழிமிழலை

நாகை மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ளது. மயிலாடுதுறை - திருவாரூர் இருப்புப்பாதையில் பூந்தோட்டம் தொடர்வண்டி நிலையத்துக்கு மேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவாரூர், மயிலாடுதுறை, கும்பகோணம் ஆகிய ஊர்களில் இருந்து பேருந்துகளில் செல்லலாம்.

சோழவளநாட்டில் காவிரித்தென்கரையில் விளங்கும் 61ஆவது தேவாரத்தலம்.

[1]இத்தொடர்களில் வரும் ஒட்டோலை என்பது இக்காலம் Agreement என்னும் பொருளில் இருப்பது நோக்கத் தக்கது.

See the Annual Reports on South Indian Epigraphy for the year 1929. Numbers. 157 - 194.

Koviloor Digital Library

இத்தலம் காத்தியாயன மகரிஷியின் யாகத்தில் தோன்றிய உமாதேவியாரைத் திருமணம் செய்துகொண்டு இறைவன் என்றும் மணக்கோலத்தோடும் இருக்கும் தலம். திருமால் சக்கரம் பெறும் பொருட்டு, நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூவைக்கொண்டு அர்ச்சிக்க, ஒருநாள் ஒரு மலர் குறைய, அதற்காகத் தமது தாமரைமலர் போன்ற கண்ணைப் பிடுங்கி அர்ச்சித்துச் சக்கரம் பெற்றதலம். திருநாவுக்கரசு சுவாமிகளும் திருஞானசம்பந்த சுவாமிகளும் படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியதலம். இத்தலத்து வடக்குவீதியில் அப்பர் சம்பந்தர் திருமடங்கள் தனித்தனியே இருக்கின்றன. மூவர் அருளிய 23 பதிகங்களும், சேந்தனார் பாடிய திருவிசைப்பாவும், அருணகிரி நாதரின் *திருப்புகழும்* உள்ளன.

விமானம்:

விண்ணிழி விமானம். இது விஷ்ணுவால் தாபிக்கப் பெற்றது. மூலத்தானத்துக்குப் பின் பார்வதி பரமேசுவரரது திரு உருவங்கள் உள்ளன. இங்குக் காழிக்கோலத்தைச் சம்பந்த மூர்த்திக்கு இறைவன் காட்டியருளினார்.

விழா:

சித்திரைத்திங்களில் பெருவிழா நிகழும். மணக்கோலத் திருவிழா இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. மணவாளப் பெருமான் திருவடியில் திருமால் கண்ணைப் பறித்து அர்ச்சித்தஅடையாளம் இன்றும் இருக்கிறது. சுவாமி நேத்திரார்ப்பணேசர்; வீழியழகர் எனவும் வழங்கப் பெறுவர். அம்மை சுந்தரகுசாம்பிகை.

தீர்த்தம்:

விஷ்ணு தீர்த்தம்.

தலவிருட்சம்:

வீழிச்செடி.

கல்வெட்டு:

இத்தலத்திலுள்ள கல்வெட்டுக்கள் 68. வீழிமிழலை என்றே இத்தலம் வழங்கப்பெறுகின்றது. முதற் குலோத்துங்கன் காலத்து உலகுய்யக்கொண்ட சோழவளநாட்டு வேணாட்டுப்பிரமதேயம்

Koviloor Digital Library

திருவீழிமிழலை என வழங்கியது. சுவாமி பெயர் வீழிநாதர், வீழி மிழலைநாதர் என்பன. கோயில் பிராகாரத்தில் சிலரால் பிரதிட்டை செய்யப்பெற்ற நின்றருளிய நாயனார், நெறிவார்குழலி நாச்சியார், திருவேட்டீஸ்வரமுடைய மகாதேவர், திருவேகம்பமுடையார்[1], பார்வதீஸ்வரமுடையார்[2], திருத்தண்டூன்றிய மகாதேவர்[3] கோயில் களும் பிரதிட்டிக்கப்பெற்ற இடங்களும் குறிக்கப்பெறுகின்றன[4]. அம்மை, காமக்கோட்டம் உடைய நாச்சியார் என்று அழைக்கப் பெறுகிறார். திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும், மாணிக்கவாசகருக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைந்திருந்தன. முன்னிருவருடைய மடங்களும் வடக்குவீதியில் இருந்தன என்பதும் அறியக் கிடக்கின்றன.

ஆதித்தன் மகனாகிய முதற்பராந்தகன் காலத்திலிருந்து பதி னொரு சோழமன்னர்களின் காலத்துக் கல்வெட்டுக்களும், சடாவர்மன் சுந்தரபாண்டியன், வீரபாண்டியதேவன் கல்வெட்டுக்களும் விஜயநகர பரம்பரையைச்சேர்ந்த விருப்பண்ண உடையார் கல்வெட்டு ஒன்றும், பெயரறியப்பெறாதன பதினான்குமாக அறுபத்தெட்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் இராஜேந்திர சோழன் திருவீழிமிழலை வடக்கு வீதியிலுள்ள திருநாவுக்கரசர் திருமடத்திற்கு நிலம்விட்ட செய்தி அறியப்படுகிறது [5]. மூன்றாம் இராஜராஜன் திருவீழிமிழலைக் கோயில் மூன்றாம் பிராகாரத்தில் திருவாதவூரர் மாணிக்கவாசகர் படிமத்தைப் பிரதிஷ்டை செய்தான்[6]. சடாவன்மன் சுந்தரபாண்டிய தேவன் திருக்கை கொட்டித் திருப்பதியம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்தான்[7]. முதல் இராஜராஜ சோழன் காலத்தில் ஐப்பசி ஓணத் திருவிழா தரிசனத்திற்காக வரும் அன்பர்களுக்கு அன்னம் வழங்கக் காசு அளிக்கப்பட்ட செய்தியும் இவ்விழா மிகச் சிறப்பாக நடை பெற்றமையும் அறிவிக்கும்[8]. முதற் குலோத்துங்கன் தமது ஆட்சி முப்பத்து நான்காம் ஆண்டில் சண்டேஸ்வரப் பிரதிஷ்டை செய்வித்து நித்திய பூசைக்கு ஏற்பாடு செய்தான்[9]. சிறந்த செய்தியொன்று வாணியின் பாதனான அரிகுல கேசரி விழுப்பரையனால் 'ஸ்ரீ காலகாலன்' என்னும் வாள், வீழிமிழலை நாதர்க்கு வழங்கப்பெற்றது.[10]

[11]மாப்பிள்ளைச்சாமி எனப்பெறும் மணவாளத் திருக்கோலப்

[1]-417 of 1908, [2]-418 of 1908, [3]-436 of 1908, [4]-392 of 1928.
[5]-402 of 1908, [6]-409 of 1908, [7]-414 of 1908, [8]-422 of 1908,
[9]-427of 1908, [10]-438 of 1908. [11]-444 of 1908.

Koviloor Digital Library

பெருமான் அழகிய மணவாளப்பெருமான் என்று குறிக்கப் பெறுகின் றார். இந்த மூர்த்தியையும், இராஜேந்திர சோழ அணுக்கப் பல்லவரை யர் புதுக்கிப் பிரதிட்டை செய்ததாகத் தெரிகிறது.

திருவாவடுதுறை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது

74. திருவெண்காடு

ஆக்கூரிலிருந்து சீகாழி செல்லும் பெருவழியில் பேருந்து மூலம் அல்லிவிளாகத்தில் இறங்கிக் கிழக்கே 4.5 கி.மீ.தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். மயிலாடுதுறை, சீகாழி, பூம்புகார் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகளில் செல்லலாம்.

இது காவிரி வடகரைத் தலங்களுள் பதினொன்றாவது ஆகும்.

இறைவர் திருப்பெயர் திருவெண்காட்டீசர், சுவேதாரண் யேசர். இறைவி திருப்பெயர் பிரமவித்யாநாயகி.

தீர்த்தம்: முக்குளங்கள் - சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம், சந்திரதீர்த்தம்.

இக்குளங்களில் நீராடி வழிபடுகிறவர்கள் பிள்ளைப்பேற்றை அடைவார்கள். அவர்களைத் தீவினைகள் அடையா. இச்செய்திகளை இத்தலத்துக்குரிய,

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயன தோளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே
-தி.2 ப.48 பா.2

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரப்பாடல் (பண் - சீகாமரம், பாட்டு. 2.) இனிது தெளிவு படுத்தும்.

இதற்கு திருப்பெண்ணாகடத்தில் அச்சுதகளப்பாளர் என்பார் ஒருவர் புத்திரப்பேறின்றி இருந்தார். அவர் தமது ஆசாரியர் அருணந்தி சிவாசாரியர் அருளியபடி, திருமுறையில் கயிறுசாத்தினர். சாத்திய பொழுது ஞானசம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

Koviloor Digital Library

''பேயடையா பிரிவெய்தும்'' என்னும் மேற்குறித்த திருப்பாடல் தோன்றிற்று. அதிலுள்ள ''வெண்காட்டு முக்குளநீர் தோய் வினையார் பிள்ளையினோடு உள்ள நினைவாயினவே வரம்பெறுவர். ஒன்றும் ஐயுறவேண்டாம்'' என்னும் பொருளை அறிந்து மகிழ்ந்து, திருவெண் காட்டிற்குத் தம் மனைவியாரோடு சென்று, முக்குளத்தில் நீராடி இறைவனை வழிபட்டார்.

இங்ஙனம் வழிபட்டுவரும் நாள்களில் ஒரு நாள் இறைவன் அவரது கனவில்தோன்றிச் சைவ சித்தாந்தத்தை நிலைபெறச் செய்யக்கூடிய ஒரு புத்திரனை நீ அடைவாய் என்று சொல்லி மறைந் தருளினார். அவ்வாறே அவர் புத்திரப்பேற்றை அடைந்தார். இக் குழந்தையே சைவசித்தாந்த பரமாசாரியராக விளங்கிய மெய்கண்ட தேவர் ஆவர்.

தலவிருட்சம்: ஆலமரம்; கொன்றைமரம்.

உள் பிராகாரத்தில், அகோரமூர்த்தி கையில் சூலத்துடன் எழுந்தருளியிருக்கின்றார். அவர்க்கு எதிரில் காளியின் சந்நிதி உள்ளது.

சிதம்பரத்தில் இருப்பதுபோலவே இங்கு நடராஜர் பெருமையுடன் விளங்குகின்றார்.

இப்பதியில் வெள்ளானை பூசித்துப் பேறு பெற்றது. இதை,

''வெள்ளானை வேண்டும்வரம் கொடுப்பர்
வெண்காடு மேவிய விகிர்தனாரே'' -தி.2 ப.35 பா.9

என்னும் அப்பர் பெருமானின் இத்தலத் தேவாரப் பகுதியாலும்,

''அயிரா வதம்பணிய மிக்கதனுக்
கருள்சுரக்கும் வெண்காடு'' -தி.2 ப.48 பா.7

என்னும், ஞானசம்பந்தர் தேவாரப் பகுதியாலும் அறியலாம். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் மூன்று, அப்பர் பதிகம் இரண்டு, சுந்தரமூர்த்தி நாயனார் பதிகம் ஒன்று ஆக ஆறு பதிகங்கள் இருக்கின்றன.

சைவ எல்லப்ப நாவலர் தலபுராணத்தை இயற்றியுள்ளார். அது அச்சில் வெளிவந்துள்ளது.

Koviloor Digital Library

75. திருவெண்ணியூர்

தஞ்சாவூர் - திருவாரூர் தொடர் வண்டிப் பாதையில், கோயில் வெண்ணி என்னும் தொடர்வண்டி நிலையத்திற்கு 2.5.கி.மீ. தூரத்திலிருக்கின்றது. தஞ்சை - நீடாமங்கலம், தஞ்சை - திருவாரூர் பேருந்துகளில் கோயில்வெண்ணி என வழங்கும் இவ்வூரை அடையலாம்.

இது காவிரிக்குத் தென்கரையிலுள்ள நூற்றிரண்டாவது தலம்.

இறைவர் திருப்பெயர் வெண்ணிக்கரும்பர். இறைவி திருப் பெயர் அழகியநாயகி.

இறைவர் திருமேனி கரும்புக்கழிகளை ஒன்றுசேர்த்து வைத்தாற்போல் இருக்கின்றது.

கல்வெட்டு:

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பட்டுள்ளன. இராஜராஜன் கல்வெட்டுக்கள் ஆறு. குலோத்துங்கன் ஒன்பது. தேதியில்லா கல்வெட்டு ஒன்றும் உள்ளன. 13-10-1222 தேதியிட்ட இராஜராஜன் கல்வெட்டு நீளமானதாகும். அதன்படி, நாடு சுத்தமலிவளநாடு, உள்நாடு வெண்ணி கூற்றம், ஊர் வெண்ணிநகரம், இறைவன் திருவெண்ணி உடையார் என அறிகிறோம். அந்த இறைவனுக்கு நித்த வினோத வளநாட்டு வீரசோழ வளநாட்டுப் புத்தூரான திரிபுவனச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் திருநாமத்துக் காணியாக விட்ட நிலத்தின் எல்லை கூறப்படுகிறது. அந்நிலத்தில் விளைகிற பொருள்களின் அளக்கும் அளவும் கொடுக்கப்பட்டுள்ளது.

இனி, குலோத்துங்கன் கல்வெட்டுக்கள் ''புனல்வாய்த்து'' என்ற தொடக்கம் கொண்டவைகள். கோயிலுக்கு நிலங்கொடுக்கப் பட்ட விவரங்கள் அவைகளில் காணப்படுகின்றன. சுற்று வட்டத்து ஊர்களின் பெயர்களும் ஆட்களின் பெயர்களும் அவைகளில் எழுதப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று 2-7-1196ஆம் தேதியுடையது. ஆகவே கி.பி. 12 ஆவது நூற்றாண்டின் முற்பகுதியும் இக்கோயில் சிறந்திருந்த காலமாகும்.

Koviloor Digital Library

76. திருவேட்களம்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். சிதம்பரத்துக்கு கிழக்கே 2 கி.மீ. தூரத்திலுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கீழ்பால் உள்ளது. சிதம்பரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.

இத்தலம் மூங்கில்வனம் எனவும் கூறப்பெறும். அர்ச்சுன னுக்குப் பாசுபதம் கொடுத்த தலம். பாசுபதாஸ்திரம் ஏந்திய இறைவன் திருவுருவமும், அர்ச்சுனன் தவநிலையைக் காட்டும் திருவுருவமும் இருக்கின்றன. இறைவன் வேடனாக வந்து அர்ச்சுனனுக்கு அருள் வழங்கினார் என்பது வரலாறு. இதனை 'வேடனார் உறைவேட்களம்' என்ற அப்பர் வாக்கும் நன்கு விளக்கும்.

இறைவன் பெயர் பாசுபதேசுவரர், இறைவியின் பெயர் நல்லநாயகி. கோயிலுக்கெதிரில் தீர்த்தம் உண்டு. புதிய திருப்பணி. திருஞானசம்பந்த சுவாமிகள் சிதம்பரத்தில் இருப்பதற்கு அஞ்சி, இத்தலத்திலேயே தங்கிச் சிதம்பரத்தைத் தரிசித்தார் என்பது பெரிய புராண வரலாறு.

கல்வெட்டு:

சகம் 1488-ல் (கி.பி. 1556-ல்) சிதம்பரேசுவர சிவகாமி கோயிலுக்குத் திருவேட்களங் கிராமத்தை அச்சுதப்பநாயக்கர் அளித்த வரலாறு அறியப்படுகிறது.[1]

[1] 259 of 1913.

திருத்தல யாத்திரை

மூர்த்திதலம் தீர்த்தம முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாயக்கும் பராபரமே

-தாயுமானவர்.

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.

-திருமூலர்.

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

அற்புதத் திருப்பதிகங்கள்

எண்.	அற்புதத் திருப்பதிகம்	பா.தொ.எண்	ப.தொ.எண்
1	திருமறைக்காட்டில் மறைக்கதவம் திறக்கப்பாடியது	1163-1173	123
2	இறைவன் திருவாய்மூருக்கு வருக என அழைத்தபோது பாடியது	1569-1578	163
3	திருப்பழையாறை வடதளியில் அமண் தூரறுத்துப் பாடியருளியது	1652-1661	171
4	கடலில் கல்லே மிதப்பாய்க் கரையேறியதற்கு அகச்சான்று	1796	185
5	நீற்றறையை இறைவன் திருவடி நிழலாய்க்கண்டு பாடியது	1954-1963	203

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

சிறப்புத் திருப்பதிகங்கள்

எண்.	சிறப்புத் திருப்பதிகம்	பா.தொ.எண்	ப.தொ.எண்
6	தனித்திருக்குறுந்தொகை	1944-1972	202-204
7	காலபாசத் திருக்குறுந்தொகை	1973-1983	205
8	மறக்கிற்பனே என்னும் திருக்குறுந்தொகை	1984-1993	206
9	தொழற்பாலதே என்னும் திருக்குறுந்தொகை	1994-2004	207
10	இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை	2005-2015	208
11	மனத்தொகைத் திருக்குறுந்தொகை	2016-2025	209
12	சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை	2026-2055	210
13	உள்ளத் திருக்குறுந்தொகை	2056-2065	211
14	பாவநாசத் திருக்குறுந்தொகை	2066-2075	212
15	ஆதிபுராணத் திருக்குறுந்தொகை	2076-2085	213

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

சிறப்புக் குறிப்புடைய திருப்பதிகங்கள்

		ப.தொ. எண்
1.	அகப்பொருட் பதிகம்	142, 153, 158
2.	அட்ட புட்பம்	167
3.	அண்ணாமலையைக் கைதொழலால் வரும் பயன்	118
4.	உபதேசம்	162, 173, 182, 195, 197
5.	எழுத்து வரிசை	210
6.	ஒன்று முதல் பத்து வரை எண்ணமைப்பு	202
7.	காணலுற்றார் அங்கு இருவரே	203
8.	காலதூதருக்கு எச்சரிக்கை	205
9.	காலன் வருமுன் கடவுளைப் போற்றுக	199
10.	திரிபுரம் எரித்ததைப் பாடல் தோறும் கூறுவது	117
11.	பயனிலாதன இவை எனல்	212
12.	மறக்கிற்பனே	206
13.	மறந்துய்வனோ	115
14.	வினைதீர்க்கும் பதிகம்	196
15.	வேண்டுகோள் பதிகம்	126

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 16815

Koviloor Digital Library



திருநாவுக்கரசு சுவாமிகள்

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

அருளிச் செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

ஐந்தாம் திருமுறை

1. கோயில்

பதிக வரலாறு:

திருமுதுகுன்றம் பணிந்து தில்லைத்திருநகர்க் குடதிசை மணிவாயிற்புறம் உற்றார் திருநாவுக்கரசர் எதிர்கொண்ட அடியாரொடும் சென்றார். நஞ்சுண்ட சுவாமிகள் நடமாடும் பொன் மன்றினைக்கண்ணெதிர் கண்டார்.சென்றடையாத திருவுடன் திகழும் ஒளிநிறை அம்பலம் நினைவுற, நேரே கூடும்படி வரும் அன்பால் இன்புறுகுணமும் பெறவரும் நிலைகூட, ஆடும் கழல் புரி அமுதத் திருநடம் ஆராவகை தொழுது ஆர்கின்றார். தலைமேல் அஞ்சலிசெய் கையும், ஒழியாதே மழைபொழி கண்ணும் பரிவின் உருகுங் கரணமும், நிலமிசை விழுமெய்யும் திருநடம் கும்பிடலில் அளவிலாது பெருகும் ஆர்வத்தைப் பிறர்க்குணர்த்தின. பலமுறை தொழுதார் பாவேந்தர். ''என்று எய்தினை'' என்றது மன்றாடும் மன்னன் திருவருட்கருணை. ஆநந்தம் பாடலாக வெளிவந்தது. ஒன்றியிருந்து நினைந்து திருக்குறிப் புணர்ந்து ''பத்தனாய்ப் பாட மாட்டேன்'' என்னும் இன்தமிழ் மாலைபாடி, தொண்டுசெய்யுங் காதலிற் பணிந்து போந்து, மணியின் சோதி நிறை திருமுன்றின் மாடும் பொற்றேர் அணிதிரு வீதியுள்ளும் பணிகள் செய்து கும்பிடுந் தொழிலராகிப் புனித வாக்கின் பணிகளும் பயிலச் செய்வார். அருட்பெரு மகிழ்ச்சி பொங்கப் பாடியருளியது இத் திருப்பதிகம், (தி.12 திருநா. புரா. 161-171.)

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 114 பதிக எண்: 1

திருச்சிற்றம்பலம்

1071. அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. 1

1. பொ-ரை: பேரின்பவீடு நல்கும் தில்லைத் திருச்சிற்றம்பலம் பொன்னுலக வாழ்வையும் தரும். இத்தகைய திருச்சிற்றம்பலத்தை, மேலும் இந்நிலவுலகில் என் அன்பு பெருகும் வகையில் கண்டு, பரமுத்திப் பேரின்ப நிலையை எளிதின் எய்துதற்கு இந்த நல்ல மனிதப் பிறவியை இன்னும் கொடுக்குமோ முதல்வன்?

கு-ரை: அன்னம் - வீட்டின்பம். ''பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்'' என்னும் திருவாசகத்தில் சோறு என்பது பேரின்பம் என்னும் பொருள் பயத்தல் காண்க. கடவுளை அன்னம் (அமுதம்) என்னும் சொல்லால் குறித்தலுமுண்டு. தான் இறவாதுநின்று பிறர் இறப்பை நீக்குதலால். 'பிழைத்த தன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால்வீசக் குழைத்ததோர் அமுதம் ஈந்தார்' என்னும் தேவாரத் திருப்பாடலில் அமுதம் என்ற சொல் வீடுபேறு என்னும் பொருள் பயக்குமாறறிக. இனி, தில்லையில் இன்றும் பாவாடை நிவேதனம் உண்டு. பண்டு இது மிகப் பெரிய அளவில் நிகழ்ந்திருக்கலாம். அன்னம்பாலிக்கும் தில்லை என்பது அது குறித்ததுமாம். சிறுமை - அம்பலம் சிற்றம்பலம். பேரம்பலம் இருத்தலின் பிறிதின் இயைபு நீக்கிய அடைகொளியாகும். சிதம்பரம் என்பது உணர்வு வெளி என்னும் பொருட்டு; அஃது ஏனைய அம்பரங்களை நீக்கியதாதலின் அதுவும் அவ்வடைகொளியே. பொன்னம் - பொன்னுலக வாழ்க்கை. ஆகுபெயர். பொன் எனலும், பொன் - அம் எனப்பிரித்து உரைத்தலும் கூடும். பொன் என்னும் நிலைமொழி வருமொழியொடு புணருங்கால் அம்முப்பெறுதல் பெருவழக்கு. ''பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி'' (தி.8 திருவெம்பாவை 16.) ''பொன்னஞ் சிலம்பு'' *(இறையனார் களவியல் மேற்கோள் சூ.18. 146)* ''பொன்னங்கடுக்கை'' *(கந். கலி. 93)* ''பொன்னங் கமலம்'' *(மீனாட்சி.பிள். 24)* ''பொன்னங்குழை'' *(முத்து. பிள். 394)* ''பொன்னங்கொடி'' *(முத்து. பிள். 424)* *பொன்னஞ். சிலை'' (சிதம்பர. மும். 542)* ''பொன்னங்குவடு''

Koviloor Digital Library

1072. அரும்பற் றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. 2

(சிந்தா- 2136) ''பொன்னப்பத்தம் என னகர ஈறு அக்குப் பெற்றது'' ''பொன்னங்கட்டி'' என அம்முப்பெற்றது *(தொல். எழுத்து. நச். சூத். 405).* என் அன்பு எனப் பிரிக்க. அன்பு என்பது அம்பு என மருவிற்று. தென்பு - தெம்பு. வன்பு - வம்பு. (வீண்பு - வீம்பு.) காண்பு - காம்பு. பாண்பு - பாம்பு முதலிய சொற்களால் வல்லெழுத்துக்கேற்ப மெல்லெழுத்துத் திரிதல் காண்க. என் நம்பு எனப் பிரித்து என் விருப்பம் எனலுமாம். 'நம்பும் மேவும் நசையாகும்மே' *(தொல்காப்பியம் சொல். 329.)* ஆலித்தல் -விரித்தல், பெருக்கல், களித்தல், நிறைதல் ''ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலம்'' (தி.9 திருப் பல்லாண்டு) அகலல் என்பதன் மருவாகிய ஆலல் என்னும் தொழிற் பெயர் வேறு; ஆலித்தல் என்னும் தொழிற்பெயர் வேறு. ''அரனுக்கு அன்பர் ஆலின சிந்தைபோல அலர்ந்தன கதிர் களெல்லாம்'' (தி.12 திருநாட். 21.) ''ஆலிய முகிலின் கூட்டம்'' (தி.12 திருநாட். 24.) என்னம் எனக் கொண்டு எத்தன்மையனவும் என்றுரைத்தலும் பொருந்தும். 'இன்னம் பிறவியே' 'மனித்தப் பிறவியும் வேண்டு வதே இந்தமாநிலத்தே' என்றார் முன்னும். (தி.4. ப.8. பா.4.) உரை காண்க. பாலித்தல் - கொடுத்தருளல்.

எல்லோரும் பிறவாமையை வேண்டுதலாயிருக்க சுவாமிகள் திருக்கூத்தைக் காணும் பிறவியையே வேண்டினார். அக்காட்சிகண்ட அளவானே, இவ்வுடம்பு உள்ளபோதே, பரமுத்திப் பேரானந்த அதீத நிலையை எய்தித் திளைக்கவைத்தலின்.

தில்லைத் தரிசனம் பரமுத்தியானந்தத்தை இவ்வுடம்பு உள்ள போதே கொடுத்தலின், அத்தரிசனத்திற்கு வாயிலாகிய பிறவியை மேலும் வேண்டுவாராயினர்.

2. பொ-ரை: அரும்புகள் நீக்கமுற ஆராய்ந்த போதுகளைக் கொண்டு வண்டுகள் நீக்கமுறத்தூவி, கரும்பாகிய வில்லை ஏந்திய கருவேளை எரித்தவனாகிய பெரும்பற்றப்புலியூர் எம்பிரானை நீர் தொழுமின்.


கு-ரை: வழிபாட்டுக்கு மலர் எடுக்குங்கால் அரும்புகளை நீக்கி

Koviloor Digital Library

மலர்களை மட்டும் பறித்தல்வேண்டும் என்பது விதி. ''அரும் போடு மலர் பறித்திட்டுண்ணா ஊரும் காடே'' ''அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து'' என ஆசிரியரே அரும்புகளைப் பறித்து வழிபடுதலை உணர்த்தினார். இது விதி விரோதமெனத் தோன்றும். பூவினங்களுள் எல்லாவற்றின் அரும்பு களும் வழிபாட்டிற்காகா என்பதில்லை; தாமரை முதலிய சிலவற்றின் அரும்பு ஆகும். அரும்பு என்பது அடையின்றி நிற்குங்கால் தாமரை அரும்பிற்கே பொருந்துகிறது. ''அருப்பினார்முலை மங்கை பங்கினன்'' (தி.2. ப.25. பா.8.) ''அரும்புங் குரும்பையும் அலைத்த மென் கொங்கைக் கரும்பின் மொழியாள்'' (தி.1. ப.46. பா.2.) ''அருப்புப் போல் முலையார்'' (தி.5. ப.61. பா.5.) என்பவற்றால் அறிக. ''அரும்பார்ந்தன மல்லிகை சண்பகம்'' (தி.7. ப.13 . பா.4.) என்புழி ஏனைய அரும்புகளை உணர்த்தல் காண்க. ''வைகறை யுணர்ந்து போந்து புனல்மூழ்கி வாயுங்கட்டி, மொய்மலர் நெருங்கு வாச நந்தன வனத்துமுன்னிக்கையினிற் றெரிந்து நல்ல கமழ் முகை யலரும் வேலைத் தெய்வநாயகற்குச்சாத்துந் திருப்பள்ளித் தாமங் கொய்து'' (தி.12 எறிபத்.9) என்றதால் போதுகளைக் கொய்தல் விதியென் பதும் அவற்றையே அரும்பு என்பதும் உணரக் கிடக் கின்றன. அறுதல் - அற்றம். செறுதல் - செற்றம். அற்றப்பட - நீக்கம் உற. ஆய் மலர் - வினைத்தொகை. அரும்புகளையும், அற்றப் பட ஆய்ந்த மலர்களையும் கொண்டு எனக்கூறலும் ஆம். அற்றப் படுதல் ஆய்தற்கு அடையாய்க் குற்றம் நீங்கல் எனப் பொருள் தரும். 'விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல்' எனும் *குறளி*(1186)*லும்* இப் பொருட்டாதலறிக. சுரும்பு - வண்டினங்களுள் ஒன்று. ''வண்டும் சுரும்பும் மூசும்தேனார் பூங்கோதாய்'' *(சிந்தா. 2065)* கரும்பற்றச் சிலை:- அற்றம் - அழிவு. சோர்வு, துன்பம், மெலிவு, சிலை - வில். கரும்பு வில் காதலை விளைத்து இவற்றையெல்லாம் ஆக்குதலால் அற்றச்சிலை எனப் பட்டது. அற்றச்சிலை - அற்றத்தை உடைய சிலை என இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை எனக்கொண்டு தனக்கே அழிவு தந்த சிலையாதலின் கரும்பு அற்றச்சிலைக்காமன் என்றார் எனக்கூறலுமாம். பெரும்பற்றப்புலியூர் - புலிக்கால் முனிவர்க்குப் பேரின்பத்தில் பெரும்பற்றை விளைத்ததாலும், அவர் வீடுபேற்றிற் பெரும் பற்றுடையராயிருந்ததாலும், வணங்கும் எல்லா உயிர்க்கும் சிவனடி நீழலில் பெரும்பற்று விளைத்தலாலும் அப்பெயர் பெற்றது.

அன்பினால் தூவுக; தூவின் அவாவறுத்து வீடுபேறு எய்தலாம் என்னும் கருத்தைக் காமனைக் காய்ந்தவன் எனும் தொடர் குறிப்பிக்கின்றது.

Koviloor Digital Library



சிதம்பரம்: அருள்மிகு நடராஜர் சபை

Koviloor Digital Library

திருக்கயிலாய பரம்பரை

எல்லாம் சிவன் செயல்

தருமபுர ஆதீனம்



Koviloor Digital Library

1073. அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனம்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3

1074. அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 4

3. பொ-ரை: அரித்தல் மிக்க இருவினையால் தாக்குண்டு எரிசூழ (இடுகாட்டில்) கிடந்தார் என்று அயலோர் சிரிப்புற்றுப் பலபல பேசுதலை அடையுமுன்னரே நீவிர்போய்த் திருச்சிற்றம்பலத்தை அடைந்து உய்மின்.

கு-ரை: அரித்து சிரித்து என்பன முறையே அரிச்சு சிரிச்சு என மருவின. ''அரிச்சிராப்பகல்'' எனத் தொடங்கும் திருக்குறுந் தொகையிலும் (தி.5. ப.85. பா.3.) இவ்வாறு வருதல் காண்க. முதலும் மூன்றுமாம் அடிகளில் உற்ற என்னும் பெயரெச்சமும் உற்று என்னும் வினையெச்சமும் அமைந்தன. இரண்டாமடியில் சுற்ற என்பது வினையெச்சம்.

இப்பாடல், இறக்கும்முன் பிறப்பை நீக்கிக் கொள்ளும் நெறியை உணர்த்துகின்றது. சிற்றம்பலம் அடைவார்க்கு வினையால் அரிப்புண்டலும் இறப்பொடு பிறப்பும் இல்லையாம் என்றபடி.

4. பொ-ரை: எதிர்வினையும் தீர்தற்கரிய நுகர்வினையும் மேலைவல்வினையாகிய துவந்துவங்களும் எனக்கு என்ன துன்பம் செய்யவல்லன? தில்லைமாநகரிலே திருக்கூத்தாடியருளும் திருச்சிற் றம்பலவனார்க்கு அளவில்லாததொர் அடிமைபூண்ட எனக்கு அவ் வினைகள் ஒரு துன்பமும் செய்யவல்லன அல்ல.

கு-ரை: அல்லல் - ஆகாமியமாகிய எதிர்வினை. அரு வினை - நுகர்ந்தாலன்றித் தீர்த்தற்கரிய பிராரத்தவினை. தொல்லை வல்வினைத் தொந்தம் - பிராரத்த வினையநுபவம் உள்ள அளவும் உள்ள முயற்சியின் விளைவாய்ப் பருவத்தில் இன்ப துன்பங்களைப்

Koviloor Digital Library

1075. ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான்நி லாவி யிருப்பனென் னாதனைத்
தேன்நி லாவிய சிற்றம் பலவனார்
வான்நி லாவி யிருக்கவும் வைப்பரே. 5

பயக்கத்தக்க இருவினை எனப்படும் சஞ்சிதம். துவந்துவம்-இரட்டை. நல்வினை தீவினை, அறம் மறம், இன்பம் துன்பம் என்னும் இரட்டை களையும் அவைபோல்வனவற்றையும் வடமொழியில் துவந்துவம் என்பர். அது தமிழில் தொந்தம் என்று வழங்குகிறது. ''என்புள்ளுருக்கி இருவினையை ஈடழித்துத் துன்பங்களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து முன்புள்ளவற்றை முழுதழிய உள்புகுந்த அன்பின் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே'' (தி.8 குலாப்.3) என்னும் திருவாசகத்தில் துவந்துவங்கள் தூய்மை செய்தல் சஞ்சித வினையையும், இருவினையையும், ஈடழித்தல் ஆகாமியத்தையும், துன்பங்களைதல் பிராரத்தத்தையும் குறித்தல் காண்க.

'தொண்டன்' என்பது பாடமாயின், வல்வினையாகிய அடிமை எனக்கொள்க. இருவினை இறைவன் ஆணையின் வரும் என்பது சாத்திரம். பரமுத்தியிலும் ஆன்மா முதல்வனுக்கு அடிமையாதலின் 'எல்லையில்லதோர் அடிமை' என்றருளிச் செய்தார். 'மீளா அடிமை' (தி.7. ப.95. பா.1) என்னும் நம்பியாரூரர் வாய்மொழியும் இக்கருத்தே பற்றி எழுந்தது.

5. பொ-ரை: உடம்பில் உயிர் உயிர்த்துக்கொண்டிருக்கும் காலமெல்லாம் நான் என்னை ஆளாக உடைய் திருச்சிற்றம்பல வனாரை விளக்கமுறப்பெற்றிருப்பேன். இன்பத்தேன் விளங்கிய அத் திருச்சிற்றம்பலவனார் அடியேனைப் பேரின்பவீட்டில் நிலைபெற் றிருக்கவும் வைப்பர்.

கு-ரை: ஊன் - உடல். ஆகுபெயர். நிலாவி - விளங்கி, நிலை பெற்று. உயிர்க்கும் பொழுது - மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும் காலம். நாதன் - உடையான். தேன் - சிவானந்தம். வான் - விண்ணுலகு அன்று; சிவலோகம். ஊனில் ஆவி என்றும், ஊன் நிலாவி என்றும் பிரித்துரைக்கலாம். வானிலாவி என்புழியும் அவ்வாறே கொள்ளலாம்.முதல்வன் திருவருளை மறவாதவர்க்கே பேரின்பம் எய்தும் என்பது கருத்து.

Koviloor Digital Library

1076. சிட்டர் வானவர் சென்று வரங்கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே. 6

1077. ஒருத்த னார்உல கங்கட் கொருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம்
அருத்த னாரடி யாரை யறிவரே. 7

6. பொ-ரை: ஞானிகளும் தேவர்களும் போய்வேண்டும் வரங்களைப் பெற்றுக்கொள்ளும் சிறப்புடையது தில்லைச் சிற்றம்பலம்; சிட்டர்களாகிய அந்தணர்கள் வாழ்தற்கு இடமாவது அது. அத்தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடியருளும் ஞான மூர்த்தியின் திருவடிகளைக் கைகூப்பித் தொழப்போகும் அச்சிட்டர் களாய மெய்ஞ்ஞானியரையே, ஏனையோரைச் செறுதற்கு வல்ல காலன் அணுக மாட்டான்.

கு-ரை: சிட்டர் - அறிவர்; ஞானியர்; தில்லைவாழந்தணர். சிட்டன் - ஞானமூர்த்தியாகிய நடராசப்பெருமான். சிட்டன், சிரேஷ் டன், சிஷ்டாசாரமுடையவன் என்பாரும் உளர்.

7. பொ-ரை: தனிமுதற்பொருள் உலகங்களுக்கெல்லாம் ஒரே விளக்காய் உள்ளவர்; செம்மையார்; தில்லைச்சிற்றம்பலத்தில் திருக் கூத்தாடுபவர்; முதியார்; இளையார்; நஞ்சுண்ட எம்செல்வர்; அடியாரை அறிவார்.

கு-ரை: ஒருத்தனார் - ஏகன் அநேகன் இறைவன் (தி.1. ப.5.) உலகங்கட்கு ஒரு சுடர் - 'சுடர்விட்டுளன் எங்கள் சோதி' (தி.3. ப.54. பா.5) 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' (தி.8 திருவாச. அருட். 1) 'சுடர்ச் சோதியுட் சோதியான்' (சம்பந்) 'தூயநற் சோதியுட் சோதி' (தி.9 திருவிசைப். 2.) 'உலக உயிர்க்கெல்லாம் ஒருகண்ணே' (இருபா.20). திருத்தம் - செம்மை. திருத்தன் - செம்பொருள். திருப்தி உடையவன் என்றலும் ஆம். திருப்தி எண்குணங்களில் ஒன்று. தீர்த்தனுமாம். உயிர்களைத் திருத்தி யாட்கொண்டவன் என்றலுமொன்று. 'திருத்தித் திருத்தி வந்தென் சிந்தையிடங்கொள் கயிலாயா' (தி.7. ப.47. பா.8.) விருத்தனார் இளையார் -

Koviloor Digital Library

1078. விண்நி றைந்ததோர் வெவ்வழ லின்னுரு
எண்நி றைந்த இருவர்க் கறிவொணாக்
கண்நி றைந்த கடிபொழி லம்பலத்
துள்நி றைந்துநின் றாடு மொருவனே. 8

1079. வில்லை வட்டப் படவாங்கி யவுணர்தம்
வல்லைவட் டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்


'விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து' (தி.1. ப.52. பா.6.) அருத்தனார் - எமக்கு மெய்ப் பொருளாயுள்ளவர். அருத்தம் - நீடுலகிற்பெறும் நிலையுடைய பெருஞ்செல்வம். அடியாரை அறிவர் - 'அடியார் அடிமை அறிவாய் போற்றி' (தி.5. ப.30. பா.3.) 4,9 பார்க்க. (தி. 5, ப. 13, பா. 10) பார்க்க. (தி. 6. ப. 85. பா. 2.) பார்க்க. (தி. 4. ப.23. பா.2.) பார்க்க.

8. பொ-ரை: யான் என்னும் செருக்கு மிகுந்த அயனும் மாலும் காண்டற்கு அரிதாய், ஆகாயத்தையளாவியெழுந்த சோதிப்பிழம்பு ஒப்பற்ற பெருந்தலைவனாய், தேனிறைந்த மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த தில்லையம்பலத்துள் திருச்சிற்றம்பல வடிவாய் நிறைந்து பஞ்சகிருத்திய நடனத்தைச் செய்யும். தொழக்கல்லாத வர்களாகிய அயன்மாலுக்கு அரிய முதல்வன் அன்பால் வழிபட்ட வியாக்கிரர், பதஞ்சலியார் என்னும் முனிவர்களுக்கு வெளிப்பட்டுத் தோன்றித் தன்னியல்பை உணர்த்திப் பேரின்பம் அருளினன் என்றபடி.

கு-ரை: இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை (அப். தி.5 ப.95) பார்க்க. 'விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறந் தெல்லையிலாதானே' (தி.8 திருவாச. சிவ.) எண் - எண்ணம். கண் நிறைந்த - கள் நிறைந்த. ஞானமன்றில் ஆனந்தக் கூத்தாடுதலின் நிறைந்து நின்றாடும் என்றார். சிவபிரானை ஒருவன் என்றல் உபநிடத வழக்கு. முழுமுதல் என்னுங் கருத்தை உடையது. (*வடமொழி சுலோகம்*) 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்பது திருவாசகம். 'ஒளிமணி வண்ணன் என்கோ, ஒருவன் என்றேத்த நின்ற நளிர்மதிச் சடையன் என்கோ' என *நம்மாழ்வாரும்* இக்கருத்தை வலியுறுத்துதல் காண்க. 'ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ' எனத் திருத்தாண்டகத்தினும் அருளிச்செய்வர்.

9. பொ-ரை: மேருவாகிய வில்லை வளைத்துத் திரிபுரத்தசுரர் களுடைய மும்மதில்களை அழித்தவன் எழுந்தருளிய தில்லை நகரின்

Koviloor Digital Library



கோயில்

Koviloor Digital Library



Koviloor Digital Library

தில்லைவட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுத லுண்மையே. 9

1080. நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் நெஞ்சு ளிருக்கவே. 10

1081. மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை

திசையை நோக்கிக் கைகூப்புவார் செய்த வினைகள் விரைந்து அவர்களை விட்டு ஓடும். இஃது உண்மை.

கு-ரை: வில் -மேருவாகிய வில். வட்டப்பட - அரைவட்டமாக அமைய. வாங்கி - வளைத்து. அவுணர் - திரிபுரத்தசுரர்கள். வல்லை வட்டம் மதில்; வல் - விரைவு. வட்டம் மதில் - வட்ட வடிவாயமைந்த கோட்டைகள். ஒல்லை - விரைவு. வட்டம் - தொழுவாரைச் சூழ்ந்த இடம்.

10. பொ-ரை: திருமாலும் பிரமனும் முதல்வனைக் காண்பேம் எனத் தம்முள் எண்ணி முறையே நிலத்தை யகழ்ந்து தேடியும் வானிற் பறந்து திரிந்தும் காணவல்லாரல்லர்; மாடமாளிகைகள் சூழ்ந்த திருத் தில்லையில் திருவம்பலத்தில் நின்று ஆடுகின்ற பெருமானது திருவடி கள் அன்பால் நினையும் என் நெஞ்சத்து விளங்கி இருக்கும்.

கு-ரை: முதல்வனை அன்பால் அகத்தே நினைவார் அவனை உணரப் பெறுவர் என்பது கருத்து.

11. பொ-ரை: இனிய மொழிபேசும் பார்வதி அம்மையை இடப்பாகத்தே வைத்தவன்; இளைப்பின்றி உலகெலாம் படைத்துக் காத்து அழிக்கவல்ல சதுரப்பாடுடையவன்; திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ளவன். இப் பெருமான் எழுந்தருளியுள்ள திருமலை எனப்படும் திருக்கயிலாய மலையை அசையும்படி, செருக்கினால் ஆரவாரம் செய்து எடுத்த இராவணனுடைய பத்து முடிகளும் வருந் தும்படி மெள்ள ஊன்றும் செம்மையான திருவடியைச் சென்று கை தொழுது உய்க.

Koviloor Digital Library

அதிர ஆர்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை: மதுரம் - இனிமை. சர்வசங்கார காலத்துப் பெருமானது சினத்தைத் தணித்து மீண்டும் படைத்தற்றொழிலைச் செய்யவல்ல மொழியுடையாள் ஆதலின் 'மதுரவாய்மொழி மங்கை' என்றார். பங்கு - இடப்பாகம். செம்பாதியும் கொண்டதையல் *(முத்துக்-பிள்ளை.)* சதுரன் - சதுரப்பாடு உடையவன். ''பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத இன்பம், ஆவண்ணம் மெய்கொண்டவன் தன் வலியாணைதாங்கி, மூவண்ணல் தன் சந்நிதி முத்தொழில் செய்யவாளா மேவு அண்ணல்'' *(திருவிளையாடல்)* ஆதலின் சதுரன் என்றார். திருமலை - கயிலைமலை. கோயில் என்பது சிதம்பரத்தைக் குறித்தலைப் போலத் திருமலை என்பது கயிலையைக் குறிக்கும். அதிர - நடுக்கத்தால் அதிர்ச்சியடைய, ஆர்த்து - ஆணவத்தால் செருக்கி ஆர வாரித்து. மிதிகொள் சேவடி - மிதித்தலைக் கொண்ட எனவும் மிதித்து மீள அருள் செய்துகொண்ட எனவும் இருபொருள் பட நின்றது.

திருநாவுக்கரசர் புராணம்

அருட்பெரு மகிழ்ச்சி பொங்க "அன்னம்பா லிக்கும்" என்னும்
திருக்குறுந் தொகைகள் பாடித் திருவுழ வாரங் கொண்டு
பெருத்தெழு காத லோடும் பெருந்திருத் தொண்டு செய்து
விருப்புறு மேனி கண்ணீர் வெண்ணீற்று வண்ட லாட.

- தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

2. கோயில்

பதிக வரலாறு:

திருத்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற வானாறு புடை பரக்கும் மலர்ச்சடையார் அடிவணங்கி, அருட்பெரு மகிழ்ச்சி பொங்கத் திருக்குறுந்தொகைகள் பாடித் திருவுழவாரங்கொண்டு பெருந்தொண்டு செய்து, மேனி கண்ணீர் வெண்ணீற்று வண்ட லாடமேவிய பணிகள் செய்து விளங்கும் நாள் வேட்களத்துச் சேவுயர் கொடியார் தம்மைச் சென்று வணங்கிப் பாடி, திருக்கழிப் பாலை தன்னில் மணவாள நம்பி கழல் சென்று தாழ்ந்து அன்புறு வண்டமிழ் பாடி, நீடு திருப்புலியூரை நினைந்து மீள்வார், கழிப் பாலை மருங்கு நீங்கி, நனைச்சினை மென்குளிர் ஞாழற் பொழிலூடு வழிக்கொண்டு நண்ணும் போதில், பாடியருளியது இத்திருப்பதிகம். இதனால், ''நினைப்பவர் தம்மனங் கோயில் கொண்டருளும் அம்பலத்துக் கூத்தனைத் தினைத்தனையாம் பொழுது மறந்துய்வனோ'' எனப் பாடித் தில்லை சார்ந்தார் (தி.12 பெரிய புரா. 173- 174.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 115 **பதிக எண்: 2**

திருச்சிற்றம்பலம்

1082. **பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்**
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. 1

1. பொ-ரை: பனைபோன்ற கையையும், மும்மதங்களையும் உடைய யானைத்தோலை உரித்துப் போர்த்தவன்; தன்னை நினைப் பவர் மனத்தைக் கோயிலாக் கொண்டவன்; வேடம் அனைத்துமாம் அம்பலக்கூத்தன். இத்தகைய சிற்றம்பலக் கூத்தனைத் தினையளவுப் பொழுதும் மறந்து வாழ்வேனோ!

கு-ரை: பனைக்கை - பனைமரம் போன்ற கரிய பரிய கை. வேழம் - கயாசுரன் என்னும் யானை. இறைவனது எண்வகை வீரச் செயல்களுள் யானையை உரித்துப் போர்த்ததும் ஒன்று. வேடம்

Koviloor Digital Library

1083. தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய ஒருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வனோ. 2

1084. கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந் துய்வனோ. 3

அனைத்தும் என்றது போக யோக வேக வடிவங்களை. 'பலபல வேட மாகும் பரன்' (சம்பந்.) நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்- 'உள்ளம் பெருங்கோயில்' (தி.10 திருமந்திரம்.) வாயிலார்செய்த அக வழிபாட்டின் சிறப்பைப் பெரியபுராணத்துக் காண்க. அன்பால் நினை வாரது உள்ளக் கமலத்து அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின் என்பது 'மலர்மிசை ஏகினான்' என்ற *திருக்குறட்* பகுதிக்குப் பரிமேலழகர் உரைத்த விளக்கம். தினை - சிறுமைக்குக் காட்டுவதோர் அளவை; கணப்பொழுதும் மறவேன் என்றது, மறந்தால் உய்யேன் என்பது உணர்த்தியது. இந்நிலை கடவுளை உள்ளவாறு உணர்ந்து அநுபவித்தார்க்கே உளதாவது.

2. பொ-ரை: அநாதியே பாசங்களின் நீங்கி நின்று தன்னை அடைந்தார்க்கு அவற்றை நீக்கியருளும் தூயனை, பேரின்ப வடிவி னனை, சிவலோக நாயகனை, ஞான உருவினனை, உலகத்தோற் றத்தின் முன் அதற்கு மூலமாய் முன்னின்ற ஒருவனை, அருச்சுனனுக்கு வேடனாய்த்தோன்றியும், பாசுபதமீந்தும் அருள்செய்த சிற்றம்பலத்துக் கூத்தப்பிரானைக் கொடியேனாகிய யான் மறந்து வாழ்வேனோ? மறவேன்.

கு-ரை: தீர்த்தன் - தூயன். சிவன் - பேரின்ப வடிவினன். முதலாய ஒருவன் - 'சத்தே முதற்கண் ஒன்றாய் அத்விதீயமாய் இருந்தது' என்னும் *சாந்தோக்கிய உபநிடத உரைபற்றி* எழுந்தது. தமக்குத் திருவருள் கூடாவண்ணம் தடுத்துப் பிறசமயம் புகுவித்த வினைக்கொடுமையைக் கருதிக் கொடியேன் என்றார்.

3. பொ-ரை: தன்னைச் சுற்றிக் கட்டிக்கொண்டிருக்கும் பாம்பை யும், கையின்கண் பிரமகபாலத்தையும் மான்கன்றையும்

Koviloor Digital Library

1085. மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தவென்
ஆணியைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனோ. 4

1086. பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்த னைமுளை வெண்மதி சூடியைச்
சித்தனைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந் துய்வனோ. 5

உடையவனும், சர்வசங்கார நிலையில் விரும்பி எரிவீசி ஆடுவோனும் ஆய சிட்டர்கள் வாழும் தில்லைச் சிற்றம்பலத்துக் கூத்தனை எள்ளளவுப் பொழுதேனும் மறந்து வாழ்வேனோ?

கு-ரை: கபாலம் - பிரமனது மண்டையோடு. மறி - கன்று. இட்டம் - விருப்பம். எரி - பிரளயகாலத் தீ. எள்தனை - எட்டனை என்றாயிற்று. தனை-அளவு. எள் - அளவின் சிறுமைக்கு எடுத்துக் காட்டு.

4. பொ-ரை: பிரமசாரியாகிய சண்டேசர் பசுக்களின் பாலைக் கறந்து அபிடேகித்து வழிபட நீண்ட உலகம் பலவற்றையும் ஆளும் அதிகாரத்தைக் கொடுத்தவன்; பொன் உரையாணி போன்றவன்; செம் பொன்னம்பலத்துள் நின்று ஆடும் செம்பொருள். அவனைத் தனி யனாய நான் மறவேன்.

கு-ரை: மாணி - பிரமசாரி, சண்டேசர். நீள்+உலகு - நீணுலகு. *(சிவஞான. - காப்பு உரை)*. ஆணி - பொன்னின் மாற்று அறிதற்கு வைத்திருக்கும் மாற்றுயர்ந்த பொன்; தனக்கு உவமையில்லாதான் என்னும் கருத்தில் இறைவனுக்குப் பெயராயிற்று. தாணு - நிலை பெற்றவன். ஸ்தாணவே நம: என்பது இறைவனது நூற்றியெட்டுப் போற்றிகளுள் ஒன்று.

5. பொ-ரை: பித்தன் என்ற பெயருடையவனை, இடு காட்டையே ஆடுமிடமாகக்கொண்ட, இயல்பாகவே பாசங்களின் நீங்கியோனை, இளம்பிறைசூடியவனை, எல்லாம் வல்லவனை, செம்பொற் சபையிலே நின்று ஆடும் தலைவனை அடியேன் மறவேன்.

Koviloor Digital Library

1087. நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கும் அறிவொணாச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனி னம்பலத்
தாதி யையடி யேன்மறந் துய்வனோ. 6

1088. மைகொள் கண்டனெண் தோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம்ப லத்தெங்கள்
ஐய னையடி யேன்மறந் துய்வனோ. 7

கு-ரை: பித்தன் - பேரன்புடையவன். பெருங்காடு - மாப்பேரூழியாகிய சுடலை. அரங்கு - ஆடுமிடம். முத்தன் - பாசத்தினின்றும் விடுபட்டவன். சித்தன் - சித்துருவானவன்; சித்தத்திலிருப்பவன், அட்டமாசித்திகளை அருள்பவன். அத்தன் - தலைவன்.

6. பொ-ரை: நீதியாகவும், நிறைவாகவும், மறைகள் நான்கையும் தந்து பிரமனாதியர்க்கு உபதேசித்தவனாகவும், ஒருவர்க்கும் அறியவொண்ணாத சோதியாகவும், ஒளி வீசும் செம்பொன்னம்பலத்து ஆதியாகவும் உள்ள பெருமானை அடியேன் மறந்து உய்தலும் கூடுமோ.

கு-ரை: நீதியை - நீதிவடிவாயிருப்பவனை; ''அறவாழி அந்தணன்'' என்னும் *திருக்குறள்* நினைக்கத்தக்கது. நிறைவை - எங்கும் நிறைந்தவனை. 'மாலறியா நீதி', 'குறைவிலா நிறைவே' என்றார் (தி.8) மணிவாசகரும். நான்மறைகளையும் ஒருசேரத் தத்புருஷம் முதலிய நான்கு முகங்களால் வெளிப்படுத்தியவன் ஆகலின் மறையோதியை என்றார். சோதியை - அறிவுக் கறிவாகிய ஒளியை. ஆதி - முதல்வன்.

7. பொ-ரை: திருநீலகண்டனும், எட்டுத்தோளனும், முக்கண்ணினனும். படம் கொண்ட பாம்பை அரையிற் கட்டிய பரமனும், திருமகள் உறையும் சிற்றம்பலத்தின்கண் எங்கள் ஐயனுமாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: மைகொள் கண்டன் - ஆலகால விடத்தை அடக்கின மையால் கறுத்த கழுத்தை உடையவன். பைகொள் பாம்பு - படத்தையுடைய பாம்பு. அரை-இடை. ஆர்த்த-கட்டிய. பரமன் - மேலானவன். செய்யமாது - செய்யாள், திருமகள். ஐயன் - தலைவன், அழகியன்.

Koviloor Digital Library

1089. முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙன முய்வனோ. 8

1090. காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கைம ணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாஅமு தைமறந் துய்வனோ. 9

நுண்ணியன். ''நூலுணர்வுணரா நுண்ணியோன் அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க'' (தி.8 திருவாச திருவண்) ''வேதங்கள் ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்'' (தி.8 திருவாச - சிவபுரா).

8. பொ-ரை: விண்ணிலுள்ள தேவர் வந்து பரவிப் போற்றித் தூய செம்பொன்னினால் முழுதும் எழுதி மேய்ந்த சிற்றம்பலத்துக் கூத்தப் பெருமானை இழிவுடைய யான் மறந்து எங்ஙனம் உய்வன்?

கு-ரை: தேவர்கள் முழுதும் எழுதிமேய்ந்த என மாறுக. தூய செம்பொன் - ஆடகம். கிளிச்சிறை, சாம்புநதம், சாதரூபம் என்ப வற்றில் தூயதான கனகம். சிற்றம்பலம் பொன்னம்பலம் என்பது காலங் கடந்த பெயர் வழக்கு. ஆதலின் பராந்தக சோழன் போன்ற சோழ வேந்தர்கட்கு முன்பே தேவர்களால் பொன் வேயப்பட்டது என்பது அறியவேண்டுவதொன்று. முழுதும் எழுதி மேய்ந்த - கோயில் விமானம் முழுதும் பரப்பி வேயப்பட்ட. இழுதையேன் - குற்ற முடையவன். வேய்ந்த - மேய்ந்த என்றாயது.

9. பொ-ரை: கார்காலத்துப் பூக்கும் கொன்றை மாலையனை, கச்சணிந்த தனங்களை உடைய உமைகேள்வனை, தேர் உலாவும் தில்லையுள் கூத்தப்பெருமானை, உண்ணத்தெவிட்டாத அமுது போல் வானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: கார்காலத்து மலர்கின்ற பூவாதலின் காருலாமலர்க் கொன்றை என்றார். 'கண்ணி கார்நறுங் கொன்றை' (*புறநானூறு.*) காருலாமலர்க் கொன்றை - கார் உலாவுகின்ற காலத்துப் பூத்த கொன்றை மலர். தார் - போக மாலை; உயிர்களுக்குப் போகம் நிகழ்தற் பொருட்டுக் கார்காலத்து மலரும் கொன்றைத்தாரணிந்து உமையொரு

Koviloor Digital Library

1091. ஓங்கு மால்வரை யேந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனோ. 10

திருச்சிற்றம்பலம்

பாகங்கொண்டு போகியாயிருப்பன் என்க. 'போகம் ஈன்ற புண்ணியன்' என்றார் தேவரும். வார் - கச்சு. தேருலாவிய தில்லையுட்கூத்தன் - தேருலாவிய கூத்தன், தில்லையுள் கூத்தன். நடராசப் பெருமான் திருவிழாக்காலங்களில் ஏனைய நாள்களில் உலாவராது, தேர்த் திருநாள் மட்டிலுமே உலாவருவதைக் குறித்ததுமாம்.

10. பொ-ரை: உயர்ந்த திருக்கயிலாயத்திருமலையை எடுக்கலுற்ற இராவணன் சிரங்கள் பருத்து விம்முதல் அடைய ஊன்றிய திருவடி உடையவனும் நீர்வளம் சான்ற தில்லையுட் கூத்தனும் ஆகிய பெருமானை நல்ல சார்பில்லாத தொண்டனேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: ஓங்குமால்வரை - ஊழிதோறூழி முற்றும் உயர்ந்து நிற்கும் மலைகளில் தலையாகிய திருக்கயிலாயம். தலையாய மலையெடுத்த தகவிலோன் (அப்பர். தி. 6. ப. 97. பா. 10.) ஏந்தலுற்றான் - எடுக்க விரும்பியவன். சிரம் - தலைகள். நீர்தேங்கு வயல் என மாறுக. பாங்கு- நற்சார்பு. உரிமை, கிழமை என்றலும் ஆம்.

திருநாவுக்கரசர் புராணம்

மனைப்படப்பிற் கடற்கொழுந்து வளைசொரியுங்
கழிப்பாலை மருங்கு நீங்கி,
நனைச்சினைமென் குளிர்ஞாழற் பொழிலூடு
வழிக்கொண்டு நண்ணும் போதில்,
நினைப் பவர்தம் மனங்கோயில்
கொண்டருளும் அம்பலத்து நிருத்த னாரைத்,
தினைத்தனையாம் பொழுதுமறந் துய்வனோ?''
எனப்பாடித் தில்லை சார்ந்தார்.

- தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

3. திருநெல்வாயில் அரத்துறை

பதிக வரலாறு:

திருத்தூங்கானைமாடத்துச் சுடர்க் கொழுந்தின் அடி பரவிப் பாங்காகத் திருத்தொண்டு செய்து பயின்று அமரும்நாள் பொருவில் திருவரத்துறையீசரைப் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 154.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 116 பதிக எண்: 3

திருச்சிற்றம்பலம்

1092. கடவு ளைக்கடலுள்ளெழு நஞ்சுண்ட
உடலு ளானையொப் பாரியி லாதவெம்
அடலு ளானை யரத்துறை மேவிய
சுடரு ளானைக்கண் டீர்நாந் தொழுவதே. 1

1. பொ-ரை: நாம் தொழுவது கடவுளும், பாற்கடலுள் எழுந்த நஞ்சு உண்டு தரித்த, அருட்டிருமேனியுடையவனும், ஒப்புமை சொல்லத் தக்கார் இல்லாத ஆற்றல் உள்ளவனும், அர்த்துறைத் தலத்தை விரும்பிய ஒளியானவனும் ஆகிய பெருமானையே.

கு-ரை: கடவுள் - ஆறு அத்துவாக்களையும் கடந்தவன். எழுநஞ்சு - இறந்தகால வினைத்தொகை. நஞ்சுண்ட உடலுளானை - ஆலகாலம் உண்டும் நஞ்சால் அழியாத உடலோடு கூடியவனை. ஒப்பாரி - ஒப்பு,'மக்களே போல்வர் கயவர் அவரன்ன ஒப்பாரியாங் கண்டதில்' *(குறள் 1071)*. மற்றாரும் தன்னொப்பார் இல்லாதவன் என்றது. எம் அடலுளான் - எம்முடைய வலியன். சுடர் உளான் - சிவாக்கினியில் விளங்கி நிற்போன்; ஞாயிறு, நிலவு, தீ என்னும் முச் சுடர்களில் தெறுகதிரும், தண்கதிரும் அடுதல் சுடுதல் விளக்கம் முதலிய சத்தியுமாய் இருப்போன் எனினும் அமையும். கண்டீர் முன்னிலைப் பன்மை அசைச்சொல்; கண்டாய் என்னும் முன்னிலை ஒருமை அசைச்சொல் போல. ''அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே'' எனப் பின்னும் அருளிச் செய்துள்ளார்.

இத்திருப்பதிகம் அரசமுடி மன்னனுக்கே உரித்தாதல் போல வணக்கம் சிவபிரானுக்கே உரியது என்பது உணர்த்துகின்றது.

Koviloor Digital Library

1093. கரும்பொப் பானைக் கரும்பினிற் கட்டியை
விரும்பொப் பானைவிண் ணோரும் அறிகிலா
அரும்பொப் பானை யரத்துறை மேவிய
சுரும்பொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 2

அதனை, ஏனையோர்க்குச் செய்யும்போதும், ஏனையர் தமக்குச் செய்யும் போதும், அது, சிவபிரானுக்கு ஆகும் எனப் புத்திபண்ணுவர் அறிவுடையோர்.

2. பொ-ரை: நாம் தொழுவது, கரும்பும், கரும்பினிற் கட்டியும் ஒப்பானும், விரும்பிய பொருளை ஒப்பானும், தேவரும் அறியா அரும்பு ஒப்பானவனும், அரத்துறைத் தலத்தை விரும்பிய வண்டு போல்வானும் ஆகிய பெருமானையே.

கு-ரை: சாதகர்க்குக் கரும்பில் உள்ள சாற்றைப்போல அவர்தம் சாதனங்களில் மறைந்து நின்று அவர் சாதித்தவழி அன்பினில் விளைந்த ஆரமுதாய்த் தோன்றலின் கரும்பொப்பானை எனவும், மெய்யன்பர்களாகிய சீவன்முத்தர்க்கு அவர் தம் அயரா அன்பே இன்பாய் யாண்டும் வெளிப்பட்டு நின்றே அருளுதலினால் கரும்பினிற் கட்டி (சருக்கரைக் கட்டி) எனவும், யாரேயாயினும் யான் எனது என்னும் செருக்கு அறாத வழி அவர்க்கு அவன் திருவருள் தோன்றாது ஆதலின் விண்ணோரும் அறிகிலா எனவும், ஆயினும் அச் செருக்கு நீங்கும் வகை சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என்னும் சாதனங்களைச் செய்து வருவார்க்கு அவர் தம் உள்ளத்தே உணர் வின்ப அன்பாய், முளைத்துத் தோன்றி விரிதலின் அரும்பு ஒப்பானை எனவும், அங்ஙனம் அரும்பும் அன்பினர் உள்ளக்கமலங்களை முதல்வன் தன் அருட்கதிர்களால் அறியாமைச் சுருள் நீக்கி மலர்வித்துச் 'சீவனுக்குள்ளே சிவமணம்பூத்தது' என்றபடி வெளிப்படுத்தலின் சுரும்பொப்பானை எனவும் அருளிச்செய்தார் சுவாமிகள். திருவரத் துறையை முதல்வன் விரும்பியது தன்னை உயிர்கள் அவ்விடத்து அணுக்கமாகக் கண்டு தொழுது உய்தற் பொருட்டு. விரும்பு ஒப்பானை என்றது ஒருவர்க்குத் தாம் விரும்பிய பொருளினும் மேலானது (அந் நிலைக் கண்) இல்லாதவாறுபோல எஞ்ஞான்றும் எல்லார்க்கும் தானே தலையாய பேறாய் நிற்போன் என்றபடி.'அருளிற் பெரிய தகிலத்தில்; வேண்டும் பொருளிற்றலையிலது போல்' என்னும் திருவருட் பயன் காண்க. 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' எனத் தோத்திரத்தும், 'செய்வோர் செய்திப் பயன் விளைக்கும் செய்யே

Koviloor Digital Library

1094. ஏறொப் பானையெல் லாவுயிர்க் கும்மிறை
வேறொப் பானைவிண் ணோரும் அறிகிலா
ஆறொப் பானை யரத்துறை மேவிய
ஊறொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 3

1095. பரப்பொப் பானைப் பகலிருள் நன்னிலா
இரப்பொப் பானை யிளமதி சூடிய
அரப்பொப் பானை யரத்துறை மேவிய
சுரப்பொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 4

போறச்செய்வன்' எனச் சாத்திரத்தும் ஓதுதலின். விரும்பு ஒப்பானை என்றதற்கு உயிர்களின் விருப்பத்தை ஒத்துப் பயன்விளைப்பானை என உரைப்பினும் அமையும்.

3. பொ-ரை: நாம்தொழுவது ஏறு ஒப்பானும், எல்லா உயிர்க்கும் இறைவனாகச் சிறந்து நிற்பானும், தேவரும் அறியாநெறி ஒப்பானும், அரத்துறைத் தலத்தை மேவிய உறுபொருளாவானுமாகிய பெருமானையே.

கு-ரை: ஏறு ஒப்பானை என்றது பீடு (பெருமை) உடைமை பற்றி. இறைவேறு ஒப்பான் - எல்லா உயிர்கட்கும் தனியிறைவனாக இருப்பவன். ஆறு - நெறி; தன்னை அடைந்தாரைத் தூய்மைசெய்து இன்புறுத்துதல் பற்றியும், உவகை ஊட்டுதல் பற்றியும். ஆற்றை (நதியை) ஒப்பவன் என உரைப்பினும் அமையும். தேவர் அறிகிலா என்பது முதல்வனுக்கு அடை; ஆற்றிற்கு அன்று. ஊறு - உறுவது; தான் என்றும் உளன் ஆயினும் அறியாமை நீங்கப்பெற்ற பின்னரே உயிர்கள் தன்னை உணர்தலின், அவ்வுணர்வுக்குப் பின்வந்துற்ற பொருள் போல் வான் என்பது கருத்து.

4. பொ-ரை: நாம் தொழுவது திருவரத்துறையை விரும்பி எழுந் தருளியவனும் பிறை சூடியவனுமாகிய பகல் ஒளியின் பரப்பையும், இருளில் நன்மைபுரியும் வளர்மதியின் வளர்ச்சியினையும், குறும் பையும், அன்புகாரணமாக உண்டாகும் பாலின் சுரத்தலையும் ஒக்கும் முதல்வனையே, பிறரை அன்று.

கு-ரை: பகலது பரப்பு ஒப்பானை என்க. பகல் - பகலின் கண் ணதாகிய பேரொளி. ஞாயிற்றின் ஒளியைப்போலப் பேருணர்வாய்

Koviloor Digital Library

1096. நெய்யொப் பானைநெய் யிற்சுடர் போல்வதோர்
மெய்யொப் பானைவிண் ணோரு மறிகிலார்
ஐயொப் பானை யரத்துறை மேவிய
கையொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 5

யாங்கணும் நிறைந்தோன் என்றபடி. இரப்பு - இரத்தலால் வரும் வளர்ச்சி அல்லது ஆக்கம்; அஃது ஒருங்கே நிகழாது முறையாய் நிகழும். இருள்நல் நிலாவின் வளர்ச்சி (இரப்பு) ஒப்பானை என்க. உயிர்களது அறிவின்கண் உள்ள இருளைப் படிமுறையான் அகற்றிச் சிவஞானத்தை மேல்ஓங்கி வளரச்செய்பவன் என்றபடி. 'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே' என்னும் (தி.8) திருவாசகத்தின் கருத்தும் இது. பாரித்தல் - வளர்த்தல்; 'பண்பின்மை பாரிக்கும் நோய்' என்னும் *திருக்குறள்* (851) காண்க. அரப்பு - அரம்பு - குறும்பு. (விளையாட்டு) அரப்பு ஒப்பானை - தான் செய்யும் செயல்களை விளையாட்டுப்போல எளிதில் செய்வோனை. அரும்பு எனினுமாம்.

சுரப்பு ஒப்பானை - சிவலிங்கம் முதலிய திருமேனிகளைச் சாத்திய மந்திரங்களால் வழிபடும் யோகியர்க்குக் கறந்தபோது வெளிப் படும் பால் போல வெளிப்பட்டு அருள்பவனை; மெய்யன்பால் வழிபடும் சிவஞானிகளுக்குத் தலையீற்றுப் பசு கன்றை நினைந்த போது பாலைச் சுரக்குமாறு போல, அவர் வேண்டும் போதெல்லாம் வெளிப் பட்டருள்வன் - எனச் சாத்திரம் ஓதுமாறு அவரவர் கருத்து வகைபற்றித் தாழ்த்தும் விரைந்தும் வெளிப்படும் வகையைக் குறிப்பித்தபடி.

5. பொ-ரை: நாம் தொழுவது நெய்யும், நெய்யிற் சுடர் போல் விளங்கும் மெய்யும், பெருவியப்பும் போல்வானும், தேவரும் அறியாதவனும் அரத்துறை யென்னுந் தலத்தை விரும்பிய ஒழுக்க மாவானுமாகிய பெருமானையே.

கு-ரை: நெய் ஒத்தல் - பாலில் நெய்போல் மறைய நின்று உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுகவாங்கிக் கடைய முன்நிற்றல், நெய்யூற்றி ஏற்றும் விளக்கில் உண்டாகும் சுடருருவம் போல்வதோர் வடிவத்தை உடையவன்.

ஐ - வியப்பு; 'ஐ வியப்பாகும்' (*தொல் - உரி . 89*) கை - ஒழுக்கம்; கைஒப்பானை என்றது அறமே வடிவாகியோன். கை ஒத்தல் - ஒழுக்கத்தோடு ஒற்றுமைப்பட்டு நிற்றல்.

Koviloor Digital Library

1097. நெதியொப் பானை நெதியிற் கிழவனை
விதியொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அதியொப் பானை யரத்துறை மேவிய
கதியொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 6

1098. புனலொப் பானைப் பொருந்தலர் தம்மையே
மினலொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அனலொப் பானை யரத்துறை மேவிய
கனலொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 7

6. பொ-ரை: நாம் தொழுவது நியதி ஆவானும், நியதியின் தலைவனும், விதியாவானும், தேவர்களாலும் அறிய முடியாதவனும், விச்சுவாதிகளும் ஆகிய அரத்துறையென்னுந் தலத்தை மேவி உயிர்களுக்குக் கதியாயிருப்பானையே.

கு-ரை: நெதி - நியதி என்றதன் திரிபு. அது பொருள்கள் காரியப்படும் நிலையில் காணப்படும் மாறுதலில்லாத ஒழுங்குமுறை; இதனை வடநூலார் ருதம் என்பர். நிதி என்ற பாடமும் உண்டு. நெதியின் கிழவன் - இவ்வொழுங்கை உலகத்திற்கு அமைத்து நடாத்தும் தலைவன் என்றபடி.

விதி - செய்வினைப்பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவாகிய ஊழ். இதனை மேலை நாட்டார் அற ஆற்றல் (Moral Force) என்பர். அதி - உயிர்களின் உணர்வைக் கடந்தவர். 'உலகினை இறந்து நின்றது அவனுரு' - *(சித்தி- சுபக்கம். சூத்.1:49.)* 'விசுவாதிகோ ருத்ரோ மஹர்ஷி:' என்பது *உபநிடதம்*. கதி - நெறி. உயிர்களுக்கு நெறிகளை வகுத்தவர் என்பது கருத்து.

7. பொ-ரை: நாம் தொழுவது புனலும், பொருந்தாதார்க்கு மின்னலும். அனலும் போல்வானும், தேவர்களாலும் அறிய முடியாதவனும் அரத்துறைத் தலத்துக் கனல் போன்றவனுமாகிய பெருமானையே.

கு-ரை: புனல் ஒப்பான் - தண்ணீர் எப்பொருளையும் வளர்த்தல் போல, உயிர்தோறும் நின்று அவற்றின் அறிவை வளர்த்து வருவோன்; 'மருவிய உயிரும் வளர்ப்போன் காண்க' என்பது தி.8 திருவாசகம். பொருந்தலர் தம்மை மினல் ஒப்பானை - பகைவர்க்கு

Koviloor Digital Library

1099. பொன்னொப் பானைப்பொன் னிற்சுடர் போல்வதோர்
மின்னொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அன்னொப் பானை யரத்துறை மேவிய
தன்னொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 8

1100. காழி யானைக் கனவிடை யூருமெய்
வாழி யானைவல் லோருமென் றின்னவர்
ஆழி யான்பிர மற்கும ரத்துறை
ஊழி யானைக்கண் டீர்நாந் தொழுவதே. 9

இடிபோன்றவனை; உருபு மயக்கம். மின் என்பது இங்கு அதனோடுடன் நிகழும் இடியை உணர்த்திற்று. 'செறுநர்த் தேய்க்கும் செல்லுறழ் தடக்கை' என்பது தி.11திருமுருகாற்றுப்படை. அனல் - சுழன்று எரியும் தீ. இஃது இறைவன் திருமேனிக்கு உவமையாயிற்று. கனல் - மூளாத் தீ; உயிர்தோறும் கரந்து நின்று அவற்றின் அறியாமையைத் தேய்த்து ஓங்கிவளரும் பேருணர் வாய் நிற்றல்பற்றி முதல்வனுக்கு இஃது உவமையாயிற்று. 'மூளாத் தீப் போல் உள்ளே கனன்று' (சுந்தரர்) (தி.7. ப.95. பா.1) எனும் ஆட்சி காண்க. கன்னல் எனினும் அமையும்; இன்பப் பொருளாய் அநுபவப்படுபவன் என்பது இதன் கருத்து.

8. பொ-ரை: நாம் தொழுவது, பொன்னும், பொன்னின் சுடர் போன்ற மின்னலும், அன்னையும் ஒப்பானும், தேவர்களாலும் அறிய முடியாதவனும், அரத்துறைத் தலத்து எழுந்தருளியிருந்து தனக்குத் தானே ஒப்பானவனுமாகிய பெருமானையே.

கு-ரை: பொன் ஒப்பானை - 'பொன்னார் மேனியனே' 'பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி' 'நமோ ஹிரண்ய பாகவே ஹிரண்யவர்ணாய ஹிரண்ய ரூபாய' என்னும் உரைகள் காண்க. அன்னை ஒப்பான் என்பது அன்னொப்பான் எனவிகாரப் பட்டு. நின்றது. தன் ஒப்பான் - தனக்குப் பிறர் ஒப்பாவதின்றித் தானே ஒப்பாக உள்ளவன். 'நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்' என்று பின்னும் அருளிச்செய்வர்.

9. பொ-ரை: நாம்தொழுவது, காழித்தலத்துக் கடவுளும், பெருமையை உடைய விடையூரும் நித்தத் திருமேனி உள்ளவரும், பிறரால் வல்லோரும் என்று கூறப்படுவோராகிய திருமால்

Koviloor Digital Library

1101. கலையொப் பானைக் கற்றார்க்கோ ரமுதினை
மலையொப் பானை மணிமுடி யூன்றிய
அலையொப் பானை யரத்துறை மேவிய
நிலையொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 10

திருச்சிற்றம்பலம்

பிரமனுக்கும், ஒடுங்கும் தானமாக உள்ளவருமாகிய திருஅரத்துறை அடிகளையே.

கு-ரை: ''காழியான், விடையூரும் மெய்வாழியான், ஆழியான் பிரமற்கும் ஊழியான் என்னும் மூன்று தொடர்களும் சிவபிரான் என்றுமுள்ளவன் என்னும் மறைகளின் துணிபை வலியுறுத்துவன. காழி - இறைவனுக்கு அருணிலைத் தானமாக அமைந்து பன்னிரண்டு ஊழிகளில் அழியாது நிலைபெற்றுப் பன்னிரு பெயர் எய்திய பதி. விடை - அறவிடை; அஃது ஊழிக்காலத்துத்தான் அழியாதிருத்தற் பொருட்டு முதல்வனைச் சார்ந்து அவன்றன் ஆணையால் அவனைத் தாங்கும் ஊர்தியாகி நிலைபேறு உடையதாயிற்று. திருமாலையும் பிரமனையும் காப்புக் கடவுளும் படைப்புக் கடவுளுமாக உடைமை பற்றி ஊழியைக் கடக்க வல்லோரும் ஆவார் என்பார்.

மெய்வாழியான் - நிலைபேறுள்ள அநாதி முத்த சித்து உருவினன். என்றின்னவர்-என்ற இவர் என்னும் பொருள்பட நின்றது.

10. பொ-ரை: நாம் தொழுவது கலையும், கற்றார்க்கமுதும், மலையும் போல்வானும், மலையெடுக்கலுற்ற இராவணனை மணி முடியின்கண் ஊன்றி அலைக்கலுற்றானும், அரத்துறை மேவிநிலை பெற்றிருப்பானுமாகிய பெருமானையே.

கு-ரை: கலையொப்பான் - கலிப்பது கலை; கலித்தல் - நீக்குதல், செலுத்துதல்; மக்களது அறியாமையை நீக்கி, அவர் தம் அறிவை நல்லதன்கண் உய்ப்பது கலை. அதுபோல முதல்வன் உயிர்களின் அகவிருள் நீக்கி அவற்றின் அறிவைப் போகத்தினும் வீட்டினும் செலுத்துபவன். ஓர் அமுது - ஒப்பற்ற அமுது; கற்றாரால் தனக்கு உவமையில்லாதது எனத் துணியப்படும் அமுது. ஓர்த்து உணரப்படும் அமுது என வினைத்தொகையாக்கினும் அமையும். மலையொப்பானை - உலகிற்கு அச்சாக, எல்லா வளங்களையும் தன்பாற் கொண்டு துளக்கமின்றி இருப்பது மலை. முதல்வனும் இத்

Koviloor Digital Library

தன்மையன் என்றபடி. நிலையொப்பானை - முதல்வன் கடல் போன்று அளக்கவாராத கடந்த நிலையினன் ஆயினும், அது நீந்தவல்லார்க்கு அலைத்து ஆடுதற்குக் கைவந்து நின்றாற்போலத் தானும் அன்பர் களுக்கு நிலைத்துநின்று இன்புறும்படி ஆனந்தத்தை மிகக்கொடுப் பவன் என்பது கருத்து.

இத்திருப்பதிகம் முதல்வன் வணக்கத்திற்கு உரியன் என்னும் முதன்மைக் கருத்தைப் பொற்சரடுபோல் பாடல்தோறும் ஊடுருவப் பெற்று, பல்வேறு அரிய இனிய உவமைகளால் அவன்றன் குறைவிலா மங்கலக் குணங்களைக் கோவை செய்து ஞானத்தால் தொழுவார்க்குத் தரப்பட்ட மணிமாலையாகத் திகழ்தல் அறியத்தக்கது.

திருநாவுக்கரசர் புராணம்

தூங்கானை மாடத்துச் சுடர்க்கொழுந்தின் அடிபரவி
பாங்காகத் திருத்தொண்டு செய்துபயின் றமருநாள்
பூங்கானம் மணங்கமழும் பொருவில்திரு அரத்துறையும்
தேங்காவின் முகில்உறங்குந் திருமுதுகுன் றமும்பணிந்து.

- தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

4. திருஅண்ணாமலை

பதிக வரலாறு:

மலைநாட்டுப்பதிகளை இறைஞ்சி வண்டமிழ் பாடி மாதோர்பாகர் அருளாலே வடபால் நோக்கி ஆதிதேவர் அமர்ந்த திரு அண்ணாமலையை நண்ணிய வாகீசர், அதனைத் தொழுது வலங்கொண்டு அதன்மிசையேறி, தொண்டர்தொழும்புக்கு எதிர் நிற்கும் அங்கண் அரசைத் தொழுது எழுந்து திளைத்து, தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம்பெருமை சாதித்து, அண்ணாமலை மேல் அணிமலையை ஆராத அன்பின் அடியவர் கண்ணாரமுதை, விண்ணோரைக்காக்க எவரும் உண்ணாத நஞ்சை உண்டானைக் கும்பிட்டு உருகும் சிந்தையுடன் பணிந்து பண்ணார் பதிகத் தமிழ்பாடி, பணியார் வேணிச்சிவபெருமான் பாதம் போற்றிப் பணி செய்யும் நாள் எம்பெருமான் மண்மேல் மகிழும் இடமெங்கும் தணியாக்காதலுடன் சென்று வணங்கி மீண்டருளும் போது பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 311. 314.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 117 **பதிக எண்: 4**

திருச்சிற்றம்பலம்

1102. **வட்ட னைம்மதி சூடியை வானவர்**
சிட்ட னைத்திரு வண்ணா மலையனை
இட்ட னையிகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட னையடி யேன்மறந் துய்வனோ. 1

1. பொ-ரை: கந்தையுடை அணிந்தானும், மதிசூடியும், வான வர்க்கு உயர்ந்தானும், திருவண்ணாமலை வடிவினனும், விருப்பம் உடையானும், இகழ்ந்தார் புரங்கள் மூன்றினையும் அட்டானும் ஆகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலும் கூடுமோ.

கு-ரை: நினைத்தால் வீடு எய்துவிப்பது அண்ணாமலை என்னும் திருத்தலம். பிரம விட்டுணுக்களால் முடியும் அடியும் அணுக

Koviloor Digital Library

முடியாதபடி நிமிர்ந்தெழுந்த சோதிப்பிழம்பே மலையாக உருக் கொண்டு உள்ளது ஆதலின், அத்திருவுரு அண்ணாமலை (அணுக வொண்ணாத மலை) என வழங்கி வருவது.

இத் திருப்பதிகத்தில் பாடல் தோறும் திருஅண்ணாமலை யனை மறந்துய்வனோ (மறவேன்) என்றருள்கின்றார் அப்பர் அடிகள். திரிபுரம் எரித்த செய்தியும் பாடல் தோறும் வருகின்றது.

வட்டு - சிறு உடை, அதை அணிந்தவன், வட்டன். வானவர் சிட்டன்-வானவரால் பெரியோன் என உணர்ந்து தொழப்படுவோன். சிட்டன்-சிரேஷ்டன், உயர்ச்சியுடையோன். இட்டம் உடையோன் இட் டன்; முதல்வன் உயிர்களுக்குச் சிவத்துவத்தை வழங்கும் விருப்பம் உடையான்ஆதல்பற்றிஇட்டன்எனப்பட்டான் ; இட்டம் - விருப்பம்.

இகழ்ந்தார் - திரிபுரத்தசுரர்கள் (கமலாக்கன், தாரகாக்கன், வித்யுன்மாலி என்னும் மூவர்) இம்மூவரும் முன்னர்ச் சிவ வழிபாடு உடையராய் இருந்து பின் நாராயணன் நாரதர் என்போரால் புத்தமதம் அறிவுறுக்கப்பட்டுச் சிவவழிபாட்டை இகழ்ந்து கைவிட்டனர். அவ் விகழ்ச்சியே அவர்தம் திரியும் வலிய முப்புரங்களை அழித்த தென்க.

புரம் - கோட்டை, இக் காலத்துப் போர் விமானங்கள் பல வற்றைத் தாங்கிப் பறக்கும் பெருவிமானந் தாங்கிக் கப்பல்[1] போன்றது.

'தொழுவார்க்கே அருளுவன் சிவபெருமான்' என்னும் உண் மையை விளக்குவது திருவண்ணாமலை வரலாறு. சிவ வழிபாடே ஒருவர்க்குப் பகையை வெல்லும் வலியைத் தருவது. அதனை இகழின் தம்வலி இழப்பர் என்னும் உண்மையை உணர்த்துவது திரிபுரம் எரித்த வரலாறு. அட்டன் - அட்டவன், அடுதலைச் செய்தவன்.

சுவாமிகள் 'மறந்து உய்வனோ?' எனத் தம்மேல் வைத்துக் கூறினாரேனும், 'யாரும் மறந்து உய்தல் இல்லை; யாவரும் திருவண்ணாமலையனை மறவற்க' என்பதே கருத்தாகக் கொள்க. ''ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில் ஓரம்பே கண்டோம் என்றுந் தீபற! ஒன்றும் பெருமிகை உந்தீபற'' ''உய்ய வல்லார் ஒருமூவரைக் காவல் கொண்டு எய்யவல் லானுக்கே உந்தீபற'' என்பவற்றை ஒப்புநோக்குக.

[1] Air-Craft Carrier

Koviloor Digital Library

1103. வான னைம்மதி சூடிய மைந்தனைத்
தேன னைத்திரு வண்ணா மலையனை
ஏன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
ஆன னையடி யேன்மறந் துய்வனோ. 2

1104. மத்த னைம்மத யானையு ரித்தவெஞ்
சித்த னைத்திரு வண்ணா மலையனை
முத்த னைம்முனிந் தார்புர மூன்றெய்த
அத்த னையடி யேன்மறந் துய்வனோ. 3

2. பொ-ரை: வானத்துள்ளவனும், பிறைசூடிய பேராற்றல் உடையவனும், தேனென இனிப்பவனும், திருவண்ணாமலைத் தலத்துக்கு உடையவனும், பன்றிக்கொம்பை அணிந்தவனும், இகழ்ந்தார் புரங்கள் மூன்றினையும் எய்த விடையேறுடையவனும் ஆகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: வானன் - பரமஆகாசம் எனப்படும் சிவலோகத்துள்ளான்; இதுவே உயிர்களின் உள்ளங்களில் சிற்றம்பலமாக உள்ளது. பொதுவாக ஆகாயத்தை வடிவாகக் கொண்டவன் எனினும் அமையும். மைந்தன் - வலியன். தேனன் - தேன் போலும் இனியன். ஏனன் - ஏனத்தின் கோட்டை மார்பில் அணிந்தவன். ஏனம் - திருமாலாகிய ஆதிவராகம். ஆனன் - ஆனை (விடையை) ஊர்தியாக உடையவன்.

3. பொ-ரை: ஊமத்தமலர் அணிந்தவனும், யானைத் தோலை உரித்துப் போர்த்து எம் சித்தத்துறைபவனும், திருஅண்ணாமலைத் தலத்துக்குடையவனும், முத்தனும், முனிந்தார் புரங்கள் மூன்றையும் எரியுண்ணச்செய்த அத்தனுமாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: மத்தன் - ஊமத்த மலர் அணிந்தவன். சித்தன் - சிந்தையை கோயிலாகக் கொண்டவன். முத்தன் - அநாதி முத்தன்; இயல்பாகவே பாசங்களின் நீங்கியோன். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' என்றபடி. முனிந்தார் - ஒட்டிவாழ வெறுத்த வராய திரிபுரத்தசுரர்கள். அத்தன் - தந்தையாயிருப்பவன். 'அத்தா வுனக்காளாய் இனி அல்லேன் எனலாமே' என்றார் (தி.7. ப.1. பா.1) சுந்தரரும்.

Koviloor Digital Library

1105. காற்ற னைக்கலக் கும்வினை போயறத்
தேற்ற னைத்திரு வண்ணா மலையனைக்
கூற்ற னைக்கொடி யார்புர மூன்றெய்த
ஆற்ற னையடி யேன்மறந் துய்வனோ. 4

1106. மின்ன னைவினை தீர்த்தெனை ஆட்கொண்ட
தென்ன னைத்திரு வண்ணா மலையனை
என்ன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
அன்ன னையடி யேன்மறந் துய்வனோ. 5

4. பொ-ரை: காற்றாகியுள்ளவனும், கலக்குகின்ற வினைகள் விட்டு நீங்கத் தோற்றம்புரிபவனும், திருவண்ணாமலைத் தலத்துக் குடையவனும், உலகினை நன்றுந் தீதுமாய்க் கூறுசெய்து வகுத்த வனும், கொடியவர் புரங்கள் மூன்றையும் எய்த வீரநெறி உடையவனு மாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: காற்றன் - (அட்ட மூர்த்தங்களில் காற்றும் ஒன்றா தலின்) காற்று வடிவானவன். 'காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி' என்றார் திருத்தாண்டகத்தும். கலக்கும் - உயிர்களைத் துன்புறுத்தும். தேற்றன் - தெளிவிப்பவன். பழவினைகளைப் பாறுவித்துத் தன்னடி யார்களைத் தெளிவிப்பவன் என்க. கூற்றன் - கூறுசெய்பவன். ஆற்றன் - சமயநெறிகளாயிருப்பவன். நீதிநெறியே வடிவாக உடையன் எனலுமாம். (ஆறு - நெறி)

5. பொ-ரை: மின் ஒளியுருவாயவனும், வினைகளைப் போக்கி என்னை ஆட்கொண்ட அழகியவனும், திருவண்ணாமலைத் தலத்துக்குடையவனும், என்னை உடையவனும், இகழ்ந்தவர் புரங்கள் மூன்றையும் எய்த அத்தன்மையனும் ஆகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: மின்னன் - மின்ஒளி போன்ற ஒளிவடிவினன். தென்னன் - அழகியவன்; தென்னாடுடையவன் எனினும் அமையும். என்னனை - என்னை உடையவனை. அன்னனை - அத்தன்மை யோனை, திரிபுரங்களை எரிக்குந் தன்மையோன். அத்தன்மையாவது வேதத்திற் கூறப்படும் தெய்வம் எல்லாம் கருவிகளாகவே அமையத் தான் ஒருவனே வினைமுதல் (கருத்தா) ஆதலும், கருவிகளால்

Koviloor Digital Library

1107. மன்ற னைம்மதி யாதவன் வேள்விமேல்
சென்ற னைத்திரு வண்ணா மலையனை
வென்ற னைவெகுண் டார்புர மூன்றையுங்
கொன்ற னைக்கொடி யேன்மறந் துய்வனோ. 6

1108. வீர னைவிட முண்டனை விண்ணவர்
தீர னைத்திரு வண்ணா மலையனை
ஊர னையுண ரார்புர மூன்றெய்த
ஆர னையடி யேன்மறந் துய்வனோ. 7

அன்றிச் சங்கற்ப ஆற்றலால் செயல் நிகழ்த்தலும் சார்ந்தாரைக் காத்தலும் முதலியவற்றால் விளங்கும் இறைமைக் குணம்.

6. பொ-ரை: ஐந்துவகை மன்றங்களில் (சபைகளில்) எழுந்தருளியிருப்பவனும், மதியாத தக்கன் வேள்வியின்மேல் உருத்துச் சென்றவனும், திருவண்ணாமலைத் தலத்துக்கு உடையவனும், புலனைந்தும் வென்ற வென்றி உடையவனும், சினந்தார் புரங்கள் மூன்றையும் கொன்றவனும் ஆகிய பெருமானைக் கொடியவனாகிய அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: மன்றன் - அம்பலத்தே நடமாடுபவன். மதியாதவன் - தன்னை முதல்வன் என்று மதிக்க அறியாத தக்கன். வேள்வி மேல் சென்றன் - அவன் இயற்றிய வேள்வியை அழிக்கச்சென்றவன். வென்றன் - வென்றவன்; புலனைந்தும் என்னும் அதற்குரிய செயப்படு பொருள் அவாய்நிலையான் பெறப்பட்டது. (நேரிழையைக் கலந்து நின்றே புலனைந்தும் வென்றானை என்பர் தி.6 திருத்தாண்டகத்து) கொன்றன் - கொன்றவன், அழித்தவன்.

7. பொ-ரை: வீரச்செயல்களைப் புரிந்தவனும், விடம் உண்டவனும், விண்ணவர்க்கு அச்சம் நீக்குபவனும், திருவுண்ணாமலை வடிவினனும், மருத நிலத்தை இடங்கொண்டவனும், உணராதவர் புரங்கள் மூன்றையும் எய்தவனும், ஆத்திமாலை சூடியவனுமாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: வீரன் - வீரத்திற்கு உறைவிடமானவன். இறைவன் வீரச்செயல்களை எட்டாகத் தொகுத்து வழங்கும் வழக்குக் காண்க. உண்டனை - உண்டவனை. விண்ணவர் தீரன் - விண்ணவரை அச்சம்

Koviloor Digital Library

1109. கருவி னைக்கடல் வாய்விட முண்டவெம்
திருவி னைத்திரு வண்ணா மலையனை
உருவி னையுண ரார்புர மூன்றெய்த
அருவி னையடி யேன்மறந் துய்வனோ. 8

தீர்த்து ஆட்கொள்ளும் திண்ணியன். ஊரன் - மாயோன் முதலிய தெய்வங்கள் போல ஒவ்வொரு நிலத்திற்கே உரிய கருப்பொருள் ஆதலின்றி எந்நிலத்துக்கும் உரிமை உடைமையின், மருத நிலத்தை இடங்கொண்டோன்; திருநின்றியூர், திருப்புன்கூர் முதலாக ஊர் என முடியும் தலங்களில் உறைவோன் எனினும் அமையும். ஆரன் - திரு ஆத்திமாலையை அணிந்தவன்; ஆர் - ஆத்தி. 'நாறும் பூவும் நம்பற் காம்; நாறாப் பூவும் நம்பற்காம்' என்ப ஆகலின் அடியார்க்கு எளிதில் கிடைக்கும் ஊமத்தை, ஆத்தி முதலிய ஏற்றுச் சூடி அவர்க்கு அருள் செய்பவன் என்பது கருத்து.

8. பொ-ரை: கருவாயிருந்து காப்பவனும், கடலெழு நஞ்சு உண்ட எம்திருவாகியவனும், திருவண்ணாமலை வடிவினனும், உருவத்திருமேனி உடையவனும் உணராதவர் புரங்கள் மூன்றையும் எய்தவனும், அருவத்திருமேனி உடையவனுமாகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: கருவினை - உலகெலாமாகி வேறாய் உடனுமாய் நிற் போன் ஆகலின், உயிர்கள் தோன்றுங்கால் அவ்வக் கருவின் கண் அவ் வவ்வுயிர்களை அவ்வவற்றின் வினைக்கீடாக விழச்செய்து அவற்றின் உடம்பையும் கரணங்களையும் ஆண்டைக்குப் பொருந்தும் நுகர்ச்சி களையும் தந்து வளர்ப்போன் என முதல்வனைக் குறிப்பித் தருளினார். இனி உலக முதற்காரணமாகிய மாயைக்குத்தான் தாரக மாய் நின்று தனது சத்திசங்கற்பத்தால் உலகைத் தோற்றுவித்தல்பற்றி முதல்வனைக் கரு என்றார் எனினும் அமையும். 'ஓங்காரத்தொருவன் காண். உலகுக் கெல்லாம் வித்தவன்காண்' (தி. 6. ப. 48. பா.4.) என சுவாமிகள் பின் அருளிச்செய்தல் காண்க. 'தத் ஆத்மாநம் அகுருத' (அதுதன்னைத் தானே ஆக்கியது) என்னும் *தைத்திரீய உரைக்கும்* இதுவே கருத்து என்க.

கடல்வாய்விடம் - கடலாகிய இடத்து எழுந்த ஆலகாலம்; வாய் - இடம். 'திருநீலகண்டம்' தன்னை எண்ணுவார்க்குத் துயர் அனைத்தும் நீக்கி வீடு பயப்பிப்பதாதலின், அத்திரு அடையாளமுள்ள முதல்வன் திருவுரு மெய்யுணர்ந்தோரால் விரும்பப்படுவது என்னும்

Koviloor Digital Library

1110. அருத்த னையர வைந்தலை நாகத்தைத்
திருத்த னைத்திரு வண்ணா மலையனைக்
கருத்த னைக்கடி யார்புர மூன்றெய்த
அருத்த னையடி யேன்மறந் துய்வனோ. 9

கருத்தால் 'கடல்வாய்விடம் உண்ட எம் திருவினை' என்றார். 'ஓம் நீல கண்டாய நம' என்னும் எட்டெழுத்தை நவில்வார் மீளப்பிறவார் எனக் *காஞ்சிப் புராணம்* (சிவபுண்ணியப்படலம்) கூறுகிறது. திருநீல கண்டத் திருப்பதிகம் ஒருவரைப் பிறந்த பிறவியிற் பேணி முதல்வன் கழல் அடையச்செய்யும் என அதன் திருக்கடைக் காப்புக் குறித்தல் காண்க.

அருவம், அருவுருவம், உருவம் என்னும் நிலைகளைக் கடந்த முதல்வன் உயிர்கள் தன்னை உணர்ந்து உய்யக் கருதி அத்திரு மேனிகளை மேற்கொண்டான் ஆகலின், உருவினை எனவும் அரு வினை எனவும் அருளிச்செய்தார். உரு - மகேச்சுரத் திருவுருவங்கள்; அரு-யோகியர் பிரணவம், பிராசாதம் முதலிய மந்திரங்களின் துணை யால் அகத்தே காணும் ஒளியுரு. அருவுரு - ஐம்பெரு மனுக்களாலும், திருவைந்தெழுத்தாலும் அமையும் மந்திரத் திருமேனி.

9. பொ-ரை: பொருள் வடிவாயுள்ளவனும், ஐந்தலையுடைய நாகத்தைத் திருந்த அணிந்தவனும், திருவண்ணாமலை வடிவினனும், தலைவனானவனும், தீக்குணங்களைக் கடியாதார் புரங்கள் மூன்றை யும் எய்தவனும், உயிர்களுக்கு வினைப்பயனைப் பிறழாது நுகர்விப் போனும் ஆகிய பெருமானை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: அருத்தன் - நாற்பேறுகளின் இரண்டாவது பேறாகிய பொருளாயிருப்பவன். சொற்பொருளாயிருப்பவன் எனினும் மெய்ப் பொருள் எனப் பேசப்படுபவன் எனினும் பொருந்தும். 'கற்றநூற் கருத்தும்நீ அருத்தம் இன்பம் என்றிவை முற்றும்நீ' (தி.3. ப.52. பா.3). 'பொன்னானாய் மணியானாய் போகமானாய் பூமிமேல் புகழ்தக்க பொருளே'. (அப்பர்) என்னும் திருமுறை உரைகள் காண்க. அரவைந் தலை நாகம் - முன் பின்னாகத்தொக்க இருபெயரொட்டு. ஐந்தலை நாக மாகிய அரவு என்க. திருத்தன் - திருந்த அணிந்தவன். கருத்தன் - தலை வன், தன்வயம் உடையோன். 'சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர் வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான், இனிச் சங்காரமே முதல்' என்றது *(சிவஞான போதம். 1. 3.)* கடியார் - கடிதல் நீக்குதல், தீமையைக் கடிந்து ஒழுகாத அசுரர் என்றபடி.

Koviloor Digital Library

1111. அரக்க னையல றவ்விர லூன்றிய
திருத்த னைத்திரு வண்ணா மலையனை
இரக்க மாயென் உடலுறு நோய்களைத்
துரக்க னைத்தொண்ட னேன்மறந் துய்வனோ. 10

திருச்சிற்றம்பலம்

அருத்தன் - அருத்துவோன், நுகர்விப்போன் (வினைப்பயனை என்பது அவாய் நிலையான் வந்தது). புரமூன்றெய்த அருத்தன் என அடுத்து நின்றமையின். எய்தது வினைப்பயன் நுகர்வித்தற்கு எனக்கொள்க. சுதன்மன், சுபுத்தி, சுசீலன் என்போரைக் கொண்டது அந்நியதிபற்றி.

10. பொ-ரை: இராவணன் அலறுமாறு அழகிய திருவிரலை ஊன்றிய திருத்தமானவனும், திருவண்ணாமலை வடிவினனும், இரக்கம் கொண்டு என் உடலில் உற்ற நோய்களைத் துரத்திய அருளாளனுமாகிய பெருமானைத் தொண்டுபுரியும் அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ.

கு-ரை: அரக்கன் - இராவணன். அலற - வாய்விட்டு அரற்றும் படி. திருத்தன் - மாறுபடாதவன், செய்யன், திருந்தும்படி செய்தவன் எனினும் பொருந்தும்; என்னை? செருக்கு நீங்கிப் பண் இசைத்து அருள் பெற்றான் அரக்கன் ஆகலின். இரக்கமாய் - இரங்கியருளி. உடலுறு நோய் ஒன்றேயாயினும் அதனால் பெற்ற வருத்தம் பல வகைப் பட்டமையின் நோய்களை என்றார். துரக்கன் - துரத்தியவன்.

உடலுறு நோய்களைத் - துரக்கனை என்பது பாடமாயின், உடலில் உற்ற சூலைநோயைக் களைந்த உரக்கனை எனப் பிரிக்க. உரக்கன் - வலிமையுள்ளோன்; தன்நிலை திரியாதவன். என் உடல் உறு நோயை இரக்கமாய்க் களைந்த என்றமையின் நோய் பிறநெறி சார்ந்தமை பற்றி உற்றதென்பதும், அதனைச் சிவபிரான் இரக்கம் (கருணை) காரணமாகவே அதன் மூலத்தோடு களைந்தருளினான் என்பதும் பெறப்படுதல் காண்க. 'மந்திரம் நமச்சிவாய ஆக நீறணியப் பெற்றால் - வெந்தறும் வினையும்நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே' என்ற இடத்தும் நோய் அதன் காரணமாகிய வினையுடன் ஒருங்கே வெந்து அறும் என்றமை காண்க.

Koviloor Digital Library

5. திருஅண்ணாமலை

பதிக வரலாறு:

மலைநாட்டுப்பதிகளை இறைஞ்சி வண்டமிழ்பாடி மாதோர்பாகர் அருளாலே வடபால் நோக்கி ஆதிதேவர் அமர்ந்த திரு அண்ணாமலையை நண்ணிய வாகீசர் அதனைத் தொழுது பாடிய தமிழ் மாலை இத்திருப்பதிகம். (தி.12 பெரிய புராணம்.311- 312.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 118 பதிக எண்: 5

திருச்சிற்றம்பலம்

1112. பட்டி ஏறுகந் தேறிப் பலவி(ல்)லம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தியண் ணாமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே. 1

1. பொ-ரை: அடங்காத ஏற்றினை அடக்கி விடையாக் கொண்டு உகந்து ஏறிப் பல மனைகள் தோறும் விருப்பத்தோடு சென்று இரந்து உண்டு அலைந்து சுழலும், அட்டமூர்த்தியின் திருவுருவாகிய திருஅண்ணாமலையைக் கைகளால் தொழ வினைகள் கெட்டு ஒழியும்; என்றும் கேடு இல்லை; காண்பீராக.

கு-ரை: அண்ணாமலையை நினைந்து தொழ உண்டாம் பயன் கூறுகிறது இத்திருப்பதிகம். பட்டி - அலைந்து திரிந்து கள்ளமேய்ச்சல் மேய்கின்ற மாட்டைப் பட்டிமாடு என்பர். ஊர் சுற்றித் தன் விருப்பம் போல் திரிவாரையும் பட்டி என்பர். ''அகப் பட்டியாவார்'' *(குறள்)* ''நோதக்க செய்யும் சிறுபட்டி'' *(கலித்தொகை. 51:1)* திருமால் கண்ணனாய் ஆயர்பாடியில் சுற்றித் திரிந்து வெண்ணெய் திருடி உண்டவராதலால் பட்டி என்றார். அறவிடை எனினும், அறத்தின் திறம் உயிர்களால் உணர்தல் கூடாமையின் பட்டி என்றார் எனக்கொள்க. அவரே இடபமாய்த் தாங்குதலின் பட்டி ஏறு என்றார். பலஇில்லம் - தாருகாவனத்திலிருந்த ரிஷிபத்தினியர் வீடுகள். இட்டமாக - விருப்பத்துடனே. இரந்துண்டல் - பிச்சையேற்றுண்டல். உழிதரும் - திரியும். அட்ட மூர்த்தி - எட்டுப்பொருள்களை வடிவமாக உடையோன். மூர்த்தி - வடிவு, அதனை உடையது மூர்த்தம். 'இரு நிலனாய்த்

Koviloor Digital Library

1113. பெற்ற மேறுவர் பெய்பலிக் கென்றவர்
சுற்ற மாமிகு தொல்புக ழாளொடும்
அற்றந் தீர்க்குமண் ணாமலை கைதொழ
நற்ற வத்தொடு ஞானத் திருப்பரே. 2

தீயாகி நீருமாகி இயமானனாய் எரியும் காற்றுமாகி அரு நிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாயமாய் அட்டமூர்த்தியாகி' (தி.6. ப.94. பா.1) அட்ட மூர்த்தங்களை உணர்க. திருமால் பிரமன் தேடுதற்கரிய சோதி வடிவாய் எழுந்தருளிய பெருமானாதலின் அட்டமூர்த்தங்களில் ஒன்றும் அத்தன்மையை நினைந்து கூறினார்.

வினைகெட்டுப்போம் நமக்குக் கேடு இல்லை எனக் கூட்டுக. கேடு - துன்பம். காண்மின் என்பது உறுதியுரை, நேரிற்காணுங்கள் என்னும் பொருள் தருதலின்.

2. பொ-ரை: மனைகளிலிடும் பலிக்கெனப் பெற்றம் ஏறும் பெருமான், தனக்குச் சுற்றமாமெனும் உமையம்மையோடும் வருவார். துயர்தீர்க்கும் திருவண்ணாமலையைக் கைதொழுவார். நல்ல தவத்தோடு ஞானநெறியில் பிறழாது இருக்கப்பெறுவர்.

கு-ரை: பெய்பலிக்குப் பெற்றம் ஏறுவர் என்று புராணங்களால் கூறப்படும் பெருமான் தொல்புகழாளொடும் அதிட்டித்து (இடமாகக் கொண்டு) நின்று அற்றம் தீர்க்கும் அண்ணாமலை என்க. தீர்க்கும் என்னும் பெயரெச்சம் இடப்பெயர்கொண்டது. முதல்வனுக்கு மூர்த்தமும் இடமே ஆகலின்.

சுற்றமாமிகுதல் - வாழ்க்கைத்துணை எனும்படி மேம்படுதல். தொல்புகழ் - ''*சர்வம் சக்திமயம் ஜகத்*'' ''அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை எல்லாம்'' (*சித்தி. சுபக்கம். 69*) என உணர்த்தப்படும் பொருள் சேர்புகழ். (தி.1. ப.10. பா.11) ''உமையாளொடும் உடனாகிய ஒருவன் - பெண்ணாகிய பெருமான் மலை'' என அருளிச்செய்ததும் காண்க.

அற்றம் - துன்பம். கைதொழ - நற்றவத்தொடு ஞானத் திருப்பரே - என்றது கையால் தொழுவோர் சீவன்முத்தராயின் சரியை கிரியை யோகங்களோடு கூடிய ஞானநெறிக்கண் பிறழாது நிற்கப் பெறுவர் எனவும், ஏனையராயின், நற்றவத்தினால் ஞானத்தைத் தலைப்படுவர் எனவும் இரட்டுறமொழிய நின்றது.

Koviloor Digital Library

1114. பல்லி லோடுகை யேந்திப் பலவி(ல்)லம்
ஒல்லை சென்றுணங் கல்கவர் வாரவர்
அல்லல் தீர்க்குமண் ணாமலை கைதொழ
நல்ல வாயின நம்மை யடையுமே. 3

1115. பாடிச் சென்று பலிக்கென்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வதொன் றென்கொலோ
ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ
ஓடிப் போகும்நம் மேலை வினைகளே. 4

3. பொ-ரை: பல்லில்லாத மண்டையோட்டைக் கையில் ஏந்திப் பல மனைகளுக்கும் விரைந்து சென்று பெண்டிர் இடும் உணங்கிய சோற்றை அவர்தம் உள்ளங்களோடு கவர்வாராகிய சிவபிரானுடைய அடியார் அல்லல்களைத் தீர்க்கும் திருவண்ணாமலையைக் கைகளாற் றொழ, நல்லவாயின யாவும் நம்மைத் தாமே வந்தடையும்.

கு-ரை: பல்லில்லோடு - பற்கள் உதிர்ந்த மண்டையோடு. ஒல்லை-விரைவு. உணங்கல் - உலரவைத்த பண்டங்களாகிய உணவுப் பொருள்கள். கவர்வார் - முனிவர்தம் மனைவியரை உணவு வேண்டும் எனக்கேட்டு, அவர்தம் உள்ளங்களையும் அணிகலன்களையும் அவரறியாமே கவர்ந்தவர். அல்லல் - துன்பம். நல்லவாயின - நன்மைகள் எல்லாம். நம்மை அடையும் -நாம் முயல்வதின்றித் தாமே வந்து அடையும்; முதல்வனைத் தொழும் நம்மைத் தொழுதல் காரணமாக.

4. பொ-ரை: பாடிச்சென்று பலிக்கென்று நின்ற பெருமான் ஓடிப் போய்விட்டனராதலால் செய்வது இனி என்னை? ஆடியும் பாடியும் திருவண்ணாமலையைக் கைகளாற்றொழ நம் மேலை (பழைய) வினைகள் ஓடிப்போகும். ('ஓடிப் போயினர் செய்வதொன்றென் கொலோ' எனப் பேசநின்ற பெருமானது திருவண்ணாமலை - என இசையெச்சம் கொண்டு முடிக்க)

கு-ரை: பாடிச்சென்று - பிச்சையேற்றற்குப் பாடல்களைப் பாடிக் கொண்டு சென்று. பலிக்கு - பிச்சைக்கு. ஓடிப்போயினர் - பிச்சைக்கு என்று வந்தவர் (உள்ளங்களைக் கவர்ந்துகொண்டு) ஓடிப்போயினார். முதல் இரண்டடிகள் தாருகாவனத்துப் பெண்டிர் கூற்று. இவ்வாறு கூறும்படி ஆடல்புரிந்த பெருமானது திருவண்ணாமலையை ஆடியும் பாடியும் கையால் தொழ என இயைக்க.

Koviloor Digital Library

1116. தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே. 5

1117. கட்டி யொக்குங் கரும்பி னிடைத்துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனார்
அட்ட மூர்த்தியண் ணாமலை மேவிய
நட்ட மாடியை நண்ணநன் காகுமே. 6

1118. கோணிக் கொண்டையர் வேடமுன் கொண்டவர்
பாணி நட்டங்க ளாடும் பரமனார்

5. பொ-ரை: தேடிச்சென்று அப்பெருமான் திருவடிகளை ஏத்து வீராக; அங்ஙனம் தேடிச்செல்லும் நம்மை அவரும் நாடிவந்து ஆட்கொள்வர்; ஆடியும் பாடியும் திருவண்ணாமலையைக் கைதொழுதால் நமது நிகழ்வினைகள் ஓடிப்போகும்.

கு-ரை: தேடிச்சென்று - அவன் இருக்குமிடமாகிய அண்ணாமலையைத் தேடிப்போய். திருந்தடி - மாறுதலின்றிச் செம்பொருளாக உள்ள திருவடிகள். ஏத்துமின் - புகழ்ந்து போற்றுங்கள். நாடிவந்து - நம்மைத் தேடிவந்து. நம்மையும் - உம்மை இழிவு சிறப்பு.

6. பொ-ரை: கரும்பினிடைக் கட்டி ஒக்குமாறு துணித்தும் வெட்டியும் வீணை வகைகளோடு பாடும் விகிர்தனாகிய அட்ட மூர்த்தியும் திருவண்ணாமலை மேவிய நட்டமாடும் பெருமானுமாகிய இறைவனை நண்ணினால் நன்றே ஆகும்.

கு-ரை: கரும்பினிடைக் கட்டியை ஒக்கும் விகிர்தன் எனக் கூட்டினும் அமையும். துணிவெட்டி - வீணையை மீட்டும்போது ஓசையைத் துணித்தும் நரம்பை வெட்டியும். வீணைகள் பாடும் - வீணை வாச்சிய வகைகளோடு தானும் பாடுகின்ற. விகிர்தன் - மாறுபாடு உடையவன்; போக, யோக, வேகம் எனப்படும் ஒன்றொடு ஒன்று ஒவ்வா வேடம் தான் ஒருவனே தரித்தவன். நட்டமாடியை நண்ண நன்கு ஆகும் என்க. நன்கு - நன்மை.

7. பொ-ரை: சேர்த்துக் கட்டிய கொண்டையரும், வேடம் முன் கொண்டவரும் தாளத்திற்கேற்ப நட்டங்கள் ஆடுபவரும் ஆணிப்

Koviloor Digital Library

ஆணிப் பொன்னனண் ணாமலை கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே. 7

1119. கண்டந் தான்கறுத் தான்கால னாருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்குமண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மேலை வினைகளே. 8

1120. முந்திச் சென்றுமுப் போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்றனண் ணாமலை

பொன் போன்றவரும் ஆகிய பரமனார் திருவண்ணாமலையைக் கைகளால் தொழுதால் நம்மிடம் வருதற்குப் பேணி நின்ற பெரு வினைகள் போகும்.

கு-ரை: கோணிக்கொண்டை - சேர்த்துக்கட்டிய சடைக் கொண்டை. வேடம் முன்கொண்டவர் - முன்னர்ப் பலபல வடிவங் களோடு விளங்கியவர். பாணி நட்டங்கள் - தாளம் இயைந்த பரதவேறு பாடுகள். ஆணிப்பொன் - மாற்றுரைத்துப் பார்ப்பதற்கு மாதிரியாக வைத்திருக்கும் சுத்தமான பொன், இங்கே பெருமானை ஆணிப்பொன் என்றார். 'ஆணியைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற தாணுவை' (தி.5 ப.2. பா.4) என்றார் முன்னும். பேணிநின்ற - நம்மைக் குறித்து வருகின்ற. முதல் இரண்டடிகளுக்கு நாணத்தால் வளைந்து முன்னர்ப் பெண்டிர் வேடத்தைக் கொண்டவராகிய திருமால் உடன்வரப் பாணியோடு கூடிய நட்டங்கள் ஆடும் பரமனார் என உரைப்பினும் அமையும். கொண்டையர் வேடம் - மோகினி நிலை. திருமால் மோகினியாக வரத்தாம் பிட்சாடனராகச் சென்றார் என்பது புராணம்.

8. பொ-ரை: திருநீலகண்டரும், கூற்றுவன் உயிரைப் பண்டு கால் கொண்டு பாய்ந்த பரமனாரும் ஆகிய பெருமானுக்குரிய அண்டமுற ஓங்கி நிமிர்ந்த திருவண்ணாமலையைக் கைகளாற்றொழுதால் நம் மேலை (பழைய) வினைகள் நம்மைவிட்டு நீங்கும்.

கு-ரை: காலனார் - எனப் பிரிப்பினும் அமையும். பன்மை விகுதி இழிவு குறித்து நின்றது.

9. பொ-ரை: முந்துறச்சென்று, மாலைச்செவ்வானன்ன மேனி உடையானுடைய திருவண்ணாமலையை மூன்று பொழுதும் வணங்கு

Koviloor Digital Library

சிந்தி யாவெழு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடுங் கருத்தனே. 9

1121. மறையி னானொடு மாலவன் காண்கிலா
நிறையு நீர்மையுள் நின்றருள் செய்தவன்
உறையும் மாண்பினண் ணாமலை கைதொழப்
பறையும் நாஞ்செய்த பாவங்க ளானவே. 10

திருச்சிற்றம்பலம்

வீர்களாக; அத்திருவண்ணாமலையைச் சிந்தித்தபடி துயிலெழுவார் வினைகளை, நறுமணமுடைய மலர்களைச் சூடும் தலைவனாகிய பெருமான் தீர்ப்பான்.

கு-ரை: முந்திச்சென்று - முற்படச்சென்று. விரைந்து இன்றே போய் என்றபடி. முப்போதும் - மூன்றுகாலத்தும். அந்தி வாயொளி யான் - அந்திக் காலத்தே தோன்றும் செவ்வொளி வண்ணத்தான். 'செவ்வானன்னமேனி' *(கடவுள் வாழ்த்து)* சிந்தியா - மனத்தால் சிந்தியா நின்று. எழுவார் - துயிலெழுவார். கந்தமாமலர் - மணமுள்ள சிறந்த மலர். கருத்தன் - எல்லாவற்றிற்கும் கருத்தாய் விளங்குபவன்.

10. பொ-ரை: பிரமனும் திருமாலும் காண்கிலாதவனும், எங்கும் நிறைகின்ற தன்மையுள் நின்று அருள் செய்தவனுமாகிய பெருமான் உறையும் மாண்பினை உடைய திருவண்ணாமலையைக் கைகளாற் றொழுதால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் கெடும்.

கு-ரை: மறையினான்-நான்குவேதங்களைஓதும் தொழில் பூண்ட பிரமன். நிறையும் நீர்மை - எங்கும் நிறைந்த தன்மை 'இங்குற் றேனென்று லிங்கத்தே தோன்றினான்' என்பர் பின்னும். பறையும் - கெடும்.

திருநாவுக்கரசர் புராணம்

நாதர் மருவுந் திருமலைகள் நாடும் பதிகள் பலமிகவும்
காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த இசைவண் டமிழ்பாடி
மாதொர் பாகர் அருளாலே வடபால் நோக்கி வாகீசர்
ஆதி தேவர் அமர்ந்ததிரு வண்ணா மலையை நண்ணினார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

6. திருஆரூர்

பதிக வரலாறு:

சொல்லின் அரசர் திருவாரூரில் திருத்தொண்டர் களுடன் திருநெடுந்தேவாசிரியன் முன் வந்து இறைஞ்சித் திருமாளிகை வாயில்களுட் புகுந்து, புற்றுகந்தாரைக் கண்டு கொண்டார். தொழுதார். விழுந்தார். புளகம் உற்றார். எழுந்தார். அன்பு கூர்ந்தது. கண்களில் இடையறாப் பேரன்பு மழை பொழிந்தது. எய்தரிய கையறவால் திருப்பதிகம் அருள்செய்து அங்கிருந்தார் நாவரசர். திருவாரூர் நிலவுமணிப்புற்றிடங்கொள் நிருத்தர் தம்மைக் காலங்களில் அணைந்து கும்பிட்டுப் ''பாடிளம் பூதத்தி னான்'' எனும் திருப்பதிகம் முதலான தமிழ் மாலைகள் சாத்திய வற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 பெரியபுராணம். 219. 226.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 119 பதிக எண்: 6

திருச்சிற்றம்பலம்

1122. எப்போ தும்மிறை யும்மற வாதுநீர்
முப்போ தும்பிர மன்தொழ நின்றவன்
செப்போ தும்பொனின் மேனிச் சிவனவன்
அப்போ தைக்கஞ்ச லென்னுமா ரூரனே. 1

1. பொ-ரை: மூன்று பொழுதினும் பிரமன் தொழ நின்றவனும், புகழ்ந்து போற்றத்தக்க செம்பொன்னின் வண்ணமேனி உடையவனும், உயிர் உடம்பைவிட்டு நீங்கும் அப்போதைக்கு அஞ்சல் என்று அபயங் கொடுப்பவனுமாகிய சிவபெருமானை எப்போதும் சிறுபொழுதும் நீர் மறவாது இருக்க. (சே -போதும் எனப்பிரித்து விடையின்மீது இவர்ந்து வரும் எனினும் அமையும்)

கு-ரை: எப்போதும் - இரவு பகல் எந்தநேரத்தும், துன்பக்காலத் தேயன்றி இன்பக்காலத்தும் எனலுமாம். இறையும் - கணப்போதும். முப்போதும் - காலம் மூன்றினும். செப்போதும் பொன் - சிவந்த பொன், சிவப்பு செப்பு என மருவிற்று. செம்பொன் மேனியன் என்றபடி. அப்போதைக்கு - இயமன் கால பாசத்தை வீசியெறிந்து தன்

Koviloor Digital Library

1123. சடையின் மேலுமொர் தையலை வைத்தவர்
அடைகி லாஅர வைஅரை யார்த்தவர்
படையின் நேர்தடங் கண்ணுமை பாகமா
அடைவர் போலிடு காடரா ரூரரே. 2

1124. விண்ட வெண்டலை யேகல னாகவே
கொண்ட கம்பலி தேருங் குழகனார்
துண்ட வெண்பிறை வைத்த இறையவர்
அண்ட வாணர்க் கருளுமா ரூரரே. 3

1125. விடையு மேறுவர் வெண்தலை யிற்பலி
கடைகள் தோறுந் திரியுமெங் கண்ணுதல்

அன்பரை அழைக்கும் அப்போதின் கண். அஞ்சல் என்னும் - (அலமந்தபோது) அஞ்சவேண்டா என்று கூறும்.

2. பொ-ரை: மருங்கில்மட்டுமின்றிச் சடையின்மேலும் ஒரு தையலை வைத்தவரும், அரவை அரையிற் கட்டியவரும், இடுகாடரும் ஆரூரரும் ஆகியவர் வேற்படையொத்த பெரிய கண்ணை உடைய உமையொரு பாகமாகத் தோன்றி அருள் புரிவர்.

கு-ரை: ஓர் - ஒர் எனக் குறுகியது. ஓர் தையல் - கங்கை. அடைகிலா அரவு - அடங்கி நடக்கமாட்டாத அரவு. தடம் - பெரிய. போல் - ஒப்பில் போலி.

3. பொ-ரை: வெண்தலையே இரக்கும் கலனாகக் கொண்டு வீடுகள்தோறும் பலிதேரும் இளமையுடையவரும், துண்டாகிய வெள்ளிய பிறை முடிவைத்த இறையவரும், தேவர்களுக்கு அருளும் திருவாரூர்ப் பெருமானேயாவர்.

கு-ரை: விண்ட - தோல் தசை நரம்பு முதலியவை நீங்கிய. குழகன் - இளமையுடையவன். துண்டம் - இருமுனையும் ஒட்டி முழுமையாகாத ஒரு கலைப்பிறை. அண்டவாணர் - தேவர்கள். வாணர் - வாழ்நர் என்பதன் மரூஉ.

4. பொ-ரை: திருவாரூர்ப் பெருமான், விடையும் ஏறுவர்; வெண்

Koviloor Digital Library

உடையுஞ் சீரை யுறைவது காட்டிடை
அடைவர் போலரங் காகவா ரூரரே. 4

1126. துளைக்கை வேழத் துரியுடல் போர்த்தவர்
வளைக்கை யாளையொர் பாக மகிழ்வெய்தித்
திளைக்குந் திங்கட் சடையில் திசைமுழு
தளக்குஞ் சிந்தையர் போலுமா ரூரரே. 5

1127. பண்ணி னின்மொழி யாளையொர் பாகமா
விண்ணி னார்விளங் கும்மதி சூடியே
சுண்ண நீறுமெய்ப் பூசிச் சுடலையின்
அண்ணி யாடுவர் போலுமா ரூரரே. 6

தலையிற் பலி பெறுவதற்கு இல்லங்களின் முன்புறந்தோறும் திரியும் கண்ணுதலார்; உடையாகச் சீரையைக் கொண்டவர். உறைவதற்குச் சுடு காட்டையே அரங்கமாக அடைவர்.

கு-ரை: சீரை - கிழிந்த சீலை அல்லது மரவுரி.

5. பொ-ரை: திருவாரூர்ப் பெருமான், துளையுள்ள துதிக்கை உடைய யானையின் உரித்த தோலைப் போர்த்தவர்; வளையணிந்த கையாளாகிய உமையம்மையை ஒருபாகமாக மகிழ்ந்தெய்தியவர்; அவர் தமது பிறை பொருந்திய சடையினால், எட்டுத் திசைகளையும் அளந்தறியும் சிந்தை உடையவர் போலும்; உலகமே உருவமா (விச்சுவரூபியா)க நின்றாடுவார் என்பது கருத்து.

கு-ரை: துளைக்கை வேழம் - துளையுடைய கையோடு கூடிய யானை. உரி - உரிக்கப்பட்டது; தோல். வளைக்கையாள் - வளையல் அணிந்த கையையுடையவள்; பார்வதி. பார்வதி தேவியை இடப் பாகத்தே கொண்டு மகிழ்வு எய்துவித்து அவ்வின்பத்தால்தானும் திளைத்திருக்கும். சடையுள் திங்களையுடைய ஆரூரர் என்க.

6. பொ-ரை: பண்ணையொத்த இனிய மொழியாளாகிய உமை யம்மையை ஒரு பாகமாகக் கொண்டு விசும்பில் விளங்கும் பிறை யினைச் சூடி, திருநீற்றுப் பொடியினைத் திருமேனியிற் பூசிச் சுடலை யினை அண்மித் திருவாரூர்ப் பெருமான் ஆடுவர்.

Koviloor Digital Library

1128. மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறு மிறைவனார்
கட்டு வாங்கங் கனன்மழு மான்தனோ
டட்ட மாம்புய மாகுமா ரூரரே. 7

1129. தேய்ந்த திங்கள் கமழ்சடை யன்கனல்
ஏந்தி யெல்லியு ளாடு மிறைவனார்
காய்ந்து காமனை நோக்கின கண்ணினார்
ஆய்ந்த நான்மறை யோதுமா ரூரரே. 8

கு-ரை: பண்ணின் இன்மொழியாள் - 'பண்ணினேர் மொழியாளுமை' (தி.5. ப.10. பா.1) இசையினிமையை ஒத்த மொழியை உடையவள். பாகமா - இடப்பாகத்தேகொண்டு என்னும் பொருளது. விண்ணினார் விளங்கும் மதி - விண்ணிலே பொருந்தி விளங்கும் மதி. சுண்ணநீறு - கலவைச் சந்தனம்போலக் கொள்ளப் படும் திருநீறு. அண்ணி - நெருங்கி.

7. பொ-ரை: தேனொழுகும் புதுமலரணிந்த குழலாளாகிய உமையம்மையொடு பெரிய (திருமாலாகிய) விடையினை விருப்பத்தினோடு உகந்து ஏறும் இறைவனார், கட்டுவாங்கம், சுடர்ந்தெரியும் கனல், மழு, மான் எனுமிவற்றைக்கொண்ட எட்டுத் தோளராகிய திருவாரூர்ப் பெருமானே ஆவர்.

கு-ரை: மட்டு - தேன். தேன் நிறைந்த பூக்கள் சூடிய என்றபடி. வார்குழல் - நீண்ட கூந்தல். மால்விடை - திருமாலாகிய இடபம். பெரிய விடை என்றும் ஆம். இட்டமா - விருப்பமாக. உகந்து - மகிழ்ந்து. கட்டுவாங்கம் - இறைவன் திருக்கரத்தேந்திய கட்வாங்கம் என்னும் ஆயுதம். கனல் மழு - சொலிக்கின்ற மழு. அட்டமாம் புயம் - எட்டுத்தோள்கள். ஆரூரர் ஆகும் (விளங்குவார்) என்க.

8. பொ-ரை: பிறைத் திங்கள் விளங்கும் சடையினரும், கனலைக் கரத்தேந்தி நள்ளிருளில் நட்டம் ஆடும் இறைவரும், காமனைச் சினந்து நோக்கிய கண்ணினரும், ஆராய்ந்த நான்மறைகளால் ஓதப்பெறும் திருவாரூர்ப் பெருமானேயாவர்.

கு-ரை: தேய்ந்த திங்கள் - தக்கன் மகளிர்களிடம் காட்டிய ஒருதலைப் பக்கமான அன்பால் அவன் சாபமிட அதனால் ஒவ்வொரு

Koviloor Digital Library

1130. உண்டு நஞ்சுகண் டத்து ளடக்கியங்
கிண்டை செஞ்சடை வைத்த இயல்பினான்
கொண்ட கோவண ஆடையன் கூரெரி
அண்டவாண ரடையுமா ரூரரே. 9

1131. மாலு நான்முக னும்மறி கிற்கிலார்
கால னாய அவனைக் கடந்திட்டுச்
சூல மான்மழு வேந்திய கையினார்
ஆல முண்டழ காயவா ரூரரே. 10

திருச்சிற்றம்பலம்

கலையாகத் தேய்ந்து குறைந்ததால் ஒரு கலையான சந்திரன். கமழ் - விளங்குகின்ற. எல்லி - சர்வசங்காரகாலமாகிய நள்ளிரவு. காய்ந்து - சினந்து. ஆய்ந்த - அறிஞர்கள் நுணுகிக் கற்கும்.

9. பொ-ரை: நஞ்சினை உண்டு கண்டத்துள் அடக்கியவரும், இண்டை மாலையைத் தம் செஞ்சடையுள் வைத்த இயல்பினரும், கோவணத்தை ஆடையாகக் கொண்டவரும், மிகுந்த எரியைக் கரத்தில் உடையவரும், தேவர்கள் அடைந்து வழிபடும் திருவாரூர்ப் பெருமானேயாவர்.

கு-ரை: நஞ்சு உண்டு கண்டத்துள் அடக்கிய என மொழி மாறுக. அங்கு - தலையில். இண்டை - தலையில் அணியும் மாலை. 'சுரும்பார் மலர் இண்டைகட்டி வழிபாடு செய்யுமிடம்' (தி.2. ப.114. பா.1) கொண்ட - அணிந்த அல்லது ஏற்றுக்கொண்ட. கூரெரி கொண்டவன் கோவண ஆடையன் எனத் தனித்தனியே கூட்டுக.

10. பொ-ரை: திருமாலும் நான்முகனும் அறிய இயலாதவரும், காலனைக் கடந்திட்டுச் சூலமும், மானும், மழுவும் ஏந்திய கையினரும், ஆலம் உண்டதனால் அழகுபெற்று விளங்கிய கண்டத்தையுடைய வரும் திருவாரூர்ப் பெருமானேயாவர்.

கு-ரை: அறிகிற்கிலார் - அறிதற்குஇயலாதவரானவர். காலனாய அவன் - காலனாகிய இயமன். கடந்திட்டு - வென்று. ஆலம் உண்டு அழகாய ஆரூரர்-ஆலகால நஞ்சை உண்டு அதைத் திருமிடற்றிலே நிறுத்தி நீலகண்டனாம் அழகிய தோற்றம் பெற்ற ஆரூர் இறைவர்.

Koviloor Digital Library

7. திருஆரூர்

பதிக வரலாறு:

நாவரசர் திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொள் நிருத்தர் தம்மைக் காலங்களில் அணைந்து கும்பிட்டுத் தமிழ் மாலைகள் சாத்தியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 226.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 120 பதிக எண்: 7

திருச்சிற்றம்பலம்

1132. கொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க ஆட லுகந்துடன் கூத்தராய்
அக்கி னோடர வார்ப்பரா ரூரரே. 1

1133. எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபரன்
அந்த மில்புக ழாரூ ரரனெறி
சிந்தை யுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவே. 2

1. பொ-ரை: கொக்கரை, குழல், வீணை, கொடுகொட்டி ஆகிய வாச்சியங்களைக் கொண்டு இசைத்து மருங்கிலே நின்று பிளந்தவாயை உடைய பல பூதங்கள் ஆடாநிற்ப ஆடுங்கூத்தராய் அக்குமணிகளை யும் அரவையும் பூண்பவர் திருவாரூர்ப் பெருமானாவர்.

கு-ரை: கொக்கரை,குழல்,வீணை,கொடுகொட்டி முதலியன இறைவனது திருக்கூத்திற்கு முழங்கும் பக்கவாச்சியங்கள். பகுவாயன - திறந்தவாயை உடையனவாகிய. ஒக்க ஆடல் உகந்து - ஒருசேர அவை களும் தன்னோடு ஆடுதலை விரும்பி. உடன் - அவற்றோடு. கூத்த ராய் - சங்காரதாண்டவராய். அக்கு - சங்குமணி. ஆர்ப்பர் - கட்டுவர்.

2. பொ-ரை: நெஞ்சமே! பந்தமும், வீடுமாயிருக்கும் தேவதேவ னாகிய திருவாரூர்ப் பெருமானுக்குரிய முடிவற்ற புகழ் வாய்ந்த திரு

Koviloor Digital Library

1134. வண்டு லாமலர் கொண்டு வளர்சடைக்
கிண்டை மாலை புனைந்து மிராப்பகல்
தொண்ட ராகித் தொடர்ந்து விடாதவர்க்
கண்ட மாளவும் வைப்பரா ரூரரே. 3

வாரூர் அரநெறி சிந்தையினும், சிரத்தினும் தங்குதற்கு எவ்வளவு பெருந்தவம் நீ செய்தனை? (திருவாரூர், அரநெறியை உள்ளத்திற் கொண்டு மறவாது உணர்தலும் தலையால் தொழலும் நற்றவத்தார்க்கு அன்றி எய்தொணாது என்றபடி).

கு-ரை: நெஞ்சமே! எந்த மாதவம் செய்தனை - மனமே மேலாகிய தவங்கள் பலவற்றுள் எந்தத்தவத்தை நீ செய்தாய்! இது வியப்புமொழி. பந்தம் - உலக ஈடுபாடு. பந்தமும் வீடுமாயவன் என்றபடி. அந்தமில் புகழ் - முடிவில்லாத புகழ். ஆரூர் அரநெறி என்பது ஆரூர்த் திருக்கோயில்களில் பூங்கோயில், அரநெறி, பரவை யுண்மண்டளி என்பவற்றுள் ஒன்று. சிந்தையுள்ளும் சிரத்துள்ளும். சிந்தை - உள்மனம். நிலையான நினைப்பு உண்டாக்கும் அடி மனம்.' அரநெறி சிந்தையுள்ளும் சிரத்துள்ளும் தங்க எந்த மாதவம் செய் தனை' என்றியைக்க.

3. பொ-ரை: வண்டுகள் அணுகப்பெறாது சூழ உலாவும் மலர் களைக்கொண்டு வளரும் சடைக்கு இண்டை மாலைகள் புனைந்தும், இரவும் பகலும் தொண்டுகள் புரிந்தும் தொடர்ந்து விடாது வழிபடு வார்க்கு அண்டங்களை ஆளவும் கொடுக்கும் பெருமான் திருவாரூரர் ஆவர். ஆளவும் என்னும் எச்ச உம்மையால் சிவஞானமாகிய முக்கியப் பயனைத் தருவதோடு எனக்கொள்க.

கு-ரை: சரியைத்தொண்டு செய்வார்க்கு உளதாம் அவாந்தரப் பயனைக் கூறுகிறது இத்திருப்பாடல். வண்டுலாமலர் - வைகறையில் வண்டுகள் தேனுண்ண வருவதன்முன்பே எடுத்த மலர் ஆதலின் ஆண்டு உள்ள தேனை நுகர்தற்கு வண்டுகள் உலாவுகின்றன என்ற வாறு. வளர்சடை - வளர்கின்ற திருச்சடை. புனைந்தும் - தொடுத்தும். இராப்பகல்-இரவும் பகலும். தொடர்ந்துவிடாதவர்க்கு-இப்பணிகளை மேற்கொண்டு இடையே விடாது தொடர்ந்து பணிசெய்வார்க்கு. அண்டம் ஆளவும் வைப்பர் - உலகமுழுவதையும் ஒரு குடைக்கீழ் அரசாளும் உரிமையைத் தருவதும் செய்வர். 'துளக்கில் நன்மலர் தொடுத்தால் தூயவிண்ணேறலாகும்' என்றார் பிறாண்டும்.

Koviloor Digital Library

1135. துன்பெ லாமற நீங்கிச் சுபத்தராய்
என்பெ லாம்நெக் கிராப்பக லேத்திநின்
றின்ப ராய்நினைந் தென்று மிடையறா
அன்ப ராமவர்க் கன்பரா ரூரரே. 4

1136. முருட்டு மெத்தையில் முன்கிடத் தாமுனம்
அரட்டர் ஐவரை ஆசறுத் திட்டுநீர்
முரட்ட டித்தவத் தக்கன்றன் வேள்வியை
அரட்ட டக்கித னாரூ ரடைமினே. 5

4. பொ-ரை: துன்பங்கள் முற்றும் நீங்கி நலம் சான்றவராய் எலும்பெல்லாம் நெகிழ்ந்து இரவும் பகலும் வழிபட்டு நின்று இன்பமுடையோராய் நினைந்து என்றும் இடையறாத அன்பர்க்கு அன்பராய் இருப்பர் திருவாரூர்ப் பெருமான். (இவ்வியல்புடையார்க்கே முதல்வனும், அன்பனாய், அவரைத் தன் தமர்க்குள் வைக்கும் என்றபடி.)

கு-ரை: இறைவன் அன்பர்க்கன்பராம் தன்மை கூறுகிறது இத் திருப்பாடல். துன்பெலாம் அறநீங்கி - இன்பங்களினின்று நீங்கியது போலத் துன்பங்களினின்றும் முற்றிலும் விடுதலை பெற்று. துன்பங்களை இன்பங்களாகவோ, தமக்குத் தொடர்வில்லாதனவாகவோ கருதும் மனஇயல்பு பெற்று என்றபடி. அற-முற்றிலும். சுபத்தராய்-நலஞ்சான்ற சிந்தையராய்,உவகையுள்ளவராய் என்றபடி. சுபம்-நலம். இடையறா அன்பு, தைலதாரை போன்று இடையறவில்லாத அன்பு.

5. பொ-ரை: ஈமக்கிடையில் கிடத்துவதற்கு முன்பு, அடங்காத ஐந்து புலன்களைக் குற்றமறக்களைந்து முரண்பாடு கொண்ட அத் தக்கன் வேள்வியாகிய குறும்பை அடக்கியவனாகிய சிவபெருமான் உறையும் திருவாரூரை நீர் அடைந்து வழிபடுவீராக.

கு-ரை: முருட்டு மெத்தை - முரட்டுத் தன்மைவாய்ந்த படுக்கை. இறந்தபின் கிடத்தும் ஈமப்படுக்கை. முன்கிடத்தா முனம் - எல்லோர் முன்னிலையிலும் கிடத்துவதற்கு முன்னரே. அரட்டர் ஐவர் - வலிய தீயவர்களாகிய ஐம்பொறிகள். ஆசறுத்திட்டு-குற்றம் தீர்த்துஅவற்றால் விளையும் தீமைகளை மாற்றி நல்வழியில் செலுத்தி. முரட்டடித்த - முரட்டுத்தனத்தால் நடத்திய. அரட்டடக்கி-குறும்புகளை அடக்கியவன். யாக்கை நிலையாது ஆகலின், அஃது உள்ள போதே விரைந்து திருவாரூர் அடைந்து உய்க என்றபடி.

Koviloor Digital Library

1137. எம்மை யாரிலை யானுமு ளேனலேன்
எம்மை யாரு மிதுசெய வல்லரே
அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்
கம்மை யாரைத்தந் தாராரூ ரையரே. 6

6. பொ-ரை: எம்மைக்காத்தற்குரிய இருமுதுகுரவரும் இலர்; யானும் (இளம் பருவத்தினன் ஆகலின்) தனித்து வாழும் மன உறுதி உள்ளேன் அல்லேன்; எனது அன்னையை ஒத்த உடன்பிறந்தாரும் (திலகவதியாரும்) இதனைச் செய்ய (எனக்குத் துணையாய் நின்றருள) வல்லரே! (ஆயினும் அவர் இதுபோது உயிர்விடத் துணி தலின்) தாயாய் உடனிருந்து உபகரிக்கவல்லார் ஆர்? என்று இங்ஙனம் பன்முறை வாய்விட்டு அரற்றிய எளியேனுக்குத் திருவாரூரில் எழுந்தருளியுள்ள பெருமானே (ஐயரே) வீட்டு நெறிக்கு உரிய என் உடன் தோன்றினாரை (உயிர்தாங்கச் செய்து) எனக்கு இருமுதுகுரவரும், ஆசானும், கேளும், உறவுமாக வைத்தருளினார்.

இப்பாட்டு நாவுக்கரசர், முதல்வன் தமது தமக்கையாரை உம்பருலகணைய உறும் நிலை விலக்கி உயிர்தாங்கி மனைத்தவம் புரிந்திருக்க வைத்தது தாம் பின்னர் மெய்யுணர்வு பெற்றுத் திருத்தொண்டின் நெறி பேணி உய்தற்பொருட்டே என நினைந்து பாடியது.

கு-ரை: முதல் அடியில் எம் ஐயர் என்பது நீண்டு நின்றது; ஐயர் - தாய் தந்தையர் என்னும் இரு முதுகுரவர். இரண்டாம் அடியில் எம்மையார் என்றதில் என்அம்மை, எம்மை என ஆகி ஆர்பெற்றது. இங்கு நாவுக்கரசருக்குத் தமக்கையாராகிய திலகவதியாரைக் குறிக்கும். இது - என்றது தாம் இன்றியமையாததாக உணர்ந்த நற்சார்பாய் உடனிருத்தலை, ஆயினும் இதுபோது அவர் உயிர்விடத் துணிதலின் என்றது இசையெச்சம்.

அம்மை யார் எனக்கு? என்றதில் அம்மை - அம்மைக்கு வாயிலாவார் அல்லது தாய்போல்வார் எனப் பொருள்படும். அம் ஐ எனப் பிரித்து அழகிய ஆசான் என உரைப்பினும் அமையும். அம்மை - வீடு. இப் பாட்டுப் பெரியபுராணத்துத் திலகவதியார் உயிர்தாங்கும் செய்தி கூறும் பகுதிக்கு அகச்சான்று ஆதல் காண்க. ஈன்றாளுமாய் எனத் தொடங்கும் திருவிருத்தத்தில் உடன் தோன்றினராய் என்றதும் திலகவதியாரைக் குறித்தே எனக்கொள்க.

Koviloor Digital Library

1138. தண்ட வாளியைத் தக்கன்றன் வேள்வியைச்
செண்ட தாடிய தேவர கண்டனைக்
கண்டு கண்டிவள் காதலித் தன்பதாய்க்
கொண்டி யாயின வாறென்றன் கோதையே. 7

1139. இவள்ந மைப்பல பேசத் தொடங்கினாள்
அவண மன்றெனி லாரூ ரரனெனும்
பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்
தவனி யாயின வாறென்றன் தையலே. 8

7. பொ-ரை: என்றன் கோதையாகிய இவள் தண்டத்தை (ஒறுப்பு முறை)க் கையாள்பவனும், தக்கன் செய்த பெருவேள்வியைச் செண்டு ஏந்தி ஆடுதல்போல் எளிதாக அட்ட தேவர்கள் முதல்வனும் ஆகிய ஆரூர் வீதிவிடங்கனை (அவன் உலாப்போதரும்போது) பன்முறை கண்டு அவனைக் காதலித்து அன்பே வடிவாய் நம் வயப்பட்டு ஒழுகாத கொண்டி (பட்டி) ஆயினவாறு என்னே!

கு-ரை: இது தன் மகள் முதல்வனைக் கண்டு காதலித்துப் பின் அவனைக் காணுந்தோறும் காதல் கைமிக்குப் பிச்சியாயினமையை வியந்து செவிலி கூறியது.

தண்டம் - அறத்தின் மூவகைகளில் மூன்றாவதாகிய ஒறுப்பு. இதனை ஆண்டவன் தண்ட ஆளி. தச் கன் வேள்வியைத் தகர்த்தது ஒப்ப நாடிச் செய்த ஒறுப்புமுறையே என்றற்கு முதல்வனை இப் பெயரால் குறித்தார். அகண்டன் - கண்டிக்கப்படாதவன், தேசகாலப் பொருள்களால் எல்லைசெய்யப்படாதவன் என்பது கருத்து. முதல் வன் தேசம் காலம் பொருள் அனைத்தையும் தன் பேரருளில் அடங்கக் கொண்டு நிறைநீர்மை உடையன் ஆகலின் அகண்டன்; அஃது ஈண்டு முதல்வன், தலைவன் என்னும் துணையாய் நின்றது, ஆதலின் தேவர் அகண்டன் என்னும் தொடர் தேவர்க்கு முதல்வன் என விரியும். கொண்டி - (காதலால்) கொள்ளப்பட்டவள், பிச்சி.

8. பொ-ரை: இவள்நம்பால் ஒருநெறிப்படாதபலபேச்சுக்களைப் பேசத்தொடங்கிவிட்டாள். இவள் உள்ள அவ்விடத்தேம் அல்லேம் எனின் (அதாவது, இவள் தனித்துள்ளபோது) ஆரூர் அரன் என மொழிவாள். என்றன் தையலாகிய இவள் உலாப்போந்த வீதிவிடங்கப் பெருமானைக் கண்டமையால் காம நோயுடையாள் ஆனவாறு இது!

Koviloor Digital Library

1140. நீரைச் செஞ்சடை வைத்த நிமலனார்
காரொத் தமிடற் றர்கனல் வாயரா
ஆரத் தருறை யும்மணி யாரூரைத்
-தூரத் தேதொழு வார்வினை தூளியே. 9

1141. உள்ள மேயொ ருறுதி யுரைப்பன்நான்
வெள்ளந் தாங்கு விரிசடை வேதியன்
அள்ளல் நீர்வய லாரூ ரமர்ந்தவெம்
வள்ளல் சேவடி வாழ்த்தி வணங்கிடே. 10

கு-ரை: செவிலி தலைவியின் காதலொழுக்கத்தை நற்றாய்க்கு அறத்தொடு நின்று உணர்த்தியது இது. அவணம் அன்றெனின்: அவண் - அவ்விடம்; அவணம் - அவ்விடத் தேம்; எனவே, யாம் இவள் உள்ள அவ்விடத்தேம் ஆதல் இல்லை எனில் என்றபடி. ஆரூர் அரன் எனும் என்பதில் எனும் - செய்யும் என்னும் முற்று. தவனி - காமத்தீயால் தபிக்கப்பட்டவள். 7, 8ஆவது திருப்பாடல்கள் முதல்வனைக் கண்டுணரும் ஆன்மாக்கள் அவனால் வசீகரிக்கப்பெற்று உலகியல் தழுவாது அருள்வயப்பட்டுச் சீவன் முத்தராம் தன்மையை அகப்பொருள் மேல் வைத்துக் குறிப்பவை.

9. பொ-ரை: கங்கைச் சடையரும், திருநீலகண்டரும், அரவாகிய ஆரம் உடையவருமாகிய பெருமான் உறையும் அணி ஆரூர்த் தலத்தைத் தூரத்தே கண்டு தொழுவார் வினைகள் தூளியாகிக் கெடும்.

கு-ரை: இத்திருப்பாடல்: ஆரூர் நினைத்துத்தொழ முத்தியளிப்பது என்கிறது. நீரை - கங்கையை; நிமலன் - குற்றமற்றவன்; காரொத்த மிடற்றர் - மேகத்தை ஒத்த நீலகண்டத்தர்; கனல்வாய்அரா - கனல் போன்ற நஞ்சை வாயின் கண்ணே உடைய பாம்பு. ஆரம் - மாலை. அணி-அழகு. தூரத்தேதொழுவார்- திருவாரூரை நினைந்து தூரத்திலிருந்தே வணங்குவார். வினை - பழவினை நிகழ்வினைகள். தூளி - தூசி, பொடி.

10. பொ-ரை: உள்ளமே! நான் ஓர் உறுதி உரைப்பன்; கேள்; கங்கைவெள்ளத்தைத் தாங்கும் விரித்த சடை உடைய வேதியனும் சேறு, நீர் பொருந்திய வயல்களை உடைய ஆரூர் அமர்ந்த எம் வள்ளலுமாகிய பெருமான் சேவடிகளை வாழ்த்து; வணங்கு.

Koviloor Digital Library

1142. விண்ட மாமலர் மேலுறை வானொடும்
கொண்டல் வண்ணனுங் கூடி யறிகிலா
அண்ட வாணந்த னாரூ ரடிதொழப்
பண்டை வல்வினை நில்லா பறையுமே. 11

1143. மையு லாவிய கண்டத்த னண்டத்தன்
கையு லாவிய சூலத்தன் கண்ணுதல்
ஐய னாரூ ரடிதொழு வார்க்கெலாம்
உய்ய லாம்அல்லல் ஒன்றிலை காண்மினே. 12

திருச்சிற்றம்பலம்

கு-ரை: 'ஒன்றுறுதி' - என்பதும் பாடம்; அதனை உறுதி ஒன்று என மாறுக. வெள்ளந்தாங்கும் சடை - உலகத்தை அழிக்கும் பெரு வெள்ளமாய் விரைந்துவந்த கங்கையைத்தடுத்த சடை. வேதியன் - வேதங்களை அருளிச்செய்தவன். அள்ளல் - சேறு. சேறும் நீருமாய்ச் சிறந்த வயல்கள் சூழ்ந்த ஆரூர் என்றபடி. வள்ளல் - தியாகேசன். சேவடி - செம்மையான திருவடிகள்; சிவந்த எனினும் பொருந்தும்.

11. பொ-ரை: விரிந்த மலர்மேலுறை பிரமனும், மேக வண்ண னாகிய திருமாலும் கூடி அறியகில்லாத திருவாரூர் அண்டவாணனது திருவடிகளைத் தொழப் பழைய வல்வினைகள் நில்லாமற் கெடும்.

கு-ரை: கொண்டல் - மேகம். ஆரூர் அண்டவாணன் தன் அடிதொழ எனக்கொண்டு கூட்டுக.

12. பொ-ரை: கரிய கண்டம் உடையானும், அண்டத்திலுள் ளானும், கையிற் சூலம் உடையானும், கண்ணுதலானும் ஆகிய திரு வாரூர்த்தலத்தின்கண் ஐயன் அடிதொழும் எல்லாரும் உய்தி பெற லாம்; துன்பம் ஒன்றும் அவர்க்கில்லை; காண்பீராக.

கு-ரை: ஆரூர் இறைவன் அடிதொழுவார்க்கு அல்லல் இல்லை என்றறிவிக்கிறது மை - விஷத்தின் கரியநிறம். அண்டத்தன்-பாரொடு விண் உலகமாய்ப் பரந்து விரிந்தவன். உலாவிய - விளங்கிய. ஐயன் - அழகியன் அல்லது தலைவன். அடி தொழுவார்க்கெலாம் அல்லல் ஒன்றில்லை. அவர்கள் உய்யலாம் என்றியைக்க. காண்மின் அஃது உண்மை என்பதைக் காணுங்கள்.

Koviloor Digital Library

8. திருஅன்னியூர்

பதிக வரலாறு:

இத் திருப்பதிக வரலாறு தி.12 பெரிய புராணத்திற் குறிக்கப் பெறவில்லை.

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 121 பதிக எண்: 8

திருச்சிற்றம்பலம்

1144. பாற லைத்த படுவெண் தலையினன்
நீற லைத்தசெம் மேனியன் நேரிழை
கூற லைத்தமெய் கோளர வாட்டிய
ஆற லைத்த சடையன்னி யூரனே. 1

1145. பண்டொத் தமொழி யாளையொர் பாகமாய்
இண்டைச் செஞ்சடை யன்னிருள் சேர்ந்ததோர்
கண்டத் தன்கரி யின்னுரி போர்த்தவன்
அண்டத் தப்புறத் தானன்னி யூரனே. 2

1. பொ-ரை: பருந்துகள் அலைக்கும் வெள்ளிய மண்டை ஓட்டைக் கையிற் கொண்டவனும், திருநீறு பூசிய சிவந்த மேனியனும், உமையம்மை ஒரு கூறுகொண்ட மெய்யனும், அரவு ஆட்டி ஆறலைக் குஞ் சடையனும் அன்னியூர்த்தலத்து இறைவனே.

கு-ரை: அன்னியூரன் இயல்புரைக்கின்றது இத் திருப்பதிகம். பாறு - பருந்து. படுவெண்டலை - தசை அழிந்த வெள்ளிய தலை. நீறு அலைத்த - திருநீறுவிரவிய. நேரிழை - பார்வதி. கூறு - இடப்பாகம். அலைத்த-கலந்த. மெய்-உடம்பில். கோள் அரவு-கொள்ளும்தன்மை வாய்ந்த வாயையுடைய பாம்பு. நஞ்சாகிய குற்றம் உடைய பாம்பு எனினுமாம். ஆட்டிய - ஆடுதலைச் செய்யும்படி அணிந்த. ஆறு - கங்கை. அலைத்த - பரந்துவிரிந்த.

2. பொ-ரை: பண் பொருந்திய இனியமொழியுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவனும், இண்டையணிந்த

Koviloor Digital Library

1146. பரவி நாளும் பணிந்தவர் தம்வினை
துரவை யாகத் துடைப்பவர் தம்மிடம்
குரவம் நாறுங் குழலுமை கூறராய்
அரவ மாட்டுவர் போலன்னி யூரரே. 3

1147. வேத கீதர்விண் ணோர்க்கு முயர்ந்தவர்
சோதி வெண்பிறை துன்று சடைக்கணி
நாதர் நீதியி னாலடி யார்தமக்
காதி யாகிநின் றாரன்னி யூரரே. 4

சடையனும், இருளார்கண்டனும், யானைத்தோல் உரித்துப் போர்த்தவனும், அண்டங்களுக்கு அப்புறத்தில் உள்ளவனும் அன்னியூர்த் தலத்து இறைவனே.

கு-ரை: பண்டு ஒத்த மொழி எனப்பிரித்துப் பண்ணின் இசை தங்கிய இனிய மொழி எனப் பொருள் காண்க. இருள் - கருமை. உரி-தோல். அண்டத்தப்புறத்தான்; உலகவர் ஆராய்ச்சிக்கு அப்பாற் பட்டவன். 'ஏழண்டத்தப்பாலான்' (தி.6. ப.8. பா.5) பாகமாய்க் கொண்ட இண்டைச் செஞ்சடையன் எனக் கூட்டி உரைக்க.

3. பொ-ரை: நாள்தோறும் வாழ்த்தி வணங்குவோரது வல்வினைகளைத் துரக்கும்படி நீக்குபவரும், தம்மிடப்பாகத்தில் குரவு நறுமணம் வீசும் குழல் உமையைக் கூறாகவுடையவரும், அரவம் ஆட்டுபவரும் அன்னியூர்த்தலத்து இறைவரே.

கு-ரை: பரவி - இறைவன் புகழை விரித்தோதி. நாளும் - நாள் தோறும். பணிந்தவர்தம் - வணங்கியவர்களுடைய. துரவையாக - இல்லையாக. துடைப்பவர் - போக்குபவர். குரவம் - குரவமலர். குழல் - கூந்தல். கூறராய் - ஒருகூற்றிற் கொண்டவராய்.

4. பொ-ரை: வேதங்களை இசையோடு ஓதுவோரும், விண்ணோர்க்கும் உயர்ந்தவரும், ஒளிவெண்பிறை பொருந்திய சடையுடைய தலைவரும், நீதியினால் தம் அடியார்களுக்கெல்லாம் ஆதியாகி நின்றவரும் அன்னியூர்த்தலத்து இறைவரே.

கு-ரை: சோதி - ஒளி. துன்று - நெருங்கிய. அல்லது படர்ந்த. அடியார்தமக்கு ஆதி - அடியவர்களால் தம் உணர்வின் முதல் எனக்

Koviloor Digital Library

1148. எம்பி ரானிமை யோர்கள் தமக்கெலாம்
இன்ப ராகி யிருந்தவெம் மீசனார்
துன்ப வல்வினை போகத் தொழுமவர்க்
கன்ப ராகிநின் றாரன்னி யூரரே. 5

1149. வெந்த நீறுமெய் பூசுநன் மேனியர்
கந்த மாமலர் சூடுங் கருத்தினர்
சிந்தை யார்சிவ னார்செய்ய தீவண்ணர்
அந்த ணாளர்கண் டீரன்னி யூரரே. 6

கருதப்படுவோன்; ''போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே'' (தி.8 திருவாசகம் - திருப்பள்ளி எழுச்சி - 1) என்றாற்போல.

5. பொ-ரை: தேவர்களுக்கெல்லாம் இன்பம் செய்வோராகிய எம் ஈசனாரும், எம் தலைவரும், துன்பஞ்செய்யும் வல்வினை போதற்காகத் தொழும் அன்பர்களுக்கு அன்பராகி நின்றவரும் அன்னி யூர்த்தலத்து இறைவரே.

கு-ரை: எம்பிரான் - எங்கள் தலைவன். எம் ஈசன் - எம்மை ஆள்வோன். துன்பவல்வினை - துன்பத்திற்குக் காரணமாகிய வலிய வினை. தொழுமவர்க்கு அன்பர் - செருக்கு நீங்கா உள்ளத்தால் தன்னை அளக்கலுறுவார்க்குச் சேயனாய், அன்பால் தொழுவார்க்கே அணுக்கனாய் நிற்பன் முதல்வன்.

6. பொ-ரை: வெந்த திருநீறு மெய்யின்கண் பூசிய நலம் வாய்ந்த வரும், நறுமலர் சூடும் கருத்தினராகிய அன்பர் சிந்தைகளில் நிறைந்த சிவனாரும், சிவந்த தீயின் வண்ணம் உடையவரும், அழகிய தண்ணளி உடையவரும் அன்னியூர்த் தலத்து இறைவரே, காண்பீராக.

கு-ரை: வெந்தநீறு - திருநீறு. ''தமது அந்தமில் ஒளி அல்லா ஒளி யெலாம் வந்து வெந்து அற வெந்தநீறு - மற்று அப்பொடி'' நன்மேனி- அநாதிமுத்த சித்துஉரு. நறுமலர் சூட்டி வழிபடுவேம் என்னும் கருத் தினர் தம் அடிமனத்திற் பொருந்திநின்று மங்கலக் குணங்களையும் பேரின்பத்தையும் தோற்றுவிப்பவன் என்க. சிவனார் - மங்களத்தைச் செய்பவர். இன்பவடிவினர். செய்ய தீவண்ணர் - தீப்போன்ற செய்ய நிறத்தர். அந்தணாளர் - உயிர்களின் நன்மையின் பொருட்டு அறம் உரைத்து, அதன் வடிவாகவும் பயனாகவும் நிற்றலின் அந்தணாளர்

Koviloor Digital Library

1150. ஊனை யார்தலை யிற்பலி கொண்டுழல்
வானை வானவர் தாங்கள் வணங்கவே
தேனை யார்குழ லாளையொர் பாகமா
ஆனை யீருரி யாரன்னி யூரரே. 7

1151. காலை போய்ப்பலி தேர்வர்கண் ணார்நெற்றி
மேலை வானவர் வந்து விரும்பிய
சோலை சூழ்புறங் காடரங் காகவே
ஆலின் கீழறத் தாரன்னி யூரரே. 8

எனப்பட்டார்; ''அறவாழி அந்தணன்'' என்பது *திருக்குறள்* (8) ஆழி - கடல்).

7. பொ-ரை: தசை பொருந்தியிருந்த வெண்டலையிற் பலி கொண்டு திரியும் பெருமான் வானவர் வணங்குமாறு, உமாதேவி யாரை ஒரு பாகமாகக்கொண்டு ஆனைத்தோல் போர்த்தவர் அன்னி யூர்த்தலத்து இறைவரே.

கு-ரை: ஊனை, தேனை - என்பவற்று ஐ சாரியை, ஈர் உரி - ஈர்ந்தஉரி, குருதிதோய்ந்து குளிர்ந்த உரி எனினுமாம்.

8. பொ-ரை: நெற்றிக்கண் உடையவரும், காலையே போய்ப் பலி ஏற்பவரும், வானவர்களும் விரும்புகின்ற சோலை சூழ் புறங்காட் டினை அரங்காகக் கொண்டவரும், ஆலின்கீழ் அறத்தை நான்கு முனிவர்களுக்கு உரைத்தவரும் அன்னியூர்த் தலத்து இறைவரே.

கு-ரை: காலை - தக்கபொழுது; காலைநேரத்தே எனினும் அமையும். பிச்சை கொள்வார் செல்லும் காலை நேரத்தே கடைத்தலை சென்றவர் என்று இகழும் புகழுரை இது. தேர்வர் - ஆராய்ந்து பெறுவர் (பக்குவ ஆன்மாக்களைப் பருவத்திற்சென்று ஆள்வர் என்றபடி). நெற்றிக்கண்ணார் என்று மொழிமாறுக.

மேலை வானவர் - மேலவராகிய தேவர்கள். புறங்காடு - ஊர்ப்புறத்தே அமைந்த இடுகாடு. பலரையும் புறங்காணும் காடு எனினுமாம். அரங்கு - ஆடுமிடம். சோலைசூழ் அன்னியூர் எனவும், வானவர் வந்து விரும்பிய, புறங்காடு அரங்காகக் கொண்ட அன்னியூரர் எனவும் இயைக்க.

Koviloor Digital Library

1152. எரிகொள் மேனிய ரென்பணிந் தின்பராய்த்
திரியு மூவெயில் தீயெழச் செற்றவர்
கரிய மாலொடு நான்முகன் காண்பதற்
கரிய ராகிநின் றாரன்னி யூரரே. 9

1153. வஞ்ச ரக்கன் கரமுஞ் சிரத்தொடும்
அஞ்சு மஞ்சுமோ ராறுநான் கும்மிறப்
பஞ்சின் மெல்விர லாலடர்த் தாயிழை
அஞ்ச லஞ்சலென் றாரன்னி யூரரே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: தீவண்ண மேனியரும், எலும்பணிந்து இன்புறுவாரும், திரிந்துவந்து தொல்லைகள் புரிந்த மூவெயில்களைத் தீயெழச் சினந்தவரும், மாலும் நான்முகனும் காண்பதற்கு அரியவரும் அன்னியூர்த்தலத்து இறைவரே.

கு-ரை: எரிகொள்மேனி - நெருப்பினது சிவந்த நிறத்தைக் கொண்ட திருமேனி. மூவெயில் - மூன்று கோட்டைகள். செற்றவர் - அழித்தவர்.

10. பொ-ரை: வஞ்சனை பொருந்திய இராவணனின் இருபது கைகளும் தலைகளொடு இறும்படியாகப் பஞ்சின் மெல் விரலால் அடர்த்தபோது உமையம்மை அஞ்ச, ''ஆயிழையே! அஞ்சல்! அஞ்சல்!'' என்று அருளியவர் அன்னியூர்த்தலத்து இறைவரே.

கு-ரை: வஞ்சரக்கன் - வஞ்ச அரக்கன் என்பதன் தொகுத்தல். வஞ்சத்தன்மையுடைய இராவணன். கரம் - கைகள். அஞ்சும் அஞ்சும் ஓர் ஆறும் நான்கும் (5+5+6+4=20) இருபது. இருபது தோள்களும். இற - நொறுங்க. பஞ்சின் மெல் விரலாலடர்த்து - இராவணனது ஆணவத்தை மட்டிலுமழித்து அவனை நிக்ரகத்தால் அநுக்கிரகம் செய்வான் வேண்டி அடர்த்தவராதலின் பஞ்சினும் மெல்லிய விரலால் அடர்த்தார் என்றார். வலிய ஊன்றினால் அவன் அழிந்திருப்பான் என்பது கருத்து. ஆயிழை அஞ்சல் அஞ்சல் - இராவணன் கைலையங் கிரியைப் பெயர்த்த காலையில் அம்மலை துளக்கம் எய்தியது. அதனால் உமையம்மை அஞ்சிப் பெருமானைத் தழுவினாள். அவ் வச்சக் குறிப்பை உணர்ந்த இறைவன், ''ஆயிழையே, அஞ்சாதே! அஞ்சாதே!'' என்று கூறினான் என்பது கருத்து. ஆயிழை - ஆராய்ந்து கொண்ட அணிகலன்கள் அணிந்தவள்.

Koviloor Digital Library

9. திருமறைக்காடு

பதிக வரலாறு:

வேதவனத்தின் மெய்ப்பொருளினருளால் விளங்கும் மணிக்கதவந் திருக்காப்பு நீங்கக் கலைமொழிக்கு நாதர் ஞான முனிவருடன் தொழுதார். விழுந்தார். ஆண்ட அரசும் சிவக் கன்றும் இன்பவெள்ளத்திடை மூழ்கியெழுந்து உள்புகுந்து தம் பெருமான் முன்பு பணிந்து போற்றிசைத்து நாவரசர் பாடிப் பரவிய மொழி மாலைகளுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா - புராணம். 270.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 122 **பதிக எண்: 9.**

திருச்சிற்றம்பலம்

1154. **ஓத மால்கடல் பாவி யுலகெலாம்**
மாத ரார்வலங் கொண்மறைக் காடரைக்
காதல் செய்து கருதப் படுமவர்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. 1

1. பொ-ரை: அலைகளை உடைய பெருங்கடல் பரவிய சிறப் பினதும், உலகெலாம் உள்ள நற்குணம் வாய்ந்த பெண்கள் வலங் கொள்ளும் மாண்பினதுமாகிய மறைக்காட்டில் உறையும் பெருமானை விரும்பி, எல்லோராலும் தியானிக்கப்படும் அவர் திருவடிகளை வாழ்த்த நம் பாவங்கள் கெடும்.

கு-ரை: ''மறைக்காடரோ'' என்பதும் பாடம். ஓதம் - வெள்ளப் பெருக்கு. பெருகியும் குறைந்தும் வரும் இயல்பு கடலுக்குரியது. பெருக்கத்தை ஓதம் என்பர். மால் கடல் -பெரிய கடல். பாவி - பாவிய என்னும் பெயரெச்சத்து அகரம் தொக்கது. பாவிய - சூழ்ந்த. உலகெ லாம் -திசை எல்லாம். (திருமறைக்காட்டைச் சூழக்கடல் உள்ளது என்பது கருத்து.) மறைக்காடரை என்பது பாடமாயின், மறைக் காடரை ஏத்த, உலகெலாம் காதல்செய்து கருதப்படும் அவர் பாதம் ஏத்த- எனத் தனித்தனி இயைத்துப் பொருள் கொள்க. இதில் ''உலகு'' என்பது உயர்ந்தோரை. ''மற்றனைத்தையும் விட்டுச் சிவனொருவனே

Koviloor Digital Library

1155. பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்கந் தானுடை மாமறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி யார்தம்மை
நோக்கிக் காண்பது நும்பணி செய்யிலே. 2

1156. புன்னை ஞாழல் புறணி யருகெலாம்
மன்னி னார்வலங் கொள்மறைக் காடரோ
அன்ன மெல்நடை யாளையொர் பாகமாச்
சின்ன வேட முகப்பது செல்வமே. 3

தியானிக்கத்தக்கவன்'' என்று அதர்வசிகை கூறலின், (மறை உணர்ந் தோரால்) காதல் செய்து கருதப்படுமவர் என்றார். பறைதல் - கெடுதல் அல்லது நீங்குதல்.

2. பொ-ரை: ஊர்க்குப் புறத்தே உள்ள நீரிலெல்லாம் தாழை பூப்பதும், ஆக்கம் பெருகியதுமாகிய மறைக்காட்டுறையும் பெருமானே! யார்க்கும் காண்டற்கரியீர்! உம் பணி செய்யிலன்றோ அடியார்களைத் தேவரீர் திருவருள் செய்தற்குத் திருவருள் நோக்கம் புரிந்தருள்வது! (பணிந்து பணிசெய்வார்க்கன்றி முதல்வன் அருள் கைகூடாது என்பது கருத்து)

கு-ரை: புறணி - உப்பங்கழிக்கரை. புறணியருகெலாம் பூக்கும் தாழையையுடைய மறைக்காடு என்க. ஆக்கம் - செல்வம். மா - சிறந்த. ஆர்க்கும் காண்பரியீராகிய நீர் நும் பணிசெய்யிலே, அவ்வடியார் தம்மை நோக்கிக் காண்பது செய்வீர் என்றியைத்துப் பொருள் காண்க. நோக்கிக் காண்பது - கருணையோடு பார்த்து அருள்செய்வது.

3. பொ-ரை: ஊர்க்குப் புறத்தே உள்ள நீரின் அருகெல்லாம் புன்னையும் ஞாழலும் பொருந்தியதும், மன்னுதலுற்ற நல்லடியார் வலங்கொள்வதுமாகிய மறைக்காட்டுறையும் பெருமானே! அன்ன மென்னடையுடைய உமாதேவியை ஒரு பாகமாகக்கொண்டு நீர் உகப்பதாகிய செல்வம் சின்னமாகிய உமது வேடமே.

கு-ரை: புன்னை-புன்னைமரங்கள். ஞாழல்-சுரபுன்னை. புறணி யருகெலாம் புன்னை ஞாழல் இவற்றையுடைய மறைக்காடு என்க. மன்னினார் - புகழால் நிலை பெற்றவர். வலங்கொள் - வலம் செய்யும். அன்னமெல் நடையாள்-அன்னம் போன்ற மெல்லிய நடையினை

Koviloor Digital Library

1157. அட்ட மாமலர் சூடி யடும்பொடு
வட்டப் புன்சடை மாமறைக் காடரோ
நட்ட மாடியும் நான்மறை பாடியும்
இட்ட மாக விருக்கு மிடமிதே. 4

1158. நெய்த லாம்பல் நிறைவயல் சூழ்தரும்
மெய்யி னார்வலங் கொண்மறைக் காடரோ
தையல் பாகங்கொண் டீர்கவர் புன்சடைப்
பைதல் வெண்பிறை பாம்புடன் வைப்பதே. 5

யுடையவளாகிய பார்வதி. சின்னவேடம் - அடையாளமாகிய திருவேடம்; அவை திருநீறு அக்கமணி முதலியவை. (நீர்) உகப்பது (ஆகிய) செல்வம் சின்னமாகிய வேடமே என ஏகாரம் பிரித்துக் கூட்டுக. சிவசின்னங்களே மேலான செல்வம்; அவற்றையே இறைவர் உகப்பது என்றபடி.

4. பொ-ரை: எட்டுவகை மலர்களை அரும்பு மலரோடு சூடிய வட்டவடிவாகிய புன்சடை உடைய மறைக்காட்டுறையும் பெருமானே! நட்டம் ஆடியும், நான்கு வேதங்கள் பாடியும் விருப்பமாகத் தேவரீர் எழுந்தருளியிருக்கும் இடம் இத்தலமோ?

கு-ரை: அட்டமாமலர் - சிவபூசைக்குரிய புஷ்பவிதியில் கூறிய எட்டு மலர். 'எட்டுக் கொலாமவர் சூடும் இனமலர்' (தி. 4. ப. 18. பா.8.) என்றார் முன்னும். புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியா வர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்னும் எட்டும் புலரிக்காலத்துக்கு உரியவை. அடும்பு-அடப்பமலர். வட்டப் புன்சடை - வட்டமாகக் கட்டிய மெல்லிய சடை. கொல்லாமை, அருள், பொறியடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு, என்னும் எட்டும் ஞானபூசைக்குரிய எண் மலர்கள்.

5. பொ-ரை: நெய்தலும் ஆம்பலும் நிறைந்துள்ள வயல்கள் சூழ்ந்துள்ளதும், மெய்யன்பினார் வலம் கொள்வதும் ஆகிய மறைக்காட்டுறையும் பெருமானே! பெண்ணொருபாகம் கொண்ட தேவரீர், கவர்த்த புன்சடையில் வருத்தமுற்ற பிறையை அதனை விழுங்கக் காத்திருக்கும் பாம்புடன் ஒருங்கு வைத்தருளியது என்னையோ? (நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றா நயத்தலினால் முதல்வனைச் சாரும் போது நலிவும் மெலிவும் இல்லையாகும் என்பது கருத்து).

Koviloor Digital Library

1159. துஞ்சும் போதுந் துயிலின்றி யேத்துவார்
வஞ்சின் றிவலங் கொண்மறைக் காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பது மைந்தலை நாகமே. 6

1160. திருவி னார்செல்வ மல்கு விழாவணி
மருவி னார்வலங் கொண்மறைக் காடரோ
உருவி னாளுமை மங்கையொர் பாகமாய்
மருவி னாய்கங்கை யைச்சென்னி தன்னிலே. 7

கு-ரை: நெய்தலும் ஆம்பலும் நிறையும் வயல் என்க. இதனால் வயல்களின் சேற்றுவளங் கூறப்பட்டது. மெய்யினார் - மெய்ப் பொருளைத் தலைப்பட்டு உணர்ந்தோராய 'செம்பொருள் கண்டார்'. கவர் புன்சடை - கிளைத்த மெல்லிய சடை. பைதல் - துன்பம்.

6. பொ-ரை: உறங்கும்போதும் உறங்காது உள் உணர்வோர் வஞ்சனையின்றி வலஞ்செய்யும் மறைக்காட்டுறையும் பெருமானே! பஞ்சனைய மெல்லடி உடைய இப்பாவை பலி கொணர்ந்து தேவரீர் பாத்திரத்தில் இடாது அஞ்சி நிற்பதற்குக் காரணம் தேவரீர் அணிந் துள்ள ஐந்தலை நாகமே, அதனை ஏன் அணிந்தீர்?

கு-ரை: துஞ்சும்போதும் - உறங்கும்போதும். துயிலின்றி - அறிவு ஒய்தல் இன்றி உறக்கத்திலும் இறைவனை நினைந்தே இருத்தலின் துயிலின்றி என்றார். வஞ்சம் இன்றி என்பது வஞ்சின்றி எனத் தொக்கது. பஞ்சின் மெல்லடிப்பாவை - முனிபன்னியருள் ஒருத்தி. பலிகொணர்ந்து - பிச்சைகொண்டு. அஞ்சிநிற்பதும் - பயந்து நிற்பதும். ஐந்தலைநாகமே - ஐந்தலை நாகத்திற்கே. ஐந்தலைநாகம் - முதல்வன் திருமேனியில் உள்ள ஐந்தலை நாகம் என்பது குண்டலினி எனப்படும் சுத்தமாயை; அதன் காரியமாகிய சிவம், சத்தி, சாதாக் கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களும் ஐந்தலை எனப்பட்டன. முதல்வன் இருவகை மாயைக்கும் ஆதாரமாகவும் தலை வனாகவும் உளன் என்பது வேதாகமங்களுட் கூறப்படும் உண்மை. அதனை 'மாயையைப் பிரகிருதி (முதற்காரணம்) என அறிக, மாயையை உடையவன் மகேசுவரன் என்றறிக'. என்னும் *சுவேதா சுவதர உபநிடத உரையால்* அறியலாம்.

7. பொ-ரை: அருள் திருவுடையாரின் செல்வம் நிறைந்து விளங்கித் தோன்றும் விழாக்களால் அழகு பெற்றதும், நெஞ்சு நும்பால்

Koviloor Digital Library

1161. சங்கு வந்தலைக் குந்தடங் கானல்வாய்
வங்க மார்வலங் கொண்மறைக் காடரோ
கங்கை செஞ்சடை வைப்பது மன்றியே
அங்கை யில்லன லேந்த லழகிதே. 8

* * * * * * * * * 9

மருவினார் வலம் செய்வதும் ஆகிய மறைக் காட்டுறையும் பெருமானே! நல்ல அழகிய உருவமுடைய உமை மங்கையை ஒரு பாகமாக மருவியதோடு, கங்கையைச் சடையிற் சூடியுள்ளது என்னையோ?

கு-ரை: செல்வம்மல்கு திருவினார்-செல்வங்கள் நிறைந்த திருவினை உடையவர் எனினும் அமையும். உமை முதல்வனது திரு வருளாகிய சிற்சத்தி; கங்கை இயற்கை எனப்படும் உலக முதற் பொருளின் சட ஆற்றலுக்கு ஓர் அடையாளம். முதல்வன் தன் சிற்சத்தி யோடு பிரியாதுநின்று அதனைக் காரணமாகக் கொண்டு எவையும் செய்யவல்லன் என்பதும், இயற்கையாற்றல் அவன் ஒரு கூற்றில் அவன் விருப்பின்படி அடங்கியும் விரிந்தும் நிற்கும் என்பதும் இவ் வுண்மையாம். பெரிய நல்லடையாளத்தால் உணரத்தக்கவை என்பது கருத்து.

8. பொ-ரை: சங்குகளை அலைகள் கரையிலே கொண்டு வந்து உலவவிடும் கடற்கரைச் சோலையிடத்துக் கப்பல்கள் வந்து வலங் கொள்வனபோன்று வரிசைகொள்ளும் மறைக்காட்டுறையும் பெருமானே! தேவரீர் கங்கையைச் செஞ்சடையில் வைப்பதும் அன்றி, அகங்கையில் அனலையும் ஏந்தல் அழகியதேயோ?

கு-ரை: சங்கு வந்தலைக்கும் - ஊர்ந்து வரும் சங்குகளால் அலைக்கப்படும். தடங்கானல் -பெரிய கடற்கரைச் சோலை. வாய்- இடத்து. வங்கம் - கப்பல். இயற்கையின் மாறுபட்ட ஆற்றல்களைத் தன் பேராற்றலுள் அகப்படக்கொண்டு இணைத்து வேண்டியவாறு தொழிற் படுத்துவன் என்பதுகருத்து. உமையம்மைக்குத் தெரியாதபடி கங்கையை மறைத்துவைத்ததே தவறு; மேலும் இல்லை என்று உறுதி உரைப்பார்போலக் கையில் அனல் ஏந்தல் அழகாகுமா? என்பது நயம்.

9. * * * * * * * * *

Koviloor Digital Library

1162. குறைக்காட் டான்விட்ட தேர்குத்த மாமலை
இறைக்காட் டியெடுத் தான்தலை யீரைந்தும்
மறைக்காட் டான்இறை யூன்றலும் வாய்விட்டான்
இறைக்காட் டாயெம் பிரானுனை யேத்தவே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: தன்பாலுள்ள குறையைக் காட்டாதவனாகிய இராவணன் ஏறிவந்த தேர் வழிச்செல்லுதலைத் தடுத்த திருக்கயிலாய மலையைச் சிறுபோது தன்வலிகாட்டி எடுக்கலுற, அவன் பத்துத் தலைகளும், மறைக்காட்டுப் பெருமானே! நீ சிறிது திருவிரல் ஊன்றுதலும், வாய்விட்டரற்றினன். எம்பெருமானே! நீ அடியேன் உனை ஏத்துதலால் எனக்கு இறப்பைக் காட்ட மாட்டாய்; இறவாத இன்ப அன்பே காட்டுவாய் என்றபடி.

கு-ரை: குறைக்காட்டான் - குறைக்கு ஆள்தான் எனப்பிரித்து, குற்றங்களுக்கு ஆளாயிருப்பவன் இராவணன் எனினும் அமையும். விட்ட - செலுத்திய. குத்த - முட்ட. மாமலை - பெருமைக்குரிய திருக் கயிலைமலை. இறைக்காட்டி எடுத்தான் - சிறிது நேரம் தன் தலைமை யின் பெருமையை நந்திதேவர்க்கறிவித்துத் தூக்கினவன். இறை - சிறிது. வாய்விட்டான் - அலறினான். இறைக்காட்டாய் - இறப்பைக் காட்டமாட்டாய்; இறை - இறப்பு. இறைவனை ஏத்துவார்க்கு இறப் பொடு பிறப்பில்லை என்றபடி.

திருநாவுக்கரசர் புராணம்

வேத வனத்தின் மெய்ப்பொருளின்
அருளால் விளங்கு மணிக்கதவம்,
காதல் அன்பர் முன்புதிருக்
காப்பு நீங்கக் கலை மொழிக்கு,
நாதர் ஞான முனிவருடன்
தொழுது விழுந்தார். ஞாலத்துள்,
ஓத ஒலியின் மிக்கெழுந்த
தும்பர் ஆர்ப்பும் மறையொலியும்.

- தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

10. திருமறைக்காடு

பதிக வரலாறு:

தென்புகலிக்கோவும் அரசும் மறைக்காட்டுக் குன்றவில்லியார் மகிழ்ந்த கோயில் புகுந்து வலங்கொண்டு திருமுன்பு சென்று சேர்ந்தனர். அகிலமறைகள் அருச்சனைசெய்து கதவந் திருக்காப்புச் செய்த அந்நாள்முதல் இந்நாள்வரையுமடைத்தே நிற்கின்றமணி நீள்வாயில் வணங்குவார் மருங்கோர்வாயில் வழியெய்தி அல்லல் தீர்ப்பார்தமை அருச்சிப்பார்கள் தொழுவாராம் படிகண்டு எல்லை யில்லாப் பெரும்புகழாராகிய அப்பர் இதனைக் கேட்டறிந்தார். தோணிபுரத்தரசர் நேரிறைஞ்சத் ''திருமுன் கதவம் திருக்காப்பு நீங்கப்பாடும் அப்பரே!'' எனத் திருநாவுக்கரசர் பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 268.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்:123 பதிக எண்: 10

திருச்சிற்றம்பலம்

1163. பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

1. பொ-ரை: பண்ணையொத்த மொழியாளாகிய உமை அம்மையை ஒருபங்கிற் கொண்டவரே! மண்ணுலகத்தவர் வலம் புரியும் மறைக்காட்டுறையும் பெருமானே! அடியேன் என்கண்களால் உம்மைக் காணுமாறு, வேதங்களால் அடைக்கப் பெற்ற இக்கதவினைத் திண்ணமாகத் திறந்து அருள்செய்வீராக.

கு-ரை: கண்களால் உமது திருக்காட்சியைக் காணத் திருக் கதவைத் திறந்தருள்வீராக என வேண்டியது இத் திருப்பதிகம். பண்ணினேர் மொழியாள்-திருமறைக்காட்டு அம்பிகையின் திருப்பெயர். யாழைப் பழித்த மொழியம்மை என்றும் வீணா விதூஷிணி என்றும் இன்றும் வழங்குகிறது. மொழியாளாகிய உமை என்க. பங்கர்-ஒருபாகத்தே உடையவர். மண்ணினார் - நிலவுலகிலே உள்ள மக்கள். திண்ணமாக - உறுதியாக.

Koviloor Digital Library

1164. ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

1165. அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. 3

2. பொ-ரை: ஆகத்தில் ஈண்டிய செஞ்சடைகொண்ட இறைவரே! தொகுதியாய கருமுகிலின் நிறத்தையும் தளிரின் ஒளியையும் உடைய மணிகண்டரே. அடியேனை ஆண்டுகொண்ட நீரே அருள் செய்வீராக; நீண்ட இப்பெருங்கதவின் வலியினை நீக்குவீராக.

கு-ரை: ஈண்டு - திரண்டு கூடிய, அதாவது, சேர்த்துக் கட்டிய. மூண்ட கார்முகில் - திரண்ட கரிய மேகம். முறி - தளிர்.

இறைவன் கண்டம் கறுப்பு நிறமும் ஒளியும் உடையது என்க. நீண்ட மரக்கதவின்வலி - நெடுநாளாகத் திறக்கப்படாத கதவின் வலிமையை.

3. பொ-ரை: அட்டமூர்த்தியாகிய எந்தையே! தீயவர் புரங்களைச் சுட்ட உயர்ந்த தேவரே! பட்டமாகக் கட்டிய சடைமுடியுள்ள பரமரே! செவ்வையாக இக்கதவினைத் திறப்பித் தருள்வீராக.

கு-ரை: அட்டமூர்த்தி - ஐம்பூதமும் ஞாயிறும் மதியும் உயிருமாகிய எண்வகை வடிவு. மூர்த்தியது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. அப்பர் - தந்தையானவர். துட்டர் - துஷ்டராகிய திரிபுரத்தசுரர். வான்புரம் - வானிலேபறக்கும் கோட்டை, சுட்ட - எரித்து அழித்த. சுவண்டர் - திருவெண்ணீறணிந்தவர்.

பட்டம் கட்டிய சென்னி - சடை முடியில் பிறை முதலியன தங்கியிருத்தல்தான் ஏகநாயகன் என்னும் பட்டத்தைக் காட்டுகின்றது என்பது கருத்து. பரமர் - மேலானவர். சட்ட - செவ்வையாக யாம் உம்மை நேரே காணும்படி.

Koviloor Digital Library

1166. அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடைவிருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

1167. மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5

4. பொ-ரை: அருமை உடைய நான்மறை அருளிய நாவுடையவரே! பெரிய புரம் எரியுண்ணுமாறு சுட்ட உயர்ந்த தேவரே! விரிந்த கோவண ஆடை கொண்ட மிகப்பழையவரே! பெரிய இக்கதவினைப் பிரித்தருள்வீராக.


கு-ரை: அரிய - பொருள் உணர்தற்கு அரிய (நான்மறை). விரிகொள் - விரித்தலைக்கொண்ட. விருத்தர் - பழையோன்.

5. பொ-ரை: திருமலையைப்போல் அழியாதிருக்கும் மறைக்காட்டுறையும் பெருமானே! கலைகள் வந்திறைஞ்சிக் கழல் ஏத்தப் படுபவரே! விலைமதிப்பற்ற செம்மணிவண்ணத் திருமேனியரே! தொலைவில்லாத இக்கதவுகளைத் திறந்தருள்வீராக.

கு-ரை: மலையின் நீடு இருக்கும் மறைக்காடு - திருக்கயிலை ஊழிகளில் அழியாது நிற்றல்போலத் தானும் அழியாது நீடுதலாக இருக்கும் மறைக்காடு.இதுபோன்று ஊழிக்காலத்தும் ஒடுக்கம் கூறப் படாத தலங்கள் பிரளயஜித் எனப்படும்.

இரண்டாம் அடி; கலைகளின் ஆசிரியர்களும் அவற்றைக் கற்றோரும் வந்திறைஞ்சும் திருவடிகளையுடையவர்; அவற்றால் உரைக்கப்படும் ஏத்தாகிய பொருள்சேர் புகழை உடையர். (கலைகளின் தெய்வம் வந்திறைஞ்சி ஏத்தும் எனினும் பொருந்தும் - இக்காரணம் பற்றியே மறைக்காடு எனப்பட்டது) தொலைவிலா - நீக்கப்படாத, திறக்கப்படாத. துணைநீக்கும் - இணைந்துள்ள நிலையை நீக்கும், திறப்பியும் என்றபடி.

Koviloor Digital Library



திருமறைக்காடு: திருநாவுக்கரசர் மறைக்கதவம் திறப்பித்தல்

Koviloor Digital Library



Koviloor Digital Library

1168. பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

1169. வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

1170. ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

6. பொ-ரை: ஊர்ப்புறத்து நீரின் மருங்கெலாம் தாழை பூப்பதும், தண்பொழில் சூழ்வதுமாகிய மறைக்காட்டுறையும் பெருமானே! யார்க்குங் காண்டல் அரியீர்! அடிகளே! உமைநோக்கிக் காணும் பொருட்டு இக்கதவைத் திறந்தருள்வீராக!

கு-ரை: புறணியருகெலாம் பூக்கும் தாழையும் தண்ணிதாக ஆக்கும் பொழிலும். சூழ் - சூழ்ந்த. அடிகேள் - தவமுனிவரே; உமை- உம்மை.

7. பொ-ரை: வெந்த திருநீற்றுப் பொடியைப் பூசும் மேலானவரே! முடிவில்லாதவரே! மறைக்காட்டுறையும் பெருமானே! எம் தந்தையே! அடியார்கள் நேர்வாயிலில் வந்து இறைஞ்சிடும் பொருட்டு இப் பெருங்கதவம் பிணிக்கப்பட்டிருத்தலை நீக்கித் திறந்தருள்வீராக.

கு-ரை: விகிர்தர் - மாறுபட்ட வேடங்களை உடையவர். அந்தமில்லி - கேடில்லாதவர். அணி - அழகிய. எந்தை - என் தந்தையே. பிணி - கதவுகள் பிணிக்கப் பட்டிருத்தல்.

8. பொ-ரை: கங்கையாற்றைச் சடையிற் சூடும் மறைக் காட்டுறையும் பெருமானே! ஒரு கூற்றை உமைக்கு ஈந்த இளையவரே!

Koviloor Digital Library

1171. சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி யணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

1172. விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

விடையேறிய எம்பெருமானே! இந்த மாறுபாடில்லாத கதவின் வலியினை நீக்கித் திறந்தருள்வீராக.

கு-ரை: ஆறு-கங்கை. அணி-அழகு. கூறு - உடம்பில் ஒரு பாதி. மாதுஉமை -பெண்ணாகிய உமையம்மைக்கு. குழகர்-இளையர். மாறிலா - ஒப்பில்லாத,

முன் மறைகள் அடைத்த நிலையினின்று மாறுதலின்றி உள்ள எனினும் ஆம்.

9. பொ-ரை: வெண்பொடிச் சுண்ணம் பூசும் உயர்ந்த தேவரே! அழகுசெய்து ஏற்றின்கண் ஏறி உயர்ந்து தோன்றும் பரமரே! அண்ணலே! ஆதியே! அணிமறைக் காட்டுறையும் பெருமானே! திண்ணமாக இக்கதவினைத் திறப்பித்தருள்வீராக.

கு-ரை: சுண்ணமும் வெண்பொடியும் எனினும் அமையும்; கலவைச்சாந்தும் திருநீறும் என்பது பொருள். பண்ணி - அலங்கரித்து. அண்ணல் -தலைமையானவன். ஆதி - முதன்மையானவன். திண்ணம் உறுதி.

10. பொ-ரை: விண்ணுலகத்தவர் விரும்பி எதிர்கொண்டு இன்புறுமாறு மண்ணுலகத்தவர் சென்று வணங்கியெழும் மறைக் காட்டுறையும் பெருமானே! கண்ணினால் உமைக் காணுவதற்காகக் கதவினைத் திண்ணமாகத் திறந்து அருள் செய்வீராக.

கு-ரை: தேவர்கள் முன்னர்வந்து வழிபாடு முடித் துள்ளாராகலின், பின் வழிபடவரும் மண்ணவர்களை எதிர்

Koviloor Digital Library

1173. அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

கொள்ளுகின்றார்கள் என்க. இவ்வியல்பினையுடையது திரு மறைக்காடு என்க.

11. பொ-ரை: பெருகும் புன்னைகள் சூழ்ந்த மறைக்காட்டுறையும் பெருமானே! இராவணனை விரலால் அடர்த்திட்ட நீர் எளியேன் பால் இரக்கம் கொஞ்சமும் இல்லாதவராயுள்ளீர்! எம்பெருமானீரே! விரைந்து, இக்கதவினைத் திறப்பித்தருள்வீராக.

கு-ரை: பத்துத் திருப்பாடல்கள் பாடியும் கதவு திறவாமையைக் கண்ட அப்பர் பெருமான் இரக்கமில்லையோ! எனக்கூறிய இப் பாடலின் உரை கேட்டு நாவரசரின் பாமாலையினிசையில் ஈடுபட்டிருந்த இறைவன் விரைந்து கதவைத் திறந்தனன். அரக்கன்- இராவணன். அடர்த்திட்ட - நெருக்கியருள் செய்த. இரக்கமொன்றிலீர்- இன்று இரக்கம் சிறிதும் என்பால் இலராயினீர். சுரக்கும் பெருகிய, தேனைச் சுரக்கும் எனினும் அமையும். சரக்க - விரைவாக.

திருநாவுக்கரசர் புராணம்

உண்ணீர் மையினால் பிள்ளையார்
உரைசெய் தருள அதனாலே,
பண்ணி னேரு மொழியாள்என்
றெடுத்துப் பாடப் பயன்துய்ப்பான்,
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு
நீக்கத் தாழ்க்கத் திருக்கடைக்காப்(பு),
எண்ணீர்! இரக்கம் ஒன்றில்லீர்
என்றுபாடி இறைஞ்சுதலும்,

- சேக்கிழார்.

Koviloor Digital Library

11. திருமீயச்சூர்

பதிக வரலாறு:

இத்திருப்பதிக வரலாறு தி.12 பெரியபுராணத்திற் குறிக்கப் பெறவில்லை.

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 124 பதிக எண்: 11

திருச்சிற்றம்பலம்

1174. தோற்றுங் கோயிலுந் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையரற்
கேற்றங் கோயில்கண் டீரிளங் கோயிலே. 1

1175. வந்த னையடைக் கும்மடித் தொண்டர்கள்
பந்த னைசெய்து பாவிக்க நின்றவன்

1. பொ-ரை: இந்நாள்வரை தோன்றிய கோயில்களும், இனித் தோன்றும் கோயில்களும், வேற்றுக்கோயில்களும் பலவுளவேனும், கூற்றுவனைத்தடிந்த குளிர்ந்த புன்சடை உடைய அரனுக்கு மீயச்சூர் இளங்கோயிலே ஏற்றம் உடைய கோயிலாகும்; காண்பீராக.

கு-ரை: தோற்றுங்கோயில் - பிறவினை தன்வினைப் பொருள் பட நின்றது, அன்றிப் பலரால் இனித் தோற்றப்படும் கோயில்கள் எனினும் அமையும். தோன்றியகோயில் - இதுவரை தோன்றியுள்ள சிவாலயங்கள். வேற்றுக்கோயில்கள் - சிவாலயங்களல்லாத ஏனைய தெய்வங்களின் கோயில்கள். பலவுள - இவை உலகில் பல உள்ளன. மீயச்சூர் இளங்கோயில் - மீயச்சூரில் பாலத்தாபனம் செய்துள்ள பாலாலயம். பாய்ந்த - இயமனைச் சினந்து காலால் உதைத்த. குளிர் புன்சடை - கங்கை தங்கியதால் குளிர்ந்த மெல்லிய சடையுடைய. ஏற்றம் - உயர்வானது. பாலத்தாபனமாதல் பற்றிக் குறைவாக எண்ணு தல் வேண்டா என்றபடி. இதனால் வேற்றுக்கோயில்களில் அவரவர் விரும்பும் வடிவில் அருள்பவனும் சிவபிரானே என்றதும் ஆயிற்று.

2. பொ-ரை: திருவடிக்கு வழிபாடு செய்தலையே உள்ளத் தடைக்கும் தொண்டர்கள் தம்நெஞ்சைக் கட்டுப்படுத்திப் பாவிக்க

Koviloor Digital Library

சிந்த னைதிருத் துந்திரு மீயச்சூர்
எந்த மையுடை யாரிளங் கோயிலே. 2

1176. பஞ்ச மந்திரம் ஓதும் பரமனார்
அஞ்ச ஆனை யுரித்தன லாடுவார்
நெஞ்சம் வாழி நினைந்திரு மீயச்சூர்
எந்த மையுடை யாரிளங் கோயிலே. 3

1177. நாறு மல்லிகை கூவிளஞ் செண்பகம்
வேறு வேறு விரித்த சடையிடை

நின்றவனும், எம்மை அடிமையாக உடையானும் விளங்கியருளும் திருமீயச்சூர் இளங்கோயில் வழிபடுவார் சிந்தனையைத் திருத்தவல்லது ஆகும்.

கு-ரை: ''கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' (தி.12 பெரியபுராணம். திருக்கூட்டம்.8) என்றமையின் முதலடிக்கு இவ்வாறு உரைக்கப்பட்டது. வந்தனையைச் சிவபிரானுக்கே செலுத்தும் எனினும் அமையும். அடித்தொண்டர் அடிமைத் திறம் பேணும் தொண்டர். பாவிக்க நின்றவன், எந்தமையுடையாரது திருமீயச்சூர் இளங்கோயில் சிந்தனை திருத்தும் என முடிக்க.

3. பொ-ரை: நெஞ்சமே! ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களை ஓதும் பரமனும், ஆனை அஞ்சுமாறு உரித்தவனும், அனல் ஆடுவானும், திருமீயச்சூர் இளங்கோயிலில் எம்மை உடையானுமாகிய பெருமானையே நினைந்திரு; அந்நினைப்பால் வாழ்வாய்.

கு-ரை: பஞ்சமந்திரம் -' ஈசானஸ் ஸர்வவித்யாநாம்' எனத் தொடங்கும் ஐந்து மந்திரங்கள். ஓதும் பரமன் -அம்மந்திரங்களால் ஓதப்படும் முழுமுதல். ஆனை அஞ்ச உரித்து என மொழி மாற்றிப் பொருளுரைக்க. அனலாடுவார் - தீயேந்தி ஆடுபவர். நெஞ்சமே! நினைந்திரு. வாழி முன்னிலையசை. இதனால் மேற்குறித்த மந்திரங்கள் வேதங்களின் தெளிவாயுள்ளவை என்றதும் அவற்றால் இறைவனை வழிபடுக என்றதும் ஆயிற்று.

4. பொ-ரை: மணம் வீசும் மல்லிகை, கூவிளம், செண்பகம் முதலிய மலர்களை வேறுவேறாக விரித்த சடையிடை ஆற்றோடு

Koviloor Digital Library

ஆறு கொண்டுகந் தான்திரு மீயச்சூர்
ஏறு கொண்டுகந் தாரிளங் கோயிலே. 4

1178. வெவ்வ வண்ணத்து நாகம் வெருவவே
கவ்வ வண்ணக் கனல்விரித் தாடுவர்
செவ்வ வண்ணந் திகழ்திரு மீயச்சூர்
எவ்வ வண்ணம் பிரானிளங் கோயிலே. 5

1179. பொன்னங் கொன்றையும் பூவணி மாலையும்
பின்னுஞ் செஞ்சடை மேற்பிறை சூடிற்று
மின்னு மேகலை யாளொடு மீயச்சூர்
இன்ன நாள் அக லாரிளங் கோயிலே. 6

கொண்டுகந்தான் திருமீயச்சூரின் இளங்கோயிலில் விடைமேற் கொண்டு உகந்த பெருமானே! (அடியார் சாத்தும் மல்லிகை முதலிய வற்றை முடியில் ஏற்று மகிழ்ந்து அருள்புரிவன் என்பது கருத்து)

கு-ரை: திருமீயச்சூர் இளங்கோயில் ஏறுகொண்டுகந்த பெருமான் அடியார் புனையும் மல்லிகை முதலியவற்றை விரித்த சடையிடை (ஆற்றோடு உடன் அமையக்) கொண்டுகந்தான் என முடிக்க.

5. பொ-ரை: வெம்மையான வண்ணத்தையுடைய நாகம் அஞ்சும்படியாக எப்பொருளையும் கவ்விக்கொள்ளும் வண்ணத்தை யுடைய கனல் விரித்தாடுவார், திருமீயச்சூர் இளங்கோயில் செவ் வண்ணந்திகழ் மேனியுள்ள பிரானது வண்ணங்கள் எப்படிப்பட்டவை!

கு-ரை: 'வண்ணம்' நான்கனுள் மூன்றாவது நிறம் எனப் பொருள்படும்; ஏனையவை இயல்பு என்னும் பொருளில் வந்துள்ளன. சினக்கும் இயல்புடைய நாகம் வெருவும்படி கவ்வும் இயல்புள்ள (அடுத்து நின்ற பொருள்களைப்பற்றி அழிக்கும் இயல்பு) கனலை வீசி ஆடுவர்; அவர் இயல்பு வியக்கத் தக்கதாகவுள்ளது என்பது கருத்து. பகைப் பொருள்களை ஒருங்குடன் கொண்டு அவ்வவை தத்தம் எல்லை கடவாதபடி காக்கும் இயல்பு அவன்றன் இயல்பு என்றபடி.

6. பொ-ரை: திருமீயச்சூர் இளங்கோயிலில் ஒளிவிடும் மேகலை அணிந்த உமையம்மையோடு இது போன்ற நாளினும் அகலாது உள்ள பெருமான் பின்னிக்கொண்டுள்ள சடைமேல் பிறையுடன் சூடியது, பொன்போன்ற கொன்றைக்கண்ணியும் சூடியார் (கொடுக்கும்) மலர்களால் அணிபெறத் தொகுக்கப்பெற்ற மாலையும் ஆம்.

Koviloor Digital Library

1180. படைகொள் பூதத்தன் பைங்கொன்றைத் தாரினன்
சடைகொள் வெள்ளத்தன் சாந்தவெண் நீற்றினன்
விடைகொ ளூர்தியி னான்திரு மீயச்சூர்
இடைகொண் டேத்தநின் றாரிளங் கோயிலே. 7

1181. ஆறு கொண்ட சடையினர் தாமுமோர்
வேறு கொண்டதொர் வேடத்த ராகிலும்

கு-ரை: பொன்னங்கொன்றையும் - பொன்னிறமுள்ள கொன்றை மலரும். பூவணிமாலையும் - பிற பூக்களால் அலங்கரித்துத் தொடுக்கப்பட்ட அழகிய மாலையும். பின்னும் - நெருங்கிய. சூடிற்று - சூடியது. மின்னுமேகலையாள் - ஒளிவிடும் மேகலாபரணம் அணிந் தவள். இன்னநாள் - இதுபோன்ற நாளிலும் கலாகருடணம் செய்துள்ள நாளிலும், அகலார் - நீங்காது எழுந்தருளியிருப்பவர். அகலார் சூடிற்று கொன்றையும் மாலையும் என இயைத்து வினை முடிவு செய்க. கொன்றைமாலை - திருவடையாளமாலை. ஓங்கார வாச்சியன், திருவைந்தெழுத்தின் பொருள் என்பதைக் காட்டுவது. ஏனையது அடியார் தொடுப்பது. சூடிற்று - தொழில்மேல் நின்றது.

7. பொ-ரை: பூதங்களைப் படையாகக் கொண்டவனும், கொன்றைமாலையனும், சடையில் வெள்ளம் உடையவனும், சாந்த வெண்ணீற்றனும், விடையூர்தியானும், திருமீயச்சூர் இளங்கோயிலின் கண் செவ்வி தெரிந்து ஏத்துமாறு நின்ற இறைவனேயாவன்.

கு-ரை: படைகொள்பூதத்தன் - பூதப்படையினன். பைங் கொன்றை - புதிய கொன்றைமலர். சாந்தவெண்ணீற்றினன் - வெண் ணீற்றைச் சாந்தமாகக் கொண்டவன். ஏனையவும் இவ்வாறே வெள்ளங்கொள் சடையன், விடையூர்திகொள்வான் எனச்சொன் னிலைமாற்றிப் பொருள் கொள்ளப்படும். இடை - சமயம், செவ்வி. காலம் நன்கு உணர்ந்து திருக்கோயிலுக்குச் சேறல்வேண்டும் என்றபடி.

8. பொ-ரை: சடையினில் ஓர் ஆறு கொண்ட இயல்பினரும், வேறுவேறுகொண்ட வேடத்தராமியல்பினரும். கூறு கொண்டுகந்த அம்மையொடும் திருமீயச்சூர் இளங்கோயிலின்கண் ஏறுகொண்டு உகந்தாரேயாவர்.

கு-ரை: ஓர் ஆறுகொண்ட சடையினர் தாமும் - ஒப்பற்ற கங் கையைச் சூடிய சடையினை உடையவராகிய பெருமான். வேறு கொண்டதோர் வேடத்தராகிலும் - பலவேறு மூர்த்தங்களைக் கொண்ட

Koviloor Digital Library

கூறு கொண்டுகந் தாளொடு மீயச்சூர்
ஏறு கொண்டுகந் தாரிளங் கோயிலே. 8

1182. வேதத் தானென்பர் வேள்வியு ளானென்பர்
பூதத்தா னென்பர் புண்ணியன் தன்னையே
கீதத் தான்கிள ருந்திரு மீயச்சூர்
ஏதந் தீர்க்கநின் றாரிளங் கோயிலே. 9

1183. கடுக்கண் டன்கயி லாய மலைதனை
எடுக்க லுற்ற இராவணன் ஈடற
விடுக்க ணின்றி வெகுண்டவன் மீயச்சூர்
இடுக்கண் தீர்க்கநின் றாரிளங் கோயிலே. 10

திருச்சிற்றம்பலம்

வராக இருந்தாலும் (திருமீயச்சூரிளங்கோயிலில்) கூறு கொண்டுகந்தாளொடு ஏறுகொண்டுகந்தார் - பார்வதி தேவியாரொடு விடையேறி அருள்செய்யும் மூர்த்தமாக எழுந்தருளியுள்ளார்.

9. பொ-ரை: புண்ணியனாகிய இறைவனை வேதத்தான் என்றும், வேள்வியுளான் என்றும், பூதத்தான் என்றும் கூறுவர்; கீதம் கிளரும் திருமீயச்சூரில், இளங்கோயிலின்கண் அடியவர் ஏதந்தீர்க்க நின்ற இறைவரேயாவர்.

கு-ரை: வேதத்தான்-வேதங்களிடையே விளங்குபவன், நூற்றெட்டுப் பெயர்களுள் ''கிரிசாயநம'' என்பதன் பொருளும் இது. கிரி -வேதத்தின் பரியாயம். வேள்வியுளான் - வேள்வித்தீயில் உள்ளான். என்பர் - என்று சொல்வார்கள். புண்ணியன் - புண்ணிய வடிவினன். கீதத்தான் கிளரும், என்பது எதுகை நோக்கி வலித்து நின்றது. கிளரும் - விளங்கும். ஏதம் - துன்பம்.

10. பொ-ரை: விடமுண்டகண்டனும், கயிலாயமலையினை எடுக்கலுற்ற இராவணன் ஈடற விடுதற்கேற்ற இடமில்லையாம்படி வெகுண்டவன் மீயச்சூரில் இளங்கோயிலின்கண் இடுக்கண் தீர்க்க நின்ற இறைவனேயாவன்.

கு-ரை: கடு - விடம். ஈடு - வலிமை. விடுக்கண் இன்றி - விடுபடுதற்கு இடன் இன்றாம்படி. வெகுண்டவன் - அருள் செய்யும் நோக்கோடு சினந்தவன். இடுக்கண் - துன்பம்.

Koviloor Digital Library

12. திருவீழிமிழலை

பதிக வரலாறு:

திருநாவுக்கரசும், காழி ஞானப்பிள்ளையும் வீழிமிழலை வந்தணைய, ஆழிவலவனறியாத அடியாரடியார்களும் மறை யோர்களும் எதிர்கொண்டு வணங்க வணங்கி உள்புக்கு விண் ணிழிந்த கோயில் வாயில் சென்று அணைந்து வலம்வந்து முன்றில் வணங்கித் திருமுன் எய்தி விழுந்து எழுந்து விம்மிக் கைகள் குவித்துக் கழல்போற்றிக் கலந்த அன்பு கரைந்துருக மெய்யில் வழியும் கண்ணருவி விரவிப் பரவும் சொன்மாலை களுள்ளும் படிக்காசு பெற்றுச் சிவனடியார் எல்லாரும் எய்தி உண்க என இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்டுத் துயர்கூர் வறுமை தொலைத்து மொழி மாலைகள் பல சாத்தியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 பெரிய. புரா. 250- 262.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 125 பதிக எண்: 12

திருச்சிற்றம்பலம்

1184. கரைந்து கைதொழு வாரையுங் காதலன்
வரைந்து வைதெழு வாரையும் வாடலன்
நிரந்த பாரிடத் தோடவர் நித்தலும்
விரைந்து போவது வீழி மிழலைக்கே. 1

1. பொ-ரை: மனங்கரைந்து கைதொழுவாரையும் காதலித்து அருள்வன்; தன்னை விலக்கி இகழாநின்று எழும் புறச்சமயத்தாரையும் வாடச்செய்யான். இத்தகைய அவன் வரிசையாகிய பூதகணங்களோடு நித்தலும் விரைந்து போவது வீழிமிழலைத் தலத்திற்கே. (வேண்டுதல் வேண்டாமையிலானாகிய முதல்வன், அந்தணர் வழிபடுதலால் அவர்க்கு அருள்புரிய விரைந்து தோன்றுவன் என்றபடி.)

கு-ரை: கரைந்து - மனமுருகி; வாயைவிட்டுப் புகழ்ந்து பேசி என்றலும் ஒன்று. கைதொழுவார் - கையால் தொழுவார். காதலன் - அன்பு செய்வன். வரைந்து - (கடவுள் இல்லை என) நீக்கி. வைதெழுவார் - துயிலுணரும்போது இகழா நின்று எழும்

Koviloor Digital Library

1185. ஏற்று வெல்கொடி யீசன்ற னாதிரை
நாற்றஞ் சூடுவர் நன்னறுந் திங்களார்
நீற்றுச் சந்தன வெள்ளை விரவலார்
வேற்றுக் கோலங்கொள் வீழி மிழலையே. 2

1186. புனைபொற் சூலத்தன் போர்விடை யூர்தியான்
வினைவெல் நாகத்தன் வெண்மழு வாளினான்
நினைய நின்றவ னீசனை யேயெனா
வினையி லார்தொழும் வீழி மிழலையே. 3

புறச்சமயத்தார். வாடலன் - துன்பம் செய்யான். நிரந்த - வரிசையாக விளங்கும். பாரிடத்தோடு - பூதங்களோடு. தெய்வம் இல்லை என்பாரும் தன் மக்களே ஆதலின் தான் அவரை வாட்டாது தாமே நாளடைவில் உணர வைப்பன் என்றபடி. விரைந்து போவது-அன்பர் வழிபடும்போது நேர் பட நின்று வழிபாட்டை ஏற்றுக் கொள்ளுதல்.

2. பொ-ரை: பிற கொடிகளை வென்று மேம்பட்ட ஆனேற்றுக் கொடி யையுடைய ஈசன் தனக்குரிய ஆதிரை நாளில், தான் வேறு வேறு கோலங் கொண்டு காட்சியளித்தற்கு இடமாகிய திருவீழிமிழலையில் தாம் சந்தனம் எனக்கொண்டு பூசிவந்த வெள்ளை நீற்றைக் கொள்ளாது மணமுள்ள பொருள்களைச் சூடிக்கொள்வர்; மிக நல்லமதியைச் சூடு வோராகவும் உளர். சந்தன வெள்ளை நீற்றை விரவல் உடையராய் (அணிந்து) நாற்றம் சூடுவர் (நறுமலர் அணிவர்) என்றுரைப்பினும் அமையும்.

கு-ரை: ஏற்றுவெல்கொடி - இடபமாகிய வெல்லுங்கொடி. ஆதிரை - திருவாதிரைத் திருநாளில். நாற்றம் - மணமுள்ள கஸ்தூரி புனுகு முதலிய பொருள்கள். நன்னறும்-நல்லமணமுள்ள.நீற்றுச்சந்தன வெள்ளை - சந்தனமாகக் கொள்ளப்படும் வெள்ளை நீறு. ''வெந்த சாம்பல் விரையெனப்பூசி'' (தி.3. ப.54. பா.3) என்றல் காண்க. விரவலார் - அணியாது. வேற்றுக்கோலம் - பலவேறு கோலங்களைக் கொள்ளும் இடம். நூல்களுட் கூறியபடி யோகியாகத் தோன்றாது போகியாகவும் காட்சி தருகிறான் என்றபடி.

3. பொ-ரை: சூலம் உடையவனும், விடை ஊர்தியனும், வினை களை வென்றவனும் நாகத்தைப் பூண்டவனும், வெண்மழு வாள் உடையவனும், அடியவர்கள் ஈசனே என்று நினைய நின்றவனும், இருவினையற்ற மேலோர் தொழும் வீழிமிழலை இறைவனே.

Koviloor Digital Library

1187. மாடத் தாடு மனத்துடன் வைத்தவர்
கோடத் தார்குருக் கேத்திரத் தார்பலர்
பாடத் தார்பழிப் பார்பழிப் பல்லதோர்
வேடத் தார்தொழும் வீழி மிழலையே. 4

1188. எடுத்த வெல்கொடி யேறுடை யான்தமர்
உடுப்பர் கோவண முண்பது பிச்சையே
கெடுப்ப தாவது கீழ்நின்ற வல்வினை
விடுத்துப் போவது வீழி மிழலைக்கே. 5

கு-ரை: புனைபொன்சூலம் - அலங்கரிக்கப்பெற்ற பொன்னாலாகிய சூலம். போர்விடை - போர்செய்யும் ஆற்றலோடுகூடிய இடபம். வினைவெல் நாகத்தன் - இருவினைகளை இயல்பாகவே வென்றவனும் நாகத்தனும். வெண்மழுவாள் - வெண்மையான மழுவாயுதமாகிய வாள். நினைய நின்றவன் - நினைப்பதற்குரியவன். ஈசனையே - ஈசனே. ஐ சாரியை. எனா - என்று. வினையிலார் - வினைகளின் நீங்கினார். ஈசனே என (அடியவர்கள்) இனைய நின்றவன் எனப் பிரித்தால் மோனை கெடாது.

4. பொ-ரை: முதல்வனை மாடத்தும் (விமானத்தும்), ஆடும் மனத்தும் உடன் வைத்தவராகிய திருமாலும், வேத கோஷம் செய்யும் பிரமனும், குருக்ஷேத்திரத்தார் பலரும் (பாண்டவர்), வேதத்தின் மூல பாடம் பேணும் அந்தணர்களும், பழிப்பார் கூறும் பழிப்பு அல்லதாகிய திருவேடம் பூண்ட அடியார்களும், தொழும் (பதி) திருவீழி மிழலையே.

கு-ரை: மாடத்தும் ஆடும் மனத்தும் (முதல்வனை) உடன் வைத்தவர் - விண்ணிழி விமான்மாகிய புறத்தும் நிலையாது திரியும் மனத்தும் (அகத்தும்) முதல்வனை வழிபட்ட திருமால். கோடத்தார் - கோஷத்தார்.(வேத கோஷம் செய்யும் பிரமன்) பாடத்தார்-மூல பாடம் பேணும் அந்தணர். தொழும்பதி என ஒரு சொல் வருவிக்க. திருமால், பிரமன், பாண்டவர் எனத் தனித்தவர்களாகக் கொள்ளாது. தொகையினராகக் கோடலும் ஒன்று. மாடம் - மாடம் போன்ற விமானம்.

5. பொ-ரை: உயர்த்துப் பிடித்த இடபக்கொடியையுடைய சிவ பிரானின் அடியவர்கள், கோவணமே உடுப்பது; பிச்சை உணவே உண்பது; கீழ்நின்ற வல்வினைகளையே கெடுப்பது; பந்த பாசங்களை விடுத்துப் போவது வீழிமிழலைக்கே.

Koviloor Digital Library

1189. குழலை யாழ்மொழி யாரிசை வேட்கையால்
உழலை யாக்கையை யூணு முணர்விலீர்
தழலை நீர்மடிக் கொள்ளன்மின் சாற்றினோம்
மிழலை யானடி சாரவிண் ணாள்வரே. 6

1190. தீரன் தீத்திர ளன்சடைத் தங்கிய
நீர னாடிய நீற்றன்வண் டார்கொன்றைத்
தாரன் மாலையன் தண்நறுங் கண்ணியன்
வீரன் வீழி மிழலை விகிர்தனே. 7

கு-ரை: எடுத்த - தூக்கிய. வெல்கொடி - வென்ற (மேம்பட்ட) கொடி. தமர்-சுற்றமாகிய அடியார். உண்பது பிச்சை-உண்ணும் உணவு பிச்சையாகக்கொண்டது. கீழ்நின்ற-தாழ நின்ற; தாழ்தற்குக் காரண மாக நின்ற தீயவினைகள். விடுத்துப் போவது - உலக பந்தபாசங்களை நீங்கிச் சென்று சேரும் இடம்.

6. பொ-ரை: குழலையும், யாழையும் போன்ற மொழியாரை வேட்கையினால் இசையும், உழலும் உடலைத் தீநெறியின்கண் ஊன்றும் நல்லுணர்வற்றவர்களே! நெருப்பை நீர் மடியின்கண் கொண்டு கெடாதீர்; பன்முறையினும் சாற்றினோம், மிழலையான் திருவடி சார விண்ணாளும் திறம் பெறலாம்.

கு-ரை: குழலை - என்றதில் ஐ சாரியை; குழலும் யாழும் போன்ற இசையோடு கூடிய மொழியாரிடத்து வைக்கும் வேட்கையால் உடலைப் பேணும் அறிவிலீர் என்றபடி. ஊணும் - ஊன்றும். உணவும் மருந்தும் உண்டு வலிவுறச் செய்கின்ற; உண்பிக்கும், ஊட்டும் எனினும் அமையும். அங்ஙனம் பேணுதல் நெருப்பை மடியிற் கட்டிக் கொள்வது போன்றது என்கிறார் அப்பர்.

7. பொ-ரை: அறிஞனும், தீத்திரளைக் கையிற்கொண்டாடுபவனும், சடைத் தங்கிய கங்கையனும், ஆடிய திருநீற்றனும், வண்டார்ந்த கொன்றைத்தாரும், குளிர்ந்து மணக்கும் கண்ணியும் மாலையும் உடையவனும், புலன்களை வென்று விளங்கும் வீரனும் வீழிமிழலையிலுள்ள விகிர்தனே.

கு-ரை: தீரன் - அறிஞன். தீத்திரளன் - நெருப்புத் திரள் போன்ற செம்மேனியன் எனலுமாம். நீரன் - கங்கையை அணிந்தவன். ஆடிய

Koviloor Digital Library

1191. எரியி னாரிறை யாரிடு காட்டிடை
நரியி னார்பரி யாமகிழ் கின்றதோர்
பெரிய னார்தம் பிறப்பொடு சாதலை
விரியி னார்தொழும் வீழி மிழலையே. 8

1192. நீண்ட சூழ்சடை மேலொர் நிறைமதி
காண்டு சேவடி மேலொர் கனைகழல்
வேண்டு வாரவர் வீதி புகுந்திலர்
மீண்டும் போவது வீழி மிழலைக்கே. 9

நீற்றன் - உடலெங்கும் நீறுபூசியவன், கொன்றையாலாகிய தாரும், மாலையும், கண்ணியும் அணிந்தவன். ''கண்ணி கார் நறுங்கொன்றை'' *(புறநானூறு - கடவுள்வாழ்த்து.)*

8. பொ-ரை: எரியைக்கையால் ஏந்தியவரும், யாங்கணும் தங்கி நிற்போரும், நரிகளைப் பரிகளாகக் கொண்டு இடுகாட்டிடை ஆடுதலை மகிழ்கின்ற பெரியரும் (மகாதேவனும்) தங்கும் இடம் பிறப்போடு கூடிய இறப்பை அகல நினைப்பார் தொழும் தலமாகிய வீழிமிழலை ஆகும்.

கு-ரை: எரியினார் - தமது அங்கைசேர் எரியர்; தங்குபவர்; இறை யார் - எங்கும் தலைமையானவர். முறைசெய்து காப்பாற்று வோன் எனினும் அமையும். நரியினார் பரியா இடுகாட்டிடை மகிழ்கின்றதோர் பெரியனார் எனக் கூட்டுக. நரியினார் - இழிவு சிறப்பு; 'நரிகளைப் பரிகளாக்கியவரும், இடுகாட்டில் ஆடுதலை மகிழ்கின்ற பெரியரும் ஆகியவர். பிறப்பொடு சாதலை வெரீஇயினார் என்பதும் பாடமாகலாம் அல்லது வெரீஇயினார் என்பது விரியினார் என மருவிற்று என்க. பிறப் பிறப்புக்களை அஞ்சினார் என்பது பொருள்.

9. பொ-ரை: நீண்டு சூழ்ந்த சடையின்மேல் ஓர் நிலாமதியும், சேவடியின்மேல் கூப்பிடுதூரம் ஒலிக்கும் ஓர் கழலும் கொண்டு, வேண்டுவாராகிய யாம் உள்ள வீதியுட் புகாது வீழிமிழலைக்கே மீண்டு போவர்; இதுவோ அவர்தம் அருள்!

கு-ரை: சூழ்சடை - வளைத்து முடித்ததால் சூழ்ந்துள்ள சடை. நிலாமதி - நிலவையுடைய மதி. காண்டு - கூப்பிடுதூரம். சேவடி மேல்

Koviloor Digital Library

1193. பாலை யாழொடு செவ்வழி பண்கொள
மாலை வானவர் வந்து வழிபடும்
ஆலை யாரழ லந்தண ராகுதி
வேலை யார்தொழும் வீழி மிழலையே. 10

1194. மழலை யேற்று மணாளன் திருமலை
சுழல ஆர்த்தெடுத் தான்முடி தோளிறக்
கழல்கொள் காலின் திருவிர லூன்றலும்
மிழலை யானடி வாழ்கென விட்டதே. 11

திருச்சிற்றம்பலம்

கூப்பிடுதூரம் கேட்கும்படி ஒலிக்கும் ஒரு கழல் உள்ளது என்க. உலாப் புறம் போந்த பெருமானைக்கண்டு அவன் திருவுருவ அழகில் மனங் கொடுத்த தையல் ஒருத்தி, அவன்தன் பக்கல் வாராது திருக் கோயிலுக்கு மீள்வது பொறாது இன்ன இயல்பினர் அவரை விரும் புவார் உள்ள வீதியுட்புகாது மீண்டும் மிழலைக்கே போவது ஆக உள்ளது என இரங்கியதாகக் கொள்க.

10. பொ-ரை: மாலைக்காலத்து வானவர் வந்து பாலைப் பண்ணும் செவ்வழிப் பண்ணும் கலந்த பாடல்களைப்பாடி வழிபடும் இடம் அந்த மாலைக்காலத்தே அந்தணர் நிறைந்த நெருப்பை வளர்த்து ஆகுதி செய்யும் தொழிலராய் வழிபடும் திருவீழிமிழலையே ஆம். மாலைக்காலத்தே சுரர்பாடப்பூசுரர் வேட்டு வழிபடும் இடம் என்பது கருத்து.

கு-ரை: ஆகுதி வேலையர் - அவிசு சொரியும் செயலராய். வேலை - செயல், தொழில்.

11. பொ-ரை: இளமையான ஆனேறுடைய உமைமணாளனது திருக்கயிலாயமலையைச் சுழல ஆர்த்து எடுத்த இராவணனது முடியும் தோளும் இறும்படியாக அவன் தன் கழலணிந்த திருவடியில் உள்ள ஒரு திருவிரலால் ஊன்றுதலும், அவ்வரக்கன் திருவீழிமிழலையானடி வாழ்க என்று வாய்விட்டரற்றினன். அரற்றவே உமைமணாளன் அவனை மேலும் ஒறுக்காமல் விடுவித்தனன்.

கு-ரை: மழலை - இளமை. ஏற்று மணாளன் - அத்தகைய

Koviloor Digital Library

விடையையுடைய (உமை) மணவாளன்; மணாளக் கோலத்துடன் இருப்பவன். சுழல - அசைந்து நிலை திரியலுற. ஆர்த்து - தன் வலிமையைப் பெரிது என எண்ணி ஆரவாரித்து. எடுத்தான் - தூக்கியவன். முடி தோள் - முடியும் தோளும். இற - நெரிய. விரலால் ஊன்றினவுடன் அரக்கன் அலறி மிழலையான் அடிவாழ்க என வாழ்த்திப் பாடினன். வாழ்த்தவே இறைவன் அவனை மேலும் ஒறுக்காமல் விட்டான் என்க.

திருநாவுக்கரசர் புராணம்

''காலநிலைமையால் உங்கள் கருத்தில்
வாட்ட முறீர் எனினும்
ஏலஉம்மை வழிபடுவார்க் களிக்க
அளிக்கின்றோம்'' என்று
கோலங் காண எழுந்தருளிக் குலவும்
பெருமை இருவர்க்கும்
ஞாலம் அறியப் படிக்காசு வைத்தார்
மிழலை நாயகனார்.

அல்லார் கண்டத் தண்டர்பிரான் அருளால்
பெற்ற படிக்காசு,
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரமன் அடியாரானார்கள,
எல்லாம் எய்தி உண்க வென
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர் கூர்
வறுமை தொலைத்திட்டார்.

-சேக்கிழார்.

Koviloor Digital Library

13. திருவீழிமிழலை

பதிக வரலாறு:

திருநாவுக்கரசரும், காழி ஞானப்பிள்ளையும் வீழி மிழலை வந்தணைந்து படிக்காசு பெற்றுச் சிவனடியார் எல்லாரும் எய்தி உண்க என இரண்டுபொழுதும் பறைநிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்டு வறுமை தொலைத்து மொழி மாலைகள் பல சாத்தியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநாவு. புரா. 250- 260.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 126 பதிக எண்: 13

திருச்சிற்றம்பலம்

1195. என்பொ னேயிமை யோர்தொழு பைங்கழல்
நன்பொ னேநலந் தீங்கறி வொன்றிலேன்
செம்பொ னேதிரு வீழி மிழலையுள்
அன்ப னேயடி யேனைக் குறிக்கொளே. 1

1. பொ-ரை: என் உயர்ந்த பொருளே! தேவர் தொழுகின்ற கழ லணிந்த நல்ல பொருளே! நலம் தீங்கு பகுத்து அறியும் அறிவு சிறிதும் இல்லாத இயல்பினேன் அடியேன்; எனது செம்பொன்னே! திருவீழி மிழலையுள் அன்பு வடிவாம் பெருமானே! அடியேனைக் குறிக் கொண்டு காத்தருள்வாயாக.

கு-ரை: என்பொனே - எனக்குப் பொன்னாய் விளங்குபவனே. இமையோர் - கண்ணிமையாத தேவர்கள். தொழு - வணங்கும். பைங் கழல் - சிறந்த வீரக்கழல் அல்லது பசிய பொன்னால் ஆகிய கழல். நன் பொனே - மாற்றுயர்ந்து விளங்கும் பொன் போன்றவனே.

நலந்தீங்கு அறிவு ஒன்றிலேன் - நன்மை தீமை அறியும் அறிவு சிறிதும் இல்லாதவன். செம்பொனே - சிவந்த பொன்போலும் நிறமுடையவனே. ''பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி'' (தி.11. பொன்வண்ணத்தந்தாதி. பா.1) அன்பன் - அன்பே தானாய் விளங்குபவன். குறிக்கொள் - அடியேனை நினைந்து காத்தருள்க. ஏ - அசை.

Koviloor Digital Library

1196. கண்ணி னாற்களி கூரக்கை யால்தொழு
தெண்ணு மாறறி யாதிளைப் பேன்றனை
விண்ணு ளார்தொழும் வீழி மிழலையுள்
அண்ண லேயடி யேனைக் குறிக்கொளே. 2

1197. ஞால மேவிசும் பேநலந் தீமையே
கால மேகருத் தேகருத் தாற்றொழும்
சீல மேதிரு வீழி மிழலையுள்
கோல மேயடி யேனைக் குறிக்கொளே. 3

1198. முத்த னேமுதல் வாமுகி ழும்முளை
ஒத்த னேயொரு வாவுரு வாகிய

2. பொ-ரை: இன்பம் மிகும்படி கண்ணினாற்கண்டு, கையால் தொழுது, எண்ணுமாறறியாது இளைக்கும் எளியேனை, தேவர்கள் தொழும் வீழிமிழலையுள் அண்ணலே, குறிக்கொண்டு காத்தருள் வாயாக.

கு-ரை: களிகூரும்படி கண்டு, தொழுது, எண்ணுமாறு என்க. கையால் தொழுது என்று பின்வருதலின், கண்ணினால் கண்டு என்பது முன்தானே போதரும். களிகூர - களிப்புமிக. கையால்தொழுது - கைகளால் வணங்கி. எண்ணும் ஆறு அறியாது - உன்னை நினைக்கும் நெறியறியாது.இளைப்பேன்தனை-வருந்துவேனாகிய என்னை. அண்ணல் - தலைமையானவனே.

3. பொ-ரை: உலகமே! விண்ணே! நன்மையே! தீமையே! காலமே! கருத்தே! கருத்தாற்றொழும் சீலமே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் கோலமே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள் வாயாக.

கு-ரை: நில்னும் வானும், நலமும் தீங்கும், இவையனைத் திற்கும் ஆதாரமாய் நின்று நிகழச் செய்கின்ற காலமும், எண்ணும் எண்ணமும், குறிக்கொண்டு தொழுதுவரும் நல்லொழுக்கமும் ஆகிய இவையனைத்துமாய் உள்ளவன் முதல்வன். சீலம் - இடையறவு படுதலின்றி நெறிப்பட்டு ஒழுகும் நல்லொழுக்கம். கோலம் - அழகிய திருவுரு, மணவாளக்கோலம்.

4. பொ-ரை: முத்தனே! முதல்வா! முகிழ்க்கும் முளையை ஒத்தவனே! ஒப்பற்றவனே! உருவத்திருமேனி உடைய சித்தனே! திரு

Koviloor Digital Library

சித்த னேதிரு வீழி மிழலையுள்
அத்த னேயடி யேனைக் குறிக்கொளே. 4

1199. கருவ னேகரு வாய்த்தெளி வார்க்கெலாம்
ஒருவ னேயுயிர்ப் பாயுணர் வாய்நின்ற
திருவ னேதிரு வீழி மிழலையுள்
குருவ னேயடி யேனைக் குறிக்கொளே. 5

வீழிமிழலையுள் வீற்றிருக்கும் அத்தனே! அடியேனைக் குறிக் கொண்டு காத்தருள்வாயாக.

கு-ரை: முத்தன் - அநாதிமல முத்தன். முதல்வன் - உலகிற்குப் பரம ஆதாரமாய் நின்று அதனைத் தன் சக்தி சங்கற்பத்தால் மாயை யினின்று தோற்றி நிறுத்தி ஒடுக்குவோன். முகிழ்க்கும் முளை ஒத்தல் - அறநெறி நிற்பார் உள்ளத்தில் அவ்வறத்திற்கு முதலாக விளங்கித் தோன்றலும், சிவஞானியர் உணர்வில் முன்னர்ப் பேருணர்வாயும் பின்னர் இன்ப உருவாயும் முகிழ்த்து வளர்தல். 'சீவனுக்குள்ளே சிவ மணம் பூத்தது' என்னுந் திருமந்திரம் ஒப்புநோக்கத்தக்கது.

ஒருவன், முன்னர் விளக்கப்பட்டது. சித்தன் - எல்லாம் வல்லவன் (வித்தகசித்தர் போல வேண்டுருக் கொள்ளவல்லான்).

5. பொ-ரை: மூலப்பொருளாக உள்ளவனே! கருவாயுள்ளாய் என்று தெளிந்தவர்க்கெல்லாம் ஒப்பற்றவனே! உயிர்ப்பாகவும், உணர் வாகவும் நின்ற செல்வனே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் குரு மூர்த்தியே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

கு-ரை: கருவன் - எல்லாவற்றிற்கும் மூலப் பொருளாய் உள்ளவன். கருவாய்த் தெளிவார்க்கு ஒருவனே - மூலப் பொருளாய் இருப்பவன் என்பதைத் தெரியும் அறிவினை உடையார்க்கு பலராக ஒருவன் என நின்றவனே; ஒன்றவன்தானே, ஒன்றே குலமும் ஒருவனே தேவன் என்றாற்போல உணரநிற்றல்.

உயிர்ப்பாய் உணர்வாய் நின்ற திருவன் - பிராணனாயும் உணர்வு வடிவாயும் இருக்கின்ற செல்வன். குருவன் - குருவடி வானவன்.

Koviloor Digital Library

1200. காத்த னேபொழி லேழையுங் காதலால்
ஆத்த னேயம ரர்க்கயன் றன்றலை
சேர்த்த னேதிரு வீழி மிழலையுள்
கூத்த னேயடி யேனைக் குறிக்கொளே. 6

1201. நீதி வானவர் நித்தல் நியமஞ்செய்
தோதி வானவ ரும்முண ராததோர்
வேதி யாவிகிர் தாதிரு வீழியுள்
ஆதி யேயடி யேனைக் குறிக்கொளே. 7

1202. பழகி நின்னடி சூடிய பாலனைக்
கழகின் மேல்வைத்த காலனைச் சாடிய

6. பொ-ரை: ஏழுலகங்களையும் கருணையால் காத்தவனே! அமரர்க்கு ஆப்தனே! அயன்றலையைக் கையில் சேர்த்தவனே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் கூத்தப்பெருமானே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

கு-ரை: காத்தன் - காத்தவன். பொழில் ஏழு - ஏழு உலகம். காதலால் - அன்பால். ஆத்தன் - ஆப்தன். நம்பத் தகுந்தவன்; தான் உண்மையை உணர்ந்து உள்ளவாறு எடுத்துரைப்போன். எனவே அமரர்க்குப் பிரமாண நூல்களை அருளியோன் என்பது கருத்து. அயன்றலை சேர்த்தன் - பிரமன் தலையைக் கையில் கபாலமாகச் சேர்த் தவன். காதலால் காத்தலும், நூலான் உணர்த்தலும், செருக்கு எய்திய வழி ஒறுத்தலுமுடைய கூத்தன் என்பது பாட்டின் திரண்டபொருள்.

7. பொ-ரை: வானவர் தமக்குரிய நீதிப்படி நித்தலும் நியமங்கள் செய்து ஓதியும் அவர்களால் உணரப்படாது நின்ற ஒப்பற்ற வேதியா! விகிர்தனே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் ஆதியே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

கு-ரை: நீதிவானவர் - நீதியால் உயர்ந்த பெரியோர் எனினும் பொருந்தும். நித்தல் - நாடோறும். நியமம்செய்து - முறையாக வழிபடு தலைச் செய்து. ஓதி(யும்) உணராததோர் வேதியா என இயைக்க. வேதியா - வேதம் விரித்தவனே. ஆதி - முதல்வனே.

8. பொ-ரை: நின்னடியைப் பழகிச் சூடிய பாலனாகிய மார்க்கண் டேயனை வஞ்சனையால் பற்றமுற்பட்ட காலனைச் சாடிய அழகனே!

Koviloor Digital Library

அழக னேயணி வீழி மிழலையுள்
குழக னேயடி யேனைக் குறிக்கொளே. 8

1203. அண்ட வானவர் கூடிக் கடைந்தநஞ்
சுண்ட வானவ னேயுணர் வொன்றிலேன்
விண்ட வான்பொழில் வீழி மிழலையுள்
கொண்ட னேயடி யேனைக் குறிக்கொளே. 9

1204. ஒருத்தன் ஓங்கலைத் தாங்க லுற்றானுரம்
வருத்தி னாய்வஞ்ச னேன்மனம் மன்னிய

அழகுமிக்க திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் குழகனே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

கு-ரை: பழகி - உனக்குப் பூசைசெய்யும் அணுக்கத் தொண்டுரிமையோடு நெருங்கிப் பழகி. அடிசூடிய - திருவடிகளைத் திருமுடியில் சூடிக்கொண்டவராகிய. பாலனை - மார்க்கண்டேயனை. கழகு - சூது; கழகின்மேல்வைத்த - வஞ்சனையாற்பற்ற எண்ணிய. சாடிய - உதைத்த. குழகன் - இளமையுடையோன்.

9. பொ-ரை: தேவர்கள் அசுரர்களுடன் கூடிக்கடைதலால் எழுந்த நஞ்சினை உண்ட தேவனே! விரிந்த வான் பொழில் சூழ்ந்த திருவீழிமிழலையிற் கோயில் கொண்டவனே! உணர்வு சிறிதும் இல்லேனாகிய அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

கு-ரை: அண்டவானவர் - மேல் உலகிலுள்ள தேவர்கள். வானவர் (அசுரருடன்) கூடிக் கடைந்த என்க. வானவன் - உயர்ந்தவன். உணர்வு - அறிவு. விண்ட - மலர்கள் விண்ட, மலர்ந்த பூக்களை உடைய. வான்பொழில் - உயர்ந்த சோலை. வீழிமிழலையுள் கொண்டன் - வீழிமிழலையின் உள்ளிடத்தைத் தனக்கு இடமாகக் கொண்டவன்.

10. பொ-ரை: ஓங்கிய திருக்கயிலையைத் தாங்கிப் பெயர்க்கலுற்ற ஒருத்தனாகிய இராவணனின் வலிகெட அவனை வருத்தியவனே! வஞ்சனை உடையேன் மனத்தின்கண் நிலை பெற்ற திருந்திய

Koviloor Digital Library

திருத்த னேதிரு வீழி மிழலையுள்
அருத்த னேயடி யேனைக் குறிக்கொளே. 10

திருச்சிற்றம்பலம்

வனே! திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் பொருள் வடிவாய் இருப்பவனே! அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

கு-ரை: ஒருத்தன் - தான் ஒருவனே பெரியோன் எனச் செருக்கியோன். ஓங்கல் - திருக்கயிலைமலை. தாங்கலுற்றான் - தாங்கிப் பெயர்க்க முயன்றவன். உரம் - வலிமை. வருத்தினாய் - துன்புறச்செய்தாய். வஞ்சனேன் - என் குறையைப் பிறர்க்குத் தெரியாதபடி மறைப்பவன். மனம் மன்னிய - மனத்தைக் கோயிலாகக் கொண்டு நிலைபெற்ற. திருத்தன் - அழகியன். அருத்தன் - பொருள் வடிவாக உள்ளோன்.

திருநாவுக்கரசர் புராணம்

ஈசர் மிழலை இறையவர்பால் இமையப்
பாவை திருமுலைப் பால்,
தேசம் உய்ய உண்டவர்தாம்
திருமா மகனார் ஆதலினால்,
காசு வாசியுடன் பெற்றார்;
கைத்தொண் டாகும் படிமையினால்,
வாசி இல்லாக் காசுபடி
பெற்று வந்தார் வாகீசர்.

ஆறு சடைமேல் அணிந்தருளும்
அண்ணல் வைத்த படிக்காசால்,
ஈறி லாத பொருளுடைய
இருவ ருடைய திருமடங்கள்,
சோறு நாளுந் தொண்டர்
மகிழ்ந் துண்ண உண்ணத் தொலையாதே,
ஏறு பெருமை புவிபோற்ற
இன்புற் றிருக்கும் அந்நாளில்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

14. திருவிடைமருதூர்

பதிக வரலாறு:

திருவாவடுதுறை முதல்வரை அடைந்துய்ந்து திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை, திருநேரிசை, சந்தவிருத்தம் முதலிய வெவ்வேறு செந்தமிழ்த் தொடையாற் பல திருப்பள்ளித் தாமம் சாத்தி மிக்கு எழுந்த பரிவினோடும் மண்ணோர் வாழ்த்தப் பன்னாள் தங்கித் திருத்தொண்டு போற்றிச்செய்து திருவிடை மருதூரை எய்தி அன்பினொடு மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி மகிழச் சாத்திய வண்டமிழ்ப் பாமாலைகளுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 192)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 127 பதிக எண்: 14

திருச்சிற்றம்பலம்

1205. பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே. 1

1. பொ-ரை: பல அன்பர்கள் உலக பாசங்கள் ஒன்றும் இல்லாதவராய் மணமிக்க புதுமலர்கள் கொண்டு திருஇடைமருதில் வீற்றிருக்கும் ஈசன் எம்பெருமான் திருவடியை வழிபட்டு வைகுதலைக் கண்டு, புனலாட யாமும் பூசத்திருநாளில் அங்குப் புகுந்து வழிபடுவோம்.

கு-ரை: பாசம் - உலகப்பற்று. ஒன்று - சிறிதேனும் என்னும் பொருட்டு. இலராய் - இல்லாதவராய். பத்தர்கள் - அன்பர்கள். நாண் மலர் - அன்றலர்ந்த புதுமலர். அடி - இறைவன் திருவடிகளை. வைகலும் - நாள்தோறும் (வழிபடும்) ஈசனாகிய எம்பெருமானின் இடை மருது என்க. புகுதும் - செல்வோம். பூசப் புனலாட நாம் புகுதும் எனக் கூட்டுக.

திருவிடைமருதூரில் தைப்பூசத் திருநாள் சிறந்ததாதலை இன்றும் காண்க. (தைப்பூசம் முதல்வன் தீர்த்தம் தரும் நாள்)

Koviloor Digital Library

1206. மறையின் நாண்மலர் கொண்டடி வானவர்
முறையி னால்முனி க்ள்வழி பாடுசெய்
இறைவ னெம்பெரு மானிடை மருதினில்
உறையு மீசனை யுள்கும னுள்ளமே. 2

1207. கொன்றை மாலையுங் கூவிள மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்று மெந்தை பிரானிடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே. 3

1208. இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளு மிடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. 4

2. பொ-ரை: வானவர்களும் முனிவர்களும் மறையின் முறை யினால் புதிய மலர்கள் கொண்டு வழிபாடு செய்கின்ற இறைவனும், எம்பெருமானுமாகிய இடைமருதூரில் உறைகின்ற ஈசனை என் உள்ளம் உள்கும்.

கு-ரை: வேதவிதிப்படி (மறையின் முறையினால்) வானவர் முனிகள் வழிபாடு செய் இறைவன் என இயைக்க. உள்கும் - நினைக்கும்.

3. பொ-ரை: கொன்றை மாலையும், கூவிளமும், ஊமத்தமலரும் ஒருங்கு சென்று சேரும்படியாகத் திகழ்கின்ற சடையில் வைத்தவ னாகிய இடைமருதூர் உறையும் எந்தையினை என்றும் நன்றுறக் கைதொழுவார் வினைகள் நாசமாகும்.

கு-ரை: கொன்றைமாலையும் கூவிளமும் மத்தமும் திகழ்சடை சென்றுசேர வைத்தவன் எனினும் அமையும். என்றும் - நாடொறும். நன்று கைதொழுவார் - நல்ல முறையில் கையால் தொழுவார்.

4. பொ-ரை: எம்மையாளும் இடைமருதூர் உறையும் இறைவன் கழலைச் செம்மையாகத் தொழுவார் வினை சிந்தும். அத்தொழுகை இம்மையில் வானவர் செல்வம் விளைத்திடும்; அப்பிறப்பில் பிறவித் துயர் இல்லாவகையில் நீங்கும்.

Koviloor Digital Library

1209. வண்ட ணைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனார்
எண்டி சைக்கு மிடைமரு தாவென
விண்டு போயறும் மேலை வினைகளே. 5

1210. ஏற தேறு மிடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்
ஊறி யூறி யுருகுமெ னுள்ளமே. 6

கு-ரை: இம்மை - இப்பிறப்பிலேயே. வானவர் செல்வம் - சுவர்க்கபோகம். விளைத்திடும் - உண்டாக்கும். அம்மையே - இப் பிறப்பின் பின் எய்தும் நிலையில். பிறவித்துயர் - பிறவித்துன்பம். நீத்திடும் - நீக்கும். ஆளும் - ஆட்கொள்ளும். செம்மையே - செவ்வியமுறையில்.

5. பொ-ரை: வண்டுகள் அணைந்த வன்னியும் கொன்றையும் கொண்டு அணிந்த சடாமுடியை உடைய கூத்தனார் எனப் படர்க் கையிற் பரவியும் எண்டிசைக்கும் கதியாகிய இடைமருதா என முன்னிலைப் படுத்திப் புகழ்ந்தும் வழிபட மேலை வினைகள் யாவும் நம்மைவிட்டு விலகிக்கெடும்.

கு-ரை: வண்டணைந்தனவாகிய வன்னியும் கொன்றையும் கொண்டு என்க. அணிந்த - சூடிய. எண்டிசைக்கும் இடைமருதா - எட்டுத்திசைகளுக்கும் தலைவனாய் விளங்கும் இடைமருதனே. விண்டுபோயறும் - நம்மைவிட்டு நீங்கி ஒழியும். மேலைவினைகள் - பழவினைகள். படர்க்கையின் வைத்துப் பரவியும் முன்னிலைப் படுத்திப் புகழ்ந்தும் வழிபடின் மேலைவினைகள் விண்டு போய்அறும் என்க; நம்மைப் பற்றுதல் நெகிழ்ந்து சேய்மைக்கண் விலகிப் பின் இல்லையாய்க் கெடும்.

6. பொ-ரை: விடையினை உகந்தேறும் இறைவரும், தன்னைக் கூறுவார் வினைகளைத் தீர்க்கும் குழகரும், ஆறு செஞ்சடையின்கண் வைத்த அழகருமாகிய இடைமருதூர் எம்பிரானையெண்ணி என் உள்ளம் ஊறி ஊறி உருகுகின்றது.

கு-ரை: ஏறதேறும் - இடபமேறும். கூறுவார் - தன்னாமம்

Koviloor Digital Library

1211. விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரும் மதிக்கப் படுபவர்
எண்ணி னார்பொழில் சூழிடை மருதினை
நண்ணி னாரைநண் ணாவினை நாசமே. 7

1212. வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தனார்
கந்த மாலைகள் சூடுங் கருத்தனார்
எந்தை யென்னிடை மருதினி லீசனைச்
சிந்தை யால்நினை வார்வினை தேயுமே. 8

சொல்லிப் புகழ்ந்து போற்றுவார். வினை - துன்பத்திற்குக் காரண மாகிய வினை. என் உள்ளம் ஊறி ஊறி உருகும் - என் மனமானது நெக்கு நெக்கு உருகும்.

7. பொ-ரை: விண்ணிலுள்ள தேவரான் விரும்பப்படுபவரும், மண்ணினுள்ள் மனிதரான் மதிக்கப்படுபவரும் ஆகிய இறைவர்க்குரிய பொழில் சூழ்ந்த திரு இடைமருதூரை எண்ணி நண்ணியவரை வினையினால் வரும் கேடுகள் நண்ணமாட்டா.

கு-ரை: விரும்பப்படுபவர் - விரும்பி வழிபடப்படுபவர். மதிக்கப்படுபவர் - மதித்துப்போற்றப்படுபவர். (விண்ணவர் முதல் வனை உணர்ந்துளார் ஆதலின் விரும்புவர்; மண்ணவர் கற்றபின் னன்றி உணரார் ஆகலின் மதித்து உணர்ந்து வழிபடுவர்).

எண்ணினார் - எண்ணத்தை இடங்கொண்ட முதல்வன், அல்லது அடியார் கருத்தில் ஆர்ந்த இடைமருது எனக் கூட்டப்படும்.

8. பொ-ரை: திருநீறு பூசும் விகிர்தரும், நறுமண மாலைகள் சூடும் தலைவரும், என் தந்தைபோல்வாருமாகிய திருவிடைமருதூர் ஈசனைச் சிந்தையால் நினைப்பவர்களது வினைகள் தேயும்.

கு-ரை: வெந்த வெண்பொடி - தமது அருளொளியால் பொருள் அனைத்தும் வெந்து நீறாக (மாயா சத்தி ரூபமாக) வந்த வெண்பொடி. கந்தம் - வாசனை. கருத்தனார் - கருத்தின்கண் விளங்குபவன் எனினும் பொருந்தும்.

Koviloor Digital Library

1213. வேத மோதும் விரிசடை யண்ணலார்
பூதம் பாடநின் றாடும் புனிதனார்
ஏதந் தீர்க்கு மிடைமரு தாவென்று
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. 9

1214. கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 10

9. பொ-ரை: தேவர்கள் ஓதும் விரிசடை அண்ணலாரும் பூதங்கள் பாடநின்று ஆடும் புனிதருமாகியவரை ஏதந்தீர்க்கும் இடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் இறைவா! என்று சொல்லிப் பாதங்கள் ஏத்தினால் நம்பாவங்கள் நம்மை விட்டு நீங்கும்.

கு-ரை: வேதம் ஓதும் - வேதத்தை அருளிய, அல்லது வேதத்தால் ஓதப்படும். புனிதன் - தூயன்; நின்மலன். ஏதம் - துன்பம்.

10. பொ-ரை: இடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் ஈசன், தன்னையடைந்த அன்பர்களுக்குக் கனி, கட்டிபட்ட கரும்பு, குளிர் மலரணிந்த குழலையுடைய பாவை போன்ற பெண்கள், தனித்து முடிகவித்து நின்று ஆளும் அரசு ஆகிய அனைத்தினும் மிக்க இனிமை உடையவன்.

தன்னை அடைந்த மெய்ஞ்ஞானிகளுக்கு அவர்தம் உணர்வு புறத்தே செல்வுழி இப்பொருள்களிலெல்லாம் பரானந்த போகமாய் விளைவன் என்றலும் பொருத்தம்.

கு-ரை: இனியன் என்பதைக் கனி கரும்பு முதலியவற்றோடு தனித்தனி கூட்டுக. கட்டிபட்ட கரும்பு - கட்டியாகிய கரும்புச்சாறு; வெல்லம். பனிமலர்க்குழல் - இளமையை அறிவித்தது. பாவை நல்லார் - பதுமைபோன்றழகிய பெண்கள். தனிமுடி கவித்தாளும் அரசு - நிலம் பொது எனல் இன்றி உலகிற்கு ஒரே அரசனாய் மகுடம் சூடி ஆட்சிசெய்யும் அரசுரிமை. தன்னடைந்தார்க்கு - தன்னையே சரண் என்றடைந்த ஞானியர்க்கு. இப்பாடலில் கூறும் நான்கு பொருள்களும் குழந்தை இளைஞர் குமாரர் முதியர் என்பார்க்கு இனிமை பயப்பன. இந்நான்கு தரத்தினர்க்கும் அப்பொருள்களின் மேலான இன்பம் செய்பவன் என்ற நயப்பொருள் காண்க.

Koviloor Digital Library

1215. முற்றி லாமதி சூடும் முதல்வனார்
ஒற்றி னார்மலை யாலரக் கன்முடி
எற்றி னார்கொடி யாரிடை மருதினைப்
பற்றி னாரைப் பற்றாவினை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: இளம்பிறை சூடும் முதல்வரும், மலையால் அரக்கன் முடியை விரலைச் சிறிது ஊன்றி ஒற்றியவரும், இடபக் கொடியை உடையவரும் ஆகிய பெருமான் எழுந்தருளியுள்ள இடை மருதூரினைப் பற்றியவர்களை வினைகளும் அவற்றான் வரும் இடர்களும் பற்றமாட்டா.

கு-ரை: முற்றிலாமதி - குழவித் திங்களாகிய பிறைமதி. ஒற்றினார் - அரக்கன் முடியை மலையால் ஒற்றினார்; அதுவே அவனை அழவைத்தது என்க. எற்றினார் கொடியார் - ஏற்றுக் கொடியார். எற்றினார் குறுக்கல் விகாரம். பற்றினார் - இடைமரு தீசனைப் பற்றுக்கோடாய்க் கொண்டு வாழ்வார். இடைமருதீசனைப் பற்றியவர்களை வினை பாவம் பற்றா என்க. வினை - தூலவினை எனப்படும் ஆகாமியம்; பாவம் - அதன் சூக்கும நிலையாகிய அபூர்வம் (காணப்படாதது).

திருநாவுக்கரசர் புராணம்

சென்று சேர்ந்து திருச்சத்தி முற்றத்
திருந்த சிவக் கொழுந்தைக்,
குன்ற மகள்தன் மனக்காதல் குலவும்
பூசை கொண் டருளும்,
என்றும் இனிய பெருமானை இறைஞ்சி
இயல்பில் திருப் பணிகள்,
முன்றில் அணைந்து செய்துதமிழ் மொழி
மாலை களுஞ் சாத்துவார்.

- தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

15. திருவிடைமருதூர்

பதிக வரலாறு:

திருவாவடுதுறை வணங்கிப் பரவித் திருவிடைமருதூர் எய்தி, அன்பினோடு மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி மகிழச்சாத்திய வண்டமிழ்ப் பாமாலைகளுள் ஒன்று இத் திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 192)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 128 பதிக எண்: 15

திருச்சிற்றம்பலம்

1216. பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் வைகு மயலெலாம்
இறைவ னெங்கள் பிரானிடை மருதினில்
உறையு மீசனை யுள்குமெ னுள்ளமே. 1

1217. மனத்துள் மாயனை மாசறு சோதியை
புனிற்றுப் பிள்ளைவெள் ளைம்மதி சூடியை

1. பொ-ரை: பறை, பாடல், மறை ஆகிய மூன்றின் ஓசைகளும் தங்கியிருக்கும் வயற்புறங்களை உடையதும், இறைவனாகிய எங்கள் பிரான் எழுந்தருளியிருப்பதுமாகிய இடைமருதூரினில் உறைகின்ற ஈசனை என் உள்ளம் உள்குகின்றது.

கு-ரை: பறை - தோற்கருவி வாச்சியங்கள். பாடலின் ஓசை - இசைப்பாடல்கள் பாடுவார் எழுப்பும் ஓசை. மறையின் ஓசை - வேத முழக்கம். எங்கும் - அயலெலாம் - ஊர்ப்பரப்பு முழுதும். வைகும் - தங்கும்; இது இடைமருதிற்குரிய அடை. உள்கும் - நினைக்கும்.

2. பொ-ரை: மனத்தினுள் மாயமாய் வந்து நிற்பவனும், குற்றமற்ற ஒளிவடிவானவனும், மிக்க இளமதியைச் சூடியவனும், எனக்குத் தாயானவனும், எம்மானும் இடைமருதூரில் எழுந்தருளி இருப்பவனும் ஆகிய இறைவனை நினைத்திட்டு அன்பு ஊறி என் உள்ளம் நிறைந்தது.

கு-ரை: மனத்துள் - மனத்திற்குள். மாயன் - வெளிப்படையாக

Koviloor Digital Library

எனக்குத் தாயையெம் மானிடை மருதனை
நினைத்திட் டூறி நிறைந்ததெ னுள்ளமே. 2

1218. வண்ட ணைந்தன வன்னியும் மத்தமும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனை
எண்டி சைக்கு மிடைமரு தாவென
விண்டு போயறும் மேலை வினைகளே. 3

1219. துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோ
டணைய லாவ தெமக்கரி தேயெனா
இணையி லாவிடை மாமரு தில்லெழு
பணையி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே. 4

இன்றி மறைந்து வீற்றிருக்கும் மாயத்தன்மையை உடையவன். புனிறு-மிக்க இளமை. பிள்ளை வெள்ளைமதி - குழவித் திங்களாகிய வெண்மை பொருந்திய மதி. எம்மான் - தலைவன். நினைத்தலால் அன்பு ஊறி உள்ளத்தின்கண்ணே நிறைந்து நிற்கின்றது என்க.

3. பொ-ரை: வண்டணைந்த வன்னியும், மத்தமுமாகிய மலர் களைக் கொண்டு அணைந்த சடைமுடிக் கூத்தப் பிரானை, எண்டி சைக்கும் தலைவனாகிய இடைமருதா என்றுகூற, நம் பழைய வினை கள் நம்மைவிட்டுப் பிரிந்து கெட்டு நீங்கும்.

கு-ரை: மற்றொரு பாடல் (தி.5 ப.14. பா.5) இப்பாடலை ஒத்திருப்பதை ஓர்க. மத்தம் - ஊமத்தம்பூ. மத்தம் கூத்தனார் என்ற சொல் வேறுபாடுகள் மட்டுமே கொண்டு இப்பாடல் இரண்டு பதிகங்களில் வருகின்றது.

4. பொ-ரை: ஊழிக்காலத்துப் புலராது தாழ்க்கும் இருளில் முதல்வன் தனக்கு உடனிருப்பார் பிறரொருவரும் ஆண்டு இன் மையின், தன் கணங்களாகிய பேய்களோடு அணைந்து காலத்தைக் கழித்தல் அரிதென்று எண்ணி ஒப்பற்றதாகிய திருவிடை மருதூரில் எழுந்த மருதமரத்தின் கீழிருந்து தன் பாங்கியாகிய உமையம்மைக்கே ஆகமம் உரைப்பாராயினர்.

கு-ரை: முதல்வன் என்னும் எழுவாய் வருவித்துரைக்க. துணையிலாமையில் - ஊழிக்காலத்து வேறொருவர் தமக்குத்

Koviloor Digital Library

1220. மண்ணை யுண்டமால் காணான் மலரடி
விண்ணை விண்டயன் காணான் வியன்முடி
மொண்ணை மாமரு தாவென்றென் மொய்குழல்
பண்ணை யாயமுந் தானும் பயிலுமே. 5

1221. மங்கை காணக் கொடார்மண மாலையை
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை

துணையாக இல்லையாதலால். தூங்கிருள் - கழியாது தாழ்க்கும் இருளில். பேய்களோடு அணையலாவது - பேய்களோடு கூடி யணைந்து நடமாடிக் காலங்கழித்தல். அரிதே எனா - எமக்கு அரிய தானதே என்று. இணையிலா - ஒப்பில்லாத. இடைமாமருதில் எழு - இடைமருதில்தோன்றியுள்ள. பணையில் - மருத மரத்தடியில் (பணை- மருதநிலம், அஃது அந்நிலத்துக்குரிய மரத்துக்கு ஆயிற்று) தன் பாங்கிக்கு - தன் பாகத்தே உள்ள பெருமாட்டிக்கு; அல்லது தனக்கு மனைவியாம் பாங்கு உடையாளுக்கு. ஆகமப் பொருள்களைச் சொல்லும் - ஓதிக் கொண்டிருக்கிறான். இப் பாடல் நகைச்சுவை யமைந்தது. இடைமருதில் பெருமான் எழுந்தருளியுள்ளதற்கு ஒரு வினோதமான காரணம் கூறியவாறு. (1) இடைமருது - ஊழிக்காலத்து அழியாதது, (2) ஊழியில் இறைவனும் அம்மையும் பேய்களும் அன்றிப் பிறர் இரார், (3) ஆகமம் அம்மைக்கே முதற்கண் உரைக்கப் படுவது என்பன விளங்குதல் காண்க.

5. பொ-ரை: மண்ணுலகை உண்ட திருமால் மலரடி காணான், என்றும் விண்ணுலகைப் பிளந்து பறந்து சென்ற நான்முகன் வியன்முடி காணான் என்றும், மாமருதூரில் இருப்பவனே எனக்கருள் என்றும் என் மொய்குழலாளாகிய மகள் விளையாட்டுக்குரிய தன்தோழியர் கூட்டத்துடன் உரைத்து மகிழ்வாள். பருவம் எய்தாதாரையும் தன்பால் ஈர்ப்பவன் முதல்வன் என்றபடி.

கு-ரை: விண்ணை விண்டு - வானூடு அன்னமாய்ப் பறந்து சென்று. மொண்ணை - முரண்டலை உடையை என்பது போலும். மொய்குழல் - செறிந்த கூந்தலினை உடைய என்மகள். பண்ணை யாயம் - விளையாடும் தோழியர். பயிலும் - சொல்லிக் கொண்டிருக்கும். இப்பாடல் அகத்துறைப் பொருளமைந்தது. செவிலி கூற்று.

6. பொ-ரை: பெண்களே, இடைமருதர் இந்த என்மகளாகிய நங்கைக்குக் கொன்றையைக் கொடுத்துள்ளார் (கொன்றை மலரின்

Koviloor Digital Library

நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தா ரிதழியே. 6

✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ 7, 8, 9, 10

திருச்சிற்றம்பலம்

நிறமாகிய பசலையைக் கொடுத்துள்ளார்.) ஆயின், அவர் மார்பில் தாராக உள்ள மணமாலையைக் கொடுப்பின், பக்கத்தில் இருக்கும் பார்வதி காண்பள்; ஆகலின் அதனைக் கொடுத்தல் இயலாது. இனித் தமது முடியின் கண்ணதாகிய கண்ணியையும் கங்கை ஆண்டிருந்து காண்பாள் ஆகலின் கொடுத்தல் இயலாது. மற்று எங்கிருந்து இப் பசலையாகிய கொன்றையைப் பெற்று இவளுக்கு இவர் கொடுத்தது?

கு-ரை: இறைவன் மார்பில் தார் ஆவதும் கார்க்கொன்றை, முடிக்கண் கண்ணியாவதும் கொன்றை - இவ்விரண்டிடத்தன்றி வேறு எங்குப் பெற்றுக் கொடுத்தது என்க. இதழி - கொன்றை, பசலை. தலைவி இடைமருதீசர்மேல்கொண்ட காதலால் உடல் பசந்தாள். பொன்னிறப் பசலை உடம்பெல்லாம் பூத்தது. அதை ஏளனம் செய்யும் தோழியர் அப் பொன்னிறப்பசலையை இறைவரளித்த கொன்றை மாலையாகக் கற்பித்து, பார்வதி கங்கைக்குத் தெரியாமல் இறைவர் எங்கு வாங்கித் தந்தார் இக்கொன்றையை என்று தலைவியை நகை யாடுகின்றனர்.

திருநாவுக்கரசர் புராணம்

எறிபுனல்பொன் மணிசிதறுந் திரைநீர்ப் பொன்னி
இடைமருதைச் சென்றெய்தி அன்பி னோடு,
மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி
வண்டமிழ்ப்பா மாலைபல மகிழச் சாத்திப்,
பொறியரவம் புனைந்தாரைத் திருநாகேச் சுரத்துப் போற்றி
அருந் தமிழ்மாலை புனைந்து போந்து,
செறிவிரைநன் மலர்ச் சோலைப் பழையா றெய்தித்
திருச்சத்தி முற்றத்திற் சென்று சேர்ந்தார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

16. திருப்பேரெயில்

பதிக வரலாறு:

ஆளுடைய பிள்ளையாருடன் திருநாவுக்கரசர், காலத் தவறு நீங்கியபின் திருவீழிமிழலை மாமணியை வணங்கிப் பிரியா விடை கொண்டு திருவாஞ்சியம் முதல் பல பதிகளைப் போற்றித் திருமறைக்காடு சேர்ந்தனர். இடையில் திருப் பேரெயிலில் உள்ள பெருமானை அப்பர் கண்டு அவன்றன் அளப்பருந் தன்மையைப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 129 பதிக எண்: 16

திருச்சிற்றம்பலம்

1222. **மறையும் ஓதுவர் மான்மறிக் கையினர்**
கறைகொள் கண்ட முடைய கபாலியார்
துறையும் போகுவர் தூயவெண் ணீற்றினர்
பிறையுஞ் சூடுவர் பேரெயி லாளரே. 1

1. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர், மறையை ஓதுவர்; மான்குட்டியை யேந்திய கையினர்; திருநீலகண்டர்; கபாலத்தைக் கொண்ட கையினர்; எத்துறையும் போகுவர்; தூய வெண்ணீற்றினர்; பிறையும் சூடும் இயல்பினராவர்.

கு-ரை: மறை ஓதுதல் முதலியவை, பிறர் ஒருவருக்கும் இல்லாத பெருமை சிவபிரான் ஒருவனுக்கே உண்டு என்பதை உணர்த்தும் உண்மையாம் பெரிய நல்லடையாளங்கள் ஆகும் என்பதைச் சிந்தித்து உணர்தல் வேண்டும். மறை ஓதுதல், முதல்வன் உலகிற்குப் பொய் தீர ஒழுக்கநெறி வகுத்தவன் என்பதைக் குறிக்கும். மான்மறி ஏந்துதல் - வேதத்திற்கு நாதன் என்பதைக் குறிக்கும். ''வேதமான்மறி ஏந்துதல் மற்றதன் நாதன் நான் என நவிற்றும் ஆறே'' (தி.11 திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது பா.6) கறைகொள்கண்டம் - முதல்வன்றன் பேரருள் உடைமையினையும், யாரையும் எவற்றையும் தன்வயப் படுத்தும் செம்பொருட்டன்மையினையும் குறிக்கும். கபாலியார் - பிரமகபாலம் ஏந்தியவர். இஃது உயிர்களுக்கு உள்ள யான் எனது என்னும் செருக்கு அறுத்து இன்பூட்ட வல்லான் என்பதைக் குறிக்கும். துறை போதல் - கரையைச் சென்று அடைதல், அல்லது, முற்றக்கற்றல். எனவே,

Koviloor Digital Library

1223. கணக்கி லாரையுங் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பாரெப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே. 2

1224. சொரிவிப் பார்மழை சூழ்கதிர்த் திங்களை
விரிவிப் பார்வெயிற் பட்ட விளங்கொளி
எரிவிப் பார்தணிப் பாரெப் பொருளையும்
பிரிவிப் பாரவர் பேரெயி லாளரே. 3

முதல்வன் எக்கலைக்கும் முதற் கருத்தாவாய் இயற்கை முற்றுணர்வு உடையன் என்பதைக் குறித்தபடி. பிறை சூடுதல் உயிர்களின் அக இருளைப் படிமுறையான் போக்கும் தூய நல்லுணர்வைத் தன் பக்கல் உடையன் என்பதைக் குறிக்கும். ''தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி - ஆமதி யான் என அமைத்த ஆறே'' (தி.11 திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது பா.6) என்பதனான் உணர்க. இனத்துச் சார்ந்தார்க்குச் சார்பாய் நின்று தலையளி செய்வோன் என்பதைக் குறிக்கும் எனினும் அமையும். உம்மை எண்ணுப் பொருளில் வந்தது. துறையும் போகுவர் என்றது 'ஈசானஸ் ஸர்வ வித்யானாம்' என்னும் வேதமந்திரத்தின் கருத்தைத் தருவதாதல் காண்க. எக்கலைக்கும் முதல்வன் (சிவபிரான்) என்பது அம் மந்திரத்தின் பொருள்.

2. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர். கல்லாதவரையும், கற்று வல்லவரையும், வணங்காத நெறியைக் கட்டிப் பேசும் வீணரை யும், தணக்கும் இயல்புடையவர்; எப்பொருளையும் தணிப்பவர் (ஒடுக்குவர்); பிணக்கும் இயல்பினரும் ஆவர்.

கு-ரை: கணக்கிலார் - அளவு படாத நெஞ்சினர், நன்னெறி யில் நின்று ஆராய ஒருப்படாத நெஞ்சினர் என்றபடி, கல்லாதவர் எனினும் அமையும். கற்றுவல்லார் - கற்றதனால் யாம் எல்லாம் வல்லேம் எனக் கருதிச் செருக்குவோர். வணக்கிலா நெறி கண்டு கொண்டோர் - முதல்வனை உணர்ந்து பணிதல் வேண்டும் என்னும் கொள்கை யில்லாத சழக்கு நெறியை நன்னெறி எனத் தம் புல்லறிவால் துணிந்து கொண்டோர். எப்பொருளையும் தணிப்பார், பிணக்குவார் என்க; ஒடுக்கித் தோற்றி நடத்துவார் என்பது கருத்து.

3. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர், மழை சொரிவிப்பார்; திங்களைச் சூழ்கதிர் விரிவிப்பார்; ஞாயிற்றின் கண் பொருந்திய

Koviloor Digital Library

1225. செறுவிப் பார்சிலை யால்மதில் தீர்த்தங்கள்
உறுவிப் பார்பல பத்தர்க ளூழ்வினை
அறுவிப் பாரது வன்றியும் நல்வினை
பெறுவிப் பாரவர் பேரெயி லாளரே. 4

1226. மற்றை யாரறி யார்மழு வாளினார்
பற்றி யாட்டியோ ரைந்தலை பாம்பரைச்

விளங்கொளியை எரிவிப்பார்; எப் பொருளையும் தணிவிப்பார், அவற்றைப் பிரிவிக்கும் இயல்பினரும் ஆவர்.

கு-ரை: சொரிவிப்பார் மழை - மழையை வேண்டுங் காலத்துப் பெய்யச் செய்வார். சூழ்கதிர்த் திங்களை விரிவிப்பார் - சந்திரனை நிலவுக்கதிர் விரித்தின்புறுத்தச் செய்வர். வெயில்பட்ட விளங்கொளி - வெயில் ஒளி பொருந்தி விளங்குகின்ற சூரியனை. எரிவிப்பார் - உலகில் விளங்கச் செய்வார். எப்பொருளையும் தணிப்பார் - எப்பொருளின் ஆற்றலையும் நிகழாதபடி அடங்கி நிற்கச் செய்வார். பிரிவிப்பார் - இணைந்து நிற்கும் எப்பொருளையும் பிரிக்க வேண்டுங் காலத்துப் பிரியச் செய்வார் (செல்வம், வளம் முதலியன ஓரிடத்தில் நில்லாமே இடம் பெயர்ந்து வருதல் காண்க.)

4. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர் மேரும்லை வில்லால் முப்புரங்களை அழியச் செய்வார்; தீர்த்தங்களை மிகுவிப்பார்; பல பத்தர்களின் ஊழ்வினை அறுவிப்பார்; அதுவன்றியும் நல்வினை பெறும்படியும் செய்வார்.

கு-ரை: சிலையால் - இமயவில்லால். மதில் - முப்புரங்களை. செறுவிப்பார் - அழியச் செய்தவர். தீர்த்தங்கள் உறுவிப்பார் - புண்ணிய வாவிகள் பலவற்றை உண்டாக்கி அளிப்பவர். அல்லது, அன்பர்களைத் தீர்த்தங்களை உற்று ஆடச் செய்வர். ஊழ்வினை - (அதனால்) முறையாக விளையும் வினைப்பயனை. அறுவிப்பார் - நீங்கச் செய்பவர். அது அன்றியும் நல்வினை பெறுவிப்பார் - பத்தர்களை ஊழ்வினை அறுத்தலேயன்றி, சிவஞானத்தை மிகுவிக்கும் சிவ நல்வினைகளை மேற்கொண்டு ஒழுகச் செய்வர்.

5. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர் அன்பர்களால் அன்றி மற்றையவரால் அறியப்படாத இயல்புடையவர்; மழுவாளை

Koviloor Digital Library

சுற்றி யாரவர் தூநெறி யால்மிகு
பெற்றி யாரவர் பேரெயி லாளரே. 5

1227. திருக்கு வார்குழற் செல்வன சேவடி
இருக்கு வாய்மொழி யால்தனை யேத்துவார்
சுருக்கு வார்துயர் தோற்றங்க ளாற்றறப்
பெருக்கு வாரவர் பேரெயி லாளரே. 6

உடையார்; ஓர் ஐந்தலைப்பாம்பைப் பற்றி ஆட்டி அரையிற் சுற்றியவர்; தூநெறியால் மிகுகின்ற பெற்றியும் உடையவர்.

கு-ரை: மற்றையார் - மெய்யன்பர் அல்லாதவர். மழுவாள் - மழுவாகிய வாள். பற்றி - பிடித்து. ஆட்டி - ஆடச் செய்து. ஐந்தலைப் பாம்பைக் கையில்பற்றி ஆட்டுவர்; இடுப்பிலும் சுற்றிக் கொள்வர் என்க. மகாமாயை என்னும் குண்டலிசத்தியை ஆள்பவர் என்றபடி. தூநெறி - அவா அறுக்கும் முத்திநெறி (தூஉய்மை என்பதவாவின்மை. *திருக்குறள் . 364.)*

அந்நெறி நிற்பார்க்குப் பேரின்பமாய் முறுகித் தோன்றும் பெற்றியர் என்க. ''இன்பம் இடையறா தீண்டும்'' என்னும் திருக் குறளோடு (369) ஒப்பிடுக.

6. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர், வளைந்த நீண்ட குழலாளை உடைய செல்வராகிய தம்மடியை இருக்குவேதம் முதலிய மெய்ம்மொழிகளால் ஏத்துவார்களின் துயரைச் சுருக்குவார்; அவை தோன்றுகின்ற நெறி அறுமாறு அருளைப் பெருக்குவார்.

கு-ரை: திருக்கு - வளைத்து முறுக்கி முடித்த. வார் குழல் - நீண்டகூந்தல், இங்கு உமை. செல்வன - உமையைப் பாகங்கொண்ட செல்வனான சிவபெருமானுடைய.

இருக்கு வாய் மொழியால் - இருக்காலும் தம் வாய் மொழியாலும் (இருக்கு - *வேதம்*); தன்னை, சேவடியை எனக் கூட்டுக. துயர் சுருக்குவார் என்க. ஆற்றற - வலிகெட. தோற்றங்கள் ஆற்றறப் பெருக்குவார் - துயர்களின் தோற்றங்கள் வலிகெடும்படி, சிவபுண்ணியச் செயல்களைப் பெருக்குவித்துத் தமக்கு அன்பராகச் செய்து கொள்வர்.

Koviloor Digital Library

1228. முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனின் தானோர் தலைமகன்
என்னை யாளுமி றையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே. 7

1229. உழைத்துந் துள்ளியு முள்ளத்து ளேயுரு
இழைத்து மெந்தை பிரானென் றிராப்பகல்
அழைக்கு மன்பின ராய அடியவர்
பிழைப்பு நீக்குவர் பேரெயி லாளரே. 8

7. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர் எனின் அவர், முன்னே தோன்றியவர்; மயிலை ஊர்தியாக உடைய முருகவேளின் தாதையார்; ஒப்பற்ற முதல்வர்; என்னையாளும் இறைவரும் எம்பிரானுமாவர்; புதியரிற் புதியரும் அவரே.

கு-ரை: பேரெயிலாளரே எனின், அவர் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியர் ஆதல் முதலிய தன்மையர் என்க. மயில் ஊர்தியையுடைய முருகவேள் தன் ஐயார் (தந்தையார்) என்க. மயில் ஊர்தி - மயிலாகிய ஊர்தி (வாகனம்). எனின் என்பதை அசைநிலை யாகக் கொள்ளினும் அமையும்.

8. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர், உழைத்தும், துள்ளியும், தம் உள்ளத்துள்ளே உருவத்தை இழைத்தும் எந்தையே! பிரானே! என்று இரவும் பகலும் இடைவிடாது அழைக்கும் அன்பர்கள் இயற்றிய பிழைகளை நீக்கும் தன்மை உடையவராவர்.

கு-ரை: உழைத்தும் - மெய்வருந்தும்படித் திருப்பணிகள் செய்தும்; துள்ளியும் - பேரின்பமேலீட்டால் ஆடியும்; உள்ளத்துளே உரு இழைத்தும் - இறைவன் திருவுருவைச் செம்மையாக மனத்தில் சிந்தித்தும். பிழைப்பு - செய்த பிழையின் பயனாகிய துயர்; பிழைப்பு நீக்குவர் என்பதற்கு அடியார் எக்காரணத்தாலோ செய்யும். குற்றத்தைத் தான் ஏற்றுக்கொண்டு அவர்க்கு அத்தீங்கு வாராமே காப்பன் என்றுரைப்பினும் அமையும்; மெய்யன்பர்கள் குற்றங்கள் செய்யினும் குணமெனக் கொள்வன் என்பது கருத்து.

Koviloor Digital Library

1230. நீரு லாநிமிர் புன்சடை யாவெனா
ஏரு லாவநங் கன்திறல் வாட்டிய
வாரு லாவன மென்முலை யாளொடும்
பேரு ளாரவர் பேரெயி லாளரே. 9

1231. பாணி யார்படு தம்பெயர்ந் தாடுவர்
தூணி யார்விச யற்கருள் செய்தவர்
மாணி யாய்மண் ணளந்தவன் நான்முகன்
பேணி யாரவர் பேரெயி லாளரே. 10

1232. மதத்த வாளரக் கன்மணிப் புட்பகம்
சிதைக்க வேதிரு மாமலைக் கீழ்ப்புக்குப்

9. பொ-ரை: கங்கை உலாவிய நிமிர்ந்த புன்சடையா என்று போற்றாத அழகு பொருந்திய மன்மதன் திறலைவாட்டிய பெரும்புகழ் உடையவர்; கச்சுப் பொருந்திய அழகிய மென்முலையாளொடும் பேரெயிலில் வீற்றிருந்தவர்.

கு-ரை: புன்சடையா எனா - தவக்கோலம் பூண்ட பெருமானே எனப் போற்றித் தொழாது. மாறுபட்டுப் பூங்கணை எய்த. எனாத என்பது எனா என நின்றது, அநங்கன் - மன்மதன். வார் உலாவும் வன (அழகிய) முலையாளொடும் பேரெயிலில் உள்ளவர் அநங்கன் திறலை வாட்டியபேர் உளார் என முடிக்க. ''ஓம் காமாரயே நம'' என்பது நூற்றெட்டுப் பெயர்களுள் ஒன்று.

10. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர், படுதம் என்று கூறப்பெறும் கூத்தைத் தாளம் பொருந்த ஆடுபவர்; அம்பறாத்தூணி உடையவராய் (வேடராய்) வந்து அருச்சுனர்க்கு அருள் செய்தவர்; பிரமசாரியாய் வந்து (வாமனாவதார காலத்து) மண்ணளந்தவனாகிய திருமால் பிரமன் என்போரால் பேணப் பட்ட பெருமை உடையவர்.

கு-ரை: பாணி - இசைப்பாட்டு. படுதம் - கூத்துவகை. பேணியார் - பேணி வழிபடப்பட்டவர். இசைப் பாட்டோடு படுதம் என்னும் கூத்தாடுவாரும்,தூணியாராய் விசயற்கு அருளியோரும் பேணப்பட்டோரும் ஆகிய அவர் பேரெயிலாளர் என முடிக்க.

11. பொ-ரை: பேரெயில் தலத்து இறைவர் செருக்குடைய வாள் அரக்கன் இவர்ந்து வந்த புட்பக விமானத்தைத் திருமலை தடுக்க

Koviloor Digital Library

பதைத்தங் கார்த்தெடுத் தான்பத்து நீண்முடி
பிதக்க வூன்றிய பேரெயி லாளரே. 11

திருச்சிற்றம்பலம்

உடனே பதைத்து அத்திருமலையின் கீழ்ப்புகுந்து அங்கு ஆர்த்து எடுத்தபோது, அவன் முடிபத்தும் சிதையும் படியாக ஊன்றியவர்.

கு-ரை: மதத்த - செருக்கு உள்ள. சிதைக்கவே - தடைசெய்தமையின் (இவர்) ஊன்றிய பேரெயிலாளர் (ஊன்றியவர்) என முடிக்க. நீள்முடி பிதக்க - நீண்டமுடி நசுங்கும்படி.

திருநாவுக்கரசர் புராணம்

நாலூர்தென் திருச்சேறை
குடவாயில் நறையூர்சேர்
பாலூரும் இன்மொழியாள்
பாகனார் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார்
மேவும்இடம் பலபாடிச்
சேலூர்தண் பணைசூழ்ந்த
தென்திருவாஞ் சியம்அணைந்தார்.

-தி.12 சேக்கிழார்

கந்தபுராணம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தோத்திரம்

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.

– கச்சியப்ப சிவாச்சாரியார்

Koviloor Digital Library

17. திருவெண்ணி

பதிக வரலாறு:

சேக்கிழார் எடுத்தோதிக் குறிப்பிடாத பதிகங்களுள் இஃதும் ஒன்று. திருப்பழையாறையில் முதல்வனைத் தொழுது போற்றிய பின் காவிரியின் இருமருங்கும் உள்ள பல தலங்கள் புக்கு இறைஞ்சித் தமிழ் மாலைகள் சாத்தித் திருவானைக்கா சென்றணைந்தார் அப்பர். அப் பல தலங்களுள் ஒன்று திருவெண்ணி எனக் கொள்க.

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 130 **பதிக எண்: 17**

திருச்சிற்றம்பலம்

1233. முத்தி னைப்பவ ளத்தை முளைத்தவெம்
தொத்தி னைச்சுட ரைச்சுடர் போலொளிப்
பித்த னைக்கொலும் நஞ்சினை வானவர்
நித்த னைநெரு நற்கண்ட வெண்ணியே. 1

1. பொ-ரை: முத்தினை, பவளத்தை, முளைத்த எம் பூங் கொத்தினை, சுடரை, சுடர்போல் ஒளி உடைய பித்தனை, கொல்லும் நஞ்சு போல்பவனை, வானவர்க்குள் நித்தனை நேற்றுக்கண்ட வெண்ணித்தலமே இன்று என் உள்ளத்தில் பதிந்திருந்து பேரின்பத்தை மிகுவிப்பது.

கு-ரை: முளைத்த - எல்லார்க்கும் முன்னே தோன்றிய. எம் தொத்தினை - எங்கள் கொத்தினை; உறுப்புக்கள் பல மலராக அமைந்த பூங்கொத்துப் போன்றவன் என்க. சுடரை - ஒளிவடிவானவனை. அல்லது சூரிய சந்திரர்களாகவும் நெருப்பாகவும் விளங்குகின்றவனை என்க. சுடர்போல் - சூரிய சந்திரர்கள் போல அன்பர்க்குச் சந்திரனைப் போன்றவனாகவும் (அல்லாதவர்க்குச் சூரியன் போன்றவனாகவும் இருப்பவன்). ஒளிப்பித்தனை - ஒளியையுடைய அடியர்மாட்டுப் பேரன்புடையானை. பித்தினை என்பதும் பாடம்; பேரன்புக்குக் கோசரமாவன் என்பது கருத்து. கொலும் நஞ்சினை - அல்லார்க்கு நஞ்சுபோல்வான். வானவர் நித்தன் - வானவர் அமர நிலை எய்தச்செய்தவன். நெருநல் - நேற்று. கண்ட - தரிசித்த. வெண்ணியிது

Koviloor Digital Library

1234. வெண்ணித் தொல்நகர் மேயவெண் திங்களார்
கண்ணித் தொத்த சடையர் கபாலியார்
எண்ணித் தம்மை நினைந்திருந் தேனுக்கு
அண்ணித் திட்டமு தூறுமென் நாவுக்கே. 2

1235. காற்றி னைக்கன லைக்கதிர் மாமணி
நீற்றி னைநினைப் பார்வினை நீக்கிடும்
கூற்றி னையுதைத் திட்ட குணமுடை
வீற்றி னைநெரு நற்கண்ட வெண்ணியே. 3

என்று ஒருசொல் கூட்டி முடிக்க. அல்லது கண்டது என்று வினை முற்றாக்கியும் முடிபுரைக்கலாம். முன் நாள் கண்டகாட்சி உள்ளத்தே நின்று களிப்பைத்தர அதனாற் பாடியது இத்திருப்பதிகம் எனக் கொள்க: அடுத்த பாட்டின் கருத்தும் காண்க.

2. பொ-ரை: வெண்ணியாகிய பழைய நகரத்தை மேவியவரும், வெண்திங்களைச் சூடியவரும், கொன்றைக் கண்ணியை உடைய கொத்தாக உள்ள சடையுடையவரும், கபாலத்தைக் கையில் ஏந்திய வரும், ஆகிய அப்பெருமானை எண்ணி நினைத்திருந்தேனுக்கு அவர் நினைவு என் நாவினில் அண்ணித்து அமுதாக ஊறும்.

கு-ரை: தொல்நகர் - மிகப்பழைய நகர். மேய - எழுந்தருளிய. திங்களார் - பிறையணிந்தவர். கண்ணித்தொத்த - கொன்றைக் கண்ணி அணிந்த கொத்தாகிய. கபாலியார் - பிரமகபாலமேந்தியவர். தம்மை- அப்பெருமான்தமை. அண்ணித்திட்டு - இனித்து. நேற்றுக் கண்ட காட்சியை நினைந்திருந்த எனக்கு நாவில் அமுது அண்ணித்து ஊறும் என முடிக்க. என் நாவுக்கு - உருபு மயக்கம்.

3. பொ-ரை: காற்றும் கனலும் ஆவான்; கதிர்விக்கும் மாமணிமேற் சண்ணித்த திருநீறு போன்ற திருமேனியுடையான்; அத்திருமேனியை நினைப்பார் வினையை நீக்குபவன். கூற்றினை உதைத்த குணமுடைய தனிச்சிறப்புடையவன். இப்பெருமானை நேற்றுக் காண்டற்கு இடமாக இருந்த திருவெண்ணியே எனக்கு இதுபோது பேரின்பத்தைப் பெருக்குவது.

கு-ரை: காற்றினை - காற்று வடிவானவனை. கனலை - அனல் வடிவினனை. கதிர்மாமணி - ஒளியையுடைய சிறந்தமணி போன்ற

Koviloor Digital Library

1236. நல்ல னைத்திகழ் நான்மறை யோதியைச்
சொல்ல னைச்சுட ரைச்சுடர் போலொளிர்
கல்ல னைக்கடி மாமதில் மூன்றெய்த
வில்ல னைநெரு நற்கண்ட வெண்ணியே. 4

1237. சுடரைப் போலொளிர் சுண்ணவெண் ணீற்றனை
அடருஞ் சென்னியில் வைத்த அமுதினைப்
படருஞ் செஞ்சடைப் பான்மதி சூடியை
இடரை நீக்கியை யான்கண்ட வெண்ணியே. 5

வனை. நினைப்பார் - தன்னை நினைப்பாரின். வினை நீக்கிடும் - வினைகளைப்போக்கும். நீற்றினை - திருநீறணிந்தவனை - அல்லது; நினைப்பவர் வினையை நீறாக்கியவனை என்க. குணமுடை - அபயமாக அடைந்தவரைக் காக்கும் குணமுடைய. வீற்றினை - வீறு. பெருமை - பெருமை வடிவினனை. ''தொழுதெழுவார் வினை வளம் நீறெழ நீறணியம்பலவன்'' என்னும் (தி.8) திருக்கோவையார் ஒப்பிடத்தக்கது.

4. பொ-ரை: நல்லவனை, விளங்கும் நால்வேதங்களை ஓதும்பிரானை, சொல்வடிவானவனை, ஒளியை, சுடர்விட்டு ஒளிர்கின்ற திருக்கயிலாயத் திருமலை உடையவனை, திரிபுரம் எரிசெய்த வில்லுடையவனை நேற்றுக்கண்ட வெண்ணியே இன்று எம்மை இது செய்வது.

கு-ரை: நல்லன் - நன்மையே வடிவானவன். திகழ் - விளங்குகின்ற. ஓதியை - ஓதியவனை. சொல்லனை - சொல் வடிவானவனை. சுடரை - ஒளி வடிவானவனை. சுடர்போல் ஒளிர் கல்லன் - சூரியன் போல ஒளிவிடும் வெள்ளிப் பனிமால்வரையை இருப்பிடமாகக் கொண்டவன். கல் - மலை. கடி - விளக்கம். அல்லது காவல். மா - பெரிய. வில்லன் - திரிபுரமழிக்க எடுத்த இமயவில்லை உடையவன்.

5. பொ-ரை: சுடரைப் போல் ஒளிர்கின்ற வெண்ணீற்றுப் பொடியணிமேனியனை, பூவிதழும் (பிறவும்) சென்னியிலே வைத்த அமுதனையானை, படர்ந்த செஞ்சடையிலே பால் போன்ற மதியைச் சூடியவனை, இடர்கள் நீக்கும் இறைவனை யான் கண்டது வெண்ணித் தலத்திலாகும். சடைநெருங்கிய சென்னியில் அமுது (நீர் - கங்கை) வைத்தவனை - எனினும் அமையும். (வைத்த அமுதினை என்பதை

Koviloor Digital Library

1238. பூத நாதனைப் பூம்புக லூரனைத்
தாதெ னத்தவ ழும்மதி சூடியை
நாதனை நல்ல நான்மறை யோதியை
வேத னைநெரு நற்கண்ட வெண்ணியே. 6

1239. ஒருத்தி யையொரு பாகத் தடக்கியும்
பொருத்தி யபுனி தன்புரி புன்சடைக்
கருத்த னைக்கறைக் கண்டனைக் கண்ணுதல்
நிருத்த னைநெரு நற்கண்ட வெண்ணியே. 7

அருங்கேடன் என்பது போலக் கொள்க)

கு-ரை: சுடரைப்போல் ஒளிர் - சூரியனைப்போல் வெள்ளிதாய் ஒளிவிடுகின்ற. சுண்ண வெண்ணீற்றனை - திருவெண்ணீற்றுப் பொடி அணிந்தவனை. அடர் - பூவிதழ். அடியார் சூட்டும் பூவிதழும், இலையும் சென்னியில் ஏற்றருளும் அமுது போன்றவன் என்க. அடரும் சென்னியில் அமுதுவைத்தவனை எனினும் அமையும். அமுது - தண்ணீர், கங்கை. படரும் - விரிந்துள்ள. செஞ்சடை - சிவந்த சடைமுடியின்மீது. பால்மதி - பால்போன்ற வெண்மையான சந்திரன். சூடியை - சூடியவனை. இடரை நீக்கியை - துன்பங்களை நீக்கியவனை.

6. பொ-ரை: பூதங்களுக்குத் தலைவனை, பூக்கள் நிறைந்த புகலூரனை, மகரந்தம் போல் தவழும் மதியைச் சூடியவனை, தலைவனை, நான்மறை ஓதியவனை, வேதப்பொருளானவனை நேற்று வெண்ணியிற் கண்டு ஏத்தினேன்.

கு-ரை: பூதநாதன் - பூதகணங்களுக்குத் தலைவன். பூதம் - உயிர் எனினும் அமையும். தாதெனத் தவழும் மதி - மகரந்தம் போன்ற மஞ்சளும் வெண்மையுங்கலந்த நிறமுடைய பிறைமதி. சூடி - சூடியவன். தவழும் - தவழ்கின்ற பிள்ளைமதி எனறகேற்பத் தவழ்தல் கூறப்பட்டது. நாதன் - தலைவன்.

7. பொ-ரை: ஒருத்தியை ஒருபாகத்தில் அடக்கியும், மற்றொருத்தியைப் புன்சடையிற் பொருத்திய புனிதனை, கருத்துள் இருப்பவனை, திருநீலகண்டனை, கண்ணுதலானை, நிருத்தம் ஆடுவானை, நேற்று வெண்ணியிற்கண்டு ஏத்தினேன்.

Koviloor Digital Library

1240. சடைய னைச்சரி கோவண ஆடைகொண்
டுடைய னையுணர் வார்வினை தீர்த்திடும்
படைய னைமழு வாளொடு பாய்தரும்
விடைய னைநெரு நற்கண்ட வெண்ணியே. 8

1241. பொருப்ப னைப்புன லாளொடு புன்சடை
அருப்ப னையிளந் திங்களங் கண்ணியான்
பருப்ப தம்பர வித்தொழுந் தொண்டர்கள்
விருப்ப னைநெரு நற்கண்ட வெண்ணியே. 9

கு-ரை: ஒருத்தி - பார்வதி. ஒருபாகத்து - இடப்பாகத்தே. அடக்கியும் பொருந்திய - கூட்டியும் ஒன்றாகச் செய்த; முன்பே ஒன்றாந் தன்மையோடிருந்ததேயன்றி தன்னுடம்பினொரு கூறாந் தன்மையை அளித்தும் ஒன்றாகச்செய்த. புனிதன் - தூயன். புரி - முறுக்கேறிய. கருத்தன் - கருதுவார் கருத்துள் நிற்பவன். கண்ணுதல் நிருத்தன் - கண்ணுதலை உடைய நிருத்தன். நிருத்தன் - ஆடல் வல்லான்.

8. பொ-ரை: சடை உடையவனை, சரியும் கோவண ஆடை கொண்டு உடையவனை, உணர்வார் வினைதீர்த்திடும் மழுவாளொடு பிறவும் படை உடையவனை, பாய்ந்து செல்லும் விடை உடையவனை நேற்று வெண்ணியிற் கண்டு ஏத்தினேன்.

கு-ரை: சரிகோவணம் - இடுப்பினின்று கீழே சரிந்துள்ள கோவணம். ஆடைகொண்டுடையன் - ஆடையாகக்கொண்டவன். உணர்வார் - உணர்பவர். வினை - பழவினைகளை. வாளொடு - மழுப்படையனை என்க. படை - ஆயுதம். மழுவாளொடு பிற படையும் உடையவர் என்க. பாய்தரும் விடை - பாய்ந்து செல்லும் எருது.

9. பொ-ரை: திருக்கயிலாயப் பொருப்புக்குரியவனை, கங்கை யாளைச் சடையிற் கொண்டவனை, அரும்பு போன்ற இளந்திங்களைக் கண்ணியாகக் கொண்டவனை, திருக்கயிலாயத்தைப் பரவிவாழ்த்தும் தொண்டர்கள் விருப்பத்துக்குரியவனை நேற்றுக் கண்டு வெண்ணியில் ஏத்தினேன்.

கு-ரை: பொருப்பன் - கயிலைமலைக்குரியவன். புன்சடை -

Koviloor Digital Library

1242. சூல வஞ்சனை வல்லவெஞ் சுந்தரன்
கோல மாஅருள் செய்ததோர் கொள்கையான்
காலன் அஞ்ச வுதைத்திருள் கண்டமாம்
வேலை நஞ்சனைக் கண்டது வெண்ணியே. 10

1243. இலையி னார்கொன்றை சூடிய ஈசனார்
மலையி னாலரக் கன்திறல் வாட்டினார்
சிலையி னால்மதி லெய்தவன் வெண்ணியைத்
தலையி னால்தொழு வார்வினை தாவுமே. 11

திருச்சிற்றம்பலம்

மெல்லிய சடையிடத்து. அரும்பனை - அரும்பு அனை எனப்பிரித்து அரும்பை ஒத்த இளந்திங்கள் என்க. திங்களாகிய கண்ணியை உடையவன். பருப்பதம் - அவன் எழுந்தருளிய திருக்கயிலைத் திருமலை. அதனை ஏத்தித் தொழும் தொண்டர்களிடத்து விருப்புடையவன் என்க. ஸ்ரீ பருப்பதம் எனக் கோடலும் பொருந்தும்.

10. பொ-ரை: வஞ்சிப்பார் வஞ்சனையைக் களையவல்ல எமது அழகன்; திருமேனிகாட்டி அருள்செய்த கொள்கையினை உடையான்; காலன் அஞ்சும்படி உதைத்தவன்; கண்டம் இருளும்படி செய்த கடல் நஞ்சினை உண்டு அமரர்களை உயிர் வாழச்செய்தவன். இப் பெருமானை நெருநல்கண்ட இடம் திருவெண்ணியூரே ஆம்.

கு-ரை: வஞ்சனை(யைச்) சூல வல்ல எம் சுந்தரன் - என மாறுக. சூலுதல் - தோண்டுதல், களைதல். அடியரை வஞ்சிப்பார் செய்யும் வஞ்சனைகளைக் களையவல்லவன் என்றபடி; இது நாவுக்கரசரது அனுபவம். கோலமா அருள் செய்தல் - பக்குவர்க்குத் தன் திருமேனி காட்டி ஒப்பற்ற சிவஞானத்தை விளங்கச்செய்தல். கண்டம் இருள் ஆம் வேலை நஞ்சு என்க. வேலை - (பாற்) கடல்.

11. பொ-ரை: இலைகளுடன் கூடிய கொன்றை சூடிய ஈசனார் மலையினால் அரக்கன் ஆற்றலை வாட்டினார், வில்லினால் முப்புரங்களை எய்தவர்க்குரிய வெண்ணியைத் தலையினால் தொழுவார்களது வினை நீங்கும்.

கு-ரை: இலையினார் - அடியார் இடும் வில்வம் வன்னி முதலிய பச்சிலைகளைச் சூடியவர். திறல் - வலிமை. சிலை - வில்.

Koviloor Digital Library

தலையினால் தொழுதல் - தலைதாழ்த்தி வணங்குதல். தாவும் - கெடும், ஒழியும்; தபு - என்பதன் அடியில் தோன்றியது.

குறிப்பு: இத் திருப்பதிகம் அப்பர் பெருமான் அள்ளூறித் தித்திக்கப் பாடியது: இக்ஷுபுரி என்னும் பெயர் இதனால் வந்தது போலும். இறைவன் திருவுரு கரும்பின் அடையாளம் உடைத்து என்பர்.

திருவெண்காட்டுப் புராணம்

சிற்றூணின் மரகதத்தி னொளிபகலு மிருள்காட்ட
வெழுந்து காமன்
விற்றூணி மலரெடுத்து விளையாடுந் திருவாமூரர்
விளங்க வந்தோன்
கற்றூணைப் பிடித்துவளை கடல்கடந்தோ
னிருபாத கமல மென்னும்
பொற்றூணைப் பிடித்துநம திடராழி கடந்துகதி
புகுத லாமே.

- சைவ எல்லப்ப நாவலர்

காஞ்சிப் புராணம்

இடையறாப் பேரன்பும், மழைவாரும் இணை
விழியும், உழவாரத்திண்
படையறாத்திருக்கரமும், சிவபெருமான்
றிருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும், வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையறாச் செவ்வாயும், சிவவேடப்
பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

- சிவஞான முனிவர்

Koviloor Digital Library

18. திருக்கடம்பந்துறை

பதிக வரலாறு:

அப்பர் பெருமான் திருப்பழையாறையில் முதல்வனைத் தொழுது போற்றி இன்புற்றபின் காவிரியின் இரு கரையிலும் உள்ள பல தலங்களுள் புக்கு இறைஞ்சித் திருப்பதிகம் பாடினார். அத்திருப்பதிகங்களுள் இதுவும் ஒன்று. தி.12 திருநாவுக்கரசு நாயனார் புராணம் 301ஆம் செய்யுள் காண்க.

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்:131 **பதிக எண்: 18**

திருச்சிற்றம்பலம்

1244. முற்றிலாமுலை யாளிவ ளாகிலும்
அற்றந் தீர்க்கு மறிவில ளாகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றம் ஊர்தியென் றாளெங்கள் பேதையே. 1

1. பொ-ரை: எங்கள் பேதையாகிய இவள் முற்றாத இளமுலை உடையாள் ஆயினும், அற்றந் தீர்க்கும் அறிவில்லாதவள் ஆயினும், கற்றைச் செஞ்சடையானாகிய கடம்பந்துறைப் பெருமான் இவர்ந்து வரும் ஊர்தி இடபம் என்று கூறுகின்றாள். (செவிலி கூற்று)

கு-ரை: முற்றிலா - முழுதும் எழாத; இளைய. எங்கள் பேதை இவள் - பேதைப்பருவம் உள்ள எங்கள் மகள். அற்றம் தீர்க்கும் அறிவு - தலைவன் துன்பத்தைப் போக்கும் காம உணர்வு. அற்றம் - துன்பம். முற்றிலா முலையாள், அறிவிலள் என்றது இளையள், பேதை, காமஞ்சாலாதவள் என்றபடி. ஆகிலும் - அங்ஙனமிருந்தாலும். கற்றைச் செஞ்சடை - அடர்ந்த செஞ்சடைக் கற்றை.

ஊர்திபெற்றம் - வாகனம் எருது. கடம்பந்துறைக் கற்றைச் செஞ்சடையான் ஊர்திபெற்றம் என மாறுக. என்றாள் - காமஞ்சாலா இளையோளாய எமது மகள் இறைவனைக் கண்டு காதலித்து அவன்றன் அடையாளம் கூறத் தொடங்கிவிட்டாள் என்பதாம். உலாப்புறம் போந்த முதல்வனைக் கண்ட பேதைப் பருவப் பெண் அவன்றன் திருவுருவில் உளங்கொடுத்தாள் என்க.

Koviloor Digital Library

1245. தனகி ருந்ததொர் தன்மைய ராகிலும்
முனகு தீரத் தொழுதெழு மின்களோ
கனகப் புன்சடை யான்கடம் பந்துறை
நினைய வல்லவர் நீள்விசும் பாள்வரே. 2

1246. ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே. 3

2. பொ-ரை: நீங்கள் உள்ளக்களிப்பு மிக்கு உடையீராயினும். நுமது இழிவு நீங்குதற்கு முதல்வனைத் தொழுமின்கள்; கனகப் பொன்சடையான் வீற்றிருக்கும் கடம்பந்துறையை நினையும் வல்லமை பெற்றவர் விசும்பு ஆள்வர் ஆதலால்.

கு-ரை: தனகு - உள்ளக்களிப்பு; இதனை உடையோர் செய்வது அறியமாட்டார். அன்னோர் முதல்வனை உணராமையின் இழிஞர், அல்லது குற்றம் உடையோர் ஆவர். அவ்விழிவு நீங்கி உய்தற் பொருட்டு அன்னோரைத் 'தொழுதெழுக' என உணர்த்துகின்றார் சுவாமிகள். முனகு - இழிவு, குற்றம். சிவபிரானை நினைந்தெழுவார் முத்திபெறுவது சரதம் ஆகலின், உள்ளக் களிப்புள்ள உலகரையும் தொழுதெழுக என்றருளிச் செய்தபடி.

3. பொ-ரை: பெருமை மிக்க நல்லியல்புகள் பொருந்திய அன்பர்களே! ஆரியமும், தமிழும், இசையும் ஆனவனும் மிக்க குணத்தார் குறியாக நின்றவனும் ஒருபாற் பார்வதிதேவியாரை உடையவனுமாகிய பெருமான் வீற்றிருக்கும் கடம்பந்துறை சென்றடைவீர்களாக.

கு-ரை: ஆரியம் - வடமொழி. ''வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்குமானவன்'' (தி.6. ப.87. பா.1) என்பதறிக. கூரிய - சிறந்த; மிகுந்த. குறி - சொல்லும் எல்லை. காரிகை - அழகு. சீரியல் பத்தர் - சிறந்த தன்மை வாய்ந்த பக்தர் என்க.

கூரிய குணத்தார் குறி நின்றவன் என்பதற்குச் சிவஞானிகள் ஒரு குறிக்கண்வைத்து உணர, அக்குறிக்கண் நின்று அவர்க்குப் பேரின்பம் தருவோன் எனவும் பொருள் கொள்ளலாம்.

Koviloor Digital Library

1247. பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை
வண்ண நன்மல ரான்பல தேவரும்
கண்ண னும்மறி யான்கடம் பந்துறை
நண்ண நம்வினை யாயின நாசமே. 4

1248. மறைகொண் டம்மனத் தானை மனத்துளே
நிறைகொண் டந்நெஞ்சி னுள்ளுற வைம்மினோ
கறைகண் டன்னுறை யுங்கடம் பந்துறை
சிறைகொண் டவ்வினை தீரத் தொழுமினே. 5

4. பொ-ரை: பண்ணின் இன்மொழி கேட்கும் விருப்புடைய பரமனும், நான்முகனும், தேவர்களும், திருமாலும், அறியப்படாத வனுமாகிய பெருமான் வீற்றிருக்கும் கடம்பந்துறையை நண்ணினால், நம்வினைகளாயவை நாசமாம்.

கு-ரை: பண்ணின் இன்மொழி - இரு காதுகளிலும் இரு குழைவடிவாக அசுவரதரன், கம்பளதரன் என்பார். பாடல் பண்ணிசை மொழிகளை அல்லது அடியார்கள் பாடும் பண்ணிசைப் பாடல்களைக் கேட்கும் பரமன் என்க. வண்ணநன்மலரான் - அழகிய நல்ல தாமரையில் உள்ள நான்முகன்; பல தேவரும் கண்ணனும் அறியான் - (நான்முகனும்) தேவர்கள் பலரும் திருமாலும் அறியா தவன். நண்ண - அடைய. வினையாயின - வினைகள்.

5. பொ-ரை: உபதேசப் பொருளைக் கொண்ட மனத்தே விளங்கித் தோன்றும் முதல்வனை ஒரு நெறிப்பட்ட நெஞ்சின் உள்ளுற வைப்பீர்களாக; திருநீலகண்டன் உறையும் கடம்பந்துறையை நுமது அறிவைக் கட்டுப்படுத்தும் இருவினை தீரத் தொழுவீர்களாக.

கு-ரை: மறைகொண்ட மனத்தான் - உபதேசப் பொருளைச் சிந்தித்தல்கொண்ட மனத்தை உடையவன். மறை - உபதேசப் பொருள் (இரகசியம்). மனத்துள் - உள்மனத்தின்கண். நிறைகொண்ட - நிறை என்னும் குணம் கொண்ட; நிறுத்துதல் அமைந்த. அ - அழகிய. நெஞ்சினுள் - உள்மனமாகிய நெஞ்சின் கண் எனக் கூட்டுக. உற - பொருந்த. வைம்மின் - வைத்து வழிபடுங்கள், ஓ - அசை. கறை - விடக்கறை. சிறைகொண்ட வினை - உயிர்களின் அறிவைச் சிறைப் படுத்துதலைக் கொண்டிருக்கும் வினைகள். மனத்தை ஒரு நெறிப்படுத்தி உபதேசப் பொருளில் வைத்து முதல்வனைச்

Koviloor Digital Library

1249. நங்கை பாகம்வைத் தந்நறுஞ் சோதியைப்
பங்க மின்றிப் பணிந்தெழு மின்களோ
கங்கைச் செஞ்சடை யான்கடம் பந்துறை
அங்க மோதி யரனுறை கின்றதே. 6

1250. அரிய நான்மறை யாறங்க மாயைந்து
புரியன் தேவர்க ளேத்தநஞ் சுண்டவன்
கரிய கண்டத்தி னான்கடம் பந்துறை
உரிய வாறு நினைமட நெஞ்சமே. 7

சிந்தித்துணர்வார்க்கு வினைக்கட்டு நீங்கி வியாபக உணர்வு வெளிப் படும் என்றபடி.

6. பொ-ரை: கங்கையைச் செஞ்சடையில் வைத்த பெருமானும் ஆறங்கங்களை ஓதியோரும் ஆகிய இறைவர் உறைகின்றது கடம்பந் துறையாதலால் நங்கையை ஒருபாகம் வைத்த அந்த ஒளியுருவை அவ்விடத்துக் கேடின்றிப் பணிந்தெழுவீர்களாக.

கு-ரை: நங்கை - பார்வதி. நறுஞ்சோதி - நல்லஒளி வடிவினன். பங்கம் - இழிவு. அங்கம் ஓதி - வேதாங்கங்களாகிய சிக்ஷை நிருத்தம் முதலான ஆறு அங்கங்களையும் உலகிற்கு அளித்தவன். உமையொருபாகனை அவன் உறையும் கடம்பந் துறையில் பணிந்தெழுக என்றபடி.

7. பொ-ரை: அறியாமை உடைய நெஞ்சமே! அரிய நான் மறைகளாய் உள்ளவனும், அன்னமயகோசம் முதலிய ஐங்கோசங் களாகப் பேசப்பட்டவனும், தேவர்கள் வேண்ட நஞ்சுண்டவனும், அதனாற்கறுத்த கண்டத்தினானுமாகிய பெருமான் உறைகின்ற கடம்பந்துறையை விதிமுறைப்படி நினைப்பாயாக.

கு-ரை: அரிய - உணர்தற்கருமையான. நான்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், ஆறங்கம் - சிக்ஷை, நிருத்தம், கல்பம், வியாகரணம், சந்தோவிசிதம், சோதிடம். ஐந்து புரியன் - அன்னம், பிராணன், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் என்னும் ஐங்கோசங்களாக எண்ணப்படுபவன். இவை உயிர்க்கு இடமாகலின் புரி எனப்பட்டன. மட நெஞ்சமே! - இந்நாள்வரை அறியாதிருந்த மனமே! கடம்பந் துறையை உரியவாறு நினை என்க.

Koviloor Digital Library

1251. பூமென் கோதை யுமையொரு பாகனை
ஓமஞ் செய்தும் உணர்மின்க ளுள்ளத்தால்
காமற் காய்ந்த பிரான்கடம் பந்துறை
நாம மேத்தநம் தீவினை நாசமே. 8

1252. பார ணங்கி வணங்கிப் பணிசெய
நார ணன்பிர மன்னறி யாததோர்
கார ணன்கடம் பந்துறை மேவிய
ஆர ணங்கொரு பாலுடை மைந்தனே. 9

8. பொ-ரை: பூவணிந்த மென்கோதை உடையவளாகிய உமையை ஒருபாகத்தில் உடையவனை வேள்விகள் செய்தும், உள்ளத்தால் உணர்வீர்களாக! மன்மதனைச் சினந்த பெருமான் உறையும் கடம்பந்துறையில் அத்திருநாமம் ஏத்த நம் தீவினைகள் நாசமாம்.

கு-ரை: பூமென்கோதை - பூக்களை அணிந்த மெல்லிய கூந்தலை உடையாளாகிய.

ஓமம் செய்தும் - பூவும் நீரும் கொண்டு பூசித்தலோடு வேள்விசெய்தும். காமன் - மன்மதனை. நாமம் - திருப்பெயர்.

9. பொ-ரை: திருமாலும் பிரமனும் உலகில் விரும்பி வணங்கிப் பணிசெய்ய அறியாது தேடி இளைத்தற்குக் காரணனாக இருந்தவன் கடம்பந்துறை மேவியவனும், ஆரணங்கை ஒருபால் உடையவனுமாகிய புலன்களைந்தும் வென்ற பெரு வீரனாகிய இறைவனே.

கு-ரை: பார் - உலகம். அணங்கி - விரும்பி, (அணங்குதல் - விரும்புதல்) வணங்கி - வழிபட்டு. காரணன் - எல்லாவற்றிற்கும் முதற்காரணனாயிருப்பவன். ஆரணங்கு - அரிய தெய்வமாகிய உமையம்மை. மைந்தன் - வலியன்.

நாரணனும் பிரமனும் நிலமிசை விரும்பி வணங்கிப் பணி செய்திருப்பின் முதல்வனைக் கண்டிருப்பர்; அஃது அறியாது அவர் தேடி எய்த்தனர் எனக்கொள்க.

Koviloor Digital Library

1253. நூலால் நன்றா நினைமின்கள் நோய்கெடப்
பாலா னைந்துட னாடும் பரமனார்
காலா லூன்றுகந் தான்கடம் பந்துறை
மேலா னாஞ்செய்த வல்வினை வீடுமே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: பாலோடு கூடிய ஆனைந்தும் ஆடும் பரமனும், அரக்கனைக் காலால் ஊன்றி உகந்த பெருமானும் ஆகிய இறைவனைக் கடம்பந்துறையிற் சென்று வழிபட்டால், நாம் செய்த மேலைவல் வினைகள் கெடும். ஆதலால், துன்பங்கெடும் படியாக நூல் அறிவால் நன்றாக நினைத்து வழிபடுவீர்களாக. (நூல் அறிவு - சிவாகம உணர்வு.)

கு-ரை: நூலால் - சைவாகம விதிப்படி, நன்றா - குற்றமின்றி. நோய் கெட நினைமின்கள் என்க. நோய் - பிறவித்துன்பம். பாலான் ஐந்து - பால் முதலிய ஆனைந்து என்க. ஆனைந்து - பஞ்சகவ்வியம். ஆடும் - அபிஷேகம் கொள்ளும். காலால் ஊன்றுகந்தான் - அரக்கனைக் காலால் ஊன்றுதலை உகந்தவன். மேலால் நாஞ்செய்த வல்வினை - முற்பிறவியில் நாம் செய்த வலிய வினை.

உபதேச காண்டம்

முப்ப ணைத்திற மூவரிற் காட்டியோர் முதலாக்
கப்ப னைத்துமா ருயிரெனக் கவைத்தரு வானோற்
கொப்ப னைத்திரு நாவினுக் கரசெனு மொருபேர்
அப்ப னைத்தொழு தகற்றுது மும்மலத் தவலம்.

திருவிளையாடற் புராணம்

அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலஞ் செழுத்தாலஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.

- பரஞ்சோதி மாமுனிவர்

Koviloor Digital Library

19. திருக்கடம்பூர்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தரொடு சீகாழியில் வதிந்து அவரோடு திருக்கோலக்கா தொழுது விடைபெற்றபின், திருநாவுக்கரசர் பொன்னி நாட்டில் பல தலங்களைக் கண்டு தொழுது பாடினார். அவற்றுள் திருக்கடம்பூர்த் திருக்கரக்கோயில் பணிந்து பாடியது இது. (தி.12 திருநா.பு. 190).

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 132 பதிக எண்: 19

திருச்சிற்றம்பலம்

1254. **தளருங் கோளர வத்தொடு தண்மதி**
வளருங் கோல வளர்சடை யார்க்கிடம்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறாக்
களருங் கார்க்கடம் பூர்க்கரக் கோயிலே. 1

1. பொ-ரை: தளருகின்ற கொள்ளுதல் தப்பாத பாம்பினோடு, குளிர்ந்த பிறைமதி வளரும் அழகு வளர்கின்ற சடையாராகிய சிவபெருமானுக்கு இடம், பேரிசை கிளர்கின்ற கின்னரங்களின் பாட்டு அறாத, கரிய கடம்பு நிறைந்த ஊரில் திருக்கரக் கோயிலே.

கு-ரை: தளரும் - வளையும். கோள் அரவம் - விழுங்குதலை உடைய பாம்பு. தண்மதி - குளிர்ந்த பிறைமதி. வளரும் - தங்கும். கோலம் - அழகிய. வளர்சடையார்க்கு - வளர்கின்ற சடையை உடையவர்க்கு. கிளரும் - விளங்கும். பேரிசை - மிக்க இசையினை உடையதாகிய. கின்னரம் - ஒருவாச்சியம்.

அறா - நீங்காத. களரும் - கறஉப்பு நிறமுடையதாய. கார் - கார்காலத்தே மலரும். கடம்பூர் - கடம்ப மரங்கள் செறிந்த ஊர். கரக்கோயில் - ஒரு வகை அமைப்பினை உடைய கோயில்; இந்திரன் தன் கரத்தால் அகழ்ந்து மூர்த்தியை எடுத்துப் பொன்னுலகத்து வைக்க முயன்றமையைக் குறிக்கும் என்பாரும் உளர்.

Koviloor Digital Library

1255. வெலவ லான்புல னைந்தொடு வேதமும்
சொலவ லான்சுழ லுந்தடு மாற்றமும்
அலவ லான்மனை யார்ந்தமென் தோளியைக்
கலவ லான்கடம் பூர்க்கரக் கோயிலே. 2

1256. பொய்தொ ழாது புலியுரி யோன்பணி
செய்தெ ழாவெழு வார்பணி செய்தெழா
வைதெ ழாதெழு வாரவ ரெள்கநீர்
கைதொ ழாவெழு மின்கரக் கோயிலே. 3

2. பொ-ரை: கடம்பூர்த் திருக்கரக் கோயிலின்கண் வீற்றிருக்கும் இறைவன் புலன் ஐந்தினை வெல்ல வல்லமை உடையவன்; வேதமும் சொல்லவல்லவன்; சுழல்கின்ற தடுமாற்றமும் நீக்க வல்லவன்: மனையார்ந்த மங்கையாகிய மென்றோளுடைய உமாதேவியாரைக் கலத்தல் வல்லவன்

கு-ரை: பலன் ஐந்தொடு - ஐம்புலன்களோடு ஏனைய பகை வர்க்கங்களையும். வெலவலான் - வெல்லவல்லவன். வேதமும் - எண்ணும் எழுத்தும் உலகிற்குச் சொல்லியதோடன்றி வேதங் களையும். சொலவலான் - சொல்லவல்லவன். சுழலும் தடுமாற்றமும்- சுழற்சியாகிய அறியாமை மயக்கமும் ஐயுறவும். அலவலான் - இயல்பாகவே நீங்கியவன்; (நீக்கவல்லவன்). மனையார்ந்த - தனது வீட்டின்கண்ணே தங்கியுள்ள. மென்தோளியை - மெல்லிய தோளை உடையபார்வதியை. கலவலான் - கலத்தல் வல்லவன்.

3. பொ-ரை: உலகப் பொருள்களில் பற்றுச் செய்யாது புலியின் தோலை உடுத்தோனாகிய சிவபிரான் பணியைச் செய்து, அவ்வாறு எழுவார் பணியினையும் உடன்செய்து கரக்கோயிலைக் கைதொழுது வணங்கி உயர்வீராக! வைதொழாது எழுவார் எள்ளினால் எள்ளட்டும்.

கு-ரை: பொய்தொழாது - பொய்யான பொருள்களுக்கு அடிமைப்படாது; உலகப்பற்றுவிட்டு. புலிஉரியோன் - புலித்தோல் உடுத்த சிவபிரான். வைது எழாது எழுவார் என்க, நீர், சிவபிரான் பணியைச் செய்யாநின்று எழுந்து, அங்ஙனம் எழுவாராகிய நும்போன்ற அன்பர் பணியினையும் செய்யாநின்று எழுந்து, திருக் கரக்கோயிலைக் கைதொழுது மேல் ஓங்குமின் எனமுடிக்க. பணி செய்தெழா - துயில் உணரும்போது, சிவன் பணி அன்பர் பணி

Koviloor Digital Library

1257. துண்ணெ னாமனத் தால்தொழு நெஞ்சமே
பண்ணி னால்முனம் பாட லதுசெய்தே
எண்ணி லாரெயில் மூன்று மெரித்தமுக்
கண்ணி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. 4

1258. சுனையுள் நீல மலரன கண்டத்தன்
புனையும் பொன்னிறக் கொன்றை புரிசடைக்
கனையும் பைங்கழ லான்கரக் கோயிலை
நினையு முள்ளத் தவர்வினை நீங்குமே. 5

1259. குணங்கள் சொல்லியுங் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவ ரன்புடை யாரெலாம்

இரண்டையும் சிந்தித்தபடியே உணர்ந்து என்றபடி. வைது எழாது எழுவார் - இறைவனை இகழ்ந்து உணர்வின்றியே எழும் அறிவிலிகள். அவர் நும்மை இகழ்தல் இயல்பு என்றபடி.

4. பேரா-உரை: நல்ல எண்ணமில்லாதாரது முப்புரம் எரித்த முக்கண்ணினானது கடம்பூர்க் கரக்கோயிலை, பண்ணினால் திருமுன்பு பாடல் பரவி அச்சமின்றி நெஞ்சமே தொழுவாயாக!

கு-உரை: துண்ணெனாமனத்தால் - நடுக்கம் இல்லாத நினைவோடு, அன்பினால் என்றபடி. பண்ணினால் - இசையோடு. முன்னம் - அவனது திருமுன்னே. பாடலதுசெய்து - பாடி. எண்ணிலார் - நல்ல எண்ணமில்லாத திரிபுரத்தசுரர்கள். திரிபுரம் எரித்தான் ஆயினும் உய்யவல்லார் மூவரைக் காத்தவன் ஆகலின், அன்பினால் பாடித் தொழுக என்றபடி.

5. பேரா-உரை: சுனையுள் பூத்த நீலமலர் போன்ற கண்டத்தனும், புனையும் பொன்னிறக் கொன்றையுடைய புரிசடையும் ஒலிக்கின்ற கழலும் உடையவனுமாகிய கரக்கோயிற் பெருமானை நினையும் உள்ளத்தவர் வினைகள் நீங்கும்.

கு-உரை: சுனை - மலையிடத்துத் தானே தோன்றிய நீர்நிலை. நீல மலர் - குவளைமலர். அன - ஒத்த. புனையும் - அணியும். கனையும் - ஒலிக்கும். கொன்றை, புரிசடை, கழல் இவற்றை உடையான் என்க.

6. பேரா-உரை: அன்புடையாரெலாம் குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும் வணங்கி வாழ்த்துவதும், கணங்கள் வணங்கி

Koviloor Digital Library

வணங்கி வான்மலர் கொண்டடி வைகலும்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே. 6

1260. பண்ணி னார்மறை பல்பல பூசனை
மண்ணி னார்செய்வ தன்றியும் வைகலும்
விண்ணி னார்கள் வியக்கப் படுவன
கண்ணி னார்கடம் பூர்க்கரக் கோயிலே. 7

வான்மலர் கொண்டு வைகலும் அடி போற்றிசைப்பதும் கரக்கோயில் தலத்திலாகும்.

கு-ரை: கணங்கள் தூயமலர்கள் கொண்டு முதல்வன்றன் அடிவணங்கி என்றும் போற்றிசைக்கும் தலமாகிய திருக்கரக் கோயிலின்கண் அன்புடையார் எல்லாம் மெய்யன்பர்களின் உயரிய குணங்களைப் பாராட்டிப் பிறர்க்கு எடுத்துரைத்தும் தம் குற்றங்களை எண்ணிப் பேசியும் முதல்வனை வணங்கி அவன்றன் பொருள்சேர் புகழ்சொல்லி வாழ்த்துவர் என்க.

கணங்கள் - பூதகணங்கள் அல்லது, பதினெண் கணங்கள்; விண்ணவரும் மண்மேல் வந்து வணங்குவர் என்பதை அடுத்த பாட்டினும் காண்க.

7. பொ-ரை: திருக்கடம்பூர்க் கரக்கோயில் பண்ணினைப் பொருந்திய மறையோதிப் பல்பூசனைகளை மண்ணினுள்ளார் செய்வதன்றியும் நாள்தோறும் விண்ணினுள்ளாரும் வியக்கப்படும் பூசனைகள் செய்யக்கருதினர்.

கு-ரை: பண்ணினார்மறை - பண்ணோடு பொருந்திய மறையை ஓதி. பல்பல பூசனை - வேதநெறி. சைவநெறி. பத்திநெறி என்னும் இவைபற்றிச் செய்யப்படும் பலவேறுவகையான பூசைகள். மண்ணினார் - நிலவுலகில் சிவனடியார்கள். வைகலும் - நாடோறும். விண்ணினார்கள் - தேவர்கள். வியக்கப்படுவன கண்ணினார் - மண்ணுலகில் உள்ளார் வியக்கத்தக்க செயல்களைச் செய்யக் கருதிச் செய்வார்கள். எங்கெனில், கடம்பூர்க் கரக்கோயிலின்கண் என்க. விண்ணினார் செய் பூசைகள் குற்றம் குறையின்றி நிறைவுடையன ஆகலின் வியக்கப்படுவன ஆயின, கண்ணினார் - கருதிச்செய்வர் ஆயினர். கண்ணுதல் - கருதுதல்.

Koviloor Digital Library

1261. அங்கை ஆரழ லேந்திநின் றாடலன்
மங்கை பாட மகிழ்ந்துடன் வார்சடைக்
கங்கை யானுறை யுங்கரக் கோயிலைத்
தங்கை யால்தொழு வார்வினை சாயுமே. 8

1262. நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. 9

1263. பணங்கொள் பாற்கடல் பாம்பணை யானொடும்
மணங்க மழ்மலர்த் தாமரை யானவன்

8. பொ-ரை: உமையம்மை உடனிருந்து மகிழ்ந்து பாட அங்கையில் அழல் ஏந்தி நின்று ஆடல் புரிபவன், ஆய கங்கை யுறையும் சடையான் வீற்றிருக்கும் கரக்கோயிலைத் தம்கையால் தொழுவாருடைய வினைகள் வலியற்றுக்கெடும்.

கு-ரை: அங்கை - அகங்கையிலே. ஆர் அழல். தாங்குதற்கு அரிய நெருப்பை. ஆடலன் - ஆடுதலைச் செய்பவன். மங்கை - பார்வதிதேவியார். மங்கை உடன் (இருந்து) மகிழ்ந்து பாட ஏந்தி ஆடலன் எனக்கூட்டுக. சாயும் - வலியற்றுக் கெடும்.

9. பொ-ரை: கடம்பமாலை சூடிய நம் முருகனைப் பெற்ற உமாதேவியினைப் பங்கில் உடையவனாகிய தென் கடம்பைத் திருக்கரக்கோயிலான் தன் கடன் அடியேன் போன்றாரைத் தாங்குதல்; என் போன்றார் கடன் பணிசெய்து தற்போதம் இன்றியே இருத்தல்.

கு-ரை: நங்கடம்பன் - நம்மால் விரும்பிப் போற்றப்படும். கடம்பமலர் சூடும் முருகன். பெற்றவள் - பார்வதி. பங்கினன் - பாகமாக உடையவன். தென் - அழகிய. தன்கடன் - அப்பெருமான் தன் கடமை. அடியேனையும் - அடியவனாகிய என்னையும். உம்மை இழிபுணர்த்திற்று. தாங்குதல் - காப்பாற்றுதல். என்கடன் - என்னுடைய கடமை. கிடப்பது - அவன் அருள்வழி நின்று என்செயல் என்பது சிறிதும் இன்றி இருத்தல்.

10. பொ-ரை: பாற்கடலில் கிடக்கும் படம்கொண்ட பாம்பு அணையானாகிய திருமாலும் மணம் கமழ் மலர்த்தாமரையானாகிய

Koviloor Digital Library

பிணங்கும் பேரழ லெம்பெரு மாற்கிடம்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே. 10

1264. வரைக்கண் நாலஞ்சு தோளுடை யான்தலை
அரைக்க வூன்றி யருள்செய்த ஈசனார்
திரைக்குந் தண்புனல் சூழ்கரக் கோயிலை
உரைக்கு முள்ளத் தவர்வினை யோயுமே. 11

திருச்சிற்றம்பலம்

பிரமனும் தம்மில் மாறுபட்ட போது பேரழலாய் நிமிர்ந்த எம் பெருமானுக்கு இடம், கணங்கள் போற்றிசைக்கும் கரக்கோயிலாகும்.

கு-ரை: பணங்கொள்பாம்பு எனக் கூட்டுக. பணம் கொள் - படத்தைக்கொண்ட. பாற்கடல் - திருப்பாற்கடலில். அணையான் - படுக்கையாகக்கொண்டு அறிதுயில் செய்பவன். மலர்த்தாமரையான் - வெண்தாமரை மலரில் எழுந்தருளியிருப்பவனாகிய பிரமன். பிணங்கும் - 'யானே பிரமம்' எனச் சொல்லித் தம்முள் மாறுபடுதற்குக் காரணமாக. பேரழல் - பெரிய சோதிவடிவாய்த் தோன்றியவனாகிய; இச் சோதிப்பிழம்பே மஹாலிங்கம் எனப்படும்.

11. பொ-ரை: திருக்கயிலாயத் திருமலைக்கண் இருபது தோளுடைய இராவணன் தலைகள் அரைபடும்படி ஊன்றிப் பின்னர் அருள்புரிந்த ஈசனார் வீற்றிருக்கும், அலைவீசும் குளிர் புனல் சூழ் கரக்கோயிலைக் கூறும் உள்ளத்தவர் வினைகள் ஓயும்.

கு-ரை: வரைக்கண் - திருக்கயிலைத் திருமலையின்கண். நாலைந்து தோளுடையான் - இருபது தோள்களை உடைய இராவணன். அரைக்க - நெரிபட. திரைக்கும் - அலைவீசும். ஓயும் - பலன்தாராது மெலியும்.

Koviloor Digital Library

20. திருக்கடம்பூர்

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 133 பதிக எண்: 20

திருச்சிற்றம்பலம்

1265. ஒருவ ராயிரு மூவரு மாயவன்
குருவ தாய குழக னுறைவிடம்
பருவ ரால்குதி கொள்ளும் பழனஞ்சூழ்
கருவ தாங்கடம் பூர்க்கரக் கோயிலே. 1

1266. வன்னி மத்தம் வளரிளந் திங்களோர்
கன்னி யாளைக் கதிர்முடி வைத்தவன்
பொன்னின் மல்கு புணர்முலை யாளொடும்
மன்னி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. 2

1. பொ-ரை: ஒருவராய், இருவராய், மூவராய் நிற்பவனும் குருவடிவுமாகிய குழகன் உறைவிடம், பருத்த வரால் மீன்கள் குதித்தலைக் கொள்ளும் பழனங்கள் சூழ்ந்த இடமாகிய கடம்பூர்க் கரக்கோயிலே.

கு-ரை: ஒருவராய் - சத்தியைத் தன்னுருவத்தினுள் அடக்கிச் சிவன் என ஒருவராய். இரு மூவருமாய் என்றதை இருவருமாய் மூவருமாய் எனக்கொள்க. இருவருமாய் - சத்தி சிவம் என்ற பிரிப்பில் இருவரும் ஆகி. மூவருமாயவன் - படைத்தல் காத்தல் அழித்தல் என்ற முத்தொழில்புரிய அரி அயன் அரன் என்ற மும்மூர்த்திகளாயவன். 'ஒருருவாயினை மானாங்காரத்து ஈரியல்பாய் ஒரு விண்முதல் பூதலம் படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகளாயினை' (தி.1. ப.128) என்பது முதலிய திருமுறை மேற்கோள்களால் உணர்க. குருவதாய குழகன் - தென்முகப் பரமனாய் குருநாதனாக வீற்றிருந்து மௌனோபதேசம் செய்த இளையோன். பருவரால் - பெரிய வரால் மீன்கள். பழனம் - மருதநிலம்; வயலும் வயல் சார்ந்த இடங்களும். கருவதாம் - எல்லாப் பொருள்களுக்கும் மூலமாகிய.

2. பொ-ரை: வன்னியும், ஊமத்தமலரும், வளர் இளந் திங்களும், கங்கையும் ஆகியவற்றைக் கதிர்விரிக்கும் முடியில் வைத்தவன், பொன்னின் நிறைந்து புணர்முலையாளாகிய உமாதேவி

Koviloor Digital Library

1267. இல்லக் கோலமு மிந்த இளமையும்
அல்லற் கோல மறுத்துய வல்லிரே
ஒல்லைச் சென்றடை யுங்கடம் பூர்நகர்ச்
செல்வக் கோயில் திருக்கரக் கோயிலே. 3

யோடும் கடம்பூர்க் கரக்கோயிலில் நிலைபெற்றவன் ஆவன். (எல்லாம் வல்ல முதல்வன் உயிர்களுக்குப் போகம் உதவுதற்குப் போகியாய் இருந்தருள்கின்றான் என்பது கருத்து.)

கு-ரை: மத்தம் - ஊமத்தம்பூ. வளர் இளந்திங்கள் - வளர்கின்ற இளைய திங்கள். ஓர்கன்னியாள் - ஒப்பற்ற கன்னியாகிய கங்கை. கதிர்முடி - ஒளிவிடும் முடி. பொன்னின் - பொன்போல. மல்கு - ஒளி செறிந்த. புணர்முலை - செறிந்த தனங்கள். மன்னினான் - நிலைத்து வீற்றிருந்தான். அன்பர் அணியும் எளிய பொருள்களையும் ஏற்று. சார்ந்தாரைக் காத்து, செருக்கின் மிக்கார் வலிபோக்கி உயிர்களுக்குப் போகத்தை விளைவிப்பன் என்பது கருத்து.

3. பொ-ரை: இல்லத்திற்கொள்ளும் கோலங்களும், இந்த இளமையுமாகிய அல்லற் கோலங்களை அறுத்துஉய்ய வல்லமை உடையீராவீர்; அதற்குக் கடம்பூர்நகர்ச் செல்வக் கோயிலாகிய கரக்கோயிலை விரைந்து சென்று அடைந்து தொழுவீர்களாக.

கு-ரை: இல்லக்கோலம் - மனைவாழ்க்கையாகிய வேடம். மனைவி மக்கள் தாய்தந்தை சுற்றம் என்று கொண்டொழுகும் பந்த பாசமாம் தோற்றம். இந்த இளமையும் - இப்பொழுது நமக்கு வாய்த்துள்ள இளமைத் தோற்றமும். அல்லற்கோலம் - துன்பத்தைத் தரும் தோற்றரவுகளாம். அறுத்து உய வல்லிரே - இவற்றைத் துண்டித்துக்கொண்டு உய்திபெற வல்லமையுடையீர் ஆவீர், பின்னை யது செயின் என்றபடி. இளமை இல்லக்கோலம் பூணத் துணையாய் நிற்றலின் இளமைக் கோலத்தையும் வெறுத்தார். ஒல்லை - விரைந்து. செல்வக்கோயில் - செல்வச் செழிப்புள்ள திருக்கோயில். நமக்கு அழியாச் செல்வமாகிய திருக்கோயில் எனினுமாம்.

> ''பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
> பற்றுக பற்றுவிடற்கு'' *-குறள் 330*

என்னும் *பொதுமறை*யின் பிரயோகமே இது.

Koviloor Digital Library

1268. வேறுசிந்தை யிலாதவர் தீவினை
கூறு செய்த குழக னுறைவிடம்
ஏறு செல்வத் திமையவர் தாந்தொழும்
ஆறு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 4

1269. திங்கள் தங்கிய செஞ்சடை மேலுமோர்
மங்கை தங்கும் மணாள னிருப்பிடம்
பொங்கு சேர்மணற் புன்னையும் ஞாழலும்
தெங்கு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 5

4. **பொ-ரை:** தம்மைப்பற்றியன்றி வேறு சிந்தனை இல்லாதவர்களது தீவினைகளைக் கூறு செய்யும் குழகன் உறைவிடம், செல்வம் ஏறுகின்ற தேவர்கள் தொழுகின்ற ஆறு சேர்ந்த கடம்பூர்க் கரக்கோயிலாகும்.

கு-ரை: வேறு சிந்தையில்லாதவர் - மனத்தைப் பலவேறு வழிகளில் செல்லவிடாதவர்; அதாவது சிவனையே சிந்திப்பார். கூறுசெய்த - துண்டித்த. ''தம்மையே சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்''. ஏறுசெல்வம் - பெருகும் செல்வம். ஆறுசேர் - காவிரியாற்றின் வளம்சேர்ந்துள்ள; அன்பர்கள் நன்னெறியாகிய சிவஞானத்தை அடைதற்கு இடமாகிய எனினும் ஆம்.

5. **பொ-ரை:** இடப்பாகத்தே பார்வதியைக் கொண்டதன்றி, திங்கள் பொருந்திய செஞ்சடை மேலும் ஒரு மங்கை தங்கும் மணாளன் இருப்பிடம், மணல் நிறைந்த பகுதியில் புன்னையும், புலிநகக் கொன்றையும், தென்னையும் சேர்ந்த கடம்பூர்க் கரக்கோயிலாகும்.

கு-ரை: மேலும் என்பதில் உள்ள இறந்தது தழீஇய எச்ச உம்மை இடப்பாகத்தில் ஒருத்தியைக் கொண்டிருப்பதோடன்றி என்பதைக் காட்டிற்று. ஓர் மங்கை - ஒரு பெண்; கங்கை. மணாளன்- என்றும் மணக்கோலங்கொண்டிருப்பவன். பொங்குசேர்மணல் - மிகுந்த மணற்பரப்பு. ஞாழல் - புலிநகக் கொன்றை. தெங்கு - தென்னை.

உம்மை விரித்துரைக்க. உமையொரு பாகனாய் உலகத்தைப் படைப்பதோடு அதனை அழியாமைக் காப்பவனும் சிவபிரான் என்றபடி.

Koviloor Digital Library

1270. மல்லை ஞாலத்து வாழு முயிர்க்கெலாம்
எல்லை யான பிரானா ரிருப்பிடம்
கொல்லை முல்லை கொழுந்தகை மல்லிகை
நல்ல சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 6

1271. தளரும் வாளர வத்தொடு தண்மதி
வளரும் பொற்சடை யாற்கிட மாவது
கிளரும் பேரொலி கின்னரம் பாட்டறாக்
களரி யார்கடம் பூர்க்கரக் கோயிலே. 7

1272. உற்றா ராயுற வாகி யுயிர்க்கெலாம்
பெற்றா ராய பிரானா ருறைவிடம்

6. பொ-ரை: வளம் பொருந்திய உலகத்து வாழும் உயிர்கட்கெல்லாம் எல்லையாகிய தலைவர் இருப்பிடம், முல்லை, கொழுத்த மல்லிகை ஆகிய நல்ல மலர்கள் சேர்ந்த கடம்பூர்க் கரக்கோயிலாகும்.

கு-ரை: மல்லைஞாலத்து - வளம்பொருந்திய இவ்வுலகத்து. எல்லையான பிரானார் - ஆதி அந்தம் என்னும் இரு கோடிகளாகவும், சென்றடையும் பரமார்த்தமாகவும் உள்ளவன். கொல்லை - காடு. கொழுந்தகை - நிலவளத்தால் கொழுத்த தன்மையை உடைய. நல்லசேர் - நல்லனவாய எல்லாம் சேர்ந்த.

7. பொ-ரை: நெகிழும் இயல்புடைய ஒளிபொருந்திய அரவத்தொடு, தண்மதி வளர்கின்ற பொன்னிறம் உடைய சடையார்க்கு இடமாவது, கிளர்கின்ற பேரொலி உடைய கின்னரம் பாட்டறாத களர் நிலத்தைச் சேர்ந்த கடம்பூர்க் கரக்கோயிலாகும்.

கு-ரை: தளரும் - நெகிழும். வாள் - ஒளி. வளரும் - கண்வளரும் அல்லது வளர்ச்சிபெறும். கிளரும் - விளங்கும். பேரொலி - மிக்க ஒலியையுடைய. கின்னரம் - ஒருவாச்சியம். பாட்டறா - பாடுதலை ஒழியாத. களர் - முல்லைநிலம். முதல்வனை அணைந்தோர் தம்பகைமை தீர்ந்து வாழ்வர் என்பது குறிப்பு. இப்பாடல் பிறிதொரு திருப்பாடலை (தி.5 ப.19. பா.1) ஒத்திருப்பதை ஓர்க.

8. பொ-ரை: உற்றாராய், உறவாகி உயிர்க்கெலாம் ஈன்றாராகிய தலைவர் அறிவிற் குறைபாடுடைய முப்புராதிகளின் எயில்களை எய்த

Koviloor Digital Library

முற்றார் மும்மதி லெய்த முதல்வனார்
கற்றார் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 8

1273. வெள்ளை நீறணி மேனிய வர்க்கெலாம்
உள்ள மாய பிரானா ருறைவிடம்
பிள்ளை வெண்பிறை சூடிய சென்னியான்
கள்வன் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 9

1274. பரப்பு நீரிலங் கைக்கிறை வன்அவன்
உரத்தி னாலடுக் கல்எடுக் கல்லுற

முதல்வனார் உறைவிடம் கற்றார்கள், வாழும் கடம்பூர்க் கரக் கோயிலாகும்.

கு-ரை: உற்றாராய் - உற்றுழி உதவுவோராய்; நமக்குற்றதைத் தமக்குற்றதுபோலக் கருதும் நெருங்கிய உறவுடையவர் என்றபடி. உறவினர் - தூரக்கேண்மையை உடையவர். உயிர்க்கெலாம் - எல்லா உயிர்கட்கும். பெற்றாராய - தாயும் தந்தையுமாகிய. முற்றார் - அறிவு நிரம்பாதவர். கற்றார் - மெய்ந்நூல்களைக் கற்றுணர்ந்தவர்கள்.

9. பொ-ரை: திருநீறணிந்த மேனியவர்க்கெல்லாம் உள்ளத்தில் விளங்கும் தலைவனும் வெண்பிறை சூடிய சென்னியானும் ஆகிய பெருமான் உறைவிடம் கடம்பூரில் உள்ள கள்வன்சேர்ந்த கரக் கோயிலாகும்.

கு-ரை: வெள்ளைநீறு - பால்போன்ற வெள்ளிய திருநீறு. மேனியவர் - உடம்பை உடைய அடியார். உள்ளமாயபிரான் - மனத் தகத்து எழுந்தருளியிருக்கும் பெருமான். அடியார் எப்பொழுதும் அப்பெருமானையே எண்ணிக்கொண்டிருத்தலில் உள்ளமாயபிரான் என்றார். பிள்ளை வெண்பிறை - பிள்ளை மதியாகிய பிறை. கள்வன் - திருமால்; உள்ளங்கவர்கள்வன் எனக்கொள்ளின் சென்னியனும், கள்வனுமாகிய பிரானார் உறைவிடம் கடம்பூர்சேர் கரக்கோயில் எனமுடிக்க.

10. பொ-ரை: நீர்ப்பரப்புச் சூழ்ந்த இலங்கைக்குத் தலைவனாகிய இராவணன் தன் ஆற்றலினால் திருக்கயிலையை எடுக்கத் தொடங்க இரக்கமின்றிச் சிறிது விரலாற்றலையினை அரக்கினவன் இடம் கடம்பூர்க்கரக்கோயில்.

Koviloor Digital Library

இரக்க மின்றி யிறைவிர லாற்றலை
அரக்கி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: பரப்புநீர் - பரவியநீர்; கடல். உரம் - வலிமை. அடுக்கல் - மலை. எடுக்கல்லுற - தூக்க. இறைவிரல் - காற்பெரு விரல். தலை - இராவணன் தலையை. அரக்கினான் - அழுத்தி நெரித்தான். அரக்கினான் இடம் என ஒரு சொல் வருவிக்க.

சேது புராணம்

தேவரையு முனிவரையுந் துளவ மார்பிற்
றிருவரையுங் குரவரையுஞ் செல்வ மிக்கோர்
யாவரையு மேவல்கொளு நெற்றி நாட்டத்
திறைவரைமுன் னிகழ்ந்திருந்த வெண்ணந் தோன்றச்
சேவரையு நெடுங்கொடியின் றகைமை யெல்லாத்
திசைவரையுஞ் செலத்தமிழின் செய்யுள் பாடு
நாவரையர் புகழ்மொழிகள் வரைந்து கூறி
நயந்தவர்செய் திருத்தொண்டு வியந்து வாழ்வாம்.

- நிரம்ப அழகிய தேசிகர்.

திருவாரூர்ப் புராணம்

ஆலநிழ லமர்ந்தபிரானருளி னாலே
யன்றொருகற் புணையாக வாழி நீந்தி
ஞாலமுழு துய்ந்தருள நவையி லாத
நறுந்தமிழின் பலமினிது நாளு நல்கிச்
சாலமிகு பாவமுது வேனில் வெம்மைத்
தழலாற வாகமநூற் றருமஞ் சான்ற
சீலநிறை சைவநெறி நிழல்ப ரப்புந்
திருநாவுக் கரசினடி சிந்தை செய்வாம்.

Koviloor Digital Library

21. திருஇன்னம்பர்

பதிக வரலாறு:

பழையாறை வடதளி வணங்கிப் பொன்னியின் இரு கரையிலும் உள்ள தலங்களில் பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத் தமிழ்மாலை. (தி.12 திருநா. புராணம் 301)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 134 **பதிக எண்: 21**

திருச்சிற்றம்பலம்

1275. **என்னி லாரு மெனக்கினி யாரில்லை**
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே. 1

1276. **மட்டுண் பார்கள் மடந்தையர் வாட்கண்ணால்**
கட்டுண் பார்கள் கருதுவ தென்கொலோ

1. பொ-ரை: என்னைவிட எனக்கு யாரும் இனியவர் இல்லை; ஆயினும் என்னைவிட இனியவன் ஒருவன் உள்ளான்; என்னுள்ளே உயிர்ப்பாகப் புறம் போந்தும் புக்கும் என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே அவன்.

கு-ரை: என்னில் - என்னைக்காட்டிலும். ஆரும் - யாரும். இனியார் - இனிமையைச் செய்வார். என்னிலும் இனியான் - எனக்கு என்னிலும் இனியான். என்னுளே - என் உடம்பிற்குள்ளே. உயிர்ப் பாய் - பிராணனாய். புறம்போந்து - வெளிவந்து. உள்புக்கு - உள்ளே சென்று மீளத்தங்கி. என்னுளே - என் உள்ளத்திற்குள்ளே. நிற்கும் - நிலைத்து எழுந்தருளியிருப்பான்; அவன் யாரெனில் இன்னம்பர் ஈசன் என்க. ஆன்மார்த்த சிவபூசையில் உள்ளக் கமலத்து வீற்றிருக்கும் இறை வினை வெளியில் மந்திர பூர்வகமாக வெளிக்கொணர்ந்து ஆவாகனம் செய்து மீண்டும் தனக்குள் ஒடுக்கும் நிலையைக் குறித்தது. உயிர்ப்பு - உச்சரிக்கப்படும் மந்திரம்.

2. பொ-ரை: கள்ளுண்பவர்களும், பெண்கள் வாட் கண்ணால் கட்டுண்பவர்களும் கருதுவது எதனை? தட்டி முட்டித் தள்ளாடி

Koviloor Digital Library

தட்டி முட்டித் தள்ளாடித் தழுக்குழி
எட்டு மூர்த்திய ரின்னம்ப ரீசனே. 2

1277. கனலுங் கண்ணியுந் தண்மதி யோடுடன்
புனலுங் கொன்றையுஞ் சூடும் புரிசடை
அனலுஞ் சூலமும் மான்மறிக் கையினர்
எனலு மென்மனத் தின்னம்ப ரீசனே. 3

1278. மழைக்கண் மாமயி லாலு மகிழ்ச்சியான்
அழைக்குந் தன்னடி யார்கள்த மன்பினைக்

விழும்போது துணையாவார் எட்டு மூர்த்தியாகிய இன்னம்பர் ஈசனல்லனோ?

கு-ரை: மட்டு - கள். வாட்கணால் கட்டுண்பார்கள் - வாள்போன்ற கண்களால் பிணிக்கப்படுவார்கள். மட்டுண்பார்களும் கட்டுண்பார்களும் தள்ளாடித் தடுமாறும்போது இன்னம்பர் ஈசனை யன்றிக் கருதுவது என் என முடிக்க. உயிர்கொண்டு போம் பொழுது ஈசனையன்றி உற்றார் இல்லை என்றபடி. தட்டிமுட்டித் தள்ளாடி என்றது - கண் பார்வையும் உடல் வலியும் இழந்து நிற்கும் முதுமை நிலையைக் குறித்தது. எட்டு மூர்த்தியர் என்பது இறைவன் எல்லாமாய் நிற்கும் நிலைகருதி வழிபடற்பாலர் என்றபடி.

3. பொ-ரை: கண்ணியும் கொன்றையும், தண்மதியோடு கங்கையும் சூடும் முறுக்குண்ட சடையர், அனல், சூலம், மான் மறி கூடிய கையை உடையவர், என்று சொன்னவுடன் அவ்இன்னம்பர் ஈசன் என்மனத்தே வெளிப்பட்டொளிரும்.

கு-ரை: கனலும் - விளங்கும். கண்ணி - தலைமாலை; கொன்றை பின் வருதலின் தும்பை முதலியன கொள்க. சூடும் - அணியும். புரிசடை - முருக்குண்ட சடை. அனல், சூலம், மான் மறி இவற்றை ஏந்திய கையினர் என்க. இன்னம்பர் ஈசன் கையினர் எனலும் என் மனத்துக்கனலும் எனப் பூட்டுவிற் பொருள் கோளாய்ப் பாடலின் முதற்சீரோடு இயைக்க.

4. பொ-ரை: மழைக்காலத்தில் கரிய மயில்கள் ஆரவாரிக்கும் மகிழ்ச்சியைப் போன்று மகிழ்ந்து அழைக்கும் தன்னடியார்களின்

Koviloor Digital Library

குழைக்குந் தன்னைக் குறிக்கொள வேண்டியே
இழைக்கு மென்மனத் தின்னம்ப ரீசனே. 4

1279. தென்ன வன்னெனை யாளுஞ் சிவனவன்
மன்ன வன்மதி யம்மறை யோதியான்
முன்ன மன்னவன் சேர்வன பூழியான்
இன்னம் இன்புற்ற வின்னம்ப ரீசனே. 5

1280. விளக்கும் வேறு படப்பிற ருள்ளத்தில்
அளக்குந் தன்னடி யார்மனத் தன்பினைக்

அன்பினைத் தன்பாற் குறிக்கொள்ள வேண்டிக் குழைக்கும் பெருமை உடையவன் என்மனத்து இழைக்கும் இன்னம்பர் ஈசனாவன்.

கு-ரை: மழைக்கண் - கார்காலத்து மழையின்கண். மா - சிறந்த. ஆலும் - ஆரவாரிக்கும். மகிழ்ச்சியான் - மகிழ்ச்சியோடு. அழைக்கும் - அழைக்கின்ற. தன் - அப்பெருமான் தன். அடியார்கள் தம் - அடியார்களுடைய. அன்பினை - அன்பை. குழைக்கும் - குழையச் செய்யும். தன்னைக் குறிக்கொளவேண்டி - தன்னையே குறிக்கோளாக அடையவேண்டி. இழைக்கும் - தன் உருவைப் பொருந்தச் செய்யும். இன்னம்பர் ஈசன் என்மனத்துத் தன்னைப் பொருத்துவான் என்க.

5. பொ-ரை: தென்னவனும், எனையாளும் சிவனும், மன்னவனும், மதித்தற்குரிய அழகிய மறைகளை ஓதியவனும், உலகத் தோற்றத்திற்கு முன்னரே நிலைத்திருந்தவனும், ஊழியிடத்துச் சேரும் திருநீற்றினை அணிந்தவனும் ஆகிய பெருமான் சூரியன் வழிபட்டு இன்புற்ற இன்னம்பரில் எழுந்தருளியுள்ள ஈசனாவான்.

கு-ரை: தென்னவன் - அழகியவன். சிவனவன் - சிவன். மன்னவன் - தலைவன். மதி - மதித்தற்குரிய. அம் - அழகிய. மறை - வேதங்கள். முன்னம் மன்னவன் - உலகத்தோற்றத்திற்கு முன் உள்ள நிலை பேறுடையோன்; வனம்சேர் பூழியான் - சுடலைப் பொடிபூசி. பூழி - விபூதி. இன்னம் இன்புற்ற - (இனன் - சூரியன்) சூரியன் வழிபட்டு இன்புற்ற. சூரியன் வழிபட்டதால் இனன் நம்பூர் என்ற பெயர் எய்தி மருவி இன்னம்பர் ஆயிற்று என்பர்.

6. பொ-ரை: அடியவரல்லாத பிறர் உள்ளத்தில் தன்னை வேறுபடத் தோற்றுபவனும், தன்னடியார் மனத்து அன்பினை

Koviloor Digital Library

குளக்கு மென்னைக் குறிக்கொள வேண்டியே
இளக்கு மென்மனத் தின்னம்ப ரீசனே. 6

1281. சடைக்க ணாள்புன லாள்அனல் கையதோர்
கடைக்க ணால்மங்கை நோக்கிம வான்மகள்
படைக்க ணால்பரு கப்படு வான்நமக்
கிடைக்க ணாய்நின்ற வின்னம்ப ரீசனே. 7

அளப்பவனும். தொடர்பு கொள்ளும் என்னைக் குறிக்கொள வேண்டி என் மனத்தினின்று உருகச் செய்பவனும் இன்னம்பர் ஈசனேயாவன்.

கு-ரை: விளக்கும் - தோன்றச் செய்யும். பிறர் உள்ளத்தில் வேறுபட விளக்கும் என்க. பிறர் - தன்னிடம் அன்பு பாராட்டாதவர். தன்னடியார் மனத்து அன்பினை அளக்கும் என்க. அளக்கும் - உள்ளவாறறியும். என்னைக் குறிக்கொளவேண்டி இளக்கும் என்க. குளக்கும் - தன்னோடு தொடர்பு கொள்ளும். குளக்கும் என்றதைக் குழக்கும் என்பதன் போலியாகக் கொண்டு என்னை வசீகரிக்கும் என்றலும் ஒன்று.

7. பொ-ரை: கங்கையாள் சடைக்கண் உள்ளாள்; அவன் கையது அனல். அக்கங்கையாகிய மங்கை ஒரு கடைக்கண்ணால் நோக்க, இமவான் மகளாம் பார்வதி தனது படையனைய கண்களால் அழகைப் பருகநிற்பவன்; நமக்கு துன்பக் காலத்துப் பற்றுக்கோடாய் நின்ற இன்னம்பர் ஈசன்.

கு-ரை: சடைக்கணாள் புனலாள் - சடையின்கண் தங்கியிருப் பவள் கங்கை. அனல் கையது என்க. கங்கையாகிய மங்கை கடைக் கண்ணால் நோக்க இமவான்மகள் படைக்கணால் பருகப் படுவான் எனக் கூட்டுக.

அகரம் தொகுத்தல் விகாரம். இமவான் மகள் மங்கை - பார்வதி. நோக்க - பார்க்க. படைக்கணால் - வேல் கணை வாள் முதலிய ஆயுதங்கள் போன்ற தன் கண்களால். பருகப்படுவான் - பார்த்து உண்ணப்படுபவன். நமக்கு இடைக் கண்ணாய் நின்ற - நமக்குத் துன்பத்துக்கண் தோன்றி நின்ற.

Koviloor Digital Library

1282. தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே. 8

1283. விரியுந் தண்ணிள வேனிலில் வெண்பிறை
புரியுங் காமனை வேவப் புருவமும்
திரியு மெல்லையில் மும்மதில் தீயெழுந்
தெரிய நோக்கிய வின்னம்ப ரீசனே. 9

1284. சனியும் வெள்ளியுந் திங்களும் ஞாயிறும்
முனிவ னாய்முடி பத்துடை யான்றனைக்

8. பொ-ரை: தூமலர்களைத் தூவித் தொழுது, துதித்து, நின்று அழுது விருப்புற்று அரற்றுகின்ற மெய்யன்பர்களையும், வாளா பொழுதுபோக்கிப் புறக்கணிப்பார்களையும் கீழ்க்கணக்கெழுதும் இறைவன் இன்னம்பரில் உறையும் ஈசனேயாவன்.

கு-ரை: தொழுது - வணங்கி. தூமலர் - தூய்மையான மலர்கள். துதித்து நின்று - போற்றியுரைத்து நின்று. காமுற்று - அன்பு கொண்டு. பொழுதுபோக்கி - இறைவனைத் தொழாது இறைவன்புகழ் பேசாது வீண்பொழுதுகடத்தி. புறக்கணிப்பார் - வெறுப்பவர். கீழ்க்கணக்கு - சிறுவரிகளாய் எழுதும் குறிப்பு.

9. பொ-ரை: வெள்ளிய பிறைமதி தோன்றும் குளிர்ந்த இள வேனிற் காலத்திலே காமத்தை விளைக்கும் மன்மதன் வெந்தழியும்படி புருவநெரித்தவன், நெறிகடந்த மும்மதில் தீயெழுந்தெரியுமாறு நோக்கிய இன்னம்பர் ஈசனே.

கு-ரை: வெண்பிறை விரியும் தண்ணிள வேனிலில் என்க. வெண் பிறை விரியும் - வெள்ளிய பிறைமதி தோன்றும். தண் - குளிர்ந்த. இள வேனிலில் - இளவேனிற்காலத்து மாலை நேரத்தே. புரியும் காமனை- காமத்தை விளைப்பவனாகிய மன்மதனை. வேவப் புருவமும் திரியும் - வெந்தழியப் புருவநெரிப்புச் செய்பவன். எல்லையில் - அழிவில்லாத; நெறிகடந்த எனினும் ஆம். நோக்கிய - பார்த்த.

10. பொ-ரை: நமக்கு இனியவனாய் நின்ற இன்னம்பர் ஈசனே! சனியும், ஞாயிறும், வெள்ளியும், திங்களுமாகிய கோள்களை

Koviloor Digital Library

கனிய வூன்றிய காரண மென்கொலோ
இனிய னாய்நின்ற வின்னம்ப ரீசனே. 10

திருச்சிற்றம்பலம்

முனிபவனாகிய பத்துத்தலையுடைய இராவணனைக் கனியுமாறு திருவிரலால் ஊன்றிய இன்னாமைக் காரணம் என்னையோ?

கு-ரை: சனி, வெள்ளி, திங்கள், ஞாயிறு இவற்றை முனிபவனாய் என்க. இராவணன் நவக்கிரகங்களை அடிமையாக்கி ஆண்டவன் என்பதைக் கருதியது. முனிபவன் - வெறுப்பவன். கனிய் ஊன்றியகாரணம் - மனம் பண்படத் திருவிரலால் ஊன்றிய காரணம். என்கொலோ - யாதோ? தேவர்களை அடிமையாக்கிக் கொடுமையே செய்த இராவணனைத் திருந்தும்படி ஊன்றிய காரணம் என்னவோ என வினவினார்.

பேரூர்ப் புராணம்

விஞ்சை கற்பன வேறிலை விடையவன் பதங்கள்
அஞ்சு மேயென வறியவெவ் வுலகுங்கற் புணையா
நெஞ்சு துட்கெனு நெடும்புனல் வேலையும் பிறவி
வஞ்ச வேலையு நீந்திய மன்னனைப் பணிவாம்.

- கச்சியப்ப முனிவர்.

திருவானைக்காப் புராணம்

கொண்ட லாடிய விழிகளுங் கோலவெண் ணீற்று
வண்ட லாடிய மேனியு மல்குமா னந்த
முண்ட தாங்கெதி ரெடுத்தன வோதுசெம் பாட்டுங்
கண்டு கேட்டரு ணாவினுக் கரசினைக் கலப்பாம்.

Koviloor Digital Library

22. திருக்குடமூக்கு

பதிக வரலாறு:

திருவலஞ்சுழியைத் தொழுதேத்தி வெண்பிறை யணிந்தார். திருக்குடமூக்கு அணைந்து இறைஞ்சிப் பாடி யருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புராணம் 215)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 135 **பதிக எண்: 22**

திருச்சிற்றம்பலம்

1285. பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே. 1

1. **பொ-ரை:** குடமூக்கிலே உள்ள பெருமான், பூவின் வண்ணத்தை உடையவன், புண்ணியமே வடிவானவன், அடியார்கள் ஆகும் வண்ணம் நண்ணி யருள்புரிந்து அடிமைச் சீட்டெழுதி ஆட்கொள்பவன், தீயின் நிறத்தை உடைய செம்மேனியில் திருநீறு பூசியவன், கோவண ஆடை உடையவன்.

கு-ரை: பூவணத்தவன் - பூவின் நிறத்தையும், தன்மையையும் ஒத்தவன். ''பூவண்ணம் பூவின் மணம் போல'' என்றபடி எங்கும் அருளொடு நிறைந்தவன் என்க. புண்ணியம் - புண்ணியமே வடி வானவன். ''புண்ணியப்பொருளாய் நின்றான்''. நண்ணி - விரும்பி. அடியார்களை அங்கு நண்ணி ஆவணத்துடையான் என்க. ஆவணத் துடையான் - ''என்தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும் அன்றே சிவனுக்கெழுதிய ஆவணம்'' (தி.10 திருமந்திரம்). ஆவணம் - அடிமைச் சாசனம். சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட வரலாற்றில் காணலாம். தீவண மெய்யில் திருநீறு பூசி என்க. தீவணமெய் - நெருப்பின் நிறம் போன்ற சிவந்த திருமேனி. தீவண்ண மெய்யில் திருநீறு பூசியதை நீறுபூத்த நெருப்போடு உவமிப்பர். ஓர் கோவணத் துடையான் - ஒற்றைக் கோவண ஆடையன். மேற்குத் திசையின் மூலையின் முடுக்கில் அமைந்த கோயிலாயிருந்தமை பற்றி வழங்கியது குடமுடுக்குக் கோயில் என்பது. பிரளய காலத்தில் சகல உயிர்களையும் அடைத்து வைத்த குடத் தின் மூக்கு இருந்த இடம் என்பது புராணம். குடமூக்கில் உள்ளான் என்க.

Koviloor Digital Library

1286. பூத்தா டிக்கழி யாதேநீர் பூமியீர்
தீத்தா டித்திறஞ் சிந்தையுள் வைம்மினோ
வேர்த்தா டுங்காளி தன்விசை தீர்கென்று
கூத்தா டிய்யுறை யுங்குட மூக்கிலே. 2

1287. நங்கை யாளுமை யாளுறை நாதனார்
அங்கை யாளொ டறுபதந் தாழ்சடைக்
கங்கை யாளவள் கன்னி யெனப்படும்
கொங்கை யாளுறை யுங்குட மூக்கிலே. 3

2. பொ-ரை: உலகில் உள்ளவர்களே! நீர் பிறந்து வாளா திரிந்து இறந்து போகாமல், எல்லா உலகங்களையும் எரித்து சர்வசங்கார காலத்தில் ஆடும் இறைவனின் திறத்தைச் சிந்தையுள் இருத்துவீராக! வேர்வை தோன்றுமாறு விரைந்து ஆடிய காளியின் ஆடலை வெல்லு மாறு கூத்து ஆடிய பெருமான் குடமூக்கில் உறைபவன் ஆவான்.

கு-ரை: பூத்து ஆடி - இவ்வுலகில் தோன்றிப் பயனற்ற செயல் களைச் செய்து. கழியாதே - இறவாமல். பூமியீர் - நிலவுலகினராகிய நீவிர். தீத்தாடி - தீயின்கண் நின்று ஆடுபவன். தீர்த்து ஆடி எனப் பிரித்துப் பொருள் காணலுமாம். திறம் - தன்மையை. வைமின் - எண்ணி மனத் திலிருத்துங்கள். தன்னோடு போட்டியிட்ட காளியுடன் நடமாடி வென்றவன் என்ற வரலாற்றை உட்கொண்டவை பின் இரண்டு வரிகள். வேர்த்து - சீற்றங்கொண்டு. விசை - ஆடலின் வேகம். தீர்க என்று - முடி வடைவதாகுக என்று. கூத்தாடி - ஊர்த்துவ தாண்டவத்தை ஆடியவன். உறையும் - எளியனாய் உலகினர்வந்து வணங்கி அருள் பெறக் குட மூக்கில் எழுந்தருளியிருப்பவன் என்றவாறு.

3. பொ-ரை: உமைநங்கையாளை ஒரு பாகத்திற்கொண்ட தலைவர். அங்கையாளொடு வண்டு தாழ்சடையினளாகிய கங்கை யாளும், உறையும் குடமூக்கில் காவிரியுமாகிய தீர்த்தச் சிறப்புக்கள் உள்ளன.

கு-ரை: நங்கை - மகளிருள் சிறந்தாரை வழங்கும் பெயர். நங்கையாகிய உமையாளுடன் கூடி உறையும் குடமூக்கில் என்க. கங்கை கன்னி - ஏழு தீர்த்த மாதாக்களில் இருவர் (கன்னி - காவிரி). அறுபதம் - வண்டு. தாழ் - மொய்க்கும். அங்கையாள் - அழகிய கையினள். இது ஏனைய தீர்த்த மாதாக்களில் ஒருவரைக் குறிப்பது.

Koviloor Digital Library

1288. ஓதா நாவன் திறத்தை யுரைத்திரேல்
ஏதா னும்மினி தாகும் மியமுனை
சேதா ஏறுடை யானமர்ந் தவிடம்
கோதா விரியுறை யுங்குட மூக்கிலே. 4

1289. நக்க ரையனை நாடொறும் நன்னெஞ்சே
வக்க ரையுறை வானை வணங்குநீ
அக்க ரையோ டரவரை யார்த்தவன்
கொக்க ரையுடை யான்குட மூக்கிலே. 5

இத்தலத்திலுள்ள மகாமகதீர்த்தத்தின்கண் கங்கை முதலிய சப்ததீர்த்த மாதாக்கள் நீராடித் தூய்மை பெற்றதாகப் புராண வரலாறு கூறுகிறது.

4. பொ-ரை: ஓதாதே உணர்ந்த முதல்வன் திறத்தை எவ்வளவேனும் கூறினால் இனிதாகும்; யமுனையும் கோதாவிரியும் தீர்த்தங்களாகப் பொருந்திய குடமூக்கே சிவந்த ஆனேறுடை யானாகிய சிவபிரான் உறையும் இடம்.

கு-ரை: ஓதாநாவன் - ஏனையர்போல நாவால் ஓதாது எல்லாம் உணர்ந்தவன் இயல்பாகவே இயற்கையுணர்வினன். ''கல்லாமே கலை ஞானம் கற்பித்தானை'' பிறரைப் புகழாத நாவன் எனலுமாம். திறத்தை - பெருமையின் வகைகளை. உரைத்திரேல் - உரைப்பீரே யானால். ஏதானும் - இனிய அல்லவும்; சிறிதளவேனும் ஏதாக இருந்தாலும் எனலுமாம். இனிதாகும் - தீமையும் நன்மை விளைக்கும். இயமுனை, யகரம் மொழிக்கு முதலில் வாராமை கருதி இயமுனை என்றாயது. இய முனை - யமுனை நதி. ஏறுடையான் அமர்ந்த இடம் யமுனை கோதாவிரி உறையும் குடமூக்கில் என்க. சேதா ஏறு - பசுவினமாகிய எருது; ஆனேறு.

5. பொ-ரை: நல்ல நெஞ்சே! நீ, திக்குகளையே ஆடையாக உடைய தலைவனும் வக்கரையென்னும் திருத்தலத்து உறைவானும் ஆகிய இறைவனை வணங்குவாயாக! அக்கு மாலையினையும், அர வினையும் அரையில் கட்டியவனும், கொக்கரையென்னும் பாடலையும் கூத்தையும் உடையவனுமாகிய பெருமான் குடமூக்கிலே உள்ளான்.

கு-ரை: நக்கரையன் - உடையில்லாதவன். வக்கரை

Koviloor Digital Library

1290. துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்
மறவனாய்ப் பார்த்தன் மேற்கணை தொட்டவெம்
குறவ னாருறை யுங்குட மூக்கிலே. 6

1291. தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்னுறை யுங்குட மூக்கிலே. 7

உறைவான் - திருவக்கரை என்னும் தலத்தில் எழுந்தருளி இருப்பவன். நாடொறும் நன்னெஞ்சே நக்கரையனை வக்கரை உறைவானை நீ வணங்கு என்க. அக்கு - சங்குமணி. அரை - இடை. அரவு அரை என்பதற்குப் பாம்புகளின் அரசன் எனலுமாம் இடையிலே அக்குமணி கட்டியதோடு அரவையும் இடையின்கண் கட்டியவன் என்க. கொக்கரை - கொக்கிறகம்பூ, பாடல், ஒருவகை வாச்சியம்; மூன்றுள் ஏற்பன கொள்க.

6. பொ-ரை: பற்றுக்களைத் துறக்கும் நெஞ்சுடையவர்களாகிய தொண்டர்களே! மறவனாகிய பார்த்தன்மேற் கணைதொடுத்த எம் குறவேடம் கொண்ட பெருமானும், குடமூக்கில் உறைபவனுமாகிய இறைவனை உமது பிறவி நீங்குமாறு பித்தராய் நின்று பிதற்றுவீர்களாக.

கு-ரை: துறவி நெஞ்சினர் - அகப்பற்று புறப்பற்றை அடியோடு ஒழித்துத் துறவு எய்திய மனத்தை உடையவர். பித்தராய்ப் பிதற்றுமின் - ஈடுபாடுடையவராய்ப் பலவாறு அவன் புகழைச் சொல்லுங்கள். மறவனாய் - வீரனாய். பார்த்தன் - அருச்சுனன். கணை - அம்பு. தொட்ட - விடுத்த. குறவன் - கிராத வேடந்தாங்கி நின்றவன். குரவன் என்பது எதுகை நோக்கித் திரிந்ததெனலுமாம். அப்பொழுது மறவன் என்பதை வேடன் எனக் கொள்க.

7. பொ-ரை: பழையதாகிய வலிய வினைகளாம் பற்று அற வேண்டுவோரே! பகைவராகி யெதிர்ந்த முப்புராதிகளது மூன்று நகரங்களையும் ஒரு மாத்திரைப் போதில் எரியுண்ணக் கொண்டவன் உறையும் குடமூக்கில், தொண்டராகித் தொழுது பணிவீர்களாக!

கு-ரை: தொண்டராகி - தொண்டு செய்யும் அடியவராய்.

Koviloor Digital Library

1292. காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும்முறை யுங்குட மூக்கிலே. 8

1293. சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெலாம்
குரவ னாருறை யுங்குட மூக்கிலே. 9

பண்டை வல்வினைப் பற்று - பழவினைகளாகிய பிராரத்தங்களின் பிணிப்பு அற - நீங்க. வேண்டுவீர் - விரும்புவீராய நீங்கள். விண்டவர் - திரிபுரப்பகைவர். ஒரு மாத்திரை - ஒரு கணப்பொழுதில். கொண்டவன் - அழித்தவன்.

8. பொ-ரை: பயன் கருதிய செயல்களையே வாளா செய்து காலம் கழிக்காமல் வேள்விகள் பல செய்து, தன் கணவனாகிய பிரமனோடு சரசுவதியும் கோமி (கோதாவரி)யும், உறையும் குடமூக்கிற் பெருமானை, உள்ளத்தே உணர்வீர்களாக!

கு-ரை: காமியம் - மனம் விரும்பியவை. ஓமியம் - ஓம காரியம். புறத்தே அக்னிகாரியத்தையும் அகத்தே ஆறாதார யோகத்தையும் உணர்த்தும். குண்டலிகத் தானமான உந்தியில் ஞான அனலை எழுப்பி அதனுள் விந்துத் தானத்து அமிழ்தமான நெய்யைச் சுழுமுனை இடை நாடிகளாகிய சுருக்கு சுருவங்களால் ஓமித்தல். உள்ளத்து அர்ச்சித்தலாவது - புறப்பூசை போல அகத்தே கொல்லாமை முதலிய அட்ட புட்பங்கொண்டு வழிபடல். சாமி - சாமை நிறமுடைய யமுனை ஆகலாம். கோமி - கோதாவிரி. ''தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை சரசுவதி பொற்றாமரைபுட்கரணி தெண்ணீர்க் கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த குடந்தை'' (தி.6. ப.75. பா.10.)

9. பொ-ரை: பிரமன், திருமால் முதலிய தேவர்க்கெல்லாம் பரம ஞானாசாரியனாக விளங்கும் பரமன் உறையும் குடமூக்கில், பல நாளும் பயின்று சிவனுக்குப் பக்தர்களாக முயற்சி செய்து வாழ்வீர்களாக.

கு-ரை: சிரமம் - வருந்திச் செய்யும் இயமம் நியமம் முதலிய

Koviloor Digital Library

1294. அன்று தானரக் கன்கயி லாயத்தைச்
சென்று தானெடுக் கவுமை யஞ்சலும்
நன்று தான்நக்கு நல்விர லூன்றிப்பின்
கொன்று கீதங்கேட் டான்குட மூக்கிலே. 10

திருச்சிற்றம்பலம்.

முயற்சி. பத்தர் - அன்புடையவராய். பயிற்றுமின் - சொல்லிப் பழகுங்கள். மற்றொழிந்தார்க்கெலாம் - ஏனைய தேவர் முதலானோர்க்கும். குரவன் - தலைவன் அல்லது ஆசிரியன்.

10. பொ-ரை: அரக்கனாகிய இராவணன் திருக்கயிலாயத்தை அன்று சென்றுதான் எடுக்க, உமை அஞ்சுதலும் தான் பெரிதும் சிரித்துத் தன் நல்விரலை ஊன்றிப் பிறகு அவனை வருத்திச் சாமவேதம் கேட்ட பெருமான் குடமூக்கிலே உறைபவன் ஆவான்.

கு-ரை: அன்றுதான் - முன்னொரு காலத்தே தான் என்ற முனைப்போடு. எடுக்க - தூக்க. நன்று தான் நக்கு - நன்மை உண்டாகச் சிரித்து. முப்புரமழித்த சிரிப்புப் போல அழியச் சிரித்த சிரிப்பன்று என்பார் நன்று தான் நக்கு என்றார். கொன்று - வருத்தி. கீதம் - சாமகானம். உறைவது என வருவிக்க.

திருக்குற்றாலப் புராணம்

திருநீற்றை மெய்யமுத்தி யஞ்செழுத்தை
நெஞ்சழுத்திச் சிலைக்கை மார
னுருநீற்றும் பெருமானை யுறவழுத்திச்
சமணரெனு மொன்னார் மூட்டும்
பொருநீற்றுக் குடவரையுங் கடகரியும்
விடவரவும் புறங்கண் டாழிக்
கருநீத்தங் கடப்பவொரு கற்றோணி
கைத்தாயுனைக் கருத்துள் வைப்பாம்

Koviloor Digital Library

23. திருநின்றியூர்

பதிக வரலாறு:

ஆண்டவரசு கோலக்காவை ஆளுடைய பிள்ளையா ரொடுஞ் சென்றிறைஞ்சி விடைகொண்டு இப்பால் வேதநாயகர் விரும்பும் கருப்பறியலூர் முதலான பதிகளை வணங்கித் திரு நின்றியூர் கண்ணுதலார் கழல்தொழுது பாடியருளியது இத்திருப் பதிகம். (தி.12 திருநா. புராணம். 189)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 136 பதிக எண்: 23

திருச்சிற்றம்பலம்

1295. கொடுங்கண் வெண்தலை கொண்டு குறைவிலைப்
படுங்க ணொன்றில ராய்ப்பலி தேர்ந்துண்பர்
நெடுங்கண் மங்கைய ராட்டயர் நின்றியூர்க்
கடுங்கைக் கூற்றுதைத் திட்ட கருத்தரே. 1

1296. வீதி வேல்நெடுங் கண்ணியர் வெள்வளை
நீதி யேகொளற் பாலது நின்றியூர்

1. **பொ-ரை:** நீண்ட கண்களை உடைய மங்கையர்கள் ஆடல் புரிகின்ற நின்றியூரில், கடிய கையுடைய கூற்றுவனை உதைத் திட்டவரும் அன்பர்களின் கருத்தில் உறைபவரும் ஆகிய இறைவர், கொடிய கண்களை உடைய வெள்ளிய கபாலம் கொண்டு, குறை கொண்டு விலைகூவுதற்குப்படும் பொருள் ஏதுமிலராகிய இரவல ராய்ப் பலி தேர்ந்து உண்ணும் இயல்புடையவர் ஆவர்.

கு-ரை: கொடுங்கண் - தோண்டப்பட்ட கண்களை உடைய. குறைவிலைப்படுங்கண் ஒன்று இலராய் - குறைந்த விலைக்கு விற்றுக்கொள்வதோர் இடமுமில்லாதவராய் ''விற்றூண் ஒன்றில்லாத நல்கூர்ந்தான்காண்'' (தி.6. ப.8. பா.1.) பலி தேர்ந்து - இரந்து. நெடுங்கண் - காதளவு நீண்ட கண்கள். ஆட்டயர் - நாட்டியம் அயர்கின்ற. கடுங்கை - உலகப்பற்றினின்று உயிர்களைப் பிரித்தல் வலிதாதலின் வலிதாகிய கை என்றார். கருத்தர் - மூலகாரணர்.

2. **பொ-ரை:** வேதங்களை ஓதுபவரும், விளங்குகின்ற வெள்ளியதோடும் வெள்ளிய சங்கக்குழையும் உடைய காதினரு

Koviloor Digital Library

வேத மோதி விளங்குவெண் தோட்டராய்க்
காதில் வெண்குழை வைத்தவெங் கள்வரே. 2

1297. புற்றி னாரர வம்புலித் தோல்மிசைச்
சுற்றி னார்சுண்ணப் போர்வைகொண் டார்சுடர்
நெற்றிக் கண்ணுடை யாரமர் நின்றியூர்
பற்றி னாரைப்பற் றாவினை பாவமே. 3

மாகிய (அர்த்தநாரீசுவரரும்) எமது கள்வரே! வீதியில் வேலனைய நீண்ட கண்களை உடைய பெண்களின் வெள்வளைகளைக் கொள்வது தேவரீர்க்கு நீதியோ? உரைத்தருள்வீராக.

கு-ரை: வீதி - தெருவீதியின்கண். வேல்நெடுங்கண்ணியர் - வேல் போன்று கூரிய நீண்ட கண்களை உடைய தாருகாவனத்து முனிபன்னியர். வெள்வளை - சங்க வளையல்களை. கொளற் பாலது நீதியே - கொள்வது முறையோ. காதலால் மெலிந்த பெண்களின் கைவளை சோரும் என்பது அகப்பொருள் இயல்பு. வெண் தோட்டராய் - வெண்மையான ஒளி செய்கின்ற தோடணிந்தவராய். காதில் குழைவைத்த - மற்றொரு காதில் குழையணிந்த. தோடு குழை என்பன மாதொருபாகராய இயல்பு குறித்தன. கள்வர் - பிச்சை கொள்ள வந்து வெள்வளையோடு உள்ளத்தைக் கொண்டவர் ஆதலால் எம் கள்வர் என்றார்.

3. பொ-ரை: புற்றினைப் பொருந்திய அரவினைப் புலித் தோலின்மேல் சுற்றியவரும், திருநீற்றைப் பூசிய மேனியினரும், சுடர் நெற்றிக்கண்ணை உடையாருமாகிய இறைவர் அமர்கின்ற நின்றியூரைப் பற்றிய அன்பர்களை, வினைகளும் அவற்றான் வரும் பாபங்களும் பற்றமாட்டா.

கு-ரை: புற்றினார் அரவம் - புற்றில் உறைகின்றதாகிய பாம்பு. புலித்தோல்மிசை - புலித்தோலின்மேல். சுற்றினார் - வரிந்து கட்டினார். சுண்ணப்போர்வை - உடலைப் போர்த்தது போன்ற திருநீற்றுப் பூச்சு. சுடர் - நெருப்பாகிய. அமர் - எழுந்தருளியுள்ள. பற்றினாரை - வணங்குதலை நிலையாகக் கொண்டவர்களை. பற்றா - பற்றமாட்டா. வினை பாவம் - தீவினையும் பாவமும். வினை - தூலவினை; ஆகாமியம். பாவம் - சூக்குமவினை; சஞ்சிதம்.

Koviloor Digital Library

1298. பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் மல்கி யயலெலாம்
நிறையும் பூம்பொழில் சூழ்திரு நின்றியூர்
உறையு மீசனை யுள்குமென் னுள்ளமே. 4

1299. சுனையுள் நீலஞ் சுளியும் நெடுங்கணாள்
இனைய னென்றென்று மேசுவ தென்கொலோ
நினையுந் தண்வயல் சூழ்திரு நின்றியூர்ப்
பனையின் ஈருரி போர்த்த பரமரே. 5

1300. உரைப்பக் கேண்மின்நும் உச்சியு ளான்றனை
நிரைப்பொன் மாமதில் சூழ்திரு நின்றியூர்

4. பொ-ரை: பறையின் ஓசையும், தெய்வப்பாடல்களின் ஓசையும், வேதங்களின் ஓசையும் நிறைந்து மருங்கெல்லாம் ஒலிக்கின்ற பூம்பொழில் சூழ்ந்த திருநின்றியூரில் உறையும் ஈசனை என் உள்ளம் உள்குகின்றது.

கு-ரை: பறை - தோற்பறை; வாத்திய விசேடம். மல்கி - நிறைந்து. அயல் எலாம் - ஊர்ப்புறமெங்கும். நிறையும் - நிறைகின்ற. பூம்பொழில் - பூக்களை உடையதாகிய சோலை. உள்கும் - எண்ணும்.

5. பொ-ரை: நினைத்தற்குரிய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருநின்றியூரில். பனைபோன்ற துதிக்கையை உடைய யானையின் உரியினைப் போர்த்த பரமரே! சுனையிற் பூத்த நீல மலரும் தோற்றுச் சுளித்தற் கேதுவாய் நெடுங்கண்களை உடையளாகிய இவள்! இத்தன்மை உடையவன், என்று என்றும் ஏசுவதன் காரணம் என்னை?

கு-ரை: சுனையுள் நீலம் - சுனையில் பூத்த நீலப்பூவை (வெகுளும்). நெடுங்கணாள் - நீண்ட கண்ணை உடையவள். இனையன் என்று - காதலித்தாரைக் கை விட்டவன் என்று. என்றும் - நாடோறும். ஏசுவது - பழித்துரைப்பது. என் கொலோ - யாது காரணத்தாலோ. நினையும் - எல்லோராலும் விரும்பி நினைக்கப்படும். பனையின் ஈருரி - பனை போன்ற கையை உடையதாகிய யானையை உரித்த தோலை.

6. பொ-ரை: உரைப்பக் கேட்பீராக; நும் சென்னியின்கண் உள்ள சிவபிரானை, வரிசையாகிய பொன்மதில் சூழ்ந்த திருநின்றியூரில்

Koviloor Digital Library

உரைப்பொற் கற்றைய ராரிவ ரோவெனில்
திரைத்துப் பாடித் திரிதருஞ் செல்வரே. 6

1301. கன்றி யூர்முகில் போலுங் கருங்களிறு
இன்றி ஏறல னாலிது என்கொலோ
நின்றி யூர்பதி யாக நிலாயவன்
வென்றி யேறுடை யெங்கள் விகிர்தனே. 7

1302. நிலையி லாவெள்ளை மாலையன் நீண்டதோர்
கொலைவி லாலெயி லெய்த கொடியவன்

மாற்றுரைக்கத்தக்க பொன் போன்ற கற்றைச் சடையுடையராகிய இவரை ஆர் என்று வினவுவீராயின், அலைத்துப் பாடித் திரிதரும் செல்வர் இவர்.

கு-ரை: நும் உச்சியுளான் - உங்கள் தலைமேல் உள்ளவனாகிய பெருமான். நிரைப்பொன் - வரிசையான அழகிய; மா - பெரிய. உரைப்பொன் - மாற்றுரைக்க வைத்த பொன். இவர் ஆரோ என்னில் எனக்கூட்டுக. திரைத்து - அலைத்து. அழித்து. திரிதரும் - அலையும்.

7. பொ-ரை: திருநின்றியூரைப் பதியாகப் பொருந்தியவனும், வெற்றிமிக்க ஆனேறு உடையவனுமாகிய எங்கள் விகிர்தன், கறுத்து ஊர்ந்து வருகின்ற முகில்போன்ற கருங்களிறு இன்றி வேறு ஏறி ஊராதது என்னையோ?

கு-ரை: கன்றி - கறுத்து. ஊர்முகில் - வானத்தே மெதுவாய்ச் செல்லும் மேகம். கருங்களிறு. கரியயானை. யானையைக்கொள்ளாது ஏற்றைக்கொண்ட பெருமான் நடந்து வருதல் என்ன காரணமோ என்க. ஏறலனால் - ஏறாதவனாயினான். இதுஎன்கொலோ - இதற்குக் காரண மென்னவோ? ''கடகரியும் பரிமாவும் தேருமுகந்தேறாதே இடப முகந்தேறியவாறு''. நிலாயவன் - விளங்கியவன். வென்றியேறு - வெற்றிக்குரியதாகிய எருது. விகிர்தன் - மாறுபட்ட செயல்களை உடையன்; ஏறுடையவன்.

8. பொ-ரை: நிலையில்லாத வெள்ளெலும்புகளை மாலையாக உடையவனும், நீண்டதோர் கொல்லுந்தொழிலுடைய வில்லால் எயில் எய்த கொடியவனும், நிலையினார் வயல்சூழ் திருநின்றியூர்

Koviloor Digital Library

நிலையி னார்வயல் சூழ்திரு நின்றியூர்
உரையி னால்தொழு வார்வினை யோயுமே. 8

1303. அஞ்சி யாகிலு மன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ
இஞ்சி மாமதி லெய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. 9

1304. எளிய னாமொழி யாவிலங் கைக்கிறை
களியி னாற்கயி லாய மெடுத்தவன்

இறைவனும் ஆகிய பெருமானை மொழியினாற் பாடித் தொழுவார் வினைகள் கெடும்.

கு-ரை: நிலையிலா - நிலையற்றவர்களுடைய. வெள்ளை மாலையன் - வெண்ணிறமுடையதாகிய எலும்பு மாலையை அணிந் தவன். கொலைவிலால் - கொல்லும் தொழில் செய்யும் வில்லால். எயில் - திரிபுர மதில்களை கொடியவன் - பகைவர்க்குக் கொடிய வனாயிருப்பவன். நிலையின் ஆர் - நிலைத்த தன்மை பொருந்திய உரையினால் தொழுவார் - தோத்திரிப்பார். ஓயும் - மெலியும்.

9. பொ-ரை: நெஞ்சமே! இஞ்சியாகிய மதிலையுடைய முப்புரங்களை எய்து, தேவர்கள் தொழ, தன்சடையில் வெள்ளிய பிறையைச் சூடிய கூத்தன் உறைகின்ற நின்றியூரை, நீ, அஞ்சி யாயினும், அன்பினைப் பொருந்தியாயினும் நினைத்து உய்வாயாக.

கு-ரை: அஞ்சியாகிலும் - அச்சம் கொண்டாவது. அன்பு பட்டாகிலும் - அன்பு கொண்டாவது. பயபக்தி இரண்டில் ஒன்றை யேனும் கடைப்பிடித்து என்றபடி. வாழி முன்னிலையசை. நெஞ்சம் - மனமே; அண்மைவிளி. நின்றியூரை நீ நினை என்க. இஞ்சி - கோட்டை மதில். இஞ்சிமாமதில் இருபெயரொட்டு. கோட்டை, மதில் என்றபடி. எய்து - அழித்து. குஞ்சிவான்பிறை - தலையில் சூடிய இளைய அழகிய பிறை.

10. பொ-ரை: எளியனாக மொழியாத இலங்கைக்கு இறைவனாம் இராவணன் செருக்கினாற் கயிலாயம் எடுத்தபோது

Koviloor Digital Library

நெளிய வூன்றவல் லானமர் நின்றியூர்
அளியி னாற்றொழு வார்வினை யல்குமே. 10

திருச்சிற்றம்பலம்

நெளியுமாறு திருவிரலால் ஊன்ற வல்லவன் அமர்கின்ற திருநின்றி யூரை அன்பினால் தொழுவார்களின் வினைகள் சுருங்கும்.

கு-ரை: எளியனாமொழியா - யாரிடத்தும்தான் எளியனாய் மொழிபயிலாத; பிறரால் எளியன் என்று சொல்லப்படாத. இறை - தலைவன். களியினால் - மகிழ்ச்சி மயக்கத்தால். நெளிய - துன்பமுற அளியினால் - அன்பினால். அல்கும் - இல்லாமற்போகும்.

திருநாவுக்கரசர் புராணம்

ஆண்டஅர செழுந்தருளக் கோலக் காவை, அவரோடுஞ்
சென்றிறைஞ்சி அன்பு கொண்டு,
மீண்டருளினார் வரும் விடை கொண்டிப்பால் வேதநா
யகர்விரும்பு பதிக ளான,
நீண்ட கருப் பறியலூர் புன்கூர் நீடூர்
நீடுதிருக் குறுக்கைதிரு நின்றியூருங்,
காண்டகைய நனிபள்ளி முதலா நண்ணிக், கண்ணுதலார்
கழல்தொழுது கலந்து செல்வார்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

24. திருவொற்றியூர்

பதிக வரலாறு:

தமிழ் வேந்தர் மயிலாப்பூர் வந்தடைந்து திருமயிலைச் சங்கரனார் தாள்வணங்கித் திருவொற்றியூர் சேர்ந்து தொண்டர் எதிர்கொள்ள, கோபுரத்தையிறைஞ்சி ஞானத்தொண்டருடன் வலங்கொண்டு முன் வீழ்ந்து தொழுது பலநாள் தங்கி எழுத்தறியும் பெருமானைப் பரவிப் பாடியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 333. 337.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 137 **பதிக எண்: 24**

திருச்சிற்றம்பலம்

1305. ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பும் அதனையே
ஒற்றி யூர வொருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை யோயுமே. 1

1. பொ-ரை: ஒளி விளங்குகின்ற மதி பாம்பினை ஒற்றி ஊரும்; பாம்பும் அம்மதியினைக் கொள்வதற்காக ஒற்றி ஊர்ந்து வரும்; இவ்வாறு இவை ஒன்றையொன்று ஒற்றி ஊரும்படியாக ஒருசடையில் வைத்த சிவபெருமானுக்குரிய ஒற்றியூரைத் தொழ நம்வினைகள் ஓயும்.

கு-ரை: பாம்பும் மதியும் - தம்மிற் பகையாயினும் ஒளிமதி பாம்பினை ஒற்றி ஊரும் என்க. ஒற்றி - பொருந்தி. ஊரும் - ஊர்ந்து செல்லும். அப்பாம்பும் அதனை ஒற்றி ஊரும்.

ஒற்றி ஊரும் என்ற சொற்கூட்டுக்கு இங்கும் மேலதே பொருள். ஒற்றி ஊர - பாம்பும் மதியும் பற்றி ஊர்ந்து செல்ல. ஒரு - ஒப்பற்ற. ஓயும் - உள்ளதனிற் குறையும் *(தொல் - சொல். 330)*.

உயிர்ப்பகை தீர்ப்பவன் என்பதில் உயிர்கட்குப் பகையாகிய ஆணவப்பகையின் வலியைப் போக்குவன் ஆதலின் தொழ வினை ஓயும் என்க.

Koviloor Digital Library

1306. வாட்ட மொன்றுரைக் கும்மலை யான்மகள்
ஈட்ட வேயிரு ளாடி யிடுபிணக்
காட்டி லோரி கடிக்க எடுத்ததோர்
ஓட்டை வெண்தலைக் கையொற்றி யூரரே. 2

1307. கூற்றுத் தண்டத்தை யஞ்சிக் குறிக்கொண்மின்
ஆற்றுத் தண்டத் தடக்கு மரனடி
நீற்றுத் தண்டத்த ராய்நினை வார்க்கெலாம்
ஊற்றுத் தண்டொப்பர் போலொற்றி யூரரே. 3

2. பொ-ரை: மலையரசன் மகளாகிய உமாதேவியார் தளர்ச்சியாகிய ஒன்று உரைக்க, பேய்க்கணங்கள் நெருங்க நள்ளிருளின்கண் இடுபிணக்காட்டில் ஓரி கடிக்கும்படியாக எடுத்த துளை உடைய வெண்தலையினைக் கையிலே உடையவர் ஒற்றியூர்த் தலத்து இறைவர்.

கு-ரை: வாட்டம் ஒன்று - ஒரு வருத்தத்தை. மலையான் மகள் - பார்வதி. ஈண்டவே என்பது ஈட்டவே என வலித்தது. அணுகி - உடனாயிருக்கவே. ஆடி - ஆடுதலைச் செய்பவன். தன் கணவன் இருளிலே பேய்களோடு சுடலையாடுகிறான் என்பதால் உமை வருந்தியதாகக் கூறியது என்க. இடு பிணக்காடு - பிணங்களை இட்டுச்சுடும் காடு என்க. ஓரி - நரி. ஓடு - மண்டை ஓடு. ஒற்றியூரரே மலையான் மகள் வாட்டம் ஒன்று உரைக்கும் என்க. இடுகாட்டில் இட்ட பிணத்தை நரி கடித்துத்தின்ன அதனால் தசை கழிந்த மண்டை ஓடு என்க. வெண்தலை ஓட்டை என்று மாறுக. கை - கையின்கண்ணே உடைய.

3. பொ-ரை: கூற்றுவனால் வருந்தண்டமாகிய இறப்புக்கு அஞ்சி, அறத்தின் ஆற்றினால் அனைத்தையும் இயக்கும் சிவபிரானடியைக் குறிக்கொள்ளுவீராக! திருநீற்றினைப்பூசி வணங்கியெழுந்து நினைக்கின்ற அன்பர்க்கெல்லாம் இனிப்பு ஊறும் கரும்பினை ஒத்து இனிப்பர் ஒற்றியூர்த்தலத்து இறைவர்.

கு-ரை: கூற்றுத் தண்டம் - இயமவாதனை. உயிர்களுக்கு இயமன் விதிக்கும் தண்டனை. அஞ்சி - பயந்து. அறநெறிக் கண்ணதாகிய தண்டத்தினால் மிகை செய்வாரை அடக்கும் அரன். ஆற்றுத் தண்டத்தும்:- இங்ஙனம் அடக்க இயலாத கூற்றுவன் சலந்தரன்

Koviloor Digital Library

1308. சுற்றும் பேய்சுழ லச்சுடு காட்டெரி
பற்றி யாடுவர் பாய்புலித் தோலினர்
மற்றை யூர்களெல் லாம்பலி தேர்ந்துபோய்
ஒற்றி யூர்புக் குறையு மொருவரே. 4

1309. புற்றில் வாளர வாட்டி யுமையொடு
பெற்ற மேறுகந் தேறும் பெருமையான்
மற்றை யாரொடு வானவ ருந்தொழ
ஒற்றி யூருறை வானோர் கபாலியே. 5

முதலானோரை ஒறுத்தலினின்று உணர்க. குறிக்கொண்மின் - குறியாக்கிக் கொண்டு தொழுங்கள். ஆற்றுத் தண்டத்தால் அடக்கும் அரனடியைக் கூற்றுத்தண்டத்தை யஞ்சிக் குறிக்கொண்மின் என்க. நீற்றுத்தண்டத்தராய் - நீற்றராய் தண்டத்தராய் என்று கொள்க. திருநீறணிந்து வணங்கித் தெண்டம் செய்பவராய். ஊற்றுத்தண்டு - கரும்பு. ஊன்று கோல். இரட்டுற மொழிந்து கொள்க. வழுக்குழி உதவி, அணைந்துழிப் பேரின்பம் பயப்பர்.

4. பொ-ரை: மற்றையூர்களிலெல்லாம் சென்று பலி தேர்ந்து பெற்று மீண்டுபோய் ஒற்றியூரிற்புக்கு உறையும் ஒப்பற்றவராகிய இறைவர் பாய்கின்ற புலியினையுரித்த தோலுடையினராய், சுற்றி நிற்கின்ற பேய்கள் சுழலச் சுடுகாட்டின்கண் கையில் எரியினைப் பற்றி ஆடும் இயல்பினர்.

கு-ரை: சுற்றும் - சுற்றிலும். சுழல - தம்மோடு சுழல. எரிபற்றி - எரியேந்தி. பாய்புலி - பாய்கின்ற புலி. பலிதேர்ந்து - இரந்துண்டு. எல்லா ஊர்களிலும் சென்று பலியேற்று ஒற்றியூரை உறையும் இடமாகக் கொண்ட ஒருவர் என்பதாம். ஒருவர் - ஏகன் என்று வேதாந்தங்களால் கூறப்படும் முதல்வன்.

5. பொ-ரை: மற்றையவர்களோடு தேவர்களும் தொழுமாறு ஒற்றியூரில் உறைவானாகிய கபாலம் கைக்கொண்ட இறைவன் புற்றிலுறையும் வாள்போன்று வருத்தந்தரவல்ல பாம்பினை ஆட்டி உமையோடு ஆனேற்றின்மேல் உயர்ந்து ஏறித்தோன்றும் பெருமையை உடையவன்.

கு-ரை: புற்றில் வாளரவு - புற்றில் உள்ள ஒளி பொருந்திய

Koviloor Digital Library

1310. போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்
மாது தாழ்சடை வைத்த மணாளனார்
ஓது வேதிய னார்திரு வொற்றியூர்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. 6

1311. பலவும் அன்னங்கள் பன்மலர் மேல்துஞ்சும்
கலவ மஞ்ஞைகள் காரென வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு வொற்றியூர்
நிலவி னானடி யேயடை நெஞ்சமே. 7

நாகம் எனலும் ஆம். பெற்றம் ஏறு - பசுவினமாகிய எருது. மற்றை யாரொடு - நிலவுலகில் வாழ்வோர். கபாலி - கபால மேந்தியவன்.

6. பொ-ரை: போதுகளைவிட்டுப் பூத்த புதுமலர்களைக் கொண்டு கங்கையைத் தாழ்சடையின் கண் வைத்த மணாளனாரும், திருவொற்றியூரில் வேதம் ஓதும் வித்தகரும் ஆகிய பெருமானின் திருவடிகளை ஏத்தினால் நம் பாவங்கள் கெடும்.

கு-ரை: போது - காலந்தோறும் எனலும் ஆம். தாழ்ந்து - வணங்கி அல்லது மனம் விரும்பி. நீர்மாது - கங்கை. தாழ்சடை - தங்கியுள்ள சடை. ஓதுவேதியனார் - வேதங்களை ஓதியருளியோன். எல்லாராலும் புகழ்ந்தோதப்படும் வேதம் விரித்த பெருமான் எனலு மாம். பறையும் - அழியும். ஒற்றியூர் மணாளனார் பாதமேத்தப் போது தாழ்ந்து புதுமலர்கொண்டு ஏத்த நம் பாவம் பறையும்.

7. பொ-ரை: நெஞ்சமே! அன்னங்கள் பலவும் பலமலர்கள் மேல் தூங்குவதும் கருமை உடைய இருள் விளைத்தலைக் கண்டு பைம்பொழிலை அங்கு உலவும் தோகையுடைய மயில்கள் மேக மெனக் கருதிப் பின் அவையின்மை தெரிந்து வெட்கமுறுதற் சிறப் புடையதுமாகிய திருவொற்றியூரில் விளங்குகின்ற இறைவன் திரு வடிகளையே அடைவாயாக!

கு-ரை: அன்னங்கள் பலவும் என்க. பன்மலர்மேல் - பல மலர் களின்மீது. துஞ்சும் - உறங்கும். கலவமஞ்ஞை - கலாபத்தோடு கூடிய மயில். காரென - மேகமென்று எண்ணி. வெள்குறும் - நாணமடையும். அன்னங்கள் உறங்கும் பல மலர்களை உடைய பொழிலை, மயில்கள் மேகங்கள் என்றெண்ணிச் சென்று பின் பொழிலென உணர்ந்து

Koviloor Digital Library

1312. ஒன்று போலும் உகந்தவ ரேறிற்று
ஒன்று போலு முதைத்துக் களைந்தது
ஒன்று போலொளி மாமதி சூடிற்று
ஒன்று போலுகந் தாரொற்றி யூரரே. 8

1313. படைகொள் பூதத்தர் வேதத்தர் கீதத்தர்
சடைகொள் வெள்ளத்தர் சாந்தவெண் நீற்றினர்
உடையுந் தோலுகந் தாருறை யொற்றியூர்
அடையு முள்ளத் தவர்வினை யல்குமே. 9

நாணும். செறிந்த பொழில் என்க. உலவு - சூழ்ந்த. நிலவினான் - விளங்கினவர்; நிலவையணிந்தவன்.

8. பொ-ரை: உயர்ந்து அவர் ஏறியதும் ஒரு விடையினை; உதைத்துக் களைந்ததும் ஒரு கூற்றுவனை; சூடியதும் ஒளி விளங்கும் ஒரு மதியினை; இவையனைத்தும் ஒன்றுபோல் உகந்தவர் ஒற்றி யூர்த்தலத்து இறைவர்.

கு-ரை: உகந்து அவர் ஏறிற்று - மகிழ்ந்து அப்பெருமான் ஏறியது. ஒன்று - இடபம் ஒன்றே. போலும் அனைத்தும் ஒப்பில் போலி; உரையசை, உதைத்துக்களைந்தது - காலால் உதைத்து நீக்கியது. ஒன்று - அடியார் பெருமை எண்ணாத இயமனின் பிழை. சூடிற்று ஒளிமாமதி ஒன்று. உகந்தது - விரும்பிக்கொண்டது. ஒன்று - ஒற்றியூராகிய ஒன்றை. திருவொற்றியூரர் அத்தலத்தையே தாம் விரும்பும் இடமாகக் கொண்டார். ஒன்று - ஒன்றுதல்; அதாவது ஏகனாகி அவனருள்வழி நிற்றல்.

9. பொ-ரை: பூதப்படை கொண்டவரும், வேதத்தவரும், இனியகீதத்தவரும், சடையிற்கொண்ட கங்கையினரும், சாந்தமெனப் பூசும் வெண்ணீற்றினரும், தோலை உடையாக உகந்தவரும் ஆகிய பெருமான் உறைகின்ற ஒற்றியூரை அடையும் உள்ளத்தவர்களின் வினைகள் சுருங்கும்.

கு-ரை: படைகொள்பூதத்தர் - பூதப்படை கொண்டவர். வேதத்தர் - வேதமோதுபவர். கீதத்தர் - இசைபாடுபவர். சாந்த வெண்ணீற்றினர் - வெண்ணீற்றைச் சாந்தமாகக் கொள்பவர். உடையும் தோல் உகந்தார் - தோலையும் உடையாக ஏற்றுக்கொண்டவர். அல்கும் - சுருங்கும்.

Koviloor Digital Library

1314. வரையி னாலுயர் தோளுடை மன்னனை
வரையி னார்வலி செற்றவர் வாழ்விடம்
திரையி னார்புடை சூழ்திரு வொற்றியூர்
உரையி னாற்பொலிந் தாருயர்ந் தார்களே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: மலையென உயர்ந்த தோள்களை உடைய மன்னனான இராவணனை ஒரு சிறு எல்லையில் ஆற்றல் கெடுத்த பெருமான் வாழும் இடம், அலைகள் பக்கங்களிற்சூழ்ந்த திருவொற்றியூர்; அதனை வாக்கினாற் கூறி விளக்கமுறுவோரே உயர்ந்த வராவர்.

கு-ரை: வரையினால் உயர் - மலைபோன்று உயர்ந்த. ஆல் அசை. மன்னன் - இராவணன். வரையினார் - கயிலைமலைக் குரியவர். வலிசெற்றவர் - வலிமையை அழித்தவர். திரையினார் புடை சூழ் - அலைகளால் சூழப்பட்ட. உரையினால் பொலிந்தார் - புகழ்ந்து பேசுவதால் விளக்கம் அடைந்தவர்கள். திருவொற்றியூரைப் பற்றிய இத்திருப்பதிகத்தை ஓதி விளக்கம் எய்தினார், உயர்ந்தவர்களாவர் என்று உரைத்தலும் ஒன்று. அப்பர் சுவாமிகளும் தமது பதிகப்பயன் உரைத்தது நமச்சிவாயப் பதிகம் கொண்டுணர்க.

திருநாவுக்கரசர் புராணம்

திருநாவுக் கரசரும்அத்
திருவொற்றி யூரமர்ந்த
பெருநாகத் திண்சிலையார்
கோபுரத்தை இறைஞ்சிப்புக்(கு)
ஒருஞானத் தொண்டருடன்
உருகிவலங் கொண்டடியார்
கருநாமந் தவிர்ப்பாரைக்
கைதொழுது முன்வீழ்ந்தார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

25. திருப்பாசூர்

பதிக வரலாறு:

திருவொற்றியூர் தொழுது போந்து உமையாள் பங்குடையாரமர்ந்த திருப்பாசூராம் பதியணைந்து உலகுய்ய விருப்பாரைத் தொழுது பாடிய தமிழ் இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 339. 340.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 138 **பதிக எண்: 25**

திருச்சிற்றம்பலம்

1315. முந்தி மூவெயி லெய்த முதல்வனார்
சிந்திப்பார்வினை தீர்த்திடுஞ் செல்வனார்
அந்திக் கோன்தனக் கேயருள் செய்தவர்
பந்திச் செஞ்சடைப் பாசூ ரடிகளே. 1

1316. மடந்தை பாகம் மகிழ்ந்த மணாளனார்
தொடர்ந்த வல்வினை போக்கிடுஞ் சோதியார்

1. பொ-ரை: வரிசையாகிய அடர்ந்த செஞ்சடையுடையவராகிய திருப்பாசூர்த் தலத்து இறைவர் முதற்கண் முப்புரங்களை எய்த முதல்வர்; சிந்திப்பவர்களின் வினைகளைத் தீர்க்கும் செல்வர்; சந்திரனுக்கு அருள் செய்த தண்ணளியாளர்.

கு-ரை: முந்தி - தேவர்கள் முறையிட்ட ஒலியின் எதிரொலி அடங்குமுன். ''மணியைக் கையால் நாவாய் அசைத்த ஒலி ஒலிமாறிய தில்லையிப்பால் தீயாய் எரிந்து பொடியாய்க் கழிந்த திரிபுரமே'' கணை எய்யுமுன் எனலுமாம். மூவெயில் - திரிபுரம். தீர்த்திடும் - அழிக்கும். திரிபுரமெரித்த விரைவுபோல நினைக்குமுன் வினை தீர்ப்பான் என்க. அந்திக்கோன் - சந்திரன். ஏ - அசை. பந்திச் செஞ்சடை - வரிசையாய் முளைத்துச் சிவந்த சடை. பந்தி - கற்றை; பின்னல் என்ற பொருள்கட்கும் பொருந்தும் சொல்.

2. பொ-ரை: படர்ந்தெழும் நாகத்தைப் பூண்ட திருப்பாசூர்த் தலத்து இறைவர். உமாதேவியை ஒரு பாகத்து மகிழ்ந்த மணவாளர்;

Koviloor Digital Library

கடந்த காலனைக் கால்கொடு பாய்ந்தவர்
படர்ந்த நாகத்தர் பாசூ ரடிகளே. 2

1317. நாறு கொன்றையும் நாகமுந் திங்களும்
ஆறுஞ் செஞ்சடை வைத்த அழகனார்
காறு கண்டத்தர் கையதோர் சூலத்தர்
பாறி னோட்டினர் பாசூ ரடிகளே. 3

1318. வெற்றி யூருறை வேதிய ராவர்நல்
ஒற்றி யேறுகந் தேறு மொருவனார்
நெற்றிக் கண்ணினர் நீளர வந்தனைப்
பற்றி யாட்டுவர் பாசூ ரடிகளே. 4

உயிர்களைப் பிறவிதோறும் தொடர்ந்து வரும் வல்லமை உடைய வினைகளாகிய இருளைப் போக்கிடும் ஒளி வடிவானவர்; எல்லை கடந்த இயமனைக் கால்கொண்டு பாய்ந்து உதைத்தவர்.

கு-ரை: மடந்தை - பார்வதி. பாகம் மகிழ்ந்த - இடப்பாகத்தே கொண்டு மகிழ்வெய்திய. தொடர்ந்த - நம்மைத் தொடர்ந்துவந்த. வல்வினை - தம் பயனை ஊட்டாது அழியாத வலிய வினைகள். கடந்த - எல்லைமீறித் தம்மை வழிபடுபவரிடம் வந்த. கால்கொடு பாய்ந்தவர் - திருவடியால் சினந்தவர். படர்ந்த - சுற்றிய.

3. பொ-ரை: பருந்துகள் அலைக்கும் மண்டையோட்டினைக் கையில் ஏந்தியவராகிய திருப்பாசூர்த்தலத்து இறைவர், மணம்வீசும் கொன்றையும், நாகமும், திங்களும், கங்கையாறும் செஞ்சடையில் வைத்த அழகர்; கரியகண்டத்தர்; கையிற்பிடித்த சூலத்தர்.

கு-ரை: நாறு - மணம் கமழ்கின்ற. நாகம் - பாம்பு. காறு - கறுத்த. பாறினோட்டினர் - சிதறுதலை உடைய. (இன அடை) மண்டை ஓட்டை உடையவர் என்றும் கூறலாம். இன் - அசை.

4. பொ-ரை: நீண்ட அரவினைப் பற்றியாட்டும், இயல்பினர் ஆகிய திருப்பாசூர்த் தலத்து இறைவர், வெற்றியூரில் உறையும் வேதியர், ஏற்றினை ஒற்றி உகந்து ஏறும் ஒப்பற்றவர், நெற்றிக் கண்ணினர்.

Koviloor Digital Library

1319. மட்ட விழ்ந்த மலர்நெடுங் கண்ணிபால்
இட்ட வேட்கைய ராகி யிருப்பவர்
துட்ட ரேலறி யேனிவர் சூழ்ச்சிமை
பட்ட நெற்றியர் பாசூ ரடிகளே. 5

1320. பல்லில் ஓடுகை யேந்திப் பகலெலாம்
எல்லி நின்றிடு பெய்பலி யேற்பவர்
சொல்லிப் போய்ப்புகு மூரறி யேன்சொலீர்
பல்கு நீற்றினர் பாசூ ரடிகளே. 6

கு-ரை: வெற்றியூர் - தேவார வைப்புத்தலங்களில் ஒன்று. ஒற்றி - ஊர்ந்து, பொருந்தி, உகந்து எனலுமாம். ஒன்றி ஒற்றி ஆயிற்று எனக்கொண்டு ஒற்றை ஏறு என்றலும் ஒன்று. ஏறு - இடபம். ஏறும். எழுந்தருளும். பற்றி - பிடித்து.

5. பொ-ரை: பட்டமணிந்த நெற்றியை உடையவராகிய திருப்பாசூர்த்தலத்து இறைவர். தேன் விரிந்த மலர்க்ளையணிந்த நீண்ட கண்ணுடைய உமாதேவியார்பால் விருப்பமும் வேட்கையும் உடையவராயிருப்பவர்; இவர் தீயவரேல் இவரது சூழ்ச்சித் தன்மைகளை அறியேன்.

கு-ரை: மட்டு - தேன். நெடுங்கண்ணிபால் - தலைவி இடத்து. இட்டம் - விருப்பம். வேட்கை - ஆசை. துட்டரேல் - இப்பொழுது துஷ்டராக இருப்பாரேயானால். சூழ்ச்சிமை - கருதும் எண்ணம். அறிந்திலேன் - முன்னர் அறிந்திலேன். பட்ட நெற்றியர் - நெற்றிப்பட்டம் என்னும் அணிகலன் அணிந்த நெற்றியை உடையவர்; அகத்துறைப்பாடல்; தோழி அல்லது செவிலி கூற்று.

6. பொ-ரை: நிறைந்த திருவெண்ணீற்றினராகிய திருப்பாசூர்த் தலத்து இறைவர், பல்லில்லாத ஓட்டினைக் கையேந்திப் பகலெல்லாம் வெயிலில் நின்று இடுகின்ற பலியினை ஏற்பவர்; சொல்லிவிட்டுச் சென்று புகுந்த ஊரினை அறியேன்; சொல்லுவீராக.

கு-ரை: பல்லில் ஒடு - பல இல்லங்களிலும், பல் இல்லாத மண்டையோடு எனலுமாம். பகலெலாம் ஒடு ஏந்தித் திரிவார் என்க. எல்லி நின்று - வெயிற்பொழுதில் ஓரிடத்தில் நின்று. இடுபெய்பலி - மண்டை ஓட்டில் இட்ட உணவை. ஏற்பவர் - ஏற்று உண்பவர். பல்கு -

Koviloor Digital Library

1321. கட்டி விட்ட சடையர் கபாலியர்
எட்டி நோக்கிவந் தில்புகுந் தவ்வவர்
இட்ட மாவறி யேனிவர் செய்வன
பட்ட நெற்றியர் பாசூ ரடிகளே. 7

1322. வேத மோதிவந் தில்புகுந் தாரவர்
காதில் வெண்குழை வைத்த கபாலியார்
நீதி யொன்றறி யார்நிறை கொண்டனர்
பாதி வெண்பிறைப் பாசூ ரடிகளே. 8

நிறைந்த. சொல்லிச் சென்று தங்கும் ஊர் இது என அறியேன். அறிவீராயின் சொல்லுங்கள். அகத்துறைப் பாடல் தலைவி அல்லது தோழி கூற்று. பல்குதல் - மிகுதல்.

7. பொ-ரை: பட்டமணிந்த நெற்றியை உடையவராகிய திருப்பாசூர்த்தலத்து இறைவர் கட்டிவிட்ட சடையை உடையவரும், கபாலம் கைக்கொண்டவரும் எட்டிப்பார்த்து இல்லத்தில் புகுந்தவரும் ஆகியர். இவர் விரும்பிச் செய்வன இவையென யான் முற்ற அறியேன்.

கு-ரை: கட்டிவிட்ட - கட்டிமுடித்த. கபாலியர் - கபால மேந்தியவர். எட்டி நோக்கி - தம்மை யாரும் காணாதபடி எட்டிப்பார்த்துக் கொண்டு. அவ்வவர் இல் புகுந்து - ஒவ்வொருவர் வீட்டிற்குள்ளேயும் நுழைந்து. இட்டமாய் இவர் செய்வன - தம் விருப்பம் போல் இவர் செய்வனவற்றை. அறியேன் - உணர்வதன்றி எடுத்துச் சொல்லும்வகை அறியாதவளாகி இருக்கின்றேன். அகத்துறைப் பாடல். தலைவி கூற்று.

8. பொ-ரை: பாதி வெண்பிறையணிந்த திருப்பாசூர்த் தலத்து இறைவர், வேதங்களை ஓதிவந்து இல்லத்துட் புகுந்தார்; காதில் வெண்குழை வைத்த கபாலியார்; நீதியொன்றறியாது என்னுடைய கற்பினைக் கொண்டார்.

கு-ரை: அவர் - பாசூர்ப்பெருமான். வேதமோதிவந்து - வேதங்களை ஓதிக்கொண்டு வந்து. இல்புகுந்தார் - வீட்டிற்குள்ளே புகுந்தார். வைத்த - அணிந்த. நீதி ஒன்றறியார் - நீதி சிறிதும் அறியாதவராய். நிறை கொண்டனர் - பெண்களின் நிறை என்னும்

Koviloor Digital Library

1323. சாம்பல் பூசுவர் தாழ்சடை கட்டுவர்
ஓம்பன் மூதெரு தேறு மொருவனார்
தேம்பல் வெண்மதி சூடுவர் தீயதோர்
பாம்பு மாட்டுவர் பாசூ ரடிகளே. 9

1324. மாலி னோடு மறையவன் தானுமாய்
மேலுங் கீழு மளப்பரி தாயவர்
ஆலின் நீழ லறம் பகர்ந் தார்மிகப்
பால்வெண் நீற்றினர் பாசூ ரடிகளே. 10

குணத்தைக் கவர்ந்தார். பாதி வெண்பிறை - இளம்பிறையைக் கூறும் சொல்வழக்கு. மாதொரு கூறன் ஆதலின் இறைவர்க்கு உரியது பாதி வெண்பிறை ஆயிற்று எனலும் ஆம்.

9. பொ-ரை: தீயதாகிய பாம்பினையும் பற்றி ஆடுபவராகிய திருப்பாசூர்த் தலத்திறைவர், சாம்பல் பூசுவர்; தாழ்கின்ற சடையினைக் கட்டுவர்; தாங்கும் இயல்புள்ள முதிர்ந்த எருதினை யேறும் ஒருவர்; ஒளிதேம்பிய வெண்மதியைச் சூடுவர்.

கு-ரை: சாம்பல் - சர்வசங்காரச் சுடலைப்பொடி. தாழ்சடை - தொங்கிய சடைகளை. ஓம்பல் - காத்தல்; தாங்குதல். தாங்கும் இயல்புள்ள அறமே விடையாகலின் ஓம்பல் மூதெருது என்றார். மூது - பழமை; அழியாமை. மால்விடை எனக்கொண்டு காத்தல் தொழிலையுடைய எருதெனினுமமையும். தேம்பல் - இளைத்தல். தீயதோர் - கொடியதொரு.

10. பொ-ரை: பால்போன்ற வெண்ணீற்றையணிந்தவராகிய திருப்பாசூர்த் தலத்திறைவர் மாலினோடு பிரமனும் மேலும் கீழும் அளந்தும் காண்டற்கரியவர்; ஆலின்நீழல் இருந்து அறம் பகர்ந்த ஞானவடிவினர்.

கு-ரை: மறையவன் - வேதங்களை ஓதுபவனாகிய பிரமன். ஆலின் நீழல் - கல்லாலின் நீழலிலே அமர்ந்து. அறம்பகர்ந்தார் - ஞானநெறியை உலகிற்கு உபதேசித்தவர். அளப்பரிது - அளப்பரிய பொருள். சோதிப் பிழம்பு. மிக - மிகுதியாக. பால் வெண்ணீற்றினர் - பால்போலும் வெள்ளிய திருவெண்ணீறணிந்தவர்.

Koviloor Digital Library

1325. திரியும் மூஎயில் செங்கணை யொன்றினால்
எரிய எய்தன ரேனு மிலங்கைக்கோன்
நெரிய வூன்றியிட் டார்விர லொன்றினால்
பரியர் நுண்ணியர் பாசூ ரடிகளே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: பருப்பொருளும், நுண்பொருளுமாகிய திருப்பாசூர்த் தலத்து இறைவர், திரியும் மூன்று புரங்களைச் சிவந்த கணையொன்றினால் எரியுமாறு எய்தனரேனும், இலங்கையரசன் நெரியுமாறு திருவிரலால் ஊன்றியவர் ஆவர்.

கு-ரை: திரியும் - பல ஊர்களையும் அழித்தற்குச் சுற்றித் திரியும். செங்கணை - சிவந்த நெருப்பாகிய கணை அல்லது நேரிதாகிய அம்பினாலே. எரிய - எரிந்தழிய. நெரிய - உடல்நெரிய. ஊன்றியிட்டார் - ஊன்றினார். பரியர் நுண்ணியர் - பெரிதினின் பெரியர்; நுண்ணிதின் நுண்ணியர்; ''அண்டங்களெல்லாம் அணுவாக அணுக்களெல்லாம் அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினானும்''. *(திருவிளை . கடவு. வாழ்த்து.7)* தூலசூக்கும வடிவினர் எனலுமாம்.

திருநாவுக்கரசர் புராணம்

திருப்பாசூர் நகர்எய்திச்
சிந்தையினில் வந்தூறும்
விருப்பார்வம் மேற்கொள்ள
வேயிடங்கொண் டுலகுய்ய
இருப்பாரைப் புரமூன்றும்
எரிதத்தருள எடுத்ததனிப்
பொருப்பார்வெஞ் சிலையாரைத்
தொழுதெழுந்து போற்றுவார்

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

26. திருவன்னியூர்

பதிக வரலாறு:

பழையாறைவடதளி வணங்கித் திருவானைக்கா செல்லும் வழியில் பொன்னியின் இருகரையிலும் உள்ள தலங்களில் பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத்தமிழ்மாலை. (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 139 **பதிக எண்: 26**

திருச்சிற்றம்பலம்

1326. காடு கொண்டரங் காக்கங்குல் வாய்க்கணம்
பாட மாநட மாடும் பரமனார்
வாட மானிறங் கொள்வர் மணங்கமழ்
மாட மாமதில் சூழ்வன்னி யூரரே. 1

1327. செங்கண் நாகம் அரையது தீத்திரள்
அங்கை யேந்திநின் றாரெரி யாடுவர்

1. பொ-ரை: மணம் கமழ்கின்ற மாடங்களும், மாமதில்களும் சூழ்கின்ற வன்னியூரில் வீற்றிருக்கும் இறைவர். சுடுகாட்டினை அரங்காகக்கொண்டு, நள்ளிரவில் பூதகணங்கள் பாடப் பெருநடம் ஆடும் பரமர்; மான்போன்ற இப்பெண் வாட, இவளது பொன்னிறத்தைத் தாம் கொண்டு பசலை நிறம் தந்த இயல்புடையவர்.

கு-ரை: காடு அரங்காகக்கொண்டு என மாறுக. இடுகாட்டை நடமாடும் அரங்கமாகக் கொண்டு என்பது பொருள். கங்குல்வாய் - இரவுப்பொழுதில். கணம் - பூதகணங்கள். பாட - பாட்டிசைக்க. மாநடம் - சிறந்த நடனத்தை. வாடமானிறங்கொள்வர் - மான் போன்றவளாகிய தலைமகள் வாட அவளது நிறத்தைக் கொள்பவர். பசலை பூத்தலால் நிறம் மாறிற்று என்க. மணங்கமழ் - அகிற்புகை முதலியவற்றால் மணங்கமழ்கின்ற. கங்குல் என்றது சர்வசங்கார காலத்தை; அப்பொழுது ஆடும் நடனம் சூக்கும பஞ்சகிருத்திய நடனம் எனப்படும்.

2. பொ-ரை: உமையம்மையாரை ஒரு பாகமாக வைத்த வன்னியூரில் வீற்றிருக்கும் இறைவர், அரையின்கண் சிவந்த

Koviloor Digital Library

கங்கை வார்சடை மேலிடங் கொண்டவர்
மங்கை பாகம்வைத் தார்வன்னி யூரரே. 2

1328. ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே. 3

கண்ணையுடைய நாகத்தைக் கட்டியவர்; தீத்தொகுதியை அழகிய கரத்தில் ஏந்தி ஆடுபவர்; நீண்ட சடைமேலிடத்தில் கங்கையைக் கொண்டவர்.

கு-ரை: செங்கண் நாகம் - சிவந்த கண்ணை உடைய பாம்பு. அரையது - இடுப்பின் கண்ணது. ஏந்தி நின்றாராய் எரியாடுபவர் என்க. வார்சடை மேலிடம் கங்கை கொண்டவர் என்க.

3. பொ-ரை: வன்னியூர்த்தலத்து இறைவர், தம்மையடைந்த அன்பர்கட்கெல்லாம், ஞானமும், அதனை அடைதற்குரிய நல்ல நெறியும், அடைதற்குரிய இடமும் காட்டுவர்; தன் திருவடியில் அடைந்தவர்கட்குத் தானங்காட்டுவதோடமையாது வானங்காட்டி ஆளவும் வைப்பார்.

கு-ரை: ஞானம் - கலைஞானம். நன்னெறி - அநுபவ ஞானம். தம்மை அடைந்தார்க்கெல்லாம் - தம்மைச் சேர்ந்தவர் எல்லோர்க்கும். தானங்காட்டுவர் - சரியை, கிரியை, யோக நெறி யினர்க்கு; சாலோக, சாமீப, சாரூபங்களாகிய தானத்தை (இடத்தை) வழங்குபவர்.

வானங் காட்டுவர் - ஞானநெறி நின்றார்க்கு சாயுச்யமாகிய வீட்டு நெறிக்கு வழி செய்வார். போல் என்பது அசை. தாளடைதல் - நிஷ்டைகூடுதல், பரமுத்தி நிலையாகிய சிவ சாயுச்யத்தைக் கொடுப்பார். பரமுத்தியினும் முதல்வன் உபகாரம் உண்மையின் காட்டுவர் என்றார். சரியை, யோகங்களும் ஞானம் எனப்படும் என்பதை ''விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு மலர் காய் கனிகள் அன்றோ பராபரமே'' என்னும் *தாயுமானவர்* திருவாக்கால் உணர்க.

Koviloor Digital Library

1329. இம்மை அம்மை யெனவிரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாது விளம்புவர்
மெய்ம்மை யால்நினை வார்கள்தம் வல்வினை
வம்மின் றீர்ப்பர்கண் டீர்வன்னி யூரரே. 4

1330. பிறைகொள் வாள்நுதற் பெய்வளைத் தோளியர்
நிறையைக் கொள்பவர் நீறணி மேனியர்
கறைகொள் கண்டத்தர் வெண்மழு வாளினர்
மறைகொள் வாய்மொழி யார்வன்னி யூரரே. 5

4. பொ-ரை: உலகினுள்ளீரே! வன்னியூர்த்தலத்து இறைவர் தம்மை மெய்ம்மையாக நினைவார்களுடைய வலிய வினையைத் தீர்க்கும் இயல்பினர்; இப்பிறப்பு, அப்பிறப்பு என்ற இரண்டின் உண்மைத் தன்மை அறியாது விளம்பும் சிலரைச் சாராது வந்து வழிபடுவீராக.

கு-ரை: இம்மை - இப்பிறப்பு. அம்மை - மறுபிறப்பும், வீடுபேறும். இவ்விரண்டையும் உண்மை என்றறியாது உலோகாய தரும், ஏகான்ம வாதிகளும் பேசுவர். ''மறு பிறப்பில்லெனும் மடவோரும் சேரார் நின்னிழல்'' *(பரிபாடல்)* அறியாது - தெரியாது. மெய்ம்மையால் - உண்மையோடு. வம்மின் - வாருங்கள். தீர்ப்பர் - வினைதீர்த்து வீடுபேறளிப்பர்.

5. பொ-ரை: வேதங்களை வாய்மொழியாக உடைய வன்னியூர்த்தலத்து இறைவர், பிறையின் பேரழகு கொண்ட ஒளி நுதலையும் வளைபெய் கரங்களையும் உடைய பெண்களது கற்பினைக் கவர்பவர்; திருநீறணிந்த திருமேனியர்; திருநீல கண்டத்தர், ஒளிவீசும் வெள்ளிய மழுவினை உடையவர் ஆவர்.

கு-ரை: பிறைகொள் வாணுதல் - பிறையின் வடிவத்தைக் கொண்ட ஒளி பொருந்திய நெற்றி. பெய்வளைத் தோளியர் - வளையல் அணிந்த கைகளை உடைய பெண்கள். நிறை - காப்பன காத்து, கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்; கற்பு என்பது.

வெண் மழுவாளினர் - வெண்மையான மழுவாகிய வாளை உடையவர். மறைகொள் வாய்மொழியார் - மந்திரங்களைத் தன்னகத்தே கொண்ட வாயை உடையவர். வாய்மொழி - வேதம்.

Koviloor Digital Library

1331. திளைக்கும் வண்டொடு தேன்படு கொன்றையர்
துளைக்கை வேழத்தர் தோலர் சுடர்மதி
முளைக்கு மூரற் கதிர்கண்டு நாகம்நா
வளைக்கும் வார்சடை யார்வன்னி யூரரே. 6

1332. குணங்கொள் தோளெட்டு மூர்த்தி யிணையடி
இணங்கு வார்கட் கினியனு மாய்நின்றான்
வணங்கி மாமலர் கொண்டவர் வைகலும்
வணங்கு வார்மனத் தார்வன்னி யூரரே. 7

6. பொ-ரை: வன்னியூர்த்தலத்து இறைவர் வண்டும், தேனும் திளைத்துப் பொருந்தும் கொன்றையர்; துளையுடைய அயிராவணம் என்ற வேழத்தினை உடையவர்; புலித்தோலினர்; ஒளி வீசும் மதியில் தோன்றும் நிலாக்கதிரைக்கண்டு நாகமானது கொள்ளுவதற்கு நாவினை வளைக்கின்ற நீண்ட சடையினர் ஆவர்.

கு-ரை: திளைக்கும் - உண்டு மகிழும். தேன்படு - தேன் பொருந்திய. துளைக்கை வேழத்தர் தோலர் - துளையோடு கூடிய கையையுடைய யானையின் தோலை அணிந்தவர். சுடர்மதி முளைக்கும் - ஒளி பொருந்திய மதியிலிருந்து உண்டாகும். மூரல் கதிர் கண்டு - நகையொளிபோன்ற நிலாக்கிரணங்களைக் கண்டு. நாவளைக்கும் - அச்சந்திரனை உண்ணுதற்கு நாகம் நாவை வளைத்தற்கிடமாயுள்ள.

7. பொ-ரை: வன்னியூர்த்தலத்து இறைவர் எட்டுத் தோள்களையும் எட்டுக்குணங்களையும் உடைய மூர்த்தி; தன் இணையடிகளை இணங்கி வழிபடுவார்கட்கு இனியராகியவர்; மலர்கள் கொண்டு வணங்குவார் மனத்தின் கண்ணவர்.

கு-ரை: குணங்கொள் - எண்குணங்களைக் கொண்ட குணமும் தோளும் எட்டாகக் கொள்கின்ற எட்டு மூர்த்தி. எட்டு என்பதைத் தனித்தனியே கூட்டுக. எட்டுத் தோள் மூர்த்தி - எட்டுத் தோள்களை உடைய பெருமான். எட்டு மூர்த்தி - அட்ட மூர்த்தங்களை உடையவன். இணையடி - இரண்டு திருவடிகள். இணங்குவார்கட்கு - சேர்பவர்கட்கு. வணங்கி - பணிவுள்ளமுடையவராகி. வைகலும் - நாடோறும். வணங்குவாரது மனத்தார் - மனத்தின்கண்ணே எழுந்தருளுபவர்.

Koviloor Digital Library

1333. இயலு மாலொடு நான்முகன் செய்தவம்
முயலிற் காண்பரி தாய்நின்ற மூர்த்திதான்
அயலெ லாமன்ன மேயுமந் தாமரை
வயலெ லாங்கயல் பாய்வன்னி யூரரே. 8

* * * * * * * * * * 9

1334. நலங்கொள் பாகனை நன்று முனிந்திடா
விலங்கல் கோத்தெடுத் தானது மிக்கிட
இலங்கை மன்ன னிருபது தோளினை
மலங்க வூன்றிவைத் தார்வன்னி யூரரே. 10

திருச்சிற்றம்பலம்

8. பொ-ரை: அயற்பக்கமெலாம் அன்னங்கள் மேய்கின்ற, அழகிய தாமரைகளை உடைய வயல்களிலெல்லாம் கயல்மீன்கள் பாய்கின்ற, வன்னியூர்த்தலத்து இறைவர், இயலுகின்ற திருமாலோடு நான்முகன் தவம் செய்து முயன்றும் காண்டல் அரியராய் நின்ற மூர்த்தியாவர்.

கு-ரை: இயலும் - தாமே முதற்பொருள் என்று முரணி நிற்கும். செய்தவம் முயலில் - தவம் செய்து முயலுதற்கண். அம் தாமரை அயலெலாம் அன்னம் மேயும் - அழகிய தாமரை பூத்துள்ள இடங்களின் வயலிலெல்லாம் அன்னங்கள் மேய்ந்து கொண்டிருக்கும். இயல்பு உடைய கயல் பாய்தற்கிடமான வயல்களை உடைய வன்னியூர் என்க.

9. * * * * * * * * * * *

10. பொ-ரை: வன்னியூர்த்தலத்து இறைவர், நன்மை கொண்ட பாகராகிய தம்மை முனிந்திடாது திருக்கயிலையைக் கரங்களைக் கொண்டு கோர்த்தெடுத்தபோது அவ்விலங்கை மன்னனின் இருபது தோள்களை மலங்கும் படியாகத் திருவிரலை ஊன்றியவர் ஆவர்.

கு-ரை: நலங்கொள் - தனக்கு நன்மையே எண்ணுதலைக் கொண்ட. பாகனை - இறைவன் மலை என்று கூறிய தேர்ப்பாகனை. நன்று - நன்கு; மிக. முனிந்திடா - சினந்து. விலங்கல் - கயிலைமலை. கோத்து எடுத்தான் - கைகளை உள்ளே நுழைத்துத் தூக்கியவன். அது மிக்கிட - அக்கயிலைமலை சுமையால் மிக. மலங்க - கலங்க. ஊன்றி வைத்தார் - ஊன்றினார்.

Koviloor Digital Library

27. திருவையாறு

பதிக வரலாறு:

ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டலல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என மறுத்தருளியபோது 'கயிலையிலிருந்த கோலம் திருவையாற்றில் நீ காண்' எனப் பணித்தருளிய கோலம் கண்டு மகிழ்ந்து பாடி ஐயாறமர்ந்து கண்ணுதலாரை வணங்கிப் பாடியவற்றுள் ஒன்று இத்திருப் பதிகம். (தி.12 திருநா. புரா. 371. 385.)

திருக்குறுந்தொகை

ப. தொ. பண்: 140 **பதிக எண்: 27**

திருச்சிற்றம்பலம்

1335. **சிந்தை வாய்தலு ளான்வந்து சீரியன்**
பொந்து வார்புலால் வெண்தலைக் கையினன்
முந்தி வாயதோர் மூவிலை வேல்பிடித்
தந்தி வாயதோர் பாம்பரை யாறரே. 1

1. பொ-ரை: ஐயாற்றின் கண் எழுந்தருளியுள்ள இறைவர், அன்பர்களின் சிந்தையின்கண் வந்து பொருந்துதல் உடையவர்; சீர்மை உடையவர்; பொந்துகளை உடைய நீண்ட புலால் உடைய வெண் தலையைக் கையில் ஏந்தியவர்; முந்துகின்ற வாயை உடையதோர் மூவிலைவேல் பிடித்து, அந்தியைப் போன்று சிவந்த வாயினதோர் பாம்பினை அணிந்தவர் ஆவர்.

கு-ரை: வந்து சிந்தை - எழுந்தருளி அடியார்கள் மனத்தை. வாய்தல் - ஆட்சி செலுத்தும் வழி. சீரியன் - மேலோன். பொந்து ஆர்- கண், வாய் காது முதலான பொந்துகளை உடைய.

முந்தி - முற்பட்டதாய. வாயது - கூரிய முனையை உடைய. அந்தி வாயது - மாலையில் வெளிப்போந்துலவுவது என்றும் அம் தீ வாயது எனப் பிரித்துத் தீய விடத்தை வாயின்கண் உடையது என்றும் பொருள் கொள்ளலாம்.

Koviloor Digital Library

1336. பாகம் மாலை மகிழ்ந்தனர் பால்மதி
போக ஆனையி னீருரி போர்த்தவர்
கோக மாலை குலாயதோர் கொன்றையும்
ஆக ஆன்நெயஞ் சாடுமை யாறரே. 2

1337. நெஞ்ச மென்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்ச மென்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின் னாமத் திருவெழுத்
தஞ்சும் தோன்ற அருளுமை யாறரே. 3

1338. நினைக்கும் நெஞ்சினுள் ளார்நெடு மாமதில்
அனைத்தும் ஒள்ளழல் வாயெரி யூட்டினார்

2. பொ-ரை: ஒருபாகத்தே திருமாலை உடையவர். பால்மதியை மகிழ்ந்தளித்தவர். இடர்கள்போக ஆனையின் உரியைப் போர்த்தவர், தோள்களில் கொன்றைமலர் சூடியவர். ஆனைந்து ஆடுபவர்.

கு-ரை: பாகம் - உடம்பின் ஒரு பாகத்தே. மாலை - திருமாலைக் கொண்டு. பால்மதி சூடி மகிழ்ந்தனர் என்க. போக - தேவர்களின் இடர்கள் போகும்படி. கோகு - தோள். கோகம் குலாய தோர் கொன்றை மாலை என்க. குலாயது - விளங்கிச் சூழ்ந்து. கொன்றையுமாக ஆடும் எனக் கூட்டுக.

3. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவரே! நெஞ்சமாகிய ஆழமுடைய நீர் நிலைக்குள்ளே வஞ்சம் என்கின்ற தப்பவியலாத சுழியிலே நான்பட்டு இறக்கும் போது. தேவரீர் திருநாமமாகிய திருவைந்தெழுத்தும் தோன்ற அருள்வீராக.

கு-ரை: நெஞ்சம் என்பதோர் நீள்கயம் - மனமாகிய ஆழமான நீர்நிலை. வஞ்சம் என்பதோர் வான்சுழிப்பட்டு - வஞ்சனை என்பதொரு பெரிய சுழியின்கண் அகப்பட்டு. துஞ்சும்பொழுது - உணர் விழக்கும்போது. நின்னாமத் திருவெழுத்து அஞ்சும் - உன்னுடைய திருப்பெயராகிய திருவைந்தெழுத்து. தோன்ற - பொருள் நிலை உள்ளவாறு தோன்ற. அருளும் - அருள் செய்வீராக.

4. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் தம்மை நினைக்கின்றவர்தம் நெஞ்சில் உள்ளவர்; நீண்ட

Koviloor Digital Library

பனைக்கை வேழத் துரியுடல் போர்த்தவர்
அனைத்து வாய்தலுள் ளாருமை யாறரே. 4

1339. பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்
அரிய பாடல ராடல ரன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெலாம்
அரியர் தொண்டர்க் கெளியரை யாறரே. 5

1340. புலரும் போது மிலாப்பட்ட பொற்சுடர்
மலரும் போதுக ளாற்பணி யச்சிலர்

முப்புரங்கள் மூன்றையும் சுடர்விடுகின்ற அழல் உண்ணுமாறு எரியூட்டியவர். பனைபோன்ற துதிக்கையை உடைய யானையின் தோலை உரித்துத் தம்திருமேனியிற் போர்த்தவர்; எல்லாப் பொருள்களினுள்ளும் கலந்து நிற்கும் இயல்பினர்.

கு-ரை: நினைக்கும் நெஞ்சினுள்ளார் - தன்னை நினைப்பவர்களது நெஞ்சிற்குள் வீற்றிருப்பவர். நெடுமாமதில் அனைத்தும் - நீண்ட பெரிய முப்புரங்கள் முழுவகையும். ஒள் அழல்வாய் - ஒளி பொருந்தியதாய் எரியும் நெருப்பினிடத்து. எரியூட்டினார் - எரியும்படி செய்தார் உரி - தோல். அனைத்து வாய்தல் உள்ளாரும் - எல்லாப் பொருள்களிடத்தும் பொருந்துதலை உடையவரும்.

5. பொ-ரை: ஐயாற்றில் எழுந்தருளும் இறைவர், பருப்பொருளாயவர். நுண்பொருளாயவர். பார்த்தற்கு அரியவர். அரிய பாடலையும் ஆடலையும் உடையவர். கரிய கழுத்தினர் (திருநீலகண்டர்). பிறர்க்கெலாம் காண்டற்கு அரியவர். தொண்டருக்கோ எளியவர்.

கு-ரை: பரியர் - பருமையிற் பருமையர், நுண்ணியர் - நுண்மையின் நுண்ணியர். பார்த்தற்கரியவர் - பசு, பாச ஞானங்களால் அறிதற்கரியவர். அரிய பாடலர்- அருமையுடைத்தாகிய பாடல்களைப் பாடுபவர். ஆடலர் - நடனம் ஆடுபவர். பிறர்க்கெலாம் காட்சியரியர் - கரவாடும் வன்னெஞ்சராய பிறருக்கு அரியவர்.தொண்டர்க்கு எளியர் - அன்புடைத் தொண்டர்களுக்கு எளியவர்.

6. பொ-ரை: இருள்புலரும் காலைப் பொழுதிலும் சூரியன் மறையும் அந்திப்பொழுதிலும் இதழ்விரியும் மலர்களால் விதிமுறை

Koviloor Digital Library

இலரும் போது மிலாதது மன்றியும்
அலரும் போதும் அணியுமை யாறரே. 6

1341. பங்க மாலைக் குழலியொர் பால்நிறக்
கங்கை மாலையர் காதன்மை செய்தவர்
மங்கை மாலை மதியமும் கண்ணியும்
அங்க மாலையுஞ் சூடுமை யாறரே. 7

1342. முன்னை யாறு முயன்றெழு வீரெலாம்
பின்னை யாறு பிரியெனும் பேதைகாள்

தெரிந்தோர் சிலர் பணிய, அங்ஙனம் ஆகமவிதி அறியாதார் இறைவன் சூடும் மலரல்லாத மலர்களையும், இலைகளையும் கொண்டு அருச்சிக்க அவற்றையும் அணிவன் ஐயாறன்.

கு-ரை: புலரும்போது - காலை. இலாப்பட்ட பொற்சுடர்ப் போது - மாலை. போது என்பதனை இருவழியும் கூட்டுக. பொற்சுடர்- சூரியன். மலரும் போதுகளால் சிலர் பணிய என்க. மலர்கின்ற போதுகள் என உரை காண்க. இலரும் - அவ்வகையில் காலையும் மாலையும் மலரிட்டு வழிபடும் ஆற்றல் இல்லாதவரும். போதும் இலாததும் - மலராம் தன்மையில்லாதவற்றையும். அன்றியும் - அம் மலரன்றி இலைகளாலும்; அருச்சிக்க அதனை அலரும் போதுமாகக் கொள்ளும் ஐயாறன் என்க.

7. பொ-ரை: இம் மங்கையைக் காதன்மை செய்தவர் இடப் பாகத்தே அழகிய மாலையணிந்த கூந்தலையுடைய பார்வதியைக் கொண்ட கங்கை மாலையர், அங்கமாலை முதலியவற்றைச் சூடும் ஐயாறர்.

கு-ரை: பங்கு அம்மாலைக் குழலியாகிய பார்வதியை உடையவர் பால்நிறக்கங்கையைக் காதன்மைசெய்யும் இயல்பினர். மங்கு ஐ மாலைமதி - ஒளிமங்கிய அந்திப் போதின்கண் தோன்றும் மதி எனப் பொருள் காண்க. அன்றியும் இம்மங்கையைக் காதன்மை செய்தவர் அம்மாலைக் குழலியைப் பங்கின்கண் உடைய கங்கை மாலையர் எனக் கூட்டுக. மாலை மதியம் - பிறை. அங்க மாலை - என்புமாலை.

8. பொ-ரை: முன் துன்ப நெறியின்கண் முயன்றொழுகுவீர் எல்லோரும் பின் அத்துன்ப நெறியினின்று பிரித்தருளுவீராக என்று

Koviloor Digital Library

மன்னை யாறு மருவிய மாதவன்
தன்னை யாறு தொழத்தவ மாகுமே. 8

1343. ஆனை யாறென ஆடுகின் றான்முடி
வானை யாறு வளாயது காண்மினோ
நான்ஐ யாறுபுக் கேற்கவ னின்னருள்
தேனை யாறு திறந்தாலே யொக்குமே. 9

1344. அரக்கின் மேனியன் அந்தளிர் மேனியன்
அரக்கின் சேவடி யாளஞ்ச அஞ்சலென்

வேண்டும் அறியாமையுடையவர்களே! நிலைத்த ஐயாற்றில் எழுந் தருளிய மாதவனை முறையே தொழத்தவமாகும்.

கு-ரை: முன் நையாறு எனப்பிரித்து முன்துன்பநெறியின் கண்ணே முயன்று ஒழுகுவீர் எல்லோரும் என்க. பின் நையாறு எனப் பிரித்துப் பின்னர் அத்துன்ப நெறியினின்றும் பிரித்தருளுவீராக என்று வேண்டும் எனப் பொருள் காண்க. மன்ஐயாறு மருவிய - நிலைத்த ஐயாற்றின்கண் எழுந்தருளிய, மாதவன் தன்னை எனக் கூட்டுக. ஆறுதொழ - பெரியதவத்தோனாகிய பெருமானை முறையாகத் தொழ.

9. பொ-ரை: பஞ்சகவ்வியங்களைத் திருவபிடேகம் கொண்டு ஆடுகின்றவனாகிய பெருமான் திருமுடியில் வானையளாவிய கங்கை பாய்வதைக் காண்பீராக; ஐயாறு புகுந்த அடியேனுக்கு அவன் இன்னருள் தேன் ஆறு திறந்து பாய்ந்தாற் போன்று தித்தித்திருக்கும்.

கு-ரை: ஆன்ஐ - பசுவிடத்தில் உண்டாகிய ஐந்து. பஞ்ச கவ்வியம். ஆறு என - ஆற்றுவெள்ளம்போல. ஆடுகின்றான் - அபிடேகம் கொள்பவன். முடி - அவனது திருமுடியை. வான் ஐ ஆறு - ஆகாயத் திடத்தே உண்டாகிய அழகிய கங்கை. வளாயது - சூழ்ந் திருப்பது. காண்மின் - காணுங்கள். நான் ஐயாறுபுக்கு அவன் இன்னருள் ஏற்க எனக்கூட்டுக. ஏற்க - அவனது இனிய அருளைக் கேட்டேனாக. தேனையாறு - தேனாறு. அவனது இன்னருள் வேண்டி நின்ற எனக்கு அவனது அருள் தேனாறு எனப் பெருகி ஓடி வந்தது என்க.

10. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் செவ்வரக்கினைப் போன்று சிவந்த மேனியனும், அழகிய தளிர்

Koviloor Digital Library

றரக்க னீரைந்து வாயு மலறவே
அரக்கி னானடி யாலுமை யாறனே. 10

திருச்சிற்றம்பலம்

போன்று விளங்கும் மேனியனும் ஆவன்; செவ்வரக் கனைய சிவந்த அடி உடைய உமாதேவி அஞ்சுதலும், 'அஞ்சேல்' என்று கூறி இராவணனது பத்து வாய்களும் அலறுமாறு தன் திருவடி விரலால் அரக்கியவன் ஆவன்.

கு-ரை: அரக்கின் மேனியன் - அரக்குப்போன்ற சிவந்த நிறத்தையுடைய மேனியன். அந்தளிர் மேனியன் - அழகிய தளிரின் மென்மை போன்ற மெல்லியன். அரக்கின் சேவடியாள் - அரக்கைப் போன்ற சிவந்த காலடியையுடையாள். அரக்கன் - இராவணன். அரக்கினான் - அழுத்தி நெரியச் செய்தான். அடியால் அரக்கினானும் ஐயாறன் என்க.


திருநாவுக்கரசர் புராணம்

ஆதி தேவர்தந் திருவருட்
பெருமையார் அறிந்தார்?
போத மாதவர் பனிமலர்ப்
பொய்கையில் மூழ்கி
மாதொர் பாகனார்
மகிழும்ஐ யாற்றிலோர் வாவி
மீதுதோன்றிவந் தெழுந்தனர்
உலகெலாம் வியப்ப.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library



திருவையாறு:

தேசவிளக்கெல்லாம் ஆனாய் நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதி

Koviloor Digital Library

28. திருவையாறு

பதிக வரலாறு:

நாவுக்கரசர் ஐயாற்றில் கயிலைநாதர் திருக்கோலம் கண்டு பாடித் திருத்தொண்டு செய்து ஐயாறமர்ந்து கண்ணுத லாரைப் பாடியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 385.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 141 **பதிக எண்: 28**

திருச்சிற்றம்பலம்

1345. சிந்தை வண்ணத்த ராய்த்திறம் பாவணம்
முந்தி வண்ணத்த ராய்முழு நீறணி
சந்தி வண்ணத்த ராய்த்தழல் போல்வதோர்
அந்தி வண்ணமு மாவரை யாறரே. 1

1346. மூல வண்ணத்த ராய்முத லாகிய
கோல வண்ணத்த ராகிக் கொழுஞ்சுடர்

1. **பொ-ரை:** ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர், அடியவர்களின் சிந்தை வண்ணமும்; மாறுபடாத வண்ணம் முன்னே தோன்றிய வண்ணமும், முழுநீறு அணிந்து அந்திவண்ண மாகிய செவ்வண்ணமும், தழல்போல்வதோர் வண்ணமும் உடைய இயல்பினர்.

கு-ரை: சிந்தை - மனத்தின்கண். வண்ணத்தராய் - நிலை பெற்ற தன்மையை உடையவராய். திறம்பாவணம் - மாறுபடாதபடி, முந்தி - முற்பட்டு. முழுநீறணி சந்திவண்ணத்தராய் - முழுநீறு பூசிய செந் நிறத்தை உடையவராய். சந்தி - காலை மாலை வேளை செவ்வானம். அந்திவண்ணமுமாவர் - மாலைக் காலத்து செவ்வானம் போன்ற நிறத்தை உடையவருமாவர். சந்திவண்ணத்தர் - நன்றாகத் தியானிப் பவரது தியான உருவே தன் உருவமாக உடையவர். சந்தியா சத்திகளின் நிறங்களை உடையவராய் எனலுமாம்.

2. **பொ-ரை:** ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர், எல்லா உலகங்களுக்கும் மூலமாகிய இயல்பும், முதலாகித்

Koviloor Digital Library

நீல வண்ணத்த ராகி நெடும்பளிங்
கால வண்ணத்த ராவரை யாறரே. 2

1347. சிந்தை வண்ணமுந் தீயதோர் வண்ணமும்
அந்திப் போதழ காகிய வண்ணமும்
பந்திக் காலனைப் பாய்ந்த தொர் வண்ணமும்
அந்தி வண்ணமு மாவரை யாறரே. 3

தோன்றிய திருக்கோலத்தின் இயல்பும், வளமையான சுடர்விடுகின்ற நீலநிறமும் நீண்ட பளிங்கனைய தம் திருவுருவத்தில் நஞ்சின் வண்ணமும் உடையவராய்த் திகழ்வர்.

கு-ரை: மூலவண்ணத்தராய் - உலககாரணராய். முதலாகிய கோலவண்ணம் - ஒடுக்கிய உலகம் முதலியவற்றைத் தம்மிடத் திலிருந்து தோற்றுவிக்கும் தன்மை.

கொழுஞ்சுடர் நீலவண்ணத்தர். கொழுவிய மிக்க ஒளியை உடைய நீலமணி மேனியராகிய திருமாலைப் பாகமாக உடையவர். கரிய அகோர முகத்தை உடையவர் எனலுமாம். பளிங்கு - திருவெண்ணீறணிந்ததால் பளிங்குபோன்ற நிறம். ஆலவண்ணத்தர் - கரியர்.

3. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் சிந்தை வண்ணமும், தீயின் வண்ணமும், அழகாகிய அந்திப்போதின் வண்ணமும், தானும், கடாவும், பாசக்கயிறுமாக வரிசையாகவரும் காலனைப் பாய்ந்து உதைத்த இயல்பும் உடையவர்.

கு-ரை: சிந்தை வண்ணம் - நினைப்பார் மனமே இடமாகக் கொள்ளும் தன்மை. தீயதோர் வண்ணம் - நெருப்பனைய சிவந்த நிறம். அல்லது தீயேந்தி நிற்கும் தன்மையும் கொடிய கோபமுடை யராம் தன்மையும் என்க. அந்திப்போது - அந்திமாலை போன்ற. பந்தி - ஒழுங்கு. ஒழுங்குமுறையாகிய நீதியை நிலைநாட்டும் காலன் என்க. அந்தீவண்ணம் என்பது அந்தி எனக்குறுகியது. அந்தீ வண்ணம் - நெருப்பாம் தன்மை. அட்ட மூர்த்தங்களில் நெருப்பு வடிவாய் விளங்குபவன் என்க.

Koviloor Digital Library

1348. இருளின் வண்ணமு மேழிசை வண்ணமும்
சுருளின் வண்ணமுஞ் சோதியின் வண்ணமும்
மருளு நான்முகன் மாலொடு வண்ணமும்
அருளும் வண்ணமு மாவரை யாறரே. 4

1349. இழுக்கின் வண்ணங்க ளாகிய வெவ்வழல்
குழைக்கும் வண்ணங்க ளாகியுங் கூடியும்
மழைக்கண் மாமுகி லாகிய வண்ணமும்
அழைக்கும் வண்ணமு மாவரை யாறரே. 5

4. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர். இருளின் வண்ணமும், ஏழிசைகளின் வண்ணவேற்றுமைகளும், சுருண்ட சடையின் வண்ணமும், ஒளியின் வண்ணமும், நான்முகனும் திருமாலும் விண்பறந்தும் மண் புகுந்தும் காண்டற்கரிதென மருளும் வண்ணமும் அவர்கள் ஆணவம் அடங்கியவழி அருளும் வண்ணமும் உடையவராவர்.

கு-ரை: இருளின் வண்ணம் - அகோர முகத்தின் நிறம். ஊழிக் காலத்து இரவின்கண் அதன்மயமாய்ச் சுற்றித் திரியும் தன்மை எனலுமாம். அன்பரல்லாதார்க்கு இருளின் தன்மை போல உணர்தற்கரிதாய்த் தோன்றும் நிலை எனவும் கூறலுமொன்று. ஏழிசை வண்ணமு மாவர் - குரல் துத்தம் முதலிய ஏழிசையின் தன்மயனாய் விளங்குபவர். சுருளின் வண்ணமும் - எங்கும் சுற்றிச் சூழ்ந்திருக்கும் தன்மை. மருளும் - மயங்கும். நான்முகன் மாலொடு வண்ணம் - திருமால் பிரமராயிருக்கும் தன்மை எனலும் ஆம். அருளும் வண்ணம் - அருள் செய்யும் தன்மை. ஆவர் என்பதனை எல்லாவற்றோடும் கூட்டுக.

5. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் நல்லியல்புகளினின்றும் இழுக்கி அல்லவை செய்தால் வெவ்விய அழலைப் போன்று வருத்தும் மறக்கருணைவண்ணமும், மழையைத் தன்னிடத்துடைய பெரிய மேகங்களின் இயல்பு போன்று வரையாது அருள் வழங்கும் வண்ணமும், தம்மடியார்களை அழைத்து அருள்வழங்கும் வண்ணமும் உடையவர்.

கு-ரை: இழுக்கின் வண்ணங்களாகிய வெவ்வழல் என்றிணைப்பின் ஆணவமலத்தின் பலவேறு உருவங்களாகிய கொடுமைகள் என்க. குழைக்கும் வண்ணங்கள் - மலபரிபாகம் செய்யும் குரு

Koviloor Digital Library

1350. இண்டை வண்ணமு மேழிசை வண்ணமும்
தொண்டர் வண்ணமுஞ் சோதியின் வண்ணமும்
கண்ட வண்ணங்க ளாய்க்கனல் மாமணி
அண்ட வண்ணமு மாவரை யாறரே. 6

1351. விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்பு வார்வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமு மாவரை யாறரே. 7

முதலிய முகூர்த்தங்கள். குழைந்து - கரைத்து வலியிலதாகச் செய்தல். மழைக்கண் மாமுகில் - மழையைத் தன்னிடத்துக் கொண்ட கரிய முகில். மழை - நீர். அழைக்கும் வண்ணம் - ''அருந்தவர் வாவென் றணைத்த மலர்க்கையும்'' (தி.10 திருமந்திரம்) அபயகரம் காட்டும் தன்மை.

6. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் இண்டைமாலை சூடும் இயல்பும், ஏழிசை வடிவாகிய இயல்பும், தொண்டர்கள் நடுவில் நிற்கும் இயல்பும், ஒளி-இயல்பும், கண்ட வண்ணங்கள் அனைத்தும், கனல்போன்று செவ்வொளி விரிக்கும் மாணிக்கவண்ணமும், அண்டங்களின் வண்ணமும் ஆகியவர்.

கு-ரை: இண்டை வண்ணம் - தலைமாலையின் தன்மை. தொண்டர் வண்ணம் - அடியார் தன்மை. கண்ட வண்ணங்களாய் - இவையெல்லாம் பெருமான் கண்ட தன்மைகளாய். அனல் - நெருப் பெனச் சிவந்து விளங்கும். மாமணி - சிறந்த மாணிக்கம். அண்டம் - உலகம். ஆவர் என்பதை முன்னே தனித்தனிக் கூட்டுக.

7. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் எல்லோரும் விரும்பும் இயல்பும், வேதத்தின் இயல்பும், கரும்பினையொத்த இனிய மொழியையுடைய உமையம்மையார் இயல்பும், தம்மை விரும்பும் மெய்யடியார்களின் வினைகளைத் தீர்த்திடும் இயல்பும், அரும்பின் இயல்பும் உடையராவர்.

கு-ரை: விரும்பும் வண்ணம் - மெய்யன்பர் விரும்பும் வடிவங்கள். வேதத்தின் வண்ணம் - வேதங்களை வெளிப்படுத்தும் தன்மை. வேதவடிவம் எனலுமாம். கரும்பின் இன்மொழிக் காரிகை -

Koviloor Digital Library

1352. ஊழி வண்ணமு மொண்சுடர் வண்ணமும்
வேழ ஈருரி போர்த்ததொர் வண்ணமும்
வாழித் தீயுரு வாகிய வண்ணமும்
ஆழி வண்ணமு மாவரை யாறரே. 8

1353. செய்த வன்திரு நீறணி வண்ணமும்
எய்த நோக்கரி தாகிய வண்ணமும்
கைது காட்சி யரியதோர் வண்ணமும்
ஐது வண்ணமு மாவரை யாறரே. 9

பார்வதி. விரும்புவார் - தன்னை நேசிப்பார்.

வினைதீர்த்திடும் வண்ணம் - காரிகை வடிவம் கொண்டிருப்பது வினை தீர்த்தற்பொருட்டு என்க. அரும்பின் வண்ணம் - மணத்தை உள்ளடக்கிய அரும்பின் தன்மை.

8. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர் ஊழிகள் தோறும் ஒளிரும் இயல்பும், ஒளிச்சுடர் இயல்பும், யானையின் பச்சைத்தோலைப் போர்த்தருளிய இயல்பும், ஊழித்தீ உருவாகிய இயல்பும், கடல்வண்ணமும் உடையவராவர்.

கு-ரை: ஊழி வண்ணம் - ஊழிக்காலமாம் இயல்பு. ஒண் சுடர் - சூரியன், சந்திரன் அக்கினி. ஆழித்தீ - ஊழிக் காலத்தில், பெருகி கடலிலிருந்து, உலகை அழிக்கும் வடவைத்தீ. ஆழி வண்ணம் - கடலாம் தன்மை.

9. பொ-ரை: ஐயாற்றில் எழுந்தருளும் இறைவன், ஒருகால் யோகு செய்தவனாகத் திருநீறணிந்த வண்ணத்தினன். காண்பதற்கு அரிய தன்மை வாய்ந்தவன், மனதிலே சிறைப்படுத்தித் தியானித்தற்கு அருமை வாய்ந்த தன்மையன். மென்மை தழுவிய அழகினன்.

கு-ரை: ஒருகால் யோகு செய்தவனாகத் திருநீறணிந்த வண்ணம் என்க. எய்த - அடைய. நோக்கரிதாகியவண்ணம் - காணு தற்கரிய தன்மை. கைதுகாட்சி - மனத்திற் சிறைப்படுத்திக் காணுதல். கைது - கைப்பற்றாக; அநுபவமாக. ஐது - மென்மை அல்லது அழகு.

Koviloor Digital Library

1354. எடுத்த வாளரக் கன்திறல் வண்ணமும்
இடர்கள் போற்பெரி தாகிய வண்ணமும்
கடுத்த கைந்நரம் பாலிசை வண்ணமும்
அடுத்த வண்ணமு மாவரை யாறரே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர், திருக்கயிலாயத்தை எடுக்கலுற்ற வாளினை உடைய இராவணன் ஆற்றல், துன்பங்கள் போற் பெரிதாகுமாறு செய்தருளிய இயல்பும், மிகுந்த தன் கைநரம்புகளையே யாழாக்கி அவன் இசைத்தவண்ணம் கண்டு அவனுக்கு அருளாளராக அடுத்த வண்ணமும் உடையவர் ஆவர்.

கு-ரை: திறல் - வலிமை. இராவணன் தன் வலியால் கயிலையைப் பெயர்க்க முற்பட்ட தன்மை. இடர்கள்போல் பெரிதாகிய - அவனுடைய துன்பம்போல மலை எடுக்கமுடியாத பருமனாய் ஆகிய தன்மை. கடுத்த - விரைந்து தன் உடலில் பிய்த்த. அடுத்த - அவனுக்கு அருள்செய்யும் குறிப்புப் பொருந்திய.

திருநாவுக்கரசர் புராணம்

கண்டு தொழுது வணங்கிக்
கண்ணுத லார்தமைப் போற்றிக்
கொண்ட திருத்தாண் டகங்கள்
குறுந்தொகை நேரிசை அன்பின்
மண்டு விருத்தங்கள் பாடி
வணங்கித் திருத்தொண்டு செய்தே
அண்டர் பிரான்திரு வையா
றமர்ந் தனர் நாவுக்கரசர்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

29. திருவாவடுதுறை

பதிக வரலாறு:

ஆண்டஅரசு திருக்கோடிகாவைப் பணிந்து ஆவடுதண்டுறையைச் சார்ந்து திருத்தாண்டகம் முன்னருளிச் செய்து திருத்தொண்டு போற்றிச் செய்வாராகிப் பலநாள் தங்கிப் பாடியருளியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 191.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 142 பதிக எண்: 29

திருச்சிற்றம்பலம்

1355. **நிறைக்க வாலிய ளல்லளிந் நேரிழை**
மறைக்க வாலிய ளல்லளிம் மாதராள்
பிறைக்க வாலப் பெரும்புன லாவடு
துறைக்க வாலியோ டாடிய சுண்ணமே. 1

1.பொ-ரை: பிறையோடு கூடிய செஞ்சடையில் கங்கையாகிய பெரும்புனலை உடையவரும், திருவாவடுதுறையில் உள்ள கபாலியுமாகிய சிவபெருமானோடு ஆடிய திருநீற்றினை நிறைக்கத் தூய்மையுடையவள் அல்லள் இந்த நேரிழையணிந்த பெண்; அன்றியும் இப்பெண் அதனால் வரும் துயரங்களை மறைக்கும் வல்லமை உடையவளுமல்லள்.

கு-ரை: தலைவனைக் கண்டு மயங்கிய தன் மகளின் நிலையைத் தாய் கூறுவதாக அகப்பொருட் கருத்தமைந்த பதிகம் இது. நிறைக்க - உடலெங்கும் நிறைவிக்க. வாலியள் - தூயவள். இந்நேரிழை - இந்தத் தலைவி. மறைக்க - மறைத்துப் பேச.

வாலியள் அல்லள் - வலியள் அல்லள்.பிறைக் கவாலம் - பிறையையும் கபாலத்தையும். பெரும்புனல் - காவிரி. கவாலி - கபாலமேந்தியவன். ஆடிய - உடனுறைந்து புணர்ந்த. சுண்ணம் - திருநீற்றுப்பூச்சு. திருநீற்றுப் பூச்சிற்கும் தான் செய்யும் களவொழுக்கத்திற்கும் போதிய தூய்மை உடையவள் அல்லள் என்றார். சுண்ணம் நிறைக்க எனக் கூட்டுக.

Koviloor Digital Library

1356. தவள மாமதிச் சாயலோர் சந்திரன்
பிளவு சூடிய பிஞ்ஞக னெம்மிறை
அளவு கண்டில ளாவடு தண்டுறைக்
களவு கண்டன ளொத்தனள் கன்னியே. 2

1357. பாதிப் பெண்ணொரு பாகத்தன் பன்மறை
ஓதி யென்னுளங் கொண்டவ னொண்பொருள்
ஆதி ஆவடு தண்டுறை மேவிய
சோதி யேசுட ரேயென்று சொல்லுமே. 3

2. பொ-ரை: இக்கன்னி, வெள்ளிய பெருமைமிகுந்து மதிக்கத்தக்க சாயலை உடைய சந்திரனின் பிளவாகிய பிறையினைச் சூடிய எம்மிறைவனாகிய பிஞ்ஞகனின் அன்பின் அளவை முற்றும் கண்டிலளேனும், திருவாவடுதுறையிலே அவனைக் களவொழுக் கத்தாற் கண்டவளை ஒத்தாள் ஆயினள்.

கு-ரை: தவளம் - வெண்மை. மா - சிறந்த. மதிச்சாயலோர் சந்திரன் பிளவு - முழுமதியின் ஓர் சாயலைக்கொண்ட பிளவுச் சந்திரன் எனலுமாம். ஒருகலைப் பிறை என்றபடி. பிஞ்ஞகன் - தலைக்கோலம் அணிந்தவன்.

எம் இறை அளவுகண்டிலள் - எம் இறைவனது பெருமையின் அளவை அறிந்தாளில்லை. களவு கண்டனள் - களவொழுக்கத்தின் கண்ணே ஈடுபட்டாள். ஒத்தனள் - அவனோடு உள்ளத்தால் ஒரு தன்மையள் ஆயினாள்.

3. பொ-ரை: இப்பெண், தன் திருமேனியில் ஒரு பாதிப் பெண் ணினை உடையவனே என்றும், பலவாகிய மறைகளை ஓதியருளி என்னுள்ளத்தைக் கவர்ந்துகொண்டவனே என்றும், ஒள்ளிய உலகத்துப் பொருள்களுக்கெல்லாம் ஆதியானவனே என்றும், திருவாவடுதுறையில் விரும்பியெழுந்தருளியிருக்கும் சோதியே என்றும், சுடரே என்றும் சொல்லும் இயல்பினள்.

கு-ரை: பாதிப்பெண் - பார்வதிதேவியின் பாதி உடலை. ஒரு பாகத்தன் - ஒரு பாகத்தே கொண்டவன். பன்மறை ஓதி - வேதங்கள் பலவும் விரித்தவன். ஆதி - முதல்வன்.

Koviloor Digital Library

1358. கார்க்கொண் மாமுகில் போல்வதோர் கண்டத்தன்
வார்க்கொண் மென்முலை சேர்ந்திறு மாந்திவள்
ஆர்க்கொள் கொன்றைய னாவடு தண்டுறைத்
தார்க்கு நின்றிவள் தாழுமா காண்மினே. 4

1359. கருகு கண்டத்தன் காய்கதிர்ச் சோதியன்
பருகு பாலமு தேயெனும் பண்பினன்
அருகு சென்றில ளாவடு தண்டுறை
ஒருவ னென்னை யுடையகோ வென்னுமே. 5

4. பொ-ரை: இப்பெண், கருமையைக்கொண்ட பெரிய முகில் போலும் கண்ட்த்தை உடையவனும், கச்சினைக்கொண்ட மெல்லிய முலையாளாகிய உமையம்மையைச் சேர்ந்து இறுமாந்து இவளது நெஞ்சைப் பிணைக்கும் கொன்றையினை உடையவனும் ஆகிய திருவாவடுதுறைப் பெருமானின் திருமார்பில் அணிந்துள்ள கொன்றைமாலைக்கு மனம் தாழ்கின்றனள்; காண்பீராக.

கு-ரை: கார்க்கொள் - கருமையைக் கொண்ட. மா - சிறந்த. முகில் - மேகம். வார்க்கொள் - கச்சினைக் கொண்ட. இறுமாந்து - செருக்கடைந்து. ஆர்க்கொள் - ஆத்திமாலையைக் கொண்ட எனலுமாம். தார்க்கு - மாலைக்கு. தாழுமா - விரும்புமாற்றை. பெருமானை மென்முலையாற் சேர்ந்து இறுமாந்து அவனணிந்திருக்கும் மாலையைப் பெறப் பணிந்துநின்றாள் ஒரு தலைவி; காணுங்கள் என்க.

5. பொ-ரை: இப்பெண், கருத்த கண்டத்தை உடையவனும், கதிர்காய்கின்ற ஒளிவடிவினனும், பருகுதற்கினிய பால் அமுது என்று கூறத்தக்க பண்பை உடையவனுமாகிய அப்பெருமான் அருகிற் சென்றனள். அல்லளாயினும், அவன்பாற்கொண்ட காதல் மிகுதியால் ''என்னை உடையவன் திருஆவடுதண்டுறையில் உறையும் தலைவனே'' என்று கூறும் இயல்பினள்.

கு-ரை: கருகு - கருகிய. காய் - எரிக்கின்ற. கதிர் - கிரணங்களை உடைய. பருகு - பருகத்தக்கதாகிய. பாலமுதேயெனும் பண்பினன் - பாலும் அமுதமும் ஒத்த பண்பையுடையவன். அருகு சென்றிலள் - அவன் அருகிற்சென்று காணவுமில்லாதாள் ஒருத்தி. என்னையுடைய கோ - என்னை மனைவியாக உடைய தலைவன். என்னும் - என்று சொல்லிக்கொண்டிருப்பாள்.

Koviloor Digital Library

1360. குழலுங் கொன்றையுங் கூவிள மத்தமும்
தழலுந் தையலோர் பாகமாத் தாங்கினான்
அழக னாவடு தண்டுறை யாவெனக்
கழலுங் கைவளை காரிகை யாளுக்கே. 6

1361. பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனைத்
தஞ்ச மென்றிறு மாந்திவ ளாரையும்
அஞ்சு வாளல்ல ளாவடு தண்டுறை
மஞ்ச னோடிவ ளாடிய மையலே. 7

1362. பிறையுஞ் சூடிநற் பெண்ணோ டாணாகிய
நிறையும் நெஞ்சமும் நீர்மையும் கொண்டவன்

6. பொ-ரை: இவ்வழகுடைய பெண், கொன்றை மலர்களும், கூவிளந்தளிர்களும், ஊமத்தமலர்களும் சூடிய சடையும், தையல் ஒரு பாகமும் கொண்ட ஆவடுதண்டுறைக்குரிய அழகனே என்று விரும்பி அழைத்தலால், கைவளைகள் கழலுகின்ற நிலைமையள் ஆயினள்.

கு-ரை: குழல் - சடைமுடி. கூவிளம் - வில்வம். கூவிளம் மத்தம், தழல் இவற்றைத் தாங்கினான் - தையல் - பார்வதி. ஓர் பாகமாத் தாங்கினான் - ஒரு பாகத்தே கொண்டான். கைவளை கழலும், உடல் இளைக்கும், நிறையழியும் என்றவாறு.

7. பொ-ரை: இப்பெண் திருவாவடுதண்துறையில் உள்ள, புலன் ஐந்தும் வென்ற பெருவீரனாகிய சிவபெருமானோடு ஆடிக் கொண்ட மயக்கத்தினால், பஞ்சனைய மெல்லடியுடைய உமா தேவியாரைப் பங்கிற்கொண்ட அப்பரமனைத் தஞ்சப்பொருளாகக் கொண்டு இறுமாப்பு எய்தி, வேறு யாரையும் அஞ்சாதவள் ஆயினள்.

கு-ரை: பஞ்சின்மெல்லடிப்பாவை - பஞ்சுபோல மெல்லிய அடிகளையுடைய பாவை; பார்வதி. தஞ்சம் - அடைக்கலம். இறுமாந்து - செருக்கியிருத்தலால். மஞ்சன், மைந்தன் என்பதன் போலி. மையல் - காம மயக்கம். ஆவடுதண்துறை மைந்தனோடு இவளாடியமையால், அவனையே அடைக்கலமாக எண்ணிச் செருக்கி யாவையும் அஞ்சு வாளல்லள் என்க.

8. பொ-ரை: இப்பெண், பிறையினைச் சென்னியிற் சூடிய பெண்ணும் ஆணுமாகிய இறைவனும், மேகங்களும்,

Koviloor Digital Library

அறையும் பூம்பொழி லாவடு தண்டுறை
இறைவ னென்னை யுடையவ னென்னுமே. 8

1363. வையந் தானளந் தானும் அயனுமாய்
மெய்யைக் காணலுற் றார்க்கழ லாயினான்
ஐய னாவடு தண்டுறை யாவெனக்
கையில் வெள்வளை யுங்கழல் கின்றதே. 9

1364. பக்கம் பூதங்கள் பாடப் பலிகொள்வான்
மிக்க வாளரக் கன்வலி வீட்டினான்

வண்டினங்களும் ஒலிக்கின்ற பூம்பொழில்களை உடைய ஆவடுதண்துறையில் என்னை உடையவனும் ஆகிய பெருமானே, என் கற்பினையும், உள்ளத்தினையும், பிற தன்மைகளையும் கவர்ந்து கொண்டவன் என்று சொல்லுமியல்பினள்.

கு-ரை: பெண்ணொடு ஆணாகி - மாதொரு கூறனாகி. அ, சாரியை. நிறை - ஒழுக்கம். நீர்மை - அழகு. அறையும் - வண்டுகள் ஒலிக்கின்ற. பூம்பொழில் - பூவார்சோலை. என்னும் - என்று சொல்லுவாள்.

9. பொ-ரை: உலகங்களைத் தான் அளந்தவனாகிய திருமாலும், பிரமனும் ஆகிய இருவரும் மெய்ப்பொருளாகிய பிரமத்தைக் காணலுற்றபோது அவ்விருவர் முன்னே பேரழலாய் நிமிர்ந்த பெருமானே! ஐயனே! ஆவடுதண்டுறையில் உள்ள அண்ணலே என்று வாய்விட்டுக்கூவி உடல் மெலிதலால் இவள் கைகளில் உள்ள வெள்வளைகள் கழல்கின்றவாயின.

கு-ரை: வையம் - உலகம். அளந்தானும் - அளந்தவனாகிய திருமாலும். அயன் - பிரமன். மெய்யை - உண்மையான பரம் பொருளை. அழலாயினான் - சோதிவடிவாய்த் தோன்றியவன். ஐயன் - அழகியவனே! அண்மைவிளி. இத்தலைவிக்கு ஐயனே ஆவடு தண்துறையா என்று சொல்லும்போதே கைவளை கழல்கின்றதே என்க.

10. பொ-ரை: பெருமான் தன் நெஞ்சும் கற்பும் கவர்ந்து கொண்டனனேனும், அதுகுறித்துச் சிறிதும் நாணமில்லாதவளாகிய இப்பெண், மீண்டும், பூதங்கள் பக்கத்தில் நின்று பாடப் பலி கொள்

Koviloor Digital Library

அக்க ணிந்தவ னாவடு தண்டுறை
நக்க னென்னுமிந் நாணிலி காண்மினே. 10

திருச்சிற்றம்பலம்

வான் என்றும், ஆற்றல்மிக்க வாளை உடைய அரக்கனை வலி கெடுத்தான் என்றும், அக்கமாலைகள் அணிந்தான் என்றும். திரு ஆவடு தண்டுறையில் உள்ள திகம்பரன் என்றும் கூறிப் புகழ்ந்தவண்ணம் இருப்பாள்.

கு-ரை: பக்கம் - இருபுறங்களிலும். பலி - பிச்சை. மிக்க - செருக்கிய. அரக்கன் - இராவணன். வீட்டினான் - அழித்தான். அக்கு- என்புமாலை. நக்கன் - எல்லோரும் நகுதற்குரிய உடை நீத்த தோற்றமுடையவன். இந்நாணிலி - இந்த வெட்கத்தை விட்ட தலைவி. காமம்விடு அல்லது நாண்விடு என்பவற்றுள் நாணத்தை விட்டாள் என்க. நாணிலியாதலின் நக்கன் என்பாள் என்க.

திருநாவுக்கரசர் புராணம்

ஆவடுதண் டுறையாரை அடைந்துய்ந் தேனென்
றளவில்திருத் தாண்டகமுன் அருளிச் செய்து
மேவுதிருக குறுந்தொகைநே ரிசையுஞ் சந்த
விருத்தங்க ளானவையும் வேறுவேறு
பாவலர்செந் தமிழ்த்தொடையாற் பள்ளித் தாமம்
பலசாத்தி மிக்கெழுந்த பரிவி னோடும்,
பூவயலத் தவர்பரவப் பலநாள் தங்கிப்
புரிவுறுகைத் திருத்தொண்டு போற்றிச்செய்வார்,

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

30. திருப்பராய்த்துறை

பதிக வரலாறு:

எங்கும் நிறைந்த புகழாளர் திருச்சிராப்பள்ளி மலையும், கற்குடியும் தொழுது பரவி நலங்கொள் செல்வத் திருப்பராய்த் துறையீசரைத் தொழுது பரவியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 302)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 143 பதிக எண்: 30

திருச்சிற்றம்பலம்

1365. கரப்பர் கால மடைந்தவர் தம்வினை
சுருக்கு மாறுவல் லார்கங்கை செஞ்சடைப்
பரப்பு நீர்வரு காவிரித் தென்கரைத்
திருப்ப ராய்த்துறை மேவிய செல்வரே. 1

1. பொ-ரை: நீர் பரந்துவருகின்ற காவிரியின் தென்கரையில் உள்ள திருப்பராய்த்துறையில் விரும்பி எழுந்தருளியிருக்கும் அருட் செல்வர், தம்மடியடைந்த அன்பர்கட்குப் பக்குவகாலம் வருந் துணை யும் மறைந்துநின்று அருள்வர்:

பின் அக்காலம் வாய்த்தவழி, அவர்வினைகளைச் சுருக்கிக் கெடுக்குமாற்றில் வல்லவர்; செஞ்சடையிற் கங்கையை உடையார், (காலத்தில் வந்தடைந்தவர் வினைகளை மறையும்படிச் செய்பவர்; விரிந்த கங்கையைத் தம் செஞ்சடையில் சுருக்குமாற்றிலும் வல்லவர் என்றும் இணைக்கலாம்.)

கு-ரை: காலமடைந்தவர் தம்வினை கரப்பர் - காலத்தால் வந்தடைந்த அடியவர்களின் வினைகளை மறையச்செய்வர். கங்கை சுருங்குமாறு வல்லார் - பெருகிவரும் கங்கையைத் தம் சடையில் சுருக்கும் வல்லவர். பரப்புநீர் வருகாவிரி - அகன்று பரவிய தண்ணீரை உடையதாய் வருகின்ற காவிரி. இத்தலத்து அகன்ற காவிரியாய் வருதல் குறித்தது. செல்வர், இத்தலத்து இறைவர் பெயர். பராய்த்துறை, பராய் என்னும் தலமரம் பற்றிய பெயர் வழக்கு.

Koviloor Digital Library

1366. மூடி னார்களி யானையின் ஈருரி
பாடி னார்மறை நான்கினோ டாறங்கம்
சேட னார்தென்ப ராய்த்துறைச் செல்வரைத்
தேடிக் கொண்டடி யேன்சென்று காண்பனே. 2

1367. பட்ட நெற்றியர் பால்மதிக் கீற்றினர்
நட்ட மாடுவர் நள்ளிரு ளேமமும்
சிட்ட னார்தென்ப ராய்த்துறைச் செல்வனார்
இட்ட மாயிருப் பாரை யறிவரே. 3

1368. முன்பெ லாஞ்சில மோழைமை பேசுவர்
என்பெ லாம்பல பூண்டடங் குழிதர்வர்

2. பொ-ரை: தென்பராய்த்துறையுறையும் அருட்செல்வர், செருக்குடைய யானையின் பச்சைத் தோலினால் போர்த்தித் தம் திருமேனியை மூடியவர்; வேதங்கள் நான்கினோடு, அங்கங்கள் ஆறினையும் பாடியவர்; மிக்க பெருமையை உடையவர்; அப்பெருமானைத் தேடிக்கொண்டு சென்று அடியேன் காண்பேன்.

கு-ரை: மூடினார் - போர்த்தார். களி - மதத்தால் செருக்கிய. ஈருரி - உரித்தெடுத்த தோல். மறை நான்கினோடு ஆறங்கம் பாடினார் என்க. சேடனார் - பெரியவர்; அடியேன் தேடிக் கொண்டு சென்று காண்பன் என்க.

3. பொ-ரை: தென்பராய்த்துறை உறையும் அருட்செல்வர் பட்டமணிந்த நெற்றியினை உடையவர்; பாலனைய நிலவு சொரியும் மதிக்கீற்றினை உடையவர்; நள்ளிருளில் உலகிற்கு இன்பம் செய்யும் பொருட்டு நடனம் ஆடுபவர்; உயர்வுடையவர்; தம்மிடம் விருப்பமாயிருக்கும் அடியார்களைத் தாம் நன்கு அறியும் இயல்பினர் ஆவர்.

கு-ரை: பட்ட நெற்றியர் - நெற்றியில் திருநீற்றுப்பட்டமணிந்தவர். மதிக்கீறு - பிறை. நள்ளிருள் ஏமம் - இருள் செறிந்த இரவு எனலுமாம். யாமம் என்பதன் திரிபு ஏமம். சிட்டர் - சிரேஷ்டர். இட்டமாயிருப்பாரை - தன்மேல் விருப்பமாய் இருக்கும் அடியாரை.

4. பொ-ரை: தென்பராய்த்துறை உறையும் அருட்செல்வர், அறியாமையொடு கூடிய சில சொற்களைப் பலர் முன்னிலையிலும்

Koviloor Digital Library

தென்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
அன்ப ராயிருப் பாரை யறிவரே. 4

1369. போது தாதொடு கொண்டு புனைந்துடன்
தாத விழ்சடைச் சங்கரன் பாதத்துள்
வாதை தீர்க்கவென் றேத்திப் பராய்த்துறைச்
சோதி யானைத் தொழுதெழுந் துய்ம்மினே. 5

1370. நல்ல நான்மறை யோதிய நம்பனைப்
பல்லில் வெண்டலை யிற்பலி கொள்வனைத்
தில்லை யான்தென் பராய்த்துறைச் செல்வனை
வல்லை யாய்வணங் கித்தொழு வாய்மையே. 6

பேசுவார். எலும்புகள் பலவற்றைப் பூண்டு திரிவார். தம்மீது அன்பராய் இருப்பாரை நன்கு அறியும் இயல்பினர்.

கு-ரை: முன்பெலாம் - பலர் முன்னிலையிலும். மோழைமை - அறியாமையொடு கூடிய சொற்கள். உழிதர்வர் - திரிவர். அறிவர் - தெரிந்து திருவருள் பாலிப்பர்.

5. பொ-ரை: உலகில் உள்ளவர்களே! தென்பராய்த்துறையில் உறைகின்ற ஒளி வடிவான பெருமானை மகரந்தத் தொடும் கூடிய போதுகளைக்கொண்டு புனைந்து தாதவிழும் சடையுடைய அச்சங் கரன் திருவடிகளில் துயரங்களைத் தீர்த்தருள்க என்று பரவித் தொழு தெழுந்து உய்வீர்களாக.

கு-ரை: தாதொடுபோது கொண்டு என மாறுக. தாது - மகரந்தம். புனைந்து - சாத்தி. உடன் - பின்னர். தாதவிழ் சடை - மகரந்த முறைந்து மணந்து விளங்கும் சடை. சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். பாதத்துள் - திருவடிகளில். வாதை - பிறவிநோய். இருவினை முதலிய பாசத்தால்வரும் துன்பங்கள். தீர்க்க என்று - தீர்த்தருள்வீராக என்று. ஏத்தி - புகழ்ந்து; தோத்திரித்து. உய்மின் - வாழுங்கள்.

6. பொ-ரை: நெஞ்சே! தென்பராய்த்துறையில் உறைகின்ற அருட்செல்வரும், நல்லனவாகிய நான்கு மறைகளை ஓதிய நம்பரும், பல இல்லங்களிலும் வெள்ளியதலையிற் பலிகொள்ளும் இயல்

Koviloor Digital Library

1371. நெருப்பி னாற்குவித் தாலொக்கு நீள்சடைப்
பருப்ப தம்மத யானை யுரித்தவன்
திருப்ப ராய்த்துறை யார்திரு மார்பின்நூல்
பொருப்ப ராவி யிழிபுனல் போன்றதே. 7

1372. எட்ட விட்ட விடுமண லெக்கர்மேல்
பட்ட நுண்துளி பாயும் பராய்த்துறைச்
சிட்டன் சேவடி சென்றடை கிற்றிரேல்
விட்டு நம்வினை யுள்ளன வீடுமே. 8

பினரும், தில்லைத்தலத்தில் எழுந்தருளியவரும் ஆகிய பெருமானை விரைந்து வணங்கி மெய்ம்மையாகத் தொழுவாயாக!

கு-ரை: நல்ல நான்மறை - நன்மையைத் தருவனவாய நான்கு வேதங்கள், தில்லையான் - தில்லையில் எழுந்தருளி இருப்பவன். வல்லையாய் - விரைவுடையனாய். தொழு - வணங்கு. வாய்மையே - உண்மையாக.

7. பொ-ரை: நெருப்பினைக் குவித்துவைத்தாலொத்த நீண்ட சடை உடையவரும், மலையினையொத்த மதயானையினை உரித்துப் போர்த்தவரும் ஆகிய திருப்பராய்த்துறையில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருமார்பிற் புரள்கின்ற முந்நூல், மலையினை அரித்துக் கொண்டு இழிகின்ற அருவிப்புனலைப் போன்றுள்ளது.

கு-ரை: நெருப்பினால் குவிந்தாலொக்கும் நீள்சடை - நெருப்பைக் குவித்ததுபோன்று செவ்வொளி விரிந்த நீள்சடை. பருப்பதம் - மலைபோன்ற. மதயானை - மதம் பொருந்திய யானை. திருமார்பின் நூல் பொருப்பு அருவி இழிபுனல் போன்றது - மார்பில் அணிந்த பூணூல் மலையினின்று இழியும் அருவி போன்றது என்க.

8. பொ-ரை: வானை எட்டுமாறு இட்ட மணலிடு குன்றின் மேல் நுண்ணிய நீர்த்துளிகள் பாய்கின்ற பராய்த்துறையில் உறைகின்ற உயர்ந்த இறைவன் சேவடிகளிற் சென்று அடையும் வல்லமை உடையீராயின், நம்வினைகளாய் உள்ளவை நம்மைவிட்டு நீங்கிக் கெடும்.

கு-ரை: எட்டவிட்ட - உயரமாக அமைத்த. இடுமணல் எக்கர் - காற்றாலும் அலையாலும் சேர்க்கப்பட்ட மணல்

Koviloor Digital Library

1373. நெருப்ப ராய்நிமிர்ந் தாலொக்கு நீள்சடை
மருப்ப ராய்வளைந் தாலொக்கும் வாண்மதி
திருப்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
விருப்ப ராயிருப் பாரை யறிவரே. 9

1374. தொண்டு பாடியுந் தூமலர் தூவியும்
இண்டை கட்டி யிணையடி யேத்தியும்
பண்ட ரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டடி யேனுய்ந்து போவனே. 10

குன்றுகளின் மேல். பட்ட - மோதிய. நுண்துளி - நுண்ணிய தண்ணீர்த்துளி. அடைகிற்றிரேல் - அடைய வல்லீரேயானால். நம் வினை உள்ளன விட்டு வீடுமே - நம் வினையாக இருப்பவை நம்மைவிட்டுக் கெடும்.

9. பொ-ரை: நெருப்பு அராவி நிமிர்ந்ததனையொத்த நீண்ட சடையையும், தந்தத்தை அராவி வளைத்ததுபோன்ற பிறைமதியையும் உடையராய்த் திருப்பராய்த்துறையில் விரும்பியெழுந்தருளி இருக்கும் அருட்செல்வர் தம்மிடம் விருப்பமாக உள்ளவர்களை நன்கு அறியும் இயல்பினர் ஆவர்.

கு-ரை: நெருப்பராய் நிமிர்ந்தாலொக்கும் நீள்சடை - நெருப்பு நீண்டு நிமிர்ந்து நின்றது போன்ற சடை. மருப்பராய் வளைந் தாலொக்கும் வாண்மதி - யானையின் மருப்பு வளைந்திருத்தலை ஒக்கும் ஒள்ளிய பிறைமதி.

10. பொ-ரை: திருப்பராய்த்துறைத் தலத்து எழுந்தருளி யிருப்பவரும், பாண்டரங்கக் கூத்துடையவரும் ஆகிய இறைவர்க் குற்ற தொண்டுகளைப்பற்றிப் பாடியும், அப்பெருமான் இணையடி களில் இண்டைமாலை சாத்தியும், தூமலர்கள் தூவியும், கண்டும், உள்ளத்திற் கொண்டும் அடியேன் உய்ந்து போவன்.

கு-ரை: தொண்டு பாடி - அடிமையாம் தன்மையை விரித்துப் பாடி. இண்டை - தலை மாலை. பண்டரங்கர் - பண்டரங்கம் என்னும் திருக்கூத்தாடுபவர். இறைவனாடிய திருக்கூத்துக்களில் இதுவும் ஒன்று *(கலித்தொகை - கடவுள்வாழ்த்து)*. பராய்த்துறைப் பாங்கர் -

Koviloor Digital Library

1375. அரக்க னாற்ற லழித்த அழகனைப்
பரக்கு நீர்ப்பொன்னி மன்னு பராய்த்துறை
இருக்கை மேவிய ஈசனை யேத்துமின்
பொருக்க நும்வினை போயறுங் காண்மினே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்பராய்த்துறையை இடமாகக் கொண்டவர். உய்ந்துபோவன் - உய்வேன்.

11. பொ-ரை: இராவணனது ஆற்றலை அழித்த அழகனும், நீர் பரக்கின்ற பொன்னி மன்னுகின்ற பராய்த்துறையில் இருக்கை பொருந்திய ஈசனுமாகிய பெருமானை ஏத்துவீர்களாக! நும்வினைகள் விரைந்து போய்த் தொலையும்; காண்பீர்களாக.

கு-ரை: ஆற்றல் - வலிமை. பரக்கும் - எங்கும் பரவும். இருக்கை - இருப்பிடம். பொருக்க - விரைந்து.

திருநாவுக்கரசர் புராணம்

சிலந்திக் கருளுங் கழல்வணங்கிச்
செஞ்சொன் மாலை பலபாடி,
இலங்கு சடையார் எறும்பியூர்
மலையும் இறைஞ்சிப் பாடியபின்,
மலர்ந்த சோதித் திருச்சிராப்
பள்ளி மலையுங் கற்குடியும்,
நலங்கொள் செல்வத் திருப்பராய்த்
துறையுந் தொழுவான் நண்ணினார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

31. திருவானைக்கா

பதிக வரலாறு:

திருப்பழையாறைவடதளி வணங்கிப் பொன்னியின் இரண்டு கரையும், பொருவிடையார் தங்குமிடங்கள் புக்கு இறைஞ்சித் திருவானைக்காசென்று சிலந்திக்கருளுங் கழல் வணங்கிப் பாடியருளிய செஞ்சொல்மாலை இது. (தி.12 திருநா. புரா. 302.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 144 **பதிக எண்: 31**

திருச்சிற்றம்பலம்

1376. கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள்
ஆனைக் காவிலம் மானை யணைகிலார்
ஊனைக் காவி யுழிதர்வ ரூமரே. 1

1. பொ-ரை: தெளிவற்றசிலர், உலகிற்கெல்லாம் அரசனாகிய சிவபெருமானைச் சுமத்தலாற் குளிர்ந்த மனத்தை உடையராய் அச் சிவானந்தத்தேனை உண்ணாதவராயுள்ளனர்; சில ஊமர்கள் ஆனைக்காவில் எழுந்தருளியுள்ள தலைவனை அணையாதவர் களாய்த் தம் தசைபொதிந்த உடலை வீணேசுமந்து திரிவர்!

கு-ரை: கோனை - எல்லா உலகிற்கும் தலைவனாகிய பெருமானை. காவி - காப்பாற்றி. குளிர்ந்தமனத்தராய் - மனங் குளிர்ந்தவராய். தேனை - அப்பெருமானது திருவருளமுதாகிய தேனை. காவி - விரும்பிக் காத்து. உண்ணார் - உண்ணாதவராயினார். தெண்ணர்கள் - தெளிந்த அறிவில்லாதவர்கள்.

ஆனைக்காவில் எம் அண்ணலை - திருவானைக்கா என்னும் தலத்தில் எழுந்தருளிய எங்கள் தலைவனை. அணைகிலார் - சென்று தரிசிக்காதவராய். ஊனை - இவ்வுடலையே. காவி - ஓம்பி.

உழிதர்வர் - திரிவர். ஊமர் - ஊமையர். வாய்பெற்ற பயனை வாழ்த்திப் பெறாதவராதலால் வாயிருந்தும் ஊமையர் என்றார்.

Koviloor Digital Library

1377. திருகு சிந்தையைத் தீர்த்துச்செம் மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்
துருகி நைபவர்க் கூனமொன் றின்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா வண்ணலே. 2

1378. துனப மின்றித் துயரின்றி யென்றுநீர்
இன்பம் வேண்டி லிராப்பக லேத்துமின்
என்பொன் ஈச னிறைவனென் றுள்குவார்க்
கன்ப னாயிடும் ஆனைக்கா வண்ணலே. 3

2. பொ-ரை: மாறுபடும் மனத்தினை மாறுபாடு நீக்கிச் செம்மைப்படுத்திப் பருகுதற்குரிய தேன் போல் இனிக்கும் பெருமானைப்பற்றிச் செவ்வியறிந்து உருகி நைபவர்க்கு வரக்கடவனவாகிய குற்றங்கள் இல்லாததோடு, அவர்கள் அருகு நின்று ஆனைக்காவின் அண்ணலும் அருள்புரிவன்.

கு-ரை: திருகு - மாறுபட்ட. தீர்த்து - மாறுபாடொழித்து. செம்மை செய்து - தூய்மை செய்து. ஊறல் - உள்ளத்துள்ளே ஊறும் தேன் போன்ற சிவாநந்தானுபவம். ''கருதுவார் இதயத்துக் கமலத் தூறும் தேனவன்காண்'' (தி.6. ப. 87. பா.1) பற்றிப்பதமறிந்து பருகி - அன்பால் பணிந்து அப்பெருமானின் திருவருளமுதைச் செவ்வி யறிந்து உண்டு. உருகிநைபவர் - மனமுருகி திருவருட் பேற்றிற்கு இளைப்பவர். ஊனம் - குறை. அருகு - அண்மையில். நின்றிடும் - எழுந்தருளுவான்.

3. பொ-ரை: என் பொன்போல்வான் என்றும், ஈசன் என்றும், இறைவன் என்றும் உள்ளத்தே உள்குவார்கட்கு ஆனைக்காவின் அண்ணல் அன்பனாய் அருள்புரிவான் ஆதலால், துன்பமும் துயரமும் இன்றி என்றும் குன்றாத இன்பத்தை நீர் விரும்புவீரேயாயின், இரவு பகல் எப்போதும் வழிபடுவீராக.

கு-ரை: துன்பம் - உடலால் நுகரப்படும் துன்பம். துயர் - மனத்தால் நுகரப்படும் துன்பம். என்றும் - எப்போதும். நீர் - நீங்கள். இன்பம் வேண்டில் - இன்பத்தோடிருக்க விரும்பினால். இராப்பகல் - இரவும் பகலும். ஏத்துமின் - தோத்திரியுங்கள். என்பொன் - எனக்குப் பொன்னாயிருப்பவன். ஈசன் - தலைவன். உள்குவார்க்கு - நினைக்கும் அடியார்களுக்கு.

Koviloor Digital Library

1379. நாவால்நன்று நறுமலர்ச் சேவடி
ஓவா தேத்தி யுளத்தடைத் தார்வினை
காவா யென்றுதங் கைதொழு வார்க்கெலாம்
ஆவா என்றிடும் ஆனைக்கா வண்ணலே. 4

1380. வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா வண்ணலே. 5

4. பொ-ரை: நறுமணம் வீசுகின்ற சிவந்த தன் இணையடிகளை நாவினால் பெரிதும் இடைவிடாது ஏத்தி உள்ளத்தே அடைத்தவர்களுக்கும், ''வினைத் துன்பங்களினின்று எம்மைக் காப்பாயாக'' என்று கைதொழுவார்களுக்கும், ஆனைக்காவின் அண்ணல் ஆவா என்று அபயம் கொடுத்தருளும் இயல்பினன் ஆவன்.

கு-ரை: நாவால் - நாக்கினால். நறுமலர்ச் சேவடியை நன்று ஓவாது ஏத்தி என்க. நன்று - நல்லவண்ணம். ஓவாது - இடைவிடாது. உளத்து அடைத்தார் - மனத்தின்கண்ணே இருத்தியவர்.

வினை காவாய் - வினைபோக்கிக் காப்பாற்றுவாய். தங்கை தொழுவார்க் கெலாம் - தம்கையால் வணங்குவார் எல்லார்க்கும். ஆ, இரக்கச் சொல்; இரங்குவான் என்றபடி. அருகே வந்துய்க என்றுமாம்.

5. பொ-ரை: ஆனைக்காவின் அண்ணலை வஞ்சமின்றி நாள் தோறும் வழிபடுவீர்களாக; வெவ்விய சொற்களினின்றும் விலகுவீர்களாக; வீட்டின்பம் பெறும் பொருட்டு நைந்து நைந்து நின்று உள்ளம் குளிர்வார்க்கெல்லாம் ''அஞ்சேல்'' என்று அருள்பவன் அப்பெருமானேயாவன்.

கு-ரை: வஞ்சமின்றி - மனத்தில் வஞ்சனையில்லாமல். வைகலும் - நாடோறும். வெஞ்சொல் இன்றி - கொடுஞ்சொற் பேசுதலின்றி. விலகுமின் - வஞ்சனை வெஞ்சொல் இவற்றை விட்டொழியுங்கள். வீடற என்பதுபாடமாயின் - கெடுதல் நீங்க எனவுங் கொள்க. வீடுற - வீட்டுநெறியை அடைய. நைஞ்சு நைஞ்சு - உருகி உருகி. நைந்து என்பது நைஞ்சு எனத் திரிந்தது; போலி. உள் - உள்ளம்.

Koviloor Digital Library

1381. நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா வண்ணலே. 6

1382. ஒழுகு மாடத்து ளொன்பது வாய்தலுங்
கழுக ரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்
றழும வர்க்கன்ப னானைக்கா வண்ணலே. 7

6. பொ-ரை: உலகியலையே மெய்யென்று கருதும் பொய்யாகிய நாத்திகம் பேசாமல், படைகள் போல் வருகின்ற ஐந்து பெரும் பூதங்களால் வரும் தடைகள் ஒன்றும் இன்றித் தன்னை யடைந்த அன்பர்களுக்கெல்லாம் அடையும் பொருளாக நிற்பவன் ஆனைக் காவின் அண்ணலே ஆவன்.

கு-ரை: நடையை - உலக நடையை. மெய்யென்று - நிலையானது என்று எண்ணி. நாத்திகம் - கடவுளும் மறுபிறப்பும் இருவினையும் முதலியவற்றை இல்லை என்றுகூறும் உலோகாயதம். கடவுளும் உயிரும் வீடுபேறும் பொய்யென்று கூறும் கொள்கை. படைகள்போல் - நாற்பெரும்படைகளைப் போல். வரும் - கொல்ல வரும். பஞ்சமா பூதங்கள் - ஐந்து பெரிய மண், நீர், அனல், கால், வளி, என்ற பூதங்கள். தன்னடைந்தார்க்குத் தடையொன்றும் இல்லாது அடைதற்கு எளிதாய் நிற்பான் என்க.

7. பொ-ரை: ஒன்பது வாயில்களும் ஒழுகுகின்ற மாடமாகிய உடம்பினைக் கழுகுகள் அரிக்கும் இறுதிக்காலம் வருதற்கு முன்பே தன் இணையடிகளைக் கைகளால் தொழுது தூய மலர்களால் தூவி நின்று அழுகின்ற அன்பர்கட்கு அன்பனாய் நின்று அருள்பவன் ஆனைக் காவின் அண்ணலே ஆவன்.

கு-ரை: ஒழுகும் மாடம் - எங்கும் ஓட்டைகளையுடைய வீடு. ''மலஞ்சோரும் ஒன்பது வாயில்'' (தி.8 திருவா.) ஒன்பது வாய்தலும் - ஒன்பது வாயில்களையும், செவி, மூக்கு, கண், வாய், மலக்குறி, நீர்க்குறி ஆகியன. இறக்குமுன் என்பதாம். வாய்தல் - வாயில்; வழி. உடம்பு ஒன்பது ஓட்டைகளை உடையது ஆதலின் அவ்வழியை

Koviloor Digital Library

1383. உருளும் போதறி வொண்ணா வுலகத்தீர்
தெருளுஞ் சிக்கெனத் தீவினை சேராதே
இருள றுத்துநின் றீசனென் பார்க்கெலாம்
அருள்கொ டுத்திடும் ஆனைக்கா வண்ணலே. 8

1384. நேச மாகி நினைமட நெஞ்சமே
நாச மாய குலநலஞ் சுற்றங்கள்
பாச மற்றுப் பராபர வானந்த
ஆசை யுற்றிடும் ஆனைக்கா வண்ணலே. 9

வாயிலென்றார். கழுகரிப்பதன்முன் - அவ்வுடலாகிய வீடு இறந்து அழிந்து கழுகு அரித்துத் தின்னும் முன்னே. கழலடி - கழலணிந்த திருவடிகளை. அழுமவர்க்கு - அழுபவர்களுக்கு.

8. பொ-ரை: உலகவாழ்வினை உதறி இறக்கும் போது இது என்று அறிய இயலாத உலகத்தவர்களே! தெளிவடைவீர்களாக; தீவினையைச் சேராமல் விரைந்து, இருள் அறுத்து நின்று ''ஈசனே'' என்று உரைப்பவர்க்கெல்லாம் அருள்கொடுப்பவன் ஆனைக்காவின் அண்ணலே ஆவன்.

கு-ரை: உருளும் போது - அழியும் காலம். அறிவொண்ணா - அறிந்து கொள்ள முடியாது. தெருளும் - தெளிவடையுங்கள். சிக்கென - பற்றுக்கோடாக. இருள் - அறியாமையாகிய பந்த பாச மயக்கம்.

9. பொ-ரை: அறியாமை உடைய நெஞ்சமே! உன்னைக் கெடுக்கும் இயல்புடையனவாகிய குலம், நலம், சுற்றம், பாசம் முதலியவை அற்று மிக உயர்ந்த ஆனந்த ஆசை உற்று, ஆனைக்காவின் அண்ணலை நேசமாகி நினைந்து உய்வாயாக.

கு-ரை: நேசமாகி - அன்புமயமாகி. மடநெஞ்சமே - இதுவரை அறியாதிருந்த மனமே. நினை - நினைப்பாயாக.

நாசமாய - அழிவனவாகிய. குலநலம் - குலத்தின் உயர்வு. பராபர ஆனந்தம் - மிக மேலான இன்பம். உற்றிடும் - உறுவிக்கும்,

Koviloor Digital Library

1385. ஓத மாகடல் சூழிலங் கைக்கிறை
கீதங் கின்னரம் பாடக் கெழுவினான்
பாதம் வாங்கிப் பரிந்தருள் செய்தங்கோர்
ஆதி யாயிடும் ஆனைக்கா வண்ணலே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: ஆனைக்காவின் அண்ணல், அலைகடல் சூழ்ந்த இலங்கைக்கிறைவனாகிய இராவணன் கீதத்தைக் கின்னரம் போல் மிகப் பொருந்திப்பாடத் தன் திருப்பாதத்துத் திருவிரல் ஒன்றினால் முன்னம் ஊன்றியவர் பின்னவற்குப் பரிந்து அருள் செய்து ஆதி ஆயினர்.

கு-ரை: ஓதம் - கடல் நீர்ப்பெருக்கு. கின்னரம் - வாச்சிய விசேடம். கின்னரத்தால் கீதம்பாட என்க. கெழுவினான் - தனக்குப் பகைவன் என்ற எண்ணத்தை விட்டு, அவனோடு அன்பால் பொருந்தினான். பாதம் வாங்கி - அழுத்திய காலைத் தூக்கி. பரிந்து - இரங்கி. ஆதியாயிடும் - தலைவனாயிருக்கும்.

திருநாவுக்கரசர் புராணம்

வழிபோம் பொழுது மிக இளைத்து
வருத்தம் உறநீர் வேட்கையொடும்,
அழிவாம் பசிவந் தணைந்திடவும்
அதற்குச் சித்தம் அலையாதே,
மொழிவேந் தரும்முன் எழுந்தருள
முருகார் சோலைப் பைஞ்ஞீலி,
விழியேந் தியநெற் றியினார்தந்
தொண்டர் வருத்தம் மீட்பாராய்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

32. திருப்பூந்துருத்தி

பதிக வரலாறு:

திருமழபாடியாரை வணங்கிச் செந்தமிழ்மாலை பகர்ந்து திருப்பூந்துருத்தியைச் சேர்ந்து பாடியருளியது இத்தமிழ்மாலை. (தி.12 திருநா. புரா. 387. 388.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 145 **பதிக எண்: 32**

திருச்சிற்றம்பலம்

1386. **கொடிகொள் செல்வ விழாக்குண லைஅறாக்**
கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனார்
பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 1

1. பொ-ரை: பல கொடிகள் எடுக்கப்பெற்றதும், திருவிழாக் களினால் உண்டாகும் ஆரவாரங்கள் அறாததும், மணமிக்க பூம் பொழில்கள் சூழ்ந்ததுமாகிய திருக்கச்சியேகம்பரும் திருநீற்றுப் பொடி யினைப் பூசிய பூந்துருத்தி நகரத்து எழுந்தருளியிருக்கும் சுவாமியும் ஆகிய பெருமான் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

கு-ரை: கொடிகொள் - கொடிகளைக்கொண்ட. விழாக் குணலை - திருவிழா ஆரவாரம். அறா - நீங்காத. கடிகொள் - மணம் பொருந்திய. பூம்பொழில் - பொலிவையுடைய சோலை. கொடிகொள் செல்வம் விழா அறா என்பவற்றைத் தனித்தனியே கச்சியேகம்பம் என்பதனோடு கூட்டுக. பொடிகள் - திருநீறு. பூந்துருத்திநகர் அடிகள்- பூந்துருத்தி என்னும் நகருக்குரிய தலைவர். சேவடி - சிவந்த திருவடிகள். நாம் இருப்பது அடிகள் சேவடிக்கீழ் என்க. இப்பதிகம், திருவடிக் கீழிருந்து அநுபவிக்கும் இன்புறு நிலையை உணர்த்து கின்றது. 'ஓங்குணர்வின் உள்ளடங்கி உள்ளத்துள் இன்பொடுங்கத் தூங்குவர்மற் றேதுண்டு சொல்' (*திருவருட்பயன்*. 10.1) என உணர்த்தப்படும் நிஷ்டையின் இயல்பு, இங்குள திருவாக்குப் போலெழும் திருமுறைகளை மூலமாகக் கொண்டது. இது பரமுத்தி நிலையைக் குறிக்கும். திருப்பூந்துருத்தித் திருமடத்தில் தங்கி வாழ்ந்த குறிப்பு இப்பதிகத்தே அமைந்திருத்தல் அறிதற்குரியது.

Koviloor Digital Library

1387. ஆர்த்த தோலுடை கட்டியோர் வேடனாய்ப்
பார்த்த னோடு படைதொடு மாகிலும்
பூத்த நீள்பொழிற் பூந்துருத் திந்நகர்த்
தீர்த்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 2

1388. மாதி னைமதித் தானொரு பாகமாக்
காத லாற்கரந் தான்சடைக் கங்கையைப்
பூத நாயகன் பூந்துருத் திந்நகர்க்
காதி சேவடிக் கீழ்நா மிருப்பதே. 3

1389. மூவ னாய்முத லாயிவ் வுலகெலாம்
காவ னாய்க்கடுங் காலனைக் காய்ந்தவன்

2. பொ-ரை: தோல் உடையினை ஆர்த்துக்கட்டி ஒரு வேட வடிவம் கொண்டு அருச்சுனனோடு படைக்கலந் தொடுக்கு மாயினும், பூத்த மலர்கள் நிறைந்த நீள்பொழில்களை உடைய பூந்துருத்தி நகரத்துத் தீர்த்தவடிவாய் உள்ள பெருமான் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

கு-ரை: தோலுடை ஆர்த்துக்கட்டி - புலித்தோலை இடை யிலே பொருத்திக் கட்டி. பார்த்தனோடு - அர்ச்சுனனோடு. படை தொடும் - கணைதொடுத்துப் போர்புரிவான். தீர்த்தன் - புனிதன்.

3. பொ-ரை: உமையம்மையை ஒரு பாகமாக மதித்து ஏற்றவனும், சடையின்கண் கங்கையைக் காதலால் ஒளித்துக் கொண்டவனும். பூதங்களுக்குத் தலைவனும், பூந்துருத்தி நகரில் எழுந்தருளியிருக்கும் முதல்வனும் ஆகிய பெருமான் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

கு-ரை: மாதினை - உமையை. ஒருபாகமா மதித்தான் - இடப் பாகத்தே ஏற்றுக்கொண்டவன். கங்கையைக் காதலால் சடைக் கரந்தான் என்க. காதலால் - உயிர்கள்மீது வைத்த அன்பால். கரந்தான் - மறைத் தவன் பூதநாயகன் - உயிர்களுக்குத் தலைவன். ஆதி - முதல்வன்.

4. பொ-ரை: முப்பெருங்கடவுளராயும், அவருள் முதல் வனாயும், இவ்வுலகெல்லாவற்றையும் காப்பவனாயும், கடிய

Koviloor Digital Library

பூவின் நாயகன் பூந்துருத் திந்நகர்த்
தேவன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 4

1390. செம்பொ னேயொக்கும் மேனியன் தேசத்தில்
உம்ப ராரவ ரோடங் கிருக்கிலும்
பொன்பொன் னார் செல்வப் பூந்துருத் திந்நகர்
நம்பன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 5

1391. வல்லம் பேசி வலிசெய்மூன் றூரினைக்
கொல்லம் பேசிக் கொடுஞ்சரம் நூறினான்
புல்லம் பேசியும் பூந்துருத் திந்நகர்ச்
செல்வன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 6

காலனைக் காய்ந்தவனாயும், அன்பானினைவாரது உள்ளக் கமலத் தின்கண் தலைவனாக எழுந்தருளியிருப்பவனாயும் உள்ள பூந்துருத்தி நகரின் தேவன் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

கு-ரை: மூவன் - முதிர்ந்தவன். முதலாய் - எல்லாவற்றிற்கும் முதற்காரணனாய். காவன் - காப்பவன். கடுங்காலன் - கொடிய எமன். காய்ந்தவன் - சினந்து அழித்தவன். பூவின் நாயகன் - நிலவுலகிற்குத் தலைவன்; அன்றி மலர்மேலுறையும் அரி அயனாக இருப்பவன் என்றும், அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தில் உறையும் தலைமகன் என்றும் கொள்ளலாம்.

5. பொ-ரை: நம் தேசத்தில் இருப்பினும் உம்பர் உள்ள தேவருலகத்தவரோடு இருப்பினும், பொன்னும் பொலிவார்ந்த செல்வமும் உள்ள பூந்துருத்தி நகரத்து நம்மவனாகவும், செம் பொன்னையே யொத்த திருமேனியினனாகவும் வீற்றிருக்கும் பெருமான் சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

கு-ரை: செம்பொன் - சிவந்த பொன். உம்பரானவர் - தேவர்கள். பொன்பொன் - அழகிய பொன். ஆர் - பொருந்திய.

6. பொ-ரை: வன்மைபேசி வன்மையான கொடிய செயல் களையே செய்து திரிந்த திரிபுரங்களைக் கொல்ல எண்ணிப் பேசிக் கொடிய அம்பால் அழித்த பூந்துருத்தி நகர்ச்செல்வன் புன்மை பேசினும் அவன் திருவடிக்கீழேயே இருத்தலை எண்ணுவோம்.

Koviloor Digital Library

1392. ஒருத்த னாயுல கேழுந் தொழநின்று
பருத்த பாம்பொடு பால்மதி கங்கையும்
பொருத்த னாகிலும் பூந்துருத் திந்நகர்த்
திருத்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 7

1393. அதிரர் தேவ ரியக்கர் விச் சாதரர்
கருத நின்றவர் காண்பரி தாயினான்
பொருத நீர்வரு பூந்துருத் திந்நகர்ச்
சதுரன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 8

கு-ரை: வல்லம் - வன்மை. வலிசெய் - வன்மையான கொடிய செயல்களையே செய்கின்ற. மூன்றூர் - திரிபுரம். கொல்லம்பேசி - கொல்லுதலைக் கருத்துட்கொண்டு. கொடுஞ்சரம் - கொடிய அம்பால். நூறினான் - அழித்தான். புல்லம் - புன்மை மொழிகள்.

7. பொ-ரை: ஒப்பற்றவனாய் ஏழு உலகங்களும் தொழ நின்று, பெரிய பாம்பும், மதியும், கங்கையும் சடையிற் பொருந்தியவனாய்ப் பூந்துருத்தி நகரத்தே எழுந்தருளியிருக்கும் திருத்தமானவனின் சேவடிக்கீழ் நாமிருக்கப்பெற்றோம்.

கு-ரை: ஒருத்தனாய் - அழியாத முதல்வன் தானொருவனுமேயாய். பருத்தபாம்பு - பெரிய பாம்பு. பொருத்தன் - அணிந்தவன். திருத்தன் - திருத்தமாய் விளங்குபவன். மாறுபடாத செம் பொருள்.

8. பொ-ரை: அதிரர், தேவர் இயக்கர், விச்சாதரர் முதலியவர்கள் கருதுமாறு நின்ற அனைவரும் காண்டலரிய காட்சியானும், நீர் இருகரையும் பொருதுவருகின்ற பூந்துருத்தி நகரத்து எழுந்தருளியிருப்பவனும், சரியை முதலியவற்றில் நான்காவதாகிய ஞானத்தாலே எய்துதற்குரியவனும் ஆகிய பெருமானின் சேவடிக் கீழ் நாம் இருக்கப் பெற்றோம்.

கு-ரை: அதிரர் தேவர் - உரத்தகுரலினராய தேவர். இயக்கர் - பதினெண்கணத்துள் ஒருவர். விச்சாதரர் - வித்யாதரர். கருதநின்றவர்- தேவர் முதலானோர்க்குத் தலைவர் என்று கருதுகின்ற திருமாலும் பிரமனும். காண்பரிதாயினான் - தாணுவாய் விளங்கியவன். பொருதநீர் - அலைக்கும் காவிரிநீர். வரு - வருகின்ற. சதுரன் - சதுரப்பாடுடையவன். திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களுட்போல

Koviloor Digital Library

1394. செதுக றாமனத் தார்புறங் கூறினும்
கொதுக றாக்கண்ணி னோன்பிகள் கூறினும்
பொதுவி னாயகன் பூந்துருத் திந்நகர்க்
கதிபன் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 9

1395. துடித்த தோள்வலி வாளரக் கன்தனைப்
பிடித்த கைஞ்ஞெரிந் துற்றன கண்ணெலாம்
பொடிக்க வூன்றிய பூந்துருத் திந்நகர்ப்
படிகொள் சேவடிக் கீழ்நா மிருப்பதே. 10

திருச்சிற்றம்பலம்

இவர் திருப்பதிகங்களிலும் இலிங்கபுராண வரலாறும் புறச்சமயத் தவரைப்பற்றிய பழிப்பும் நியதமாகச் சிலவற்றில் கூறப்படுகின்றன.

9. பொ-ரை: குற்றம் நீங்காத மனத்தினர் புறம் பேசினும் கொசு நீங்காத பீளைசார்ந்த கண்களையுடைய புறச்சமய நோன்பிகள் இழித்துக் கூறினும் மன்றவாணனாகிய பூந்துருத்திப் பெருமான் சேவடிக்கீழேயே நாம் இருப்போம்.

கு-ரை: செதுகு அறா - தீங்கு அல்லது குற்றம் நீங்காத. புறங் கூறினும் - புறம் பேசினாலும். கொதுகு - கொசு; பீளை சார்ந்த கண்கள் என்க. பொதுவில் நாயகன் - பஞ்ச சபைகளின் தலைவன். அதிபன் - தலைவன்.

10. பொ-ரை: தோளாற்றலும் மிக்க வாளாற்றலும் உடைய இராவணனை துடிக்குமாறும், அவன் பிடித்த கைகள் நெரிவுறுமாறும், கண்ணெலாம் நீர்த்துளிகள் பொடிக்குமாறும் திருவிரலால் ஊன்றிய பூந்துருத்தி நகரத்து எழுந்தருளியிருக்கும் பெருமானின் பெருமைமிக்க சேவடிக்கீழ் நாமிருக்கப் பெற்றோம்.

கு-ரை: துடித்த - தினவெடுத்த. வலி - வலிமை. பிடித்த - கயிலை மலையைப்பற்றிய. நெரிந்துற்றன - நெரிந்தன. கண்ணெலாம் - இருபது கண்களும். பொடிக்க - நீர் அரும்ப. ஊன்றிய - மிதித்த. படிகொள் சேவடி - அன்பர்க்கருளவேண்டி நிலத்தின் கண்ணே பொருந்திய அவனது சிவந்த திருவடிகள்.

Koviloor Digital Library

33. திருச்சோற்றுத்துறை

பதிக வரலாறு:

திருப்பழனப்பதி புகுந்து தம்பெருமான் கழல் சார்ந்து வணங்கிப் போற்றிசைத்து எம்மருங்கும் தொழும் பணிமேற் கொண்டு திருச்சோற்றுத்துறை நண்ணித்தொழுது பாடியருளிய வற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 212.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 146 **பதிக எண்: 33**

திருச்சிற்றம்பலம்

1396. கொல்லை யேற்றினர் கோளர வத்தினர்
தில்லைச் சிற்றம் பலத்துறை செல்வனார்
தொல்லை யூழியர் சோற்றுத் துறையர்க்கே
வல்லை யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. 1

1397. முத்தி யாக வொருதவஞ் செய்திலை
அத்தி யாலடி யார்க்கொன் றளித்திலை

1. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! முல்லை நிலத்துக்குரிய விடையேற்றினை உடையவரும், கொள்ளும் அரவத்தினை உடையவரும், தில்லைத் திருநகரில் சிற்றம்பலத்தே உறையும் அருட்செல்வரும், பழைய ஊழிக்காலத்தவரும் ஆகிய சோற்றுத் துறையர்க்கு வல்லமை உடையையாய்ப் பணிசெய்வாயாக.

கு-ரை: கொல்லை ஏறு - முல்லை நிலத்துக்குரிய இடபம். முல்லைக்குத் திருமால் தெய்வமாதலால் திருமாலை ஏறாக உடைய வன் என்று கூறவந்தவர் கொல்லைஏறு என்றார். அன்றி முல்லை நிலத்துக்குரியதான ஏறு எனினும் அமையும். ''கொல்லைச் சில்லைச்சே'' (தேவாரம்). கோள் - கொல்லும் தன்மையுடைய. தொல்லையூழியர் - மிகப்பழைய ஊழிக்காலங்கள் பலவற்றையும் கண்டவர். வல்லையாய் - வலிமையை உடையையாகி; விரைவு டைமையோடு. பணிசெய் - தொண்டு செய்.

2. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! முத்திப் பேறெய்தற்பொருட்டு ஒரு தவமும் செய்திலை; அடியார்களுக்கு

Koviloor Digital Library

தொத்து நின்றலர் சோற்றுத் துறையர்க்கே
பத்தி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. 2

1398. ஒட்டி நின்ற உடலுறு நோய்வினை
கட்டி நின்ற கழிந்தவை போயறத்
தொட்டு நின்றுமச் சோற்றுத் துறையர்க்கே
பட்டி யாப்பணி செய்மட நெஞ்சமே. 3

1399. ஆதியா னண்ட வாணர்க் கருள்நல்கு
நீதி யானென்றும் நின்மல னேயென்றும்

விருப்பத்தோடு ஒன்றையும் அளித்தாயில்லை; பூங்கொத்துகள் நின்று மலர்கின்ற சோற்றுத்துறையர்க்கு இனியாகிலும் பத்தியோடு பணி செய்வாயாக.

கு-ரை: முத்தியாக - வீடுபேறடையும்பொருட்டு. தவம் - அடியார்க்களித்தல் அரனை ஓம்பல் முதலிய தவங்கள். செய்திலை - செய்யாதிருந்தாய். அத்தியால் - அருத்தியால்; விருப்பத்தோடு. அதனால் என்றுமாம். அளித்திலை - கொடுக்கவில்லை. அடியார்க் களித்தல் அரன்பணியினும் சிறந்தது என்றபடி. தொத்து நின்றலர் - கொத்துக்களாய் நின்றுமலரும், சோலைகளையுடைய என வருவிக்க. பத்தியாய் - அன்போடு.

3. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! உடலை ஒட்டி நின்ற மிகுந்த நோய்களையும், பிணித்து நிற்கும் வினைகளையும் கழிந்து அறும்படியாகச் சோற்றுத்துறையர் திருவடிகளைத் தொட்டு நின்று பட்டியாகப் பணிசெய்வாயாக.

கு-ரை: ஒட்டிநின்ற - நம்மோடு நிழலாய் உடனுறைந்தும் அத்துவிதமாய்ப் பிரிப்பின்றியும் நிற்கின்ற. உடலுறுநோய் - உடலைப் பற்றிய நோய்கள்; பிறவி நோய் எனலுமாம். கட்டி நின்ற - சூழ்ந்து நிற்கும் பந்தபாசங்கள். கழிந்து - நீங்கி. அவைபோய்அற - நோய், பாசம், வினை என்ற மூன்றும் விலக. தொட்டு நின்றும் - அவன் திருவடிகளை மனத்தால் தீண்டி நின்றும். பட்டியாய் - மீளா அடிமையாய்.

4. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! முதல்வனும் தேவர்களுக்கு அருள்நல்கும் நீதியனும், நின்மலனும், சோதியனும்

Koviloor Digital Library

சோதி யானென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
வாதி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. 4

1400. ஆட்டி னாயடி யேன்வினை யாயின
ஓட்டி னாயொரு காதி லிலங்குவெண்
தோட்டி னாயென்று சோற்றுத் துறையர்க்கே
நீட்டி நீபணி செய்மட நெஞ்சமே. 5

1401. பொங்கி நின்றெழுந் தகடல் நஞ்சினைப்
பங்கி உண்டதோர் தெய்வமுண் டோசொலாய்
தொங்கி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்குத்
தங்கி நீபணி செய்மட நெஞ்சமே. 6

ஆகிய சோற்றுத்துறைப் பெருமானுக்கு வேறொன்றும் வாளா வாதித்துக் காலம் போக்காது, பணிசெய்வாயாக.

கு-ரை: அண்டவாணர் - மேலுலகவாசிகளாகிய தேவர் முதலியோர். நீதியான் - நீதிவடிவினன். நின்மலன் - மலமற்றவன். வாதியாய் - பரமன் புகழ்களையே பேசுபவனாய்.

5. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! அடியவனை ஆட்டுவிப்பானே என்றும், வினைகளாயினவற்றை ஓட்டியவனே என்றும், திருச்செவியில் விளங்குகின்ற சங்கவெண் தோட்டினையணிந்தவனே என்றும் சோற்றுத்துறையனார்க்கு நீள நினைந்து நீ பணிசெய்வாயாக.

கு-ரை: ஆட்டினாய் - திருக்கூத்தாடுபவனே! ஓட்டினாய் - விலகச்செய்தவனே!, வெண்தோட்டினாய் - ஒரு பக்கத்து வெண்மையான தோடணிந்தவனே!. நீட்டி - புகழ்களை நீளச் சொல்லிக் கொண்டு.

6. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! பொங்கி நின்று எழுந்த கடலினின்றும் விளைந்த ஆலகாலவிடத்தை விழுங்கி உண்ட ஒரு தெய்வம் இத்தெய்வத்தையன்றி வேறு உண்டோ சொல்வாயாக! அச்சோற்றுத்துறையர்க்கு மனம் தாழ்ந்து என்றும்தங்கி நீ பணி செய்வாயாக.

Koviloor Digital Library

1402. ஆணி போலநீ ஆற்ற வலியைகாண்
ஏணி போலிழிந் தேறியு மேங்கியும்
தோணி யாகிய சோற்றுத் துறையர்க்கே
பூணி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. 7

1403. பெற்ற மேறிலென் பேய்படை யாகிலென்
புற்றி லாடர வேயது பூணிலென்
சுற்றி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
பற்றி நீபணி செய்மட நெஞ்சமே. 8

கு-ரை: நஞ்சினைப் பங்கியுண்டதோர் தெய்வமுண்டோ சொலாய் - ஏனையோர் யாவரும் நன்மை தீமை கலந்து பங்கிடுபவராகிய எமது பெருமான் தீமையாகிய நஞ்சைத் தமக்கு வைத்தும், நல்லதாகிய அமிர்தத்தைத் தேவர்க்குவைத்தும் அந்த நஞ்சைப் பங்கிட்டு உண்டதுபோல வேறு தெய்வமுண்டோ? என்க. தொங்கி - துவங்கி. தங்கி - ஒருநெறிப்பட்டு.

7. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! ஆணி போல நீ மிகவும் வலி உடையையாயினும், ஏணியைப் போல் இழிந்தும் ஏறியும் இறங்கியும் வாடுகின்றனை; பிறவிப் பெருங் கடற்குத் தோணியாகிய சோற்றுத்துறையர்க்குப் பூணியாக நின்று பணி செய்வாயாக.

கு-ரை: ஆணி - இருப்பாணி. ஆற்றவலியை - மிக்க வலிமையுடையாய். ஏணிபோல் இழிந்தேறியும் - ஏணியைப் போலத்தான் இருந்த இடத்திலே இருந்து பிறர் இழியவும் ஏறவும் சாதனமாய் நின்றும் கவலைப்படும். இருப்பாணிபோல வலிமையாய் உள்ளது மான மனம் என முன்னே கூட்டுக. தோணி - பிறவிக்கடலில் இருந்து கரையேற்றும் தோணி போன்றவன். பூணியாய் - அன்புடையையாய்.

8. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! ஏற்றினை ஏறினாலென்ன, பேய்கள் படைகளாகிலென்ன, புற்றினைப் பொருந்திய அரவை அணியாகப் பூண்டாலென்ன, நீ என்றும் சோற்றுத் துறையர்க்கே சுற்றியும் பற்றியும் பணிசெய்வாயாக.

கு-ரை: பெற்றம் - எருது. பேய்ப்படை - ஊழிக்காலத்திரவில் இடுகாட்டுள் ஆடும்போது அப்பெருமானது படைகள், பேய்கள்.

Koviloor Digital Library

1404. அல்லி யானர வைந்தலை நாகணைப்
பள்ளி யானறி யாத பரிசெலாம்
சொல்லி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
புல்லி நீபணி செய்மட நெஞ்சமே. 9

1405. மிண்ட ரோடு விரவியும் வீறிலாக்
குண்டர் தம்மைக் கழிந்துய்யப் போந்துநீ
தொண்டு செய்தென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
உண்டு நீபணி செய்மட நெஞ்சமே. 10

ஆடரவேயது பூணிலென் - பாம்பணிந்தாலென்ன. சுற்றி - வலம்வந்து. பற்றி - விடாதுபற்றி. நீ இவற்றை இழிவெனக் கருதாது பணிசெய் என்க.

9. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! தாமரையின் அகவிதழில் வீற்றிருக்கும் பிரமனும், ஆதிசேடனாகிய படுக்கையை உடையவனாகிய திருமாலும் அறிய முயன்றும் அறிய இயலாத தன்மையெல்லாம் சொல்லி, சோற்றுத்துறையர்க்கே நீ என்றும் பொருந்திப் பணிசெய்வாயாக.

கு-ரை: அல்லியான் - வெண்டாமரை மலரின் அகவிதழ்களில் எழுந்தருளியிருப்பவனாய பிரமன். நாகணைப்பள்ளி - பாம்பினை அணையாகவும் பள்ளியாகவும் கொண்ட திருமால். புல்லி - கலந்து.

10. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! அமண் முண்டர்களோடு கலந்தும், பெருமையில்லாத குண்டர்களோடு பொருந்தியும் நின்ற நிலைமையினின்று நீங்கி உய்யப் போந்து நீ, சோற்றுத்துறையர்க்கே தொண்டுசெய்து என்றும் உண்டு பணி செய் வாயாக.

கு-ரை: மிண்டர் - வலிய சமணர். விரவியும் - கூடியும். வீறிலா - பெருமையில்லாத. குண்டர் - உடல் கொழுத்தவர் சமணர். கழிந்து - நீங்கி.

உய்யப்போந்து - உய்தற்பொருட்டு இறைவனிடத்து வந்து. என்றும் - நாடோறும். உண்டு - பணி செய்வதற்கென்றே உண்டு. பணிசெய் - தொண்டுசெய்.

Koviloor Digital Library

1406. வாழ்ந்த வன்வலி வாளரக் கன்றனை
ஆழ்ந்து போயல றவ்விர லூன்றினான்
சூழ்ந்த பாரிடஞ் சோற்றுத் துறையர்க்குத்
தாழ்ந்து நீபணி செய்மட நெஞ்சமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! ஆற்றலோடு வாழ்ந்தவனாகிய இராவணன் ஆழ்ந்துபோய் அலறுமாறு விரலால் ஊன்றினவனாகிய பூதப்படை சூழ்ந்த சோற்றுத்துறைப் பெருமானுக்கு மனமொழிமெய்களாற்றாழ்ந்து பணிசெய்வாயாக.

கு-ரை: வாழ்ந்தவன் - உலகம் புகழ வாழ்ந்தவன். ஆழ்ந்து போய் அலற - கயிலையின்கீழ் ஆழப்பதிந்து அழ. பாரிடம் சூழ்ந்த - பூதகணங்கள் சூழ்ந்த; சோற்றுத்துறை என்க. தாழ்ந்து - வணங்கி.

திருநாவுக்கரசர் புராணம்

சாலநாள் அங்கமர்ந்து
தந்தலைமேல் தாள்வைத்த
ஆலமார் மணிமிடற்றார்
அணிமலர்ச்சே வடிநினைந்து
சேலுலாம் புனற்பொன்னித்
தென்கரையே றிச்சென்று
கோலநீள் மணிமாடத்
திருநல்லூர் குறுகினார்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

34. திருநெய்த்தானம்

பதிக வரலாறு:

அண்டர்பிரானின் திருக்கயிலைக் காட்சியைக்கண்டு திருவையாறமர்ந்த நாவுக்கரசர் அப்பதியினின்றும் திருநெய்த்தானம் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 386.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 147 பதிக எண்: 34

திருச்சிற்றம்பலம்

1407. கொல்லி யான்குளிர் தூங்குகுற் றாலத்தான்
புல்லி யார்புரம் மூன்றெரி செய்தவன்
நெல்லி யானிலை யானநெய்த் தானனைச்
சொல்லி மெய்தொழு வார்சுடர் வாணரே. 1

1408. இரவ னையிடு வெண்தலை யேந்தியைப்
பரவ னைப்படை யார்மதில் மூன்றையும்

1. **பொ-ரை:** கொல்லிமலையில் வீற்றிருப்பவனும், குளிர்ச்சி செறியும் குற்றாலத்தில் வீற்றிருப்பவனும், பகைவர் புரங்கள் மூன்றையும் எரிசெய்தவனும், திருநெல்லிக்காவில் உள்ளவனும், நிலைபெற்றிருக்கும் திருநெய்த்தானனுமாகிய பெருமானை வாயினாற் சொல்லி மெய்யினால் தொழுவார்கள் ஒளியோடு கூடி வாழும் உயர்நிலை பெறுவர்.

கு-ரை: கொல்லியான் - கொல்லிமலைக்குரியவன். தேவார வைப்புத்தலங்களில் ஒன்று. குளிர்தூங்கு - குளிர்மிக்க. குற்றாலத்தான் - குற்றால மலைச்சாரலில் வாழ்பவன். குளிர்தூங்கு என்பதைக் கொல்லியுடனும் குற்றாலத்துடனும் கூட்டுக. புல்லியார் - அற்பமானவர், கீழோர். நெல்லியான் - திருநெல்லிக்கா என்னும் தலத்துக்குரியவன். நிலையான - என்றும் நிலைத்ததாயுள்ள. சொல்லி - தோத்திரம் சொல்லி. மெய் - உண்மையாக. சுடர் வாணர் - ஞானத்தினால் நிலைபெற்றோராவர் என்க.

2. **பொ-ரை:** இரத்தலை உடையவனும், வெண்தலை ஏந்தியவனும், எல்லோராலும் பரவப்படுபவனும், படையுடையார்

Koviloor Digital Library

நிரவ னைநிலை யானநெய்த் தானனைக்
குரவ னைத்தொழு வார்கொடி வாணரே. 2

1409. ஆனிடை யைந்தும் ஆடுவ ராரிருள்
கானிடை நடம் ஆடுவர் காண்மினோ
தேனிடை மலர் பாயுநெய்த் தானனை
வானி டைத்தொழு வார்வலி வாணரே. 3

1410. விண்ட வர்புர மூன்றும்வெண் ணீறெழக்
கண்ட வன்கடி தாகிய நஞ்சினை
உண்ட வன்னொளி யானநெய்த் தானனைத்
தொண்ட ராய்த்தொழு வார்சுடர் வாணரே. 4

முப்புரங்களையும் எரியால் நிரந்தவனும், ஞானாசாரியனும் நிலை பெற்றிருக்கும் திருநெய்த்தானனுமாகிய பெருமானைத் தொழு வார்கள் இவ்வுலகத்து நன்கு வாழ்வோராவர்.

கு-ரை: இரவனை - பிச்சையிரப்பவனை. ஏந்தியை - ஏந்திய வனை. பரவனை - எங்கும் பரவி இருப்பவனை. படையார் - ஆயுதங்கள் செறிந்த. நிரவனை - அழித்தவனை. குரவனை - முதற் பெருங் குருவாக விளங்குபவனை. கொடிவாணர் - ஒழுங்கில் வாழ்பவராவர்.

3. பொ-ரை: பஞ்சகவ்வியங்களை விரும்பித் திருமஞ்சனம் கொள்பவரும், நள்ளிருளில் இடுகாட்டிடை நடம் ஆடுபவரும் ஆவர்; காண்பீராக! மலரிடைத் தேன் பொழிந்து பாயும் திருநெய்த்தானனை வானிடைத் தொழுவார்கள் வலிமையோடு வாழ்பவராவர்.

கு-ரை: ஆனிடை ஐந்து - பசுவிடத்துண்டாய பஞ்சகவ்வியம். ஆர்இருள் - மிக்க இருள் செறிந்த இரவு. கான் - இடுகாடு. மலரிடைத்தேன்பாயும் என்று மாறுக. வானிடைத் தொழுவார் - உள்ளத்தின்கண் உள்ள தகராகாசத்துவைத்துத் தியானிப்போர். வலி - வினைகளை வெல்லும் வலிமை.

4. பொ-ரை: பகைவர் புரமூன்றையும் வெள்ளிய சாம்பலாகி யெழுமாறு கண்டு எரித்தவனும், கடிதாகிய ஆலகாலத்தை உண்ட

Koviloor Digital Library

1411. முன்கை நோவக் கடைந்தவர் நிற்கவே
சங்கி யாது சமுத்திர நஞ்சுண்டான்
நங்கை யோடு நவின்றநெய்த் தானனைத்
தங்கை யால்தொழு வார்தலை வாணரே. 5

1412. சுட்ட நீறுமெய் பூசிச் சுடலையுள்
நட்ட மாடுவர் நள்ளிருள் பேயொடே
சிட்டர் வானவர் தேருநெய்த் தானனை
இட்ட மாய்த்தொழு வாரின்ப வாணரே. 6

வனும் ஆகிய ஒளியான திருநெய்த்தானனைத் தொண்டராகித் தொழுவார் ஒளியோடு கூடி வாழ்பவராவர்.

கு-ரை: விண்டவர் - பகைவர். வெண்ணீறெழக் கண்டவன் - சாம்பராகச் செய்தவன். கடிது - கொடியது.

5. பொ-ரை: தம் முன்கைகள் நோகுமாறு கடைந்த தேவர்களும் அசுரர்களும் அஞ்சிநிற்கச் சிறிதும் ஐயுறாது கடல் நஞ்சுண்டு அனைவரையும் காத்தவனும், உமாதேவியோடு விரும்பி எழுந்தருளியிருப்போனுமாகிய திருநெய்த்தானனைத் தம்கைகளால் தொழுவார் தலைமைத் தன்மையோடு கூடி வாழ்பவராவர்.

கு-ரை: முன்கைநோவக் கடைந்தவர் - (மந்திரமலையாம் மத்தை இழுத்து) முன்கை வலியடையக் கடைந்தவராய தேவாசுரர். நிற்க - ஆலகாலந் தோன்றியதைக் கண்டு அஞ்சி நிற்க.

சங்கியாது - சங்கையடையாது ஐயுறாது. நவின்ற - பொருந்திய. தலை - சிறந்த தலைவராய்.

6. பொ-ரை: உலகெல்லாவற்றையும் சுட்ட திருவெண்ணீற்றினைத் திருமேனியிற்பூசி, நள்ளிருளில் பேய்களோடு சுடுகாட்டில் நடம் ஆடுபவரும், உயர்ந்த முனிவர்களும் தேவர்களும் ஆராய்ந்து காணும் திருநெய்த்தானரும் ஆகிய பெருமானை விருப்பமாகத் தொழுவார் இன்பத்தோடு கூடி வாழ்பவராவர்.

கு-ரை: சுட்டநீறு - திருநீறு. நள் - செறிந்த. சிட்டர் - தூய உணர்வினர். தேரும் - ஆராய்ந்து காணும். இட்டமாய் - விருப்பமாய்.

Koviloor Digital Library

1413. கொள்ளித் தீயெரி வீசிக் கொடியதோர்
கள்ளிக் காட்டிடை யாடுவர் காண்மினோ
தெள்ளித் தேறித் தெளிந்துநெய்த் தானனை
உள்ளத் தால்தொழு வாரும்பர் வாணரே. 7

1414. உச்சி மேல்விளங் கும்மிள வெண்பிறை
பற்றி யாடர வோடுஞ்ச டைப்பெய்தான்
நெற்றி யாரழல் கண்டநெய்த் தானனைச்
சுற்றி மெய்தொழு வார்சுடர் வாணரே. 8

7. பொ-ரை: தீக்கொள்ளியினின்று எரிவீசிக் கொடிதாகிய கள்ளிக்காட்டில் ஆடும் இயல்பினர் காண்பீராக; தெளிவு அடைந்து தேறிப் பின்னும் தெளிந்து அத்திருநெய்த்தானரை உள்ளத்தால் தொழுவார் தேவர்களோடு ஒத்த பேரின்பம் பொருந்தி வாழ்பவராவர்.

கு-ரை: கொள்ளித் தீ - சுடுகாட்டுக் குறைக்கொள்ளி. வீசி - சுழற்றி. கள்ளிக்காடு - கள்ளிச்செடி முளைத்த இடுகாடு.

தெள்ளித்தேறி - ஆராய்ந்து தெளிந்து. உம்பர்வாணர் - தேவர் உலகில் வாழ்பவராவர் என்க.

8. பொ-ரை: சென்னியில் உச்சியின்மேல் விளங்கும் இள வெண் பிறையும் பற்றியாட்டற்குரிய பாம்பும் சடையின்கண் வைத்தவனும், நெற்றிக்கண்ணனுமாகிய திருநெய்த்தானனைச் சுற்றி வந்து மெய்யால் தொழுவார் ஒளி பொருந்தி வாழ்பவ்ராவர்.

கு-ரை: உச்சிமேல் விளங்கும் - ஆகாயத்தே விளங்கும். ஆடு அரவு - ஆடும் பாம்பு; ஆடரவொடு வெண்பிறை பற்றிச் சடை பெய்தவன் என்க.

நெற்றியின்கண் ஆரழல் கண்ட - ஆரழல் தோன்றும்படி நெற்றியினால் விழித்த. ஊழிக்காலத்தும் உமையம்மை தம் கண் களைப் புதைக்க உலகம் இருண்டகாலத்தும் (தி.4. ப.14. பா.8.) விழித்தான் என்க. அழல் - நெற்றிக்கண்ணை உணர்த்திற்று. சுற்றி - வலம்செய்து.

Koviloor Digital Library

1415. மாலொ டும்மறை யோதிய நான்முகன்
காலொ டும்முடி காண்பரி தாயினான்
சேலொ டுஞ்செருச் செய்யுநெய்த் தானனை
மாலொ டுந்தொழு வார்வினை வாடுமே. 9

1416. வலிந்த தோள்வலி வாளரக் கன்றனை
நெருங்க நீள்வரை யூன்றுநெய்த் தானனார்
புரிந்து கைந்நரம் போடிசை பாடலும்
பரிந்த னைப்பணி வார்வினை பாறுமே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: திருமாலோடும் வேதங்களை ஓதிய பிரமனும் திருவடியும் திருமுடியும் காண்டற்கரியனாயினானும். சேல்மீன்கள் தம்மிற்பொரும் திருநெய்த்தானத்தில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய பெருமானை அன்புமயக்கத்தால் தொழுவார்களின் வினைகள் வாடிக்கெடும்.

கு-ரை: மாலொடும் - திருமாலொடும். காலொடும் முடி - திருவடிகளையும் திருமுடியையும். காண்பதரிதாயினான் - காணுவதற் கரிதாய் விளங்கியவன். சேலொடும் செருச்செய்யும் - சேல் மீன்கள் தம்முள் போர்செய்யும். மாலொடும் - வேட்கையோடும்.

10. பொ-ரை: வலிமை பெற்ற தோளாற்றல் உடைய இராவணனை நீண்டவரை நெருங்கும்படித் திருவிரலையூன்றிய திருநெய்த்தானனாரை விரும்பி கைநரம்புகளோடு இசையினால் அவன் பாடுதலும் அதற்கு விரும்பிய பெருமானைப் பணிவார்களின் வினைகள் கெடும்.

கு-ரை: வலிந்த தோள் - வலிமையுடைய தோள் என்க. நெருங்க - அழிய. நீள்வரை - நீண்ட கயிலாயமலை. புரிந்து - இடைவிடாதுவிரும்பி. கைந்நரம்பு - கையின்கண் உளதாகிய நரம்பு. பரிந்தனை-பரிவு செய்தவனை; இரங்கியவனை. பாறும் - அழியும்.

Koviloor Digital Library

35. திருப்பழனம்

பதிக வரலாறு:

வாகீசத்திருமுனிவர் திருச்சோற்றுத் துறையினின்றும் திருப்பழனப்பதி புகுந்து தம்பெருமான் கழல் வணங்கித் திருத்தொண்டு செய்திருந்த காலை பாடியருளியது. (தி.12 திருநா. புரா. 212.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 148 பதிக எண்: 35

திருச்சிற்றம்பலம்

1417. அருவ னாய்அத்தி யீருரி போர்த்துமை
உருவ னாயொற்றி யூர்பதி யாகிலும்
பருவ ரால்வயல் சூழ்ந்த பழனத்தான்
திருவி னாற்றிரு வேண்டுமித் தேவர்க்கே. 1

1418. வையம் வந்து வணங்கி வலங்கொளும்
ஐய னையறி யார்சிலர் ஆதர்கள்

1. பொ-ரை: அருவத் திருமேனியுடையவனாய் யானையின் ஈரப்பட்ட உரியைப் போர்த்தவனாய், உமையை ஒரு பாகத்தில் உடையவனாய் ஒற்றியூரைத் தன்பதியாக் கொண்டவன் ஆயினும், பருத்த வரால் மீன்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த பழனம் என்னும் தலத்தினுள்ளான் அருட்செல்வத்தினால் இத்தேவர்களுக்குச் செல்வம் பெருகுதலை விரும்பும்.

கு-ரை: அருவன் - உருவமற்றவன். அத்தி - யானை. உமை உருவன் - பார்வதியோடு கூடிய உருவமுடையவன். பதி - வாழும் ஊர். பருவரால் - பெரியவரால் மீன்கள் பொருந்திய. பழனத்தான் - திருப்பழனம் என்னும் தலத்திற்குரியவன். திருவினால் திரு வேண்டும் - செல்வங்களைக்கொண்டு சிவப்பணி செய்து வீடு பேற்றைக் கேளுங்கள். இத் தேவர்க்கே - இத்தேவரிடத்தே.

2. பொ-ரை: படங்கொண்ட பாம்பை அரையில் ஆர்த்துக் கட்டிய பழனத்தலத்து இறைவனும், உலகத்தினுள்ளார் எல்லாரும் வந்து

Koviloor Digital Library

பைகொ ளாடர வார்த்த பழனன்பால்
பொய்யர் காலங்கள் போக்கிடு வார்களே. 2

1419. வண்ண மாக முறுக்கிய வாசிகை
திண்ண மாகத் திருச்சடைச் சேர்த்தியே
பண்ணு மாகவே பாடும் பழனத்தான்
எண்ணும் நீர் அவ னாயிர நாமமே. 3

1420. மூர்க்கப் பாம்பு பிடித்தது மூச்சிட
வாக்கப் பாம்பினைக் கண்ட துணிமதி
பாக்கப் பாம்பினைப் பற்றும் பழனத்தான்
தார்க்கொண் மாலை சடைக்கணிந் திட்டதே. 4

வணங்கி வலம் கொள்ளுதற்குரிய தலைவனும் ஆகிய பெருமானைச் சில குருடர்கள் அறியார்; சில பொய்யர்கள் வணங்காது வீண் காலங்கள் போக்குவர்.

கு-ரை: வையம் - உலகம்; அஃது ஆகுபெயராய் மக்களை உணர்த்திற்று. ஐயன் - அழகியவன். ஆதர்கள் - அறிவற்றவர்கள். பைகொள் ஆடரவு - படத்தைக் கொண்டு ஆடுகின்ற பாம்பு. ஆர்த்த - கட்டிய. பழனன்பால் - திருப்பழனத்திறைவரிடத்து. அன்பு கொள்ளாதென வருவிக்க. பொய்யர் - பொய்ப்பொருள்களைப் பின்பற்றுகின்றவர்கள். காலங்கள் போக்கிடுவார்கள் - வறிதே காலங்களைக் கழிப்பார்கள்.

3. பொ-ரை: அழகுபெற முறுக்கப்பெற்ற வட்டமாகிய திருச்சடையிற் சேர்த்து உறுதியாகக் கட்டி முடித்துப் பண் பாடும் இறைவனாகிய பழனத்தலத்துப் பெருமானின் ஆயிரம்நாமங்களை நீர் எண்ணுவீராக.

கு-ரை: வண்ணமாக முறுக்கிய - அழகாக முறுக்கிக் கட்டிய. வாசிகை - தலை. திண்ணமாக - பெரிதாக. பண்ணுமாகவே பாடும் - இசையிலக்கணக்கூறு தெரியப் பாடுகின்ற. அவன் ஆயிரம் நாமத்தை நீர் எண்ணும் - அவனது பல திருப்பெயர்களை நீங்கள் நினையுங்கள்.

4. பொ-ரை: பிடித்த கொடுமையை உடைய பாம்பு நெடுமூச்சு விடவும், அப்பாம்பினைக்கண்ட பிறைமதி நடுங்கிக் காண அப்

Koviloor Digital Library

1421. நீல முண்ட மிடற்றினன் நேர்ந்ததோர்
கோல முண்ட குணத்தால் நிறைந்ததோர்
பாலு முண்டு பழனன்பா லென்னிடை
மாலு முண்டிறை யென்றன் மனத்துளே. 5

1422. மந்த மாக வளர்பிறை சூடியோர்
சந்த மாகத் திருச்சடை சாத்துவான்

பாம்பைப் பற்றியாடுபவனாகிய கொன்றைத்தாரும் மாலையும் உடைய பழனத்தலத்துப் பெருமான் இவற்றைச் சடைக்கணிந்திட்டது என்னையோ?

கு-ரை: பிடித்த மூர்க்கப்பாம்பாகிய அது மூச்சிட வாக்கு அப்பாம்பினைக் கண்ட துணிமதி பார்க்க அப்பாம்பினைப் பற்றும் பழனத்தான் என மாற்றுக. பிடித்த - பற்றிய. மூர்க்கப் பாம்பு - கொடிய பாம்பு. மூச்சிட - பெருமூச்சுவிட்டுச் சீற. வாக்கு - நீர் ஒழுகியதுபோல் நெளிந்துவரும். துணிமதி - பிறை மதி. பார்க்க - காண. பற்றும் - பிடித்து ஆட்டும். தார்க்கொள்மாலை - இண்டை முதலிய மாலை வகைகளோடு. அணிந்திட்டது - தலையில் சூடியுள்ளது. பழனத்தான் சூடியுள்ளான். கொன்றை மாலையோடு இவற்றைச் சூடியது என்னையோ என்க.

5. பொ-ரை: நேர்ந்ததாகிய கோலமாக நஞ்சினை உண்ட குணத்தால் நிறைந்த நீலகண்டனும், பழனத்தலத்தின் கண் உள்ள இறைவனும் ஆகிய பெருமானிடத்து என்றன் மனத்துள் சிறிது மயக்கம் உள தாகின்றது.

கு-ரை: நீலம் - நீலநிறம் பொருந்திய விடம். நேர்ந்ததோர் - பொருந்தியதோர். கோலமுண்ட - அழகைக் கொண்ட. குணத்தால் நிறைந்தது - நற்குணங்களால் நிரம்பிய அம்பிகை. ஓர் பாலுமுண்டு - இடப்பாகத்தில் எழுந்தருளியுள்ளது. என்னிடை - என்னிடத்தே. மால் - மயக்கம். இறை என்பதை இறைவனே என்றும், சிறிது என்றும் பொருள் கூறலாம்.

6. பொ-ரை: பெருமை தரும்படியாக வளர்பிறையைச் சூடி ஒரு சந்தமாகத் திருச்சடை சாத்துவானும், பந்தமாயினவற்றைத்

Koviloor Digital Library

பந்த மாயின தீர்க்கும் பழனத்தான்
எந்தை தாய்தந்தை யெம்பெரு மானுமே. 6

1423. மார்க்க மொன்றறி யார்மதி யில்லிகள்
பூக்க ரத்திற் புரிகிலர் மூடர்கள்
பார்க்க நின்று பரவும் பழனத்தான்
தாட்க ணின்று தலைவணங் கார்களே. 7

1424. ஏறி னாரிமை யோர்கள் பணிகண்டு
தேறு வாரலர் தீவினை யாளர்கள்
பாறி னார்பணி வேண்டும் பழனத்தான்
கூறி னானுமை யாளொடுங் கூடவே. 8

தீர்ப்பானும் ஆகிய திருப்பழனத்து இறைவன் எந்தையும், தாயும், தந்தையும், எம்பெருமானும் ஆவன்.

கு-ரை: மந்தமாக - மெதுவாக. சந்தம் - மாலை. பந்தம் - வினை; நம்மைச் சூழ்ந்த பாசம். எந்தை - என் உண்மையான உயிர்த்தந்தை. தாய் தந்தை - உடலைப்பெற்று வளர்த்த தாயும் தந்தையுமாவன். எம்பெருமான் - எங்கள் தலைவன்.

7. பொ-ரை: எல்லோரும் பார்க்க நின்று பழனத்தின்கண் பரவுவார்க்கு அருள் வழங்கும் இறைவனின் திருவடிக்கண் நின்று தலை வணங்காதவர்கள், அறிவிலிகளாகி வழியொன்றறியாதவர்களும், பூக்களைக்கொண்டு கரத்தால் தொழ விழையாத மூடர்களும் ஆவர்.

கு-ரை: மார்க்கம் - உண்மைச் சமயநெறி. மதியில்லிகள் - மதியிலிகள். பூக்கரத்தில் புரிகிலர் - பூக்களைக் கையில்கொண்டு போற்றாதவர். பார்க்க - அவனது திருக்கண் நோக்கு விழ. பரவும் - தோத்திரியுங்கள். தாள்கள் - திருவடிகள். தலை வணங்காரை நோக்கி இரங்கியது.

8. பொ-ரை: இமையோர்களாகிய தேவர்கள் பணி பல கண்டு தம் பதவியினின்றும் மேலே உயர்ந்தது கண்டும், தீவினையாளர்கள் தெளிவடைந்தாரல்லர். இழிந்தவராய மக்கள் பணியையும் விரும்பும் பழனத்தலத்து இறைவன் உமையாளொடுங் கூடி ஒரு கூறனாயினன்.

Koviloor Digital Library

1425. சுற்று வார்தொழு வார்சுடர் வண்ணன்மேல்
தெற்றி னார்திரி யும்புரம் மூன்றெய்தான்
பற்றி னார்வினை தீர்க்கும் பழனனை
எற்றி னான்மறக் கேனெம் பிரானையே. 9

1426. பொங்கு மாகடல் சூழிலங் கைக்கிறை
அங்க மான இறுத்தருள் செய்தவன்
பங்க னென்றும் பழன னுமையொடும்
தங்கன் தாளடி யேனுடை யுச்சியே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: வானுலகின்கண் ஏறினாராகிய இமையோர்கள் என்க. கண்டும் தேறுவாரலர் - வானோர் வழிபடக்கண்டும் தெளிவாரல்லர். பாறினார் - இழிந்தார். மக்களது பணியையும் விரும்பும் பழனத்தான் என்க.

9. பொ-ரை: திரியும் புரங்கள் மூன்றையும் எய்தவனும், பற்றியவர்களுடைய வினைகளைத் தீர்க்கும் பெருமானுமாகிய பழனத்தலத்து இறைவன் சுற்றுவாரையும் தொழுவாரையும் மேலே உயர்த்தும் ஒளிவண்ணனாயுள்ளனன்; எம்பெருமானை எதனால் அடியேன் மறக்கக்கூடும்?

கு-ரை: சுற்றுவார் - வலம் வருவார். சுடர்வண்ணன் மேல் - ஒளிவண்ணமுடைய பெருமானிடத்து. தெற்றினார் - உலகங்களை அழித்தவர்களாய்; திரியும் என்க. பற்றினார் - பற்றுக்கோடாகக் கொண்டவர். எற்றினால் - எதனால்.

10. பொ-ரை: பழனத்தலத்து இறைவன், பொங்குகின்ற பெருங் கடல் சூழ்ந்த இலங்கைக்கரசனாம் இராவணனது அங்கமானவற்றை இறுத்து அருள்செய்தவனும், உமையொரு பங்கனும், அடியேனுடைய உச்சியிலே தன் தாளிணைகளைத் தங்குமாறு செய்தவனும் ஆவான்.

கு-ரை: பொங்கும் - அலையெழுப்பும். மா - பெரிய. அங்க மான - உடலுறுப்புக்களானவை. பங்கன் - மாதொரு கூறன். தங்கன் - தங்கியிருப்பவன். என்றும் - எப்பொழுதும்.

Koviloor Digital Library

36. திருச்செம்பொன்பள்ளி

பதிக வரலாறு:

ஆண்டவரசு நனிப்பள்ளி நண்ணிக்கண்ணுதலார் கழல் தொழுது புனற்பொன்னியிருகரையுந் தொழுது திருச்செம் பொன் பள்ளியீசரைப் பரவிப் பாடியருளியது இத் திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 149 **பதிக எண்: 36**

திருச்சிற்றம்பலம்

1427. கான றாத கடிபொழில் வண்டினம்
தேன றாத திருச்செம்பொன் பள்ளியான்
ஊன றாததோர் வெண்டலை யிற்பலி
தான றாததோர் கொள்கையன் காண்மினே. 1

1428. என்பு மாமையும் பூண்டடங் குழிதர்வர்க்
கன்பு மாயிடும் ஆயிழை யீரினிச்
செம்பொன் பள்ளியு ளான்சிவ லோகனை
நம்பொன் பள்ளியுள் கவினை நாசமே. 2

1. பொ-ரை: மணம் நீங்காத விளக்கம் உடைய பொழில்களில் வண்டினங்களின் தேன் நீங்காத திருச்செம்பொன் பள்ளி இறைவன், தசைவிட்டு நீங்காத ஒரு வெண்தலையில் பலியினைத் தான் ஏற்றலி னின்றும் நீங்காத இயல்புடையவன்; காண்பீர்களாக.

கு-ரை: கான் - மணம். அறாத - நீங்காத. கடி - விளக்கம். வண் டினம் - வண்டுக்கூட்டங்கள். தேன் அறாத - தேனை இழக்காத. ஊன் அறாததொர் வெண்டலை - தசை நீங்காததொரு வெள்ளிய மண்டை யோடு. பலிதானறாததோர் கொள்கையன் - பிச்சையெடுக்கும் தொழில் நீங்காத தன்மையன்.

2. பொ-ரை: எலும்பும், ஆமையும் அணிந்து திரிதருகின்ற செம் பொன்பள்ளி இறைவனும் சிவலோகனுமாகிய பெருமானை அன்பு

Koviloor Digital Library

1429. வேறு கோலத்த ராணலர் பெண்ணலர்
கீறு கோவண வைதுகி லாடையர்
தேற லாவதொன் றன்றுசெம் பொன்பள்ளி
ஆறு சூடிய அண்ண லவனையே. 3

1430. அருவ ராததோர் வெண்டலை யேந்திவந்
திருவ ராயிடு வார்கடை தேடுவார்
தெருவெ லாமுழல் வார்செம்பொன் பள்ளியார்
ஒருவர் தாம்பல பேருளர் காண்மினே. 4

செய்யும் ஆராய்ந்த இழையை அணிந்த பெண்களே! அப் பெருமானை நம் அழகிய மனக்கோயிலின்கண்ணே நினைந்தால் நம் வினைகள் நாசமாகும்.

கு-ரை: என்பும் - எலும்பு மாலையும். ஆமையும் - கூர்மா வதாரமாகிய ஆமையின் ஓட்டையும். பூண்டு - அணிந்து - 'முற்ற லாமையிள நாகமோடேன முளைக்கொம்பவை பூண்டு' (தி.1. ப.1. பா.2)) உழிதர் வர்க்கு - திரிபவர்க்கு. ஆயிழையீர் - சிறந்த நூல்களை ஆராயும் இயல்பினீர். பொன்பள்ளி - பொற்கோயில். நம்பொன்பள்ளி உள்க - அழகிய நமது உள்ளக்கோயிலில் நிறுத்தி உள்க.

3. பொ-ரை: வேறுகோலத்தோடு கூடியவரும், ஆண், பெண் அல்லாதவரும், கிழித்த கோவணத்துகிலாடையுடையவரும், செம் பொன் பள்ளியில் வீற்றிருந்து கங்கையாளைச் சடையிற் சூடிய அண்ணலாகிய அப்பெருமானைத் தெளிந்துகொள்ளுதல் யார்க்கும் எளிதாம் ஒன்றன்று.

கு-ரை: ஆணலர் பெண்ணலர் வேறு கோலத்தர் எனக் கூட்டுக. வேறு கோலத்தர் - ஆண் பெண் அலியலன் என்னுமாறும் இது அவனுருவன்று என்னுமாறும் தனிப்பட்ட கோலம் கொள்பவர். கீறு - கிழித்த. ஐ - அழகிய. துகில் - ஆடை. இருபெயரொட்டு. சிறந்த ஆடை. அவனைத் தேறலாவதொன்றன்று - அவனைத் துணிதல் பசுபோதத்தால் ஆவதொன்றன்று.

4. பொ-ரை: அருவருப்புக்கொள்ளாது ஒரு வெண்டலையை ஏந்திவந்து தெருவெல்லாம் உழல்வார் செம்பொன் பள்ளி இறைவர்; திருமாலும் பிரமனுமாகிய இருவரால் திருமுடி, திருவடிகளின் எல்லை

Koviloor Digital Library

1431. பூவு லாஞ்சடை மேற்புனல் சூடினான்
ஏவ லாலெயின் மூன்று மெரித்தவன்
தேவர் சென்றிறைஞ் சுஞ்செம்பொன் பள்ளியான்
மூவ ராய்முத லாய்நின்ற மூர்த்தியே. 5

1432. சலவ ராயொரு பாம்பொடு தண்மதிக்
கலவ ராவதின் காரண மென்கொலோ
திலக நீண்முடி யார்செம்பொன் பள்ளியார்
குலவில் லாலெயில் மூன்றெய்த கூத்தரே. 6

தேடப்பட்ட அவ்வொருவர் பலபெயர்களும் கொண்டு திகழ்வர்; காண்பீர்களாக.

கு-ரை: அருவராததொர் - வெறுக்கத்தக்கதல்லாத ஒரு. இருவராய -அருளுடன் சத்தியும் சிவமுமாய். இடுவார் - வந்து பிச்சையிடுவார். கடை - வீட்டுவாயில். உழல்வார் - திரிந்து வருந்துவார். ஒருவர் தாம் பலபேருளர் - தாமொரு பொருளேயானவர் ஆயினும் பல திருப்பெயர்களை உடையவர். ஆணவத்தைப் பலியாக இடுதல் உட்பொருள் ''பசுபோதக் கவளமிட'' (திருவிளையாடல் - கடவுள் வாழ்த்து 15).

5. பொ-ரை: தேவர்கள் சென்று இறைஞ்சுகின்ற செம்பொன் பள்ளி இறைவர் கொன்றைப்பூப் பொருந்திய சடையில் கங்கையைச் சூடியவரும், ஓரம்பினால் முப்புரம் எரித்தவரும், மூவர்க்கும் முதலாய் நின்ற மூர்த்தியும் ஆவர்.

கு-ரை: பூவுலாம் - பூக்கள் பொருந்திய. புனல் - கங்கை. ஏ அலால் - அம்பு இல்லாமலே நகைத்தெரித்தவன் என்றபடி. வல் ஏ ஆல் - வலிய அம்பால் எனவும் மாறுக. மூவராய் முதலாய் - படைத்துக் காத்து அழிக்கும் கடவுளராயும். அம்மூவர்க்கும் முழுமுதலாயும் உள்ளவர். தேவர் சென்றிறைஞ்சும் - விருத்திரன் என்ற அசுரனைக் கொல்லும் பொருட்டும் தக்கயாகத்தில் போந்தபழி நீங்குதற் பொருட்டும் இந்திரனும், சிருஷ்டியின்பொருட்டுப் பிரமனும், கணவனைப்பெற இரதியும், எட்டுத்திக்குப் பாலரும் வழிபட்டதாய்த் தலவரலாறு.

6. பொ-ரை: பெருமைக்குரிய வில்லால் மூன்றெயில்களை எய்த கூத்தரும், பொட்டணிந்தவரும், நீண்ட சடாமுடி உடையவருமாகிய

Koviloor Digital Library

1433. கைகொள் சூலத்தர் கட்டுவாங் கத்தினர்
மைகொள் கண்டத்த ராகி யிருசுடர்
செய்ய மேனிவெண் ணீற்றர்செம் பொன்பள்ளி
ஐயர் கையதோ ரைந்தலை நாகமே. 7

1434. வெங்கண் நாகம் வெருவுற ஆர்த்தவர்
பைங்கண் ஆனையி னீருரி போர்த்தவர்
செங்கண் மால்விடை யார்செம்பொன் பள்ளியார்
அங்க ணாயடைந் தார்வினை தீர்ப்பரே. 8

செம்பொன்பள்ளி இறைவர் கங்கையைச் சூடியவராய், பாம்பும் குளிர்பிறையும் கலந்தவராய் ஆவதன் காரணம் என்னையோ?.

கு-ரை: சலவராய் - கங்கையைச் சூடியவராய். கலவராவதின் காரணம் - கலந்தணிபவராதற்குக் காரணம். நெற்றிப் பொட்டும் நீர்முடியும் அணிந்தவர். குலம் - உயர்ந்த.

7. பொ-ரை: கையிற்கொண்ட சூலம் உடையவரும், கட்டு வாங்கத்தை உடையவரும், திருநீலகண்டரும் ஆகி இருசுடர்களைப் போன்று சிவந்த திருமேனியும் அதிற்பூசிய வெண்ணீற்றினருமாகிய செம்பொன்பள்ளித் தலைவர் கையின்கண் உள்ளது ஓர் ஐந்தலை நாகமாகும்.

கு-ரை: கைகொள் - கையின்கண் கொண்ட. கட்டுவாங் கத்தினர் - மழுவாயுதத்தினர். இருசுடர் - சூரிய சந்திரர் வடிவா யிருப்பவர். கையது - கையின்கண் அணியப்பட்டது. கையிற்பிடித்தது கங்கணமாகக் கொண்டது என்றுமாம்.

8. பொ-ரை: வெவ்விய கண்ணையுடைய நாகத்தினை அஞ்சும் படி ஆர்த்துக்கட்டியவரும், பசுமையான கண்ணையுடைய ஆனை யின் பச்சைத்தோலைப் போர்த்தவரும், செங்கண்ணையுடைய திருமாலைத் தமக்கு விடையாக உடையவரும் ஆகிய செம்பொன் பள்ளி இறைவர் தம்மை அடைக்கலமாக அடைந்தவர்களின் வினை களைத் தீர்ப்பர்.

கு-ரை: வெங்கண் நாகம் - கொடிய கண்ணையுடைய பாம்பு, வெருவுற - அஞ்ச. பைங்கண் - செவ்விய இளைய கண்கள்.

Koviloor Digital Library

1435. நன்றி நாரணன் நான்முக னென்றிவர்
நின்ற நீண்முடி யோடடி காண்புற்றுச்
சென்று காண்பரி யான்செம்பொன் பள்ளியான்
நின்ற சூழலில் நீளெரி யாகியே. 9

1436. திரியும் மும்மதில் செங்கணை யொன்றினால்
எரிய வெய்தன லோட்டி யிலங்கைக்கோன்
நெரிய வூன்றியிட் டார்செம்பொன் பள்ளியார்
அரிய வான மவரருள் செய்வரே. 10

திருச்சிற்றம்பலம்

ஆர்த்தவர் - கட்டியவர். அங்கணாய் - அழகிய பற்றுக் கோடாய். அடைக்கலமாய், அவ்விடத்தவராய், அவரையே புகலிடமாய் எனவுமாம்.

9. பொ-ரை: செம்பொன்பள்ளி இறைவர் நன்மை மிக்க நாரணனும், பிரமனும் ஆகிய இருவரும் நிலைபெற்ற திருமுடியையும் திருவடியையும் காணத்தொடங்கிச் சென்றும் காண்டலரியவராய் நின்ற அச்சூழ்நிலையில் நீண்டு அழலுருவாயினர்.

கு-ரை: நன்றி - நன்மையையுடைய. பிரமன்போலப் பொய் கூறாமையின் நன்றி நாரணன் என்றார். நீள் எரியாகிநின்ற சூழலில் நீள் முடியோடு அடி காண்புறச் சென்று காண்பறியானென்க.

10. பொ-ரை: செம்பொன்பள்ளி இறைவர். திரிகின்ற மும்மதில் களைச் செங்கணை ஒன்றினால் எரியுமாறு எய்து அனலினால் ஓட்டி, இராவணன் நெரியுமாறு தம் திருவிரல் ஒன்றால் ஊன்றியவர்; தம்மை யடைந்த அன்பர்க்கு அரிதாகிய வீட்டுலக இன்பத்தை அப்பெருமான் அருள்வர்.

கு-ரை: செங்கணை - கூரியநேரிய கணை. அனலோட்டி - அக்கினிதேவனாகிய கணையை ஏவி. அரியவானம் - கிடைத்தற்கரிய வீடுபேறு. ஒன்றினால் - ஒன்றின்கண் வைத்து. அனல்செங்கணை ஒன்றினால் ஓட்டி எரிய எய்து எனக் கூட்டுக.

Koviloor Digital Library

37. திருக்கடவூர்வீரட்டம்

பதிக வரலாறு:

திருப்புகலூரரைப் பரவித் திருநீலநக்கர் முதலோரிடம் விடைகொண்டு திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளுடன் திருவம்பரை வழிபட்டுத் திருக்கடவூர் அடைந்து, கூற்றுதைத்த குரை கழலைப் போற்றிக் குங்குலியக்கலய நாயனார் திரு மடத்தில் வாழ்ந்து, திருக்கோயில் வழிபாடு செய்திருந்த நாட்களில் பாடிய திருப்பதிகங்களுள் ஒன்று இத் தமிழ்மாலை. (தி.12 திருநா. புரா. 247.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 150 பதிக எண்: 37

திருச்சிற்றம்பலம்

1437. மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைகண் டீர்கட வூரரே. 1

1. பொ-ரை: திருக்கடவூரில் மேவும் பெருமான், மலையில் வாழும் யானை போன்று மயக்கம் செய்த கொடிய வினைகளுக்கே நிலைக்களமாய் யானைபோன்று அடங்காது பலவற்றையும் நினைக்கின்ற நல்வினைகளாகிய யானைகளையும் ஏனைய மதயானையையும் அழிக்கும் இயல்பினர் கலையின் பயனாகிய ஒழுக்கத்தால் அடையத்தகும் யானை போன்றவர்.

கு-ரை: மலைக்கொள் யானை மயக்கிய வல்வினை - மலையில் வாழும் யானை போன்று மயக்கத்தைச் செய்த கொடிய வினைகள். வல் வினை நிலைக்கொளானை - கொடிய வினைகளுக்கே நிலைக் களமாய் யானை போன்று அடங்காது பலவற்றை. நினைப்புறும் - நினைக்கின்ற. கொலைக்கை யானையும் - வல்வினையாகிய யானை யையும் ஏனை மத யானையையும். கலைக்கையானை - கல்வியறிவினாலாகிய ஒழுக்கத்தின் பயனாக அடையத்தக்க பொருள்களாயுள்ளவர்.

Koviloor Digital Library

1438. வெள்ளி மால்வரை போல்வதொ ரானையார்
உள்ள வாறெனை யுள்புகு மானையார்
கொள்ள மாகிய கோயிலு ளானையார்
கள்ள வானைகண் டீர்கட வூரரே. 2

1439. ஞான மாகிய நன்குண ரானையார்
ஊனை வேவ வுருக்கிய வானையார்
வேன லானை யுரித்துமை யஞ்சவே
கான லானைகண் டீர்கட வூரரே. 3

2. பொ-ரை: வெள்ளிமால்வரை போன்ற அயிராவணம் என்னும் ஒப்பற்ற ஆனையை உடையார்; உள்ளவாறே என் உள்ளத்தில் புகுகின்ற ஆனைபோல்வார்; கொள்ளும் இடமாகிய கோயிலுள் ஆனையாய் உள்ளவர்; ஆதலின் கடவூர்த்தலத்து இறைவர் கள்ளம் உடைய ஆனைபோல்வார்; காண்பீர்களாக.

கு-ரை: வெள்ளிமால்வரை - கயிலை; கயிலைபோன்று வெள்ளிய. ஆன் - எருது; எருதையுடையர் என்க. அல்லது ஐராவணம் எனினுமமையும். உள்ளவாறு - மெய்யாக என்னுள் புகுமென்க. ஆனையார் - பெரியர். கொள் அம் ஆகிய கோயில் - அழகைக் கொண்டதாகிய சிறிய கோயில் எனக்கூட்டுக. கள்ள ஆனை - காண் பதற்கு அரிய யானைபோன்றவர்.

3. பொ-ரை: ஞானமாகிய நன்குணரத்தக்க ஆனையார்; உடற் பொதியையமேவுமாறு உருக்கி உள்ளொளிபெருக்கும் ஆனையார்; ஆனையை உமாதேவியார் அஞ்சுமாறு உரித்த கடவூர்த் தலத்து இறைவர்; கானல் ஆனையும் போல்வர்; காண்பீர்களாக.

கு-ரை: ஞானமாகிய நண்குணர் - அறியவேண்டுவன பலவற் றையும் நன்கு உணர்ந்தவராகிய. ஊனை - உடலை. வேவஉருக்கிய - கருவி கரணங்களை அன்புமயமாகச் செய்த.வேனல் ஆனை - சின முள்ளதாய் வந்த யானை. கான் அல் யானை - காட்டில் திரிதல் இல்லாத நல்ல யானை. உமையஞ்ச உரித்த கடவுளர் என முடிக்க. உரித்த உமை பெயரெச்சத்தகரம் தொக்கது.

Koviloor Digital Library

1440. ஆல முண்டழ காயதொ ரானையார்
நீல மேனி நெடும்பளிங் கானையார்
கோல மாய கொழுஞ்சுட ரானையார்
கால வானைகண் டீர்கட வூரரே. 4

1441. அளித்த ஆன் அஞ்சு மாடிய வானையார்
வெளுத்த நீள்கொடி யேறுடை யானையார்
எளித்த வேழத்தை எள்குவித் தானையார்
களித்த வானைகண் டீர்கட வூரரே. 5

4. பொ-ரை: நஞ்சினை உண்டும் அழகுபெற்ற ஆனையார்; நீல மேனியை ஒருபாகத்தே உடைய நீண்ட பளிங்கனைய ஆனையார்; கொழுவிய சுடர்விடும் கோலம் உடைய ஆனையார்; கடவூர்த் தலத் திறைவர் கால ஆனை போல்வர்; காண்பீர்களாக.

கு-ரை: ஆலம் - விடம். ஆலமுண்டு அழகைப் பெற்ற என்க. அழகாயதொரானையார் - அழகியதொரு யானை போன்றவர். நீல மேனி - பார்வதி அல்லது திருமாலின் திருவுரு. பளிங்கானையார் - வெண்ணீறணிந்து வெள்ளியராய் விளங்குபவர். கோலமாய் - அழகியராய். கொழுஞ்சுடர் ஆனையர் - மிக்கஒளியாய் விளங்கும் இயல்பினர். கால ஆனை - காலனுக்கு ஆனைபோன்றவர். காலனை அழித்தவர்.

5. பொ-ரை: அன்பர்கள் பரிந்து கொடுக்கும் பஞ்ச கவ்வி யங்களை ஆடிய ஆனையார்; வெண்மையான இடபக்கொடி உடைய ஆனையார்; இகழ்ந்து வந்த யானையினை எல்லோரும் எள்குமாறு உரித்த ஆனையார்; கடவூர்த்தலத்திறைவர் களிப்புற்ற யானை போல்வர்; காண்பீர்களாக.

கு-ரை: ஆன் அளித்த அஞ்சும் ஆடிய என்க. ஆன் - பசு. அஞ்சு- பஞ்சகவ்வியம். வெளுத்த ஏறு - நீள்கொடியில் வெளுத்த ஏறுடையார் என மாறி வெள்விடைக் கொடியர் என்க. எளித்த - எளிதாகக் கருதிக் கொல்லவந்த. எள்குவித் தானையார் - இகழ்ந்து கொன்ற இயல்பினர். பெயரெச்சத்தகரம் தொக்கது. களித்த - மிக்க இன்பத்தையுடைய.

Koviloor Digital Library

1442. விடுத்த மால்வரை விண்ணுற வானையார்
தொடுத்த மால்வரை தூயதொ ரானையார்
கடுத்த காலனைக் காய்ந்ததொ ரானையார்
கடுத்த வானைகண் டீர்கட வூரரே. 6

1443. மண்ணு ளாரை மயக்குறு மானையார்
எண்ணு ளார்பல ரேத்திடு மானையார்
விண்ணு ளார்பல ரும்மறி யானையார்
கண்ணு ளானைகண் டீர்கட வூரரே. 7

1444. சினக்குஞ் செம்பவ ளத்திர ளானையார்
மனக்கும் வல்வினை தீர்த்திடு மானையார்

6. பொ-ரை: விடுத்த பெரியமலையை விண்ணுற நிமிர்க்கும் ஆனையார்; தொடுத்த பெரியமலை தூய்மையாக உடைய ஆனையார்; சினந்துவந்த காலனைக் காய்ந்த ஒப்பற்ற கடவூர்த்தலத்திறைவர் சினத்தலுற்ற ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

கு-ரை: விண்ணுற விடுத்த - ஆகாயத்தை அளாவச் செய்த. மால்வரை - பெரியமலை; கயிலாயம். மால்வரை தொடுத்த - பெரிய இமயமலையை வில்லாக வளைத்த. கடுத்த - கோபித்த.

7. பொ-ரை: மண்ணுலகின் உள்ளாரை மயக்கம் உறுவிக்கும் ஆனையார்; எண்ணிக்கையிற் பெருகிய நல்லடியார் பலர் ஏத்தித்தொழும் ஆனையார்; விண்ணுலகின்கண் உள்ள தேவர்கள் பலரும் அறிகின்ற ஆனையார்; கடவூர்த்தலத்து இறைவர் காதலாகித் தொழும் அடியார் கண்ணுள் நின்று காட்சி வழங்கும் ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

கு-ரை: மண்ணுளார் - மக்கள். மயக்குறும் - பரிபாக மடைதற் பொருட்டு மலங்களாகிய அழுக்குகளில் மயக்குறுவிக்கும். எண்ணு ளார் பலர் - பல எண்ணங்களையுடைய பலர். கண்ணுள் ஆனை - கண்களுக்குள் நீங்காதிருக்கும் ஆனை போன்றவர்.

8. பொ-ரை: சினக்கின்ற செம்பவளத் திரள்களை உடைய ஆனையார்; மனத்தின்கண் நிறைந்த வல்வினைகளைத் தீர்க்கும்

Koviloor Digital Library

அனைக்கும் அன்புடை யார்மனத் தானையார்
கனைக்கு மானைகண் டீர்கட வூரரே. 8

1445. வேத மாகிய வெஞ்சுட ரானையார்
நீதி யானில னாகிய வானையார்
ஓதி யூழி தெரிந்துண ரானையார்
காத லானைகண் டீர்கட வூரரே. 9

1446. நீண்ட மாலொடு நான்முகன் தானுமாய்க்
காண்டு மென்றுபுக் கார்க ளிருவரும்
மாண்ட வாரழ லாகிய வானையார்
காண்ட லானைகண் டீர்கட வூரரே. 10

ஆனையார்; அன்னைக்கும் மேலாகிய அன்புடையார் மனத்து உறையும் ஆனையார்; கடவூர்த்தலத்து இறைவர் ஒலித்து முழங்கி வரும் ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

கு-ரை: சினக்கும் - சிவக்கும். திரள் - திரள்போன்ற. மனக்கும் - மனத்தின்கண். அனைக்கும் - அன்னையினும். கனைக்கும் - அடியார்களைத் தன்பால் அழைக்கும்.

9. பொ-ரை: வேதங்களாய் அதன் ஒளியாய் விளங்கும் ஆனைபோன்றவர். நீதிமுறை விளங்க நிலத்தின்கண் தோன்றியவர் என்க. வேதங்களை ஓதி பல ஊழிகளையும் கண்டறிந்தவர். அன்பர்க் கன்பர் கடவூர் இறைவர்; காண்பீர்களாக.

கு-ரை: வேதமாகிய ஆனையார், வெஞ்சுடர் ஆனையார் என்க. நீதியால் - கடமையாக. நிலனாகிய - நிலமாக விளங்கிய; நிலத்தின்கண் திருமேனிகொண்டு தோன்றிய என்றுமாம். ஓதி - வேதமோதி. ஊழிதெரிந்துணர் - பல ஊழிகளையும் தெரிந்து உணர்கின்ற.

10. பொ-ரை: நெடியோனாகிய திருமாலும், நான்முகனும் காண்போம் என்று ஆணவத்தாற் கருதிப் புகுந்தும் காண்டற்கரிய வராய் மாட்சி உடைய பேரழலாக நிமிர்ந்த ஆனையார்; கடவூர்த் தலத்து இறைவர் காண்டற்குரிய ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

Koviloor Digital Library

1447. அடுத்து வந்த இலங்கையர் மன்னனை
எடுத்த தோள்க ளிறநெரித் தானையார்
கடுத்த காலனைக் காய்ந்ததொ ரானையார்
கடுக்கை யானைகண் டீர்கட வூரரே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை: காண்டும் - அடிமுடி காண்போம். மாண்ட - செருக்கு அழிந்த. காண்டலானை - அனைவரும் காணத்தக்க ஆனை போன்றவர்.

11. பொ-ரை: எடுப்பேன் என்று அடுத்துவந்த இலங்கை வேந்தனை எடுக்கலுற்ற இருபது தோள்களும் இறும் வண்ணம் நெரித்த ஆனையார்; சினந்த காலனைக் காய்ந்த ஆனையார்; கடவூர்த் தலத்து இறைவர் கொன்றையணிந்த ஆனைபோல்வர்; காண்பீர்களாக.

கு-ரை: அடுத்துவந்த - கயிலையை·நெருங்கிவந்த. கடுத்த - சினந்துவந்த. கடுக்கை - கொன்றை.

திருநாவுக்கரசர் புராணம்

செங்குமுத மலர்வாவித் திருக்கடவூர் அணைந்தருளிப்
பொங்கியவெங் கூற்றடர்த்த பொன்னடிகள் தொழுதேத்திக்
குங்குலியக் கலயனார் திருமடத்தில் குறைவறுப்ப
அங்கவர்பால் சிவனடியா ருடன்அமுது செய்தார்கள்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library



திருக்கடவூர்: அருள்மிகு காலசம்ஹாரமூர்த்தி

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 16815
LIBRARY. KOVILOOR

Koviloor Digital Library

38. திருக்கடவூர்மயானம்

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தருடன் திருக்கடவூரணைந்தருளி, கூற்றுதைத்த குரைகழலைப் போற்றிப்பரவி, திருக்கடவூர் மயானம் பணிந்து பாடியருளியது இத்தமிழ்மாலை (தி.12 திருநா. புரா. 248.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 151 பதிக எண்: 38

திருச்சிற்றம்பலம்

1448. குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர் தாங்கட வூரின் மயானத்தார்
பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையுந் தீர்ப்பர் பெருமா னடிகளே. 1

1449. உன்னி வானவ ரோதிய சிந்தையில்
கன்னல் தேன்கடவூரின் மயானத்தார்
தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம்
பின்னை யென்னார் பெருமா னடிகளே. 2

1. பொ-ரை: கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள் சங்கவெண்குழையணிந்த காதினர்; கோவண ஆடையினர்; அன்பு செய்யும் அடியார்கட்கு மிக்க அண்மையில் உள்ளவர்; தம் பழைய அடியார்கள் செய்த பாவமும் பிழையும் தீர்ப்பவர்.

கு-ரை: குழைகொள் காதினர் - குழையணிந்த காதினை உடையவர். உழையர் - மானைக் கையின்கண் உடையவர்; பக்கத்திருப்பவர் எனலுமாம். பழையதம் அடியார் - வாழையடி வாழையாய்த் தொண்டுரிமை பூண்ட அடியவர். பிழை - குற்றம். பெருமா னடிகள் - இறைவன்; இத்தலத்து இறைவர் திருப் பெயராகவும் கூறுவர்.

2. பொ-ரை: கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், தம்மை உன்னித்தேவர்கள் ஓதும் போது அவர்சிந்தையில்கன்னல் போன்றும் தேன் போன்றும் இனிப்பவர்; தம்மை நோக்கித் தொழுது

Koviloor Digital Library

1450. சூல மேந்துவர் தோலுடை ஆடையர்
ஆல முண்டமு தேமிகத் தேக்குவர்
கால காலர் கடவூர் மயானத்தார்
மாலை மார்பர் பெருமா னடிகளே. 3

1451. இறைவ னாரிமை யோர்தொழு பைங்கழல்
மறவ னார்கட வூரின் மயானத்தார்
அறவ னாரடி யாரடி யார்தங்கள்
பிறவி தீர்ப்பர் பெருமா னடிகளே. 4

எழும் அடியவர்கட்கெல்லாம் 'பிறகு அருள்செய்வோம்' என்னாது அப்போதே அருளும் பெருங்கருணை உடையவர்.

கு-ரை: உன்னி - சிந்தித்து. ஓதிய - புகழ்ந்த கடவூர் மயானத்தார் என்க. அல்லது உன்னி ஓதிய வானவர் சிந்தையில் என மாற்றிப் பொருள் கூறுக. கன்னல் - கரும்பு. பின்னை - பிறகு என்னாது; உடனே அருள் வழங்குபவர் என்க. அன்றி வானவர் உன்னி ஓதிய மயானத்தார் எனலுமாம்.

3. பொ-ரை: கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், சூலம் ஏந்தியிருப்பவர்; புலித்தோலை உடுத்திருப்பவர்; ஆலம் உண்டு அமுதைப் பிறர்க்குத் தேக்கி அளிப்பவர். காலனுக்கும் காலர்; மாலை யணிந்த மார்பினர்.

கு-ரை: உடை ஆடை - இருபெயரொட்டு. ஆலம் - நஞ்சு. அமுதே மிக - அந்நஞ்சே அமுதமாக. தேக்குவர் - நிறைவிப்பர். அன்றித்தாம் நஞ்சுண்டு அமரர்க்கு அமுதம் பெருகத் தருபவர் என்க. காலகாலர் - காலனுக்குக் காலனார்.

4. பொ-ரை: கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், தேவர்கள் தொழுகின்ற பைங்கழலை உடைய இறைவர்; வீரம் உடையவர்; அறமே வடிவானவர்; அடியார்களின் பிறவி நோயைத் தீர்ப்பவர்.

கு-ரை: பைங்கழல் - பைம்பொன் கழல். மறவனார் - வலியர். அறவனார் - அறவடிவினர். இவற்றிற்கு மறக்கருணை செய்பவர், அறக்கருணை செய்பவர் எனலுமாம்.

Koviloor Digital Library

1452. கத்து காளி கதந்தணி வித்தவர்
மத்தர் தாங்கட வூரின் மயானத்தார்
ஒத்தொவ் வாதன செய்துழல் வாரொரு
பித்தர் காணும் பெருமா னடிகளே. 5

1453. எரிகொள் மேனி யிளம்பிறை வைத்தவர்
கரியர் தாங்கட வூரின் மயானத்தார்
அரிய ரண்டத்து ளோரயன் மாலுக்கும்
பெரியர் காணும் பெருமா னடிகளே. 6

1454. அணங்கு பாகத்தர் ஆரண நான்மறை
கணங்கள் சேர்கட வூரின் மயானத்தார்

5. பொ-ரை: கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள் கத்துகின்ற காளியின் சினத்தைத் தணிவித்தவர்; மதம் பொருந்தியவர் (ஊமத்தமலரைச் சூடியவர்) ஒத்தும் ஒவ்வாதும் செய்யும் செயல் பலவற்றைச் செய்து உழல்கின்ற பித்தர்போல்வர்; காண்பீர்களாக.

கு-ரை: கத்து - ஆரவாரம் செய்த. கதம் - கோபம். தணிவித்தவர் - நீக்கியவர்; நடனத்தால் வென்றவர். மத்தர் - உன்மத்தர், அல்லது ஊமத்தை அணிந்தவர். ஒத்தொவ்வாதன செய்யும் - உலகியலோடு பொருத்தமுள்ளனவாகவும், பொருத்தமில்லாதனவாகவும் செய்யும். பித்தர் - ஒருநெறிப்பட்ட செயல் இல்லாதவர்.

6. பொ-ரை: கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், சிவந்த தழல் வண்ணம் கொண்ட திருமேனியும், இளம்பிறை வைத்த சடையும் உடையவர்; அயிராவணம் என்ற ஆனையை உடையவர்; அயன், திருமால் முதலிய தேவர்கள் யாவருக்கும் காண்டற்கு அரியர்; பெரியர்; காண்பீர்களாக.

கு-ரை: எரிகொள்மேனி - நெருப்பின் நிறங்கொண்ட சிவந்த மேனி. கரியர் - எல்லா உயிர்களுக்கும் சான்றாக நிற்பவர், அகோர முகத்தினர் எனலுமாம். அண்டத்துளோர் - வானுலகில் உள்ளவர்.

7. பொ-ரை: கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், உமை ஒருபாகம் உடையவர்; ஆரணங்களாகிய நான் மறைகளின்

Koviloor Digital Library

வணங்கு வாரிடர் தீர்ப்பர் மயக்குறும்
பிணங்கொள் காடர் பெருமா னடிகளே. 7

1455. அரவு கையின ராதி புராணனார்
மரவு சேர்கட வூரின் மயானத்தார்
பரவு வாரிடர் தீர்ப்பர் பணிகொள்வர்
பிரமன் மாற்கும் பெருமா ன டிகளே. 8

* * * * * * * * * 9, 10

திருச்சிற்றம்பலம்

தொகுதிகள் தொழுது சேரும் தகைமை உடையவர்; தம்மை வணங்குவார்களது துன்பங்களைத் தீர்ப்பவர்; மயக்கம் மிகுவிக்கும் பிணங்களைக் கொண்ட சுடுகாடே பெரும்பதியாக் கொண்டவர்.

கு-ரை: அணங்கு - பார்வதி. ஆரண நான்மறை - (இருபெயரொட்டு) வேதங்களாகிய நான்மறை. கணங்கள் - அடியவர் கூட்டம், மயக்குறும் - அறிவாற்றல் ஒடுங்கிய. பிணங்கொள்காடு - இடுகாடு. எல்லா உலகங்களும் அழிந்து உயிர்கள் மயங்கித் தம்முள் ஒடுங்கும் இடம் பிணங்கொள் காடு எனப்பட்டது.

8. பொ-ரை: கடவூர் மயானத்தாராகிய பெருமான் அடிகள், அரவம் உடைய கையினர்; ஆதியிற்றோன்றிய பழமையானவர்; தம்மைப் பரவும் அடியார்களது இடர்களைத் தீர்ப்பவர்; அவர்களைப் பணியும் கொள்பவர்; பிரமன், மாலுக்கும் பெரிய இயல்புடையவராவர்.

கு-ரை: அரவு கையினார் - பாம்பைக் கங்கணமாக அணிந்த திருக்கைகளை உடையவர். ஆதிபுராணனார் - எல்லாவற்றிற்கும் முதல்வராயும், பழமையானவராயும் உள்ளவர். மரவு - மராமரம். பெருமான் - தலைவன்.

9, 10. * * * * * * * * * * * * *

Koviloor Digital Library

39. திருமயிலாடுதுறை

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் புனற்பொன்னியிருகரையும் சார்ந்து விடையுயர்த்தார் செம்பொன்பள்ளிபாடி மயிலாடுதுறை நண்ணி மாயூர நாதரைத் தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 152 பதிக எண்: 39

திருச்சிற்றம்பலம்

1456. கொள்ளுங் காதன்மை பெய்துறுங் கோல்வளை
உள்ள முள்கி யுரைக்குந் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே. 1

1457. சித்தந் தேறுஞ் செறிவளை சிக்கெனும்
பச்சை தீருமென் பைங்கொடி பால்மதி

1. பொ-ரை: மயிலாடுதுறையில் உறைகின்ற வள்ளலும், கங்கை வெள்ளம் தாங்கிய சடையனுமாகிய பெருமானை விரும்பிக் காதல் கொள்ளும் இயல்புடைய திரண்ட வளைகள் பெய்யப்பட்ட இப்பெண் உள்ளத்தால் உள்கி அப்பெருமான் திருப்பெயரையே உரைக்கும் தன்மையள் ஆயினள்.

கு-ரை: மங்கை நல்லாள் ஒருத்தி என்ற எழுவாய் வருவித்துக் கொள்க. காதன்மை கொள்ளும் - ஆசைகொள்ளுவாள். கோல் வளை - திரண்ட வளையல்களை. பெய்துறும் - உடல் இளைத்தலால் கீழே கழலவிடுவாள். உள்ளம் உள்கி - மனமுருகி; திருப்பெயர் உரைக்கும் என்க. வள்ளல் - நாற்றிசை வள்ளலாய் மாயூரத்தைச் சூழ நான்கு திசையிலும் வீற்றிருப்பவன். வேண்டி - விரும்பி; சடையனையே விரும்பி என்க. செவிலி கூற்று.

2. பொ-ரை: சடையின்கண் வெண்பிறை வைத்த பெருமை பொருந்திய மயிலாடுதுறைத் தலத்து இறைவனது கொத்தாகப்

Koviloor Digital Library

வைத்த மாமயி லாடு துறையரன்
கொத்தி னிற்பொலி கொன்றை கொடுக்கிலே. 2

1458. அண்டர் வாழ்வும் அமர ரிருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே. 3

பொலியும் கொன்றை மலரினைக் கொடுத்தால் தன் சித்தம் தெளிந்து, உடல் பூரித்து வளைகளைச் செறிப்பாள் என் பைங்கொடியாகிய இவள் தன் பச்சைவண்ணமும் நீங்கிப் பழைய நிறம் பெறுவாள்.

கு-ரை: சித்தம் தேறும் - மனந்தெளிவாள். செறிவளை - கையில் செறித்த வளையல்கள். சிக்கெனும் - கையில் கழலாது செறிந்து பொருந்தும்; மகிழ்ச்சியால் உடம்பு பூரிக்க வளைகழலாது தங்கும் என்றபடி. பச்சை - பசலை. என் பைங்கொடி - என் அன்பு மகளாகிய பசிய கொடிபோன்ற பச்சிளம் பருவத்தாள். பால்மதி வைத்த என்க. மா - சிறந்த. கொத்தினிற் பொலிகொன்றை - கொத்துக்களாய் மலர்ந்து பொலிவுறும் பெருமான் சூடிய கொன்றைமாலை. கொடுக்கில் - தருவாரேயானால். கொன்றை கொடுக்கில் சித்தம் தேறும் என முன்னே கூட்டிப் பொருள் காண்க. செவிலி கூற்று.

3. பொ-ரை: வண்டுகள் சேர்ந்த மயிலாடுதுறைத் தலத்து இறைவனுக்குத் தொண்டுசெய்யும் அடியார் திருப்பாதங்களைச் சூடிச் செறிந்துகொண்டால், தேவ உலக வாழ்வும், தேவர்களது பதவி இன்பங்களும் கண்டு வீற்றிருக்கும் கருத்து எமக்குச் சிறிதும் இல்லை.

கு-ரை: அண்டர் வாழ்வு - தேவர் பதவி. அமரர் இருக்கை - இங்கு அயன்மால் பதவிகள். கண்டு - அநுபவித்து. வீற்றிருக்கும் கருத்து - தலைமைதோன்ற இருக்கின்ற குறிக்கோள். ஒன்றிலோம் - ஒன்றும் எங்கள் மனத்து இல்லை. ஒன்றும் - சிறிதும். அவை பிறவா நெறியாகிய வீடுபேறாகா. நல்வினைப் பயனுள்ள அளவும் துய்த்து அது முடிந்தவுடன் மண்ணிற்பிறக்கும் நிலையுடையன. 'வானேயும் பெறில் வேண்டேன்' என்றார் மாணிக்கவாசகரும். பொழிலின்கண் வண்டுசேர் மயிலாடுதுறை என்க. பாதங்கள் - திருவடிமலர்களை. சூடி - தலையிலே சூடி. துதையில் - பொருத்திக்கொள்வோமே யானால்; அதுவே வீடுபேறு. ஒன்று, முற்றும்மை தொக்கது.

Koviloor Digital Library

1459. வெஞ்சி னக்கடுங் காலன் விரைகிலான்
அஞ்சி றப்பும் பிறப்பும் அறுக்கலாம்
மஞ்சன் மாமயி லாடு துறையுறை
அஞ்சொ லாளுமை பங்க னருளிலே. 4

1460. குறைவி லோங்கொடு மாநுட வாழ்க்கையால்
கறைநி லாவிய கண்டனெண் தோளினன்
மறைவ லான்மயி லாடு துறையுறை
இறைவன் நீள்கழ லேத்தி யிருக்கிலே. 5

4. பொ-ரை: பெருவீரம் உடையானும், பெருமைக்குரிய மயிலாடுதுறையில் உறையும் அழகிய சொல்லை உடையானாகிய உமைபங்கனும் ஆகிய பெருமான் அருளினால் வெவ்விய சினத்தை உடையனாய் விரைந்துவரும் காலன் நம்மிடம் விரைய மாட்டான்; அஞ்சத்தகுவனவாகிய இறப்பும் பிறப்பும் அறுக்கலாம்.

கு-ரை: வெஞ்சினம் - கொடிய கோபம். விரைகிலான் - விரைந்துவந்து உயிரைக் கொள்ள மாட்டான்; 'ஆல மிடற்றான் அடியார் என்று அடர அஞ்சுவர்' என்றார் பின்னும். அஞ்சு இறப்பும் - அஞ்சுதற்குரியதாகிய இறப்பு. ''யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பத னுக்கு என்கடவேன்'' என்றார் மணிவாசகர். அறுக்கலாம் - நீக்கிக் கொள்ளலாம். மஞ்சன், மைந்தன் என்பதன் போலி.

அஞ்சொலாள் உமை - அஞ்சொலாளாகிய உமை. இத்தலத்து இறைவி திருப்பெயர் அஞ்சொல்நாயகி. அஞ்சொல் நாயகி அஞ்சல் நாயகியாய் அதற்கேற்ப அபயாம்பிகை என மொழி பெயர்க்கப் பெற்று (அபயந்தருபவள் என்ற பொருளில்) வழங்கி வருகிறது.

5. பொ-ரை: திருநீலகண்டனும், எட்டுத் தோளினனும், வேதம் வல்லவனுமாகிய மயிலாடுதுறை உறையும் இறைவன் நீண்ட கழல் களை ஏத்தி இருந்தால், கொடிய மானிட வாழ்க்கையால் வருகின்ற குறைவு சிறிதும் இல்லாதவராவோம்.

கு-ரை: கொடு - தீய. மீண்டும் மீண்டும் பிறவிக்கேதுவாய வினை தேடலால் தீயது என்றார். நீள் கழல் - அழிவில்லாத திருவடி களை; ஏத்தியிருக்கும் பிறவி வாய்க்குமானால் அம்மானுட வாழ்க்கையால் வினை தேடுதலாகிய குறையிலை என்க.

Koviloor Digital Library

1461. நிலைமை சொல்லுநெஞ் சேதவ மென்செய்தாய்
கலைகள் ஆயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே. 6

1462. நீற்றி னான்நிமிர் புன்சடை யான்விடை
ஏற்றி னான்நமை யாளுடை யான்புலன்
மாற்றி னான்மயிலாடு துறையென்று
போற்று வார்க்குமுண் டோபுவி வாழ்க்கையே. 7


6. பொ-ரை: கலைகளை ஆய வல்லவனும், கயிலாயமலை உடையவனுமாகிய பெருமானின் நிலையை சொல்லும் நெஞ்சமே! பெருமைக்குரிய மயிலாடுதுறை இறைவன் நம்தலையின் மேலும் மனத்துள்ளும் தங்குதற்கு எத்துணைப் பெருந்தவம் நீ செய்துள்ளாய்!

கு-ரை: நிலைமை சொல்லு நெஞ்சே - நெஞ்சே! உன் தவத்தின் நிலைமையை உண்மையாக எனக்குச் சொல். கலைகளாய என்பதற்குக் கலைகள் ஆயன எனவும் ஆய்வதற்கு எனவும் பொருள் கொள்க. கயிலாயநன் மலையன் - திருக்கயிலாயத் திருமலையிலே எழுந்தருளியிருப்பவன். மயிலாடுதுறையன் தலையின் மேலும் மனத்துள்ளும் எழுந்தருளும் வண்ணம் என்ன தவத்தைச் செய்தாய் சொல் என்று நெஞ்சை விளித்துக்கேட்கும் முறையில் அமைந்தது. உள்ளும் புறமும் வழிபடல் குறிப்பு.

7. பொ-ரை: திருநீறணிந்தவனும், நிமிர்தலுற்ற பொலிவுற்ற சடையினனும், விடையாகிய ஏற்றினை உடையவனும், நம்மை ஆளுடையவனும், புலன்களின் நெறியை மாற்றியவனுமாகிய மயிலாடுதுறை என்று போற்றுகின்ற அடியார்கட்குத் துயரம் மிகுந்த இவ்வுலக வாழ்க்கை உண்டோ?


கு-ரை: நிமிர் - நீண்ட. புன் - மெல்லிய. புலன் மாற்றினான் - ஐம்புல அவாவை நீக்கியவன். புவி வாழ்க்கை - மண்ணுலக வாழ்க்கை; பிறப்பு எனினுமாம்.

Koviloor Digital Library



திருநின்றவூர்:
நிரைப்பொன் மாமதில் சூழ் திருநின்றவூர்

Koviloor Digital Library



திருமயிலாடுதுறை:
கயிலாய நன்மலையன் மாமயிலாடுதுறை

Koviloor Digital Library

1463. கோலும் புல்லு மொருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே. 8

1464. பணங்கொ ளாடர வல்குற் பகீரதி
மணங்கொ ளச்சடை வைத்த மறையவன்
வணங்கு மாமயி லாடு துறையரன்
அணங்கொர் பால்கொண்ட கோல மழகிதே. 9

8. **பொ-ரை:** நீல நிறம் உடைய கரிய மயில்கள் ஆடும் துறையினை உடையவனே! முக்கோலும், தருப்பைப்புல்லும், ஒரு கையில் கூர்ச்சமும், தோலும் பூண்டு துயரம் அடைந்து பயன் யாது? நுண்ணுணர்வுடையோர்க்கு நூலும் வேண்டுமோ?

கு-ரை: கோல் - மூன்று கிளைவடிவாயகோல். அல்லது யோக தண்டம். இது அந்தணர்க்குரியதாதலை ''நூலேகரகம் முக்கோல் மணையே ஆயுங்காலை அந்தணர்க்குரிய'' *(தொல், பொருள் . 615)* ''முக்கோல்கொள் அந்தணர்'' *(கலித்)* என்பன முதலியவற்றால் அறியலாம். புல் - தருப்பைப்புல். கூர்ச்சம் - தர்ப்பை நுனிகளை முடிந்தது; உயிரையோ கடவுளையோ ஆவாகனம் செய்தற்குரியது. தோலும் பூண்டு - மான்தோல் உடுத்து அல்லது பூணூலில் முடித்து. துயரமுற்று - வருந்தி. நுண்ணுணர்ந்தோர்கட்கு நூலும் வேண்டுமோ - மெய்ப்பொருளை நுணுகி உள்ளவாறறிந்த ஞானிகளுக்குச் சாதனங்கள் வேண்டாம் என்பதைக் குறிப்பது. ஞானியர்கள் சாத்திய மடைந்தவர்; அவர்களுக்குச் சாதனங்கள் தேவையில்லை என்பதாம். முக்கோல் முதலியவற்றை உடையவர்களே வேதமோதற்குரியவர் எனப்படுவதால் அவ்வுரிமையைப் பெற்றும் இறைவனை உணராதார்க்குப் பயன் இல்லை என்பதாம்.

9. **பொ-ரை:** படத்தினைக்கொண்டு ஆடுகின்ற அரவனைய அல்குலை உடைய கங்கையை, மணம்கமழும்படி சடையின் கண் வைத்த மறைவடிவானவனும், வணங்கியெழும் மயிலாடுதுறை உறைபவனுமாகிய இறைவன் அம்மையினை ஒருபாகத்தே கொண்டு அருள்செய்யும் திருக்கோலம் மிக அழகியதாகும்.

கு-ரை: பணம் - பாம்பின் படம். ஆடு - ஆடுகின்ற. அரவு - அரவுபோன்ற; அரவுகொள் பணம்போன்ற அல்குல் என்க. பகீரதி -

Koviloor Digital Library

1465. நீணி லாவர வச்சடை நேசனைப்
பேணி லாதவர் பேதுற வோட்டினோம்
வாணி லாமயி லாடு துறைதனைக்
காணி லார்க்குங் கடுந்துய ரில்லையே. 10

1466. பருத்த தோளும் முடியும் பொடிபட
இருத்தி னானவ னின்னிசை கேட்டலும்
வரத்தி னான்மயி லாடு துறைதொழும்
கரத்தி னார்வினைக் கட்டறுங் காண்மினே. 11

திருச்சிற்றம்பலம்

கங்கை. மணங்கொள - அவள் தன்னை மணம் புரிந்துகொள்ள. வணங்கு மாமயிலாடுதுறை; அணங்கு எனப்பின்னர் வருதலால் இங்கு அதனைக் கூறாது வணங்கு என்றே கூறினார். அம்பிகை மயில் உருக்கொண்டு பெருமானை வழிபட்டாள் என்பது தலபுராணம். வணங்கும் பார்வதிதேவியாகிய மாமயிலாடுதுறை என்றார். அணங்கு - பார்வதி. கோலம் - தோற்றப் பொலிவு.

10. பொ-ரை: நீண்ட நிலவினையும், அரவத்தையும் சடையில் விரும்பிச் சூடியுள்ளவனைப் பேணாதவர் பேதுறும்படி விலக்கி னோம்; ஒளிபொருந்திய மயிலாடுதுறையினைக் காணில், ஆர்க்கும் கடுந்துயரங்கள் இல்லை.

கு-ரை: நேசன் - அன்பனை. பேணிலாதவர் - விரும்பாதவர். பேதுற - துன்புற. ஓட்டினோம் - தீர்க்கச்செய்தோம். வாள்நிலா - ஒளி நிலவும் புகழ். காணில் - தரிசித்தால். கடுந்துயர் - இறப்பு முதலிய மிக்க துன்பங்கள்.

11. பொ-ரை: இராவணனது பருத்த தோள்களும் முடிகளும் தூளாகுமாறு இருத்தினவனும், அவனது இன்னிசையைக் கேட்டலும் வரம் அருளியவனும் ஆகிய பெருமானை, மயிலாடுதுறையில் தொழும் கரத்தினை உடையவர்கள் வினை, கட்டற்றுப்போகும் காண்பீராக;.

கு-ரை: பருத்த - பெரிய. பொடிபட - சிதற. வரத்தினான் - நாளும், வாளும், பெயரும் வரமாகத் தந்தவன். கரத்தினார் - கையை உடையவர், கருத்தினார் எனவும் பாடம், வினைக்கட்டு - இருவினைப் பந்தபாசங்கள். அறும் - முழுதும் நீங்கும்.

Koviloor Digital Library

40. திருக்கழிப்பாலை

பதிக வரலாறு:

நாவினுக்கரசர் திருக்கழிப்பாலையை நண்ணி, மண்ணோர் வாழ மணவாள நம்பி கழலை வணங்கி 'வன பவளவாய் திறந்து வானவர்க்குந் தானவனே என்கின்றாள்' என்று தொடங்கும் திருப்பதிகத்துடன் பாடியருளிய அன்புறு வண்டமிழ் இத்திருப் பதிகம். (தி.12 திருநா. புரா. 173.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 153 **பதிக எண்: 40**

திருச்சிற்றம்பலம்

1467. வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண்ணி நாமங்க ளேத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
அண்ண லேயறி வானிவள் தன்மையே. 1

1. பொ-ரை: கழிப்பாலை இறைவனின் நிறம் வடிவம் முதலிய வற்றைச்சென்று நேரே கண்டிலள். அவன் திருநாமங்களை எண்ணினா ளில்லை. காணாமலே காதல்கொண்டு பிதற்றும் இவள் தன்மையைப் பொழில் சூழ்ந்த கழிப்பாலை இறைவனே அறிவான்.

கு-ரை: வண்ணம் - நிறம். வடிவு - உருவம். சென்று - கழிப் பாலைக்குச் சென்று. கண்டிலள் - நேரே காணவில்லை. காணாமலே காதல் கொண்டாள். எண்ணி - மனத்தில் கழிப்பாலை இறைவனையே நினைத்து. நாமங்கள் ஏத்தி - அவன் திருப்பெயர்களைப் பலகாலும் சொல்லித் தோத்திரித்து. நிறைந்திலள் - மனவமைதி கொள்ளாதவளா யிருந்தாள். அல்லது எண்ணுதலிலும் சொல்லுதலிலுமே மனவமைதி கொள்ளாதவளாயினாள். அவனைக் கூடுதற்கு விழைகிறாள் என்பது குறிப்பு.

கண் - இடம். உலாம் - பொருந்திய. கழிப்பாலைப் பெருமான்மேல் காதல் கொண்டு வருந்தும் ஒருத்தியை ஆற்றுவிக்கக் கருதும் செவிலி கூற்று.

Koviloor Digital Library

1468. மருந்து வானவ ருய்யநஞ் சுண்டுகந்
திருந்த வன்கழிப் பாலையு ளெம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்து ரைக்கிலு மென்சொற் பழிக்குமே. 2

1469. மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலையெம் மண்ணலே
இகழ்வ தோவெனை யேன்றுகொ ளென்னுமே. 3

2. பொ-ரை: தேவர்கள் அமிர்தத்தை உண்டு உய்யத் தான் நஞ்சினை உண்டு உகந்து இருப்பவனும் வலிய கழிப்பாலையில் வீற்றிருக்கும் எம்பெருமானுமாகிய இறைவனின் சேவடிகளைச் சிந்தையுள் வைத்து யான் பரிந்து உரைத்தாலும், இவள் என் சொல்லைப் பழிக்கின்றாள்.

கு-ரை: மருந்து வானவர் - அமுதத்தை விரும்பிய தேவர். உய்ய உகந்து - பிழைக்கும்படி விரும்பி. நஞ்சு உண்டு அதனால் தீங்கின்றி மகிழ்ந்திருந்தவன் என்க. திருந்துசேவடி - திருத்தமுற்றுச் சிவந்திருக்கும் திருவடி. பரிந்துரைக்கிலும் - அவளது நிலைநோக்கி வருந்தி அதைத் தீர்க்கும்வழி கூறினும். என் சொல் - என் அறிவுரைகளை. பழிக்கும் - பழித்துக் கூறுவாள். ''மாதியன்று நீதிதான்சொல நீயெனக்கு ஆர் எனும்'' (தி.5 ப.45. பா.1) என்னும் பாடற் கருத்தோடு ஒப்பிடுக.

3. பொ-ரை: குழல் இசை போன்ற மொழியினை உடைய இவள், மழலைச்சொல்லே கிளக்கும் இயல்பினள்; தெரியுமாறு சொற்களைப்பேசா இயல்பினளாய்க் கூறிய மொழிகளைக் கேட்பீர்களாக; ''அழகனே! கழிப்பாலையில் வீற்றிருக்கும் எம் தலைவனே! என்னை இகழ்வதோ? ஏற்றுக்கொள்'' என்கின்றாள்.

கு-ரை: மழலைதான்வர - பேசுங்கால் மழலை மொழியே வெளிவர. சொல் - செவ்விய சொற்களை. தெரிகின்றிலள் - பேசுதற்கு அறியாதவளாயுள்ளாள்; மிக இளையள் என்றது. குழலின் நேர்மொழி - வேய்ங்குழலை ஒத்து இன்பம்தரும் மொழியினை உடையாள்; அன்மொழித்தொகை. கூறிய - கூறிய சொற்களை. கேண்

Koviloor Digital Library

1470. செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மைய லாகி மிதக்கில ளாரையும்
கைகொள் வெண்மழு வன்கழிப் பாலையெம்
ஐய னேயறி வானிவள் தன்மையே. 4

1471. கருத்த னைக்கழிப் பாலையுள் மேவிய
ஒருத்த னைஉமை யாளொரு பங்கனை
அருத்தி யாற்சென்று கண்டிட வேண்டுமென்
றொருத்தி யாருள மூசல தாடுமே. 5

1472. கங்கை யைச்சடை வைத்து மலைமகள்
நங்கை யையுட னேவைத்த நாதனார்

மினோ - கேளுங்கள். ஏன்றுகொள் - ஏற்றுக்கொள்வீராக. என்னும் - என்று சொல்லும். அவள் கூறியன பின்னிரண்டு வரிகள்.

4. பொ-ரை: சிவந்த மேனியும், அதில் வெண்ணீறு அணியும் கோலமும் உடைய சிவபெருமானின்மேல் மையல் உடையவளாகி, இவள் ஆரையும் மதிக்கிலள்; கையிற் பிடித்த வெண்மழுவினனும், கழிப்பாலையில் உறைவானும் ஆகிய இறைவனே இவள் தன்மையை அறிவான்.

கு-ரை: மையலாகி - மயக்கங்கொண்டவளாகி. ஆரையும் மதிக்கிலள் என்க. தாயார் சொல்லையும் ஏற்றுக்கொள்ளாதவள் என்பதாம். ஐயன் - அழகியன்.

5. பொ-ரை: ஒருத்தியின் உள்ளம், கருத்தின்கண் இருப்பவனும், கழிப்பாலையுள் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்றவனும், உமையாளை ஒருபங்கில் உடையவனும் ஆகிய பெருமானை விருப்பத்தாற்சென்று கண்டிடவேண்டும் என்று ஊசலாடுகிறது.

கு-ரை: கருத்தனை - தலைவனை. அருத்தி - மிக்கவிருப்பம். ஒருத்தி - ஒரு பெண். ஆர் உள்ளம் - நிறைந்த உள்ளம். ஊசலாடும் - அலையும்; மனம் தலைவனைக்காண முன்னே இழுக்கவும் பிறர் காணில் நகைப்பர் என்னும் நாணம் பின்னே இழுக்கவும் தடுமாறுதல்.

6. பொ-ரை: இப்பெண், சடையிற் கங்கையை வைத்து மலை மகளாகிய நங்கையைத் தன்னொரு பங்கில் வைத்த இறைவனாகிய

Koviloor Digital Library

திங்கள் சூடித் திருக்கழிப் பாலையான்
இங்கு வந்திடு மென்றிறு மாக்குமே. 6

1473. ஐய னேயழ கேயன லேந்திய
கைய னேகறை சேர்தரு கண்டனே
மையு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
ஐய னேவிதி யேயரு ளென்னுமே. 7

1474. பத்தர் கட்கமு தாய பரத்தினை
முத்த னைமுடி வொன்றிலா மூர்த்தியை
அத்த னையணி யார்கழிப் பாலையெம்
சித்த னைச்சென்று சேருமா செப்புமே. 8

திருக்கழிப்பாலைப் பெருமான் இளம்பிறை சூடி இங்குத் திருவுலாப் போதற்கு எழுந்தருள்வான் என்று இறுமாப்பு அடைகின்றாள்.

கு-ரை: மலைமகள் நங்கை - பார்வதி. இங்குவந்திடும் - என்னைத்தேடி இங்கே ஆசையோடு வருவான் என்று சொல்லிப் பெருமையடைவாள். இருவரையும் கொண்டவர் என்னையும் கொள்வர் என்பது குறிப்பு.

7. பொ-ரை: இவள், ''தலைவனே! அழகனே! தழலை ஏந்திய கரத்தவனே! திருநீலகண்டனே! மேகங்கள் உலாவுகின்ற பொழில் சூழ்ந்த கழிப்பாலையில் வீற்றிருக்கும் எம் அழகியவனே! நன்மை தீமைகளை விதிப்பவனே! அருள்வாயாக!'' என்று கூறுகின்றாள்.

கு-ரை: மையுலாம் - அடர்ந்து செறிந்திருத்தலால் கருமை உலாவும். ஐயனே அருள் விதியே என மாற்றுக. விதியே - இது முறையேயாகும். அழகே அனலேந்திய - அழகிதாக அனலை ஏந்திய எனலுமாம்.

8. பொ-ரை: இவள், அன்பர்கட்கு அமுதாயுள்ள மேலானவனை, முத்தியை அளிப்பவனை, முடிவு ஒன்று இல்லாத மூர்த்தியை, தலைவனை, அழகு நிரம்பிய கழிப்பாலையில் வீற்றிருப்பவனாகிய என் சித்தத்தவனைச் சென்று சேருமாறு ஒரு நெறி எனக்குச் செப்பு வீர்களாக!'' என்கின்றாள்.

Koviloor Digital Library

* * * * * * * * * * 9

1475. பொன்செய் மாமுடி வாளரக் கன்தலை
அஞ்சு நான்குமொன் றும்மிறுத் தானவன்
என்செ யான்கழிப் பாலையு ளெம்பிரான்
துஞ்சும் போதும் துணையென லாகுமே. 10

திருச்சிற்றம்பலம்.

கு-ரை: அமுதாய - அமுதம் போன்றவனாகிய. பரத்தினை - மேலானவனை. செப்பும் - சொல்வீராக. சித்தன் - எல்லாம் செய்ய வல்லவன்; சின்மயன் என்றுமாம்.

9. * * * * * * * * * *

10. பொ-ரை: பொன்னாற் செய்யப்பட்ட முடியணிந்தவனும், வாளுடையவனுமாகிய இராவணன் தலைகள் பத்தும் இறுத்தவன்! கழிப்பாலையுள் எம் தலைவன் என்ன செய்யாதவன்? ஆதலின் அப்பெருமானே தூங்கும்போதும் நமக்குத் துணை எனற்குப் பொருந்தியவன் ஆவன்.

கு-ரை: பொன்செய் மாமுடி - பொன்னால் செய்த பெரிய கிரீடம். என்செயான் - என்ன செய்ய வல்லவன் அல்லன். துஞ்சும்போதும் - இறக்கும்போதும்; உறங்கும்போதும் எனலுமாம். துணை எனல் - துணை என்று சொல்லுதல். ஆகும் - பொருந்தும். அவத்தைகள் பத்தில் சாக்காடு என்னும் நிலையை அடைந்த இடத்தும் என்றபடி.

திருநாவுக்கரசர் புராணம்

மேவிய பணிகள் செய்து விளங்குநாள் வேட்க ளத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச் சென்றுமுன் வணங்கிப் பாடிக்
காவியங் கண்டர் மன்னுந் திருக்கழிப் பாலை தன்னில்
நாவினுக் கரசர் சென்று நண்ணினார் மண்ணோர் வாழ.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

41. திருப்பைஞ்ஞீலி

பதிக வரலாறு:

திருப்பராய்த்துறையும் மருங்குள்ள பதிகளுந்தொழுது திருப்பைஞ்ஞீலி வழி போம்பொழுது மிகவிளைத்து நீர்வேட்கையும் அழிவாம் பசியும் வந்தணைய அதற்குச் சித்தமலையாதே மொழி வேந்தர் முன்னெழுந்தருளினார். பைஞ்ஞீலி இறைவர் தம் தொண்டர் வருத்தம் மீட்பராய்க் காவுங் குளமும் முன் சமைத்துக் காட்டி வழி போங்கருத்தினால் அந்தணராய்ப் பொதி சோறுங் கொண்டு நாவின் தனி மன்னவர்க்கெதிரே நண்ணியிருந்தார். ஆண்டவரசு ஆங்கு எழுந்தருள 'மிகவும் வழி வந்திளைத் திருந்தீர்! இங்கு என் பாலே பொதி சோறுண்டு இதனையுண்டு தண்ணீர் இக்குளத்திற் குடித்து இளைப்புப் போக்கிப் போவீர்' என்றருளினார். அவரும் நம்பர் அருள் என்று அறிந்தார் போல் இனிதாவமுது செய்து தளர்வொழிந்து நின்றவரை நோக்கி 'நீர் எங்குப்போவது' என வினவினார் மறையவனார். அரசும் திருப்பைஞ்ஞீலிக்குப் போவதென்றுரைப்ப 'யானும் அங்குப் போகின்றேன்' என்றுடன் போந்து திருப்பைஞ்ஞீலி குறுகி வேடமவர் முன் மறைத்தருளினார். நாவரசரும் 'ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளாவளித்த கருணை' யெனப் பாடல் புரிந்து பைஞ்ஞீலி சென்று மணிகண்டர் தம்மை வணங்கி, விரும்புந்தமிழ் மாலைகள் பாடியவற்றுள் ஒன்று இத்திருப் பதிகம். (தி.12 திருநா. புரா. 303. 310.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 154 **பதிக எண்: 41**

திருச்சிற்றம்பலம்

1476. உடையர் கோவண மொன்றுங் குறைவிலர்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க் கில்லை அவலமே. 1

1. பொ-ரை: கோவண உடையினரும், ஒன்றும் குறைவில்லாதவரும், படைக்கலங்களைக்கொண்ட பூதகணங்கள் சூழ்ந்த திருப் பைஞ்ஞீலித் திருத்தலத்தில் எழுந்தருளியவரும் ஆகிய சடையிற்

Koviloor Digital Library

1477. மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்துபைஞ் ஞீலியெம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே. 2

1478. விழுது சூலத்தன் வெண்மழு வாட்படைக்
கழுது துஞ்சிருள் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப் பைஞ்ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே. 3

கங்கையை வைத்த சதுரப்பாடு உடைய பெருமானை அடையும் வல்லமை உடைய அன்பர்களுக்குத் துன்பங்கள் இல்லை.

கு-ரை: ஒன்றும் குறைவிலர் - கோவண ஆடையராயினும் ஒன்றாலும் குறையுடையரல்லர். பாரிடம் - பூதகணங்கள். படை கொள் - படையாக அமைந்த; பைஞ்ஞீலியார் என்க. சூழ்ந்த - வலம் செய்யப் பெற்ற. சதுரர் - சதுரப்பாடுடையவர். உலகமெல்லாம் பரவி மூடி அழிக்க வல்லதாக வந்த கங்கையைப் பனித்துளி போலச் சடையில் தரித்தமைபோல்வன சதுரப்பாடுகள். ஞீலி - ஒருவகை வாழையால் பெற்ற பெயர்.

2. பொ-ரை: ஊமத்தம் மலர்களைச் சூடிய பெருவீரரும், சித்தராகத் திரிபவரும், அன்பர் பலர் தொழுதேத்தும் பைஞ்ஞீலியில் உறையும் அத்தரும், தொழுவார் வினை தீர்ப்பவரும் ஆகிய அப் பெருமானைத் தொழும் வல்லமை உடையவர் நல்லவர் ஆவர்.

கு-ரை: மத்தமாமலர் - ஊமத்தமாகிய சிறந்த மலர். சித்தராய் - சித்தத்தில் வைத்தவர்களாய். வினைதீர்ப்பரால் என்பதிலுள்ள ஆல் அசை. அத்தன் - தலைவன், தந்தை.

3. பொ-ரை: நிணம் பொருந்திய சூலத்தையும், வெண் மழு வாளையும் படைக்கலமாக உடையவனும், பேய்களும் தூங்குகின்ற நள்ளிருளில் சுடுகாட்டில் ஆடலை உடையவனும், பைஞ்ஞீலியில் உறையும் பரமனும் ஆகிய பெருமானைப் பழுது ஒன்றும் இன்றித் தொழுது செல்பவர் வினைகள் பொடியாகும்.

கு-ரை: விழுது - நெய் எனலுமாம். மழுவாள்படை - ஒளி பொருந்திய மழுவாயுதம். கழுது - பேய். துஞ்சு - உறங்கும். இருள் - ஊழி. பழுது - குற்றம். தூளி - பொடியாம்.

Koviloor Digital Library

1479. ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழ லறிவரி யானிடம்
சென்று பாரிட மேத்துபைஞ் ஞீலியுள்
என்றும் மேவி யிருந்த அடிகளே. 4

1480. வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனார்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த அடிகளே. 5

1481. குண்டு பட்டுக் குறியறி யாச்சமண்
மிண்ட ரோடு படுத்துய்யப் போந்துநான்

4. பொ-ரை: திருமாலும் பிரமனும் தம்மிலே ஒன்றித் தேட முற்பட்டும் திருவடியும் திருமுடியும் நின்ற சூழல் அறிய அரியவனாய் விளங்கிய பெருமான் வீற்றிருக்கும் இடம், பூதங்கள் சென்று ஏத்துகின்ற பைஞ்ஞீலியாகும். இத்தலத்திலேயே அடிகள் என்றும் மேவியிருப்பது.

கு-ரை: ஒன்றி - கூடி. தம்மிலே ஒன்றி எனமாறுக. நின்றசூழல்- அளவுபட்ட நின்ற இடம். அறிவரியான் - அறிதற்கரியவன். பார் இடம் - பூமியாகிய இடம் எனலுமாம். இடம் சென்று - எழுந்தருளி யிருக்குமிடத்திற் சென்று, அடிகள் அறிவரியான் என்க.

5. பொ-ரை: வேழத்தின் தோலை உரித்துப் போர்த்த விகிர் தரும், செஞ்சடைமேல் தாழுமாறு பிறை வைத்தவரும், தாழைகள் நிறைந்த குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்த பைஞ்ஞீலித் தலத்து உறை பவரும் ஆகிய பெருமான் யாழ்க்குப் பொருந்திய பாடலை உகந்த அடிகள் ஆவர்.

கு-ரை: உரி - தோல். விகிர்தன் - வேறுபாடுடையவன். தாழ - தங்க. யாழின் பாடலை உகத்தலாவது - ஒடுக்கிய உயிர்கள் மீளத் தோன்ற எழுப்பும் நாதமுழக்கம்.

6. பொ-ரை: உடல் பெருக்கிக் குறிக்கோளையறியாச் சமண் மிண்டரோடு பொருந்தி உய்யப்போந்து நான், கரும்புகள் நிறைந்த வயல் சூழ்ந்த பைஞ்ஞீலித்தலத்து எழுந்தருளியுள்ள தேவதேவன் திருவடிகளை அடைந்து உய்ந்தேன்.

Koviloor Digital Library

கண்டங் கார்வயல் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
அண்ட வாண னடியடைந் துய்ந்தனே. 6

1482. வரிப்பை யாடர வாட்டி மதகரி
உரிப்பை மூடிய வுத்தம னாருறை
திருப்பைஞ் ஞீலி திசைதொழு வார்கள்போய்
இருப்பர் வானவ ரோடினி தாகவே. 7

1483. கோடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
பேடு மாணும் பிறரறி யாததோர்
ஆடு நாக மசைத்த அடிகளே. 8

கு-ரை: குண்டு - தாழ்வு எனலுமாம். குறி - குறிக்கோள்; உண்மையாக அடையவேண்டிய மெய்ப்பொருள். மிண்டர் - சொற் செயலால் வலியர். படுத்து - பட்டு எனப் பொருள் தந்தது. கண்டங்கார் அண்டவாணன் என்க. கார் - பயிர் அடர்ந்திருத்தலால் கரிய நிறம். அண்டவாணன் - எல்லா உலகங்கட்கும் தலைவன். உய்ந்தனே - பிழைத்தேன். ஏ அசை.

7. பொ-ரை: வரிகளை உடைய படத்தினைப் பொருந்தி ஆடும் அரவத்தை ஆட்டி மதச் செருக்குடைய யானையின் உரியை மெய்ப் பையாக மூடிய உத்தமனார் உறைகின்ற திருப்பைஞ்ஞீலித் தலத்தைத் திக்குநோக்கித் தொழுபவர்கள் வானவர்களோடு இனிதாக இருப்பர்.

கு-ரை: வரி - கோடுகள் பொருந்திய. பை - படத்தோடு கூடிய. ஆட்டி - ஆடச்செய்து. மதகரி - மதம் கொண்ட யானை. உரிப்பு - தோல். திசை - இருக்கும் திசையை நோக்கி.

8. பொ-ரை: செங்கோடலும், வெண்கோடலும், கோங்கமும் ஆகிய பூக்கள் புறவுநிலமாகிய முல்லைநிலத்தை அணிசெய்தலால், வண்டிசைக்கும் பாடல் கேட்கின்ற பைஞ்ஞீலித் தலத்து இறைவர் பேடும் ஆணும் ஆகிய பிறர் அறியாத இயல்பினர், ஆடும் பாம்பைக் கட்டிய ஒப்பற்ற அடிகள் ஆவர்.

கு-ரை: கோடல் - காந்தள் மலர். புறவு - காடு. அணி - அழகு செய்கின்ற. வண்டிசைப் பாடல்கேட்கும் பைஞ்ஞீலி என்க. பேடு

Koviloor Digital Library

1484. காரு லாமலர்க் கொன்றையந் தாரினான்
வாரு லாமுலை மங்கையொர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே. 9

1485. தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே
அரக்கன் பாட அருளுமெம் மானிடம்
இருக்கை ஞீலியென் பார்க்கிட ரில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

ஆணும் - பேடாயும் ஆணாயும் இருப்பவர். பேடென்றும் (பெண்ணென்றும்) ஆணென்றும் பிறரறியாததோர் அடிகள் என்க.

9. பொ-ரை: கார்காலத்துப் பொருந்திய கொன்றை மலர்களாலாகிய தாரினை அணிந்தவனும்,கச்சுப் பொருந்திய தனங்களை உடைய உமைமங்கையை ஒரு பங்கில் உடையவனும், பொழில் நுகரவருவோர் இவர்ந்துவந்த தேருலாவுகின்ற பூம்பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலியில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய ஆரா அமுதை அடைந்து உய்வீர்களாக.

கு-ரை: கார்உலாமலர் - கார்காலத்து மேகங்கள் உலவும் காலத்தே மலர்கின்ற. தாரினான் - மாலையை அணிந்தவன். வார் உலாம் - கச்சு அணிந்த. தேருலாம் பைஞ்ஞீலி, பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலி என்க. ஆர்கிலா அமுது - உண்ணா அமுதம், தெவிட்டா அமுதம். தருக்கி - செருக்கி. தடவரை - பெரிதாகிய கயிலைமலை. பிறிதொரு பாடலை (தி.5. ப.2. பா.9) ஒத்துளது இப்பாடல்.

10. பொ-ரை: அரக்கனாகிய இராவணன் செருக்கினை உற்றுத் தடவரையாகிய திருக்கயிலாயத்தைப் பற்றுதலும், நெருக்கித் திருவிரலால் ஊன்ற, சிவனையே நினைந்து அவன்பாட அவனுக்கு அருள்புரியும் எம்மான் இடம் பைஞ்ஞீலி என்றுரைப்பார்க்கு இடர்கள் இல்லை.

கு-ரை: சிவனையே நினைந்து என மாறுக. நெருக்கி - இராவணனை மலையின்கீழ் அகப்படுமாறு நெருக்குதலைச் செய்து. இடர் - துன்பம். இடமாக இருக்கை என்க.

Koviloor Digital Library

42. திருவேட்களம்

பதிக வரலாறு:

தில்லைத் திருநகரில் கூத்தப்பெருமான் நடம்நவில் கனகப் பொதுவெதிர் கண்ணுற்று திருநடம் ஆராவகை தொழுது திருவேட்கள மணுகிச் சேவுயர்கொடியார் தம்மை வணங்கிப் பாடியருளியது இத்தமிழ்மாலை. (தி.12 திருநா. புரா. 172.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 155 பதிக எண்: 42

திருச்சிற்றம்பலம்

1486. நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்கவி ருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. 1

1487. கருப்பு வெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பொருப்பு வெஞ்சிலை யாற்புரஞ் செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களங் கைதொழு
திருப்ப னாகி லெனக்கிட ரில்லையே. 2

1. பொ-ரை: திருவேட்களத்துள்ளுறைகின்ற நெருங்கிய பொலிவார்ந்த சடையுடைய ஈசனைத் தொழுவீர்களாக; அங்ஙனம் தொழுதால் நாள்தொறும் நம்வினை பெரிதும் தொலையும்; என்றும் இன்பம் தழைக்க இருந்து உய்யலாம்.

கு-ரை: நாடொறும் நன்று - நாள்தொறும் நன்மையே உண்டாகும். என்றும் - எப்பொழுதும். துன்று - நெருங்கிய. பொற்சடை - பொன்போன்ற சடை எனலுமாம். தொழுமின் - வணங்குங்கள்.

2. பொ-ரை: கரும்பாகிய விருப்பத்தை விளைக்கும் வில்லை உடைய மன்மதனைக் காய்ந்தவனும், மேருமலையாகிய வில்லினால் முப்புரங்களைச் செற்றவனும், அடியார்களிடத்து விருப்பம் உடையவனும் ஆகிய பெருமான் உறையும் வேட்களத்தைக் கைதொழுது இருந்தேனாயின், எனக்கு இடர்களே இல்லை.

Koviloor Digital Library

1488. வேட்க ளத்துறை வேதிய னெம்மிறை
ஆக்க ளேறுவ ரானைஞ்சு மாடுவர்
பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினால்
காப்பர் நம்மைக் கறைமிடற் றண்ணலே. 3

1489. அல்ல லில்லை அருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்
செல்வ னார்திரு வேட்களங் கைதொழ
வல்ல ராகில் வழியது காண்மினே. 4

கு-ரை: கருப்புவெஞ்சிலை - கரும்பாகிய கொடிய வில்லை யுடைய. காமன் - மன்மதன். காய்ந்தவன் - எரித்தவன். பொருப்பு வெஞ்சிலையால் - இமையவில்லால். புரம் - மூன்று கோட்டைகளை. செற்றவன் - அழித்தவன். விருப்பன் - விரும்புதற்கு உரியவன். இடர் - துன்பம்.

3. பொ-ரை: வேட்களத்துறையும் வேதியனும், எம் இறைவனும், திருநீலத் திருமிடறு உடைய தலைவனும் ஆகிய பெருமான் விடையுகந்து ஏறுவர்; பஞ்சகவ்வியம் ஆடுவர்; பூக்களைக்கொண்டு திருவடி போற்றினால் நம்மைக் காப்பர்.

கு-ரை: எம் இறை - எங்கள் தலைவன். ஆக்கள் ஏறுவர் - விடை ஏறுவர். ஆனைஞ்சு - பஞ்சகவ்வியம். ஆடுவர் - அபிடேகம் கொள்வர். மிடறு - கழுத்து.

4. பொ-ரை: நிறைந்த வெண்பிறையைச் சூடும் மணவாள ராகிய திருவேட்களத்து அருட்செல்வரைக் கைகளால் தொழ வல்லவராகில் அதுவே வழியாகும்; காண்பீர்களாக; அவ்வழியே நின்றால் அல்லல்கள் இல்லை; அரிய வினைத் துன்பங்களும் இல்லையாம்.

கு-ரை: அல்லல் - பிறவி முதலிய துன்பங்கள். அருவினை - நீக்குதற்கரிய இருவினைகள்; அல்லல் வினை இவற்றை நீக்கும் என்க. மல்கு - மிக்க. வல்லராகில் - முயற்சியுடையரானால்; அறிவாற்றல் உடையவரானால்; வேட்களம் சென்று பெருமானைக் கைதொழுதலே வழியாகும்.

Koviloor Digital Library

1490. துன்ப மில்லைத் துயரில்லை யாமினி
நம்ப னாகிய நன்மணி கண்டனார்
என்பொ னாருறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி யேத்தி யிருப்பதே. 5

1491. கட்டப் பட்டுக் கவலையில் வீழாதே
பொட்ட வல்லுயிர் போவதன் முன்னம்நீர்
சிட்ட னார்திரு வேட்களங் கைதொழப்
பட்ட வல்வினை யாயின பாறுமே. 6

1492. வட்ட மென்முலை யாளுமை பங்கனார்
எட்டு மொன்று மிரண்டுமூன் றாயினார்

5. பொ-ரை: நம்மவராகிய திருநீலகண்டனும், என் பொன் போன்றவனும் ஆகிய இறைவன் உறைகின்ற திருவேட்கள நன்னகரில் இன்பமே வடிவாகிய அவன் சேவடியை ஏத்தியிருப்பதனால், இனித் துன்பமும் இல்லை; துயரங்களும் இல்லை.

கு-ரை: துன்பம் - பிறவித்துன்பம். துயர் இல்லையாம் - ஏனைய துன்பங்கள் இல்லையாகும். இனி - இனி நாம் செய்ய வேண்டுவது. நன்மணி கண்டனார் - நல்ல நீலமணிபோலும் கழுத்தையுடையவர். என்பொனார் - எனக்குப் பொன்னாயிருப்பவர். சேவடி - சிவந்த திருவடி. இருப்பது இன்பச்சேவடி ஏத்தி; அதனால் இனித் துன்பமில்லை துயரில்லை என முடிக்க.

6. பொ-ரை: கவலைகளாற் கட்டப்பெற்று வீழ்ந்திடாது, விரைந்து உயிர்போவதற்கு முன்பே நீர், உயர்ந்த இறைவர் எழுந்தருளியுள்ள திருவேட்களம் கைதொழுவீர்களாக; தொழுவீராயின், பொருந்திய வல்வினைகள் அனைத்தும் கெடும்.

கு-ரை: கட்டப்பட்டு - துன்புற்று. கவலையில் - மனக்கவலையின்கண். பொட்ட - விரைவாக (பொட்டென என்பதன் திரிபு). வல் உயிர் - பலவும் செய்யவல்ல உயிர். பட்ட - செய்யப்பட்டுத் தோன்றிய. பாறும் - அழியும்.

7. பொ-ரை: அறியாமை உடைய நெஞ்சமே! வட்ட வடிவாகிய மென்முலைகளை உடைய உமாதேவியை ஒருபங்கில் உடையவரும்,

Koviloor Digital Library

சிட்டர் சேர்திரு வேட்களங் கைதொழு
திட்ட மாகி யிருமட நெஞ்சமே. 7

1493. நட்ட மாடிய நம்பனை நாள்தொறும்
இட்டத் தாலினி தாக நினைமினோ
வட்ட வார்முலை யாளுமை பங்கனார்
சிட்ட னார்திரு வேட்களந் தன்னையே. 8

1494. வட்ட மாமதில் மூன்றுடை வல்லரண்
சுட்ட கொள்கைய ராயினுஞ் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் பொற்றிரு வேட்களச் செல்வரே. 9

எட்டு மூர்த்தியானவரும், ஒரு பரம்பொருளானவரும், இரண்டு (சிவம், சத்தி) ஆனவரும், மும்மூர்த்தியானவரும் உறைகின்ற சிறப்புடையதும், உயர்ந்தவர்கள் சேர்ந்ததுமான திருவேட்களம் கைதொழுது விருப்புற்று இருப்பாயாக.

கு-ரை: வட்டம் - வட்டவடிவமான. எட்டாயினார் - அட்ட மூர்த்தி வடிவாயினவர்.(தி.6. ப.94. பா.1.) ஒன்றாயினார் - ஒருவராயிருப்பவர். இரண்டாயினார் - சத்தி சிவமாய் வீற்றிருப்பவர். மூன்றாயினார் - படைப்பு முதலிய முத்தொழிலால் அயன், அரி, அரனாய் விளங்குபவர். சிட்டர் - உயர்ந்தோர். இட்டம் - விருப்பம். மடநெஞ்சமே - அறியாமை உடைய மனமே.

8. பொ-ரை: வட்டவடிவமாகிய மென்முலைகளை உடைய உமாதேவியை ஒருபங்கில் உடையவரும், உயர்ந்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவேட்களத்தையும், அங்கு நட்டமாடிய நம்பனையும், நாள்தோறும் விருப்பத்துடன் இனிது நினைப்பீராக.

கு-ரை: இட்டத்தால் - விருப்பத்தோடு. வட்டவார் முலையாள் - வட்டவடிவமான கச்சணிந்த தனங்கள்.

9. பொ-ரை: திருவேட்களத்து அருட்செல்வர் வட்டமாக வளைந்த மதில்கள் சூழ்ந்த திரிபுரங்கள் மூன்றையும் சுட்ட

Koviloor Digital Library

1495. சேட னாருறை யுஞ்செழு மாமலை
ஓடி ஆங்கெடுத் தான்முடி பத்திற
வாட வூன்றி மலரடி வாங்கிய
வேட னாருறை வேட்களஞ் சேர்மினே. 10

திருச்சிற்றம்பலம்

கொள்கையர் ஆயினும், தம்மைச் சூழ்ந்தவர் வல்வினைகளைத் தீர்த்து அவர்களைக் குளிர்விக்கும் சிட்டராவர்.

கு-ரை: வட்டம் - வட்டவடிவாய். மதில் மூன்று அரண் - மூன்று மதில்களை உடைய வலிய கோட்டை. சுட்ட - அழித்த. சூழ்ந்தவர் - தம்மை வலம் வந்து வணங்கி நிற்பவர். குட்ட வல்வினை - குழியாகிய வலியவினைகள்.

10. பொ-ரை: பெருமை உடையனாய பெருமான் உறையும் திருமாமலையாகிய திருக்கயிலாயத்தை ஓடி எடுத்தவனாகிய இராவணன் முடிகள் பத்தும் இறும்படியாக வாட ஊன்றி, மலரடியினை வளைத்த வேடனார் உறைகின்ற திருவேட்களம் சேர்வீராக.

கு-ரை: சேடன் - பெருமையுடையவன். வாட - வருந்த. ஊன்றிவாங்கி - சிறிது ஊன்றிப் பின்னர் எடுத்த. வேடனார் - பார்த்தற்குப் பாசுபதம் கொடுத்த தலமாதலின் அருச்சுனனை எதிர்க்க வேடனாய் வந்தவன் என்றார்; வேடனார் பலகோலங்களைக் கொண்டவர் எனலுமாம்.

திருநாவுக்கரசர் புராணம்

மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண் மழவிடையார்
உன்னுடைய மனக்கவலை யொழிநீயுன் னுடன்பிறந்தான்
முன்னமே முனியாகி யெனையடையத் தவமுயன்றான்
அன்னவனை யினிச்சூலை மடுத்தாள்வ மெனவருளி.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

43. திருநல்லம்

பதிக வரலாறு:

நாவுக்கரசர் திருப்பழையாறை வடதளி வணங்கிப் பொன்னியின் இருகரையிலுமுள்ள தலங்களைப் பாடித் திருவானைக்கா செல்லும்பொழுது பாடியருளியது இத்தமிழ்மாலை. (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 156 **பதிக எண்: 43**

திருச்சிற்றம்பலம்

1496. **கொல்லத் தான்நம னார்தமர் வந்தக்கால்**
இல்லத் தார்செய்ய லாவதெ னேழைகாள்
நல்லத் தான்நமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே. 1

1497. **பொக்கம் பேசிப் பொழுது கழியாதே**
துக்கந் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே. 2

1. பொ-ரை: அறிவற்றவர்களே! நமன் தமராகிய எமதூதர் கொல்லவந்தபோது இல்லத்தில் உள்ளவர்கள் செய்யலாவது யாது? திருநல்லத்தில் எழுந்தருளியிருப்பவனும், நம்மை ஆளுடையவனும் ஆகிய பெருமான் கழல் சொல்ல வல்லமை உடையீரேல், உம் துயர்கள் தீரும்.

கு-ரை: தான், அசை. நமனார் தமர் - எமதூதர். கொல்ல வந்தக்கால் - உயிர்கொள்ள வந்த இடத்து. இல்லத்தார் - மனைவி மக்கள் முதலாயினார். ஏழைகாள் - அறிவில் மெல்லியரே; சொல்ல வல்லிரேல் என்க.

2. பொ-ரை: பொய்ம்மொழிகளைப் பேசிப் பொழுது கழியாமல் துயரங்கள் தீர்தற்கு ஓர் உபாயம் சொல்லுவேன்; கேட்பீராக; தக்கன் வேள்வியைத் தகர்த்த தீவண்ணனாகிய திகம்பரன் உறைகின்ற திருநல்லம் நண்ணி வழிபடுதலே உமக்கு நன்மை.

Koviloor Digital Library

1498. பிணிகொள் வார்குழற் பேதையர் காதலால்
பணிகள் மேவிப் பயனில்லை பாவிகாள்
அணுக வேண்டி லரன்நெறி யாவது
நணுக நாதன் நகர்திரு நல்லமே. 3

1499. தமக்கு நல்லது தம்முயிர் போயினால்
இமைக்கும் போது மிராதிக் குரம்பைதான்
உமைக்கு நல்லவன் தானுறை யும்பதி
நமக்கு நல்லது நல்ல மடைவதே. 4

கு-ரை: பொக்கம் - பொய்; உலகியலைப் பற்றியன. தீர்வகை - தீரும்வழி. தகர்த்த - அழித்த. நண்ணுதல் - அடைதல். நக்கன் - நிர்வாண கோலத்தினன்.

3. பொ-ரை: பாவம் செய்தவர்களே! மலர் முதலியன விட்டுப் பிணித்தலைக்கொண்ட நீண்ட கூந்தலை உடைய பெண்களிடத்து வைத்த காதலால், அவர்கட்கு ஆளாகிப் பணிகளைப் பொருந்திச் செய்து பயன் இல்லையாதலால், நெருங்கிப் பணி செய்ய வேண்டில் அரன் நெறியே அணுகி திருநல்லம் சென்று வழிபடுவீர்களாக.

கு-ரை: பிணிகொள் - கட்டுதல் பொருந்திய அல்லது மனத்தைப் பிணித்தல் கொண்ட. வார்குழல் - நீண்ட கூந்தல். காதலால் - ஆசையால். பணிகள் - செயல்கள். அணுக - நெருங்க. வேண்டின் - விரும்பினால். அரன்நெறி - அரன் நெறியாவதை; அணுக வேண்டில் என்க. நணுகும் - சென்றடையுங்கள். தலைவனாகிய பெருமான் எழுந்தருளியுள்ள நல்லம் நணுகும் என முடிக்க.

4. பொ-ரை: தம்முயிர் தம்மைவிட்டு நீங்கினால் தமக்கு நல்லது; அங்ஙனமே இவ்வுடலாகிய குடிசை இமைப்பொழுது கூட நில்லா இயல்புடையது; உமாதேவிக்கு நல்லவனாகிய இறைவன் உறைகின்ற பதியாகிய திருநல்லம் என்னுந் தலத்தை அடைந்து வழிபடுவதே நமக்கு நல்லது ஆகும்.

கு-ரை: தமக்கும் நல்லதாகிய (இனிதாகிய) உயிர்தாம் - மக்களை. இமைக்கும்போது - கண்ணிமைக்கும் நேரத்திற்குள். இராது - நில்லாதாய் அழியும். குரம்பை - உயிரின் வீடாகிய உடம்பு. உமைக்கு - பார்வதிக்கு. நல்லன் - நல்லவன். பதி நல்லமடைவது நமக்கு நல்லது.

Koviloor Digital Library

1500. உரை தளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை யானிடம் நல்லமே
பரவு மின்பணி மின்பணி வாரொடே
விரவு மின்விர வாரை விடுமினே. 5

1501. அல்ல லாகஐம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே. 6

1502. மாத ராரொடு மக்களுஞ் சுற்றமும்
பேத மாகிப் பிரிவதன் முன்னமே

5. பொ-ரை: வார்த்தைகள் தளர்ந்து உடல் நடுங்குவதற்கு முன்பே, நரை உடைய இடபவாகனத்தை உடைய இறைவன் வீற்றிருக்கும் இடமாகிய திருநல்லத்திற்சென்று பரவிப் பணிவீர்களாக; பணிகின்ற அன்பர்களோடு கலந்து வழிபடுவீராக; அங்ஙனம் கலவாதவர்களை நீங்குவீர்களாக.

கு-ரை: உரை தளர்ந்து - பேச்சுக்குழறி. உடலார், ஆர் விகுதி இழிவு குறித்தது. நடுங்காமுனம் - நடுக்கமடையுமுன்னே; முதுமை யடையுமுன்பே என்க. நரைவிடை - வெள்ளிய எருது. புகழுமின் - புகழ் பாடித் தோத்திரியுங்கள். பணிமின் - வணங்குங்கள். பணிவா ரொடே விரவுமின் - அடியார் இணக்கம் கொள்ளுங்கள். விரவாரை - அடியரல்லாதாரை. விடுமின் - சேராது நீங்குங்கள்.

6. பொ-ரை: ஐம்பெரும் பூதங்கள் துன்பங்கள் உண்டாக ஆட்டினாலும், திருநல்லத்தில் எழுந்தருளியுள்ள நாதன் திருவடிகளை வல்லவாறு ''சிவாயநம'' என்று தொழுதால் வெல்லுதற்கு வந்த வினைகளாகிய பகை கெடும்.

கு-ரை: அல்லலாக - துன்பம் உண்டாக. வல்லவாறு - இயன்ற அளவு. வீடும் - அழியும்.

7. பொ-ரை: மனைவியரும், மக்களும், சுற்றத்தாரும் வேற்றுமைப்பட்டுப் பிரிகின்ற இறுதிக்காலம் வருவதற்குமுன்பே;

Koviloor Digital Library

நாதன் மேவிய நல்லம் நகர்தொழப்
போது மின்னெழு மின்புக லாகுமே. 7

1503. வெம்மை யான வினைக்கடல் நீங்கிநீர்
செம்மை யாய சிவகதி சேரலாம்
சும்மை யார்மலர் தூவித் தொழுமினோ
நம்மை யாளுடை யானிடம் நல்லமே. 8

1504. கால மான கழிவதன் முன்னமே
ஏலு மாறு வணங்கிநின் றேத்துமின்
மாலும் மாமல ரானொடு மாமறை
நாலும் வல்லவர் கோனிடம் நல்லமே. 9

தலைவன் மேவியுள்ள திருநல்லமாகிய நகரைத் தொழப் போதுவீர் களாக; எழுவீர்களாக; அப்பெருமானே புகலாவான்.

கு-ரை: மாதரார் - மனைவியர். பேதமாகி - வேறுபட்டவராய். பிரிவதன் முன்னம் - நீங்குவதன் முன்பாக; இறக்குமுன் என்றபடி. எழுமின் போதுமின் என்க - புறப்படுங்கள் செல்லுங்கள் என்பது பொருள். புகலாகும் - அதுவே உயிர்க்கு அடைக்கலமாகும் இடமாகும்.

8. பொ-ரை: வண்டுகளின் ஒலி பொருந்திய மலர்களைத் தூவி, நம்மை ஆளுடையானாகிய பெருமான் உறையும் திருநல்லத்தினைத் தொழுவீர்களாக; தொழுதால் வெப்பம் பொருந்திய வினைக்கடலி னின்றும் நீங்கி நீர் செம்மையாகிய சிவகதியினைச் சேரலாம்.

கு-ரை: வெம்மையான - கொடியதான. வினைக்கடல் - இருவினைப்பரப்பு. ''செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையு மன்றே'' (தி.4. ப.76. பா.2) என்றார் முன்னும்.

9. பொ-ரை: திருமாலும், பிரமனும், பெருமைமிக்க வேதங்கள் நான்கும் வல்லவர்களாகிய முனிவர்களும் ஆகிய அனைவர்க்கும் கோனாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் திருநல்லம். ஆதலால், பொருந்திய காலம் கழிவதற்கு முன்பே, இயலும் நெறியில் வணங்கி நின்று வழிபடுவீராக.

கு-ரை: காலமான - நமது வாழ்நாட்காலமாயினவை. கழிவதன்

Koviloor Digital Library

1505. மல்லை மல்கிய தோளரக் கன்வலி
ஒல்லை யில்லொழித் தானுறை யும்பதி
நல்ல நல்ல மெனும்பெயர் நாவினால்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே. 10

திருச்சிற்றம்பலம்

முன்னம் - முடிவதற்கு முன்பே. ஏலுமாறு - பொருந்துமாறு. மாமறை நாலும் வல்லவர் - வேதங்கள் நான்கிலும் வல்லவராய அந்தணர். கோன் - தலைவன்; பிரமவிட்டுணுக்களுக்கும் அந்தணர்களுக்கும் தலைவன் என்றபடி.

10. பொ-ரை: வளம் நிறைந்த தோள்களை உடைய இராவணன் ஆற்றலை விரைந்து ஒழித்த பெருமான் உறைகின்ற பதியாகிய நல்ல நல்லம் என்னும் பெயரை நாவினால் சொல்லும் வல்லமை உடையவர்கள் தூயநெறியிற் சேர்வர்.

கு-ரை: மல்லை மல்கிய - வலிமை நிரம்பப் பெற்ற. ஒல்லையில் - விரைவில். பதி - தலத்தினுடைய; நல்லம் நல்லம் என்று சொல்பவர் தூய வீடுபேற்றை அடைவர்.

கருவூர்ப் புராணம்

சூழிமால் யானை தாழப் பிணித்தகற் றூணந்தாழா
தாழிவாய் மிதப்ப மேலா மைந்தெழுத் துணர்வி னோங்கிக்
காழிவாழ் ஞானம் பூத்த கவுணியர் கொழுந்தை நட்ட
வாழிவா கீசர் வாச மலர்ப்பதம் வணங்கல் செய்வாம்.

திருச்சுழியற் புராணம்.

புல்லோடுந் தழையோடும் பூசிப்பார் தமக்கெதிரே
வல்லோடுந் தனத்துமலை மகளோடு வருவானைச்
சொல்லோடும் பொருளோடுந் துயரோடும்படி பாடிக்
கல்லோடு மிதந்தானைக் கருத்தோடும் பணிகுவமால்.

Koviloor Digital Library

44. திருஆமாத்தூர்

பதிக வரலாறு:

திருவதிகை வீரட்டானத்தில் சமணர் மொழி பொய் என்று மெய்யுணர்ந்த காடவர்கோன் திருவதிகை நகரின்கண் குணபர வீச்சரம் எடுத்த நாளில், வாகீசத் திருமுனிவர் திருவெண்ணெய் நல்லூர் பணிந்து திருவாமாத்தூர் இறைவரைத் தொழுது பாடி யருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 148.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 157 **பதிக எண்: 44**

திருச்சிற்றம்பலம்

1506. மாமாத் தாகிய மாலயன் மால்கொடு
தாமாத் தேடியுங் காண்கிலர் தாள்முடி
ஆமாத் தூரர னேயரு ளாயென்றென்
றேமாப் பெய்திக்கண் டாரிறை யானையே. 1

1507. சந்தி யானைச் சமாதிசெய் வார்தங்கள்
புந்தி யானைப்புத் தேளிர் தொழப்படும்

1. பொ-ரை: தமக்குள்ளே பெரும் பூசல் கொண்டவராகிய திருமாலும் பிரமனும் ஆணவ மய்க்கம் கொண்டு தாமாகத் தேடியும், பெருமானின் திருவடியடையும் திருமுடியையும் காண்கிலர்; ''ஆமாத்தூர் அரனே! அருள்வாயாக'' என்று பலமுறை இன்பமுறக் கூவியே இறையானைக் கண்டார்.

கு-ரை: மாமாத்து ஆகிய - மிக்க பெருமை உடையராகிய எனலு மாம். (மகத்து என்பதன் திரிபு); மால்கொடு - அறியாமை கொண்டு. தாமா - நாம் அறிவோம் என்னும் ஆணவத்தால்; தாள்முடி காண்கிலர் என்க. ஏமாப் பெய்தி - களிப்பு எய்தி. இறையானை - இறைவனாகிய பெருமானை. அருளாய் என்று பணிந்து இறையானைக் கண்டு ஏமாப்பெய்தினார் என்க.

2. பொ-ரை: காலை மாலை ஆகிய சந்திகளில் வணங்கப் படுவானும், யோகநெறி தலைப்படுவாருடைய புந்தியில் உறைபவ னும், தேவர்களால் தொழப்படும் அந்திவானத்தைப்போன்ற செம்

Koviloor Digital Library

அந்தி யானை ஆமாத்தூ ரழகனைச்
சிந்தி யாதவர் தீவினை யாளரே. 2

1508. காமாத் தம்மெனுங் கார்வலைப் பட்டுநான்
போமாத் தையறி யாது புலம்புவேன்
ஆமாத் தூரர னேயென் றழைத்தலும்
தேமாத் தீங்கனி போலத்தித் திக்குமே. 3

1509. பஞ்ச பூத வலையிற் படுவதற்
கஞ்சி நானு மாமாத்தூ ரழகனை
நெஞ்சி னால்நினைந் தேன்நினை வெய்தலும்
வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே. 4

மேனியானும் ஆகிய ஆமாத்தூர் அழகனைச் சிந்திக்காதவர்கள் தீவினையாளரே ஆவர்.

கு-ரை: சந்தியானை - மூன்று சந்தியாகாலங்களிலும் தியானிக்கப் படுகிறவனை. சமாதி - யோகநிஷ்டை; அழுந்தியறிதல். புந்தி - மனம். புத்தேளிர் - தேவர். அந்தியானை - அந்தி வண்ணனை; அல்லது அழகிய தீயின் உருவினன் என்க. அழகன் - தலத்து இறைவன் பெயர்.

3. பொ-ரை: காமமும் பொருளுமாகிய கார்வலையிலே பட்டுப்போகும் நெறியை அறியாமற் புலம்புகின்ற அடியேன் ''ஆமாத்தூர் அரனே!'' என்று அழைத்தலும், தேமாவின் இனிய கனி போலப் பெருமான் தித்தித்தனன்.

கு-ரை: காமாத்தம் - காமமும் பொருளும் என்றும், காமம் அர்த்தம் என்றுகொண்டு காமத்தையே பொருளாகக்கொண்டு என்றும் காண்க. கார்வலை - அறியாமையைச் செய்யும் வலை. போமாத்தை - மீளும் வழியை; போமாற்றை என்பதன் திரிபு. தேமாத்தீங்கனி - மிக இனிய மாங்கனி. புலம்புவேனாகிய நான் அழைத்தலும் தித்திக்கும்.

4. பொ-ரை: ஐம்பெரும் பூதங்களாலாகிய வலையிற்படுவதற்கு அஞ்சி அடியேனும் ஆமாத்தூர் அழகனை நெஞ்சின் கண் நினைந்தேன்; அந்நினைப்பு என்னை எய்துதலும் வஞ்சனையாகிய ஆறுகள் வற்றிவிட்டன; காண்பீராக.

Koviloor Digital Library

1510. குராமன் னுங்குழ லாளொரு கூறனார்
அராமன் னுஞ்சடை யான்திரு வாமாத்தூர்
இராம னும்வழி பாடுசெய் யீசனை
நிராம யன்தனை நாளும் நினைமினே. 5

1511. பித்த னைப்பெருந் தேவர் தொழப்படும்
அத்த னையணி யாமாத்தூர் மேவிய
முத்தி னையடி யேனுள் முயறலும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே. 6

கு-ரை: பஞ்ச பூதவலை - ஐம்பூதங்களாகிய வலை. நினை வெய்தலும் - நினைப்பை அடைந்தவுடன். வஞ்ச ஆறுகள் - வஞ்சனையாகிய ஆறுகள். வற்றின - நீங்கின. இறைவனை நினைப் போரை மாயாகாரியங்கள் மயக்கமாட்டா என்பது கருத்து.

5. பொ-ரை: குரவமலர்கள் நிலைபெற்ற கூந்தலை உடைய உமா தேவியை ஒரு கூற்றில் உடையவனும், பாம்பு நிலைபெற்ற சடையனும், திருவாமாத்தூரில் இராமனால் வழிபாடு செய்யப் பெற்ற ஈசனும், நிராமயனும் ஆகிய பெருமானை நாள்தோறும் நினைப்பீர்களாக.

கு-ரை: குராமன்னும் - குராமலர் பொருந்திய. குழலாள் - கூந்தலை உடையவளாகிய பார்வதி. ஒரு கூறனார் - இடப்பாகத்தே உடையவர். அரா - பாம்பு. நிராமயன் - நோயற்றவன்; பசுத்துவ மில்லாதவன். இராமன் வழிபட்ட தலவரலாற்றை உட்கொண்டது.

6. பொ-ரை: பித்தேறியவனும், பெரிய தேவர்களால் தொழப் படும் தலைவனும், அழகு பொருந்திய ஆமாத்தூரை விரும்பிப் பொருந்திய முத்துப் போல்வானும் ஆகிய பெருமானை அடியேன் உள்ளத்தே முயன்று உள்குதலும், அன்பு என்னும் வெள்ளம் பரவி எழுவதாயிற்று; காண்பீர்களாக.

கு-ரை: உள்-உள்ளத்தின்கண்ணே அழுந்திக்காண முயலு தலும் - தியானித்தலும். பத்திவெள்ளம் - அன்புவெள்ளம். பரந்தது - பரவி நின்றது; அகத்தே ஒரு குறிக்கண் வைத்து உரை குறியிறந்த அவன் நிலையை உணரும் வியாபக உணர்வைத் தலைப்பட்டேன் என்றபடி.

Koviloor Digital Library

1512. நீற்றி னார்திரு மேனியன் நேரிழை
கூற்றி னான்குழற் கோலச் சடையிலோர்
ஆற்றி னானணி யாமாத்தூர் மேவிய
ஏற்றி னான்எமை யாளுடை யீசனே. 7

1513. பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்
கண்ணித் தாகு மமுதினை யாமாத்தூர்
சண்ணிப் பானைத் தமர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவையன் னானவன் காண்மினே. 8

7. பொ-ரை: எம்மை ஆளுடைய இறைவன், திருநீற்றினால் நிறைந்த திருமேனி உடையவனும், நேரிழையை ஒரு கூற்றில் உடையவனும், அழகு நிறைந்த குழலாகிய சடையில் ஓர் ஆறாம் கங்கையை உடையவனும் ஆகிய அழகு நிறைந்த ஆமாத்தூரில் விரும்பியெழுந்தருளிய இடப வாகனத்தை உடையவன் ஆவன்.

கு-ரை: நீற்றினார் - திருநீறு பொருந்திய. நேரிழை - பார்வதி. குழல் - தலைமயிர். கோலம் - அழகிய. குழல் அம்மை பாகத்து முடியாகக்கொண்டு. குழல்கோலமாகக் கலந்த சடை எனலுமாம். ஆற்றினான் - கங்கை ஆற்றை உடையவன்.

8: பொ-ரை: பண்ணினை உடைய பாடல்களைப் பாடித் தன்னை அன்புசெய்யும் திறம் உடையவர்களுக்கு இனிக்கும் அமுது போல்வானும், ஆமாத்தூரில் பொருந்தியவனும், தன்னைச் சார்ந்த அடியார்களுக்கு மிகநெருங்கிக் கண்ணினுள்ள கருமணிப் பாவை போன்றவனுமானவனைக் காண்பீர்களாக!.

கு-ரை: பாடல்கள் பண்ணிற்பத்திசெய்வித்தகர் - தோத்திரப் பாடல்களை இசையோடு பாடி அன்புசெய்யும் அடியார். அண்ணித் தாகும் - இனிக்கும். சண்ணிப்பானை - திருநீற்றை உத்தூளனமாகப் பூசுபவனை எனலுமாம்.

தமர்க்கு - அடியார்க்கு. கண்ணிற் பாவை யன்னான் - கண்மணியை ஒத்தவன. ''கண்ணிற் கருமணியே மணியாடுபாவாய்'' (தாண்டகம்) அன்னானைக் காண்மின் என்க.

Koviloor Digital Library

1514. குண்டர் பீலிகள் கொள்ளுங் குணமிலா
மிண்ட ரோடெனை வேறு படுத்துய்யக்
கொண்ட நாதன் குளிர்புனல் வீரட்டத்
தண்டனாரிட மாமாத்தூர் காண்மினே. 9

1515. வானஞ் சாடு மதியர வத்தொடு
தானஞ் சாதுடன் வைத்த சடையிடைத்
தேனஞ் சாடிய தெங்கிள நீரொடும்
ஆனஞ் சாடிய வாமாத்தூ ரையனே. 10

1516. விடலை யாய்விலங் கல்லெடுத் தான்முடி
அடர வோர்விர லூன்றிய வாமாத்தூர்

9. பொ-ரை: குண்டர்களும், மயிற்பீலிகளைக்கொள்ளும் குண மில்லாத மிண்டர்களுமாகிய சமணர்களோடு என்னை வேறுபடுத்தி உய்யுமாறு கொண்ட நாதனாகிய குளிர்புனல்சூழ்ந்த வீரட்டத்துத் தேவதேவர் உறையும் இடம் ஆமாத்தூரேயாகும். காண்பீர்களாக!

கு-ரை: குண்டர் - தின்று கொழுத்தவர் பீலிகள் - மயில் தோகைகளை. மிண்டர் - வலியர். ஓடு, நீக்கப்பொருளில் வந்தது. வேறுபடுத்துய்யக்கொண்ட நாதன் - பிரித்து உய்யுநெறிகாட்டிய தலைவன். வீரட்டம் - திருவதிகை வீரட்டம். அண்டனார் - உலக முதல்வர்.

10. பொ-ரை: ஆகாயத்தே இருளைச்சிதைக்கும் மதியை அரவொடும் அஞ்சாதபடி நட்புக் கொள்ள வைத்தவர். தேன் முதலிய பஞ்சாமிர்தத்தொடும் இளநீர் பஞ்சக்வ்வியம் முதலியவற்றை அபிடேகம் கொண்டவர் ஆமாத்தூர்ப்பெருமான்.

கு-ரை: வானம் - ஆகாயத்தே. சாடும் - இருளைச் சிதைக்கும். தானஞ்சாது - மதியும் அரவும் தம்முள் கொண்ட பகைபற்றி அஞ்சாத படி. உடன் - ஒருசேர. தேன் அஞ்சு - தேன் முதலிய அஞ்சு; பஞ்சா மிர்தம். ஆனஞ்சு - பஞ்சகவ்வியம். தெங்கிள நீரொடும் ஆடிய ஐயன்; ஆனஞ்சாடிய ஐயன் என்க.

11. பொ-ரை: அடங்காத விடலையாக வந்த இராவணன் திருக் கயிலாயத்தை எடுக்கலுற்றபோது அவன் முடிகள் அடரும்படியாக

Koviloor Digital Library

இடம தாக்கொண்ட ஈசனுக் கென்னுளம்
இடம தாகக்கொண் டின்புற் றிருப்பனே. 11

திருச்சிற்றம்பலம்

ஒரு விரல் ஊன்றியவனும், ஆமாத்தூரை இடமாகக் கொண்ட ஈசனுமாகிய பெருமானுக்கு என்னுள்ளத்தை இடமாக வைத்து இன்புற்று இருப்பன் அடியேன்.

கு-ரை: விடலையாய் - மூர்க்கனாய். விலங்கல் - கயிலை மலை. அடர - நெரிய. உளமதாக்கொண்டு - ஈசனுக்கு என் உள்ளத்தை இடமாக வைத்து. இன்பு - பேரின்பம்.

திருநாவுக்கரசர் புராணம்

திருவதிகைப் பதிமருங்கு
திருவெண்ணெய் நல்லூரு
மருளுதிரு ஆமாத்தூர்
திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும்
வணங்கிவளத் தமிழ்பாடிப்
பெருகுவிருப் புடன்விடையார்
மகிழ்பெண்ணா கடமணைந்தார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

45. திருத்தோணிபுரம்

பதிக வரலாறு:

திருநாரையூர் பணிந்து அம்மை திருமுலைப்பால் உண்ட ஞானக் குழந்தையின் சீர் கேட்டுத் திருப்புகலி சார்ந்து பிள்ளை யாரை முதன் முதலாகச் சந்தித்து அவர்தம் திருமடத்தில் பலநாள் வைகித் தோணிபுரத்தீசரை வணங்கிப் பாடியருளியது இத்தமிழ் மாலை. (தி.12 திருநா. புரா. 187.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 158 பதிக எண்: 45

திருச்சிற்றம்பலம்

1517. மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனும்
சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
தாதி யாவன்நா னென்னுமென் தையலே. 1

1. பொ-ரை: சிவபெருமான்மேற் காதல் மிகுந்து, 'மனைக் கண் இரு' என்று நான் கூறியபோது, ''எனக்கு நீதி சொல்ல நீ என்ன உறவுடையை?'' என்று சொல்வதோடு, ''ஒளி நிறைந்த தோணிபுரத்து இறைவர்க்குத் தாதியாக நான் ஆவேன்'' என்றும் கூறுகின்றனள் என் மகள்.

கு-ரை: மாது இயன்று - பெண்மைக்குரிய இயல்பைமேற் கொண்டு எனலுமாம். மனைக்கு இரு - வீட்டின்கண் இரு. என்றக் கால் - என்று சொல்லிய இடத்து. நீதிதான்சொல (தான் அசை) நீ யெனக்கு ஆர் - இனி நீ எனக்கு நீதி சொல்ல என்ன உறவுடையாய். எனும் - என்று சொல்வாள். சோதிஆர்தரு - ஒளி பொருந்திய. தோணிபுரவர்க்கு - திருத்தோணிபுரத் திறைவர்க்கு. தாதி - பணி செய்பவள். என்னும் - என்று சொல்வாள். என் தையல் - என் பெண். செவிலி கூற்று. அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்துத் தோணிபுரத் திறைவர்மேல் காதல் கொண்டாளொருத்தியின் நிலையை விரித்தது.

Koviloor Digital Library

1518. நக்கம் வந்து பலியிடென் றார்க்கிட்ட
மிக்க தையலை வெள்வளை கொள்வது
தொக்க நீர்வயல் தோணி புரவர்க்குத்
தக்க தன்று தமது பெருமைக்கே. 2

1519. கெண்டை போல்நய னத்திம வான்மகள்
வுண்டு வார்குழ லாளுட னாகவே
துண்ட வான்பிறைத் தோணி புரவரைக்
கண்டு காமுறுகின்றனள் கன்னியே. 3

1520. பாலை யாழ்மொழி யாளவள் தாழ்சடை
மேல ளாவது கண்டனள் விண்ணுறச்

2. பொ-ரை: நீர்வளம் தொகுத்த வயல்களை உடைய தோணி புரத்து இறைவர் நிர்வாணமாய் வந்து 'பலி இடுக' என்றார்க்கு இட்டம் மிகுந்த என் பெண்ணின் வெள்வளைகளை அவர்கொள்வது தமது பெருமைக்குச் சிறிதும் தகுதியுடையதன்று.

கு-ரை: நக்கம் - நிர்வாணமாய். பலியிடு - பிச்சையிடு. இட்ட மிக்க - அன்புகொண்ட. இட்ட - பிச்சையிட்ட. மிக்க - மிக்க காமம் என்றலுமாம். வெள்வளை - வெள்ளிய சங்கவளை. நீர் தொக்க வயல்- நீர் நிறைந்த வயல். தக்கதன்று - தகுதியன்று; தமது பெருமைக்குத் தக்கதன்று. பிச்சை கொடு என்று கேட்டு வளையலைக் கவர்ந்து செல்வது இறைவர்தம் பெருமைக்கு ஏற்றதன்று என்க.

3. பொ-ரை: கெண்டைமீன் போன்ற கண்ணை உடைய இமவான் மகளாகிய வண்டுகள் செறிந்த நீண்ட குழலாள் உடனாக உறையும் வெள்ளிய பிறைமதி அணிந்த தோணிபுரத்து இறைவரைக் கண்டு இப்பெண் காமுறுகின்றனள்.

கு-ரை: கெண்டை - சேல்கெண்டை என்னும் மீன். நயனத்து - கண்களை உடைய. இமவான் மகள் - பார்வதி. வண்டுவார் குழல் - வண்டுகள் மொய்க்கும் மலர் நிறைந்த நீண்ட குழல். உடனாக - சமேதராக. துண்டவான் பிறை - சிறிதாகிய வெள்ளிய பிறை. தோணி புர வரை - பார்வதியொடு கண்டும் என உம்மைவிரித்துப் பொருள் கொள்க.

4. பொ-ரை: பாலையாழின் இனிய இசையை ஒத்த மொழி யாளாகிய கங்கை தாழ்சடையின்மேல் உள்ளவளாதலைக் கண்டும்,

Koviloor Digital Library

சோலை யார்தரு தோணி புரவர்க்குச்
சால நல்லளா கின்றனள் தையலே. 4

1521. பண்ணின் நேர்மொழி யாள்பலி யிட்டவிப்
பெண்ணை மால்கொடு பெய்வளை கொள்வது
சுண்ண மாடிய தோணிபு ரத்துறை
அண்ண லாருக்குச் சால அழகிதே. 5

விண்ணைமிக்குப் பொருந்திய சோலைகள் செறிந்த தோணி புரத்திறைவர்க்கு மிகவும் நல்லவளாகின்றனள் இப் பெண்.

கு-ரை: பாலையாழ்மொழியாளவள் - பாலையாழ் என்னும் யாழிற் பிறக்கும் இசையை ஒத்த மொழியினை உடையாளாகிய கங்கை. தாழ் - தொங்கும். சடைமேலளாவது - சடையின்மேல் உறைந் திருத்தலை. கண்டனள் கண்டும் என வருவிக்க.

விண்ணுற - ஆகாயத்தை அடையுமாறு உயர்ந்த. சோலை ஆர்தரு - சோலைகள் பொருந்திய. சால நல்லள் - மிகவும் இனியள், தையல் - பெண்; பார்வதியோடன்றிச் சடையில் மற்றொருத்தியை மறைத்து வைத்திருப்பதைப் பார்த்தும் அவனைக் காதலிக்கின்றாளே ஈதென்ன வியப்பு எனச் செவிலி இரங்கிக் கூறுவது.

5. பொ-ரை: சுண்ணமாடிய தோணிபுரத்து உறைகின்ற அண்ணலாராகிய சிவபெருமானுக்குப் பலியிட்டவளும் பண்ணை ஒத்த இனிய மொழியாளுமாகிய இப்பெண்ணுக்கு மயக்கம் கொடுத்துப் பெய்யப் பெற்ற வளைகளையும் கொள்வது சால அழகுடைய செயலோ?

கு-ரை: பண்ணின் நேர்மொழியாள் - இசையினை ஒத்த மொழியையுடையவளாய். பலியிட்ட - பிச்சையிட்ட, மால்கொடு - காதல் மயக்கம் கொள்ளச்செய்து.

பெய்வளை - கையில் பெய்து வைத்த வளையல்களை. கொள்வது - கவர்வது. சுண்ணம் - திருநீறு. ஆடிய - பூசிய. சால அழகிது - மிகமிக அழகாயிருக்கிறது! என்று புகழ்வது போல இகழ்தல். திருநீறு பூசித் துறவுக்கோலம் கொண்டவர் இவ்வாறு செய்வது அழகன்று என்றபடி.

Koviloor Digital Library

1522. முல்லை வெண்நகை மொய்குழ லாயுனக்
கல்ல னாவ தறிந்திலை நீகனித்
தொல்லை யார்பொழில் தோணி புரவர்க்கே
நல்லை யாயிடு கின்றனை நங்கையே. 6

1523. ஒன்று தானறி யாருல கத்தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
துன்று வார்பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே. 7


6. பொ-ரை: முல்லையரும்புகளைப் போன்ற ஒளிச் சிரிப்பையும், வண்டுகள் மொய்க்கும் கூந்தலையும் உடைய நங்கையே! கனிகள் உடையதாகிய பொழில் சூழ்ந்த பழைய தோணிபுரத்து இறைவர்க்கு நீ நல்லவளாகின்றனை; ஆயினும் உனக்கு அவன் அல்லனாவதனை நீ அறிந்திலை.

கு-ரை: மொய்குழலாய் - செறிந்தகூந்தலை உடையவளே! அல்லனாவது - உன்னை ஏற்றுக்கொள்ளாது அயலானாயிருப்பதை. அறிந்திலை - அறியவில்லை. கனித்தொல்லையார் பொழில் - கனிகளோடு கூடிய சோலை; தொல்லைத் தோணிபுரம் என்க. நல்லையாயிடுகின்றனை - நல்லவளாய் அவன்மேல் அன்புகொண்டு ஒழுகுகின்றாய்.

7. பொ-ரை: தலைவிக்குற்ற நோயின் காரணம் வேறொன்றாதலை இவ்வுலகத்தவர் அறியார்; நின்று சொல்லி அவளுக்கு நிகழ்ந்த நினைப்பு இல்லாதவர்கள்; நெருங்கிய நீண்டுயர்ந்த பொழில்களை உடைய தோணிபுரத்து இறைவருடைய கொன்றை மலரைச் சூட விழையும் குறிப்பே அந்நோய்க்குக் காரணமாகும்.

கு-ரை: உலகத்தவர் - உலகில் உள்ள மக்கள். ஒன்று தான் அறியார் - நிகழ்ந்ததொன்றையும் அறியமாட்டார்கள். நின்று சொல்லி - காதல்மயக்கம் கொண்ட அப்பெண்ணிடம் சென்று நின்று அறிவுரை சொல்லி. நிகழ்ந்த நினைப்பிலர் - அவளுக்கு எதனால் இது நிகழ்ந்தது என்ற நினைப்பிலராயினர். அவர் சூட்டச் சூடிக் கொண்டு அவர்க்கு மனைவியாகும் காமக் குறிப்பால் அங்ஙனம் ஒழுகுகின்றாள் என் மகள். இஃது அறியாதவராய் அறிவுரை சொல்லி நிற்கின்றனரே அவர் ஒன்றுமறியாதவர் போலும் எனச் செவிலி உலகவரை நோக்கி இரங்கியது.

Koviloor Digital Library



திருத்தோணிபுரம்:சோதியார் திருத்தோணிபுரவர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

1524. உறவு பேய்க்கண முண்பது வெண்தலை
உறைவ தீமம் உடலிலோர் பெண்கொடி
துறைக ளார்கடல் தோணி புரத்துறை
இறைவ னார்க்கிவ ளென்கண்டன் பாவதே. 8

1525. மாக யானை மருப்பேர் முலையினர்
போக யானு மவள்புக்க தேபுகத்
தோகை சேர்தரு தோணி புரவர்க்கே
ஆக யானு மவர்க்கினி யாளதே. 9

8. பொ-ரை: உறவு பேய்க்கூட்டங்கள்; உண்பதோ வெண் தலையில்; வாழ்வதோ சுடுகாட்டில்; உடலின் ஒரு கூற்றிலோ ஒரு பெண்கொடி; துறைகள் பொருந்திய கடலை அடுத்த தோணிபுரத்து உறைகின்ற இறைவனாராகிய பெருமானிடத்து இவள் இவற்றுள் எதனைக்கண்டு அன்பு ஆயினள்?

கு-ரை: உறவு பேய்க்கணம் - தமக்கு உறவுடையவான பேய்க் கூட்டங்கள். உண்பது வெண்தலை - உண்ணும் பாத்திரம் வெள்ளிய மண்டையோடு. உறைவது ஈமம் - தங்குமிடம் இடுகாடு. இவை மட்டு மல்ல. அவர் முன்பே மணமானவர் என்பதை அறிவிப்பது. உடலி லோர் பெண்கொடி என்பது. பெண்கொடி - பார்வதி. துறைகளார் - கடல்துறைக்ள் பொருந்திய. இவள் எதைப் பெருமையாக அவனிடம் கண்டு அவன்மேல் காதல்கொள்கிறாள் என இரங்கிக் கூறினாள் செவிலி.

9. பொ-ரை: மேகம் போன்ற கரிய யானையின் தந்தங்களைப் போன்ற தனங்களை உடையவர் காதலித்துச் செல்ல அவர்பின் யானும் சென்று காதலிக்க அவர் அழகில் ஈடுபட்டு அடிமையேன் ஆயினேன்.

கு-ரை: மாகம் - மேகம்; மேகம்போன்ற கரிய யானை என இயைக்க. மருப்பேர்முலை - தந்தங்களை ஒத்த தனங்கள். போக - பல பெண்களும் காதலித்துப் பின்செல்ல. யானும் - தோழியாகிய யானும். அவள் - தலைவி. புக்கதேபுக - செல்லும் வழியிலேயே செல்லுதலால். யானும் - அவர்க்கு இனி ஆளதே ஆக. நானும் அப்பெருமானழகில் ஈடுபட்டதால் அடிமையேன் ஆயினேன் என்க.

Koviloor Digital Library

1526. இட்ட மாயின செய்வாளென் பெண்கொடி
கட்டம் பேசிய காரரக் கன்றனைத்
துட்ட டக்கியதோணி புரத்துறை
அட்ட மூர்த்திக்கு அன்பது வாகியே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: என் பெண்கொடியாகிய மகள், தன் தொல்லைகளால் உழந்து இசைபாடிய இராவணனாகிய கரிய அரக்கனது தீய செயலை அடக்கிய தோணிபுரத்து இறைவராகிய அட்டமூர்த்திக்கு அன்புகொண்டவளாகித் தன் விருப்பத்திற்கு உரியனவற்றைச் செய்பவளாயினள்.

கு-ரை: இட்டமாயின - தனக்கு விருப்பமானவற்றையே. கட்டம் - வீண் வார்த்தைகளாகிய செருக்குமொழி. காரரக்கன் - கரிய நிறம் பொருந்திய அரக்கன். துட்டடக்கிய - துட்டத்தை அடக்கிய. அட்டமூர்த்திக்கு - எட்டு வடிவமாய் இருக்கின்றவனுக்கு. அன்பதுவாகி - அன்புடையவளாகி.

திருநாவுக்கரசர் புராணம்

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவனம் உய்ய,
இருட்கடுவுண் டவர் அருளும் உலகம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

46. திருப்புகலூர்

பதிக வரலாறு:

ஆண்டவரசு திருவாரூர்ப் புற்றிடங்கொண்டாரைத் தொழுது பதிபல வணங்கித் திருப்புகலூர் சார்கின்ற அந்நாளில் திருப்புகலி யினின்றும் பதிபலவணங்கிப் பூம்புகலூரில் முருகனார் திருமடத்தில் எழுந்தருளிய ஆளுடைய பிள்ளையார் தொண்டர்குழாம் புடைசூழ எதிரேற்கப் புகுந்து தென்புகலூர் மன்னியதேனைச் செந்தமிழ் பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 239.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 159 பதிக எண்: 46

திருச்சிற்றம்பலம்

1527. துன்னக் கோவணச் சுண்ணவெண் ணீறணி
பொன்னக் கன்ன சடைப்புக லூரரோ
மின்னக் கன்னவெண் திங்களைப் பாம்புடன்
என்னுக் கோவுடன் வைத்திட் டிருப்பதே. 1

1528. இரைக்கும் பாம்பு மெறிதரு திங்களும்
நுரைக்குங் கங்கையும் நுண்ணிய செஞ்சடைப்

1. பொ-ரை: கோவண ஆடையையும், வெண்ணீற்றுப் பொடி யணிந்த மேனியையும், பொன் விரிந்து மலர்ந்தாலொத்த சடையையும் உடைய புகலூர்த்தலத்துப் பெருமானே! மின்னல் மலர்ந்தது போன்ற வெண்திங்களைப் பாம்புடன் எதற்காகத் தேவரீர் திருச்சடையில் உடன்வைத்துக் கொண்டுள்ளீர்?

கு-ரை: துன்னம் - தைக்கப்பட்டதாகிய கோவணம். சுண்ண வெண்ணீறு - திருவெண்ணீற்றுப்பொடி. பொன்நக்கு அன்ன சடை - பொன்னொளி விளங்கும் சடை. மின்நக்கு அன்ன - மின்னல் விளங் கினாற் போன்ற ஒளியை உடைய. என்னுக்கோ - எதற்கோ. உடன் வைத்திருப்பது - பகையாயினவற்றை ஒன்றாய் வைத்திருப்பது.

2. பொ-ரை: இப்பெண், நெட்டுயிர்க்கும் பாம்பையும், அதனால் கவ்வப்படுகின்ற திங்களையும், நுரைத்தெழுந்து அலைவீசும் கங்கை

Koviloor Digital Library

புரைப்பி லாத பொழிற்புக லூரரை
உரைக்கு மாசொல்லி யொள்வளை சோருமே. 2

1529. ஊச லாம்அர வல்குலென் சோர்குழல்
ஏச லாம்பழி தந்தெழில் கொண்டனர்
ஓசொ லாய்மக ளேமுறை யோவென்று
பூசல் நாமிடு தும்புக லூரர்க்கே. 3

யையும் நுண்ணிய செஞ்சடையில் வைத்துக் குற்றமில்லாத பொழில்கள் சூழ்ந்த புகலூரில் உறையும் பெருமானை உரைக்குமாறு கூறித் தன் ஒளிபொருந்திய வளைகள் நெகிழ்கின்றாள்.

கு-ரை: இரைக்கும் - சீறும் அல்லது பெருமூச்சு விடும். எறிதரு - அப்பாம்பினால் பகைக்கப்படும், நுண்ணிய - மெல்லிய. புரைப் பிலாத - குற்றமில்லாத. உரைக்குமா சொல்லி - உரைக்கும் இலக்கணம் எப்படியோ அப்படியே சொல்லி; பிறரை உரைக்கும் படி சொல்லி எனலும் ஆம், ஒள்வளை சோரும் - ஒள்ளிய வளையல்களைக் கழல விடுவாள்.

3. பொ-ரை: அசைந்தாடும் அரவத்தின் படத்தைப் போன்ற அல்குலை உடைய என் சோர்குழலாளாகிய பெண்ணைச் சுற்றத்தார் முதலாயினோர் ஏசலாகும் பழி சுமத்தி அவள் எழிலைக் கொண்டனர். ஆதலால், 'ஓ, மகளே! சொல்வாயாக! முறையோ' என்று புகலூர் இறைவர்க்கு நாம் பூசல் இடுவோமாக.

கு-ரை: ஊசலாம் - மனம் இங்குமங்கும் ஊஞ்சல்போல அலையலாகும்படி அல்லது ஊஞ்சல்போல இங்குமங்கும் எங்கும் அசைந்தாடும் பாம்பு; அல்லது சோர்குழல் ஊசலாம் என்க. அரவல்குல் - பாம்பின் படம்புரையும் அல்குல்.

சோர்குழல் - அவிழ்ந்து விழும் கூந்தலினை உடைய என் மகள். ஏசலாம்பழி - ஊரார் ஏசுதலாகின்ற பழியை. தந்து எழிலைக் கவர்ந்தார். ஓ சொலாய் - (மகளே நிகழ்ந்தது யாது?) முறையோ சொல்வாயாக. புகலூர் இறைவர்க்கு முறையோ என்று பூசல் நாமிடுதும் - புகலூர் இறைவரிடத்துச் சென்று பெருமானே நீ செய்தது நீதியோ என்று ஆரவாரச் சண்டையிடுவோம். இது செவிலி அல்லது தோழி கூற்று.

Koviloor Digital Library

1530. மின்னின் நேரிடை யாளுமை பங்கனைத்
தன்னை நேரொப் பிலாத தலைவனைப்
புன்னைக் கானற் பொழிற்புக லூரனை
என்னு ளாகவைத் தின்புற் றிருப்பனே. 4

1531. விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்க ளோதி யெழுத்தஞ்சுங்
கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூருமென் நெஞ்சுமே. 5

4. பொ-ரை: மின்னலையொத்த இடையாளாகிய உமையினை ஒருபங்கில் உடையவனும், தன்னை நிகர்க்குமொன்றில்லாத் தலைவனும் ஆகிய புன்னைக்கானல் பொழில் சூழ்ந்த புகலூரனை என் உள்ளத்து வைத்து அடியேன் இன்பமுற்றிருப்பேன்.

கு-ரை: மின்னின் - மின்னலினை. நேர் - ஒத்த; இடையாளாகிய உமை என்க. பங்கன் - பக்கத்தே உடையவன். தன்னை நேர் ஒப்பிலாத தலைவனை - தன்னை வேறு யாரும் ஒவ்வாத தலைமையுடையோனை. 'மற்றாரும் தன்னொப் பாரில்லாதானை'. புன்னைக் கானல் - புன்னைமரச்சோலை. என்னுளாக - என் மனத்துள்ளாக.

5. பொ-ரை: விண்ணிற் பொருந்திய பிறைமதியினைச் சூடிய அருள்வேந்தனை, நாமங்கள் கூறியும், திருவைந்தெழுத்தால் தியானித்தும், கண்ணினாற் கழலடிகளைத் தரிசிக்கும் இடங்கள் எவை என்றால் அப்புண்ணியன் எழுந்தருளியிருக்கும் புகலூரும் என் நெஞ்சமும் ஆம்.

கு-ரை: விண்ணினார்மதி - வானத்திலே பொருந்திய மதி. நாமங்கள் எண்ணி - அவனது திருப்பெயர்களை எண்ணி. எழுத்தஞ்சும் ஓதி - திருவைந்தெழுத்துக்களை ஓதி. கண்ணினால் - கண்களினால். கழல் - திருவடி. காண்பிடம் - பெருமானைக் காணுமிடம். எது எனில் - எதுஎன்றால். புண்ணியனாய பெருமான் எழுந்தருளியுள்ள புகலூரும் என் மனமுமே ஆகும். புறக்கண்களால் புகலூரிலும், அகக்கண்களால் நெஞ்சிலும் காணலாம். சாதனம் நாமங்களை ஓதி எழுத்தஞ்சும் எண்ணுதல்.

Koviloor Digital Library

1532. அண்ட வாண ரமுதுண நஞ்சுண்டு
பண்டு நான்மறை யோதிய பாடலன்
தொண்ட ராகித் தொழுது மதிப்பவர்
புண்ட ரீகத்து ளார்புக லூரரே. 6

1533. தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் தண்புக லூரனே. 7

6. பொ-ரை: புகலூர்த் தலத்து இறைவர், தேவர்கள் அமுதுண்ணவும் தாம் நஞ்சுண்டவர்; பழமையில் நான்மறைப் பாடல்களால் ஓதப்பட்டவர்; தொண்டராகித் தொழுது மதிக்கின்றவர்களின் இதயத் தாமரையில் உள்ளவர் ஆவர்.

கு-ரை: அண்டவாணர் - தேவர். பாடலன் - பெருமையுடையவன் அல்லது பாடலைப் பாடுபவன் என்க. மதிப்பவர் - தியானிப்பவர். புண்டரீகம் - நெஞ்சக்கமலம்.

7. பொ-ரை: தத்துவங்களின் கூறுபாடுகளை முடிவு போகக் கண்டு அறிவார் இலர்; அவ்வாறு தத்துவங்களை முடிவு போகக் கண்டவர் காணாதவரேயாவர்; தத்துவம் தலைநின்றவர்க்கே அல்லது தத்துவவடிவானவன் அல்லன் புகலூர்ப் பெருமான்.

கு-ரை: தத்துவம் தலைக்கண்டு அறிவாரிலை - முப்பத்தாறு தத்துவங்களையும் உள்ளவாறு ஆராய்ந்து அதனை அறிபவர்கள் இல்லை. தத்துவந் தலை கண்டவர் - தத்துவங்களை ஆராய்ந்தவர். கண்டிலர் - த்த்துவாதீதனாகிய இறைவனை அறியாதுபோயினர். தத்துவம் தலைநின்றவர்க்கல்லது - தத்துவங்களை ஆராய்ந்து அவற்றைக் கடந்து நிற்பவர்க்கல்லாமல். தத்துவனலன் - அவன் மெய்ப்பொருளல்லன். தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பெருமானைக் காணுபவர் இல்லை. அப்படி ஆராய்ச்சியில் ஈடுபட்டார் பலர் தத்துவ அளவிலே நின்று தத்துவாதீதனாயிருக்கும் பெருமானை அறியாதவராயினர். தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்க்கல்லது அவன் உண்மையானவனல்லன் என்க. முன்னைய மூன்றும் முப்பத்தாறு தத்துவங்களைக் குறிக்கும். நான்காவது வரியில் தத்துவம் - மெய்ப்பொருள்.

Koviloor Digital Library

1534. பெருங்கை யாகிப் பிளிறி வருவதோர்
கருங்கை யானைக் களிற்றுரி போர்த்தவர்
வருங்கை யானை மதகளி றஞ்சினைப்
பொருங்கை யானைகண் டீர்புக லூரரே. 8

1535. பொன்னொத் தனிறத் தானும் பொருகடல்
தன்னொத் தநிறத் தானு மறிகிலாப்
புன்னைத் தாது பொழிற்புக லூரரை
என்னத் தாவென என்னிடர் தீருமே. 9

8. பொ-ரை: புகலூர்த்தலத்து இறைவர், பெருங்கையோடு பிளிறி வருவதாகிய ஒரு வலியகையானையை உரித்துப் போர்த்த இயல்பினர்; துதிக்கையை உடைய மதயானைகளாகிய ஐம்புலன்களைப் பொறாது வெல்லும் ஆனைபோல்வார் ஆவர்.

கு-ரை: பெருங்கை - நீண்டு புரளும் துதிக்கை. பிளிறி - அலறி. கருங்கையானை - கரிய கையையுடைய யானை. பெருங்கை யானை கருங்கையானை எனத் தனித்தனி கூட்டுக. களிற்றியானை - இருபெயரொட்டு. உரி - தோல். வரும் - நம்மை அடரவரும், கை யானை - கையினையுடைய யானை; அல்லது நம்மைத் துன்புறுத்தும் மேற் கோளையுடையதாய் வரும் யானைகள்; அவை ஐம்பொறிகள். மத களிறு அஞ்சு - ஐம்பொறிகள். பொருங்கையான் - போரிட்டழிக்கும் கையை உடையவன். கை - மேற்கோள் எனினுமாம். இதற்கு ஆனை - ஆனை போன்றவன் என்க.

9. பொ-ரை: பொன்னை ஒத்த நிறம் உடைய பிரமதேவனும், அலைவீசும் கடலையொத்த நீல நிறத்தவனான திருமாலும் அறியப் படாத இயல்பினரும் புன்னையின் மகரந்தங்களை உடைய பொழில் சூழ்ந்த திருப்புகலூரின்கண் எழுந்தருளியிருப்பவருமான பெருமானை ''என் தந்தையே!'' என்று கூற என் இடர்கள் அனைத்தும் தீரும்.

கு-ரை: பொன்னொத்த நிறத்தான் - பொன்னை ஒத்த நிறம் உடைய பிரமன். பொரு - அலைகளால் சண்டையிடும். கடல் தன்னொத்த நிறத்தான் - கடல்வண்ணனாகிய திருமால். அறிகிலா - அறிய முடியாத புகலூர் என்க. புன்னைத்தாது பொழில். புன்னை மலரின் மகரந்தம் செறிந்த சோலை; புன்னைமலர்ச்சோலை. என்னத்தா என - என் தந்தையே என்று கூற. தீரும் - நீங்கும்.

Koviloor Digital Library

1536. மத்த னாய்மதி யாது மலைதனை
எத்தி னான்திரள் தோண்முடி பத்திற
ஒத்தி னான்விர லாலொருங் கேத்தலும்
பொத்தி னான்புக லூரைத் தொழுமினே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: மதச் செருக்குடையவனாய்ச்சிறிதும் மதியாமல் திருக்கயிலாயத்தை எடுக்கலுற்ற இராவணனின் திரண்ட தோள்களும், முடிபத்தும் இறும்படியாகத் திருவிரலால் ஒற்றியவனும், தன் நரம்புகளே யாழாகக்கொண்டு அவன் ஏத்துதலும் மீண்டும் அருள்செய்தவனும் ஆகிய பெருமான் உறையும் திருப்புகலூரைத் தொழுவீர்களாக.

கு-ரை: மத்தனாய் - உன்மத்தனாய். எத்தினான் - எற்றினான் என்பதன் திரிபு. தூக்கி அகற்ற எண்ணியவன். இற - நெரிய. விரலால் ஒத்தினான் - கால்விரலை ஊன்றினான். ஒற்றினான் ஒத்தினான் என்றாயது. ஒருங்கு ஏத்தலும் - பின்னர் இறுமாப்பொழிந்து ஒருசேர வணங்குதலும். பொத்தினான் - காப்பாற்றினான்.

திருநாவுக்கரசர் புராணம்

தேவர் பிரானைத் தென்புக லூர்மன் னிய தேனைப்
பாவியல் மாலைச் செந்தமிழ் பாடிப் பரிவோடு
மேவிய காலந் தோறும் விருப்பிற் கும்பிட்டே
ஓவுதல் ஓவு திருப்பணி செய்தங் குறைகின்றார்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

47. திருவேகம்பம்

பதிக வரலாறு:

ஆளுடைய அரசு திருவோத்தூர் இறைஞ்சித் தொண்டர் எதிர்கொள்ளத் தையல் தழுவக் குழைந்தபிரான் தங்குங் காஞ்சிப் பதியணைந்து ஏகம்பநாதரை வணங்கிச் செந்தமிழ் மாலை பாடியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 325.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 160 பதிக எண்: 47

திருச்சிற்றம்பலம்

1537. பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே. 1

1538. நச்சி நாளும் நயந்தடி யார்தொழ
இச்சை யாலுமை நங்கை வழிபடக்
கொச்சை யார்குறு கார்செறி தீம்பொழில்
கச்சி யேகம்ப மேகை தொழுமினே. 2

1. **பொ-ரை:** நெஞ்சமே! நீ முற்பிறவிகளிற் செய்த பழவினை களின் பயனைக் கண்டும் கண்டும் பின்னும் களிப்புற்றுக் கெடுகின்ற னையே, வண்டு உலாவுகின்ற மலரையணிந்த செஞ்சடை உடைய வனாகிய திருவேகம்பத்துப் பெருமானுக்குத் தொண்டனாகி உன் துயர்கள் தீரும்பொருட்டுத் திரிவாயாக.

கு-ரை: பண்டு செய்த பழவினை - முற்பிறவிகளிற் செய்த சஞ்சிதம். பயன் - பிரார்த்தம். கண்டும் கண்டும் - அனுபவத்தால் பார்த்தும் பார்த்தும். களித்தி - களிப்படைகின்றாய். காண் - அசை. வண்டுலா மலர் - தேனுண்ண வண்டுகள் உலவுகின்ற மலர்கள். திரியாய் - திரிவாயாக. துயர்தீர - அத்துன்பம் நீங்க.

2. **பொ-ரை:** அடியார்கள் நாள்தோறும் நசை உடையவராய் நயந்து தொழவும், உமைநங்கையார் இச்சையால் வழிபடவும் கண்டு,

Koviloor Digital Library

1539. ஊனி லாவி யியங்கி யுலகெலாம்
தானு லாவிய தன்மைய ராகிலும்
வானுலாவிய பாணி பிறங்கவெங்
கானி லாடுவர் கச்சியே கம்பரே. 3

1540. இமையா முக்கண ரென்நெஞ்சத் துள்ளவர்
தமையா ரும்மறி வொண்ணாத் தகைமையர்
இமையோ ரேத்த இருந்தவ னேகம்பன்
நமையா ளும்மவ னைத்தொழு மின்களே. 4

செறிந்த இனிய பொழில்களை உடைய கச்சியேகம்பத்தினை நீங்களும் கைகளாற் றொழுவீர்களாக.

கு-ரை: நச்சி - அன்புகொண்டு. நாளும் - நாடோறும். நயந்து - விரும்பி. இச்சையால் - ஆசையால். உமைநங்கை - காமாட்சி. கொச்சையார் குறுகார் - அறிவில்லாதவர்கள் சென்றடையார். இத் தலத்துக் காமாட்சி வழிபட்டதைக் குறித்தது இரண்டாவது தொடர்.

3. பொ-ரை: கச்சி ஏகம்பர், உடல்கள்தோறும் உயிராய் இயங்கி உலகமெல்லாம் பொருந்திய இயல்பினை உடையவராயினும், வானமெங்கும் உலாவிய இசை விளங்கும் படியாக வெவ்விய சுடுகாட்டில் நட்டமும் ஆடுவர்.

கு-ரை: ஊனில் ஆவி - உயிர்கள் உடலினுள் பொருந்தி. இயங்கி - இயங்க என்பது இயங்கி எனத் திரிந்தது. உலக முழுவதும் தானு லாவிய தன்மையர் ஆயினும் - தான் நிறைந்த தன்மையை உடையவர் ஆனாலும். வானுலாவிய பாணி - ஆகாயமெங்கும் உலவும் தாள ஓசை. பிறங்க - விளங்க. வெங்கான் - கொடிய இடுகாடு.

4. பொ-ரை: இமையாத முக்கண்ணை உடையவரும், என் நெஞ்சத்தின்கண் உள்ளவரும், தம்மை யாரும் அறியவொண்ணாத பெருந்தகைமை உள்ளவரும். தேவர்கள் ஏத்துமாறு வீற்றிருந்தவரும், நம்மையாள்பவருமாகிய திருவேகம்பரைத் தொழுவீர்களாக.

கு-ரை: இமையா – இமைக்காத. முக்கணர் - மூன்றுகண்களை உடையவர். இமைத்தால். கண்பொத்தி பார்வதி விளையாடிய போது ஏற்பட்ட இருண்டநிலை உலகிற்கு உண்டாமோ என்னும் கருணை

Koviloor Digital Library

1541. மருந்தி னோடுநற் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்றெனக் காயவெம் புண்ணியன்
கருந்த டங்கண்ணி னாளுமை கைதொழ
இருந்த வன்கச்சி யேகம்பத் தெந்தையே. 5

1542. பொருளி னோடுநற் சுற்றமும் பற்றிலர்க்
கருளு நன்மைதந் தாயவ ரும்பொருள்
சுருள்கொள் செஞ்சடை யான்கச்சி யேகம்பம்
இருள்கெ டச்சென்று கைதொழு தேத்துமே. 6

யால் இமையாதிருக்கும் முக்கணர் என்க. தம்மையாரும் உள்ளவாற றிய முடியாத தன்மையர் என்க. ஆளும் - நம்மை ஆட்கொள்ளுவான்.

5. பொ-ரை: கச்சியேகம்பத்தின்கண் எழுந்தருளியுள்ள எந்தை, எனக்கு மருந்தும், சுற்றமும், மக்களும் ஆகப் பொருந்திநின்று விளங்கும் புண்ணிய வடிவினன்; கரிய பெரிய கண்ணை உடைய உமாதேவி கைதொழ இருந்தவன் ஆவன்.

கு-ரை: எனக்குப் பொருந்தி நின்று மருந்தினோடு நல் சுற்றமாய எம் புண்ணியன் எனக் கூட்டுக. பொருந்தி நின்று - துணையாய்ப் பொருந்தித்தோன்றி. ஆய - ஆகிய. கருந்தடங்கண்ணினாள் - கரிய பெரிய கண்ணை உடையவளாகிய. காமாட்சி வழிபட்ட வரலாற்றை உட்கொண்டது இத்திருப்பாடல் (எந்தை - எங்கள் தந்தை.)

6. பொ-ரை: பற்று அற்றவர்களுக்குப் பொருளும், நற்சுற்றமும், அருளும், நன்மைதந்து ஆதலுற்ற அரும்பொருளும் ஆகியவனும், சுருளுதலைக்கொண்ட செஞ்சடை உடையவனும் ஆகிய பெருமான் உறைகின்ற கச்சிஏகம்பத்தை, உம்மைச்சார்ந்த இருள் மலங்கெடச் சென்று கரங்குவித்து வழிபடுவீர்களாக.

கு-ரை: பற்றிலார்க்குப் பொருளினோடு நற்சுற்றமும் அருளுமாகிய நன்மைகளைத்தந்து நிற்கின்ற அரியபொருள். பொருள் - பொன், மணி, நெல் முதலிய செல்வங்கள். பற்றிலர்க்கு - பிற பற்று ஒன்றும் இல்லாதவர்களுக்கு. நன்மை தந்து - நன்மைகளைக் கொடுத்து. சுருள்கொள் - சுருளுதலைக்கொண்ட. இருள் - ஆணவ இருள். ஏத்தும் - தோத்திரம் சொல்லி வணங்குங்கள்.

Koviloor Digital Library

1543. மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தருள்
நோக்கு வான்நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சியே கம்பனே. 7

1544. பண்ணி லோசை பழத்தினி லின்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவுவே றாயவன்
கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே. 8

7. பொ-ரை: கச்சியேகம்பத்து இறைவன், மெய், வாய், கண், மூக்குச் செவியாகி வந்து ஆக்கிய ஐம்புலன்களினாலாய கட்டினை அவிழ்த்தருளித் தன் திருக்கண்களால் நம்மை நோக்குவான்; நோய்களை உண்டாக்கும் வினைகள் நம்மிடத்துவாராமற் காக்கும் நாயகன் ஆவன்.

கு-ரை: மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் இங்குச் சொல்லப்பட்டன. ஆக்கும் - வினையை உண்டாக்குகின்ற ஐவர்தம் - ஐம்பூதங்களினுடைய. ஆப்பு - கட்டு. அவிழ்த்து - பந்திக்காமல் நீக்கி. அருள் - அருட்பார்வையால். நமை - நம்மை. நோய் - துன்பம். அவிழ்த்து நம்மை நோய்வினை வாராமே அருள நோக்குவான் எனக் கூட்டுக.

8. பொ-ரை: கச்சியேகம்பத்து இறைவன் பண்ணின் இசை யாகவும் பழத்தில் இனிய சுவையாகவும், பெண் ஆண் என்று ஒருபாற்படுத்திப் பேசுதற்கு அரியவனாகவும், வண்ணம் இல்லாத வனாகவும், வடிவம் வேறாயவனாகவும், கண்ணினுட் கருமணி யாகவும் உள்ளான்.

கு-ரை: பண் - இராகம். ஓசை - சுரம். பண்ணில் ஓசையும், பழத்தினில் இனிய சுவையும் பிரிவின்றியிருத்தல் போல நும்மொடு உடனாயிருப்பவன். பெண் என்றாயினும், ஆண் என்றாயினும் சொல்லுதற்கியலாதவன். வண்ணமில்லி - தனக்கென ஒரு நிறமில் லாதவன். வடிவு வேறாயவன் - தனக்கென ஒரு வடிவமில்லாதவன். வேறாதல் - இங்கு இன்மையைக் குறித்தது. கண்ணிலுண்மணி - கண்ணின்பாவை மணியை ஒத்தவன், இப்பாடல் இறைவன் உயிர் களுள் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையும் காட்டுவிக்கும் நிலையும் உணர்த்தப்படுவது.

Koviloor Digital Library

1545. திருவின் நாயகன் செம்மலர் மேலயன்
வெருவ நீண்ட விளங்கொளிச் சோதியான்
ஒருவ னாயுணர் வாயுணர் வல்லதோர்
கருவுள் நாயகன் கச்சியே கம்பனே. 9

1546. இடுகு நுண்ணிடை யேந்திள மென்முலை
வடிவின் மாதர் திறம்மனம் வையன்மின்
பொடிகொள் மேனியன் பூம்பொழிற் கச்சியுள்
அடிக ளெம்மை யருந்துயர் தீர்ப்பரே. 10

9. பொ-ரை: கச்சியேகம்பத்து இறைவன், திருமகளின் நாயகனாகிய திருமாலும், சிவந்த தாமரை மலர்மேல் உள்ள பிரமனும் அஞ்சி வெருவும்படியாக விளங்குகின்ற நிமிர்ந்த சோதி ஒளியாகவும், ஒப்பற்றவனாகவும், உணர்வு ஆகவும், உணர்வல்லாத கருவினுள் நாயகனாகவும் உள்ளான்.

கு-ரை: திரு - இலக்குமி. அயன் - பிரமன். செம்மலர் - செவ்விய தாமரை. வெருவ - அஞ்ச. ஒருவன் - ஏகன். உணர்வாய் - உணர்வு வடிவாய் இருப்பவன் சித்தவடிவமானவன் என்க. உணர்வல்லதோர் கருவுள் நாயகன் - உணர்வில்லாத சடப்பொருள் களிலும் நிறைந்திருக்கும் தலைவன். இறைவன் சட சித்துக்கள் அனைத்திலும் நிறைந்திருப்பவன் என்பதாம்.

10. பொ-ரை: மிகச் சிறிய (இடுகிய) நுண்ணிடையையும், இளமை உடைய சற்றே ஏந்தினாற்போன்ற மென்முலையையும், உடைய வடிவினையுடைய பெண்கள்பால் உள்ளம் வையாதீர்கள்; திருநீற்றுப்பொடியணிந்த மேனியனாகிய, பொழில் சூழ்ந்த கச்சியேகம்பத்து எழுந்தருளியுள்ள இறைவன் எம்மையெல்லாம் அரிய துயரங்கள் தீர்த்துக் காப்பர்.

கு-ரை: இடுகு - சிறுத்த. நுண் - நுண்ணிய. ஏந்து - நிமிர்ந்த. வடிவின் மாதர் - அழகிய வடிவினையுடைய பெண்கள். திறம் - தன்மை. வையன்மின் - ஈடுபடுத்தாதீர்கள். அருந்துயர் - அரிய துன்பம். தீர்ப்பர் - போக்கிக் காப்பர் என்றபடி.

Koviloor Digital Library

1547. இலங்கை வேந்த னிராவணன் சென்றுதன்
விலங்க லையெடுக் கவ்விர லூன்றலும்
கலங்கிக் கச்சியே கம்பவோ வென்றலும்
நலங்கொள் செலவளித் தானெங்கள் நாதனே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: எங்கள் நாதனாகிய கச்சியேகம்பத்து இறைவன், இலங்கை வேந்தனாகிய இராவணன் சென்று தம் திருக்கயிலாயத்தை எடுக்க முற்படுதலும், தன் திருவிரலை ஊன்றக்கலங்குதலுற்று ''கச்சி ஏகம்பத்து இறைவா!'' என்று அவன் அலறினன்; அதுகேட்டு நலம் பெற மீளும் செலவை அவனுக்கு அருளிய பெருங்கருணைத்திறம் உடையவன்.

கு-ரை: விலங்கல் - கயிலைமலை. கச்சியேகம்பவோ - கச்சியேகம்பனே முறையோ. என்றலும் - என்று தோத்திரித்தலும். நலங்கொள் செலவு - நன்மையைக்கொண்ட மீட்சி. நாளொடு வாள் பெற்றுச் சென்றதைக் குறித்ததாம்.

திருநாவுக்கரசர் புராணம்

சீர்வளரு மதிற்கச்சி
நகர்த்திருமேற் றளிமுதலாம்
நீர்வளஞ் சடையவர்தாம்
நிலவியுறை ஆலயங்கள்
ஆர்வமுறப் பணிந்தேத்தி
ஆய்ந்ததமிழ்ச் சொன்மலரால்
சார்வுறுமா லைள்சாத்தித்
தகுந்தொண்டு செய்திருந்தார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

48. திருவேகம்பம்

பதிக வரலாறு:

திருவோத்தூர் இறைஞ்சித் திருக்கச்சியேகம்பரை வணங்கிச் செந்தமிழ் மாலை பாடியவற்றுள் ஒன்று இத்திருப் பதிகம். (தி.12 திருநா. புரா. 325.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 161 பதிக எண்: 48

திருச்சிற்றம்பலம்

1548. பூமே லானும் பூமகள் கேள்வனும்
நாமே தேவ ரெனாமை நடுக்குறத்
தீமே வும்முரு வாதிரு வேகம்பா
ஆமோ அல்லற் படவடி யோங்களே. 1

1549. அருந்தி றல்அம ரர் அயன் மாலொடு
திருந்த நின்று வழிபடத் தேவியோ
டிருந்த வன்னெழி லார்க்கச்சி யேகம்பம்
பொருந்தச் சென்று புடைபட் டெழுதுமே. 2

1. பொ-ரை: தாமரைப்பூமேல் உள்ளவனாகிய பிரமதேவனும், பூமகளாகிய இலக்குமிநாயகனாகிய திருமாலும் 'யாங்களே பிரமம்' என்று கூறாது நடுக்குறும்படியாகத் தீ வடிவாகிய பெருமானே! திருவேகம்பத்தை உடையவனே! நின் அடியோமாகிய யாங்கள் அல்லற்படுதலும் ஆமோ?

கு-ரை: பூமேலான் - பிரமன். பூமகள் கேள்வன் - திருமகள் கணவனாகிய திருமால். நாமே தேவரெனாமை - நாங்களே பரம் பொருள் என்று கூறாமலும்; நடுக்குறவும் என்க. தீமேவும் உருவா - சோதி வடிவாய்த் தோன்றியவனே. அடியோங்கள் அல்லற்பட ஆமோ - அடியோங்களாகிய நாங்கள் துன்புறுதல் தகுதியோ.

2. பொ-ரை: அரிய திறலை உடைய தேவர்களும், திருமாலும், பிரமனும் திருத்தமுறநின்று வழிபடும் வண்ணம் உமைநங்கையோடு இருந்த பெருமானது அருள் எழில் சேர்ந்த கச்சி ஏகம்பத்தைப் பொருந்த சென்று தங்கி வழிபடற்கு எழுவோமாக.

Koviloor Digital Library

1550. கறைகொள் கண்டத்தெண் தோளிறை முக்கணன்
மறைகொள் நாவினன் வானவர்க் காதியான்
உறையும் பூம்பொழில் சூழ்கச்சி யேகம்பம்
முறைமை யாற்சென்று முந்தித் தொழுதுமே. 3

1551. பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றுமமு தாயவ னேகம்பம்
குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே. 4

கு-ரை: அருந்திறல் - பெறுதற்கரிய வலிமை. திருந்த நின்று - வழிபாட்டு முறையில் செம்மையாக நின்று. பொருந்தச் சென்று புடைபட்டு - ஏகம்பத்தை அடையச் சென்று அடைந்து. எழுதும் - உயர்வு பெறுவோமாக.

3. பொ-ரை: திருநீலகண்டனும், எட்டுத்தோள்களை உடைய இறைவனும், முக்கண்ணினனும், வேதம் ஓதும் நாவினனும், தேவர் களுக்கெல்லாம் ஆதியானவனும் ஆகிய பெருமான் உறைகின்ற பூம் பொழில்கள் சூழ்ந்த கச்சியேகம்பத்தை நெறியினாற் சென்று முந்துறத் தொழுவோமாக.

கு-ரை: ஆதி - தலைவன். முறையால் - வழிபாட்டு முறை யினால். தொழுதும் வணங்குவோம். முந்தி - விரைந்து.

4. பொ-ரை: பொறிகளைப், புலன்களின்வழிப் போதல் தவிர்த்து, உள்ளத்தை ஒரு நெறியின்கண்படச் செய்து நினைந்த மெய் யடியார்களின் சிந்தனையுள் அறிதலுறும் அமுதாகிய பெருமான் எழுந் தருளியுள்ள திருஏகம்பத்தைத் திருவருட் குறிப்பினாற் சென்று கூடித் தொழுவோமாக.

கு-ரை: பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி. பொறியால் நுகரப் படும் புலன்கள் என்க. புலன் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம். போக்கு - குற்றம். உள்ளத்தை நெறிப்படுத்து - மனத்தை ஒருவழியில் செலுத்தி. அறிப்புறும் - அறிபு என்பதன் விரித்தல். அறிவுறும் என்பது பொருள். குறிப்பினால் சென்று - குறிக்கோளொடு சென்று. தொழுதும் - வணங்குவோம்.

Koviloor Digital Library

1552. சிந்தை யுட்சிவ மாய்நின்ற செம்மையோ
டந்தி யாயன லாய்ப்புனல் வானமாய்ப்
புந்தி யாய்ப்புகுந் துள்ள நிறைந்தவெம்
எந்தை யேகம்பம் ஏத்தித் தொழுமினே. 5

1553. சாக்கி யத்தோடு மற்றுஞ் சமணபடும்
பாக்கி யம்மிலார் பாடுசெ லாதுறப்
பூக்கொள் சேவடி யான்கச்சி யேகம்பம்
நாக்கொ டேத்தி நயந்து தொழுதுமே. 6

1554. மூப்பி னோடு முனிவுறுத் தெந்தமை
ஆர்ப்ப தன்முன் னணியம ரர்க்கிறை

5. பொ-ரை: சிந்தையுள் சிவமாகிநின்ற செம்மையினோடு, அந்தியாகவும், அனலாகவும், புனலாகவும், வானமாகவும் நினைவார் புத்தியாகிய அந்தக்கரணமாகவும் எல்லாவற்றுள்ளும் புகுந்து, உள்ளத்தில் நிறைந்த எந்தையாரின் கச்சிஏகம்பத்தை ஏத்தித் தொழுவீர்களாக.

கு-ரை: ஒளித்த சிந்தை - உயிரறிவு. சிவம் - இன்பம். செம்மை - பிறழாமை. அந்தியாய் - அந்திக்காலமாய். புந்தி - அறிவு.

6. பொ-ரை: புத்தமும், சமணமுமாகிய நெறிகளிற் பட்டுத் திருவருட்செல்வம் இல்லாதவர் மருங்குசெல்லாமல், மிகுந்த பூக்களைக்கொண்ட சேவடியானது கச்சியேகம்பத்தை நாவினைக் கொண்டு ஏத்தி விரும்பித் தொழுவோமாக.

கு-ரை: சாக்கியம் - புத்தம். பாக்கியமிலார் - சிவநெறிப் பேற்றைக் கடைப்பிடிக்கும் பாக்கியமில்லாதவர்கள். பாடு - பக்கம். உற - பொருந்த; ஏத்தித்தொழுதும் எனக் கூட்டுக. பூக்கொள் - பூக்களைக் கொண்ட. நாக்கொடு ஏத்தி - நாவைக் கொண்டு புகழ்பாடி. நயந்து - விரும்பி. தொழுதும் - வணங்குவோம்.

7. பொ-ரை: வெறுப்புமிகுந்து மூப்பினோடு எம்மையெல்லாம் கட்டுவதற்கு முன்பே, அணி உடைய அமரர்க்கு இறை உறைவதும்,

Koviloor Digital Library

காப்ப தாய கடிபொழி லேகம்பம்
சேர்ப்ப தாகநாஞ் சென்றடைந் துய்துமே. 7

1555. ஆலு மாமயிற் சாயல்நல் லாரொடும்
சால நீயுறு மால்தவிர் நெஞ்சமே
நீல மாமிடற் றண்ணலே கம்பனார்
கோல மாமலர்ப் பாதமே கும்பிடே. 8

1556. பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு வேந்திய
கைய னைக்கச்சி யேகம்பம் மேவிய
ஐய னைத்தொழு வார்க்கில்லை யல்லலே. 9

காவலுடைய மணமிக்க பொழில் சூழ்ந்ததுமாகிய ஏகம்பத்தைச் சேர்வதாக நாம் சென்று தரிசித்து உய்வோமாக.

கு-ரை: மூப்பு - முதுமைத் தன்மை. முனிவு - வெறுப்பு அல்லது கோபம். உறுத்து - உறுவித்து, அடையச்செய்து. ஆர்ப்பதன் முன் - கூற்றுவன் பிணிப்பதற்கு முன்பு. அணி அமரர் - வரிசைப்பட்ட தேவர். காப்பதாய - காவலை உடையதாகிய அல்லது ஊருக்குக் காவல் செய்யும் அரணாகிய. கடி - மணம். சேர்ப்பு - சேரத்தக்க இடம். காஞ்சியே சிறந்த தல மெனக்கருதி. நாம் சென்றடைந்துய்தும் - நாம் சென்று வழிபட்டு உய்யுநெறி காண்போம்.

8. பொ-ரை: நெஞ்சமே! ஒலிக்கின்ற பெரிய மயில்போலும் சாயலை உடைய பெண்களோடும் நீ மிகுந்து கொண்ட மயக்கத்தைத் தவிர்வாயாக; நீலமாகிய பெருமைமிக்க கழுத்தினை உடைய அண்ணலாகிய ஏகம்பனாருடைய கோலமிக்க மலர்ச் சேவடிகளைக் கும்பிட்டு உய்வாயாக.

கு-ரை: ஆலும் - ஆடும். சாயல் - தோற்றப்பொலிவு. நீ சாலஉறும் மால்தவிர் என்க. சால - மிகவும். உறும் - கூடுகின்ற. நீ உறும் மால்தவிர் நெஞ்சமே - மனமே நீ அடையும் மயக்கத்தை விடுவாயாக. கோலம் - அழகிய.

9. பொ-ரை: அனைத்துப் பொய்யையும் விட்ட உயர்ந்தவர் புந்தியுள் மெய்யாகவிளங்குபவனும், சுடர்விடுகின்ற வெண்மழு

Koviloor Digital Library

1557. அரக்கன் தன்வலி யுன்னிக் கயிலையை
நெருக்கிச் சென்றெடுத் தான்முடி தோள்நெரித்
திரக்க இன்னிசை கேட்டவ னேகம்பம்
தருக்க தாகநாஞ் சார்ந்து தொழுதுமே. 10

திருச்சிற்றம்பலம்

ஏந்திய கையை உடையவனும் ஆகிய கச்சியேகம்பத்தை விரும்பிப் பொருந்திய தலைவனைத் தொழுவார்க்கு அல்லல்கள் இல்லையாம்.

கு-ரை: புந்தியுள் - மனத்துள். மெய்யனை - உண்மைப் பொருளாய் விளங்குபவனை. அல்லல் - துன்பம்.

10. பொ-ரை: தன் ஆற்றலைக் கருதியவனாய்த் திருக் கயிலையைச் சென்று எடுத்தவனாகிய அரக்கனின் முடிகளையும் தோள்களையும் நெரித்தவனும், அவனது இரக்கத்திற்குரிய இன்னிசையைக் கேட்டருள்புரிந்தவனும் ஆகிய பெருமான் உறைகின்ற திருவேகம்பத்தை நாம் அருள் இறுமாப்புடன் சார்ந்து தொழுவோமாக.

கு-ரை: அரக்கன் - இராவணன். தன்வலி உன்னி - தன் ஆற்றலை எண்ணி. நெருங்கி நெருக்கி என்று வலித்தல் விகாரம் பெற்றது. இரக்க இன்னிசை - இரக்கத்தோடு அவன்பாடிய இனிய இசை. சாமகானம். கேட்டவன் - கேட்டருள் புரிந்தவன். தருக்கதாக - அருள் இறுமாப்பு. அடியோம் என்ற பெருமித நினைவு.

திருநாவுக்கரசர் புராணம்

மாசின்மதி நீடுபுனன் மன்னிவளர் சென்னியனைப்
பேசவினி யானையுல காளுடைய பிஞ்ஞகனை
யீசனையெம் பெருமானை யெவ்வுயிருந் தருவானை
யாசையிலா ராவமுதை யடிவணங்கி யினிதிருந்தார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

49. திருவெண்காடு

பதிக வரலாறு:

ஆண்ட அரசு ஆளுடையபிள்ளையாருடன் திருக்கோலக்காவை வணங்கி, நனிப்பள்ளி முதலாயுள்ள தலங்களைத் தொழுது திருச்செம்பொன்பள்ளி செல்லுங்காலைத் திருவெண் காட்டுப் பெருமானைத் தொழுது பாடியருளியது இத்தமிழ் மாலை. (தி.12 திருநா. புரா. 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 162 பதிக எண்: 49

திருச்சிற்றம்பலம்

1558. பண்காட் டிப்படி யாயதன் பத்தர்க்குக்
கண்காட் டிக்கண்ணில் நின்ற மணியொக்கும்
பெண்காட் டிப்பிறை சென்னிவைத் தான்திரு
வெண்காட் டையடைந் துய்ம்மட நெஞ்சமே. 1

1559. கொள்ளி வெந்தழல் வீசிநின் றாடுவார்
ஒள்ளி யகணஞ் சூழுமை பங்கனார்

1. பொ-ரை: அறியாமையை உடைய நெஞ்சமே! பண்ணிசை காட்டி வழிபடுகின்ற, நிலவுலகிற் பொருந்திய தன் அன்பர்களுக்குத் திருக்கடைக்கண் காட்டி அருளி, கண்ணிற்கருமணி போன்றுள்ள வனும், சென்னியின்கண் பெண், பிறை ஆகியவற்றை வைத்தவனும் ஆகிய பெருமானது திருவெண்காட்டை அடைந்து உய்வாயாக.

கு-ரை: பண்காட்டிப் பாடிய - இசையைத் தோற்றுவித்துப் புகழ்ப்பாடலைப் பாடுகின்றவர்களாகிய. (பாடி - படித்தல்). கொண்டு சிவவேடமணிந்த தன் அடியவர்கட்கு எனவும்; படி - பூமி என்று கொண்டு நிலஉலகில் உள்ள அடியவர்களுக்காக எனவும் கூறலாம். கண் - உண்மையறியும் அறிவுக் கண். கண்ணில் நின்ற மணி - அறிவுக் கறிவு. பெண் - பார்வதி. காட்டி - இடப்பாகத்தில் கொண்டு என்னும் பொருளது. உய் - உய்வாயாக.

2. பொ-ரை: நெஞ்சே! கொள்ளியாகிய வெவ்விய தழலைவீசி நின்று ஆடுபவரும் ஒள்ளிய பூதகணங்கள் சூழ்பவரும், உமை

Koviloor Digital Library

வெள்ளி யன்கரி யன்பசு வேறிய
தெள்ளி யன்றிரு வெண்கா டடைநெஞ்சே. 2

1560. ஊனோக் குமின்பம் வேண்டி யுழலாதே
வானோக் கும்வழி யாவது நின்மினோ
தானோக் குந்தன் னடியவர் நாவினில்
தேனோக் குந்திரு வெண்கா டடைநெஞ்சே. 3

1561. பருவெண் கோட்டுப் பைங்கண்மத வேழத்தின்
உருவங் காட்டிநின் றானுமை யஞ்சவே
பெருவெண் காட்டிறை வன்னுறை யும்மிடம்
திருவெண் காடடைந் துய்ம்மட நெஞ்சமே. 4

பங்கரும், வெள்ளிய திருவெண்ணீற்றினரும், அயிராவணம் என்ற ஆனைக்குரியவரும், விடையேறிய தெளிவுடையவரும் ஆகிய பெருமானுக்குரிய திருவெண்காட்டை அடைந்து வழிபாடு செய்வாயாக.

கு-ரை: கொள்ளி வெந்தழல் - கொள்ளிக் கட்டையில் பற்றிய வெவ்விய நெருப்பு. வீசி - சுழற்றி ஆடுவார்; அனலேந்தியாடுவார் என்பதாம். ஒளி பொருந்திய கணம் - பூதகணங்கள். வெள்ளியன் - திருநீற்றுப்பூச்சால் வெண்மை நிறமுடையவன். கரியன் - அகோர முகத்தை உடையவன். பசு - இங்கு எருது. தெள்ளியன் - தெளிந்த அறிவினன்.

3. பொ-ரை: நெஞ்சே! தன்னால் நோக்கப்படும் அடியார்கள் நாவினில் அருள் தேன் பாயுமாறு நோக்கும் திருவெண்காட்டை அடைவாயாக! உலகீர்! உடல் நோக்கிய சிற்றின்பங்களைவிரும்பி உழலாது, வான்நோக்கும் வழி எதுவோ அதில் நிற்பீர்களாக.

கு-ரை: ஊனோக்கும் இன்பம் - உடலைக் கருதிய இன்பங்கள். வேண்டி - விரும்பி. உழலாதே - வருந்தாதே. வானோக்கும் வழி - பேரின்பவீட்டைக் கருதும்வழி; வழியாவதில் நின்மின் என்க. தானோக்கும் - தன்னால் நோக்கப்படுகின்ற என்றாயது. தேன் நோக்கும் - தேனாயுள்ள பெருமானால் விரும்பப்படுகின்ற.

4. பொ-ரை: நெஞ்சமே! பருத்த வெள்ளிய தந்தங்களையும், பசுங்கண்களையும், மதத்தையும் உடைய வேழத்தின் உருவத்தை

Koviloor Digital Library

1562. பற்ற வன்கங்கை பாம்பு மதியுடன்
உற்ற வன்சடை யானுயர் ஞானங்கள்
கற்ற வன்கய வர்புர மோரம்பால்
செற்ற வன்திரு வெண்கா டடைநெஞ்சே. 5

1563. கூடி னானுமை யாளொரு பாகமாய்
வேட னாய்விச யற்கருள் செய்தவன்
சேட னார்சிவ னார்சிந்தை மேயவெண்
காட னாரடி யேயடை நெஞ்சமே. 6

உமையாள் அஞ்சக் காட்டி நின்றவனும், பெரிய சாம்பலால் வெள்ளிய இடுகாட்டில் தங்குபவனும் ஆகிய இறைவன் உறையும் இடமாம் திருவெண்காட்டை அடைந்து உய்வாயாக.

கு-ரை: பரு - பருத்த. வேழத்தின் உருவங்காட்டி நின்றான் - (யானைத் தோலைப் போர்த்து) யானையின் உருவந்தோன்ற நின்றவன். பெருவெண்காடு - சங்காரகாலச் சுடலை. வெள்ளிய சாம்பற்காடாக இருத்தலின் பெருவெண்காடு என்றார்.

5. பொ-ரை: நெஞ்சே! உயிர்களாற் பற்றத்தக்கவனும், கங்கை, பாம்பு, பிறையுடன் உற்றவனும் சடையினனும், உயர்ஞானங்கள் கற்றவனும், கீழ்மைக்குணமுடையார் புரங்களை ஓரம்பாற் செற்றவனும் ஆகிய பெருமான் உறையும் திருவெண்காட்டை அடைந்து வழிபாடு செய்வாயாக.

கு-ரை: பற்றவன் - எப்பொருட்கும் சார்பாயிருப்பவன். கயவர் - அசுரர். உயர் ஞானங்கள் கற்றவன் - கலைஞானங்களை இயல்பாயுணர்ந்தவன்.

6. பொ-ரை: நெஞ்சமே! உமையாளை ஒருபாகமாய்க் கூடியவரும், விசயற்கு வேடனாய் அருள்புரிந்தவரும், உயர்ந்த சிவனாரும் ஆகிய அன்பானினைவார் சிந்தையில்மேவிய திருவெண்காடனாரின் திருவடியே அடைவாயாக.

கு-ரை: உமையாளொரு பாகமாய்க் கூடினான் என்க. விசயன் - அருச்சுனன். சேடனார் - பெருமையுடையவர். சிந்தை மேய வெண் காடனார் - சிந்தையின்கண் எழுந்தருளிய வெண்காடனார்.

Koviloor Digital Library

1564. தரித்த வன்கங்கை பாம்பு மதியுடன்
புரித்த புன்சடை யான்கய வர்புரம்
எரித்த வன்மறை நான்கினோ டாறங்கம்
விரித்த வன்னுறை வெண்கா டடைநெஞ்சே. 7

1565. பட்டம் இண்டை யவைகொடு பத்தர்கள்
சிட்ட னாதியென் றுசிந்தை செய்யவே
நட்ட மூர்த்திஞா னச்சுட ராய்நின்ற
அட்ட மூர்த்திதன் வெண்கா டடைநெஞ்சே. 8

1566. ஏன வேடத்தி னானும் பிரமனும்
தான வேடமுன் தாழ்ந்தறி கின்றிலா
ஞான வேடன் விசயற் கருள்செயும்
கான வேடன்றன் வெண்கா டடைநெஞ்சே. 9

7. பொ-ரை: நெஞ்சே! கங்கை, பாம்பு, மதி ஆகியவற்றை ஒருங்கு தாங்கியவனும், முறுக்குண்ட புன்சடையுடையவனும், கீழவர் புரங்களை எரித்தவனும், நான்கு மறைகளையும், ஆறங்கங்களையும் விரித்தவனும் ஆகிய பெருமான் உறைகின்ற திருவெண் காட்டை அடைந்து வழிபடுவாயாக.

கு-ரை: கங்கை, பாம்பு இவற்றை மதியுடன் தரித்தவன் என்க. புரிந்த - கட்டிய அல்லது முறுக்கிய. புன்சடை - மெல்லிய சடை.

8. பொ-ரை: நெஞ்சே! பட்டமும், இண்டைமாலைகளும் கொண்டு அன்பர்கள் ''உயர்ந்தவனே! ஆதியே!'' என்று சிந்தைசெய்ய நடனமாடும் மூர்த்தியாகவும், ஞானச்சுடராய் நின்ற அட்டமூர்த்தி யாகவும் உள்ள பெருமானின் திருவெண்காடடைந்து வழிபடு வாயாக.

கு-ரை: பட்டம் - நெற்றியிலணியும் அணிகலன். இண்டை - கண்ணி. சிட்டன் - மேலானவன். ஆதி - தலைவன். சிந்தை செய்ய - மனத்தால் தியானிக்க.

9. பொ-ரை: நெஞ்சே! பன்றி வேடம் கொண்ட திருமாலும், பிரமனும் தானவேடத்தை முன் தாழ்ந்து அறிய வலிமையில்லாத ஞானவேடனும், அருச்சுனனுக்கு அருள்செய்யும் காட்டு வேடனும் ஆகிய பெருமானின் திருவெண்காடு அடைந்து வழிபடுவாயாக.

Koviloor Digital Library

1567. பாலை யாடுவர் பன்மறை யோதுவர்
சேலை யாடிய கண்ணுமை பங்கனார்
வேலை யார்விட முண்டவெண் காடர்க்கு
மாலை யாவது மாண்டவ ரங்கமே. 10

1568. இராவ ணஞ்செய மாமதி பற்றவை
இராவ ணம்முடை யான்றனை யுள்குமின்
இராவ ணன்றனை யூன்றி யருள்செய்த
இராவ ணன்திரு வெண்கா டடைமினே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை: ஏன வேடத்தினான் - பன்றியாய் அவதரித்த திருமால்; தான் அவ்வேடம் எனப் பிரிக்க. தான் - இறைவன். அவ்வேடம் - அனலாகிய உருவம். தாழ்ந்து - உருவமாறி. ஞானவேடன் - ஞானமே வடிவமாயிருப்பவன். கான வேடன் - காட்டு வேடன்.

10. பொ-ரை: பாலைநிலத்தில் ஆடுபவரும், பல மறைகளை ஓதுபவரும், சேல்மீன்போன்று காதளவும் ஆடுகின்ற கண்ணை உடைய உமையொருபாகரும், கடலிற் பொருந்திய விடமுண்டவரும் ஆகிய வெண்காடர்க்கு இறந்தவர் உறுப்புக்களாகிய எலும்புகளே மாலையாவது.

கு-ரை: பாலை ஆடுவார் - பால் அபிடேகம் கொள்பவர். சேலையாடியகண் - மீனைப்போன்ற கண்கள். வேலை - கடல். ஆர் - பொருந்திய. மாலையாவது - மாலையாகப் பயன்படுவது. மாண்டவர் அங்கம் - இறந்தவர் எலும்புகளே.

11. பொ-ரை: அறிவைப்பற்றியிருக்கும் பற்று இல்லாத படி செய்தற்பொருட்டு அயிராவணத்தை உடைய பெருமானை நினைமின். இராவணனைக் கால்விரலால் ஊன்றி அருள்செய்த அகோர முகத்தினரின் திருவெண்காட்டை அடைவீராக.

கு-ரை: மாமதிபற்று இராவணம் செய - அறிவைப் பற்று இல்லாதபடி செய்தற்பொருட்டு. உள்குமின் எனக் கூட்டுக. ஐராவணம் என்பது ஐயிராவணம் என வந்தது. நான்காம் அடியில் இராவணன் என்பது கரிய நிறமுடையவன்; அகோர முகத்தினர் எனப் பொருள் தரும். உமையை ஒருபாகத்துடைமைபற்றி இவ்வாறு கூறினார்.

Koviloor Digital Library



திருவாய்மூர்:
திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் இறைவன் காட்சி கொடுத்தருளல்

Koviloor Digital Library

Koviloor Digital Library

50. திருவாய்மூர்

பதிக வரலாறு:

ஆளுடைய அரசு ஆளுடைய பிள்ளையாருடன் திருமறைக்காடு சென்று மறைக்கதவைத் திறக்கவும், அடைக்கவும் பாடித் தொழுது மடத்திற்குச் சென்றார், அங்கு தாம் பாட அரிதின் கதவம் திறந்தமையும் சம்பந்தர் பாட எளிதில் கதவம் அடைத்தமையும், கருதி, 'நம்பர் திருவுள்ளம் அறியாது அயர்ந்தேன்' எனக்கவன்று பேழ்கணித்துத் (கண்களை சுருக்கிக் கொண்டு) துயின்றார் வாகீசர். உமையோர் பாகமுடையவர் திருவெண்ணீற்றுக் கோலத்துடன் துன்னி 'திருவாய்மூரில் இருப்போந் தொடர வா' என்றார், அது போழ்து துயில் நீங்கிப் பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 277.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 163 பதிக எண்: 50

திருச்சிற்றம்பலம்

1569. **எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்**
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென்கொலோ. 1

1. **பொ-ரை:** தென்னைகள் நன்கு தோன்றுகின்ற திருவாய்மூரில் எழுந்தருளியுள்ள அருட்செல்வராகிய இறைவர், என்னை எங்கே என்று தேடி, இருந்த இடத்தைக் கண்டுகொண்டு அங்கே வந்து அடையாளம் அருளியவர், திருவாய்மூர்க்கு வா என்று கூறியருளிச் சென்றார்; அதன் காரணம் என்னை கொல்?

கு-ரை: எங்கே - எங்கே இருக்கின்றாய் என்று; எங்கு ஏய் எனப் பிரித்து ஏய்தல் தங்கியிருத்தல் எனலும் ஆம். இருந்திடம் தேடிக்கொண்டு - தான் தங்கியிருந்த திருமடத்தைத் தேடிக் கொண்டு. அடையாளம் - வெண்ணீறணிந்த திருக்கோலம். தெங்கே தோன்றும் - தென்னைகளே மிகுந்து காணப்படும். அங்கே வா - திருவாய்மூராகிய அங்கு வா. அது என்கொலோ அதற்கு என்ன காரணமோ, அறியேன் என்க.

Koviloor Digital Library

1570. மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி யுன்னி யுறங்குகின் றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவனா மாசொல்லி
என்னை வாவென்று போனார தென்கொலோ. 2

1571. தஞ்சே கண்டேன் தரிக்கிலா தாரென்றேன்
அஞ்சே லுன்னை யழைக்கவந் தேனென்றார்
உஞ்சே னென்றுகந் தேயெழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூ ரடிகளே. 3

2. பொ-ரை: எம்பெருமானையே நினைந்து, நினைந்து உறங்குகின்ற எளியேனுக்கு நிலைபெற்ற பெருமை உடைய மறைக் காட்டுறையும் மணவாளனார் தன்னை வாய்மூர் இறைவனாமாற்றை விளங்கக்கூறி என்னை அங்கு வா என்று கூறியருளிச் சென்றார்; அதன் காரணம் என்னை கொல்?

கு-ரை: மன்னும் - நிலைபெற்ற. மா - சிறந்த. மணவாளனார் - மணவாளக் கோலத்தோடு வீற்றிருக்கும் இறைவர். உன்னி உன்னி - அப் பெருமானையே இடைவிடாதெண்ணி. தன்னை வாய்மூர்த் தலைவன் என்று சொல்லி என்க. ஆமா - ஆமாறு.

3. பொ-ரை: தரித்து ஓரிடத்தில் இராதவர்க்குத் தஞ்சப் பொருளைக் கண்டேன் என்றேன்; ''அஞ்சாதே! உன்னை அழைக்க வந்தேன்'' என்று அருளினார்; 'உய்ந்தேன்' என்று மகிழ்ந்து எழுந்து ஓட்டம் எடுத்தேன்; வாய்மூர் அடிகள் வஞ்சனையில் வல்லவரோ?

கு-ரை: தஞ்சே கண்டேன் - எளிமையாகவே கண்டேன், தரிக்கிலாது - தாமதியாது. ஆர் என்றேன் - நீவிர் யார் என்று கேட்டேன். அஞ்சேல் - அஞ்சாதே; உன்னை அழைக்க வந்தேன் என்று கூறினார். உஞ்சேன் - உய்ந்தேன் என்பதன் போலி. உகந்தே எழுந்து - மகிழ்வோடு எழுந்து. ஓட்டந்தேன் - ஓடினேன். ஓட்டந் தந்தேன் என்பதன் மரூஉ. வஞ்சேவல்லர் - வா என்று சொல்லி மறைந்த வாய்மூர் இறைவர் வஞ்சித்தலில் வல்லவர். வஞ்சம் என்பது ஈறு குறைந்தது.

Koviloor Digital Library

1572. கழியக் கண்டிலேன் கண்ணெதி ரேகண்டேன்
ஒழியப் போந்திலே னொக்கவே யோட்டந்தேன்
வழியிற் கண்டிலேன் வாய்மூரடிகள்தம்
சுழியிற் பட்டுச் சுழல்கின்ற தென்கொலோ. 4

1573. ஒள்ளி யாரிவ ரன்றிமற் றில்லையென்
றுள்கி யுள்கி யுகந்திருந் தேனுக்குத்
தெள்ளி யாரிவர் போலத் திருவாய்மூர்க்
கள்ளி யாரவர் போலக் கரந்ததே. 5

4. பொ-ரை: அவர் என்னைவிட்டு நீங்குமாறு கண்டேனில்லை; கண்ணெதிரே கண்டேன்; என்னைவிட்டு அவர் நீங்கியபின் போந்தேனில்லை; ஒக்கவே ஓடிவந்தேன்; ஆயினும் இடைவழியிற் கண்டேனில்லை; வாய்மூர் அடிகளின் மாயச்சுழலில் அடியேன் இவ்வாறு பட்டுச் சுழல்கின்றதன் காரணம் என்னையோ?

கு-ரை: கழியக் கண்டிலேன் - அவர் மறைவதைப் பார்த்தேனில்லை; மறைந்திலர் என்பதாம். கண்ணெதிரே கண்டேன் - கண்ணெதிரே பார்த்தேன்; தோன்றிக்கொண்டே இருந்தார். ஒழியப் போந்திலேன் - அவரைவிட்டுத் திரும்பவில்லை. ஒக்கவே - அவருடன் சேரவே. ஓட்டந்தேன் - ஓடினேன். வழியில் கண்டிலேன் - அங்ஙனம் ஓடிவந்தும் இடையிலே அவரைக் காணவில்லை. சுழி - வாய்மூர் இறைவரது திருவிளையாடலாகிய சுழல்.

5. பொ-ரை: ஒளியுடையவர் இவரையன்றி மற்றுயாரும் இல்லை என்று நினைந்து நினைந்து மகிழ்ந்திருந்த எளியேனுக்கு, திருவாய்மூரின்கண் தெளிந்தவர் இவர்போலக்காட்டிக் கள்ளம் உடையவர் போல ஒளித்துவிட்டனரே.

கு-ரை: ஒள்ளியார் - அறிவு வடிவமாயிருப்பவர். தெள்ளியார் - தெளிந்த பேரறிவாளர்; இவர் திருவாய்மூர்த் தெள்ளியார் இவர்போலத் தோன்றி என்க. கள்ளியாரவர்போல - கள்ளத் தன்மை உடையவர்போல. கரந்ததே - மறைந்ததே; என்கொலோ என்பதைத் தந்து முடிக்க.

Koviloor Digital Library

1574. யாதே செய்துமி யாமலோ நீயென்னில்
ஆதே யேயு மளவில் பெருமையான்
மாதே வாகிய வாய்மூர் மருவினார்
போதே யென்றும் புகுந்ததும் பொய்கொலோ. 6

1575. பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பா ரவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயெனா
ஓடிப் போந்திங் கொளித்தவா றென்கொலோ 7

6. பொ-ரை: எச்செயல் செய்தாலும் அவன் செயல் என்று எண்ணினால் அதுவே நல்ல பயனைத்தரும். அளவில்லாத பெருமை யுடையான் அவன், மாதேவனாகிய வாய்மூர் இறைவா என்றதும் சென்றதும் பொய்யோ?

கு-ரை: யாதே செய்தும் - பாதகத்தைச் செய்திடினும். யாம் அலோம் நீ எனில் - ''உலகினில் என் செயல் எல்லாம் உன் விதியே, நீயே உண்ணின்றும் செய்வித்தும் செய்கின்றாயென்றும் நிலவுவதோர் செயலெனக்கு இன்று உன் செயலே என்று நினையின்'' என்றபடி. யாம் செய்திலேம் நீயே செய்விக்கின்றாய் என நினைத்தால். ஆதே - அதே சுட்டுநீண்டது. ஏயும் - அதனைப் பொருந்தும் எனக் கொள்கின்ற. மாதேவன் - பெரியதேவன். போதே - வருவாயாக. என்றும் - என்றதும். புகுந்ததும் - இங்கு வந்ததும்

7. பொ-ரை: பாடி அதனாற்பெற்ற பரிசிலாகிய பழங்காசினைக் கொண்டு வாடிய வாட்டத்தைத் தவிர்ப்பாரைப்போலத் திருவாய் மூர்க்கே தேடிக்கொண்டு ஒடிவந்து இங்கே ஒளித்தவாற்றிற்கான காரணம் என்னையோ?

கு-ரை: பாடிப்பெற்ற - திருவீழிமிழலையில் பஞ்சமேற்பட்ட காலை மிழலை இறைவரிடம் சம்பந்தர் பாடிப்பெற்ற பரிசில். பழங்காசு - பரிசிலாகப் பாடி வாங்கிய பழையவாகியவாசிக் காசுகள். வாடி வாட்டம் - வாடியவாட்டம் என்று பிரித்து மனம் வாடிய வருத்தம் என்க. தவிர்ப்பார் - நீக்கிய இறைவர். அவரைப்போல் முதலில் மாற்றுக் குறைந்த காசு வழங்கிப் பின் வருத்தந்தணித்து நற்காசு வழங்கிய மிழலை இறைவரைப்போல முதலில் துன்பம் தந்து பின்பு இன்பம் தரும் திருக்குறிப்புப்போலும் என்க. என்னைத் தேடிக்

Koviloor Digital Library

1576. திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே. 8

1577. தனக்கே றாமை தவிர்க்கென்று வேண்டினும்
நினைத்தேன் பொய்க்கருள் செய்திடு நின்மலன்
எனக்கே வந்தெதிர் வாய்மூருக் கேயெனாப்
புனற்கே பொற்கோயில் புக்கதும் பொய்கொலோ. 9

கொண்டு திருவாய்மூர்க்கே எனா - தேடிக்கொண்டு வந்து திருவாய்மூர்க்கே போவோம் என்று சொல்லி.

8. பொ-ரை: வேதங்களாற் பூசிக்கப்பெற்று அடைக்கப்பட்டிருந்த மறைக்காட்டுத் திருக்கதவத்தைத் திறக்குமாறு பாடிய என்னினும், செந்தமிழ்ப்பாடலை உறுதியுடன்பாடி அடைப்பித்தவராகிய திருஞான சம்பந்தப் பிள்ளையார் உதோ நின்றார்; திருவாய்மூரில் பிறையைக் கொண்ட செஞ்சடை உடையாராகிய பெருமான் தம்மை மறைக்க வல்லரோ? இவர் பித்தரேயாவர்.

கு-ரை: திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரைத் திருமறைக் காட்டுத் திருமடத்திற் காணாது தேடித் திருவாய்மூர்க்கு வந்து கொண்டிருக்கும் பொழுது பாடியது இச்செய்யுள். திறக்கப்பாடிய என்னினும் ஒரு பாடலில் செந்தமிழ் உறைப்புப் பாடி அடைப்பித்தார்; உந் நின்றார். அவருக்குத் தம்மை மறைக்க வல்லரோ என்றார். உறைப்பு - திருத்தொண்டின் வலிமையால், உந்நின்றார் - உவ் விடத்தே நின்றார். சம்பந்தர் அப்பரைக் காணாது தேடிப் பின் வருதலால் உந்நின்றார் என்றார். மறைத்தமையால் இவர் பித்தர் என்க.

9. பொ-ரை: தனக்கு உள்ளம் பொருந்தாமையைத் தவிர்த்தருள் வாயாக என்று வேண்டினும், பொய்யாக நினைக்கும் எளியேன் பொய்க்கும் அருள் செய்யும் நின்மலனாகிய இறைவன், எனக்கு எதிரேவந்து வாய்மூருக்கே வா என்று கூறிவந்து தீர்த்தத்தை அடுத்த பொற்கோயிலில் வந்து புகுந்ததும் பொய்தானோ?

கு-ரை: தனக்கு ஏறாமை - தனக்குப்பொருந்தாத செயலாக. தவிர்க்க என்று - கதவைத் திறக்க என்று. நினைந்தேன் பொய்க்கு -

Koviloor Digital Library

1578. தீண்டற் கரிய திருவடி யொன்றினால்
மீண்டற் கும்மிதித் தார்அரக் கன்தனை
வேண்டிக்கொண் டேன்திரு வாய்மூர் விளக்கினைத்
தூண்டிக் கொள்வன்நா னென்றலுந் தோன்றுமே. 10

திருச்சிற்றம்பலம்

நினைத்து விரும்பிய எனது பொருளற்ற பாட்டிற்கும். எனக்கே வந்து - என்னிடத்திலே வந்து. வாய்மூர்க்கே எனா - வாய்மூர்க்கே போவோம் என்று சொல்லி. எதிர் - இவ்விடத்தில் (வழியில்). புனக்கே - காட்டிலே. பொற்கோயில் - அழகிய கோயில். பொய்கொலோ - பொய்த் தோற்றந்தானோ.

10. பொ-ரை: பன்றி வடிவாகச் சென்று தோண்டியும் தீண்டுதற்கரிய திருவடியின்கண் அமைந்த திருவிரல் ஒன்றினால் அரக்கனை மீண்டு அருள்புரிவதற்கும் மிதித்தவராகிய பெருமானை வேண்டிக் கொண்டேன்; திருவாய்மூர் விளக்கினைத் தூண்டிக்கொள்வேன் நான் என்றலும் தோன்றி அருள்புரிந்தான்.

கு-ரை: தீண்டற்கரிய திருவடி - திருமால் முதலிய தேவர்களாலும், வேதங்களாலும் தீண்டுவதற்கரிய திருவடி. மீண்டற்கும் மிதித்தார் - அத்திருவடியால் ஆணவம் அழிப்பதற்கேயன்றி அவன் உய்தற்கும் மிதித்தார் என்க. கொள்வன் - பயன்கொள்வேன். என்றலும் - என்று நினைத்தவுடன். தோன்றும் - வெளிப்படுகின்றான்.

திருநாவுக்கரசர் புராணம்

போதம் நிகழ வாஎன்று
போனார் என்கொல் எனப்பாடி
ஈதெம் பெருமான் அருளாகி
லியானும் போவேன் என்றெழுந்து,
வேத வனத்தைப் புறகிட்டு
விரைந்து போக வர முன்னே
ஆதி மூர்த்தி முன்காட்டும்
அவ்வே டத்தால் எழுந்தருள.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

51. திருப்பாலைத்துறை

பதிக வரலாறு:

திருக்கருகாவூர் முதலாகக் கண்ணுதலோன் அமர்ந் தருளுந் திருவாவூர் வணங்கித் திருப்பாலைத்துறை சென்று இறைஞ்சிப் பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 198)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 164 **பதிக எண்: 51**

திருச்சிற்றம்பலம்

1579. நீல மாமணி கண்டத்தர் நீள்சடைக்
கோல மாமதி கங்கையுங் கூட்டினார்
சூல மான்மழு ஏந்திச் சுடர்முடிப்
பால்நெய் யாடுவர் பாலைத் துறையரே. 1

1580. கவள மாகளிற் றின்உரி போர்த்தவர்
தவள வெண்ணகை மங்கையொர் பங்கினர்
திவள வானவர் போற்றித் திசைதொழும்
பவள மேனியர் பாலைத் துறையரே. 2

1. பொ-ரை: திருப்பாலைத்துறையர், நீலமாமணி போலும் திருக்கழுத்தினர்; நீண்ட சடையில் அழகுமிக்க பெரிய மதியையும் கங்கையையும் கூடவைத்தவர்; சூலம், மான், மழு ஏந்தித் தம் ஒளி முடியில் பாலும் நெய்யும் திருவபிடேகம் கொள்வர்.

கு-ரை: நீலமாமணி கண்டத்தர் - பெரிய நீலமணி போன்ற நஞ்சு பொருந்திய கழுத்தையுடையவர். கோலமாமதி - அழகிற் சிறந்த சந்திரன். கூட்டினார் - சேரவைத்தார்.

2. பொ-ரை: திருப்பாலைத்துறையர், சோற்றுக்கவளம் கொள்ளும் யானையின் உரியைப் போர்த்தவர்; வெள்ளிய நகைப்பை உடைய உமைமங்கையை ஒருபங்கிற் கொண்டவர்; தேவர்கள் போற்றித் திசைநோக்கித் தொழும் பவளம் போன்று சிவந்த மேனியர்.

Koviloor Digital Library

1581. மின்னின் நுண்ணிடைக் கன்னியர் மிக்கெங்கும்
பொன்னி நீர்மூழ்கிப் போற்றி யடிதொழ
மன்னி நான்மறை யோடுபல் கீதமும்
பன்னி னாரவர் பாலைத் துறையரே. 3

1582. நீடு காடிட மாய்நின்ற பேய்க்கணங்
கூடு பூதங் குழுமிநின் றார்க்கவே
ஆடி னாரழ காகிய நான்மறை
பாடி னாரவர் பாலைத் துறையரே. 4

1583. சித்தர் கன்னியர் தேவர்கள் தானவர்
பித்தர் நான்மறை வேதியர் பேணிய

கு-ரை: கவளம் - யானைக்கிடும் உணவு. மா - பெரிய. உரி - தோல். தவளம் - வெண்மை. தவளவெண்ணகை மங்கை; ஒருபொருட் பன்மொழி (தலத்து அம்பிகையின் திருப்பெயர்). மிக்க வெண்மையைக் காட்டிற்று. திவளவானவர் - விளங்குதலை உடைய வானவர். திசைதொழும் - திசைதோறும் வணங்குகின்ற.

3. பொ-ரை: திருப்பாலைத்துறையர், மின்னலையொத்த நுண்ணிடையை உடைய கன்னிப்பெண்கள் எங்கும் பலராய்க்கூடிக் காவிரியில் நீராடிப்போற்றித் திருவடிகளைத்தொழ நிலைபெற்று, நான்கு வேதங்களும் பல கீதங்களும் பன்னிய சிறப்புடையவராவர்.

கு-ரை: மின்னின் - மின்னல்போன்ற. மிக்கு - மிகுதியாக. மன்னி - நிலைபெற்ற. பல்கீதமும் - பல்வகை இசைப்பாடல்களையும். பன்னினார் - சொன்னார்.

4. பொ-ரை: திருப்பாலைத்துறையர், சுடுகாடே இடமாய் நீண்டு நின்ற பேயின் தொகுதிகளும், கூடிய பூதங்களும் தம்மில் இணைந்து நின்று ஆர்க்குமாறு ஆடியவர்; அழகாகிய நான்மறை பாடியவர்.

கு-ரை: நீடு - பெரிதாய் நீண்ட. காடு - இடுகாடு. இடமாய் - ஆடுமிடமாக. கூடு - பேய்க்கணங்களுடன் கூடுகின்ற. குழுமி - சேர்ந்து. ஆர்க்க - ஆரவாரிக்க.

5. பொ-ரை: திருப்பாலைத்துறையர், சித்தரும், கன்னியரும், தேவரும், தானவர்களும், பித்தர்களும், நான்கு மறைகளில் வல்ல

Koviloor Digital Library

அத்த னேநமை யாளுடை யாயெனும்
பத்தர் கட்கன்பர் பாலைத் துறையரே. 5

1584. விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி வாயவென்
றெண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே. 6

1585. குரவ னார்கொடு கொட்டியுங் கொக்கரை
விரவி னார்பண் கெழுமிய வீணையும்

வேதியரும் பேணிய அத்தனே! நம்மை ஆளுடையாய்! என்று கூறும் அன்பர்களுக்கு அன்பராய் இருப்பர்.

கு-ரை: தானவர் - அசுரர். பித்தர் - ஒன்றொடொன்று ஒவ்வாத வேடமும் செயலுமுடையவர். பேணிய - விரும்பிய. பத்தர்கட் கன்பர் - அடியார்களுக்கு அன்பர்.

6. பொ-ரை: தேவர்கள் பணிந்து ஏத்த, (அதுகண்டு) வியப்புறும் மண்ணுலகத்தோர், மறவாது ''சிவாய'' என்று தியானிக்க, அவர்களுக்கு இடமாக எழில் மிகும் வானகத்தைப் படைத்தருளியவர், திருப்பாலைத்துறைப் பிரானே.

கு-ரை: விண்ணினார் - தேவர். பணிந்தேத்த - வணங்கித் துதிக்க. வியப்புறும் - அதிசயமுறுகின்ற. மண்ணினார் - நிலவுலகில் உள்ளவர்; தேவர் வழிபடுதலைக் கண்டு வியப்புற்ற மண்ணினார் என்க. 'சிவாய' - இது சூக்கும பஞ்சாக்ஷரம் எனப்படுவது. எண்ணி னார்க்கு - தியானித்தவர்கட்கு. இடமா - வீற்றிருக்கும் இடமாக. எழில் வானகம் - வீடுபேறு. த்ரயீ எனப்படும் வேதங்கள் சிவநாமத்தை இதயநடுவுள் வைத்துப் போற்றுவது போல மூவர் தேவாரங்களில் நடுவணதாகிய இத்திருமுறையில் நடுவணதாகிய 51ஆவது பதிகத்து இத்திருப்பதிகத்துள் நடுவணதாகிய இத்திருப்பாடலில் நடுவில் 'சிவாய' என்னும் சிவமூலமந்திரம் அமைந்து விளங்கும் தெய்வ அமைப்பை உடையது இத்திருப்பாட்டு.

7. பொ-ரை: மருவிய புதுமலர்களாகிய மல்லிகையும் செண்பகமும் உதிர்ந்து பரவிய நீர்ப்பரப்பை உடைய பொன்னிக்

Koviloor Digital Library

மருவு நாண்மலர் மல்லிகை செண்பகம்
பரவு நீர்ப்பொன்னிப் பாலைத் துறையரே. 7

1586. தொடருந் தொண்டரைத் துக்கந் தொடந்துவந்
தடரும் போதர னாயருள் செய்பவர்
கடலின் நஞ்சணி கண்டவர் கடிபுனல்
படருஞ் செஞ்சடைப் பாலைத் துறையரே. 8

1587. மேகந் தோய்பிறை சூடுவர் மேகலை
நாகந் தோய்ந்த அரையினர் நல்லியல்
போகந் தோய்ந்த புணர்முலை மங்கையோர்
பாகந் தோய்ந்தவர் பாலைத் துறையரே. 9

கரையிலுள்ள திருப்பாலைத்துறையர், கொடுகொட்டி, கொக்கரை, பண் பொருந்திய வீணை ஆகிய வாச்சியங்களின் இசையினை விரவி யவரும், குரவரும் ஆவர்.

கு-ரை: குரவனார் - குருவாக இருப்பவர். பண் - இசை. கெழு மிய - பொருந்திய. மருவு - அணிந்த, பொருந்திய. நாண்மலர் - புது மலர். மலராகிய மல்லிகை சண்பகம் என்க. பரவு - பரவிய.

8. பொ-ரை: நறுமணமுடைய கங்கை படரும் செஞ்சடை உடைய திருப்பாலைத்துறையர், தம்மைத்தொடரும் தொண்டரைத் துன்பங்கள் தொடர்ந்துவந்து வருத்தும்போது அரனாகத் தோன்றி அருள்செய்பவர்; கடலினின்றெழுந்த நஞ்சினை உண்டு அணிசெய்யப் பெற்ற திருக்கழுத்தினர்.

கு-ரை: தொடரும் - தன்னைத் தொடர்ந்து பற்றிய. துக்கம் - துன்பம். அடரும்போது - வருத்தும்போதில். அரனாய் - அத்துன்பத்தை அழிப்பவனாய். கடி - விளக்கம் அல்லது மணம். புனல் - கங்கை. படரும் - பரவியிருக்கும்.

9. பொ-ரை: திருப்பாலைத்துறையர், மேகமண்டலத்தைத் தோய் கின்ற பிறையினைச் சூடுவர்; மேகலையாக நாகம் தோய்ந்த அரை யினை உடையவர்; நல்லியலுடைய போகம் தோய்தற்குரிய இரண்டு தனங்களையுடைய உமையம்மையை ஒரு பாகம் தோய்ந்தவர்.

Koviloor Digital Library

1588. வெங்கண் வாளர வாட்டி வெருட்டுவர்
அங்க ணாரடி யார்க்கருள் நல்குவர்
செங்கண் மாலயன் தேடற் கரியவர்
பைங்க ணேற்றினர் பாலைத் துறையரே. 10

1589. உரத்தி னாலரக் கன்னுயர் மாமலை
நெருக்கி னானை நெரித்தவன் பாடலும்
இரக்க மாஅருள் செய்தபா லைத்துறை
கரத்தி னால்தொழு வார்வினை யோயுமே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை: மேகலை - பெண்கள் இடையில் அணியும் அணிகலன். மேகலை கூறியது மாதொரு கூறராதல் பற்றி.

10. பொ-ரை: திருப்பாலைத்துறையர், வெவ்விய கண்ணை உடைய வாளரவை ஆட்டி அச்சுறுத்துவர்; அழகிய கண்ணை உடையவர்; அடியார்க்கு அருள் வழங்குபவர்; செங்கண்ணை உடைய மாலும் அயனும் தேடற்கு அரியவர்; பைங்கண்ணை உடைய இடபத்தை வாகனமாக உடையவர்.

கு-ரை: வெங்கண் - கொடிய கண். வாள் அரவு - ஒளி பொருந்திய பாம்பு. ஆட்டி - ஆடச்செய்து. வெருட்டுவர் - தோற்றத்தால் அச்சம் விளைவிப்பவர். அங்கணார் - அழகிய கருணை பொருந்திய கண்களை உடையவர்.

11. பொ-ரை: தன் ஆற்றலினால் இராவணன் உயர்ந்த திருக் கயிலாய மாமலையை நெருக்கலுற்றானை நெரித்து, அவன் பாடலும் கேட்டு இரக்கமாக அருள்புரிந்த திருப்பாலைத்துறையைக் கரங்களால் தொழுவார் வினை நீங்கும்.

கு-ரை: உரத்தினால் - வலிமையினால். உயர்மாமலை - உயர்ந்த கயிலைமாமலையினால். நெருக்கினானை - மலைமகளை அஞ்சச் செய்தவனை. நெரித்து - ஊன்றி. கரத்தினால் - கைகளால்.

Koviloor Digital Library

52. திருநாகேச்சரம்

பதிக வரலாறு:

திருஇடைமருதை எய்தி அன்பினொடும் வணங்கி வண்டமிழ்ப் பாமாலை பல சாத்தித் திருநாகேச்சரத்துப் பெருமானைப் பரவிப் போற்றியருளியது இத்தமிழ்மாலை. (தி.12 திருநா. புரா. 192)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 165 பதிக எண்: 52

திருச்சிற்றம்பலம்

1590. நல்லர் நல்லதோர் நாகங்கொண் டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்
பல்லில் ஓடுகை யேந்திப் பலிதிரி
செல்வர் போல்திரு நாகேச் சரவரே. 1

1591. நாவ லம்பெருந் தீவினில் வாழ்பவர்
மேவி வந்து வணங்கி வினையொடு
பாவ மாயின பற்றறு வித்திடும்
தேவர் போல்திரு நாகேச் சரவரே. 2

1. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர், நல்லவர்; நல்லதோர் நாகத்தைக் கையிற்கொண்டு ஆட்டுவர்; வல்வினைகளைத் தீர்க்கும் மருந்துகள் அளிக்க வல்லவர்; பல்லில்லாத ஓடு கையேந்திப் பலி திரிகின்ற அருட்செல்வர் ஆவர்.

கு-ரை: நல்லர் - நன்மையுடையவர். ஆட்டுவர் - ஆடச் செய்பவர்; வல்வினை தீர்க்கும் மருந்துகள் வல்லர் என்க. வல்வினை - வலியதாகிய பழவினைகள். மருந்துகள் வல்லர் - பழவினைகளாகிய நோய் தீர்க்கும் அருட்செயல்களில் வல்லவர். போல் - அசை. செல்வர் - உலகமெல்லாம் தம் உடைமையாகக் கொண்டவர்.

2. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர் நாவலம் பெருந் தீவாகிய (ஜம்புத்வீபம்) காட்டிலுள்ளவர். அனைவரும் மேவிவந்து வணங்கி, வினையொடு பாவமாயினவற்றைப் பற்றறுவித்திடும் தேவர் ஆவர்.

Koviloor Digital Library

1592. ஓத மார்கட லின்விட முண்டவர்
ஆதி யாரய னோடம ரர்க்கெலாம்
மாதொர் கூறர் மழுவல னேந்திய
நாதர் போல்திரு நாகேச் சரவரே. 3

1593. சந்தி ரன்னொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள் செய்தபின்
ஐந்த லையர வின்பணி கொண்டருள்
மைந்தர் போல்மணி நாகேச் சரவரே. 4

கு-ரை: நாவலந் தீவு - இமயத்தின் தென்பாலுள்ள இந்த நாட்டிற்கு நாவலந்தீவு அல்லது சம்புத்தீவு என்று பெயர். இமய உச்சியிலுள்ள மானசரோவரத்தின் நடுவே உள்ள நாவல் மரத்தை உடைய நாடு. வாழ்பவர் - வாழும் மக்கள். மேவிவந்து - விரும்பி வந்து. வினை பாவம் இவற்றினது கட்டுக்களை அறுவித்துக் கொள்ளும் படிசெய்யும் தேவராயிருப்பவர் என்க. பற்றறுவித்தல் - சிறிதும் இல்லாது நீங்கச்செய்தல்.

3. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர் அலைகள் பொருந்திய கடலின் விடம் உண்டவர்; அயன் தேவர்களாதியாகிய உலகங்களுக் கெல்லாம் ஆதியாயவர்; உமையொரு பாகர்; மழுவினை வலக்கையில் ஏந்திய நாதர் ஆவர்.

கு-ரை: ஓதம் - அலை. ஆர் - பொருந்திய; அயனோடு அமரர்க் கெல்லாம் ஆதியார் என்க. ஆதியார் - முதலானவர். அயன் - பிரமன், வலன் - வலது திருக்கரம். போல் - அசை.

4. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர் சந்திரனோடு சூரியனும் வந்து சீர்வழிபாடுகள் செய்தபின் ஐந்துதலை உடைய அரவின் பணியையும் கொண்டருளும் மைந்தர் (பெருவீரர்) ஆவர்.

கு-ரை: தாம் - சந்திர சூரியர்கள். உடன்வந்து - உடனாய் சேரவந்து. சீர்வழிபாடுகள் - சிறப்பு வழிபாடுகள். செய்தபின் - வழிபாடுகள் செய்தபின்னர். ஐந்தலை அரவு - ஐந்து தலைகளோடு கூடிய நாகம். பணி - பணிவிடை. சந்திரன், சூரியன், ஐந்தலை நாகம் பூசித்த தலம் என்ற தலவரலாற்றுக் குறிப்பு அமைந்துள்ளது. அருள் - அருள்செய்த. மைந்தர் - வலியர்.

Koviloor Digital Library

1594. பண்டொர் நாளிகழ் வான்பழித் தக்கனார்
கொண்ட வேள்விக் குமண்டை யதுகெடத்
தண்ட மாவிதா தாவின் தலைகொண்ட
செண்டர் போல்திரு நாகேச் சரவரே. 5

1595. வம்பு பூங்குழல் மாது மறுகவோர்
கம்ப யானை யுரித்த கரத்தினர்
செம்பொ னாரித ழிம்மலர்ச் செஞ்சடை
நம்பர் போல்திரு நாகேச் சரவரே. 6

1596. மானை யேந்திய கையினர் மையறு
ஞானச் சோதிய ராதியர் நாமந்தான்

5. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர், முன்னோர் நாளில் குற்றங்களை உடைய தக்கன் இகழ்வதற்காகக் கொண்ட வேள்வியினைக் கெடும்படியாகச் செய்தவரும், தண்டனையாகப் பிரம தேவனின் தலையைக்கொண்ட செண்டு உடையவரும் ஆவர்.

கு-ரை: பண்டோர் நாள் - முன்பொரு சமயம். இகழ் - இகழ்ந்த. வான்பழி - மிக்கபழி. ஆர் - இழித்தற் பொருளில் வந்தது. கொண்ட - மேற்கொண்ட. வேள்விக்குமண்டை - வேள்வியாகிய செருக்கு மிக்க செயல். கெட - அழிய. தண்டமா - தண்டனையாக. விதாதா - பிரமன். செண்டர் - செண்டு என்னும் ஆயுதத்தை உடையவர்.

6. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர் புதிய பூக்களையணிந்த குழல் உடைய உமாதேவியார் மனம் சுழல, ஒப்பற்றதாய் நினைப்பாரை நடுங்கச்செய்யும் இயல்பினதாய யானையை உரித்த திருக்கையினர்; செம்பொன்னைப் போன்ற கொன்றை மலர்களையணிந்த செஞ் சடையை உடைய நம்பர் ஆவர்.

கு-ரை: வம்பு - மணம் பொருந்திய. பூங்குழல் - பூக்களோடு கூடிய கூந்தலுடைய. மாது - பார்வதி. மறுக - அஞ்சி மயங்க. கம்ப யானை - அசைகின்ற யானையை. கரத்தினர் - கையை உடையவர். செம்பொனார் - சிவந்த பொன்னின் நிறம் பொருந்திய. இதழி - கொன்றை. நம்பர் - விரும்பத்தக்கவர்.

7. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர் மானை ஏந்திய கையை உடையவர்; குற்றமற்ற அறிவொளியாயவர்; உலகிற்கெல்லாம் ஆதி

Koviloor Digital Library

ஆன அஞ்செழுத் தோதவந் தண்ணிக்கும்
தேனர் போல்திரு நாகேச் சரவரே. 7

1597. கழல்கொள் காலினர் காலனைக் காய்ந்தவர்
தழல்கொள் மேனியர் சாந்தவெண் ணீறணி
அழகரால்நிழற் கீழற மோதிய
குழகர் போல்குளிர் நாகேச் சரவரே. 8

1598. வட்ட மாமதில் மூன்றுடன் வல்லரண்
சுட்ட செய்கைய ராகிலுஞ் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் போல்திரு நாகேச் சரவரே. 9

யாயவர்; தம் திருநாமமாகிய அஞ்செழுத்தை ஓதினால் வந்து அண்ணிக்கின்ற தேனும் ஆவர்.

கு-ரை: மையறு - குற்றமற்ற. ஞானச்சோதியர் - அறிவாகிய ஒளியை உடையவர். ஆதியர் - தலையானவர். நாமத்தான் ஆன அஞ்செழுத்து - அவரது திருப்பெயரான திருவைந்தெழுத்து. அண்ணிக்கும் - இனிக்கும். தேனர் - தேனாயிருப்பவர்.

8. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர் கழல்கொண்ட சேவடியினர்; காலனைக் காய்ந்தருளியவர்; தழல் வண்ணம் கொண்ட செம்மேனியர்; வெண்ணீற்றுப்பொடியணிந்த அழகர்; கல்லால நிழற்கீழ் இருந்து அறம் ஓதிய குழகர் ஆவர்.

கு-ரை: தழல்கொள்மேனி - தழலின் நிறத்தைக்கொண்ட திருமேனி. சாந்த வெண்ணீறணி அழகர் - சந்தனம்போலத் திரு வெண்ணீற்றை அணிந்த அழகியர். ஆல் நிழற் கீழ் - கல்லால மர நிழலின் கீழ்.

9. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர் வட்டமாக வளைந்த மதில் மூன்றுடன் கூடிய வல்லரண்களைச் சுட்டசெய்கையர்; ஆயினும் தம்மை உள்ளத்தே சூழ்ந்தவர்களின் திரண்ட வல்வினைத் துன்பங்களைத் தீர்த்துக் குளிரும்படிச்செய்யும் உயர்ந்தோர் ஆவர்.

கு-ரை: வட்டம் - வட்டவடிவாகிய. மா - சிறந்த. வல்லரண் - வலிய கோட்டை. சுட்ட - அழித்த. குட்டவல்வினை - திரண்ட பழ

Koviloor Digital Library

1599. தூர்த்தன் தோண்முடி தாளுந் தொலையவே
சேர்த்தி னார்திருப் பாதத் தொருவிரல்
ஆர்த்து வந்துல கத்தவ ராடிடும்
தீர்த்தர் போல்திரு நாகேச் சரவரே. 10

திருச்சிற்றம்பலம்

வினைகள். இப்பாடல் தி.5 ப.42 9ஆவது பாடலைப் பெரிதும் ஒத்துள்ளது.

10. பொ-ரை: திருநாகேச்சரத்திறைவர் மிக்க கொடியவனாகிய இராவணனது தோள்களும், முடிகளும், தாள்களும் தொலையுமாறு திருப்பாதத்து ஒரு விரலைச் சேர்த்தியவர்; உலகிலுள்ளோரெலாம் ஆர்த்துவந்து நீராடிடும் தீர்த்த வடிவினர் ஆவர்.


கு-ரை: தூர்த்தன் - தீ ஒழுக்கமுடையவன். தொலைய - அழிய. ஒரு விரல் சேர்த்தினார் என்க. உலகத்தார் ஆர்த்து வந்து என்க. ஆர்த்து - ஆரவாரம் செய்து. ஆடிடும் - மூழ்குகின்ற. தீர்த்தர் - தீர்த்த மாயிருப்பவர். தீர்த்தங்களின் வடிவமாயிருப்பவர் எனலுமாம்.

திருநாவுக்கரசர் புராணம்

எறிபுனல்பொன் மணிசிதறுந் திரைநீர்ப் பொன்னி
இடைமருதைச் சென்றெய்தி அன்பி னோடு
மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி
வண்டமிழ்ப்பா மாலை பல மகிழச் சாத்திப்
பொறியரவம் புனைந்தாரைத் திருநாகேச் சுரத்துப்
போற்றியிருந் தமிழ்மாலை புனைந்து போந்து,
செறிவிரைநன் மலர்ச்சோலைப் பழையா றெய்தித்
திருச்சத்தி முற்றத்திற் சென்று சேர்ந்தார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library



திருவேட்களம்: வேடனாருறை வேட்களம்

Koviloor Digital Library



திருவதிகை வீரட்டம்:
வீங்குதண்புனல் பாய்கெடிலக்கரை வீரட்டம்

Koviloor Digital Library

53. திருஅதிகைவீரட்டம்

பதிக வரலாறு:

திருவதிகைவீரட்டானத்து அமுதை திருநாவுக்கரசு சுவாமிகள் வழிபட்டுக் கொண்டிருந்த காலத்தில் அருளிய செந்தமிழ்ப் பாட்டுக்களுள் இத்திருப்பதிகமும் ஒன்று. (தி.12 திருநா. புரா. 142-145.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 166 **பதிக எண்: 53**

திருச்சிற்றம்பலம்

1600. கோணன் மாமதி சூடியோர் கோவணம்
நாணில் வாழ்க்கை நயந்தும் பயனிலை
பாணில் வீணை பயின்றவன் வீரட்டம்
காணி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. 1

1. பொ-ரை: வளைந்த பிறைமதி சூடி, கோவணம் அணிந்து விரும்பியும் பயனற்ற நாணமில்லாத வாழ்க்கை உடையவரேனும், வீணையிற் பாடல் பயின்ற சிவபெருமான் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் கண்டு தொழுதபின்னல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: கோணல் மாமதி - வளைந்து பிறந்த பிறை. ஓர் கோவணம் - ஒரு கோவணமணிந்து. நாணில் வாழ்க்கை - வெட்க மில்லாத வாழ்க்கை. கோவணங்கட்டித் திரிதலின் நாணில் வாழ்க்கை என்றார். நயந்தும் - விரும்பியும். பயன்நிலை - பயனுக்கு நிலைக்கள னாயிருப்பவர். பாணில் - இசைகளில். வீணை பயின்றவன் - இசை களில் வீணை இசையைப் பழகியவன். உலகப் படைப்பின்போது இறைவனிடத்துண்டாம் நாதத்துவத்தை வீணையாக்க் கூறல் மரபு. காணில் அல்லது - கண்டு தொழுதாலல்லாமல். துயில் - உறக்கம். என் கண் துயில் கொள்ளுமோ என்க. அகப்பொருட்டுறையில் தலைவி கூற்றுப் போல வைத்துத் தம்மியல்பு கூறுகிறார்.

Koviloor Digital Library

1601. பண்ணி னைப்பவ ளத்திரள் மாமணி
அண்ண லையம ரர்தொழு மாதியைச்
சுண்ண வெண்பொடி யான்றிரு வீரட்டம்
நண்ணி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. 2

1602. உற்ற வர்தம் உறுநோய் களைபவர்
பெற்ற மேறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டம்
கற்கி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. 3

1603. முற்றா வெண்மதி சூடும் முதல்வனார்
செற்றார் வாழுந் திரிபுரந் தீயெழ

2. பொ-ரை: பண்வடிவானவரும், பவளத்தொகுதி போன்ற மாமணி மேனியுடைய அண்ணலும், தேவர்கள் தொழும் முதல்வரும், திருநீற்றுப்பொடியணிந்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகைவீரட்டத்தை நண்ணினாலல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: பண்ணினை - இசை வடிவானவனை. பவளமாமணித்திரள் - பவளமணிக்குவியல் போன்ற. ஆதியை - முதன்மையானவனை. நண்ணில் அல்லது - சென்று தொழுதால் அல்லாமல். சுண்ணம் - வாசனைப்பொடி. வெண்பொடியையே வாசனைப் பொடியாக அணிந்தவர்.

3. பொ-ரை: தம்மைப் பற்றுக்கோடாக அடைந்தவரது மிக்க துயரங்களைக் களைபவரும், இடபம் ஏறுபவரும், விளங்கும் சடையுடையவரும் ஆகிய பெருமான் உறைகின்ற பாயும் கெடில நீர்சுற்றிச் சூழ்கின்ற திருவதிகைவீரட்டத்தைக் கற்ற பின்னல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: உற்றவர்தம் - தம்மை அடைந்தவர்களுடைய. உறுநோய் - மிக்க துன்பங்களை. பெற்றம் - எருது. பிறங்கு - விளங்குகின்ற. சுற்றும் - சுற்றிலும். கற்கில் அல்லது - துதித்தால் அல்லது.

4. பொ-ரை: முதிராத வெள்ளிய பிறையினைச் சூடும் முதல்வரும், சினக்கப்பட்டார் வாழும் மூன்று புரங்கள் தீயெழுமாறு

Koviloor Digital Library

விற்றான் கொண்டெயி லெய்தவர் வீரட்டம்
கற்றா லல்லதென் கண்துயில் கொள்ளுமே. 4

1604. பல்லா ரும்பல தேவர் பணிபவர்
நல்லா ருந்நயந் தேத்தப் படுபவன்
வில்லால் மூவெயி லெய்தவன் வீரட்டம்
கல்லே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 5

1605. வண்டார் கொன்றையும் மத்தம் வளர்சடைக்
கொண்டான் கோல மதியோ டரவமும்
விண்டார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
கண்டா லல்லதென் கண்துயில் கொள்ளுமே. 6

மேருமலையாகிய வில்லைத் தாம் கொண்டு எய்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகைவீரட்டத்தைக் கற்றால் அல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: முற்றா - இளைய. செற்றார் - பகைவர். வில்தான் கொண்டு எயில் எய்தவர் எனப்பிரிக்க.

5. பொ-ரை: பலவகைப்பட்ட தேவர்களாலும் பணியப்படுபவரும், நல்லார்களாலும் விரும்பிப் பரவப்படுபவரும், வில்லால் மூவெயில்களை எய்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் கல்லேனாகில் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: பல்லார் - பலமக்கள். தேவர் என்புழி உம்மை விரிக்க. நல்லாரும் - நல்லவர்களும். நயந்து - விரும்பி.

6. பொ-ரை: வண்டுகள் பொருந்திய கொன்றையும், ஊமத்த மலரும், பிறையும், அரவமும் அழகு வளரும் தம் சடையிற் கொண்டவரும், பகைவரது மும்மதில்களை எய்தவரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகைவீரட்டத்தைக் கண்டபின்னல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: வண்டார் - வண்டுகள் பொருந்திய. மத்தம் - ஊமத்தம். வளர்சடைக் கொண்டான். கோலமதியோடு அரவமும் கொண்டான் என்க. விண்டார் - பகைவர்.

Koviloor Digital Library

1606. அரையார் கோவண ஆடைய னாறெலாந்
திரையா ரொண்புனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்குவீ ரட்டன்பால்
கரையே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 7

1607. நீறு டைத்தடந் தோளுடை நின்மலன்
ஆறு டைப்புனல் பாய்கெடி லக்கரை
ஏறு டைக்கொடி யான்திரு வீரட்டம்
கூறி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. 8

1608. செங்கண் மால்விடை யேறிய செல்வனார்
பைங்க ணானையி னீருரி போர்த்தவர்

7. பொ-ரை: இடுப்பிற் பொருந்திய கோவண ஆடையரும், வழியெல்லாம் அலையெறியும் ஒள்ளிய நீர் பாய்கின்ற கெடிலக் கரையில் விளங்கும் நறுமணமுடைய திருநீற்றுப்பூச்சினரும் ஆகிய பெருமான் உறையும் திருவதிகைவீரட்டத்தைப் பாடேனாயின் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: அரையார் - இடுப்பிலே பொருந்திய. ஆறெல்லாம் - வழிகளெல்லாம். திரையார் - அலைகளோடு கூடிய. ஒண் புனல்பாய் - ஒள்ளிய தண்ணீர் பாய்கின்ற. விரையார் - மணம் பொருந்திய. கரையேனாகில் - என் குறைகளைச் சொல்லேனாயின்.

8. பொ-ரை: திருநீறு அணிந்த பெருந்தோளராகிய மலமற்ற வரும், இடபக்கொடியுடையாரும் ஆகிய பெருமான் உறைவதும் புனல் பாய்கின்ற கெடில ஆற்றினுடைய கரையில் உள்ளதுமாகிய திருவதிகைவீரட்டத்தைக் கூறினாலல்லது என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: தடம் - பெரிய. நின்மலன் - மலமற்றவன். ஆறுடைக் கெடிலம் - பல கால்வாய்களாகிய வழிகளை உடைய கெடிலம். ஏறுடைக்கொடி - இடபக்கொடி.

9. பொ-ரை: சிவந்தகண்ணை உடைய திருமாலாகிய விடை யேறிய திருவருட்செல்வரும், பசிய கண்ணை உடைய ஆனையின்

Koviloor Digital Library

அங்கண் ஞாலம தாகிய வீரட்டம்
கங்கு லாகவென் கண்துயில் கொள்ளுமே. 9

1609. பூணா ணாரம் பொருந்த வுடையவர்
நாணா கவ்வரை வில்லிடை யம்பினால்
பேணார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
காணே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 10

1610. வரையார்ந் தவயி ரத்திரள் மாணிக்கம்
திரையார்ந் தபுனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்கிய வீரட்டம்
உரையே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 11

பச்சைத் தோலை உரித்துப் போர்த்தருளியவரும், அழகிய இடமகன்ற உலகமுழுதானவருமாகிய பெருமான் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் (காணேனாயின்) என் கண்கள் இரவாயினும் ஆக, உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: செங்கண்மால் விடை - சிவந்த கண்களை உடைய திருமாலாகிய எருது. ஈருரி - உரித்ததோல். அங்கண் - அழகிய இடமகன்ற. ஞாலமதாகிய - உலகத்ததாகிய. கங்குல் வீரட்டம் ஆக அல்லது என்க. இரவுப்பொழுதில் வீரட்டத்தை அடைந்தால் அல்லது என்பது கருத்து. அல்லது என்றது முன் பாடல்களிலிருந்து வருவிக்கப் பெற்றது.

10. பொ-ரை: பூண், நாண், மாலை முதலியவற்றைப் பொருந்த உடையவரும், அழகிய மேருமலையாகிய வில்லிடை நாணுடன் கூடிய அம்பினால், பகைவர் மும்மதில்களை எய்தவர் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் காணேனாகில் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: பொருந்த - தமக்கு ஏற்ற வகையில். பூண் - அணிகலன். நாண் - பூணநூல் முதலிய கயிறுகள். ஆரம் - மலர்மாலைகள். நாக நாண்வரை வில்லிடை - இமயவில்லின் வாசுகிப் பாம்பாகிய நாணில். பேணார் - பகைவர்.

11. பொ-ரை: மலைகளில் நிறைந்த வயிரத்தின் தொகுதியும், மாணிக்கமும் ஆகியவற்றைக்கொண்டு அலையார்ந்த புனல்

Koviloor Digital Library

1611. உலந்தார் வெண்தலை உண்கல னாகவே
வலந்தான் மிக்கவவ் வாளரக் கன்றனைச்
சிலம்பார் சேவடி யூன்றினான் வீரட்டம்
புலம்பே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 12

திருச்சிற்றம்பலம்

பாய்கின்ற கெடிலக்கரையில் உள்ளதும், நறுமணமிக்க திருநீற்றினை யணிந்த இறைவன் விளங்குவதுமாகிய திருவதிகை வீரட்டத்தை உரையேனாகில் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: வரையார்ந்த - மலையிடத்தே பொருந்திய. திரள் - குவியல். மாணிக்கத்திரள் எனவும் கூட்டுக. உரையேனாகில் - புகழ்ந்து பாடேனாயின்.

12. பொ-ரை: இறந்தவர்களது (வாழ்நாள் உலந்தார்) வெள்ளிய தலைகளை உண்கலனாகக்கொண்டு, வெற்றிமிக்க அவ்வாளரக் கனாகிய இராவணனைச் சிலம்பணிந்த திருவடி விரலால் ஊன்றிய பெருமான் உறையும் திருவதிகைவீரட்டத்தைப் புலம்பிப் பாடேனா யின் என் கண்கள் உறக்கம் கொள்ளுமோ?

கு-ரை: உலந்தார் - இறந்தவர். உண்கலன் - உண்ணும் பாத்திரம். வலம் - வெற்றி. புலம்பேனாகில் - மனங்கரைந்து பலகாலும் சொல்லிப் புகழேனாயின்.

திருநாவுக்கரசர் புராணம்

அரிஅயனுக் கரியானை அடியவருக் கெளியானை
விரிபுனல்சூழ் திருவதிகை வீரட்டா னத்தமுதைத்
தெரிவரிய பெருந்தன்மைத் திருநாவுக்கரசுமனம்
பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப் பலபாடிப் பணிசெயுநாள்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

54. திருஅதிகைவீரட்டம்

பதிக வரலாறு:

திருவதிகைவீரட்டானத்தமுதைத் தொழுது பணி செய்து கொண்டிருந்த காலத்திற் பாடியருளிய செந்தமிழ்ப் பாட்டுக் களுள் ஒன்று இத்திருப்பதிகம். அட்ட புட்பத்தால் அர்ச்சிப்பதன் சிறப்பை இப்பதிகம் விளக்குவது. (தி.12 திருநா. புரா. 142. 145.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 167 **பதிக எண்: 54**

திருச்சிற்றம்பலம்

1612. எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ
ரட்ட னாரடி சேரு மவருக்கே. 1

1. பொ-ரை: கன்னற்கட்டியும் தேனும் கலந்ததைப் போன்று இனிக்கும் கெடிலவீரட்டனார் சேவடி சேர்பவராய், எட்டுவகைப்பட்ட நாண்மலர்களாகிய தேனவிழும் மலர்களை இட்டு வழிபடுவார் வினைகள் மாயும்.

கு-ரை: எட்டு நாண்மலர் - அஷ்ட புஷ்பங்கள் எனப்படும் எண் வகைப் புதிய மலர்கள். அவையாவன:- புன்னை, வெள் ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், பாதிரி, குவளை, அலரி, செந் தாமரைஆகிய பூக்கள் போல விரும்பத்தக்க எண்குணங்கள் எனலுமாம். மட்டு அலர் - தேன் நிறைந்த மலர். இடுவார் - அர்ச்சிப்பார். மாயும் - அழியும். ஆல் அசை. கட்டி - கரும்புக் கட்டியாகிய வெல்லத்தோடு. தேன் கலந்தன்ன - தேனைக் கலந்ததை ஒத்த; வீரட்டனார் என்க. அடிசேருமவருக்கு - திருவடிகளைச் சேர்பவர்களுக்கு. வினைமாயும் என இயைத்து முடிவு கொள்க. பூசையால் பவன் முதலிய எட்டு நாமங்கள் சொல்லி வழிபடும் மரபும் இங்குநினைக்கத்தக்கது. ஆகமங்களில் விதித்தவாறு அட்டபுட்பம் சாத்தி வழிபடுதலையே குறிப்பது இத்திருப்பதிகம். அகப்பூசைக்குரிய அட்டபுட்பங்கள் - கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் நலஞ் சிறந்தார் மனத் தகத்து மலர்கள் எட்டும். இதனைத் தண்டகம் என்பர்.

Koviloor Digital Library

1613. நீள மாநினைந் தெண்மல ரிட்டவர்
கோள வல்வினை யுங்குறை விப்பரால்
வாள மாலிழி யுங்கெடி லக்கரை
வேளி சூழ்ந்தழ காயவீ ரட்டரே. 2

1614. கள்ளி னாண்மல ரோரிரு நான்குகொண்டு
உள்கு வாரவர் வல்வினை யோட்டுவார்
தெள்ளு நீர்வயல் பாய்கெடி லக்கரை
வெள்ளை நீறணி மேனிவீ ரட்டரே. 3

1615. பூங்கொத் தாயின மூன்றொடோ ரைந்திட்டு
வாங்கி நின்றவர் வல்வினை யோட்டுவார்
வீங்கு தண்புனல் பாய்கெடி லக்கரை
வேங்கைத் தோலுடை யாடைவீ ரட்டரே. 4

2. பொ-ரை: வட்டமாகவும், பெரிதாகவும் ஓடுகின்ற கெடில நதிக்கரை வேலிபோல் சூழ்ந்த வீரட்டத்திறைவர், தம்மை இடை விடாது நினைந்து எண்வகை மலர்களால் வழிபடுபவர்களின் கொடிய வல்வினையை நீக்குவர்.

கு-ரை: நீளமா - இடைவிடாது. கோளவல்வினையும் - கொடுமை பொருந்திய வலிய வினைகளையும். ஆல் - அசை. வாளம் - வட்டமாக. மால் இழியும் - பெரிதாக ஓடுகின்ற. வேலி என்பது வேளி எனத் திரிந்தது.

3. பொ-ரை: தெள்ளிய நீர்வயலிற் பாய்கின்ற கெடிலக்கரையில் உள்ள திருவதிகைவீரட்டத்தில் எழுந்தருளியிருப்பவராகிய வெண்ணீ றணிந்த திருமேனி உடைய பெருமான், தேன் ஒழுகுகின்ற புதிய எட்டு மலர்களைக்கொண்டு அருச்சித்துத் தம்மை உள்குவார்களுடைய வல்வினைகளை ஓட்டுவார்.

கு-ரை: கள்ளின் நாண்மலர் - தேன் நிறைந்த மலர். ஓர் இருநான்கு - எட்டுமலர்கள். தெள்ளுநீர் - தெளிந்த நீர்.

4. பொ-ரை: செறிந்த குளிர்நீர் பாய்கின்ற கெடிலக்கரையில் உள்ள திருவதிகைவீரட்டத்தில் எழுந்தருளியிருப்பவராகிய

Koviloor Digital Library

1616. தேனப் போதுகள் மூன்றொடோ ரைந்துடன்
தானப் போதிடு வார்வினை தீர்ப்பவர்
மீனத் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேன லானை யுரித்தவீ ரட்டரே. 5

1617. ஏழித் தொன்மலர் கொண்டு பணிந்தவர்
ஊழித் தொல்வினை யோட அகற்றுவார்
பாழித் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேழத் தின்னுரி போர்த்தவீ ரட்டரே. 6

புலித்தோலை ஆடையாக உடுத்த பெருமானே, எட்டுவகைப்பட்ட பூங்கொத்துக்களை இட்டு வணங்கிநிற்கும் அடியார்களுடைய வல்வினைகளை ஓட்டுவார்.

கு-ரை: பூங்கொத்தாயின - எட்டுவகை மலர்களின் பூங்கொத்துக்கள். மூன்றோடோரைந்து - எட்டு. இட்டு - சாத்தி. வாங்கி - வளைந்து; வணங்கி. வீங்கி - பெருகிய. உடையாடை - உடுத்தற்குரிய ஆடை.

5. பொ-ரை: மீன்களை உடைய குளிர்புனல் பாய்கின்ற கெடிலக் கரையில் உள்ள திருவதிகைவீரட்டத்தில் எழுந்தருளியிருப்பவரும், ஆனை உரித்தவருமாகிய பெருமான், தேன் உடைய அழகிய போதுகளாகிய எட்டுவகைப்பட்ட மணமலர்களை இட்டு வணங்குவார் வினைகளைத் தீர்ப்பவர் ஆவர்.

கு-ரை: தேனப்போதுகள் - தேன் பொருந்திய பூக்கள். தான் - தானே. அப்போது - அம்மலர்களை. இடுவார் - அருச்சிப்பார். மீனத் தண்புனல் - மீன்கள் நிறைந்த குளிர்ந்த புனல். வேனலானை - கோபமுடையானை. உரித்த - தோலை உரித்தெடுத்த.

6. பொ-ரை: வன்மை உடையதாகிய குளிர்புனல் பாய்கின்ற கெடிலக்கரையில் உள்ள திருவதிகைவீரட்டத்தில் எழுந்தருளியிருப்பவரும், வேழத்தின் உரியைப் போர்த்தவருமாகிய பெருமானே, இதழி (ஏழி)யாகிய கொன்றை மலர்களைக் கொண்டு பணிந்த அடியார்களுடைய ஊழியாகத் தொடர்ந்துவரும் பழைய வினைகள் ஓடும்படி நீக்குவார்.

Koviloor Digital Library

1618. உரைசெய் நூல்வழி யொண்மல ரெட்டிடத்
திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால்
வரைகள் வந்திழி யுங்கெடி லக்கரை
விரைகள் சூழ்ந்தழ காயவீ ரட்டரே. 7

1619. ஒலி வண்டறை யொண்மல ரெட்டினால்
காலை யேத்த வினையைக் கழிப்பரால்
ஆலி வந்திழி யுங்கெடி லக்கரை
வேலி சூழ்ந்தழ காயவீ ரட்டரே. 8

கு-ரை: ஏழி - ஏழை முன்னாக உடையது எட்டு. தொன்மலர் - தொன்மையாகச் சொல்லப்பட்ட மலர். ஊழி - பல பிறப்புக்கள். பாழி-வலிமை.

7. பொ-ரை: மலைகளினின்று வந்து இழிவதாகிய கெடில நதியின் கரையில் உள்ளதும், நறுமணஞ் சூழ்ந்து எழில் பெற்றதுமாகிய திருவதிகைவீரட்டத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே, ஆகம நூல்கள் உரைக்கின்ற நெறியின்படி எட்டு வகைப்பட்ட ஒளியுடைய மலர்களை இட்டு வணங்கும் அடியார்களின் அலைகள்போல் வருகின்ற வல்வினைகளைத் தீர்ப்பவர் ஆவர்.

கு-ரை: உரைசெய் நூல்வழி - உரைக்கப்பட்ட சிவாகம நூல் முறைப்படி. ஒண்மலர் - விளக்கமான மலர்கள். திசைகள் போல்வரு - அலைகளைப் போலச் சிறிதும் பெரிதுமாய்த் தொடர்ந்து வரும். வரைகள் - மலைகள். விரைகள் - மணப்பொருள்கள்.

8. பொ-ரை: மழைநீர் வந்து இழிகின்ற கெடில நதியின் கரையில் உள்ளதும், வேலிகள் சூழ்ந்து எழில் உடையதுமாகிய திருவதிகை வீரட்டத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே, ஓலமிடும் வண்டுகள் ஒலிக்கும் எட்டுவகைப்பட்ட மலர்களால் தம்மைக் காலத்தேவந்து வழிபடுவார்களின் வினையைத் தீர்ப்பவர்.

கு-ரை: ஒலிவண்டறை - ஓலமிடுவதாகிய வண்டுகள் ஒலிக் கின்ற. காலை - காலையிலே. ஆல் அசை. ஆலி - ஒலித்து. கூடிவேலி சூழ்ந்து - வேலிபோலச் சூழ்ந்து.

Koviloor Digital Library

1620. தாரித் துள்ளித் தடமல ரெட்டினால்
பாரித் தேத்தவல் லார்வினை பாற்றுவார்
மூரித் தெண்திரை பாய்கெடி லக்கரை
வேரிச் செஞ்சடை வேய்ந்தவீ ரட்டரே. 9

1621. அட்ட புட்ப மவைகொளு மாறுகொண்
டட்ட மூர்த்தி அனாதிதன் பாலணைந்
தட்டு மாறுசெய் கிற்பவ திகைவீ
ரட்ட னாரடி சேரு மவர்களே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: வலிமை உடையதாய்த் தெளிந்துவரும் அலைகளை உடையதாய்ப் பாய்கின்ற கெடிலநதியின் கரையின்கண் உள்ள வீரட்டத்தில் எழுந்தருளியுள்ள மணம் வீசும் செஞ்சடையை நன்கு கட்டிய பெருமான், மனத்தே இறைவன் திருவுருவைத்தாங்கிச் சிந்தித்து எட்டு வகைப்பட்ட மலர்களால் ஏத்தும் வல்லமை உடைய அடியார்களின் வினைகளைக் கெடுப்பார்.

கு-ரை: தாரித்து - தரித்து என்பது தாரித்து என நீண்டது. தரித்தல் - மனத்திற்கொள்ளல். தடமலர் - பெரிதாகிய மலர். பாரித்து - மிகுந்து. பாற்றுவார் - கெடுப்பார். மூரி - பெரிய. வேரி - தேன் பொருந்திய மலர்கள். வேய்ந்த - கட்டிய.

10. பொ-ரை: திருவதிகைவீரட்டனார் திருவடி சேரும் அடியார்கள், அட்டபுட்பங்களைவிதிமுறைப்படி கொண்டு அட்ட மூர்த்தியும், ஆதியற்றவரும் ஆகிய பெருமானின்பால் அணைந்து பொருந்துமாறு வழிபாடு செய்யும் திறம் உடையவர் ஆவர்.

கு-ரை: அட்டபுஷ்பம் - எட்டுமலர்கள். அவைகொளுமாறு - பூக்களை எடுக்கும் விதிமுறைப்படி எடுத்து. அட்டமூர்த்தி - எட்டு வடிவினனாகிய இறைவன். அனாதி - ஆதியற்றவன். அட்டுமாறு செய்கிற்ப - இறைவனைச் சூடுமாறு செய்வார்கள். அடிச்சேருமவர்கள் செய்கிற்ப என்க.

Koviloor Digital Library

55. திருநாரையூர்

பதிக வரலாறு:

திருத்தில்லைத் திருப்பதியின் எல்லையினை யிறைஞ்சி யேத்தித் திருநாரையூர் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 179.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 168 **பதிக எண்: 55**

திருச்சிற்றம்பலம்

1622. வீறு தானுடை வெற்பன் மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை சூடிலும்
நாறு பூம்பொழில் நாரையூர் நம்பனுக்
காறு சூடலும் அம்ம அழகிதே. 1

1623. புள்ளி கொண்ட புலியுரி யாடையும்
வெள்ளி கொண்டவெண் பூதிமெய் யாடலும்
நள்ளி தெண்டிரை நாரையூ ரான்நஞ்சை
அள்ளி யுண்டலு மம்ம வழகிதே. 2

1. பொ-ரை: மணம் வீசுகின்ற பூம்பொழில்களை உடைய நாரையூரின்கண் எழுந்தருளியுள்ள நம் இறைவர், பிறிதொன்றற் கில்லாத பெருஞ்சிறப்புடைய திருக்கயிலாயத்தை உடையவர். உமையம்மையை ஒருபங்கில் உடையவர்; வளைந்த பிறை சூடியவர். ஆயினும் கங்கையாற்றினைச் சடையிற் சூடல் மிக்க அழகும் வியப்பும் உடையதே.

கு-ரை: வீறுதானுடைய வெற்பன் - பெருமை பொருந்திய மலையரையன். கூன் பிறை - வளைந்த பிறை. நாறு - மணம் கமழும். அம்ம - வியப்புமொழி; மிக என்னும் பொருட்டு.

2. பொ-ரை: தெளிந்த நீர்வளம் உடைய நாரையூரின்கண் எழுந்தருளியுள்ள பெருமான், புள்ளிகளை உடைய புலித்தோலா டையும், வெள்ளி போன்ற நிறம் கொண்ட திருநீற்றுப் பூச்சுடைய

Koviloor Digital Library

1624. வேடு தங்கிய வேடமும் வெண்தலை
ஓடு தங்கிய வுண்பலி கொள்கையும்
நாடு தங்கிய நாரையூ ரான்நடம்
ஆடு பைங்கழ லம்ம வழகிதே. 3

1625. கொக்கின் தூவலுங் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலும் நாரையூர் நம்பனுக்
கக்கி னாரமு மம்ம வழகிதே. 4

திருமேனியும் உடையவராயினும், நஞ்சை அள்ளி உண்டல் மிக்க அழகும் வியப்பும் உடையதேயாகும்.

கு-ரை: புள்ளிகொண்ட - புள்ளிகளைக்கொண்ட. புலியுரி - புலித்தோல். வெள்ளி கொண்ட வெண்பூதி - வெள்ளியின் நிறத்தைக் கொண்ட வெண்மையான விபூதி. நள்ளி - விரும்புபவன் ஆகிய நாரை யூரான் என்க.

3. பொ-ரை: நாட்டின்கண் தங்கிய புகழை உடைய நாரையூரில் எழுந்தருளியுள்ள பெருமான், வேடத்தன்மை தங்கிய திருவேடமும், வெண்தலை ஓட்டில் தங்கிய உணவை உண்ணும் கொள் கையும் உடை யவராயினும், நடம் ஆடுகின்ற பைங்கழல் சேவடி மிக்க அழகும் வியப்பும் உடையதேயாகும்.

கு-ரை: வேடு - வேடர் வடிவம். பலியுண் கொள்கை என்க. கொள்கை - செயல். நாடு தங்கிய - நாட்டின்கண் பொருந்திய.

4. பொ-ரை: திருநாரையூரில் எழுந்தருளியுள்ள நம் பெருமான் கொக்கு வடிவாய் நின்ற அசுரனின் இறகும், கூவிள மலராலாகிய தலைக் கண்ணியும், மிகுந்த வெண்தலைமாலையும், விரிந்த சடையும் உடைய திகம்பரனேயாயினும் அக்கின் மாலை அணிந்திருத்தல் மிக்க வியப்பும் அழகும் உடையதேயாகும்.

கு-ரை: தூவல் - தூவி; இறகு. கொக்கின் வடிவமாய் வந்த அசுரனை அழித்து அவன் இறகைச் சூடியவன் இறைவன். கூவிளங் கண்ணி - வில்வமாலை. மிக்க - பலவாய. நக்கன் - நிர்வாணி. அக்கின் ஆரம் - என்பு மாலை.

Koviloor Digital Library

1626. வடிகொள் வெண்மழு மான்அமர் கைகளும்
பொடிகொள் செம்பவ ளம்புரை மேனியும்
நடிகொள் நன்மயில் சேர்திரு நாரையூர்
அடிகள் தம்வடி வம்ம வழகிதே. 5

1627. சூலம் மல்கிய கையுஞ் சுடரொடு
பாலும் நெய்தயி ராடிய பான்மையும்
ஞாலம் மல்கிய நாரையூர் நம்பனுக்கு
ஆல நீழலு மம்ம வழகிதே. 6

1628. பண்ணி னால்மறை பாடலோ டாடலும்
எண்ணி லார்புர மூன்றெரி செய்ததும்
நண்ணி னார்துயர் தீர்த்தலும் நாரையூர்
அண்ண லார்செய்கை யம்ம வழகிதே. 7

5. பொ-ரை: வடித்தலைக்கொண்ட ஒளியால் வெள்ளிய மழுப் படையும் மானும் விரும்புகின்ற கரங்களும், திருநீற்று வெண் பொடி பூசிய செம்பவளம் ஒத்த மேனியும், ஒருபங்கில் இருக்கும் நடித்தலைக் கொண்ட நன்மயில் போன்ற உமாதேவியும் உடைய திரு நாரையூர்ப் பெருமான் வடிவு, மிக்க வியப்பும் அழகும் உடையதேயாகும்.

கு-ரை: வடிகொள்- உலையில் வடித்தெடுத்தாற் போன்று கூரிய. பொடி - திருநீறு. நடிகொள் - நடித்தலைக் கொண்ட. நடி - முதனிலைத் தொழிற்பெயர். வடிவு அம்ம அழகிது என்க.

6. பொ-ரை: உலகத்தில் புகழ் நிறைந்த திருநாரையூர், நம் பெருமான் சுடரொடு நிறைந்த சூலம் பொருந்திய கையும், பால், நெய், தயிர் முதலிய பஞ்சகவ்வியம் ஆடிய தன்மையும் உடையவராயினும், ஆலநிழலில் இருந்து அறம் உரைத்தல் மிக்க வியப்பும் அழகும் உடையதேயாகும்.

கு-ரை: மல்கிய - பொருந்திய; சுடரொடு - நெருப்போடு. ஞாலம் மல்கிய - உலகில் புகழால் நிறைந்த. ஆலநீழல் - கல்லாலநிழல்.

7. பொ-ரை: இசையொடு பொருந்திய நான்மறைகளைப் பாடுதலும், ஆடுதலும், நல்ல எண்ணமில்லாத தீயோர்களது

Koviloor Digital Library

1629. என்பு பூண்டெரு தேறி யிளம்பிறை
மின்பு ரிந்த சடைமேல் விளங்கவே
நன்ப கற்பலி தேரினும் நாரையூர்
அன்ப னுக்கது வம்ம வழகிதே. 8

1630. முரலுங் கின்னர மொந்தை முழங்கவே
இரவி னின்றெரி யாடலு நீடுலாம்
நரலும் வாரிநன் னாரையூர் நம்பனுக்
கரவும் பூணுத லம்ம வழகிதே. 9

முப்புரங்களை எரித்தலும், தம்மைப் பொருந்தியவரது துயரங்களைத் தீர்த்தலும் ஆகிய திருநாரையூர் அண்ணலார் செய்கைகள் அனைத்தும் மிக்க வியப்பும் அழகும் உடையனவேயாம்.

கு-ரை: பண்ணினால் - இசையினாலே. மறை பாடுதலோடு என்க. எண்ணிலார் - பகைவர்.

8. பொ-ரை: எலும்புகளைப் பூண்டு, எருதின்மேல் ஏறி, இளம் பிறையினை மின்னலை முறுக்கினாலொத்த ஒளிச்சடையின் மேல் விளங்கச் சூடி, நல்ல பகலிலும் பலிதேர்வராயினும், திருநாரையூரில் உள்ள அன்பு வடிவாய சிவபெருமானுக்கு அது மிக்க வியப்பும் அழகும் உடையதே.

கு-ரை: மின்புரிந்த - மின்னலைப்போல் முறுக்கி விளங்கிய. நன்பகல் - நல்ல பகற்போது. பலிதேரினும் - உணவு இரந்தாலும். அன்பன் - அன்பே வடிவமாயவன்.

9. பொ-ரை: ஒலிக்கின்ற கின்னரமும், மொந்தையும் முழங்க, நீண்டு நிகழும் இரவில் இடுகாட்டில் நின்று எரித்து ஆடுதலும், அரவினைப் பூணுதலும் ஆகியவை கடல் ஒலிக்கும் திருநாரையூர் நம் பெருமானுக்கு மிக்க வியப்பும் அழகும் உடையதேயாகும்.

கு-ரை: முரலும் - இனிய ஓசையோடு ஒலிக்கும். கின்னரம் - ஒருவகை வாத்தியம். மொந்தை - தோற்பறை. நரலும் - ஆரவாரிக்கும். வாரி - கடலால் சூழப்பட்ட உலகின்கண் பொருந்திய எனக் கூட்டுக.

Koviloor Digital Library

1631. கடுக்கை யஞ்சடை யன்கயி லைம்மலை
எடுத்த வாளரக் கன்தலை யீரைஞ்சும்
நடுக்கம் வந்திற நாரையூ ரான்விரல்
அடுத்த தன்மையு மம்ம வழகிதே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: கொன்றையினை உடைய அழகார்ந்த சடையனுக்குரிய திருக்கயிலாயத் திருமலையை எடுக்கலுற்ற வாளினை உடைய இராவணனது பத்துத் தலைகளும் நடுங்கி நெரியும் வண்ணம் திருநாரையூர்ப் பெருமான் திருவிரல் இயக்கிய தன்மை வியப்பும் அழகும் உடையதேயாகும்.

கு-ரை: கடுக்கை - கொன்றை. அம் - அழகிய. நடுக்கம் வந்து இற - நடுக்கமடைந்து நொறுங்க. அடுத்த - ஊன்றிய.

திருநாவுக்கரசர் புராணம்

அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற
கழல்வணங்கி அருள்முன் பெற்றுப்,
பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி
புரண்டுவலங் கொண்டு போந்தே,
எப்புவனங் களும்நிறைந், திருப்பதியின்
எல்லையினை இறைஞ்சி ஏத்திச்,
செப்பரிய பெருமையினார் திருநாரை
யூர்ப்பணிந்து பாடிச் செல்வார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

56. திருக்கோளிலி

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் திருவீழிமிழலையையும் திரு வாஞ்சியத்தையும் போற்றிப் புனிதர் வாழ்பதிகள் வணங்கித் திருமறைக் காட்டிற்குச் செல்லும்பொழுது திருக்கோளிலி யப்பரை வணங்கிப் பாடியது இத்தமிழ்மாலை.

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 169 பதிக எண்: 56

திருச்சிற்றம்பலம்

1632. மைக்கொள் கண்ணுமை பங்கினன் மான்மழுத்
தொக்க கையினன் செய்யதோர் சோதியன்
கொக்க மர்பொழில் சூழ்தரு கோளிலி
நக்க னைத்தொழ நம்வினை நாசமே. 1

1633. முத்தி னைமுத லாகிய மூர்த்தியை
வித்தி னைவிளை வாய விகிர்தனைக்

1. பொ-ரை: மையணிந்த கண்களையுடைய உமையை ஒருபங்கில் உடையவனும், மானும் மழுவும் பொருந்திய கைகளை உடையவனும், செவ்விதாகிய ஒப்பற்ற ஒளி வடிவினனும், மாமரங்கள் பொருந்திய பொழில் சூழ்ந்த திருக்கோளிலியில் உறையும் திகம்பரனுமாகிய பெருமானைத் தொழ நம் வினைகள் நாசமாம்.

கு-ரை: மைக்கொள் கண் - கருமை நிறத்தைக்கொண்ட கண்கள். மையுண்ட கண் எனினும் பொருந்தும். மான், மழு இவை பொருந்திய கையையுடையன் என்க. செய்யதோர் சோதியன் - சிவந்த பேரொளியாகிய வடிவினன். கொக்கு அமர் - கொக்குக்கள் தங்கிய மாமரம் எனினும் அமையும். நக்கன் - நிருவாண கோலத்தை உடையவன். நாசம் - நாசம் ஆம்; அழியும்.

2. பொ-ரை: முத்தினைப் போல்வானும், உலக முதலாக உள்ள திருவுரு உடையோனும், வித்தும் விளைவும் ஆகிய மேலானவனும், பூங்கொத்துக்களை உடைய பொழில்கள் சூழ்ந்த கோளிலியில்

Koviloor Digital Library

கொத்த லர்பொழில் சூழ்தரு கோளிலி
அத்த னைத்தொழ நீங்கும்நம் அல்லலே. 2

1634. வெண்டி ரைப்பர வைவிட முண்டதோர்
கண்ட னைக்கலந் தார்தமக் கன்பனைக்
கொண்ட லம்பொழிற் கோளிலி மேவிய
அண்ட னைத்தொழு வார்க்கல்ல லில்லையே. 3

1635. பலவும் வல்வினை பாறும் பரிசினால்
உலவுங் கங்கையுந் திங்களு மொண்சடை
குலவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
நிலவி னான்றனை நித்தல் நினைமினே. 4

உறையும் அத்தனும் ஆகிய பெருமானைத் தொழ நம் அல்லல்கள் நீங்கும்.

கு-ரை: முத்தினை - முத்துப்போன்றவனை. முதலாகிய - முதற் பொருளாகிய. வித்தினை - உலகிற்கு மூலகாரணனாய் இருப்பவனை. விளைவாய விகிர்தனை - உலகில் எல்லாமாய் விரிந்து விளைந்து நிற்பவனை. விகிர்தன் - ஒன்றோடொன்று ஒவ்வாத போக, யோக, கோர வடிவங்களை உடையவன். அல்லல் - துன்பம். முன் பாட்டில் வினையாகிய காரணம் அழியும் என்றார். இங்கு அதன் காரியமாகிய துன்பம் கெடும் என்கிறார்.

3. பொ-ரை: வெள்ளிய அலைகளை உடைய கடல் விடம் உண்ட ஒப்பற்ற திருநீலகண்டனும், நெஞ்சு கலந்து தொழுமவர்க்கு அன்பே வடிவாய் அருள்புரிபவனும், மேகங்கள் பொருந்துகின்ற அழகிய சோலைகளை உடைய கோளிலியில் விரும்பி உறையும் தேவனுமாகிய பெருமானைத் தொழுவார்க்கு அல்லல் இல்லை.

கு-ரை: வெண்டிரைப்பரவை - வெள்ளிய அலைகளோடு கூடிய கடல். கண்டனை - கழுத்தை உடையவனை. கலந்தார் தமக்கு - அன்பால் தம்மோடு மனமொத்தவர்க்கு (''கலந்த அன்பாகி'' தி.8 திருவாசகம்). கொண்டலம் பொழில் - மேகங்கள் சூழ்ந்த பொழில். அண்டனை - எல்லா உலகமுமாயவனை.

4. பொ-ரை: வலிய வினைகள் பலவும் கெடும் தன்மையினால், கங்கையும் மதியும் உலவும் ஒள்ளிய சடை பொருந்தியவனும்,

Koviloor Digital Library

1636. அல்ல லாயின தீரு மழகிய
முல்லை வெண்முறு வல்லுமை யஞ்சவே
கொல்லை யானை யுரித்தவன் கோளிலிச்
செல்வன் சேவடி சென்று தொழுமினே. 5

1637. ஆவின் பால்கண் டளவி லருந்தவப்
பாலன் வேண்டலுஞ் செல்லென்று பாற்கடல்
கூவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
மேவி னானைத் தொழவினை வீடுமே. 6

குளிரும் பொழில்களை உடைய கோளிலியில் நிலவியவனுமாகிய பெருமானை நாடோறும் நினைந்து தொழுவீராக! 'தொழுவார்க்கன்றி வினை நீங்கா' என்பது கருத்து.

கு-ரை: வல்வினை பலவும் என மாறுக. பாறும் - அழியும். பரிசினால் - தன்மையினால். உலவும் - பரவும். குலவினான் - விளங்க அணிந்தவன். நித்தல் - நாடோறும்.

5. பொ-ரை: அழகிய முல்லையைப் போன்ற வெள்ளிய முறுவலை உடைய உமாதேவியார் அஞ்சுமாறு குறிஞ்சியில் வாழும் யானையை உரித்தவனும், கோளிலியில் உறையும் திருவருட் செல்வனுமாகிய பெருமான் சேவடிகளைச் சென்று தொழு வீர்களாக; உம் அல்லலாயின அனைத்தும் தீரும். 'அல்லல் நீங்கும் என்பதற்குக் கயாசுரனை அழித்துத் தேவர்களைக் காத்தமை சான்று' என்றபடி.

கு-ரை: அல்லல் - துன்பம். முல்லை வெண்முறுவல் - முல்லை போலும் வெள்ளிய பற்கள். கொல்லை - தினைப்புனம். குறிஞ்சிக் கருப்பொருள் என்றபடி. இஃது இன அடை. யானை - கயாசுரன். வீடுமே, ஏகாரம் தேற்றம்.

6. பொ-ரை: பசுவின் பாலை முன் உண்டமையால், மிக்க அருந்தவம் உடைய பாலனாகிய உபமன்யு அப் பால் வேண்டலும், 'செல்க' என்று பாற்கடலைக் கூவி அருளியவனும் குளிர் பொழில் களையுடைய கோளிலியில் விரும்பி உறைபவனுமாகிய பெருமானைத் தொழ நம் வினைகள் வீடும். 'பெருமானது அளவில் ஆற்றலும் பேரருளுடைமையும்' குறித்தபடி.

Koviloor Digital Library

1638. சீர்த்த நன்மனை யாளுஞ் சிறுவரும்
ஆர்த்த சுற்றமும் பற்றிலை யாதலால்
கூத்த னாருறை யுந்திருக் கோளிலி
ஏத்தி நீர்தொழு மின்னிடர் தீருமே. 7

1639. மால தாகி மயங்கும் மனிதர்காள்
காலம் வந்து கடைமுடி யாமுனம்
கோல வார்பொழிற் கோளிலி மேவிய
நீல கண்டனை நின்று நினைமினே. 8

கு-ரை: ஆவின்பால் கண்டு - காமதேனுவின் பாலை முன் உண்டு அறிந்தமையால், அளவில் அருந்தவப் பாலன் - அளவற்ற அரிய தவத்தை உடைய குழந்தை உபமன்யு. வேண்டலும் - விரும்பி அழுதலும். செல்லென்று - உபமன்யுவை நோக்கிச் செல்வாயாக என்று. கூவினான் - அழைத்து ஏவல் செய்தான். வீடும் - அழியும். உபமன்யு தாய்மாமன் வசிட்டனிடத்து வளர்ந்தபோது உண்டது காமதேனுவின்பால், தந்தை வியாக்கிர பாதரிடம் வந்தபோது அது கிடைக்காமையால் அது வேண்டி அழுதார். ''பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்'' (தி.9 திருப்பல்லாண்டு -9).

7. பொ-ரை: பெருமைமிக்க நல்ல மனைவியும், பெற்ற பிள்ளைகளும், பொருந்திய சுற்றத்தாரும் நிலைத்த சார்பு ஆதல் இல்லையாதலால் ஆடும் பெருமான் உறையும் திருக்கோளிலியை ஏத்தி, நீர் தொழுவீராக; நும் இடர்கள் தீரும். 'இறைவனே இருமைக்கும் நீங்காத்துணை' என்றபடி.

கு-ரை: சீர்த்த - சிறப்பின் மிக்க. ஆர்த்த - நம்மோடு ஒன்றாய்ப் பிணித்த. ஆரவாரம் செய்யும் எனினும் அமையும். பற்றிலை - பற்றுக்கோடாதல் இல்லை. இடர் - துன்பம். மனைவி, மக்கள், சுற்றம் என்போர் உயிர்த்துணையாகார். உயிர்க்கும் உடலுக்கும் நிலைத்த துணைவன் சிவபிரானே என்றபடி. தீருமே - ஏகாரம் தேற்றம்.

8. பொ-ரை: மயக்கத்தை உடையவராகி மயங்கும் மனிதர்களே! உமக்குரிய காலம் வந்து இறுதியுறுவதற்கு முன்னம், அழகுடைய நீண்ட பொழில்களை உடைய கோளிலியில் விரும்பி உறைகின்ற நீல கண்டனை ஒன்றி நின்று நினைப்பீராக! 'யாக்கை நிலையாமையைக் கருதிப் பேரருளாளனை நினைந்து உய்க!' என்றபடி.

Koviloor Digital Library

1640. கேடு மூடிக் கிடந்துண்ணு நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி யீசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே. 9

1641. மடுத்து மாமலை யேந்தலுற் றான்றனை
அடர்த்துப் பின்னு மிரங்கி யவற்கருள்
கொடுத்த வன்னுறை கோளிலி யேதொழ
விடுத்து நீங்கிடும் மேலை வினைகளே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: மாலதாகி - உலகப் பொருள்களில் மயக்கத்தைப் பொருந்தினவராகி. காலம் வந்து கடைமுடியாமுனம் - இறத்தற்கு உரிய காலம் வந்து இறுதியாக உம் வாழ்வை முடித்தற்கு முன். கோலம் - அழகிய. வார் - நீண்ட.

9. பொ-ரை: கேடுகள் சூழ்ந்து மூடிக்கிடந்து துயர் என்னும் நாகநாட்டினைத் தேடி, நீர் திரியாது, திருக்கோளிலி ஈசனை இரவும் பகலும் பாடுவீர்களாக; பாடுவீர்களாயின் சிவகதியே கூடலாம்.

கு-ரை: கேடுமூடி - துன்பமே மிகுதியாய்ப் பரவி. கிடந்துண்ணும் - செய்வதொன்றின்றித் துன்பமே நுகரும். உலகீர், நாடே தேடித் திரிகின்றீர்; அது செய்யாது இறைவனை இரவும் பகலும் பாடுமின். சிவகதி - (சிவஞானமாகிய நெறி) சேரலாம் என்றபடி.

10. பொ-ரை: செருக்கை உட்கொண்டு திருக்கயிலாயப் பெருமலையை எடுக்கலுற்றானாகிய இராவணனை நெருக்கிப் பின்னும் இரக்கமுற்று அவனுக்கு அருள்கொடுத்த பெருமான் உறைகின்ற கோளிலியே தொழப் பழைய பிறவிகளிற் செய்த வினைத் துன்பங்கள் விடுத்து நீங்கும். 'பிழைத்தாரையும் பின்னர் இரங்கி வந்தடையில் முதல்வன் காத்தருள்வான்' என்பது குறிப்பு.

கு-ரை: மடுத்து - தான் என்னும் செருக்கை உட்கொண்டு. மா - சிறப்பிற்குரிய. மேலைவினைகள் - பழவினைகள். விடுத்து - நம்மை விட்டு; வினைகள் நீங்கிடும் என்க. மடுத்து - என்பதற்குரிய செயப் படு பொருள் அவாய் நிலையான் வந்தது.

Koviloor Digital Library

57. திருக்கோளிலி

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் திருவாஞ்சியம் முதலிய பல பதிகளையும் வணங்கித் திருமறைக்காடு செல்லும்பொழுது திருக்கோளிலியப்பரைப் போற்றிப் பாடியருளியது இத் திருப்பதிகம்.

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 170 பதிக எண்: 57

திருச்சிற்றம்பலம்

1642. முன்ன மேநினை யாதொழிந் தேனுனை
இன்னம் நானுன சேவடி யேத்திலேன்
செந்நெல் ஆர்வயல் சூழ்திருக் கோளிலி
மன்ன னேயடி யேனை மறவலே. 1

1643. விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கும் மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
அண்ண லாரடி யேதொழு துய்ம்மினே. 2

1. **பொ-ரை:** செந்நெல் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருக்கோளிலியில் எழுந்தருளியுள்ள மன்னனே! (தியாகராசனே!) உன்னை அடியேன் முன்பே நினையாதொழிந்தேன்; இன்னமும் நான் உன் சேவடிகளை நன்கு ஏத்தவில்லை; ஆயினும் அடியேனை மறவாதே; என்னை நினைந்தருள்வாயாக! அவனை நாம் நினைக்கில் அவனும் நம்மை நினைப்பான் என்றபடி.

கு-ரை: முன்னமே - காலம் வறிதே கழியாத முன்பே; உனை நினையாதொழிந்தேன் என்க. இன்னம் - இன்னமும். உன - உன்னுடையவான (அ - ஆறன் உருபு). மறவல் - மறவாதே.

2. **பொ-ரை:** விண்ணிலுள்ள தேவர்கள் தொழுது வணங்கும் விளக்கும், மண்ணுலகிலுள்ளவர் வினைகள் தீர்க்கும் மருந்தும் ஆகிய பண்ணுள்ளவர்கள் பயில்கின்ற திருக்கோளிலியில் எழுந்தருளியுள்ள அண்ணலார் அடிகளையே தொழுது உய்வீர்களாக!

Koviloor Digital Library

1644. நாளும் நம்முடை நாள்க ளறிகிலோம்
ஆளும் நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோளிலி யரன் பாதமே கூறுமே. 3

1645. விழவி னோசை யொலியறாத் தண்பொழில்
பழகி னார்வினை தீர்க்கும் பழம்பதி
அழல்கை யானம ருந்திருக் கோளிலிக்
குழக னார்திருப் பாதமே கூறுமே. 4

கு-ரை: விண்ணுளார் - தேவர். விளக்கினை - ஒளி வடிவான வனை. மருந்தினை - மருந்துபோல்வானை. பண்ணுளார் - இசை வாணர். விச்சுவசேவியனும் துன்பம் கடிவோனுமாகிய சிவ பிரானையே தொழுதுய்க என்கிறார்.

3. பொ-ரை: நம்முடைய வாழ்நாள்களின் வரையறையை நாளும் அறியும் ஆற்றல் இல்லை; நம்மை ஆளும் நோய்களோ தொண்ணூற்றெட்டுக்கு மேலாகும். அறிவின்மையின்கண் பொருந்தி யிருந்து நீர் வருந்தாமல் கோளிலிச் சிவபெருமான் பாதமே கூறுவீராக.

கு-ரை: நாளும் - நாடோறும். நம்முடைய நாள்கள் - நமக்கு இவ்வுலகில் உளதாய நாள்கள். ஆளும் - உடலை ஆட்சி செய்யும். ஐம்பதோடாறெட்டு - தொண்ணூற்றெட்டு. ஏழைமைப்பட்டு - அறியா மையுடையராகி. நையாதே - வருந்தாதே; மக்கள் - சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர். அரன் பாதமே அவரால் பற்றத்தக்கது என்றபடி.

4. பொ-ரை: விழாக்களின் ஓசையும் ஒலியும் விட்டு நீங்காத குளிர் பொழில்களை உடையதும், தன்னிடம் பழகி வாழ்வார்களது வினைகளைத் தீர்க்கும் தொல்பதியும், அழலைக் கையில் ஏந்திய பெருமான் அமர்ந்திருப்பதும் ஆகிய திருக்கோளிலியில் குழகன் திருப்பாதத்தையே கூறுவீராக.

கு-ரை: ஓசை - இன்னதென அறியாத ஆரவாரம். ஒலி - இசை முதலிய ஒலி நிகழ்ச்சிகள். பழகினார் - தம்மொடு அன்பு செலுத்திப் பழகினார். அழல்கையான் அமரும் கோளிலி என்க. குழகன் - என்றும் இளையன்.

Koviloor Digital Library

1646. மூல மாகிய மூவர்க்கும் மூர்த்தியைக்
கால னாகிய காலற்குங் காலனைக்
கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலிச்
சூல பாணிதன் பாதந் தொழுமினே. 5

1647. காற்ற னைக்கடல் நஞ்சமு துண்டவெண்
நீற்ற னைநிமிர் புன்சடை யண்ணலை
ஆற்ற னையம ருந்திருக் கோளிலி
ஏற்ற னாரடி யேதொழு தேத்துமே. 6


5. பொ-ரை: மும்மூர்த்திகளுக்கும் மூலமூர்த்தியும், காலகாலனும், அழகுமிக்க பொழில் சூழும் திருக்கோளிலியில் உள்ள சூலத்தைக் கையிலே உடையானுமாகிய பெருமானின் பாதங்களைத் தொழுவீராக.

கு-ரை: மூவர்க்கும் மூலமாகிய மூர்த்தியை என மாறுக. கால னாகிய காலன் - காலத்தை வரையறுப்பவனாகிய இயமன். சூல பாணி - சூலத்தைக் கையின்கண் ஏந்தியவன். சிவபிரானே தத்துவங் கடந்த முதற்பொருளும் சமயத்தாரால் தொழப்படும் தெய்வமும் என்றபடி..

6. பொ-ரை: காற்று வடிவாயவனும், கடல் விடம் உண்டவனும், வெண்ணீறணிந்தவனும், நிமிர்ந்த புன்சடை உடைய அண்ணலும், சடையிற் கங்கையாற்றினை உடையவனும் ஆகிய திருக்கோளிலியில் அமரும் இடபத்தை உடையானை, அவன்றன் திருவடிகளையே தொழுது ஏத்துவீராக.

கு-ரை: காற்றனை - காற்று வடிவானவனை. நிமிர் - நிமிர்ந்த. புன் - மெல்லிய. ஆற்றனை - ஆறு சூடியவனை. ஆல்தனை அமரும் ஏற்றனை எனினும் பொருந்தும். ஏற்றனார். (இடபம்) ஏற்றூர்தியை உடையவர். ஏத்தும் - தோத்திரியுங்கள். முதல்வனை அவன் தன் திரு வடியை நினைத்தே தொழுது ஏத்துமின் என்றது அதுவே நினைக்க வருவது ஆதலின். 'நின்னிற் சிறந்த நின்தாள் இணையவை' (*பரிபாடல்* பா.4. அடி.62.)

Koviloor Digital Library



திருக்கோளிலி: கோலவார் பொழில் கோளிலி

Koviloor Digital Library



Koviloor Digital Library

1648. வேத மாயவிண் ணோர்கள் தலைவனை
ஓதி மன்னுயி ரேத்து மொருவனைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே. 7

1649. நீதி யாற்றொழு வார்கள் தலைவனை
வாதை யான விடுக்கும் மணியினைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே. 8

1650. மாலும் நான்முக னாலு மறிவொணாப்
பாலின் மென்மொழி யாளொரு பங்கனைக்

7. பொ-ரை: வைதிகத் தேரின் உறுப்புக்களாய் நின்ற விண்ணோர்களுக்குத் தலைவனும், நிலைபெற்ற உயிர்கள் ஓதி ஏத்தும் ஒப்பற்றவனும், வண்டுகள் கோதி ஒலிக்கும் மலர்களின் வளமுடைய திருக்கோளிலியில் வேதநாயகனுமாகிய பெருமானின் பாதங்களை விரும்புவீராக.

கு-ரை: வேதமாய - வேத வடிவினனாய் உள்ள. வேதமாய விண்ணோர்கள் - வேதம், வைதிகத்தேர்; அதன் உறுப்புக்களாய் இருந்த விண்ணோர். விண்ணோர்கள் கருவிகளாக சிவபிரான் கருத்தா வாதலை அத்தேரின் அமைப்பு காட்டிற்று. மன்னுயிர் - உலகில் நிலைபெற்ற உயிர்கள். ஓதியேத்தும் ஒருவனை - கற்றுத் துதிக்கும் முதல்வனை. கோதி - மகரந்தங்களை வாயால்கிண்டி. அறையும் - ஒலிக்கும். வேதநாயகன் - வேதங்களுக்குத் தலைவன்.

8. பொ-ரை: முறையாகத் தொழுவார்களது தலைவனும், துன்பங்களாயினவற்றை நீக்கும் செம்மணி போலவானும், வண்டுகள் கிண்டியொலிக்கும் மலர் வனம் உடைய திருக்கோளிலியில் வேத நாயகனுமாகிய பெருமானின் பாதங்களை விரும்புவீராக.

கு-ரை: நீதியால் - முறையாக. வாதை - துன்பம். விடுக்கும் - நீக்கும். 7ஆவது பாடல் பின்னிரண்டு வரிகளே இங்கும் அமைந்து உள்ளன.

9. பொ-ரை: மாலும் பிரமனும் அறியவியலாத, பாலனைய மென்மொழியுடைய உமையொரு கூறனாகிய அழகுடைய பொழில்

Koviloor Digital Library

கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலி
நீல கண்டனை நித்தல் நினைமினே. 9

1651. அரக்க னாய இலங்கையர் மன்னனை
நெருக்கி யம்முடி பத்திறுத் தானவற்
கிரக்க மாகிய வன்றிருக் கோளிலி
அருத்தி யாயடி யேதொழு துய்ம்மினே. 10

திருச்சிற்றம்பலம்

சூழும் திருக்கோளிலியில் உள்ள நீலகண்டனை நாள் தோறும் நினைந்து தொழுவீராக.

கு-ரை: அறிவொணா - அறியமுடியாத. பாலின் மென் மொழி - பாலனைய மென்மையான இனிய மொழி. நித்தல் - நாடோறும்.

10. பொ-ரை: அரக்கனாகிய இலங்கையர் மன்னன் இராவணனை நெருக்கி, அம்முடிகள் பத்தினையும் இறுத்தவனும், பின் அவனுக்கு இரங்கியவனும் ஆகிய பெருமான் உறையும் திருக் கோளிலிக்கு விருப்பமாகி, அவன் அடிகளே தொழுது உய்வீராக.

கு-ரை: அம்முடி - அழகிய முடி. இறுத்தான் - அழித்தவன். அவற்கு - அவனுக்கு. அருத்தி - ஆசை.

திருப்பெருந்துறைப் புராணம்

பாலிடை நஞ்சங் கண்டு
பதைபதைத் தோடி யோர்பால்
நூலிடை யவருண் பாக்கு
நுவன்றமா லயனுண் ணாணப்
பாலிடை நஞ்சங் கண்டு
பதைப்பினறித் தாமுண் டோர்பால்
நூலிடை யவரே யென்னப்
பொலியுநோன் மையர்தாள் போற்றி.

- மீனாட்சி சுந்தரம்பிள்ளை.

Koviloor Digital Library

58. திருப்பழையாறைவடதளி

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் ஆவடுதண்துறையார் பாதமணைந் திறைஞ்சி ஞானபோனகர்க்குச் செம்பொன் ஆயிரம் பாவுக் களித்த திறம் போற்றிப் பழையாறை செல்பொழுதின் அமணர் மறைத்த வடதளியின் மன்னுஞ் சிவனாரைத் தொழுதருள அமணர்கள் தம் பொய்கொள் விமானம் எனக் கேட்டு உளம் பொறாது புழுங்கி ஆங்கோரிடத்திருந்து கொன்றைமுடியார் செய்ய கழல் உன்னி ''வண்ணங்கண்டு நான் உம்மை வணங்கி யன்றிப் போகேன்'' என்று அமுது செய்யாதே இருந்தார். அண்ணலாரும் அது உணர்ந்து மன்னனுக்கு ''அறிவிலமணர் நமை மறைய இருந்தோம்'' என்று அங்கு அடையாளக் குறிகள் அருளிச்செய்து ''நம்மையரசு கும்பிடுவான் நெறியிலமணர் தமை யழித்து நீக்கிப் போக்கு'' என்று அரசனுக்கு அருள்புரிய, அவனும் அறிவுற்று எழுந்து இறைஞ்சி மந்திரிகட்கு இயம்பிக் கடிது எய்தி அடையாளத்தின்வழி கண்டு அமணர் தூரறுத்தான். பின்னர் அரசன் ஈசர்க்கு விமானம் ஆக்கி வழிபாட்டர்ச்சனைக்கு நிவந்தமெல்லாம் அமைத்திறைஞ்ச ஞானவரசும் சென்று இறைஞ்சிப் போற்றியருளியது இத் திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 294. 300.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 171 **பதிக எண்: 58**

திருச்சிற்றம்பலம்

1652. **தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்**
நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னார்பொழி லாறை வடதளி
நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே. 1

1. பொ-ரை: தலைமயிரெல்லாவற்றையும் பறிக்கின்ற சமண் ஒழுக்கம் உடையவர்கள் உள்ளத்து நிலையினால் மறைத்தால் மறைக்கவியலுமோ? அலைநீரின் மருங்கிலுள்ள பொழில்கள் சூழ்ந்த பழையாறைவடதளியின்கண் நிலைபெற்றவன் திருவடிகளையே நினைந்து உய்வீர்களாக.

Koviloor Digital Library

1653. மூக்கி னால்முரன் றோதியக் குண்டிகை
தூக்கி னார்குலந் தூரறுத் தேதனக்
காக்கி னானணி யாறை வடதளி
நோக்கி னார்க்கில்லை யால்அரு நோய்களே. 2

1654. குண்ட ரைக்குண மில்லரைக் கூறையில்
மிண்ட ரைத்துரந் தவிம லன்றனை

கு-ரை: கையர் - வஞ்சனையுடையவர்கள். தலையெல்லாம் - தலையிலுள்ள உரோமங்கள் எல்லாவற்றையும். தலை - ஆகுபெயர். பறிக்கும் - ஒவ்வொன்றாகக் களையும். தலைமயிரைப் பறித்தல் சமணர் இழிவழக்கு. சமண்கையர் - கையையுடைய சமணர். கை - ஒழுக்கமுமாம். உள்நிலையினால் - தங்கள் பொய்மை நிலைமை யினால். மறைத்தால் - மறைக்க முயற்சித்தால். மறைக்கொண்ணுமோ - மறைத்தற்கியலுவதொன்றாமோ. ஏகாரவினா எதிர்மறை குறித்தது. அலையினார் - அலைகள் பொருந்திய; நீர்வளம் சான்ற. அலை - ஆகு பெயர் அல்லது அலைக்கண்மருங்கே என்க. நிலையினான் - எழுந் தருளி இருப்பவன். சமணர்கள் பழையாறை வடதளித் திருக்கோயிலில் இருந்த பெருமானை மறைத்து வைத்திருந்தகாலையில், அங்குச் சென்ற அப்பர், பெருமானைக் காணாது உண்ணாநோன்பு கொண்டு பின்பு இறைவன் காட்சிதரப் பாடியதாதலின் இப்பாடலில் மறைத்தால் மறைக்கவொண்ணுமோ என்றார்கள்.

2. பொ-ரை: மூக்கினால் ஒலிக்குமாறு தம் மந்திரங்களை ஓதி, அக்குண்டிகை தூக்கினாராகிய சமணர்கள் குலத்தை அடியோடு வேரறுத்துத் தனக்கு அணியாறைவடதளியை ஆக்கிக் கொண்டா னாகிய பெருமானை நோக்கினார்க்கு அருநோய்கள் இல்லை.

கு-ரை: சமணர்களின் மந்திரங்கள் மெல்லெழுத்தே மிக்கு மூக்கொலியால் ஓதத்தக்கன ஆதலின் முரன்றோதி என்றார். ''ஞமண ஞாணன'' (சுந்தரர் பதிகம்) தூரறுத்தே தனக்கு ஆக்கினான் - சமணர் கூட்டங்களை வேரோடு களைந்து சமணர் மறைத்த கோயிலைத் தன்னதாகக் காட்டியவன். அணி - அழகிய. அருநோய்கள் - நீங்குதற் கரிய துன்பங்கள். நீர்க்குண்டிகைகள் மூன்றை ஒருசிறு உறியில் தூக்கித் திரிதல் சமணர் வழக்கு.

3. பொ-ரை: குண்டர்களும், நற்குணமில்லாதவர்களும், உடை யணியாத மிண்டர்களுமாகிய சமணர்களைத் துரத்திய விமலனும்,

Koviloor Digital Library

அண்ட ரைப்பழை யாறை வடதளிக்
கண்ட ரைத்தொழு துய்ந்தன கைகளே. 3

1655. முடைய ரைத்தலை முண்டிக்கும் மொட்டரைக்
கடைய ரைக்கடிந் தார்கனல் வெண்மழுப்
படைய ரைப்பழை யாறை வடதளி
உடைய ரைக்குளிர்ந் துள்குமென் னுள்ளமே. 4

1656. ஒள்ள ரிக்கணார் முன்னமண் நின்றுணும்
கள்ள ரைக்கடிந் தகருப் பூறலை

தேவதேவனும் ஆகிய பழையாறைவடதளியில் உள்ள திருநீல கண்டரைத் தொழுது அடியேனின் கரங்கள் உய்ந்தன.

கு-ரை: குண்டர் - கொழுத்தவர். குணமில்லர் - நற்குண மில்லாதவர். கூறை - ஆடை. இல் - இல்லாத. மிண்டர் - வலியர். உடையின்றித் திரிதல் சமணகுருமார்வழக்கு. துரந்த - நீக்கிய, அரசனைக் கொண்டு ஒழித்த. விமலன் - குற்றமற்றவன். அண்டர் - தேவர். வடதளிக் கண்டரை - பழையாறை வடதளியாகிய தலத்தில் உறைபவரை.

4. பொ-ரை: முடைநாற்றம் உடையோரும், தலையை மழித்த மொட்டையர்களும், கீழானவர்களுமாகிய சமணர்களை நீக்கியவரும், கனலையும் வெண்மழுப் படையினையும் உடையவரும் ஆகிய பழையாறை வடதளிக்குடையவரை என் உள்ளம் குளிர்ந்து நினைகின்றது.

கு-ரை: முடையர் - உடல் கழுவாமை, பல் விளக்காமை முதலிய வற்றால் முடைநாற்றமுடையர். தலை முண்டிக்கும் - மயிர் பறித்து மொட்டையாக்கி மழுங்கலாகக்கொள்ளும். மொட்டரை - மொட்டை யரை. கடையரை - ஒழுக்கத்தால் இழிந்தவரை. கடிந்தார் - அழித்தவ ராகிய., கனல் - (கனலும்) எரிக்கும். வெண்மழுப்படையரை - வெள் ளிய மழுவாகிய ஆயுதத்தையுடையவரை. உள்கும் - நினைக்கும்.

5. பொ-ரை: ஒளியும் அரியும் உடைய கண்ணை உடைய பெண்டிர்க்கு முன்னும் உடையற்றவராய் நின்றுண்ணும் கள்ளர் களாகிய சமணரைக் கடிந்தவரும், கரும்பின் ஊறும் சாறு பாய்ந்தோடிச்

Koviloor Digital Library

அள்ள லம்புன லாறை வடதளி
வள்ள லைப்புக ழத்துயர் வாடுமே. 5

1657. நீதி யைக்கெட நின்றம ணேயுணும்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்
ஆதி யைப்பழை யாறை வடதளிச்
சோதி யைத்தொழு வார்துயர் தீருமே. 6

1658. திரட்டி ரைக்க வளந்திணிக் குஞ்சமண்
பிரட்ட ரைப்பிரித் தபெரு மான்றனை
அருட்டி றத்தணி யாறை வடதளித்
தெருட்ட ரைத்தொழத் தீவினை தீருமே. 7

சேறாகிய நீர்வளம் உடைய பழையாறைவடதளியில் உள்ள வள்ளலும் ஆகிய பெருமானைப் புகழத் துயரங்கள் வாடும்.

கு-ரை: ஒள்ளரிக்கண்ணார் - ஒளியோடு கூடிய செவ்வரி படர்ந்த கண்களையுடைய பெண்கள். அமணேநின்று - அம்மணமாகி நின்று. உணும் - உண்ணும். கள்ளரை - கள்ளத்தனமுடையவர்களை. உடையின்றிப் பெண்களிடம் உணவிரக்கும் சமண வாழ்க்கையைக் கருதியது. கடிந்த மகளிர் இடும் பிச்சையை ஏற்று காமமாதிகளை உள்வைத்து நிர்வாணராய் உண்ணும் சமணத் துறவியரை வெறுத்த. கரும்பு ஊறலை - கருப்பஞ்சாறு போன்றவனை. அள்ளல்புனல் - சேற்று வளம் சான்ற நீர். வாடும் - வருந்தும்.

6. பொ-ரை: முறைமை கெட நின்று ஆடையற்றவராய் உண்ணும் சாதியாகிய சமணரைக் கெடுமாறு செய்தருளிய சங்கரனும், ஆதியும் ஆகிய பழையாறைவடதளியில் உள்ள சோதியைத் தொழுவாருடைய துயர் தீரும்.

கு-ரை: நீதியைக்கெட - நீதிமுறைகெட. அமணே நின்று - அம்மணமாகவே நின்று. உணும் - இரந்துணும். சாதியை - சமண மதத்தின் செயல்களை. கெடுமாறு செய்த - அழியுமாறு செய்த. சங்கரன் - அழிப்பவன். ஆதியை - முதல்வனாய் விளங்குபவனை.

7. பொ-ரை: திரட்டிய இரையாகிய சோற்றுக் கவளத்தையே மிகத்திணிக்கும் சமண் பொய்யர்களை அங்கிருந்தும் பிரித்த

Koviloor Digital Library

1659. ஓதி னத்தெழுத் தஞ்சுண ராச்சமண்
வேதி னைப்படுத் தானைவெங் கூற்றுதை
பாத னைப்பழை யாறை வடதளி
நாத னைத்தொழ நம்வினை நாசமே. 8

1660. வாயி ருந்தமி ழேபடித் தாளுறா
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே. 9

பெருமானை. அருள் திறத்தை உடைய அழகுபொருந்திய பழையாறை வடதளியில் தெளிவிக்கும் பிரானைத் தொழத் தீவினைகள் யாவும் தீரும்.

கு-ரை: திரைதிரள் - வரிசையாக உருட்டிய சோற்றுத் திரள். திரைவரிசைகளை ஒத்த எனினுமாம். கவளம் - உணவு. திணிக்கும் - வாயில் பெய்துகொள்ளும். பிரட்டர் - வஞ்சகர். பிரித்த - அச் சமண சமயத்திலிருந்து நீங்கச்செய்த. அருள் திறத்து - திருவருள் வலிமை யொடு கூடிய. தெருட்டரை - தம் முண்மையை உலகுக்குத் தெளியச் செய்பவனாகிய சிவபெருமானை.

8. பொ-ரை: அடியார் இனத்தே ஓதப்படும் திருவஞ்செழுத்தை உணராத சமணர்களை வேதனைப்படுத்தியவனும், வெங்கூற்றுவனை உதைத்த பாதம் உடையவனும் ஆகிய பழையாறை வடதளியில் உறையும் நாதனைத் தொழ நம் வினைகள் நாசமாம்.

கு-ரை: ஓதினத்து எழுத்தஞ்சும் - ஓதவேண்டிய திருவைந் தெழுத்தையும். உணரா - ஓதியுணராத. வேதினைப்படுத்தானை - துன்பம் செய்தவனை. வெங்கூற்று - கொடிய கூற்றை. உதை - உதைத்த. பாதன் - திருவடிகளையுடையவன்.

9. பொ-ரை: மெய்ம்மையும் பெருமையும் உடைய தெய்வத் தமிழையே பயின்று ஆளாக உறாத ஆயிரஞ் சமணரையும் அழிவின் கட்படுத்தவனும், பாய்கின்ற பெருந்தண்ணீர் வளம் உடைய பழை யாறை வடதளியில் மேவியவனும் ஆகிய பெருமான் என்று சொல்லு மளவிலேயே வல்வினைகள் கெடும்.

கு-ரை: வாய் - வாயினால். வாய் - வாய்ந்த. சிவனுக்கு ஆளாம்

Koviloor Digital Library

1661. செருத்த னைச்செயுஞ் சேணரக் கன்னுடல்
எருத்தி றவிர லாலிறை யூன்றிய
அருத்த னைப்பழை யாறை வடதளித்
திருத்த னைத்தொழு வார்வினை தேயுமே. 10

திருச்சிற்றம்பலம்

தன்மையில் - உயிர்களைச் செலுத்தும் சிறப்புத்தன்மை வாய்ந்த. இருந் தமிழே படித்து - பெருமையுடைய தமிழ் மொழியைப்படித்து. வேற்று மொழிக்கில்லாத் தனிச்சிறப்புடைய ஞாலம் அளந்த மேன்மை தெய்வத்தமிழ் என்பதை நினைவு கூர்க. தெய்வத்தமிழைப் படித்தும் என உம்மை கூட்டுக. ஆளுறா - அம்மொழியின் பயனாய் விளங்கும் இறைவனை உணர்ந்து அவனுக்கு ஆளாக அடையாத. ஆயிரம் சமணும் - அவ்வூர் சமணப் பள்ளியில் அமைந்த ஆயிரவராகிய கூட்டம். சமணர் தமிழ்மொழியில் வல்லுநர்களாகி இருந்தும், அதன் பயனை அறியாது ஒழுகினதை நினைவுகூர்க. அழிவாக்கினான் - அழியச் செய்தான். என - என்று சொல்ல. வீடும் - அழியும்.

10. பொ-ரை: போரினைச் செய்யும் சேண் புகழ் உடைய இராவணனின் உடலும், பிடரியும் இறும்படித் திருவிரலால் சிறிதே ஊன்றிய சொற்பொருள்வடிவானவனாகிய பழையாறைவடதளியின் அழகிய பெருமானைத் தொழுவார் வினைகள் தேயும்.


கு-ரை: செருத்தனை - போரரை. சேண் - புகழால் நீண்ட. எருத்து - பிடரி. இற - நொறுங்க. இறை - சிறிதே. அருத்தனை - பொருள் வடிவானவனை. திருத்தன் - அழகியவன்.

திருநாவுக்கரசர் புராணம்

தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ்
சாதி அமணர் மறைத்தாலும்
நிலையி லாதார் நிலைமையினால்
மறைக்க ஒண்ணு மோஎன்னும்
விலையில் வாய்மைக் குறுந்தொகைகள்
விளம்பிப் புறம்போந் தங்கமர்ந்தே
இலைகொள் சூலப் படையர்சேர்
இடங்கள் பிறவும் தொழவணைவார்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library



திருப்பழையாறைவடதளி:
அப்பரடிகள் அமுது செய்யாதிருந்து பழையாறையில் பரமனைக் காணுதல்

Koviloor Digital Library



Koviloor Digital Library

59. திருமாற்பேறு

பதிக வரலாறு:

கச்சிநகர்த் திருமேற்றளி முதலாகச் சடைமுடியார் நிலவியுறையாலயங்கள் ஆர்வமுறப் பணிந்தேத்தி, திருமாற் பேறு வந்தணைந்து தொழுது பாடியருளியவற்றுள் ஒன்று இத் திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 327.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 172 பதிக எண்: 59

திருச்சிற்றம்பலம்

1662. பொருமாற் றின்படை வேண்டிநற் பூம்புனல்
வருமாற் றின்மலர் கொண்டு வழிபடும்
கருமாற் கின்னருள் செய்தவன் காண்தகு
திருமாற் பேறு தொழவினை தேயுமே. 1

1663. ஆலத் தார்நிழ லில்லற நால்வர்க்குக்
கோலத் தாலுரை செய்தவன் குற்றமில்
மாலுக் காரருள் செய்தவன் மாற்பேறு
ஏலத் தான்தொழு வார்க்கிட ரில்லையே. 2

1. பொ-ரை: போரிடுகின்ற நெறியிற் படைக்கலம் வேண்டி நல்ல பூம்புனல் பாய்ந்துவரும் ஆற்றில் மூழ்கி, மலர் கொண்டு வழிபடு வோனாகிய கருநிறத்துத் திருமாலுக்கு இனிய அருள் செய்த வனுக்குரிய காணத்தக்க திருமாற்பேறு தொழ வினைகள் தேயும்.

கு-ரை: பொரும் ஆற்றின் - போர்செய்தற்குரிய முறையால். படை - சக்கரமாகிய ஆயுதம். ஆற்றில் வரும்பூம்புனல் மலர் - பொலி வுடைத்தாய் வரும் ஆற்றுத் தண்ணீரும், மலரும். உம்மைத் தொகை. கருமாற்கு - கருநிறம் பொருந்திய திருமாலுக்கு. திருமால் வழிபட்ட தலமாதலை நினைப்பித்தது. காண்தகு - காண்டற்கு இனிதாகிய.

2. பொ-ரை: கல் ஆலமரத்தின் பொருந்திய நிழலில் நால்வர்க்கு அறம் அழகுபட உரைத்தவனும், குற்றமற்ற திருமாலுக்கு நிறைந்த பேரருள் செய்தவனும் ஆகிய பெருமான் உறையும் திருமாற்பேற்றைப் பொருந்தத் தாம் தொழுவார்க்கு இடர்கள் இல்லை.

Koviloor Digital Library

1664. துணிவண் ணச்சுட ராழிகொள் வானெண்ணி
அணிவண் ணத்தலர் கொண்டடி யர்ச்சித்த
மணிவண் ணற்கருள் செய்தவன் மாற்பேறு
பணிவண் ணத்தவர்க் கில்லையாம் பாவமே. 3

1665. தீதவை செய்து தீவினை வீழாதே
காதல் செய்து கருத்தினில் நின்றநன்
மாத வர்பயில் மாற்பேறு கைதொழப்
போது மின்வினை யாயின போகுமே. 4

கு-ரை: ஆலத்து - கல்லாலமரத்து. ஆர் - பொருந்திய. கோலத்தால் - அழகிய தமது தோற்றத்தால். வாக்கினால் சொல்லாது வீற்றிருந்த நிலையும் காட்டிய ஞானமுத்திரையுமாகிய கோலத்தால் என்க. உரை செய்தவன் - சொல்லாமற் சொன்னவன். ஆர் அருள் - அரிய திருவருள். ஏல - ஏற்புடைத்தாக.

3. பொ-ரை: தீவினை செய்தாரைத் துணிக்கின்ற வண்ணத்தையும், ஒளியையும் உடைய சக்கரப்படையினைக் கொள்வதற்காக எண்ணி, அழகு வண்ணம் உடைய மலர்களைக் கொண்டு திருவடிகளை அருச்சித்த நீலமணிபோலும் நிறமுடையானாகிய திருமாலுக்கு அருள் செய்தவன் உறையும் திருமாற்பேற்றைப் பணிகின்ற இயல்புடையார்க்குப் பாவங்கள் இல்லையாம்.

கு-ரை: துணிவண்ணம் - பகைவரைத் துணிக்கின்ற தன்மை. சுடராழி - ஒளியையுடைய சக்கரம். கொள்வான் - கொள்வதற்காக. எண்ணி - நினைத்து. அணி - அழகிய. வண்ணத்து - செந்நிறத்து, அலர் - தாமரை மலர். மணி வண்ணனுக்கு - நீலமணி போன்ற கரிய நிறத்தையுடைய திருமாலுக்கு. பணிவண்ணத்தவர்க்கு - பணியும் தனமையையுடையவர்க்கு.

4. பொ-ரை: தீயவற்றையே செய்து தீவினையில் பின்னும் வீழாது, கருத்தினில் நிலைபெறுமாற்றை உடைய காதல் புரிந்தோராகிய நல்ல மாதவர் பயில்கின்ற மாற்பேற்றைக் கைதொழப் போதுவீராக; உம் வினையாயின போகும்.

கு-ரை: தீதவை செய்து - தீமையாயினவற்றைச் செய்து. தீவினை வீழாதே - தீவினையின்கண் சாராது. போதுமின் எனக்

Koviloor Digital Library

1666. வார்கொள் மென்முலை மங்கையொர் பங்கினன்
வார்கொள் நன்முர சம்மறை யவ்வறை
வார்கொள் பைம்பொழில் மாற்பேறு கைதொழு
வார்கள் மன்னுவர் பொன்னுல கத்திலே. 5

1667. பண்டை வல்வினை பற்றறுக் கும்வகை
உண்டு சொல்லுவன் கேண்மி னொளிகிளர்
வண்டு சேர்பொழில் சூழ்திரு மாற்பேறு
கண்டு கைதொழத் தீருங் கவலையே. 6

1668. மழுவ லான்திரு நாமம் மகிழ்ந்துரைத்
தழவ லார்களுக் கன்புசெய் தின்பொடும்

கூட்டுக. காதல் - அன்பு. கருத்தினில் நின்ற - கருத்தோடு நின்ற. பயில் - வாழ்கின்ற. போதுமின் - வாருங்கள்.

5. பொ-ரை: கச்சினைக்கொண்ட மென்முலை உடைய உமை யொரு பங்கினன் உறைவதும், இழுத்துக் கட்டப் பெற்ற நல்ல முரசுகளும், நான்மறைகளும் அழகுற ஒலிக்கப்பெறுவதும், நெடிய பசும் பொழில்களை உடையதுமாகிய திருமாற்பேற்றைக்கைதொழும் அடியார்கள் பொன்னுலகத்தில் நிலைபெற வீற்றிருப்பர்.

கு-ரை: வார்கொள் - கச்சணிந்த. வார்கொள்நன்முரசம் - வாரால் இழுத்துக் கட்டப்பட்ட முரசம். அறை - வண்டுகள் ஒலிக்கும். வார்கொள் - நீண்ட பொழில். மன்னுவர் - நிலைபெறுவர்.

6. பொ-ரை: பழையவல்வினைகளது பற்று அறுக்கும் வகை ஒன்று உண்டு; அதனைச் சொல்லுவேன் கேட்பீராக; ஒளிகிளர் கின்றதும், வண்டுகள் சேரும் பொழில்கள் சூழ்ந்ததுமாகிய திருமாற் பேறு கண்டு கைதொழக் கவலைகள் தீரும்.

கு-ரை: பண்டை வல்வினை - பழைய வலிமையான வினை - சஞ்சிதம். பற்றறுத்தல் - முற்றிலும் நீக்குதல். ஒளிகிளர் - ஒளி விளங்கும்.

7. பொ-ரை: மழுவினை ஏந்திய வெற்றி உடையானது திரு நாமத்தை மகிழ்ந்துரைத்து அழவல்ல அடியார்களுக்கு அன்பு செய்து

Koviloor Digital Library

வழுவி லாவருள் செய்தவன் மாற்பேறு
தொழவ லார்தமக் கில்லை துயரமே. 7

1669. முன்ன வன்னுல குக்கு முழுமணிப்
பொன்ன வன்திகழ் முத்தொடு போகமாம்
மன்ன வன்திரு மாற்பேறு கைதொழும்
அன்ன வரெமை யாளுடை யார்களே. 8

1670. வேட னாய்விச யன்னொடும் எய்துவெம்
காடு நீடுகந் தாடிய கண்ணுதல்
மாட நீடுய ருந்திரு மாற்பேறு
பாடு வார்பெறு வார்பர லோகமே. 9

இன்பமொடும் வழுவில்லாத அருள் செய்தவன் உறையும் திருமாற்பேறு தொழவல்ல அடியார்களுக்குத் துயரங்கள் இல்லை.

கு-ரை: மழுவலான் - மழுவாயுதத்தை வலக்கரத்தே ஏந்தியவன். திருநாமம் - திருவைந்தெழுத்து. வழுவில் - குற்றமில்லாத. அன்பு செய்து அழவலார்களுக்கு, இன்பொடும் வழுவிலா அருள் செய்தவன் என்க.

8. பொ-ரை: உலகினுக்கு முன்னேதோன்றியவனும், முழுமணியும், பொன்னும், விளங்கும் முத்தும், போகங்களும் ஆக விளங்கும். மன்னவனும் ஆகிய திருமாற்பேற்றில் உறையும் இறைவனைக் கைதொழும் அத்தன்மையவர் எம்மை ஆளுடையார்கள்.

கு-ரை: உலகுக்கு முன்னவன் என்க. முழுமணிப் பொன்னவன் - முழுமணி போன்றவன் பொன் போன்றவன் என்க. போகமாம் மன்னவன் - போகத்தைச் செய்பவனாகியும் போகப் பொருளாகியும் நிற்கும் தலைவன்.

9. பொ-ரை: அருச்சுனனோடும் வேடனாய் வந்து அம்பு எய்து, வெவ்விய சுடுகாட்டை நீண்டு உகந்து ஆடிய கண்ணுதற் பெருமான் உறைவதும், மாடங்கள் நீண்டு உயருஞ் சிறப்புடையதுமாகிய திருமாற்பேறு பாடுவார்கள் பரலோகம் அடையப் பெறுவார்கள்.

Koviloor Digital Library

1671. கருத்த னாய்க்கயி லாய மலைதனைத்
தருக்கி னாலெடுத் தானைத் தகரவே
வருத்தி யாரருள் செய்தவன் மாற்பேறு
அருத்தி யால்தொழு வார்க்கில்லை யல்லலே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: விசயன் - அருச்சுனன். வெம்காடு - இடுகாடு. நீடு உகந்து - பெரிதும் விரும்பி. பரலோகம் - மேலான உலகம்.

10. பொ-ரை: கயிலாயமலையை எடுக்கும் கருத்து உடையவனாய்ச் செருக்கினோடு எடுக்கலுற்ற இராவணனைச் சிதையும் வண்ணம் வருத்திப் பின் நிறைந்த அருள் செய்தவன் உறையும் திருமாற்பேற்றை விருப்பத்தினோடு தொழுவார்க்கு அல்லல் இல்லை.

கு-ரை: கருத்தனாய் - தானே தலைவன் என்ற எண்ணமுடையவனாய். தருக்கினால் - ஆணவத்தால். தகர - அழிய. ஆர் அருள் - அரிய திருவருள். அருத்தியால் - ஆசையால். ஆணவம் உடையாரை இறைவன் ஆட்கொள்ளும் மறக்கருணையை நினைப்பித்தது.

திருநாவுக்கரசர் புராணம்

அந்நகரில் அவ்வண்ணம்
அமர்ந்துறையும் நாளின்கண்
மன்னுதிரு மாற்பேறு
வந்தணைந்து தமிழ்பாடிச்
சென்னிமிசை மதிபுனைவார்
பதிபலவுஞ் சென்றிறைஞ்சித்
துன்னினார் காஞ்சியினைத்
தொடர்ந்தபெருங் காதலினால்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

60. திருமாற்பேறு

பதிக வரலாறு:

கச்சிநகர்த் திருமேற்றளிதொழுது திருமாற்பேறு வந்து அணைந்து போற்றிப்பாடி அருளியவற்றுள் ஒன்று இத்திருப் பதிகம். (தி.12 திருநா. புரா. 327.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 173 **பதிக எண்: 60**

திருச்சிற்றம்பலம்

1672. **ஏது மொன்று மறிவில ராயினும்**
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே. 1

1673. **அச்ச மில்லைநெஞ் சேயரன் நாமங்கள்**
நிச்ச லுந்நினை யாய்வினை போயறக்
கச்ச மாவிட முண்டகண் டாவென
வைச்ச மாநிதி யாவர்மாற் பேறரே. 2

1. பொ-ரை: திருமாற்பேற்றில் எழுந்தருளியிருக்கும் இறைவர் ஏதொன்றும் அறியாதவர்கள் ஆனாலும், திருவஞ்செழுத்தை ஓதி உணர்வார்கட்கு வேற்றுமையின்றி அவரவர் உள்ளத்தே தாமும் அம்பிகையுமாய் மகிழ்ந்து வீற்றிருப்பர்.

கு-ரை: ஏதும் ஒன்றும் - பிறிதொன்றும். ஓதி - அன்போடு ஓதி. உணர்வார்கட்கு - திருவைந்தெழுத்தின் உண்மைப் பொருளை அறிபவர்கட்கு. பேதமின்றி - வேறுபாடின்றி. அவரவர் உள்ளத்தே - அவரவரின் மனத்தே. மகிழ்வர் - வீற்றிருந்து அருள்செய்வர்.

2. பொ-ரை: நெஞ்சே! அரன் திருநாமங்களை வினைகள் விட்டு நீங்குவதற்காக, நித்தமும் நினைவாயாக; உனக்கு அச்சமில்லை. திருமாற்பேற்று இறைவர், கைப்புள்ள ஆலகால விடத்தை உண்டதிரு நீலகண்டர் என்று அன்பொடுகூற, சேமித்து வைத்த மாநிதிபோலப் பயன்படுவர்.

Koviloor Digital Library

1674. சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே. 3

1675. இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினால்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே. 4

கு-ரை: நிச்சலும் - நாடோறும். நித்தல் என்பதன் மரூஉ. நினையாய் - நினைப்பாயாக. கச்ச - கைத்த என்பதன் மரூஉ. எல்லோர்க்கும் கசந்த. மா - கரிய. என - என்று சொல்ல. வைச்சமாநிதி - சேமித்து வைத்த மாநிதிபோலப் பயன் தருவர்.

3. பொ-ரை: சாத்திரங்கள் பலவற்றைப் பேசும் தீயவர்களே! கோத்திரம், குலம் முதலியவற்றைக் கொண்டு என்ன செய்வீர்! பணிதற்குரிய பொருள் சிவபரம்பொருளே என்று கொண்டு பணிவீராயின், திருமாற்பேற்று இறைவர் ஒருமாத்திரைப் பொழுதுக்குள் அருளுவர்.

கு-ரை: சிவபெருமானிடத்து அன்பும் நினைப்பும் இல்லா தொழியின் யாவும் பயன்தரா என்ற கருத்து விளக்கப்படுகிறது. சாத்திரம் - சமய இலக்கண வரம்பு. சழக்கர் - அறிவற்றோர்; பொய்யர். கோத்திரம் - சிறந்தார் ஒருவரின் பரம்பரையைச் சுட்டியுரைப்பது. குலம் - சாதி. பாத்திரம் - வணங்கப்படுதற் குரியவர். பணிதிரேல் - பணிவீரேயானால். மாத்திரைக்குள் - கணப்பொழுதிற்குள்.சாத்திரம் கோத்திரம் குலம் முதலாயின வற்றையே கருதி உண்மைப் பொருளை உணரும் பயனை அறியாதொழுகினாரை வெறுத்தது. இதுகொண்டு இவற்றை வெறுப்பதாகக் கூறல் தவறு. தம்மை மறந்த நிலையில் தாமே அவை நீங்கும், தூங்கினவன் கைப்பொருள்போல என்பதாம்.

4. பொ-ரை: அறிவில்லாதவர்களே! சிந்தித்திருந்து சொல்லுவேன்; கேட்பீர்களாக! அரிய தவத்தினாலாய பயனைத்தரும் திருவஞ்செழுத்தை ஓதினால் திருமாற்பேற்று இறைவர் உம்மைப்

Koviloor Digital Library

1676. சாற்றிச் சொல்லுவன் கேண்மின் தரணியீர்
ஏற்றின் மேல்வரு வான்கழ லேத்தினால்
கூற்றை நீக்கிக் குறைவறுத் தாள்வதோர்
மாற்றி லாச்செம்பொ னாவர்மாற் பேறரே. 5

1677. ஈட்டும் மாநிதி சால இழக்கினும்
வீட்டுங் காலன் விரைய அழைக்கினுங்
காட்டில் மாநட மாடுவாய் காவெனில்
வாட்டந் தீர்க்கவும் வல்லர்மாற்பேறரே. 6

பொருந்தியுள்ள நோய்களாகிய பிணிகள் போகும்படி துரத்துவதாகும் ஒப்பற்ற மருந்தும் ஆவர்.

கு-ரை: இருந்து - அமைந்திருந்து. ஏழைகாள் - அறிவற்றவர்களே. அருந்தவந்தரும் - பெறுதற்கரிய தவத்தினாலாம் பயனைத் தரும். பொருந்து - உடலிற் பொருந்திய. நோய் - துன்பம். பிணி - நோய். துரப்பதோர் - நீக்குவதொரு. மன்னும் - நிலைபெற்ற.

5. பொ-ரை: உலகில் உள்ளவர்களே! எல்லோரும் அறியச் சொல்லுவேன் கேட்பீர்களாக; இடபத்தின் மேல் வருவாராகிய திருமாற்பேற்று இறைவர் திருவடிகளை ஏத்தினால், உம்மைக் கொள்ளவரும் கூற்றுவனை நீக்கி, குறைகளை அறுத்து, ஆள்கின்ற மாற்றில்லாத செம்பொன்னை ஒப்பர்.

கு-ரை: சாற்றிச் சொல்லுவன் - பலருமறியக் கூறுவன். தரணியீர் - உலகத்தவர்களே. மாற்றிலா - உரைத்து மாற்றுக் காணுதற்கரிய, மிக உயர்ந்த.

6. பொ-ரை: வருந்திச் சேர்த்த பெருஞ்செல்வத்தை மிகுதியாக இழந்தாலும், அழிக்கும் காலன் விரையவந்து அழைத்தாலும், சுடுகாட்டில் பெரிய நடனம் ஆடுகின்ற பெருமானே! காப்பாற்றுவாயாக! என்றழைத்தால், திருமாற்பேற்றிறைவர் வாட்டம் தீர்க்கவும் வல்லவராவர்.

கு-ரை: ஈட்டும் - சேர்க்கும். மாநிதி - மிக்க செல்வம். சால - மிக. வீட்டும் - நம்மை அழிக்கும். காட்டில் - இடுகாட்டில். கா - காப்பாற்றுவாயாக. எனில் - என்றழைத்தால். வாட்டம் - இயம வாதனையாம் துன்பம்.

Koviloor Digital Library

1678. ஐய னேயர னேயென் றரற்றினால்
உய்ய லாமுல கத்தவர் பேணுவர்
செய்ய பாத மிரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர்மாற் பேறரே. 7

✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ ✽ 8, 9

1679. உந்திச் சென்று மலையை யெடுத்தவன்
சந்து தோளொடு தாளிற வூன்றினான்
மந்தி பாய்பொழில் சூழுமாற் பேறென
அந்த மில்லாதோ ரின்பம் அணுகுமே. 10

திருச்சிற்றம்பலம்

7. பொ-ரை: தலைவனே! சிவபெருமானே! என்று வாய்விட்டு அரற்றினால் உய்தி அடையலாம்; அதுவன்றியும் உலகத்திலுள்ளவர் பேணி மதிப்புச்செய்வர்; அப்பெருமானின் இரண்டு சிவந்த திருப் பாதங்களை நினைத்தால் திருமாற்பேற்று இறைவர் உலகத்தை ஆளவும் வைப்பர்.

கு-ரை: அரற்றினால் - பல்காலும் சொன்னால். செய்ய பாதம் - சிவ்ந்த திருவடிகள். வையம் - உலகம்.

8, 9. ✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽

10. பொ-ரை: செருக்கு தன்னை உந்தித்தள்ளுதலால் சென்று திருக் கயிலாயத்தை எடுத்தவனாகிய இராவணனது சந்தனம் பூசிய தோளும் தாள்களும் இறுமாறு திருவிரலால் ஊன்றிய பெருமானுக்குரியதும், பெண்குரங்குகள் பாயும் பொழில் சூழ்வதுமாகிய திருமாற்பேறு என்று கூறினால் முடிவில்லாத ஒப்பற்ற இன்பம் அணுகும்.

கு-ரை: உந்திச் சென்று - தேரைச் செலுத்திக்கொண்டு சென்று எனலுமாம். சந்து - மூட்டுவாய். இற - நொறுங்க. அந்தம் - முடிவு. அணுகும் - நெருங்கும்.

Koviloor Digital Library

61. திருவரிசிற்கரைப்புத்தூர்

பதிக வரலாறு:

திருப்பழையாறை வடதளியினின்றும் திருவானைக் காவிற்குச் செல்லும்பொழுது பொன்னியின் இருமருங்கும் உள்ள சிவதலங்களைப் பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத் தமிழ் மாலை. (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 174 பதிக எண்: 61

திருச்சிற்றம்பலம்

1680. முத்தூ ரும்புனல் மொய்யரி சிற்கரைப்
புத்தூ ரன்னடி போற்றியென் பாரெலாம்
பொய்த்தூ ரும்புல னைந்தொடு புல்கிய
மைத்தூ ரும்வினை மாற்றவும் வல்லரே. 1

1681. பிறைக்க ணிச்சடை யெம்பெரு மானென்று
கறைக்க ணித்தவர் கண்ட வணக்கத்தாய்

1. பொ-ரை: மொய்க்கின்ற முத்துக்கள் ஊர்ந்து வரும் தண்ணீரை உடைய அரிசிலாற்றின் கரையில் உள்ள புத்தூரில் உறையும் பெருமான் ''திருவடி போற்றி'' என்று கூறுவோரெல்லாம், பொய்யுடையதாகி ஊர்கின்ற ஐந்து புலன்களோடு, பொருந்திய வன்மை உடையதாய் ஊர்கின்ற வினைகளையும் மாற்றும் வல்லமை உடையவர்கள்.

கு-ரை: முத்தூரும் புனல் - முத்துக்களை ஊர்ந்து செல்லும் தண்ணீர். அரிசிற்கரை - அரிசிலாற்றங்கரை. மொய் - நிறைந்த. போற்றியென்பாரெலாம் - போற்றி என்று சொல்வாரெல்லாரும். பொய்த்தூரும் புலன் ஐந்து - அழிவையே மேற்கொண்டுள்ள ஐந்து புலன்கள். புல்கிய - சேர்ந்த. மைத்து ஊரும் வினை - கரிதாய் மயக்கம் செய்து வருகின்ற வினைகள். மாற்றவும் - நீக்கவும். வல்லர் - வல்லமையுடையர்.

2. பொ-ரை: வெண்பிறையாகிய தலைக் கண்ணியணிந்த சடையுடைய எம்பெருமானே என்று கூறி, தம்முடைய குற்றங்களை எண்ணிஉணர்ந்த நல்லடியார்கள் கண்ட வணக்கத்துக்குரியவரே!

Koviloor Digital Library

உறக்க ணித்துரு காமனத் தார்களைப்
புறக்க ணித்திடும் புத்தூர்ப் புனிதரே. 2

1682. அரிசி லின்கரை மேலணி யார்தரு
புரிசை நந்திருப் புத்தூர்ப் புனிதனைப்
பரிசொ டும்பர விப்பணி வார்க்கெலாம்
துரிசில் நன்னெறி தோன்றிடுங் காண்மினே. 3

1683. வேத னைமிகு வீணையில் மேவிய
கீத னைக்கிள ருந்நறுங் கொன்றையம்
போத னைப்புனல் சூழ்ந்தபுத் தூரனை
நாத னைநினைந் தென்மனம் நையுமே. 4

மிகுதியாகக் கருத்தில் எண்ணி உருகாத மனத்தை உடையவர்களைப் புறக்கணித்திடுகின்ற புத்தூரில் எழுந்தருளியுள்ள புனிதரே! (எம்மையாண்டருள்க).

கு-ரை: பிறைக்கண்ணிச் சடை - பிறையாகிய தலைமாலையை உடைய சடை. கறைக்கணித்தவர் - தம் குற்றங்களை எண்ணி ஆராய்ந்தவர். கண்டவணக்கத்து ஆய் - தரிசித்த வணக்கத்தை மேற்கொண்டு. உற - பொருந்த. கணித்து - இறைவன் புகழைஎண்ணி. புறக்கணித்திடும் - வெறுக்கும்.

3.பொ-ரை: அரிசிலாற்றுக்கரையின்மேல் உள்ள அழகு நிறைந்த மதிலை உடைய நம் திருப்புத்தூர்ப் புனிதரை, வணங்கவேண்டிய முறைமைப்படிப் பரவிப் பணிவார்க்கெல்லாம் குற்றமற்ற நன்னெறி தோன்றும்; காண்பீராக.

கு-ரை: அரிசிலின் - அரிசிலாற்றின். அணி ஆர்தரு - அழகு பொருந்திய. புரிசை - மதில்களோடு கூடிய. புனிதன் - தூயன். பரிசொடும் - நல்ல தன்மையோடும். பரவி - தோத்திரித்து. பணிவார்க் கெல்லாம் - வணங்குவார் எல்லாருக்கும். துரிசில் நன்னெறி - குற்றமற்ற நல்ல வீட்டுநெறி. தோன்றிடும் - உண்டாம்.

4. பொ-ரை: வேதங்கள் ஓதுபவனை, வீணையில் மிகுகின்ற கீதங்கள் உடையவனை, மணம் வீசுகின்ற கொன்றையாகிய அழகிய போதினை அணிந்தவனை, அரிசிற் புனல் சூழ்ந்த புத்தூரில் உள்ள நாதனை, என் மனம் நினைந்து நெகிழ்கின்றது.

Koviloor Digital Library

1684. அருப்புப் போன்முலை யாரல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர்நிலை விட்டுநல் லிட்டமாய்த்
திருப்புத் தூரனைச் சிந்தை செயச்செயக்
கருப்புச் சாற்றிலும் அண்ணிக்குங் காண்மினே. 5

1685. பாம்பொ டுமதி யும்படர் புன்சடைப்
பூம்புன லும்பொ திந்தபுத் தூருளான்
நாம்ப ணிந்தடி போற்றிட நாள்தொறும்
சாம்ப லென்பு தனக்கணி யாகுமே. 6

கு-ரை: வேதனை - வேதங்களின் வடிவாயுள்ளவனை, அல்லது வேதங்களை அருளிச்செய்தவனை. மிகு - சிறந்த. வீணையில் மேவிய கீதனை - வீணையில் பொருந்திய இசை வடிவானவனை. கிளரும் - விளங்கும். நறும் - மணங்கமழும். கொன்றையம் போதனை - கொன்றைமலரணிந்தவனை. புனல்சூழ்ந்த - நீர்வளம் சூழ்ந்த.

5. பொ-ரை: கோங்கின் அரும்புபோன்ற முலையுடைய பெண்களோடு கூடித் துன்பங்கள் மிகுந்த வாழ்க்கையின்மேல் விருப்பம் சேர்கின்ற நிலையைவிட்டு நீங்கி, நல்ல பக்தி கொண்டு, திருப்புத்தூரில் உள்ள இறைவனைச் சிந்திக்கச்சிந்திக்கக் கரும்புச் சாற்றைவிடத் தித்திக்கும்; காண்பீராக.

கு-ரை: அரும்புபோல் - தாமரையரும்புபோலும். அருப்பு - வலித்தல் விகாரம். அல்லல் - துன்பம் தருகின்ற. விருப்புச் சேர் நிலை - விருப்பம் சேர்க்கும் தன்மை. நல்லிட்டமாய் - நல்ல விருப்பத் தோடு. சிந்தை செயச்செய - மனத்தால் நினைக்க நினைக்க. அண்ணிக்கும் - இனிக்கும்.

6. பொ-ரை: பாம்பும், பிறையும், பொலிவுள்ள கங்கைநதியும் படர்ந்த செஞ்சடையின்கண் பொதிந்த புத்தூரில் உள்ள புனிதர், நாள்தொறும் நாம் பணிந்து, தன் திருவடியைப் போற்றிட, தான் சாம்பலையும், எலும்பையும் தமக்கு அணியாக்கொள்வர்

கு-ரை: படர் - தங்கிய. புன் - மெல்லிய. பூம்புனல் - அழகிய கங்கையாறு. பொதிந்த - மறைத்துவைத்த. நாம் பணிந்து நாள்தோறும் போற்றிடப் புத்தூருளான் என வினை முடிவு செய்க. அவனுடைய

Koviloor Digital Library

1686. கனல்அங் கைதனி லேந்திவெங் காட்டிடை
அனலங் கெய்திநின் றாடுவர் பாடுவர்
பினலஞ் செஞ்சடை மேற்பிறை யுந்தரு
புனலுஞ் சூடுவர் போலும்புத் தூரரே. 7

1687. காற்றி னுங்கடி தாகி நடப்பதோர்
ஏற்றி னும்மிசைந் தேறுவ ரென்பொடு
நீற்றி னையணி வர்நினை வாய்த்தமைப்
போற்றி யென்பவர்க் கன்பர்புத் தூரரே. 8

அடையாளமாய் அழகு செய்வன சாம்பலும், என்பும் ஆம். அணி - அழகு விளைப்பனவாகும்.

7. பொ-ரை: புத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவர் தம் அழகிய கையினில் தீயையேந்தி, வெவ்விய காட்டிடை நெருப்புப் பொருந்திய இடத்திடை எய்தி நின்று ஆடும் இயல்பினர்; பாடும் இயல்பினர்; பின்னுதற்குரிய அழகிய செஞ்சடைமேல் பிறையும் கங்கையும் சூடும் இயல்பினர்.

கு-ரை: கனல் - நெருப்பு. அங்கை - அகங்கையில். வெங் காட்டிடை - இடுகாட்டில். அங்கு, அசை. நெருப்பு அவ்விடங்களில் பற்றியெரியும்படி அனல்வீசி என்க. பினலம்செஞ்சடை - பின்னியது போன்று முறுக்குண்ட அழகிய சிவந்த சடை. தருபுனல் - ஓடிவரும் கங்கை அல்லது மக்கட்கு நல்வாழ்வு தரும் கங்கை என்க. போலும் - அசைப்பிலயம் என்ற பாடத்திற்குப் பிரளயம் என்பதன் இடைக் குறை என உரைக்க.

8. பொ-ரை: புத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவர். காற்றைவிட விரைந்து நடப்பதாகிய ஒப்பற்ற இடபத்தினும் மனம் ஒத்து ஏறுவர்; எலும்பும் திருநீறும் அணிவர்; ‘தம்மையே நினைவாகிப் போற்றி’ என்று வழிபடுவார்க்கு அன்பர் ஆவர்.

கு-ரை: கடிதாகி - விரைவுடையதாய். ஏற்றினும் - இடபத்தின் கண்ணும். இசைந்து - விரும்பி. நினைவாய்த் தம்மைப் போற்றி யென்பார்க்கு அன்பர்.

Koviloor Digital Library

1688. முன்னும் முப்புரஞ் செற்றன ராயினும்
அன்ன மொப்பர் அலந்தடைந் தார்க்கெலாம்
மின்னு மொப்பர் விரிசடை மேனிசெம்
பொன்னு மொப்பர்புத் தூரெம் புனிதரே. 9

1689. செருத்த னால்தன தேர்செல வுய்த்திடும்
கருத்த னாய்க்கயி லையெடுத் தானுடல்
பருத்த தோள்கெடப் பாதத் தொருவிரல்
பொருத்தி னார்பொழி லார்ந்தபுத் தூரரே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: புத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவர், முன்னும் மூன்றுபுரங்களைச் சினந்தவராயினும், வருந்தித் தம்மையடைந்தவர்க் கெல்லாம் அன்னம் போல்வர்; விரிந்த சடை ஒளி விளங்கும் மின்னலென உடையவர்; திருமேனி செம்பொன்னென உடையவர் ஆவர்.

கு-ரை: முன்னும் - முற்காலத்தும். செற்றனராயினும் - அழித்தனரானாலும். அலந்து - வருந்தி, அடைந்தார்க்கெல்லாம் - அடைந்தவரெல்லார்க்கும். அன்னம் - இளைப்பாற்றும் உணவு - திருவெண்ணீறணிந்த தோற்றத்தால் அன்னத்தை ஒப்பர். விரிசடையால் மின்னலை ஒப்பர். செம்பொன்னும் ஒப்பர் என்க.

10. பொ-ரை: பொழில்கள் நிறைந்த புத்தூர்த் தலத்திறைவர், பொருதற்குத் தன்னுடைய தேர் செல்லுமாறு செலுத்துகின்ற கருத்தொடு கூடியவனாகிய இராவணன் திருக்கயிலையை எடுக்கலுற்ற போது, அவன் உடலும் பருத்த தோள்களும் சிதைந்து கெடும்படியாகத் தம் திருப்பாதத்து ஒரு திருவிரலைப் பொருத்தியவர் ஆவர்.

கு-ரை: செருதன்னால் - போரால். தன - தன்னுடையவான. உய்த்திடும் - செலுத்தும். கருத்தனாய் - எண்ணமுடையவனாய்.

Koviloor Digital Library

62. திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

பதிக வரலாறு:

திருப்பழையாறை வடதளியினின்றும் திருவானைக் காவிற்குச் செல்லும் பொழுது பொன்னியின் இருமருங்கும் உள்ள சிவதலங்களைப் பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத் தமிழ்மாலை. (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 175 பதிக எண்: 62

திருச்சிற்றம்பலம்

1690. ஒருத்த னைமூ வுலகொடு தேவர்க்கும்
அருத்த னையடி யேன்மனத் துள்ளமர்
கருத்த னைக்கடு வாய்ப்புன லாடிய
திருத்த னைப்புத்தூர்ச் சென்றுகண் டுய்ந்தெனே. 1

1691. யாவ ருமறி தற்கரி யான்றனை
மூவ ரின்முதல் லாகிய மூர்த்தியை
நாவி னல்லுரை யாகிய நாதனைத்
தேவனைப் புத்தூர்ச் சென்றுகண் டுய்ந்தெனே. 2

1. பொ-ரை: ஒப்பற்றவனும், மூன்றுலகங்களுக்கும் தேவர்க்கும் பொருளாய் உள்ளவனும், அடியேன் மனத்துள் அமர்கின்ற கருத்தனும், தீயாடிய திருத்தமுற்றவனுமாகிய பெருமானைப் புத்தூரிற் சென்று, கண்டு, உய்ந்தேன்.

கு-ரை: ஒருத்தனை - மூவுலகொடு தேவர்க்கும் ஒருவன் என்று ஏத்தப்படுபவனை. அருத்தனை - பொருளாயிருப்பவனை. கருத்தனை - முதற் பொருளானவனை. கடுவாய்ப்புனல் - கடுவாய் என்னும் ஆற்றின் தண்ணீர். திருத்தன் - திருத்தமானவன். உய்ந்தேன் என்பது உய்ந்தென் எனக் குறுகியது. ஏ - அசை. கடுவாய் நதிக்கரையில் உள்ள புத்தூர் என்க.

2. பொ-ரை: எல்லோரானும் அறிதற்கு அருமை உடையவனும், மும்மூர்த்திகளுக்கும் முதலாகிய கடவுளும், நாவில் நல்ல

Koviloor Digital Library

1692. அன்ப னையடி யாரிடர் நீக்கியைச்
செம்பொ னைத்திக ழுந்திருக் கச்சியே
கம்ப னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
நம்ப னைக்கண்டு நானுய்யப் பெற்றெனே. 3

1693. மாதனத்தைமா தேவனை மாறிலாக்
கோத னத்திலைந் தாடியை வெண்குழைக்
காத னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
நாத னைக்கண்டு நானுய்யப் பெற்றெனே. 4

உரையாகி அருளும் நாதனும், தேவனுமாகிய பெருமானைப் புத்தூரிலே சென்று கண்டு உய்ந்தேன்.

கு-ரை: மூவரின் முதலாகிய மூர்த்தியை - அரி அயன் அரன் என்னும் மூவரில் தலைவராயிருப்பவனை. நாவில் நல்லுரையாகிய நாதன் - நாவின்கண்ணிருந்து வரும் நல்ல உரைகளின் வடிவா யிருப்பவன்.

3. பொ-ரை: அன்பே வடிவானவனும், அடியார்கள் துன்பங் களை நீக்குபவனும், செம்பொன் மேனியனும் விளங்கும் திருக்கச்சி யேகம்பத்தில் வீற்றிருப்பவனும் ஆகிய கடுவாய்க் கரைத் தென்புத் தூரில் உள்ள நம் பெருமானைக் கண்டு நான் உய்யப் பெற்றேன்.

கு-ரை: இடர் - துன்பம். தென்புத்தூர் - கடுவாயாற்றின் தென் கரையிலமைந்த புத்தூர். நம்பன் - மேலானவன், பழையவன்.

4. பொ-ரை: பெருஞ்செல்வமாகிய அருட்செல்வம் உடையானும், மகாதேவனும், மாறுபாடில்லாத பஞ்சகவ்வியத் திரு முழுக்குக் கொள்பவனும், சங்கவெண்குழையணிந்த காதுடையவனும் ஆகிய கடுவாய்க்கரைத் தென்புத்தூரின் நாதனைக் கண்டு நான் உய்யப்பெற்றேன்.

கு-ரை: மா - பெரிய. தனத்தை - செல்வங்களின் வடிவா யிருப்பவனை. மாறிலா - ஒப்பில்லாத, கோதனத்தில் - பசுவினிடம் கிடைக்கும் செல்வங்களில் அல்லது பசுவின் பாற்காம்புகளில். ஐந்து - பஞ்சகவ்வியம்.

Koviloor Digital Library

1694. குண்டு பட்டகுற் றந்தவிர்த் தென்னையாட்
கொண்டு நற்றிறங் காட்டிய கூத்தனைக்
கண்ட னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
அண்ட னைக்கண் டருவினை யற்றெனே. 5

1695. பந்த பாச மறுத்தெனை யாட்கொண்ட
மைந்த னைம்மண வாளனை மாமலர்க்
கந்த நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எந்தை யீசனைக் கண்டினி தாயிற்றே. 6

1696. உம்ப ரானை யுருத்திர மூர்த்தியை
அம்ப ரானை யமலனை யாதியைக்
கம்பு நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எம்பி ரானைக்கண் டின்பம தாயிற்றே. 7

5. பொ-ரை: மிகுந்த பல குற்றத்தை நீக்கி என்னை ஆட்கொண்டு நல்ல அருள் திறம் காட்டிய கூத்தனும், திருநீல கண்டனும் ஆகிய கடுவாய்க்கரைத் தென்புத்தூரில் பொருந்தியிருக்கும் பெருமானைக் கண்டு அருவினைகள் அற்றேன்.

கு-ரை: குண்டுபட்ட குற்றம் - சமணர்களிடையே அகப்பட்ட குற்றம். தவிர்த்து - நீக்கி. கண்டனை - நீலகண்டனை. அண்டன் - உலகங்களின் வடிவானவன். அற்றேன் - நீங்கினேன்.

6. பொ-ரை: பாசமாகிய கட்டினை அறுத்து, என்னை ஆட்கொண்ட பெருவீரனும், மணவாளக்கோலம் உடையானும், பெரிய மலர்களின் நறுமணம் மிக்க நீரை உடைய கடுவாய்க் கரையிலுள்ள தென்புத்தூரில் உள்ள எந்தையும் ஆகிய ஈசனைக் கண்டதனால் அடியேற்கு இனிதாயிற்று.

கு-ரை: பந்தபாசம் - அன்புப் பிணிப்பாகிய ஆசை. மைந்தனை - வலிமையுடையவனை. கந்தம் - மணம். கண்டு - காணுதலால். இனிதாயிற்று - என் வாழ்வு இனிதாயிற்று என்க.

7. பொ-ரை: தேவர் உலகத்துக்கும் அப்பால் உள்ளவனும், உருத்திரமூர்த்தியும், அம்பர்த்தலத்து எழுந்தருளியிருப்பவனும், மலம்

Koviloor Digital Library

1697. மாசார் பாச மயக்கறு வித்தெனுள்
நேச மாகிய நித்த மணாளனைப்
பூச நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
ஈச னேயென இன்பம தாயிற்றே. 8

1698. இடுவா ரிட்ட கவளங் கவர்ந்திரு
கடுவா யிட்டவர் கட்டுரை கொள்ளாதே
கடுவாய்த் தென்கரைப் புத்தூ ரடிகட்காட்
படவே பெற்றுநான் பாக்கியஞ் செய்தெனே. 9

அற்றவனும், ஆதியானவனும், சங்குகளையுடைய நீர்பாயும் கடுவாய்க்கரைக்கண் தென்புத்தூரில் உள்ளவனும் ஆகிய எம்பெருமானைக் கண்டதனால் அடியேற்கு இன்பம் ஆயிற்று.

கு-ரை: உம்பரானை - தேவர்கள் தலைவனை. உருத்திர மூர்த்தியை - அழித்தற்கடவுளாய்ச் சங்காரகாரணனாயிருப்பவனை. அம்பரானை - ஆடையணிந்தவனை அல்லது அம்பரனை எனப் பிரித்து அழகிய மேலானவனை என்க. அம்பர் என்னும் தலத்திலிருப்பவனை எனலுமாம். அமலன் - குற்றமற்றவன். ஆதியை - முழுமுதற் கடவுளை. கம்பு நீர் - சங்குகளை உடைய நீர்.

8. பொ-ரை: குற்றம் நிறைந்த பாசமாகிய மயக்கத்தை அறுமாறு செய்து என்னுள்ளத்துக்குள் நேசம் ஆகிய நித்தமணாளன் என்ற திருப்பேர்கொண்டவனும், பூசத்திருநாளில் ஆடற்குரிய கடுவாய்க் கரைத் தென்புத்தூரின்கண் உள்ளவனும் ஆகிய ஈசனே என்று கூற அடியேற்கு இன்பமாயிற்று.

கு-ரை: மாசு ஆர் - குற்றம் பொருந்திய. பாசமயக்கு - ஆசையாகிய மயக்கத்தை. அறுவித்து - நீங்கச்செய்து. நேசமாகிய - அன்பு வடிவமாகிய. நித்தமணாளனை - என்றும் மணவாளக் கோலத்திலிருப்பவனை. பூசநீர் - பூசநாளில் தீர்த்த விசேடமுடையது.

9. பொ-ரை: பிச்சையிடுவார் இட்ட சோற்றுருண்டையினைப் பெற்றுத் தம் பெரிய கொடிய வாயில் இடும் சமணர்களது கட்டியுரைக்கும் பேச்சைக்கொள்ளாமல், கடுவாய்த்தென்கரைப் புத்தூரின்கண் எழுந்தருளியுள்ள அடிகட்கு ஆட்படப் பெற்று நான் பெரும் பாக்கியம் செய்தவன் ஆயினேன்.

Koviloor Digital Library

1699. அரக்க னாற்ற லழித்தவன் பாடல்கேட்
டிரக்க மாகி யருள்புரி யீசனைத்
திரைக்கொள் நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
இருக்கு நாதனைக் காணப்பெற் றுய்ந்தெனே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: இடுவாரிட்ட - கொடுக்கும் குணமுள்ளவர் இட்ட. கவளம் - சோற்றுருண்டை, கவர்ந்து - உண்டு. இரு - பெரிய. கடுவாயிட்டவர் - கடுக்காயை வாயின்கண் இட்டவர். கட்டுரை - அறிவுரை. கொள்ளாதே - ஏற்றுக்கொள்ளாமல்; தம்முன்னைநிலை நினைந்து கூறியது. ஆட்படவே பெற்று - ஆளாகுந்தன்மையையே பெற்று. நான் பாக்கியம் செய்தேன் - நான் சிறந்த பாக்கியத்தைச் செய்தவனானேன்.

10. பொ-ரை: இராவணனது ஆற்றலை அழித்து அவன்பாடல் கேட்டுப் பின்னர் இரங்கி அருள்புரியும் ஈசனாகிய, அலைகளைக் கொண்ட கடுவாய்க்கரைத் தென்புத்தூரில் இருக்கும் நாதனைக் காணப்பெற்று உய்ந்தேன்.

கு-ரை: ஆற்றல் - வலிமை. திரைக்கொள் - அலைகளைக் கொண்ட.

திருவாப்பனூர்ப் புராணம்

மண்ணாசை பெண்ணாசை மூன்றுநீத்து
மனத்தாசை யறவெறிந்தா னந்த நீர்பாய்
கண்ணாசை சிவபெருமான் காட்சிக் காக்கிக்
கருத்தாசை யவனருட்கே கைம்மா றாக்கி
யுண்ணாசை மருந்தனையார் புகலூர் மன்னு
முழவாரப் படையாளி யுருகிப்பாடும்
பண்ணாசைத் திருநாவுக்க கரையன் பாதம்
பத்திபழுத் தொழுகநெஞ்சிற் பதித்து வாழ்வாம்.

- கந்தசாமிப் புலவர்.

Koviloor Digital Library

63. திருத்தென்குரங்காடுதுறை

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் வேள்விக்குடி, எதிர்கொள்பாடி பணிந்து திருக்கோடிகா, ஆவடுதண்துறை இவற்றை வணங்கச் செல்லும் பொழுது, தென்குரங்காடுதுறையைப் பணிந்து பரவியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 176 பதிக எண்: 63

திருச்சிற்றம்பலம்

1700. இரங்கா வன்மனத் தார்க ளியங்குமுப்
புரங்கா வல்அழி யப்பொடி யாக்கினான்
தரங்கா டுந்தட நீர்ப்பொன்னித் தென்கரைக்
குரங்காடு துறைக் கோலக்க பாலியே. 1

1701. முத்தி னைமணி யைப்பவ ளத்தொளிர்
தொத்தி னைச்சுடர்ச் சோதியைச் சோலைசூழ்
கொத்த லர்குரங் காடு துறையுறை
அத்த னென்னஅண் ணித்திட்டிருந்ததே. 2

1. பொ-ரை: அலைகள் ஆடுகின்ற பெரிய நீரினை உடைய காவிரியின் தென்கரையில் உள்ள குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் அழகிய கபாலம் கைக்கொண்ட பெருமான், இரங்காத வலிய மனத் தவர்களாகிய அரக்கர்கள் இயங்குகின்ற முப்புரங்காவல் அழியுமாறு பொடியாக்கியவன் ஆவன்.

கு-ரை: இரங்கா வன்மனத்தார்கள் - பிறர் துன்பங்கண்டு இரங்காத கல்மனங்கொண்டவர்கள். இயங்கும் - ஊர்ந்து செல்லும். முப்புரம் - மூன்று கோட்டைகள். காவல் அழிய - காத்தல் தொழில் அழியும்படி. பொடியாக்கினான் - நீறாக்கியவன். தரங்கம் ஆடும் - அலைகள் அசையும். தடநீர் - மிக்கநீர். கோலம் - அழகிய.

2. பொ-ரை: முத்தும், மணியும், பவளத்தொடு ஒளிர்கின்ற கொத்தும், சுடர்விடும் சோதியும், சோலைகள் சூழ்ந்த பூங்கொத்துக்கள்

Koviloor Digital Library

1702. குளிர்பு னற்குரங் காடுது றையனைத்
தளிர்நி றத்தையல் பங்கனைத் தண்மதி
ஒளிய னைந்நினைந் தேனுக்கென் னுள்ளமும்
தெளிவி னைத்தெளி யத்தெளிந் திட்டதே. 3

1703. மணவன் காண்மலை யாள்நெடு மங்கலக்
கணவன் காண்கலை ஞானிகள் காதலெண்
குணவன் காண்குரங் காடுதுறைதனில்
அணவன் காண்அன்பு செய்யு மடியர்க்கே. 4

மலர்கின்ற குரங்காடுதுறை உறையும் அத்தனும் என்று கூற உள்ளத்தில் தித்தித்திருந்தனன் அப்பெருமான்.

கு-ரை: பவளத்து ஒளிர் தொத்து - ஒளிர் பவளத் தொத்து என மாறுக. விளங்கிய பவளக் கொத்துப் போன்றவன் என்பது பொருள். கொத்தலர் சோலைசூழ் குரங்காடுதுறை என்க. அண்ணித்தல் - இனித்தல்.

3. பொ-ரை: குளிர்கின்ற நீர் சூழ்ந்த குரங்காடுதுறையில் இருப்பவனும், மாந்தளிரைப் போன்ற நிறம் உடைய மேனியினளாகிய உமாதேவியைப் பங்கிற்கொண்டவனும் தண்ணியமதி ஒளியனும் ஆகிய பெருமானை நினைந்த அடியேனுக்கு என் உள்ளமும் தெளிவுறும்படித் தெளிவினைத் தெளிந்தது.

கு-ரை: தளிர்நிறத் தையல் - தளிர்போன்ற நிறத்தையுடைய பார்வதி. உள்ளம் - மனம். தெளிவினை - தெளியவேண்டிய பொருளாயுள்ள இறைவனை. தெளிய - விளங்க, தெளிந்திட்டது - உணர்ந்து தெளிந்து கொண்டது.

4. பொ-ரை: அன்புசெய்யும் அடியார்க்கு மணவாளக் கோலம் உடையவனும், மலைமகளாகிய உமாதேவிக்கு மங்கலக்கணவனும், கலைஞானிகளாற் காதலிக்கப்பெறுவானும், எண் குணத்தானும், குரங்காடுதுறையில் அண்ணியவனும், ஆவன்.

கு-ரை: மணவன் - எப்பொழுதும் மணவாளனாயிருப்பவன். மலைமகளாய பார்வதிக்கு நித்யமங்கலத்தைச் செய்யும் கணவன் என்க. கலைஞானிகளால் காதல் செய்யப்படும் எண்குணவன் என்க.

Koviloor Digital Library

1704. ஞாலத் தார்தொழு தேத்திய நன்மையன்
காலத் தான்உயிர் போக்கிய காலினன்
நீலத் தார்மிடற் றான்வெள்ளை நீறணி
கோலத் தான்குரங் காடு துறையனே. 5

1705. ஆட்டி னான்முன் அமணரோ டென்றனைப்
பாட்டி னான்றன பொன்னடிக் கின்னிசை
வீட்டி னான்வினை மெய்யடி யாரொடும்
கூட்டி னான்குரங் காடு துறையனே. 6

குணவன் - குணங்களை உடையவன். எண்குணங்களாவன - தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், இயற்கை உணர்வினனாதல், பேரருளுடைமை, முடிவிலாற் றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, முற்றுமுணர்தல் என இவை. அணவன் - அணுகியிருப்பவன், அன்பு செய்யும் அடியார்க்கு அருளு வதற்காகக் குரங்காடுதுறையில் அணவன் என முடிவு செய்க.

5. பொ-ரை: குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் இறைவன் உலகத்தாராற் றொழுதேத்தப்பட்ட நன்மை உடையவனும், காலன் உயிர்போகச் செய்த திருக்காலை உடையவனும், நீலநிறம் நிறைந்த திருமிடற்றை உடையவனும், வெண்ணீறணிந்த கோலத்தை உடையவனும் ஆவன்.

கு-ரை: ஞாலத்தார் - உலகத்தார். காலத்தான் - காலன், இயமன். நீலம் ஆர்மிடறு - நீலக்கறை பொருந்திய கழுத்து; அத்து சாரியை.

6. பொ-ரை: குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் இறைவன், முன்னர் என்னை அமணர்களோடு ஆட்டுவித்தவனும், பின்னர்த் தன் பொன்னார் திருவடிகளுக்கு இனிய பண்ணிசையை என்னைப் பாட்டுவித்தவனும், வினையை வீட்டியவனும், மெய்யடியார்களோடு என்னைக் கூட்டுவித்தவனும் ஆவன்.

கு-ரை: அமணரோடு என்றனை ஆட்டினான் என்க. ஆட்டினான் - கூட்டிஆட்டுவித்தான். தன - தன்னுடையனவாகிய. பொன்னடிக்கு - பொன்போன்று பொதிதற்குரிய திருவடிகளுக்கு. பாட்டினான் - திருப் பாடல்களைப் பாடச்செய்தான். வினை

Koviloor Digital Library

1706. மாத்தன் தான்மறை யார்முறை யான்மறை
ஓத்தன் தாரகன் றன்னுயி ருண்டபெண்
போத்தன் தானவன் பொங்கு சினந்தணி
கூத்தன் தான்குரங் காடு துறையனே. 7

1707. நாடி நந்தம ராயின தொண்டர்காள்
ஆடு மின்அழு மின்தொழு மின்னடி
பாடு மின்பர மன்பயி லும்மிடம்
கூடு மின்குரங் காடு துறையையே. 8

வீட்டினான் - இருவினைகளை அழியச் செய்தான். மெய்யடியார் - உண்மை அடியார்.

7. பொ-ரை: வேதங்களில் கூறிய முறையால் மாற்றுயர்ந்த பொன்போன்றவனும், வேதசாகைகளை அருளிச்செய்தவனும், தாரகனை அடக்கிய காளியைவென்ற வீரனும், முயலகனது சினத்தைத் தணித்த கூத்தனுமாய் விளங்குபவன் குரங்காடுதுறை இறைவன்.

கு-ரை: மாத்தன் - பொன்னின் உயர்ந்த மாற்றுப் போன்றவன்; பெரியவன். மறையார் முறையால் - வேதங்களிற் பொருந்திய இலக்கண நெறியால் தான் மாத்தன் என மாற்றுக. மறைஓத்தன் - வேதமாகிய உண்மை நூலை உடையவன். தாருகன் தன் உயிர் உண்ட பெண் போத்து - தாருகன் என்ற அரக்கனை அழித்து அவனுடைய உயிரைப் போக்கிய காளியை வென்ற. போத்தன் - வீரன். போத்தன் தானவன் - வீரத்துடன் வந்த முயலகன். சினம் - இருவருடைய கோபத்தை. தணி - அடக்கிய. கூத்தன் - திருக்கூத்தாடுபவன்.

8. பொ-ரை: நம் தமராகிய தொண்டர்களே! பரமன் பயிலும் இடமாகிய குரங்காடுதுறையையே மனத்தால் நாடி ஆடுவீர்களாக; அழுவீர்களாக; தொழுவீர்களாக; அவன் அடியே பாடுவீர்களாக; அத்தலத்தையே கூடுவீர்களாக.

கு-ரை: நாடி - சென்று. நம் தமராய - நம்முடைய சுற்றத் தினராய. ஆடுமின் - மகிழ்ச்சிக் கூத்தாடுங்கள். ''ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகிப் பாடுகின்றிலை, பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர் சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை, துணையிலி பிணநெஞ்சே, தேடுகின்றிலை

Koviloor Digital Library

1708. தென்றல் நன்னெடுந் தேருடை யானுடல்
பொன்ற வெங்கனல் பொங்க விழித்தவன்
அன்ற வந்தக னைஅயிற் சூலத்தால்
கொன்ற வன்குரங் காடு துறையனே. 9

1709. நற்ற வம்செய்த நால்வர்க்கு நல்லறம்
உற்ற நன்மொழி யாலருள் செய்தநல்
கொற்ற வன்குரங் காடு துறைதொழப்
பற்றுந் தீவினை யாயின பாறுமே. 10

தெருவுதோறலைகிலை செய்வதொன்றறியேனே''. (தி.8 திருவாசகம் - 35.)

9.பொ- ரை: குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் 'இறைவன், தென்றலாகிய நல்ல நீண்டுயர்ந்த தேரை உடையானாகிய காமன் உடல் அழியுமாறு வெவ்விய அனல் பொங்க விழித்தவனும், அன்று காலனைக் கூரிய சூலத்தாற் கொன்றவனும் ஆவன்.

கு-ரை: தென்றல் தேருடையான் - மன்மதன். நன்னெடும் - நல்ல பெரிய. பொன்ற - அழிய. வெங்கனல் பொங்க - கொடிய கோபத்தீ பெருக. விழித்தவன் - நெற்றிக்கண்ணால் சினந்தவன். அன்று அவ்வந்தகன் எனப் பிரித்து மார்க்கண்டேயர் வேண்டிய அன்று அந்த இயமனை என்க. அயில் - கூரிய.

10. பொ-ரை: நல்ல தவம் புரிந்தவர்களாகிய சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கும் நல் அறம் மிகுந்த நன்மொழியான் அருள் செய்தவனாகிய நல்ல கொற்றவனுறைகின்ற குரங்காடுதுறையைத் தொழுதால் பற்றுகின்ற தீவினையாகியவை கெடும்.

கு-ரை: நால்வர் - சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வர். உற்ற - பொருத்தமான.

நல்மொழி - நல்ல உபதேச மொழி. பற்றும் - நம்மைப் பிடிக்கும். பாறும் - அழியும்.

Koviloor Digital Library

1710. கடுத்த தோரரக் கன்கயி லைம்மலை
எடுத்த தோள்தலை யிற்றல றவ்விரல்
அடுத்த லும்மவ னின்னிசை கேட்டருள்
கொடுத்த வன்குரங் காடு துறையனே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் இறைவன், சினந்த தேரை உடைய இராவணனது, திருக்கயிலையை எடுக்கலுற்ற தோள்களும் தலையும் இற்று, அவன் அலறும்படியாகத் திருவிரலை அடுத்தவன்; பின் அவன் இன்னிசை கேட்டு அருள்கொடுத்தவன் ஆவன்.

கு-ரை: கடுத்த - விரைவான். தலையிற்றலற - தலை நெரிந்தலற. விரல் அடுத்தலும் - விரல் ஊன்றலும்.

உறையூர்ப் புராணம்

கந்தைமிகை யாங்கருத்துங் கையுழவா
ரப்படையுங் கவின்வெண் ணீறுஞ்
சிந்தையிடை யறாவன்புஞ் சிவஞானம்
பழுத்தொழுகு செய்யவாயுந்
தந்தையொடு தாயிலான் றிருவடிதை
வருமனமுந் தாரைக் கண்ணு
நிந்தையறு முழுத்துறவு முடையபிரா
னடிபணிந்து நீடு வாழ்வாம்.

- மீனாட்சி சுந்தரம்பிள்ளை

Koviloor Digital Library

64. திருக்கோழம்பம்

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் வேள்விகுடி, எதிர்கொள்பாடி பணிந்து திருக்கோடிக்கா, ஆவடுதண்துறை இவற்றை வணங்கச் செல் பொழுதில் திருக்கோழம்பம் பணிந்து பரவியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 177 **பதிக எண்: 64**

திருச்சிற்றம்பலம்

1711. **வேழம் பத்தைவர் வேண்டிற்று வேண்டிப்போய்**
ஆழம் பற்றிவீழ் வார்பல வாதர்கள்
கோழம் பத்துறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே. 1

1712. **கயிலை நன்மலை யாளுங் கபாலியை**
மயிலி யல்மலை மாதின் மணாளனைக்

1. **பொ-ரை:** வேழம்பம் என்னும் விளையாட்டைப் புரிகின்ற ஐந்து புலன்களாகியவர்கள் விரும்பினவற்றையே தாமும் விரும்பிச் சென்று உலகியல் ஆழங்காற்பட்டுப் பல அறிவற்றவர்கள் வீழ்வர்; கோழம்பத்தில் உறைகின்ற கூத்தன் ஒலிக்கும் கழல் அணிந்த திருவடிகளை வணங்கும் பக்தர்களே மிகவும் திறம் உடையவர்கள்.

கு-ரை: வேழம்பத்து ஐவர் - உயிருக்கு ஏளனத்தைத் தரும் ஐம் பொறிகள். வேழம்பம் என்ற சொல்லுக்குக் கூத்து, ஏளனம், பரிகாசம் என்ற பொருள்கள் உள்ளன; ஏற்பன கொள்க. ஐவர் அர் விகுதி இழித்தற் பொருளில் வந்தது. வேண்டிற்று - விரும்பியதை. வேண்டிப் போய் - தானும் விரும்பிச் சென்று. ஆழம் பற்றி - துன்பப் படுகுழியினைப் பற்றி. ஆதர் - குருடர் அல்லது அறிவிலார். குரை - ஒலிக்கின்ற. தாழும் - வணங்கும். சால - மிக. சதுரர் - சதுரப் பாடுடையவர்.

2. **பொ-ரை:** திருக்கயிலாயத் திருமலையினை ஆள்கின்ற கபாலியும், மயிலியலை உடைய மலைமங்கையின் மணவாளனும்

Koviloor Digital Library

குயில்ப யில்பொழிற் கோழம்பம் மேயவென்
உயிரி னைநினைந் துள்ளம் உருகுமே. 2

1713. வாழும் பான்மைய ராகிய வான்செல்வம்
தாழும் பான்மைய ராகித்தம் வாயினால்
தாழம் பூமணம் நாறிய தாழ்பொழில்
கோழம் பாவெனக் கூடிய செல்வமே. 3

1714. பாட லாக்கிடும் பண்ணொடு பெண்ணிவள்
கூட லாக்கிடுங் குன்றின் மணற்கொடு

ஆகிய, குயில் பயில்கின்ற பொழில்கள் உடைய கோழம்பத்தைப் பொருந்திய என் உயிர்போல்வானாகிய இறைவனை நினைந்து உள்ளம் உருகுகின்றது.

கு-ரை: கபாலி - பிரமகபாலத்தை ஏந்தியவன். மயிலியல் - மயிலின் சாயல்தன்மை. பயில் - தங்குகின்ற. உயிரினை - உயிராயிருப் பவனை.

3. பொ-ரை: வணங்கும் தன்மையோடு கூடியவராகித் தம் வாயினால், தாழம்பூக்களின் மணம் வீசுகின்ற பொழிலை உடைய ''கோழம்பத்தலத்து இறைவா!'' என்று கூறியதனால் கூடும் செல்வமே, வாழும் தன்மையராகிப் பெற்ற உயர்ந்த செல்வம் ஆகும்.

கு-ரை: தேவர் பெற்ற செல்வம் இறைவனைப் பாடிப் பணிந்து பெற்ற செல்வமேயாம் என்றது. வாழும் பான்மையராகி - பிறவி யெடுத்தபயனை அடையும் குறிக்கோளோடு வாழும் தன்மையை உடையவராகி அல்லது வீடுபேற்றில் எஞ்ஞான்றும் வாழும் தன்மையை உடையவராகி. அவ்வான் செல்வம் - அவ்வுயர்ந்த வீட்டுநெறியாகிய செல்வத்தில். தாழும் - விரும்பும் அல்லது தங்கும். பான்மையராகி - எண்ணத்தையுடையவராகி. தாழ்பொழில் - நீண்டபொழில். கோழம்பா - திருக்கோழம்பம் என்னும் தலத்தில் எழுந்தருளிய இறைவனே. கோழம்பா என அவ்வான் செல்வம் கூடிய செல்வம் ஆம் என வினை முடிவுசெய்க.

4. பொ-ரை: வெண்கோடலும் செங்கோடலும் ஆகிய மலர்கள் பூத்து விளங்கும் கோழம்பத்துள் மகிழ்ந்து ஆடும் கூத்தனாகிய

Koviloor Digital Library

கோடல் பூத்தலர் கோழம்பத் துள்மகிழ்ந்
தாடுங் கூத்தனுக் கன்புபட் டாளன்றே. 4

1715. தளிர்கொள் மேனியள் தான்மிக அஞ்சவோர்
பிளிறு வாரணத் தீருரி போர்த்தவன்
குளிர்கொள் நீர்வயற் கோழம்பம் மேவினான்
நளிர்கொள் நீர்சடை மேலு நயந்ததே. 5

இறைவனுக்கு இப்பெண் அன்றே அன்புபட்டாள் ஆதலின், பண்ணொடு கூடிய பாடல் ஆக்குவாள்; மணற்குன்றில் மணலினைக் கொண்டு கூடல் இழைப்பாள்.

கு-ரை: பண்ணொடு பாடலாக்கிடும் - பண்ணோடு பாடச் செய்யும். கூடலாக்கிடும் - கூடல் விளைந்திடச்செய்யும். கூடல் - பெண்கள் தன் எண்ணம் நிறைவேறுமோ அன்றிப் பிறிதாமோ என அறிய நிலத்தில் கண்ணை மூடிக்கொண்டு வட்டமிட்டுப் பார்ப்பர். அச் சுழியின் இருமுனைகளும் கூடினால் வெற்றி என்றும் கூடாதொழியின் எண்ணம் பலியாதென்றும் கருதுவர். இதற்குக் கூடலிழைத்தல் என்று பெயர். குன்றின்மணற்கொடு - மலையத் தனை மணலைக் கொண்டு, கூடல் இழைத்திடும் என்க. மலையில் இருக்கும் மணல்களைத் தான் வாழ்வதற்கு இடமாகக்கொண்டு மலரும் கோடல் எனினுமாம். கோடல் - காந்தள். பூத்துஅலர் - பூத்து மலர்கின்ற. பெண்ணிவள் கோழம்பத்துக் கூத்தனுக்கு அன்பு பட்டாளல்லவா அவ்வன்பு, பாடல் கூடல் இவற்றை இவட்கு விளைத்திடும் எனமுடிவு செய்க.

5. பொ-ரை: மாந்தளிரின் வண்ணம் கொண்ட மேனியளாகிய உமாதேவி மிக அஞ்சுமாறு ஒப்பற்ற பிளிறிவரும் யானையின் பச்சைத்தோலைப் போர்த்தவனாகிய, குளிர்ச்சிகொண்ட நீண்ட வயல்களையுடைய கோழம்பத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் செறிவினைக்கொண்ட கங்கையினைச் சடைமேலும் நயந்தது வியப்புக்குரியதே.

கு-ரை: தளிர்கொள் - தளிரின் நிறத்தைக்கொண்ட. பிளிறு வாரணம் - பிளிறித் தம்மை அடரவந்த யானை. ஈருரி - உரித்ததோல். நளிர் - குளிர்ந்த தன்மை. நீர் - கங்கை. மேலும் நயந்தது - அப் பெண்ணுக்கு மேலும் நயப்பை உண்டாக்கியது என்றோ அச்சடையின் மேலும் அவள் நயப்புச் சென்றதென்றோ கொள்க.

Koviloor Digital Library

1716. நாத ராவர் நமக்கும் பிறர்க்குந்தாம்
வேத நாவர் விடைக்கொடி யார்வெற்பில்
கோதை மாதொடுங் கோழம்பங் கோயில்கொண்
டாதி பாத மடையவல் லார்களே. 6

1717. முன்னை நான்செய்த பாவ முதலறப்
பின்னை நான்பெரி தும்மருள் பெற்றது
அன்ன மார்வயற் கோழம்பத் துள்ளமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே. 7

6. பொ-ரை: வேதங்களை ஓதிய நாவை உடையவரும், இடபக்கொடியினரும், மலைமங்கையாகிய உமாதேவியோடும் கோழம்பத்திற் கோயில்கொண்ட ஆதியுமாகிய பெருமானின் பாதங்களை அடையவல்லவர்கள் தாம் நமக்கும் பிறர்க்கும் தலைவர் என்று மதிக்கத்தக்கவர்கள்.

கு-ரை: நமக்கும் பிறர்க்கும் நாதராவர். கோதை மாது - மாலை சூடிய மங்கை. கோயில்கொண்ட ஆதி எனப் பிரிக்க. ஆதி - முதல்வன். கோழம்பம் அடையவல்லார்களே நாதராவர் என்க.

7. பொ-ரை: அன்னம் பொருந்திய வயலை உடைய கோழம்பத்துள் அமர்ந்திருக்கின்ற பின்னிய நீண்டசடையானைப் பிதற்றியே, முன்பு நான் செய்த பாவம் முதல் அறும்படிப் பின்பு நான் பெரிதும் அருள்பெற்றது.

கு-ரை: முன்னை நான் செய்த பாவ முதல் - முற்பிறவியில் நான் செய்த பாவமாகிய முதல். அற - நீங்க. பின்னை - பின்னர் (இப்பிறவியில்). பெரிதும் - மிகுதியும். ஆர் - பொருந்திய. பின்னல் - முறுக்கிய. வார் - நீண்ட. பிதற்றியே - இறைவன் திருநாமத்தைப் பல காலும் சொல்லியேயாகும்.

முற்பிறப்பில் செய்த பாவங்காரணமாக நான் சமணசமயம் சார்ந்ததும், பின்னர் அதனின் நீங்கிப் பெருமான் திருவருள் பெற்றதும் எல்லாம், அவன் திருப்பெயரைப் பலகாலும் ஓதிய காரணத்தால் ஆயின என்றார்.

Koviloor Digital Library

1718. ஏழை மாரிடம் நின்றிரு கைக்கொடுண்
கோழை மாரொடுங் கூடிய குற்றமாங்
கூழை பாய்வயற் கோழம்பத் தானடி
ஏழை யேன்முன் மறந்தங் கிருந்ததே. 8

1719. அரவ ணைப்பயில் மாலயன் வந்தடி
பரவ னைப்பர மாம்பரஞ் சோதியைக்
குரவ னைக்குர வார்பொழிற் கோழம்பத்
துரவ னையொரு வர்க்குணர் வொண்ணுமே. 9

8. பொ-ரை: ஏழையேனாகிய அடியேன் கூழைமீன்கள் பாய்கின்ற வயல்களை உடைய கோழம்பத்தான் அடியை மறந்து அவர்பால் இருந்தது, பெண்களிடம் நின்று இரண்டு கைகளாலும் அவர்கள் இடும் உணவைக்கொண்டு உண்ணும் கோழைகளோடு கூடிய குற்றமாம்.

கு-ரை: ஏழைமாரிடம் - பெண்களிடம். இருகைக்கொடு உண் - இரண்டு கைகளாலும் பிச்சையேற்று உண்ணுகின்ற. கோழை மாரொடும் - துணிவற்றவர்களாகிய சமணர்களிடம். கூடிய - சேர்ந்து வாழ்ந்த. குற்றமாம் - குற்றமாகும். கூழை - மீன்கள். பாய் - பாய்கின்ற.

பெருமானை மறந்து, சமண சமயத்தைச் சார்ந்து அங்கு வாழ்ந்திருந்ததற்குக் காரணம் கோழையரொடும் கூடிய குற்றமாகும் என வினை முடிவு செய்க.

9. பொ-ரை: பாம்பாகிய படுக்கையில் பயிலும் திருமாலும், பிரமனும் வந்து அடிபரவப்பெறுவானும், பரம்பொருளாகிய உயர்ந்தசோதியும், பரமாசாரியனும் ஆகிய குரவமரங்கள் செறிந்த கோழம்பத்தின்கண் அறிவு வடிவானவனை நீங்குபவர்க்கு உணர்தல் இயலுமோ?

கு-ரை: அரவணை - ஆதிசேடனாகிய படுக்கை. பயில் - உறங்குகின்ற. மால் - திருமால். அயன் - பிரமன். பரவனை - பரவப் படுபவனை. பரமாம் - மேலான. குரவனை - குருநாதனை. குரவு - குராமரங்கள். உரவன் - அறிவு வலியுடையவன். ஒருவர்க்கு - நீங்குபவர்க்கு. உணர்வு பொருந்துமோ என்க.

Koviloor Digital Library

1720. சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை யார்களே. 10

1721. துட்ட னாகி மலையெடுத் தஃதின்கீழ்ப்
பட்டு வீழ்ந்து படர்ந்துய்யப் போயினான்
கொட்டம் நாறிய கோழம்பத் தீசனென்
றிட்ட கீத மிசைத்த அரக்கனே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: போரெதிர்ந்துவந்த சூரபன்மனைக் கொன்ற வேற்படையை உடைய முருகவேளுக்குத் தந்தையும், நல்ல கோழம்பம் மேவிய தேவர்தலைவனும் ஆகிய பெருமானுக்கு அன்புடைய தொண்டர்கள், அமரலோகத்தை ஆளும் உரிமையுடையவராவர்.

கு-ரை: சமரசூரபன்மா - போரிலே வல்ல சூரபன்மா என்ற அசுரன். தடிந்த - கொன்ற. வேல்குமரன் - வேலாயுதத்தை உடைய முருகன். தாதை - தந்தையாகிய சிவபெருமான். அமரர்கோ - தேவர்கள் தலைவனாகிய பெருமான். அன்புடைத் தொண்டர்கள் அமரலோகம் ஆளுதலை உடையவர்களாவர்.

11. பொ-ரை: கொட்ட நறுமணம் வீசுகின்ற கோழம்பத்து இறைவன் என்று விருப்பத்திற்குரிய கீதம் இசைத்த அரக்கன் துட்டனாகித் திருக்கயிலையை எடுக்கலுற்று, அம்மலையின் கீழ்ப்பட்டு விழுந்து படர்ந்து பின் உய்ந்தான்.

கு-ரை: துட்டன் - துஷ்டன். அஃதின்கீழ் - அதன்கீழ். பட்டு - அகப்பட்டு. வீழ்ந்து - ஆணவம் வீழப்பெற்று. படர்ந்து - பெருமானைப்பற்றி. உய்யப்போயினான் - அநுக்ரகம் பெற்றான். கொட்டம் - மணப்பொருளில் ஒன்று. நாறிய - கமழ்கின்ற. என்றிட்ட கீதம் - என்று வரும் இசைப்பாடல். இசைத்த - பாடிய.

Koviloor Digital Library

65. திருப்பூவனூர்

பதிக வரலாறு:

ஞான அரசு திருப்பழையாறை வடதளி வணங்கித் திருவானைக்காவிற்குச் செல்பொழுதில் பொன்னியின் இருமருங்கும் உள்ள சிவதலங்களைப் பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 17 **பதிக எண்: 65**

திருச்சிற்றம்பலம்

1722. பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே. 1

1723. என்ன னென்மனை யெந்தையெ னாருயிர்
தன்னன் தன்னடி யேன்தன மாகிய
பொன்னன் பூவனூர் மேவிய புண்ணியன்
இன்ன னென்றறி வொண்ணா னியற்கையே. 2

1. பொ-ரை: பூவனூரில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமத்தைத் தம் நாவில் நூறுநூறாயிரம் கூறிப் பரவியவர், தம் பாவங்கள் சிதைந்துகெட்டுத் தேவர் தலைவனாகிய இந்திரனைவிட மிகப் பெருஞ் செல்வர்கள் ஆவர்.

கு-ரை: புனிதன் - தூயவன். நூறுநூறாயிரம் - ஒரு கோடி. நண்ணினார் - ஓதியவர். பாறி - அழிந்து. பறைய - நீங்க. ஏ அசை. தேவர்கோ - இந்திரன்.

2. பொ-ரை: பூவனூர் மேவிய இறைவன் என்னை உடையவன்; என் மனையாளாகவும் உள்ளவன்; என் தந்தை; என் உயிர்; தனக்குத்தானே உவமையானவன்; தன்னடியேனுக்குச் செல்வமாக உள்ள பொன்னன்; தன் இயல்பினால் இன்னதன்மையன் என்று அறியவியலாதவன் ஆவன்.

Koviloor Digital Library

1724. குற்றங் கூடிக் குணம்பல கூடாதீர்
மற்றுந் தீவினை செய்தன மாய்க்கலாம்
புற்ற ராவினன் பூவனூ ரீசன்பேர்
கற்று வாழ்த்துங் கழிவதன் முன்னமே. 3

1725. ஆவின் மேவிய ஐந்தமர்ந் தாடுவான்
தூவெண் ணீறு துதைந்தசெம் மேனியான்
மேவ நூல்விரி வெண்ணியின் தென்கரைப்
பூவ னூர்புகு வார்வினை போகுமே. 4

கு-ரை: என்னன் - எனக்குற்ற துணையாயிருப்பவன். என் மனை - என்மனைவி போன்றவன். ''அப்பன்நீ அம்மை நீ ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ'' (தி.6. ப.95. பா.1). எந்தை - எனக்குத் தந்தையாயிருப்பவன். என் ஆருயிர் - என் அரிய உயிரை. தன்னன் தன்னடியேன் - தனக்குரிய பொருளாயும் தன்னடியவனாயுமுள்ள எனது. தன் - அப்பெருமானுடைய அடியேன் என்க. தனமாகிய பொன்னன் - அடியேனுடைய பெறுதற்கரிய சேமநிதியாகிய பொன்னாயிருப்பவன். இயற்கை - இயல்பு.

3. பொ-ரை: குற்றங்களே மிகப் பெருகிக் குணம்பல கூடாதவர்களே! புற்றிற்பொருந்திய பாம்பினைச் சூடியவனாகிய பூவனூர் இறைவன் திருநாமத்தை நீர் மடிவதன் முன்பே கற்று வாழ்த்துவீராக; அங்ஙனம் வாழ்த்தினால் நீர் செய்த வினைகளை மாய்க்கலாம்.

கு-ரை: குற்றம் கூடி - குற்றத்தைக் கூடி. குணம்பல கூடாதீர் - பல நல்ல குணங்களைச் சேராது வாழ்வோரே! மற்றும் தீவினை செய்தன - முன்பிறப்பிற் செய்த வினைகளோடு இப்பிறப்பிற் செய்தனவாய தீயவினைகளையும். மாய்க்கலாம் - அழிக்கலாம். கழிவதன் முன்னம் - இறப்பதன் முன்பாக. கற்று வாழ்த்தும் என வினைமுடிவு செய்க. வாழ்த்தும் - வாழ்த்துங்கள்.

4. பொ-ரை: பஞ்சகவ்வியங்களை விரும்பித் திருமுழுக்குக் கொள்வானும், தூய வெண்ணீறு செறிந்த செம்மேனியனும், விரிகின்ற பூணூல் மேவியவனும் ஆகிய பெருமானுக்குரியதும் வெண்ணியின் தென்கரைக் கண்ணதுமாகிய பூவனூரின்கண் புக்குத்தொழும் அடியவர்களின் வினை அவரைவிட்டு நீங்கும்.

Koviloor Digital Library

1726. புல்லம் ஊர்தியூர் பூவனூர் பூம்புனல்
நல்ல மூர்திநல் லூர்நனி பள்ளியூர்
தில்லை யூர்திரு வாரூர்சீர் காழிநல்
வல்ல மூரென வல்வினை மாயுமே. 5

1727. அனுச யப்பட் டதுவிது வென்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே. 6

கு-ரை: ஆவின்மேவிய ஐந்து - பஞ்சகவ்யம். அமர்ந்து - விரும்பி. ஆடுவான் - அபிடேகம் கொள்வான். துதைந்த - செறிந்து பொருந்திய. மேவநூல் விரி - பொருந்த நூல்களில் சிறப்பிக்கப்படும். வெண்ணியின் - வெண்ணியாற்றின்.

5. பொ-ரை: புல்லமும், ஊர்தியூரும், பூவனூரும், புனல் வளம் உடைய நல்லமும், ஊர்திநல்லூரும், நனிபள்ளியூரும், தில்லை யூரும், திருவாரூரும், சீர்காழியும், நல்லவல்லமும் ஆகியவற்றைக் கூறியவளவிலேயே வல்வினை நீங்கும்.

கு-ரை: புல்லம் - எருது. எருது வாகனனாகிய சிவபெருமான் எழுந்தருளிய ஊர்கள் இவை. இத்தலங்களை நினைத்துச்சொல்ல வினை மாயும் என்க.

6. பொ-ரை: கனிந்த மனத்தொடு கண்கள் நீர் நிறைந்து, ஐயப் பட்டபொருளன்று இது; தெளிந்தது என்று கருதிப் பூவனூர்ப் புனி தனைப் போற்றும் மனிதர்களே எல்லா மனிதர்களிலும் தலையான மனிதராவர்.

கு-ரை: அனுசயப்பட்டு - ஒருவரோடு ஒருவர் பகைமை யுற்று. அது இது என்னாதே - அது நன்று இது தீது, இது நன்று அது தீது என்று மாறுபடாமல். உலகியல் வாழ்விலும் சமய நெறியிலும் இது பொருந்துவதொன்று. உலகில் இவ்வாறு போட்டியிட்டுப் பகைமை கொள்வார் பலர். சமயநெறியிலும் ஒரு சமயத்தவர் மற்றவரை இகழ்தல் உண்டு ஆதலின் இரு நெறியார்க்கும் பொருந்துவதொன்று இது. கனி மனத்தொடு - கனிந்த மனத்தொடு. தலையான மனிதர் - சிறந்த மனிதர்.

Koviloor Digital Library

1728. ஆதி நாதன் அமரர்க ளர்ச்சிதன்
வேத நாவன்வெற் பின்மடப் பாவையோர்
பாதி யானான் பரந்த பெரும்படைப்
பூத நாதன்தென் பூவனூர் நாதனே. 7

1729. பூவ னூர்தண் புறம்பயம் பூம்பொழில்
நாவ லூர்நள் ளாறொடு நன்னிலங்
கோவ லூர்குட வாயில் கொடுமுடி
மூவ லூருமுக் கண்ணனூர் காண்மினே. 8

1730. ஏவம் ஏது மிலாஅம ணேதலர்
பாவ காரிகள் சொல்வலைப் பட்டுநான்
தேவ தேவன் திருநெறி யாகிய
பூவ னூர்புகு தப்பெற்ற நாளின்றே. 9

7. பொ-ரை: அழகிய பூவனூர் இறைவன் ஆதியில் தோன்றியவனும், தேவர்களால் அருச்சிக்கப்படுபவனும், வேதம் ஓதும் நாவினனும், மலைமங்கையை ஒரு பாதியிற் கொண்டவனும், பரவிய பெரும் படைக்கலங்களை உடைய பூதநாதனும் ஆவன்.

கு-ரை: ஆதிநாதன் - முதன்மையான தலைவன். அர்ச்சிதன் - அர்ச்சிக்கப்படுபவன். வேதநாவன் - வேதமோதும் திருவாயை உடையவன். வெற்பின் மடப்பாவை - இமயமலை அரசனின் புதல்வி. பசந்த - மிகுந்த. பூதப்படைநாதன் என்க.

8. பொ-ரை: பூவனூரும், குளிர்ந்த புறம்பயமும் பூம்பொழில் சூழ்ந்த நாவலூரும், நள்ளாறும், நன்னிலமும், கோவலூரும், குடவாயிலும், கொடுமுடியும், மூவலூரும் ஆகிய அனைத்தும் முக்கண்ணன் ஊர்கள்; காண்பீர்களாக. மூவலூர் வைப்புத்தலம்.

கு-ரை: பூவனூர் முதலாய ஊர்கள் முக்கண்ணனாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஊர்கள் என்க.

9. பொ-ரை: விதிவிலக்குகள் ஏதும் இல்லாத அமணர்களாகிய குற்றமுடையோரும்; பாவகாரிகளுமாகியோர் சொல் வலையிற் பட்டு நான் தேவதேவனாம் சிவபெருமானின் திருநெறியாகிய பூவனூர் புகப்பெற்ற நாள் இன்றேயாகும்.

Koviloor Digital Library

1731. நார ணன்னொடு நான்முக னிந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே. 10

1732. மைக்க டுத்த நிறத்தரக் கன்வரை
புக்கெ டுத்தலும் பூவனூ ரன்னடி
மிக்க டுத்த விரல்சிறி தூன்றலும்
பக்க டுத்தபின் பாடியுய்ந் தானன்றே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை: ஏவம் - விதிவிலக்குகள். ஏதும் இலா - எதுவும் இல்லாத. சமண் ஏதலர் - சமணர்களாகிய அயலவர். பாவகாரிகள் - பாவத்தைச் செய்பவர்கள். சொல்வலை - சாதுரியப்பேச்சாகிய வலை; பொய்யைப் பிறர் மயங்க மெய்போலக் காட்டுதல். நெறி - சமயம். சொல்வலைப்பட்ட பின் பூவனூர் புகுந்த நாள் இன்று.

10. பொ-ரை: திருமாலும், பிரமனும், இந்திரனும், விநாயகரும், முருகனும் வணங்கும் கழலை உடைய நிறைவானவனும், திருப்பூவனூரில் பொருந்திய உலககாரணனுமாகிய பெருமானே, என்னை ஆளுடைய காளைபோல்வான்.

கு-ரை: வாரணன் - யானைமுகக் கடவுளாகிய விநாயகர். பூரணன் - எல்லாவற்றாலும் நிரம்பியவன். காரணன் - எல்லாவற்றிற்கும் முதற்காரணமாயிருப்பவன். காளை - காளை போன்றவன்.

11. பொ-ரை: மேகத்தையொத்த நிறத்தை உடைய இராவணன் திருக்கயிலையைப் புகுந்தெடுத்தலும், பூவனூர் இறைவன் திருவடியில் மற்ற விரல்களினும் சிறப்புமிக்குள்ள பெருவிரலைச் சற்று ஊன்றுதலும் தன் உறுப்பெல்லாம் பிளந்து வருந்தியபிறகு பாடி அருள்பெற்று உய்ந்தான்.

கு-ரை: மைக்கடுத்த நிறத்து - கரிய இருளை ஒத்த நிறத்தினை உடைய. புக்கு - அடிவரையில் புகுந்து. மிக்கடுத்த விரல் - இராவணனது செருக்கை அழிக்கப் புகுந்த விரல். பக்கடுத்த பின் - தலைகள் பிளவு ஏற்பட்டு நெரிந்தவுடன். உய்ந்தான் - உயிர் பிழைத்தான்.

Koviloor Digital Library

66. திருவலஞ்சுழி

பதிக வரலாறு:

திருநல்லூரில் நம்பர் அருள்பெற்றுப் பழையாறையில் உள்ள சிவாலயங்களையும் வணங்கி வண்டமிழ்பாடி வலஞ் சுழியைத்தொழுது ஏத்திப்பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 215.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 17 பதிக எண்: 66

திருச்சிற்றம்பலம்

1733. ஓத மார்கட லின்விட முண்டவன்
பூத நாயகன் பொற்கயி லைக்கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. 1

1734. கயிலை நாதன் கறுத்தவர் முப்புரம்
எயில்கள் தீயெழ வெல்வல வித்தகன்
மயில்க ளாலும் வலஞ்சுழி யீசனைப்
பயில்கி லார்சிலர் பாவித் தொழும்பரே. 2

1. பொ-ரை: அலைகளை உடைய பாற்கடலினின்றெழுந்த ஆலகாலவிடத்தை உண்டவனும், பூதங்களுக்கு நாயகனும், பொன் வடிவாகிய திருக்கயிலைக்கு இறைவனும், உமையொரு பங்கனும் ஆகிய திருவலஞ்சுழி இறைவனின் திருவடியை ஏத்தித்தொழுதால் நம் பாவங்கள் கெடும்.

கு-ரை: ஓதம் - நீர்ப்பெருக்கு. ஆர் - பொருந்திய. நாயகன் - தலைவன். பொன் - பொன்மயமான. இறை - தலைவன். பறையும் - அழியும், நீங்கும்.

2. பொ-ரை: திருக்கயிலைத் தலைவனும், சினந்த பகைவரு டைய முப்புரங்களும் எயில்களுடன் தீயெழுமாறு வெல்ல வல்ல திறம் உடையவனும் ஆகிய மயில்கள் ஆரவாரிக்கும் திருவலஞ்சுழி இறை வனைப் பயின்று தொழார் சில பாவிகளாகிய தொண்டர்கள்.

Koviloor Digital Library

1735. இளைய காலமெம் மானை யடைகிலாத்
துளையி லாச்செவித் தொண்டர்காள் நும்முடல்
வளையுங் காலம் வலஞ்சுழி யீசனைக்
களைக ணாகக் கருதிநீ ருய்ம்மினே. 3

1736. நறைகொள் பூம்புனல் கொண்டெழு மாணிக்காய்க்
குறைவி லாக்கொடுங் கூற்றுதைத் திட்டவன்
மறைகொள் நாவன் வலஞ்சுழி மேவிய
இறைவ னையினி யென்றுகொல் காண்பதே. 4

கு-ரை: கறுத்தவர் - சினங்கொண்டவராகிய. எயில்கள் - மதில்கள். வெல்வல - வெல்லுதலில் வல்ல. ஆலும் - ஆடும். பயில் கிலார் - வலஞ்சுழிப் பெருமான் திருநாமத்தைப் பழகாதவர். தொழும் பர் - ஆளானவர்; ஏவல் செய்வார்.

3. பொ-ரை: இளமைப்பருவத்தேயே எம் பெருமானை அடைந்து வழிபடாத துளையற்ற செவிகளை உடைய தொண்டர்களே! நும் உடல் வளைந்து முதுமைக்காலம் வந்தவிடத்து திருவலஞ்சுழி இறைவனையே உமக்குத் துன்பம் களையும் துணையாகக் கருதி உய்வீராக.

கு-ரை: இளைய காலம் - கருவி கரணங்கள் ஓய்ந்து போகாமல் உள்ள இளமைக் காலத்திலேயே. துளையிலாச் செவித் தொண்டர்காள் - ''தோளாதசுரையோ தொழும்பர்செவி'' என்பது போலச் சிவன் புகழ் கேளாச் செவி கேளாச் செவி என்பதாம். நும் முடல் வளையும் காலம் - உங்களது உடல் மெலிவு அடைந்து முதுமை எய்தும் காலம். களைகணாக - பற்றுக்கோடாக, ஆதரவாக.

4. பொ-ரை: தேனைக்கொண்ட பூக்கள் நிரம்பிய நீர்கொண்டு திருமுழுக்காட்ட எழுந்த மார்க்கண்டேயனுக்காக வேறொன்றும் குறைவில்லாத கொடிய கூற்றுவனை உதைத்திட்டவனும், வேதங்களை ஓதுதலைக்கொண்ட நாவினனும் ஆகிய திருவலஞ்சுழியிற் பொருந் திய இறைவனை இனிக்காண்பது என்றுகொல்?

கு-ரை: நறைகொள் - மணம் கொண்ட. பூம்புனல் கொண்டு எழு - சுரங்கப்பாதை வழியே காசிசென்று நாடோறும் அழகிய கங்கை நீரைக் கொண்டு வருகின்ற. மாணி - பிரமசாரியாகிய மார்க்கண் டேயர். குறைவிலா - வலிமையில் குறையாத. கொல் - அசை.

Koviloor Digital Library

1737. விண்டட வர்புர மூன்று மெரிகொளத்
திண்தி றற்சிலை யாலெரி செய்தவன்
வண்டு பண்முர லுந்தண் வலஞ்சுழி
அண்ட னுக்கடி மைத்திறத் தாவனே. 5

1738. படங்கொள் பாம்பொடு பான்மதி யஞ்சடை
அடங்க வாழவல் லானும்பர் தம்பிரான்
மடந்தை பாகன் வலஞ்சுழி யானடி
அடைந்த வர்க்கடி மைத்திறத் தாவனே. 6

1739. நாக்கொண் டுபர வும்மடி யார்வினை
போக்க வல்ல புரிசடைப் புண்ணியன்
மாக்கொள் சோலை வலஞ்சுழி யீசன்றன்
ஏக்கொ ளப்புர மூன்றெரி யானவே. 7

5. பொ-ரை: பகைவர் புரங்கள் மூன்றையும் எரிதல் கொள்ள மிக்க திண்ணியவில்லினால் எரித்தவனாகிய, வண்டுகள் இசையென ஒலிக்கின்ற குளிர்ச்சி உடைய வலஞ்சுழியில் வீற்றிருக்கும் தேவதேவனுக்கு அடிமை செய்யும் திறத்து யான் ஆவன்.

கு-ரை: விண்டவர் - அறத்தின் நீங்கியவர். மனம் பொருந்தாது நீங்கிய பகைவர். திண்டிறற்சிலை - திண்ணிய வலிமையோடு கூடிய இமயவில். முரலும் - ஒலிக்கும். அண்டன் - உலகங்களை உடையவன். அடிமைத்திறத்தாவன் - அடிமையாம் திறத்தை நான் அடைந்தவனாவேன். ஏ - அசை.

6. பொ-ரை: படத்தைக்கொண்ட பாம்பினோடு நிலா தரும் மதியத்தையும் சடையில் அடங்குமாறு வைத்து வாழ வல்லானும், தேவர் தலைவனும், மங்கைபங்கனும் ஆகிய திருவலஞ்சுழி இறைவன் திருவடியை அடைந்தவர்க்கு அடிமைசெய்யும் திறத்து யான் ஆவன்.

கு-ரை: பால்மதி - பால்போலும் வெள்ளிய சந்திரன். அஞ்சடை அடங்க - அழகிய சடையின்கண்ணே அடங்கியிருக்க. உம்பர்தம் பிரான் - தேவர்கள் தலைவன்.

7. பொ-ரை: நாவினைக்கொண்டு இசை பாடித்தொழும் அடியார்களின் வினைகளைப் போக்கவல்ல முறுக்கமைந்த

Koviloor Digital Library

1740. தேடு வார்பிர மன்திரு மாலவர்
ஆடு பாதம் அவரு மறிகிலார்
மாட வீதி வலஞ்சுழி யீசனைத்
தேடு வானுறு கின்றதென் சிந்தையே. 8

1741. கண்ப னிக்குங்கை கூப்புங்கண் மூன்றுடை
நண்ப னுக்கெனை நான்கொடுப் பேனெனும்
வண்பொன் னித்தென் வலஞ்சுழி மேவிய
பண்ப னிப்பொனைச் செய்த பரிசிதே. 9

சடையையுடைய புண்ணியனாகிய நீண்ட சோலை சூழ்ந்த திருவலஞ்சுழி இறைவன் தன் ஓர் அம்பு கொள்ளவும் முப்புரங்களும் எரிக்கப்பட்டன.

கு-ரை: புரிசடை - முறுக்குண்ட சடை. மாக்கொள் - அடர்ந்திருத்தலால் கருமை நிறத்தைக்கொண்ட. ஏ கொள - அம்பு தொட்ட அளவால். மாக்கொள் சோலை - மாமரங்களைக்கொண்ட சோலை.

8. பொ-ரை: பிரமனும், திருமாலும் தேடுவாராகி இறைவனின் ஆடும் திருவடியை அறியும் ஆற்றல் இலராகவும், மாடங்கள் நெடிதுயர்ந்த வீதிகளை உடைய திருவலஞ்சுழி ஈசனை என் சிந்தை தேடுவதற்காக உறுகின்றது!

கு-ரை: ஆடுபாதம் - அருள்செய்யும் திருவடியாகிய தூக்கிய திருவடியை.

9. பொ-ரை: கண்ணீர் ததும்புகின்றாள்; கைகூப்பித் தொழுகின்றாள்; முக்கண்ணுடைய நண்பனுக்கு என்னை நான் கொடுப்பேன் என்று சொல்கின்றாள்; வளவிய பொன்னித் தென்கரையில் உள்ள வலஞ்சுழி மேவிய பண்பனாகிய பெருமான் இந்தப் பொன்னனைய தலைவிக்குச் செய்த தன்மை இதுவாகும்.

கு-ரை: பனிக்கும் - நீர் அரும்பும். என்னை நான் கொடுப் பேன் எனும் - என்னை நானே கொடுத்துக்கொண்டு அவனுக்குரிமை யாக்கிக் கொள்வேன் என்று சொல்லுவாள். பண்பன் - நற்பண்புகளின் வடிவமாயிருப்பவன். பொனை - பொன் போன்றவளை. தோழி கூற்று.

Koviloor Digital Library

1742. இலங்கை வேந்த னிருபது தோளிற
நலங்கொள் பாதத் தொருவிர லூன்றினான்
மலங்கு பாய்வயல் சூழ்ந்த வலஞ்சுழி
வலங்கொள் வாரடி யென்றலை மேலவே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: இலங்கை வேந்தனாம் இராவணனது இருபது தோளும் இறும்படியாக நன்மைமிக்க திருவடியில் ஒரு விரலால் ஊன்றினானுக்குரிய, மலங்கு மீன்கள் பாய்கின்ற வயல் சூழ்ந்த திரு வலஞ்சுழியை வலம் கொள்வார் திருவடிகள் என் தலையின் மேலன.

கு-ரை: இற - நொறுங்க. நலங்கொள் - பிறருக்கு நன்மை செய்யும் குணத்தைக் கொண்ட. மலங்கு - மீன் வகையில் ஒன்று. வலங் கொள்வார்-வலம் செய்வார். ''திருவலஞ்சுழி வலங்கொடு பாதத்தால் சுழலு மாந்தர்கள் தொல்வினையதனொடு துன்பங்கள் களைவாரே'' திருஞானசம்பந்தர் தேவாரம் (தி.2. ப.106. பா.9.) அருளியமையை யும் காண்க.

திருக்குறுக்கைப் புராணம்

இருளென்று சொலத்திரிவார் மனம்வேவ
நீற்றறையு ளிருந்து முற்றேம்
வெருளென்று துயர்க்கடலு ளவரமுந்தக்
கருங்கடற்கண் மிசைமி தந்து
மருளென்று மாறாத வெண்ணீறுங்
கண்மணியு மைந்தெ ழுத்தும்
பொருளென்று தெரிவித்த புண்ணியவா
கீசர்பதம் போற்றி வாழ்வாம்.

- மீனாட்சி சுந்தரம் பிள்ளை

Koviloor Digital Library

67. திருவாஞ்சியம்

பதிக வரலாறு:

திருச்சேறை, குடவாயில், நறையூர் முதலிய பல பதிகளை வணங்கித் திருவாஞ்சியம் அணைந்துதொழுது பாடி அருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா-புரா-216)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 180 பதிக எண்: 67

திருச்சிற்றம்பலம்

1743. படையும் பூதமும் பாம்பும்புல் வாயதள்
உடையுந் தாங்கிய உத்தம னார்க்கிடம்
புடைநி லாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடைய வல்லவர்க் கல்லலொன் றில்லையே. 1

1744. பறப்பை யும்பசு வும்படுத் துப்பல
திறத்த வும்முடை யோர்திக ழும்பதி
கறைப்பி றைச்சடைக் கண்ணுதல் சேர்தரு
சிறப்பு டைத்திரு வாஞ்சியஞ் சேர்மினே. 2

1. பொ-ரை: படைக்கலங்களும், பூதமும், பாம்பும், மான் தோல் உடையும் தாங்கிய உத்தமராகிய பெருமானுக்கு இடமாகிய, பக்கமெலாம் பொருந்திய பூம்பொழில் சூழ்ந்த திருவாஞ்சியத்தை அடையவல்லவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லை.

கு-ரை: படையும் - மழு, சூலம் முதலிய ஆயுதங்களையும். புல்வாய்அதள் - மான்தோல். தங்கிய - தரித்த. புடை நிலாவிய - ஊர்ப் புறங்களில் விளங்கிய. அல்லல் - துன்பம்.

2. பொ-ரை: பறவை வடிவாகிய யூபஸ்தம்பம் நட்டு ஓமம் செய்து பசுவினை வேட்டு வேள்வி செய்து மற்றும் பலதிறத்தை உடைய மறையவர்கள் வாழும் பதியாகியதும், களங்கமுடைய பிறையைச் சடையின்கண் வைத்த நெற்றிக்கண்ணராகிய சிவபிரான் சேரும் சிறப்புடையதுமாகிய திருவாஞ்சியம் சேர்வீராக.

Koviloor Digital Library

1745. புற்றில் ஆடர வோடு புனல்மதி
தெற்று செஞ்சடைத் தேவர்பி ரான்பதி
சுற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
பற்றிப் பாடுவார்க் குப்பாவ மில்லையே. 3

1746. அங்க மாறும் அருமறை நான்குடன்
தங்கு வேள்வியர் தாம்பயி லுந்நகர்
செங்கண் மாலிட மார்திரு வாஞ்சியம்
தங்கு வார்நம் அமரர்க் கமரரே. 4

1747. நீறு பூசி நிமிர்சடை மேற்பிறை
ஆறு சூடும் அடிக ளுறைபதி
மாறு தானொருங் கும்வயல் வாஞ்சியம்
தேறி வாழ்பவர்க் குச்செல்வ மாகுமே. 5

கு-ரை: பறப்பை - கருடன் முதலிய பறவை வடிவம் பொறித்த வேள்வித்தூண். நெய் வைக்கும் பாத்திரம் எனலுமாம். பசு - வேள்விப் பசு. படுத்து - சிறந்த பொருளாகக்கொண்டு நிகழ்த்தி. வேள்வித் தீயின் கண் நெய்யைச் சொரிந்தும், வேள்விச் சாலையின்கண் பசுவுக்கு வாயுறை கொடுத்தும் ஆராதித்தும் செய்யும் வேள்விச் செயல்களை உடையோர் வாழும் ஊர் எனக் குறித்தது.பல திறத்தவும் உடையோர் - பல வேள்விக் கூறுபாடுகளையும் உடையவர்கள். ''பறப்பைப் படுத் தெங்கும் பசுவேட்டெரியோம்பும் சிறப்பர் வாழ்வதில்லை'' (தி.1.ப.80. பா.2) என்றார் சம்பந்தரும். கறைப்பிறை - கறையை உடைய பிறைமதி. கண்ணுதல் - நெற்றிக் கண்ணை உடையவனாகிய பெருமான்.

3. பொ-ரை: புற்றில் ஆடும் இயல்புடைய பாம்பினோடு கங்கையும், பிறையும் பொருந்திய செஞ்சடையுடைய தேவர் தலைவன் திருப்பதியாகியதும், சுற்றிலும் மாடங்கள் சூழ்ந்ததுமாகிய திருவாஞ் சியத்தைப்பற்றிப் பாடுபவர்களுக்குப் பாவங்கள் இல்லை.

கு-ரை: ஆடரவு - ஆடுகின்ற பாம்பு. ஆடரவு - வினைத் தொகை; காலம் மூன்றிற்கும் பொது. புனல் - கங்கை. தெற்றும் - பொருந்திய. பற்றி - அடைந்து.

4. பொ-ரை: நம் தேவதேவராகிய இறைவர், ஆறங்கங்களும் நால்வேதங்களும் தங்குகின்ற வேள்வியுடைய அந்தணர்கள் பயிலும்

Koviloor Digital Library

1748. அற்றுப் பற்றின்றி யாரையு மில்லவர்க்
குற்ற நற்றுணை யாவா னுறைபதி
தெற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
கற்றுச் சேர்பவர்க் குக்கருத் தாவதே. 6

நகராகிய திருவாஞ்சியத்தில், சிவந்த கண்ணையுடைய திருமாலை இடப்பாற்கொண்டு தங்குவார்.

கு-ரை: அங்கமாறு - வேதாங்கங்கள் ஆறு. அவையாவன சிக்ஷை, வியாகரணம், நிருத்தம் முதலியன. அருமறை - உணர்தற்கரிய ருக், யசுர், சாமம், அதர்வணம். தங்கு - பொருந்திய. பயிலும் - எழுந்தருளியிருக்கும். செங்கண்மால் - சிவந்த கண்ணையுடைய திருமால். அமரர்க்கு அமரர் - தேவர்க்குத் தேவர்.

5. பொ-ரை: திருநீறு பூசி நிமிர்ந்த சடையின்மேல் பிறையும் கங்கையும் சூடும் பெருமான் உறையும் பதியாகியதும், களைகளாகிய பிரம்பு முதலியவை ஒருங்கும் வயல்வளமுடைய திருவாஞ்சியத்தைத் தெளிந்து வாழ்பவர்க்குச் செல்வம் பெருகும்.

கு-ரை: மாறுதான் ஒருங்கும் வயல் - நெற் பயிர்களுக்கு மாறாகிய களைகள் அழிந்து குறையும் வயல்கள். தேறி - தெளிந்து.

6. பொ-ரை: பாசக்கட்டுகள் நீங்கிப் பற்று என்பதொன்றும் இன்றி யாரையும் இல்லாதவர்க்குப் பொருந்திய நல்ல துணைவனாகிய பெருமான் உறையும் பதியாகியதும், விண்ணைத் தெற்றுகின்ற மாடங்கள் சூழ்வதுமாகிய திருவாஞ்சியத்தைக் கற்றுச் சேரும் அடியார்களுடைய கருத்தாவான் இறைவன்.

கு-ரை: அற்று - ஆசையற்று. பற்றின்றி - ஆசை சிறிதேனு மில்லாமல். பற்று இன்றி அற்று எனமாற்றி ஆசை சிறிதும் இல்லாமல் விடுத்து என்றலுமொன்று. யாரையும் இல்லவர்க்கு - யாரையும் இல்லாத முற்றத்துறந்த துறவியர்க்கு. உற்ற - பொருந்திய. உறைபதி - உறைகின்ற தலம். தெற்று - கட்டப்பட்ட. கற்றுச் சேர்பவர்க்கு - இறைவன் திருப்பெயர்களைக்கற்று அடைய வல்லவர்களுக்கு. கருத்தாவது - அறிதற்குரிய கருத்துப் பொருளாவதாகும்.

Koviloor Digital Library

* * * * * * * * * * * * 7, 8, 9

1749. அருக்க னங்கி யமனொடு தேவர்கள்
திருத்துஞ் சேவடி யான்றிக ழுந்நகர்
ஒருத்தி பாக முகந்தவன் வாஞ்சியம்
அருத்தி யாலடை வார்க்கில்லை யல்லலே. 10

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: சூரியனும், அக்கினியும், யமனும், பிற தேவர்களும் திருத்தி அணிசெய்கின்ற சேவடியான் திகழும் நகரமாகியதும், மங்கையை ஒருபங்கிற் கொண்டு மகிழ்ந்தவனுடையதுமாகிய திருவாஞ்சியத்தை விருப்பத்தினால் அடைவார்க்கு அல்லல் இல்லை.

கு-ரை: அருக்கன் - சூரியன். அங்கி - அக்கினி. திருத்தும் - அவர்களைத் தவறு நீக்கித் திருத்தும். அருத்தி - ஆசை. அல்லல் - துன்பம்.

தனியூர்ப்புராணம்

முகத்தின்மண் முழுதிடந்து முன்னவன் பாதங் காணா
னகத்தினா ணடைய வங்கை யலர்நெறி யுழவா ரத்தி
னிகத்தின்மண் மேலி டந்தவ் விறையடி தலைமேற் சூட்டச்
சுகத்தினல் லூரிற் பெற்ற தூயரைத் துதித்து வாழ்வாம்.

- மீனாட்சி சுந்தரம் பிள்ளை

சூத சங்கிதை

பரசிவமென் றடியவரைப் பகருமறை
களிதூங்கப் பலரும் போற்றப்
பிரசநறுங் கடுக்கைமுடி யப்பரன்போல்
விடநுகர்ந்து பெயராச் சீற்றப்
புரிசைநெடுங் களிற்றினைவென் றெழுவிடைவென்
முழுவிடைசூல் பொலியக் கொண்ட
வாரசுதிருப் பாதமலர் பரசுபுமெய்ப்
போதமுறீஇ யமைந்து வாழ்வாம்.

- தே. ராசுப் பிள்ளை

Koviloor Digital Library

68. திருநள்ளாறு

பதிக வரலாறு:

தென்புகலூர் மேவியதேனைச் செந்தமிழ் பாடிச் செங்காட்டங்குடி பணிந்து திருநள்ளாற்றிறைவரைத் தொழுது பாடியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 240.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 181 பதிக எண்: 68

திருச்சிற்றம்பலம்

1750. உள்ளா றாததோர் புண்டரி கத்திரள்
தெள்ளா றாச்சிவ சோதித் திரளினைக்
கள்ளா றாதபொற் கொன்றை கமழ்சடை
நள்ளா றாவென நம்வினை நாசமே. 1

1751. ஆர ணப்பொரு ளாமரு ளாளனார்
வார ணத்துரி போர்த்தம ணாளனார்

1. பொ-ரை: உள்ளே தன் நிறம் கெடாததாகிய ஒப்பற்ற தாமரைத் தொகுதியின் தெளிவு நீங்காததாகிய சிவ ஒளிப் பிழம்பினை, தேன் நீங்காத பொன்போன்ற கொன்றைகமழும் சடையினை உடைய ''நள்ளாறா!'' என்று கூற நம் வினைகள் நாசமாகும்.

கு-ரை: அகத்தே உள்ள ஆதாரங்களில் நீங்காத தாமரைகளின் தெளிவாகக் காணப்படுகின்ற சிவசோதி. உள் ஆறாததோர் புண்டரிகத்திரள் - ''ஊறுமருவிய உயர்வரை உச்சிமேல் ஆறின்றிப் பாயும் அருங்குள மொன்றுண்டு சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்பூவின்றிச் சூடான் புரிசடையோனே'' (தி.10 திருமந்திரம்). ஏனைத் தாமரைபோல் நீர்க்கீழ்த்தோன்றாத பீசம்முதலாகத் தோன்றி முளைத்த ஒப்பற்ற வெண்டாமரை. புண்டரிகத்திரள் - தாமரையின் தன்மைகள் எல்லாம் திரட்டித் தன்னுட்கொண்டது. தெள்ளாறாச் சிவசோதி - தெளிந்த சிவஞானத்தின் வழிகாணும் சிவமாகியப் பேரொளிப் பிழம்பு. கள் அறாத கொன்றை என்க.

2. பொ-ரை: திருமால் பொருந்தி ஏத்துகின்ற நள்ளாற்று இறைவர், வேதத்தின் பொருளாக விளங்கும் அருளை ஆள்பவர்;

Koviloor Digital Library

நாரணன் நண்ணி யேத்துநள் ளாறனார்
கார ணக்கலை ஞானக் கடவுளே. 2

1752. மேகம் பூண்டதோர் மேருவிற் கொண்டெயில்
சோகம் பூண்டழல் சோரத்தொட் டான் அவன்
பாகம் பூண்டமால் பங்கயத் தானொடு
நாகம் பூண்டுகூத் தாடுநள் ளாறனே. 3

1753. மலியுஞ் செஞ்சடை வாளர வம்மொடு
பொலியும் பூம்புனல் வைத்த புனிதனார்

யானையின் தோலைப் போர்த்த மணவாளர்; எல்லாவற்றுக்கும் மூலகாரணமாகிய கலைஞானக்கடவுள் ஆவர்.

கு-ரை: ஆரணம் - வேதங்களின் தொகுதி. ஆரணப்பொருளாம் அருளாளனார் - வேதப்பொருளாய்விளங்கும் கருணையாளர். வாரணத்து உரி - யானையினது தோல். நாரணன் - திருமால். நண்ணி - சென்றடைந்து. காரணன் - எல்லாவற்றிற்கும் நிமித்த காரணன். கலைஞானக் கடவுள் - கலைஞானம் தரும் கடவுள் என்க. அல்லது அவற்றிற்குப் பொருளாயுள்ள கடவுள் எனலுமாம்.

3. பொ-ரை: மேகத்தினைத் தன் உச்சியிற் கொண்டதாகிய மேருமாமலையாகிய வில்லைக்கொண்டு, முப்புரங்களும் சோகம் பூணுமாறு கனல் சோரத் தொட்டவனாகிய அவன், தன்னொரு பாகத்திற்கொண்ட திருமாலும், நான்முகனும் வழிபடுமாறு நாகம் பூண்டு கூத்தாடும் நள்ளாற்று இறைவன்.

கு-ரை: மேகம் பூண்டதோர் மேரு வில் - மேகங்கள் வந்து படியும் இமயமலையாகிய வில். எயில் - திரிபுரம். சோகம் பூண்டு - துன்பம் மேற்கொண்டு. அழல்சோர - நெருப்புப்பற்ற. தொட்டான் - எய்தான். பாகம் பூண்டமால் - இடப்பாகத்தே உறையும் திருமால். திருமாலை இடப்பாகத்தே மனைவியாகக் கொண்டவன் என்றபடி. ஹரிஅர்த்தர் என்ற சிவமூர்த்தம் குறித்தவாறு. பங்கயத்தான் - பிரமன். திருமால் பிரமரோடு நாகம் அணிந்து கூத்தாடும் நள்ளாறன் என்க.

4. பொ-ரை: செஞ்சடையில் மலிந்த பாம்பினோடு பொலிகின்ற கங்கையை வைத்த புனிதனாராகிய கூற்றுவனை நலிந்த நள்ளாறரது அருளாற்றலையும் கண்டு இறுமாந்து மகிழ்வேன்.

Koviloor Digital Library

நலியுங் கூற்றை நலிந்தநள் ளாறர்தம்
வலியுங் கண்டிறு மாந்து மகிழ்வனே. 4

1754. உறவ னாய்நிறைந் துள்ளங் குளிர்ப்பவன்
இறைவ னாகிநின் றெண்ணிறைந் தானவன்
நறவ நாறும் பொழிற்றிரு நள்ளாறன்
மறவ னாய்ப்பன்றிப் பின்சென்ற மாயமே. 5

1755. செக்க ரங்கழி செஞ்சுடர்ச் சோதியார்
நக்க ரங்கர வார்த்தநள் ளாறனார்
வக்க ரன்னுயிர் வவ்விய மாயற்குச்
சக்க ரம்மருள் செய்த சதுரரே. 6

கு-ரை: மலியும் - நிறைந்த. வாளரவம் - ஒளிபொருந்திய பாம்பு. பொலியும் - அழகில் சிறந்து விளங்கும். நலியும் - உயிர்களைத் துன்புறுத்தும். கூற்றை - இயமனை. நலிந்து - உதைத்துத் துன்புறுத்தும். வலியும் - வலிமையினையும்.

5. பொ-ரை: தேன்மணக்கும் பொழிலை உடைய திருநள் ளாற்றுப்பெருமான் உற்றுப்பொருந்தியவனாய் நிறைந்து உள்ளத்தைக் குளிர்விப்பவன்; இறைவனாகிநின்று எண்ணத்தில் நிறைந்தவன்; மறம் உடையவனாய் அருச்சுனனின் பொருட்டுப் பன்றியின்பின் சென்ற மாயம் என்னையோ?

கு-ரை: உறவனாய் - உறவுடையவனாய்; நன்மை செய்பவ னாய். உள்ளம் நிறைந்து - மனத்தின்கண்ணே நிறைந்து. குளிர்ப் பவன் - மனங்குளிரச் செய்பவன். எண் - எண்ணத்தின் கண்ணே. நறவம் - குங்கும மரம்; தேனுமாம். நாறும் - கமழும். மறவனாய் - அருச்சுனனோடு சண்டையிடப் பன்றியைத் துரத்திச் சென்ற வரலாற்றைக் குறித்தது. மாயம் - பொய்ச்செயலாகிய திரு விளையாட்டு.

6. பொ-ரை: சிவந்த வானமும் அழகிற்குத்தோற்று உள்ள மழிதற்குக் காரணமாகிய செஞ்சுடர் வீசும் சோதியரும், திகம்பரரு மாகிய பாம்பினை ஆர்த்துக் கட்டிய நள்ளாற்றிறைவர் வக்கராசுரன் உயிர் போக்கியவராகிய திருமாலுக்குச் சக்கரப் படையை அருள் செய்த திறம் உடையவர்.

Koviloor Digital Library

1756. வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற கண்டத்தர்
விஞ்சை யிற்செல்வப் பாவைக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க் கருளுநள் ளாறரே. 7

1757. அல்ல னென்று மலர்க்கரு ளாயின
சொல்ல னென்றுசொல் லாமறைச் சோதியான்
வல்ல னென்றும்வல் லார்வளம் மிக்கவர்
நல்ல னென்றும்நல் லார்க்குநள் ளாறனே. 8

கு-ரை: செக்கர் அங்குஅழி - செவ்வானத்தின் நிறம் அவ் விடத்து அழிந்து தோன்ற. நக்கர் - நகுதற்குரிய வேடமுடையவர். அங்கு அரவு ஆர்த்த நாதனார் என்க. வக்கரன் விருத்தசர்மனுக்கு சைதேவன் தங்கையாகிய சுருததேவியிடம் பிறந்தவன். இவனும் சிசுபாலனும் சனகசனந்தனர் சாபம் பெற்ற ஜயவிஜயர்களுடைய அவதாரம். இவன் வலிமை யடக்கப்பெற்றுக் கிருஷ்ணனால் கொல்லப் பட்டவன். வவ்விய - கொன்ற. மாயன் - திருமால்.

7. **பொ-ரை:** நைந்த உள்ளம் உடையவர்களுக்கு அருளும் நள்ளாற்று இறைவர் வஞ்சனைமிக்க நஞ்சினாற் பொலிகின்ற திருக்கழுத்தினர்: தெய்வச் செல்வப்பாவையாகிய உமா தேவிக்கு வேந்தர்: வஞ்சனை உடைய நெஞ்சத்தவர்களுக்கு வழி கொடாதவர்.

கு-ரை: வஞ்சம் - கொல்லும் தன்மையாகிய வஞ்சனையை உடைய. நஞ்சிற் பொலிகின்ற - விடத்தினாலே விளங்குகின்ற. விஞ் சையில் - வியத்தகு செயல்களினால் விளங்கும். செல்வப் பாவை - ஞானச் செல்வியாகிய சிற்சத்தி. வேந்தனார் - கணவர். நஞ்ச - நைந்த; நைஞ்ச என்றாய் நஞ்ச என மருவியது. அன்பினால் உருகில் நஞ்சு போன்ற கொடிய மனத்தவர்க்கும் அருள் செய்யும். உம்மை தொக்கது.

8. **பொ-ரை:** அலர்க்கு அல்லன் என்றும், அருளாயின சொல்லன் என்றும், சொல்லாமறைச் சோதியானாகிய வல்லன் என்றும் துதிக்க வல்லவர் வளம் மிக்கவராவர். அத்தகைய நல்லார்க்கு நள்ளாறன் என்றும் நல்லன்.

கு-ரை: அலர்க்கு அல்லன் - நல்லரல்லாதார்க்கு அல்லாதவன். அருளாயின சொல்லன் - அருளுபதேசம் செய்பவன். சொல்லாம்

Koviloor Digital Library

1758. பாம்ப ணைப்பள்ளி கொண்ட பரமனும்
பூம்ப ணைப்பொலி கின்ற புராணனும்
தாம்ப ணிந்தளப் பொண்ணாத் தனித்தழல்
நாம்ப ணிந்தடி போற்றுநள் ளாறனே. 9

1759. இலங்கை மன்ன னிருபது தோளிற
மலங்க மால்வரை மேல்விரல் வைத்தவர்
நலங்கொள் நீற்றர்நள் ளாறரை நாடொறும்
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே. 10

திருச்சிற்றம்பலம்

மறை - எழுதாக்கிளவியாய் செவிவழியாய் ஓதப்பட்டு வரும் மறையாகிய சுருதி.

9. பொ-ரை: நாம் பணிந்து அடிபோற்றும் நள்ளாற்று இறைவன், பாம்பாகிய அணையத்தக்க பள்ளியினைக் கொண்ட திருமாலும், பூவாகிய பணைத்த பள்ளியிற் பொலிகின்ற புராணனாகிய நான்முகனும், தாம் பணிந்து அளக்க இயலாத ஒப்பற்ற தனித்தழலாக உள்ளவன்.

கு-ரை: அணை - படுக்கை. பள்ளிகொண்ட - உறங்குதலைக் கொண்ட. பரமன் - மேலான திருமால். பூம்பணை - வயல்களில் தோன்றிய தாமரை. பொலிகின்ற - விளங்குகின்ற. புராணன் - தொல்லோனாகிய பிரமன். தாம் - இருவர் தாமும். பணிந்து - வணங்கி. அளப்பொண்ணா - அளக்க ஒண்ணாத. தனித்தழல் - தழலாய் நின்றவன்.

10. பொ-ரை: இலங்கை மன்னனாகிய இராவணன் இருபது தோள்களும் இற்று மனஞ் சுழலும்படியாகத் திருக்கயிலாயப் பெரு வரையின் மேல் திருவிரல் ஊன்றியவரும், நன்மை மிகுந்த திரு நீற்றருமாகிய நள்ளாறரை நாள்தோறும் வலம் வந்து வணங்குவார் வினைகள் மாயும்.

கு-ரை: இற - நொறுங்க. மலங்க - கலங்க. மால்வரை - பெரிய கயிலைமலை. மாயும் - அழியும்.

Koviloor Digital Library

69. திருக்கருவிலிக்கொட்டிட்டை

பதிக வரலாறு:

ஞானவரசு திருப்பழையாறை வடதளி வணங்கித் திருவானைக்காவிற்குச் செல்பொழுதில் பொன்னியின் இரு மருங்கும் உள்ள சிவதலங்களைப்பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 301).

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 182 பதிக எண்: 69

திருச்சிற்றம்பலம்

1760. மட்டிட் டகுழ லார்சுழ லில்வலைப்
பட்டிட் டுமயங் கிப்பரி யாதுநீர்
கட்டிட் டவினை போகக் கருவிலிக்
கொட்டிட் டையுறை வான்கழல் கூடுமே. 1

1761. ஞாலம் மல்கு மனிதர்காள் நாடொறும்
ஏல மாமல ரோடிலை கொண்டுநீர்
கால னார்வரு தன்முன் கருவிலிக்
கோல வார்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. 2

1. பொ-ரை: தேனையுடைய மலர்களைவைத்துச் சூடிய கூந்தலை உடைய பெண்களாகிய சுழலின் வலைப்பட்டு மனம் மயங்கிப் பின் இரங்காமல், நீர் உம்மைக் கட்டிய வினைகள் போக. கருவிலிக்கொட்டிட்டை உறையும் பெருமான் திருவடிகளைக் கூடுவீராக.

கு-ரை: மட்டிட்ட - தேன் பொருந்திய; மலர்களை அணிந்த எனக் கூட்டுக. குழலார் - கூந்தலையுடையவர். சுழலில் - ஆசைச் சுழலாகிய. வலைப்பட்டு - வலையின்கண்ணே அகப்பட்டு. பரியாது - வருந்தாது. கட்டிட்ட - பந்தித்துநின்ற. கூடும் - சேருங்கள்.

2. பொ-ரை: உலகில் நிறைந்த மனிதர்களே! நாள்தோறும் சிறந்த மலர்களோடு பச்சிலைகளையும் பொருந்துமாறு கொண்டு, நீர்

Koviloor Digital Library

1762. பங்க மாயின பேசப் பறைந்துநீர்
மங்கு மாநினை யாதே மலர்கொடு
கங்கை சேர்சடை யான்றன் கருவிலிக்
கொங்கு வார்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. 3

1763. வாடி நீர்வருந் தாதே மனிதர்காள்
வேட னாய்விச யற்கருள் செய்தவெண்
காட னாருறை கின்ற கருவிலிக்
கோடு நீள்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. 4

1764. உய்யு மாறிது கேண்மி னுலகத்தீர்
பைகொள் பாம்பரை யான்படை யார்மழுக்

உமக்குக் கூற்றுவன் வருவதன் முன்பே அழகு மிக்க நெடிய பொழில்கள் சூழ்ந்த கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

கு-ரை: ஞாலம் - உலகம். ஏலமாமலர் - பொருந்திய சிறந்த பெரிய மலர். இலை - பச்சிலைகள். காலனார் வருமுன் - இறக்குமுன்.

3. பொ-ரை: குற்றமுடையவற்றைப் பேசுதலால், நீர் மங்கு மாற்றை நினையாமல் மலர்களைக்கொண்டு, கங்கை சேர்ந்த சடை யானுக்குரிய மணம் மிக்க நெடிய பொழில்களை உடைய கருவிலிக் கொட்டிட்டையைச் சேர்வீராக.

கு-ரை: பங்கம் - பயனற்றவை. பறைந்து - மனம் வருந்தி. மங்குமா - மனஎழுச்சி குன்றுமாறு. கொங்குவார் பொழில் - தேன் நிறைந்த நீண்ட சோலை.

4. பொ-ரை: மனிதர்களே! நீர் துன்பங்களால் வாடிவருந்தாமல் அருச்சுனனுக்கு வேடனாய்வந்து அருள்செய்த திருவெண்காடனார் உறைகின்ற கிளைகள் நீண்ட பொழிலை உடைய கருவிலிக் கொட்டிட்டையைச் சேர்வீராக.

கு-ரை: விசயற்கு - அருச்சுனனுக்கு. கோடுநீள் - மரக் கொம்புகள் நீண்டுள்ள. அடியாரிடர் தீர்க்க இறைவன்தானே வரும் என்பது குறிப்பு.

5. பொ-ரை: உலகத்தில் உள்ளவர்களே! இதுவே உய்யும்வழி; கேட்பீராக; படம்கொண்ட பாம்பை அரையின்கண் அணிந்தவனும்,

Koviloor Digital Library

கையி னானுறை கின்ற கருவிலிக்
கொய்கொள் பூம்பொழிற் கொட்டிட்டை சேர்மினே. 5

1765. ஆற்ற வும்அவ லத்தழுந் தாதுநீர்
தோற்றுந் தீயொடு நீர்நிலந் தூவெளி
காற்று மாகிநின் றான்றன் கருவிலிக்
கூற்றங் காய்ந்தவன் கொட்டிட்டை சேர்மினே. 6

1766. நில்லா வாழ்வு நிலைபெறு மென்றெண்ணிப்
பொல்லா வாறு செயப்புரி யாதுநீர்
கல்லா ரும்மதில் சூழ்தண் கருவிலிக்
கொல்லே றூர்பவன் கொட்டிட்டை சேர்மினே. 7

மழுப்படை பொருந்திய கையை உடையவனும் ஆகிய பெருமான் உறைகின்ற, கொய்து கொள்ளத்தக்க பூக்களை உடைய பொழில் சூழ்ந்த கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

கு-ரை: பை - படம். பாம்பு அரையான் - பாம்பை இடையிலே கட்டியவன். மழுப்படையார் கையினான் என்க. படை - ஆயுதம். கொய்கொள் - கொய்தலைக்கொண்ட. மலர்களையும், இலைகளையும் பறித்தலைக் கொய்கொள் என்றார்.

6. பொ-ரை: நீர், மிகவும் துன்பத்தில் அழுந்தாமல், தோற்று கின்ற தீ, நீர், நிலம், விசும்பு, காற்று ஆகி நின்றவனும், கூற்றுவனைக் காய்ந்தவனும் ஆகிய பெருமானுக்குரிய கருவிலிக் கொட்டிட் டையைச் சேர்வீராக.

கு-ரை: ஆற்றவும் - மிகவும். அவலத்து - துன்பத்து. நீர் - நீங்கள். தோற்றும் - விறகு முதலியவற்றால் வெளிப்படுத்தப்படும். காய்ந்தவன் - சினந்தவன்.

7. பொ-ரை: நில்லாத வாழ்வு நிலைபெறும் என்று எண்ணிப் பொல்லா நெறியின்கண் வினைகளைச்செய விரும்பாது, நீர், கல்லால் நிறைந்த மதில் சூழ்ந்து தண்ணியதும் கொல்லேறாகிய இடபத்தினை ஊர்வானுக்குரியதும் ஆகிய கருவிலிக் கொட்டிட்டையைச் சேர்வீராக.

Koviloor Digital Library

1767. பிணித்த நோய்ப்பிற விப்பிரி வெய்துமா
றுணர்த்த லாமிது கேண்மி னுருத்திர
கணத்தி னார்தொழு தேத்துங் கருவிலிக்
குணத்தி னானுறை கொட்டிட்டை சேர்மினே. 8

1768. நம்பு வீரிது கேண்மின்கள் நாடொறும்
எம்பி ரானென் றிமையவ ரேத்துமே
கம்ப னாருறை கின்ற கருவிலிக்
கொம்ப னார்பயில் கொட்டிட்டை சேர்மினே. 9

கு-ரை: நில்லா - நிலையில்லாத. பொல்லா ஆறு - தீயவழி. புரியாது - விரும்பி எப்பொழுதும் செய்யாது. கல்லாரும் மதில் - கற்களால் கட்டப்படுதலைப் பொருந்திய மதில். கொல்லேறு - கொம்பினால் கொல்லத்தக்கதாகிய சினவிடை.

8. பொ-ரை: உம்மைப் பிணித்துள்ள துன்பம் நிறைந்த பிறவிப் பிரிவெய்தும் நெறியை உணர்த்தலாகின்ற இதனைக் கேட்பீராக! உருத்திரகணத்தினார் தொழுதேத்துவதும், எண்குணத்தினான் உறைவதும் ஆகிய கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

கு-ரை: பிணித்த - நம்மைப் பிணித்து நிற்கின்ற நோய்ப் பிறவி - பிறவியாகியநோய்; அல்லது நோயும் பிறவியும். பிரிவெய்து மாறு - நீங்கும்படி. உணர்த்தலாம் - பிறவி என்னை விட்டு நீங்க ஆணையிட்டு உணர்த்தலாம். நீங்கள் பிறப்பு நீங்குதலோடு பிறர்க்கும் உணர்த்தலாம். உருத்திரகணத்தினார் - சிவகணங்கள்; அடியார் கூட்டம். குணத்தினான் - நற்குணங்களின் வடிவாயிருப்பவன். சேர்வீராயின் நீங்கள் பிறவிநோயில் நீங்குதல் மட்டுமின்றிப் பிறர்க்கும் பிறவியை நீக்கும் ஆசாரியத் தலைமையைப் பெறுவீர்கள் என்றபடி. ''ஒரு நீயாகித் தோன்றப் பெறலரும் பரிசில் நல்கும்'' என்பது திருமுருகாற்றுப்படை.

9. பொ-ரை: மனிதர்களே! நான் சொல்லும் இதனை நம்பிக் கேட்பீராக; நாள்தோறும் தேவர்கள் 'எம்பெருமான்!' என்று ஏத்தும் ஏகம்பத்து இறைவனார் உறைகின்றதும், பூங்கொம்பு போன்ற பெண்கள் பயில்வதும் ஆகிய கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

Koviloor Digital Library

1769. பாரு ளீரிது கேண்மின் பருவரை
பேரு மாறெடுத் தானை யடர்த்தவன்
கார்கொள் நீர்வயல் சூழ்தண் கருவிலிக்
கூர்கொள் வேலினன் கொட்டிட்டை சேர்மினே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: நம்புவீர் - உறுதியைக் கேட்டுணரும் விருப்ப முடையீர். நம்பு - விருப்பம். எம்பிரான் - எமது தலைவன். ஏத்தும் - வணங்கும். கம்பனார் - திரு ஏகம்பத்துறையும் பெருமானார். கம்பன் - பிறருக்கு நடுக்கத்தைச் செய்வன். கொம்பனார் - பூங்கொடி போன்ற அழகிய பெண்கள்.

10. பொ-ரை: உலகிலுள்ளவர்களே! இது கேட்பீராக! பெரிய திருக்கயிலாய மலையைப் பேருமாறு எடுக்கலுற்ற இராவணனை அடர்த்தவனும் கூர்மைகொண்ட வேலை உடையவனும் ஆகிய பெருமான் உறைகின்ற கருமையைக் கொண்ட நீர் நிறைந்த வயல் சூழ்ந்த குளிர்ந்த கருவிலிக்கொட்டிட்டையைச் சேர்வீராக.

கு-ரை: பாருளீர் - உலகின்கண் உள்ளவர்களே! பருவரை - பெரிய மலை. பேருமாறு - பெயரும்படி. கார்கொள் நீர் - கருமை நிறத்தைக் கொண்ட தண்ணீர். இராவணனுக்கு அருள் செய்தது உலக மறிந்த நிகழ்ச்சியாகலின் பாருளீர் இதுகேண்மின் என விளித்தார்.

திருநாவுக்கரசர் புராணம்

திருநாவுக் கரசுவளர்
திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர்
வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ
லுறுகின்றேன் பேருலகி
லொருநாவுக் குரைசெய்ய
லொண்ணாமை யுணராதேன்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

70. திருக்கொண்டீச்சுரம்

பதிக வரலாறு:

ஞானவரசு திருவீழிமிழலையையும் திருவாஞ்சியத்தையும் போற்றித் திருமறைக்காட்டிற்குச் செல்லும்பொழுது புனிதர் வாழ் பதிகளைப்பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத்தமிழ் மாலை. (தி.12 திருநா. புரா.263.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 183 **பதிக எண்: 70**

திருச்சிற்றம்பலம்

1770. கண்ட பேச்சினிற் காளையர் தங்கள்பால்
மண்டி யேச்சுணும் மாதரைச் சேராதே
சண்டி யீச்சுர வர்க்கருள் செய்தவக்
கொண்டி யீச்சுர வன்கழல் கூறுமே. 1

1771. சுற்ற முந்துணை நன்மட வாளொடு
பெற்ற மக்களும் பேண லொழிந்தனர்
குற்ற மில்புகழ்க் கொண்டீச் சுரவனார்
பற்ற லாலொரு பற்றுமற் றில்லையே. 2

1. பொ-ரை: காளை போன்ற ஆடவரிடத்துப் பொருந்திக் கண்டவாறு பேசும் பேச்சாகிய ஏச்சுண்ணும் பெண்களைச் சேராது, சண்டீச்சுரர்க்கு அருள் செய்த கொண்டீச்சுரத்து இறைவன் திருவடியைக் கூறுவீராக.

கு-ரை: கண்ட பேச்சினில் - பயனற்ற பேச்சுக்களில் ஈடுபட்டு. காளையர் தங்கள் பால் - இளைஞர்களிடத்து. மண்டி - நெருங்கி. ஏச்சுணும் - பின் அவரால் ஏசும்மொழிகளைப் பெறும். கழல் கூறும் - திருவடிகளின் பெருமைகளைக் கூறுங்கள். மாதராரிடத்து அல்லற் படுகிறவர்கள் இறைவன் திருவடிகளைப் பற்றினால் இன்புறுவர்.

2. பொ-ரை: சுற்றத்தாரும், வாழ்க்கைத்துணையாகிய நல்ல மனைவியோடு பெற்ற பிள்ளைகளும் பேணுதலை ஒழிந்தனராதலால், குற்றமற்ற புகழை உடைய கொண்டீச்சுரத்து இறைவரையன்றி ஒரு பற்று மற்று இல்லை.

Koviloor Digital Library

1772. மாடு தானது வில்லெனின் மாநுடர்
பாடு தான்செல்வா ரில்லைபன் மாலையாற்
கூட நீர்சென்று கொண்டீச் சுரவனைப்
பாடு மின்பர லோகத் திருத்துமே. 3

1773. தந்தை தாயொடு தார மெனுந்தளைப்
பந்தம் ஆங்கறுத் துப்பயில் வெய்திய
கொந்த விழ்பொழிற் கொண்டீச் சுரவனைச்
சிந்தை செய்மின் அவனடி சேரவே. 4

கு-ரை: சுற்றமும் - சுற்றத்தினரும். துணை - துணைவியாகிய. பேணலொழிந்தனர் - விரும்புதலைத் தவிர்ந்தனர். பற்றலால் ஒருபற்று மற்றில்லை - இறைவனே பற்றுக்கோடாவான் வேறு ஒரு பற்றுக் கோடில்லை. ''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'' *(குறள். 350)* ''என்னிலாரும் எனக்கினியாரிலை'' (தி.5. ப.21. பா.1.) உலகில் இறைவனது சார்பில்லாது பிறிது ஒரு சார்பில்லை என்று அநுபவம் காட்டியவாறு.

3. பொ-ரை: செல்வம் இல்லையென்றால், மாநுடர் பெருமை யோடு சூழச் செல்வாரில்லை. ஆதலால், பல மாலைகளாற் கூட, நீர் சென்று கொண்டீச்சுரத்து இறைவனைப் பாடுவீராக; அவ்விறைவன் பரலோகத்து இருக்கவைக்கும்.

கு-ரை: மாடுதானது இல்லெனில் - செல்வம் இல்லையானால். செல்வம் இல்லையானால் அவரவரும் தம்போக்கிற் செல்வர். பாடு - பக்கம். செல்வாரும் என உம்மைதொக்கது. மாநுடர்பாடுதான் செல்வா ரில்லை - மனிதர் பெருமையோடு ஒருவரிடத்துச் செல்லுதல் இல்லை. அடியாருடன் நீர் சென்று பலவகைப்பட்ட திருப்பதிகப் பாமாலைகளால் பாடுங்கள். இருத்தும் - அப்பெருமான் இருக்கச் செய்வான்.

4. பொ-ரை: தந்தையும் தாயும் தாரமுமாகிய கட்டாகிய தளையை அறுத்துப் பூங்கொத்துக்கள் பெருகி மலர்கின்ற பொழில் களை உடைய கொண்டீச்சுரத்து இறைவனைச் சேவடி சேர்வதன் பொருட்டுச் சிந்தை செய்வீர்களாக.

கு-ரை: தந்தை தாய் மனைவி என்னும் பிணைப்பு ''இல்வாழ் வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை''

Koviloor Digital Library

1774. கேளு மின்இள மையது கேடுவந்
தீளை யோடிரு மல்லது எய்தன்முன்
கோள ராவணி கொண்டீச் சுரவனை
நாளு மேத்தித் தொழுமின் நன்காகுமே. 5

1775. வெம்பு நோயும் இடரும் வெறுமையும்
துன்ப முந்துய ரும்மெனுஞ் சூழ்வினை
கொம்ப னார்பயில் கொண்டீச் சுரவனை
எம்பி ரானென வல்லவர்க் கில்லையே. 6

(குறள்- 41.) என்பதால் தெளிவுபடுதல் அறிதற்குரியது. பயில்வு - பழகுதல். எய்திய - பொருந்திய. கொந்து - பூங்கொத்து.

5. பொ-ரை: மனிதர்களே! கேட்பீர்களாக; இளமைக்குக் கேடு வந்து சளியோடு கூடிய இருமல் வந்தெய்துவதற்குமுன் கொள்ளு கின்ற பாம்பினை அணிகின்ற கொண்டீச்சுரத்து இறைவனை நாளும் ஏத்தித் தொழுவீராக; உமக்கு நல்லனவே ஆகும்

கு-ரை: கேடு வந்து - கெடுதலை அடைந்து. ஈளை - கோழை. இருமல் எய்தமுன - முதுமை வருமுன்பே. கோளரா - கொள்ளும் வாயையுடைய பாம்பு. நன்கு - முத்தி ஞானம்.

6. பொ-ரை: பூங்கொம்பைப்போன்ற பெண்கள் பயில்கின்ற கொண்டீச்சுரத்து இறைவனை ''எம்பிரான்'' என்று ஏத்தவல்லவர்க்கு, வெம்புதற்குக் காரணமாகிய நோயும், துன்பமும், வறுமையும் முதலிய சூழ்தற்குரிய வினைகள் இல்லை.

கு-ரை: வெம்பும் - உடல் வெதும்பும். வெறுமை - வறுமை. இடர் - துன்பம் துயர் என்பன வேறுபாடுடையன. ஒன்று மனத்துன்பம், மற்றொன்று உடல் துன்பம், மூன்றாவது பிறவித் துன்பம், இவ்வாறு கொள்ளலாம்.

சூழ் வினை - நம்மைச் சூழ்ந்துள்ள வினைப் பயன்களாகிய இவை. கொம்பனார் பயில் - பூங்கொம்பு போன்றவர்களாகிய மகளிர் பயில்கின்ற.

Koviloor Digital Library

1776. அல்ல லோடரு நோயி லழுந்திநீர்
செல்லு மாநினை யாதே கனைகுரல்
கொல்லை யேறுடைக் கொண்டீச் சுரவனை
வல்ல வாறு தொழவினை மாயுமே. 7

1777. நாறு சாந்தணி நன்முலை மென்மொழி
மாறி லாமலை மங்கையொர் பாகமாக்
கூற னாருறை கொண்டீச் சுரநினைந்
தூறு வார்தமக் கூனமொன் றில்லையே. 8

1778. அயிலார் அம்பெரி மேருவில் லாகவே
எயிலா ரும்பொடி யாய்விழ எய்தவன்

7. பொ-ரை: துன்பத்தோடு அருநோய்களில் அழுந்திச் செல்லும் நெறி எது என்று நினையாமல், நீர், கனைத்த குரலை உடைய முல்லை நிலத்துக்குரிய இடபவாகனத்தை ஊர்ந்தவனாகிய கொண்டீச்சுரத்து இறைவனை வல்லவாறு தொழுவீரேயாயின் வினைகள் மாயும்.

கு-ரை: அல்லலோடு - துன்பத்தோடு. அடரும் - நெருக்கு கின்ற. நோயில் - பிணியில். செல்லுமா - பயனின்றி இறந்தொழியு மாறு. நினையாதே - நினைக்காமல். கனைகுரல் - கனைக்கின்ற ஒலி. கொல்லையேறு - முல்லை நிலத்து எருது. வல்லவாறு - இயன்றவாறு.

8. பொ-ரை: நறுமணம் வீசும் கலவைச்சாந்தணிந்த நல்ல தனங்களையும் மெல்லிய மொழிகளையும் உடைய மாறுபாடற்ற உமா தேவியை ஒருபாகமாகக்கொண்ட கூற்றை உடையவராகிய பெருமான் உறைகின்ற கொண்டீச்சுரத்தை நினைத்து நெஞ்சில் மேலும் மேலும் எண்ணுபவர்களுக்குக் குற்றம் ஒன்றும் இல்லை.

கு-ரை: நாறு - மணம் கமழ்கின்ற. சாந்து - சந்தனம். மாறு - ஒப்பு. கூறனார் - உடலில் இடக்கூற்றை அளித்தவர். ஊறுவார் - செல்லுவார். உறுவார் என்பது முதல்நீண்டு ஊறுவார் என்றாயது. ஊனம் - குற்றம்.

9. பொ-ரை: மேருமலையை வில்லாகக் கொண்டு கூர்மையை யுடைய ஓரம்பினால் முப்புரங்கள் தூளாகுமாறு விழ எரியால் எய்த வனாகிய, குயில்களை உடைய பொழில் சூழ்ந்த கொண்டீச்சுரத்து

Koviloor Digital Library

குயிலா ரும்பொழிற் கொண்டீச் சுரவனைப்
பயில்வா ரும்பெரு மைபெறும் பாலரே. 9

1779. நிலையி னார்வரை நின்றெடுத் தான்றனை
மலையி னாலடர்த் துவிறல் வாட்டினான்
குலையி னார்பொழில் கொண்டீச் சுரவனைத்
தலையி னால்வணங் கத்தவ மாகுமே. 10

திருச்சிற்றம்பலம்

இறைவனைப் பயில்கின்ற அடியவர்கள் பெருமை பெறும் பகுதியை உடையவராவர்.

கு-ரை: அயிலார் அம்பு - எரி கூர்மை பொருந்திய அம்பு அக்கினிதேவனாக. திரிபுரமழிக்கச் சென்றகாலையில் அக்கினிதேவன் அம்பாயினான் என்ற கதைக்குறிப்பைக் கொண்டது. மேரு - இமயம். எயிலாரும் - திரிபுரக் கோட்டையில் உள்ளவரும். பொடியாய் விழ - தூளாகிக் கீழே விழ. பயில்வாரும் - வழிபடுவார்களும். உம்மையால் புகழ் கூறுபவர்களோடு மனம், மெய், அறிவு ஆகியவற்றால் வழிபடுபவர்களையும் கொள்க. பாலர் - தன்மையை உடையவர்.

10. பொ-ரை: நிலையினைப் பொருந்திய திருக்கயிலையை ஆணவத்தொடு நின்று எடுத்த இராவணனை மலையினால் வருத்தி அவன் ஆற்றலை வாட்டியவனாகிய, குலைகள் பொருந்திய சோலை யையுடைய பொழில்கள் சூழ்ந்த கொண்டீச்சுரத்து இறைவனைத் தலையினால் வணங்கலே தவம் ஆகும்.

கு-ரை: நிலையினார்வரை - ஊழிதோறூழி முற்றும் அழியாது நிலைபெறும் அரிய மலையை. தன் உடல் வலிமையின் நிலையிற் பொருந்தி அதன் எல்லையிலே நின்று. விறல் - வலிமை. குலையினார் இன் சாரியை, பொழில்; குலைகளை உடைய சோலை. தவமாகும் - சிறந்த தவம் அதுவேயாகும்.

Koviloor Digital Library

71. திருவிசயமங்கை

பதிக வரலாறு:

திருப்பழையாறை வடதளி வணங்கிப் பொன்னியின் இருமருங்கும் உள்ள சிவதலங்களைப்பாடிப் பரவிக் கொண்டு திருவானைக்காவிற்குச் செல்லும்பொழுது திருவிசய மங்கையில் பரவியது இத்தமிழ்மாலை. (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 184 பதிக எண்: 71

திருச்சிற்றம்பலம்

1780. குசையும் அங்கையிற் கோசமுங் கொண்டவவ்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையுந் தானுமொன் றாயினான்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினே. 1

1781. ஆதி நாத னடல்விடை மேலமர்
பூத நாதன் புலியத ளாடையன்

1. பொ-ரை: விசயமங்கையுள் வீற்றிருக்கும் வேதியனாகிய பெருமான், தம் அங்கையில் தருப்பையும், மலர்களும் கொண்ட அழகிய, குற்றமற்ற மங்கலவாசகம் உரைப்போர் வாழ்த்தும்படி பொருந்த உமையும் தானும் ஒரு திருமேனி உருவில் நின்றான்.

கு-ரை: குசை - தருப்பை. கோசம் - புத்தகம்; இறைவனது முழு முதல் தன்மைகூறும் பதிகங்களில் ஒன்று. வசையில் - குற்றமற்ற. மங்கல வாசகர் - மங்களவாசகமாகிய வேதவாழ்த்துக் கூறும் அந்தணர். மணிவாசகரைக் குறித்ததாகக் கூறுவாரும் உளர். இசைய - தம் திருமேனியோடு பொருந்த. ஒன்றாயினான் - ஒருருவ மாயினான்; மாதொரு கூறனாயினான் என்றபடி. விசையமங்கையுள் - திருவிசயமங்கை என்னும் தலத்துள். வேதியன் - வேதங்களை அருளிச் செய்தவன்.

2. பொ-ரை: ஆதிக்கண் தோன்றியநாதனும், வலியுடைய இடபத்தின்மேல் அமரும் பூதநாதனும், புலித்தோலாடையனும், வேதநாதனும் ஆகிய பெருமான் விசயமங்கையில் உள்ளான்; அவன் திருவடிகளைப் புகழ்ந்து உரைக்க வல்லார்க்குப் பாவம் இல்லை.

Koviloor Digital Library

வேத நாதன் விசயமங் கையுளான்
பாத மோதவல் லார்க்கில்லை பாவமே. 2

1782. கொள்ளி டக்கரைக் கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விச யமங்கை
உள்ளி டத்துறை கின்ற வுருத்திரன்
கிள்ளி டத்தலை யற்ற தயனுக்கே. 3

1783. திசையு மெங்குங் குலுங்கத் திரிபுரம்
அசைய அங்கெய்திட் டாரழ லூட்டினான்
விசைய மங்கை விருத்தன் புறத்தடி
விசையின் மங்கி விழுந்தனன் காலனே. 4

கு-ரை: ஆதிநாதன் - எல்லா உலகிற்கும் ஆதியாய் முளைத்த தலைவன். அடல் - வலிமை. விடை - இடபம். பூத நாதன் - பூதகணங்களின் தலைவன். புலியதள் - புலித்தோல். வேதநாதன் - வேதங்களால் புகழப்படும் தலைவன் அல்லது வேதங்களின் தலைவன்.

3. பொ-ரை: கொள்ளிடக்கரைக் கோவந்தபுத்தூரில் வெள்ளிய இடபம் பூசிக்க அதற்கு அருள்செய்தவனும், விசயமங்கையுள் இடமாகக்கொண்டு உறைகின்றவனும் ஆகிய உருத்திரன், கிள்ளிய விடத்துப் பிரமனுக்குத் தலை ஒன்று அற்றது.

கு-ரை: கொள்ளிடக்கரை - கொள்ளிடநதியின் கரையின் கண்ணே உள்ள. கோவந்தபுத்தூரில் - கோவந்தபுத்தூர் என்னும் தலத்தில். வெள்விடைக்கு அருள்செய் - வெண்மையான இடபத்திற்கு அருள் செய்த. உருத்திரன் - துன்பத்தை ஓட்டுகின்றவன். அயனுக்குக் கிள்ளிடத் தலையற்றது - பிரமன் தலைகள் ஐந்தனுள் ஒன்றினைக் கிள்ளிட அவ்வயன் ஒரு தலையற்றவனானான்.

4. பொ-ரை: விசயமங்கையில் உள்ள மிகப் பழையவனாகிய பெருமான், திசைகள் எங்கும் குலுங்குமாறு திரிபுரங்கள் அசையும் படிப் பொருந்திய அழலூட்டியவன்; அப்பெருமான் திருவடிப்புறத்து விரைந்து மயங்கி விழுந்தனன் கூற்றுவன்.

கு-ரை: திசையும் - எட்டுத் திசைகளும். எங்கும் - எல்லா உலகங்களும். குலுங்க - நடுங்க. அசைய அங்கு எய்திட்டுத்

Koviloor Digital Library

1784. பொள்ள லாக்கை யகத்திலைம் பூதங்கள்
கள்ள மாக்கிக் கலக்கிய காரிருள்
விள்ள லாக்கி விசயமங் கைப்பிரான்
உள்ளல் நோக்கியென் னுள்ளுள் உறையுமே. 5

1785. கொல்லை யேற்றுக் கொடியொடு பொன்மலை
வில்லை யேற்றுடை யான்விச யமங்கைச்
செல்வ போற்றியென் பாருக்குத் தென்திசை
எல்லை யேற்றலு மின்சொலு மாகுமே. 6

திரிபுரங்கள் ஆடி அசையும்படி அவை இருக்கும் இடம் சென்று அடைந்து. ஆர்அழல் - அணைப்பதற்கு அரிய நெருப்பை. விருத்தன் - மிக முதியன். முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளானவனாதலின் விருத்தன் என்றார். புறத்தடி - புறக்காலால். விசையின் - விரைவாக. மங்கி - ஒளி மங்கி.

5. பொ-ரை: ஓட்டைகளை உடைய உடம்பினகத்து ஐம்பூதங்கள் கள்ளத்தனம் உடையவாக்கிக் கலக்கிய கரிய இருளிலே, அவ்விருளை விலக்குதல் புரிந்த விசயமங்கைப்பெருமான் தன் திருவுள்ளத்தே நினைந்தருளலை நோக்கி என் உள்ளத்துள்ளே உறைவான்.

கு-ரை: பொள்ளல் - பொத்தல். ஒன்பது ஓட்டைகளை உடைய வீடாதலின் உடலைப் பொள்ளல் ஆக்கை என்றார். உள்ளல் - தன்னை நினையும்படிச் செய்து. அகத்தில் - உள்ளே. கள்ளமாக்கி - வஞ்சகத்தை மனத்தே உளதாக்கி. கலக்கிய - மனத்தை அலைத்த. கார் இருள் - மிக்க இருளை உடைய அறியாமையை. விள்ளலாக்கி - நீங்கும்படி செய்து, உள்ளல் நோக்கி - நான் தியானம் செய்வதைப் பார்த்துக்கொண்டே. உள்ளுள் - உள்ளத்திற்குள்ளே. உறையும் - எழுந்தருளியிருக்கும்.

6. பொ-ரை: முல்லைநிலத்துக்குரிய இடபக்கொடியையும், மேருமலையாகிய வில்லையும் பொருந்த உடையவனாகிய விசயமங்கையின் அருட்செல்வ! போற்றி! என்று உரைப்பார்க்குத் தென்திசையில் ஏறுதலும், இனிய புகழும் உளதாகும்.

கு-ரை: கொல்லை - முல்லைநிலக்காடு. ஏறு - மாலாகிய இடப ஏறு. ஏற்றுக்கொடி - இடபக் கொடி. பொன்மலை - மேருமலை.

Koviloor Digital Library

1786. கண்பல் உக்க கபாலம்அங் கைக்கொண்டு
உண்ப லிக்குழ லுத்தம னுள்ளொளி
வெண்பி றைக்கண்ணி யான்விச யமங்கை
நண்ப னைத்தொழப் பெற்றது நன்மையே. 7

1787. பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டும் நல்வரங் கொள்விச யமங்கை
ஆண்ட வன்னடி யேநினைந் தாசையால்
காண்ட லேகருத் தாகி யிருப்பனே. 8

வில்லை ஏற்றுடையான் - மேரு மலையாகிய வில்லை ஏற்றுக்கொண்டவன். தென்றிசை எல்லையேற்றலும் - தெற்கில் உளதாய எமனுலக எல்லையில் காலன்வந்து வரவேற்று இன்சொல் கூறுதலுமாம் என்பதாம். வணங்கிவர வேற்பான்என்க. இன்சொலும் - இன் சொல் கேட்கும் தகுதிப்பாட்டையும். ஆகும் - கொடுப்பதாகும். எமனால் வழிபடப்படுவர் என்றபடி.

7. பொ-ரை: கண்ணும் பல்லும் சிந்திவிட்டகபாலத்தைத் தம் அழகியகைக்கொண்டு உண்ணுகின்ற பலிக்கு எங்கும் திரிகின்ற உத்தமனும், வெண்பிறையைக் கண்ணியாக உடையானுமாகிய விசயமங்கையின் நண்புக்குரிய கடவுளைத் தொழப்பெற்றது நன்மையேயாகும்.

கு-ரை: கண்பல் உக்க - கண்களும் பற்களும் உதிர்ந்த. கபாலம் - மண்டையோடு. அங்கைக்கொண்டு - அழகிய திருக்கரத்தே கொண்டு. உண்பலிக்கு உழல் - உண்ணும் பிச்சைக்கு வருந்தித் திரிகின்ற. உள்ளொளி - தன்னுள்ளே ஒளியையுடைய். கண்ணி - தலை மாலை. நண்பன் - தோழனாயிருப்பவன்.

8. பொ-ரை: பாண்டுவின் மகனாகிய பார்த்தன் (அருச்சுனன்) பணிகள் செய்து தான் விரும்பிய நல்வரத்தைக் கொண்ட விசய மங்கையில் உறையும் ஆண்டவன் திருவடியே நினைந்து ஆசையால் அவனைக் காணுதலே கருத்தாக இருப்பன் அடியேன்.

கு-ரை: பாண்டுவின் மகன் - பாண்டு என்னும் குருகுலத் தரசனுடைய மகன். பார்த்தன் - அர்ச்சுனன். பணி செய்து - தொண்டு செய்து. வேண்டும் - விரும்பும். தலவரலாறு கூறியபடி.

Koviloor Digital Library

1788. வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உய்யக்கொளுங் காண்மினே. 9

1789. இலங்கை வேந்த னிருபது தோளிற
விலங்கல் சேர்விர லான்விச யமங்கை
வலஞ்செய் வார்களும் வாழ்த்திசைப் பார்களும்
நலஞ்செய் வாரவர் நன்னெறி நாடியே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: மயக்கந் தீர்தற்குரிய மனிதர்களே! அடியேன் கூறுவதை வந்து கேட்பீராக; வெந்த திருநீற்றை அணிந்தவனாகிய விசயமங்கைப் பெருமான் தன்னைச் சிந்தையால் நினைவார்களைச் சிக்கெனத் தன் உறவுடையவராக்கி உய்யக் கொள்வான்; காண்பீராக.

கு-ரை: கேண்மின் - கேளுங்கள். மயல் தீர் - அறியாமை நீங்கிய. சிக்கென - உறுதியாக. பந்து - உறவினன்.

10. பொ-ரை: இலங்கைக்கரசனாகிய இராவணனது இருபது தோள்களும் இற்று விழும்படியாகத் திருக்கயிலையை ஊன்றிய திருவிரலை உடையவனாகிய பெருமானுக்குரிய விசய மங்கையை வலம் வந்து வணங்குபவர்களும், வாழ்த்து இசைப்பவர்களும் நன்னெறிநாடித் தமக்கு நலம் செய்வாராவர்.

கு-ரை: விலங்கல் - மலை. கயிலைமலையிடத்தே ஊன்றிய திரு விரலை உடைவன் என்பார் விலங்கல்சேர் விரலான் என்றார். நலஞ் செய்வார் - தம்முயிர்க்கு நன்மை செய்தவராவர். நாடி - அடைந்து.

திருநாவுக்கரசர் புராணம்

காலெல்லாம் தகட்டுவரால் கரும்பெல்லாம் கண்பொழிதேன்
பாலெல்லாங் கதிர்ச்சாலி பரப்பெல்லாங் குலைக்கமுகு
சாலெல்லாந் தரளநிறை தடமெல்லாஞ் செங்கழுநீர்
மேலெல்லா மகிற்றூபம் விருந்தெல்லாந் திருந்துமனை.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

72. திருநீலக்குடி

பதிக வரலாறு:

திருப்பழையாறைவடதளி வணங்கித் திருவானைக் காவிற்குச் செல்லும் பொழுது பொன்னியின் இருமருங்கும் உள்ள சிவதலங்களைப்பாடிப் பரவியவற்றுள் ஒன்று இத்தமிழ் மாலை. (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 185 **பதிக எண்: 72**

திருச்சிற்றம்பலம்

1790. வைத்த மாடும் மனைவியும் மக்கள்நீர்
செத்த போது செறியார் பிரிவதே
நித்த நீலக் குடியர னைந்நினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே. 1

1791. செய்ய மேனியன் தேனொடு பால்தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மைய லாய்மற வாமனத் தார்க்கெலாம்
கையி லாமல கக்கனி யொக்குமே. 2

1. பொ-ரை: தேடிவைத்த செல்வமும், மனைவியும், மக்களும் நீர் செத்தபோது உம்மைச் செறியார்; பிரிவதே இயல்பாம்; நாள் தோறும் நீலக்குடியரனை நினையும் சித்தம் ஆகின்சிவகதி சேர்வீர்.

கு-ரை: வைத்த - சேமித்து வைத்த. மாடு - செல்வம். மக்கள் என்பதிலும் உம்மை சேர்க்க. நீர் - நீங்கள். செறியார் - உடன் வராத வராய். பிரிவதே - நீங்குதலைச் செய்வர். நித்தம் - நாள்தோறும். நினை - நினைக்கும். சித்தமாகில் - மனமுடையீரானால். சேர்திர் - சேருவீர்.

2. பொ-ரை: சிவந்த திருமேனியனாய்த் தேனும், பாலும், தயிரும், நெய்யும் கொண்டு திருமுழுக்காடும் நீலக்குடி அரனின்மேல் காதல் கொண்டு மறவாத மனத்தினர்க்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனி போல அப்பெருமான் புலப்பட்டு அருள்புரிவான்.

Koviloor Digital Library

1792. ஆற்ற நீள்சடை ஆயிழை யாளொரு
கூற்றன் மேனியிற் கோலம தாகிய
நீற்றன் நீலக் குடியுடை யானடி
போற்றி னாரிடர் போக்கும் புநிதனே. 3

1793. நாலு வேதியர்க் கின்னருள் நன்னிழல்
ஆலன் ஆலநஞ் சுண்டகண் டத்தமர்
நீலன் நீலக் குடியுறை நின்மலன்
கால னாருயிர் போக்கிய காலனே. 4

கு-ரை: செய்ய - சிவந்த. மையலாய் - அன்பு மயக்கம் கொண்டு. கையில் ஆமலகக் கனியொக்கும் - உள்ளங்கையில் நெல்லிக்கனியை ஒத்து வெளிப்படையாய்த் தோன்றி அருள் செய்வான்.

3. பொ-ரை: நீலக்குடி உடைய பெருமான், கங்கையாற்றுடன் கூடிய நீண்ட சடையையுடையவன். உமாதேவியை ஒரு கூற்றிற் கொண்ட இயல்பினன். திருமேனிக்கு அழகு தருவதாகிய திருநீற்றை உடையவன். திருவடி போற்றினார் இடர்களைப் போக்கும் புனிதன்.

கு-ரை: ஆற்ற - மிக. ஆயிழையாள் - அழகிய அணிகலன்கள் அணிந்தவள். ஒரு கூற்றன் - ஒரு பாகத்தின்கண்ணே உடையவன். கோலமதாகிய - அழகிய. போற்றினார் - தன்னைப் போற்றியவர் களது. இடர் - துன்பங்களை. புனிதன் - தூயவன்.

4. பொ-ரை: நான்கு முனிவர்களுக்கு இன்னருள் புரிய ஆலமரத்தின் நன்னிழலின் கீழ் இருந்தோன்; ஆலகால நஞ்சு உண்ட கண்டத்துடன் பொருந்திய நீலநிறம் உடையவன். நீலக்குடி உறையும் மலமற்றவன்; காலன் உயிர் போக்கிய கடவுள்.

கு-ரை: நாலுவேதியர்க்கு - நான்கு வேதமுணர்ந்த அந்தண யோகியர்க்கு. நால்வராவர் - சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர். இன்னருள் - இனிய திருவருளைச் செய்யும். ஆலன் - கல் லாலின் நிழற் கீழ் இருப்பவன். ஆலநஞ்சு - ஆலகாலமாகிய விடம். கண்டத்து அமர் நீலன் - கழுத்திலே பொருந்திய நீலநிறத்தை உடைய வன். நின்மலன் - குற்றமற்றவன். காலன் - காலனுக்குக் காலன்.

Koviloor Digital Library

1794. நேச நீலக் குடியர னேயெனா
நீச ராய்நெடு மால்செய்த மாயத்தால்
ஈச னோர்சரம் எய்ய எரிந்துபோய்
நாச மானார் திரிபுர நாதரே. 5

1795. கொன்றை சூடியைக் குன்ற மகளொடும்
நின்ற நீலக் குடியர னேயெனீர்
என்றும் வாழ்வுகந் தேயிறு மாக்குநீர்
பொன்றும் போது நுமக்கறி வொண்ணுமே. 6

5. பொ-ரை: ''நேசத்துக்குரிய நீலக்குடி அரனே!'' என்னாத கீழ்மை உடையவராய் நெடுமால் செய்த மாயத்தால் திரிபுரத்து அசுரர்கள் ஈசன் ஓரம்பு எய்ய எரிந்து சாம்பலாய்ப் போய் நாசமாயினர்.

கு-ரை: நேச - அன்பர்க்கு அன்பனே! எனா - என்னாத. நெடுமால் - திருமால். மாயம் - சூழ்ச்சிச் செயல். நெடுமால் செய்த மாயத்தால் நீசராய் என மாறுக. நீசர் - வெறுக்கத்தக்கவர். ஓர் சரம் - ஓர் அம்பு. நாசமானார் - அழிந்தனர் - திரிபுரநாதர் - திரிபுரங்களுக்குத் தலைவர். திருமால் செய்த மாயமாவது, தாரகாசுரன் புதல்வராகிய கமலாக்ஷன். வித்யுன்மாலி, தாரகாக்ஷன் என்ற மூவரும் சிவபெருமானை நோக்கித் தவம் இருந்து மூன்று பறக்கும் கோட்டைகளைப் பெற்றுப் பல நகரங்களையும் அழித்துவந்தனர். அதைக் கண்ட திருமால் புத்தராய் நாரதரை அனுப்பி அவர்களுக்குப் புற மதத்தை உபதேசித்து அவர்கள் பெருமானிடம் கொண்டிருந்த பக்திக்கு ஊறு விளைக்கச் செய்து திரிபுரங்களைப் பெருமான் அழிக்கும்படி, செய்தார்.

6. பொ-ரை: என்றும் பொய்யாகிய உலக வாழ்வை உகந்து இறுமாப்பு அடைகின்ற நீர் இறக்கும்போது நுமக்கு அறியவொண்ணுமோ? ஒண்ணாதாதலால் கொன்றை சூடும் கடவுளுமாகிய மலைமகளோடும் நின்ற நீலக்குடி அரனே என்று உரைப்பீர்களாக!

கு-ரை: குன்றமகள் - மலையரசன் புதல்வியாகிய பார்வதி. எனீர் - என்று சொல்லுங்கள். என்றும் - எப்பொழுதும். உகந்தே இறுமாக்கும் - மகிழ்வோடு பெருமிதம் கொள்ளும். பொன்றும் போதும் -. இறக்கும் போதும். அறிவொண்ணும் - அவனை அறிதல்

Koviloor Digital Library

1796. கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந் தேனன்றே. 7

1797. அழகி யோமிளை யோமெனு மாசையால்
ஒழுகி ஆவி யுடல்விடு முன்னமே
நிழல தார்பொழில் நீலக் குடியரன்
கழல்கொள் சேவடி கைதொழு துய்ம்மினே. 8

உண்டாகும். இப்பிறப்பில் வாழ்வு சிறக்கும். இறக்கும்போது அவன் நினைப்பு உண்டாய் மறுபிறப்பும் இல்லையாகும்படிச் செய்யும் என்க.

7. பொ-ரை: கல்லினோடு என்னைச் சேர்த்துக்கட்டி அமண் ஒழுக்கமுடையவர்கள் விரைந்து கடல் நீரிற் புக - நூக்கிவிட, என் வாக்கினால் நெல்வளம் உடைய நீண்ட வயல் சூழ்ந்த நீலக்குடி அரனுடைய நல்ல நாமத்தைச் சொல்லி நன்றே உய்ந்தேன்.

கு-ரை: கல்லினோடு - கருங்கல்லோடு. எனை - என்னை. பூட்டி - சேர்த்துக் கட்டி. அமண் கையர் - அமண் ஒழுக்கத்தையுடையவர். அதாவது நிர்வாண ஒழுக்கத்தினர். ஒல்லை - விரைந்து. நீர்புக நூக்க - கடலின்கண்ணே அழுந்தும்படியாகத் தள்ளிவிட. நெல்லு நீள் - நெற்கதிர்கள் பெருகியுள்ள; நவிற்றி - சொல்லி. உய்ந் தேனன்றே - உய்ந்தேனல்லவா? திருநாவுக்கரசு சுவாமிகள் கல்லிற் பிணைத்துச் சமணர் கடலில் தள்ளியபோது தாம் திருவருளால் கரையேறிய அற்புதத்தைத் தம் திருவாயால் தெளிய உணர்த்தும் திருப்பாடல் இது.

8. பொ-ரை: ''யாம் அழகியவர்கள்; இளையவர்கள்'' எனும் ஆசையால் ஒழுகி, உயிர் உடலைவிட்டுப் பிரிந்துபோவதற்கு முன்பே, நிழல் உடையதாய்ச் செறிந்த பொழில்களையுடைய நீலக்குடி அரனுடைய கழலணிந்த சேவடிகளைக் கைகளால் தொழுது உய்வீர்களாக.

கு-ரை: அழகியோம் - நாம் அழகாக இருக்கின்றோம். இளையோம் - இளமைத்தன்மை உடையவர்களாக இருக்கின்றோம். ஆசையால் - நிலையாத இவ்விரண்டையும் பெற்றுக் களிக்கும் ஆசை

Koviloor Digital Library

1798. கற்றைச் செஞ்சடைக் காய்கதிர் வெண்திங்கள்
பற்றிப் பாம்புடன் வைத்த பராபரன்
நெற்றிக் கண்ணுடை நீலக் குடியரன்
சுற்றித் தேவர் தொழுங்கழற் சோதியே. 9

1799. தருக்கி வெற்பது தாங்கிய வீங்குதோள்
அரக்க னாருட லாங்கொர் விரலினால்
நெரித்து நீலக் குடியரன் பின்னையும்
இரக்க மாயருள் செய்தன னென்பரே. 10

திருச்சிற்றம்பலம்

யினாலே. ஒழுகி - தவறான வழிகளில் நடந்து. ஆவி - உயிர். உடல் விடுமுன்னமே - உடலை விட்டு நீங்கும் முன்பாகவே. நிழலதார் பொழில் - நிழல் பொருந்திய சோலை.

9. பொ-ரை: கற்றையாகிய செஞ்சடையில், குளிர்ந்த கதிர்களை வீசும் வெண்திங்களைப்பற்றிப் பாம்புடன் வைத்த கடவுளாகிய நெற்றிக்கண்ணுடைய நீலக்குடி அரன், தேவர் சுற்றிவந்து தொழும் கழலணிந்த சோதிவடிவினன் ஆவன்.

கு-ரை: கற்றை - பலவற்றின் தொகுதி. செஞ்சடைக்கற்றை என மாறுக. காய்கதிர் - கிரணங்களை வெளிவிடும் சூரியன். பற்றி - பிடித்து. பராபரன் - மேலானவற்றிற்கெல்லாம் மேலானவன். கழற் சோதி - கழலையணிந்த ஒளிவடிவானவன்.

10. பொ-ரை: நீலக்குடி அரன் தருக்கடைந்து திருக் கயிலையைத் தாங்கிய செறிந்த தோளை உடைய இராவணன் உடலை ஓர் திரு விரலால் நெரித்துப் பின்னையும் இரக்கமாகி அருள் புரிந்த கருணைத் திறம் உடையவன் என்பர்.

கு-ரை: தருக்கி - செருக்கி. வெற்பது - கயிலைமலையை. தாங்கிய - சுமந்த. வீங்கு - பெரிய. அரக்கனார், ஆர் இழித்தற் பொருளில் வந்தது. பிழை செய்யினும் பிழைத்ததுணர்வராயின் பொறுத்தருளுவன் என்க.

Koviloor Digital Library

73. திருமங்கலக்குடி

பதிக வரலாறு:

திருநாவுக்கரசர் வேள்விகுடி, எதிர்கொள்பாடி இவற்றை வணங்கித் திருக்கோடிகாவிற்குச் செல்லும்பொழுது வணங்கிய திருத்தலங்களுள் ஒன்றாகிய திருமங்கலக்குடியில் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 185 **பதிக எண்: 73**

திருச்சிற்றம்பலம்

1800. தங்க லப்பிய தக்கன் பெருவேள்வி
அங்க லக்கழித் தாரருள் செய்தவன்
கொங்க லர்க்குழல் கொம்பனை யாளொடு
மங்க லக்குடி மேய மணாளனே. 1

1801. காவி ரியின் வடகரைத் காண்தகு
மாவிரி யும்பொ ழில்மங் கலக்குடித்
தேவ ரியும்பி ரமனுந் தேடொணாத்
தூவெ ரிச்சுடர்ச் சோதியுட் சோதியே. 2

1. பொ-ரை: மணம் உடைய மலரைச்சூடிய கூந்தலை உடைய பூங்கொம்பு போன்ற உமாதேவியோடு மங்கலக்குடியில் மேவிய மணவாளன், தம்மைக் கலக்குதற்காகத் தக்கன் செய்த பெருவேள்வியை அங்கு அலைக்கழித்துப் பின் நிறைந்த அருள் புரிந்தவன்.

கு-ரை: தங்கலப்பிய - தமக்குள்கலந்த. தம்மோடு உறவு கலந்தவனாகிய. அங்கு - அவ்விடத்திலேயே. அலக்கழித்து - சின்னாபின்னம் செய்து. ஆரருள் செய்தவன் - பின்னர் அவனுக்குப் பெறுதற்கரிய திருவருளைச் செய்தவன். கொங்கு - தேன். அலர் - மலர். குழல்- கூந்தல். கொம்பனையாள் - பூங்கொம்பு போன்றவளாகிய உமை.

2. பொ-ரை: காவிரியின் வடகரையில் காணத்தக்க மாமரங்கள் விரிகின்ற பொழில் சூழ்ந்த மங்கலக்குடியில், திருமாலாகிய தேவும், பிரமனும் தேடி அறியவியலாத தூய எரிவிடும் சுடரை உடைய சோதியுள் சோதியாக வீற்றிருக்கிறான் இறைவன்.

Koviloor Digital Library

1802. மங்க லக்குடி யீசனை மாகாளி
வெங்க திர்ச்செல்வன் விண்ணொடு மண்ணும்நேர்
சங்கு சக்கர தாரி சதுர்முகன்
அங்க கத்திய னும்மர்ச்சித் தாரன்றே. 3

1803. மஞ்சன் வார்கடல் சூழ்மங் கலக்குடி
நஞ்ச மாரமு தாக நயந்துகொண்
டஞ்சு மாட லமர்ந்தடி யேனுடை
நெஞ்ச மாலய மாக்கொண்டு நின்றதே. 4

கு-ரை: காண்தகு - காணத்தக்க. மா - வண்டு. விரியும் - படரும், அல்லது மாமரங்கள் விரிந்து வளரும் என்றோ அடர்த்தியால் கருமை விரியும் என்றோ கொள்க. தேவரி - தெய்வத்தன்மை பொருந் தியவராகிய திருமால். தூஎரி - தூய நெருப்பு. தன்கண் அழுக்கு இன்றி இருப்பது பிறிதில்லை ஆகலின் தூஎரி என்றார். சுடர்ச்சோதி - ஒளியை யுடைய விளக்கு. உள்சோதி - ஆன்ம சைதன்யத்தினுள் நின்று செலுத்தும் சிவசைதன்யன். உயிர்க்குயிரானவன் என்றபடி.

3. பொ-ரை: மங்கலக்குடி இறைவனை மாகாளியும், சூரியனும், விண்ணும் மண்ணும் நிகராய சங்கு, சக்கரதாரியாகிய திருமாலும், பிரமனும், அகத்தியனும் அருச்சித்தார்கள்.

கு-ரை: மாகாளி - பெருமைக்குரியவளாகிய காளிதேவி. வெங் கதிர்ச் செல்வன் - சூரியன். விண்ணொடு மண்ணும் - தெய்வ லோகத் திலுள்ளாரொடு நிலவுலகிலுள்ளவர்களும். நேர் - நேர்ந்து. சங்கு சக்கரதாரி - சங்கு சக்கரம் ஆகியவற்றைத் தரித்தவனாகிய திருமால். சதுர்முகன் - நான்முகனாகிய பிரமன். அர்ச்சித்தார் - மலர்தூவி வழிபட்டார்.

4. பொ-ரை: நீண்ட கடல் சூழ்ந்த மங்கலக்குடியில் வீற்றிருக்கும் மைந்தனாகிய (பெருவீரனாகிய) பெருமான், ஆலகாலவிடத்தைச் செறிந்த அமுதமாக விரும்பி உட்கொண்டு, பஞ்சகவ்வியம் ஆடலை விரும்பி அடியேனுடைய நெஞ்சத்தை ஆலயமாகக்கொண்டு நிலை பெற்றான்.

கு-ரை: மஞ்சன், மைந்தன் என்பதன் போலி. வார்கடல் - நீண்ட கடல். ஆரமுதாக - பெறுதற்கரிய அமுதமாக எண்ணி. நயந்து

Koviloor Digital Library

1804. செல்வம் மல்கு திருமங் கலக்குடி
செல்வம் மல்கு சிவநிய மத்தராய்ச்
செல்வம் மல்கு செழுமறை யோர்தொழச்
செல்வன் தேவியொ டுந்திகழ் கோயிலே. 5

1805. மன்னு சீர்மங் கலக்குடி மன்னிய
பின்னு வார்சடைப் பிஞ்ஞகன் தன்பெயர்
உன்னு வாரு முரைக்கவல் லார்களும்
துன்னு வார்நன் னெறிதொடர் வெய்தவே. 6

கொண்டு - விரும்பி உண்டு. அஞ்சு - பஞ்சகவ்வியம். ஆடலமர்ந்து - அபிடேகம்கொள்ள விரும்பி. நின்றது - எழுந்தருளியது.

5. பொ-ரை: செல்வம் நிறைந்த திருமங்கலக்குடியில், அருட் செல்வம் நிறைந்த சிவ ஒழுக்கம் உடையவராய்ச் செல்வம் மல்கும் செழித்த மறையோர் தொழத் திருவருட்செல்வனாகிய பெருமான் உமாதேவியோடும் திகழ்வது திருக்கோயிலிலாகும்.

கு-ரை: செல்வம் - இயற்கைச்செல்வங்கள். செல்வம் - பேரின்பம். உண்டாக்கும் - மல்கும். சிவநியமம் - சிவத்தைச் சார் விக்கும் நெறி. செல்வம் - மழைவளம். மல்கும் - பொருந்தும். செல்வன் - மங்கல வடிவினன்.

6. பொ-ரை: நிலைபெற்ற புகழை உடைய மங்கலக்குடியில் நிலைபெற்ற பின்னுதல் உடைய நீண்ட சடையையுடைய பிஞ்ஞகன் திருநாமத்தை எண்ணுவாரும், சொல்லும் வல்லமை உடையாரும், நன்னெறித் தொடர்பு எய்தத் துன்னுவார் ஆவர்.

கு-ரை: மன்னு - நிலைபெற்ற. சீர் - சிறப்புப் பொருந்திய. மன்னிய - எழுந்தருளிய. பின்னு - முறுக்கிய. வார் - நீண்ட. உன்னுவார் - நினைப்பவர்.

நன்னெறி - சிவஞானம். தொடர்வு எய்த - காப்பு உண்டாக. துன்னுவார் - அடைவார். திருவைந் தெழுத்தை ஓதுவார் சிவஞானத் தொடர்புபெறுவர் என்க.

Koviloor Digital Library

1806. மாத ரார்மரு வும்மங் கலக்குடி
ஆதி நாயகன் அண்டர்கள் நாயகன்
வேத நாயகன் வேதியர் நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. 7

1807. வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே. 8

1808. கூசு வாரலர் குண்டர் குணமிலர்
நேச மேது மிலாதவர் நீசர்கள்
மாசர் பால்மங் கலக்குடி மேவிய
ஈசன் வேறு படுக்கவுய்ந் தேனன்றே. 9

7. பொ-ரை: பெண்கள் பொருந்துகின்ற மங்கலக்குடியின் ஆதிநாயகன், தேவர்கள் தலைவன்; வேதநாயகன்; வேதியர்நாயகன்; பூதநாயகன்; புண்ணியமூர்த்தி ஆவன்.

கு-ரை: மாதரார் - பெண்கள். மருவும் - பொருந்தி வாழும். ஆதிநாயகன் - முதன்மைத் தலைவன். அண்டர்கள் நாயகன் - தேவர்கள் தலைவன். வேதியர் - வேதமோதுபவர். பூதநாயகன் - பசுபதி.

8. பொ-ரை: வண்டுகள் சேரும் பொழில் சூழ்ந்த மங்கலக் குடியில் இளம் பிறை சூடிய சோதியாகிய பெருமான், மனம் மாறுபட்ட தந்தையைக் கால் ஒடியுமாறு மழுவை வீசிய சண்டேசுரர்க்கு அருள் புரிந்த இறைவன் ஆவன்.

கு-ரை: வண்டுசேர் பொழில் - வண்டுகள் மொய்க்கும் சோலை. விண்ட - தன் எண்ணத்தின் மாறுபட்ட. தாதை - தந்தை. தாள் அற -கால் இருதுண்டாக. வீசிய - வெட்டிய. துண்டமாமதி - பிறைமதி.

9.பொ-ரை: மங்கலக்குடி இறைவன், தம் சிறுமை நோக்கிக் கூசாதவர்களும், குண்டர்களும், நற்குணமில்லாதவர்களும், அன்பு

Koviloor Digital Library

1809. மங்க லக்குடி யான்கயி லைம்மலை
அங்க லைத்தெடுக் குற்ற அரக்கர்கோன்
தன்க ரத்தொடு தாள்தலை தோள்தகர்ந்
தங்க லைத்தழு துய்ந்தனன் தானன்றே. 10

திருச்சிற்றம்பலம்

சிறிதும் இல்லாதவர்களும், கீழானவர்களும், குற்றம் உடையவர்களுமாகிய சமணரோடு என்னை வேறுபடுக்க, உய்ந்தேன்.

கு-ரை: கூசுவாரலர் - பாவம் செய்ய மனம் கூசமாட்டார்கள். நேசம் - அன்பு. நீர் இழிதகைமையுடையவர். வெறுக்கத்தக்கவர். மாசர் பால் - உடலும் அறிவும் குற்றமுடையவர். வேறுபடுக்க - பிரிக்க.

10.பொ-ரை: மங்கலக்குடியானுக்குரிய கயிலைமலையினை அலைத்து எடுக்கலுற்ற இராவணன் தன் கரங்களோடு தாளும், தலையும் சிதைந்து அலைக்கப்பெற்றுப் பின் அழுது அருள்பெற்று நன்றே உய்ந்தான்.

கு-ரை: அலைத்து - அசைத்து. எடுக்குற்ற - தூக்குதலைச் செய்த. கரம் - கைகள். தகர்ந்து - சிதறி. அலைத்து அழுது - தன் தவறுக்கு அடித்துக்கொண்டு அழுது. உய்ந்தான் - பிழைத்தான்.

திருநாவுக்கரசர் புராணம்

கருங்கதலிப் பெருங்குலைகள்
களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல்
வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட
வினைஞராாப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல
நிகர்ப்பனவா நிறைமருதம்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

74. திருவெறும்பியூர்

பதிக வரலாறு:

திருவானைக்காவில் சிலந்திக்கருளுங்கழல் வணங்கிச் செஞ்சொல்மாலை பலபாடி எறும்பியூர்மலையைத் தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 302.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 187 பதிக எண்: 74

திருச்சிற்றம்பலம்

1810. விரும்பி யூறு விடேல்மட நெஞ்சமே
கரும்பி னூறல்கண் டாய்கலந் தார்க்கவன்
இரும்பி னூறல றாததோர் வெண்தலை
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. 1

1811. பிறங்கு செஞ்சடைப் பிஞ்ஞுகன் பேணுசீர்க்
கறங்கு பூத கணமுடைக் கண்ணுதல்
நறுங்கு ழல்மட வாளொடு நாடொறும்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. 2

1. பொ-ரை: அறியாமை உடைய நெஞ்சமே! வெண்தலையைக் கையில் உடையவனும், எறும்பியூர் மலையானும் ஆகிய எங்கள் ஈசன், கலந்த அடியவர்களுக்குக் கரும்பின் ஊறல் போல்வான். அவனை விடாது விரும்பியுறுவாயாக.

கு-ரை: ஊறு விரும்பிவிடேல் - கேடுகளை விரும்பி வாணாளை வீணாளாக்கவிடாதீர். கரும்பின் ஊறல் - கரும்பின் சாறு. கலந்தார்க்கு - மனம் ஒன்றியவர்கட்கு. இரும்பின் - இரும்பு போன்ற. ஊறல் அறாததோர் - நிணக்கசிவு அறாததொரு. வெண்டலை ஏந்தியவன் என்க.

2. பொ-ரை: எங்கள் இறைவன், விளங்கும் செஞ்சடையை யுடைய பிஞ்ஞுகனும், பேணுகின்ற புகழை உடைய சுழன்றாடும் இயல்புடைய பூதகணங்களை உடையவனும், நெற்றிக்கண்ணனும் ஆகி, மணம் வீசும் கூந்தலை உடைய உமாதேவியோடு நாள்தோறும் விளங்கும் எறும்பியூர் மலையினன் ஆவன்.

Koviloor Digital Library

1812. மருந்து வானவர் தானவர்க் கின்சுவை
புரிந்த புன்சடைப் புண்ணியன் கண்ணுதல்
பொருந்து பூண்முலை மங்கைநல் லாளொடும்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. 3

1813. நிறங்கொள் கண்டத்து நின்மலன் எம்மிறை
மறங்கொள் வேல்கண்ணி வாள்நுதல் பாகமாய்
அறம்பு ரிந்தருள் செய்தவெம் அங்கணன்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. 4

கு-ரை: பிறங்கு - விளங்குகின்ற. பிஞ்ஞகன் - அழித்தற் கடவுள். பேணு - விரும்புகின்ற. சீர் - சிறப்பையுடைய. கறங்கு - சுழல் கின்ற. நறும் - தூய.

3. பொ-ரை: எங்கள் இறைவன் வானவர்க்கு மருந்தாகவும், தானவர்க்கு இன்சுவையாகவும், முறுக்குண்ட புன்சடையை உடைய புண்ணியனாகவும், நெற்றிக்கண்ணனாகவும், பூண்கள் பொருந்தும் முலையையுடைய மங்கை நல்லாளொடும் மேவும் எறும்பியூர் மலை யினன் ஆவன்.

கு-ரை: வானவர் மருந்து தானவர்க்கு இன்சுவை என்க. தேவர்களுக்கு அருமருந்து போல்வான். அசுரர்க்கு இனிய சுவை போல்வான். தேவர்கட்கும் அசுரர்கட்கும் போகபோக்கியங்கள் அருளியவன் என்க. புரிந்த - முறுக்குண்ட. புன்சடை - மெல்லிய சடை, பூண் பொருந்து முலை என மாறுக. பூண் - அணிகலன்கள்.

4. பொ-ரை: எம் இறைவன் நீலநிறம் கொண்ட கண்டத்தை உடைய நின்மலனும், மறம் கொண்ட வேல்போன்ற கண்ணையும், ஒளியுடைய நுதலையும் உடைய மங்கை ஒருபாகமாகி அறம் புரிந்து அருள் செய்த எம் அண்ணலும் ஆகிய எறும்பியூர் மலையினன் ஆவன்.

கு-ரை: நிறங்கொள் - நீல நிறத்தைக் கொண்ட. நின்மலன் - குற்றமற்றவன். மறங்கொள் வேல் - வீரச்செயல் செய்யும் வேல். வாள் - ஒளி. அறம்புரிந்து - அறத்தை விரும்பி. அங்கணன் - சிவன்.

Koviloor Digital Library

1814. நறும்பொன் நாண்மலர்க் கொன்றையும் நாகமும்
துறும்பு செஞ்சடைத் தூமதி வைத்துவான்
உறும்பொன் மால்வரைப் பேதையோ டூர்தொறும்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே. 5

1815. கறும்பி யூர்வன ஐந்துள காயத்தில்
திறம்பி யூர்வன மற்றும் பலவுள
குறும்பி யூர்வதோர் கூட்டகத் திட்டெனை
எறும்பி யூரரன் செய்த இயற்கையே. 6

1816. மறந்து மற்றிது பேரிடர் நாடொறும்
திறம்பி நீநினை யேல்மட நெஞ்சமே

5. பொ-ரை: நறுமணமும் பொன்போன்ற நிறமும் உடைய கொன்றையின் புதிய பூக்களும், நாகமும் சுரும்புகள் அடர்ந்தது போன்ற சிவந்த சடையின்கண் தூயமதியோடு வைத்து, விண்ணை உறும் பொன்மலையாகிய இமவான்மகளாகிய உமாதேவியோடு ஊர் தோறும் வீற்றிருக்கும் எங்கள் இறைவன், எறும்பியூர் மலையினன்.

கு-ரை: நறும்பொன் - குற்றமற்ற தூய பொன்போன்ற. நாண் மலர் - புது மலர். நாகம் - ஞாழல் மரம். துறும்பு - நெருங்கிய அல்லது பொருந்திய என்க. வான்உறும் - ஆகாயத்தை அளாவும். பொன்மால் வரை - பொன்மயமான பெரிய இமயமலை. மால்வரைப் பேதை - பார்வதி.

6. பொ-ரை: சினந்து ஊர்வனவாகிய ஐம்பொறிகள் உள்ள உடம்பில், மாறுபட்டு ஊர்வன மற்றும் பல உள்ளன; அழுக்கு ஊர்வதாகிய கூடுபோன்ற அவ்வுடம்பின்கண் இட்டு என்னை எறும்பியூர் அரன் செய்த இயற்கை இது.

கு-ரை: கறும்பி - சிறிது சிறிதாகத் தின்று. ஊர்வன - நம்மை ஊர்ந்து கொண்டிருப்பன. ஐந்து - ஐம்பொறிகள். காயத்தில் - உடலில். திறம்பி ஊர்வன - மனத்தொடு பிறழ்ந்து செல்வன. மற்றும் பல வாவன - அந்தக்கரணங்கள் முதலியன. குறும்பி - மலமூத்திராதி உடலழுக்கு. ஊர்வதொர் - பொருந்திதொரு. கூட்டகத்து - உடலிடத்துள். இட்டு - அடைத்து.

7. பொ-ரை: அறிவற்ற நெஞ்சமே! பெருந்துன்பங்களால் நாள்தோறும் மற்று இதனை மறந்து மாறுபட்டு நீ நினையாதே; புறத்தே

Koviloor Digital Library

புறஞ்செய் கோலக் குரம்பையி லிட்டெனை
எறும்பி யூரரன் செய்த வியற்கையே. 7

1817. இன்ப மும்பிறப் பும்மிறப் பின்னொடு
துன்ப மும்முட னேவைத்த சோதியான்
அன்ப னேயர னேயென் றரற்றுவார்க்
கின்ப னாகு மெறும்பியூ ரீசனே. 8

1818. கண்நி றைந்த கனபவ ளத்திரள்
விண்நி றைந்த விரிசுடர்ச் சோதியான்
உள்நி றைந்துரு வாயுயி ராயவன்
எண்நி றைந்த வெறும்பியூ ரீசனே. 9

கோலம் செய்யப்பெற்ற இக்குடிசையில் என்னை இட்டு எறும்பியூர் அரன் செய்த இயற்கை இது.

கு-ரை: பேரிடர் இது மறந்து - பெரிய துன்பத்தை விளைப்பதாகிய இவ்வுடலை மறந்து. திறம்பி - உடலுணர்வினின்று மாறுபட்டு. நினையேல் - அதனையே நினையாதொழிவாயாக. புறஞ்செய் - உள்ளழுக்குத் தெரியாதவாறு புறத்தே செய்யும். கோலக்குரம்பை - அழகிய உடலாகிய வீடு.

8. பொ-ரை: எறும்பியூர் இறைவன் இன்பமும் பிறப்பும், துன்பமும் இறப்பும் உடன் வைத்த சோதிவடிவினனும், ''அன்பனே! அரனே!'' என்று வாய்விட்டு அரற்றுவார்க்கு இன்பமளிப்பவனும் ஆவன்.

கு-ரை: உடனே - ஒருசேர என்னும்பொருட்டு. இவ்வுலகில் பிறப்பும் இன்ப துன்பமும் ஆகிய இருவினைப்பயனும் உடன் வைத்தவன் என்க. சோதியான் - ஒளி வடிவினன். அரற்றுவார்க்கு - பலகாலும் சொல்லுவார்க்கு.

9. பொ-ரை: எண்ணமெங்கும் நிறைந்த எறும்பியூர் இறைவன், கண்ணுக்கு நிறைந்த பெருமைமிக்க பவளத்திரளும், விண்ணில் நிறைந்த சுடர் விரிகின்ற சோதி வடிவானவனும், உள்ளத்துள் நிறைந்து உருவாகி உயிராகியவனும் ஆவன்.

Koviloor Digital Library

1819. நிறங்கொள் மால்வரை ஊன்றி யெடுத்தலும்
நறுங்கு ழல்மட வாள்நடுக் கெய்திட
மறங்கொள் வாளரக் கன்வலி வாட்டினான்
எறும்பி யூர்மலை யெம்மிறை காண்மினே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: கண் நிறைந்த - கண் பார்வைக்குச் சிறந்த. கனம் - திரண்ட. பவளத்திரள் - பவளங்களின் தொகுதி. உள் நிறைந்து - மனத்திற்குள் நிறைந்து. உருவாய் - என் வடிவமாய். எண் நிறைந்த - என் எண்ணத்தில் நிறைந்த.

10. பொ-ரை: எறும்பியூர் மலைக்குரிய எம்மிறைவன், நறுமணம் வீசும் கூந்தலையும் இளமையையும் உடைய உமாதேவி நடுக்கம் எய்திட வெண்ணிறம் கொண்ட திருக்கயிலைப் பெருமலையை வீரம் கொண்ட வாளை உடைய இராவணன் ஊன்றி எடுத்தலும், அவன் ஆற்றலை வாடுமாறு செய்தான்.

கு-ரை: நிறம் - வலிமை. மால்வரை - பெரிய மலை. ஊன்றி - கையை ஊன்றி. நறுங்குழல் - மணமுள்ள கூந்தல். மறம் - வலிமை.

திருநாவுக்கரசர் புராணம்

சிலந்திக் கருளுங் கழல்வணங்கிச்
செஞ்சொன் மாலை பலபாடி,
இலங்கு சடையார் எறும்பியூர்
மலையு இறைஞ்சிப் பாடியபின்,
மலர்ந்த சோதித் திருச்சிராப்
பள்ளி மலையுங் கற்குடியும்,
நலங்கொள் செல்வத் திருப்பராய்த்
துறையுந் தொழுவான் நண்ணினார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

75. திருக்குரக்குக்கா

பதிக வரலாறு:

வாகீசர் திருமயிலாடுதுறை வணங்கி ஆவ்டுதண் துறைக்குச் செல்லும்பொழுது திருக்குரக்குக்காவில் வணங்கிப் பாடிய செந்தமிழ் மாலை இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 188 பதிக எண்: 75

திருச்சிற்றம்பலம்

1820. **மரக்கொக் காமென வாய்விட் டலறிநீர்**
சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
பரக்குங் காவிரி நீரலைக் குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடுங் குற்றமே. 1

1821. **கட்டா றேகழி காவிரி பாய்வயல்**
கொட்டா றேபுன லூறு குரக்குக்கா
முட்டா றாஅடி யேத்த முயல்பவர்க்
கிட்டா றாஇட ரோட எடுக்குமே. 2

1. **பொ-ரை:** மரத்தின்கண் இருக்கும் கொக்கைப்போல வாய்விட்டுக்கூவி, தீயகுணங்களாகிய பொருள்களையே சுமந்து திரிந்து வருந்தாமல், கால்வாய்கள் வழியாகப் பரந்து பாயும் காவிரி நீர் அலைக்கின்ற கரையில் உள்ளதாகிய குரக்குக்காவை அடைய, குற்றங்கள் கெடும்.

கு-ரை: மரக்கொக்காமென - மரத்தின்கண்ணே உறையும் கொக்குப் போல. வாய்விட்டலறி - ஓலமிட்டு. சரக்கு காவி - இவ்வுலக வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பச் சரக்குகளைச் சுமந்து. சினமென்னும் சரக்கை ஏற்றி என்றார் பிறிதோரிடத்தும். அயராது - வருந்தாது. கால்பரக்கும் - பல கால்வாய்களாகப் பிரிந்து விரியும்.

2. **பொ-ரை:** கட்டப்பட்ட கரைக்குள்ளடங்கிய நெறியின் வழியே கழிகின்ற காவிரி பாய்கின்ற வயல்களில் கொட்டும் நெறியெல்லாம் புனல் ஊறுகின்ற குரக்குக்காவினை முட்டாத நெறியே திருவடியேத்த

Koviloor Digital Library

1822. கைய னைத்துங் கலந்தெழு காவிரி
செய்ய னைத்திலுஞ் சென்றிடுஞ் செம்புனல்
கொய்ய னைத்துங் கொணருங் குரக்குக்கா
ஐய னைத்தொழு வார்க்கல்ல லில்லையே. 3

1823. மிக்க னைத்துத் திசையும் அருவிகள்
புக்குக் காவிரி போந்த புனற்கரைக்
கொக்கி னம்பயில் சோலைக் குரக்குக்கா
நக்க னைநவில் வார்வினை நாசமே. 4

முயலும் அடியவர்களுக்குப் பொருந்தும் நெறியாய துன்பங்கள் ஓடுமாறு அருள் புரிவான் இறைவன்.

கு-ரை: கட்டாறே - கரையாகக் கட்டிவிடப்பட்ட வழி யிலேயே. கழி - செல்லுகின்ற. கொட்டாறே - கொட்டித் தோண்டுமிடந் தோறும். முட்டாறா - குற்றம் நீங்கிய நெறியிலே. இட்டாறா - விருப்பத்தின் படியே.

3. பொ-ரை: பக்கமெங்கும் கலந்து எழுகின்ற காவிரியின் வயல்களனைத்தினும் சென்றிடும் செம்புனல் வெள்ளம் கொய்மீன் களைக் கொணரும் குரக்குக்காவில் உள்ள ஐயனைத்தொழும் அடியார் களுக்கு அல்லல் இல்லை.

கு-ரை: கையனைத்தும் - இரு பக்கங்கள் எங்கணும். கலந்தெழு - சென்று பரவித் தோன்றுகின்ற. செய் - வயல். கொய் - மீன் இனங்களில் ஒன்று. செம்புனல் கொணரும் என்க. ஐயன் - அழகியன் அல்லது தலைவன். அல்லல் - துன்பம்.

4. பொ-ரை: அனைத்துத் திக்குகளும் மிகுந்து அருவிகள் புகுந்து பெருகுதலால் காவிரி போந்த புனற்கரையின் கண் கொக்குச் சாதிகள் பயிலும் சோலையை உடைய குரக்குக்காவின்கண் திகம்பரனாய பெருமானைப் போற்றிப் புகழ்வார் வினை நாசமாகும்.

கு-ரை: அனைத்துத்திசையும் மிக்கு - எல்லாத் திசைகளிலும் சென்று மிகுந்து. அருவிகள் புக்குக் காவிரிபோந்த - பல அருவி களைக்கொண்டு பெரிதாகிக் காவிரியாறு ஓடிவந்த. புனற்கரை - தண்ணீர்க் கரையில். இனம் - கூட்டம்.

Koviloor Digital Library

1824. விட்டு வெள்ளம் விரிந்தெழு காவிரி
இட்ட நீர்வய லெங்கும் பரந்திடக்
கொட்ட மாமுழ வோங்கு குரக்குக்கா
இட்ட மாயிருப் பார்க்கிட ரில்லையே. 5

1825. மேலை வானவ ரோடு விரிகடல்
மாலும் நான்முக னாலும் அளப்பொணாக்
கோல மாளிகைக் கோயில் குரக்குக்காப்
பால ராய்த்திரி வார்க்கில்லை பாவமே. 6

1826. ஆல நீழ லமர்ந்த அழகனார்
கால னையுதை கொண்ட கருத்தனார்

5. பொ-ரை: வெள்ளம் பொருந்தி விரிந்தெழுங் காவிரி இட்ட நீரானது வயல் எங்கும் பரந்திடுதலால் சிறந்து, மாமுழவுகள் கொட்ட ஓங்கும் குரக்குக்காவின் விருப்பமாய் இருப்பவர்களுக்கு இடர்கள் இல்லை.

கு-ரை: வெள்ளம் விட்டு - வெள்ளமாய்ப் பெருகி. விரிந்து எழு - பரந்து தோன்றுகின்ற. காவிரி இட்ட நீர் - காவிரியாறு தந்த தண்ணீர். கொட்ட - அடிக்க. மாமுழவு - பெரிய முழவு என்னும் வாச்சியம். ஓங்கும் - ஒலி மிகுகின்ற. இட்டமாயிருப்பார்க்கு - விருப்ப மாயிருப்பார்க்கு.

6. பொ-ரை: மேல் உலகத்திலுள்ள தேவர்களோடு விரிந்த கடலில் துயிலும் திருமாலும், நான்முகனும் ஆகியவராலும் அளக்க வியலாத பெருமான் உறைவதும், அழகு மிக்க மாளிகையாகிய கோயிலை உடையதுமாகிய குரக்குக்காவின்பால் வாழ்வோராய்த் திரிவோர்க்குப் பாவம் இல்லை.

கு-ரை: மேலைவானவரோடு - மேல் உலகின்கண் உள்ளவராய தேவரோடு. விரிகடல் மால் - விரிந்த திருப்பாற் கடலின்கண் உறங்கும் திருமால். அளப்பொணா - அளத்தற்கரிய. கோல மாளிகை - அழகிய மாடவீடுகள். கோயில்பாலராய் - கோயிலுக்குச் சென்று வழிபடும் பாலராய்.

7.பொ-ரை: கல்லால நிழற்கீழ் அமர்ந்த அழகரும், காலனை உதைத்தலைக் கொண்ட கருத்தருமாகிய பெருமான் உறைகின்ற அழகு

Koviloor Digital Library

கோல மஞ்ஞைக ளாலுங் குரக்குக்காப்
பால ருக்கருள் செய்வர் பரிவொடே. 7

1827. செக்க ரங்கெழு செஞ்சுடர்ச் சோதியார்
அக்க ரையரெம் மாதி புராணனார்
கொக்கி னம்வயல் சேருங் குரக்குக்கா
நக்க னைத்தொழ நம்வினை நாசமே. 8

1828. உருகி யூன்குழைந் தேத்தி யெழுமின்நீர்
கரிய கண்டன் கழலடி தன்னையே
குரவ னஞ்செழுங் கோயில் குரக்குக்கா
இரவு மெல்லியு மேத்தித் தொழுமினே. 9

மிக்க மயில்கள் ஆர்க்கின்ற குரக்குக்காவின்பால் வாழ்வோர்க்குப் பரிவொடு அருள்செய்வர்.

கு-ரை: ஆலநீழல் - கல்லாலின் நிழலில். காலனை - இயமனை. கருத்தனார் - கருத்தாயிருப்பவர். கோலமஞ்ஞைகள் - அழகிய மயிலினங்கள். ஆலும் - ஆடும். குரக்குக்காப்பாலர் - குரக்குக்காவை அடைந்தவர். பரிவோடு - இரக்கத்தோடு.

8. பொ-ரை: செவ்வானத்தைப் போன்றெழுகின்ற சிவந்த சுடர் வீசும் சோதியாரும், அக்கு மணியை இடுப்பில் அணிந்துள்ளவரும், ஆதியிலே தோன்றிய பழமை உடையவரும், கொக்குச் சாதிகள் வயலில் சேர்கின்ற குரக்குக்காவின் திகம்பரனுமாய பெருமானைத் தொழ நம்வினை நாசமாம்.

கு-ரை: செக்கர் அங்கெழு - அந்திவானத்தின் அழகு கெழுமிய. அக்கரையர் - அக்குமணிகளை இடையிலே கட்டியவர். ஆதி புராணனார் - பழமையான முதல்வர்.

9. பொ-ரை: திருநீலகண்டன் கழலணிந்த பாதங்களை நீர் உருகி, உடல் குழைந்து ஏத்தி எழுவீராக. நம் செழுங்கோயிலாகிய குரக்குக் காவில் வீற்றிருக்கும் பரமாசாரியனாகிய அப்பெருமானையே இரவும் பகலும் ஏத்தித் தொழுவீர்களாக.

கு-ரை: உருகி - மனமுருகி. ஊன்குழைந்து - உடல் வாடி. ஏத்தி

Koviloor Digital Library

1829. இரக்க மின்றி மலையெடுத் தான்முடி
உரத்தை யொல்க அடர்த்தா னுறைவிடம்
குரக்கி னங்குதி கொள்ளுங் குரக்குக்கா
வரத்த னைப்பெற வானுல காள்வரே. 10

திருச்சிற்றம்பலம்

எழுமின் - வாழ்த்திச் செல்லுங்கள். குராவனம் குரவனம் என்றாயது. குராமரங்கள் நிறைந்த சோலை. ஆழ்ந்த வளவிய கோயில் என்க. குரவன் அம்செழுங் கோயில் எனப்பிரித்து குருநாதனாகிய பெருமான் எழுந்தருளிய அழகிய வளவிய கோயில் எனலுமாம். 'எல்லி - பகல்.

10. பொ-ரை: மலையெடுக்கலுற்ற இராவணன் முடிகளையும் ஆற்றலையும் சுருங்கும்படியாக இரக்கம் இல்லாமல் வருத்தியவனுக்கு இடமாகிய, குரங்குச்சாதி குதித்தலைக்கொள்ளும் குரக்குக்காவில் வரம் அருளும் அப்பெருமானைப் பெற வானுலகு ஆள்வர்.

கு-ரை: முடி உரத்தை - தலைகளோடு வலிமையையும். ஒல்க - குறைய. அடர்த்தான் - நெரித்தான். குரக்கினம் - குரங்குக் கூட்டங்கள். குரங்குக்கா என்ற ஊர்ப்பெயர் காரணம் குறித்தது. குரங்குகள் விளையாடும் சோலை என்க. வரத்தன் - மேன்மையுடையவன். வரம் அருள்செய்பவன். பெற - வணங்குதலைப்பெற. வரதன் - தகர ஒற்று விரித்தல் விகாரமுமாம்.

திருநாவுக்கரசர் புராணம்

எயிற்குலவும் வளம்பதிக
ளெங்குமணந் தங்கும்வயற்
பயிர்க்கண்விய லிடங்கள்பல
பரந்துயர்நெற் கூடுகளும்
வெயிற்கதிர்மென் குழைமகளிர்
விரவியமா டமுமேவி
மயிற்குலமு முகிற்குலமு
மாறாட மருங்காடும்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

76. திருக்கானூர்

பதிக வரலாறு:

திருப்பழையாறை வடதளியில் குறுந்தொகைகள் பாடிப் பரவிப் பொன்னியினில் இரண்டு கரையும் பொருவிடையார் தங்குமிடங்கள் புக்கிறைஞ்சித் தமிழ் மாலைகள் சாத்தியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 189 பதிக எண்: 76

திருச்சிற்றம்பலம்

1830. திருவின் நாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னாயுல கத்தி னுயிர்க்கெலாம்
கருவ னாகி முளைத்தவன் கானூரில்
பரம னாய பரஞ்சுடர் காண்மினே. 1

1831. பெண்டிர் மக்கள் பெருந்துணை நன்னிதி
உண்டின் றேயென்று கவன்மி னேழைகாள்
கண்டு கொண்மின்நீர் கானூர் முளையினைப்
புண்டரீகப் பொதும்பி லொதுங்கியே. 2

1. பொ-ரை: கானூரில் தெய்வச்சுடராகிய இறைவன் திருமகள் கணவனாகிய திருமாலும், சிவந்த தாமரை மலர்மேல் உறைகின்ற அழகுடையவனாகிய பிரமனும் ஆகி உலகத்தின் எல்லா உயிர் களுக்கும் கருவிலேயே உற்றுக் காப்பவனாகி முளைத்தவன் ஆவன்.

கு-ரை: திருவின் நாதனும் - திருமகள் கணவனாகிய திரு மாலாயும். உருவனாய் - உலகத்தின் உயிரெலாம் படைக்கும் பிரம னாயும்; உலகத்தின்கண் உள்ள எல்லா உயிர்கட்கும் உரு உடம்போடு வந்து அருள் செய்பவனாயும் எனலுமாம். கருவனாய் - எல்லா வற்றிற்கும் கருப்பொருளாயும். முளைத்தவன் - தோன்றியவன். பரமனாய - மேலானவனாகிய. பரஞ்சுடர் - சிவபரஞ் சுடரேயாவன்.

2. பொ-ரை: அறிவற்றவர்களே! பெண்டிர், மக்கள் பெருந் துணையாகவுள்ள நல்ல செல்வம் இன்று உண்டு என்று மகிழாதீர்;

Koviloor Digital Library

1832. தாயத் தார்தமர் நல்நிதி யென்னுமிம்
மாயத் தேகிடந் திட்டு மயங்கிடேல்
காயத் தேயுளன் கானூர் முளையினை
வாயத் தால்வணங் கீர்வினை மாயவே. 3

1833. குறியில் நின்றுண்டு கூறையி லாச்சமண்
நெறியை விட்டு நிறைகழல் பற்றினேன்
அறிய லுற்றிரேல் கானூர் முளையவன்
செறிவு செய்திட் டிருப்பதென் சிந்தையே. 4

தாமரையாகிய பொதும்பில் ஒதுங்கியே கானூர் முளையாகிய கடவுளை நீர் கண்டுகொள்வீராக; (அவரே பெருந்துணையாவார்).

கு-ரை: பெண்டிர் - மனைவியர். பெருந்துணை - உற்ற விடத் துதவும் பெருமைக்குரிய நண்பர் முதலாயினார். நன்னிதி - நல்ல செல்வம். உண்டின்றே என்று - இன்று உள்ளதே என்று. உகவன்மின் - மகிழ்வு கொள்ளாதீர். ஏழைகாள் - அறியாமையுடையவர்களே. கண்டு கொள்மின் - உள்ளவாறு உணர்ந்து வழிபடுங்கள். கானூர் முளை - கானூரில் தோன்றியிருப்பவன். புண்டரீகப் பொதும்பில் - திருவடியாகிய தாமரைக் காட்டில் தங்கி. கண்டுகொள்மின் என்க. ஒதுங்கி - உலக பந்தபாசங்களின்றும் நீங்கி.

3. பொ-ரை: பங்காளியர், தம் சுற்றத்தார், நல்ல செல்வம் என்னும் இம்மாயத்திலே கிடந்து மயங்கவேண்டா; உம் உடலுள் ளேயே உள்ளவனாகிய கானூர் முளையாகிய பெருமானை உங்கள் வினைகள்கெட வாயாற் கூறிப் பரவி வணங்குவீராக.

கு-ரை: தாயத்தார் - முன்னோர் தேடிய பழம்பொருளின் பாகஸ்தர். தமர் - சுற்றத்தார். இம்மாயத்தே - இப்பொய்மையின் கண்ணே. கிடந்திட்டு - பொருந்தி வருந்திக்கொண்டு. மயங்கிடேல் - அறிவு மயங்காதே. காயத்தே - உன்உடலிடத்தே. உளன் - அருவமாய் எழுந்தருளியுள்ளான். வாயத்தால் - உண்மை அன்பால். மாய - அழிய.

4. பொ-ரை: இரத்தற் குறிப்பொடு நின்று ஏற்று உண்ணும் ஆடையற்ற அமண்நெறியைவிட்டு நீங்கி எம்பிரான் அருள்நிறையும் கழலைப் பற்றினேன்; அதற்குக் காரணம் அறியலுறுவீரேல், கானூர்

Koviloor Digital Library

1834. பொத்தல் மண்சுவர்ப் பொல்லாக் குரம்பையை
மெய்த்த னென்று வியந்திட லேழைகாள்
சித்தர் பத்தர்கள் சேர்திருக் கானூரில்
அத்தன் பாதம் அடைதல் கருமமே. 5

1835. கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன்
செல்வம் மல்கு திருக்கானூ ரீசனை
எல்லி யும்பக லும்மிசை வானவா
சொல்லி டீர்நுந் துயரங் கள்தீரவே. 6

முளையாகிய கடவுள் என்சிந்தையில் செறிவு செய்திட்டிருப்பதே ஆகும்.

கு-ரை: குறியில் - குறிக்கோள் இல்லாத சமண்நெறி என்க. நின்று - மேற்கொண்டு ஒழுகி. கூறை - ஆடை. இலா - இல்லாத. சமண் நெறி - சமண்சமய ஒழுக்கம். நிறைகழல் - காலில் நிறைந்து அணியும் கழல். அறியலுற்றிரேல் - நீவிர் அறிய விரும்பினீரேயானால். கானூர் முளையவன் - கானூரின்கண் எழுந்தருளியுள்ளவன். செறிவு செய்திட்டிருப்பது - பொருந்தி எழுந்தருளியிருப்பது. என் சிந்தையே - என் சிந்தையின் கண்ணேயாகும்.

5. பொ-ரை: அறிவற்றவர்களே! பொத்தலை உடையதும், மண்சுவர் உடையதுமாகிய இழிந்த இக்குடிசையைத் தன்மெய் என்று ஒவ்வொருவரும் வியந்திடல் வேண்டா. சித்தர்களும் பத்தர்களும் சேர்கின்ற திருக்கானூரில் இறைவன் பாதம் அடைதலே உமக்குக் கருமம் ஆகும்.

கு-ரை: பொத்தல் - ஓட்டைகளை உடைய. மண்சுவர் - மண்சுவராலாகிய. பொல்லாக் குரம்பை - தீமைகளை விளைக்கின்ற சிறுவீடு போன்றதாகிய உடலை. ஒன்பது ஓட்டைகளையும் அழிந்து படக்கூடிய தன்மையையும் உடையது உடல். உயிர் அதனுள் இருந்து நீங்குவதாகிய இயல்புபற்றி உடலை வீடு என்றார். மெய்த்தன என்று - உண்மையானது என்று. வியந்திடல் - வியவாதே. ஏழைகாள் - அறிவில்லாதவர்களே. சித்தர்களும் பத்தர்களும் வாழ்கின்ற கானூர் என்க. கருமம் - நாம் செய்தற்குரிய செயல்.

6. பொ-ரை: கல்வியும், ஞானமும், கலையும் ஆகியவற்றின் பொருளாயிருப்பவனும், செல்வம் மல்கும் திருக்கானூரில்

Koviloor Digital Library

1836. நீரும் பாரும் நெருப்பும் அருக்கனும்
காரும் மாருதங் கானூர் முளைத்தவன்
சேர்வு மொன்றறி யாது திசைதிசை
ஓர்வு மென்றில ரோடித் திரிவரே. 7

1837. ஓமத் தோடயன் மாலறி யாவணம்
வீமப் பேரொளி யாய விழுப்பொருள்
காமற் காய்ந்தவன் கானூர் முளைத்தவன்
சேமத் தாலிருப் பாவதென் சிந்தையே. 8

இருப்பவனும் ஆகிய ஈசன் இரவும் பகலும் இசைந்து அருள்புரிய ஆனவாற்றை உம் துயரங்கள் தீரச் சொல்லுவீராக.

கு-ரை: கல்வியாகவும், ஞானமாகவும், கலைப்பொருளாகவும் ஆயவன் என்க. கல்வி - நூல்களும் அறிதற்குரியனவும். ஞானம் - கல்வியால் விளையும் அறிவு. கலைப்பொருள் - கல்வி முதலிய கலைகளால் உணரப்படும் பொருள். எல்லி - பகல். இசைவு ஆனவா - நமக்குப் பொருந்தியவாறு. சொல்லிடீர் - அவன் புகழைச் சொல்லுவீராக. தீர - நீங்க.

7. பொ-ரை: நீரும், மண்ணும், தீயும், வெயிலும், முகிலும், காற்றும் ஆகிய அனைத்துமாகிக் கானூரில் முளைத்த கடவுளைச் ''சேர்தும்'' என்ற ஒன்றை அறியாது திசைதோறும் திசைதோறும் உணர்ச்சி சிறிதும் இலராய் ஓடித் திரிவர் உலகத்தவர்.

கு-ரை: பார் - உலகம் (மண்). அருக்கன் - சூரியன். கார் - மேகங்கள். மாருதம் - காற்று. நீர், பார், நெருப்பு, அருக்கன், கார்மாருதமாய் முளைத்தவன் என்க. சேர்வு - தங்கியிருக்கும் ஓரிடம். ஒன்றறியாது - ஒன்று எனவைத்துக்கொள்வதை அறியாமல். திசைதிசை - பல திசைகளிலும். ஓர்வு - ஆராய்ச்சி.

8. பொ-ரை: வேள்விகளாலும். திருமாலும், பிரமனும் அறியாதவண்ணம் இடுகாட்டகத்தே பேரொளியாகிய உயர்ந்த பொருளும், காமனைக் காய்ந்தவனும் ஆகிய கானூர் முளைத்த கடவுள் என் சிந்தையே பாதுகாவலுக்குரிய இருப்பாகக் கொள்வன்.

கு-ரை: ஓமத்தோடு - வேள்வி முதலிய செய்தலோடு

Koviloor Digital Library

* * * * * * * * * * * * * * 9

1838. வன்னி கொன்றை யெருக்கணிந் தான்மலை
உன்னி யேசென் றெடுத்தவ னொண்திறல்
தன்னை வீழத் தனிவிரல் வைத்தவன்
கன்னி மாமதிற் கானூர்க் கருத்தனே. 10

திருச்சிற்றம்பலம்

கூடியவனாய; ஓம் என்கிற அந்தமந்திரத்தை முதலிலுடைய வேதமும் எனலுமாம். அயன் - பிரமன். வீமப்பேரொளி - மிக்க பேரொளி. காமற் காய்ந்தவன் - மன்மதனை எரித்தவன். சேமத்தால் இருப்பாவது - பாதுகாவலோடு கூடிய அவன் இருக்குமிடமாவது. சிந்தை - மனம்.

9. * * * * * * * * * * * * *

10. பொ-ரை: இளமையுடைய மாமதில் சூழ்ந்த கானூர்க்கருத்தன், வன்னியும், கொன்றையும், எருக்கும் அணிந்த தனக்குரிய மலையைப் பெயர்த்தெடுக்க உன்னிச்சென்று எடுத்தவனாகிய இராவணனின் ஒண்திறல் தன்னை வீழும்படியாகத் தனி விரல் ஒன்றினால் வைத்து அடர்த்தவனாவன்.

கு-ரை: எருக்கு - எருக்க மலர். ‘வெள்ளெருக்கரவம் விரவும் சடை’ என்றார் பிறிதோரிடத்தும். மலை - கயிலைமலை. உன்னியே சென்று - நினைவு கூர்ந்தவனாய் அருகிற் சென்று. எடுத்தவன் - தூக்கி யவன். ஒண்திறல் - விளங்கிய வலிமை. தன்னை - இராவணனை. வீழ - கீழே விழும்படி. கன்னிமாமதில், சமாதி என்னுமலங்காரம்; புதிய மதில் என்றும், பிறர் நெருங்கா மதில் என்றும் பொருள்படுதல் அறிதற்குரியது.

திருநாவுக்கரசர் புராணம்

ஆங்குவன முலைகள்சுமந்
தணங்குவன மகளிரிடை
ஏங்குவன நூபுரங்கள்
இரங்குவன மணிக்காஞ்சி
ஓங்குவன மாடநிரை
ஒழுகுவன வழுவிலறம்
நீங்குவன தீங்குநெறி
நெருங்குவன பெருங்குடிகள்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

77. திருச்சேறை

பதிக வரலாறு:

திருக்குடமூக்கு அணைந்து இறைஞ்சி நாலூர் தொழுது திருச்சேறையீசரைப் போற்றிப் பரவியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 216.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 190 பதிக எண்: 77

திருச்சிற்றம்பலம்

1839. பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரி தாய அறிவுகை கூடிடும்
சீரி யார்பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன்றன் நாம நவிலவே. 1

1840. என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே. 2

1. பொ-ரை: சீர்மை உடையவர்கள் பயிலும் திருச்சேறையுட் செந்நெறியில் வீற்றிருக்கும் உமையொருபாகனுடைய நாமம் நவின்றால் புண்ணியம் பூரித்துவரும்; பொய்கெடும்; கூர்மை உடையதாகிய அறிவு கைகூடும்.

கு-ரை: பூரியா - நிறைந்து, பெருகி. புண்ணியம் பூரியா வரும். பொய் - புண்ணியத்துக்கு மறுதலையாகிய கீழ்மை. கூரிதாய அறிவு - கூர்மையான நுண்ணறிவு. கைகூடிடும் - உண்டாகும். சீரியார் - சிறந்தவர். பயில் - வாழ்கின்ற. நாரிபாகன் - பார்வதிதேவியைப் பாகமாக உடையவன். நாமம் - திருப்பெயர். நவில - சொல்ல. செந்நெறி - கோயில் திருப்பெயர். செம்மை நவிலவரும் எனக் கூட்டுக.

2. பொ-ரை: நெஞ்சமே! மின்னுகின்ற நீண்ட சடையையுடையவனும், வேதவிழுப்பொருளும், செந்நெல் பொருந்திய வயல் உடைய திருச்சேறையுட் செந்நெறியில் நிலைபெற்ற சோதியுமாகிய பெருமான் நம்மிடம் வந்து தங்க, நீ என்ன மாதவம் செய்தாய!.

Koviloor Digital Library

1841. பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே. 3

1842. மாடு தேடி மயக்கினில் வீழ்ந்துநீர்
ஓடி யெய்த்தும் பயனிலை ஊமர்காள்
சேடர் வாழ்சேறைச் செந்நெறி மேவிய
ஆட லான்தன் அடியடைந் துய்ம்மினே. 4

கு-ரை: என்ன - எத்தகைய. மாதவம் - சிறந்த தவம். செய்தனை - செய்தாய். மின்னு வார்சடை - மின்னல்போல விளங்குகின்ற நீண்ட சடை. வேத விழுப்பொருள் - வேதங்களில் கூறப்படும் சிறந்த பொருளாயிருப்பவன். செந்நெல் ஆர்வயல் - செந்நெற் கதிர்கள் பொருந்திய வயல்கள். மன்னு - நிலைத்து விளங்குகின்ற. சோதி - ஒளி வடிவானவன். நம்பால் - நம்மிடத்து. வைக - நிலையாக வந்து எழுந்தருள

3. பொ-ரை: திருச்சேறையுட் செந்நெறியில் வீற்றிருக்கும் சிறப்பை உடைய பெருமான் கழலார் திருவடிகளை மறப்பு இன்றி மனத்துள் வைத்தால், பிறப்பு, மூப்பு, மிக்கபசி, மிக்கபிணி, இறப்பு ஆகியவை நீங்கி இம்மையிலேயே இன்பம் வந்து எய்தும்.

கு-ரை: மூப்பு - முதுமைத் தன்மை. பெரும் பசி - மிக்க பசி. வான்பிணி - பெரிய தீராத நோய்கள். எய்திடும் - உண்டாகும். சிறப்பர் - சிறப்புடையவர். மறப்பதின்றி - மறவாமல். மனத்தினுள் வைக்க இன்பம் வந்தெய்திடும் என முடிக்க.

4. பொ-ரை: ஊமைகளே! செல்வத்தைத்தேடி மயக்கத்தில் விழுந்து நீர் ஓடி இளைத்தும் பயன் இல்லை; உயர்ந்தவர்கள் வாழ்கின்ற சேறைச்செந்நெறி மேவிய கூத்தப்பிரான் திருவடிகளை அடைந்து உய்வீர்களாக.

கு-ரை: மாடு - செல்வம். மயக்கினில் வீழ்ந்து - நில்லாதவற்றை நிலையின என்றுணரும் அறியாமையில் விழுந்து. எய்த்தும் - வருந்தியும். ஊமர்காள் - ஊமைகளே; பேசுதற்குரியவற்றைப் பேசாதவர்; சொல்லும் கருவியிருந்தும் சொல்லாதவர். சேடர் - அறிவால்

Koviloor Digital Library

1843. எண்ணி நாளும் எரியயிற் கூற்றுவன்
துண்ணெனன் தோன்றிற் துரக்கும் வழிகண்டேன்
திண்ணன் சேறைத் திருச்செந் நெறியுறை
அண்ண லாருளர் அஞ்சுவ தென்னுக்கே. 5

1844. தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்ப மாஞ்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னாருளர் அஞ்சுவ தென்னுக்கே. 6

பெருமையுடையவர். வாழ் - வாழ்கின்ற. ஆடலான் தன் - ஐந்தொழில் ஆடவல்லானாகிய இறைவனது.

5.பொ-ரை: நாள்தோறும் எண்ணி எரியும் வேலும் உடைய கூற்றுவன் துண்ணெனத் தோன்றினால், அவனைத் துரத்தும் வழி ஒன்று கண்டேன்; திண்மை உடையவரும், சேறையுட் செந்நெறி உறையும் அண்ணலாருமாகிய இறைவர் உள்ளார்; அஞ்சுவது பின்னை எதற்கு?

கு-ரை: நாளும் எண்ணி - ஒவ்வொரு நாளும் உயிர்களின் வாழ்நாட்களைக் கணித்து. எரி அயில் - எரியும் நெருப்புப் போன்ற கூரிய வேல். துண்ணென் தோன்றில் - நடுக்கம் உண்டாகும்படி எனக்கு முன் தோன்றிவந்தால். துண்ணென்றொன்றில் எனவும் பாடம். துரக்கும் வழி - அவனை ஓட்டும் வழியை. கண்டேன் - கண்டுபிடித்து விட்டேன். திண்ணன் - வலியன். அண்ணலார் - தலைமைத் தன்மை யுடையவர். என்னுக்கு - எதற்கு?

6. பொ-ரை: வானம் முறை தவறி (வறண்டு) உலகம் நடுங்கினால் என்ன? ஒப்பற்ற அரசர்கள் ஒருங்கு உடன் சீறிச்சினந்தால் என்ன? செப்பம் பொருந்திய சேறையுட் செந்நெறி மேவிய அப்பனார் உள்ளார்; அஞ்சுவது பின்னை எதற்கு?

கு-ரை: தப்பி - நிலைதவறி. வானம் - வானத்தில் உள்ள மழை. தரணி - நிலவுலகிற் பெய்யாது. கம்பிக்கில் என் - அசைந்தால் அதனால் விளைவது யாது? வானம் என்பதற்கு வானமண்டலங்கள் நிலை தடுமாறி அதனால் உலக இயக்கம் நடைபெறாது நின்று போனால் என்ன எனினும் அமையும். ஒப்பில் வேந்தர் - தன்னை

Koviloor Digital Library

1845. வைத்த மாடும் மடந்தைநல் லார்களும்
ஒத்தொவ் வாதவுற் றார்களு மென்செய்வார்
சித்தர் சேறைத் திருச்செந் நெறியுறை
அத்தர் தாமுள ரஞ்சுவ தென்னுக்கே. 7

1846. குலங்க ளென்செய்வ குற்றங்க ளென்செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல் நெஞ்சமே
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னாருள ரஞ்சுவ தென்னுக்கே. 8

ஒப்பார் இல்லாத அரசர். ஒருங்குடன் - ஒன்றுசேர்ந்து. சீறில் என் - நம்மைக் கோபித்தால் அதனால் விளைவது என்ன? செப்பமாம் - செம்மையோடு கூடியதாய. அப்பனார் - தந்தையாவார். என்னுக்கு அஞ்சுவது - எதற்கு நாம் அஞ்சுவது? ''திண் ணென் கெடிலப்புனலும் உடையார் ஒருவர்தமர் நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதும் இல்லை'' என்ற பதிகத் திருப்பாடல்களும், ''வானந் துளங்கிலென் மண்கம்பமாகிலென் இருசுடர் வீழிலென் அஞ்சல் நெஞ்சே'' ''எங் கெழிலென் ஞாயிறெமக்கு'' என்ற திருப்பாடல்களும் அஞ்சாமையை வெளிப்படுப்பன.

7. பொ-ரை: தேடிவைத்த செல்வமும், பெண்களும், ஒத்தும் ஒவ்வாதும் உள்ள சுற்றத்தார் பிறரும் என்ன செய்வார்? சித்தரும், சேறையுட் செந்நெறி மேவிய அத்தருமாகிய இறைவர் உள்ளார்; அஞ்சுவது பின்னை எதற்கு?

கு-ரை: வைத்த மாடு - நிலையென்று தேடிச் சேமித்து வைத்த செல்வங்கள். மடந்தை நல்லார்கள் - மனைவியர். ஒத்து ஒவ்வாத உற்றார்களும் - செல்வம் உள்ளபோது ஒத்தும் இல்லாதபோது ஒவ் வாதும் புறத்தால் கலந்து அகத்தால் கலவாத உறவினர். என் செய்வார் - அச்சம் தரும் இறப்பு வரும்போது நமக்கு என்ன உதவியைச் செய்வர்? சித்தர் - அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவரைச் சித்தர் என்பது, பெருமான் சித்திகளின் வடிவாக இருப்பவர் என்றோ அறிவு மயமாய் இருப்பவர் என்றோ பொருள் கூறுக. அத்தர் - தலைவர்.

8. பொ-ரை: நெஞ்சமே! குலங்கள் என்னசெய்யும் திறத்தன? குற்றங்கள் என்ன செய்யும் திறத்தன? மனம் அசைந்து நீ நின்று

Koviloor Digital Library

1847. பழகி னால்வரும் பண்டுள சுற்றமும்
விழவிடா விடில் வேண்டிய எய்தொணா
திகழ்கொள் சேறையிற் செந்நெறி மேவிய
அழக னாருள ரஞ்சுவ தென்னுக்கே. 9

1848. பொருந்து நீண்மலை யைப்பிடித் தேந்தினான்
வருந்த வூன்றி மலரடி வாங்கினான்
திருந்து சேறையிற் செந்நெறி மேவியங்
கிருந்த சோதியென் பார்க்கிட ரில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

சோராதே; விளங்கும் திருச்சேறையில் செந்நெறி மேவிய கொன்றை மாலையணிந்த இறைவர் உள்ளார்; அஞ்சுவது பின்னை எற்றுக்காக?.

கு-ரை: குலங்கள் - வருணாசிரமங்களாகிய சாதிகள். குற்றங்கள் - நாம் செய்தனவாய தவறுகள். என் செய்வ - என்ன தீமையைச் செய்யப் போகின்றன. துலங்கி - மனம் வருந்தி. சோர்ந்திடல் - வருந்தாதே. இலங்கு - விளங்குகின்ற. அலங்கனார் - மாலை அணிந்தவர், அல்லது ஒளியோடு கூடியவர்.

9. பொ-ரை: பழகினால் வருகின்ற பழமையர்ய் உள்ள சுற்றத்தாரும் விழவிடாவிட்டால் வேண்டியதை எய்தவொண்ணாது; விளங்குதலைக்கொண்ட சேறையிற் செந்நெறி மேவிய அழகராகிய இறைவர் உள்ளார்; அஞ்சுவது பின்னை எற்றுக்கு?

கு-ரை: பழகினால் - பழக்கத்தால். வரும் -உண்டாய் வரும். பண்டுள - பலகாலமாய் உளதான. சுற்றமும் என்பதிலுள்ள உம்மை உயர்வு குறித்தது. விழவிடாவிடில் - உண்மையானதல்ல என்றறிந்து அவர்கள் நம்மை நீங்கும்படி விட்டுவிடவில்லையானால். வேண்டிய - உண்மையாய் நமக்குத் துணை செய்யும் பொருள் என்று உணர்ந்து விரும்பிய நன்மைகளை. எய்தொணா - அடையமுடியாது. திகழ்கொள் - விளங்குதலைக்கொண்ட.

10. பொ-ரை: பொருந்திய உயர்ந்த திருக்கயிலையைத் திருமலையைப் பிடித்து ஏந்தலுற்ற இராவணன் வருந்துமாறு ஊன்றி மலரடியினைச் சற்று வளைத்தவனும், திருந்திய சேறையிற் செந்நெறி

Koviloor Digital Library

மேவி அங்கு இருந்த சோதியும் ஆகிய இறைவனை உரைப்பார்க்குத் துன்பங்கள் இல்லை.

கு-ரை: பொருந்து - நிலத்தில் ஆழமாய்ப் பொருந்திய. நீண் மலை - புகழால் உயர்ந்த திருக்கயிலை மலையை. பிடித்து - பற்றி. ஏந்தினான் - தூக்கியவனாகிய இராவணன். வருந்த - உடல் வருந்த. வாங்கினான் - அவனுக்குக் கருணை செய்வதற்காக மீளவும் எடுத்தான். இடர் - துன்பம்.

திருநாவுக்கரசர் புராணம்

நாலூர்தென் திருச்சேறை
குடவாயில் நறையூர்சேர்
பாலூரும் இன்மொழியாள்
பாகனார் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார்
மேவும்இடம் பலபாடிச்
சேலூர்தண் பணைசூழ்ந்த
தென்திருவாஞ் சியம் அணைந்தார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

78. திருக்கோடிகா

பதிக வரலாறு:

பொன்னியின் இருகரையிலுமுள்ள துருத்தி, வேள்வி குடி, எதிர்கொள்பாடி முதலியவற்றைப் பாவுறு செந்தமிழ் பாடிப் போற்றிப் பரமர் திருப்பதி பலவும் பணிந்து திருக்கோடிகாவில் அணைந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 191 பதிக எண்: 78

திருச்சிற்றம்பலம்

1849. சங்கு லாமுன்கைத் தையலோர் பாகத்தன்
வெங்கு லாமத வேழம் வெகுண்டவன்
கொங்கு லாம்பொழிற் கோடிகா வாவென
எங்கி லாததோ ரின்பம்வந் தெய்துமே. 1

1850. வாடி வாழ்வதென் னாவது மாதர்பால்
ஓடி வாழ்வினை யுள்கிநீர் நாடொறும்

1. **பொ-ரை:** சங்கு வளையல்கள் பொருந்திய முன்கையை உடைய உமாதேவியை ஒருபாகத்திலுடையவனும், சினவெம்மை பொருந்திய மதம் பொழியும் யானையினை வெகுண்டவனும், மணம் உலாவும் பொழிலை உடைய கோடிகாவில் உள்ளவனுமாகிய இறைவா! என்று கூற, எங்கும் இல்லாததோர் இன்பம் வந்து எய்தும்.

கு-ரை: சங்கு உலாம் - சங்கினால் செய்த வளையல்கள் இங்கு மங்கும் அசைகின்ற. முன்கை - மணிக்கட்டினை உடைய. தையல் - பார்வதி. மதவேழம் - மதங்கொண்ட யானை. குலாம் - விளங்குகின்ற. வெகுண்டவன் - சினந்து உரித்துப் போர்த்தவன். கொங்கு - தேன். உலாம் - நிறைந்த. எங்கிலாததோர் இன்பம் - எங்கும் இல்லாததொரு பேரின்பம். ''செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால் எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதா'' (தி.8 திருவாசகம் - 171.) எய்தும் - தானே வந்து அடையும்.

2. **பொ-ரை:** நாள்தோறும் நீர் மாதர்பால் ஓடி, வாழ்வினையே நினைந்து வாடி வாழ்வது என் ஆவது? கோடிகா இறைவனைக் கூறீரேல், ஊர்க்காவலிற்பட்டுக் கழிவீர்; கூறினேன்.

Koviloor Digital Library

கோடி காவனைக் கூறீரேற் கூறினேன்
பாடி காவலிற் பட்டுக் கழிதிரே. 2

1851. முல்லை நன்முறு வல்லுமை பங்கனார்
தில்லை யம்பலத் தில்லுறை செல்வனார்
கொல்லை யேற்றினர் கோடிகா வாவென்றங்
கொல்லை யேத்துவார்க் கூனமொன் றில்லையே. 3

கு-ரை: வாடி - பலவகையாலும் வருந்தி. வாழ்வது - வாழ்வதாகிய வாழ்க்கை. என்னாவது - என்ன பயனைத்தருவது. மாதர் பால் - பெண்களினிடத்து; கூடிவாழ்வது என்னாவது என்க. ஓடி - விரைந்து சென்று. வாழ்வினை - உண்மையான வாழ்க்கையின் செயலை. உள்கி - நினைந்து. கோடிகாவன் - கோடிகா என்னும் தலத்தில் எழுந்தருளிய இறைவன். கூறிரேல் - சொல்லவில்லையானால். கூறினேன் - நிச்சயமாகச் சொன்னேன். கழிதிர் - பயனின்றிக் கழிந்தொழிவீர். பாடி காவல் - அரச நீதி பிழைத்தாரை வழக்குநாடி அரசன் நிறுத்தும் தண்டத்தொழில். ''நெறியின்வழீஇயினாரை வழக்குவினாய் ஒப்ப நாடிச் செய்யும் தண்டத்தொழிலுணர்த்துவதோர் ஏசொல்'' என்பது சிவஞான மாபாடியம். ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக்கினையாகலான் என்க.

3. பொ-ரை: முல்லையையொத்த நல்ல சிரிப்புடைய உமை ஒரு பங்கில் உடையவரும், தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் உறையும் அருட்செல்வரும், முல்லை நிலத்து ஏற்றினை வாகனமாக உடையவரும் ஆகிய கோடிகா இறைவரே என்று விரைந்து ஏத்துவார்க்குக் குற்றம் ஒன்றும் இல்லை.

கு-ரை: முல்லைநன் முறுவல் - முல்லை அரும்பு போன்று வெண்மையான நல்ல பற்களை உடைய. உமை - பார்வதி. தில்லையம் பலத்தில் - சிதம்பரத்தில். உறை - உறைகின்ற.

செல்வனார் - வீடு பேறாகிய செல்வத்தையுடையவர். கொல்லை - முல்லை நிலத்துக்குரிய. ஏற்றினர் - இடப ஊர்தியை உடையவர். ஒல்லை - விரைவாக. ஊனம் - குறை.

Koviloor Digital Library

1852. நாவ ளம்பெறு மாறும னன்நன்னுதல்
ஆம ளஞ்சொலி யன்புசெ யின்னலால்
கோம ளஞ்சடைக் கோடிகா வாவென
ஏவ ளின்றெனை யேசுமவ் வேழையே. 4

1853. வீறு தான்பெறு வார்சில ராகிலும்
நாறு பூங்கொன்றை தான்மிக நல்கானேல்
கூறு வேன்கோடி காவுளா யென்றுமால்
ஏறு வேன்நும்மா லேசப் படுவனோ. 5

4. பொ-ரை: நாவானது வளம் பெறுமாறு அழகிய நுதலை உடைய தலைவி இயன்ற அளவு அழகிய சடையையுடைய கோடிகா இறைவனே என்று அவன் திருப்புகழ் சொல்லி அன்பு செய்தால் பெறலாமேயன்றி அவனை இசைபாடும் வாயால் என்னை வசைபாடுகின்றாளே இந்நங்கை.

கு-ரை: நாவளம் பெறுமாறும் - நம்முடைய நா பயன்தரும் இறைவன் திருப்புகழைப் பேசுவதால் நன்மையைப் பெறும்படியும். மன் நல்நுதல் - நிலைத்த அழகிய நல்ல நுதலை உடைய தலைவி; அன் மொழித்தொகை. ஆமளம் சொல்லி - ஆம் அளவும் சொல்லி எனப் பிரித்து இயன்ற அளவு அப்பெருமானை ஏத்திப் புகழ்ந்து எனப் பொருள்கொள்க. அன்புசெயின் அலால் - இறைவனிடத்து அன்பு செய்தாலல்லாமல். அன்பு செய்தால் அவனை அடையலாமேயன்றிப் பிறர் எவ்வாறு அடையமுடியும். இதை அறியாமல் அவ்ஏழை என்னை ஏசும் என்க. கோமளம்சடை - அழகிய சடை. கோடிகாவா என - கோடிகாவில் எழுந்தருளியவனே என்று. இறைவரது காதலிற்பட்டுத் தன் சொற்பழித்த மகளை நோக்கிச் செவிலித்தாய் கூற்றாகப் பாடியது.

5. பொ-ரை: கோடிகாவில் உள்ள இறைவனே! பெருமை பெறுவார் சிலர் ஆயினும் நறுமணம் வீசும் கொன்றையை மிக அருளா தவனானால் கூறுவேன்; என்றும் காமத்துயர் மயக்கம் ஏறுவேன்; நும்மால் ஏசப்படுவனோ?

கு-ரை: வீறுதான் - பெருமிதத்தினை. பெறுவார் - கொள்ளுவார். சிலர் - சில பெண்கள். இறைவனை அடைந்த அடியவர் அருளிறுமாப்புக் கொள்ளுவார்கள். ''இறுமாந்திருப்பன்கொலோ ஈசன் பல்கணத்தெண்ணப்பட்டுச் சிறுமானேந்தி தன்சேவடிக்கீழ்ச் சென்றங்கு இறுமாந்திருப்பன் கொலோ'' (தி.4.ப.9. பா.11) என்பது

Koviloor Digital Library

1854. நாடி நாரணன் நான்முகன் வானவர்
தேடி யேசற வுந்தெரி யாததோர்
கோடி காவனைக் கூறாத நாளெலாம்
பாடி காவலிற் பட்டுக் கழியுமே. 6

* * * * * * 7,8,9

1855. வரங்க ளால்வரை யையெடுத் தான்றனை
அரங்க வூன்றி யருள்செய்த அப்பனூர்
குரங்கு சேர்பொழிற் கோடிகா வாவென
இரங்கு வேன்மனத் தேதங்கள் தீரவே. 10

திருச்சிற்றம்பலம்

ஓர்க. நாறு - மணம் கமழ்கின்ற. பூங்கொன்றை - அழகிய கொன்றை மலர். தான் - அசை. மிகு - மிகுதியாக. நல்கானேல் - தாராதொழி வானேயானால். கோடிகா உளாய் என்று கூறுவேன் மால் ஏறுவேன் என்க. கோடிகா உளாய் - கோடிகாவில் எழுந்தருளியவனே. மால் ஏறுவேன் - காமமயக்கம் அதிகமடைவேன். நும்மால் - உம்மால். ஏசப்படுவனோ - உம்மால் இகழப்படுதற்கு உரியவளாவேனோ.

6. பொ-ரை: திருமாலும் நான்முகனும் தேவர்களும் ஆராய முற்பட்டுத் தேடித் துயர் உறவும் தெரியாத இயல்பை உடைய ஒப்பற்ற கோடிகாவுறையும் இறைவனைக் கூறாத நாட்களெல்லாம் ஊர்க்காவலிற்பட்டுக் கழியும்.


கு-ரை: நாடி - ஆராய்ந்து. வானவர் - தேவர். ஏசவும் - வருத்தவும். பாடிகாவல் - அரசநீதி. பட்டு - பொருந்தி. கழியும் - நீங்கும்.

7, 8, 9. * * * * * * *

10. பொ-ரை: வரங்களாற்பெற்ற பலத்தால் திருக்கயிலையை எடுத்த இராவணனை அழிய ஊன்றி அருள்செய்த அப்பன் ஊராகிய குரங்குகள் சேரும் பொழிலை உடைய கோடிகா இறைவனே என்று என் மனத்துக் குற்றங்கள் தீர இரங்குவேன்.

கு-ரை: வரங்களால் - இறைவனிடம் தான் பெற்ற வரங்களால். வரை - கயிலைமலை. அரங்க - கெட. ஏதங்கள் - குற்றங்கள்.

Koviloor Digital Library




வைத்தீசுவரன் கோயில்:
அருள்மிகு தையல் நாயகியம்மை

Koviloor Digital Library

திருக்கயிலாய பரம்பரை

எல்லாம் சிவன் செயல்

தருமபுரம் ஆதீனம்



Koviloor Digital Library

79. திருப்புள்ளிருக்குவேளூர்

பதிக வரலாறு:

வாகீசர் ஆளுடையபிள்ளையாருடன் சீகாழி, திருக்கோலகா, திருநீடூர் இவற்றை வணங்கி ஆவடுதண்துறைக்குச் செல்லும் பொழுதில் திருப்புள்ளிருக்குவேளூரில் பாடியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 189, 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 192 பதிக எண்: 79

திருச்சிற்றம்பலம்

1856. வெள்ளெ ருக்கர வம்விர வுஞ்சடைப்
புள்ளி ருக்குவே ளூரரன் பொற்கழல்
உள்ளிருக்கு முணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே. 1

1857. மாற்ற மொன்றறி யீர்மனை வாழ்க்கைபோய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லீரேற் புள்ளிருக்கு வேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறுங் காண்மினே. 2

1. பொ-ரை: வெள்ளெருக்கும், பாம்பும் விரவிய சடையொடு கூடிய புள்ளிருக்கு வேளூர்ச் சிவபெருமானின் பொன்னார் திருவடிகள் உள்ளத்துள் இருக்கும் உணர்ச்சி இல்லாதவர்கள் நரகக்குழியில் செறிந்திருப்பர்.

கு-ரை: வெள்ளெருக்கு - வெள்ளெருக்க மலர். அரவம் - பாம்பு. விரவும் - கலந்தணிந்துள்ள. சடை - சடையையுடையவன். பொற்கழல் - அழகிய கழலணிந்த திருவடி. உள்ளிருக்கும் உணர்ச்சி - மனத்திற்குள் நினைத்துக்கொண்டிருக்கும் உணர்ச்சி. இல்லாதவர் - இல்லாதவர்கள். நள்ளிருப்பர் - சென்று நடுவில் இருப்பார்கள். நரகக் குழியில் - பாவமானவை செய்தார் செய்த தீவினை துய்க்குமிடத்தில்.

2. பொ-ரை: விடைசொல்லும் தெளிவில்லாதவராய் மனையில் வாழும் வாழ்க்கைபோய். கூற்றுவன் வந்து உம்மைக் கொள்ளுவதற்கு

Koviloor Digital Library

1858. அரும றையனை ஆணொடு பெண்ணனைக்
கருவி டம்மிக வுண்டவெங் கண்டனைப்
புரிவெண் நூலனைப் புள்ளிருக்கு வேளூர்
உருகி நைபவ ருள்ளங் குளிருமே. 3

1859. தன்னு ருவை யொருவர்க் கறிவொணா
மின்னு ருவனை மேனிவெண் நீற்றனைப்

முன்பே புள்ளிருக்குவேளூரைப் போற்றும் வல்லமை உடையீரேல் சீறுதற்குரிய தீக்குணங்கள் தேய்ந்து அறும்; காண்பீராக.

கு-ரை: மாற்றம் - கூற்றுவனுக்குச் சொல்லும் மறுமொழி. நம்மைக் கொல்லவருங்காலையில் அவனைப் போ எனச் சொல்லும் விலக்கு. ஒன்று - யாதொன்றையும். அறியீர் - அறியாதவர்களே. மனைவாழ்க்கை போய் - மனைவியோடு வாழும் இல் வாழ்க்கை அழிந்து. கூற்றம் - வாழ்நாளைக் கூறுபடுத்தும் தெய்வம். கொள்வதன் முன்னமே - பற்றிக்கொண்டுபோவதற்கு முன்பே. புள்ளிருக்கு வேளூர்ப் போற்ற வல்லீரேல் - வேளூரில் எழுந்தருளிய வைத்திய நாதப் பெருமானை வணங்குவீரேயானால், சீற்றம் - நம்மைச் சீறும் கூற்றுவனது சீற்றம். தேய்ந்து அறும் - சிறிது சிறிதாகக் குறைந்து நீங்கும்.

3. பொ-ரை: அரிய வேதங்களை உடையவனும், ஆணொடு பெண்ணாகியவனும், கரிய ஆலகாலவிடம் மிக உண்ட விருப்பத்திற் குரிய திருநீலகண்டனும், வெள்ளியமுப்புரி நூலனும் ஆகிய பெருமானைப் புள்ளிருக்குவேளூரில் உருகி நையும் அடியார்களின் உள்ளம் குளிரும்.

கு-ரை: அருமறையனை - அரிய வேதங்களின் வடிவாய் இருப்பவனை. ஆணொடு பெண்ணனை - ஆணும் பெண்ணுமாய் இருப்பவனை. மாதொரு கூறனை என்றபடி. கருவிடம் - கரிய நிறத்து விடம். மிக - மிகுதியாக. எம் - எமது. புரிவெண்ணுலனை. முப்புரியாக அமைந்த வெண்மையான பூணூல் அணிந்தவனை. உருகி நைபவர் - மனம் உருகிக்கனிபவர். உள்ளம் - மனமானது.

4. பொ-ரை: தன் உருவத்தை ஒருவர்க்கும் அறிய வொண்ணாத ஒளி உருவனும், மேனியில்பூசிய வெண்ணீற்றனும், பொன்னார்

Koviloor Digital Library

பொன்னு ருவனைப் புள்ளிருக்கு வேளூர்
என்ன வல்லவர்க் கில்லை யிடர்களே. 4

1860. செங்கண் மால்பிர மற்கும் அறிவொணா
அங்கி யின்னுரு வாகி யழல்வதோர்
பொங்க ரவனைப் புள்ளிருக்கு வேளூர்
மங்கை பாகனை வாழ்த்த வருமின்பே. 5

1861. குற்ற மில்லியைக் கோலச் சிலையினால்
செற்ற வர்புரஞ் செந்தழ லாக்கியைப்
புற்ற ரவனைப் புள்ளிருக்கு வேளூர்
பற்ற வல்லவர் பாவம் பறையுமே. 6

மேனியனுமாகிய இறைவன் உறையும் புள்ளிருக்கு வேளூர் என்று கூறவல்லவர்க்கு இடர்கள் இல்லை.

கு-ரை: தன்னுருவை - தனது திருவுருவத்தை. ஒருவர்க்கு அறியவொணா - திருமால், பிரமன் முதலாகிய யாரும் அறிய முடியாத. யாரும் அறியமுடியாதவாறு தனது திருவுருவத்தை உடையவன் என்க. மின் னுருவன் - மின்னல்போன்று ஒளிவடிவத்தினன். பொன்னுருவன் - அழகிய வடிவுடையவன். என்ன வல்லவர்க்கு - என்று சொல்ல வல்லவர்களுக்கு.

5. பொ-ரை: சிவந்தகண்ணை உடைய திருமாலுக்கும் பிரமனுக்கும் அறியவொண்ணாத அக்கினியின் உருவாகிக் கனலுகின்ற ஒப்பற்ற, பொங்கியெழும் அரவம் அணிந்த இறைவனாகிய புள்ளிருக்குவேளூரில் உமையொருபாகனை வாழ்த்த இன்பம் வரும்.

கு-ரை: செங்கண்மால் - சிவந்த நிறத்தை உடைய செந்தாமரைக் கண்ணனாகிய திருமால். அறிவொணா - அறிதல் ஒண்ணாத. அங்கி - நெருப்பு. அழல்வதோர் - நெருப்புப் போலச் சீறுவதொரு. பொங்கு - சினம் பொங்குகின்ற. அரவன் - பாம்பை அணிந்தவன். இன்பு - இன்பம்.

6. பொ-ரை: குற்றங்கள் இல்லாதவனும், அழகுமிக்க மேருமலையாகிய வில்லினால் சினந்தவர் முப்புரங்களைச் செந்தழலாக்கி

Koviloor Digital Library

1862. கையி னோடுகால் கட்டி யுமரெலாம்
ஐயன் வீடின னென்பதன் முன்னம்நீர்
பொய்யி லாஅரன் புள்ளிருக்கு வேளூர்
மையு லாவிய கண்டனை வாழ்த்துமே. 7

1863. உள்ள முள்கி யுகந்து சிவனென்று
மெள்ள வுள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே. 8

யவனும், புற்றரவம் கொண்டவனுமாகிய இறைவன் உறையும் புள்ளிருக்குவேளூரைப் பற்றும் வல்லமை உடையவர்களது பாவங்கள் கெடும்.


கு-ரை: குற்றமில்லி - இருவினைக் குற்றமில்லாதவன். கோலச் சிலை - அழகிய இமயவில் (மேருமலையாகிய வில்). செற்றவர் - உலகை அழித்து வந்த திரிபுராதிகள். புரம் - கோட்டை, செந் தழலாக்கி - சிவந்த நெருப்பு உண்ணும்படிச் செய்தவன். புற்றரவன் - புற்றிலே உள்ள பாம்பை அணிந்தவன். பற்றவல்லவர் - அடைய வல்லவர். பறையும் - நீங்கும்.

7. பொ-ரை: கைகளோடு கால்களையும் கட்டி உம்மைச் சேர்ந்த வரெல்லாம் எங்கள் ஐயன் இறந்தனன் என்று கூறுவதன்முன்பே, நீர் பொய்யில்லாத சிவபிரானும், புள்ளிருக்குவேளூர்த் திருநீலகண்டனு மாகிய பெருமானை வாழ்த்துவீராக.

கு-ரை: கையினோடுகால்கட்டி - இறந்தவுடன் கைகளையும் கால்களையும் துணியால் கட்டி. உமர் - உம்மவர். உம்மைச் சேர்ந்த உறவினர். ஐயன் வீடினன் என்பதன் முன்னமே - குடும்பத் தலைவனா யிருப்பவன் இறந்தான் என்று சொல்வதன் முன்பாகவே. பொய் யில்லா - பொய்மையில்லாத; தன்னை வேண்டியவர்க்கு அருள் வழங்குதலில் பொய்யில்லாத. மை - கருமை. வாழ்த்தும் - வாழ்த்துங்கள்.

8. பொ-ரை: உள்ளத்தால் உள்ளி. உவப்புற்று ''சிவன்'' என்று மெல்ல உள்கினால் வினைகள் கெடுதல் மெய்ம்மையே; சம்பாதி சடாயு

Koviloor Digital Library



திருப்புள்ளிருக்குவேளூர்:
பொருப்பனாருறை புள்ளிருக்கு வேளூர்

Koviloor Digital Library



Koviloor Digital Library

* * * * * * * 9

1864. அரக்க னார்தலை பத்து மழிதர
நெருக்கி மாமலர்ப் பாதம் நிறுவிய
பொருப்ப னாருறை புள்ளிருக்கு வேளூர்
விருப்பி னால்தொழு வார்வினை வீடுமே. 10

திருச்சிற்றம்பலம்

ஆகிய புள்ளினார்பணிகின்ற புள்ளிருக்குவேளூர் வள்ளல் பாதம் வணங்கித் தொழுவீராக.

கு-ரை: உள்ளம் உள்கி - மனத்தால் மீண்டும் மீண்டும். உகந்து - மகிழ்ந்திருந்து. சிவன் என்று மெள்ள உள்க - சிவன் சிவன் என்று பரபரக்காது சிந்திக்க. வினைகெடும் - நம் வினைப்பற்றுக் கெடும். மெய்ம்மையே - இது உண்மையேயாகும். புள்ளினார் - சம்பாதி சடாயு என்ற பறவைகளின் வடிவாய் இருந்தோர். பணி - வழிபாடு செய்த.

9. * * * * * * *

10. பொ-ரை: இராவணனது தலைபத்தும் அழியும்படி நெருக்கிப் பெருமைமிக்க திருவடி மலர்களை நிறுவிய திருக்கயிலாயமலைத் தலைவர் உறைகின்ற புள்ளிருக்குவேளூரை விருப்பத்தினால் தொழுவார் வினை கெடும்.

கு-ரை: அரக்கனார் - இராவணன். ஆர், இழித்தற்பொருளில் வந்தது. அழிதர - அழிய. நெருக்கி - நெரித்து. மாமலர்ப்பாதம் - மலர்களிற் சிறந்த தாமரை மலர்போன்ற திருவடி. நிறுவிய - மீள அவன் உய்யும்படி நிறுத்திய. பொருப்பினார் - கயிலைமலையார். வீடும் - அழியும்.

Koviloor Digital Library

80. திருவன்பிலாலந்துறை

பதிக வரலாறு:

பழையாறைவடதளி இறைஞ்சிக் குறுந்தொகைகள் பாடிப்பொன்னியினிரண்டு கரையிலுமுள்ள சிவதலங்களுக்குச் சென்று வணங்கித் தமிழ் மாலைகள் சாத்தியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 193 பதிக எண்: 80

திருச்சிற்றம்பலம்

1865. வானஞ் சேர்மதி சூடிய மைந்தனை
நீநெஞ் சேகெடு வாய்நினை கிற்கிலை
ஆனஞ் சாடியை யன்பிலா லந்துறைக்
கோன்எஞ் செல்வனைக் கூறிட கிற்றியே. 1

1866. கார ணத்தர் கருத்தர் கபாலியார்
வார ணத்துரி போர்த்த மணாளனார்
ஆர ணப்பொரு ளன்பிலா லந்துறை
நார ணற்கரி யானொரு நம்பியே. 2

1. **பொ-ரை:** நெஞ்சே! வானத்தைச் சேர்ந்த பிறை மதியைச் சூடிய மைந்தனாகிய சிவபெருமானை நினையும் வல்லமை உடையை இல்லை; நீ கெடுவாய், பஞ்சகவ்வியத் திருவபிஷேகம் கொள்வானாகிய திரு அன்பில் ஆலந்துறைக்கோனாம் எம் செல்வனைக் கூறிடும் வல்லமை பெறுவாயாக.

கு-ரை: வானம்சேர் - ஆகாயத்தைச் சேர்ந்துள்ள. மைந்தன் - இளையன், வலியன். நெஞ்சே நீ - மனமே நீ. கெடுவாய் - கெட்டுவிடு வாய். நினைகிற்கிலை - நினையாமல் இருக்கின்றாய். நீ நன்மையடை தற் பொருட்டுக் கூறவில்லையே ஆதலால் கெடுவாய் என இயைத்துக் கூறுக. ஆனஞ்சு - பஞ்சகவ்வியம். கோன் - தலைவனாகிய. அன்பிலாலந் துறை இறைவன் திருப்பெயரைப் பலகாலும் சொல் என்பதாம்.

2. **பொ-ரை:** அன்பிலாலந்துறையில் திருமாலுக்கும் அரியாராகிய ஒப்பற்ற நம்பி, உலககாரணரும், கருத்தில் உள்ளவரும்,

Koviloor Digital Library

1867. அன்பின் ஆனஞ்ச மைந்துட னாடிய
என்பின் ஆனை யுரித்துக் களைந்தவன்
அன்பி லானையம் மானையள் ளூறிய
அன்பி னால்நினைந் தாரறிந் தார்களே. 3

1868. சங்கை யுள்ளதுஞ் சாவது மெய்யுமை
பங்க னாரடி பாவியேன் நானுய்ய
அங்க ணனெந்தை யன்பிலா லந்துறைச்
செங்க ணாரடிச் சேரவும் வல்லனே. 4

பிரமகபாலம் கொண்ட கையினரும், யானை உரிபோர்த்த மணாளரும், வேதப்பொருள் ஆயவரும் ஆவர்.

கு-ரை: காரணத்தர் - உலகின் நிமித்த காரணராயிருப்பவர். கருத்தர் - எல்லாவற்றிற்கும் மூலகாரணர். கபாலியார் - பிரமனது மண்டையோட்டைக் கையின்கண் ஏந்தியவர். வாரணத்து - யானையினது. உரி - தோல். ஆரணப்பொருள் - வேதங்களின் பொருளாய் விளங்குபவன். நாரணன் - திருமால். ஒருநம்பி - ஒப்பற்ற சிறந்த ஆண் மகனாயிருப்பவன்.

3. பொ-ரை: அன்பினால் பஞ்சகவ்வியம் ஐந்துடன் திரு முழுக்குக் கொண்டவனும், எலும்புடைய யானையின் உரியை உரித்துக்களைந்தவனும் ஆகிய, அன்பில் ஆலந்துறையில் உள்ள அம்மானை, நெஞ்சில் அள்ளூறி அன்பினால் நினைந்தவர்களே அறிந்தவர்கள்.

கு-ரை: அன்பின் - அன்பினாலே. ஆன் அமைந்து அஞ்சுடன் ஆடிய - பசுவிடமுளதாய ஐந்து பொருள்களை ஏனைய பொருள்களோடு அபிடேகம் கொண்ட. என்பின் - எலும்புகளாகும்படி. உரித்துக் களைந்தவன் - தோலைஉரித்து நீக்கியவன். ஆனையை உரித்து என்பின் யானையாகச் செய்தவன். அன்பிலானை - அன்பில் என்ற தலத்து எழுந்தருளியவன். அம்மானை - தலைவனை. அள்ளூறிய - செறிந்து ஊறிப் பெருக்கெடுத்த; அன்பு என்க. ஆர் அறிந்தார்கள் - யார் உண்மையில் உணர்வாராயினார்கள்.

4. பொ-ரை: உள்ளதும் ஐயம்; சாவதேமெய்; ஆதலால் உமை பங்கரும், அழகிய கண்ணை உடையவரும், எந்தையும், அன்பிலாலந்

Koviloor Digital Library

1869. கொக்கி றகர் குளிர்மதிச் சென்னியர்
மிக்க ரக்கர் புரமெரி செய்தவர்
அக்க ரையின ரன்பிலா லந்துறை
நக்கு ருவரும் நம்மை யறிவரே. 5

1870. வெள்ள முள்ள விரிசடை நந்தியைக்
கள்ள முள்ள மனத்தவர் காண்கிலார்
அள்ள லார்வய லன்பிலா லந்துறை
உள்ள வாறறி யார்சில ரூமரே. 6

துறையில் சிவந்த கண்ணை உடையவருமாகிய பெருமான் அடிகளைப் பாவியேன் நான் உய்யச் சேரவும் வல்லனே!.

கு-ரை: உள்ளது சங்கை - இவ்வுலக வாழ்வில் இருப்பது ஐயம். சாவது மெய் - இறப்பது நிச்சயம். மெய்.- உண்மையே. உமை பங்க னார் - பார்வதி சமேதராய பெருமான். அடி - திருவடிகளை. பாவி யேன் - சிந்தியேன். அங்கணன் - அழகிய அருட்கண்ணன். எந்தை - எங்கள் தந்தை. செங்கணார் - சிவந்த கண்களை உடைய. வல்லனே - வல்லனோ என்க.

5. பொ-ரை: கொக்கிறகை உடையவரும், குளிர் மதிப் பிறை யினைச் சடையிற் கொண்டவரும், சினம்மிக்கு அரக்கர் முப்புரங்களை எரித்தல் செய்தவரும், அக்கினை அரைக்கசைத்தவருமாகிய அன்பி லாலந்துறையில் திகம்பர உருவினராம் இறைவர் நம்மை அறிவர்.

கு-ரை: கொக்கிறகர் - கொக்கு வடிவில் நின்ற அசுரனை அழித்து அவன் இறகினைச் சூடியவர் சிவபெருமான் ஆதலின் கொக் கிறகர் என்றார். குளிர்மதி - குளிர்ந்த பிறைமதி. மிக்க - செருக்கிய. அரக்கர் - திரிபுராரிகள். புரம் - மூன்று கோட்டைகள். எரிசெய்தவர் - எரியச்செய்தவர். அக்கரையினர் - அக்குமணி மாலையை அரையிலே கட்டியவர். நக்குருவர் - நகுதற்குக் காரணமான தோற்றத்தோடு கூடியவர். நம்மை அறிவர் - நம்மை அறிந்து திருவருள் செய்வர்.

6. பொ-ரை: கங்கையாகிய வெள்ளம் உள்ள விரிசடையோடு கூடிய நந்தியாகியபெருமானைக் கள்ளமுள்ள மனத்தவர் காணும் திறமை இல்லாதவர்கள்; சேறு நிறைந்த வயலை உடைய அன்பிலாலந் துறையின்கண் உள்ளவாறு சில ஊமையர் அறியார்.

Koviloor Digital Library

1871. பிறவி மாயப் பிணக்கி லழுந்தினும்
உறவெ லாஞ்சிந்தித் துன்னி உகவாதே
அறவ னெம்பிரா னன்பிலா லந்துறை
மறவா தேதொழு தேத்தி வணங்குமே. 7

1872. நுணங்கு நூலயன் மாலு மிருவரும்
பிணங்கி யெங்குந் திரிந்தெய்த்துங் காண்கிலா
அணங்க னெம்பிரா னன்பிலா லந்துறை
வணங்கும் நும்வினை மாய்ந்தறும் வண்ணமே. 8

கு-ரை: வெள்ளம் - கங்கை. நந்தி - சிவபெருமானுக்குரிய பெயர். கள்ளம் - வஞ்சகம். காண்கிலார் - காணமாட்டார். அள்ளல் - சேறு. ஆர் - பொருந்திய. உள்ளவாறு - உள்ளபடி.

7. பொ-ரை: பிறவியாகிய பொய்ப்பிணக்கில் அழுந்தினாலும் உறவெல்லாவற்றையும் சிந்தித்து எண்ணி மகிழாமல், அறவடிவாகிய எம்பெருமானது அன்பிலாலந்துறையை மறவாது தொழுது ஏத்தி வணங்குவீராக.

கு-ரை: பிறவி மாயப்பிணக்கில் - பிறவியாகிய பொய்மையை உடைய மாறுபாட்டுள். அழுந்தினும் - அழுந்தினாலும். உறவெலாம் சிந்தித்து - உறவினராயவர் எல்லாரையும் எண்ணி. உன்னி - அவர் களையே மீள மீள நினைத்து. உகவாதே - மகிழாமல். அறவன் - அறவடிவன். வணங்கும் - வணங்குங்கள்.

8. பொ-ரை: நுண்ணிய நூல் பல கற்ற பிரமனும் திருமாலு மாகிய இருவரும் மாறுபட்டு எங்கும் திரிந்து இளைத்தும் காணும் திறமையற்றனர்; அணங்கினை ஒருபாகம் உடைய இறைவன் அன்பிலாலந்துறையை நும் வினைகள் மாய்ந்து அறும் வண்ணம் வணங்குவீராக.

கு-ரை: நுணங்கு - நுண்ணிய. நூல் - வேதநூல்களை; ஓதும். அயன் - பிரமன். பிணங்கு - மாறுபட்டு. எய்த்தும் - வருந்தி இளைத்தும். காண்கிலா - காணாத. அணங்கன் - அணங்கை உடையவன். நும் வினை மாய்ந்தறும் வண்ணம் வணங்கும் என்க. வணங்கும் - வணங்குங்கள்.

Koviloor Digital Library

1873. பொய்யெ லாமுரைக் குஞ்சமண் சாக்கியக்
கையன் மாருரை கேளா தெழுமினோ
ஐய னெம்பிரா னன்பிலா லந்துறை
மெய்யன் சேவடி யேத்துவார் மெய்யரே. 9

1874. இலங்கை வேந்த னிருபது தோளிற்று
மலங்க மாமலை மேல்விரல் வைத்தவன்
அலங்க லெம்பிரா னன்பிலா லந்துறை
வலங்கொள் வாரைவா னோர்வலங் கொள்வரே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: எல்லாப் பொய்யும் உரைக்கும் சமணரும், சாக்கியருமாகிய சிறுமை உடையவர்கள் பேச்சைக் கேளாது எழுமின்; ஐயனும் எம்பெருமானும் அன்பிலாலந்துறையில் எழுந்தருளியுள்ள மெய்யனுமாகிய இறைவன் சேவடி ஏத்துவார் மெய்யர் ஆவர்.

கு-ரை: பொய்யெலாம் - பொய்யாயின பலவற்றையும். சமண் சாக்கியக் கையன்மார் - சமண மதக் கொள்கையினராய சாக்கியர் என்னும் பிரிவினர். எழுமின் - புறப்படுங்கள். மெய்யன் - உண்மை வடிவானவன். ஓ - அசை

10. பொ-ரை: இலங்கை அரசனாம் இராவணன் இருபது தோள்களும் இற்றுச் சுழலும்படியாகத் திருக்கயிலைமாமலை மேல் திருவிரலை ஊன்றியவன் ஆகிய கொன்றைமாலையணிந்த பெருமானுடைய அன்பிலாலந்துறையை வலங்கொண்டு வழி படுவாரைத் தேவர்கள் வலம் கொண்டு வணங்கிப் போற்றுவர்.

கு-ரை: இலங்கை வேந்தன் - இராவணன். இற்று - நெரிந்து. மலங்க - வருந்த. மாமலைமேல் - சிறந்த திருக்கயிலை மலையின் மேல். அலங்கல் - மலர்மாலை. வலங்கொள்வாரை - வலமாகச் சுற்றி வணங்குவாரை.

Koviloor Digital Library

81. திருப்பாண்டிக்கொடுமுடி

பதிக வரலாறு:

பழையாற்றவடதளி இறைஞ்சிக் குறுந்தொகைகள் பாடிப் பொன்னியினிரண்டு கரையிலுமுள்ள சிவதலங்களுக்குச் சென்று வணங்கித் தமிழ் மாலைகள் சாத்தியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப.தொ.எண்: 194 **பதிக எண்: 81**

திருச்சிற்றம்பலம்

1875. சிட்ட னைச்சிவ னைச்செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழலமர்
பட்ட னைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்ட னைத்தொழ நம்வினை நாசமே. 1

1876. பிரமன் மாலறி யாத பெருமையன்
தரும மாகிய தத்துவ னெம்பிரான்
பரம னாருறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே. 2

1. பொ-ரை: உயர்ந்தவனை, சிவனை, செழுஞ்சோதி வடிவான வனை, எட்டு மூர்த்தியை, கல்லாலநிழற்கீழ் அமரும் ஆசாரியனை, திருப்பாண்டிக்கொடுமுடிக் கூத்தனைத் தொழுதால் நம்வினை நாசமாம்.

கு-ரை: சிட்டன் - சிஷ்டாசாரமுடையவன். செழும் - வளவிய. அட்ட மூர்த்தியை - எட்டு வடிவமாக எழுந்தருளியவனை. ஆல நிழல் - கல்லால மர நிழலின்கண். பட்டன் - ஆசாரியன்; ஞானி. நட்டன் - நடனமாடுபவன். நாசம் - அழியும்.

2. பொ-ரை: அறிவற்ற நெஞ்சமே! பிரமனும் மாலும் அறியாத பெருமையனும், தருமவடிவாகிய தத்துவ வடிவினனும், எம்பிரானும், பரமனும் ஆகிய பெருமான் உறைகின்ற திருப்பாண்டிக் கொடு முடியைத் தொழுவதே கருமமாகக் கொண்டு பணிவாயாக.

Koviloor Digital Library

1877. ஊச லாளல்லள் ஒண்கழ லாளல்லள்
தேச மாந்திருப் பாண்டிக் கொடுமுடி
ஈச னேயெனு மித்தனை யல்லது
பேசு மாறறி யாளொரு பேதையே. 3

1878. தூண்டி யசுடர் போலொக்குஞ் சோதியான்
காண்டலுமெளி யன்னடி யார்கட்குப்
பாண்டிக் கொடுமுடி மேய பரமனைக்
காண்டு மென்பவர்க் கேதுங் கருத்தொணான். 4

கு-ரை: தருமமாகியதத்துவன் - அறவடிவாகியதத்துவன். கருமம் - செய்யவேண்டிய அவசியச் செயல்.

3. பொ-ரை: ஒரு பெண் ஊசல் விளையாட்டும் கொண்டிலள்; ஒள்ளிய கழல் அணிவாளுமல்லள்; தேசமாம் திருப்பாண்டிக் கொடு முடி ஈசனே என்னும் இத்தனையேயல்லது வேறு பேசுமாறு ஒன்றும் அறியாதவள் ஆயினள்.

கு-ரை: ஊசலாள் அல்லள் - ஊஞ்சல் ஆடுபவளாக இல்லை. ஒண்கழலாள் அல்லள் - ஒளிபொருந்திய சிலம்பு முதலிய அணி கலன்கள் அணிந்துகொள்ளுபவளாகவும் இல்லை. தேசமாம் - சிறந்த ஊராகிய. எனும் - என்று சொல்வாள். இத்தனையல்லது - இந்த வார்த்தைகளேயல்லாமல்.

4. பொ-ரை: தூண்டிய சுடர்போல் ஒக்கின்ற சோதிவடிவின னாகிய பெருமான் அடியார்களுக்குக் காண்டல் எளியவன்; பாண்டிக் கொடுமுடி மேவிய பரமனைக் காண்போம் என்று கூறுவார்க்கு ஏதும் கருதவொண்ணா இயல்பினோன்.

கு-ரை: தூண்டிய சுடர்போல் ஒக்கும் - தூண்டப்பட்ட விளக்குப்போல என்று உவமை சொல்லத்தகும். காண்டலும் எளியன் - காட்சிக்கும் எளியன். அடியார்களுக்குக் காண்டலும் எளியன் என்க. காண்டும் என்பவர்க்கு - எப்படியேனும் கண்டே தீருவேன் என்று செருக்கோடு காண்பார்க்கு. ஏதும் கருத்தொணான் - எந்த அளவிலும் கருத்தின்கண் புலப்படமாட்டாதவன்.

Koviloor Digital Library

1879. நெருக்கி யம்முடி நின்றிசை வானவர்
இருக்கொ டும்பணிந் தேத்த விருந்தவன்
திருக்கொ டும்முடி யென்றலுந் தீவினைக்
கருக்கெ டும்மிது கைகண்ட யோகமே. 5

* * * * * * 6, 7, 8, 9, 10

திருச்சிற்றம்பலம்

5. பொ-ரை: இராவணனது அம்முடிகளை நெருக்கி, புகழை உடைய வானவர் நின்று இருக்கு வேதம் உரைத்துப் பணிந்து ஏத்த இருந்தவனுடைய ''திருக்கொடுமுடி'' என்றலும் தீவினையின் கருக்கெடும்; இது கைகண்ட யோக நெறியாகும்.

கு-ரை: அம்முடி நெருக்கிநின்று - கூட்டமாய் ஒருவர் முடியோடு மற்றொருவர் நெருக்கிக்கொண்டு நின்று. இசை - பொருந்திய இருக்குவேதமொழி. கரு - பிறவி.

6, 7, 8, 9, 10. * * * * * * *

திருநாவுக்கரசர் புராணம்

புகழனார் தமக்குரிமைப்
பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த
மாதினியார் மணிவயிற்றில்
நிகழுமலர்ச் செங்கமல
நிரையிதழி னகவயினிற்
றிகழவருந் திருவனைய
திலகவதி யார்பிறந்தார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

82. திருவான்மியூர்

பதிக வரலாறு:

திருக்கழுக்குன்றின் நிருத்தனார் கழல் வணங்கித் தமிழ்த் தொடைபுனைந்து பாங்குள்ள பலபதிகளிலும் பிறைமுடியார். தமைத் தொழுது போற்றி வான்மியூர்வந்தணைந்து பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 331.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 195 பதிக எண்: 82

திருச்சிற்றம்பலம்

1880. விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே. 1

1881. பொருளுஞ் சுற்றமும் பொய்ம்மையும் விட்டுநீர்
மருளும் மாந்தரை மாற்றி மயக்கறுத்
தருளு மாவல்ல ஆதியா யென்றலும்
மருள றுத்திடும் வான்மியூ ரீசனே. 2

1. பொ-ரை: விரிந்தமாமலர்களைக் கொண்டு விரைந்து நீர், தேவர்நாயகனும், வண்டுசேர் பொழில்களை உடைய வான்மியூர் ஈசனுமாகிய இறைவன் சேவடியைச் சூழ்வீர்களாக; முன்பு செய்த பாவங்கள் கெடும்.

கு-ரை: விண்ட - முகையவிழ்ந்து மலர்ந்த. மா - சிறந்த. அண்ட நாயகன் தன் - எல்லா உலகங்களுக்கும் தலைவனாகிய பெருமானுடைய. அடி - திருவடிகளை. சூழ்மின்கள் - வலம் செய்து வணங்குங்கள். பண்டு செய்த பாவம் - முற்பிறப்பில் செய்த பிறவிக்குக் காரணமான பழவினை. பறைந்திடும் - நீங்கும். வான்மியூர் ஈசனை எனக் கூட்டுக.

2. பொ-ரை: பொருளும், சுற்றத்தாருமாகிய பொய்ம்மையை விட்டு நீர் மருளுதற்குரிய மாந்தரை மாற்றி மயக்கம் நீக்கி அருளு

Koviloor Digital Library

1882. மந்த மாகிய சிந்தை மயக்கறுத்
தந்த மில்குணத் தானை யடைந்துநின்
றெந்தை யீசனென் றேத்திட வல்லிரேல்
வந்து நின்றிடும் வான்மியூ ரீசனே. 3

1883. உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ள முள்ள வழிக்கசி வானலன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே. 4

மாறுவல்ல ஆதியாய்! என்று கூறியதும் வான்மியூர் ஈசன் மயக்கம் நீக்குவன்.

கு-ரை: நீர் - நீங்கள். மருளும் மாந்தரை - உலக வாழ்வில் மயங்கி நிற்கும் மக்களை. மயக்கு அறுத்து - அறியாமையாகிய மயக்கத்திலிருந்து விடுவித்து. அருளுமாவல்ல - அருள் செய்யவல்ல. ஆதியாய் - முதன்மையானவனே. என்றலும் - என்று கூறியவுடனே. மருள் - பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் அறியாமை யாகிய இருட்டு. அறுத்திடும் - நீக்கும்.

3. பொ-ரை: மந்தமாகிய சிந்தையின் மயக்கத்தை அறுத்து முடிவற்ற குணத்தை உடையவனாகிய பெருமானை அடைந்துநின்று எந்தையே! ஈசனே! என்று வழிபடவல்லமை உடையீரேயாயின் வான்மியூர் ஈசன் வந்து நின்றிடும்.

கு-ரை: மந்தமாகிய - அறியாமையால் ஏற்படும் மந்தத் தன்மையாகிய. சிந்தை மயக்கு - மன மயக்கத்தை. அறுத்து - நீக்கி. அந்தம்இல் - முடிவில்லாத. வல்லிரேல் - ஏத்தும் வன்மையை யுடையீரானால். வந்து நின்றிடும் - வெளிப்பட்டு வந்து தோன்றும்.

4. பொ-ரை: கங்கையும் பாம்பும் கலக்கும் சடையோடு கூடிய வள்ளலாகிய வான்மியூர் ஈசன், உள்ளம் கலந்து ஏத்த வல்லவர்க்கு அல்லால் கள்ளம் உள்ளவழிக் கசிவான் அல்லன்.

கு-ரை: உள்ளம் உள்கலந்து - உள்ளம் முழுமையும் அவனுக்கே இடமாகக்கொண்டு; மேற்போக்கான நினைப்பு பயனற்றது ஆதலின் உள்கலந்து என்றார். ஏத்தவல்லார்க்கலால் - வணங்கவல்லார்க்கே

Koviloor Digital Library

1884. படங்கொள் பாம்பரைப் பால்மதி சூடியை
வடங்கொள் மென்முலை மாதொரு கூறனைத்
தொடர்ந்து நின்று தொழுதெழு வார்வினை
மடங்க நின்றிடும் வான்மியூ ரீசனே. 5

1885. நெஞ்சி லைவர் நினைக்க நினைக்குறார்
பஞ்சின் மெல்லடி யாளுமை பங்கவென்று
றஞ்சி நாண்மலர் தூவி யழுதிரேல்
வஞ்சந் தீர்த்திடும் வான்மியூ ரீசனே. 6

அல்லாமல். கள்ளம் உள்ளழி - வஞ்சகத்தன்மை உள்ள இடத்து. கசிவானலன் - அருள் செய்யமாட்டான். வெள்ளம் - கங்கை. விரவும் - கலந்தணிந்த.

5. பொ-ரை: படம் கொண்ட பாம்பு உடையவனும், பால் மதி சூடியவனும், மாலைகள் கொண்ட மென்முலைமாதாகிய உமை யொரு கூறனுமான வான்மியூர் ஈசன், தொடர்ந்து நின்று தொழுது எழுவார் வினைகள் மடங்க முன்னே வந்து நின்று அருளுவான்.

கு-ரை: படங்கொள் - படத்தைக் கொண்ட. பாம்பரை - பாம்பணிந்தவரை. மதிசூடியை - பிறைமதி சூடியவரை. வடங்கொள் - முத்துமாலைகளை அணிந்த. தொடர்ந்து நின்று - இடையறாது சிந்தித்து நின்று. தொழுதெழுவார் - வணங்கி எழுவார். மடங்க நின்றிடும் - சுருங்கும். வான்மியூர் ஈசனைத் தொழுது எழுவார் வினை மடங்கும் என்க.

6. பொ-ரை: ''நெஞ்சில் நினைக்க ஐம்புலக் கள்வர் நினைக்கவையார்; பஞ்சனைய மெல்லடியாளாகிய உமைபங்கனே!'' என்று அஞ்சிப் புதிய மலர்கள் தூவி அழுதீரேல் வான்மியூர் ஈசன் உம் வஞ்சனையைத் தீர்ப்பர்.

கு-ரை: நெஞ்சில் - மனத்தில். ஐவர் - ஐம்பொறிகள். நினைக்க - பல வழிகளிலும் மனத்தை ஈடுபடுத்திப் பலவற்றை நினைக்க. நினைக்குறார் - இறைவனை நினைத்தலைப் பொருந்தா ராயினர். பஞ்சின் மெல்லடியார் - பஞ்சு போன்ற மென்மைத் தன்மை வாய்ந்த காலடிகளை உடையவர். அஞ்சி - அச்சத்துடனே. நாண் மலர் - புதிய மலர்கள். அழுதிரேல் - இறைவனைக் கூவி அழைத்து

Koviloor Digital Library

1886. நுணங்கு நூலயன் மாலு மறிகிலாக்
குணங்கள் தான்பர விக்குறைந் துக்கவர்
சுணங்கு பூண்முலைத் தூமொழி யாரவர்
வணங்க நின்றிடும் வான்மியூ ரீசனே. 7

1887. ஆதி யும்மர னாயயன் மாலுமாய்ப்
பாதி பெண்ணுரு வாய பரமனென்
றோதி யுள்குழைந் தேத்தவல் லாரவர்
வாதை தீர்த்திடும் வான்மியூ ரீசனே. 8

அழுவீர்களேயானால். வஞ்சம் தீர்த்திடும் - நினைக்க ஒட்டாது தடுத்து இடுக்கண் செய்யும் புலனாசையை நீக்கும்.

7. பொ-ரை: நுண்ணிய நூல் பல உணர்ந்த பிரமனும் திருமாலும் அறியும்வல்லமை இல்லாத பேரருட் குணங்களைப் பரவி சுணங்கு படர்ந்த பூண்களை உடைய முலையையும் தூய மொழியையும் உடைய பெண்கள் வணங்க வான்மியூர் ஈசன் நின்றிடுவான்.

கு-ரை: நுணங்கு - நுண்ணிய. நூல் - வேதங்கள். பரவி - தோத்திரித்து. குறைந்து உக்கவர் - செருக்கொழிந்து மனமுருகியவர். சுணங்கு - பசலை. பூண் - அணிகலன். தூமொழியாரவர் - இறைவன் புகழ் மொழிகளைப் பேசுபவர்களாகிய பெண்கள்.உக்கவரும், மொழியாரவரும் வணங்க என எண்ணும்மை விரிக்க. வணங்க நின்றிடும் - வணங்க எழுந்தருளும்.

8. பொ-ரை: வான்மியூர் ஈசன் முதலாகிய மூர்த்தி அரனும் அயனும் திருமாலும் ஆயவன். பாதிபெண்ணுருவுமாகிய பரமன் என்று ஓதி உள்ளம் குழைந்து ஏத்த வல்லமை உடையவர்களின் துன்பங்களைத் தீர்த்திடுவான்.

கு-ரை: ஆதி - எல்லார்க்கும் முன்னே தோன்றியவன். அரனாய் அயன் மாலுமாய் - அரன் அயன் அரி ஆகிய மும்மூர்த்திகளாகியும். பரமன் - மேலானவன். உள் குழைந்து - மனமுருகி. வாதை - பிறவித் துன்பம்.

9. பொ-ரை: ஒட்டைமாடமாகிய உடம்பில் உள்ள ஒன்பது வாயில்களும் இடுகாட்டில் வெந்து எரிந்து சாம்பலாவதன் முன், தன்

Koviloor Digital Library

1888. ஓட்டை மாடத்தி லொன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயில்
வாட்டந் தீர்த்திடும் வான்மியூ ரீசனே. 9

1889. பார மாக மலையெடுத் தான்றனைச்
சீர மாகத் திருவிர லூன்றினான்
ஆர்வ மாக அழைத்தவ னேத்தலும்
வார மாயினன் வான்மியூ ரீசனே. 10

திருச்சிற்றம்பலம்

கழலடியை நெஞ்சில் நாட்டிப் புதுமலர் தூவி வலம் செய்தால் வான்மியூரீசன் வாட்டம் தீர்ப்பான்.

கு-ரை: ஓட்டை மாடத்தில் - எண்ணிறைந்த ஓட்டைகளை உடைய வீடாகிய உடலில். உருவகம். ஒன்பது வாசலும் - ஒன்பது வாசல்களும். வழிகளாவன; வாய், கண், மூக்கு, காது, சிறுநீர், மலம் கழிப்பதற்கான வாயில்கள் ஆகிய ஒன்பது வழி. காட்டில் - இடு காட்டில். நாட்டி - மனத்தில் நிலையாக எழுந்தருளச்செய்து. நாண் மலர் - புதியமலர்கள். வாட்டம் - துன்பம்.

10. பொ-ரை: பாரமாகத் திருக்கயிலையை எடுத்த இராவணனைச் சிதையும்படி திருவிரலால் ஊன்றியவனும், ஆர்வம் பெருகி அழைத்து அவன் ஏத்தலும் அன்பு கொண்டவனும் வான்மியூர் ஈசன் ஆவன்.

கு-ரை: பாரமா - சுமையாக. மலை - கயிலைமலை. சீரமாக - சீரணிக்க; அழிய. சிரமம் என்றதன் மரூஉவாகக் கொண்டு துன்புற எனலுமாம். ஊன்றினான் - கால்விரலை ஊன்றினான். ஆர்வமாக - அன்புடனே. அழைத்து அவன் ஏத்தலும் - அழைத்து அவனை வணங்குதலும். வாரம் - அன்பு; அருள். 'வாரமாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர்' என்பது ஓர்க.

Koviloor Digital Library

83. திருநாகைக்காரோணம்

பதிக வரலாறு:

மறைக்காட்டமர்ந்தருளும் சோதியருள்பெற்றுத் திருவீழி மிழலைப் பரமன் திருக்கழலை மீண்டும் சாரநினைந்து நாகைக் காரோணம் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 291.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 196 **பதிக எண்: 83**

திருச்சிற்றம்பலம்

1890. பாணத் தால்மதின் மூன்று மெரித்தவன்
பூணத் தானர வாமை பொறுத்தவன்
காணத் தானினி யான்கடல் நாகைக்கா
ரோணத் தானென நம்வினை யோயுமே. 1

1891. வண்ட லம்பிய வார்சடை யீசனை
விண்ட லம்பணிந் தேத்தும் விகிர்தனைக்
கண்ட லங்கமழ் நாகைக்கா ரோணனைக்
கண்ட லும்வினை யான கழலுமே. 2

1. **பொ-ரை:** ஓர் அம்பினால் மூன்று மதில்களையும் எரித்தவனும், தான் அணியாகப் பூணப் பாம்பையும் ஆமையையும் தாங்கியவனும், காண இனியவனும் ஆகிய கடல் நாகைக் காரோணத்தான் என நம்வினை ஓயும்!

கு-ரை: பாணத்தால் - அம்பால். மதில்மூன்று - திரிபுரம். எரித்தவன் - எரியச்செய்தவன். பூண - அணிய. பொறுத்தவன் - சுமந்தவன். காணத்தான் இனியான் - காணுதற்கு இனிய அழகியவன். இனியதைச் செய்பவன். என - என்றுசொல்ல. ஓயும் - ஒழியும். காண - தரிசித்துப் பெருமைகளைக் காண.

2. **பொ-ரை:** வண்டுகள் ஒலிக்கும் நீண்ட சடையுடைய ஈசனும், விண்ணுலகம் பணிந்தேத்தும் மேலானவனும், தாழை கமழ்கின்ற நாகைக்காரோணனுமாகிய பெருமானைக் காணுதலும் வினைகள் நீங்கும்.

Koviloor Digital Library

1892. புனையும் மாமலர் கொண்டு புரிசடை
நனையும் மாமலர் சூடிய நம்பனைக்
கனையும் வார்கடல் நாகைக்கா ரோணனை
நினைய வேவினை யாயின நீங்குமே. 3

1893. கொல்லை மால்விடை யேறிய கோவினை
எல்லி மாநட மாடு மிறைவனைக்
கல்லி னார்மதில் நாகைக்கா ரோணனைச்
சொல்ல வேவினை யானவை சோருமே. 4

கு-ரை: அலம்பிய - ஒலித்த. வார் - நீண்ட. விண்தலம் - தேவருலகம். விகிர்தன் - வேறுபாடில்லாதவன். கண்டல் அம்கமழ். தாழைமலர்கள் மணம் வீசுகின்ற. அம், சாரியை, அல்லது அம் கண்டல் எனலும் ஆம். கண்டலும் - பார்த்தலும். காண்டலும் என்பது எதுகைநோக்கி கண்டலும் என்றாயது. கழலும் - நீங்கும்.

3. பொ-ரை: மாமலர்களைக்கொண்டு புனையும் புரிசடை உடைய நம்பனும். கள்ளால் நனையும் மாமலரைச் சூடிய நம்பனும் ஆகிய ஒலிக்கும் நீண்ட கடல் நாகைக்காரோணனை நினைய வினைகள் நீங்கும்.

கு-ரை: புனையும் - அலங்கரியுங்கள். மாமலர்கொண்டு - சிறந்த மலர்களைக் கொண்டு, புனையும் என்க. புரிசடை - முறுக்குண்ட நனையும் மாமலர் சூடிய. நனையும் மாமலரும் என்க. நனை - அரும்பு. கனையும் - ஒலிக்கின்ற. வார்கடல் - நீண்டகடல்.

4. பொ-ரை: முல்லைநிலத்து விடையேறிய அரசனும், இரவில் மகாதாண்டவம் புரியும் இறைவனும் ஆகிய, கற்களால் கட்டப்பட்ட மதில் சூழ்ந்த நாகைக்காரோணனைச் சொல்ல வினைகள் சோரும்.

கு-ரை: கொல்லை - முல்லை நிலத்துக்குரிய. மால்விடை - திருமாலாகிய எருதினை. ஏறிய - ஊர்தியாக ஏறிய. கோவினை - தலைவனை. எல்லி - இரவு. மா - சிறந்த. கல்லினார்மதில் - கற்களினால் பொருத்திக்கட்டப்பட்ட. சோரும் - அழியும்.

Koviloor Digital Library

1894. மெய்ய னைவிடை யூர்தியை வெண்மழுக்
கைய னைக்கடல் நாகைக்கா ரோணனை
மைய னுக்கிய கண்டனை வானவர்
ஐய னைத்தொழு வார்க்கல்ல லில்லையே. 5

1895. அலங்கல் சேர்சடை யாதிபு ராணனை
விலங்கல் மெல்லியல் பாகம் விருப்பனைக்
கலங்கள் சேர்கடல் நாகைக்கா ரோணனை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே. 6

1896. சினங்கொள் மால்கரி சீறிய ஏறினை
இனங்கொள் வானவ ரேத்திய வீசனைக்
கனங்கொள் மாமதில் நாகைக்கா ரோணனை
மனங்கொள் வார்வினை யாயின மாயுமே. 7

5. பொ-ரை: உண்மையே உருவானவனும், விடையை ஊர்தியாகக்கொண்டவனும், வெண்மழுவைக் கையிற்கொண்டவனும், நாகைக்காரோணனும், ஆலகால நஞ்சினை வருத்திய திருக்கழுத்தினனும் ஆகிய தேவர் தலைவனைத் தொழுவார்க்கு அல்லல் இல்லை.

கு-ரை: மெய்யன் - உண்மையின் வடிவாய் விளங்குகின்றவன். வெண்மழுக்கையன் - வெள்ளிய மழுவாயுதத்தைக் கையின்கண் உடையவன். மை - கரியவிடம். அனுக்கிய - வருத்திய, வென்ற. விடத்தினை மாற்றிய நீலகண்டன் என்க. ''பிறையனுக்கிய செஞ்சீறடி'' வானவர் ஐயன் - தேவர்கள் தலைவன்.

6. பொ-ரை: மாலைகள் சேர்ந்த சடையையுடைய ஆதி புராணனை, மலைமங்கையை ஒருபாகம் விரும்பிக் கொண்டவனை, கப்பல்கள் சேரும் கடல்நாகைக்காரோணனை வலம் கொண்டு வணங்குவார் வினைகள் மாயும்.

கு-ரை: அலங்கல் - மாலை. ஆதிபுராணன் - முதலில் தோன்றிய பழையவன். விலங்கல் மெல்லியல் - மலைமகள். பாகம் விருப்பனை - பாகமாக விரும்பியவனை. கலங்கள் - கப்பல்கள்.

7. பொ-ரை: சினங்கொண்ட பெரிய வேழத்தைச் சினந்து பொறாத ஏறுபோல்வானும், தொகுதி கொண்ட தேவர்கள் ஏத்திய

Koviloor Digital Library

1897. அந்த மில்புக ழாயிழை யார்பணிந்
தெந்தை யீசனென் றேத்து மிறைவனைக்
கந்த வார்பொழில் நாகைக்கா ரோணனைச்
சிந்தை செய்யக் கெடுந்துயர் திண்ணமே. 8

1898. கருவ னைக்கடல் நாகைக்கா ரோணனை
இருவ ருக்கறி வொண்ணா இறைவனை
ஒருவ னையுண ரார்புர மூன்றெய்த
செருவ னைத்தொழத் தீவினை தீருமே. 9

ஈசனும் ஆகிய பெருமைகொண்ட மாமதில் சூழ்ந்த நாகைக் காரோணனை உள்ளத்துக்கொள்ளுவார் வினைகள் மாயும்.

கு-ரை: சினங்கொள் - கோபம்கொள்ளும். மால் - கரிய அல்லது பெரிய. கரி - யானையை. சீறிய - சினந்து உரித்துப் போர்த்த. ஏறு - சிங்கஏறு அல்லது காளை. இனங்கொள் - கூட்டம்கொண்ட. கனம்கொள் - மேகங்கள் தங்குதலைக்கொண்ட.

8. பொ-ரை: ஆயிழையார்கள் பணிந்து முடிவற்ற புகழைப் பாடி எந்தையே! ''ஈசனே'' என்று வாழ்த்தும் இறைவனாகிய மணம் வீசும் நெடிய பொழில் சூழ்ந்த நாகைக்காரோணனைச் சிந்தித்தால் திண்மை யாகத் துயரங்கள் கெடும்.

கு-ரை: அந்தமில் - கெடுதல் இல்லாத. புகழ் - புகழையுடைய. ஆயிழையார் - அழகிய அணிகலன்கள் அணிந்த பெண்கள்; பார்வதி எனலுமாம். எந்தை - என்னுடைய தந்தை. ஈசன் - தலைவன். கந்தம் - மணம். திண்ணம் - நிச்சயம். ''கௌரிநாயக, நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து பெரும்பதம் பிழையா வரம் பலபெற்றோர் இமையாநெடுங்கண் உமையாள் நங்கையும் தாரகற்செற்ற வீரக் கன்னியும் நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்...''. *(திருவிடை - மும்மணி.28)*

9. பொ-ரை: உலகிற்கெல்லாம் கருவாகியவனும். கடல்நாகைக் காரோணனும், பிரமன் திருமால் ஆகிய இருவருக்கறியவியலாத இறைவனும், ஒப்பற்றவனும் ஆகிய உணராத அசுரரது முப் புரங்களை எய்த போரை உடைய பெருமானைத் தொழத் தீவினைகள் தீரும்.

Koviloor Digital Library

1899. கடல்க ழிதழி நாகைக்கா ரோணன்றன்
வடவ ரையெடுத் தார்த்த அரக்கனை
அடர வூன்றிய பாத மணைதரத்
தொடர அஞ்சுந் துயக்கறுங் காலனே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: கருவன் - மூலகாரணனாய் விளங்குபவன். இருவர் - திருமால் பிரமன். ஒருவன் - ஏகன். அழியாதவன் தானொருவனே யாகலின் ஏகன் என்றார். உணரார் - பகைவர். செருவன் - முப்புர மெரித்தலாகிய போரைச் செய்தவன்.

10. பொ-ரை: கடல் உப்பங்கழிகள் பொருந்திய நாகைக் காரோணன் தன் திருக்கயிலையை எடுத்து ஆர்த்த இராவணனை அடரத் திருவிரலால் ஊன்றிய பாதம் அணைந்தால் துயக்கற்ற காலன் தொடர அஞ்சுவான்.

கு-ரை: கடற்கழி தழீஇய, அகரம்தொக்கது. தழி - தழுவுதலை உடையது. வடவரை - வடக்கின்கண் உளதாய திருக்கயிலைத் திருமலை. ஆர்த்த - செருக்கினால் ஆரவாரித்த, அடர - இறக்குமாறு வருத்த. அணைதர - நெருங்கித்தொழ. காலன் தொடர அஞ்சும். அஞ்சும் - அஞ்சுவான். துயக்கு - துன்பம்.

திருநாவுக்கரசர் புராணம்

சோலை மறைக்காட் டமர்ந்தருளுஞ் சோதி
அருள்பெற்றகன்று போய்,
வேலை விடமுண் டவர்வீழி மிழலை
மீண்டுஞ் செல்வன்என,
ஞாலம் நிகழ்ந்த நாகைக்கா ரோணம்
பிறவுந் தாம்பணிந்து,
சாலு மொழிவண் டமிழ்பாடித் தலைவர்
மிழலை வந்தடைந்தார்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

84. திருக்காட்டுப்பள்ளி

பதிக வரலாறு:

ஞானவரசு பழையாறை வடதளியிறைஞ்சி வாய்மைக் குறுந்தொகைகள் பாடிப் பொன்னியினில் இரண்டு கரையும் பொருவிடையார் தங்கும் இடங்கள் புக்கிறைஞ்சித் திருக்காட்டுப் பள்ளியீசரைத் தொழுது பாடியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 197 பதிக எண்: 84

திருச்சிற்றம்பலம்

1900. மாட்டுப் பள்ளி மகிழ்ந்துறை வீர்க்கெலாம்
கேட்டுப் பள்ளிகண் டீர்கெடு வீரிது
ஓட்டுப் பள்ளிவிட் டோட லுறாமுனம்
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. 1

1901. மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடு நாணிலீர்

1. பொ-ரை: செல்வத்திடத்து மகிழ்ந்து உறைவீர்; கேட்டுப் பள்ளிகண்டீர். உடம்பை விட்டு உயிர் ஓடலுறுவதற்கு முன்பு காட்டுப்பள்ளியிறைவன் திருவடிகளைச் சேர்வீராக.

கு-ரை: மாட்டுப்பள்ளி - செல்வம் நிறைந்த இருக்கைகள். உறைவீர்க்கெலாம் - தங்கி இறையுணர்வின்றியிருப்போர் எல்லாருக்கும். இது கேட்டுப்பள்ளிகண்டீர் - இது கேடுதரும் இருக்கை என்பதை உணருங்கள். கெடுவீர் - நிலையாத மனைவாழ்க்கையை நம்பியிருப்பின் கெட்டுவிடுவீர். இது என்பதைக் கேட்டுப்பள்ளி என்பதனுடன் கூட்டுக. ஓட்டுப்பள்ளி - ஓடுகின்ற வீடு. விட்டு - பிரிந்து. ஓடலுறாமுனம் - உயிர்செல்வதற்குமுன்பே. காட்டுப் பள்ளியுளான் கழல் - திருக்காட்டுப்பள்ளி என்னும் தலத்து இறைவன் திருவடிகளை. சேர்மின் - அடைந்து வழிபடுங்கள்.

2. பொ-ரை: செல்வத்தையே தேடி நீர் உமக்குள்ளே மகிழ்ந்து நாட்டிலுள்ள பொய்யெல்லாம் பேசிடும் நாணமற்றவர்களே! இந்தக்

Koviloor Digital Library

கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. 2

1902. தேனை வென்றசொல் லாளொடு செல்வமும்
ஊனை விட்டுயிர் போவதன் முன்னமே
கான வேடர் கருதுங்காட் டுப்பள்ளி
ஞான நாயக னைச்சென்று நண்ணுமே. 3

1903. அருத்த மும்மனை யாளொடு மக்களும்
பொருத்த மில்லைபொல் லாதது போக்கிடும்
கருத்தன் கண்ணுத லண்ணல்காட் டுப்பள்ளித்
திருத்தன் சேவடி யைச்சென்று சேர்மினே. 4

கூடாகிய உடம்பைவிட்டு உயிர் போவதற்கு முன்பே காட்டுப்பள்ளி யுள்ளான் திருவடி சேர்வீராக.

கு-ரை: மாட்டை - செல்வத்தை. மகிழ்ந்து - மனம் செருக்கி. நும்முளே - உங்களுக்குள். நாட்டுப்பொய்யெலாம் - உலகில் நடக்கும் பல உண்மையில்லாத நிகழ்ச்சிகளையெல்லாம். நாணிலீர் - வெட்க மில்லாதவர்களே! கூட்டைவிட்டு - உடலை விட்டு.

3. பொ-ரை: தேனை வென்ற சொல்லை உடையவளாகிய மனைவியோடு செல்வமும் கெட்டு உடலைவிட்டு உயிர் போவதற்கு முன்பே காட்டு வேடர்கள் கருதும் காட்டுப்பள்ளியின் ஞான நாயகனைச் சென்று நண்ணுவீராக.

கு-ரை: தேனைவென்ற - தேனினும் இனிய. சொல்லார் - சொல்லையுடைய பெண்கள். ஊனைவிட்டு - உடலையும் விட்டு. பெண்டிர் செல்வம் உடல் இவை பிரிவதன் முன்; இறக்குமுன்பு என்க. கானவேடர் - காட்டில் வாழும் வேடர். கருதும் - எண்ணி வழிபடும். ஞானநாயகன் - பேரறிவின் தலைவன். நண்ணும் - அடைந்து வழிபடுங்கள்.

4. பொ-ரை: பொருளும், மனைவியோடு மக்களும் பொருத்தம் இல்லை; பொல்லாத தீமை போக்கிடும் கருத்தனும், நெற்றிக்

Koviloor Digital Library

1904. சுற்ற முந்துணை யும்மனை வாழ்க்கையும்
அற்ற போதணை யாரவ ரென்றென்றே
கற்ற வர்கள் கருதுங்காட் டுப்பள்ளிப்
பெற்ற மேறும் பிரானடி சேர்மினே. 5

1905. அடும்புங் கொன்றையும் வன்னியும் மத்தமும்
துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான்
கடம்பன் தாதை கருதுங்காட் டுப்பள்ளி
உடம்பி னார்க்கோர் உறுதுணை யாகுமே. 6

கண்ணுடைய அண்ணலும் ஆகிய காட்டுப்பள்ளித் திருத்தன் சேவடியைச் சென்று சேர்வீராக.

கு-ரை: அருத்தமும் - செல்வமும். பொருத்தமில்லை - நம்மோடு பொருந்தியன அல்ல. பொல்லாதது போக்கிடும் கருத்தன் - தீயனவற்றை நீக்கியருளும் மூலகாரணன். திருத்தன் - அழகியன்.

5. பொ-ரை: சுற்றத்தாரும் துணைவியும் மனைவாழ்க்கையும், உயிர் உடலைவிட்டு நீங்கியபோது பொருந்தாதவர்கள் என்று, கற்றவர்கள் கருதுகின்ற காட்டுப்பள்ளியில் இடபம் ஏறிய பெருமான் அடி சேர்வீராக.

கு-ரை: துணை - மனைவி. அற்றபோது - உயிர் நீங்கிய காலத்து. அணையார் - நம்மொடு உடன் வாரார். பெற்றம் - எருது.

6. பொ-ரை: அடும்பும், கொன்றையும், வன்னியும், ஊமத்த முமாகிய மலர்கள் சூடியிருக்கும் புனைதல் செய்யப்பட்ட சடையுடைய தூமணிச் சோதியானும், கடம்பணிந்த முருகன் தந்தையும் ஆகிய பெருமானே உடம்பை உடையவர்க்கெல்லாம் உறுதுணை ஆவான்; ஆதலின் காட்டுப்பள்ளியையே கருதுவீர்களாக.

கு-ரை: அடும்பு - அடம்பமலர். துடும்பல் - நிறைந்திருத்தல். தூமணிச்சோதி - தூயமணியினது ஒளியை உடையவன். கடம்பன் - கடம்பமலர்மாலை சூடிய முருகன். தாதை - தந்தை. கருதும் - வழிபட்ட. உடம்பினார்க்கு - உடலோடு கூடி வாழ்பவர்களுக்கு. உறுதுணையாகும் - உற்ற துணையாகவுதவும்.

Koviloor Digital Library

1906. மெய்யின் மாசுடை யாருடல் மூடுவார்
பொய்யை மெய்யென்று புக்குடன் வீழன்மின்
கையின் மானுடை யான்காட்டுப் பள்ளியெம்
ஐயன் தன்னடி யேயடைந் துய்ம்மினே. 7

1907. வேலை வென்றகண் ணாரை விரும்பிநீர்
சீலங் கெட்டுத் திகையன்மின் பேதைகாள்
காலையேதொழுங் காட்டுப்பள் ளிய்யுறை
நீல கண்டனை நித்தல் நினைமினே. 8

1908. இன்று ளார்நாளை யில்லை யெனும்பொருள்
ஒன்றும் ஓரா துழிதரு மூமர்காள்

7. பொ-ரை: உடம்பில் அழுக்குடையவரும், உடல் மூடுவாரு மாகிய புத்தரது பொய்யை மெய்யென்று கருதிப் புகுந்து அவர்களுடன் வீழாதீர்; கையின்கண் மான் உடையான் ஆகிய காட்டுப் பள்ளியில் எம் ஐயன் திருவடிகளையே அடைந்து உய்வீராக.

கு-ரை: மெய்யின் - உடலின்கண். மாசு - அழுக்கு. உடல் மூடுவார் - உள் அழுக்கை மறைத்துப் புறத்தே மூடிக்கொள்வாராகிய புத்தர்கள். பொய்யை - அவர்கள் மெய்போலக்கூறும் பொய் மொழிகளை. புக்குடன்வீழன்மின் - பலரும் ஒரு சேரப் புகுந்து சென்று விழாதீர்கள்.

8. பொ-ரை: அறிவற்றவர்களே! வேலை, அழகால் வென்ற கண்ணை உடைய பெண்டிரை விரும்பி, நீர் ஒழுக்கம் கெட்டுத் திகையாதீர்; காட்டுப்பள்ளியில் உறையும் திருநீலகண்டனை நித்தமும் நினைந்து காலத்தே சென்று தொழுவீராக.

கு-ரை: வேலை வென்ற கண்ணார் - கூர்மையால் சென்று தைத்தலில் வேலை வெற்றிகொண்ட கண்களை உடைய பெண்கள். திகையன்மின் - உலகவாழ்விலேயே திகைத்துச் செயலற்று நிற்காதீர்கள். காலையே தொழும் - உடலில் உயிர் உள்ள காலத்திலேயே தொழுது வணங்குங்கள். நித்தல் - நாடோறும்.

9. பொ-ரை: ஊமர்களே! இன்றைக்கிருப்பார் நாளைக்கில்லை எனும் பொருள் ஒன்றும் உணராது திரிதருவோரே! அன்று

Koviloor Digital Library

அன்று வானவர்க் காக விடமுண்ட
கண்ட னார்காட்டுப் பள்ளிகண் டுய்ம்மினே. 9

1909. எண்ணி லாஅரக் கன்மலை யேந்திட
எண்ணி நீண்முடி பத்து மிறுத்தவன்
கண்ணு ளார்கரு துங்காட்டுப் பள்ளியை
நண்ணு வாரவர் தம்வினை நாசமே. 10

திருச்சிற்றம்பலம்

தேவர்களின் பொருட்டு விடமுண்ட திருக்கழுத்தினரது காட்டுப்பள்ளி கண்டு உய்வீராக.

கு-ரை: இன்றுளார் - இன்றைக்கு இருப்பவர். நாளை இல்லை - மறுநாள் இல்லாதவராவர். எனும்பொருள் - என்று சொல்லும் பழமொழியின் உண்மைப்பொருள் மொழிகளை. உழி தரும் - திரியும்.

10.பொ-ரை: நல்லெண்ணமில்லாத இராவணன் மலையை எடுக்க, அவன் திருந்துமாறு திருவுளத்து எண்ணி, அவன் நீண்ட முடிகள் பத்தையும் இறுத்தவனுக்குரிய ஞானக்கண்ணுடையவர் கருதி உணரும் காட்டுப்பள்ளியை நண்ணுவாருடைய வினைகள் நாசம் அடையும்.

கு-ரை: எண்இலா - எண்ணமில்லாத (நம் செருக்கு இறைவன் திருமுன் நிற்குமா என்ற எண்ணம்). எண்ணி - இவனை நாம் திருத்துவது நிக்ரகத்தாலன்றியில்லை என்று எண்ணி. இறுத்தவன் - நெரித்தவன். கண்ணுளார் - அறிவுக்கண் உள்ள சான்றோர்கள்.

திருநாவுக்கரசர் புராணம்

**மருணீக்கி யார்சென்னி மயிர்நீக்கு மணவினையுந்
தெருணீர்ப்பன் மாந்தரெலா மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருணீத்தங் கொளவீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த
சுருணீக்கி மலர்விக்குங் கலைபயிலத் தொடங்கு வித்தார்.**

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

85. திருச்சிராப்பள்ளி

பதிக வரலாறு:

திருவானைக்காவில் சிலந்திக்கருளும் இறைவர் கழல் வணங்கிச் செஞ்சொல் மாலைபாடி எறும்பியூர் தொழுது திருச்சிராப்பள்ளி சென்று இறைஞ்சிப் பாடியருளியது இத்திருப் பதிகம். (தி.12 திருநா. புரா. 302.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 198 பதிக எண்: 85

திருச்சிற்றம்பலம்

1910. மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறு மிறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே. 1

1911. அரிய யன்தலை வெட்டிவட் டாடினார்
அரிய யன்தொழு தேத்து மரும்பொருள்
பெரிய வன்சிராப் பள்ளியைப் பேணுவார்
அரிய யன்தொழ அங்கிருப் பார்களே. 2

1. பொ-ரை: சிராப்பள்ளிச் செல்வர், தேன் ஒழுகும் நீண்ட குழலை உடைய உமாதேவியோடு பெரிய விடையினை விருப்பத் தினோடு உகந்து ஏறும் இறைவர்; பாசக்கட்டு நீத்தவர்க்கு இன்னருளே புரியும் மேலோர்.

கு-ரை: மட்டு - தேன்பொருந்திய. வார் - நீண்ட. மட்டுவார் குழலாள், அம்பிகையின் திருப்பெயர். மால்விடை - திருமாலாகிய இடபம். இட்டமா - விருப்பமாக. உகந்து - மகிழ்ந்து. கட்டு - பந்தபாச மாகிய பிணிப்புக்கள். இன்னருளே - இனிய திருவருளையே; நீத்த வர்க்கே அருள்செயும் எனலுமாம். சிட்டர் - சிஷ்டாசாரம் உடையவர்.

2. பொ-ரை: திருமால், அயன் ஆகியோர் தலைகளை வெட்டி வட்டுப்போல் ஆடியவரும், அவ்விருவரும் தொழுது வணங்கும்

Koviloor Digital Library

1912. அரிச்சி ராப்பக லைவரா லாட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே. 3

அரும்பொருளும், பெரியவரும் ஆகிய அப்பெருமானுக்குரிய சிராப்பள்ளியைச் சிந்தையுள் பேணும் அன்பர், திருமாலும் பிரமனும் தொழச் சிவலோகத்திருப்பார்கள்.

கு-ரை: அரி அயன் தலைவெட்டி - திருமால் பிரமன் இவர்களின் தலைகளை வெட்டி. (அவற்றை) வட்டாடினார் - வட்டமாகச் சுழற்றிச் செண்டாடினார். வட்டம் - வட்டு என நின்றது. அம்மானைக் காய்களாகக்கொண்டு அம்மானை ஆடினார். சர்வசங்கார காலத்துத் திருமால் பிரமர் முதலானாரையும் அழிப்பர் என்பது பொருள். அல்லது திருமாலை, நரசிங்க அவதாரமெடுத்த காலையில் அழித்ததையும், பிரமன் தலையைக் கொய்ததையும் குறித்ததாகவும் கொள்ளலாம். அரிய அயன் என்று கொண்டு அரியவனாகிய பிரமன் என்று மட்டும் கொண்டு பிரமன் தலைகள் ஐந்தனுள் ஒன்றைக் கொய்த இறைவனது திருவிளையாடலைக் குறித்தது எனலுமாம். அரியயன் தொழு தேத்தும் - திருமாலும் பிரமனும் தொழுது வணங்கும். அரும்பொருள் - தேடுதற்கரிய பொருளாயிருப்பவன். பேணுவார் - விரும்பி வழி படுவார். அங்கு - தெய்வ உலகின்கண். இருப்பார்கள் - தலைமை தோன்ற அமர்ந்திருப்பார்கள்.

3. பொ-ரை: நெஞ்சே! ஐம்புலக்கள்வரால் இராப்பகலாக அரிக்கப்பெற்று ஆட்டப்பெற்று வருந்தியிராமல் இருக்க ஓர் உபாயம் சொல்லக் கேட்பாயாக! திருச்சிராப்பள்ளி என்றலும் தீவினை பொருந்தி இருக்காமல் உன்னைவிட்டு நடக்கும்; நடக்கும்!

கு-ரை: அரிச்சிராப்பகல். அரித்து இராப்பகல் எனப் பிரிக்க. இரவும் பகலும் வயிற்றுக்காக இங்குமங்கும் சென்று உணவு தேடி. ஐவரால் - ஐம்பொறிகளால். ஆட்டுண்டு - ஆட்டுவிக்கப்பட்டு. சுரிச்சிராது - வருந்தியிராமல்; சுரித்து இராது. இவ்வுலகவாழ்விலேயே சுழன்று நில்லாமல் இருப்பதற்கு. நரிச்சு - தங்கியிராமல். நடக்கும் நடக்கும் - செல்லும் செல்லும் என்க. உறுதியை வெளிப்படுத்த இருகாற் கூறினார்.

Koviloor Digital Library

✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱4, 5, 6, 7, 8, 9

1913. தாயு மாயெனக் கேதலை கண்ணுமாய்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னாரென நம்வினை நாசமே. 10

திருச்சிற்றம்பலம்

4, 5, 6, 7, 8, 9 ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱

10. பொ-ரை: தாயுமாகி எனக்குத் தலைகண்ணுமாகிப் பேயனேனாகிய என்னையும் ஆட்கொண்டருளிய பெருந்தகையும் தேயங்கட்கெல்லாம் நாதனும் ஆகிய பெருமானைச் சிராப்பள்ளி மேவிய நாயனார் என்று கூறி வாழ்த்த நம்வினை நாசம் அடையும்.

கு-ரை: தாயுமாய் - எனக்குத் தாயாகியும்; தலத்து இறைவர் திருப்பெயர். தலைகண்ணுமாய் - மேலான பற்றுக்கோடாயும். பேயனேனையும் - பேயினது தன்மை பொருந்திய என்னையும்; உம் இழிபு குறித்தது. தேயநாதன் - பலதேசங்களுக்கும் தலைவன். நாதனார் - அடியார் தலைவர். நாசம் - கெடும்.

திருநாவுக்கரசர் புராணம்

சிலந்திக் கருளுங் கழல்வணங்கிச்
செஞ்சொன் மாலை பல பார்டி
இலங்கு சடையார் எறும்பியூர்
மலையும் இறைஞ்சிப் பாடியபின்
மலர்ந்த சோதித் திருச்சிராப்பள்ளி
மலையுங் கற்குடியும் நலங்கொள்
செல்வத் திருப் பராய்த்
துறையுந் தொழுவான் நண்ணினார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

86. திருவாட்போக்கி

பதிக வரலாறு:

ஞானவரசு திருப்பழையாறை வடதளி வணங்கித் திருவானைக்காவிற்குச் செல்லும்பொழுது பொன்னியின் இருகரையிலும் உள்ள சிவதலங்களை வணங்கித் திருவாட் போக்கியில் பாடிப்பரவியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 301.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 199 பதிக எண்: 86

திருச்சிற்றம்பலம்

1914. கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நீழ லமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே. 1

1915. விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்

1. பொ-ரை: காலபாசத்தைப் பிடித்தெழும் யமதூதுவர்கள் இவர் பாலகர், இவர் விருத்தர், இவர் பழையவர் என்று கூறிவிட்டுச் செல்லார்; கல்லால் நிழற்கீழ் அமர்ந்த வாட்போக்கியாரது சீலம் நிறைந்தவரே செம்மையுள் நின்று சிவகதிபெறுவர்.

கு-ரை: காலபாசம் - உயிர்களைக்கொண்டு போவதற்கு எமதூதர் வீசும் கயிறு. தூதுவர் - எமதூதுவர்கள். பாலகர் - இவர்கள் சிறு பிள்ளைகள். விருத்தர் - இவர்கள் முதியவர்கள். பழையார் - நல்ல செயல்களில் அறத்தில் பழகினவர்கள். எனார் - என்று கருத மாட்டார்கள். வாட்போக்கியார் - வாட்போக்கி என்னும் தலத்திலே எழுந்தருளிய இறைவனுடைய. சீலம் - தூய்மையை. ஆர்ந்தவர் - மனத்தால் எண்ணியவர். செம்மையுள் நிற்பர் - எமதூதர்க்கும் அஞ்சாது செம்மையான சிவநெறியிலே எஞ்ஞான்றும் வாழ்வர்.

2. பொ-ரை: பாவிகளே! எமன் விடுத்த தூதுவர்கள் வந்து வினைக்குழியிலே படுவித்தபோது கதறிப் புலம்பிப் பயன் இல்லை;

Koviloor Digital Library

அடுத்த கின்னரங் கேட்கும்வாட் போக்கியை
எடுத்தும் ஏத்தியும் இன்புறு மின்களே. 2

1916. வந்திவ் வாறு வளைத்தெழு தூதுவர்
உந்தி யோடி நரகத் திடாமுனம்
அந்தி யின்னொளி தாங்கும்வாட் போக்கியார்
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரே. 3

1917. கூற்றம் வந்து குமைத்திடும் போதினால்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே
ஆற்ற வும்மருள் செய்யும்வாட் போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீங்கவே. 4

அடுத்த கின்னர இசை கேட்கும் வாட்போக்கியை எடுத்தேத்தி இன்புறு வீர்களாக.

கு-ரை: விடுத்த - எமனால் அனுப்பப்பட்ட. வினைக்குழிப் படுத்தபோது - நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப நரகக்குழியின் கண் போதரும் போதின்கண். தேற்றம் - தெளிவு. தெளிவுறலாகுமே - நாம் இந்நாள்வரை அறிந்தன பொய்; உண்மை இறைவன் திருவடிகளே என்ற தெளிவு ஏற்படும்.

3. பொ-ரை: வந்து இவ்வாறு வளைத்தெழுகின்ற எமதூதுவர்கள் மனம் உந்துதலால் ஓடி நரகத்து இடுவதன் முன்னம் அந்தியின் செவ்வொளி தாங்கிய மேனியராகிய வாட்போக்கியிறைவர் தம்மைச் சிந்தித்து எழுவார்களின் வினை தீர்ப்பர்.

கு-ரை: இவ்வாறு - இவ்விடம். உந்தி - நும்மைச் செலுத்தி. அந்தியின்னொளி - செவ்வொளி.

4. பொ-ரை: எமன் வந்து அழித்திடும்போதில் முடிவு வந்து தெளிவுறல் ஆகாதன்றோ? மிகவும் அருள்செய்யும் வாட்போக்கி இறைவர்பால் விளக்கை இருள் நீங்க ஏற்றுவீராக.

கு-ரை: தேற்றம் - உறுதி. விளக்கு - அறிவு. இருள் - அறியாமை. ஏ, அசை. ஆற்றவும் ஏற்றுமின் - இயன்ற அளவு இறை ஒளியை

Koviloor Digital Library

1918. மாறு கொண்டு வளைத்தெழு தூதுவர்
வேறு வேறு படுப்பதன் முன்னமே
ஆறு செஞ்சடை வைத்தவாட் போக்கியார்க்
கூறி யூறி யுருகுமென் னுள்ளமே. 5

1919. கான மோடிக் கடிதெழு தூதுவர்
தான மோடு தலைபிடி யாமுனம்
ஆனஞ் சாடி யுகந்தவாட் போக்கியார்
ஊன மில்லவர்க் குண்மையில் நிற்பரே. 6

உள்ளத்தில் ஏற்றுங்கள். இருள் நீங்க - அறியாமையாகிய இருட்டுக்கெட. விளக்கு - சிவம்.

5. பொ-ரை: மாறுபாடுகொண்டு வளைத்தெழும் எமதூதுவர் உடல் வேறு உயிர் வேறு படுப்பதன்முன்பே, கங்கையைச் சிவந்த சடையில் வைத்த வாட்போக்கி இறைவர்க்கு என் உள்ளம் ஊறி ஊறி உருகும்.

கு-ரை: மாறுகொண்டு - பிரம்பைக் கையில் எடுத்துக் கொண்டு வந்து. வளைத்துஎழு - எங்கு இருந்தாலும் உயிர்களை வளைத்துப் பிடித்துப் புறப்படுகின்ற. வேறுவேறு படுப்பதன் முன்னம் - உயிரையும் உடலையும் வேறுவேறாய்ப் பிரிப்பதன் முன்பாக. ஊறி ஊறி - அன்பு சுரந்து சுரந்து.

6. பொ-ரை: இடுகாட்டிற்கு ஓடி, விரைந்து எழுந்த எம தூதுவர் இடத்தோடு தலையைப்பிடிப்பதற்கு முன்பே, பஞ்சகவ்வியம் ஆடுதலை உகந்த வாட்போக்கி இறைவர், குற்றமற்றவர்க்கு உண்மையில் முன்னின்றருள்வர்.

கு-ரை: கானம் ஓடி - இடுகாட்டுக்குச் சென்று. கடிது எழு - விரைந்து எழும். தானமோடு தலைபிடியாமுனம் - நாம் வாழும் இடத்தின்கண் வந்து நம்முடைய தலைகளைப்பற்றி உயிர்கொண்டு போவதற்கு முன்பே. ஆனஞ்சாடி - பஞ்சகவ்விய அபிடேகம் கொண்டவன். உகந்த - மகிழ்ந்து எழுந்தருளிய. ஊனம் - இருவினைக் குற்றம். உண்மையில் நிற்பர் - உண்மையாகத் தோன்றி அருள்செய்வர்.

Koviloor Digital Library

1920. பார்த்துப் பாசம் பிடித்தெழு தூதுவர்
கூர்த்த வேலாற் குமைப்பதன் முன்னமே
ஆர்த்த கங்கை யடக்கும்வாட் போக்கியார்
கீர்த்தி மைகள் கிளர்ந்துரை மின்களே. 7

1921. நாடி வந்து நமன்தமர் நல்லிருள்
கூடி வந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாட லுகந்தவாட் போக்கியை
வாடி யேத்தநம் வாட்டந் தவிருமே. 8

7. பொ-ரை: பார்த்துப் பாசம் பிடித்தெழுந்த எமதூதுவர் கூரிய வேலாற்குத்தி வருத்துவதன் முன்பே, ஆரவாரித்த கங்கையைச் சடையில் அடக்கும் வாட்போக்கி இறைவர் புகழ்த்தன்மைகளை உள்ளம் கிளர்ந்து உரைப்பீராக.

கு-ரை: பார்த்து - வாழ்நாள்களைக் கணக்கிட்டுப்பார்த்து. பாசம் - கயிறு. கூர்த்தவேலால் - கூரிய சூலத்தால். குமைப்பதன் முன் - அழிப்பதற்கு முன்பே.

ஆர்த்த - ஆரவாரித்துவந்த. அடக்கும் - சடையின்கண் கொண்டு அதன் வேகத்தைக் குறைத்த. கீர்த்திமைகள் - புகழ்கள். கிளர்ந்து - விரித்து.

8. பொ-ரை: எமனைச் சார்ந்தோராகிய தூதுவர் நாடிவந்து, நள்ளிருளில் தாம் பலராய்க் கூடிவந்து வருத்துவதன் முன்பே, ஆடல் பாடல் உகந்த வாட்போக்கி இறைவரை வாடி வழிபட நம்வாட்டம் தீரும்.

கு-ரை: நாடி - தேடி. நமன்தமர் - எமதூதர். நல்லிருள் - நல்ல நடு இரவில். கூடிவந்து - சேர்ந்துவந்து. குமைப்பதன்முன் - நம் உயிரை வருத்திக்கொண்டு போகுமுன்னே.

ஆடல் பாடல் உகந்த - ஆடுதல் பாடுதல் ஆகிய கலைகளில் விருப்பமுடைய. வாடி - வருந்திச் சென்றடைந்து. ஏத்த - தோத்திரிக்க. வாட்டம் - துன்பம். தவிரும் - நீங்கும்.

Koviloor Digital Library

1922. கட்ட றுத்துக் கடிதெழு தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்படா முன்னமே
அட்ட மாமலர் சூடும்வாட் போக்கியார்க்
கிட்ட மாகி இணையடி யேத்துமே. 9

1923. இரக்க முன்னறி யாதெழு தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன் முன்னமே
அரக்க னுக்கருள் செய்தவாட் போக்கியார்
கரப்ப துங்கரப் பாரவர் தங்கட்கே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: கட்டுக்களை அறுத்து விரைந்து எழுந்த எம தூதுவர்கள் புறப்படுவதற்கு முன்பே, எட்டுப் பூக்களைச் சூடும் வாட் போக்கி இறைவர்க்கு விருப்பம் உடையவராகித் திருவடி ஏத்துவீராக.

கு-ரை: கட்டுஅறுத்து - நாம் இவ்வுலக வாழ்வில் ஈடுபட்டுள்ள பிணிப்பை நீக்கி. கடிதுஎழு - விரைவாய்ப் புறப்பட்டு வரும். பொட்ட நூக்கிப் புறப்படாமுன்னம் - உயிரைக் கவரும் நோக்கோடு விரைந்து வருமுன். அட்ட மாமலர் - எட்டுமலர்கள். இட்டமாகி - விருப்பத்தை உடையவராகி. இணையடி - இரண்டு திருவடிகளை. ஏத்தும் - வணங்குங்கள்.

10.பொ-ரை: இரக்கமென்பதை முன்னும் அறியாது எழுந்த எமதூதுவர்கள் பரவிவந்து அழித்துப் பற்றிக்கொள்வதற்கு முன்பே, இராவணனுக்கு அருள்செய்த வாட்போக்கி இறைவர் அவர்கட்கு அகப்படாமல் தம்மடியாரை ஒளிக்கவும் ஒளிப்பர்.

கு-ரை: இரக்கம் முன்னறியாது எழு - இரக்கம் என்பதையே நம்முன் அறியாது வருகின்ற. பரக்கழித்து - இகழ்ந்து, பழித்து. பற்றுதல் முன்னமே - நம்மைப் பிடித்துக்கொண்டு போகுமுன்பாகவே. அரக்கன் - இராவணன். கரப்பாரவர் தங்கட்குக் கரப்பதும் - கரப்பாரவர் தங்கட்கே கரப்பார்.

Koviloor Digital Library

87. திருமணஞ்சேரி

பதிக வரலாறு:

திருமயிலாடுதுறை திருத்துருத்தி இவற்றை வணங்கிக் கொண்டு ஆவடுதண்துறைக்குச் செல்லும்பொழுது திருமணஞ் சேரி சென்று வணங்கிப் பாடிப் பரவியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 190.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 200 பதிக எண்: 87

திருச்சிற்றம்பலம்

1924. **பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்**
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ் சேரியெம்
வட்ட வார்சடை யார்வண்ணம் வாழ்த்துமே. 1

1925. **துன்னு வார்குழ லாளுமை யாளொடும்**
பின்னு வார்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்மணஞ் சேரி மருந்தினை
உன்னு வார்வினை யாயின வோயுமே. 2

1. பொ-ரை: பட்டமணிந்த நெற்றியினரும், பாயும் புலியின் தோலை உடுத்தவரும், நாள்தொறும் நட்டமாடி நின்று பாடுவோரும், உயர்ந்தவர் வாழ்கின்ற திருவுடைய மணஞ்சேரியில் வட்டமாகிய வார்சடை உடைய எமது பெருமானுமாகிய இறைவர் வண்ணத்தை வாழ்த்துவீராக.

கு-ரை: பட்டநெற்றியர் - பட்டமணிந்த நெற்றியினை உடையவர். பாய்புலித்தோலினர் - பாய்கின்ற புலியினது தோலை அணிந்தவர். நாடொறும் நட்டம் நின்று நவில்பவர் - நாள்தோறும் நின்று நடனம் இயற்றுபவர். வட்டவார்சடை - வட்டமாகக் கட்டிய நீண்ட சடையினை உடையவர். வண்மை - தன்மை.

2. பொ-ரை: நெருங்கிய நீண்ட கூந்தலை உடைய உமா தேவியோடு கூடியவரும், பின்னிய நீண்ட சடைமேற் பிறையை

Koviloor Digital Library

1926. புற்றி லாடர வாட்டும் புனிதனார்
தெற்றி னார்புரந் தீயெழச் செற்றவர்
சுற்றி னார்மதில் சூழ்மணஞ் சேரியார்
பற்றி னாரவர் பற்றவர் காண்மினே. 3

1927. மத்த மும்மதி யும்வளர் செஞ்சடை
முத்தர் முக்கணர் மூசர வம்மணி
சித்தர் தீவணர் சீர்மணஞ் சேரியெம்
வித்தர் தாம்விருப் பாரை விருப்பரே. 4

வைத்தவரும் ஆகிய நிலைபெற்ற நீண்ட புகழை உடைய திருமணஞ் சேரியில் மருந்தாம் பெருமானை உள்ளத்தே உன்னுவார்களின் வினைகள் ஓயும்.

கு-ரை: துன்னு - நெருங்கிய. வார் - நீண்ட. குழலாள் - கூந் தலை உடையவளாகிய. பின்னு - ஒன்றோடொன்று பின்னிய. மன் னுவார் - எழுந்தருளியவராகிய. மணஞ்சேரி மருந்தினை - திருமணஞ் சேரியில் எழுந்தருளிய மருந்து போல்வானை. உன்னுவார் - நினைப் பவர்கள். வினையாயின - பழவினைகளானவை. ஓயும் - ஒழியும்.

3. பொ-ரை: புற்றிற் பொருந்திய அரவினை ஆட்டும் புனிதரும், எல்லை மீறிய முப்புராதிகளின் கோட்டைகளைத் தீயெழச் சினந்தவரும், சுற்றிலும் நெருங்கிய மதில் சூழ்ந்த மணஞ்சேரி உறை பவருமாகிய இறைவரைப் பற்றினார்க்கு அவர் பற்றாவர்; காண்பீராக.

கு-ரை: ஆடரவு - ஆடுகின்ற பாம்பு. ஆட்டும் - ஆடச்செய்யும். புனிதனார் - தூயவர். தெற்றினார் - உலகங்களையெல்லாம் அழித்து வந்தவராகிய (திரிபுராரிகளின்). புரம் - கோட்டைகளை. தீயெழ - நெருப்புப்பற்ற. செற்றவர் - அழித்தவர். சுற்றினார் மதில் - சுற்றிலும் பொருந்திய மதில்கள். பற்றினாரவர்பற்று அவர் - நிலையாகக் கொண்டவர்களுடைய பற்றுக்கோடு அவரே.

4. பொ-ரை: ஊமத்தமலரும், பிறையும் வளருஞ் சிவந்த சடையை உடைய முத்தி நாயகரும், முக்குணங்களை உடையவரும், ஒலிக்கும் அரவம் அணிந்த சித்தரும், தீயின்வண்ணம் உடையவரும், பெருமைமிக்க மணஞ்சேரியில் வித்தாயிருப்பாருமாகிய இறைவர் தம்மை விரும்பியவரைத் தாம் விரும்புபவர் ஆவர்.

Koviloor Digital Library

1928. துள்ளு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்கரந் தார்சடை மேலவர்
அள்ள லார்வயல் சூழ்மணஞ் சேரியெம்
வள்ள லார்கழல் வாழ்த்தல்வாழ் வாவதே. 5

1929. நீர்ப ரந்த நிமிர்புன் சடையின்மேல்
ஊர்ப ரந்த உரகம் அணிபவர்
சீர்ப ரந்த திருமணஞ் சேரியார்
ஏர்ப ரந்தங் கிலங்குசூ லத்தரே. 6

கு-ரை: மத்தம் - ஊமத்தமலர். செஞ்சடைமுத்தர் - சிவந்த சடையினையுடைய முத்திக்குரியவர். முக்கணர் - மூன்று கண்களை உடையவர். மூசு அரவம் - உடலில் மொய்க்கும் பாம்பை (அணிந்த). தீவணர் - நெருப்புப்போன்ற சிவந்த நிறத்தை உடையவர்.

வித்தர் - வித்தகர்; அறிவே வடிவானவர். விருப்பாரை விருப்பர் - தன்னை விரும்புவாரை விரும்புபவர்.

5. பொ-ரை: துள்ளும் மான்குட்டியையும், தூய மழு வாளினையும் உடையவரும், சடைமேற் கங்கையை மறைத்தவரும் ஆகிய சேறு நிறைந்த வயல் சூழ்ந்த மணஞ்சேரியில் உறையும் வள்ளலார் கழல்களை வாழ்த்தலே வாழ்வாவது.

கு-ரை: துள்ளும் - துள்ளிச்செல்லும். மான்மறி - மான்குட்டி. தூமழுவாள் - தூயமழுவாகிய வாள். வெள்ளநீர் - வெள்ளமாக வந்த கங்கை நீரை. கரந்தார் - மறைத்துவைத்தார். சடைமேல் அவர் எனப் பிரிக்க. அள்ளல்ஆர் - சேறு பொருந்திய. வாழ்த்தலே வாழ்வு ஆவது என்க.

6. பொ-ரை: கங்கைநீர் பரவி நிமிர்ந்து விளங்கும் சடையின் மேல் ஊர்ந்து பரவுகின்ற பாம்பினை அணிந்தவராகிய பெருமை பரவிய திருமணஞ்சேரி இறைவர் எழில் பெருகி விளங்கும் சூலப் படையினை உடையவர்.

கு-ரை: நீர் பரந்த - கங்கைநீர் பரவிய. நிமிர் புன்சடை - நிமிர்ந்த மெல்லிய சடை. ''நீர் பரந்த நிமிர்புன்சடை மேலோர் நிலாவெண்மதி சூடி'' (தி.1 ப.1 பா.3.) ஊர் பரந்த - ஊரின்கண் பரவி வந்த. உரகம் -

Koviloor Digital Library

1930. சுண்ணத் தர்சுடு நீறுகந் தாடலார்
விண்ணத் தம்மதி சூடிய வேதியர்
மண்ணத் தம்முழ வார்மணஞ் சேரியார்
வண்ணத் தம்முலை யாளுமை வண்ணரே. 7

1931. துன்ன வாடையர் தூமழு வாளினர்
பின்னு செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்பொழில் சூழ்மணஞ் சேரியெம்
மன்ன னார்கழ லேதொழ வாய்க்குமே. 8

பாம்பு. ஏர்பரந்த அங்கு - அழகு பெருகிய அவ்விடத்து. இலங்கு - விளங்கு. சூலத்தர் - சூலத்தை உடையவராய் எழுந்தருளியுள்ளார்.

7. பொ-ரை: சுண்ணம் பூசியவரும், சுட்ட வெண்ணீற்றினை உகந்து ஆடுபவரும், விண்ணின் மதியைச் சூடிய வேதியரும் ஆகிய மார்ச்சனை பொருந்திய முழவு ஆர்க்கும் மணஞ்சேரி உறையும் இறைவர், நிறம் உடைய முலையாளாகிய உமையின் வண்ணம் உடையவர் ஆவர்.

கு-ரை: சுண்ணத்தர் - திருநீற்றுப்பொடி அணிந்தவர். சுடுநீறு - சாம்பல். உகந்து - மனமகிழ்ந்து. ஆடலார் - ஆடுபவர். விண்ணத்து - ஆகாயத்தே உள்ள. அம்மதி - அழகிய சந்திரன். மண்ணத்தம்முழவு - மார்ச்சனையிடப்பட்ட ஒலி பொருந்திய முழவு. வண்ணத்து அம்முலை - நல்ல நிறத்தோடு கூடிய அழகிய தனங்கள். உமை வண்ணர் - உமையை ஒரு கூற்றிலே பொருந்திய தன்மையர்.

8. பொ-ரை: பின்னிய நூலாடையினரும், தூயமழு வாளினரும், பின்னிய சிவந்த சடையின்மேல் பிறை வைத்தவரும் ஆகிய, நிலை பெற்ற நீண்ட பொழில்கள் சூழும் மணஞ்சேரி உறையும் மன்னனார் கழலே தொழ வாய்ப்பாவது.

கு-ரை: துன்ன ஆடையர் - ஆடை உடுத்தியவர். தூமழு வாளினர் - தூய மழுவாகிய வாளை உடையவர். பின்னு - பின்னிய. மன்னு - நிலைபெற்ற. வார் - நீண்ட. மன்னனார் - தலைவனார். கழலே - திருவடிகளையே. தொழ - வணங்க. வாய்க்கும் - நமக்கு வேண்டுவன எல்லாம் உண்டாகும்.

Koviloor Digital Library

1932. சித்தர் தேவர்கள் மாலொடு நான்முகன்
புத்தர் சேரமண் கையர் புகழவே
மத்தர் தாமறி யார்மணஞ் சேரியெம்
அத்த னாரடி யார்க்கல்ல லில்லையே. 9

1933. கடுத்த மேனி யரக்கன் கயிலையை
எடுத்த வன்னெடு நீண்முடி பத்திறப்
படுத்த லும்மணஞ் சேரி யருளெனக்
கொடுத்த னன்கொற்ற வாளொடு நாமமே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: சித்தர்களும், தேவர்களும், திருமாலும், நான்முகனும், புத்தரும், உடையற்றவராய சமண ஒழுக்கத்தினரும் புகழ, உலக மையலிற்பட்டவர் அறியாத மணஞ்சேரி மேவிய எம் தலைவரது அடியார்க்கு அல்லல் இல்லை.

கு-ரை: சேர் - புத்தமதத்தினரோடு சேர்ந்த. தேர் எனவும் பாடம். அமண்கையர் - அமண ஒழுக்கத்தினை உடையவர். மத்தர்தாம் அறியார் - சித்தர், தேவர், மால், நான்முகன் முதலானோர் புகழவும் புத்தர் அமண்கையர் முதலான உன்மத்தர் அறியார். மத்தர் தாம் - ஊமத்த மலர் அணிந்தவராய இறைவர் தம்மை. அல்லல் - துன்பம்.

10. பொ-ரை: ஆற்றல் மிகுந்த இராவணன் திருக்கயிலையை எடுத்தபோது அவன் நீண்ட முடிகள் பத்தும் இற்றுவிழச்செய்தலும், ''மணஞ்சேரி இறைவா! அருள்வாயாக'' என்று அவன்கூவ அவனுக்கு வெற்றிதரும் வாளையும், நாமத்தையும் கொடுத்தனன் பெருமான்.

கு-ரை: கடுத்த - வெறுக்கத்தக்க. மேனி - உடல். அரக்கன் - இராவணன். நெடுநீண்முடி - மிகப்பெரிய நீண்ட திருமுடி. இற - நொறுங்க. படுத்தலும் - செய்தலும். மணஞ்சேரி அருள் என - மணஞ்சேரி இறைவனே அருள்செய்வாய் என்று வேண்ட. கொற்றவாளொடு நாமம் - வெற்றிபொருந்திய சந்திரகாசம் என்ற வாளையும் இராவணன் என்ற திருப்பெயரையும்.

Koviloor Digital Library

88. திருமருகல்

பதிக வரலாறு:

தென்புகலூர் மன்னிய தேனைச் செந்தமிழ்பாடித் திருப் பணிகள் செய்து அங்கு உறைந்து திருச்செங்காட்டங்குடி, முதலிய தலங்களைத் தொழுது திருமருகல் சென்று வணங்கிப் பாடியருளியது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 240.)

திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 201 பதிக எண்: 88

திருச்சிற்றம்பலம்

1934. பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே. 1

1935. பாடங் கொள்பனு வல்திறங் கற்றுப்போய்
நாடங் குள்ளன தட்டிய நாணிலீர்
மாடஞ் சூழ்மரு கற்பெரு மான்திரு
வேடங் கைதொழ வீடெளி தாகுமே. 2

1. பொ-ரை: மருகல் இறைவன் திருவடி வாழ்த்தி வணங்கினால் தவம் பெருகலாம்; அறியாமை தீரலாம்; மாறுபட்டதாகிய சிந்தை திருத் தலாம்; கடவுண்மயமாகிய ஒப்பற்ற பேரானந்தத்தைப் பருகலாம்.

கு-ரை: தவம் பெருகலாம் - தவம் பெருகுதல் உண்டாகும். வணங்கவே தவம் பெருகல் ஆகும். சிந்தை திருத்தல் ஆகும், பருகல் ஆகும் என்க. பேதைமை - அறியாமை. தீரலாம் - நீங்குதல் உண்டாகும். திருகல் - மாறுபட்ட எண்ணம். சிந்தை - மனம். திருத் தலாம் - அம்மாறுபாட்டுத் தன்மையை நீக்கித் தூய்மை செய்யலாம். பரமாயதோர் ஆனந்தம் பருகலாம் - மேலானதொரு இன்பத்தை உண்ணலாம். மருகலில் எழுந்தருளிய இறைவன் திருவடிகளை வாழ்த்தி வணங்க இவை உண்டாகும் என்க.

2. பொ-ரை: பாடங்கொண்ட நூல் திறங்களையெல்லாம் கற்றுப்போய் நாட்டில் உள்ளன எல்லாம் பொருந்திய நாணமற்றீரே!

Koviloor Digital Library

1936. சினத்தி னால்வருஞ் செய்தொழி லாமவை
அனைத்து நீங்கிநின் றாதர வாய்மிக
மனத்தி னால்மரு கற்பெரு மான்திறம்
நினைப்பி னார்க்கில்லை நீள்நில வாழ்க்கையே. 3

1937. ஓது பைங்கிளிக் கொண்பா லமுதூட்டிப்
பாது காத்துப் பலபல கற்பித்து
மாது தான்மரு கற்பெரு மானுக்குத்
தூது சொல்ல விடத்தான் தொடங்குமே. 4

மாடங்கள் சூழ்ந்த மருகற் பெருமானின் திருவேடத்தைக் கைகளால் தொழுதால் வீட்டுலகமும் உமக்கு எளிதாகும்.

கு-ரை: பாடங்கொள்பனுவல் திறம் - பல கலைப் பிரிவுப் பாடங்களைக்கொண்ட வேதம் முதலிய நூல்களின் தன்மையாய அபர ஞானம். கற்றுப்போய் - கற்றுச்சென்று. நாடங்குள்ளன - பல நாடுகளிலும் சென்று. தட்டிய - பொருந்திய. நாணிலீர் - பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் பிரானடி பேணாதொழிந்தமையால் வெட்கமில்லாதோரே. மாடஞ் சூழ் - மாடவீடுகள் சூழ்ந்த. மருகற்பெருமான் - திருமருகலில் எழுந்தருளிய பெருமானது. திருவேடம் - அழகிய தோற்றத்தை.

3. பொ-ரை: கோபத்தினால் வருகின்ற செய்யப்படுவதான தொழில்களாகிய பிற தீச்செயல்கள் அனைத்தையும் நீங்கி நின்று ஆதரவாகி உள்ளத்தினால் மருகல் பெருமானாகிய இறைவன் திறத்தை நினைப்பவர்க்கு இவ்வுலக வாழ்க்கை இல்லை.

கு-ரை: சினத்தினால் - கோபம் முதலியவைகளினால். வரும் - உண்டாகும். செய்தொழிலாமவை அனைத்தும் - தீக்குணங்களால் தூண்டப்பட்டுச் செய்யப்படும் செயல்கள் அனைத்தையும். மிக ஆதரவாய் - மிக்க அன்பாய். திறம் - தன்மை. நினைப்பார்க்கு - நினைப்பவர்களுக்கு. நீள் நில வாழ்க்கை இல்லை - வீடு பேற்றின்கண் வாழ்தல் உண்டாம்.

4. பொ-ரை: இப்பெண் சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளைக்கு ஒள்ளிய பால் அமுது ஊட்டிப் பின் அதனைப் பாது காத்துப் பலபல வார்த்தைகளை அதற்குக் கற்பித்து மருகற் பெருமா னுக்குத் தூது சொல்லிவிடத் தொடங்குகின்றாள்.

Koviloor Digital Library

1938. இன்ன வாறென்ப துண்டறி யேனின்று
துன்னு கைவளை சோரக்கண் நீர்மல்கும்
மன்னு தென்மரு கற்பெரு மான்திறம்
உன்னி யொண்கொடி யுள்ள முருகுமே. 5

1939. சங்கு சோரக் கலையுஞ் சரியவே
மங்கை தான்மரு கற்பெரு மான்வரும்
அங்க வீதி யருகணை யாநிற்கும்
நங்கை மீரிதற் கென்செய்கேன் நாளுமே. 6

கு-ரை: ஓது - சொன்னது கேட்டுப் பதிகங்களையும் வேதங்களையும் பேசுகின்ற. பைங்கிளிக்கு - பச்சைக்கிளிக்கு. ஒண்பால் அமுது ஊட்டி - சிறந்த பால் உணவை உண்பித்து. அட்டி எனவும் பாடம், பாதுகாத்து - அதைப் பறந்து போகாமலும் இறந்து போகாமலும் பேணி. மாதுதான் - மருகற்பெருமான்மேல் காதல்கொண்ட ஒரு பெண். தான் இரண்டும் அசை.

5. பொ-ரை: நிலைபெற்ற அழகிய மருகல் இறைவன் திறமே நினைந்து இப்பெண் கொடியாளாகிய தலைவி உள்ளம் உருகுகின்றாள்; நெருங்கிய கைவளைகள் சோர நின்று கண்ணீர் மல்குகின்றாள்; இதனைத் தீர்ப்பது இன்ன வ்ழி உண்டு என்பது அறியேனாயினேன் யான்.

கு-ரை: செவிலி கூற்று. இன்னவாறு என்பது - இன்ன தன்மையினால் (இப்பெண் கைவளை சோரக் கண்ணீர் சொரிதலாகிய) இது நிகழ்ந்தது என்பது. உண்டு - ஓர் காரணம் இருக்கிறது.அறியேன் - அது இன்னது என்பதை நான் அறியாதவளாயிருக்கிறேன். இன்று - இற்றைய நாள். துன்னு - நெருங்கிய. கைவளை - கையின்கண் அணிந்த வளையல்கள். சோர - கழன்றுவிழ. கண்நீர் மல்கும் - கண்களில் நீர் துளிர்ப்பாள் (இத் தலைவி). மன்னு - நிலைபெற்ற. தென் - காவிரியின் தென்கரைத் திசையில் உளதாய அல்லது அழகிய. திறம் - தன்மைகளை. உன்னி - எண்ணி. ஒண் கொடி - சிறந்தகொடி போன்றவளாகிய தலைவி. உள்ளம் - மனம்.

6. பொ-ரை: பெண்களே! தன் சங்கு வளையல்கள் நெகிழவும், உடை சரியவும் இம்மங்கைதான், மருகல் இறைவன் திருவீதியுலா

Koviloor Digital Library

1940. காட்சி பெற்றில ளாகிலுங் காதலே
மீட்சி யொன்றறி யாது மிகுவதே
மாட்சி யார்மரு கற்பெரு மானுக்குத்
தாழ்ச்சி சாலவுண் டாகுமென் தையலே. 7

1941. நீடு நெஞ்சுள் நினைந்துகண் நீர்மல்கும்
ஓடு மாலினோ டொண்கொடி மாதராள்
மாடம் நீள்மரு கற்பெரு மான்வரில்
கூடு நீயென்று கூட லிழைக்குமே. 8

வருகின்ற அங்க வீதியின் அருகு நாளும் அணைந்து நிற்பாள்; நான் இதற்கு என்னசெய்வேன்?

கு-ரை: சங்கு - சங்கினால் அறுத்துச்செய்த வளையல்கள். சோர - கழன்றுவிழ. கலை - ஆடை. சரிய - இடையினின்றும் அவிழ. மங்கை - மருகற்பெருமான் மேல் காதல் கொண்ட அம்மங்கை. வரும் - உலாவரும். அங்கவீதி - பிரதானத்திருவீதி. அருகு - சமீபத்தில். அணையாநிற்கும் - நெருங்கிவரும். நாளும் - நாடோறும். ஏ, அசை. நங்கைமீர் - தோழியர்களே.

7. பொ-ரை: என் பெண் மாட்சிகள் நிறைந்த மருகற்பெருமானுக்கு மனம் தாழும் விருப்பம் மிகவும் உண்டாயினள்; அவனைக் காணும் காட்சியைப் பெற்றிலள் ஆயினும் காதலினின்று மீளுகைக்கு ஒன்றும் அறியாதவள் ஆகி அவ்விருப்பமே மிகுந்தது.

கு-ரை: காட்சி பெற்றில்ளாயினும் - கண்களால் காணும் வாய்ப்பைப் பெறாவிட்டாலும். காதல் - ஆசை. ஏ, அசை. மீட்சி ஒன்றறியாது - மீளும் வழி ஒன்றையும் அறியாமல். மிகுவதே - பெருகுகின்றதே. மாட்சி - நற்குண நற்செயல்கள்; உடையவர் வாழும் மருகல் என்க. மாட்சியாராகிய மருகற்பெருமான் எனலுமாம். தாழ்ச்சி - விருப்பம். சால உண்டாகும் - பெரிதும் உண்டாகும். என்தையல் - என் பெண்.

8. பொ-ரை: நெஞ்சுக்குள் நீள நினைந்து கண்ணீர் மல்கி ஓடும் மயக்கத்தினோடு இவ்வொண் தொடியணிந்த பெண், மாடங்கள் நீண்டுயர்ந்த மருகல் இறைவன் வரின் நீ கூடு என்று கூடல் இழைத்து வருந்துவாள்.

Koviloor Digital Library

1942. கந்த வார்குழல் கட்டிலள் காரிகை
அந்தி மால்விடை யோடுமன் பாய்மிக
வந்தி டாய்மரு கற்பெரு மானென்று
சிந்தை செய்து திகைத்திடுங் காண்மினே. 9

1943. ஆதி மாமலை யன்றெடுத் தானிற்றுச்
சோதி யென்றலுந் தொல்லருள் செய்திடும்
ஆதி யான்மரு கற்பெரு மான்திறம்
ஓதி வாழ்பவர் உம்பர்க்கு மும்பரே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: நெஞ்சுள் நீடு நினைந்து என மாறுக. நெஞ்சுள் - மனத்தினுள். நீடு - நெடிதாக. கண் நீர் மல்கும் - கண்களிலிருந்து நீரைச்சிந்தும். ஓடும் - நீங்கத்தகும். மாலினோடு - மயக்கத்தோடு. ஒண்கொடி - ஒள்ளிய கொடி போன்ற. மாதராள் - தலைவி. மாடம் நீள் - மாடவீடுகள் நீண்டுள்ள. மருகற்பெருமான் வரில் - திருமருகலில் எழுந்தருளிய என் காதலனாகிய பெருமான் என்னைத் தேடி வருவானேயானால், நீ கூடு - நீ கூடுவாயாக. கூடலிழைக்கும் - கண்ணை மூடிக்கொண்டு தான் எண்ணிய காரியம் பலிக்குமா என்பதை அறிய வட்டமிட்டுப் பார்த்து. அக்கூடல் முனை இரண்டும் கூடின் பலிதம் என அறிவது, ''ஆழிதிருத்திச் சுழிக்கணக்கோதி'' (தி.8 திருக்கோவையார் 186).

9. பொ-ரை: மணம் வீசும் நீண்ட கூந்தலை முடியாதவளாய் இப்பெண், மால்விடையோடும் மிக்க அன்பாய் ''மருகற்பெருமானே! வந்திடாய்!'' என்று சிந்தித்து வாராமையாற் பின்னும் திகைப்பாள்; காண்பீராக.

கு-ரை: கந்தம் - மணம் பொருந்திய. வார் - நீண்ட. குழல் - கூந்தல். கட்டிலள் - முடித்தாளில்லை. காரிகை - தலைவி. அந்தி - அந்திப்பொழுதின்கண். மால் விடையோடும் - திருமாலாகிய இடபத்தோடும். அன்பாய் - காதலாய். வந்திடாய் - வருவாயாக. மருகற்பெருமானே வந்திடாய் என்று என்க. சிந்தைசெய்து - மனத்தினால் எண்ணி. திகைத்திடும் - திகைப்பெய்தி நிற்கும்.

10. பொ-ரை: ஆதியிற்றோன்றிய திருக்கயிலாயத் திருமலையினை அன்று எடுத்தவனாகிய இராவணன் தலை இற்றுச்

Koviloor Digital Library

''சோதியே'' என்று கூறுதலும், பழைய அருள் புரிந்திடும் ஆதியானாகிய மருகற்பெருமான் திறத்தையே ஓதி வாழ்பவர் தேவர்க்கும் தேவராவர்.

கு-ரை: ஆதி - முதன்மையான. மாமலை - பெருமைக்குரிய திருமலை. அன்றெடுத்தான் - தான் வாகீசராய் வலம்வந்த அக் காலத்துத் தூக்கியவன். இற்று - அங்கங்கள் நெரிந்து. சோதி - ஒளி வடிவானவனே. உம்பர்க்கும் உம்பர் - தேவர்களால் வணங்கப்படும் தேவர்.

திருநாவுக்கரசர் புராணம்

அணங்கனைய திலகவதி
யார்தம்மை யாங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும்
வந்தபடி யறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக்
கோதில்சீர்ப் புகழனார்
பணங்கொளர வகலல்குற்
பைந்தொடியை மணநேர்ந்தார்.

கன்னிதிருத் தாதையார்
மணமிசைவு கலிப்பகையார்
முன்னணைந்தா ரறிவிப்ப
வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர்
மாறேற்க மற்றவர்மேல்
அன்னவர்க்கு விடைகொடுத்தா
னவ்வினைமே லவரகன்றார்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

89. பொது

பதிக வரலாறு:

திருப்பூந்துருத்தியில் அப்பரடிகள் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்றை அமைத்து அதில் தங்கியிருந்த நாள்களில் தனித்திருத்தாண்டகம், அடைவு திருத்தாண்டகம், திருவங்கமாலை முதலியவற்றையும் பின்வரும் தனித் திருக்குறுந் தொகைகள் முதலியவற்றையும் செய்தருளினார்கள். (திருநா. புரா. 390.) இத் திருக்குறுந்தொகை ஒன்று என்ற எண்ணில் தொடங்கிப் பத்துவரை எண்ணலங்காரமாக இறைவனது திருக் குணங்களை விவரித்து 'ஒன்று கொலாம்' என்ற பதிகம் போன்று அமைந்துள்ளது.

தனித் திருக்குறுந்தொகை

தொ. எண்: 202 பதிக எண்: 89

திருச்சிற்றம்பலம்

1944. ஒன்று வெண்பிறைக் கண்ணியோர் கோவணம்
ஒன்று கீளுமை யோடும் உடுத்தது
ஒன்று வெண்தலை யேந்தியெம் உள்ளத்தே
ஒன்றி நின்றங் குறையு மொருவனே. 1

1. **பொ-ரை:** வெண்தலை ஒன்று ஏந்தி எம் உள்ளத்தே ஒன்றிநின்று அங்கு உறையும் ஒருவனாம் இறைவன் வெண் பிறை யாகிய கண்ணி ஒன்று உடையவன்; உமையோடும் உடுத்தது ஒரு கிழிந்த கோவண உடை.

கு-ரை: கண்ணி - தலைமாலை. வெண்பிறையாகிய தலை மாலை ஒன்று. இடையிலணிந்தது ஓர் கோவணம் என்க. ஒன்று - பொருந்திய. கீள் - கோவணத்தொடு சேர்த்துக் கட்டப்படும் அரை நாண்துணி. உமையொடு கூடியவனாயிருந்தும் உடுத்தது கோவணத் தொடு கூடிய கீள் ஒன்றே என்க. வெண்தலை ஒன்றை என ஐயுருபு விரிக்க. ஒன்றி - பொருந்தி. ஏந்தி உள்ளத்து உறையும் ஒருவன் ஒன்றாகிய வெண்பிறைக் கண்ணியுடன் உடுத்தது ஓர் கோவணம் ஒன்றிய கீள் என வினை முடிவு காண்க.

Koviloor Digital Library

1945. இரண்டு மாமவர்க் குள்ளன செய்தொழில்
இரண்டு மாமவர்க் குள்ளன கோலங்கள்
இரண்டு மில்லிள மானெமை யாளுகந்
திரண்டு போதுமென் சிந்தையுள் வைகுமே. 2

1946. மூன்று மூர்த்தியுள் நின்றிய லுந்தொழில்
மூன்று மாயின மூவிலைச் சூலத்தன்
மூன்று கண்ணினன் தீத்தொழின் மூன்றினன்
மூன்று போதுமென் சிந்தையுள் மூழ்குமே. 3

2. பொ-ரை: அவர்க்கு உள்ளனவாகிச் செய்யுந்தொழில்கள் இரண்டு; அவர்க்கு உள்ளனவாகிய கோலங்கள் இரண்டு; எமை ஆளாகக்கொண்டு உகந்து இரவும் பகலும் என் சிந்தையுள் தங்கியிருக்கும்.

கு-ரை: அவர்க்கு - அப்பெருமானுக்கு. உள்ளன - இயல்பாக உள்ளனவாகிய. செய்தொழில் - செய்தொழில்கள். இரண்டு - பந்தம், வீடு. உயிர்கட்குப் பந்தம் வீடு என்றவற்றைச் செய்தல். கோலங்கள் இரண்டு - சிவம், சக்தி. இல் இளமான் - கங்கையும், உமையுமாகிய மனைவியர் இருவர். இரண்டு போது - நினைப்பு மறப்பு; பெத்தம் முத்தி; பகல் இரவு.

3. பொ-ரை: மும்மூர்த்திகளுள் நின்று இயலுகின்ற தொழில் மூன்றும் உடையவன்; மூவிலை வடிவாகிய சூலத்தை உடையவன்; மூன்று கண்ணினன்; தீத்தொழில் மூன்றுடையவன்; மூன்றுபொழுதும் என் சிந்தையுள் மூழ்கியிருப்பான்.

கு-ரை: மூன்று மூர்த்தி - அரி, அயன், அரன். மூர்த்தியுள் நின்று - மூவரை அதிட்டித்து நின்று. இயலும் - செய்விக்கும். தொழில் மூன்று - படைத்தல், காத்தல், அழித்தல். மூவிலைச் சூலம் - முத்தொழிலுக்கும் தானே முதல்வனாம் அடையாளம்; ''மூவிலை ஒருதாட் சூல மேந்துதல் மூவரும் யானென மொழிந்தவாறே'' (*ஒற்றி - ஒருபா ஒருபஃது*. 5.11.12) மூன்று கண் - சூரியன், சந்திரன், அக்கினி. தீத் தொழில் - வேள்வி. ''தொலையா நிதிய மெய்தித் தந்தையைத் தீத் தொழில் மூட்டியகோன்'' (தி.11 ஆளுடைய பிள் . திருவந். 85) தீத்தொழில் மூன்று - ஆகவனீயம், காருக பத்யம், தாக்ஷிணாக்கினி என்ற மூவேள்விகள். மூன்றுபோது - முற்பகல், நண்பகல், பிற்பகல்.

Koviloor Digital Library

1947. நாலின் மேன்முகஞ் செற்றது மன்னிழல்
நாலு நன்குணர்ந் திட்டது மின்பமாம்
நாலு வேதஞ் சரித்தது நன்னெறி
நாலு போலெம் அகத்துறை நாதனே. 4

1948. அஞ்சு மஞ்சுமோ ராடி யரைமிசை
அஞ்சு போலரை யார்த்ததின் தத்துவம்
அஞ்சு மஞ்சுமோ ரோரஞ்சு மாயவன்
அஞ்சு மாமெம் அகத்துறை யாதியே. 5

''முட்டாத முச்சந்தி'' ''சந்தி மூன்றிலும் தாபரம் நிறுத்திச் சகளி செய்திறைஞ்சு''. (தேவாரம்.)

4. பொ-ரை: எம் உள்ளத்து உறையும் இறைவன் நான்கின் மேலும் ஒருமிகைமுகமாகிய பிரமனது ஐந்தாவது முகத்தைச் சினந்தவன்; நிலைபெற்ற ஆல நிழலில் நன்கு உணர்ந்திட்ட வேதங்கள் நான்கினை உடையவன்; இன்பமாகிய நான்கு வேதங்களையே குதிரைகளாகக் கொண்டவன்; நல்ல நெறி சரியை முதலிய நான்கு ஆகும்.

கு-ரை: நாலின்மேல் முகம் - பிரமனது நான்கு முகங்களுக்கும் அதிகமாய் நின்ற ஐந்தாம் முகம். செற்றது - கிள்ளியழித்தது. மன்நிழல் - கல்லாலின்கீழ் மன்னிய நிழல். நன்கு உணர்ந்திட்டது நாலும் - நன்கு உணரும்படிசெய்தது அறம், பொருள், இன்பம், வீடாகிய புருஷார்த்தங்கள் நான்குமாம். இன்பமாம் நாலுவேதம் - பேரின்பத்திற்கு வாயிலாகிய நான்கு வேதங்கள்; இருக்கு, யசுர், சாமம், அதர்வணம். சரித்தது - ஓதியருளியது. வேதம் உணர்த்திட்டது எனவும் சரித்தது நாலு நன்னெறி எனவும் கூட்டலாம். நன்னெறி நாலு - சரியை, கிரியை, யோக, ஞானங்கள். போல் அசை.

5. பொ-ரை: என் அகத்து உறை ஆதி. ஆனைந்து ஆடி. ஐந்தொழில் நடனம் ஆடி. இடையில் ஐந்தலை அரவார்த்தவன் அவன். தத்துவங்களாகிய இருபத்தைந்தின் கூறானவன்.

கு-ரை: அஞ்சும் அஞ்சும் - ஐந்து வகையான பசுக்களிலிருந்து உண்டாம் ஐந்து பொருள்களையும். அஞ்சும் ஆடி - பஞ்சகவ்வியங்கள் ஐந்தையும் அபிஷேகம் கொண்டு. ஓர் அஞ்சும் - ஒப்பற்ற ஐந்தொழில் களையும். ஆடி - கூத்தின் தத்துவங்களாய் அமைய ஆடி. ''ஐந்து கொலாம் அவர் ஆடினதாமே'' (தி.4. ப.18. பா.5). அஞ்சுபோல் அரை

Koviloor Digital Library

1949. ஆறு கால்வண்டு மூசிய கொன்றையன்
ஆறு சூடிய அண்ட முதல்வனார்
ஆறு கூர்மையர்க் கச்சம யப்பொருள்
ஆறு போலெம் அகத்துறை யாதியே. 6

1950. ஏழு மாமலை யேழ்பொழில் சூழ்கடல்
ஏழு போற்றுமி ராவணன் கைந்நரம்
பேழு கேட்டருள் செய்தவன் பொற்கழல்
ஏழுஞ் சூழடி யேன்மனத் துள்ளவே. 7

ஆர்த்த - அரையில் கட்டியது ஐந்தலையரவு என்பதாம். ''அஞ்சு கொலாம் அவர் ஆடரவின்படம்'' (தி.4. ப.18. பா.5). அஞ்சும் அஞ்சும் ஓர் ஓர் அஞ்சும் ஆயவன் - ஐம்பூதங்கள், ஐந்து தன் மாத்திரைகள், ஞானேந்திரியங்கள் ஐந்து. கன்மேந்திரியங்கள் ஐந்து ஆகிய இருபது தத்துவங்கள். அஞ்சுமாம் - ஐம்புலன்களும் ஆகும்.

6. பொ-ரை: எம் உள்ளத்துறையும் முதல்வனாகிய பெருமான், ஆறு கால்களையுடைய வண்டு ஒலிக்கும் கொன்றையை உடையவன்; கங்கையாற்றைச் சடையிற் சூடிய அண்டங்களுக் கெல்லாம் முதல்வன்; கூரிய அறிவுடைய அறுவகைச் சமயத்தார்க்கு அச்சமயப் பொருளும் நெறியும் ஆயவன்.

கு-ரை: ஆறுகால்வண்டு - ஆறுகால்களையுடைய வண்டு. மூசிய - மொய்த்த. ஆறு - கங்கை. ஆறு கூர்மையர் - கூரிய அறிவைத் தருகின்ற ஆறு சாத்திரம். சமயப்பொருள் ஆறு - ஆறு சமயத்தவர் பொருள்போல் இருப்பவன். ''அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்'' *(சிவஞானசித்தி - சுபக்கம்.1)*

7. பொ-ரை: ஏழுமலை ஏழுபுவனம் ஏழ்கடல் போற்றும் இராவணனது ஏழிசைகேட்டு அருள்செய்தவன். அவன் திருவடிகள் எழுபிறவிகளிலும் என்னுள்ளத்தின்கண்ணே உள்ளன.

கு-ரை: ஏழுமாமலை - கயிலை தவிர்ந்த ஏழுமலைகள். பொழில் - தீவு. கடல் ஏழு - பாற்கடல் முதலியன. நரம்பு ஏழு - ஏழு (சப்த) சுரங்கள். ஏழும் சூழ் - ஏழ்பிறப்பிலும்.

Koviloor Digital Library

1951. எட்டு மூர்த்தியாய் நின்றிய லுந்தொழில்
எட்டு வான்குணத் தீசனெம் மான்றனை
எட்டு மூர்த்தியு மெம்மிறை யெம்முளே
எட்டு மூர்த்தியு மெம்மு ளொடுங்குமே. 8

1952. ஒன்ப தொன்பதி யானை யொளிகளி
றொன்ப தொன்பது பல்கணஞ் சூழவே
ஒன்ப தாமவை தீத்தொழி லின்னுரை
ஒன்ப தொத்துநின் றென்னு ளொடுங்குமே. 9

8. பொ-ரை: அட்டமூர்த்தியாய்த் தொழில் செய்பவன். எண் குணன். எம் இறைவனாயுள்ள அவ்வெட்டுமூர்த்தி என்னுள்ளத்து எட்டும் மூர்த்தியாய் ஒடுங்கியிருப்பன்.

கு-ரை: எட்டுமூர்த்தி - இறைவனது அட்டமூர்த்தவடிவம். ஐம் பூதம், சூரியன், சந்திரன், ஆன்மா. எட்டு வான்குணம் - தன்வயத் தனாதல் முதலிய எட்டு உயரிய குணம். எட்டுமூர்த்தி - நிலம் முதலிய வற்றிற்குரிய தேவர்கள். அவ்வெட்டு மூர்த்தி என்றே பின்னும் கொள்க.

9. பொ-ரை: எண்பத்தொரு பதங்களில் பேசப்படுபவன். பதினெண் சிவகணங்கள் அல்லது எண்பத்தொரு யானைகள் சூழப் பெற்றவன். உடலிடத்துள்ள ஒன்பது வாயிலும் தீத்தொழிலிற் சேராத வாறு ஒன்பது ஒத்து எனக்குள் ஒடுங்குவான்.

கு-ரை: ஒன்பது களிறு - திசையானைகள் எட்டும் அயிரா வணமும் ஆகிய ஒன்பது யானை. ஒன்பது யானை - அவற்றிற்குரிய பிடிகள். ஒளிகளி எனவும் பாடம். ஒன்பது ஒன்பது பல்கணம் - பதிணென் சிவகணங்கள். ஒன்பதாமவை தீத்தொழில் - ஒன்பது வகையான வேள்விகள். ஒத்து - ஒன்பது வாசல்களுைம ஒத்து. *சி.கே.எஸ். அவர்கள் கூறும் விரிவுரை பின்வருவன:* ''உரை ஒன்பதொத்து நின்று என்னுள் ஒடுங்கும் என் பேச்சுக்கள் முதலிய எல்லாம் எவ்வளவு விரிந்து சூழினும் முடிவில் நான் என்ற அகங்கார நிலையினவாய் வந்து என்னையே சுற்றி என்னகத்தொடுங்கும் அது ஒன்பது என்னும் எண்ணினைப் போல; இஃதெவ்வாறெனில் ஒன்பதை எதனால் எத்தனை பெருக்கினும் பெருக்கிவந்த எண்ணில் உள்ள இலக்கங்களைக் கூட்டினால் ஒன்பதே வருவதுபோல.

Koviloor Digital Library

1953. பத்து நூறவன் வெங்கண்வெள் ளேற்றண்ணல்
பத்து நூறவன் பல்சடை தோள்மிசை
பத்தி யாமில மாதலின் ஞானத்தால்
பத்தி யானிடங் கொண்டது பள்ளியே. 10

திருச்சிற்றம்பலம்

$$9x2=18=1+8=9$$
$$9x3=27=2+7=9$$
$$9x4=36=3+6=9$$
$$9x5=45=4+5=9$$
$$9x6=54=5+4=9$$
$$9x7=63=6+3=9$$
$$9x8=72=7+2=9$$
$$9x9=81=8+1=9$$

மேலும் $9x144=1296=1+2+9+6=18=1+8=9$ என்றிவ்வாறு கண்டுகொள்க. ஒன்பது என்ற எண் ஒன்று இரண்டு முதலிய ஏனை எண்களைப்போலத் தனக்கென்று ஒரு தனிப்பெயரில்லாமல் பின் வரும் பத்து என்பதில் ஒன்று குறைந்தால் எதுவோ அது என்றறியப் படுமாறு பெயர்கொண்டிருத்தல் பின்வரும் பாகமாகிய உலகமும் முன்னிற்கும் பதியுமல்லாதது என்றறியப்பட்டும் தனித்து நில்லாது பதியினையோ அன்றிப் பாசத்தையோ சார்ந்து நிற்றலுமான நிலை யின் உள்ள உயிரை ஒத்திருக்கின்றதென்பதும் கடிகார யந்திரங்களி லும் ஒன்பதைக் குறிக்க (*IX* என்ற *X*ல் *I* குறைக்க என்ற பொருள் பட) *IX* என்ற குறியீடு கொள்வதும் பிறவும் இங்குக் காணத்தக்கன.''

10. பொ-ரை: அளவற்ற பெருமையன். சிவகணங்கள் பல்லா யிரவரை உடையவன். அடியவர் உள்ளங்களையே தங்குமிடமாகக் கொண்டவன்.

கு-ரை: பத்து நூறவன் - பத்து என்றும் நூறென்றும் கூறும்படிப் பல பொருளாயுள்ளவன்; பத்தியான். பத்து என்றும் நூறு என்றும் சொல்லும் சிலவும் பலவுமாய சடைகளையுடையவன் ஆயிரம் என்றலுமாம். அடியவர்க்கு உள்ள பத்து இலக்கணங்கள் (உபதேச காண்டம் பார்க்க). பள்ளி - உள்ளத்தை. பத்தியான் - பத்தி வலையிற் படுவானாய இறைவன். இடங்கொண்டது - தமக்குரிய இடமாகக் கொண்டது. ஞானத்தால் - என் அறியாமையை உணர்ந்து அருளியதால்.

Koviloor Digital Library

90. பொது

பதிக வரலாறு:

சமண சமயத்திலிருந்து மீண்டும் சைவம் சார்ந்ததை அறிந்த பல்லவ மன்னன் சமண குருமார்களின் ஏவலால் திருநாவுக்கரசரை அழைத்துவரச்செய்தான். அவர்களின் தூண்டுகோலால் நீற்றறையில் இடுமாறு பணித்தான். அடிகளைச் சமணர்கள் நீற்றறையில் அடைத்துத் தாளிட்டனர். ஆண்ட அரசு அதனகத்துள் பெருமான் திருவடிகளை எண்ணி ஈசனடியார்க்கு ஈண்டு வரும் துயருளவோ' என்றிருந்தார்கள். நீற்றறை இளவேனிற் பருவத்தில் தென்றல் வீசும் செங்கழுநீர்த் தடாகக் கரையைப்போல எம்பிரான் திருவடி நீழலாய்க் குளிர்ந்தது. அந்நிலையைக்காட்டுகிறது இத்திருப்பதிகம். (தி.12 திருநா. புரா. 98.)

தனித் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 203 பதிக எண்: 90

திருச்சிற்றம்பலம்

1954. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே. 1

1. பொ-ரை: இறைவனாகிய எந்தையின் திருவடி நீழல் குற்றமற்ற வீணையின் நாதமும், மாலையிலே தோன்றிய நிலவின் தண்மையும், வீசுகின்ற தென்றலின் சாயலும், செறிந்த இளவேனிலின் மாட்சியும், ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியும் போன்று இன்பம் பயப்பதாகும்.

கு-ரை: மாசில் - சுர இலக்கணங்களில் சிறிதும் வழுவாது இலக்கணம் முழுதும் நிரம்பச் சொல்லைமிழற்றும் இயல்புடைய. மாலைமதியம் - மாலைநேரத்தில் தோன்றும் முழுமதி. பௌர்ணிமை மதியைக் குறித்தது. வீசுதென்றல் - மெல்லிதாய் வீசுகின்றதென்றல்; வீங்கு - பெருகிய. இளவேனில் - சித்திரை, வைகாசி மாதங்கள். மூசு வண்டு - (மாலைநேரத்தே மலரும் நீர்ப்பூக்களிடத்தே மொய்க்கின்ற) வண்டுகள். அறை - ஒலிக்கின்ற. பொய்கை - அகழ்வாரின்றித் தானே

Koviloor Digital Library

1955. நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 2

1956. ஆளா காரா ளானாரை யடைந் துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே. 3

தோன்றிய நீர்நிலை. ஈசன் எந்தை, இருபெயரொட்டு. தலைவனாகிய என் தந்தை. இணையடி - இரண்டு திருவடிகள். திருவடிநீழல் ஐம்புலன்களுக்கும் விருந்துதரும் இயற்கையின்பத்தை ஒத்தது என்றார்; வீணை, செவி. மதியம், கண்கள். தென்றல், மூக்கு. வண்டு அறை பொய்கை, வாய். வேனில் மெய். இவ்வாறு முறையே ஐந்து புலன்களுக்கும் இன்பந்தருவனவாய இயற்கைச் சூழலை ஒத்து நீற்றறையில் திருவடி நீழலை எண்ணிய அப்பர்சுவாமிகளுக்குத் தண்மையைத் தந்தது ஆதலின் திருவடிநீழல் அளிக்கும் இன்பத்தோடு ஒப்பிட்டார்.

2. பெ ரை: ஞானமும், கல்வியும், நானறிந்த வித்தையும் பஞ்சாட்சரமே; நா கூறி வழிபடுவதும் அதனையே; நன்னெறி காட்டுவதும் அத்திருமந்திரமேயாகும்.

கு-ரை: ஞானமும் - பரஞானம். கல்வி - அபரஞானம். ஞானமும் கல்வியும் - கல்வியால் விளையும் அறிவும் கல்வியும். நானறிவிச்சை - நான் அறிந்தனவாய மந்திரம் அல்லது கலையுணர்வு. நன்னெறி - ஞானம், வீடுபேறடையும் வழி.

3. பொ-ரை: இறைவனுக்கு ஆளாகமாட்டார்; அவ்வாறு ஆளாகிய மெய்யடியார்களைச் சார்ந்து உய்யவும் மாட்டார். மீளா ஆளாய் மெய்ம்மையுள் நிற்கும் ஆற்றல் இல்லார்; அத்தகைய இழிந்தவர் செவிகள் துளையிட்டுப் பயன்படுத்தவியலாத செவியோ? அந்தோ! வீணே இறந்து மண்ணாகி ஒழிவர்!

கு-ரை: ஆளாகார் - தாம் அடியவராக மாட்டார். ' ஆளா னார்க்கு. எனவும் பாடம். ஆளானாரை - இறைவன் திருவடிகளுக்கு அடிமை பூண்டாரை. அடைந்துய்யார் - அடியார்க்கு அடியராய் இருந்து

Koviloor Digital Library

1957. நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. 4

1958. பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கை கேயிரை யாகிக் கழிவரே. 5

உய்நெறிகாணார். மீளா ஆள் - என்றும் மாறாத அடிமைத் திறம். மெய்மையுள் - சத்தாகிய இறைவனது தன்மையின்கண், பிறழாது நிற்கும் இயல்பிலார். நில்லாத தொழும்பர் எனக்கூட்டுக. தோளாத சுரையோ - துளையிடப்படாத உட்குழியோ. தொழும்பர் - குற்றேவல் செய்வார். வாளா - பயன் அற்று. கழிவர் - கழிந்தொழிவர். தொழும்பர் - பெத்தம் முத்திநிலைகளிலும் அடிமையாகியே இருக்கும் உயிர்.

4. பொ-ரை: நாணமற்றவர்களே! துன்பம் மிக்க வாழ்வினைக் கொண்டு என்ன செய்வீர்? நீர் இறுதியில் சுடுகாடு அடைவது உறுதி என்பதற்கு ஆன்றோர் சொற்களே சான்று. திருப்பாற்கடலினின் றெழுந்த ஆலகால விடத்தை உண்ட இறைவர் கைவிட்டால், உடல் கிடந்து ஊரார் வெறுக்கும் பொருளாகிவிடும்.

கு-ரை: நடலை - துன்பம். என்செய்திர் - உயிர்கட்குப் பயன் தரும் செயல்கள் என்செய்தீர்கள். நாணிலீர் - வெட்கம் இல்லாதவர்களே. சுடலை - இடுகாடு. சேர்வது - அடைவது, சொல் பிரமாணம் - சத்தப்பிரமாணத்தாலறிவதொன்றேயன்றி காட்சி அநுபவத்தாலும் அறிவதாம். உடலினார் - உடல். இழித்தற் பொருளில் வந்தது ஆர் விகுதி. ஊர்முனிபண்டம் - பிணம் என்று பேரிட்டு ஊர் மக்களால் வெறுக்கப்படும் பொருளாகும். கைவிட்டால் - காத்தலை நீங்கினால்.

5. பொ-ரை: பூக்களைக் கையிற்கொண்டு சிவபிரானின் பொன்னார் திருவடிகளைப் போற்றுதலில்லாதவர்களும், நாவினைக் கொண்டு இறைவன் திருநாமத்தை நவிலாதவர்களும் தத்தம் உடலுக்கே உணவுதேடிச் சுழன்று இறுதியில் காக்கைக்கே தாம்

Koviloor Digital Library

1959. குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே. 6

1960. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. 7

இரையாகி ஒழிவர்.

கு-ரை: பூக்கைக்கொண்டு என்க. பொன்னடி - பொன்னைப் போலப் பொதிதற்குரிய திருவடி. நாக்கைக்கொண்டு - நாவைக் கொண்டு என்க. நாமம் - இறைவன் திருப்பெயர். நவில்கிலார் - கூறாத வர்கள். ஆக்கைக்கே - உடலுக்கே. இரை - உணவு. அலமந்து - வருந்தி. காக்கைக்கு - காகங்களுக்கே. இரையாகி - உணவாகி. கழிவர் - அழிந்தொழிவர்.

6. பொ-ரை: விதியற்றவர்களே! குறிகளும், அடையாளமும், கோயிலும், நெறிகளும், அவ்விறைவர் நின்றதோர் நேர்மையும் அறிய ஆயிரம் வேதங்கள் கூறினும் உம் மனம் அவற்றுட் புகாதது என்னையோ?

கு-ரை: குறிகளும் - கடவுள் திருவுருவங்களும், அடை யாளம் - விடை கொடி முதலிய சின்னங்கள், விபூதி உருத்திராக்க சாதனங்கள். கோயிலும் - திருக்கோயில்களும், நெறிகளும் - சமய நெறிகளும். அல்லது சரியை கிரியை யோக ஞான நெறிகளும் என்க. அவர் நின்றதோர் நேர்மையும் - அப்பெருமான் இவற்றை நாம் உய்யும் நெறிகளாகக் காட்டி நின்றதொரு நடுநிலையையும். நேர்மை நுண்மை எனலுமாம். அறிய - எல்லாரும் அறிய. ஆயிரம் - பலவான. ஆரணம் - வேதங்களில் கூறிய உபதேசங்கள். ஓதிலும் - கூறினாலும். பொறியிலீர் - ஞானப்பொறி இல்லாதவர்களே. ஊழ் எனவுமாம். மனம் புகாதது என்கொல் - உங்கள் மனம் ஈடுபடாததற்குக் காரணம் என்ன.

7. பொ-ரை: தன்னை வாழ்த்துதற்கு வாயும், தன்னை நினைக்க அறிவற்ற நெஞ்சும், தன்னை வணங்கத் தலையும் தந்த தலைவனாகிய

Koviloor Digital Library

1961. எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே. 8

1962. நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே. 9

பெருமானை வண்டுகள் சூழ்ந்த மலர்களைத் தூவித்துதிக்காமல், வினையேன் நெடுங்காலம் வீழ்த்தியவாறு என்னே?.

கு-ரை: மடநெஞ்சு - அறியாமையின் பாற்பட்ட மனம். தாழ்த்த - வணங்க. சென்னி - தலை. சூழ்த்த மாமலர் - ஆராய்ந்து எடுத்த சிறந்த மலர். சூழ்ந்த - சூழ்த்த வலித்தல் விகாரம். துதியாதே - போற்றி வணங்காமல். வினையேன் - தீவினையேனாகிய நான். நெடுங்காலம் - பலகாலம். வீழ்த்தவா - கழித்தேன். ஆ அது வருந்தத் தக்கது.

8. பொ-ரை: எழுதிய பாவைச் சித்திரம் போன்ற அழகுடைய பெண்கள் திறத்தின் நீங்கி நான்தொழுது போற்றி நிற்க. என்னையும் ஆராய்ந்து கொண்டு உழுத சால் வழியே பின்னும் உழுவதன் பொருட்டு மிக்க இழிவுடைய நெஞ்சம் செய்கின்றது தானா என்னை?.

கு-ரை: எழுது - நன்றாகத் தீட்டப்பட்ட. பாவை - பதுமை போன்றவர்களாகிய. நல்லார் - பெண்கள். திறம் - தொடர்பின் தன்மையை. விட்டு - கைவிட்டு. தொழுது - வணங்கி. போற்றி நின்றேனையும் - தோத்திரம் சொல்லி நின்றவனாகிய என்னையும். சூழ்ந்து கொண்டு - வளைத்துக்கொண்டு நின்று. உழுத சால்வழியே உழுவான் பொருட்டு - மீண்டும் மீண்டும் பொருள் தேடும் முயற்சிகளிலே பல காலும் ஈடுபடும் பொருட்டு. இழுதை - அறியாமை. என்படுகின்றது - என்ன துன்பத்தை அடைகிறது. உழுத சால்வழி உழுதல் நல்ல பயன் தருதல் இல்லை; அதுபோல வெறுக்கப்பட்டவர்களாகிய பாவை நல்லார் திறத்தில் மீளவும் மனம் செலுத்துலால் பயனில்லை என்பதாம்.

Koviloor Digital Library

1963. விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: நெகிழ்ந்து நெகிழ்ந்து நினைபவர் நெஞ்சுளே புகுந்து நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன், பொய்ம்மையாளர் பூசையிற் பூவையும் நீரையும் கண்டு அவர் தம்மை நாணிச் சிரித்து நிற்பன்.

கு-ரை: நெக்கு நெக்கு - மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து. உருகி உருகி என்க. நெஞ்சுள் - மனத்தினுள்ளே. புக்கு நிற்கும் - புகுந்து எழுந்தருளியிருக்கின்ற. பொன்னார்சடை - அழகு பொருந்திய சடை, பொக்கம் - பொய். அவர்தம்மை - அவரை நாணி - வெட்கமடைந்து. நக்குநிற்பர் - ஏளனநகை புரிந்திருப்பர்.

10. பொ-ரை: விறகில் தீப்போலவும். பாலிற்பொருந்திய நெய்போலவும், மாமணிச் சோதியானாகிய இறைவன் மறைய நின்றுளன்; உறவு என்னுங்கோலை நட்டு உணர்வு என்ற கயிற்றினால் முறுகவாங்கிக் கடைந்தால் முன்னின்று அருள் வழங்குவான்.

கு-ரை: விறகில் தீயின் - விறகின்கண் மறைந்திருக்கும் நெருப்பைப் போல. நன்பாலில்படு - நல்ல பாலில் மறைந்திருந்து பின்னர்த் தோன்றும். மாமணிச் சோதியான் - சிறந்த மணியின் கண் ஒளி மறைந்திருந்து சாணை பிடித்த பின்னர் வெளிப்படல் போல உள்ளத்துள்ளே மறைந்து நிற்பவன். உறவு - அறிவு, உணர்வு, அன்பு, மாறிக்கூறுவாருமுளர். அறிவாகிய கயிற்றினாலே. முறுகவாங்கிக் கடைய - நன்றாக இழுத்துக்கடைய. முன்னிற்கும் - நம்முன் தோன்றி அருளுவான். விறகு. பால், மணி இவற்றுள் மறைந்து நிற்கும் தீ முதலானவற்றை முறையே முறுகக் கடைதல், வாங்கிக் கடைதல், கடைதல் என்பனவற்றால் வெளிப்படுத்தலாம். அதுபோலப் பக்குவம் இல்லாதோர் பக்குவான்மா இவர்களுக்குக் கடவுள் தோன்றியருளும் வழி கூறப்பட்டது. கயிற்றினால் வாங்கிக் கடைதல் முன் இரண்டற்கும் பொது.

Koviloor Digital Library

91. பொது

பதிக வரலாறு:

இத்திருப்பதிகமும் திருப்பூந்துருத்தியில் தங்கியிருந்த போது பாடியருளியது. இத்தனித் திருக்குறுந்தொகை மிக்க அருமைப்பாடுபெற அடிகளின் அடிமைத் திறத்தை அநுபவித்துக் கூறுகிறது.

தனித் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 204 பதிக எண்: 91

திருச்சிற்றம்பலம்

1964. ஏயி லானையெ னிச்சை யகம்படிக்
கோயி லானைக் குணப்பெருங் குன்றினை
வாயி லானை மனோன்மனி யைப்பெற்ற
தாயி லானைத் தழுவுமென் ஆவியே. 1


1965. முன்னை ஞான முதல்தனி வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை

1. **பொ-ரை:** தமக்குமேல் தலைவன் இல்லாதவன். உள்ளக் கோயிலான். குணக்குன்று. வாழ்த்துவோர் வாய் இல்லமாக உடையவன். சத்தியை ஈன்றவன். தனக்கொரு தாய் இல்லாதவன். அவனை என்னுயிர் தழுவும்.

கு-ரை: ஏயிலான் - தமக்குமேல் தலைவன் இல்லாதவன். இச்சை அகம்படிக்கோயில் - அன்பாலாகிய உள்ளக்கோயில். வாயிலான் - வாழ்த்தும் இவரது வாயை இல்லாக உடையவன். மனோன்மனியைப் பெற்றதாயிலான் - ''இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன்'' (தி.8 திருவாசகம் -207) ''அரனுக்குத் தாயும் மகளும் நற்றாரமுமாமே'' (தி.10. த.4-8. பா.24) நவந்தரு பேதங்களில் மனோன்மனி என்பது ஒரு சத்திபேதம். ''சிவம் சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்'' *(சித்தியார்-சுபக்கம்.77).*

2. **பொ-ரை:** பழைய ஞான முதல் தனி வித்தும், பின்னை ஞானம் பிறங்கு சடையனும் , என்னை இருள் நீக்கி ஞானத்தால் ஆண்டவனும்

Koviloor Digital Library



திருநாவுக்கரசர் பெருமானுக்கு திருவடி நீழலாய் நீற்றறை குளிர்ந்தது

Koviloor Digital Library

Koviloor Digital Library

என்னை ஞானத் திருளறுத் தாண்டவன்
தன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே. 2

1966. ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே. 3

1967. புழுவுக் குங்குணம் நான்கெனக் கும்மதே
புழுவுக் கிங்கெனக் குள்ளபொல் லாங்கில்லை
புழுவி னுங்கடை யேன்புனி தன்தமர்
குழுவுக் கெவ்விடத் தேன்சென்று கூடவே. 4

ஆகிய இறைவன் தன்னை ஞானமென்னும் தளையினால் பிணித்து உள்ளத்தே வைப்பேன்.

கு-ரை: முன்னை - பழமையான. ஞானமுதல் தனிவித்து - ஞானம் முளைத்தற்கிடமாயுள்ளவன். அறிவுக்கு முதற்காரணமாய வித்துப் போன்றவன். பின்னை - அதன்பின்னர். ஞானப்பிறங்கு சடையன் - அறிவு மயமான விளங்கிய சடைமுடியவன். என்னை - அடியனை. ஞானத்திருள் - அறிவை மறைத்துநிற்கும் அறியாமை யாகிய இருட்டு. அறுத்து - நீக்கி. ஆண்டவன்தன்னை - ஆட்கொண்ட வனை. ஞானத்தளையிட்டு - அறிவாகிய கயிற்றால் கட்டி.

3. பொ-ரை: சில ஞானிகள் நின்னை ஞானத்தால் தொழு வார்கள்; ஞானத்தால் உன்னை நான் தொழும் திறம் உடையே னல்லேன்; ஞானத்தால் தொழுகின்றவர்கள் தொழுதலைக் கண்டு, ஞானவடிவாகிய பொருளே! உன்னை நானும் தொழுவன்.

கு-ரை: ஞானத்தால் - பேரறிவால். தொழுவார் - இறைவனை வணங்குவார்கள். நான் உனை ஞானத்தால் தொழுவேனலேன் என்க. தொழுவேனலேன் - வணங்குவேனல்லேன். ஞானத்தால் தொழு வார்கள் தொழக்கண்டு - ஞானநெறியினால் உன்னை வழிபடுவார்கள் செய்யும் வழிபாடுகளைக் கண்டு. ஞானத்தாய் - பேரறிவின் வடிவானவனே.

4. பொ-ரை: புழுவுக்கும் குணம் நான்கு; எனக்கும் அவ்வாறே. ஆயினும் எனக்குள்ள பொல்லாங்கு புழுவுக்கில்லையாதலின் புழு

Koviloor Digital Library

1968. மலையே வந்து விழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே. 5

1969. கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே. 6

வினுங்கடையேனாகிய அடியேன் புனிதனாகிய பெருமானைச் சார்ந்த அடியார் குழுவினுக்குச் சென்றுகூட எவ்விடத்தை உடையேன் ஆவேன்?.

கு-ரை: புழுவுக்கும் குணம் நான்கு - மண்ணில் வாழும் புழுக் களுக்குரிய குணங்கள் நான்கு. அவையாவன - உணவின் பொருட்டு முயலல், உண்டல், உறங்கல், இன்பதுன்பநுகர்ச்சி. எனக்கும் அதே - எனக்கும் நான்கு குணங்களே. இங்கு எனக்கு உள்ள பொல்லாங்கு புழுவுக்கு இல்லை என்க. பொல்லாங்கு இவற்றின் பொருட்டுப் பிறரை வஞ்சித்தல், துன்புறுத்தல் முதலியன. புழுவினும் கடையேன் - புழுவினும் இழிந்தவனாகிய யான். புனிதன் தமர் குழுவுக்கு - தூயனாகிய அப்பெருமானது அடியார்களுக்கு. சென்றுகூட எவ்விடத்தேன் என்க. எவ்விடத்தேன் - எத்தகுதியை உடையேன்.

5. பொ-ரை: மனிதர்களே! மலையே வந்து விழுந்தாலும் தன் நிலையில் நின்று கலங்காதீர்கள். அவ்வாறு கலங்குவீர்களேயானால் ஈசன் அடியார்களை ஐம்பொறிகளாகிய யானைகளே கொன்றுவிடும்.

கு-ரை: மலையே வந்து விழினும் - மலையே புரண்டு விழுந் தாலும். நிலையில் நின்று - இறைவனது அருள் நிலையிலிருந்து. கலங்கப்பெறுதிர் - கலக்கம் அடையாதீர்கள். தமர்களை - அடியவர் களை. கொலைசெய் யானைதான் - கொல்லும் தன்மையையுடைய ஐம்புலன்களாகிய யானைகள். கொன்றிடுகிற்கும் - கொன்றிடும். ஏ - வினா. கொல்லவல்லதோ என்க. தம்மநுபவம் பொதுவாக்கியது.

6. பொ-ரை: திருவைந்தெழுத்தைக் கற்றுக்கொள்ளுவதற்கு வாயும் நாவும் உள்ளன; இட்டுக்கொள்ளப் பூவும், நீரும் உள்ளன;

Koviloor Digital Library

1970. மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெ னுங்கனி
இனிது சாலவு மேசற்ற வர்கட்கே. 7

1971. என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன் ஏது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தெனே. 8

தொகுதியாகிய சிவந்த சடையான் உள்ளான்; நாம் உள்ளோம். இவை யெல்லாம் இருக்க எமனால் முனிவுண்பது எற்றுக்கு?

கு-ரை: கற்றுக்கொள்வன - இறைவன் புகழை ஓதிக் கற்பதற் குரியன. வாயுள நாவுள - வாயும் நாவும் உள்ளன. இட்டுக் கொள்வன - அபிடேகம் செய்வதற்கும் சூட்டுவதற்கும்; பூவுள நீருள - நீரும் பூவும் உள்ளன. கற்றைச் செஞ்சடையான் உளன் - தொகுதியான பல சிவந்த சடைகளை உடையவனாகிய பெருமான் அருள் வழங்கக் காத்திருக்கின்றான். நாம்உளோம் - அவ்வருளைப் பெறுதற்கேற்ற பிறவியோடு நாமும் இருக்கின்றோம். நமனால் - எமனால். எற்றுக்கு - எதற்கு. முனிவுண்பது - கோபத்தை அடைவது.

7. பொ-ரை: மனிதர்களே! இங்கே வாருங்கள்; ஒன்று சொல்லுவேன்; பழம் தந்தால் பழத்தை உண்ணவும் வல்லமை உடையீரோ? புனிதனும் கழல்கள் அணிந்த இறைவனும் ஆகிய கனி; ஏசற்றவர்களுக்கு மிகவும் இனியது; காண்பீராக.

கு-ரை: இங்கேவம் - இங்கேவாருங்கள். ஒன்று சொல்லுகேன்- பயன் தருவதாய செய்தி ஒன்று சொல்கின்றேன். கனி உண்ணவும் வல்லிரே - கனியை உண்ணும்வல்லமை உடையவர்கள் நீங்கள். புனிதன் - தூயன். பொற்கழல் - அழகிய வீரக்கழலையணிந்த திரு வடிகள். ஈசன் எனுங்கனி - ஈசன் என்ற பெயரையுடைய கனி. 'கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி' (தி.9 திருவிசைப்பா. 47) முதலிய திருமுறை மேற்கோள்களை எண்ணுக. சாலவும் இனிது - மிகவும் இனியது. ஏசற்றவர்கட்கு - குற்றமற்றவர்கட்கு.

8. பொ-ரை: முன் என்னையே ஏதும் அறிந்திலேன்; எம் பெருமானையும் அறிந்திலேன். என்னைத் தன் அடியான் என்று

Koviloor Digital Library

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ 9

1972. தெள்ளத் தேறித் தெளிந்துதித் திப்பதோர்
உள்ளத் தேற லமுத வொளிவெளி
கள்ளத் தேன்கடி யேன்கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக்கெவ் வாறு விளைந்ததே. 10

திருச்சிற்றம்பலம்

பெருமான் அறிதலும் தன்னைக்காணும் தலைவன் என்று நானும் அறிந்துகொண்டேன்.

கு-ரை: என்னை - அடியேனை. ஏதும் அறிந்திலன் எம்பிரான் - சிறிதும் அறிந்தானில்லை எமது தலைவனாகிய இறைவன் என்றுமாம். சிறிது அறிந்திருந்தானாயின் நான் புறச்சமயச் சூழலிற் சென்று மயங்கும் நிலை ஏற்பட்டிராது என்றதைக் குறித்தது. தன்னை - அப்பெருமான்தன்னை. நானும் - அடியேனும். முன் - இளமைக் காலத்து. ஏதும் - சிறிதும். அறிந்திலேன் - அறியாதொழிந்தேன். என்னைத் தன்னடியான் என்று அறிதலும் - இறைவன் என்னை இவன் நம் அடியவனாதற்குரியான் என்று அறிந்ததும். தன்னை - அப் பெருமானை. பிரான் என்று - தலைவன் என்று.

9. பொ-ரை: மிக்குத் தெளிந்து தித்திப்பதாகிய ஒப்பற்ற உள்ளத்தேன்; அமுதப்பேரொளியும் வெளியும் ஆகிய அவ் அநுபவம் கள்ளம் உடையேனும், கவலைக்கடலைக் கடியாது அவ்வெள்ளத்தே விழுந்துகிடப்பேனுமாகிய எனக்கு விளைந்தது எவ்வாறு?

கு-ரை: தெள்ளத்தேறித்தெளிந்து - தெள்ளத் தெளிவிக்க நானும் உண்மையெனத் தேறித் தெளிவடைந்து. தித்திப்பதோர் - இனிப்பதொரு. உள்ளத்தேறல் - மனத்தின்கண் விளையும் தேன். அமுத ஒளிவெளி - அமுத கிரணத்தை உடையவெளி. கள்ளத்தேன் - வஞ்சகத்தன்மையை உடையவன். கடியேன் - வெறுக்கத்தக்கவன். கவலைக்கடல் வெள்ளத்தேனுக்கு - மனக்கவலை என்னும் கடல் வெள்ளத்தை உடையவனாகிய எனக்கு. எவ்வாறு விளைந்தது - எப்படி உள்ளத்தே தேனும் அமுதமுமாய் விளைந்தது.

Koviloor Digital Library

92. பொது

பதிக வரலாறு:

சிவனடியார் பக்கல் செல்லாதீர் என்று இயமன் தூதுவருக்கு ஆணையிட்டருளுவது இத்திருப்பதிகம்.

காலபாசத் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 205 பதிக எண்: 92

திருச்சிற்றம்பலம்

**1973. கண்டு கொள்ளரி யானைக் கனிவித்துப்
பண்டு நான்செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடுகொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே. 1**

**1974. நடுக்கத் துள்ளும் நகையுளும் நம்பர்க்குக்
கடுக்கக் கல்ல வடமிடு வார்கட்குக்
கொடுக்கக் கொள்க வெனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப் பெறீரிங்கு நீங்குமே. 2**

1. பொ-ரை: காலதூதர்களே! கண்டுகொள்ள அரியவன். உள்ளத்தைக் கனியச்செய்து முன்பு நான் செய்த அடிமைத் திறத்தைக் கேட்பீரேயானால் தொண்டரைச் சூழாதீர்கள்.

கு-ரை: கண்டுகொள்ளரியான் - காணுதற்கு அரியவன். கனிவித்து - என்னிடம் கனியும்படியாக அன்பு பாராட்டி. பாழிமை - அடிமைத்திறத்தின் உறைப்பு. கேட்டிரேல் - கேட்டீரானால். கொண்ட பாணி - பாடுதலை மேற்கொண்ட இசைப்பாடல். கொடுகொட்டி - தோற்கருவி, வாத்திய விசேடம். பாணிகொண்ட கொடுகொட்டி என மாற்றி இறைவன் புகழை இசைபாடுவார்க்குப் பக்கவாத்தியமாகக் கொண்ட கொடுகொட்டிதாளம் என்பனவற்றைக் கைக்கொண்ட அடியார்களை என்க. சூழல் - சூழாதேயுங்கள்.

2. பொ-ரை: அஞ்சியும் அன்புசெய்தும் இறைவனிடத்து அன்புடையவராய் ஈகை செய்யும் அடியவரைத் துன்புறுத்தாது அகலுங்கள்.

Koviloor Digital Library

1975. கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமஞ் சிவனென் றரற்றுவார்
ஆர்க ளாகிலு மாக அவர்களை
நீர்கள் சாரப் பெறீரிங்கு நீங்குமே. 3

1976. சாற்றி னேன்சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களிப் பட்ட மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே. 4

கு-ரை: நடுக்கத்துள்ளும் - அச்சத்திலும் அன்பிலும் வாழ்க்கையில் ஏற்படும் எத்தனையோ நடுங்குதற்குரிய துன்பக் காலத்தின் கண்ணும். நகையுளும் - உலகவர்கள் ஏளனம் செய்து நகைத்த இடத்தும். நம்பர்க்கு - இறைவனுக்கு. கடுக்க - ஒப்ப. பெருமானது திரு நடனத்தின்போது அடிக்கப்படும் பறையினை ஒப்ப. கல்லவடம் - மணி மாலைபோன்ற உருத்திராக்க மாலை. பறை எனினுமாம். இடுவார் கட்கு - அணிவார்கட்கு அல்லது கொட்டுபவர்களுக்கு. கொடுக்க என உரைப்பார்களைக் கொள்க என உரைப்பவர்களைக் கொடுக்கும்படிச் சொல்லியவர்களையும் கொள்க என்று கொடுத்தவர்களையும். இடுக்கண் செய்யப்பெறீர் - துன்பம் செய்யாதீர்கள். இங்கும் நீங்குமே - இவ்விடத்தை விட்டும் நீங்குக.

3. பொ-ரை: கார்காலத்திலே மலர்தலைக்கொண்ட கொன்றையின் மணமிக்க மலர்களைக் கண்ணியாக அணிந்தவனது பெருமை கொண்ட திருநாமமாகிய சிவன் என்று அரற்றுவார் ஆராயினும் ஆக; அவர்களை நீர் சாரப்பெறாதீர்; நீங்குவீராக.

கு-ரை: கார் காலத்தே மலர்தலைக் கொண்ட. கடிமலர் - மணம் பொருந்திய மலர். கண்ணியான் - தலை மாலையை உடையவன். சீர் கொள் நாமம் - சிறப்பைக்கொண்ட திருப்பெயர். சிவன் என்று - சிவ பெருமான் என்று. அரற்றுவார் - பலகாலும் சொல்வார்கள். ஆர்களா கிலும் ஆக - யாராயிருந்தாலும் இருக்கட்டும். நீர்கள் - நீங்கள். சாரப் பெறீர் - அடையாதீர்கள் இங்கும் நீங்குமே.

4. பொ-ரை: சடையோடு கூடிய நீள்முடியுடைய சங்கரனும், காமனைச் சினந்து எரிசெய்தவனுமாகிய பெருமான் சேவடியைப் போற்றி என்று மிகவும் களிப்புடைய உள்ளத்தவராய் உரைப்பார் பக்கம் நீவிர் செல்லேல்.

Koviloor Digital Library

1977. இறையென் சொல்மற வேல்நமன் தூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே. 5

1978. வாம தேவன் வளநகர் வைகலும்
காம மொன்றில ராய்க்கை விளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏம மும்புனை வாரெதிர் செல்லலே. 6

கு-ரை: சாற்றினேன் - சொன்னேன். நீள்சடைமுடி - நீண்ட சடை முடியை உடைய. சீற்றம் - கோபம். காமன்கண் சீற்றம் வைத்தவன் - காமனைச் சினந்து எரித்தவன். சேவடி - திருவடிகளை. ஆற்றவும் - மிகவும். களிப்பட்ட - களிப்படைந்த. மனத்தராய் - மனத்தை உடையவராய். போற்றியென்றுரைப்பார் புடை - போற்றி என்று சொல்பவர்களின் பக்கத்தில். போகல் - செல்லாதீர்கள்.

5. பொ-ரை: நமன் தூதுவர்களே! என்சொல்லைச் சிறிதும் மறவாதீர்; பிறையும் பாம்பும் உடையான் தமர்களாகிய தேன் நறுமணம் வீசும் நல்ல நறுவிய சாந்தினைவிட நிறையத் திருநீறு பூசும் அடியவர் எதிர் நீவிர் செல்லேல்.

கு-ரை: இறை - சிறிதும். மறவேல் - மறவாதீர்கள். நமன் தூதுவீர் -இயமனுடைய தூதுவர்களே. தமர் - சுற்றம். நறவம் நாறிய - தேன் நிறைந்த மலரின் மணம் கமழ்கின்ற. நல்நறும் சாந்திலும் - நல்ல மணம் பொருந்திய சந்தனத்தைக் காட்டிலும். நிறைய - நிரம்ப. நீறணிவார் எதிர் - திருநீறணிவார் எதிரே. செல்லல் - செல்லாதீர்கள்.

6. பொ-ரை: வாமதேவனாகிய சிவபெருமான் வளநகராந் திருக்கோயிலில் நாள்தோறும் மனத்தின்கண் வேறொரு விருப்பமும் இல்லாதவராய்க் கைவிளக்கும், தூபமும், மாலையும், தண்ணிய நறுவிய சாந்தமும், பிற வாசனைப் பொருள்களும் புனைவார் எதிர் நீவிர் செல்லேல்.

கு-ரை: வாமதேவன் - சிவன். சதாசிவமூர்த்தியாகிய இறைவனது வடக்கு நோக்கிய திருமுகம் வாமதேவமுகம் எனப்படும். வளநகர் - அவன் எழுந்தருளியகோயில். காமம் - சிவனடியன்றி

Koviloor Digital Library

1979. படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நம தீச னடியரை
விடைகொ ளூர்தியி னானடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே. 7

1980. விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நிச்சல் நீறணி வாரை நினைப்பதே
அச்ச மெய்தி யருகணை யாதுநீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே. 8

வேறொன்றில் செல்லாத பற்று. ஒன்று - ஒன்றும். ஏமம் - திரு நீற்றுக்காப்பு.

7. பொ-ரை: படைக்கலமும் பாசக்கயிறும் பற்றியகையை உடைய தூதுவர்களே! நமது ஈசன் அடியரை அடையாதீர்; இடபத்தை ஊர்தியாகக்கொண்ட இறைவன் அடியார் குழாத்தின் புடை நீர் போகாமல் அவர்களை வழிபட்டுப் போவீராக.

கு-ரை: படையும் - சூலமும். பாசமும் - காலபாசமும். பற்றிய - பிடித்த. கையினீர் - கையை உடையவர்களே. அடையன் மின் - அடையாதீர்கள். விடைகொள் ஊர்தியன் - இடபவாகனன். புடை புகாது - பக்கம் செல்லாது. போற்றியே போமின் - உங்களைப் பாதுகாத்துச் செல்லுங்கள். அவர்களை அணுகில் இயமனுக்கு நிகழ்ந்த தண்டனை அவர்கட்கும் கிடைக்கும் ஆதலால் போற்றிச் செல்லுங்கள் என்றார்.

8. பொ-ரை: வித்தையாவதும், விருப்பத்துக்குரிய தன்மையும் ஆவதும் நாள்தோறும் திருநீறணியும் மெய்யடியாரை நினைப்பதே; அச்சம் கொண்டு, பிச்சை புகும் பெருமானின் அன்பர்களை நீர் பேணுவீராக.

கு-ரை: விச்சை - வித்தை, ஞானம், கல்வி, வேட்கைமை - பக்தி. விரும்புந்தன்மை. நிச்சல் - நாடோறும். நினைப்பதே - சிந்திப் பதேயாகும். அச்சம் எய்தி - பயமெய்தி. அருகணையாது - பக்கம் செல்லாமல். நீர் - நீங்கள். பிச்சை புக்கவன் - பிக்ஷாடனராய பெருமான். பேணும் - விரும்பி வழிபடுங்கள்.

Koviloor Digital Library

1981. இன்னங் கேண்மி னிளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துட னேத்துவார்
மன்னு மஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னி லொன்றுவல் லாரையுஞ் சாரலே. 9

1982. மற்றுங் கேண்மின் மனப்பரிப் பொன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை யேறுடை யானடி யேயலால்
பற்றொன் றில்லிகள் மேற்படை போகலே. 10

9. பொ-ரை: இன்னும் கேட்பீராக; இளம் பிறையினைச் சூடிய அருளரசனாகிய சிவபெருமான் திருவடியோடுகூடிய உள்ளத்துடன் ஏத்தி வழிபடுவார்களையும் நிலைபெற்ற திருவைந்தெழுத்தாகிய மந்திரத்தில் ஒன்று வல்லவரையும் நீவிர் சாரவேண்டா.

கு-ரை: இன்னம் கேண்மின் - இன்னமும் கேளுங்கள். மனத் துடன் - நிறைந்த மனத்தோடு. ஏத்துவார் - வணங்குபவர்கள். மன்னும் - என்றும் நிலைத்து நிற்பதாகிய.

மந்திரந்தன்னில் - மந்திரத்தில். ஒன்று வல்லாரையும் - ஓரெழுத்து வல்லவர்களையும். சாரல் - அடையாதீர்கள்.

10. பொ-ரை: மற்றும் கேட்பீராக; மனத்திலே வேறொன்றும் தாங்குதலின்றி மேனிமுழுதும் பூசிய திருநீற்றொடு கோவணமும் கொண்டு ஒப்பற்ற தனி இடபத்தை உடைய இறைவன் திருவடிகளே அல்லால் வேறு பற்று ஒன்றும் இல்லாதவர்களாகிய அடியார்கள்மேல் படைகொண்டு போகவேண்டா.

கு-ரை: மற்றும் - வேறொன்றும். மனப்பரிப்பு - மனத்தில் பிறிது ஒரு நினைப்பு. சுற்றும் பூசிய - உடல் முழுதும் பூசிய.

பற்றொன்று இல்லி கள்மேல் - இறைவனையன்றிப் பற்றுக்கோடு இல்லாதவர்களிடத்தே ஆசையெனலுமாம். படை போகல் - படைகொண்டு செல்லாதீர்கள்.

Koviloor Digital Library

1983. அரக்க னீரைந் தலையுமோர் தாளினால்
நெருக்கி யூன்றியிட் டான்தமர் நிற்கிலும்
சுருக்கெ னாதங்குப் போமின்கண் மற்றுநீர்
சுருக்கெ னிற்சுட ரான்கழல் சூடுமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: இராவணனை நெரித்த பெருமானது அடியவர்களைவிட்டு அகலுங்கள்: நீங்கள் ஏதேனும் இடையூறு செய்ய முயன்றால் அவன் திருவடி சுடும்.

கு-ரை: ஈரைந்தலை - பத்துத்தலை. ஓர்தாளினால் - ஒரு திருவடி விரலால். சுருக்கு - பாசத்தால் பிணித்தல். நெருக்கி ஊன்றி இட்டான் - மலையின்கீழ் அகப்படச்செய்து ஊன்றி வருத்தியவன். தமர் - அடியார். நிற்கிலும் - நின்றாலும். சுருக்கெனாது - விரைவாகப் போதல் இன்றி. சுருக்கெனில் - உமது தொழில்களில் ஏதேனும் செய்ய முயன்றால். சூடும் - சுடும் என்பது நீண்டது. திருவடியை நினைப்பித்த வாறு.

திருநாவுக்கரசர் புராணம்

ஆயநா ளிடையிப்பா
லணங்கனையா டனைப்பயந்த
தூயகுலப் புகழனார்
தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே
யிவ்வுலகை விட்டகலத்
தீயவரும் பிணியுழந்து
விண்ணுலகிற் சென்றடைந்தார்.

மற்றவர்தா முயிர்நீப்ப மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையுந் துகளாக வேநீத்துப்
பெற்றிமையா லுடனென்றும் பிரியாத வுலகெய்துங்
கற்புநெறி வழுவாமற் கணவனா ருடன்சென்றார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

93. பொது

பதிக வரலாறு:

மறக்கிற்பனே என்று இத்திருப்பதிகப் பாடல்கள் முடிவு பெறுவதால் இப்பெயர் எய்தியது.

மறக்கிற்பனேயென்னும் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 206 பதிக எண்: 93

திருச்சிற்றம்பலம்

1984. காச னைக்கன லைக்கதிர் மாமணித்
தேச னைப்புக ழார்சிலர் தெண்ணர்கள்
மாசி னைக்கழித் தாட்கொள வல்லவெம்
ஈச னையினி யான்மறக் கிற்பனே. 1

1985. புந்திக் குவிளக் காய புராணனைச்
சந்திக் கண்நட மாடுஞ் சதுரனை
அந்தி வண்ணனை ஆரழல் மூர்த்தியை
வந்தெ னுள்ளங்கொண் டானை மறப்பனே. 2

1. பொ-ரை: காசு உடையவனும், கனல் உடையவனும், ஒளிச்சுடர்விடும் செம்மணி விளக்கம் உடையவனுமாகிய பெருமானைச் சில தெளிவற்ற மூடர்கள் புகழார். குற்றத்தினைக் கழித்து ஆட்கொள்ளவல்ல எம் இறைவனை இனி நான் மறக்கும் வல்லமை உடையேனோ?.

கு-ரை: காசனை - விடக்கறையாகிய மாசினை உடையவனை; பொற்காசு போல்பவன் எனினுமாம். தேசு - ஒளி. தெண்ணர் - கீழோர். தெளிந்த அறிவில்லாதவர்கள். மாசினைக் கழித்து - குற்றம் நீக்கி. மறக்கிற்பனே - மறப்பேனோ.

2. பொ-ரை: புத்திக்கு விளக்காக உள்ள மிகப்பழமையனும், நடம் ஆடும் சதுரப்பாடு உடையவனும், அந்திச்செவ்வண்ணம் உடையவனும், நிறைந்த அழல்கொண்ட மூர்த்தியும், வந்து என் னுள்ளம் கொண்டவனுமாகிய பெருமானை மறப்பேனோ?

Koviloor Digital Library

1986. ஈச னீசனென் றென்று மரற்றுவன்
ஈசன் தானென் மனத்திற் பிரிவிலன்
ஈசன் தன்னையு மென்மனத் துக்கொண்டு
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே. 3

1987. ஈச னென்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேற்றப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப்பெற் றேனினி
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே. 4

கு-ரை: புந்திக்கு - அறிவுக்கு. புராணன் - பழையவன். சந்தி - இரவு. சதுரன் - சதுரப்பாடுடையன். அந்தி வண்ணன் - செம் மேனியன். ஆரழல்மூர்த்தி - அரிய நெருப்பின் வடிவமாயவன். வந்து என் உள்ளம் கொண்டான்னை - தோன்றி என் மனத்தை இடமாக் கொண்டவனை. மறப்பனே - மறப்பேனோ?

3. பொ-ரை: ஈசன் ஈசன் என்றும் வாய்விட்டு அரற்றுவேன்; ஈசன் என் மனத்தில் பிரிவில்லாதவனாய் உள்ளான் - ஈசனையும் என் மனத்துக்கொண்டபின், தன்னை யான் மறக்கும் வல்லமை உடையேனோ?

கு-ரை: என்றும் - எப்பொழுதும். அரற்றுவன் - சொல்லிக் கொண்டிருப்பேன். பிரிவிலன் - நீங்காது எழுந்தருளியிருப்பவன். மறக்கிற்பனே - மறப்பேனோ?

4. பொ-ரை: இறைவன் சேவடிகளை ஏத்தப் பெறும் இயல்பினன் ஆதலால் என்னை இறைவன் அறிந்ததை யான் அறிந்தேன்; பிறகும் அவன் சேவடியை ஏத்தப்பெற்றேன்; ஆதலின் இனி ஈசனை யான் மறக்கும் வல்லமை உடையேனோ?

கு-ரை: என்னை அறிந்தது - என்னைத்தெரிந்து திருவருள் பாலித்ததை. அறிந்தனன் - நானும் அறிந்தேன். சேவடி - திரு வடிகளை. ஏற்றப்பெறுதலால் - என் உள்ளத்தில் ஏற்றிக் கொண்டிருத் தலால். ஏத்தப்பெற்றேன் - துதிக்கப்பெற்றேன்.

Koviloor Digital Library

1988. தேனைப் பாலினைத் திங்களை ஞாயிற்றை
வான வெண்மதி சூடிய மைந்தனை
வேனி லானை மெலிவுசெய் தீயழல்
ஞான மூர்த்தியை நான்மறக் கிற்பனே. 5

1989. கன்ன லைக்கரும் பூறிய தேறலை
மின்ன னைமின் னனைய உருவனைப்
பொன்ன னைமணிக் குன்று பிறங்கிய
என்ன னையினி யான்மறக் கிற்பனே. 6

1990. கரும்பி னைக்கட்டி யைக்கந்த மாமலர்ச்
சுரும்பி னைச்சுடர்ச் சோதியுட் சோதியை

5. பொ-ரை: தேனும், பாலும் போல்வானும், சந்திரனும் சூரியனும் போல்வானும், வானத்தின்கண் வெண்மதியினைச் சூடிய வீரனும், இளவேனிலுக்குரியவனாகிய மன்மதனைத் தீயழலால் மெலியச் செய்தவனுமாகிய ஞானக் கடவுளை நான் மறக்கும் வல்லமை உடையேனோ?

கு-ரை: மெலிவுசெய் - எரித்தழித்த. தீயழல் ஞான மூர்த்தியை - நெருப்பின் வடிவமாய் விளங்கும் அறிவுத்தெய்வத்தை.

6. பொ-ரை: கன்னலும், கரும்பின் ஊறிய சாற்றுத் தெளிவு போல்வானும், ஒளியை உடையவனும், மின்னலைப் போன்ற உருவம் உடையவனும், பொன்போலும் மேனியினனும் ஆகிய மாணிக்கக் குன்றுபோல் விளங்கும் என்னை உடையானை, இனியான் மறக்கும் வல்லமை உடையேனோ?

கு-ரை: கன்னலை - கரும்பை. கரும்பூறிய கன்னலை. தேறலை - கரும்பினிடத்தே ஊறிய சாற்றை. தேறலை - தேனை. மின்னனை - மின்னல் வடிவாயிருப்பவனை. மின்னனைய உருவனை - மின்னல் போன்ற ஒளிவடிவினனை. பொன்னனை - பொன் போன்றவனை. மணிக்குன்று பிறங்கிய - சிறந்த மாணிக்க மலையாய் விளங்கிய. என்னனை - என்னுடைய பொருளாயுள்ளவனை.

7. பொ-ரை: கரும்பும் கட்டியும் போல்வானும், வண்டுகள் சூழும் நறுமண மலர்களை அணிந்த சுடர்விடும் ஒளிக்குள் ஒளி

Koviloor Digital Library

அரும்பி னிற்பெரும் போதுகொண் டாய்மலர்
விரும்பு மீசனை யான்மறக் கிற்பனே. 7

1991. துஞ்சும் போதுஞ் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கு நீதியை
நஞ்சு கண்டத் தடக்கிய நம்பனை
வஞ்ச னேனினி நான்மறக் கிற்பனே. 8

1992. புதிய பூவினை புண்ணிய நாதனை
நிதியை நீதியை நித்திலக் குன்றினைக்

ஆகியவனும், அரும்புகளிற் பெரிய போதுகளைக் கொண்டு ஆய்மலரால் விரும்பும் இறைவனுமாகிய பெருமானை யான் மறக்கும் வல்லமை உடையேனோ?

கு-ரை: கட்டி - கரும்பின் கட்டியாகிய வெல்லம். கந்த மாமலர்ச் சுரும்பு - மணங்கமழும் மனத்தாமரை மலரின் அன்புத் தேனை நுகரும் வண்டு. சுடர்ச்சோதியுட் சோதி - விளங்கும் ஒளிக்குள் ஒளியாய்த் திகழ்பவன். அரும்பினில்பெரும்போது கொண்டு - அரும்புகளாக இருக்கும்போதே மலராவதன் முன்பே எடுக்கப்பட்ட பெரிய மலர்களை ஏற்றுக்கொண்டு. ஆய்மலர் விரும்பும் - அழகிய உள்ளத் தாமரைமலரை விரும்பும்.

8. பொ-ரை: உறங்கும் போதும் சுடர்விடும் சோதியும், நெஞ்சத்துக்குள் நிலைத்து நின்று நினைக்கவைக்கும் நீதியும், ஆலகாலவிடத்தைத் திருக்கழுத்துள் அடக்கிய நம்பனுமாகிய பெருமானை வஞ்சனை உடைய யான் இனி மறக்கும் வல்லமை உடையேனோ?

கு-ரை: துஞ்சும்போதும் - உறங்கும்பொழுதும். சுடர்விடு சோதியை - உள்ளத்தில் ஒளிவிடும் விளக்கை. நெஞ்சுள் நின்று - மனத்தில் எழுந்தருளியிருந்து. நினைப்பிக்கும் - என் செயலன்றி அவன் செயலாய்ப் பல்வகை நினைப்புக்களையும் உண்டாக்கும். நீதியை - நீதியின் வடிவானவனை.

9. பொ-ரை: புதிய பூவும், புண்ணியநாதனும், செல்வமும், நீதியும், முத்துக்குன்றும், அடைந்தோர்க்குக் கதியும், மதியும்,

Koviloor Digital Library

கதியைக் கண்டங் கறுத்த கடவுளை
மதியை மைந்தனை நான் மறக் கிற்பனே. 9

1993. கருகு கார்முகில் போல்வதொர் கண்டனை
உருவ நோக்கியை யூழி முதல்வனைப்
பருகு பாலனைப் பால்மதி சூடியை
மருவு மைந்தனை நான்மறக் கிற்பனே. 10

திருச்சிற்றம்பலம்

மைந்தனும் ஆகிய திருநீலகண்டமுடைய கடவுளை நான் மறக்கும் வல்லமை உடையேனோ?

கு-ரை: புதிய - அன்றலர்ந்த. நிதியை - பெறுதற்கரிய செல்வத்தை. நித்திலக் குன்றினை - திருநீற்றுப்பூச்சால் முத்துமலையை ஒப்ப வீற்றிருப்பவனை. கதியை - வீடுபேறான நற்கதியின் வடிவாயிருப்பவனை. மதியை - ஞான வடிவினனை.

10. பொ-ரை: கருமை உடைய கார்முகில் போல்வதாகிய ஒப்பற்ற திருநீலகண்டனும், அழகுடைய நோக்கு இயைந்த ஊழிக் காலத்தும் உள்ள முதல்வனும், பருகுதற்குரிய பால் போன்ற வெண் மதியைச் சூடியவனும், அன்பால் நினைவாரை மருவுகின்ற மைந்தனு மாகிய பெருமானை நான் மறக்கும் வல்லமை உடையேனோ?

கு-ரை: கருகு - கருகிய. கார்முகில் - கார்காலத்து மேகம். உருவ நோக்கியை - உலகம் உருப்பெற்று உண்டாம்படி நோக்கியவனை. ஊழிமுதல்வனை - ஊழிக்காலத்தும் அழியாத முதற்கடவுளை. பருகு - பருகுகின்ற. பாலனை - பாலாயிருப்பவனை. அல்லது பாலனைய என்று விரிக்க. மருவும் - நம்முள்ளத்தே வந்து பொருந்தும்.

Koviloor Digital Library

94. பொது

பதிக வரலாறு

சிவபெருமான் ஒருவனையே நாம் 'தொழற்பாலது' என்று இப்பதிகப் பாடல்கள் முடிவடைவதால் இப்பெயர் எய்தியது.

தொழற்பாலதே என்னுந் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 207 பதிக எண்: 94

திருச்சிற்றம்பலம்

1994. அண்டத் தானை யமரர் தொழப்படும்
பண்டத் தானைப் பவித்திர மார்திரு
முண்டத் தானைமுற் றாத இளம்பிறைத்
துண்டத் தானைக்கண் டீர்தொழற் பாலதே. 1

1995. முத்தொப் பானை முளைத்தெழு கற்பக
வித்தொப் பானை விளக்கிடை நேரொளி
ஒத்தொப் பானை யொளிபவ ளத்திரள்
தொத்தொப் பானைக்கண் டீர்தொழற் பாலதே. 2

1. பொ-ரை: அண்டத்தில் உள்ளவனும், தேவர்களால் தொழப் படும் பொருளும், பவித்திரம் உடைய நெற்றியை உடையவனும், இளம் பிறைப் பிளவினைச் சூடியவனுமாகிய பெருமானே தொழத் தக்கவன்; காண்பீராக.

கு-ரை: அண்டத்தானை - உலகங்களின் வடிவானவனை. அமரர் தொழப்படும் - தேவர்களால் தொழப்படுகின்ற. பண்டத் தானை - உறுதிப்பொருளை. பவித்திரம் ஆர் திருமுண்டத்தான் - தூய்மை பொருந்திய அழகிய திருநீற்றை அணிந்த நெற்றியை உடையவன். பவித்திரம் என்பதற்குக் காணிக்கைப் பாத்திரம் எனவும் பொருளுண்டு. முண்டம் - நெற்றி.

2. பொ-ரை: முத்து ஒப்பவனும், முளைத்தெழுகின்ற கற்பக வித்துப் போல்வானும், திருவிளக்கிடை நேர்கின்ற ஒளியை ஒத்திருப் பவனும், ஒளியையுடைய பவளத்திரளின் கொத்தினை ஒப்பவனு மாகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

Koviloor Digital Library

1996. பண்ணொத் தானைப் பவளந் திரண்டதோர்
வண்ணத் தானை வகையுணர் வான்றனை
எண்ணத் தானை யிளம்பிறை போல்வெள்ளைச்
சுண்ணத் தானைக்கண் டீர்தொழற் பாலதே. 3

1997. விடலை யானை விரைகமழ் தேன்கொன்றைப்
படலை யானைப் பலிதிரி வான்செலும்
நடலை யானை நரிபிரி யாததோர்
சுடலை யானைக்கண் டீர்தொழற் பாலதே. 4

கு-ரை: முளைத்தெழு - முளைத்துத் தோன்றும. விளக்கிடை நேரொளி ஒத்தொப்பானை - விளக்கையும் அதனிடை ஒளியையும் ஒப்பவனை. பவளத்தின் தொத்து - பவளங்கள் திரண்ட கொத்து. தொழற்பாலது - தொழுந்தன்மையை உடையவன். தொத்து - திரட்சி.

3. பொ-ரை: பண் ஒத்தவனும், பவளம் திரண்டது போன்ற செவ்வண்ணம் உடையவனும், வகைகளையெல்லாம் உணர்பவனும், அடியார்கள் எண்ணத்தில் இருப்பவனும், இளம்பிறை போன்ற வெண்சுண்ணம் உடையவனுமாகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: பண் - இசை. வண்ணம் - நிறம். வகை உணர்வான் தனை - நாம் செய்யும் பல்வகைக் கூறுபாடுகளையும் உணர்பவனை. எண்ணத்தானை - நம் எண்ணமாக இருப்பவனை. வெள்ளைச் சுண்ணம் - திருநீறு.

4. பொ-ரை: விடலைப்பருவம் உடையவனும், மணங்கமழும் கொன்றைமாலை உடையவனும், பலிபெறுதற்காகத் திரிந்துசெல்லும் துன்பம் உடையவனும், நரிகள் பிரிந்துசெல்லாத சுடுகாட்டில் இருப்பவனும் ஆகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: விடலை - ஆண்மக்களிற் சிறந்தவன். விரை - மணம். படலை - மாலை. பலிதிரிவான் - பிச்சையேற்றுத் திரிவதற்காக. நடலையான் - நடிப்புடையோன். நரி பிரியாததோர் சுடலை - நரிகள் கூடியிருக்கும் இடுகாடு.

Koviloor Digital Library

1998. பரிதி யானைப்பல் வேறு சமயங்கள்
கருதி யானைக்கண் டார்மனம் மேவிய
பிரிதி யானைப் பிறரறி யாததோர்
சுருதி யானைக்கண் டீர்தொழற் பாலதே. 5

1999. ஆதி யானை அமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை உணர்தற் கரியதோர்
சோதி யானைக்கண் டீர்தொழற் பாலதே. 6

2000. ஞாலத் தானைநல் லானைவல் லார்தொழும்
கோலத் தானைக் குணப்பெருங் குன்றினை

5. பொ-ரை: ஞானசூரியனாக உள்ளவனும், பல்வேறு சமயங்களாற் கருதப்பட்டவனும், கண்டார் மனத்தை விரும்பியமர்ந்தவனும், பிறர் அறியாததோர் சுருதியானும் ஆகிய பெருமானே, தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: பரிதியான் - சூரியனாக இருப்பவன். பல்வேறு சமயங்களால் கருதப்படுபவன் என்க. ''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்'' ''அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்'' *சித்தியார்-சுபக்கம்.25.1)* எனும் பாடல்கள் காண்க. கண்டார் - மெய்ப்பொருள் காட்சியைக் கண்டவர்கள். பிரிதியான் - ப்ரீதி என்னும் வடசொல் தமிழில் பிரிதி என்றுவரும். விருப்பம் என்பது பொருள்.

6. பொ-ரை: முதல்வனும், தேவர்களால் தொழப்படும் நீதியானவனும், நியமநெறிகளை ஓதியவனும், உணர்தற்கு அரியதாகிய ஒப்பற்ற சோதியானும் ஆகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: ஆதியானை - முதலில் தோன்றியவனை. நியமம் - செய்வன தவிர்வனவாய வரையறை. நெறி - நூல்வழி.

7. பொ-ரை: உலகமாகி உள்ளவனும், நல்லவனும், வல்லவர் தொழும் கோலத்தை உடையவனும், குணமாகிய பெருங்குன்றானவனும், மூலமாக உள்ளவனும், முதல்வனும், மூவிலை வடிவாகிய

Koviloor Digital Library

மூலத் தானை முதல்வனை மூவிலைச்
சூலத் தானைக்கண் டீர்தொழற் பாலதே. 7

2001. ஆதிப் பாலட்ட மூர்த்தியை ஆனஞ்சும்
வேதிப் பானைநம் மேல்வினை வெந்தறச்
சாதிப் பானைத் தவத்திடை மாற்றங்கள்
சோதிப் பானைக்கண் டீர்தொழற் பாலதே. 8

2002. நீற்றி னானை நிகரில்வெண் கோவணக்
கீற்றி னானைக் கிளரொளிச் செஞ்சடை
ஆற்றி னானை யமரர்த மாருயிர்
தோற்றி னானைக்கண் டீர்தொழற் பாலதே. 9

சூலத்தை உடையவனும் ஆகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: நல்லான் - நன்மையின் வடிவானவன். வல்லார் - அநுபூதியில் வல்லவர்கள். மூலத்தானை - எல்லாவற்றிற்கும் மூலப்பொருளாய் உள்ளவனை.

8.பொ-ரை: முதற்கண்ணே தோன்றிய அட்ட மூர்த்தியும், பஞ்ச கவ்வியம் அபிடேகம் கொள்பவனும், நமது மேல்வினைகள் வெந்து நீங்கும்படிக் கடைக்கண் சாதிப்பவனும், தவத்திடை மாற்றங்கள் தந்து சோதிப்பவனுமாகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: ஆதிப்பால் - முதன்மைப் பகுதியான. அட்ட மூர்த்தியை - எட்டு வடிவங்களாயிருப்பவனை. நம்மேல் வினை வெந்தற வேதிப்பான் என்க. வேதித்தல் - அறிவித்தல். விரும்பு தவத்திடை சாதிப்பானை - நம்மைத் தவத்தின்கண்ணே நிறுத்துபவன். சாதித்தல் - முடித்தல். மாற்றங்கள் - நாம் செய்யும் தவறுகள். சோதிப்பான் - ஆராய்ந்து களைபவன்.

9. பொ-ரை: திருநீறணிந்தவனும், ஒப்பற்ற வெள்ளிய கோவணக்கீறு உடையவனும், ஒளிகிளரும் சிவந்த சடைக்கண் கங்கையை உடையவனும் தேவர்க்கு உயிர்வழங்கினானுமாகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: நிகர் இல் - ஒப்பில்லாத. கோவணக்கீறு - கோவணம்.

Koviloor Digital Library

2003. விட்டிட் டானைமெய்ஞ் ஞானத்து மெய்ப்பொருள்
கட்டிட் டானைக் கனங்குழை பாலன்பு
பட்டிட் டானைப் பகைத்தவர் முப்புரஞ்
சுட்டிட் டானைக்கண் டீர்தொழற் பாலதே. 10

2004. முற்றி னானை இராவணன் நீண்முடி
ஒற்றி னானை யொருவிர லாலுறப்
பற்றி னானையோர் வெண்டலைப் பாம்பரைச்
சுற்றி னானைக்கண் டீர்தொழற் பாலதே. 11

திருச்சிற்றம்பலம்

கீறு - கிழித்தது என்னும் பொருளது. கிளர் - விளங்கிய. ஒளி - ஒளியையுடைய. ஆறு - கங்கை. அமரர் தம் ஆருயிர் தோற்றினான் - தேவர்களுடைய அரிய உயிரை தன்னுள் ஒடுக்கி மீள உண்டாக்கியவன். அமரர்கள் நஞ்சுண்டு சாவாதுத் தோற்றியவன் எனலுமாம். தக்கன் வேள்வியில் அமரரை எழுப்பியதும் ஆம்.

10. பொ-ரை: மெய்ஞ்ஞானத்து அடியேனை விட்டவனும், மெய்ப்பொருளைக் காட்டியவனும், உமாதேவியினிடத்து அன்பு பொருந்தியவனும், பகைத்தவராகிய திரிபுராதிகள் முப்புரங்களைச் சுட்டவனுமாகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: மெய்ஞ்ஞானத்து மெய்ப்பொருள் விட்டிட்டானை - பரஞானமாகிய உண்மைப்பொருளை வெளிப்படுத்தியவனை. கட்டிட்டான் கனங்குழைபால் - கனவிய குழையினை உடையவளாய பார்வதியினிடத்து. கனங்குழைபால் கட்டிட்டு - பார்வதியினிடத்துக் கட்டுண்டு. அன்பு பட்டிட்டானை - அன்பால் பிணிக்கப்பட்டவன். முப் புரம் சுட்டிட்டானை - பகைவரது திரிபுரங்களைச் சுட்டெரித்தவனை.

11. பொ-ரை: எல்லாவற்றையும் சூழ்ந்திருப்பவனும், இராவணன் நீண்முடிகளை ஒற்றியபோது ஒரு விரலால் உறப்பற்றி யவனும், ஒரு வெண்டலை உடையவனும், பாம்பினை அரைக்கண் சுற்றியவனும் ஆகிய பெருமானே தொழத்தக்கவன்; காண்பீராக.

கு-ரை: இராவணன் நீண்முடி முற்றினான் - இராவணனது நீண்ட முடியை முறியச்செய்தான். ஒரு விரலால் உறநெறி ஒற்றினான் - கால் விரல் ஒன்றினால் ஒற்றியவன். ஓர் வெண்தலை பற்றினான் - பிரமனது ஒரு தலையைக் கையில் தாங்கியவன். அரை - இடை.

Koviloor Digital Library

95. பொது

பதிக வரலாறு:

திருமாலும் பிரமனும் அன்பு பாராட்டி அடிமைத்திறங் கருதாமல் தம்மாற்றலால் சிவபெருமானது அடியையும் முடியையும் காண முயன்றனர். சிவபெருமான் அருளினால் தாமாகவே ''இங்குற்றேன்'' என்று இலிங்கத்தில் எழுந்தருளினான். இத் திருப்பதிகம் சிவபெருமானை அடையும் நெறி நான்கனுள் சரியையின் இன்றியமையாச் சிறப்பை வற்புறுத்தி எடுத்துக் கூறுவதுடன் சிவலிங்கத் தத்துவத்தையும் கூறுவதால் இப்பெயர் பெற்றது.

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 208 பதிக எண்: 95

திருச்சிற்றம்பலம்

2005. **புக்க ணைந்து புரிந்தல ரிட்டிலர்**
நக்க ணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்க ணைந்த சுடரொளி வண்ணனை
மிக்குக் காணலுற் றாரங் கிருவரே. 1

2006. **அலரு நீருங்கொண் டாட்டித் தெளிந்திலர்**
திலக மண்டலந் தீட்டித் திரிந்திலர்

1. **பொ-ரை:** திருமாலும் பிரமனுமாகிய இருவரும் அழகு பொருந்திய ஒளிச்சுடர் நிறம் உடைய பெருமானைப் புகுந்து அணைந்து விரும்பி மலரிட்டு வணங்கிலராய், மகிழ்ந்து பொருந்தி மணமலர்களைக் கொய்து அருச்சித்திலராய் ஆணவமிகுந்து காண முயன்று காண்கிலராயினார்.

கு-ரை: புக்கணைந்து - இறைவன் இருக்குமிடத்தே உள்ளே புகுந்து நெருங்கி. புரிந்து - விரும்பி. அலர் - மலர். நக்கு - மனம் மகிழ்ந்து. அணைந்து - நந்தவனமடைந்து. நறுமலர் - மணம்லர். சொக்கு - அழகு. மிக்கு - பிறரின் தருக்கால் மிக்கு. இருவர் - திருமால், பிரமன்.

2. **பொ-ரை:** திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் உலக மூர்த்தியாகிய ஒளிநிற வண்ணம் உடைய இறைவனைப் பூவும் நீரும்

Koviloor Digital Library

உலக மூர்த்தி யொளிநிற வண்ணனைச்
செலவு காணலுற் றாரங் கிருவரே. 2

2007. ஆப்பி நீரோ டலகுகைக் கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர்
காப்புக் கொள்ளி கபாலிதன் வேடத்தை
ஓப்பிக் காணலுற் றாரங் கிருவரே. 3

2008. நெய்யும் பாலுங்கொண் டாட்டி நினைந்திலர்
பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்

கொண்டு அபிடேகித்துத் தெளிவடைந்திலராய்த் திருச்சாந்து தீட்டித் திரிந்திலராய்ச் சென்று காண முயன்று காண்கிலர் ஆயினார்.

கு-ரை: அலர் - பூ. ஆட்டி - அபிடேகித்து. தெளிந்திலர் - அறிவு தெளியப்பெற்றாரில்லை. திலகமண்டலம் - பொட்டு. தீட்டி - எழுதி. ஒப்பனை செய்து. திரிந்திலர் - வலமாகச் சுற்றவும் செய்யாதவர்கள். ஒளிநிறம் - ஒளிவடிவான நிறம். செலவு காணலுற்றார் - மேலும் கீழுமாகிய வான் நிலம் சென்று காணத் தொடங்கினர். இருவர் - திருமால், பிரமன்.

3. பொ-ரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் உலகங்களைக் காவல்கொள்ளும் கபாலியாகிய பெருமானின் திரு வேடத்தைக் காணலுற்றார்கள். சாணநீரோடு, திருவலகும் கைகளிற் கொண்டு வணங்காதவராய்ப் பூக்கள் பெய்த கூடையைப் புனைந்து சுமந்திலர். முனைப்புடன் காணமுயன்று காண்கிலர் ஆயினார்.

கு-ரை: ஆப்பி - பசுவின் சாணம். அலகு - கூட்டுதல். திருவல கிடுதல், திருமெழுக்கிடுதல் ஆகிய சரியைத் தொண்டுகள். பூப்பெய் கூடை - பூக்கள் பறித்துப்பெய்து நிரப்பிய கூடை. புனைந்து - திரு மாலை தொடுத்து. சுமந்திலர் - பெருமானுக்குச் சுமந்து செல்லாதவரா யினர். காப்புக்கொள்ளி - காவல் மேற்கொண்டு. கபாலி தன் வேடத்தை - பிரம கபாலத்தைச் சுமந்துகொண்டு திரியும் பிக்ஷாடனரின் திருவுருவத்தை. ஓப்பிக்காணலுற்றார் - பாதுகாத்துக் காணத் தொடங்கினர். காப்பு - திருநீறு.

4. பொ-ரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் நெய்யும் பாலும் கொண்டு அபிடேகித்து நினைந்திலராய்ப் பொய்யும்

Koviloor Digital Library

ஐயன் வெய்ய அழல்நிற வண்ணனை
மெய்யைக் காணலுற் றாரங் கிருவரே. 4

2009. எருக்கங் கண்ணிகொண் டிண்டை புனைந்திலர்
பெருக்கக் கோவணம் பீறி யுடுத்திலர்
தருக்கி னாற்சென்று தாழ்சடை யண்ணலை
நெருக்கிக் காணலுற் றாரங் கிருவரே. 5

2010. மரங்க ளேறி மலர்பறித் திட்டிலர்
நிரம்ப நீர்சுமந் தாட்டி நினைந்திலர்
உரம்பொ ருந்தி யொளிநிற வண்ணனை
நிரம்பக் காணலுற் றாரங் கிருவரே. 6

பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலராய் ஐயனாகிய வெப்பமுடைய அழலின் நிறம் கொண்ட இயல்புடைய பெருமானது மெய்ம்மையைக் காணலுற்றுக் காண்கிலராயினார்.

கு-ரை: ஆட்டி - அபிடேகம் செய்து. நினைந்திலர் - நினையாராயினர். பொக்கம் - வஞ்சக வார்த்தை. போக்கி - நீக்கி. ஐயன் - தலைவன். வெய்ய - வெம்மையை உடையதான. அழல்நிற வண்ணன் - நெருப்புப்போலும் சிவந்த ஒளிவடிவாய்த் தோன்றியவன். மெய்யை - உண்மையின் வடிவானவனை.

5. பொ-ரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் எருக்க மாலை கொண்டு இண்டை புனைந்து வழிபடாதவராய் அழகு பெருக்குதற்பொருட்டுக் கோவணம் கிழித்து உடுத்தாதவராய் ஆணவத்தினாற்சென்று சடைதாழ்கின்ற அண்ணலாராகிய பெருமானைத் தத்தமில் நெருக்கிச்சென்று காண முயன்று காண்கிலர் ஆயினார்.

கு-ரை: எருக்குக் கொண்டு - வெள்ளெருக்குப் பூவைக் கொண்டு. கண்ணியாகிய இண்டை - தலைமாலையாகிய இண்டை. புனைந்திலர் - கட்டிச் சூட்டினாரில்லை. பெருக்கக் கோவணம் - பெரிதாய்க் கோவணத்தை. பீறி - கிழித்து. உடுத்திலர் - சூட்டினாரில்லை. தருக்கு - செருக்கு. தாழ் - தொங்குகின்ற. நெருக்கி - நெருங்கி.

6. பொ-ரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் அறிவுடன்கூடி ஒளிநிற வண்ணனாகிய பெருமானை, மரங்களில் ஏறி

Koviloor Digital Library

2011. கட்டு வாங்கங் கபாலங்கைக் கொண்டிலர்
அட்ட மாங்கங் கிடந்தடி வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி சென்றெய்திக் காணிய
பட்ட கட்டமுற் றாரங் கிருவரே. 7

2012. வெந்த நீறு விளங்க அணிந்திலர்
கந்த மாமல ரிண்டை புனைந்திலர்
எந்தை யேறுகந் தேறெரி வண்ணனை
அந்தங் காணலுற் றாரங் கிருவரே. 8

மலர்பறித்திட்டிலராய், நிரம்ப நீர் சுமந்து அபிடேகித்து நினைந்திலராய் ஆணவம் நிரம்பக் காண முயன்று காண்கிலர் ஆயினர்.

கு-ரை: மரங்கள் - பூமரங்கள். நிரம்ப - நிறைய. ஆட்டி - அபிடேகித்து. நினைந்திலர் - நினையாதவராயினார். உரம் - செருக்கோடு கூடிய வலிமை. நிரம்ப - முழுமையாய்.

7. பொ-ரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் கட்டுவாங்கமும் கபாலமும் கைக்கொள்ளாதவராய், எட்டுறுப்புக் களும் நிலத்துப்படக்கிடந்து அடிதாழாதவராய் இறைவன் சேவடியும் திருமுடியும்காணுதற்குச் சென்றெய்திப் பொருந்திய துயரங்கள் உற்றார் அடிமுடி காண்கிலர்.

கு-ரை: கட்டுவாங்கம் - கையில் அணியும் ஓர் ஆயுதம். கபாலம் - மண்டையோடு. கைக்கொண்டிலர் - தாங்கியிருக்கும் உண்மையை உணராராயினர். அட்டமாங்கம் கிடந்து - எட்டு உறுப்புக்களும் நிலத்திலே படிய வீழ்ந்து. அடி வீழ்ந்திலர் - திருவடிகளை வணங்காராயினர். சிட்டன் - சிஷ்டாசாரமுடையவன். காணிய - காணும் பொருட்டு. பட்டகட்டம் - உண்டான துன்பங்கள் பலவற்றையும்.

8. பொ-ரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் வெந்த திருநீறு விளங்க அணியாதவராய், மணமிக்க மலர்தளால் இண்டை மாலை புனையாதவராய் எந்தையாகிய ஏறுகந்து ஏறும் எரிவண் ணனாகிய பெருமானின் ஆதியும் அந்தமும் காண இயலாதவர் ஆயினார்.

Koviloor Digital Library

2013. இளவெ ழுந்த இருங்குவ ளைம்மலர்
பிளவு செய்து பிணைத்தடி யிட்டிலர்
களவு செய்தொழிற் காமனைக் காய்ந்தவன்
அளவு காணலுற் றாரங் கிருவரே. 9

2014. கண்டி பூண்டு கபாலங்கைக் கொண்டிலர்
விண்ட வான்சங்கம் விம்மவாய் வைத்திலர்
அண்ட மூர்த்தி யழல்நிற வண்ணனைக்
கெண்டிக் காணலுற் றாரங் கிருவரே. 10

கு-ரை: வெந்தநீறு - திருநீறு. கந்தமாமலர் - மணம் பொருந்திய சிறந்த மலர். இண்டை - தலைமாலை. எந்தை - எனக்குத் தந்தையாவான். ஏறு உகந்து ஏறு - இடபத்தை விரும்பி ஊர்ந்து செல்லும். அந்தம் - அடி முடிகளின் முடிவிடங்கள்.

9. பொ-ரை: திருமா்லும் பிரமனும் ஆகிய இருவரும் இளமையோடுகூடி எழுந்து கரிய குவளை மலர்களைப் பிளந்து இதழ்களால் பிணைத்துத் திருவடியில் இட்டு வணங்காதவராய் களவு செய்யும் தொழிலை உடைய காமனைக் காய்ந்த பெருமானது அளவினைக் காண முயன்று காண்கிலர் ஆயினார்.

கு-ரை: இளவெழுந்த - எழுந்த இளமைத்தன்மையோடு கூடி எழுந்த. இரும் - கரிய. பிளவுசெய்து - விரித்து. பிணைத்து - கட்டி. களவுசெய்தொழில் - காதலுணர்ச்சியைத் திருட்டுத் தனமாய்ச் செய்யும். காய்ந்தவன் - சினந்து எரித்தவன். அளவு - அடிமுடியின் அளவுகள்.

10. பொ-ரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் கண்டி அணிந்து கபாலம் கையிற்கொள்ளாதவராய் வெண்மை விரிந்த சங்கம் விம்முமாறு வாயில் வைத்தூதாதவராய் அண்டமூர்த்தியாகிய தீ நிறவண்ணனை மண்ணில் கிண்டியும் விண்ணில் பறந்தும் காண முயன்று காண்கிலர் ஆயினார்.

கு-ரை: கண்டி - உருத்திராக்கமாலை. பூண்டு - அணிந்து. விண்ட - வாய் விரிந்த. வான் சங்கம் - வெள்ளிய சங்கு. விம்ம - ஒலிக்க. வாய் வைத்திலர் - வாயின்கண் வைத்து ஊதினாரில்லை. அண்டமூர்த்தி - எல்லா உலகங்களின் வடிவானவன். கெண்டி - கிண்டி.

Koviloor Digital Library

2015. செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: செங்கண் உடையவனாந் திருமாலும், பிரமனும் தம்முள்ளே எங்கும் தேடித்திரிந்தும் காண்கின்ற வல்லமை இல்லாதவர்களுக்கு ஆறு பொங்கும் செஞ்சடையை உடைய புண்ணியக் கடவுளாம் இறைவன் ''இங்கு உற்றேன்'' என்று இலிங்க வடிவில் தோன்றினான்.

கு-ரை: செங்கணான் - திருமால். இலிங்கத்தே - சிவ இலிங்கத் திருவுருவத்தின்கண்ணே. பொங்கு - மிக்க. புண்ணியமூர்த்தி - புண்ணியந்திரண்ட வடிவான தலைவன்.

திருநாவுக்கரசர் புராணம்

அந்நிலையின் மிகப்புலம்பி
யன்னையுமத் தனுமகன்ற
பின்னையுநா னுமைவணங்கப்
பெறுதலினா லுயிர்தரித்தேன்
என்னையினித் தனிக்கைவிட்
டேகுவீ ரெனில்யானும்
முன்னமுயிர் நீப்பனென
மொழிந்திடரி னழுந்தினார்.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

96. பொது

பதிக வரலாறு:

அப்பர் அடிகள் தம் மனத்தின் எண்ணங்களைத் தெரிவிப்பது இத்திருப்பதிகம்.

மனத்தொகைத் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 209 பதிக எண்: 96

திருச்சிற்றம்பலம்

2016. பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புறம்
மின் னுள் ளத்திரள் வெண்பிறை யாயிறை
நின்னுள் ளத்தருள் கொண்டிருள் நீங்குதல்
என்னுள் ளத்துள தெந்தை பிரானிரே. 1

2017. முக்க ணும்முடை யாய்முனி கள்பலர்
தொக்கெ ணுங்கழ லாயொரு தோலினோ

1. பொ-ரை: எந்தை பெருமானே! பொன்னும் நினையுமாறு அழகு திகழ்கின்ற புன்சடையின் புறத்தே ஒளியுள்ளதாகிய திரண்ட வெண்பிறை சூடியவனே! நின் உள்ளத்துச் சிறிது அருள் கொண்டு என்னுள்ளத்துள் உளதாகிய இருள் நீங்கிடத் திருவுளம் பற்றியருள்க.

கு-ரை: பொன்னுள்ளத்திரள் - பொன்நிறமுள்ளதாய்த் திரண்ட. புன்சடையின் - மெல்லிய சடையின். புறம் - மேலே. மின்னுள்ளத்திரள் - மின்னலின் ஒளி உள்ளதாய்த் திரண்ட. வெண் பிறையாய் - வெள்ளிய பிறைச்சந்திரனை அணிந்தவனே. இறை - சிறிது காலம். நின்னுள்ளத்து - உனது திருவுள்ளத்தில். அருள் கொண்டு - கருணைகொள்ளுதலால். இருள் நீங்குதல் - அஞ்ஞானம் அகலுதல். இதனால் இப்பதிகம் மனத்தொகை எனப்பட்டது. என் மனத்தே நிகழ்வதாயுள்ள உள்ளக் கிடக்கை. எந்தை பிரானிரே - என் தந்தையாகிய பெருமானே. இர் - முன்னிலை விகுதி. ஏ - அசை. பெருமானே! வெண்பிறையாய்! இறைப் பொழுது நின்னுள்ளத்து அருள்கொள்ளுதலால் அறியாமையாகிய இருள் நீங்குதல் என் மனத்தே நிகழ்ந்துள்ளது என முடிவு செய்க.

2. பொ-ரை: எந்தை பெருமானே! முக்கண்ணும் உடையாய்! முனிவர்கள் பலர் கூடி எண்ணித் தியானிக்கும் கழலை உடையாய்!

Koviloor Digital Library

டக்க ணம்மரை யாயரு ளேயலா
தெக்க ணும்மில னெந்தை பிரானிரே. 2

2018. பனியாய் வெங்கதிர் பாய்படர் புன்சடை
முனியாய் நீயுல கம்முழு தாளினும்
தனியாய் நீசரண் நீசல மேபெரி
தினியாய் நீயெனக் கெந்தை பிரானிரே. 3

2019. மறையும் பாடுதிர் மாதவர் மாலினுக்
குறையு மாயினை கோளர வோடொரு
பிறையுஞ் சூடினை யென்பத லாற்பிறி
திறையுஞ் சொல்லிலை யெந்தை பிரானிரே. 4

புலித்தோலினோடு அழகிய நினது அருளேயல்லாது வேறு எவ்விடத்தும் பொருள் இல்லேன்.

கு-ரை: முக்கணும் உடையாய் - மூன்று கண்களை உடையவனே. முனிகள் பலர் - முனிவர்கள் பலர். தொக்கு எணும் கழலாய் - கூடி எண்ணும் திருவடிகளை உடையவனே. தோலினோடு - புலித்தோல் உடையோடு. அக்கு அம் அண் அரை - அக்கு மணிமாலை நெருங்கிய அழகிய இடை. அருளே அலாது - கருணையே வடிவாய் இருப்பானேயல்லாமல். எக்கணும் - எவ்விடங்களிலும். இலன் - கருணை வடிவின்றி வேறு வடிவு இலனாய எந்தை பிரானிரே என்க.

3. பொ-ரை: எந்தை பெருமானே! தண்ணியாய்! விரும்புதற்குரிய தெண்ணிலவு பாயும் படர்புன்சடை முனிவனே! நீ உலகம் முழுதும் ஆண்டாலும் தனியாய்! சரண் நீயே; என்பால் வஞ்சனையே பெரிது; எனக்கு இனியாய் நீயே.

கு-ரை: பனியாய் - பனிபோன்று குளிர்ந்த தன்மையனாய். வெங் கதிர்பாய் - வெம்மையை உடைய சூரிய கிரணங்கள் பொருந்திய. படர் - விரிந்த. புன்சடை - மெல்லிய சடை. முனியாய் - முனிவனாய். தனியாய் நீ - ஏகனாயிருப்பவன் நீ. சலமே - துன்பம்.

4. பொ-ரை: எந்தை பெருமானே! வேதங்களையும் பாடுவீர்; பெரிய முனிவர்களது மயக்கத்தினுக்கு உறையும் ஆயினீர்; கொள்ளும் பாம்பினோடு ஒரு பிறையும் சூடினை என்பதல்லால் வேறு சிறிதும் சொல் இல்லை.

Koviloor Digital Library

2020. பூத்தார் கொன்றையி னாய்புலி யின்னதள்
ஆர்த்தா யாடர வோடன லாடிய
கூத்தா நின்குரை யார்கழ லேயல
தேத்தா நாவெனக் கெந்தை பிரானிரே. 5

2021. பைம்மா லும்மர வாபர மாபசு
மைம்மால் கண்ணியோ டேறுமைந் தாவெனும்
அம்மா லல்லது மற்றடி நாயினேற்
கெம்மா லும்மிலே னெந்தை பிரானிரே. 6

கு-ரை: மறையும் - வேதங்களையும், மாதவர் மாலினுக்கு - தாருகாவனத்து முனிவர். குறையும் மயக்கத்திற்கு - மயக்காகிய குறையாகவும். கோளரவு - கொள்ளும் தன்மையதாய பாம்பு. பிறிது - வேறு. இறையும் - சிறிதும்.

5. பொ-ரை: எந்தை பெருமானே! பூத்துச் செறிந்த கொன்றையினை உடையாய்; புலியின் தோலை ஆர்த்துக் கட்டினாய்; ஆடும் பாம்பினோடும் அனலோடும் ஆடும் கூத்தனே! நின் ஒலிக்கும் கழலே அல்லது எனது நா வேறு ஒன்றையும் ஏத்தாது.

கு-ரை: பூத்தார் கொன்றையினாய் - மலர்ந்த கொன்றைப்பூ மாலையை அணிந்தவனே. அதள் - தோல். அரவோடு புலியின் அதள் ஆர்த்தாய் என்க. ஆர்த்தாய் - கட்டினாய். அனலாடிய - தீயேந்தி யாடிய. குரையார் கழலேயலது - ஒலித்தலைப் பொருந்திய. திருவடி களேயல்லாமல். ஏத்தா நா - துதியாத நாக்கு. எனக்கு - எனக்குள்ளது.

6. பொ-ரை: எந்தை பெருமானே! படத்தொடு ஒலிக்கும் அரவுடையவனே! பரமனே! இடபத்தின்மேல் அஞ்சனம் தீட்டிய கண்ணுடைய உமாதேவியோடு ஏறும் மைந்தனே! என்றும் அம்மயக்கமல்லது மற்று அடி நாயினேனுக்கு வேறு எம் மயக்கமும் இல்லேன். 'நாயினேன்' என்றும் பாடம்.

கு-ரை: பைம்மாலும் அரவா - படத்தோடு கூடிய நஞ்சினால் மயங்குதற்கு ஏதுவான. பசு - பசு இனத்துளதாய எருது. மைம்மால் கண்ணி - பார்வதி. பார்வதி - கரிய உருவத்தையும் மயக்கம் செய்யும் விழியையுமுடையவள். மைந்தா - வலியனே. அம்மால் அல்லது - அந்த ஆசை அல்லாமல். அடிநாயினேற்கு - அடிமையனாகிய நாயேனுக்கு. எம்மாலும் - வேறு எந்த ஆசையும்.

Koviloor Digital Library

2022. வெப்பத் தின்மன மாசு விளக்கிய
செப்பத் தாற்சிவ னென்பவர் தீவினை
ஒப்பத் தீர்த்திடு மொண்கழ லாற்கல்ல
தெப்பற் றும்மில னெந்தை பிரானிரே. 7

2023. திகழுஞ் சூழ்சுடர் வானொடு வைகலும்
நிகழு மொண்பொரு ளாயின நீதியென்
புகழு மாறு மலானுன பொன்னடி
இகழு மாறில னெந்தை பிரானிரே. 8

7. **பொ-ரை:** எந்தை பெருமானே! வெப்பத்தின் மனமாசு விளக்கும் செப்பம் உடைமையினால் ''சிவன்'' என்பவர் தீவினைகளை ஒப்பத் தீர்க்கும் ஒள்ளிய கழலை உடையானாகிய உமக்கல்லது வேறுபற்று இல்லேன்.

கு-ரை: வெப்பத்தின் - ஞானஒளி வெப்பத்தினாலே. மனமாசு - மனத்தின்கண் உளதாய அறியாமையாகிய இருளை. விளக்கிய - விளங்கச்செய்த. செப்பத்தால் - செம்மைத் தன்மையால். சிவன் என்பவர் - செம்மையன் என்று சொல்பவர். ஒப்ப - முடிய. ஒண் கழலாற் கலது - ஒள்ளிய வீரக்கழலை அணிந்த திருவடியை உடைய பெருமானிடத்தேயல்லாமல். எப்பற்றும் - வேறுஎவ்வித ஆசையும்.

8. **பொ-ரை:** எந்தை பெருமானே! விளங்குகின்ற சுடர் சூழ்கின்றவனோடு நாள்தோறும் நிகழும் ஒள்ளிய பொருளாயின நீதிகளை என்னே புகழுமாறு! அல்லது உன் பொன்னடிகளை இகழுமாறு இல்லேன்.

கு-ரை: திகழும் - விளங்கும். சூழ்சுடர் - சூழ்ந்த ஒளியோடு கூடிய சூரிய சந்திரர்களை (உடையதான). வானொடு - ஆகாயத்தோடு. நிகழும் - உலகின்கண் இயங்குகின்ற. ஒண்பொருளாயின - சிறந்த பொருளாயுமிருப்பன.

சூரிய சந்திராகியும், ஆகாயமாகியும், உலகப் பொருளாயும் இருப்பவன். விண்ணும் மண்ணுமாயிருப்பவன் என்க. புகழும் ஆறு அலால் - புகழ்வதைய்ன்றி. நுன் பொன்னடி - உனது அழகிய திருவடி.

Koviloor Digital Library

2024. கைப்பற் றித்திரு மால்பிர மன்னுனை
எப்பற் றியறி தற்கரி யாயருள்
அப்பற் றல்லது மற்றடி நாயினேன்
எப்பற் றும்மிலே னெந்தை பிரானிரே. 9

2025. எந்தை யெம்பிரா னென்றவர் மேல்மனம்
எந்தை யெம்பிரா னென்றிறைஞ் சித்தொழு
தெந்தை யெம்பிரா னென்றடி யேத்துவார்
எந்தை யெம்பிரா னென்றடி சேர்வரே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை: திருமாலால் அறிதற்கரியவனே! உன் திருவருளாகிய பற்றுக்கோடு ஒன்றைத் தவிர வேறு எப்பற்றும் எனக்கு இல்லை.

கு-ரை: திருமால் பிரமன் - திருமாலும் பிரமனும். எய்ப்பு அற்று - துன்பம் இன்றி. உன்னை எப்பெற்றியுடையவன் என்று அறிதற்கு அரியவனே என்க. கைப்பற்றியருள் எனக் கூட்டுக.

10. பொ-ரை: எந்தை எம்பிரான் என்று மனம் வாக்குக் காயங்களால் வழிபடுவார் இறைவன் திருவடி சேர்வர் .

கு-ரை: என்றவர் மேல் - என்று கூறியவரிடத்து. மனம் - மனம் பொருந்த. என்று - என்றும் கூறி. இறைஞ்சி - தலைகுனிந்து. தொழுவார் - வணங்குவார். இறைவன் அடியார்களை இறைவனா கவே கருதி வணங்குவார் என்க. அடியாரை வழிபட்ட பிறகு பெருமானை எந்தை எம்பிரான் என்று எல்லாரும் போற்றி. அடி சேர்வர் - இறைவனது திருவடியை அடைவார்கள்.

திருநாவுக்கரசர் புராணம்

மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசிலறச் சாலைகளுந் தண்ணீர்ப்ப்ந் தருமமைப்பார்.

- சேக்கிழார்

Koviloor Digital Library

97. பொது

பதிக வரலாறு:

சித்தத்துள்ளே சிவபெருமானைச் சிந்திக்கும் திறங் கூறுவது இத் திருப்பதிகம். 'சிந்திப்பார் மனத்தான்' என்று தொடங்குவதால் இப் பெயர் பெற்றது. முப்பது திருப்பாடல் களைக்கொண்ட சிறப்புடையது. இதனுள் அகரம் முதல் ஔகாரம் வரை பன்னிரண்டு உயிர் எழுத்துக்களையும் ககரம் முதல் மெய்யெழுத்துக்களில் பதினான்கு எழுத்துக்களையும், ஆய்த எழுத்தையும் இரண்டாம் பாடல் முதல் 28 வரை உள்ள பாட்டுக்களில் முறையே முதலெழுத்தாய் வரும்படி ஆக்கப்பட்ட சிறப்பும் உடையது.

சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 210 பதிக எண்: 97

திருச்சிற்றம்பலம்

2026. சிந்திப் பார்மனத் தான்சிவன் செஞ்சுடர்
அந்தி வான்நிறத் தானணி யார்மதி
முந்திச் சூடிய முக்கண்ணி னானடி
வந்திப் பாரவர் வானுல காள்வரே. 1

1. பொ-ரை: சிந்திப்பவர் மனத்து உறைபவனாகிய சிவனும், சிவந்த சுடர் உடையவனாய் அந்திவானத்து நிறம் பொருந்தியவனும், அழகு நிறைந்த பிறைமதியினை முந்துறச் சூடிக்கொண்ட முக்கண்ணி னனுமாகிய பெருமான் திருவடிகளை வணங்குவார்கள் வானுலகை ஆள்வர்.

கு-ரை: சிந்திப்பார் - தன்னை நினைப்பவர்கள். செஞ்சுடர் அந்திவான் - சிவந்த ஒளியோடு கூடிய அந்திக்காலத்து வானம்.

அணியார் - அழகு பொருந்திய. முந்தி - முற்பட அல்லது தலையிலே. வந்திப்பார் - வாழ்த்துபவர்கள்.

Koviloor Digital Library

2027. அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறி வாரறி வாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி வேதிய னென்பரே. 2

2028. ஆதி யாயவ னாரு மிலாதவன்
போது சேர்புனை நீண்முடிப் புண்ணியன்
பாதிப் பெண்ணுரு வாகிப் பரஞ்சுடர்ச்
சோதி யுட்சோதி யாய்நின்ற சோதியே. 3

2029. இட்ட திட்டதோ ரேறுகந் தேறியூர்
பட்டி துட்டங்க னாய்ப்பலி தேர்வதோர்

2. பொ-ரை: அண்டங்களையெல்லாம் உள்ளடக்கிய செறிந்த இருள் நடுவே கடந்து அப்பால் ஓர் ஒள்ளிய சுடர் உண்டுபோலும்; அச்சுடரைக் கண்டு இங்குஆர் அறியவல்லவர்கள்? அறிபவரெல்லாம் அதனை வெள்ளிய பிறையினை முடிக்கண்ணியாகக்கொண்ட வேதியன் என்பர்.

கு-ரை: அண்டமார் இருள் - எல்லா உலகங்களிலும் பொருந்திய இருள் அனைத்தையும். ஊடுகடந்து - இடையே நீங்கிச் சென்று. உம்பர் - வானோர் உலகிற்கும் உயர்ந்த உலகின்கண். போலும், ஒப்பில்போலி. ஒள்சுடர் - ஒளியையுடைய விளக்கு. அச்சுடர் இங்குக் கண்டறிவார் யார் - அவ்விளக்கை இவ்வுலகத்து அறிபவர் யார்?. திங்கட் கண்ணி - பிறையாகிய தலைமாலை.

3. பொ-ரை: தன்னுடலிற்பாதி பெண்ணுருவமாகி மேலாய சுடரை உடைய சோதியுட்சோதியாய் நின்ற சோதியாகிய பெருமான், அனைத்துக்கும் ஆதி ஆகியவன்; தனக்குப் பற்றாவார் ஆரும் இல்லாத வன்; மலர்கள் சேர்த்துப் புனைந்த நீண்முடியை உடைய புண்ணியன்.

கு-ரை: ஆதியாயவன் - முதல்வனானவன். ஆரும் இலாதவன் - தந்தை தாய் யாரும் இல்லாதவன். போது - மலர். புனை - அலங்கரித்த. பரஞ்சுடர் - மேலான ஒளி. சோதியுட் சோதியாய் நின்ற சோதி - ஒளியாயும் ஒளிஉள் ஒளியாயுமிருப்பவன்.

4. பொ-ரை: ஏற்றினை உகந்து ஏறிப் பட்டிதோறும் மக்கள் இட்ட சோற்றினைப் பலிதேர்வதாகிய ஒரு துன்பவாழ்க்கை

Koviloor Digital Library

கட்ட வாழ்க்கைய னாகிலும் வானவர்
அட்ட மூர்த்திய ருளென் றடைவரே. 4

2030. ஈறில் கூறைய னாகி யெரிந்தவெண்
நீறு பூசி நிலாமதி சூடிலும்
வீறி லாதன செய்யினும் விண்ணவர்
ஊற லாயரு ளாயென் றுரைப்பரே. 5

2031. உச்சி வெண்மதி சூடிலும் ஊன்அறாப்
பச்சை வெண்தலை யேந்திப் பலவில்லம்
பிச்சை யேபுகு மாகிலும் வானவர்
அச்சந் தீர்த்தரு ளாயென் றடைவரே. 6

உடையவனாகிலும் தேவர்கள் ''அட்டமூர்த்தியே! அருள்வாயாக'' என்று அடைவர்.

கு-ரை: இட்டதுஇட்டது - அவரவரும் தமக்குப் பலியாய் இட்டவற்றை. ஓர் ஏறு உகந்துஏறி - ஒப்பற்ற எருது வாகனத்தை விரும்பி ஏறி. ஊர் - செலுத்தி. கட்டம் - கஷ்டம். வானவர் - தேவர். அருள் - அருள்செய்வீராக.

5. பொ-ரை: முடிவற்ற திக்குகளையே ஆடையாக உடுப்பவனாகி எரிந்துவெந்த திருநீறு பூசி நிலவினை உடைய பிறையைச் சூடினும், தன் பெருமைக்கு உகவாதவற்றைச் செய்யினும், தேவர்கள் ''இடையூறற்றவனே! அருள்வாயாக'' என்று இரந்துரைப்பர்.

கு-ரை: ஈறில் - முடிவில்லாத. கூறையன் - திக்குகளாகிய ஆடையை உடையவன். வீறிலாதன - பெருமையற்ற செயல். ஊறலாய் - அருளூற்றை உடையவரே, கண்ணீர் சொரிந்து எனலுமாம்.

6. பொ-ரை: உச்சிக்கண் வெள்ளியமதி சூடினும், தசை நீங்காத பச்சை வெண்தலையோட்டைக் கையில் ஏந்திப் பல இல்லங்களுக்குப் பிச்சை ஏற்கப் புகுந்தாலும், தேவர்கள் ''எம் அச்சம் தீர்த்து அருள்வாயாக'' என்று அடைவர்.

கு-ரை: உச்சி - முடிமீது. ஊன்அறா - தசை நீங்காத. பச்சை - தலையோடு கூடிய. பல இலம் - பல வீடுகள். பிச்சையே புகும் - பிச்சையேற்பதற்காகச் செல்லும்.

Koviloor Digital Library

2032. ஊரி லாயென்றொன் றாக உரைப்பதோர்
பேரி லாய்பிறை சூடிய பிஞ்ஞகா
காரு லாங்கண்ட னேயுன் கழலடி
சேர்வி லார்கட்குத் தீயவை தீயவே. 7

2033. எந்தை யேயெம் பிரானே யெனவுள்கிச்
சிந்திப் பாரவர் தீவினை தீருமால்
வெந்த நீறுமெய் பூசிய வேதியன்
அந்த மாவளப் பாரடைந் தார்களே. 8

2034. ஏன வெண்மருப் போடென்பு பூண்டெழில்
ஆனை யீருரி போர்த்தன லாடிலும்

7. பொ-ரை: தனக்கென்று ஓர் ஊரில்லாதவனே! ஒன்றாக உரைக்கும் பேரில்லாதவனே! பிறைசூடிய பிஞ்ஞகனே! கருமை பொருந்திய திருக்கழுத்தினனே! உன் கழலணிந்த திருவடியைச் சேர்தல் இல்லாதவர்களுக்குத் தீயவையே என்றும் சேரும்.

கு-ரை: ஊரிலாய் - தனக்கென ஓர் ஊர் இல்லாதவன். என்று - இது என்று. ஒன்றாக உரைப்பது - ஒன்று சொல்லுவதற்குரிய. பேர் இலாய் - பெயர் இல்லாதவன். கார் உலாம் - கருமை நிறம் பொருந்திய. கண்டனே - கழுத்தை உடையவனே. கழலடி - கழலணிந்த திருவடிகள். சேர்விலார்கட்கு - அடையாதவர்கட்கு. தீயவை - தீமை தருவனவான தீவினைகள். தீயவே - துன்பந்தருவனவே. அடிசேர்ந்தார்க்குத் தீயவும் நல்லவாம் என்றபடி.

8. பொ-ரை: எந்தையே! எம்பெருமானே! என உள்ளத்தால் நினைந்து சிந்திப்பார்களின் தீவினை தீரும்; வெந்த திருநீறு பூசிய மெய்யை உடைய வேதியனை அடைந்தவர்கள் அந்தமாக அளக்குந் தன்மை உடையார்.

கு-ரை: உள்கி - நினைத்து. தீரும் - நீங்கும். ஆல் - அசை. அந்தமா அளப்பார் - அளப்பார் என்பதனை முன்னே கூட்டி நூல்களின் பொருளியல்பை ஆராய்பவர்கள் என்க.

9. பொ-ரை: பன்றியின் வெள்ளிய கொம்பினோடு எலும்பு அணிந்த அழகுமிக்க ஆனையினை ஈர்ந்து தோல் போர்த்துத் தீயுடன்

Koviloor Digital Library

தான வண்ணத்த னாகிலுந் தன்னையே
வான நாடர் வணங்குவர் வைகலே. 9

2035. ஐயன் அந்தணன் ஆணொடு பெண்ணுமாம்
மெய்யன் மேதகு வெண்பொடி பூசிய
மைகொள் கண்டத்தன் மான்மறிக் கையினான்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனே. 10

2036. ஒருவ னாகிநின் றானிவ் வுலகெலாம்
இருவ ராகிநின் றார்கட் கறிகிலான்
அருவ ராஅரை ஆர்த்தவ னார்கழல்
பரவு வாரவர் பாவம் பறையுமே. 11

ஆடினாலும், தான் அவ்வியல்புடையனாயினும் தேவர்கள் நாள் தோறும் தன்னையே வணங்குவர்.

கு-ரை: ஏனமருப்பு - பன்றிக்கொம்பு. எழில் - அழகு. ஆனை ஈருரி - ஆனையினை உரித்த தோல். அனலாடினும் - தீயாடினாலும். தான் அவ்வண்ணத்தன் - தானும் அனலாடியதற்கேற்ப அனலின் நிறத்தையே உடையவன். வைகல் - நாடோறும். தானவண்ணம் - பிச்சையேற்கும் கோலம் எனினுமாம்.

10. பொ-ரை: படம் கொண்ட பாம்பினை இடுப்பில் கட்டிய இறைவன்,. தலைவன்; அந்தணன்; (அழகும் குளிர்ச்சியும் உடையவன்) ஆண் பெண் வடிவமுடைய திருமேனியினன்; மேன்மை மிகுந்த வெண் திருநீறு பூசிய கருமைகொண்ட திருக்கழுத்தினன்; மான்குட்டி உடைய கையினன்.

கு-ரை: ஐயன் - அழகியன். அந்தணன் - குளிர்ந்த தண்ணளியைச் செய்பவன். மெய்யன் - உடலை உடையவன். மேதகு - மேன்மை பொருந்திய. மைகொள் - கரிய நிறத்தைக் கொண்ட. மான்மறி - மான்குட்டி. பைகொள் பாம்பு - படத்தை உடைய பாம்பு. அரை - இடையிலே. ஆர்த்த - கட்டிய. பரமன் - மேலானவன்.

11. பொ-ரை: இவ்வுலகமெல்லாம் தான் ஒருவனே ஆகி நின்றவனும், திருமாலும் பிரமனுமாகிய இருவராகி நின்றவர் அறிய

Koviloor Digital Library

2037. ஓத வண்ணனும் ஒண்மலர்ச் செல்வனும்
நாத னேயரு ளாயென்று நாடொறும்
காதல் செய்து கருதப் படுமவர்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. 12

2038. ஔவ தன்மை யவரவ ராக்கையான்
வெவ்வ தன்மைய னென்ப தொழிமினோ
மௌவல் நீண்மலர் மேலுறை வானொடு
பவ்வ வண்ணனு மாய்ப்பணி வார்களே. 13

இயலாதவனும், அரிய பாம்பினை இடுப்பில் கட்டியவனும் ஆகிய இறைவனது நிறைந்த கழலணிந்த திருவடிகளை வணங்குவாரின் பாவங்கள் கெடும்.

கு-ரை: இவ்வுலகெலாம் - இவ்வுலகங்கள் எல்லாவற்றிற்கும். ஒருவனாகி நின்றான் - தலைவனாவான் இவன் ஒருவனேயாக இருப்பவன். இருவர் - திருமால், பிரமன். அரு - அரிய. அரா - பாம்பு. அரை - இடை. ஆர்கழல் - பொருந்திய கழலை அணிந்த திருவடி. பறையும் - நீங்கும்.

12. பொ-ரை: கடல்வண்ணம் உடையவனாகிய திருமாலும், ஒள்ளிய தாமரைமலர் மேலானாகிய பிரமனும், ''தலைவனே! அருள்வாய்'' என்று நாள்தோறும் விருப்பம் புரிந்து எண்ணப் படுவாராகிய இறைவன் பாதங்களை ஏத்த நம்பாவங்கள் கெடும்.

கு-ரை: ஓதவண்ணன் - கடல்நீரை ஒத்த கரிய திருமால். ஒண்மலர்ச் செல்வன் - பிரமன். கருதப்படுமவர் - மனத்தால் எண்ணித் துதிக்கப்படுபவர். தியானிக்கப்படுபவருடைய தியேயப்பொருளா யுள்ளவன் ''சிவஏகோத்தியேய:'' என்பது *வேதம்.*

13. பொ-ரை: அவரவர் உடம்பினால் அடைவதற்கு வெவ்விய தன்மை உடையவன் என்ற கருத்தை ஒழிப்பீராக; மலர்தல் உடைய நீண்ட மலர்மேல் உறைவானாகிய பிரமனோடு கடல்வண்ணனாகிய திருமாலுமாய்ப் பணிவார்கள்.

கு-ரை: ஔவ தன்மையவரவர் - அந்தந்தத்தன்மையை யுடையவர். வெவ்வதன்மையன் - கொடியவன். என்பது ஒழிமின் - என்று கூறுவதைத் தவிருங்கள். மௌவல் நீள்மலர்மேல்

Koviloor Digital Library

2039. அக்கு மாமையும் பூண்டன லேந்தியில்
புக்குப் பல்பலி தேரும் புராணனை
நக்கு நீர்கள் நரகம் புகேன்மினோ
தொக்க வானவ ராற்றொழு வானையே. 14

2040. கங்கை தங்கிய செஞ்சடை மேலிளந்
திங்கள் சூடிய தீநிற வண்ணனார்
இங்க ணாரெழில் வானம் வணங்கவே
அங்க ணாற்கது வாலவன் தன்மையே. 15

உறைவான் - தாமரை மலரில் உறையும் பிரமன். முல்லை போலும் வெண்டாமரை மலர். பவ்வ வண்ணன் - கடல் வண்ணனாகிய திருமால்.

14. பொ-ரை: அக்கமணிகளும் ஆமையும் அணிந்து தீயை ஏந்தி இல்லங்கள்தோறும் புகுந்து பல பலிதேறும் பழமை உடையவனும், தொகுத்த தேவர்களால் தொழப்படுவானுமாகிய இறைவனை விரும்பி நீங்கள் நரகத்துப்போகாமல் நற்பேறு அடைவீராக.

கு-ரை: அக்கு - அக்குமணிமாலை, என்புமாம். அஃகு என்ற ஆய்தக்குறியீடு. இல் புக்கு - பல வீடுகளுக்கும் சென்று. பல்பலி - பலவகையான பிச்சைகள். தேரும் - ஆராய்ந்து கொள்ளும். புராணன் - பழையவன். நக்கு - இகழ்ந்து; சிரித்து. புகேன் மின் - புகாதீர்கள். தொக்க வானவர் - கூட்டமாய்க்கூடிய தேவர்களால்.

15. பொ-ரை: அழகிய கண்ணராகிய கங்கை தங்கிய சிவந்த சடையின்மேல் இளம் பிறையினைச் சூடிய தழல்வண்ணர்; இமைக்காத கண்ணை உடைய எழில் உடைய வானகத்துள்ளோர் வணங்க உள்ளார்; அதுவே அவர் தன்மை.

கு-ரை: தீ நிறவண்ணன் - சிவந்த நிறத்தையுடையவன். இங்க ணார் - இங்கு எளிதில் வருபவர்; இவ்வுலகில் அருள் வழங்க எழுந்தருளியிருப்பர். எழில் வானம் - அழகிய வானுலக மக்கள். அங்கணாற்கு - அங்கணனுக்கு; அவன் தன்மை அது என்க. ஆல் - அசை.

Koviloor Digital Library

2041. ஙகர வெல்கொடி யானொடு நன்னெஞ்சே
நுகர நீயுனைக் கொண்டுயப் போக்குறில்
மகர வெல்கொடி மைந்தனைக் காய்ந்தவன்
புகரில் சேவடி யேபுக லாகுமே. 16

2042. சரண மாம்படி யார்பிற ரியாவரோ
கரணந் தீர்த்துயிர் கையி லிகழ்ந்தபின்
மரண மெய்திய பின்னவை நீக்குவான்
அரண மூஎயில் எய்தவ னல்லனே. 17

16. பொ-ரை: நல்ல நெஞ்சே! வெல்லும் கொடி உடையானோடு நுகர்தற்கு நீ உன்னைக்கொண்டு உய்யப்போதலுற்றால், மீனாகிய வெல்லும் கொடி உடைய மன்மதனைச் சினந்தவனாகிய பெருமானின் குற்றமற்ற சேவடியே தஞ்சப்பொருளாகும்.

கு-ரை: ஙகரவெல் கொடியான் - இடபக்கொடியான். படுத்திருக்கும் வடிவில் இடபம் ங போன்றிருத்தலின் ஙகரவெல்கொடியான் என்றார். நுகர - போகம் பலவற்றையும் அனுபவிக்க. உய்யப்போக்குறில் - வாழ்விக்கச் செலுத்துவாயேயானால். மகர வெல்கொடி - மகர மீன் பொருந்திய முற்றத்துறந்தாரையும் வெற்றி காணும் கொடி. வெல் கொடி, வினைத்தொகை.

மைந்தன் - இளையனாகிய காமன். காய்ந்தவன் - எரித்தவன். புகரில் - குற்றமற்ற. புகலாகும் - அடைக்கலமாம் இடமாகும்.

17. பொ-ரை: புகலடையத்தக்கவர் பிறர் யாவர்? செயலற்று உயிர் இறக்கும்போது நம் வினைக்குற்றங்களைத் தீர்த்து அருள்பவன் வேறு யாவன்? அரணமைந்த மூன்று கோட்டைகளையும் அழித்தவன் அல்லனோ?

கு-ரை: சரணமாம் படியார் - திருவடிகளில் அடைக்கலமாக அடைதற்குரிய தன்மையினர்; பிறர்யாவர் என்க. சிவபெருமானைத் தவிரப் பிறர் யார் உள்ளனர்.

கரணம் - அந்தக்கரணங்கள். கையில் இகழ்ந்தபின் - கைவிட்டபின். நவை - வினைக்குற்றங்கள். அரண மூஎயில் - அரணமைந்த மூன்று கோட்டைகள்.

Koviloor Digital Library

2043. ஞமனென் பான்நர கர்க்கு நமக்கெலாம்
சிவனென் பான்செழு மான்மறிக் கையினான்
கவனஞ் செய்யுங் கனவிடை யூர்தியான்
தமரென் றாலுங் கெடுந்தடு மாற்றமே. 18

2044. இடப மேறியு மில்பலி யேற்பவர்
அடவி காதலித் தாடுவ ரைந்தலைப்
படவம் பாம்பரை யார்த்த பரமனைக்
கடவி ராய்ச்சென்று கைதொழு துய்ம்மினே. 19

2045. இணர்ந்து கொன்றைபொன் தாது சொரிந்திடும்
புணர்ந்த வாளர வம்மதி யோடுடன்

18. பொ-ரை: நரகர்க்கெல்லாம் ஞமனாகியும், நமக்கெல்லாம் சிவன் எனப்படுவானாகியும் உள்ளவனும், மான்குட்டி உடைய கையி னனும், விரைந்து செல்லும் பெருமைமிக்க இடப ஊர்தி உடையவனும் ஆகிய பெருமானின் தமர் என்றாலும் தடுமாற்றம் கெடும்.

கு-ரை: நரகர்க்கு - மக்களில் இழிந்தவர்க்கு. எமன் என்பான் - இயமனாக இருப்பவன். மான்மறி - மான்குட்டி. கவனம் - வேகநடை. கனவிடை - பெரிதாய எருது. ஊர்தி - வாகனம். தமர் என்றாலும் - பெருமானுடைய சுற்றத்தினர் என்று கூறினாலும். தடுமாற்றம் கெடும் - ஐயுறவு நீங்கும்.

19. பொ-ரை: இடபத்தின்மீது ஏறியும், இல்லங்கள்தோறும் பலி ஏற்பவரும், சுடுகாட்டினை விரும்பி ஆடுபவரும், ஐந்தலை உடைய படர்ந்த பாம்பினை அரைக்கண் ஆர்த்தவரும் ஆகிய பரமனை வணங்கும் கடப்பாடுடையீராய்ச் சென்று கைதொழுது உய்வீராக.

கு-ரை: இல்பலி - வீடுகளிற் பிச்சை. ஏற்பவர் - கொள்பவர். அடவி - இடுகாடு. ஐந்தலைப் படவம் - ஐந்து தலைப்படங்களை உடைய. அரை ஆர்த்த - இடையிலே கட்டிய. கடவிராய் - கடமை உடையவராக.

20. பொ-ரை: கொத்தாகிய கொன்றை பொன் போன்ற மகரந்தத் தூளினைச் சொரிந்திடும் இயல்பினதும், பொருந்திய வாள்போன்ற

Koviloor Digital Library

அணைந்த அஞ்சடை யானவன் பாதமே
உணர்ந்த வுள்ளத் தவருணர் வார்களே. 20

2046. தருமந் தான்தவந் தான்தவத் தால்வரும்
கருமந் தான்கரு மான்மறிக் கையினான்
அருமந் தன்ன அதிர்கழல் சேர்மினோ
சிரமஞ் சேரழல் தீவினை யாளரே. 21

2047. நமச்சி வாயவென் பாருள ரேலவர்
தமச்ச நீங்கத் தவநெறி சார்தலால்
அமைத்துக் கொண்டதோர் வாழ்க்கைய னாகிலும்
இமைத்து நிற்பது சால அரியதே. 22

பாம்பும் மதியினுடன் அணைந்ததுமாகிய அழகிய சடையுடைய பெருமான் திருவடிகளை உணர்ந்த உள்ளத்தவரே உணர்வர்.

கு-ரை: இணர்ந்து - கொத்துக்களாய் மலர்ந்து. தாது - மகரந்தம். புணர்ந்த - கூடிய. வாளரவம் - ஒளியோடு கூடிய பாம்பு. அம்சடை - அழகிய சடை.

21. பொ-ரை: தொல்லைகள் சேர்ந்த அழலும் தீவினை யாளர்களே! தானே தருமமாகவும், தானே தவமாகவும், தானே தவத்தால்வரும் செயலாகவும் உள்ள வலிய மான்குட்டியைக் கையில் உடைய பெருமானது, அரிய மருந்து போன்ற (அமிர்தம்) ஒலிக்கும் கழலணிந்த திருவடிகளைச் சேர்வீராக.

கு-ரை: தருமம், தவம், கருமம், முதலியனவாய் இருப்பவன். கருமம் - செயல். கருமான்மறி - வலிய மான்குட்டி. அருமருந்தன்ன என்பது அருமந்தன்ன என்றாயது. அதிர் - ஒலிக்கின்ற. சிரமம்சேர் அழல் தீவினை - வருத்தத்தைத் தரும் நெருப்புப் போன்ற தீய வினைகள்.'

22. பொ-ரை: நமசிவாய என்று சொல்வார் உளராயின் அவர் தம் அச்சங்கள் நீங்கத் தவநெறியைச் சார்தலால் தானே அமைத்துக் கொண்ட ஒப்பற்ற வாழ்க்கையை உடையவனாகிலும் இமைத்து நிற்பது மிகவும் அரியதாகும்.

Koviloor Digital Library

2048. பற்பல் காலம் பயிற்றிப் பரமனைச்
சொற்பல் காலநின் றேத்துமின் தொல்வினை
வெற்பில் தோன்றிய வெங்கதிர் கண்டவப்
புற்ப னிக்கெடு மாறது போலுமே. 23

2049. மணிசெய் கண்டத்து மான்மறிக் கையினான்
கணிசெய் வேடத்த ராயவர் காப்பினால்
பணிகள் தாஞ்செய வல்லவர் யாவர்தம்
பிணிசெ யாக்கையை நீக்குவர் பேயரே. 24

கு-ரை: அமைத்துக் கொண்டதோர் வாழ்க்கையர் - செப்பமாயமைந்த வாழ்க்கையுடையவர். இமைத்து நிற்பது - வாழ்வது. சால - மிகவும்.

23. பொ-ரை: பரமனைப் பலப்பல காலங்கள் பயிற்றிச் சொற்களால் பல காலம் நின்று ஏத்துவீராக! உம் பழைய வினைகள் உதயகிரியில் தோன்றிய சூரியனைக்கண்ட அழகிய புல் நுனியில் உள்ள பனித்துளிகள் கெடுமாறு கெடும்.

கு-ரை: பற்பல்காலம் - பலப்பலகாலம். பயிற்றி - சொல்லி. சொற்பல்காலம் - புகழ்ச் சொற்களால் பலகாலம். தொல்வினை - பழவினை. வெற்பில் - உதயகிரியில். வெங்கதிர் - சூரியன். புற்பனி - புல்லின் முனையில் உள்ள பனித்துளிகள்.

24. பொ-ரை: கரியமணிபோலும் கண்டத்தை உடையவரும், மான்குட்டியை உடைய கையினரும், கருதிச் செய்கின்ற வேடம் உடையவராகிய அவர் காத்தருள்வதால் பணிகளைச் செய்ய வல்லவர்களே நல்லோர்; அவ்வாறு புரியாது நோய் செய்யும் உடம்பை வீணே கழிப்பவர் பேயர்.

கு-ரை: மணிசெய் கண்டம் - நீலமணியின் நிறத்தைச் செய்யும் கழுத்து. காப்பினால் - காத்தல் தொழில் மேற்கொண்டதால். பணிகள் - அடியார்களின் இருவினை நீக்கும் செயல்கள். பேயர் - சிவகணத்தார்.

Koviloor Digital Library

2050. இயக்கர் கின்னர ரிந்திரன் தானவர்
நயக்க நின்றவன் நான்முகன் ஆழியான்
மயக்க மெய்தவன் மாலெரி யாயினான்
வியக்குந் தன்மையி னானெம் விகிர்தனே. 25

2051. அரவ மார்த்தன லாடிய அண்ணலைப்
பரவு வாரவர் பாவம் பறைதற்குக்
குரவை கோத்தவ னுங்குளிர் போதின்மேல்
கரவில் நான்முக னுங்கரி யல்லரே. 26

2052. அழலங் கையினன் அந்தரத் தோங்கிநின்
றுழலும் மூவெயி லொள்ளழ லூட்டினான்

25. பொ-ரை: வியக்கும் தன்மை உடையவனாகிய எம் மேலோன், இயக்கர், கின்னரர், இந்திரன், தானவர் முதலியோர் விரும்ப நின்றவனும், பிரமனும் திருமாலும் மயக்கம் எய்த வன்மை உடைய பேரெரிவடிவமாயினான்.

கு-ரை: இயக்கர் - கந்தருவர். கின்னரர் - அசுவமுகமும் நரசரீரமும் உள்ளவர். கின்னரம் என்னும் வாத்தியத்தை வாசிப்பவர். தானவர் - அசுரர். நயக்க - விரும்ப. ஆழியான் - சக்கிராயுதத்தை உடையவன். மயக்கம் எய்தவன் - அடிமுடி காணாது மயங்கச் செய்தவன். மால்எரி - பெரிய நெருப்பு. விகிர்தன் - வேறுபாடில்லாதவன்.

26. பொ-ரை: பாம்பினைக்கட்டி அனலோடு ஆடிய அண்ணலை வணங்குவோர் பாவம் கெடுதற்குக் குரவைக் கூத்து ஆடியவனாகிய திருமாலும், குளிர்தாமரையின் மேல் கரத்தலில்லாத பிரமனும் சான்றாவார் அல்லரோ?

கு-ரை: அரவம் - பாம்பு. ஆர்த்த - கட்டிய. மறைதற்கு - நீங்குதற்கு. குரவை - பேயோடு கைகோர்த்து ஆடும் திருமால் கூத்து. குளிர்போதின்மேல் - குளிர்ந்த தாமரைப்பூவின் மேல் (உறையும்). கரவில் - வஞ்சனையில்லாத; கரியல்லர் - சாட்சியாவார் இல்லை.

27. பொ-ரை: இறைவன் அழலை அழகிய கையிற்கொண்டவனும், வானில் ஓங்கி நின்று திரியும் மூன்று மதில்களையும் ஒள்ளழல்

Koviloor Digital Library

தழலுந் தாமரை யானொடு தாவினான்
கழலுஞ் சென்னியுங் காண்டற் கரியனே. 27

2053. இளமை கைவிட் டகறலு மூப்பினார்
வளமை போய்ப்பிணி யோடு வருதலால்
உளமெ லாமொளி யாய்மதி யாயினான்
கிளமை யேகிளை யாக நினைப்பனே. 28

2054. தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை யறியில் தலைப்படும்
தன்னிற் றன்னை யறிவில னாயிடில்
தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே. 29

ஊட்டியவனும், எரியென மலரும் தாமரையிலுள்ள பிரமனோடு திருமாலும் பறந்தும் தாவியும் தன் கழலடிகளையும் சென்னியையும் காண்டற்கரியவனுமாவான்.

கு-ரை: அழல் அம்கையினன் - நெருப்பை ஏந்திய அழகிய கையையுடையவன். அந்தரத்து - ஆகாயத்தில். ஓங்கி நின்று - உயர்ந்து பறந்து நின்று. உழலும் - திரியும். தழலும் - நெருப்புப்போல் சிவந்திருக்கும். தாமரையானொடு - திருமாலோடு. தாவினான் - அன்னமாய்ப் பறந்து சென்ற பிரமன். கழல் - திருவடி.

28. பொ-ரை: இளமை கைவிட்டு நீங்குதலும் உடல் வளமையெல்லாம் கெட்டுப் பிணியோடு மூப்பு வருதலால், உள்ள மெல்லாம் ஒளியாகி மதியாகிய பெருமானின் உரிமையையே உறவாக யான் நினைப்பேன்.

கு-ரை: அகறலும் - நீங்கியதும். மூப்பினார் - முதுமையை உடையவராய். இகழ்ச்சி குறித்த பன்மை. வளமைபோய் - உடல் வளம் கெட்டு. பிணியோடு - நோயோடு. மதியாயினான் - அறிவின் வடிவ மானவன். கிளமையே கிளையாக நினைப்பன் - அவ்வுறவையே உறவாக எண்ணுபவன்.

29. பொ-ரை: தன்னில் தன்னை அறியும் தலைமகனாகிய இறைவன் தன்னில் ஒருவன் தன்னையறிந்தால் தலைப்படுவான்;

Koviloor Digital Library

2055. இலங்கை மன்னனை யீரைந்து பத்துமன்
றலங்க லோடுட னேசெல வூன்றிய
நலங்கொள் சேவடி நாடொறும் நாடொறும்
வலங்கொண் டேத்துவார் வானுல காள்வரே. 30

திருச்சிற்றம்பலம்

தன்னில் தன்னை அறியும் அறிவிலனாகில் தன்னில் தன்னையும் சார்தற்கு அரிய இயல்பினன் ஆவன்.

கு-ரை: *தன்னில்தன்னை* - தன்னுடைய உடலில் இறைவனை. அறியில் - அறிவார்களேயானால். தலைப்படும் - அவரவர் உள்ளத்தில் இடம்பெறுவான். அறிவிலனாய்விடில் - அங்ஙனம் ஒருவன் அறியா தொழிவானேயானால். தன்னில் தன்னையும் சார்தற் கரியன் - நம்மிடமுள்ள பெருமானை அடைதற்கு அரியவனாவான்.

30. பொ-ரை: இராவணனைப் பத்துத் தலைகளும் அன்று அணிந்திருந்த மாலைகளோடு உடனே கெட ஊன்றிய நலம் உடைய பெருமான் சேவடிகளை நாள்தோறும் வலம்கொண்டு வழிபடுவார் வானுலகினை ஆள்வர்.

கு-ரை: ஈரைந்து பத்தும் - இருபது தோள்களும். நாடொறும் - தினந்தோறும். தினந்தோறும் வணங்குதலின் இன்றியமையாமை குறித்தது.

திருநாவுக்கரசர் புராணம்

நில்லாத வுலகியல்பு கண்டு நிலை யாவாழ்க்கை
யல்லேனென் றறந்துறந்து, சமயங்க ளானவற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பரரு ளாமையினாற்
கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகுவார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

98. பொது

பதிக வரலாறு

சிந்தையுட் சிவமாய்நின்ற உருவினைக் கண்டு கொண்டது என் உள்ளம் என்ற கருத்தே பதிகம் முழுதும் வருதலால் உள்ளத் தொகை எனப்பட்டது.

உள்ளத் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 211 பதிக எண்: 98

திருச்சிற்றம்பலம்

2056. நீற லைத்ததோர் மேனி நிமிர்சடை
ஆற லைக்கநின் றாடும் அமுதினைத்
தேற லைத்தெளி யைத்தெளி வாய்த்ததோர்
ஊற லைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. 1

2057. பொந்தை யைப்புக்கு நீக்கப் புகுந்திடும்
தந்தை யைத்தழல் போல்வதோர் மேனியைச்
சிந்தை யைத்தெளி வைத்தெளி வாய்த்ததோர்
எந்தை யைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. 2

1. பொ-ரை: திருநீறு நன்கு பூசப்பெற்ற ஒப்பற்ற மேனியையும், ஓங்கிய சடையில் கங்கையாறு அலைவீச நின்று ஆடும் அமுதமும், தேனும் அதன் தெளிவும் அத்தெளிவுவாய்த்த ஊறல் போல்வானுமாகிய பெருமானை என் உள்ளம் கண்டு கொண்டது.

கு-ரை: நீறலைத்ததோர் மேனி - திருநீறு நிரம்பப்பூசிய திருமேனி. நிமிர்சடை - கட்டி உயர்ந்த சடை. ஆறு அலைக்க - கங்கை யாறு அலைவீச. அமுது - அமுதம் போன்றவன், தேறல் - தேன். தெளிவு - தேனின் தெளிவு. தெளிவாய்த்ததோர் - தெளிதல் பொருந்தியதொரு. ஊறல் - ஊறிய தெளிந்த நீர்.

2. பொ-ரை: பொந்துபோல்வதாகிய உடலிற்புகுந்து அதன் கட்டினை நீக்கப் புகுந்திடும் தந்தையும், தீப்போன்ற மேனியை உடையவனும், என் சிந்தையாக உள்ளவனும், தெளிவாகவும் அத்தெளிவு வாய்த்த எந்தையும் ஆகி நின்ற பெருமானை என் உள்ளம் கண்டுகொண்டது.

Koviloor Digital Library

2058. வெள்ளத் தார்விஞ்சை யார்கள் விரும்பவே
வெள்ளத் தைச்சடை வைத்த விகிர்தனார்
கள்ளத் தைக்கழி யம்மன மொன்றிநின்
றுள்ளத் தில்லொளி யைக் கண்ட துள்ளமே. 3

2059. அம்மா னையமு தின்னமு தேயென்று
தம்மா னைத்தத்து வத்தடி யார்தொழும்
செம்மா னநிறம் போல்வதோர் சிந்தையுள்
எம்மா னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. 4

கு-ரை: பொந்தை - பொய். புக்குநீக்க - முயன்றுநீக்க. பொந்தையை - பொய்யாகிய உடலின்கண்.

புக்கு - புகுந்து. நீக்கப் புகுத்திடும் - நாமே அவனை நீக்கவும் நீங்கானாய் உடலில் சென்று புகும். தழல் - நெருப்பு. எந்தை - என்தந்தை.

3. பொ-ரை: இன்ப வெள்ளத்தாராகிய விஞ்சையர்கள் விரும்பும்படி கங்கைவெள்ளத்தைச் சடையில்வைத்த மேலோரை மனம் கள்ளத்தை நீங்க உள்ளம் ஒன்றியிருந்து உள்ளத்தில் ஒளியாகக் கண்டது.

கு-ரை: வெள்ளத்தார் - வெள்ளம்போல நிறைந்த கருணையை உடையவர். விஞ்சையார்கள் விரும்ப - வித்தியாதரர்கள் விரும்ப. வெள்ளத்தை - கங்கையை, கள்ளத்தைக் கழிய - ஆணவம் நீங்க.

4. பொ-ரை: அம்மானை, அமுதே! இன்னமுதே! என்று தத்துவத்தை அறிந்த அடியார் தொழும் நம் தலைவனும் செம்மை யாகிய பெருமை மிக்க நிறம்போல்வதாகிச் சிந்தையுள் இருக்கும் எம்மானுமாகிய பெருமானை என் உள்ளம் கண்டு கொண்டது.

கு-ரை: அம்மானை - தலைவனை. அமுதின் அமுதே. அமுதத்தினும் மேலான அமுதம் போன்றவனே. தம்மானை - தனக்குத் தானே தலைவனை. தத்துவத்து அடியார் - தத்துவங்களை அறிந்த அடியவர்கள். செம்மானநிறம் - செம்மையான நிறம்.

Koviloor Digital Library

2060. கூறே றும்உமை பாகமோர் பாலராய்
ஆறே றுஞ்சடை மேற்பிறை சூடுவர்
பாறே றுந்தலை யேந்திப் பலவி(ல்)லம்
ஏறே றுமெந்தை யைக்கண்டதெ னுள்ளமே. 5

2061. முன்னெஞ் சம்மின்றி மூர்க்கராய்ச் சாகின்றார்
தந்நெஞ் சந்தமக் குத்தாமி லாதவர்
வன்னெஞ் சம்மது நீங்குதல் வல்லீரே
என்னெஞ் சிலீச னைக்கண்டதெ னுள்ளமே. 6

2062. வென்றா னைப்புல னைந்துமென் தீவினை
கொன்றா னைக்குணத் தாலே வணங்கிட

5. பொ-ரை: கூறாகப் பொருந்தி உமையொரு பாகராகிக், கங்கை ஏறிய சடைமேற் பிறை சூடியவராய், பருந்துகள் ஏறிப்பறக்கும் வெண்டலை ஏந்திப் பல இல்லங்கள் தோறும் இடபம் ஏறிவரும் எந்தையை என் உள்ளம் கண்டு கொண்டது.

கு-ரை: கூறுஏறும் - உடம்பில் ஒரு பாதியில் பொருந்தும். பாறு ஏறும் தலையேந்தி - இடுகாட்டுள் பொருந்திய மண்டையோட்டை ஏந்தி. ஏறுஏறும் - இடபத்தில் ஏறும்.

6. பொ-ரை: தம் நெஞ்சம் தமக்குத்தாம் இல்லாத சிலர், முன்னுதற்குரிய நெஞ்சம் இல்லாமல் மூர்க்கராய் வாழ்ந்து சாகின்றார்; வன்மையுடைய நெஞ்சத்தை நீங்க வல்லமை உடையவர்களே! என் நெஞ்சில் ஈசனை என்னுள்ளம் கண்டுகொண்டது.

கு-ரை: முன் - நினைக்கும். நெஞ்சமின்றி - மனத்தின் கண் இரக்கமின்றி. மூர்க்கராய் - கொடியவராய், சாகின்றார் - இறந்து படுகின்றார்கள். தன்நெஞ்சம் தமக்குத்தாம் இலாதவர் - தன்நெஞ்சினா லாகும் நன்மைகளைத் தாமேதேடிக்கொள்ளாதவர். வன்னெஞ்சம் - கொடியமனம். நீங்குதல்வல்லீரே - நீக்கிக் கொள்ளுதலில் வல்லவர்களே.

7. பொ-ரை: புலன்கள் ஐந்தும் வென்றவனும் என் தீய வினைகளைக் கொன்றவனும், குணத்தால் வணங்கிட நன்றாக நல்ல

Koviloor Digital Library

நன்றா நன்மனம் வைத்திடு ஞானமாம்
ஒன்றா னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. 7

2063. மருவி னைமட நெஞ்சம் மனம்புகும்
குருவி னைக்குணத் தாலே வணங்கிடும்
திருவி னைச்சிந்தை யுட்சிவ னாய்நின்ற
உருவி னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. 8

2064. தேச னைத்திரு மால்பிர மன்செயும்
பூச னைப்புண ரிற்புணர் வாயதோர்
நேச னைநெஞ்சி னுள்நிறை வாய்நின்ற
ஈச னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. 9

மனத்தில் வைக்கும் ஞானம் என்னும் ஒப்பற்ற பொருளை உடையானுமாகிய பெருமானை என் உள்ளம் கண்டுகொண்டது.

கு-ரை: புலனைந்தும் வென்றானை என்க. குணத்தாலே வணங்கிட - நற்குணங்களினால் வணங்க. நன்றா நன் மனம் - நன்றாகிய நல்ல மனத்தின்கண். ஞானம்வைத்திடும் - அறிவொளியை உண்டாக்கித் தரும். ஒன்றானை - ஒரு வடிவாய் விளங்குபவனை. ஞானமாகிய ஒன்றினால் அறியப்படுபவனை.

8. பொ-ரை: அறிவற்ற மடநெஞ்சமே! மனம்புகும் குரு நாதனும், குணத்தால் வணங்கத்தக்க திருவும் ஆகிய பெருமானைப் பொருந்தினாய்; சிந்தையுள் சிவனாய்நின்ற உருவினை என்னுள்ளம் கண்டு கொண்டது.

கு-ரை: மருவினை - மருவினையையாய். மடநெஞ்சமே - அறிவற்ற மனமே. குணத்தாலே - நற்குணங்களினாலே. திருவினை - செல்வவடிவாய் உள்ளவனை. உரு - முன்னர் மறைந்து நின்று பின்னர் நினைப்பில் உருவெளிப்பாடுபெற்ற நிலை.

9. பொ-ரை: ஒளி உடையவனும், திருமாலும், பிரமனும் செய்யும் பூசனைகள் பொருந்தினால் அங்குப் பொருந்துகின்ற விருப்பம் உடையவனும், நெஞ்சுக்குள் நிறைவாகி நின்ற ஈசனுமாகிய பெருமானை என் உள்ளம் கண்டுகொண்டது.

Koviloor Digital Library

2065. வெறுத்தா னைம்புல னும்பிர மன்தலை
அறுத்தா னையரக் கன்கயி லாயத்தைக்
கறுத்தா னைக்கா லினில்விர லொன்றினால்
ஒறுத்தா னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: தேசு - ஒளி. பூசனைபுணரில் - வழிபாடு கூடினால் புணர்வாயதோர் - நம்மோடு கலந்து நிற்பதொரு. நேசன் - அன்பன்.

10. பொ-ரை: ஐம்புலன்களை வெறுத்தவனும், பிரமன் தலையினை அறுத்தவனும், இராவணன் திருக்கயிலாயத்தின் மேற்சினந்த போது காலினில் திருவிரல் ஒன்றினால் ஒறுத்தவனும் ஆகிய பெருமானை என் உள்ளம் கண்டுகொண்டது.

கு-ரை: ஐம்புலனும் வெறுத்தான் என்க. கறுத்தானை - சினந்தவனாகிய இராவணனை. ஒறுத்தானை - தண்டித்தவனை.

திருநாவுக்கரசர் புராணம்

பேராத பாசப் பிணிப்பொழியப் பிஞ்ஞகன்பால்
ஆராத வன்புபெற வாதரித்த வம்மடவார்
நீரார் கெடிலவட நீள்கரையி னீடுபெருஞ்
சீரார் திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்தார்.

சென்றுதிரு வீரட்டா னத்திருந்த செம்பவளக்
குன்றை யடிபணிந்து கோதில் சிவச்சின்னம்
அன்று முதற்றாங்கி யார்வமுறத் தங்கையால்
துன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினார்.

-தி.12 சேக்கிழார்.

Koviloor Digital Library

99. பொது

பதிக வரலாறு:

பாவமும் பழியும் நீங்கும் வழியை முதல் திருப்பாடல் சொல்வதால் இப்பெயர் எய்திற்று.

பாவநாசத் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 212 **பதிக எண்: 99**

திருச்சிற்றம்பலம்

2066. பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடு மவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே. 1

2067. கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே. 2

1. பொ-ரை: பாவமும் பழியும் ஆகிய பற்றுக்கள் அறுதலை விரும்புபவர்களே! பஞ்சகவ்வியம் உகந்து திருவபிடேகம் கொள்ளும் அப்பெருமான் கழலை மகிழ்ந்து மேவுபவராய் நினைவீராக; காத்து ஆள்வோனாகிய இறைவன் கலந்து அருள் செய்வான்.

கு-ரை: பாவமும் பழி பற்று - பாவமும் பழி பற்றியிருத்தலும். அற - நீங்க. வேண்டுவீர் - விரும்புகின்றவர்களே. ஆவில் அஞ்சு - பசுவிடம் உண்டாவனவாய பஞ்சகவ்வியம். உகந்து - மகிழ்ந்து. ஆடும் - அபிடேகம் கொள்ளும். கழல் - திருவடிகளை. மேவராய் - விரும்புபவராய். உள்குமின் - நினையுங்கள். காவலாளன் - காத்தல் செய்பவனாய அப்பரமன். கலந்து - நம்மோடு உடனாய் நின்று.

2. பொ-ரை: கங்கை நீராடிலும், காவிரியில் நீராடிலும், மணமும் குளிர்ச்சியும் உடைய குமரித்துறையில் நீராடிலும், பெருகி ஒலிக்கின்ற கடல் நீர்த்துறைதோறும் நீராடிலும் என்ன பயன்? எங்கும் இறைவன் என்னாதவர்க்கு இவற்றாற் பயன் இல்லை.

Koviloor Digital Library

2068. பட்ட ராகிலென் சாத்திரங் கேட்கிலென்
இட்டு மட்டியு மீதொழில் பூணிலென்
எட்டு மொன்று மிரண்டு மறியிலென்
இட்ட மீச னெனாதவர்க் கில்லையே. 3

2069. வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே. 4

கு-ரை: கொங்கு - மணம் நிறைந்த. ஓங்கு என்பதன் குறுக்கல் ஒங்கு. மா - பெரிய. ஓதநீர் - அலைநீர்.

ஈசன் ஒருவன் இருக்கின்றான் அவனருள்பெற இத்தீர்த்தமாடு கின்றோம் என்று எண்ணாதவர்க்கு அத்தீர்த்தமாடுவதால் விளையும் பயன் இல்லை.

3. பொ-ரை: பட்டர் ஆயினும், சாத்திரங்கள் பல கேட்பினும், இட்டும் சேர்த்தும் கொடுக்கும் தொழில் பூணிலும், எட்டும் ஒன்றும் இரண்டும் அறிந்தாலும் என்ன பயன்? விருப்பம் இறைவனுக்கு என்னாதவர்க்கு இவற்றாற் பயன் இல்லையாம்.

கு-ரை: பட்டர் - குருக்கள். இட்டும் - கொடைத்தொழில் செய்தும். அடுதல் - விருந்து சமைத்தல். ஈதொழில் - அடியார் களுக்குக் கொடுக்கும் தொழில். பூணில் என் - மேற்கொண்டால் என்ன எட்டும் அதனோடு ஒன்றும் இரண்டும் என்க. இட்டம் ஈசன் எனாதவர்க்கு - விருப்பம் ஈசனிடத்து உண்டு என்று சொல்லா தவர்க்கு.

4. பொ-ரை: வேதம் ஓதினாலும், வேள்விகள் செய்தாலும், நீதிநூல்கள் பலவற்றை நித்தமும் பயிற்றினாலும், ஆறங்கங்களை ஓதி உணர்ந்தாலும் என்ன பயன்? ஈசனை உள்குபவர்க்கு அன்றி மற்றவர்க்கு இவற்றாற் பயன் இல்லையாம்.

கு-ரை: நித்தல் - நாடோறும். பயிற்றில் என் - பயின்றால் என்ன பயன் விளைக்கும். இல்லை - அருள் இல்லை என்க.

Koviloor Digital Library

2070. காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி நிற்கிலென்
ஆலை வேள்வி யடைந்தது வேட்கிலென்
ஏல ஈசனென் பார்க்கன்றி யில்லையே. 5

2071. கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி யிரும்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழிந்துவான் நோக்கிலென்
ஞான னென்பவர்க் கன்றிநன் கில்லையே. 6

2072. கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்

5. பொ-ரை: காலையில் சென்று கலந்து நீரில் மூழ்கினாலும், வேளைகள் தோறும் விதிவழிநின்றாலும், ஆலை போன்று வேள்வி அடைந்து வேட்பிலும் என்னபயன்? உள்ளம் பொருந்த இறைவன் என்பார்க்கேயன்றி மற்றவர்க்கு இவற்றாற் பயன் இல்லை.

கு-ரை: காலை சென்று - சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னுள்ள காலைப்போதிலேயே சென்று. கலந்து - தண்ணீரோடுகூடி. வேலைதோறும் - இடந்தோறும். விதிவழி - நீதி நூல் வழியே. நிற்கில்என் - ஒழுகினால் விளையும் பயன்யாது? ஆலை - வேள்வி செய்யுமிடம். ஏல - மனம்பொருந்த.

6. பொ-ரை: காட்டுப் பகுதிகளிற் கலந்து திரிந்தாலும், இழிவின்றிப் பெருந்தவம் செய்தாலும், ஊன் உண்ணுதலையொழிந்து வானத்தை நோக்கினாலும் என்ன பயன்? ஞானமயமாகியவன் என்பவர்க்கேயன்றி மற்றவர்க்கு இவற்றால் நற்பயன் இல்லை.

கு-ரை: கானநாடு - காடும் நாடும். கலந்து மாறிமாறிக் கூடி. திரியிலென் - க்ஷேத்திராடனம் புரிவதால் என்ன பயன் விளையும். ஈனம் - குற்றம். இரும் - பெரிய. ஊனை உண்டல் ஒழிந்து - ஊனுண்டலை விடுத்து. வான் நோக்கிலென் - மேலுலக ஆராய்ச்சியில் ஈடுபட்டால் என்ன பயன்? ஞானன் - ஞானவடிவினன்.

7. பொ-ரை: வேடங்கள் கூடியவராகித் திரண்டாலும், உடலை வாடிவருத்தித் திரிந்தாலும் என்ன பயன்? ஆடல்வேடத்தை

Koviloor Digital Library

ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே. 7

2073. நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்ற மேறி இருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்று மீசனென் பார்க்கன்றி யில்லையே. 8

2074. கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே. 9

உடையவனாகிய அம்பலக்கூத்தனைப் பாடுபவர்க்கு அல்லால் மற்றையோர்க்குப் பயன் இல்லை.

கு-ரை: கூட வேடம் - தாழ்வை மறக்கக்கூடிய வேடம். குழுமிலென் - கூடினால் என்ன பயன் விளையும். வாடி - மெய்வருந்தி. ஊன் - மாமிசம். வருத்தி - இறக்கும்படி வருத்தி உண்டு. ஆடல் வேடத்தன் - ஆடுகின்ற தோற்றமுடையவன். பாடலாளர்க்கு அல்லால் - பாடுபவர்களுக்கேயல்லாமல்.

8. பொ-ரை: நன்கு தவம்நோற்றாலும், உண்ணாவிரதம் கிடப்பினும், மலையில் ஏறிப் பெருந்தவம் செய்தாலும், சென்று நீரிற் குளித்துத் திரிந்தாலும் என்ன பயன்? என்றும் ஈசன் என்பார்க்கேயன்றி மற்றையோர்க்கு இவற்றாற் பயன் இல்லை.

கு-ரை: நோற்றல் - தவம் செய்தல். குன்றம் - மலை. இருந்தவம் - பெரியதவம்.

9. பொ-ரை: கோடிதீர்த்தங்கள் தோறும் கலந்து குளித்து அவற்றில் நீரர்டிக் கிடந்தாலும் அரனிடத்து அன்பு இல்லையாயின். ஓடும் இயல்பினை உடைய நீரை ஓட்டைக் குடத்திலே நிறைத்து மூடிவைத்திட்ட மூர்க்கன் ஒருவனின் செயலோடே அது ஒக்கும்.

கு-ரை: கோடி - பலவாய எண்ணிற்கு ஓர் வரையறை. பல

Koviloor Digital Library

2075. மற்று நற்றவஞ் செய்து வருந்திலென்
பொற்றை யுற்றெடுத் தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற் சேவடி
பற்றி லாதவர்க் குப்பய னில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

என்பது பொருள். ஓடும் நீரினை - ஓடும் தண்ணீரை. அட்டி - அள்ளி முகந்து. மூர்க்கன் - அறிவில்லாதவன்.

10. பொ-ரை: மற்றும் நற்றவங்கள் பல செய்து வருந்தினால் என்ன பயன்? திருக்கயிலாயத்தை உற்று எடுத்த இராவணனது உடல் புகுந்து இற்றுப்போம்படிப் பொருந்திய நல்லொலிக் கழல்களணிந்த சேவடியினிடத்துப் பற்றுதல் இல்லாதவர்க்குப் பயனே இல்லை.

கு-ரை: பொற்றை - மலை. இங்கே கயிலையைக் குறித்தது. உடல் புக்குஇற - உடல் அகப்பட்டு நெரிய. நற்குரையார் கழல் - நல்ல ஒலி பொருந்திய வீரக்கழல்.

திருநாவுக்கரசர் புராணம்

நாளுமிகும் பணிசெய்து
குறைந்தடையு நன்னாளிற்
கேளுறுமன் புறவொழுகுங்
கேண்மையினார் பின்பிறந்தார்
கோளுறுதீ வினைமுந்தப்
பரசமயங் குறித்ததற்கு
மூளுமனக் கவலையினான்
முற்றவருந் துயருழந்து.

-தி.12 சேக்கிழார்

Koviloor Digital Library

100. பொது

பதிக வரலாறு:

சிவபெருமான் முதன்மைத் தன்மையாம் வரலாற்றை விரித்துரைப்பதால் இப்பெயர் பெற்றது.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

ப. தொ. எண்: 213 பதிக எண்: 100

திருச்சிற்றம்பலம்

2076. வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயக னாதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. 1

2077. செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்த னென்றரி யோடு பிரமனும்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே. 2

1. பொ-ரை: வேதங்களுக்கு நாயகனும், வேதியர்க்கு நாயகனும், உமாதேவியின் நாயகனும், பெருந்தவம் உடைய முனிவர்களுக்கு நாயகனும், ஆதிநாயகனும், ஆதிரை என்ற விண்மீனுக்கு நாயகனும், பூதங்களுக்கு நாயகனும் புண்ணியமூர்த்தி ஆவான்.

கு-ரை: வேதநாயகன் - வேதங்களின் தலைவன். வேதியர் - வேதம் ஓதுபவர். மாது - பார்வதி. மாதவர் - சிறந்த தவத்தைச் செய்பவர்கள். ஆதிநாயகன் - எல்லார்க்கும் முதன்மையான தலைவன். ஆதிரை நாயகன் - திருவாதிரைநட்சத்திரத்திற்குரியவன். பூதநாயகன் - பூதகணங்களுக்குத் தலைவன். இப்பாடல் தி.5 ப.73 பா.7ஆம் பாடலோடு ஒத்திருக்கிறது.

2. பொ-ரை: மீண்டும் மீண்டும் செத்துச் செத்துப் பிறப்பதே தெய்வமென்று பொய்யாகக் கருதிப் பக்திசெய்யும் மனப்பாறை உடையவர்கட்கு இறைவன் என்று திருமாலோடு பிரமனும் துதி செய்யநின்ற சோதி உள்ளத்திற் பொருந்துமோ?.

கு-ரை: தே என்று - தெய்வத்தன்மையுடையது என்று. பத்தி

Koviloor Digital Library

2078. நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈச னொருவனே. 3

2079. வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலு மேழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே. 4

செய் - சுவர்க்கபோகங்களை அநுபவிக்க விரும்பிப் பக்தி செய்யும். மனப்பாறைகளுக்கு - பாறைபோன்ற கல் மனம் உடையவர்க்கு. ஏறுமோ - என்சொல் காதில் ஏறுமோ. அத்தன் - தலைவன். துத்தியம் செய - துதிக்க. துத்யம் - துதிக்கும்பாட்டு.

3. பொ-ரை: நூறுகோடி பிரமர்கள் அழிந்தனர்; ஆறுகோடி திருமால்களும் அங்ஙனமே ஆயினார்கள்; நீர் பொங்கிப்பெருகும் கங்கையாற்று மணலைவிட எண்ணிக்கையற்ற இந்திரர் நிலையும் அவ் வண்ணமே; முடிவற்றவனாய்த் திகழ்பவன் ஒப்பற்றவனாகிய இறைவன் மட்டுமே.

கு-ரை: நூறுகோடி ஆறுகோடி என்பன - பல என்பதற்குச் சொல்லிய எண்ணிக்கை. நொந்தினார் (நுங்கினார் என்றும் பாடம்) - அழிந்தனர். ஆறுகோடி - பல. அங்ஙனே - அவ்வாறே அழிந்தனர். ஏறு - மிக்க. இந்திரன் கங்கை மணலை எண்ணில் எத்துணையாகுமோ அத்துணையோர் இறந்தனர். ஈறு இலாதவன் - அழிவு இல்லாதவன்.

4. பொ-ரை: அறிவற்றவர்களே! ஒருவரோடொருவர் வாதம் செய்து மயங்கும் மனத்தை உடையவர்களாய் ஏது சொல்லுவீராகிலும், யாதோர் தேவர் எனப்படுவார்க்கெல்லாம் தேவன் மகாதேவனாகிய சிவபிரான் மட்டுமன்றி வேறு யாரும் இல்லை.

கு-ரை: வாது - சொல்வாதம். மயங்கும் - பொய்யை மெய் என்று எண்ணும். ஏது சொல்லுவீராகிலும் - பொருந்தாத மொழிகளை உண்மை போலச் சொல்லுதல் முதலான எவ்வார்த்தைகளைச் சொல்லுபவர்கள் ஆனாலும். ஏழைகாள் - அறிவற்றவர்களே. யாதோர் தேவர் எனப்படுவார்க்கெலாம் மாதேவன் அலால் தேவர் மற்றில்லையே - ''யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி

Koviloor Digital Library

2080. கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகட லென்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே. 5

2081. பேய்வ னத்தமர் வானைப் பிரார்த்தித்தார்க்
கீவ னையிமை யோர்முடி தன்னடிச்
சாய்வ னைச்சல வார்கள் தமக்குடல்
சீவ னைச்சிவ னைச்சிந்தி யார்களே. 6

2082. எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்

யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்'' என்னும் *சித்தியார்* வாக்கோடு ஒப்பிட்டுணர்க.

5. பொ-ரை: கிணற்றாமை கடலாமையை நோக்கி இக் கிணற்றோடொக்குமோ கடல்? என்று கூறுதலைப்போன்று தேவ தேவனாகிய சிவபெருமானின் பெருந்தன்மையைப் பாவிகளாகிய மக்கள் பார்த்தற்கு அரிது என்பர்.

கு-ரை: கூவல் - கிணறு. குரை - ஒலிக்கின்ற. பாவகாரிகள் - பாவச்செயல் செய்பவர்கள். பார்ப்பரிது - இறைவனது தன்மையைக் காணுதல் முடியாது.

6. பொ-ரை: பேய்களோடு கூடிச் சுடுகாட்டில் அமர்வானும், வேண்டியிருந்தவர்களுக்கு அருள்வழங்குவானும், தேவர்கள் முடிகள் திருவடிகளில் சாய்க்கப்பெறுவானும், தமக்குடலினுள் சீவனுமாய்ச் சிவனுமாய் இருப்பவனை வஞ்சனை உடையவர்கள் சிந்தியார்கள்.

கு-ரை: பேய்வனம் - இடுகாடு. ஈ வன் - ஈ பவன் என்பதன் இடைக்குறை. அடிச்சாய்வன் - அடியில் சாயப்பெற்றவன். சலவார் கள் - வஞ்சனையுடையவர்கள். உடல் சீவன் - உடலைச் சீவன் உண் ணின்றியக்குதல் போல அவர்களுக்குள் நின்று ஆட்கொள்ளுபவன்.

7. பொ-ரை: வேள்விகளில் அக்கினி வளர்ப்பார்கள்; அவ் வக்கினி இறைவன் திருமேனி வகையாவது என்பதை உணரும் ஆற்றல் இல்லாதவர்கள் திருமாலுக்கும் பிரமனுக்கும் அரிய கடவுளைக் காண்டற்கு அயர்த்து நரிவிருத்தம் ஆகுவர்.

Koviloor Digital Library

அரிய யற்கரி யானை யயர்த்துபோய்
நரிவி ருத்தம்[1] தாகுவர் நாடரே. 7

2083. அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
அருக்க னாவா னரனுரு வல்லனோ
இருக்கு நான்மறை யீசனை யேதொழும்
கருத்தி னைநினை யார்கன் மனவரே. 8

கு-ரை: எரி - வேள்வித்தீ. உருவருக்கம் - இறைவன் அட்ட மூர்த்தவர்க்கங்களில் தீ ஒன்றாதல். நரி விருத்தமதாகுதல் - நரியின் எண்ணம்போன்று பயனற்றதாதல். ''நரிவரால் கௌவச்சென்று நற்றசையிழந்ததொக்கும்''. (தி.4. ப.27. பா.5).

8. பொ-ரை: அந்தியில் சூரியன் பாதங்களை வணங்குவர்; சூரியனாவான் சிவபெருமானின் உருவம் அல்லனோ? இருக்கு முதலிய நான்கு வேதங்கள் இறைவனையே தொழும் கருத்தினைக் கல்மனம் படைத்தவர்களாய்ச் சிலர் நினைக்கமாட்டார்கள்.

[1]நரிவிருத்தம் என்பது நரியினது வரலாறு எனப் பொருள் படும். காட்டில் வேடனொருவன் யானையைக் கொல்ல ஓர் அம்பை எய்து மற்றோர் அம்பை வில்லில் பூட்டி வைத்துக் கொண்டிருந்தான். அவ் வேளையில் பாம்பு ஒன்று அவனைக் கடித்தது. தன்னைக் கடித்த பாம்பை வாளால் வெட்டிக்கொன்று தானும் மூர்ச்சித்து விழுந்து இறந்தான். ஒரே நேரத்தில் யானையும் பாம்பும் இறந்தன. வேடனும் இறந்தான். நரி ஒன்று அவ்வழியே வந்து அவற்றைக் கண்டு, அளவற்ற மகிழ்ச்சி கொண்டு, யானை ஆறுமாதத்திற்கு உணவாகும்; வேடனுடல் ஏழுநாட்களுக்கு உணவாகும்; பாம்பை ஒருநாளுக்கு உணவாக வைத்துக் கொள்வோம். இப்போது நம் பசிக்கு இவ்வேடன் கையில் இருக்கும் வில்லிலுள்ள நரம்பாலாகிய நாணைக் கடித்துச் சுவைத்துப் பசியைப் போக்கிக் கொள்வோம் என்று நினைத்து வில்லில் பூட்டி யிருந்த நாணை ஆவலோடு சென்று கடித்தது. உடனே இழுத்துக் கட்டப் பட்டிருந்த நாணறுந்த வில் திடீரென நிமிர்ந்தவேகத்தில் நரியின் வாயைக் கிழித்தது. நரியின் எண்ணக் கோட்டைகள் இடிந்தன. நரியும் இறந்தது. மக்களின் மனக்கோட்டைகள் ஒன்று நினைக்க ஒன்றாய் முடிதலை இக்கதை விளக்குகின்றது. பழங்காலத்திலேயே இக்கதை வழங்கியதாகத் தெரிகிறது. பிற்காலத்திலும் திருத்தக்கதேவர் இக்கதையை விருத்தப் பாடலால் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

2084. தாயி னும்நல்ல சங்கர னுக்கன்பர்
ஆய வுள்ளத் தமுதருந் தப்பெறார்
பேயர் பேய்முலை யுண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே. 9

2085. அரக்கன் வல்லரட் டாங்கொழித் தாரருள்
பெருக்கச் செய்த பிரான் பெருந் தன்மையை
அருத்தி செய்தறி யப்பெறு கின்றிலர்
கருத்தி லாக்கய வக்கணத் தோர்களே. 10

திருச்சிற்றம்பலம்

கு-ரை: அருக்கன் - சூரியன். அரனுரு - அட்டமூர்த்த வடிவங்களில் ஒன்று.

9. பொ-ரை: பேய்ப்பெண்ணினது பேய்முலைப்பாலினை உண்டு அவள் உயிர் போகச்செய்த திருமாலுடைய மாயத்துப் பொருந்திய மனத்தை உடையவர்கள் தாயினும் நல்லவனாகிய சங்கரனுக்கு அன்பர்கள் ஆகிய உள்ளத்து அமுது அருந்தப்பெறா இயல்பினராவர்.

கு-ரை: அமுது - அன்பராயவர் உள்ளத்து ஊறும் இறைவன் திருவருள். மாயன் - திருமால்.

10. பொ-ரை: கருத்தில்லாத கீழ்மைக்குணமுடைய மக்கள், இராவணனது வலிய அரட்டுத்தன்மையினை ஒழித்துப் பின்னும் பேரருள் பெருக்கச்செய்த சிவபெருமானின் பெருந்தன்மையை விருப்பம் புரிந்து அறியப்பெறுகிலர் ஆவர்.

கு-ரை: அரட்டு - துட்டச்செயல். அருத்தி - அன்பு. கயவக் கணம் - கீழ்மக்கட்கூட்டம்.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
ஐந்தாம் திருமுறை
மூலமும் - உரையும் நிறைவுற்றது.

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

பாட்டு முதற்குறிப்பகராதி

பாட்டு	பாட்டு எண்
அ	
அக்குமாமை	2039
அங்கமாறும்	1746
அங்கை ஆர	1261
அச்சமில்லை	1673
அஞ்சியா	1303
அஞ்சுமஞ்	1948
அடுத்துவந்	1447
அடும்புங்	1905
அட்டபுட்	1621
அட்டமா	1157
அட்டமூர்	1165
அணங்கு	1454
அண்டத்தா	1994
அண்டமாரி	2027
அண்டர்வாழ்	1458
அண்டவாணர்	1532
அண்டவான	1203
அதிரர்தேவ	1393
அந்தமில்	1897
அம்மானை	2059
அயிலாரம்	1778
அரக்கனாய	1651
அரக்கனார்	1864
அரக்கனாற்றலழித்தவழ	1375
அரக்கனாற்றலழித்தவன்	1699
அரக்கனீ	1983
அரக்கனைய	1111
அரக்கனைவி	1173
அரக்கன்	1375
அரக்கன்தன்	1557
அரக்கன்வல்	2085
அரக்கின்	1344
அரவணைப்	1719
அரவமார்	2051
அரவுகை	1455
அரிசிலின்	1682
அரிச்சிராப்	1912
அரிச்சுற்	1073
அரியநான்மறையா	1250
அரியநான்மறை	1166
அரியயன்	1911
அருக்கனங்	1749
அருக்கன்பா	2083
அருத்தமும்	1903
அருத்தனை	1110
அருந்திறல்	1549
அருப்புப்	1684
அருமறை	1858
அரும்பற்	1072
அருவராத	1430
அருவனாய்	1417
அரையார்	1606
அலங்கல்	1595
அலருநீரு	2006
அல்லலாக	1501
அல்லலாயின	1636
அல்லலில்	1489
அல்லலென்	1074
அல்லலோ	1776
அல்லனென்	1757
அல்லியான்	1404
அழகியோ	1797

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
அழலங்கை	2052
அளித்த ஆன்	1441
அற்றுப்பற்	1748
அனுசயப்	1727
அன்பனைப்	1692
அன்பினா	1867
அன்றுதா	1294
அன்னம்பாலிக்	1071
ஆ	
ஆட்டினாடிய	1400
ஆட்டினான்	1705
ஆணிபோல	1402
ஆதிநாதனட	1781
ஆதிநாதனம	1728
ஆதிப்பால	2001
ஆதிமாமலை	1943
ஆதியாய	2028
ஆதியானண்ட	1399
ஆதியானை	1999
ஆதியும்மர	1887
ஆப்பிநீ	2007
ஆரணப்	1751
ஆரியந்தமிழ்	1246
ஆர்த்ததோ	1387
ஆலத்தார்	1663
ஆலநீழ	1826
ஆலமுண்ட	1440
ஆலமாமயிற்	1555
ஆவின் பால்	1637
ஆவின்மேவி	1725
ஆளாகாரா	1956
ஆறுகால்	1949
ஆறுகொண்	1181
ஆறுசூடும்	1170
ஆற்றநீள்	1792
ஆற்றவும்	1765
ஆனிடையைந்	1409
ஆனையாறெ	1343
இ	
இடபமேறி	2044
இடுகுநுண்	1546
இடுவாரிட்ட	1698
இட்டதிட்ட	2029
இட்டமாயி	1526
இணர்ந்து	2045
இண்டைவண்	1350
இமையாமுக்	1540
இம்மையம்	1329
இம்மைவா	1208
இயக்கர்	2050
இயலுமா	1333
இரக்கமின்	1829
இரக்கமுன்	1923
இரங்காவன்	1700
இரண்டுமா	1945
இரவனையிடு	1408
இராவணஞ்	1568
இருந்துசொல்	1675
இருளின்	1348
இரைக்கும்	1528
இலங்கைமன்னனி	1759
இலங்கைமன்னனையி	2055
இலங்கைவேந்தனிரா	1547
இலங்கைவே ... தோளிற	1742, 1789
இலங்கைவே ... தோளிற்	1874
இலையினார்	1243
இல்லக்கோ	1267
இவள்நமைப்	1139
இழுக்கின்	1349
இளமைகை	2053
இளவெழுந்	2013

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
இளையகால	1735
இறையென்	1977
இறைவனா	1451
இன்பமும்	1817
இன்றுளார்	1908
இன்னங்கே	1981
இன்னவாறே	1938

ஈ

பாட்டு	பாட்டு எண்
ஈசனீச	1986
ஈசனென்னை	1987
ஈட்டும்மா	1677
ஈண்டுசெஞ்	1164
ஈறில்கூறை	2030

உ

பாட்டு	பாட்டு எண்
உச்சிமேல்	1414
உச்சிவெண்	2031
உடையர்	1476
உண்டுநஞ்	1130
உந்திச்சென்	1679
உம்பரானை	1696
உய்யுமாறி	1764
உரத்தினா	1589
உருகியூன்	1828
உருளும்போ	1383
உரைசெய்	1618
உரைதளர்	1500
உரைப்பக்	1300
உலந்தார்	1611
உழைத்துந்	1229
உள்ளமுள்கி	1863
உள்ளமுள்கலந்	1883
உள்ளமேயொ	1141
உள்ளாறாத	1750
உறவனாய்	1754
உறவுபேய்	1524
உற்றவர்	1602
உற்றாரா	1272
உன்னிவான	1449

ஊ

பாட்டு	பாட்டு எண்
ஊசலாம்	1529
ஊசலாள்	1877
ஊரிலாயென்	2032
ஊழிவண்ணமும்	1352
ஊனிலாவியி	1539
ஊனிலாவியு	1075
ஊனையார்	1150
ஊனோக்கு	1560

எ

பாட்டு	பாட்டு எண்
எங்கேஎன்னை	1569
எடுத்தவா	1354
எடுத்தவெல்	1188
எட்டுநாண்	1612
எட்டுமூர்த்தி	1951
எட்டவிட்ட	1372
எண்ணிநா	1843
எண்ணிலா	1909
எந்தமாத	1133
எந்தையெம்	2025
எந்தையே	2033
எப்போதும்	1122
எம்பிரானி	1148
எம்மையா	1137
எரிகொள்மேனிய	1152
எரிகொள்மேனியி	1453
எரிபெருக்	2082
எரியினாரிறை	1191
எருக்கங்	2009
எழுதுபாவை	1961
எளியனா	1304

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
என்புபூண்	1629
என்புமாமை	1428
என்பொனே	1195
என்னமாத	1840
என்னனென்	1723
என்னிலா	1275
என்னையேது	1971
ஏ	
ஏதுமொன்று	1672
ஏயிலானை	1964
ஏறினாரிமை	1424
ஏவம்ஏது	1730
ஏழித்தொன்	1617
ஏழுமாமலை	1950
ஏழைமாரி	1718
ஏறதேறு	1210
ஏறொப்பானை	1094
ஏற்றுவெல்	1185
ஏனவெண்	2034
ஏனவேடத்	1566
ஐ	
ஐயன்அந்த	2035
ஐயனேயர	1678
ஐயனேயழ	1473
ஒ	
ஒட்டிநின்ற	1398
ஒருத்தனார்	1077
ஒருத்தனாயு	1392
ஒருத்தனை	1690
ஒருத்தனோ	1204
ஒருத்தியை	1239
ஒருவராயிரு	1265
ஒருவனாகி	2036
ஒழுகுமாடத்	1382
ஒள்ளரிக்	1656
ஒள்ளியா	1573
ஒற்றியூரு	1305
ஒன்பதொன்	1952
ஒன்றுதானறி	1523
ஒன்றுபோ	1312
ஒன்றிமாலும்	1479
ஒன்றுவெண்	1944
ஓ	
ஓங்குமால்	1091
ஓட்டைமாட	1888
ஓதமாகடல்	1385
ஓதமார்கடலி	1592
ஓதமால்கடல்பா	1154
ஓதவண்ண	2037
ஓதாநாவன்	1288
ஓதினத்தெ	1659
ஓதுபைங்	1937
ஓமத்தோட	1837
ஓலிவண்டறை	1619
ஔ	
ஔவதன்	2038
க	
கங்கைதங்	2040
கங்கையாடி	2067
கங்கையைச்	1472
கடல்கழி	1899
கடவுளைக்	1092
கடுக்கண்	1183
கடுக்கையஞ்	1631

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்	பாட்டு	பாட்டு எண்
கடுத்ததேர்	1710	கழல்கொள்	1597
கடுத்தமேனி	1933	கழியக்கண்	1572
கட்டப்பட்	1491	கள்ளினாண்	1614
கட்டறுத்	1922	கறும்பியூர்	1815
கட்டாறே	1821	கறைகொள்	1550
கட்டியொக்	1117	கற்றுக்கொள்	1969
கட்டிவிட்	1321	கற்றைச்	1798
கட்டும்பாம்	1084	கனலுங்	1277
கட்டுவாங்	2011	கனல்அங்	1686
கணக்கிலா	1223	கனியினுங்	1214
கண்டந்தான்	1119	கன்றியூர்	1301
கண்டபேச்	1770	கன்னலைக்	1989
கண்டிபூண்	2014		
கண்டுகொள்	1973	**கா**	
கண்ணிறை	1818		
கண்ணினாற்	1196	காசனைக்	1984
கன்பலுக்	1786	காடுகொண்	1326
கண்பனிக்	1741	காட்சிபெற்	1940
கத்துகாளி	1452	காத்தனே	1200
கந்தவார்	1942	காமாத்தம்	1508
கயிலைநன்	1712	காமியஞ்	1292
கயிலைநாதன்	1734	காரணத்தர்	1866
கரப்பர்	1365	காருலாம் ... தாரினான்	1484
கருகுகண்	1359	காருலாமலர் ... தரானை	1090
கருகுகார்	1993	கார்கொள்	1975
கருத்தனாய்	1671	கார்க்கொண்	1358
கருத்தனைக்	1471	காலபாசம்	1914
கருப்புவெஞ்	1487	காலமான	1504
கரும்பினைக்	1990	காலைசென்று	2070
கரும்பொப்	1093	காலைபோய்	1151
கருவனே	1199	காவிரியின்	1801
கருவனைக்	1898	காழியானைக்	1100
கருவினைக்	1109	காற்றனைக்கடல்	1647
கரைந்து	1184	காற்றனைக்கலக்	1105
கலையொப்	1101	காற்றினுங்	1687
கல்லினோ	1796	காற்றினைக்	1235
கல்விஞானக்	1835	கானநாடு	2071
கவளமா	1580	கானமோடிக்	1919

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
கானறாதகடி	1427
கு	
குசையுமங்	1780
குணங்கள்	1259
குணங்கள்தோ	1332
குண்டரைக்	1654
குண்டர்	1514
குண்டுபட்ட	1694
குண்டுபட்டுக்	1481
குரவனார்	1585
குராமன்	1510
குலங்களென்	1846
குழலுங்கொன்	1360
குழலையாழ்	1189
குழைகொள்	1448
குளிர்புனற்	1702
குறிகளும்	1959
குறியினின்	1833
குறைக்காட்	1162
குறைவிலோங்	1460
குற்றங்கூடி	1724
குற்றமில்	1861
கூ	
கூசுவாரவர்	1808
கூடவேடத்	2072
கூடினானுமை	1563
கூவலாமை	2080
கூறேறும்	2060
கூற்றம்வந்	1917
கூற்றுத்	1307
கெ	
கெண்டைபோல்	1519

பாட்டு	பாட்டு எண்
கே	
கேடு மூடிக்	1640
கேளுமின்	1774
கை	
கைகொள்கூ	1433
கைப்பற்றித்	2024
கையனைக்	1822
கையினோடு	1862
கொ	
கொக்கரை	1132
கொக்கிற	1869
கொக்கின்	1625
கொடிகொள்	1386
கொடுங்கண்	1295
கொல்லத்	1496
கொல்லியான்	1407
கொல்லைமால்	1893
கொல்லையேற்றினர்	1396
கொல்லையேற்றுக்	1785
கொள்ளிடக்	1782
கொள்ளித்தீ	1413
கொள்ளிவெந்	1559
கொள்ளுங்	1456
கொன்றைசூடி	1795
கொன்றைமா	1207
கோ	
கோடல்கோங்கம்	1483
கோடிதீர்	2074
கோணன்மா	1600
கோணிக்கொண்	1118
கோலும்புல்	1463
கோனைக்கா	1376

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
ங	
ஙகரவெல்	2041
ச	
சங்குசோரக்	1939
சங்குலா	1849
சங்குவந்	1161
சங்கையுள்	1868
சடைக்கணாள்	1281
சடையனைச்	1240
சடையின்	1123
சந்தியானை	1507
சந்திரன்	1593
சமரசூர	1720
சரணமாம்	2042
சலவராயொ	1432
சனியும்வெள்	1284
சா	
சாக்கியத்	1553
சாத்திரம்	1674
சாம்பல்	1323
சாற்றிச்சொல்	1676
சாற்றினேன்	1976
சி	
சிட்டர்வான	1076
சிட்டனைச்	1875
சித்தந்தேறு	1457
சித்தர்கன்	1583
சித்தர்தே	1932
சிந்திப்பார்	2026
சிந்தையுட்	1552
சிந்தைவண்ணத்	1345
சிந்தைவண்ணமுந்	1347
சிந்தைவாய்	1335
சிரமஞ்	1293
சினக்குஞ்	1444
சினங்கொண்	1896
சினத்தினால்	1936
சீ	
சீர்த்தநன்	1638
சு	
சுடரைப்போ	1237
சுட்டநீறு	1412
சுண்ணத்தர்	1930
சுண்ணவெண்	1171
சுற்றமுந்துணைநன்	1771
சுற்றமுந்துணையும்	1904
சுற்றும்	1308
சுற்றுவார்	1425
சுனையுணீலஞ்	1299
சுனையுணீலம	1258
சூ	
சூலமேந்	1450
சூலம்மல்	1627
சூலவஞ்சனை	1242
செ	
செக்கரங்க	1755
செக்கரங்கெழு	1827
செங்கணாக	1327
செங்கணானும்	2015
செங்கண்மால்பிர	1860
செங்கண்மால்விடை	1608
செதுகறாம	1394

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
செத்துச்	2077
செம்பொனே	1390
செய்தவன்	1353
செய்யமேனியன்	1791
செய்யமேனிவெண்	1470
செருத்தனால்	1689
செருத்தனைச்	1661
செல்வமல்	1804
செறுவிப்பார்	1225
சே	
சேடனாருறை	1495
சொ	
சொரிவிப்பார்	1224
ஞு	
ஞமனென்	2043
ஞா	
ஞாலத்தானை	2000
ஞாலத்தார்தொ	1704
ஞாலமல்கு	1761
ஞாலமேவி	1197
ஞானங்காட்	1328
ஞானத்தாற்	1966
ஞானமாகிய	1439
த	
தங்கலப்	1800
தஞ்சேகண்	1571
தண்டவாளி	1138
தத்துவந்	1533
தந்தைதா	1773
தப்பிவான	1844
தமக்குநல்	1499
தரித்தவன்	1564
தருக்கிச்	1485
தருக்கிவெற்	1799
தருமந்தா	2046
தலையெலாம்	1652
தவளமா	1356
தளருங்	1254
தளரும்வா	1271
தளிர்கொள்	1715
தனகிருந்	1245
தனக்கே	1577
தன்னிற்றன்	2054
தன்னுருவை	1859
தா	
தாயத்தார்	1832
தாயினுநல்	2084
தாயுமாயெ	1913
தாரித்துள்	1620
தி	
திகழுஞ்சூழ்	2023
திங்கள்தங்	1269
திசையுமெங்	1783
திரட்டிரைக்	1658
திரியும்	1325
திரியும்மும்	1436
திருக்குவார்	1227
திருகுசிந்	1377
திருவினாதனுஞ்	1830
திருவினார்	1160
திருவினாய	1545
திளைக்கும்	1331
திறக்கப்	1576
தீ	
தீண்டற்	1578

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
தீதவைசெய்	1665
தீரன்தீத்	1190
தீர்த்தனைச்	1083
து	
துஞ்சும்	1159
துஞ்சும்போ	1991
துடித்ததோள்	1395
துட்டனாகி	1721
துணிவண்	1664
துணையிலா	1219
துண்ணெனா	1257
துன்பெலா	1135
துளைக்கை	1126
துள்ளுமான்	1928
துறவிநெஞ்	1290
துன்பமில்	1490
துன்பமின்	1378
துன்னக்கோ	1527
துன்னவாடை	1931
துன்னுவார்	1925
தூ	
தூண்டிய	1878
தூர்த்தன்	1599
தெ	
தெள்ளத்தே	1972
தென்றல்நன்	1708
தென்னவன்	1279
தே	
தேசனைத்	2064
தேடிச்சென்று	1116
தேடுவார்	1740
தேய்ந்ததிங்	1129
தேனப்போது	1616
தேனைப்பா	1988
தேனைவென்	1902
தொ	
தொடருந்	1586
தொண்டராகி	1291
தொண்டுபாடி	1374
தொழுதுதூ	1282
தோ	
தோற்றுங்	1174
ந	
நக்கம்வந்	1518
நக்கரை	1289
நங்கடம்	1262
நங்கைபா	1249
நங்கையா	1287
நச்சிநாளும்	1538
நடலைவாழ்	1957
நடுக்கத்து	1974
நடையைமெய்	1381
நட்டமாடிய	1493
நமச்சிவாயவே	1955
நமச்சிவாயவென்	2047
நம்புவீரி	1768
நலங்கொள்	1334
நல்லநான்	1370
நல்லர்	1590
நல்லனைத்	1236
நறும்பொ	1814
நறைகொள்	1736
நற்றவம்	1709
நன்றிநார	1435
நன்றுநாடொ	1486
நன்றுநோற்	2073
நா	
நாக்கொண்	1739
நாடிநந்	1707
நாடிநார	1854

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
நாடிநாரண	1080
நாடிவந்து	1921
நாதராவர்	1716
நாரணன்	1731
நாலின்மேன்	1947
நாலுவேதி	1793
நாவலம்	1591
நாவளம்	1852
நாவால்நன்	1379
நாளும்நம்	1644
நாறுகொன்	1317
நாறுசாந்	1777
நாறுமல்	1177
நி	
நிதியொப்	1097
நிலைமைசொல்	1461
நிலையினார்	1779
நிலையிலா	1302
நில்லாவாழ்	1766
நிறங்கொண்	1819
நிறங்கொள்	1813
நிறைக்க	1355
நினைக்கும்	1338
நீ	
நீடுகாடிட	1582
நீடுநெஞ்சு	1941
நீணிலாவர	1465
நீண்டசூழ்	1192
நீண்டமாலொ	1446
நீதியாற்	1649
நீதியைக்	1657
நீதியைநிறை	1087
நீதிவான	1201
நீரும்பாரு	1836
நீருலாநிமிர்	1230

பாட்டு	பாட்டு எண்
நீரைச்செஞ்	1140
நீர்பரந்த	1929
நீலமாமணி	1579
நீலமுண்ட	1421
நீளமாநினைந்	1613
நீறலைத்த	2056
நீறுபூசி	1747
நீறுடைத்	1607
நீற்றினார்	1512
நீற்றினானை	2002
நீற்றினானிமிர்	1462
நு	
நுணங்குநூ ... மறிகி	1886
நுணங்குநூ ... மிருவ	1872
நூ	
நூலால்நன்	1253
நூறுகோடி	2078
நெ	
நெக்குநெக்	1962
நெஞ்சமென்	1337
நெஞ்சில்	1885
நெதியொப்	1097
நெருக்கி	1879
நெருப்பராய்	1373
நெருப்பினாற்	1371
நெய்தலாம்	1158
நெய்யும்பா	2008
நெய்யொப்	1096
நே	
நேசநீல	1794
நேசமாகி	1384
ப	
பக்கம்பூ	1364

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
பங்கமாயின	1762
பங்கமாலை	1341
பஞ்சபூத	1509
பஞ்சமந்	1176
பஞ்சின்	1361
படங்கொள்பாம்பரை	1884
படங்கொள்பாம்பொடு	1738
படைகொள்பூதத்தர்	1313
படைகொள்பூதங்	1180
படையும்பாச	1979
படையும்பூத	1743
பட்டநெற்றியர்பாய்	1924
பட்டநெற்றியர்பால்	1367
பட்டம்இண்	1565
பட்டராகி	2068
பட்டிஏறு	1112
பணங்கொளா	1464
பணங்கொள்	1263
பண்காட்டி	1558
பண்டிசை	1537
பண்டைவல்	1667
பண்டொத்	1145
பண்டோர்	1594
பண்ணிலோ	1544
பண்ணிற்	1513
பண்ணினார்மறை	1260
பண்ணினான்மறை	1628
பண்ணினின்மொழிகேட்	1247
பண்ணினின்மொழி	1127
பண்ணினைப்	1601
பண்ணினேர்மொழி	1163
பண்ணின்னேர் ... பலி	1521
பண்ணொத்	1996
பத்தர்கட்	1474
பத்துநூற	1953
பந்தபாச	1695
பரப்புநீ	1274
பரப்பொப்	1095
பரவிநாளும்	1146
பரிதியானை	1998
பரியர்	1339
பருத்ததோ	1466
பருவெண்கோட்	1561
பலவும்அன்	1311
பலவும்வல்	1635
பல்லாரும்	1604
பல்லிலோடு ... பலவி	1114
பல்லிலோடு ... பகலெ	1320
பழகிநின்	1202
பழகினால்	1847
பறப்பையும்	1744
பறையினோ	1298
பறையினோ	1216
பற்பல்கா	2048
பற்றவன்	1562
பனியாய்	2018
பனைக்கைமும்	1082

பா

பாட்டு	பாட்டு எண்
பாகம்மாலை	1336
பாசமொன்	1205
பாடங்கொள்	1935
பாடலாக்கி	1714
பாடிச்சென்று	1115
பாடிப்பெற்ற	1575
பாணத்தான்	1890
பாணியார்	1231
பாண்டுவின்	1787
பாதிப்பெண்	1357
பாம்பணை	1758
பாம்பொடு	1685
பாரணங்கி	1252
பாரமாக	1889
பாருளீரி	1769
பார்த்துப்	1920
பாலையாடு	1567

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
பாலையாழொடு	1193
பாலையாழ்மொ	1520
பாவமும்	2066
பாறலைத்த	1144
பி	
பிணிகொள்	1498
பிணித்த	1767
பித்தனைப் பெருங்	1086
பித்தனைப் பெருந்	1511
பிரமன்மா	1876
பிறங்குசெஞ்	1811
பிறப்புமூப்	1841
பிறவிமாய	1871
பிறைகொள்	1330
பிறைக்க	1681
பிறையுஞ்	1362
பு	
புக்கணைந்	2005
புதியபூவினை	1992
புந்திக்கு	1985
புலரும்	1340
புல்லம்ஊர்	1726
புழுவுக்குங்	1967
புள்ளிகொண்	1623
புற்றிலாட	1926
புற்றில்	1745
புற்றில்வா	1309
புற்றினார்	1297
புனலொப்	1098
புனைபொற்	1186
புனையுமா	1892
புன்னைஞாழல்	1156
பூ	
பூக்குந்தாழை	1155
பூக்குந்தாழை	1168
பூக்கைக்	1958
பூங்கொத்	1615
பூணாணாரம்	1609
பூதநாதனைப்	1238
பூத்தாடிக்	1286
பூத்தார்	2020
பூமென்கோதை	1251
பூமேலானும்	1548
பூரியாவரும்	1839
பூவணத்தவன்	1285
பூவனூர்தண்	1729
பூவனூர்ப்பு	1722
பூவுலாஞ்	1431
பெ	
பெண்டிர்மக்	1831
பெருங்கை	1534
பெருகலாந்	1934
பெற்றமேறி	1403
பெற்றமேறு	1113
பே	
பேய்வனத்	2081
பை	
பைம்மாலும்	2021
பொ	
பொக்கம்	1497
பொங்கிநின்	1401
பொங்குமா	1426
பொத்தல்	1834
பொந்தையை	2057
பொய்தொழாது	1256
பொய்யனைத்	1556
பொய்யெலா	1873

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
பொருந்து	1848
பொருப்பனைப்	1241
பொருமாற்	1662
பொருளினோ	1542
பொருளுஞ்	1881
பொள்ளலாக்	1784
பொறிப்புலன்	1551
பொன்செய்	1475
பொன்னங்	1179
பொன்னுள்	2016
பொன்னொத்	1535
பொன்னொப்பா	1099
போ	
போதுதாதோ	1369
போதுதாழ்	1310
ம	
மங்கலக்குடி	1802
மங்கலக்குடியான்	1809
மங்கைகாணக்	1221
மஞ்சன்	1803
மடந்தை	1316
மடுத்துமா	1641
மட்டவிழ்	1319
மட்டிட்ட	1760
மட்டுண்பார்	1276
மட்டுவார்..ஆரூரரே.	1128
மட்டுவார்..செல்வரே .	1910
மணவன்	1703
மணிசெய்	2049
மண்ணுளா	1443
மண்ணையுண்	1220
மதத்தவா	1232
மதுரவாய்	1081
மத்தமும்	1927
மத்தனாய்	1536
மத்தனைம்	1104
மத்தமாமலர்	1477
மந்தமாக	1422
மந்தமாகி	1882
மரக்கொக்	1820
மரங்களேறி	2010
மருந்தினோ	1541
மருந்துவா	1468
மருந்துவானவர்	1812
மருவினைமட	2063
மலியுஞ்செஞ்	1753
மலைக்கொளா	1437
மலையில்நீடி	1167
மலையேவந்	1968
மல்லைஞாலத்	1270
மல்லைமல்	1505
மழலைதான்	1469
மழலையேற்	1194
மழுவலான்	1668
மழைக்கண்	1278
மறந்துமற்	1816
மறைகொண்	1248
மறையினானொடு	1121
மறையின்	1206
மறையும்	1222
மறையும்பா	2019
மற்றுங்கே	1982
மற்றுநற்	2075
மற்றையா	1226
மனத்துள்	1217
மனிதர்காள்	1970
மன்றனைம்	1107
மன்னுசீர்	1805
மன்னுமா	1570
மா	
மாகயானை	1525
மாசார்பாச	1697
மாசில்வீணை	1954

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்	பாட்டு	பாட்டு எண்
மாடத்தாடு	1187	முத்தொப்	1995
மாடுதானது	1772	முந்திச்சென்	1120
மாடுதேடி	1842	முந்திமூவெயில்	1315
மாட்டுப்பள்	1900	முரலுங்கின்	1630
மாட்டைத்	1901	முருட்டுமெத்	1136
மாணிபால்	1085	முல்லைநன்	1851
மாதராரொடு	1502	முல்லைவெண்	1522
மாதரார்	1806	முழுதும்வானு	1089
மாதனத்தை	1693	முற்றாவெண்	1603
மாதியன்று	1517	முற்றிலாமுலை	1244
மாதினைமதித்	1388	முற்றிலாமதி	1215
மாத்தன்	1706	முற்றினானை	2004
மாமாத்தா	1506	முன்கைநோ	1411
மார்க்கமொன்	1423	முன்பெலாஞ்	1368
மாலதாகி	1639	முன்னமே	1642
மாலினோடு	1324	முன்னவன்	1669
மாலுநான்	1131	முன்னும்	1688
மாலும்நான்	1650	முன்னெஞ்	2061
மாலொடும்	1415	முன்னைஞா	1965
மாறுகொண்	1918	முன்னைநான்	1717
மாற்றமொன்	1857	முன்னையார்	1228
மானையேந்	1593	முன்னையாறு	1342
மி		**மூ**	
மிக்கனைத்	1823	மூக்கினால்	1653
மிண்டரோடு	1405	மூக்குவாய்	1543
மின்னனைவினை	1106	மூடினார்	1366
மின்னின்	1581	மூப்பினோடு	1554
மின்னின்	1530	மூர்க்கப்	1420
		மூலமாகிய	1646
மு		மூலவண்.	1346
முக்கணும்	2017	மூவனாய்முத	1389
முத்தனே	1198	மூன்றுமூர்	1946
முத்தியோக	1397		
முத்தினைப்	1233	**மெ**	
முத்தினைமணி	1701	மெய்யனை	1894
முத்தினைமுத	1633	மெய்யின்மா	1906
முத்தூரும்	1680		

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
மே	
மேகந்தோய்	1587
மேகம்பூண்	1752
மேலைவான	1825
மை	
மைகொள்கண்	1088
மைக்கடுத்த	1732
மைக்கொள்	1632
மையுலாவிய	1143
யா	
யாதேசெய்	1574
யாவருமறி	1691
வ	
வஞ்சநஞ்	1756
வஞ்சமின்	1380
வஞ்சரக்	1153
வடிகொள்	1626
வட்டமா	1598
வட்டமா	1494
வட்டனைம்	1102
வட்மென்	1492
வண்டணைந்	1218
வண்டணைந்	1209
வண்டலம்	1891
வண்டார்	1605
வண்டுசேர்	1807
வண்டுலா	1134
வண்ணமாக	1419
வண்ணமும்	1467
வந்தனைய	1175
வந்திவ்வா	1916
வந்துகேண்	1788
வம்புபூங்	1595
வரங்களா	1855
வரிப்பை	1482
வரைக்கண்	1264
வரையார்ந்	1610
வரையினா	1314
வலிந்ததோள்	1416
வல்லம்பேசி	1391
வன்னிகொன்	1838
வன்னிமத்தம்	1266
வா	
வாடிநீர்	1763
வாடிவாழ்	1850
வாட்டமொ	1306
வாதுசெய்து	2079
வாமதேவன்	1978
வாயிருந்தமிழ்	1660
வார்கொள்	1666
வாழ்த்தவா	1960
வாழ்ந்தவன்	1406
வாழும்பான்	1713
வானஞ்சாடு	1515
வானஞ்சேர்	1865
வானனைம்	1103
வி	
விச்சையா	1980
விடலையாய்	1516
விடலையானை	1997
விடுத்தது	1915
விடுத்தமால்	1442
விடையுமேறு	1125
விட்டிட்டா	2003
விட்டுவெள்	1824
விண்டமா	1880
விண்டமா	1142
விண்டவர்	1737
விண்டவர்புர	1410
விண்டவெண்	1124
விண்நிறைந்	1078

Koviloor Digital Library

பாட்டு	பாட்டு எண்
விண்ணினார்	1584
விண்னினார்	1531
விண்ணுளா	1211
விண்ணுளார்	1172
விண்ணுளார்	1643
விரியுந்தண்	1283
விரும்பியூறு	1810
விரும்பும்	1351
வில்லைவட்	1079
விழவினோசை	1645
விழுதுசூலத்	1478
விளக்கும்	1280
விறகிற்	1963
வீ	
வீதிவேல்	1296
வீரனைவிட	1108
வீறுதானு	1622
வீறுதான்	1853
வெ	
வெங்கண்	1588
வெங்கண்	1434
வெஞ்சினக்	1459
வெண்டிரை	1634
வெண்ணித்	1234
வெந்தநீறு	1149
வெந்தநீறு	2012
வெந்தவெண்	1212
வெந்தவெண்	1169
வெப்பத்தின்	2022
வெம்புநோ	1775
வெம்மையான	1503
வெலவலான்	1255

பாட்டு	பாட்டு எண்
வெவ்வவண்	1178
வெள்ளத்	2058
வெள்ளமுள்	1870
வெள்ளிமால்	1438
வெள்ளெருக்	1856
வெள்ளைநீ	1273
வெறுத்தானை	2065
வெற்றியூ	1318
வென்றானை	2062
வே	
வேடனாய்	1670
வேடுதங்	1624
வேட்களத்	1488
வேதகீதர்	1147
வேதத்தா	1182
வேதநாயக	2076
வேதமாகிய	1445
வேதமாய	1648
வேதமோதி	1322
வேதமோதி	2069
வேதமோதும்	1213
வேதனைமிகு	1683
வேலைவென்	1907
வேழத்தின்	1480
வேழம்பத்	1711
வேறுகோலத்	1429
வேறுசிந்தை	1268
வை	
வைத்தமாடு	1845
வைத்தமாடு	1790
வையந்தா	1363
வையம்வந்	1418

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

அருஞ் சொல்லகராதி

அ

அகத்தியன் 73-3
அகத்து 89-5,6
அகம்பலி 6.3
அகலார் 11-6
அகறலும் 97-28
அற்றுவார் 54.6
அக்கணம் 96-2
அக்கரை 22-5
அக்கினாரம் 55-4
அக்கு 29-10,97-14
அங்கணன் 74-4,80-4
அங்கணாய் 36-8
அங்கணார் 51-10
அங்ஙனே 100-3
அங்கண்ஞாலம் 53-9
அங்கண்ணியான் 17-9
அங்கமாலை 27-7
அங்கமாறும் 67-4
அங்கம் 35-9,99.4,49-10
அங்கவீதி 88-6
அங்கி 67-7,79.5
அங்கு 36.2,89-1,95-3.9
அங்கை 19-7,26.2,61.7,9-8 71-7
அங்கையாள் 72-3
அசைத்த 41.8
அச்சமெய்தி 92-8
அச்சம் 97-6.22
அஞ்ச 64-5,17-10
அஞ்சடையன் 55-10
அஞ்சலஞ்சல் 8-10,27-10
அஞ்சலென்றிடும் 31-5
அஞ்சல் 22-10
அஞ்சாது 44-10
அஞ்சி 24-3,23-9,82-6
அஞ்சுஆடிய 44-10
அஞ்சு 99-1,58-8
அஞ்சும் 89-5-,83-10
அஞ்சுமஞ்சும் 8-10
அஞ்சுவது 77-5,7,8
அஞ்சுவாள் 29-7
அஞ்செழுத்து 92.9,60.1,4,52-7
அஞ்சேல் 50-3
அஞ்சொலாள் 39.4
அடக்கும் 86-7,24-3
அடங்கொள் 82-5
அடர 83-10
அடரும்போது 51-8
அடர்ந்தவன் 69-10
அடர்த்தான் 75-10
அடர்த்திட்டநீர் 10-11
அடர்த்து 70-10.8-10
அடர்ப்புண்டு 1.3
அடலுளான் 3-1

எண்களுள் முன்னது *பதிகத்தையும்* பின்னது *பாடலையும்* குறிக்கும்

Koviloor Digital Library

அடவி 97-19
அடல்விடை 71-2
அடி 95-9.14.2,57-10, 64-5,66.6,57.6.80-4,64-8,61-1, 100-6,66-10
அடிகளே 38-4,8
அடிகள் 67-5.50-3.32-1,62-9, 38-1, 2,41-4,8,25-1,6,41-5
அடிகள்தம் 50-4
அடிகாண்புற்று 36-9
அடிசேரும் 54-1
அடித்தொண்டர்கள் 11-2
அடிமை 66-5,1-4
அடியர் 92-7,51-10
அடியவர் 49-3
அடியார் 87-9, 1-7, 47-2, 62-3 66.7, 33-2,38-1,98-4
அடியார்கள் 81-4
அடியார்குழாம் 92-7
அடியேத்த 75-2
அடியேன் 13-3, 33.5, 19-9, 89-7, 62-1
அடியோங்கள் 48-1
அடுக்கல் 20-10
அடுத்தவண்ணம் 28-10
அடை 24-7
அடைகிலா 6-2
அடைநெஞ்சமே 49.2
அடைந்து 99-5
அடைந்தார் 36.8,14-10
அடைந்தார்களே 97-8
அடைந்து 90-3,84-7
அடைந்துய்மின் 49-4,1,41-9
அடைமின் 7-5
அடைமின்கள் 18-3
அடையநின்றிடும் 31-6
அடையவல்லவர் 41-4, 67-1
அடையன்மின் 92-7
அடையாளம் 90.6,50-1
அடைவரே 97.4,6
அட்டபுட்பம் 54-10
அட்டமாங்கம் 95-7
அட்டமாமலர் 9-4
அட்டமாம்புயம் 6-7
அட்டமூர்த்தி 10-3,5-6, 49-8, 45-10, 94-8. 97-4,81-1,
அட்டன் 4-1
அட்டி 99-9
அட்டியும் 99-3
அணங்கன் 80-8
அணங்குபாகத்தர் 38-7
அணங்கோர்பால் 39.9
அணவன் 63-4
அணி 44-7,59-3,58-2,13.8 28-9,10-8,61.6
அணிந்தவன் 29.10
அணிந்திட்டது 35-4
அணிந்திலர் 95-8
அணிபவர் 87-6
அணியமரர் 48.7
அணியார் 40.8
அணிவான் 40-4
அணுகவேண்டில் 43-3
அணுகான் 1-6
அணுகும் 60-10
அணைகிலார் 31-1
அணைந்தன 15-3,14-5
அணைந்து 95-1
அணையல் 15-4
அணையாநிற்கும் 88-6
அணையார் 84-5
அண்டத்தன் 7-12
அண்டத்தப்புறத்தான் 8-2
அண்டத்தான் 94-1
அண்டத்துளார் 38-6
அண்டத்தோங்கும் 5-8
அண்டநாயகன் 82-1
அண்டமூர்த்தி 95-10

Koviloor Digital Library

அண்டம் 13.9
அண்டர் 58-3
அண்டர்கள் 73-7
அண்டர்வாழ்வு 39-3
அண்டவண்ணம் 28-6
அண்டவாணன் 7-11,41-6
அண்டவாணர் 46-6,6-9,33-4
அண்டன் 66.5,56-3,62-5
அண்ணல் 1-7,4,8,40-1, 42.3, 89-10, 31-3, 84.4, 48-8, 14.9, 95.5, 10-9, 53-2, 36-3
அண்ணலார் 57-2,55-7, 77-5, 45-5
அண்ணி 6-6
அண்ணிக்கும் 61.5,52-7
அண்ணித்தாகும் 44-8
அண்ணித்திட்ட 17-2
அதள் 67-1,96-5
அதிபன் 32-9
அதிர 1-11
அதிரர் 32-8
அது 50-2
அத்தர் 77-7
அத்தனார் 87-9
அத்தன் 13-4,76-5,100.2, 41-2,44-6,63-2
அத்தா 46-9
அத்தி 33-2,35-1
அத்து 19-4
அநங்கன் 16-9
அந்தகன் 63-9
அந்தணர் 12-10
அந்தணன் 97-10
அந்தணாளர் 8-6
அந்தமில்குணத்தான் 82-3
அந்தமில்புகழ் 7-2
அந்தமில்லி 10-7
அந்தம் 60-10,95.8
அந்தளிர் 27-10
அந்தி 27-1
அந்திக்கோன் 25-1
அந்திப்போது 28-3
அந்தியாய் 48-5
அந்தியான் 44-2
அந்தியில் 100-8
அந்திவண்ணம் 28.1,3
அந்திவண்ணன் 93-2
அந்திவாய்ஒளி 5-9
அந்திவான் 97-1
அப்பர் 10-3
அப்பனார் 77-6
அப்பன் 78-10
அப்பு 68-9
அமண் 65-9,58-5
அமண்கையர் 87-9,72-7
அமரர் 53-2,94-6, 63-6, 13-6, 48-2
அமரர் இருக்கை 39-3
அமரர்கள் 65-7
அமரர்க்கெல்லாம் 52-3
அமர் 23-10,71-2,23-3
அமர்ந்த 75-7,7-10
அமர்ந்தாடுவான் 65-4
அமர்வான் 100-6
அமுதாயபரம் 40-8
அமுதாயவன் 48-4
அமுதினை 98-1
அமுது 29.5,88.4,44-8, 100-9, 38-3,17.2
அம்பலக்கூத்தன் 2-1,3,99-7
அம்பலத்தாடி 1-10
அம்பலத்து ஆதி 2-6
அம்பினால் 55-10
அம்பு 70-9,49-5
அம்மதி 87-7
அம்மானை 31-1
அம்மான் 98-4,80-3
அம்மை 14-4,26-4

Koviloor Digital Library

அம்மையார் 7-6
அயராது 75-1
அயலவர் 1-3
அயலெலாம் 23-4,26-8
அயன் 82-7,80-8,76.8,13-6 15-5,52-3,64.9,48-2,100-7, 85-2
அயன்மால் 38-6
அயன்வெருவ 47-9
அயிலார் 70-9
அரக்கர்கோன் 73-10
அரக்கர் 80-5
அரக்கனார் 79-10
அரக்கன் 92-11,83-10, 30-11, 87-10, 4-10,48-9, 64.11,51-11,65-11,62-10,43-10, 57-9,63-11,58-10,50-10,76-7, 100-10,98-10,72-10,41-10,17 -11, 67-7,10-11,16-11,84.10, 22-10,86-10,27-10
அரக்கன்திறல் 28-10
அரக்கன்முடி 14-11
அரக்கினான் 20-10,27-10
அரக்கு 27-10
அரங்கு 8-8,6-4
அரசு 14-10
அரட்டர் 7-5
அரட்டு 7-5
அரணம் 97-11
அரத்துறை 3-1
அரப்பொப்பான் 3-4
அரவமாட்டுளர் 8-3
அரவம் 23-3,79-1,53-6, 44.10, 87-4
அரவச்சடை 39-10
அரவரையார்த்தவன் 22-5
அரவல்குல் 46-2
அரவு 4-9,83-1,55-9,33-9, 6-2,82-4,96-6
அரவுகையினர் 38-8
அரற்றுகின்றார் 21-8
அரற்றுவன் 93-3
அரற்றுவார் 74.8,92-3
அரனடி 24-3
அரனாய் 51-8
அரன் 39 -2,79-7, 74-8, 11-1, 72-8,18-6,60-7, 100-8, 99-9, 90-5,39-3
அரன்நெறி 43-3
அரா 7-9,44.5
அரி 85-2,100-2,100-7
அரிச்சுற்றவினை 1-3
அரிய 10-4
அரியதே 97-22
அரியதோர் 94-6
அரியபாடலர் 27-5
அரியர் 38-6,8-9
அரியவானம் 36-10
அரியனே 97-29
அரியாய் 96-9
அரியான் 100-7
அருகணையாது 92-8
அருத்தம் 84-4
அருத்தனார் 1-7
அருத்தன் 13-10,4-9,58-10
அருத்தி 40-5,59-10
அருத்தியாய் 57-10
அருநோய் 70-7
அருந்தப்பெறார் 100-9
அருந்திறல் 48-2
அருந்துயர் 47-10
அருப்பன் 17-9
அருப்பு 61-5
அருமறைநான்கு 67-4
அரும்பின்வண்ணம் 28-7
அரும்பினில் 93-7
அரும்பு 1-2
அரும்பொப்பன் 3-2

Koviloor Digital Library

அரும்பொருள் . 47-6,85-2
அருளாய் 97-12,5,44-1
அருளாளன் 68-2
அருளிலே 39-4
அருளும்வண்ணம் 28-4
அருளே 96-2
அருள் 51-10,9-7,69-4,68-6, 86-4, 96-9, 64-7, 63-10, 47.6
அருள்கொடுத்திடும் 31-8
அருள்கொண்டு 96-1
அருள்செய் 71-3
அருள்செய்த 49-11
அருள்செய்தவர் 25-1
அருள்செய்தவன் 59-3, 49-6, 35-9, 73-8,89-7
அருள்செய்திடும் 10-2
அருள்செய்து 73-1
அருள்செய்பவர் 51-8
அருள்செய்யுமே 99-1
அருள்செய்வரே 36-10
அருள்நல்கும் 33-4
அருள்மைந்தர் 52-4
அருவர் 36-4
அருவன் 35-1
அருவிகள் 75-4
அருவினை 1-9,42-4
அரை (இடை) 16-5
அரையாய் 96-2
அரையார் 53-7
அரையார்த்த 35-2,6.2
அரையினர் 51-9
அலகு 95-3
அலக்கழித்தார் 73-1
அலங்கல் 80-10, 97-30, 83-6
அலங்கனார் 77-8
அலமந்து 90-5
அலரும் 95-2
அலரும் போதும் 27-6
அலர் 95-1,35-8
அலவலான் 19-2
அலற 33-11,4-10,27-10
அலால் (அல்லால்) 82-4
அலைக்கும் 9-8
அலைத்த 8-1
அலைத்து 73-10
அலையினார் 58-1
அலையொப்பான் 3-10
அல்கும் 24-9,23-10
அல்லல் 61-5,56-3,59-10, 48-1,70-7,1-4,67-1,7-12,75-3, 48-9,87-9,83-5
அல்லலாக 43-6
அல்லற்கோலம் 20-3
அல்லனோ 100-8
அல்லன் 45-6,66-7
அல்லியான் 33-9
அவர் 84.5,54-3,66-8,51-3
அவர்கள் 92-3
அவலம் 41-1
அவன் 35-3,82-10, 40-10,39-11
அவன் கழல் 99-11
அவிழ்சடைச்சங்கரன் 30-5
அவிழ்த்தருள் 47-7
அவுணர் 1-9
அவை 99-9
அழகனார் 75-7,77-9, 25-3
அழகன் 44-4,40.3,14-6,13-8, 29-6,44-2,30-11
அழகாகியவண்ணம் 28-3
அழகாயதொர் 37-4
அழகாயவாரூரர் 6-10
அழகியது 39-9
அழகிதே 55-9,1,3
அழகு 40-7,51-4
அழலாயினான் 29-9
அழல் 68-3,97-27,21,95-4
அழிவாக்கினான் 58-9

Koviloor Digital Library

அழுதிரேல் 82-6
அழுது 21-8, 73-10
அழுதுண 46-6
அழுதுதுஞ்சி 41-3
அழுந்தி 70-7
அழுந்தினும் 80-7
அழுமவர் 31-7
அழுவலார்கள் 59-7
அழைக்கவந்தேன் 50-3
அழைக்கும்வண்ணம் 28-5
அழைத்து 82-10
அளக்கும் 21-6
அளந்தான் 24-1
அளப்பரிதாயவர் 25-10
அளப்பொணா 75-6
அளவில்பெருமையான் 50-3
அளவு 95-9
அளித்த 37-5
அளித்தான் 47-11
அளித்திலை 33-2
அளியின் 23-10
அள்ளல் 87-5,7-10,80-6
அற 4-4
அறத்தால் 8-8
அறமோதிய 52-8
அறம் 59-2
அறம்பகர்ந்தார் 25-10
அறவன் 80-7
அறாத 36-1
அறி 90-2
அறிகிலா 82-7
அறிகிலார் 66-8
அறிகிற்கிலார் 6-10
அறிகிலான் 97-11
அறிகின்றிலா 49-9
அறிதற்கு 96-9
அறிந்தனன் 93-4
அறிந்தார்களே 80-3
அறிந்திலன் 71-8
அறிந்திலேன் 11-8
அறிப்புறும் 48-4
அறிய 100-10
அறியல் 76-4
அறியாத 33-9
அறியாது 86-10, 88-7
அறியார் 45-7, 80-6, 16-5,87-9, 35-2, 7
அறியாள் 81-3
அறியான் 37-7
அறியில் 97-2
அறியிலென் 99-3
அறியும் 97-29
அறியேன் 88-5
அறிவரியான் 41-4
அறிவரே 80-5
அறிவர் 30-3,4,9, 1-7
அறிவார் 97-2
அறிவான் 4-1
அறிவிலன் 97-29
அறிவு 13-1
அறிவொண்ணா 31-8
அறிவொண்ணுமே 72-6
அறுக்கலாம் 39-4
அறுத்தான் 98-10
அறுத்திடும் 82-2
அறுத்து 20-3,70-4
அறுபதம் 22-3
அறும் 80-8
அறிவிப்பார் 16-4
அறை 59-8
அறையும் 29-8
அற்றபோது 84-5
அற்றப்பட 1-2
அற்றம் 18-1
அனலாடிய 96-5
அனலாடுவார் 11-3
அனலாட்டி 36-10
அனலாய் 48-5

Koviloor Digital Library

அனலேந்தல் 9-8
அனலேந்தி 40-7
அனல் 21-3,61-7,3-7,97-14, 26,9
அனாதி 54-10
அனை 93-6
அனைக்குமன்பு 37-8
அனைத்தும் 75-3,88-3
அனைத்தையும் 48-9
அன்பதாய் 7-7
அன்பர் 51-5, 61-8, 100-9, 8-5, 92-8,30-4
அன்பன்ஆயிடும் 31-3
அன்பன் 31-7, 62-3, 74-8, 13-1, 56-3
அன்பாவது 45-8
அன்பிலாலந்துறை 80-6, 5, 4, 7, 8, 9, 10
அன்பிலான் 80-3
அன்பினால் 80-3
அன்பு 36-2
அன்பு(அம்பு) 1-1, 99-9, 94-10, 59-7
அன்புடையார் 19-6
அன்புபட்டாள் 64-4
அன்புபட்டு 23-9
அன்றி 99-4
அன்னங்கள் 24-7
அன்னம் 64-7, 61-9, 1-1, 26-8
அன்னமென்னடையாள் 9-3
அன்னவர் 57-8
அன்னொப்பான் 3-8

ஆ

ஆகமம் 15-4
ஆகார் 90-3
ஆகுதி 12-10
ஆகுமே 86-4, 84-6
ஆக்கஏறுவர் 42-3
ஆக்கிடும் 64-4
ஆக்கை 90-5,71-5
ஆக்கையான் 97-13
ஆகிய 50-6,13-4,37-3
ஆகிலும் 32-2
ஆகிலென் 33-8
ஆகில் 99-8,3
ஆங்கு 99-10,42-10
ஆசையுற்றிடும் 31-9
ஆடரவாட்டி 41-7
ஆடரவு 39-9, 87-3, 34-8, 67 -3, 96-5
ஆடலர் 27-5
ஆடலன் 19-8
ஆடலான் 77-4,41-3, 55-7
ஆடல் 86-8
ஆடி 86-6
ஆடிப் பாடி 5-5,5-4
ஆடிய 44-10,97-2
ஆடியநீற்றன் 12-7
ஆடியவான் 37-5
ஆடில் 99-2
ஆடினார் 51-4,85-2
ஆடினாலும் 99-2
ஆடுகின்றான் 27-9
ஆடுநாகம் 41-8
ஆடும் 27-2, 40-5
ஆடுவர் 6-6, 34-3,7,97-19 49-2, 42-3
ஆடுவார் 47-3
ஆடை 10-4, 54-4
ஆடையர் 36-3, 38-3
ஆடையன் 71-2
ஆட்கொள் 93-1

Koviloor Digital Library

ஆட்கொள்பவர் 5-5
ஆட்டயர் 23-1
ஆட்டி 95-2,4,51-10,16-5
ஆட்டினாய் 33-5
ஆட்டினான் 63-6
ஆட்டினும் 43-6
ஆட்டு 2-4
ஆட்டும் 87-3
ஆட்டுவர் 25-9,52-1, 25-4
ஆட்படவே 62-9
ஆணலர் 36-3
ஆணி 33-7, 2-4
ஆணிப்பொன் 5-7
ஆண் 41-8,
53-10, 97-10,79-3 ,47-8,
29-8
ஆண்ட 85-4
ஆண்டவன் 91-2
ஆதர்கள் 35-2
ஆதலால் 37-1
ஆதரவாய் 88-3
ஆதி 32-3,8-4,75-8,58-6,
13-7, 29-3,71-2,88-10, 53-2
100-1,52-3,3-6,62-7, 49-8
ஆதிநாயகன் 73-7
ஆதிபுராணர் 38-8
ஆதிபுராணன் 83-6
ஆதியர் 52-7
ஆதியாயவன் 97-3
ஆதியாயிடும் 31-10
ஆதியாய் 82-2
ஆதியான் 94-6,33-4
ஆதியும் 82-8
ஆதியே 89-5
ஆதிரை 12-2,100-1
ஆத்தன் 13-6
ஆப்பை 47-7
ஆமளஞ்சொல்லி 78-4
ஆமாசொல்லி 50-2
ஆமை
36-2,97-14,100-5
ஆமோ 48-1
ஆம்பல் 9-5
ஆயதோர் 98-9
ஆயிடும் 36-2
ஆயிரம் 58-9,35-3,90-6
ஆயிழை 8-10
ஆயிழையார் 83-8
ஆயிழையாள் 72-3
ஆயிழையீர் 36-2
ஆயின 96-8
ஆய்ந்த 6-8
ஆய்மலர் 93-7, 1-2
ஆரணங்கு 18-9
ஆரணநான்மறை 38-7
ஆரணப்பொருள் 80-2, 68-2
ஆரணம் 90-6
ஆரம் 53-10
ஆரழல் 19-7,34-8,37-10
ஆரழல்மூர்த்தி 93-2
ஆரியம் 18-3
ஆரிருள் 34-3
ஆருயிர் 94-9,5-8,72-4,65-2
ஆருவர் 100-7
ஆர் 9-8, 52-3
ஆரூரர் 6-2
ஆர்கிலாஅமுது 41-9,2-9
ஆர்க்கவே 51-4
ஆர்க்கும் 39-10
ஆர்க்கொள் கொன்றையன் 29-4
ஆர்தரு 48-1
ஆர்த்ததோலுடை 32-2
ஆர்த்தவர் 36-8
ஆர்த்தாய் 96-5
ஆர்த்து 16-11
ஆர்த்துவந்து 52-10
ஆர்த்தெடுத்தான் 1-11
ஆர்ப்பதன்முன் 48-7

Koviloor Digital Library

ஆலநீழல் 55-6, 86-1, 81-1, 75-7
ஆலம் 37-4, 6-10, 38-3
ஆலயம் 73-4
ஆலிக்கும் 1-3
ஆலின்கீழ் 25-10
ஆலும் 75-7,21-4,48-7
ஆலை 99-5
ஆலையாரழல் 12-10
ஆல் 23-10
ஆல்நிழல் 52-8
ஆவதன்காரணம் 36-6
ஆவணத்துடையான் 22-1
ஆவது 100-7
ஆவா 31-4
ஆவான் 100-8
ஆவி 75-1,72-8,1-4
ஆழியான் 3-9,97-25
ஆழிவண்ணம் 28-8
ஆழ்ந்துபோய் 33-11
ஆளானார் 90-3
ஆளுடையான் 43-8, 43-1, 39-7
ஆளுடையீசன் 44-7
ஆளையார் 37-4
ஆள் 90-3
ஆள்வரே 97-1,30
ஆள்வர் 18-2,75-10
ஆறங்கம் 18-7,30-1
ஆறங்கம் விரித்தவன் 49-7
ஆறா 75-2
ஆறு 27-9,100-3,55-1, 10-8, 36-3, 1-1,86-5, 25-3, 53-8, 57-3, 20-4,67-5,89-6
ஆறுகொண்டுகந்தான் 11-4
ஆறுநான்கும் 8-10
ஆறைவடதளி 58-7,58-2
ஆறொப்பான் 3-3
ஆற்ற 73-7
ஆற்றலழித்த 30-11
ஆற்றவும் 86-4,92-4
ஆற்றன் 57-6,4-4
ஆற்றினான் 94-9
ஆனஞ்சு 86-6
ஆனந்த 31-9
ஆனந்தம் 88-1
ஆனை 80-3
ஆனைக்கா 31-7,3
ஆனைஞ்சு 42-3
ஆனையார் 37-3,2,6
ஆனையின்ஈருரி 27-2
ஆனையீருரி 8-7
ஆனெய் 27-9
ஆன்அஞ்சு 37-5,80-1,44-10
ஆன்நெய்அஞ்சு 27-2
ஆன்றிய 16-11

இ

இகழுமாறு 96-8
இகழ்ந்தார் 4-1,5
இகழ்வான் 52-5
இங்குற்றேன் 95-11
இசை 71-1
இசைப்பார்கள் 71-10
இசையானவன் 18-3
இசைவண்ணம் 28-10
இசைவானவர் 81-5
இசைவானவா 76-6
இச்சை 91-1,47-2
இஞ்சிமாமதில் 23-9
இடபமேறி 97-19
இடமாய் 51-6
இடமார் 67-4
இடம் 64-8,67-1
இடம்கிளரும் 19-1
இடரில்லை 42-2

Koviloor Digital Library

இடர் 70-6,56-7,46-9, 77-10, 17-5,75-2,62-3
இடர்கள் 79-4,28-10
இடர்தீர்ப்பர் 38-8,38-7
இடு 25-6
இடுகாடர் 6-2
இடுகாட்டு 2-3
இடுகாட்டிடை 12-8
இடுகுநுண்ணிடை 47-10
இடுக்கண் 92-2,11-10
இடுபிணக்காட்டில் 24-2
இடுமணல்எக்கர் 30-8
இடுவார் 36-4,54-1, 62-9
இடைக்கணாய் 21-7
இடையறாஅன்பு 7-4
இட்டதுஇட்டது 97-4
இட்டத்து 42-8
இட்டமா 85-1
இட்டமாக 5-1,9-4
இட்டமாகி 86-9
இட்டமாய் 30-3, 61-5, 6-7, 75-5
இட்டமாய்நின்ற 51-4
இட்டம் 42-7, 45-10, 99-3, 25-5, 7, 2-3
இட்டன் 4-1
இட்டவர் 62-9
இட்டிலர் 95-9,1,6
இட்டு 74-7,75-2
இட்டுக்கொள்வன 91-6
இட்டும் 99-3
இணங்குவார் 26-7
இணர்ந்து 97-20
இணை 15-4
இணையடி 30-10, 26-7,86-9, 90-1
இண்டை 49-8,95-8, 5,28-6,8-2
இண்டைகட்டி 30-10
இண்டைமாலை 7-3
இதழி 52-6
இதழியே 15-6
இத்தனை 81-3
இந்திரர் 100-3
இந்திரன் 65-10,97-25
இமவான்மகள் 21-7,45-3
இமைக்கும்போது 43-4
இமையவர் 20-4,69-9
இமையாமுக்கணர் 47-4
இமையோர் 100-6,38-4, 23-9
இமையோர்கள் 35-8,8-5
இம்மை 26-4,14-4
இயக்கர் 32-2,97-25
இயமுனை 22-4
இயலும் 20
இயற்கை 74-6,65-2
இயற்கையே 74-7
இயற்றுவன் 77-5
இரக்கம் 10-11,20-10,4-10, 75-10,48-10,86-10
இரக்காமாகியவன் 57-10
இரண்டு 42-7
இரண்டும் 99-3
இரந்து 5-1
இரப்பொப்பான் 3-4
இரவன் 34-1
இரவு 75-9,56-9
இராப்பகல் 16-8, 85-3, 7-3, 31-3
இராமன் 44-5
இராவணம் 49-11
இராவணன் 94-11, 11-10, 89-7, 47-11
இருக்கு 16-6,100-8
இருக்கை 41-10,30-11
இருக்கொடும் 81-5

Koviloor Digital Library

இருசுடர் 36-7
இருத்தும் 70-3
இருத்தினான் 39-11
இருந்தவம் 96-9,99-8
இருந்தவன் 81-5
இருபது 80-10
இருபதுதோள் 71-10,26-10
இருப்பவர் 25-5
இருப்பனே 71-8
இருப்பன் 1-5,42-2
இருப்பாரை 30-9
இருப்பார் 75-5, 30-4,30-3
இருமல் 70-5
இருமூவர் 20-1
இருவராகி 97-11
இருவராய் 36-4
இருவரும் 80-7
இருவரே 95-6,95-1,2, 3,4, 5,7,8,9,10
இருவர் 37-10,1-8
இருளறுத்து 91-2,31-8
இருள் 97-2,86-4,96-1
இருள்ஆடி 24-2
இருள்கண்டம் 17-10
இருள்கெட 47-6
இருளின்வண்ணம் 28-4
இரை 90-5
இரைக்கும்பாம்பு 46-2
இலங்கு 77-8, 87-6
இலங்கும் 33-5
இலங்கை 20-10
இலங்கைக்கிறை 35-9, 31-10, 23-10
இலங்கைக்கோன் 25-11, 36-10
இலங்கைமன்னவன் 68-10
இலங்கைமன்னன் 6-10,97-30
இலங்கையர்மன்னன் 37-11
இலங்கையர் 57-11
இலங்கைவேந்தன் 47-11,80-10, 71-10, 66-10
இலன் 96-2, 96-8
இலா 33-10
இலாதவர் 98-6
இலாதவன் 100-3
இலாப்பட்ட 27-6
இலிங்கத்தே 95-11
இலேன் 50-4
இலை 48-7
இலையினார்கொன்றை 17-11
இல்பலி 97-19
இல்புகுந்தார் 25-8
இல்லக்கோலம் 20-3
இல்லத்தார் 43-1
இல்லம் 97-6,98-5
இல்லவர் 86-6
இல்லிகள் 92-10
இல்லை 39-10, 67-7, 88-3, 75-6, 67-1, 67-3,71-2
இல்லையே 99-10,99-4
இல்வாழ்க்கை 53-1
இவர்நின்ற 36-9
இழிந்து 33-7
இழிபுனல் 30-7
இழியும் 54-1
இழுக்கின்வண்ணங்கள் 28-5
இழுதை 90-8, 2-8
இழைக்குமே 88-8
இழைக்கும் 21-4
இளக்கும் 21-6
இளங்குவளை 95-9
இளங்கோயில் 11-5, 1, 4, 2
இளந்திங்கள் 17-9
இளமதி 3-4
இளமை 20-3,97-28
இளம்பிறை 55-8, 92-9, 4-1, 38 - 6
இளவெண்பிறை 34-8

Koviloor Digital Library

இளவேனில் 21-9, 90-1
இளைப்பேன் 13-2
இளையார் 1-7
இற' 42-10. 46-10, 37-11,8-10
இறுத்தவன் 84-10
இறுத்தான் 40-10
இறுத்து 35-9
இறப்பு 74-8, 77-3
இறுமாக்கும் 40-6, 72-6
இறுமாந்து 29-4, 29-7,
இறை 66-1, 92-5, 58-10, 74-10, 96-1, 48-7
இறைக்காட்டி 9-9
இறைஞ்சி 96-10
இறைஞ்சும் 36-5
இறையார் 2-8
இறையான் 44-1
இறையும் 6-1
இறையும்சொல் 96-4
இறைவனார் 45-8,85-1, 38-4
இறைவன் 29-8,20-10, 6-7,39-5, 31-3,83-9,4,8,15-1
இறைவிரல் 20-10
இற்று 80-10
இனங்கொள் 83-7
இனிதாக 44-7,42-8
இனிதாகும் 22-4
இனியன் 21-10,14-10
இனியாய் 96-3
இனியார் 21-1
இனியான் 83-1
இனையன் 23-5
இன்சுவை 47-8, 74-3
இன்பம் 31-3,49-3, 78-1,74-7, 42-1,6,77-3
இன்பமாம் 89-4
இன்பர் 8-9,5,1-4
இன்பவாணரே 34-6
இன்பனாகும் 74-8
இன்பு 79-5,59-7
இன்புறுமின்களே 86-2
இன்புற்று 44-11
இன்மொழி 18-1
இன்றி 31-6,11-10
இன்றுளார் 84-9
இன்னம் 1-1,92-9,21-5
இன்னருளே 85-1
இன்னருள் 72-4
இன்னவர் 3-9
இன்னன் 65-2
இன்னிசை 39-11,63-11, 63-6
இன்னிசைகேட்டவன் 48-10

ஈ

ஈசர் 10-2
ஈசனே 82-9,8,5,3,6,4,74-3, 81-3
ஈசன் 66-8,83-7,89-8,12-2,93-3,44-11,74-2,99-2, 4,73-9, 100-8,91-7,31-84,93-4, 30-11 , 17-11, 65-3, 14-8, 8-5, 83-8, 76-6, 98-9, 12-7, 90-1
ஈடற 11-10
ஈட்ட 24-2
ஈண்டு 10-2
ஈமப்பேரொளி 76-8
ஈமம் 45-8
ஈருரி 35-1,23-5,30-2
ஈருரிபோர்த்தவர் 53-9
ஈரைந்தலை 92-11
ஈரைந்து 97-30
ஈரைந்துவாய் 27-10
ஈவளி 100-6
ஈளை 70-5
ஈறு 100-3

Koviloor Digital Library

உ

உகந்த 41-5
உகந்தவர் 24-8
உகந்தவன் 67-7
உகந்தாடும் 99-1
உகந்தான் 18-10
உகந்திருந்து 40-2
உகந்திருந்தேன் 50-5
உகந்து 5-1,7-1,6-7
உகந்தே 72-6
உகவாது 80-7
உச்சி 35-9,97-6
உச்சிமேல் 34-8
உச்சியுளான் 23-6
உஞ்சேன் 50-3
உடல் 84-7, 47-7, 99-10, 100 -6, 72-10, 61-10, 58-10, 63-9
உடல்உறுநோய்கள் 4-11
உடலார் 43-5
உடலுறுநோய் 33-3
உடம்பினார் 84-6
உடுத்தது 89-1
உடுத்திலர் 95-5
உடை 53-8
உடையர் 41-1
உடையவர் 53-10
உடையார் 37-8
உடையான்றன்னை 49-11
உடையும் 6-4
உடையோர் 67-2
உணங்கல் 5-3
உணரார் 83-9
உணர்ச்சி 79-1
உணர்தற்கு 94-6
உணர்ந்த 97-20
உணர்மின்கள் 18-8
உணர்வார் 17-8
உணர்வார்கள் 60-1,97-20,
உணர்வு 13-5,90-10,64-9
உண்கலன் 53-12
உண்ட 15-5,35-5,37-4
உண்டல் 99-6
உண்டவர் 52-3,90-4
உண்டவன் 34-4,66-1
உண்டாரும் 88-7
உண்டான் 34-5
உண்டி 76-2
உண்டு 39-7,88-5,38-3,59-6, 100-9,76-4
உண்ணவும் 91-7
உண்பதுவெண்டலை 45-8
உண்பலி 55-3
உண்மையில் 86-6
உதிப்பது 91-9
உதைகொண்ட 75-7
உதைத்திட்ட 17-3
உதைத்திட்டவன் 66-4
உதைத்து 24-8
உதைபாதன் 58-8
உத்தமனார் 41-7
உத்தமன் 67-1,64-6
உந்நின்றார் 50-8
உமர் 79-7
உமை 24-5,22-10,10-10, 56-5,35-9,47-5,49-4
உமையஞ்சவே 37-3
உமையுருவன் 35-1
உமைகூறர் 8-3
உமைக்குநல்லவன் 43-4
உமைபங்கர் 10-1
உமைபங்கனார் 78-3, 80-4, 49-10,42-8
உமைபங்கன் 82-6,46-4, 56-1,39-4,49-2,42-7
உமைபாகம் 98-5
உமைமங்கை 9-7

Koviloor Digital Library

உமையாள் 22-3,87-2,35-8,
40-5,49-6
உமையொடும் 89-1
உமையொருபாகன் 18-8
உமைவண்ணர் 87-7
உம்பர் 97-2
உம்பர்வாணரே 34-7
உயக்கொளும் 71-9
உயரும் 57-9
உயர்ஞானங்கள் 49-5
உயர்மர்மலை 51-11
உயிராயவன் 74-9
உயிர் 84-3,20-6,76-1,68-6,
97-17,100-9
உயிர்க்கும்பொழுது 1-4
உயிர்க்கெலாம் 20-8
உயிர்ப்பாய் 21-1
உயிர்ப்பு 13-5
உய்ந்தனன் 73-10
உய்ந்து 30-10
உய்ந்தேன் 41-6,72-7,73-9
உய்ம்மினே 97-19,84-7
உய்ம்மின் 1-3,77-4,30-5
உய்ய 33-10,40-2
உய்ய்ப்போந்து 41-1
உய்யலாம் 7-12
உய்யார் 90-3
உய்யுமாறு 69-5
உய்வனோ 2-1
உரகம் 87-6
உரத்தினால் 51-11
உரத்தின் 20-10
உரம் 13-10,95-6,75-10
உரவன் 64-9
உரி 8-2,80-2,27-4
உரியுடை 6-5
உரித்தவன் 56-5
உரித்து 37-3,80-3
உரிப்பை 41-7
உரிவை 51-2
உரு 13-4
உருகிழைத்து 16-8
உருகி 75-9,79-3,31-2
உருகுமே 88-5
உருகும் 86-5,14-6
உருக்கிய 37-3
உருத்திரமூர்த்தி 62-7
உருத்திரன் 71-3
உருவு 49-10
உருவருக்கம் 100-7
உருவனாய் 76-1
உருவன் 93-6
உருவாய் 74-9
உருவினாள் 9-7
உருவினை 98-1
உருளும்போது 31-8
உரை 80-9
உரைக்கிலும் 40-2
உரைக்கும் 39-1,80-9
உரைதளர்ந்து 43-5
உரையுதிர் 22-4
உரைப்ப 23-6
உரைப்பது 97-7
உரைப்பரே 97-5
உரைப்பார் 92-4
உரையின் 23-8
உலகத்தவர் 45-7,52-10
உலகத்தீர் 31-8,69-5
உலகமூர்த்தி 95-2
உலகம் 96-3,1-7
உலகெலாம் 47-3,97-11,
32-4,9-1
உலகேழும் 32-7
உலந்தார் 53-12
உலவு 24-7
உலா 16-9
உலாவிய 47-3
உழலாதே 49-3

Koviloor Digital Library

உழல் 12-6,71-7
உழல்வார் 36-4
உழிதரும் 84-9
உழிதர்வர் 30-4,36-2,31-1
உழுவான் 90-8
உழைத்து 16-8
உழையர்தாம் 38-1
உளங்கொண்டவன் 29-3
உளது 96-1
உளத்தடைந்தார் 31-4
உளமெலாம் 97-28
உளரேல் 97-22
உளன் 91-6
உளான் 36-2,61-6,84-2,71-2
உள் 68-1
உள்க 36-2
உள்கலந்து 82-4
உள்கி 79-8,50-5,39-1
உள்குமின் 49-11
உள்கும் 37-2, 14-2, 15-1, 23-4
உள்குளிர்வார் 31-5
உள்குவார் 54-3,31-3
உள்குவார்க்கு 99-4
உள்ளது 80-4
உள்ளத்தவர் 97-20
உள்ளத்து 98-3,34-7, 100-9
உள்ளத்துணர்மின் 22-8
உள்ளத்துள் 16-8
உள்ளத்தே 89-1
உள்ளமே 15-1,98-10, 86-5
உள்ளம் 88-5,23-4,79-3,15-2, 14-6, 1-10,18-8, 82-4, 39-1, 68-5,48-4
உள்ளவாறு 37-2
உள்ளி 54-9
உள்ளிடத்து 71-3
உறவாகி 20-8
உறவுபேய்க்கணம் 45-8
உறவெலாம் 80-7
உறுகின்றது 66-8
உறுதி 7-10
உறுநோய் 53-3
உறுவிப்பார் 16-4
உறை 39-4,22-3,81-2,49-7, 41-7,56-7,84-8
உறைபதி 67-6
உறைப்புப்பாடி 50-8
உறையுமாயினை 96-4
உறையும் 89-1,19-8
உறைவிடம் 21-1, 8, 4
உற்றவர் 53-3
உற்றவன் 49-5
உற்றார் 20-8
உற்றார்கள் 77-7
உற்று 99-10
உன்பிறை 55-1
உன்னி 80-7,38-2,48-11 76-10,30-2

ஊ

ஊசலாம் 46-3
ஊசல்ாள் 81-3
ஊசல் 40-5
ஊடு 97-2
ஊட்டி 88-4
ஊட்டினாள் 97-27,71-4
ஊமர் 31-4,80-6
ஊமர்காள் 84-9,77-4
ஊரன் 4-7
ஊரிலாய் 97-7
ஊரும் 3-1,61-1
ஊர் 97-4
ஊர்தியான் 97-18
ஊர்தியினான் 92-7
ஊர்தொறும் 74-5
ஊர்பவன் 69-7
ஊர்வன 74-6

Koviloor Digital Library

ஊழிமுதல்வன் 93-10
ஊழிவண்ணம் 28-8
ஊழ்வினை 16-4
ஊறலாய் 97-5
ஊறல் 98-1,31-2
ஊறி 15-2
ஊறிஊறிஉருகும் 14-6
ஊறு 75-2
ஊறும் 17-2
ஊற்றுத்தண்டு 24-3
ஊனமொன்றின்றி 31-2
ஊனம் 86-6
ஊனையார்தலை 8-7
ஊனைவிட்டு 84-3
ஊன் 31-1,75-9,37-3,36-1,
99-7,1-4,99-6
ஊன்நிலாவி 47-3
ஊன்றலும் 65-11, 47-11
ஊன்றல் 12-11
ஊன்றவலான் 23-10
ஊன்றி 49-11
ஊன்றிட்டார் 25-11
ஊன்றிட்டான் 92-11
ஊன்றிய 21-10,83-10
ஊன்றியிட்டார் 36-10
ஊன்றினான் 55-12 ,33-11,
66-10 , 82-10, 60-10

எ

எங்கள் 74-1,3,4,2
எங்கும் 80-8,75-5,99-2
எடுக்கல்உற 20-10
எடுக்குமே 75-2
எடுத்தலும் 74-10
எடுத்தவன் 60-10 87-10
எடுத்தவாள் 28-10
எடுத்தார்த்த 83-10
எடுத்தான் 48-10, 88-10,
67-10,99-10,59-10
எடுத்தும் 86-2
எட்டவிட்ட 30-8
எட்டு 42-7,54-1,89-8,57-3
எட்டுமூர்த்தியர் 21-2
எண்குணவன் 63-4
எண்டிசை 15-3,14-5
எண்ணத்தான் 94-3
எண்ணி 40-1,17-2
எண்ணிலா 84-10
எண்ணிலார் 55-7,19-4
எண்ணில் 100-3
எண்ணினார் 14-7,51-6
எண்ணும் 35-3
எண்ணுளார் 37-7
எண்தோளன் 2-7
எண்தோளினன் 39-5
எண் நிறைந்த 1-8
எதிர் 92-5
எந்தை 96-1,8,83-8,
90-1 10-7, 47-5, 65-2, 148,
98-2, 80-4, 823, 356, 95-8
எந்தைபிரான் 16.8 14-3
எந்தையே 97-8
எம்ஈசன் 93-1
எம்பிரான் 97-8,16-7, 40-2,
91-8, 80-8,7,96-11,
35-9,81-2,1-2, 70-6, 62-7, 64-9
எம்பெருமானிரே 10-11
எம்பெருமான் 10-9
எம்மான் 66-3,89-8,
98-4,15-2
எம்மிறை 74-4
எம்முளே 89-8
எயில் 68-3
எயில்கள் 66-2
எயில்மூன்று 36-6, 5,19-4
எய்த 36-6,28-9, 23-8
எய்தவர் 53-4

Koviloor Digital Library

எய்தவன் 53-5,6,70-9, 97-25,17
எய்தமுதல்வனார் 25-1
எய்தான் 35-9
எரி 70-9,100-7
எரிகொள்மேனி 8-9, 38-6
எரிசெய்தவன் 34-1,66-5
எரிச்சுற்றக்கிடந்தார் 1-3
எரித்தவன் 49-7, 83-1, 36-5
எரிந்த 97-5
எரியநோக்கிய 21-9
எரியாடுவர் 26-2
எரியாடுவான் 2-3
எரியாயினான் 97-25
எரியூட்டினார் 27-4
எரிவண்ணன் 95-8
எரிவிப்பார் 16-3
எரிவீசி 34-7
எருக்கங்கண்ணி 95-5
எருக்கணிந்தான் 76-10
எருது 25-1
எருதேறி 55-8
எருத்து 58-10
எலாம் 72-2,31-8, 84-1,97-2
எல்லி 75-9,83-4,6-8,76-6
எல்லிநின்று 25-6
எல்லை 1-4,20-6
எவ்வவண்ணபிரான் 11-5
எழக்கண்டவன் 34-4
எழில் 46-3,97-9
எழில்வானகம் 51-6
எழு 86-10
எ்ழுதுமாவை 90-8
எழுதுமே 48-2
எழுத்தஞ்சு 46-5
எழுத்து 88-8
எழுந்த 95-9,33-6
எழுந்து 30-5
எழுமின் 43-7,75-9, 80-9, 19-3
எழுமின்கள் 18-2
எழுவார் 86-3,82-5
எழுவார்க்கெல்லாம் 38-2
எளிதாகுமே 88-2
எளித்தவேழம் 37-5
எளியனாமொழியா 23-10
எளியன் 81-4
எள்க 19-3
எள்குவித்தான் 37-5
எறும்பியூர் 74-3,8,1,4,9,
எற்றினார் 14-11
எற்றினான் 35-9
எனக்கு 42-2,96-3
எனப்படுவார் 100-4
எனாதவர்க்கு 99-3
எனையும் 85-4
என் 14-8,91-1,98-10
என் உள்ளம் 44-11
என்கொலோ 50-4,7,2,1
என்கொல் 21-2
என்செய்தீர் 90-4
என்சொல் 92-5
என்பதலால் 96-4
என்பது 97-13
என்பர் 100-5
என்பவர் 14-6,61-8, 96-7
என்பார் 99-5,97-9-22, 99-8
என்பு 36-2, 61-6, 80-3, 97-9
என்புபூண்டு 55-8
என்பெலாம் 30-4
என்பொனார் 42-5
என்பொன் 31-3
என்மனத்து 21-4
என்றலும் 81-5
என்றல் 100-5
என்றவர் 96-10
என்றார் 50-9

Koviloor Digital Library

என்றிவர் 1-10
என்று 98-4,50-9,100-2, 36-9, 39-7, 83-8
என்றும் 33-5,6
என்னன் 4-5
என்னிடை 35-5
என்னின் 50-8
என்னுக்கே 77-6
என்னுள் 89-9
என்னுள்ளத்து 96-1
என்னுள்ளமே 98-4,98-1
என்னுள்ளம் 93-2
என்னை 50-2
என்னையுடையவன் 29-5

ஏ

ஏகம்பம் 48-7,47-3
ஏகம்பன் 69-1,47-1
ஏங்கி 33-7
ஏசலாம்பழி 46-3
ஏசுவது 23-5.
ஏணி 33-7
ஏதம் 14-9,11-9
ஏதானும் 22-4
ஏது 100-4,60-1
ஏத்த 86-8
ஏத்தப்பெற்றேன் 93-4
ஏத்தலும் 82-10
ஏத்தவல்லார் 82-4,54-9, 82-8
ஏத்தா 96-5
ஏத்தி 30-5,40-1
ஏத்திடும் 37-7
ஏத்திய 83-7
ஏத்தியும் 86-2
ஏத்துமின் 30-11,31-3
ஏத்துமே 86-9
ஏத்தும் 43-9,83-8,90-2,57-6
ஏத்துவார் 92-9,97-30, 80-9,
ஏந்தலுற்றான் 2-10
ஏந்தி 61-7,97-14,97-6
ஏந்திவந்து 36-4
ஏந்திளமென்முலை 47-10
ஏந்துவர் 38-3
ஏமம் 30-3
ஏமாப்பெய்தி 44-1
ஏயிலான் 91-1
ஏலுமாறு 43-9
ஏவல் 36-5
ஏழிசை 28-6
ஏழிசைவண்ணம் 28-4
ஏழு 15-4,89-7
ஏழைமை 57-3
ஏழை 78-4
ஏழைகாள் 43-1,76-2, 76-5, 100-4
ஏறலன் 23-7
ஏறாமை 50-9
ஏறி 95-6,33-7
ஏறிய 83-4
ஏறினார் 35-8
ஏறு 20-4, 100-3, 95-8, 53-8, 83-7
ஏறுகந்து 95-8
ஏறுகொண்டுகந்தார் 11-8, 11-4
ஏறுடை 70-7
ஏறுடையான் 37-5,12-5, 22-4
ஏறும் 96-6
ஏறொப்பான் 3-3
ஏற்பவர் 97-19
ஏற்றங்கோயில் 11-1
ஏற்றப்பெறுதல் 93-4
ஏற்றனார் 57-6
ஏற்றினர் 51-10
ஏற்றினான் 44-7
ஏற்றின்மேல் 60-5
ஏற்றுடையான் 92-10
ஏற்றுமின் 86-4

Koviloor Digital Library

ஏனம் 49-9
ஏனன் 4-2

ஐ

ஐதுவண்ணம் 28-9
ஐந்தலை 33-9,97-19
ஐந்தலை அரவு 52-4
ஐந்தலைநாகமே 36-7
ஐந்தலைநாகம் 4-9,9-6
ஐந்தலைப்பாம்பு 16-5
ஐந்திட்டு 54-4
ஐந்து 34-3,65-4
ஐந்துடன் 80-3
ஐந்துபுரியன் 18-7
ஐந்தும் 98-7
ஐந்துள 74-6
ஐம்புலன் 98-10
ஐம்பூதங்கள் 71-5
ஐம்மதயானை 4-3
ஐயர் 7-6
ஐயன் 60-7,84-7,35-2,95-4
80-9, 75-3, 48-9, 97-10,
7-12,79-7,29-9,40-7
ஐராவணன் 49-11
ஐவர் 85-3,82-6

ஒ

ஒக்கஆடல் 7-1
ஒக்கவே 50-4
ஒக்குமே 99-9
ஒக்குமோ 100-5
ஒக்கும் 32-5,30-9,27-9,49-1
ஒடுங்குமே 89-8
ஒட்டிநின்ற 33-3
ஒண்கழலான் 81-3,96-7
ஒண்கொடி 88-8,5
ஒண்சுடர்வண்ணம் 28-8
ஒண்பால் 88-4
ஒண்பொருள் 96-8,29-3
ஒண்மலர் 54-8,54-7
ஒதுங்கி 76-2
ஒத்தது 38-5
ஒத்தனன் 29-2
ஒத்தன் 13-4
ஒத்தினான் 46-10
ஒப்ப 96-7
ஒப்பர் 61-9,24-3
ஒப்பாரியிலாத 3-1
ஒப்பான் 94-2
ஒப்பிலாததலைவன் 46-4
ஒருகை 39-8
ஒருசுடர் 1-7
ஒருபாகம் 49-6
ஒருபாம்பு 36-6
ஒருத்தனார் 1-7
ஒருத்தன் 13-10,62-1, 32-7
ஒருத்தி 67-7,17-7,40-5
ஒருபித்தர் 38-5
ஒருவர் 20-1
ஒருவனார் 25-4,25-9
ஒருவன் 83-9,13-5,100-3
97-11,29-5,21-1,57-7, 1-8
ஒருவா 13-4
ஒருவிரல் 52-10
ஒல்க 75-10
ஒல்லை 20-3,78-3,5-3,43-10
ஒவ்வாதன 38-5
ஒழித்து 100-10
ஒழிந்து 99-6
ஒழிமினோ 97-13
ஒழுகமாடம் 31-7
ஒளி 98-3
ஒளிகளிறு 89-9
ஒளித்தவாறு 50-7
ஒளிநிறவண்ணனை 95-6
ஒளிமதி 24-1

Koviloor Digital Library

ஒளிநிறவண்ணன் 95-2
ஒளிமாமதி 24-8
ஒளியாய் 97-28
ஒளியான 34-4
ஒளிர் 17-5
ஒளிர்கல்லனை 17-4
ஒள்வளை 46-2
ஒள்ளழல் 97-27,27-4
ஒள்ளாறனே 68-3
ஒள்ளிய 49-2
ஒள்ளியார் 50-5
ஒறுத்தான் 98-10
ஒற்றி 24-1
ஒற்றினார் 14-11
ஒற்றினான் 94-11
ஒன்பது 82-9
ஒன்பதுவாயில் 31-7
ஒன்பது 89-9
ஒன்றாயினான் 71-1
ஒன்றானை 98-7
ஒன்றி 41-4
ஒன்றிலர் 76-7
ஒன்றிலோம் 39-3
ஒன்றினால் 50-10,98-1
ஒன்று 42-7,40-10,33-2, 89-1, 35-7
ஒன்றுதான் 45-7
ஒன்றுரைக்கும் 24-2

ஓ

ஓங்கல் 13-10
ஓங்குமால்வரை 2-10
ஓசை 15-1,23-4
ஓடல் 84-1
ஓடி 86-6,76-7
ஓடிப்போந்து 50-7
ஓடும்நீர் 99-9
ஓட்டநந்தேன் 50-3,50-4
ஓட்டினாய் 33-5
ஓட்டினோம் 39-10
ஓட்டுப்பள்ளி 84-1
ஓட்டுவார் 54-4
ஓட்டை 99-9,82-9
ஓத 52-7
ஓதநீர் 91-2
ஓதமாகடல் 31-10
ஓதமால்கடல் 9-1
ஓதம் 52-6,66-1
ஓதவண்ணம் 97-12
ஓதவல்லார் 71-2
ஓதாநாவன் 22-4
ஓதி 37-9,82-8,99-4,60-1, 88-10,57-7
ஓதிய 38-2,30-6
ஓதியான் 94-6
ஓதிலென் 99-4
ஓதுவார் 49-10,16-1
ஓத்தன் 63-7
ஓமம் 76-8
ஓமியம் 22-8
ஓம்பல் 25-9
ஓயுமே 87-2,83-1
ஓயும் 51-11,23-8,24-1, 19-11
ஓராது 84-9
ஓரி 24-2
ஓர் 78-6,24-2
ஓர் நாகம் 52-1
ஓர்பாகமாய் 9-3
ஓர்வு 76-1
ஓவாதேத்தி 31-4

க

கங்கை 51-1,100-3,15-6,9-7, 49-8,86-7,40-6,99-2,30-1,32-7
கங்கைசெஞ்சடையான் 18-6
கங்கைமாலையர் 27-7

Koviloor Digital Library

கங்கையாள் 22-3
கங்கையான் 19-8
கங்கைவார்சடை 26-2
கச்சிஏகம்பன் 47-9
கச்சிஏகம்பனார் 32-1
கடந்து 97-2
கடம்பந்துறை 18-1
கடம்பன்தாதை 84-6
கடம்பூர் 20-1
கடம்பை 19-9
கடலின் 90-4
கடலுள்எழுநஞ்சு 3-1
கடல் 52-3,57-6,66-1,100-5, 51-8,83-9
கடல்நஞ்சு 33-6
கடவுள் 93-9,3-1
கடலூரரே 37-3
கடலூர் 38-6
கடன் 19-9
கடிகொள்பொழில் 32-1
கடிக்க 24-2
கடிதெழு 86-6,9
கடிந்தார் 58-4
கடிதாகிய 34-4
கடிபுனல் 51-8
கடிபொழில் 48-7,1-8
கடிமாமதில் 17-4
கடியேன் 91-9
கடுக்கண்டன் 11-10
கடுக்கை 55-10
கடுக்கையான் 37-11
கடுங்காலம் 32-4
கடுத்த 28-10
கடுத்தகாலன் 37-6
கடுத்தவான் 37-6
கடைகள்தோறும் 6-4
கடைக்கண் 21-7
கடைந்தவர் 34-5
கடைதேடுவார் 36-4
கடைந்த 13-9
கடையர் 58-4
கடையேன் 91-4
கட்டப்பட்டு 42-6
கட்டமுற்றார் 95-7
கட்டம் 45-10
கட்டறுத்து 86-9
கட்டாறு 75-2
கட்டி 3-2,93-7,54-1,5-6, 32-2
கட்டிட்டான் 94-10
கட்டுண்பார்கள் 21-2
கட்டுநீர்த்தவர் 85-1
கட்டும் 2-3
கட்டுவர் 25-9
கட்டுவாங்கத்தினர் 36-7
கட்டுவாங்கம் 95-7,6-7
கட்டிபட்டகரும்பு 14-10
கட்டிவிட்டகடையர் 25-7
கணங்கள் 19-6,10
கணங்கள்சேர் 38-7
கணக்கிலார் 16-2
கணஞ்சூழ் 49-2
கணைதொட்ட 22-6
கண் 47-7
கண்உலாம்பொழில் 40-1
கண்எலாம் 32-10
கண்கள் 65-6
கண்ட 97-23,34-8
கண்டது 98-5,17-10,98-3
கண்டத்தர் 68-7
கண்டத்தன் 29-4
கண்டத்து 97-24,93-8
கண்டந்தான்கறுத்தன் 5-8
கண்டம் 93-9,41-6
கண்டலம் 83-2
கண்டலும் 83-2
கண்டவண்ணங்கள் 28-6
கண்டனர் 84-9
கண்டன் 93-10

Koviloor Digital Library

கண்டாய் 74-1
கண்டார் 94-5
கண்டி 95-10
கண்டிலன் 40-1
கண்டு 89-6
கண்டு 39-3
கண்டுகொண்டது 98-8
கண்டுகொள்மின் 76-2
கண்டீர் 94-7,1,37-2,3-3
கண்டீர் (பன்மைவிளி) 3-1
கண்டேன் 50-4
கண்ணன் 18-4
கண்ணி- 89-1,15-6,27-7,21,3, 96-6,97-2
கண்ணித்தொத்த 17-2
கண்ணியான் 20-2
கண்ணிலுள்மணி 47-8
கண்ணினன் 89-3
கண்ணினார் 19-7
கண்ணின் 32-9
கண்ணீர் 88-8
கண்ணுடையார் 23-3
கண்ணுதல் 84-4,74-2,3,7-12 6-4
கண்ணுளார் 84-10
கண்ணுளான் 37-7
கண்நிறைந்தபொழில் 1-8
கண்நீர் 88-5
கண்நுதல் 17-7
கதவம் 10-3,10-8
கதந்தணிவித்தவர் 38-5
கதி 3-6,93-9
கதிர் 26-6
கதிர்மாமணி 93-1,17-3
கதிர்முடி 20-2
கத்துகாளி 38-5
கந்தமாமலர் 93-7,95-8, 8-6, 5-9
கந்தமாலைகள் 14-8
கந்தம் 83-8
கபாலம் 95-10,2-3,95-7
கபாலி 24-5,95-3
கபாலியர் 25-7
கபாலியார் 16-1,25-8, 80-2, 17-2
கமழ்சடையன் 6-8
கம்பயானை 52-6
கம்பிக்கில் 77-6
கயல் 26-8
கயவர்புரம் 49-7
கயிலாயநன்மலையன் 39-6
கயிலாயமெடுத்தவன் 23-10
கயிலாயம் 22-10,59-10, 98-10
கயிலை 63-11,87-10,55-10
கயிறு 90-10
கரக்கோயில் 20-10,19-10
கரணம் 97-17
கரத்தில் 35-7
கரத்தினால் 51-11
கரந்ததே 50-5
கரந்தார் 87-5
கரப்பர் 30-1
கரம் 73-10
கரவு 97-26
கரி 97-26,83-7,8-2
கரியகண்டத்தர் 27-5
கரியகண்டத்தினான் 18-7
கரியகண்டன் 78-9
கரியமால் 8-9
கரியர் 38-6
கரியன் 49-2
கரு 13-5,81-5
கருங்களிறு 23-7
கருங்கையானை 46-8
கருகுகண்டத்தன் 29-5
கருதநின்றவர் 32-8
கருதப்படும் 97-12
கருதப்படுமவர் 9-1

Koviloor Digital Library

கருதியான் 97-5
கருதும் 84-3,5,6.10
கருதுவது 21-2
கருத்தர் 23-1,80-2
கருத்தினான் 14-8
கருத்தன் 5-9,40-5,17-7, 76-10, 4-9
கருத்தாகி 71-8
கருத்திலா 100-10
கருத்தினார் 39-11,75-7
கருத்து 13-3,39-3
கருப்பு 42-2
கருப்புச்சாறு 61-5
கருமமாக 81-2
கருமம் 97-27, 76-5
கருமால் 89-1
கரும்பற்றச்சிலை 1-2
சரும்பினூறல் 74-1
கரும்பினை 93-7
கரும்பின்மொழி 28-7
கரும்பு 14-10, 93-6, 5-6
கரும்பொப்பான் 3-2
கருவதாம் 20-1
கருவன் 76-1,83-9
கருவிடம் 79-3
கரை 75-1
கரைந்து 12-1
கரையினர் 80-5
கலக்கும்வினை 4-4
கலங்கள் 83-6
கலந்து 99-9,5,1,6
கலந்தார் 74-1
கலந்தெழு 75-3
கலம் 13-3
கலவமஞ்ஞை 24-7
கலன் 6-3
கலை 88-6
கலைகள் 39-6,10-5
கலைக்கையான் 37-1
கலைஞானிகள் 63-4
கலைப்பொருள் 76-6
கலையொப்பான் 3-10
கல்லினார்மதில் 83-4
கல்வி 90-2,76-6
கவர்புன்சடை 9-5
கவர்வார் 5-3
கவலை 42-6,59-6
கவலைக்கடல் 91-9
கவல்மின் 76-2
கவளமாகளிறு 51-2
கவாலி 29-1
கவித்த 14-10
கவிளம் 62-9
கவ்வவண்ணம் 11-5
கழலடி 82-9,97-7,31-7,75-9
கழலாய் 96-2
கழல் 77-3,10-5,60-5,70-1, 69-1, 87-5, 84-1, 92-11, 14-4, 97-11
கழல்கின்றது 29-9
கழல்கொள்காலினர் 52-8
கழல்கொள்கால் 12-11
கழி 83-10
கழித்து 93-1
கழிந்தவை 33-3
கழிந்து 33-10
கழிப்பாலை 40-3
கழிய 98-3
கழியக்கண்டு 50-4
கழியாது 22-2
கழிவதன்முன்னம் 43-9
கழிவர் 90-5
கழுகு 13-8
கழுகு அரித்தல் 31-7
களரியார் 20-7
களரும் 19-1
களவு 95-9
களிகூர 37-5

Koviloor Digital Library

களித்தி 47-1
களிப்பட்ட 92-4
களியின் 23-10
களிற்றுரிபோர்த்தவர் 46-8
களைந்தவன் 80-3
களைபவர் 53-3
கள்வர் 23-2
கள்வன் 20-9
கள்ளத்து 98-3
கள்ளத்தேன் 91-9
கள்ளம் 80-6,82-4
கள்ளிக்காட்டு 34-7
கள்ளியார் 50-5
கறங்கு 74-2
கறுத்த 93-9
கறுத்தான் 98-10
கறுத்தவர் 66-2
கரும்பி 74-6
கறைகொள்கண்டத்தர் 26-5
கறைகொள்கண்டத்து 48-3
கறைகொள்கண்டம் 16-1
கறைக்கண்டன் 18-5
கறைசேர்தருகண்டன் 40-7
கறைநிலாவியகண்டன் 39-5
கறைமிடற்று 42-3
கற்பித்து 88-4
கற்றவர்கள் 84-5
கற்றவன் 49-5
கற்றார் 20-8
கற்றுக்கொள்வன 91-6
கற்றுப்போய் 88-2
கற்றோர்க்கோர் அமுது 3-10
கனகப்புன்சடையான் 18-2
கனங்குழை 94-10
கனங்கொள் 83-7
கனலேந்தி 6-8
கனல் 93-1,3-7,58-4,7-9,
61-7,17-3,21-3
கனல்மழு 6-7
கனல்மாமணி 28-6
கனல்விரித்தாடுவர் 11-5
கனவு 3-9
கனி 91-7,14-10
கனிவித்து 92-1
கனைகழல் 12-9
கனைகுரல் 70-7
கன்னல் 38-2,93-6
கன்னி 22-3
கன்னியர் 51-5,51-3
கன்னியே 29-2

கா

கா 60-6
காக்கும் 47-7
காக்கை 90-5
காசன் 93-1
காடு 26-1
காட்சி 88-7
காட்டில் 82-9
காட்டுப்பள்ளி 84-1,84-10,
84-2,84-4,84-7
காட்டும் 90-2
காணத்தான் 83-1
காணலுற்றார் 95-5,8,10,6,9
காணவல்லரோ 1-10
காணிய 95-7
காணில் 39-10
காணும் 38-5
காணேன் 53-10
காண்கிலா 80-8
காண்கிலர் 95-11
காண்டல் 81-4,71-8
காண்டற்கரியனே 97-27
காண்டு 12-9
காண்டும் 81-4
காண்பதே 66-4
காண்பரிதாயினான் 32-8

Koviloor Digital Library

காண்பரிது 26-8,34.9
காண்பரியான் 36-9
காண்மினே 88-9,74-10,71-9
காண்மின் 29-10,27-9, 39-11, 34-7,7-12,44-1,34-3,36-4,30-11, 29-4,5-1
காதலன் 63-4
காதலான் 37-9
காதலித்து 7-7.97-19
காதலே 88-7
காதல் 59-4,43-3,97-12, 13-6
காதல்செய்து 9-1
காதன்மை 27-7
காதில்வெண்குழை 27-7
காத்தன் 13-6
காப்பர் 42-3
காப்பினால் 97-24
காமனைக்காய்ந்தவன்42-2,1-2
காமாத்தம் 44-3
காமம் 92-6
காமன் 92-4, 1-2
காமன்காய்ந்தபிரான் 18-8
காமியம் 22-8
காமுறுகின்றனள் 45-3
காமுற்று 21-8
காய்த்தேயுளன் 76-3
காய்கதிர்ச்சோதியன் 29-5
காய்ந்தவன் 97-16, 95-7, 32-4,69.6
காரணத்தர் 80-2
காரணம் 21-10,65-10,18-9
காரிகை 88-9
காரிகையாள் 29-6
காரிகையுடையான் 18-3
காரிகைவண்ணம் 29-7
காரிருள் 71-5
காருலாமலர் 41-9,2-9
கார் 76-7,24-7,19-1
கார்அரகன் 45-10
கார்கொள் 29-4
கார்வலைப்பட்டு 44-3
காலகாலர் 38-3
காலங்கள் 38-2
காலபாசம் 86-1
காலமடைந்தவர் 30-1
காலமான 43-9
காலம் 97-23
காலம்கழியாதே 22-8
காலவான். 37-4
காலனார் 69-2
காலனைக்காய்ந்தவர் 52-8
காலனே 83-10-71-4
காலன் 5-8,72-4,37-11,57-5, 25-2, 75-7, 60-6, 6-10, 13-8, 17-10
காலை 99-5
காலவண்ணத்தர் 28-2
கால் 98-10, 89-6, 18-10, 75-1, 34-9
கால்காட்டி 29-7
கால்கொடுபாய்ந்த 5-8
காவலாளன் 99-1
காவல் 63-1
காவன் 32-4
காவிரி 75-1, 3,4,5, 30-1, 99-2, 73-2
காளி 22-2
காளையர் 70-1
காறுகண்டத்தர் 25-3
காற்றன் 4-4,57-6
காற்று 69-6,61-8,17-3
கான 99-6
கானம் 86-6
கானல் ஆனை 37-3
கானல்வாய் 9-8
கானல்வேடர் 84-3

Koviloor Digital Library

கானவேடன் 49-9
கானூர்முளை 76-4
கான் 34-3

கி

கிடந்திட்டு 76-3
கிடந்து 95-7
கிழவன் 3-6
கிளமை 97-28
கிளரும் 20-7,11-9
கிளரொளி 94-9
கிளர்ந்து 86-7
கின்னரம்31-10,20-7,86-2,19-1

கீ

கீதத்தர் 24-9
கீதத்தான் 11-9
கீதம் 31-10
கீதம் 51-3,22-10
கீதன் 61-4
கீர்த்திமைகள் 86-7
கீழ்க்கணக்கு 21-8
கீழ்நின்ற 12-5
கீள் 89-1
கீற்றினான் 94-9

கு

குஞ்சி 23-9
குடத்து 99-9
குடவாயில் 65-8
குட்டவல்வினை 52-9
குணங்கள் 26-7,19-6, 82-7
குணத்தார் 18-3
குணத்தால் 98-8,7
குணத்து 35-5
குணமில்லர் 58-3
குணமுடை 17-3
குணம் 65-3,91-4
குணலை 32-1
குண்டர்58-3,44-9,73-9,33-10
குண்டிகை 58-2
குண்டுபட்டு 41-6
குதிகொளும் 75-10,20-1
குமரன் 64-10
குமரித்துறை 99-2
குமைத்திடும் 86-4
கும்பிடு 48-8
குயில் 64-2
குரக்கினம் 75-10
குரக்குக்கா 75-3
குரம்பை 76-5
குரவம் 8-3
குரவனம் 75-9
குரவன் 64-9, 22-9, 34-2
குரவை 97-26
குருக்கோத்திரத்தார் 12-4
குருவதாயகுழகன் 20-1
குருவன் 13-5
குருவினை 98-8
குரையார்கழல் 96-5
குருநலம் 31-9
குலம் 60-3
குலவில் 36-6
குலவினான் 56-4
குலன்கள் 77-8
குலாயது 27-2
குவித்து 30-7
குழகர் 52-8, 10-8
குழகனார் 57-4, 14-6
குழகன் 6-3, 20-4, 13-8
குழலாள் 44-5
குழல் 12-6,14-10,29-6, 40-3
குழற்கோலச்சடை 44-7
குழு 99-7
குழுமி 51-4

Koviloor Digital Library

குழைகொள்காது 38-1
குழைக்கும் 21-4
குழைக்கும்வண்ணங்கள் 28-5
குழைந்து 75-9
குளக்கும் 21-6
குளித்து 99-8,9
குளிர் 52-8,97-26,34-1
குளிர்ந்த 31-1
குளிபுனல் 44-9
குளிர்புன்சடை 11-1
குளிர்பொழில் 56-4
குளிர்மதி 80-5
குளிர்விக்கும் 52-9
குறவன் 22-6
குறிகள் 90-6
குறிக்கொள்மின் 24-3
குறிக்கொள 21-4
குறிக்கொள் 13-1
குறிநின்றவன் 18-3
குறியறியா 41-6
குறியில் 76-4
குறைகாட்டான் 9-9
குறைவிலர் 41-1
குறைவிலைப்படும் 23-1
குறைவிலோம் 39-5
குற்றுங்கள் 19-6, 77-8
குற்றமில்லி 79-6
குற்றம் 70-2, 62-5
குற்றாலத்தான் 34-1
குற்றம் 99-8
குன்று 64-4

கூ

கூடலாம் 56-9
கூடல் 64-4,88-8
கூடவேடத்தர் 99-7
கூடாதீர் 65-3
கூடி 28-5
கூட்டினார் 51-1
கூட்டை 84-2
கூத்தர் 7-1,36-6
கூத்தனார் 56-7
கூத்தன் 13-6,15-3,2-9,
23-9,64-1,62-5
கூத்தா 96-5
கூத்தாடி 22-2
கூத்தாடும் 68-3
கூரிதாய 77-1
கூரிய 18-3
கூர்ச்சம் 39-8
கூர்த்தவேல் 86-7
கூவல் 100-5
கூவிளங்கண்ணி 55-4
கூவிளம் 11-4,14-3, 29-6
கூறினான் 35-8
கூறு 8-1
கூறுகொண்டுகந்தாந் 11-8
கூறுசெய்த 20-4
கூறை 58-3
கூறையன் 97-5
கூற்றம் 86-4,11-1,79-2,69-6
கூற்றன் 4-4
கூற்றினை 17-3
கூற்று 24-3

கெ

கெடிலக்கரை 53-8,11,54-3,6
கெடிலவீரட்டனார் 54-1
கெடுமாறு 97-23
கெடும் 97-18,83-8,81-5
கெடுவீர் 84-1
கெட்டு 84-8
கெட்டுப்போம் 5-1
கெண்டி 95-10
கெழுவினான் 31-10

Koviloor Digital Library

கே

கேடில்லை 5-1
கேடு 70-5
கேட்கிலன் 99-3
கேட்டல் 39-11
கேட்டிரேல் 92-1
கேட்டு 89-7
கேட்டுப்பள்ளி 84-1
கேண்மினோ 40-3
கேண்மின் 71-9,23-6, 92-10
கேளுமின் 70-5
கேள் 85-3

கை

கை 95-10
கைகள் 31-7
கைகூப்பும் 66-9
கைகொள்சூலத்தர் 36-7
கைக்கொண்டிலர் 95-7
கைதுகாட்சி 28-9
கைதொழ 88-2
கைதொழா 19-3
கைதொழுது 47-6,42-2
கைதொழுமின் 47-2
கைதொழுவார் 14-3, 31-4, 12-1,
கைநரம்பு 28-10
கைப்பற்றி 96-9
கைமான் 2-3
கையது 21-7, 36-7
கையில் 84-7
கையில்வெள்வளை 29-7
கையினன் 56-1,27-1
கையினான் 97-18,21-24
கையினீர் 92-7
கையினோடு 79-7
கையேந்தி 52-1
கைவளை 88-5,29-6
கைவிட்டு 90-4,97-28

கொ

கொக்கரை 22-5,51-7
கொக்கரைகுழல் 7-1
கொக்கினம் 75-8
கொக்கு 55-4
கொங்கு 99-2
கொங்கையாள் 22-3
கொடி 32-1
கொடியது 34-7
கொடியவள் 23-8
கொடியார் 14-11
கொடியேன் 2-2
கொடிவாணரே 34-2
கொடு (கொடுமை) 39-5
கொடுகொட்டி 92-1,7-1, 51-7
கொடுக்கில் 39-2
கொடுங்கண் 23-1
கொடுங்கூற்று 66-4
கொடுஞ்சரம் 32-6
கொடுத்தனன் 87-10
கொடுத்தார் 15-6
கொடுப்பேன் 66-9
கொடுமுடி 65-8
கொட்டம் 64-11
கொட்டாறு 75-2
கொட்டிட்டை 69-4,5,6,7
கொணரும் 75-3
கொண்டபாணி 92-1
கொண்டல் 56-3
கொண்டல்வண்ணன் 7-11
கொண்டவன் 54-1
கொண்டன் 13-9
கொண்டான் 93-2
கொண்டிலர் 95-10
கொண்டீச்சரவன் 70-7
கொண்டீர் 9-5

Koviloor Digital Library

கொண்டு 90-4,95-4, 93 -7, 52-1
கொத்தினிற்பொலி 39-2
கொம்பனார் 69-9, 70-6
கொய் 75-3
கொய்திலர் 95-1
கொலைக்கையானை 37-1
கொலைசெய் 91-5
கொல்லம் 32-6
கொல்லியான் 34-1
கொல்லேறு 69-7
கொல்லை 20-6, 83-4, 70-7
கொல்லைஏற்றினர் 33-1
கொழுஞ்சுடர் 28-2, 37-4
கொழுந்தகை 20-6
கொள்கையன் 17-10
கொள்ளமாகிய 37-2
கொள்ளன்மின் 12-6
கொள்ளி 49-2
கொள்ளித்தீ 34-7
கொள்ளுங்காதன்மை 39-1
கொற்றவாள் 87-10
கொன்றான் 98-7
கொன்றிடும் 37-1
கொன்றை 97-20, 14-5, 84-6, 27-2, 29-4, 21-3, 76-10, 39-2, 25-3, 29-6, 11-6, 12-7, 11-7, 17-11
கொன்றை மாலை 14-3
கொன்றையந்தாரன் 2-9,
கொன்றையன் 89-6
கொன்றையினாய் 96-5

கோ

கோ 83-4
கோங்கம் 41-8
கோசம் 71-1
கோடத்தார் 12-4
கோடல் 41-8, 64-4
கோடி 100-3, 99-9
கோணல்மதி 53-1
கோணிக்கொண்டு 5-7
கோதனம் 62-4
கோதாவிரி 22-4
கோதி 57-7
கோதை 18-8,7-7
கோத்தவன் 97-26
கோத்திரம் 60-3
கோத்தெடுத்தான் 26-10
கோமளஞ்சடை 28-4
கோமியும் 22-8
கோயிலான் 91-1
கோயிலுளான் 37-2
கோயில் 2-1,6,90-6,64-6, 75-6
கோலங்கள் 89-2
கோலச்சிலை 79-6
கோலத்தான் 63-5,94-7
கோலமதி 53-6
கோலமா அருள் 17-10
கோலமாமலர் 48-8
கோலமாய 37-4
கோலமாளிகை 75-6
கோலம் 17-1,39-9,35-5, 13-3
கோலவண்ணத்தர் 28-2
கோல் 39-8
கோல்வளை 39-1
கோவணஆடை 6-9, 38-1, 17 -8, 53-7
கோவணத்துடையான் 22-1
கோவணம் 89-1, 92-10, 12-5, 95-5,41-1, 53-1,10-4
கோவலூர் 65-8
கோழம்பம் 64-5,6
கோளரவத்தினர் 33-1
கோளரவம் 19-1
கோளரவு 96-4,8-1

Koviloor Digital Library

கோளிலி 57-3,56-8
கோனைக்காவி 31-1

ச

சக்கரம் 68-6
சக்ரதார் 73-3
சங்கரன் 58-6,92-4,100-9
சக்கியாது 34-5
சங்கு 88-6,73-3,9-8
சங்குலாம்முன்கை 78-1
சங்கை 80-4
சடை 44-10,98-3,92-4,6-2, 12-7
சடைகொள்வெள்ளத்தர் 24-9
சடைக்கணான் 21-7
சடைக்கண்ணுதல் 67-2
சடைப்பெய்தான் 34-8
சடைமுடி 15-3
சடைமுடிக்கூத்தனார் 14-5
சடைமேலவர் 87-5
சடையர் 17-2
சடையன் 17-8,39-1
சடையான் 49-5,44-5
சடையில்கங்கை 41-1
சடைவைத்த 39-9
சடைவைத்து 40-6
சட்ட 10-3
சண்டநாயகன் 73-8
சண்ணிப்பான் 41-8
சதுரரே 68-6
சதுரர் 41-1
சதுரன் 93-2,33-8,1-11
சதுர்முகன் 73-3
சந்தமாக 35-6
சந்தனம் 12-2
சந்தி 93-2
சந்தியான் 44-2
சந்திரன் 52-4
சந்திரன்பிளவு 29-2
சந்திவண்ணத்தர் 28-1
சந்து 60-10
சமண் 58-7,9 48-6, 41-6, 80-9
சமண்வேதி 58-8
சமண்நெறி 76-4
சமயங்கள் 94-5
சமயப்பொருள் 89-6
சமாதிசெய்வார் 44-2
சமுத்திரநஞ்சு 34-5
சரக்க 10-11
சரக்கு 75-1
சரச்சுவதி 22-8
சலவராய் 36-6
சலவார்கள் 100-6
சழக்கர் 60-3
சனி 21-10

சா

சாக்கியம் 48-6
சாதல் 12-8
சாதி 88-6
சாதிப்பான் 94-8
சாத்திரம் 60-3,99-3
சாத்துவான் 35-6
சாந்தம் 92-6,24-9
சாந்தவெண்ணீறு 52-8
சாந்தவெண்ணீற்றினன் 11-7
சாமி 22-8
சாம்பல் 61-6,25-9
சார்ந்து 48-10
சார்தற்கு 97-29
சாயல் 29-2,48-8
சாயும் 19-8
சாய்வன் 100-6
சாவ(இடைச்சொல்) 48-5,8
சாவது 80-4

Koviloor Digital Library

சாற்றினேன் 92-4
சாற்றினோம் 12-6

சி

சிக்கெனும் 39-2
சிட்டர் 85-1,52-9,87-1,42-7, 9,2-3, 1-6,34-6
சிட்டனார் 42-6,8,30-3
சிட்டன் 4-1,81-1,49-8, 1-6.30-8,95-7
சிதைக்கவே 16-11
சித்தம் 31-2,72-1
சித்தர் 76-5,87-4,9,51-5, 77-7,41-2
சித்தன் 4-3,40-8,2-5,13-4
சிந்தனை 11-2
சிந்தை 71-9,88-1,48-9,20-4, 98-2,38-2,70-4,82-3, 49-6,8,14-8,61-5,76-4,40-2
சிந்தித்து 80-7
சிந்திப்பார் 25-1,97-1
சிந்திப்பாரவர் 97-8
சிந்தும் 14-4
சிந்தியார்களே 100-6
சிந்தியாதவர் 44-2
சிந்தியாது 5-9
சிந்தைவண்ணம் 28-3
சிந்தைவண்ணத்தர் 28-1
சிந்தைவாய்தலுளான் 27-1
சிந்தையே 76-8
சிந்தையுள் 89-3,2,22-2, 98-4,8,48-4
சிரமம் 22-9
சிராப்பள்ளி 85-4,85-2,1
சிரம் 7-2,8-10
சிரிச்சுற்று 1-3
சிலை 16-4,30-4
சிலம்பார்சேவடி 55-12
சிலர் 80-6
சிவனவன் 21-5
சிவனாய் 98-8
சிவனார் 8-6
சிவம் 60-3
சிவன் 49-6,79-8,2-2,9, 92-3, 81-1,96-7, 41-10, 97-1, 18, 100-6,100-5
சிவாய 51-6
சிவாயநம 43-6
சிவனவன் 82-4
சிவகதி 56-9,43-8,72-1
சிவசோதி 68-1
சிவலோகன் 36-2,2-2
சிறப்பர் 77-3
சிறப்பு 39-4
சிறுவர் 56-7
சிறைகொண்டு 18-5
சிற்றம்பலம் 33-1,1-1
சிற்றம்பலவன் 1-4
சினங்கொள்மால் 83-7
சினக்கும் 37-8
சினத்தினால் 88-3
சின்னவேடம் 9-3

சீ

சீரியல் 18-3
சீரியன் 27-1
சீரியார் 77-1
சீரை 6-4
சீர்காழி 65-5
சீலம் 86-1,13-3,84-8
சீவன் 100-6
சீற்றம் 92-4,9-2

சு

சுடரான் 92-11
சுடரொளிவண்ணன் 95-1

Koviloor Digital Library

சுடருளான் 3-1
சுடர் 97-2,3-5,55-6,17-4, 29-3
சுடர்மதி 26-6
சுடரை 17-5
சுடராழி 59-3
சுடர்ச்செம்பொன் 2-6
சுடர்முடி 51-1
சுடர்வண்ணன் 35-9
சுடர்வானரே 34-8,34-4,34-1
சுடர்வெண்மட 48-9
சுடலை 6-6,34-6,90-4
சுடலையாள் 94-4
சுடுகாட்டுஎரி 24-4
சுடுநீறு 87-7
சுட்ட 10-3,52-9
சுட்டகொள்கையர் 42-9
சுட்டநீறு 34-6
சுட்டிட்டான் 94-10
சுணங்கு 82-7
சுண்ணத்தான் 94-3
சுண்ணத்தர் 87-7
சுண்ணநீறு 6-6
சுண்ணப்போர்வை 23-3
சுண்ணவெண்நீறு 46-1
சுண்ணவெண்பொடி 53-2
சுண்ணம் 17-5,10-9, 45-5, 29-1
சுந்தரன் 17-10
சுபத்தர் 7-4
சுமந்திலர் 95-3
சும்மையார்மலர் 43-8
சுரக்கும் 10-11
சுரப்பொப்பான் 3-4
சுரிச்சிராது 85-3
சுரை 90-3
சுருக்குமாறுவல்லார் 30-1
சுருக்குவார் 16-6
சுருக்கெனாது 92-11
சுருக்கெனில் 92-11
சுருதியான் 94-5
சுரும்பினை 93-7
சுரும்பு 1-2
சுரும்பொப்பான் 3-2
சுருளின்வண்ணம் 28-4
சுருள்கொள்செஞ் சடையன் 47-6
சுவண்டர் 10-9,10-4,10-3,
சுழல 24-4
சுழிப்பட்டு 50-4
சுழல் 19-2
சுழல்கின்றது 50-4
சுளியும் 23-5
சுளை 19-5
சுற்றங்கள் 31-9
சுற்றம் 43-7,84-5,77-9,82-2, 47-6,5-2
சுற்றி 34-8
சுற்றியார் 16-5
சுற்றினார் 87-3,23-3
சுற்றினான் 94-11
சுற்றுமாடங்கள் 67-3
சுற்றும் 24-9
சுற்றுவார் 35-9
சுனையுள் 23-5

சூ

சூடி 39-3,53-1,82-5,6-6
சூடிய 92-9,23-9
சூடிற்று 24-8
சூடினை 96-4
சூடுமே 92-11
சூடும் 86-9
சூடுவர் 25-9
சூரியர் 52-4
சூலத்தர் 25-3,87-6
சூலத்தன் 12-3,7-12

Koviloor Digital Library

சூலத்தான் 94-7
சூலம் 21-3,6-10,38-3
சூழ் 67-3,87-8
சூழ்ச்சிமை 25-5
சூழ்ந்த 41-1,41-6
சூழ்ந்தவர் 42-9,52-9
சூலவஞ்சனை 17-10
சூழ்வினை 70-6

செ

செக்கர் 75-8, 68-6
செங்கணார் 80-4
செங்கணான் 95-11
செங்கணை 36-10,25-11
செங்கண் 26-2
செங்கண்மால் 51-10,67-4, 79-5
செங்கண்மால்விடை 36-8
செஞ்சடை 86-5,47-1, 74-2, 30-1, 95-11, 20-5, 67-3, 7-9, 10-2, 87-4, 9-8, 94-9, 25-3, 82-4, 17-5, 14-6, 52-6, 74-5
செஞ்சடையன் 8-2
செஞ்சடையான் 18-1
செஞ்சுடர் 75-8,97-1
செண்டர் 52-5
செண்பகம் 51-7,11-4
செண்டொடிய 7-7
செப்பத்தால் 96-7
செதுகுஅறா 32-7
செந்தழலாக்கி 79-6
செந்நெல் 77-2,57-1
செந்நெறி 77-9,2,10,1, 6,8,94-4
செந்நெறியான் 77-3
செப்பி 77-6
செம்பவளம் 55-5
செம்பவளத்திரளான் 37-8
செப்பும் 40-8
செம்பொனார்இதழி 52-6
செம்பொன் 32-5,62-3, 2-4,61-9
செம்பொன்பள்ளி 36-8
செம்பொன்பள்ளியார் 36-6, 36-10
செம்மலர் 76-1
செம்மலர்மேல் 47-9
செம்மேனியள் 8-1
செம்மேனியாள் 65-4
செம்மையுள் 86-1
செம்மை 48-5,14-4
செம்மைசெய்து 31-2
செம்மையாடை 43-8
செயும் 95-9,85-1
செய் 99-8
செய்கிலான் 99-4
செய்கையர் 52-9
செய்த 92-1,100-10
செய்தபாவம் 38-1
செய்தவன் 28-9
செய்திடும் 80-9,88-10
செய்திலை 33-2
செய்து 95-9,99-10,97-12
செய்துழல்வார் 38-5
செய்தொழில் 95-9,88-3
செய்மின்கள் 70-4
செருச்செய் 34-9
செருத்தன் 58-10
செய்ய 83-8
செய்யதீவண்ணர் 8-6
செய்யமாது 2-7
செய்யமேனி 36-7,40-4
செய்யில் 99-6
செய்யினும் 97-5
செல்வக்கோயில் 20-3
செல்வமே 64-3
செல்வம் 73-5,76-6,

Koviloor Digital Library

84-3,14-4,20-4,9-3
செல்வரே 85-1
செல்வர் 30-2,1
செல்வர்கள் 65-1
செல்வவிழா 32-1
செல்வனார் 30-9,3,33-1, 42-4, 25-1,50-1,30-1
செல்வன் 80-1, 30-6, 73-5, 32-6, 16-6
செல்வார் 70-3
செவி 66-3,90-3,47-7
செவ்வவண்ணம் 11-5
செவ்வழிப்பண் 12-10
செழுஞ்சோதி 81-1
செழுமாமலை 42-10
செழுமான் 97-18
செழும்கோயில் 75-9
செறிவளை 39-2
செறிவு 76-4
செறுகாண் 1-6
செறுவிப்பார் 16-4
செற்றது 89-4
செற்றவர் 24-10
செற்றவர்புரம் 79-6
செற்றார் 53-4
செற்றவன் 49-5
செற்றவர் 8-9
செற்றனர் 61-9
சென்றடைந்து 48-7
சென்றிடும் 75-3
சென்று 41-4,99-8,99-5,48-3, 36-9,40-1
சென்னி 9-7,90-7,20-9,10-3
சென்னியர் 80-5
சென்னியும் 97-27

சே

சேடர் 77-4
சேடனார் 42-10,30-2
சேடன் 49-6
சேண் 58-10
சேதா 22-4
சேமத்தால் 76-8
சேரவும்வல்லன் 80-4
சேரவே 70-4
சேராது 31-8
சேர்த்தி 35-3
சேர்த்தினார் 52-10
சேர்ப்பதாக 48-7
சேர்மினே 84-4, 2, 1, 5, 69-6
சேர்மின் 42-10
சேர்வு 76-7
சேலையாடியகண் 49-10
சேல் 34-9
சேவடி 93-4,1-6,42-6,54-1, 70-4, 97-3, 16-6, 1-11, 1-29,95-7, 32-9, 80-9, 57-1, 30-8, 92-4,84-4
சேவடிக்கீழ் 32-1, 32-5, 32-8, 32-7
சேவடியான் 67-9,27-10
சேவடியே 97-16
சேறை 77-8

சொ

சொரிந்திடும் 97-20
சொரிவிப்பர் 16-3
சொலீர் 25-6
சொல்லவே 83-4
சொல்லனை 17-4
சொல்லி 34-3
சொல்லிடீர் 76-6
சொல்லுகேன் 91-7
சொல்லு 39-6
சொல்லுவன் 60-5,59-6
சொல்லுவீர் 100-4

Koviloor Digital Library

சோ

சோகம் 68-3
சோதி 88-10,93-8,15-2, 8-4,28-6,77-10,58-6, 29-3,45-1
சோதிப்பான் 94-8
சோதியார் 25-2,75-8
சோதியான் 30-5, 74-9, 94-6,84-6,90-10,81-4,33-4
சோதியின்வண்ணம் 28-4
சோருமே 83-4
சோர்குழல் 46-3
சோ(ளி)லி 56-3
சோற்றுத்துறையர் 33-5,6,3, 9,11,1,2

ஞ

ஞமன் 97-18

ஞா

ஞாயிறு 21-10,93-5
ஞாலத்தார் 63-5
ஞாலத்தான் 94-7
ஞாலம் 13-3,69-2
ஞாழல் 20-5,9-3
ஞானச்சுடர் 49-8
ஞானச்சோதியர் 52-7
ஞானத்தால் 89-10,91-3
ஞானத்திருப்பர் 5-2
ஞானநாயகன் 84-3
ஞானமாம் 98-7
ஞானமுதல்வன் 91-2
ஞானமூர்த்தி 93-5
ஞானம் 37-3,90-2,76-6
ஞானன் 99-6
ஞானிகள் 91-3

த

தக்கன் 7-5
தக்கன் வேள்வி 43-2
தக்கதன்று 45-2
தக்கனார் 52-5
தகர்த்த 43-2
தங்கள் 38-4
தங்கி 33-6
தங்கிய 97-15
தஞ்சம் 29-4
தஞ்சேகண்டேன் 50-3
தடந்தோள் 53-8
தடித்த 7-5
தட்டி 21-2
தட்டிய 88-2
தடுமாற்றம் 19-2
தடுமாற்றமே 97-18
தடையொன்று 31-6
தடவரை 41-10
தண் 21-9
தண்டம் 52-5
தண்டவாளி 7-7
தண்டனார் 44-9
தணிப்பார் 16-3
தண்புனல் 19-11
தண்புனல்பாய் 54-6
தண்பொழில் 10-6
தண்மதி 20-7,21-3,19-1
தண்வயல்சூழ் 23-5
தத்துவத்து 98-4
தத்துவம் 46-7,89-5
தத்துவன் 46-7,81-2
தந்தால் 91-7
தந்தை 35-6,70-4,98-2
தம்கை 34-5
தமக்கு 70-8,98-6,100-6
தம்மை 17-2,33-10
தம்மான் 98-4

Koviloor Digital Library

தமியேன் 2-4
தமர்களை 91-5
தமர் 12-5, 91-4, 97-18, 76-3, 92-11
தமிழ் 18-3
தயிர் 55-6,77-2
தரு 56-1
தருக்கதாக 48-10
தருக்கி 41-10
தருக்கிலாது 50-3
தரணி 77-6
தரித்தவன் 49-7
தருமம் 97-21
தலை 39-6, 35-7, 55-10, 98-10, 19-11, 61-11, 85-2, 73-10
தலைஅஞ்சு 40-10
தலைகொண்ட 52-5
தலைநின்றவர் 46-7
தலைபத்தும் 79-10
தலைப்படும் 97-29
தலைமகன் 16-7,97-29
தலையினால் 17-11,70-10
தலைவன் 56-2,90-7, 91-5
தலைவாணரே 34-5
தவநெறி 97-22
தவத்திடை 94-8
தவம் 39-6,33-2,88-1, 97-21
தவழும் 17-6
தவளமாமதி 29-2
தவிர்க்க 50-9
தவிர்ப்பார் 50-7
தவளவெண்ணகை 51-2
தழல் 12-6,29-6,28-1
தழல்கொள்மேனியர் 52-8
தழலும் 97-27
தழல்வண்ணன் 43-2
தழுக்குழி 21-2
தளை 91-2,33-11,56-4
தளரும் 20-7
தளர் 19-1
தள்ளி 55-2
தள்ளாடி 21-2
தனியாய் 96-3
தனிமுடி 14-10
தன்கடன் 19-9
தன்மையினான் 97-25
தன்மையே 97-15
தனம் 65-2
தன்வலி 48-10
தன்னையே 97-9
தன்னைநோக்கி 38-2
தன்னன் 65-2

தா

தாங்கலுற்றான் 13-10
தாங்குதல் 19-9
தாங்கினான் 29-6
தாணு 2-4
தாது 17-6
தாதியாவன் 45-1
தாதை 64-10
தாதொடுதொண்டு 30-5
தாம 82-7
தாமம் 92-6
தாமரை 26-8
தாமரையான் 19-10,97-27
தாமாத்தேடி 44-1
தாயத்தார் 76-3
தாயுமாய் 85-4
தாயினும் 100-9
தாய் 35-6,70-4,15-2
தாருகன் 63-7
தார்க்கொண்மாலை 35-4
தாரம் 70-4
தாவும் 17-11
தாவிரி 75-2

Koviloor Digital Library

தாவினான் 97-27
தாழ்சடை 24-6, 25-9, 22-3, 95-5
தாழ்ந்து 33-11
தாழ்ச்சி 88-7
தாழச்செஞ்சடை 41-5
தாழுமா 29-11
தாழம்பூ 64-3
தாழை 10-6
தாழைதண்பொழில் 41-5
தாள் 52-10,73-10
தாளடைந்தார் 26-3
தாள்முடி 44-1
தாளம் 92-1
தாளினால் 92-11
தானம் 86-6
தான் 97-21
தானவேடம் 49-9
தானவர் 74-3,51-5,97-25

தி

திகழ் 11-5
திகழ்நான்மறை 17-4
திகழ்சடை 14-3
திகையன்மின் 84-8
திங்களார் 12-2
திங்கள் 16-3,93-5,46-2,56-4, 40-6 25-3,21-10,20-5
திசை 1-9,76-7
திசைமுழுதளக்கும் சிந்தையர் 6-5
திசைதொழும் 51-2
திசைதொழுவார் 41-7
திசையும் 75-4
திண்டிறற்சிலை 66-5
திண்ணமாக 10-1
திண்ணமே 83-8
திண்ணம் 35-3
திண்ணன் 77-5
தித்திக்கும் 44-3
திருஎழுத்து அஞ்சு 27-3
திருகுசிந்தை 31-2
திரை 53-11
திரைகள் 54-7
திருக்கொடும்முடி 81-5
திருக்கரக்கோயில் 19-9,20-3
திருக்குவார்குழல் 16-6
திருக்கோளிலி 56-7, 57-9, 7-10, 1, 5, 6, 8, 2
திருச்சடை 35-6,35-3
திருச்சிராப்பள்ளி 85-3
திருச்சிற்றம்பலம் 1-3
திரண்டதோர் 94-3
திரிதரும்செல்வர் 23-6
திருத்தலாம் 88-1
திருத்தும் 11-2
திருத்தனார் 1-7
திருத்தன் 84-4, 32-7, 62-1, 4-10, 13-10, 4-9
திரைத்துப்பாடி 23-6
திருநள்ளாறன் 68-5
திருநாமம் 59-7
திருநாரையூர் 55-5
திருநீறு 22-1,28-9
திருநெறி 65-9
திருந்துசேவடி 40-2
திருப்பெயர் 39-1
திருப்புத்தூரன் 61-5
திருப்புத்தூர் 61-3
திருப்பாண்டிக்கொடுமுடி 81-3
திருப்பாதம் 57-4,52-10
திருப்பராய்த்துறை 30-7
திருமங்கலக்குடி 73-5
திருமணஞ்சேரியார் 87-6
திருமலை 1-11,12-11
திருமாமலை 16-11
திருமார்பு 30-7

Koviloor Digital Library

திருமால் 66-8, 98-9, 96-9
திருமாற்பேறு 59-1, 59-8, 59-9, 59-6
திருமுண்டத்தான் 94-1
திருவடி 50-10
திருவன் 13-5
திருவாஞ்சியம் 67-6,4,3,2,5
திருவார் 87-1
திருவாய்மூர் 50-7
திருவாரூர் 65-5
திருவிரல் 82-10,12-11
திருவினை 98-8
திருவின்நாதன் 76-1
திருவின்நாயகன் 47-9
திருவினால் 35-1
திருவேடம் 88-2
திலகம் 95-2
திலகநீண்முடியார் 36-6
தில்லை 33-1,1-1
தில்லைச்சிற்றம்பலவனார் 1-7
தில்லைமாநகர் 1-4
தில்லையூர் 65-5
தில்லையான் 30-6
தில்லைவட்டம் 1-9
திவளவானவர் 51-2
திளைக்கும் 26-6
திறக்கப்பாடிய 50-8
திறத்தாவன் 66-6,5
திறப்பிம்மன் 10-3
திறம் 88-10,22-4,22-2
திறம்பாவணம் 28-1
திறல் 16-9,17-11
தினைத்தனைப்பொழுது 2-1

தீ

தீங்கு 13-1
தீட்டி 95-2
தீண்டற்கரிய 50-10
தீத்திரளன் 12-7
தீத்திரள் 26-2
தீத்தாடி 22-2
தீத்தொழில் 89-9
தீமை 13-33
தீமேவும்உடுவா 48-1
தீயவே 97-7
தீயவை 97-7
தீயதோர்பாம்பு 25-9
தீயதோர்வண்ணம் 28-3
தீயினன் 90-16
தீயுருவாகியவண்ணம் 28-8
தீர 18-2,76-6
தீர்க 22-2
தீர்க்க 30-5
தீர்க்கும் 35-6,52-1
தீர்த்தருள்வாய் 97-6
தீர்த்தன் 2-2
தீரன் 4-6,12-7
தீர்த்தங்கள் 16-4
தீர்த்தம் 99-9
தீர்த்து 97-17,52-9
தீர்த்திடும் 82-6,8,96-7
தீர்த்திடும்வண்ணம் 28-7
தீர்ப்பரே 86-3
தீர்ப்பர் 54-7,38-1
தீருமே 83-9
தீரும் 97-8,46-9,59-6,58-7
தீரலாம் 88-1
தீவணர் 87-4
தீவணம் 22-7
தீவினை 18-8,31-8,96-7,58-7, 98-7, 65-3, 97-8, 81-5, 20-4, 83-9,85-3
தீவினையாளர் 44-2
தீவினையாளர்கள் 35-8

Koviloor Digital Library

து

துக்கந்தீர்வகை 43-2
துக்கம் 51-8
துஞ்சும் 24-7
துஞ்சும்போது 40-10,9-6
துஞ்சும்போதும் 93-8
துஞ்சும்போழ்து 27-3
துடும்பல்செய்நடை 84-6
துடித்ததோள்வலி 32-19
துட்டடுக்கிய 45-10
துட்டர் 10-3,25-5
துட்டன் 64-11
துணை 15-4
துண் 19-4
துண்டத்தான் 94-1
துண்டமாமதி 73-8
துண்டவெண்பிறை 6-3
துண்டவான்பிறை 45-3
துணிமதி 35-4
துணை 84-5
துணையாவான் 67-6
துணையெனல் 40-10
துதித்துநின்று 21-8
துதியாது 96-7
துதையிலே 39-3
துயக்கறும் 83-10
துயரங்கள் 76-6
துயரம் 89-7
துயர்தீர 47-1
துயர்தீரும் 43-1
துயரமுற்று 39-8
துயர்தீர்த்தல் 55-7
துயர் 83-8, 31-3,70-6, 16-6,42-5
துயர்தீரும் 58-6
துயில் 53-12,9,55-6,9-6
துரக்கன் 4-10
துரக்கும்வழி 77-5
துரவை 8-3
துலங்கி 77-8
துவின்நாயகன் 32-9
துளைக்கைவேழத்தர் 26-6
துளைக்கைவேழம் 6-5
துள்ளி 16-8
துள்ளும் 87-5
துறவிநெஞ்சினர் 22-6
துறை 16-1
துறைகள்ஆர்கடல் 45-8
துன்பம் 70-6,31-3,74-7,42-5
துன்பவல்வினை 8-5
துன்று 8-4,42-1
துன்றுவார்பொழில் 45-7
துன்னவாடையர் 87-8
துன்னில் 92-1
துன்னு 88-5,87-2
துன்னுவார் 73-6

தூ

தூக்கினார் 58-2
தூங்கு 34-1
தூணியார் 16-10
தூண்டிக்கொள்வன் 50-10
தூண்டியசுடர் 81-4
தூது 88-4
தூநெறி 43-10,16-5
தூபம் 92-6
தூமணி 84-6
தூமதி 74-5
தூமலர் 31-7, 30-10, 21-8
தூமழு 87-5
தூமொழியார் 82-7
தூயதோர் 37-6
தூர்த்தன் 52-10
தூவித்தொழுமின் 43-8
தூவல் 55-4
தூளி 1-9, 41-3

Koviloor Digital Library

தெ

தெங்கிளநீர் 44-10
தெங்கு 20-5
தெண்டிரை 55-2
தெண்ணர்கள் 31-1,93-1
தெருட்டர் 58-7
தெரியாதது 78-6
தெருவெலாம் 36-4
தெருளும் 31-8
தெளி 98-2
தெளிந்து 34-7,91-9
தெளிந்திலர் 95-2
தெளிவுறல் 86-4
தெளிவார் 13-5
தெள்ளி 34-7
தெள்ளியார் 50-5
தெள்ளுநீர் 54-3
தென்னவன் 21-5
தென்னன் 4-5

தே

தேங்குநீர்வயல் 2-10
தேசன் 98-9,93-1
தேடிக்கொண்டு 50-7
தேடியேசரவும் 78-6
தேடுவார் 66-8
தேமாதீங்கனி 44-3
தேம்பல் 25-9
தேய்ந்ததிங்கள் 6-8
தேர் 9-9
தேருலாம்பொழில் 41-9
தேருலாவியதில்லை 2-9
தேவர்கள் 51-5,87-9
தேவர்கோ 65-1
தேவதேவன் 65-9
தேவர்பிரான் 67-3
தேவி 48-2,73-5
தேவன் 62-2,32-4
தேறி 67-5,34-7
தேறும் 39-2
தேற்றன் 4-4
தேறலாவது 36-3
தேறல் 98-1,93-6
தேறுவார் 35-8
தேன்கொன்றை 94-4
தேனைக்காவி 31-1
தேன்படுகொன்றை 26-6
தேனையார்குழல் 8-7
தேனர் 52-7
தேனன் 4-2

தை

தையலே 88-7
தையல் 45-4

தொ

தொங்கி 33-6
தொடர 83-10
தொடர்ந்து 82-5
தொடுத்த 37-6
தொண்டர்க்கெளியர் 27-5
தொண்டன் 2-10,47-1
தொண்டுசெய்து 33-10
தொத்து 17-1,94-2
தொத்துநின்றவர் 33-2
தொந்தம் 1-4
தொலைவு 10-5
தொல்லையார்பொழில் 45-6
தொல்லையூழியர் 33-1
தொல்லைவல்வினை 1-4
தொல்வினை 54-6,97-23
தொழத்தகும் 27-8
தொழ 47-2

Koviloor Digital Library

தொழும் 20-9
தொழும்பர் 90-3
தொழில் 89-8,89-3

தோ

தோகை 45-9
தோணி 33-7
தோய்ந்தவர் 51-9
தோலர் 26-6
தோலுகந்தார் 24-9
தோலுடை 38-3,54-4
தோலனர் 87-1
தோலினோடு 96-2
தோள்கள் 67-7
தோள்வலி 34-10
தோளெட்டு 26-7
தோற்றங்கள் 16-6
தோன்றினான் 94-9
தோன்றும்கோயில் 11-1

ந

நகர் 67-4
நக்கணைந்து 95-1
நக்கம் 45-2
நக்கரையன் 22-5
நக்கர் 68-6
நக்கன் 29-10
நக்குநிற்பர் 90-9
நங்கடம்பன் 19-9
நங்கை 34-5
நங்கைமீர் 88-6
நஞ்சு 34-4, 17-1, 13-9, 17-10, 3-1,93-8
நடமாடும் 93-2,83-4
நடமாடும்பரமனார் 26-1
நடம் 34-3
நடுக்கத்துள் 92-2
நடுங்காமுனம் 43-5
நட்டமூர்த்தி 49-8
நட்டம் 34-6
நட்டன் 81-1
நமசிவாய 97-22,90-2
நமது 97-2
நமனார்தமர் 43-1
நமன் 92-5
நம்பன் 83-3,93-8
நம்பர்க்கு 92-2
நரகக்குழி 79-1
நரகம் 97-14
நரகர் 97-18
நரி 94-4,12-8
நரிச்சிராது 85-3
நரைவிடை 43-5
நலங்கொள் 66-10
நல்லார் 53-5,48-8
நல்லார்கள் 77-7
நல்லான் 94-7
நல்லிருள் 86-8
நவில்கிலார் 9-5
நவிற்றி 72-7
நவின்ற 34-5
நவின்று 90-2
நறுங்குழல் 74-2
நறுஞ்சோதி 18-6
நறுமலர் 95-1
நறுமலர்ச்சேவடி 31-4
நற்றவம் 5-2,99-10
நனிபள்ளி 65-5
நன்மணிகண்டனார் 42-5
நன்மனையாள் 56-7
நன்மை 43-2
நன்மையே 71-7
நன்று 42-1,99-8,14-3
நன்னிதி 76-2
நன்னிலம் 65-8
நன்னெஞ்சே 97-16

Koviloor Digital Library

நன்னெறி 71-10, 26-3, 90-2, 73-6, 84-4

நா

நா 65-1
நாசமே 85-4,81-1
நாசம் 18-0
நாணிலி 20-18
நாணிலீர் 84-2, 90-4, 88-2
நாதர் 64-6
நாதன்நகர் 43-3
நாத்திகம் 31-6
நாமங்கள் 40-1
நாமமே 87-10
நாயகன் 47-7,100-1
நாயனார் 85-4
நாரணன் 18-9, 78-6, 1-10, 68-2,65-10,100-3
நாரிபாகன் 77-1
நாரையூர் 55-4,55-7,55-1
நான்மறைஓதி 17-4
நான்முகன் 97-26

நி

நிச்சல் 92-8
நிதிஒப்பான் 3-6
நித்தல் 57-9,84-8
நித்தன் 17-1
நித்திலக்குன்று 93-9
நிமலன் 7-9
நிமிர்ந்து 30-9
நிமிர்புன்சடை 16-9
நிரவன் 34-2
நிராமயன் 44-5
நிருத்தன் 17-7
நிரை 23-6
நிலம் 69-6
நிலன் 37-9
நிலாமதி 12-9
நிலாயவன் 23-7
நிலாவி 1-1,4
நிறைகொண்டனர் 25-8
நிறைக்க 29-11
நிறைந்ததோர் 35-5
நிறைய 92-5
நிறையும் 23-4
நிறைவாய் 98-9
நிறைவு 2-6
நிற்க 34-5
நின்மலன் 72-4

நீ

நீசர்கள் 73-9
நீடுகாடு 51-4
நீட்டி 33-5
நீண்ட 47-9
நீண்டமாக்கதவம் 10-2
நீண்முடி 94-11,36-9
நீதி 13-7, 8-4, 96-8, 93-9, 2-6. 37-9, 23-2, 57-7, 45-1, 58-6, 93-8
நீதியான் 33-4,94-6
நீதிநூல் 99-4
நீரன் 12-7
நீரும் 90-9,95-2
நீலமலர் 19-5
நீலமாமணிகண்டத்தார் 51-1
நீலமாமயில் 39-8
நீலமாமிடறு 48-8
நீலமேனி 37-4
நீலவண்ணத்தர் 28-2
நீள்கயம் 27-3
நீள்கழல் 39-5

Koviloor Digital Library

நீள்கொடி 37-5
நீற்றுத்தண்டத்தர் 24-3

நூ

நூறினான் 32-6
நூறு 100-3

நெ

நெடுங்கண் 23-1
நெடுங்கண்ணி 25-6
நெடுங்கண்ணியர் 23-2
நெறி 7-2,16-2
நெறிகள் 90-6,94-6
நெறிப்படுத்து 48-4
நெற்றி 34-8
நெற்றிக்கண்ணினர் 25-4

நே

நேசம் 31-9
நேசன் 39-10,98-9
நேரிழை 8-1,29-1
நேரிழைகூற்றினான் 44-7
நேர்மொழி 40-3

நை

நைஞ்சு 31-5
நைபவர் 31-2,79-3

நோ

நோக்கரிதாகிய 28-9
நோக்கினார்க்கில்லை 58-2
நோய் 18-10
நோய்வினை 47-7
நோவ 34-5
நோன்பிகள் 32-9

ப

பகலிருள்நிலா 3-4
பகலெல்லாம் 25-6
பகல் 76-6
பகீரதி 39-9
பகுவாயபூதங்கள் 7-1
பகைத்தார் 94-10
பங்கமின்றி 18-6
பங்கயத்தான் 68-3
பங்க்ன் 35-9
பங்கிஉண்டது 33-6
பங்கினன் 19-9
பஞ்சின்மெல்லடி 9-6,29-7
பஞ்சு 8-10,82-8
படம் 66-6
படலீயான் 94-4
படர்ந்தநாகத்தார் 25-2
படிக்கொள் 52-10
படியாய 49-1
படு 90-10
படுகின்றது 90-8
படுத்தான் 88-8
படுத்து 41-6
படை 67-1
பட்டி 97-4
பட்டிநூண்துளி 30-8
பட்டியாய் 33-3
பணங்கொள் 39-9
பணந்தவர் 54-6
பணம் 19-10
பணி 97-28,19-3
பணிகண்டு 35-8
பதமறிந்து 31-2
பந்தம் 7-2,35-6
பயிலும் 15-5
பயில் 70-4,59-4,70-6,47-1,
99-10

Koviloor Digital Library

பயில்கிலார் 66-2
பராபரன் 7-2,72-9
பரி 12-8
பரிசில் 50-7
பரிசு 61-3
பரிசெலாம் 33-9
பரிந்து 40-2
பரிந்துஅருள் 31-10
பரியர் 25-11,27-5
பருகப்படுவான் 21-5
பருகலாம் 88-1
பருகுபாலன் 93-10
பருகுபால் 29-5
பருத்தகோன் 39-11
பருத்தபாம்பு 32
பருப்பதம் 30-7
பருப்பதன் 86-5
பருவரால் 20-1
பருவெண்கோ 49-4
பலி 6-4,36-10
பலிகொணர்ந்து 9-6
பலிகொள்வன் 30-6
பலிகொள்வான் 29-10
பலிதிரிவான் 94-4
பலிதேரினும் 55-8
பலிதேர்ந்து 24-4
பலிதேர்வர் 8-8
பலியிடு 45-2
பலியிட்டு 45-5

பா

பாடகம் 51-4
பாடத்தார் 12-4
பாடலன் 46-6
பாடலாளர் 99-7
பாடல் 15-1,86-8,23-4,
41-8,55-7,64-4
பாடல்கள் 44-8
பாடிகாவல் 72-2
பாடினார் 51-4
பாவகாரியங்கள் 100-5
பாவங்கள் 5-10
பாவமே 97-12
பாவையன்னான் 44-8
பாறினார் 35-8
பாறு 8-1
பாற்கடல் 19-10
பான்பதி 17-5,27-2,
30-3,66-1

பி

பிச்சை 97-6,12-5
பிச்சைப்புக்கவன் 92-8
பிளவு 95-9
பிளிறிவருவது 46-8
பின்னைவெண்பிறை 20-9
பிறங்கு 53-3
பிறங்குசடை 91-2
பிறப்பு 34-4,77-3,74-8
பிறர் 21-6
பிறவி 80-7,1-1
பிறவிதீர்ப்பர் 38-4
பிறவித்துயர் 14-4
பின்னியார் 16-7
பின்னுசெஞ்சடை 11-6

பு

புகரில் 97-6
புக்கது 50-9
புடைபுகாது 92-7
புண்டரீகம் 76-2
புண்ணியமூர்த்தி 100-1,
45-11, 73-7
புண்ணியம் 77-1
புரமூன்று 4-1,22-7,34-1

Koviloor Digital Library

புரம் 87-3
புலம்புவேன் 44-3
புலன் 39-7,98-7,61-1,48-4
புலால் 27-1
புலி 96-5
புலித்தோல் 23-3
புலியுரியோன் 19-3
புல் 39-8
புல்லம் 32-6

பூ

பூதத்தான் 11-9
பூதநாதன் 71-2,17-6
பூதநாயகன் 32-3,6-1
பூதம் 67-1,100-1,14-9,
பூரணன் 65-10
பூவணத்தவன் 22-1
பூவும் 90-9
பூவுலார்சடை 36-5
பூழியான் 21-5

பெ

பெருந்தன்மை 100-5
பெருந்துணை 76-2
பெருந்தேவர் 44-6
பெருமான் 35-6, 88-5, 38-7, 92-5,38-4,78-8, 58-7, 19-10
பெரும்பசி 77-3
பெரும்புனல் 29-1

பை.

பைகொள்பாம்பு 2-7
பைங்கண் 51-10,36-8
பைங்கழல் 31-1
பைங்கழலான் 19-5
பைங்கிளி 88-4
பைங்கொடி 39-2
பைம்பொழில் 24-1

பொ

பொக்கம் 43-2
பொங்கரவன் 79-5
பொங்கிநின்று 33-6
பொங்கு 35-9
பொங்குசேர்மணல் 20-5
பொடிகள் 32-1
பொடிபட 39-11
பொடியாய் 70-9
பொட்ட 42-6,86-9
பொதும்பில் 76-2
பொத்தல் 76-5
பொத்தினான் 46-10
பொந்து 27-1
பொந்தை 98-2
பொய் 19-3,95-4,48-9,84-7
பொழுதுகழியாது 93-2
பொழுதுபேர்க்கி 21-8
பொள்ளல் 71-5
பொறி 90-6,48-4
பொற்கழல் 79-1,91-3
பொற்கோயில் 50-9
பொற்சுடர் 27-5,6
பொற்றை 99-10

போ

போகம் 51-9
போக்கறுத்து 48-4
போக்கி 95-4
போக்கிடும் 84-4,25-2
போக்கிடுவார்கள் 35-2
போது 30-5,24-6

ம

மகரவெல்கொடி 97-16

Koviloor Digital Library

மகன் 19-8
மகிழ்ச்சியான் 21-4
மகிழ்ந்த 25-2
மகிழ்ந்து 84-2
மகிழ்ந்துடன் 19-8
மகிழ்ந்துறைவீர் 84-1
மகிழ்வர் 60-1
மக்கள் 84-4
மங்கலக்குடி 73-1,3,4,8,9
மங்கலக்குடியான் 73-10
மங்கலவாசகர் 71-1
மங்கை 20-5
மஞ்சன் 29-7
மடநெஞ்சமே 31-9,33-1,1-4, 10,81-2,49-1,90-7
மடநெஞ்சு 90-7
மடநெஞ்சம் 42-7,33-2,6,7,8
மடந்தை 77-7
மடந்தைபாகன் 66-6
மடந்தையர் 21-2
மடவாள் 74-2,10
மணங்கமழ்மலர் 19-10
மணங்கமழ்மாடம் 26-1
மணங்கொள 39-9
மட்டுவார்குழலாள் 6-7
மணஞ்சேரி 87-1, 2,4, 5, 8, 9
மணஞ்சேரியார் 87-3,7
மணமாலை 15-6
மணி 49-1
மணிமுடி 3-10
மண் 15-5
மண்அறந்தவன் 16-10
மண்செய் 76-5
மண்டலம் 95-2
மதகரி 41-7
மதயானையுரித்தவன் 30-7
மதவேழம் 78-1,49-4
மதி 49-7 61-6,67-3,93-9 80-1,49-5
மதிக்கப்படுபவர் 14-7
மதிக்கிலள் 40-4
மதிசூடி 4-1,17-6
மதியம் 87-4,21-5,90-1
மதில் 16-4,83-1,76-10 69-7,26-1
மதில்எய்தவன் 17-11
மதுரவாய்மொழி 1-11
மத்தமாமலர் 41-1
மத்தம் 20-2,84-6,87-4
மத்தர் 38-5 72-1, 70-3, 77-7,77-4
மந்திரம் 92-9
மலரடி 42-10,77-10
மலை 64-11,60-10
மலைமங்கை 70-8
மலையாள் 63-4
மலையான் 74-2, 74-3, 74-5, 74-4,74-1
மல்லிகை 51-7,20-6
மல்லைஞாலம் 20-6
மல்லைமல்கியதோள் 43-10
மரகொக்காம் 75-1
மருந்தினை 87-2
மருந்து 40-2,60-4
மருள் 82-2
மயக்கம் 97-25
மயல் 71-9
மயானத்தார் 38-4
மயானம் 38-1
மயிலாடுதுறை 39-5,39-10
மயிலூர்தி 16-7
மறைஓதி 29-3
மறைக்க 29-1
மறைநான்கு 2-6,49-7,30-2
மறையோதி 21-5
மழு 17-8,6-10,69-5.56-1

Koviloor Digital Library

மா

மா 50-2,39-2,39-9,39-7
மாகடல் 99-2,35-9
மாகயானை 45-9
மாகாளி 73-7,
மாக்கதவம் 10-7,10-2
மாசர் 73-7
மாசு 90-1,93-1
மாசுடையார் 84-7
மாடத்தாடும் 12-4
மாடத்தில் 82-9
மாடு 72-1,70-3,77-7,77-4
மாணி 2-4
மாணி(வாமனன்) 16-10
மாதவன் 27-8
மாது 88-4, 100-1, 52-6, 45-1
மாதேவன் 62-4,100-4
மாதொர்கூறர் 52-3
மாதொர்பாகன் 66-1
மாமலரான் 43-9
மாமலர்ப்பாதம் 79-10
மாமலை 9-9,80-10,89-7
மாமறை 43-9
மாமுகில் 28-5
மாமுடி 40-10
மாய 76-3
மாயவன் 20-1,89-5
மாயன் 5-2,100-9,68-6
மாருதம் 76-7
மார்க்கம் 35-7
மாலை 90-1
மால் 28-4,59-2,64-9
மானுடவாழ்க்கை 39-5
மான் 6-7,6-10,56-1,51-1
மான்மறி 97-10,97-24, 87-5,16-1
மான்மறிக்கையினர் 21-3

மி

மிடற்றினான் 35-5
மிண்டர் 30-10,58-3, 41-6
மினல்(மின்னல்) 3-7
மின் 3-8, 96-1
மின்னன் 4-5
மின்னினுண்ணிடை 1-3
மின்னுவார்சடை 77-2

மீ

மீட்சி 88-7
மீண்டற்கும் 50-10

மு

முகப்பது 9-3
முகம் 89-4
முகில் 93-10,23-7,29-4
முகிழும்முனை 13-4
முக்கணன் 48-3
முக்கணும் 96-2
முக்கண்ணினன் 2-7
முக்கண்ணினான் 19-4
முடிபத்து 42-10,41-10
முடையர் 58-4
முட்டி 21-2
முதலாயஒருவன் 2-2
முதலாய் 36-5
முதல்வன் 94-7,20-8
முத்தர் 87-4
முத்தன் 13-4,44-6,49-8, 4-3,2-5
முத்து 61-1,17-1,56-2,94-2
முப்புரம் 66-2,61-9, 63-1, 94-10
முப்போது 6-1
மும்மதம் 2-1
மும்மதில் 53-10, 21-9, 53-6

Koviloor Digital Library

முயல்பவர் 75-2
முருகவேள் 16-7
முருட்டுமெத்தை 7-5
முலத்தான் 94-7
முற்றிலாமதி 14-11
முற்றிலாமுலையாள் 18-1
முற்றினான் 94-11
முனகு 18-2
முனம் 19-4
முனிகர் 96-2
முனிந்தார் 4-3
முனிந்திடர் 26-10
முனியாய் 96-3
முனிவர் 14-2
முன்கை 34-5

மூ

மூக்கு 58-2, 47-7
மூசு 90-1
மூடர்கள் 35-7
மூடி 99-9
மூடுவார் 84-7
மூண்டகார்முகில் 10-2
மூப்பினார் 97-28
மூப்பு 77-3
மூர்க்கப்பாம்பு 35-4
மூர்க்கராய் 98-6
மூர்த்தி 2-2,54-10, 26-8, 40-8, 56-2, 26-7, 62-2
மூலவண்ணத்தார் 28-2
மூவர் 62-2
மூவலூர் 65-8
மூவிலைவேல் 27-
மூவெயில் 97-27, 63-5, 25-1

மெ

மெய் 84-7,29-9,95-4, 22-1,80-9
மெய்தொழுவார் 34-8,1
மெய்ப்பொருள் 94-10
மெய்ம்மை 26-4
மெய்யடியார் 63-6
மெய்யர் 80-9
மெய்யன் 83-5, 97-10, 48-9, 80-9
மெய்யில் 84-7
மெய்யாடல் 55-2
மெல்விரல் 8-10
மென்முலை 82-5

மே

மேகம் 68-3
மேகம்தோய்பிறை 51-9
மேகலை 11-6,51-9
மேரு 70-9
மேனி 98-1,72-3,61-9,98-2
மேனியன் 64-5,32-5

மை

மைஉலாம் 40-7
மைகொள்கண்டத்தார் 36-7
மைகொள்கண்டன் 2-7
மைந்தன் 93-10, 18-9, 62-6, 80-1,93-9
மையலாய் 72-2
மையல் 40-4,29-7
மையறு 52-7
மையுலாவிய 79-7
மையுலாவியகண்டம் 7-12

மொ

மொந்தை 55-9

Koviloor Digital Library

மொய்குழலாய் 45-6

வ

வங்கம் 9-8
வசை 71-1
வஞ்ச ஆறுகள் 44-4
வஞ்சமின்றி 9-6
வஞ்சம் 27-3,82-6,315-4
வஞ்சரக்கன் 8-10
வஞ்சனேன் 93-8,13-10
வடிவு 47-10,40-1
வட்டபுன்சடை 9-4
வட்டமாமதில் 52-9,42-9
வட்டவார்முலையாள் 42-8
வட்டு 4-1,85-2
வணங்கீர் 76-3
வண்குழை 25-8
வண்டினம் 36-10
வண்டு 12-7,15-3,84-6,14-5
வண்டுலாமலர் 47-1,7-3
வண்ணத்தான் 94-3
வண்ணநன்மலரான் 18-4
வண்ணமே 80-8
வண்ணம் 40-1, 28-5, 35-3, 84-3,28-6,28-10,28-9, 28-4
வண்டுவார்குழலாள் 45-3
வதை 30-5,5-87
வந்தனை 1-12
வம்பு 52-6
வம்மின் 26-4
வயல் 66-10, 75-8, 67-5, 26-8
வயல்சூழ் 23-8
வயிரத்திரள் 53-11
வரங்கள் 78-10
வரை 53-11,53-10,70-10
வலங்கொள் 9-1,9-3
வலங்கொள்வர் 80-10
வலஞ்சுழி 66-8. 66-7, 66-10,66-9,66-3,66-5,66-1, 66-4,66-2
வலம் 53-12,82-9
வலி 33-11,74-10
வலிசெய் 32-6
வல்லரே 61-1
வல்லர் 60-6,52-1
வல்லவர் 70-6
வல்லவாறு 43-6
வல்லையாய் 33-1
வல்லைவட்டம் 1-9
வல்லோர் 3-9
வல்வினை 52-1, 18-10, 12-5,65-5
வழி 82-4
வளநகர் 92-6
வளரிளம்திங்கள் 20-2
வளரும் 20-7
வளர் 19-1,87-4
வளர்பிறை 35-6
வளாயது 27-9
வளைக்கையாள் 6-5
வள்ளல் 7-10,79-8,58-5, 39-1,82-4
வன்னி 15-3, 20-2, 14-5,76-10,
வன்னியூரர் 26-7

வா

வாக்கினால் 72-7
வாங்கிநின்றனர் 54-4
வாசலும் 82-9
வாசநாண்மலர் 14-1
வாசிகை 35-3
வாஞ்சியம் 67-1,67-7
வாடலன் 12-1
வாடி 86-8,50-7,99-7,69-4
வாட்கண் 21-2

Koviloor Digital Library

வாட்டம் 82-9, 50-7, 24-2,86-8
வாட்டினான் 74-10,70-10
வாட்படை 41-3
வாட்போக்கு 86-2, 86-4, 86-8
வாண்மதி 30-9
வாமதேவன் 92-6
வாயிலான் 91-1
வாய் 95-10,90-7,47-7
வாய்மை 30-6
வாய்மொழி 16-6
வாய்மொழியார் 26-5
வாரணம் 64-5,80-2
வாரமாயினன் 82-10
வாரி 55-9
வாருலாமுலை 41-9
வார் 16-9
வார்குழல் 43-3
வார்கொண்மென்முலை 29-4
வார்சடை 19-8
வாலியன் 29-1
வாழ்க்கையே 88-3
வாழ்த்துவார் 19-6
வாழ்பவர் 52-2,88-10, 67-5
வாழ்வாவதே 87-5
வாழ்வு 72-6
வாளரக்கன் 33-11,53-12, 40-10,32-10,74-10,34-10, 29-10,55-10
வாளரவம் 97-20,20-7
வாளா 90-3
வாளினர் 87-5, 87-8
வாள்நிலா 39-10
வாள்நுதல் 74-4,26-5
வானவர் 94-7,1-6, 17-1,41-7,13-9,97-14,74-3, 97-6,75-6,14-2,8-7,24-5, 83-7.78-6,14-4,13-7,38-2, 83-5, 40-2
வான் 27-9,34-3,49-3,96-8
வான்சுழிப்பட்டு 27-3
வான்செல்வம் 64-3

வி

விகிர்தர் 10-7
விஞ்சையர்கள் 98-3
விசயமங்கை 71-3, 71-4, 71-5, 71-1, 71-7, 71-8, 71-6, 71-2
விசயன் 49-6,49-9,11-10, 59-9
விசும்பு 13-3
விசை 22-2
விச்சாதரர் 32-8
விடத்தான் 88-4
விடலை 44-11
விடுத்த 37-6
விடை 6-4,88-9
விட்டவர் 48-9
விட்டிட்டான் 94-10
விண் 15-5
விண்டமாமலர் 7-11,82-1
விண்டு 15-5
விண்ணோர் 8-4,3-3
விண்தலம் 83-2
விருத்தர் 86-1,10-9
விருப்பன் 17-9,42-2,83-6
விருப்பு 61-5
விரைகமழ் 94-4
விலங்கல் 71-10, 26-10, 44-11, 47-11
விலங்கல்மெல்லியல் 83-6
வில் 53-10, 70-9, 53-5, 53-4
வில்லணை 17-4
விழுந்தனன் 71-4
விழுப்பொருள் 76-8,77-2
விளக்கினை 57-2

Koviloor Digital Library

விறகு 90-10
வினை 23-3,75-8,61-1,54-1, 56-5,65-4,56-6,86-3, 14-7,30-1, 17-8, 66-7,69-1, 5-1, 76-3, 57-4, 52-2, 63-6, 14-8,82-5
வினைக்குழி 86-2
வினைதீர்க்கும் 35-9
வினைப்பகை 43-6
வினைப்பாவம் 14-11

வீ

வீங்குதண்புனல் 54-4
வீசு 90-1
வீடினன் 79-7
வீடு 88-2
வீணை 7-1,90-1,53-1,51-7 61-4
வீதி 23-2
வீதிவிடங்கன் 7-8
வீரட்டம் 53-1,53-11, 53-12, 49-9, 53-6, 53-9, 54-4
வீரன் 12-7,4-7
வீறு 33-10

வெ

வெகுண்டவன் 11-10
வெங்கண் 51-10
வெஞ்சிலை 42-2
வெஞ்சினம் 39-4
வெஞ்சுடரான் 37-9
வெஞ்சொல் 31-5
வெண்காடு 49-8
வெண்டலைமாலை 55-4
வெண்தலைக்கை 24-2
வெண்தலையோடு 55-3
வெண்திங்களார் 17-2
வெண்நகை 45-6
வெண்நீறு 40-4
வெண்நூலன் 79-3
வெண்பிறை 42-4,8-4,21-9, 9-5,89-1
வெண்பூதி 55-2
வெண்மதி 97-6,93-5, 25-9
வெண்மருப்பு 97-9
வெண்மழு 26-5,58-4, 41-3
வெண்முறுவல் 56-5
வெந்தநீறு 97-8,95-8,8-6
வெந்தவெண்பொடி 10-7, 14-8
வெருவவே 11-5
வெள்குறும் 24-7
வெள்ளிமால்வரை 37-2
வெள்ளெருக்கு 79-1
வெறுத்தான் 98-10
வெற்பு 64-6

வே

வேடன் 49-6
வேடம் 2-1
வேடு 55-3
வேட்கை 92-8
வேட்கையர் 28-5
வேதகீதர் 8-4
வேதத்தர் 24-9
வேதநாயகன்57-8,100-1,57-7
வேதநாவர் 64-6
வேதம் 19-2,89-4,14-9,99-4, 37-9,23-2,71-2,73-7
வேதன் 17-6,61-4
வேந்தர் 77-6
வேலி 54-8
வேலினன் 69-10
வேழம் 2-1
வேள்வி 7-7,52-5,7-5,4-6
வேள்விகள் 99-4

Koviloor Digital Library

வேள்வியர் 67-4

வை

வைகலும் 26-7, 31-5, 19-6, 96-8
வைகலே 97-9
வைகல் 19-7,92-6
வைகும் 15-1
வைதுகில் 36-3
வைதெழா `19-3
வைதெழுவார் 12-1
வைத்த 39-2
வைத்தவர் 87-8,87-2, 38-6, 68-10
வைத்தவன் 24-1,92-4, 80-10
வைத்திடும் 98-7
வைத்திட்டது 99-9
வைத்திலர் 95-10
வைப்பர் 60-7,1-5
வைப்பனே 91-2
வைம்மின் 18-5,22-2
வையம் 35-2,29-9,60-7
வையன்மின் 47-10

Koviloor Digital Library

உ

தருமை ஆதீனம் இயற்றிவரும் பணிகள்

1. தேவாரப் பாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.

2. வேத சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.

3. திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சைவ சமய நூல்கள் பலவற்றைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.

4. தேவாரத் தலங்கள் தோறும் வழிபாடுகள் நிகழ்த்தி அவ்வத்தலத் தேவாரத்தைப் புராண வரலாறுகளுடன் அச்சிட்டு வழங்குவது.

5. ஆலயங்கள் பலவற்றிலும் நிகழும் பெருவிழாக்களில் சமய விரிவுரைகள், மாநாடுகள் நிகழ்த்திச் சமய தத்துவங்களை மக்கட்கு உணர்த்துவது.

6. தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கலைக்கல்லூரி அமைத்து மாணவர்களுக்குக் கல்வி நலம் தருவது.

7. அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி மையம் நிறுவி அதன் வாயிலாகக் கடல் கடந்த நாடுகளிலும் நம் நாட்டிலும் வாழும் சமயம் சார்ந்த மக்கட்குச் சைவசமயப் பெருமைகளை அறிவுறுத்துவதோடு சென்னை, திருச்சி, நெல்லை ஆகிய இடங்களில் மாலை நேரக் கல்லூரி நடத்தி வருவது.

8. உயர்நிலைப் பள்ளிகள் கலைக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியை ஊக்கத்தோடு பயிலப் பரிசுகள் வழங்குவது.

9. ஞானசம்பந்தம் என்னும் மாத இதழ் நடத்தி அதன் வாயிலாக மக்கட்குச் சமய உண்மைகளை உணர்த்தி வருவது.

10. ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள 27 திருக்கோயில்களையும் தூய்மையாகப் பரிபாலித்து நாள்வழிபாடு சிறப்புவழிபாடுகள் நிகழ்த்திவருவது.

Koviloor Digital Library

11. ஆதீனக் கோயில்கள் பலவற்றில் நூலகங்கள் அமைத்தும் மாலைநேரத்தில் ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு குழந்தைகட்குத் திருமுறை வகுப்புக்கள் நடத்தியும் உதவுவது.

12. சமய நூல்களை ஆய்வு நோக்கோடு எழுதி வெளியிட முன்வருவோர்க்கு உதவுவது.

13. ஆதீனத்திருக்கோயில்களில் பழுதடைந்த கட்டிடப் பகுதிகளை இடித்துப் புதுப்பித்தும் 12 ஆண்டுகட்கு ஒருமுறை மூர்த்திகட்கு அஷ்டபந்தனம் சாத்தியும் திருக்குட நீராட்டு விழா நடத்துவது.

14. ஆதீனத் திருமடத்தில் பெரியதொரு நூலகம் அமைத்துப் பழைமையான ஓலைச்சுவடிகளையும் நூல்களையும் பேணி வருவது.

15. கல்வி பயிலும் ஏழை மாணவர்கட்குக் கல்விக் கட்டணம் புத்தகங்கள் வழங்கி உதவுவது.

16. மயிலாடுதுறையில் மகப்பேறு மருத்துவ நிலையம் அமைத்து நகராட்சிக்கு உதவியதுபோலச் சிங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனை சென்னை அடையாறு கான்சர் இன்ஸ்டியூட் போன்ற பொது நிறுவனங்களுக்கும் பெருந்தொகை உதவி வருவது.

17. ஆதீனக் குரு முதல்வர் குரு பூசைவிழாவில் சமய வகுப்புக்கள் கருத்தரங்குகள் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு முதலியன நடத்திவருவது.

18. அவ்வப்போது மக்கட்கு எல்லாச் சமய தத்துவங்களையும் மாநாடுகள் மூலம் உணர்த்திப் பொதுவாக அனைத்துச் சமய தத்துவங்களையும் மக்கள் அறியும்படிச் செய்வது.

19. தமிழ்நாட்டின் தலைநகராகிய சென்னையில் சமயப் பிரசார நிலையம் அமைத்துச் சமய வகுப்புக்கள் நடத்தியும், ஆதீனத்திருக் கோயில்களில் நிகழும் சிறப்பு விழாக்களின் பிரசாதங்களை அங்குள்ள மக்கட்கு வழங்கியும் வருவது.

20. திங்கள் தோறும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பொதுமக்கட்கு அருளாசி வழங்குவது.

21. திருவாமூரில் அப்பருக்குத் திருக்கோயில் எடுப்பித்துத்

Koviloor Digital Library

திங்கள்தோறும் திருமுறைமுற்றோதல், விரிவுரை நிகழ்த்தியும் ஆண்டு தோறும் குருபூசையைச் சிறப்புற நடத்தியும் வருவது.

22. பெண்ணாகடத்தில் மெய்கண்டாருக்குக் கோயில் எடுத்து ஆண்டுதோறும் குருபூசையைச் சிறப்புற நடத்துவது.

23. சித்தர் காட்டில் ஸ்ரீ சிற்றம்பல நாடிகள் கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நிகழ்த்தி, சமயச்சொற்பொழிவு, ஆண்டு தோறும் குருபூஜை நடத்தி வருவது.

24. சீகாழியில் திருமுலைப்பால் விழாவிலும், திருவாமூரில் சதய விழாவிலும் திருமுறை இசைவாணர்கட்குத் திருமுறைக் கலாநிதி பட்டம் பொறித்த பொற்பதக்கமும் ஆயிரம் ரூபாய் பணமுடிப்பும் வழங்கிவருவது.

25. ஆதீனச் சிறப்பு விழாவாகிய ஆவணி மூல நாளில் பழுத்த தமிழ்ப்புலமை பாலித்த தமிழறிஞர்க்குச் சிறப்புப் பட்டம் வழங்கி வருவது.

26. சிதம்பரம் திருக்கோயிலில் சமயாசாரியர்களோடு சந்தானா சாரியரைப் பிரதிட்டை செய்வித்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தியதுடன் ஆண்டுதோறும் குருபூசை விழாக்களைக் கொண் டாடி வருவது.

27. இல்லங்கள் தோறும் திருமுறை முற்றோதல் செய்விப்பது.

28. சிவராத்திரி கார்த்திகைச் சோமவாரம் போன்ற நாள்களில் அன்பர்கட்குச் சமய விசேடதீட்சைகள் அளிப்பது.

29. மதுரையில் உள்ள ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் திருமடத்தில் அவ்வப்போது சமயச் சொற்பொழிவுகள் நடத்தி வருவது.

30. ஆதீன ஆலயங்களுக்கு மட்டும் அன்றிப் பிற ஆலயங் களுக்கும் திருப்பணி நிதி உதவி அளித்தல் - யாகசாலைச் செலவை ஏற்று நடத்துதல் முதலியன செய்து வருவது.

31. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் கோயில் நம்பி ஆண்டார் நம்பிகள் குருபூஜை விழாவை நடத்துவது.

Koviloor Digital Library

32. ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம் நிறுவி அதன் வாயிலாக மயிலாடுதுறையில் மழலையர்பள்ளி, செகண்டரிப் பள்ளி ஆகியன நடத்துவதோடு பிற ஊர்களிலும் இம்மன்றச் சார்பில் பள்ளிகள் மருத்துவ நிலையங்கள் அமைத்துச் சமூகத் தொண்டுகள் முதலியன செய்து வருவது.

வாழ்த்து

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே. *- பெரிய புராணம்.*

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம். *- கந்தபுராணம்.*

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உயிர்கட் கெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.
- திருவிளையாடற் புராணம்.

திருவார் கமலைப் பதிவாழ்க அப்பதி
சேரும்நின்றன்
மருவார் மரபும் திருநீறும் கண்டியும்
வாழ்கஅருட்
குருவாகும் நின்றன் திருக்கூட்டம் வாழ்கநற்
கோநிரைகள்
தெருவாழ் தருமைத் திருஞான சம்பந்த
தேசிகனே. *-ஆதீன அருள் நூல்.*

Koviloor Digital Library



Koviloor Digital Library